பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்.

(உரை வசனம்.)

இஃது

[illegible] ஆலம் [illegible] முஹம்மது

முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களின் ஜீவிய சரிதையாகும்

இதனை

[illegible]

[illegible]

அவர்களால்

[illegible] பல நூல்களிலிருந்து

தொகுத்தெழுதப்பட்டது.

இதனை

ஹாஜி M. A ஷாஹுல் ஹமீது & [illegible]

அவர்களால்

தங்களது

[illegible]

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

[illegible] 1951. [ரூ. 10 0-0

(Registered Copy-Right.)

[illegible] FEB 95[illegible]

Q7:33
N51

111360

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்.

விஷய அட்டவணை.

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
	கடவுள் வாழ்த்து	1
1	ஹம்து ஸலவாத்து	5
,,	அரபியாவும் அதன் பூர்வீக நிலைமையும்	,,
2	கஃபா ஷரீபின் ஸ்தாபனம்	8
,,	விக்கிரக ஆராதனை	12
3	நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாட்டன்மார்களின் விசேஷ வரலாறுகள் ...	14
,,	அப்துல் முத்தலிப் சொற்பனங் கண்டு ஸம்ஸம் கிணற்றைத் தோண்டினது	17
,,	அப்துல்லாவைக் குறுபான் செய்த வரலாறு ...	19
,,	அப்துல் முத்தலிப் அவர்களின் சொர்ப்பனம்;	22
4	நபிநாயகம் (ஸல்) அவர்களின் தலைமுறைத் தோற்றம்	23
5	அப்துல்லாவுக்கும் ஆமினாவுக்குந் திருமணம்	25

முதலாவது விலாதத்து காண்டம்.

6	திருநபியின் அவதாரம்	30
,,	கஃபத்துல்லாவை இடிக்க வந்த அப்றஹாவும் அவன் சேனையும்	35
7	முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்த காரணம்	38
8	ஹலிமா பால் ஊட்டியது	53
9	இலாஞ்சனை தரித்தது	71
10	புனல் விளையாட்டு	86
11	புகைருவை கண்டது	91
12	பாதை போந்தது	101
13	சுரத்திற் புனலழைத்தது	115
14	பாந்தள் வதையுண்டது	120
15	நதி கடந்தது	123

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
16	புலி வசனித்தது	127
17	பாந்தள் வசனித்தது	130
18	இசுறு கண்டது	133
19	கள்வரை நதி மறித்தது	142
20	ஷாம் நகர் பிரவேசம்	146
21	கரம் பொருத்தினது	150
22	ஊசாவைக் கண்டது	159
23	கதீஜா கனவு கண்டது	167
24	மணம் பொருத்தினது	171
25	மணம் புரிந்தது	181
	இரண்டாவது நுபுவ்வத்துக் காண்டம்.	
26	நபிப்பட்டம் பெற்றது	190
27	தொழுகை வந்த வரலாறு	200
28	தீனிலைக் கண்டது	209
29	உமறுகத்தாபு ஈமான் கொண்டது	240
30	உடும்பு பேசியது	255
31	உத்பா வந்தது	261
32	ஒட்டகங்கள் பேசின	268
33	ஹபீபு அரசர் மக்கத்துக்கு வந்தது	285
34	மதியை யழைப்பித்தது	299
35	தசைக் கட்டியைப் பெண்ணுருவம் அமைத்தது	326
36	ஹபீபு ராஜா வரிசைவர விடுத்தது	331
37	ஈமான் கொண்டவர்கள் ஹபஷா இராஜ்ஜியத்திற்குப் போந்தது	337
38	மானுக்குப் பிணை நின்றது	344
39	ஈத்தங்குலை வரவழைத்தது	355
40	ஒப்பெழுதித் தீர்ந்தது	358
41	விக்கிரகம் பேசியது	364
42	அபூத்தாலிபும் பிராட்டியாரும் பொன்னுலகு புக்கது	368
43	பருவதராஜரைக் கண்ணுற்றது	372
44	அத்தாஸ் ஈமான் கொண்டது	377

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
45	ஜின்கள் ஈமான் கொண்டது	379
46	ஆயிஷா நாயகியின் திருமணம்	386
47	காம்மா வந்தது	392
48	விருந்தூட்டியது	399
49	நபிநாயகம் (ஸல்) மிஃறாஜுக்குப் போந்தது	401
	மூன்றாவது ஹிஜுறத்துக் காண்டம்.	
50	மதீனத்தார் ஈமான் கொண்டது	416
51	மதீனத்தார் வாய்மை கொடுத்தது	427
52	யாத்திரை	437
53	விஷம் மீட்டியது	464
54	சுறுக்கத் பின் தொடர்ந்தது	472
55	உம்மி மஃபதுவைக் கண்டது	482
56	மதீனமா நகரம் சேர்ந்தது	487
57	கபுஹாப் வந்தது	496
58	விருந்திட்டு ஈமான் கொள்வித்தது	516
59	உகுபான் ஈமான் கொண்டது	521
60	சல்மான் பாரிஸி வந்தது	529
61	கஃபத்துல்லாவை நோக்கித் தொழுதது	541
62	ஒநாய் பேசியது	544
63	வத்தான் படையெழுச்சி	549
64	பாத்திமா நாயகியின் திருமணம்	558
65	ஷீபுல்பகுறுப் படையெழுச்சி	580
66	புவாத்துப் படையெழுச்சி	583
67	அசீறாப் படையெழுச்சி	588
68	பத்னுன் னக்லாவின் சண்டை	595
69	பதுறு யுத்தம்	599
70	சவீக்கு படையெழுச்சி	638
71	குதிரிப் படையெழுச்சி	648
72	தீயம்றுப் படையெழுச்சி	650
73	அபூறாபிஉ வதையுண்டது	653
74	ஹஸன் (றலி) பிறந்தது	663
75	அபூதல்ஹா விருந்து தொடுத்தது	666
76	உஹது யுத்தம்	670
77	அமுறாப் படையெழுச்சி	704

நெம்பர்.	விஷயம்.	பக்கம்.
78	கஃறபு வதையுண்டது	711
79	சுகுருப் படையெழுச்சி	726
80	பதுறு சுகுருப் படையெழுச்சி	729
81	இமாம் ஹுசைன் (றலி) பிறந்தது	732
82	தாத்துற்ற ஹாக்குப் படையெழுச்சி	735
83	சாபிர் கடன் தீர்த்தது	750
84	முறைஸிக்குப் போர்	752
85	கந்தக் அகழ்த்தது	761
86	உயை படையெடுத்து வந்தது	776
87	பனீ குறைலாக்கள் கொலையுண்டது	803
88	இமாம் ஈமான் கொண்டது	812
89	ஸெயினபு நாச்சியாரின் கலியாணம்	815
90	ஒட்டகம் பேசினது	819
91	மழை வரவழைப்பித்தது	824
92	அந்தகன் வந்தது	828
93	ஹவுலாவைக் கூட்டியது	832
94	உமறுவுக்குச் சென்றது	836
95	சல்மா போரிட்டது	852
96	உறனிக் கூட்டத்தார் தண்டனை பெற்றது ...	863
97	அபாஸுபியானுடன் குதிரை பேசினது ...	866
98	கைபறு நகர் பிடிப்பட்டது	869
99	ஜம்றத்து விருந்திட்டது	891
100	வேட்டையாடினது	892
101	உமுறு கலாச் செய்யச் சென்றது	893
102	மக்கமா நகரம் பிடிப்பட்டது	900
103	அப்பாசிபுனு மிறுத்தாசு ஈமான்கொண்டது ...	919
104	குனைன் நகரம் பிடிப்பட்டது	921
105	தாயிபு நகரம் பிடிப்பட்டது	932
106	நபிநாயகம் ஹஜ்ஜு செய்தது	945
107	நபிநாயகத்தின் வபாத்து	952
,,	பெருமானாரவர்களின் பத்தினிமார்கம் ...	999
,,	நபிபெருமானாரவர்களின் குணலக்ஷணங்கள் ...	1001
,,	பெருமானாரவர்களின் திவ்விய ஒழுக்கங்கள் ...	,,
,,	பெருமானாரவர்களின் முஃஜிஸாத்தென்னும் அற்புதங்கள்.	1006

விஷய அட்டவணை முற்றிற்று.

நபிநாயகத்தை (63) அறுபத்திமூன்று விருத்தம்

சொர்ப்பனத்தில் கண்ட

மகாவித்துவான் ஹஜ்ரத் உமறு புலவரவர்கள்

பாடிய

(சீறுபுராணத்திலுள்ள) கடவுள் வாழ்த்து.

காப்பு.

திருவுருவா யுணருருவா யறிவினொடு தெளிவிடத்துஞ் சிந்தி யாத, அருவுருவா யுருவுருவா யகம்புறமுந் தன்னியலா வடங்கா வின்பத், தொருவுருவா யின்மையினி லுண்மையினைத் தோற்றி விக்கு மொளியா யாவு, மருவுருவாய் வளர்காவன் முதல்வனைப் பணிந்துள்ளி வாழ்த்துவாமே.

கடவுள் வாழ்த்து.

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த் தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த, மருவினு மருவா யணுவினுக் கணுவாய் மதித்திடாப் பேரொளி யனைத்தும், பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப் பூதலத் துறைந்த பல்லுயிரின், கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

சிறந்தமெய்ப் பொருளை யழிவிலா மணியைத் தெரிந்து முக் காலமு முணர்ந்து, துறந்தவர் தயா சனத்திருந் தவனைத் தொடரின்ப துன்பமற் றவனைப், பிறந்த பல்லுயிரின் மனத்தள வுறைந்து பிறப் பிறப் பென்றில்லா தவனை, மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து மண்ணினின் மதிமறந் தவரே. (2)

இருவிழி சிவந்து கனற்பொறி தெறிப்ப வெடுத்தகைக் கசை யினு லுறுக்கி, வருமவ ரெதிர்நின் றொருமொழி கேட்ப மறுமொழி கொடுத்திட வறியேன், றருமமும் பொறையு மறிவுமற் றறிந்துன் றன்னையு மென்னையு மறியப் பெருவரந் தருவா யாதி நாயகனே பேதியாச் சோதிமா முதலே. (3)

குடிலினை மலையைக் கதிர்மதி யுடுவைக் ககனமற் றறுவொடு மூழ்லைய், புடவியைச் சுவனப் பதியினை யமரர் பொருந்திட மதிக்

கடுக் கவையை, வடிவுறத் தனது பேரொளி யதனல் வகுத்து வெவ்வேறென வமைத்தே, யுடலினுக் குயிரா யுயிரினுக் குடலா யுறைந்த மெய்ப் பொருளினைப் புகல்வாம். (4)

வேறு.

அருமறை தெரிந்து நீதி நெறிமுறை நடந்து நீனில் வகிலதல மெங்கு மீறவே, யொருகவிகை கொண்டு மாறுபடுமவரை வென்று நாலு முறுபுகழ் சிறந்த வாழ்வுளோர், திருவொளி வெனும் ஹபீபு நபி முஹம்ம தன்றுவானர் சிரமிசை நடந்து சோர்வுறு, விருசரண நம்பினோர்கள் வரிசைக ணிறைந்தபேர்க ளெவரினு முயர்ந்த பேர்களே.

வேறு.

கவியா லுரைத்தபுகழ் பெறுவார் மிகுத்தகவி யடைவார் கலக்க மறவே, செவியார மெய்ப்பொருளை யறிவார் மனத்திறுறு செயல் கேடகற்றி விடுவார், புவியார மொய்த்தநெறி மறைநாவி னுக்கு மொரு பொரியா யுதித்த வடிவார், நவியார் சுவர்க்கபதி நபினார் பதத் துணையை நடுநாவில் வைத்தவர்களே. (6)

வேறு.

ஆதிதன் கிருபை தாங்கி யகிலமீ தரசு வைகித்
தீதிலாச் சோதி போலத் தீன்பயிர் விளக்கஞ் செய்தே
மூதறி வுடைய ரான முறுசலீன் கலையெந் நாளும்
போதர வுடனே போற்றிப் புந்தியின் மகிழ்ச்சி செய்வாம். (7)

வேறு.

தாரா தரத்தையே மேலே கவிக்கவே தாடாண்மை பெற்ற நபினார்
பேரா யுதிக்கவே வானோ ருரைக்கவே பேறாய் விளக்கு முரவோ
ராராய்வின் மிக்கபேர் நாலுயி ரத்துநா லாறுயி ரத்து நபிமார்
மாராய மிக்கபேர் வாயார வைத்தபேர் வாழ்வார் சுவர்க்க பதியே.

வேறு.

புரசைக் கடகரிக ணிரைதட் டறக்குபிரர் புலியைப் படக்கடவியே, சாருற்ற நற்பதவி வழியிம் புகுத்தியுயர் தலைமைக்கு வைத்த பெரியோர், பிரசத் துளித்திவலை சிதறிக் கிடக்குமிரு பிணையற் புயத்து நபினா, ராசுக்கு வைத்தநெறி வரிசைக்கு மிக்கதுரை யபுபக் கரை புகலுவாம். (9)

வேறு.

அமரிலெதிர்த் தோர்களாவி யெமதிசையைத் தேடியோட வடரு மடற்சூர வீரவேள், மமதைகெடச் சாதி நீதிமுறைமை தனக்காக வோது மகனைவதைத் தொரோருமலே, திமிரபகைப் பானுமேனி கருகிவிடப் பார்வையேவு தெரிமரையிற் காரணீகனு, ருமறுதிருத்தாளை நாளு மனதினினைத் தோதுவோர்தம் முரியதவப் பேறு மீறுமே. (10)

வேறு.

விதுமாற வொளிவான வதனுதி நபிநாவில் விளைவான திருவேதமே, பதிவாக வொருசேக ரமதாக நிலமீது பயிராக வுரைதாவினோர், சதுமாம ரையினோர்கள் பெரியோர்கள் சிறியோர்க டமதாவியென வாழுவோ, ருதுமானை யொருகாலு மறவாம லிருகாலு முளமீது நினைவாமரோ. (11)

வேறு.

படிகிடு கிடெனநாக முடிநெறு நெறெனவாரி படுதிரை யளறுதாகவே, வடவரை யசைவதான முகடுடை படவருத மழை முகில் சிதறி யோடவே, யடையலர் கெடிகள் கோடி யிடிபடு படலதாளி யலரியி னுடலின் மூழ்கவே, நடமிடு கடினவாசி மிசைவரு சமராசூநர்புலி யலியை யோதுவாம். (12)

நலிவற வுலகநீதி நெறிமுறை பெருகநாளு நமருயி ரரியகாவலா
யொலிகட லுலகமீது தெரிதா வரியதீனு முறுகதி ருதையமாகவே
மலிபுக ழாசர்சீய மிர்கமத நறைகுலாவு மறைநபி மருகராகிவர [வாம்.
பூலிதிரு மதலையான வசனுசை னுபயபாத மனுதினமனதிலோது

வேறு.

ஆலகால லாரிபோலு மாகொடூர மாகிய
காலகேள்வி தானடாத் காரணீக ரானவே
தாலமீதி லாதிதூதர் சாரமேவு வாழ்வினோர்
நாலொடாறு பேர்கள்பாத நாவினாலு மோதுவாம். (14)

வேறு.

ஆதமீன் றமனு நீதியாண்ட முறை யாலு மோங்குபுக மாகினோர்
றுதராங் கடவு ளுவிலாந்த மறை துவிகான்கு மத்றப ளாகினோர்
நீதவான் களுறு போதவான்கள் குருநேர்மை யாந்தகைமை யாகினோ
ரேதவான்களெனு மாலிமாம் கன்பத மேலுமி யாம்புகல வேணுமே.

வேறு.

உரமுறு தீன்பா ரெல்லா மொளிரவே விளக்கஞ் செய்யும்
ஆரமுறு மவுலி யாவாய்த் தோன்றின பேர்க்கு மேலாம்
வரமுறு முஹியித் தீன்செம் மலரடி யிரண்டு மென்றன்
சிரமிசை யிருத்தி வாழ்த்திச் செந்தமிழ்ப் பனுவல் செய்வேன்.

நம்மையா ளுடையான் வேத நபிதிரு வசனந் தீனோர்
சம்மதித் திடப்பா ரெல்லாந் தழைக்கவே விளக்கஞ் செய்தோ
ரிம்மையு மறுமை யும்பே றிலங்கிய ஸதக்கத் துல்லா
செம்மல ரடியிரண்டுஞ் சிந்தையி லிருத்தி னேனே. (17)

வேறு.

திக்க னைத்தினும் பாரினுந் தீவினுஞ் செங்கோல்
புக்க நன்னெறித் திகரிமன் னவர்கண்முன் பொருந்தத்
தக்க கூலியுஞ் செய்துன வறிகிலான் சரிபோன்
மிக்க செந்தமிழ்ப் புலவர்மு னியான்விளம் புவதே. (18)

படித்த லத்தெழு கடல்சூல கிரிசிலை பதற
வெடுத்து வீசிய சண்டமா ருதத்தினுக் கெதிரே
மிடித்து நொந்தசிற் றெறும்பொரு மூச்சுவிட் டதுபோல்
வடித்த செந்தமிழ்ப் புலவர்மு னியான்சொலு மாறே. (19)

அடிய டித்தொறும் வழுவலால் விதிவிலக் கறியேன்
படிப டித்தசெஞ் சொற்புல வோர்முனம் பகர்தல்
விடிவி டித்திடு மாரவா ரத்தினுக் கெதிரோர்
நொடிநொ டிப்பது போலுமொத் திருந்ததென் னூலே. (20)

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜீவிய சரித்திரம்.

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العالمين والصلوة والسلام على رسوله سيدنا محمدن
المصطفى احمدن المجتبى صلى الله عليه واله وصحبه اجمعين

புகழனைத்தும் கருணாகரனாகிய எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுக்கே உரியன. ஸலவாத்தும் ஸலாமும் அவனது திருத்தூதராகிய நமது நாயகம் முஹம்மத் முஸ்தபா அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்கள் கிளைஞர்கள் தோழர்கள் மீதும் உண்டாவதாக.

1-வது அத்தியாயம்.

அரபியாவும் அதன் பூர்விக நிலைமையும்.

எல்லாவற்றிற்கும் வல்ல காரணனாகிய அல்லாஹு தஆலாவின் திருத்தூதராகிய நமது நாயகம் ஸெய்யிதுல் முர்ஸலீன் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அழகிய ஜீவிய சரித்திரத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக, அவர்கள் அவதரித்த பிரதேசமாகிய அரபியாவின் நிலைமையை சிறிது விவரிப்போமாக.

கலிவிருத்தம்.

துறவு காட்டும் துரைமஹ் மூதர்சி
றுறவு நீட்டு முயர்மக்க மாநகர்
நறவு காட்டு ணிபுகழ் சூழிய
அறபு நாட்டணி யான தலைநுளாம்.

அறுசீர்கழி நெடி லாசிரிய விருத்தம்.

நிலங்க ளேழுக்கு காவலந் தீவுகண் ணிகர்க்கு
நலங்கோ டவுக்குக் கண்மணி யுறபுகன் னுடே
புலன்கொள் கண்மணிக் குள்ளுறை யுயிரெனப் பொருந்தி
யிலங்கு மக்கமா நகர்வளஞ் சிறிதெடுத் திசைப்பாம்.

அரபிஸ்தான் (அரபு நாடு) என்பது ஒரு சிறந்த தீபகற்பம். அது பிரமாண்டமான ஆசியா கண்டத்தின் தென்மேற் கெல்லையில் நிலைகொண்டது. அதற்குக் கிழக்கில் உம்மான் கடலும் பாரஸீக வளைகுடாவும், தெற்கில் இந்திய மஹா சமுத்திரமும், மேற்கில் செங்கடலும், வடக்கில் ஷாம் மாகாணமும் அதன் எல்லைகளாகும்

இந்த தீபகற்பம் சாதாரணமாய் (1) அல்கஸா (2) ஹிஜாஸ் எமன் உள்பட (3) நஜத் (4) உம்மான் என நான்கு பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறதெனச் சொல்லலாம். முதல் இரண்டு பிரிவுகளும் ரூம் சுல்தான் (துருக்கியர்) உடைய வசத்திலாயிருந்து வந்தன. நஜத் ஓர் வஹாபித் தலைவரின் ஆட்சியிலிருந்து வருவதாகும். உம்மான், இமாம் முஸ்கித்துடைய அதிகாரத்தின் கீழ்ப் பட்டது.

அரபியாவின் பெரும்பாகம் பாலை நிலங்களையும், தாழ்ந்த குன்றுகளையும் கொண்டுள்ளது. ஆகையால் தாயிப் மோகாப் போன்ற சில ஸ்தலங்களைத் தவிர வேறு ஸ்தலங்களிலுள்ள பூமி விவசாயத்திற்கு ஏற்றதாக விருக்கவில்லை. அரபியர்களுடைய ஆகாரம் பெரும்பாலும் மாமிசத்தையும், பாலையும் பேரீத்தங்கனியையும் கொண்டுள்ளதாகும்.

அவர்கள் கன்று காலிகளை வளர்த்து வருவார்கள். அவற்றை குன்றுகளின் பேரில் மேய்ப்பர். ஆனால் கடலோரங்களை யடுத்துள்ள வட்டங்களில் வசிப்பவர்களுக்கு வியாபாரத் தொழிலும் இருந்து வந்தது. ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்கள் தோறும் காலமாறுதல்களின் பயனாகப் பற்பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. அரபியா மட்டும் ஈருல்தவ சகாப்தம் 700-வது ஆண்டு கடைசி வரையில் அத்தகைய யாதொரு நிகழ்ச்சிக்கும் ஈடு படாது பத்திரமாகவே இருந்து வந்தது. சிற்சில தேசங்கள் ஆட்சிகளிலும் அபிவிர்த்திகளிலும் பிற்போக்கும் வீழ்ச்சியும்

அடையப் பெற்றன. சிற்சில விடங்களிலுள்ள மூல வமிசத்தார்கள் அற்றுப் போயினர். சிற்சில விடங்களில் தேசிய எல்லைகளிலும், தேசப் பெயர்களிலும் மாறுதலேற்பட்டு பூர்வீக வாசிகள் மாறியும் சிறையாக்கப்பட்டும் போயினர். இந்நிலைமையில் தன்னுடைய பாலை வனங்களுக்கு மத்தியில், பூர்வீக சுயேச்சையுடன் நிலை கொண்டு, தன்னுடைய தேசவாசிகளைப் பிறருக்கு அடிமையாய்ப் போக விடாமலும், அவர்கள் திக்கற்றுத் திரியா வண்ணமும் பாதுகாத்து வந்த தேசம் அரபியா வென்ற தீபகற்பமே யாகும்.

இந்த தீப கற்பத்தின் ஆதி சரித்திரம்: அரபியாகிய நூஹ் அலைஹிஸ்ஸலாமுடைய புயற்காற்று சம்பவத்திற்குப் பின் சாம்பின் நூஹ்வுடைய கிளையார்களைக் கொண்டே செழிப்பாக்கப்பட்டது. இவர்களுடைய நான்காவது தலைமுறையில் கஹ்தான் என்னும் பெயர் கொண்ட ஒருவருக்கு சில குமாரர்கள் இருந்தனர். அவர்களில் மூத்த குமாரனின் பெயர் அரப். அவர் எமன் நாட்டில் குடியேறி வசித்தார். இரண்டாவது குமாரர் பர்ஹாம் என்னும் பெயர் கொண்டவர். அவர் ஹிஜாஸில் குடியேறி வசித்தார்.

ஹிஜாஸ் என்ற புனித பூமி செங்கடலின் ஓரத்தில் நிலைகொண்டது. மக்கா முகர்ரமாவும், மதீனா முனவ்வராவும் இப்பூமியிலுள்ள நகரங்களாகும். நூஹ்வுடைய சந்ததியார்களினின்றும் அநேக சமுகங்கள் ஏற்பட்டன. "ஆத்" "ஸமூத்" என்னும் பெயர் கொண்ட சமுகங்கள், அச்சமுகங்களி லுள்ளவைகளே. இவைகளுக்கு நேர்ந்துள்ள அழிவைப்பற்றி திருக்குர்ஆனில் வரையப்பட்டிருக்கிறது. அச்சமூகத்தார்களில் சிலர் மலைவாசத்தையும் சிலர் நகரவாசத்தையும் அடைந்திருந்தனர். அச்சமூகத்து ஜனங்களை இருபிரிவாக பிரிக்கலாம். 1-வது அராபியர்கள், 2-வது பத்விகள். அராபியர்கள் நகரங்களில் வாசஞ் செய்து வந்தனர், செழிப்பான பாகத்திலுள்ளவர்கள் விவசாயத்தையும், செழிப்பில்லாத பாகத்திலுள்ளவர்கள் வியாபாரத்தையும் கைக்கொண்டிருந்தனர். பத்விகளுக்கு ஸ்திரவாசங் கிடையாது. தங்கள் ஆடு, குதிரை, ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டும், காடுகளில் அலைந்து கொண்டும் மலையில் வாசஞ் செய்து கொண்டு மிருப்பவர்கள். இத்தேசமானது ஒரு அரசாட்சிக்கும் சட்டவரம்புக்கும் கட்டுப்பட்டிருந்ததில்லை. இரண்டொரு மாகாணங்களில் மட்டும் பேருக்கு அரசாங்கம் இருந்து வந்தது. ஒவ்வொரு பாகத்திலுள்ளவர்களும் பல கூட்டம்

களாக பிரிந்திருந்தனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவர் மட்டும் உண்டு. அத்தலைவர் தம் கூட்டத்தாரை சண்டையில் தலைமை வகித்து நடத்துவதற்கு உரிமை பெற்றவர், வேறு எந்த விசேஷ அதிகாரமும் அத்தலைவருக்குக் கிடையாது.

அத்தேசத்தில் கல்வி அபிவிர்த்தியே கிடையாது. ஆயிரம் பேரில் படித்தவன் ஒருவன் இருப்பானென்பதும் சந்தேகந்தான். கவி சொல்வதை மட்டும் அவர்கள் விசேஷமாய் மதித்து வருவார்கள். சூதாடுவதே அவர்களுக்கு முக்கிய தொழிலாக யிருந்தது.

அத்தேசத்தில் பெண்களுடைய நிலைமையோ மிகவும் பரிதாபகரமானது. பெண் குழந்தை பிறந்தால் அதை துற்அதிர்ஷ்ட வசமாக கருதுவர். பெண் சிசுக்களை உயிருடன் புதைத்து விடுவார்கள். இக்கொடிய பாவச் செயல்களிலும் மூடக்கொள்கைகளிலும், ஈடுபட்டு நாட்களைகழித்து வந்தனர்.

கஃபத்துல்லா.



2-வது அத்தியாயம்.

கஃபா ஷரீபின் ஸ்தாபனம்.

ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம், அவர்களும் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் சுவர்க்கத்தினின்றும் வெளியேற்றப்பட்டபின், உலகத்தின் கண் வெவ்வேறு இடங்களில் இறக்கப்பட்டனர்.

ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் இலங்கை பூமியையும், ஹஜ்ரத் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் செங்கடலோரத்தை (இப்போதைய ஜித்தாவை)யும், அடைந்தனர். 200-வருஷ காலம் வரையில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், உலகத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். கடைசியாக, மக்கத்துக்கு சமீபமாயுள்ள அர்பாத் என்னும் மலையின் மீது ஹஜ்ரத் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களை சந்திக்கலானார்கள்.

உடனே ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம் சஞ்சலத்தை விட்டும் நிவர்த்தி யடைந்தார்களாயினும், சுவர்க்கத்தில் தாம் எத்தகைய பள்ளியில் தொழுது வந்தார்களோ அத்தகைய பள்ளியை,—அதைச்சுற்றி மலக்குகள் காவல்காத்து வந்ததுபோல் காவல் காத்து வரும்படியான தன்மையில்,—அமைத்துக் கொடுக்கும்படியாய் இறைவனுடைய சந்நிதானத்தில் பிரார்த்தனை செய்து கொண்ட போது, அவர்களுடைய பிரார்த்தனையும் அங்கீகரிக்கப்பட்டது.

எல்லாம் வல்ல இறைவனுடைய கட்டளையின்படி சுவர்க்கத்திலுள்ள அப்பள்ளிக் கொப்பான இன்னொரு பிரகாசமுள்ள பள்ளிக் கட்டிடத்தை, வானவர்கள் சுவர்க்கத்திலிருந்து கொண்டு வந்து, தற்காலத்தில் கஃபா என்னும் புண்ணிய க்ஷேத்திரம் நிலைகொண்டிருக்கு மிடத்தில் அமைத்தார்கள்.

அப்பால், ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அதன் பக்கமாகவே ஸஜ்தா (சிர வணக்கம்) செய்யத் தொடங்கினார்கள். பிரதி தினமும் அவர்கள் அந்தப் பள்ளியை 7-தடவை சுற்றித் தவாப் செய்வார்கள். ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலஞ் சென்றபின் தேவதூதர்கள் அந்தப் பள்ளியைப் பூமியை விட்டும் பெயர்த்து எடுத்துக்கொண்டனர். ஆனால், ஹஜ்ரத் ஷீது அலைஹிஸ்ஸலாம் அந்தப் பள்ளிஇருந்து வந்தவிடத்தில் மண், கல்லைக் கொண்டு அதே வடிவமுள்ள கட்டடத்தைக் கட்டி வைத்தார்கள். ஆயினும் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய காலத்தில் சம்பவித்த புயல் காற்றினால் அழிந்து அதன் நாமதேயமே அற்றுப்போய் விட்டது. அதற்குப் பிறகு எத்தனையோ தலைமுறைகளுக்குப் பின் ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய காலத்தில், ஹஜ்ரத் ஹாஜிரா அம்மாவும் அவருடைய புல்தவராகிய ஹஜ்ரத்

இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், பாலைவனத்தில் இருந்து தாகம் சகியாது மரணத் தருவாயிலிருக்க நேரிட்டது.

அப்போது மலக்குகள் என்னும் தேவதூதர்கள், எற்கனவே, ஹஜ்ரத் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்காக வேண்டி எவ்விடத்தில் பள்ளிக் கட்டிடத்தை அமைத்திருந்தார்களோ அதே விடத்தில், ஊற்று ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். தற்காலம் அதே ஊற்று ஜலம் ஜம்ஜம் கிணறென வழங்கப்படுகிறது. அது இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய திருவமிசத்தைப் பாராட்டு மளவில் தூய்மைப் படுத்தப்பட்டு வருகிறது.

சில நாளைக்குப் பிறகு அமீக் அல்லது அமாலிகா என்னும் ஸ்தலத்தின் கூட்டத்திலுள்ள சிலர், காணமற்போன தம் ஒட்டகங்களைத் தேடிக்கொண்டு அங்கு போனபோது அந்தக் கிணற்றைக் கண்டார்கள். உடனே அவர்கள், அங்கே ஒரு நகரத்தின் (மக்கத்தின்) ஸ்தாபனத்திற்கு ஏற்பாடு செய்து, ஹஜ்ரத் ஹாஜிராவையும், ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களையும் தங்கள் ஆதரவில் ஏற்றுக் கொண்டனர்.

ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) வாலிபப் பிராயத்தை யடைந்தபோது அவர்களுடைய விவாகம் ஒரு சீமானுடைய புதல்வியுடன் நிறைவேறியது. ஹஜ்ரத் அவர்களுக்கு அநேக பிள்ளைகள் பிறந்து, அவர்கள் பரவி அரேபியாவின் பல விடங்களிலுக வசிக்கத் தொடங்கினர்.

அல்லாஹு தஆலாவுடைய உத்தரவின்படி, எற்கனவே தேவதூதர்கள் பள்ளியை அமைத்திருந்த விடத்திலேயே, ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களால் கஅபா ஷரீபு கட்டிடத்திற்கு அஸ்திரவாரம் போடப்பட்டது. ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் இப்புனித வேலையில் ஹஸரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு உதவி புரிந்து வந்தார்கள். ஹஜரத் இப்ருஹீம் கஅபாஷரீபின் சுவர்களைக் கட்டும்போது, அவர்களின் முஃஜிஸாத் என்றும் அற்புத சக்தியின்பேரில், அவர்களின் காலின் கீழ் கல்லொன்று அவர்களை மேல் எழுப்புவதும் கீழே இறக்குவது மாயிருந்தது. இதுகாறும் ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸ

லாம் அவர்களுடைய காலின் அடிச்சுவடுகள் அக்கல்லில் பதிந்திருப்பதைக் காணலாம்.

ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் மேற்கூறிய வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம், ஹஜ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்னும் மலக்கானவர் அவர்களிடத்திற்கு "ஹஜருல் அஸ்வத்" என்னும் விண்ணுலகச் சின்னம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவ்விரண்டு ஸிமார்களும் மிக்க மரியாதையுடன் அதை வாங்கி கஅபாஷரீபின் வெளிப்புறத்தில் சாட்டி கட்டிடத்தை கட்டி முடித்தனர்.

அக்கட்டிடத்தைக் கட்டிமுடித்ததும் ஹஜ்ரத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அத்தலத்திலேயே நின்றுகொண்டு ஆண்டவன் பால் இருகரங்களையும் ஏந்தி "ஆண்டவனே! எங்களுடைய இந்த சேவையை ஏற்றுக்கொள்! உண்மையாக நீ சகல பிரார்த்தனைகளையும் அங்கீகரிப்பவன். எங்களுடைய எண்ணங்களை அறிபவன். எங்களை உனக்கு கீழ்படிந்து நடக்கும் ஊழியனாக்கிக் கொள். எங்களுடைய சந்ததிகளில் உனக்கு வழிப்பட்டு நடக்கக்கூடிய ஒரு கூட்டத்தை உண்டாக்கு. உனக்கு வழிப்பட்டு நடக்கக்கூடிய விதத்தை எங்களுக்கு அருள்புரி. எங்களுடைய பாபங்களை மன்னித்துக் கொள். உண்மையாக நீயே சகல பாவங்களையும் பொறுத்து அருள் புரிபவன். பாதுகாத்து பரிபாலிப்பவனே! எங்களுடைய சந்ததியில் (இஸ்மாயீலில்) இருந்து ஒரு தூதரை அனுப்பிக்கொடு. அத்தூதரவர்கள் உனது பரிசுத்த வேதத்தை அவர்களுக்கு கற்றுக்கொடுத்து, பரிசுத்தமானவர்களாக ஆக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும். நிச்சயமாக நீ எல்லாவற்றையும் அறிய வல்லவனாக இருக்கிறாய்" என பிரார்த்தித்தார்கள்.

மேற்கூறிய ஹஜருல் அஸ்வத் என்னும் விண்ணுலக கருங்கல்லை கஃபாவைத் தவாபு செய்பவர்கள் முத்த மிடுகிறார்கள். அக்கல் கட்டப்பட்ட சமயம் அது மிகவும் வெண்மையாகவும் தெளிவாயுமிருந்ததென்றும், பாவிகளுடைய முத்தங்களின் காரணமாக அது கறுப்பாகி விட்டது என்றும், பயபக்தியுடன் ஹஜ்ஜுடைய கிரியைகளை நிறைவேற்றி வைத்தவர்களுக்காக அது [illegible] சாட்சியம் கூறுமென்றும் சொல்லப்படுகிறது.

"பட்ட முற்றிடும் நபிகளால் விண்ணவர் பரிவாற்
கட்டு பேரொளிக் கஃபத்துல்லா விருக்கையினன்
மட்டு வார்குளிர் சோலையான் மலிந்த பொன்னுலக
மெட்டு மொன்றெனத் திரண்டுவந் திருந்த தொத்திருக்கும்."

இப்புனித கஃபத்துல்லா வென்னும் க்ஷேத்திரத்தைக் கொண்டுள்ளதன் காரணமாகவே, மக்கமா நகர் பூர்வீக காலமுதல் கொண்டு சங்கையுடன் மதிக்கப்பட்டு வருகிறது. பூர்வீக காலத்திலும் ஜனங்கள் அதிலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தைத் தரிசிப்பதற்காக, அரேபியாவில் நாலா புறங்களிலிருந்தும் திரள் திரளாக வந்து கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் ஒருவருஷத்தில் 4-மாத காலம்வரையில் அதாவது அவர்களது ஹஜ்ஜுக் கிரியை முதலியன முடிவடையும் வரை, தங்களுக்குள் எவ்வித சண்டை கலவரங்களையும் ஏற்படுத்திக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்குப் பகைவரான சமுகத்தார்களும் அக்குறித்த காலம் வரையில் தம் ஆயுதங்களை கழற்றி எறிந்து விட்டு, பாலைவனங்களில் அமைதியுடன் காலங்கழிப்பர். மக்கத்தின் வாயலில் ஹாஜிமார்களோடு இஹ்ராமில் சேர்ந்து கொள்வர். ஏழுதடவை தவாப்செய்து "ஹஜருல் அஸ்வத்" என்னும் கல்லை முத்தமிடுவர். ஜம்ஜம் தண்ணீரைப் பருகி, அதனால் ஒளுவுசெய்து, ஹஜ்ஜுடைய கிரியைகள் யாவும் நிறைவேற்றிய பின்னரே தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போய் ஆயுதங்களைத் தரிப்பதுண்டு.

இஸ்லாம் மதம் தொடங்குமுன், அதாவது மூடக் கொள்கைகள் நிறைந்திருந்த காலத்தில் தொழுகை, நோன்பு இவ்விரண்டையும் கடைப்பிடித்தல் அராபியர்களுக்கிடையில் மாமூலாயிருந்து வந்தது. அவர்கள் காலை, பகல், மாலை ஆக நாள் ஒன்றுக்கு மூன்று தடவை கஅபாவை நோக்கித் தொழுது கொள்வார்கள். நோன்பு குறித்த மூன்று காலங்களில் மூன்று தடவையாக அதாவது, முறையே 3-நாள், 9-நாள், 1-மாதம் வைப்பார்கள்.

விக்கிரக ஆராதனை.

மக்கா ஷரீபில் யூதர், கிரிஸ்தவர், விக்கிரக ஆராதனையுடையவர் முதலிய எல்லா மதஸ்தர்களும் இருந்தனர், ஆனால் விக்கிரக வணக்கத்தார் அங்கு அதிகமாய் பரவி யிருந்தனர். நபிகள் நாயகம் காத்தி

முல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரிப்பதற்கு 300-ஆண்டுகளுக்குமுன் மக்கா வாசியான அம்ரு இப்னு லுஹை என்பவர் ஷாம் நகருக்குச்சென்ற போது அங்கு பரவியிருந்த விக்கிரக ஆராதனையைக் கண்டதும் அதை மிகவும் அழகாக மதித்து மக்காவிலும் அம்மாதிரியான விக்கிரகங்களை பரத்திவிட்டார். காலம் செல்லச் செல்ல, ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சந்ததியார்களும், குறைஷி வம்சத்தவர்களும் அதில் ஈடுபட்டு கஃபா ஷரீபிலும் சுமார் 360 விக்கிரகங்கள்வரை நிரப்பிவிட்டனர். அதையே தெய்வமாக வணங்கி வந்தனர். விக்கிரகங்களை வணங்கிவந்தாலும் ஒரே கடவுள் என்பதை மட்டும் ஒப்புக்கொண்டிருந்ததோடு கடவுள் இவ்விக்கிரகங்களுக்கெல்லாம் சகல தத்துவங்களையும் கொடுத்திருப்பதாக அவர்கள் நம்பியிருந்தனர். முக்கியமாக கல்லினால் உருவமாக்கப்பட்ட விக்கிரகங்களையே வணங்குவார்கள். இதன்றி ஒவ்வொரு கூட்டத்திற்கும் தனி தனி விக்கிரகங்களுண்டு. ஒவ்வொரு வீட்டிலும் தனி விக்கிரகங்கள் வைத்து வணங்கிக்கொண்டு வருவார்கள். விக்கிரக வணக்கமானது அவர்கள் மனதில் நிலைகொண்டு வேரூன்றியிருந்தது.

இறைவனால் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்குப் பன்னிரண்டு குமாரர் அருளப்பட்டமையால் அவர்களைக் கொண்டு அந்த இலாகாக்களின் செழிப்பிற்குரிய அபிவிருத்தி ஏற்படலாயிற்று. அத்தேதிமுதல் மக்கா மகிமையுள்ள நகராய்விட்டது. அதனைத் தரிசிக்கும்பொருட்டு வெகுதூரத்திற்கு அப்பாலுள்ள ஜனங்களும் திரள் திரளாக வரத்தொடங்கினர். அந்த இலாகாவுக்குரிய அதிகாரமும், கஅபா ஷரீபுடைய சேவையும் ஹஜ்ரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் உடைய வம்சத்திலுள்ளவர்களின் பொறுப்பிலேயே இருந்துவந்தன. அப்படி இருந்து வருகையில் அதே வம்சத்தில் குறைஷ் என்னும் பெயர்கொண்ட ஒருவர்பிறந்தார். மாமூலை அனுசரித்து கஅபா ஷரீபுடைய சேவை அந்தக் குறைஷ் என்பவருக்கு ஏற்பட்டது. குறைஷிகள் தைரியமுள்ளவர்களாக விளங்கி வந்தார்கள். ரோம், கைஸர், கிஸ்ராமுதலியவர்களோ அல்லது அவர்களைப்போலொத்த இதர பெரிய அரசர்களோ, பார்லிக்கத்தைச் சேர்ந்துள்ள இத்தேசத்தைப்பற்றி நோக்கவில்லை. ஆதலால் இத்தேசம் என்றைக்கும் சுயேட்சை தேசமாகவே இருந்துவந்தது.

அக்காலத்தில் மக்கா நகரில் மனோதைரியமும் பிரசித்தியும் வாய்ந்த சமூகத்தார்களில் குறைஷி சமூகமே மேன்பாடடைந்து இருந்தது. அச்சமூகம் பனீ ஹாஷிம் பனீ உமையா என இரண்டு பிரிவினையைக் கொண்டுள்ளது. ஹாஷிம் தங்களுடைய பிரதம மூலப்பிதாவாகவும், மக்கா நகரத்தில் பெரிய பரோபகாரியாகவும் இருந்து, கஃபா ஷரீபின் சேவையை மிக்கதிறமையோடு செய்து வந்தபடியால் ஹாஷிமுக்கு, பின்னர் அவருடைய புதல்வராகிய அப்துல் முத்தலிப் என்பவரே அந்த அதிகாரப் பதவியை அடைந்தார். அவராலும் கஃபா ஷரீபின் சேவை மிக்க திருப்திகரமாகவே நிறைவேற்றப் பட்டுவந்தது. இக்காரணங்களாலேயே கஃபா ஷரீபின் மேற்பார்வைக்கு பனீஹாஷிம் சமூகத்தார்களே வாரிசுதாரர்களென விளங்கலாயினர். இதைக்கண்ட பனீஉமையா சந்ததியார்களுக்கு மனப்பகைப்பும் உரோஷமும் ஏற்படலாயின.

———o———

3-வது அத்தியாயம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாட்டன்மார்களின் விசேஷ வரலாறுகள்.

நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன் எட்டாவது தலைமுறையில் பாட்டனாராகிய கஃபுப்னு லுவை என்பவர்கள், நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரிப்பதற்கு 500-ஆண்டுகளுக்கு முற்பட்டவர். அவர்கள் ஓர் வெள்ளிக்கிழமை யன்று தமது கூட்டத்தார்களுக்கு உபதேசம் சொல்லும் போது, "பிற்காலத்தில் எனது சந்ததியில் மிகவும் மேலான வேதத்தையுடைய ஒரு நபி பிறப்பார். அவர் சகல மனிதர்களையும் தன்னுடைய வேதத்தை ஓதும்படி கட்டளையிடுவார்" என்று சொல்லுகிறவராய் இருந்தனர். இன்னும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பாட்டன்மார்களிலொருவர் கிலாபு என்பவர்கள். அவர் அரபிகளுக்கெல்லாம் நாயகமான ஆமிரமாக இருந்தார். அவர் தனதுகூட்டத்தார்களுக்கு "என் சந்ததியார்களிலிருந்து மக்கா நகரில் ஒரு மேலான நபி அவதரிப்பதற்கு காலம் நெருங்கி விட்டது. அவர் பேர் அஹ்மது. அவர் சகல மனிதர்களையும் அல்லாஹ்வின்பால் அழைப்பார். அவரை நீங்கள் தொடர்ந்து அவருடைய மார்க்கத்தை ஏற்று நடவுங்கள். நீங்கள் அதிக மேன்மை

பாட்டை அடைவீர்கள். அவர் கொண்டு வரும் வேதம் உண்மையானதாகும். அவரை பொய்யாக்காதீர்கள்" என்று சொல்கிறவராய் இருந்தார்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பாட்டன் மார்களில் குஸை என்பவர் மக்கா நகரத்தில் பிரக்கியாதிப் பெற்ற ஓர் தலைவராய் விளங்கி வந்தார். அவர்தான் மக்காவில் தாருன்னத்வா என்னும் சங்கத்தை ஸ்தாபித்தவர். அவரால் மக்காநகரில் அநேக சீர்திருத்தங்கள் உண்டாயின. ஹஜ்ரத் நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின், ஆண்டுகள் தோறும் அரபியாவின் பல பாகங்களிலிருந்தும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஜனங்கள் மக்காவிற்கு கூட்டங்கூட்டமாய் வந்து, கஃபாஷரீப் என்னும் புண்ணியக்ஷேத்திரத்தை தரிசனம் செய்து கொண்டு போவார்கள். அது வரையில் மக்காவில் யாத்திரீகர்களுக்கென்று யாதொரு வசதியும் ஏற்பட்டிருந்ததில்லை. ஆனால் குஸையுடைய தலைமைத்தனத்தின் போதுதான் யாத்திரீகர்களுக்கு ஆகாரத்திற்கு வேண்டிய ஏற்பாடும் ஜலவசதியும் ஏற்படலாயிற்று. இவர் யாத்திரீகர்களுக்குச் செய்த பேருதவியால் இவருடைய பெயரானது அரபியா வெங்கும் தர்மசீலரென பிரபல்யமாயிற்று.

குஸை என்பவருடைய புதல்வர் ஆறுபேர். அவர்களில் இரண்டாவதான புதல்வர் "அப்து முனாப்" என்பவருக்கு ஆறு மக்கள் உண்டு. அவர்களில் ஹாஷிம் என்பவர் மக்கா நகரத்தில் அதிக செல்வாக்கு பெற்றவர். கஃபாஷரீபின் மேற்பார்வையும் அவருக்கேயிருந்து வந்தது. மேலும் அவர் மகா கொடையாளி. யாத்திரீகர்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்கவேண்டிய பொறுப்பான சேவைகள் அவருக்கு ஏற்பட்டன. அவர் அக்கடமையை மிகவும் திருப்தியாக நடத்தினர்.. ஒருபோது மக்காவில் கடின பஞ்சம் நேர்ந்த சமயத்தில், மக்காவாசிகளுக்கு உணவு பொருள் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில், ஹாஷிம் அவர்கள் ஷாம்நகரம் சென்று போதுமான கோதுமை மாவு முதலியன வாங்கிக் கொண்டுவந்து குறைஷியர்களுக்கு தானம்செய்தார். அவருடைய முதல் நாமம் அம்ரு என்று இருந்தது. அவர் பல பொதுஜனக் காரியங்களில் ஈடுபட்டு தொண்டு செய்த தன் சிமித்

தம் அவருடைய நாமத்தை ஹாஷிம் என்று மாற்றி அழைக்கலாயினர்.

அக்காலத்தில் இஞ்சீல் வேதத்தை கற்றுணர்ந்த சாஸ்திரிகள் 'ஹாஷிம் குலத்தில் ஒரு நபி பிறப்பார்' என்றும் அவர் உண்மையான வேதத்தை உடையவர் என்றும் இஞ்சீல் வேதத்தில் வரைந்திருப்பதாக கூறினதைகேட்ட பல கனதனவான்களும் பல யூதர்களும் ஹிர்கில் அரசனும், தங்கள் தங்கள் புத்திரிகளை ஹாஷிமுக்கு விவாகம் செய்து கொடுப்பதாக தூது அனுப்பினார்கள். ஹாஷிம் அவர்கள் அதனை ஏற்காமல் விலகிக்கொண்டு குரைஷிகளில் தமக்கேற்ற ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டார்கள். ஹாஷிம் அவர்களுக்கு அப்துல் முத்தலிப் ஒருவரே ஏக புத்திரர்.

ஹாஷிம் காலமானபிறகு மக்காநகரின் தலைவராக அப்துல் முத்தலிப் நியமிக்கப்பட்டார். அப்துல் முத்தலிப் அவர்கள் ஆண்டவனின் பால் மஹாபக்தியுள்ளவர். கஃபாஷரீபின் சேவையில் சதா ஈடுபட்டிருப்பவர். அவர்கள் நாமம் ஷைபதுல் ஹம்து எனசொல்லப்படும். குரைஷிகளில் அவர் மேன்பட்டவர். ஆண்டவன்பால் அவர் கேட்ட எந்த பிராத்தனையும் அங்கீகரிக்கப்படும். ரமலான் மாதம் பிறந்ததும் அவர் சகல ஏழைகளுக்கும் அன்னம் கொடுத்து ஆதரிக்கிறவர். தனித்திருந்து ஆண்டவனை தியானிக்கிறவர். மலை, குகை வனாந்திரங்களிலுள்ள மிருக ராசிகளுக்கு உணவளிக்கிறவர். அவர் பிறந்தபோது அவர் தலையில் கொஞ்சம் நரையுண்டாயிருந்ததால் அதற்காக ஷைபதுல் ஹம்து என்றுபேர் வைக்கப்பட்டது. அவர் சகலருக்கும் உபதேசம் சொல்கிறவராய் இருந்தார். அவர் நெற்றியில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருஒளி இலங்கிக்கொண்டிருந்தது. கஸ்தூரி வாசமும் அவர்களில் பரிமளித்துக் கொண்டிருந்தது. மக்காநகரில் மழை இல்லாமல் கடின பஞ்சம் நேர்ந்து விட்டால் குரைஷிகளெல்லாம் ஒன்று சேர்ந்து வந்து அப்துல் முத்தலிப் அவர்களின் கரத்தைப் பற்றிக் கொண்டு அல்லா அளவில் மழை தேடிக் கொடுங்களென்று வேண்டிக் கொள்வார்கள். அதுபோல் இவர்கள் சுபைர் மலையுச்சியில் போய் அல்லாவின் பால் மழை தேடுவார்கள். அதுபோல் மழை பெய்யும்; பஞ்சமும் நீங்கும். இப்படியான அனேக

பிரார்த்தனைகளை குரைஷியர்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்கிறவர்களாயிருந்தார்கள்.

அப்துல் முத்தலிப் சொப்பனம் கண்டு ஸம்ஸம் கிணற்றைத் தோண்டுதல்.

உமருப்னுல் ஹாரிஸ் என்பவனுடைய கூட்டத்தார், கஃபா வென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் பாவச் செயல்களை செய்துவிட்டதால், ஆண்டவனின் கோபத்திற்கு பயந்து ஸம்ஸம் கிணற்றை மூடிவிட்டு எமன் பதிக்கு போய்விட்டான். அந்நாள் முதல் ஸம்ஸம் கிணறு தூர்ந்து, இருக்கும் ஸ்தலம் தெரியாமல் மறைந்துபோய் இருந்தது. ஒருசமயம் அப்துல் முத்தலிப் நித்திரை புரியும்போது, சொப்பனத்தில் ஒருவர் வந்து தைபாவைத் தோண்டு என்றார். தைபாவென்பது என்ன வென்று கேட்கவே அவர் மறைந்துவிட்டார். மறுநாள் சொப்பனத்தில் அவரே வந்து பர்ராவைத் தோண்டு என்றார். பர்ராவென்பது என்ன வென்று கேட்கவே அவர்மறைந்து விட்டார். மூன்றாம் நாள் சொப்பனத்தில் வந்து மழுனூனாவைத் தோண்டுமென்றார். அதென்ன வென்று கேட்கவும் மறைந்துவிட்டார். அதுபோல் நாலாம் நாளும் சொப்பனத்தில் வந்து ஸம்ஸமைத் தோண்டு என்றார். ஸம்ஸம் என்னவென்று கேட்டதற்கு, "அது வற்றாஜலமுள்ள எற்றாத ஆழமுள்ள கிணறு. ஹஜ்ஜாஜிகளுக்கு அக்கிணற்றினின்றும் ஜலம் புகட்டப்படும். அதற்கு அடையாளம் அஸாபு நாயிலா என்கிற இரண்டு விக்கிரகத்துக்கும் இடையில் குராபுல் அஃஸம் என்ற காகம் கொத்தும், அவ்விடத்திலாயிருக்கும் ஸம்ஸம்" என்றார்.

இப்படி சொப்பனங்கண்ட காலை முழித்ததும் தாங்களும், தங்கள் மகன் ஹாரிஸுமாகப்போய் கனவில்கண்ட அடையாளப்படி அத்தலத்தைக்கண்டு மூன்று நாள்வரைத் தோண்டினார்கள். மூன்றாம் நாள் தண்ணீர் கண்டதும், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொன்னார்கள். இந்த அற்புதமான ஸம்ஸம் கிணற்றை மற்றும் வம்சத்தார்கள் கண்டதும், இக்கிணறு நமது பாட்டனார் நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குள்ளது. இதில் யாவருக்கும் ஹக் உண்டு என வழக்காடினார்கள். இதில் பல சச்சரவுகள் நேர்ந்ததன் நிமித்தம் இச்சச்சரவை ஷாம் தேசத்தி

உள்ள பனி ஸஅத் கூட்டத்தாரின் சாஸ்திரி இடத்தில் போய், மத்தியஸ்தம் பேசிக்கொள்வோம் என்று இருதரத்தாரும் ஒப்புக்கொண்டுஷாமுக்கு பிரயாணமானார்கள். போகும்வழியில், ஷாமுக்கும் ஹிஜாஸுக்கும் இடையில் காட்டின் பாதையில் போகும் போது, அப்துல்முத்தலிபுக்கும் அவர்களைச் சேர்ந்தோருக்கும் அதிக தாகம் உண்டானது.அப்போது தங்கள்வசம் தண்ணீர் இல்லாததினால்மற்ற கூட்டத்தார்களிடத்தில் கேட்டதற்கு, தண்ணீர் கொடுக்கவில்லை. தாகத்தால் ஆபத்து நேருமென்று கருதி, அப்துல் முத்தலிப், தனது கூட்டத்தாரை, நாம் இதற்கு என்ன செய்வோமென்று யோசனை கேட்டார். அதற்கு அக்கூட்டத்தார்கள், தங்கள் யோசனைப்படி நடக்க நாங்கள் சித்தமாய் காத்திருக்கிறோமென்று சொன்னார்கள். அப்துல் முத்தலிப் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமாதிக் குழியை (கப்ரை) வெட்டிக் கொண்டு மரணத்தை வழிபார்த்திருப்பதே உசிதமென்றார். அதுபோல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழியை வெட்டி போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென அப்துல் முத்தலிபு தண்ணீர் கிடைக்காது போனாலும் போகட்டும்; நாம் சுற்றிப் பார்ப்போம். அல்லாஹு தஆலா தண்ணீரை கொடுத்து விடக் கூடும், என்று சொல்லிக் கொண்டு தங்கள் ஒட்டகையின் மீதேறி போகும்போது ஒட்டகையின் காலடியிலிருந்து அமிர்தமான சுத்தஜல குமுழியொன்றுகிளம்பி ஒரு கால்வாய்போல் ஓட ஆரம்பித்தது.

அப்போது அப்துல் முத்தலிபு தண்ணீரைக் கண்டதும் மிக்க ஆனந்தத்தோடு ஆண்டவனைப் புகழ்ந்து, அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என தக்பீர் சொல்லிக் கொண்டு கீழே இறங்கி, தாங்களும் தங்களைச் சேர்ந்த கூட்டத்தார்களும் போதிய அளவு ஜலம் பருகிக் கொண்டதோடு, வேண்டிய ஜலத்தையும் எடுத்துக் கொண்டார்கள். இதர கூட்டத்தார்களையும் அழைத்து வேண்டிய ஜலத்தை எடுத்துக் கொள்ளும்படி ஏவினார்கள். இவ்வதிசயத்தைக் கண்ட இதர வம்ச கூட்டத்தவர்கள் ''இப்படிக் கொத்தவனாந்திரக் காட்டில் இவ்வளவு ஆபத்தான நிலைமையில், தங்களுக்கு தண்ணீரைக் கொடுத்தானே, அப்படிப்பட்ட அல்லாஹு தஆலா தான் ஸம்ஸம் கிணற்றையும் தங்களுக்கு அருள் புரிந்திருக்கிறானென்று நாங்கள் உறுதியாகச் சொல்லுகிறோம். அக்கிணறு உங்களுக்கு பாத்தியமேதவிர எங்களுக்கு அதில் சொந்தமில்லை. இனி நாங்கள்

பிணங்கவும் மாட்டோம். மக்காவுக்கு திரும்புங்கள்'' என்று சொல்லி சகலரும் திரும்பி விட்டார்கள்.

அப்துல்லாவை குர்பான் செய்த வரலாறு.

அப்து முனாபுடைய புத்திரர் நௌபலின் புதல்வர் அத்தி என்பவர் அப்துல் முத்தலிபை நோக்கி நீர் புத்திர சம்பத்தில்லாமல் தனியாயிருந்து கொண்டு எங்கள் மீது உம்முடைய அதிகாரத்தை செலுத்துகிறீரா வென்று சதா தொந்தரவு விளைவித்துக் கொண்டிருந்தார். அதைக்கண்ட அப்துல் முத்தலிப், எனக்குப் புத்திர சம்பத்து குறைவாயிருப்பதற்காக என்னை பழிக்கிறீரோ. அல்லாஹ்வின் பேரில் சத்தியமாக, நான் சொல்லுகிறேன். அல்லாஹு தஆலா எனக்கு பத்து ஆண் மக்களை தந்தருளினானேயானால், அதில் ஒரு மகனை கஃபத்துல்லாவில் கிடத்தி அல்லாஹ்வுக்காக அறுத்து குர்பான் செய்வேன் என்று பிரார்த்தித்தார்.

அப்போது அவர்களுக்கு ஒரு புதல்வர் ஹாரிஸ் மட்டுந்தான் இருந்தார். இப்பிரார்த்தனைக்குப் பிறகு முப்பது ஆண்டுக்குள் பத்து புதல்வர்களை ஆண்டவன் பூர்த்தியாய் கொடுத்தருளினான். அவர்கள் பெயர் ''ஹாரிஸ், ஸுபைர், ஹஜல், விரூரு, முகவ்வம், அபூலஹப், அப்பாஸ், ஹம்ஸா, அபூதாலிப், அப்துல்லா. இந்தபத்து மக்களை கொடுத்து இறைவன் சந்தோஷமாக்கி வைத்தான். ஒரு நாள் அப்துல் முத்தலிப் கஃபாவில் நித்திரைபுரியும் போது சொர்ப்பனம் கண்டார். ஒருபெரிய மனிதர்அவர்பால் வந்து, இந்த வீட்டையுடைய ஆண்டவனுக்கு நீர் செய்த பிரார்த்தனையை நிறைவேற்றிவையும் என சொல்லக்கேட்டு, திடுக்கிட்டு விழித்தெழுந்து, ஒரு ஆட்டையறுத்து மிஸ்கீன்களுக்கு விருந்தளித்தார்கள். மறுநாள் நித்திரையில் சொர்ப்பனத்தில் ஒருவர் வந்து, இன்று நீர் அறுத்து குர்பான் செய்தீரே, அதைவிட பெரிதானதை குர்பான் செய்என்றார். அதைக்கேட்டதும், ஒரு மாட்டையறுத்து குர்பான் செய்தார்கள். மூன்றாம் நாள் நித்திரையில், ஒருவர் வந்து, இதைவிட பெரிதானதை குர்பான் செய்என்றார். அதைக்கேட்டதும், ஒரு ஒட்டகையை அறுத்து குர்பான் செய்தார்கள்.

நாலாம் நாள் நித்திரையில் ஒருவர் வந்து, இதைக்காண பெரியதானதை குர்பான் செய்என்றார். இதைக்காண பெரிதானது

ஏதுவாயிருக்கும் என்று அப்துல் முத்தலிப் கேட்டதற்கு, நீர் பிரார்த்தனை செய்தபடி உம்முடைய மக்களிலொருவரை அறுத்து குர்பான் செய் என்றார். உடனே அவர் திடுக்கிட்டு விழித்து, அதிக துக்கம் அடைந்தவர்களாக, தமது புதல்வர்களை எல்லாம் அழைத்து வைத்துக்கொண்டு, நான் கஃபத்துல்லாவுக்கு செய்துகொண்ட பிரார்த்தனைகளை நீங்கள் நிறைவேற்றி வையுங்களென்றார்கள். அப்போது புதல்வர்களெல்லாரும், பிதாவே! தாங்கள் எங்களில் யாரையறுத்து குர்பான் செய்ய விரும்புகிறீர்கள் என்று தாழ்மையாய்க் கேட்டார்கள். அதற்கு அப்துல் முத்தலிப் நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அம்பை எடுத்து அதில் உங்கள் நாமங்களைஎழுதிக் கொண்டு வாருங்கள் என்றார்கள். அதுபோல் புதல்வர்களெல்லாரும் பேருக்கு ஒருஅம்பாக தங்கள்நாமங்களை எழுதிக்கொண்டுவந்துபிதாவிடம் கொடுத்தனர். அப்துல் முத்தலிப் அதை வாங்கிக் கொண்டு, கஃபா ஷரீபினுள் புகுந்து, கஃபா ஷரீபின் பூசாரி இடத்தில், அம்புகளை எல்லாம் கொடுத்து இவைகளில் திருவுளச்சீட்டு எழுதிப்போட்டு, ஒரு பெயரை தெரிந்தெடுஎன்று சொல்லிவிட்டு தங்கள் இருகரங்களையும் ஏந்தி நின்று: எனதுஆண்டவனே! உனக்காக இவர்களிலொருவரை அறுத்து குர்பான் செய்ய பிரார்த்தித்தேன். ஆனதால் நீ நாடிய பேர்களுடைய சீட்டை வெளியாக்கிவை என்றுதுஆ செய்தவர்களாக நின்றார்கள். அதுபோல்பூசாரி திருவுளச்சீட்டை எழுதிப்போட்டு எடுக்க, அப்துல் முத்தலிப் அவர்களுக்கு மிகவும் பிரியமான அப்துல்லா அவர்களுடைய நாமமுள்ள சீட்டேவந்தது. உடனே அப்துல் முத்தலிப் அவர்கள், அருமைபுதல்வரான அப்துல்லாவின் திருகரத்தைபிடித்துக்கொண்டு, கத்தியையும்எடுத்துக்கொண்டு, அஸாபு நாயிலா வென்றஇரண்டு விக்கிரகங்களுக்கிடையில் அவரை போட்டு குர்பான் செய்வதற்காக ஆயத்தமானார்.

அஸாபு, நாயிலா வென்னும் இரு விக்கிரங்களின்வரலாறு:— ஜூர்ஹும் கிளையிலுள்ள எஃலாவின் புதல்வர் ஹஸாபு என்றொரு மனிதன், ஸைதுடைய புத்திரி நாயிலா என்ற ஒரு பெண்ணை நெடுங்காலமாக இச்சித்திருந்தான். ஒரு வருடம் ஹஜ்ஜு செய்து முடிந்தவுடன் அரவம் ஒடுங்கிய நேரத்தில், கஃபாவினுள் ஒரு குச்சுவீட்டில் அவ்விருவரும் புகுந்து ஸினாவென்னும் பாபச் செயலை செய்து விட்டதால், அவ்விருவர்களையும் அல்லாஹு

தஆலா இருகல்லாக மாற்றிவிட்டான். மற்றும் ஜனங்களெல்லாரும் காலை கஃபாவினுள் போய் பார்க்க, இருவரும் கல்லாகி விட்டதைக் கண்டு மற்றவர்களுக்கும் அச்சமுண்டாகும் பொருட்டு அவ்விக்கிரகத்தை அவ்விடத்திலேயே ஸ்தாபித்து விட்டார்கள். இதரவிக்கிரகங்களை வணங்க ஆரம்பித்தபோது அதையும் சேர்த்து வணங்கினார்கள் என்பதே.

அப்துல் முத்தலிப் அவர்கள் தங்கள் புதல்வர் அப்துல்லாவை அவ்விடத்தில் போட்டு அறுக்கத்துணிந்தபோது, மற்றும் குறைஷிகள் வந்து, தாங்கள் இப்படி பிள்ளையை அறுத்து குர்பான்செய்கிறதானால் மற்றும் எல்லா மனிதர்களும் தங்கள் தங்கள் புதல்வர்களையும் கொண்டுவந்து அறுத்து குர்பான் செய்வதுவழக்கமாகிவிடுமே. ஆனதால் அப்படி அறுக்கக் கூடாதென்று தடுத்து விட்டு, ஹிஜாஸைச் சேர்ந்த கைபர் பதியிலுள்ள குத்பா என்னும் குறிசொல்லும் சாஸ்திரியொருத்தி இருக்கிறாள். அவள்பால் போய் இவ்விஷயத்தை தெரிவித்தால் புதல்வரை அறுப்பதை விட்டும் தப்புவதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லுவாள் என்று சொன்னார்கள். அதை அப்துல் முத்தலிப் அவர்கள் ஒப்புக்கொண்டு கைபர்பதிக்குப்போய் அந்த சாஸ்திரியிடத்தில் விஷயங்களைச்சொன்னதற்கு அவள் இவ்விஷயத்தை என்னை ஆதரிக்கும் ஜின் இடத்தில் கேட்டுச் சொல்லுகிறேன், மறுநாள்காலை வாருங்கள்என்றாள். அதுபோல் மறுநாள் போய் கேட்க, ஒருமனிதருக்கு திரை கட்டுவது எவ்வளவென்றாள். அதற்கு, பத்து ஒட்டகை என்றார்கள். அப்போது அதற்குஅவள் உங்களில் அறுக்கப் பட்டவரையும் பத்து ஒட்டகையையும் அத்தலத்திற்கு கொண்டுபோய் திருவுளச் சீட்டு போடுங்கள். அச்சீட்டு ஒட்டகைபேரில் விழுந்தால் ஒட்டகையை குர்பான் செய்யுங்கள். அப்படியில்லாமல் மனிதன் பேருக்கே சீட்டு விழுந்தால் மறுபடியும் பத்து ஒட்டகையை அதிகமாக்கி சீட்டு போட்டு எடுங்கள். இப்படியாக ஒட்டகைபேரில் சீட்டு வரும் வரையில், பத்துபத்து ஒட்டகையை அதிகமாக்கிக்கொண்டு வந்து, ஒட்டகைபேரில் சீட்டு வந்ததும் உங்கள் ஆண்டவன் அதை பொருந்திக்கொண்டான் என்று நம்பி அவ்வொட்டகைகளை குர்பான் செய்யுங்கள், என்று சொன்னாள்.

அதன்படி அப்துல் முத்தலிப், மக்காவுக்கு வந்து குர்பானி ஸ்தலத்திற்குச் சென்று பத்து ஒட்டகையையும் அப்துல்லாவை

யும் குறித்து திருவுளச் சீட்டு எழுதி போட்டு எடுத்தார். அப்துல்லாவின்பேர் வந்தது. மறுபடியும் பத்து ஒட்டகையை அதிகமாக்கி எழுதிப் போட்டு எடுத்தார், அப்துல்லாபெயரே வந்தது. அப்பால் ஒவ்வொரு விடுத்தத்திலும் பத்து பத்து ஒட்டகையைஅதிகமாக்கிக் கொண்டு வந்து, நூறு ஒட்டகை முடிந்த போது, ஒட்டகைகள் பேரில் சீட்டுவந்தது. அப்போது குறைஷிகளும், மற்றோர்களும் 'அப்துல் முத்தலிபே! இப்போது உமது நாயன்உம்முடைய பிரார்த்தனையை பொருந்திக்கொண்டான்' என்றுசொன்னபோது, அவர்கள் அதுபோல் இன்னமும் மூன்று விடுத்தம் சீட்டைப்போட்டு எடுத்துப் பார்த்தேயல்லாது நான் பொருந்தமாட்டேன் என்று சொல்லி மறுபடியும் மூன்றுவிடுத்தம் சீட்டைப் போட்டுஎடுத்தார். அந்த மூன்று தடவையும் ஒட்டகைகள்பேரிலேயே சீட்டுவந்தது. அதன் படி நூறு ஒட்டகைகளை யறுத்து குர்பான் செய்து அதன் மாமிசத்தை ஜனங்களுக்கும் மற்றும் விலங்கினங்களுக்கும் பறவை பட்சிகளுக்கும் விருந்திட்டார்கள். இதற்காகத்தான் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்"நான் குர்பான் செய்யப்பட்ட இருவர்களுடைய மகனா யிருக்கிறேன்" என்று திருவுளம் பற்றினார்கள். அவ்வார்த்தை அப்துல்லாவையும் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமையும் குறிப்பதாகும்.

———

அப்துல் முத்தலிப் அவர்களின் சொர்ப்பனம்.

அப்துல் முத்தலிப் அவர்கள், தனது மாளிகையில் நித்திரை புரியும்போது அற்புதமான ஒரு சொர்ப்பனத்தைக்கண்டு திடுக்கிட்டெழுந்து, குறைஷிகளின் தஃபீர் சொல்பவரிடத்தில், போய் சொன்னதாவது :-ஒரு ஆல விருக்ஷம் எனது முதுகில் முளைத்திருக்கிறது. அதன் உச்சம் வான மண்டலம் வரையும் போயிருக்கிறது. அதன் கொப்புக் கிளைகள் மஷ்ரிக் தொட்டு மஃரிப் அளவு பரவி அனைத்தையும் மூடிக்கொண்டிருக்கின்றன. அதன் தோற்றம் ஒளிவைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அரபியர்களும் அஜமியர்களும் அதற்கு சாஷ்டாங்கம் (ஸுஜூது) செய்கிறார்கள். மேலுக்கு மேலும் அவ்வொளி அதிகமாகவே பிரகாசித்துக் கொண்டிருப்பதோடு, சில சமயம் மறைகிறதும், சில சமயம் வெளியாகிறதுமாய் இருந்தது. குறைஷிக் கூட்டத்தவர்களில் சிலர்

அவ்விருக்ஷத்தின் கிளைகளைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். மற்றும் சிலர் அக்கிளைகளை தரிக்க நாடி அதன் அருகே நெருங்கினால் அழகிய ஒரு வாலிபர் வந்து, அவர்களை வெட்டி எறிந்து விடுகிறார். நானும் என் கரத்தை நீட்டி அக்கிளையை பிடிக்க எத்தனித்தேன். அகப்படவில்லை! அவ்வாலிபரிடத்தில் இவ்விருக்ஷத்தின் பலன் எவருக்கென்று வினவினேன். அவர், அக்கிளையை பிடித்தவர்களுக்காகும், அவர்களோ உம்மைவிட முந்தி விட்டார்கள் என்று சொன்னார். இவ்வண்ணமாக நான் சொப்பனம் கண்டேன் என்றும் இதன் தஃபீர் என்னவென்றும் கேட்டு நின்றார்.

இவ்வதிசய சொர்பனத்தை அவள் கேட்டதும் சஞ்சலித்தவளாய் சொல்லுவாள், "உமது சொர்ப்பனம் உண்மையாய் இருக்குமாயின், உமது வம்சத்திலிருந்து ஒரு நபி வெளிப்படுவார். அவர் மஷ்ரிக் தொட்டு மஃரிப் வரை ஒரே குடையில் ஆளுவார். மனிதர்களெல்லாரும் அவருடைய மார்க்கத்திற்கு வழிப்பட்டு நடப்பார்கள்" என்று சொன்னாள். இதை கேட்டதும் அப்துல் முத்தலிப் மிக்க சந்தோஷத்தோடு, வீட்டிற்கு வந்து தாம் கண்ட சொப்பனத்தையும் அதன் தஃபீரையும் சொல்லி, அந்தப்பிள்ளை அபூதாலிபா இருப்பார் என்று சொல்லிக்கொண்டார்கள்.

—— :(*) :——

4-வது அத்தியாயம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தலைமுறைத் தோற்றம்.

(அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.)

மருவிரி வாவிசெங் தாமரை மலர்கைக ளேந்தச்
சொரிமது சிந்துஞ்சந்தத் துடைவளூம் மதினாத் தன்னிற்
றெரிதர வரசுசெய்து தீனிலை நிருத்திச் செல்வந்
தருநபி யிறசூலுல்லா தலைமுறைத் தோற்றஞ் சொல்வாம்.

நபிகள்நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூல பிதாக்களைப் பற்றிய தலைமுறை வரலாறுவது, அல்லாஹு தஆலா சகல மனுக்களுக்கும் மூலபிதாவாகிய பாவ

ஆதம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களுக்குக் கட்டளையிட்டான்: ஓ ஆதமே! நீர் ஸ்நானஞ் செய்து பரிசுத்தமாவீராக. ஏனெனில், உமது நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் எனது ஹபீபாகிய தூய்மையாகிய முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவொளிவை உம்மிலிருந்து வெளிப்படுத்துகிறேன், என்றான். அக்கட்டளைக்கிணங்க பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குளித்து முழுகி துப்புறவானார்கள். அப்போது அவ்வொளி பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமிலிருந்து அவர்களின் முதுகந்தண்டின் வழியாக உலக மாதாவாகிய ஹஜ்ரத் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கற்பத்தில் இறங்கி அவர்கள் முகத்தில் சூரியனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அப்பால் அவ்வொளி அவர்களின் புதல்வர் ஹஜ்ரத் ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பால் இறங்கி அவர்கள் முகத்தில் பிரகாசித்தது. பிறகு அவர்களின் புதல்வர் கைனான்பால் இறங்கிற்று. பிறகு அவர்களின் புதல்வர் மஹ்லீல்பால் இறங்கிற்று. பிறகு அவர்களில் புதல்வர் இறதுபாலும், பிறகு அவர்கள் புதல்வர் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பாலும், பிறகுஅவர்களின் புதல்வர் மத்தூஷலக் பாலும், பிறகு அவர்களின் புதல்வர் லாமகுபாலும், பிறகுஅவர்களின் புதல்வர்ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம்அவர்கள்பாலும், பிறகுஅவர்களின் புதல்வர் ஸாம்பாலும், பிறகு அவர்களின் புதல்வர் பக்ஷத்பாலும், பிறகு அவர்களின் புதல்வர் ஸாலக்பால், பிறகு அவர்களின் புதல்வர் ஐபர்பால், பிறகு அவர்களுடைய புதல்வர் பாலக்பால், பிறகு அவர்களின் புதல்வர் ரூஊன்பால், அவர்களின் புதல்வர் ஸாறூஹ்பால், பிறகு அவர்களின் புதல்வர் த்தாறூஹ்பால், பிறகு அவர்களின் புதல்வர் த்தாறக்பால், பிறகு அவர்களின் புதல்வர் ஹஸரத் இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பால், பிறகு அவர்களின் புதல்வர் ஹஸரத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பால், பிறகு அவர்கள் புதல்வர் ஸாமீத்பால், பிறகு அவர்களின் புதல்வர் எஷ்ஹுப் பால், பிறகு அவர்களின் புதல்வர் எஃறப்பால், பிறகு அவர்களின் புதல்வர் எத்றஹ்பால், பிறகு அவர்களின் புதல்வர் நாகூர்பால், பிறகு அவர்களின் புதல்வர் மீக்தம்பால், பிறகு அவர்களின் புதல்வர் உத்து பால், பிறகு அவர்களின் புதல்வர் அத்னன்பால், பிறகு அவர்களின் புதல்வர் முஅத்துபால், பிறகு அவர்களின் புதல்வர் நிஸாருபால், பிறகு அவர்களின் புதல்வர் முலருபால், பிறகு அவர்களின் புதல்வர் இல்

யாஸ் பால், பிறகு அவர்களின் புதல்வர் முத்றகத் பால், பிறகு அவர்களின் புதல்வர் குஸைமா பால், பிறகு அவர்களின் புதல்வர் கினாத் பால், பிறகு அவர்களின் புதல்வர் நூலறு பால், பிறகு அவர்களின் புதல்வர் மாலிக் பால், பிறகு அவர்களின் புதல்வர் பிஃறு பால், பிறகு அவர்களின் புதல்வர் காலிப் பால், பிறகு அவர்களின் புதல்வர் லுஐயி பால், பிறகு அவர்களின் புதல்வர் கஃபு பால், பிறகு அவர்களின் புதல்வர் முர்ரத் பால், பிறகு அவர்களின் புதல்வர் கிலாப் பால், பிறகு அவர்களின் புதல்வர் குஸையி பால், பிறகு அவர்களின் புதல்வர் அப்துமுனூப் பால், பிறகு அவர்களின் புதல்வர் ஹாஷிம்பால், பிறகு அவர்களின் புதல்வர் அப்துல் முத்தலிப் பால், பிறகு அவர்களின் புதல்வரும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பிதாவும் ஆகிய அப்துல்லா அவர்கள் பால் இறங்கி, அவர்களின் திருமுகத்தில் அவ்வொளி சந்திரனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

5-வது அத்தியாயம்.

அப்துல்லாவுக்கும் ஆமினுவுக்கும் திருமணம்.

கலி விருத்தம்.

வரபதி யுலகெலாம் வாழ்த்து மக்கமா
புரபதிக் கதிபதி யென்னும் பூபதி
பரபதி யரசர்கள் பணிந்தி றைஞ்சிய
நரபதி யப்துல்லா வென்னும் நாமத்தார்

செழுமழை முகிலென வமுதஞ் சிந்திட
வழிகதிர் நபியென வகுத்தபே ரொளி
பொழிகரத் தப்துல்லா விடத்திற் பொங்கியே
யெழிறரு திருநுத லிடத்தி லங்குமே.

அப்துல் முத்தலிபுடைய பத்து புதல்வர்களில் அப்துல்லா என்பவரே மிக்க அழகும் பிரீதியும் வாய்ந்திருந்தார். அவருடைய நெற்றியில் பிரகாசமான திருஒளி ஜொலித்துக் கொண்டிருந்தது. அவரை எத்தனையோ உயர்தர தனவந்தர்களின் புத்திரிகளெல்லாரும் மணக்க ஆவல் கொண்டிருந்தும், அவர்களின் பிதாவாகிய அப்துல் முத்தலிப் ஒப்பாததால், அப்பெண்கள் மதியிழந்து,

ஸ்பத்தியங்கொள்ளும் தருவாயில் ஆயினர். இதனால் இவர்களுக்கு அநேக இடையூறுகள் சம்பவித்திருந்ததோடு, இதைத் தவிர காபிரீன்கள் புறத்தாலும் இவர்களுக்கு மிகவும் பகையுண்டாயிருந்தது.

அதாவது ஷாம் பதியிலுள்ள அஃபார் என்னும் யூதமத பண்டிதனிடத்தில், நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாம் உடைய இரத்தத்தில் தோய்த்த ஆட்டு ரோம ஜுப்பா ஒன்று இருந்தது. இந்த ஜுப்பாவில் இரத்தத்துளி கசிந்து விட்டால் அவ்விரவில் ஒடுக்கத்து நபியாகிய "முஹம்மது" அவர்களின் பிதா பிறந்து விட்டார் என்று நீங்கள் அறிந்து கொள்ளுங்களென்று அவர்கள் வேதத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்த ஜுப்பாவை அவர்கள் நீடிய காலமாக பாதுகாத்து வைத்து, பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதன்படி அப்துல்லா பிறந்ததும் அந்த ஜுப்பாவில் ரத்தத் துளி கசிய கண்டதும், அவர்களுக்கு மன சஞ்சலம் உண்டாகி, எவ்விதத்திலாவது அப்துல்லா வென்னும் புத்திரரை கொன்று விடவேண்டு மென்கிற துவேஷ புத்திகொண்டு அவர்களெல்லாரும் மக்காவுக்கு வந்தனர். இவர்களை சூழ்ச்சியால் கொல்ல எத்தனித்தார்கள். அல்லாஹு தஆலா அவர்களுக்கு காவலாய் இருந்ததால் அவர்களின் சூழ்ச்சி ஒன்றும் பலியாமல் போயிற்று. அதனால் அவர்களெல்லாம் தங்கள் பதிக்கு மீண்டு போய் விட்டார்கள்.

அப்துல்லா அவர்களும் தன்பால் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒளி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே என்று அறிந்து கொள்வதற் கேற்ப, அனேக காரணங்களை கண்டிருக்கின்றார். ஒரு நாள் தனது பிதாவாகிய அப்துல் முத்தலிப் இடத்தில் போய் 'எனது பிதாவே! நான் மக்கா நகரத்திலுள்ள காட்டுக்குப்போய் ஸுபைர் என்கிற பருவதத்தின் மேலிருந்தேன். அப்போது இரண்டு ஒளி வெளிப்பட்டன. அதிலொன்று மஷ்ரிக்கிலும் மற்றொன்று மஃரிபிலும். பரவியது பின்பு. அவ்விரு ஒளிகளும் அந்தரம் சென்று வட்டம் சுற்றி ஒரு வெண்மேகம் போல் ஆயின. பிறகு அவை ஒன்றுதிரண்டு வான மண்டலத்தில் புகுந்து ஒரு நொடிக்குள்ளாக மீண்டும் என்பால் வந்துவிட்டன. நானோ இருந்த ஸ்தலத்திலேயே, இருந்தேன். அப்போது எனக்கு அருகே இருந்து "தமது முதுகின் பேரில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை சுமந்து கொண்டிரும்

பவரே! உம்மீது ஸலாம் உண்டாவதாக". என்று உருவமில்லாத ஒரு தொனி சொல்லக் கேட்டேன். இன்னும் நான் எந்த ஸ்தலத்தில் உலர்ந்த மரத்தடியில் தரித்தபோதே அம்மரம் துளிர்விட்டு பசுமையாகிவிடும். நான் அதைவிட்டும் கடந்து விட்டால் முன்போல் ஆகிவிடும்' என்று சொன்னார்கள்.

அதற்கு அப்துல் முத்தலிப், "மகனே! நீ நன்மாராயம் பெற்றுக் கொள். உன்னுடைய முதுகிலிருந்து ஆலத்தார்களுக் கெல்லாம் மிகவும் சங்கையான, மேலான ஒரு நபியை அல்லாஹு தஆலா வெளியாக்கி வைப்பான். அதற்கு ஆதாரமான அனேக சொர்ப்பனங்களை நானும்கண்டு இருக்கிறேன்" என்றார்கள்.

ஒரு நாள் அப்துல்லா கண்ணிவைத்து வேட்டையாடுகிறதற்கு காட்டுக்குப் போயிருந்தார். அப்போது ஷாம் தேசத்து யூதப் பண்டிதர்களாகிய அஹ்பார்களில் தொண்ணூறு பேர்கள் அவர்களை கொலை புரிவதற்காக நஞ்சூட்டிய வாட்களை கரங்களில் ஏந்தியவர்களாக சேர்ந்து அடர்ந்தார்கள். அச்சமயம் ஆமினா அம்மாவின் தந்தையாகிய குறைஷ் வம்சத்திய; வஹப் என்பவரும் வேட்டையாடுவதற்காக அங்கு சென்றிருந்தார். அப்போது அப்துல்லா தனியாய் நிற்கிறார். தொண்ணூறு அஹ்பார்களும் சூழ்ந்துகொண்டு சங்காரஞ் செய்ய எத்தனித்தனர். அப்போது வஹப் அப்துல்லாவுக்கு உதவிபுரிய நாடி கிட்டேநெருங்கி பார்த்தார். உலகவாசிகளுக்கு ஒப்பில்லாத சில மனிதர்கள் குதிரை மீது ஏறினவர்களாய் அந்த அஹ்பார்கள் கூட்டத்தில் விழுந்து வெட்டியும் அடித்தும் துரத்தி விட்டு மறைந்து விட்டார்கள்.

இக்காரணத்தை வஹப் கண்டபோது அப்துல்லாபால் அநேக மகிமைகள் இருக்கின்றனவென்று ஆர்வம் கொண்டு தம்முடைய புத்திரி ஆமினா அம்மாவுக்கு இவரேதகுதியான கணவர் என்றுஎண்ணிக்கொண்டார். ஆமினாவென்னும் அழகிய பெண்ணரசியின் குணலக்ஷணங்களை அறிந்த எத்தனையோ பிரபல கனவான்கள் மணந்து கொள்ள முன்வந்தும், அவர்களை அம்மாதரசி ஒப்புக்கொள்ளவில்லை. இன்னிலைமையில் வஹப் அவர்கள் வீடுவந்து சேர்ந்ததும், அப்துல்லாவிடம் நடந்த காரணத்தை தன்மனைவி பர்ரா இடத்தில் சொல்லி இருவர்களுமே அப்துல்லாவுக்கே தங்கள் புத்திரியை விவாஹம் செய்வதாக ஒப்புக்கொண்டு, தனது மனைவி பர்ராவை அப்துல் முத்

தலிப் இடத்திற்குப் போய் மாப்பிள்ளையைப் பேசி முடிவு செய்து கொண்டு வரும்படி அனுப்பிவைத்தார்.

அதுபோல் வஹப் அவர்களின் மனைவியார், அப்துல்முத்தலிப் அவர்களின் இல்லத்திற்குப் போய் அவர்களைக்கண்டு, தனது புத்திரி ஆமினா அம்மாவின் அழகையும் குணலக்ஷணங்களையும் வெகுவாய் எடுத்துக்கூறி“: தங்கள் புத்திரி ஆமினா அம்மாவிற்குத் தகுதியான புருஷர் அப்துல்லா வென்றே நாங்கள் முடிவு செய்துகொண்டு தங்கள்பால் வந்திருக்கிறேன். எங்கள் மனம் குளிரும்படியான சந்தோஷமான பதிலை எதிர்ப்பார்க்கிறேன்” என்றாள். இச்சோபன வார்த்தையை அப்துல் முத்தலிப் அவர்கள் கேட்டதும் வெகு சந்தோஷத்தோடு‘ எனதுபுதல்வர் அப்துல்லாவுக்குத்தகுதியான பெண் ஆமினா வென்றே நானும் ஒப்புக்கொள்கிறேன்’ என்ற சந்தோஷகரமான பதிலை சொன்னார்கள்.

அதுபோல் இரு குடும்பத்தார்களும் மனமார ஒப்பி, ஆமினா அம்மா அவர்களை அப்துல்லாவுக்கு கி. பி. 567-வது ஆண்டில் றஜப் மாதம் முதல் வெள்ளிக்கிழமை இரவு விவாஹம் செய்தார்கள். அப்போது அப்துல்லாவுக்கு வயது 25. அப்துல்லாவின் சௌந்தரியத்தை கண்ணுற்ற அநேகபெண்களுக்குஅப்துல்லா தன்னை மணந்துகொள்ளவில்லை என்பதைப்பற்றியும், ஆமினாவுக்கே சொந்தமாகிவிட்டார் என்பதை பற்றியும் ஆசாபங்கம் ஏற்பட்டிருந்தது. இக்கவலையாலும் கைசேதத்தாலும் குறைஷி பெண்களில் சுமார் நானூறு பெண்களும், மக்கூம் கிளையார்களில் சுமார் இரு நூறு பெண்களும் விரகநோய் கொண்டு இறந்து விட்டார்கள்.

அந்தரங்கத்திலோ இவ்விவாஹத்தின்பயனாக முளைத்த விருக்ஷமானது இருலோக ரக்ஷகரான காதிமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டுள்ள ஓர் ஒப்பற்ற கனியை கொடுக்கவேண்டிய திருந்த திரு ஒளியே இதற்கு காரணமாகும்.

அப்துல்லா அவர்களுக்கு ஆமினா றலியல்லாஹு அன்ஹா அவர்களை விவாஹம் செய்தபிறகு, ஆமினா அம்மா ஹமலாவதற்கு முன் ஒருநாள், கஸ்அம்கிளையிலுள்ள முர்ரத்துடைய புதல்வி பாத்திமா என்பவள் மிக்க அழகும், பத்தினித்தனமும் வாய்ந்திருந்ததோடு முன்வேதங்களையும் ஓதி ஆராய்ந்திருந்ததால் அப்துல்லா

அவர்களின் நெற்றியில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவொளி பிரகாசித்துக்கொண்டிருப்பதைக்கண்டு, அவ்வொளியை கொய்துகொள்ள வேண்டுமென்ற ஆசைக் கொண்டு அப்துல்லா அவர்களை நோக்கி, ஏவாலிபரே! நீயார்? என்று வினவினாள். அவர்கள் நான் இன்னான் என்று பதிலளித்தபோது அவள் நான் உமக்கு நூறு ஒட்டகைகள் ஹதியாவாய் தருகிறேன் நீர் என்னை சேருகிறீரா என்றாள். அதற்கு அவர்கள் அவள் முகத்தைநோக்கி பதிலளித்ததாவது:-உன்னை சேருவது ஹறாமாகும் நான் மௌத்தானாலும் அதைப் பொருந்தேன். ஹலாலாக வானாலும் அதை யோசித்துக்கொண்டுதான் வருவேன். கௌரவமான மனிதன் தன்னையும் தனது வம்சத்தையும் தனது தீனையும் காத்துக்கொள்வான் என்று பதிலளித்துவிட்டு தனது இல்லத்துக்கு வந்து இவ்விஷயத்தைத் தனது பத்தினி ஆமினா (றலியல்லாஹு அன்ஹா) அவர்கள் பால் அறிவித்தார்கள்.

அன்றிரவு அப்துல்லா அவர்கள் ஆமினா றலியல்லாஹு அன்ஹா அவர்களோடுவீடுகூடி இராதரித்துவிட்டு, மறுநாள் அப்பெண் பாத்திமாவின்பால் சென்று‘ நீ நேற்றையதினம் சொன்ன கருமத்தைஎப்படிநினைக்கிறாய்’ என்றுகேட்க, அம்மாது சிரோமணி பதிலளித்ததாவது:- எனதுஉள்ளத்தில் நேற்றையஎண்ணம்அப்படியாயிருந்தது. இன்று அப்படியான எண்ணம் யாதொன்றுமில்லை. ஆனால் நீர் நேற்றையதினம் என்னைக்கண்டு பிரிந்த பிறகு உம்மில் என்ன நிகழ்ந்தது, என்று வினவினாள். அதற்கு அப்துல்லா அவர்கள் எனதுமனைவி ஆமினாவோடு வீடுகூடினதைத்தவிர வேறொன்றுமில்லை, என்று பதிலளித்தார். இம்மொழியைக் கேட்டதும் அம்மாது பதிலளித்ததாவது நான் கெட்ட செயலுடையவளல்ல. உம்முடைய திருமுகத்தில் திருநபியுடைய ஒளியின் பிரகாசத்தை கண்டேன். அது எனக்குத் தக்கிவிடுமென்று ஆதரவு வைத்து நான் அவ்வனம் மொழிந்தேன். அல்லாஹு தஆலா தான்நாடிய ஸ்தலத்தில் அத்திருவொளியை வைத்துவிட்டான். உமதுமனைவி ஆமினா இவ்வுலகிலுள்ள யாவரிலும் கைரான ஒரு சிசுவைப் பெற ஹமலாகிவிட்டாள், என்று அறிவித்தாள். இவ்விதம் அறிவித்து விட்டு அப்துல்லாவின் வேண்டுதலை மறுத்துவிட்டாள்.

6-வது அத்தியாயம்.

திருநபியின் அவதாரம்.

கலி விருத்தம்.

பெருகிய கோடி சந்திரப்பிர காசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணைவீற் றிருந்தசெங் கமலக் கண்ணினைத்
திருநபி வருமவ தாரஞ் செப்புவாம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திங்க ளாமி றஜபுமாத முதற்றேதி வெள்ளியிராத்
துங்க வார்கழன் முஹம்மது பேரொளி துலங்கி
எங்க ளுயக ரப்துல்லா நுதலிடத் திருந்து
மங்கை யாமினா வயிற்றினிற் றரித்தன வன்றே.

அல்லாஹு ஸுபுஹானஹு வதஆலா தனது அடியார்களை தன் கட்டளைப்படி 'நேர்வழிபெற்று மோக்ஷகதி அடையும் பொருட்டு' நூர் முஹம்மதியா வென்னும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருவொளியை அப்துல்லாவின் னின்றும் ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கர்ப்பக்கிரஹத்தில் இறக்கி வைத்தான். அன்று றஜப் மாதம் ஜும்மாவுடைய இரவாக இருந்தது. மற்றொரு விவரம்: திங்கட்கிழமை இரவெனவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் இருலோக ரக்ஷகரான சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா, அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கொண்டு ஹமலானதற்காகவும் அவர்களின் மேலாம்பரமான வரிசைக்காகவும் அவர்களின் மரியாதைக்காகவும் அவர்களைக் கௌரவமாக்கி வைக்கும் பொருட்டு, அல்லாஹு தஆலா எட்டு சொர்க்கத்து வாயல்களையும், திறந்து வைக்கும்படியாகவும், ஏழு நரகத்து வாயல்களையும் அடைத்து வைக்கும்படியாகவும் மலாயிகத்துகளுக்குக் கட்டளையிட்டான். அக்கட்டளைப்படி சொர்க்கத்து வாயல்களைத் திறந்தும், நரகத்து வாயல்களை அடைத்தும் வைத்தார்கள். தீனுல் இஸ்லாம் என்னும் திவ்விய மார்க்கத்திற்கு அதிபரான முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மக்கா நகரில், அவர்களின் மாதாவாகிய ஆமினா

ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கர்ப்பத்தில் தரித்துவிட்டார் என்னும் அறிகுறியை யாவரும் அறியும் பொருட்டு, மக்கா நகரின் புண்ணிய க்ஷேத்திரமாகிய கஃபத்துல்லா வென்னும் பள்ளியில் தீனுல் இஸ்லாம் என்னும் துவஜத்தை (ஜண்டாவை) நாட்டும்படி மலாயிக்கத்துகளுக்கெல்லாம் அதிபராகிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கட்டளையிட்டான். அவ்வுத்திரவின்படி கஃபாவில் ஜண்டாவும் நாட்டப்பட்டது.

இன்னும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது தாயின்வயிற்றில் அவதரித்த அன்றே உலகிலுள்ள எல்லா விக்கிரகங்களும் முகங்கவிழ அடித்து விழுந்து விட்டன. அச்சமயம் பஞ்சத்தின் காரணத்தால் குறைஷி வம்சத்தவர்கள் அதிக கஷ்டத்திலாயிருந்தனர். இவர்கள் அவரித்த, அன்றே ஊரிலுள்ள பயிர் பச்சைகளெல்லாம் பசுமையாய், விளைந்து பொலிவாய் விட்டன. விருக்ஷங்களெல்லாம் பூத்துக் காய்த்து கணக்கற்ற பலன்களைக் கொடுத்து விட்டன. இக்காரணத்தால் அவ்வாண்டிற்கு (ஸனத்துல் பத்ஹ்) ஜெயம்பெற்ற வருடமென பெயர் வழங்கப்பட்டது.

இன்னும் அவ்வாண்டில் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தாயின் கர்ப்பத்தில் அவதரித்த பரக்கத்திற்காக அவ்வாண்டில் ஹமலான சகல சிசுக்களையும் ஆண்பாலாக அல்லாஹு தஆலா ஆக்கிவைத்தான். இன்னும் குறைஷிகளிலுள்ள ஊர்வன விலங்கினங்களெல்லாம் அன்றிரவில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தாயின்பால் ஹமலாகி விட்டாரென்று வாய் திறந்து மொழிந்தன.

இன்னும் குறைஷிகளிலும் இதர இனத்தவர்களிலுமுள்ள குறிசொல்லும் சாஸ்திரிகளெல்லாரும் அவர்களின் ஹமலைக்கொண்டு செய்தி அறிவித்து விட்டனர். பூலோகத்திலுள்ள ராஜாக்களின் சிம்மாசன மெல்லாம் அன்றே அடித்து விழுந்துவிட்டன. மஷ்ரிக் தொடுத்து மஃரிப் வரையிலுமுள்ள கால் நடைகளும், கடலிலுள்ள நீர் வாழும் மச்சங்களும் சோபனம் மொழிந்தன. ராஜாக்களின் நாவுகளெல்லாம் பேச சக்தியற்று தடுமாறி விட்டன. இன்னும் இப்லீசுல் லயீன் அபய சப்தமிட்டு ஓலமிட்டழத் தொடங்கினான். அவனுடைய புத்திரர்களெல்லாம் வந்து கூடி

சூழ்ந்திருந்து:—நீர் எதற்காக அழுகிறீரென்று கேட்க, அவன்பதிலளித்ததாவது உங்களுடைய சூழ்ச்சியும் ஏமாற்றுதலும் இன்றோடு ஒழிந்து விட்டன. ஏனெனில் உங்களை அடக்கி ஆண்டு ஜெயிக்கக் கூடிய முஹம்மது நபி தமது தகப்பன்பால் இருந்து தாயின் கர்ப்பத்தில் அவதரித்துவிட்டார். குறி சொல்லுகிறவர்களின் குறிப்பிலும் திரை போடப்பட்டு விட்டது. அதன் அறிவுகள் அறவே அற்றுப்போய் விட்டன. அந்நபியோ உலகத்துமக்களுக்கு நல்ல அறிவைப் பூட்டி நன்மாராயம் சொல்லுகிறவராயிருப்பார் என்று தனது புத்திரர்களுக்கு சொன்னான். அன்றே அவனுடைய சிம்மாசனம் கவிழ்ந்து அடித்து கீழே விழுந்து விட்டது. அவனுடைய முகமும் கரிந்து கொள்ளிக்கட்டைக்கு ஒப்பாகி விட்டது

ரிவாயத்து:—ஆமினா ரலியல்லாஹு அன்ஹா சொன்னார்கள்:—நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹமலானபோது, நான் ஹமலாய் இருக்கிறேன் என்று அறியவும் இல்லை. அதற்குள்ள அடையாளமும் என்னில் காணப்படவுமில்லை. வயிறு கனத்தல், வருத்தம் முதலிய குறிகளும் தென்படவில்லை. ஆயினும் சூதகம் (ஹைலு) மட்டும் நின்றிருந்தது. ஒருபோது நான் நித்திரைக்கும் விழிப்புக்கும் இடையிலாயிருந்தபோது அழகிய ஒரு மனிதர்வந்து, "ஆமினாவே! நீர் கர்ப்பமாய் இருக்கிறதை அறிவாயா?" என்று கேட்டார்கள். 'நான் அறியேன்' என்றேன். அவர் இந்த கூட்டத்திற்கு நபியாகவும், நாயகமாகவுமான ஒரு சங்கையான குழந்தையை நீ உண்டாயிருக்கிறாய் என்றார். அப்போதுதான் என்னுடைய கர்ப்பம் எனக்கு திட்டமாயிற்று. பிறகு பேறுகாலம் சமீபித்தபோது, முன்சொன்னவர்தானே வந்து, நீ குழந்தை பெற்றால், அதுஆண் பிள்ளையாகவே இருக்கும். அதற்கு முஹம்மத் என்று பெயர் வை. அதன் கண்ணூறுக்காக "உஈதுஹு பிஸ்ஸமதில்வாஹிதி மின் ஷர்ரி குல்லி ஹாஸிதின்" என்று ஓதி வரும்படியாகவும் சொல்லிவிட்டுச் சென்றார். அதுபோல் ஓதிவந்தேன். இது விஷயத்தை இதர பெண்டுகளிடத்திலும் சொன்னேன். அதற்கு அப்பெண்கள் இரும்புத் துண்டை உன் இருகெண்டைக் கைகளிலும் கட்டிவை என்றார்கள். அதன்படியே செய்தேன். சிலநாள் இருந்து அவை தானே அவிழ்ந்து விழுந்துவிட்டன என்று சொன்னார்.

இன்னும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிறந்து வெளிப்படுவதற்கு முன் "எல்லா நபிகளுக்கும் மேலான ஒரு நபி பிறப்பார். அவர்பேர் முஹம்மது. அவர் வெளியாகும் வேளை இதுதான்" என்று எங்கும்பிரபல்யம் ஆகிவிட்டது. அதனால் அப்போது பிறந்த அநேக பிள்ளைகளுக்கும், அவர்களின் பெற்றோர் முஹம்மதென்றே நாமம் வைத்தார்கள். அந்தமுஹம்மது நபிதமது பிள்ளையாயிருக்க வேண்டுமென்று ஆசைப் பட்டார்கள். அவர்கள் யாரெனில் சுப்யான் புதல்வன் முஹம்மது, உஹைஹா புதல்வன் முஹம்மது, ஹிம்றான் புதல்வன் முஹம்மது, முஸ்லமத்துல் அன்சாரி புதல்வன் முஹம்மது, பருமில்பக்றீ புதல்வன் முஹம்மது, குசாய்மில்லல்மி புதல்வன் முஹம்மது, அத்திய் புதல்வன் முஹம்மது, உஸ்மான் புதல்வன் முஹம்மது, அஸதீ புதல்வன் முஹம்மது, பக்மீ புதல்வன் முஹம்மது, அத்வாறத்தல் வைலமீ புதல்வன் முஹம்மது, ஹிர்மான் புதல்வன் முஹம்மது, கப்லா புதல்வன் முஹம்மது, எசீது புதல்வன் முஹம்மது, உஸாமா புதல்வன் முஹம்மது—ஆக இவர்களாவர்.

ஆமினா ரலியல்லாஹு அன்ஹா கர்ப்பஸ்திரியாயிருக்கும்போது முதல் மாதத்தில், அவர்கள் கனவில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து 'நீர் ஹமலாயிருக்கும் பிள்ளையானது உலகத்துக்கெல்லாம் மேலான வதுப்பமான நபியாயிருக்கும்' என்று நன்மாராயம் சொன்னார்கள். இரண்டாம் மாதத்தில் நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து கர்ப்பத்திலிருக்கும் நபி அவர்களின் பெருமையைக் குறித்து நன்மாராயம் சொன்னார்கள். மூன்றும் மாதத்தில் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து, நபியின் வெற்றிமாராயத்தை குறித்து நன்மாராயம் சொன்னார்கள். நான்காவது மாதத்தில் நபி இப்ராஹீம் கலீலுல்லா அவர்கள்வந்து, நபியின் வரிசையைக் குறித்து நன்மாராயம் சொன்னார்கள். ஐந்தாவது மாதத்தில் நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து, நபியின் சங்கையை குறித்து நன்மாராயம் சொன்னார்கள். ஆறாவது மாதம் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து நபியின் தலைமையைக் குறித்து நன்மாராயம் சொன்னார்கள். ஏழாவதுமாதம் நபிதாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து, மஹ்மூதென்னும் ஸ்தலத்தையும் ஹவ்லுல் [illegible]ரென்னும் தடாகத்தையும், லிவாவுல் ஹம்தென்னும் ஜண்டா

(துவஜம்) வையும்கொண்டுள்ள நபி என்பது கொண்டு நன்மாராயம் சொன்னார்கள். எட்டாவது மாதம் நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வந்து ஒடுக்கத்து நபிஎன்னும் காத்திமுல் அன்பியாவென்றும் நன்மாராயம் சொன்னார்கள். ஒன்பதாவது மாதம் நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்வந்து, நபியின் தீனையும் வம்ஸத்தையும் புகழ்ந்து நன்மாராயம் சொன்னார்கள்.

ஹஜ்ரத் ஆமினா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு கர்ப்பம் ஏழுமாதம் ஆனபோது, அவர்களின் பர்த்தாவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிதாவுமாகிய ஹஜ்ரத் அப்துல்லா அவர்கள் வியாபாரத்திற்குப் போகநேரிட்டு போய் திரும்பி வரும்போது, வியாதியால் பீடிக்கப்பட்டுமதீனாவில் தாமதித்தார்கள். அவ்விடத்திலே ஆண்டவன் கட்டளைப்படி மரணமடைந்தார். இத்துக்கச் செய்தி மக்காவுக்கு எட்டியதும் அவர்கள் குடும்பத்தார்கள் அளவற்ற துக்கத்தில் ஆழ்ந்தனர். ஆமினா றலியல்லாஹு அன்ஹா இச்சம்பவத்தைக் கேட்டபோது 'அபய சத்தமிட்டு 'எனது பரதேசத்தனமே, நான்தனிக்கும் ஸ்தலமே. எனக்கூவி அழுது "அப்துல்லாவே உங்களுக்குப்பின்னால் இதர புருஷன் எனக்கு ஹராமாய் இருக்கட்டும்" என்றும் புலம்பி அழுதார்.

இன்னும் "நாயகரே! உங்களைவிட்டு பிரிகிறதை நான் பயந்திருந்தேன், உண்மையாகவே இப்போது நாம் ஒருவரைவிட்டுஒருவர்பிரிந்துவிட்டோம். உங்களுக்கு பின்னால் யாரைவிட்டு நான் பிரியப்போகிறேன் என்று பயப்படவேண்டும். இனிநான் ஒருவரையும் பாராட்ட வேண்டியதில்லை. என் கண்ணுக்கொளிவாகிய பிள்ளை எத்தீமாகிவிட்டதே! அப்பிள்ளைக்கு தஞ்சம் யாருண்டு? என் கண் குளிர்ந்த பர்த்தாவை இழந்த கைசேதமே!" என்றுசொல்லியும் அழுதார்கள்.

ஹஜ்ரத் அப்துல்லா மவுத்தாகவே வானலோகத்திலுள்ள தேவதூதரென்னும் மலாயிக்கத்துகள் அனைவரும் "எனது நாயனே! உனது தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தகப்பனில்லாமல் வளர்ப்போர், பேணுவோரற்று அனாதையாய் எத்தீமாய் விட்டாரே" என்று அல்லாஹு தஆலாவிடம் முறையிட்டனர். அவன் "அவர்களைதாத்து ஆதரிப்பவனும் ஊட்டி வளர்க்கிறவனும் நானே, நீங்கள் அவர்கள் மீதில் ஸலவாத்தை

ஓதிஅவருடைய திருநாமத்தைக் கொண்டு பறக்கத்தைத்தேடிக் கொள்ளுங்கள்" என்று அருளினான்.

ஹஸரத் அப்துல்லா அவர்கள் வபாத்தாகும்போது, அவர்களுக்கிருந்த ஆஸ்திகள்: பறகதுல் ஐஷிய்யா வென்னும் பெயர் கொண்ட ஒரு வெள்ளாட்டியும், ஐந்து ஒட்டகங்களும், ஒரு ஆட்டு மந்தையும் மட்டும்தான். பிறகு றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பிராயம் வந்தபோது அவைகளைப் பெற்று அனந்தரம் கொண்டார்கள்.

கஃபத்துல்லாவை இடிக்க வந்த அப்றஹாவும் அவன் சேனையும்.

ஹஜ்ஜுடைய நாட்களில் ஜனங்களெல்லாரும் பெருந்திரளாக கஃபத்துல்லாவுக்கு ஹஜ்ஜு செய்ய செல்வதைக்கண்டு, அப்றஹா வென்னும் கிருஸ்துவ அரசன், இவர்கள் எல்லாரும் இவ்வளவு விமரிசையாக எங்கே செல்லுகிறார்களென்று கேட்டான். பதில் கஃபத்துல்லாவுக்கு ஹஜ்ஜுசெய்ய போகிறார்களென்று சொல்லப்பட்டது. அதற்கு, கஃபத்துல்லா வென்பது எந்த வஸ்துவாலானது என்று வினவினான். அது கல்லால் கட்டப்பட்டது என்றார்கள். அதற்கு அவன் ஈஸாபேரில் ஆணையாக, அதிலும் மேலான உயர்த்தியான கட்டிடம் ஒன்றை கட்டி ஜனங்களை, அதன்பேரில் திருப்பி விடுவேனென்று சொல்லிக்கொண்டு போய், வெள்ளியினாலும் தங்கத்தினாலும் பலவகை நவரத்தினங்களாலும் அழுத்தப்பட்ட ஓர் கட்டடத்தைக் கட்டிவைத்துக் கொண்டு "ஓ ஜனங்களே! இதோ பாருங்கள். அதைவிட மேலான, மிகவும் அழகான கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. உங்களுடைய ஹஜ்ஜை இந்த கட்டிடத்தில் நிறைவேற்றிக் கொள்ளுங்கள்" என்று அழைத்தான். அதற்கு ஒருவருமே அந்தக் கட்டடத்தின்பால் செல்லாமல், கஃபாவுக்கே சென்று தங்கள் ஹஜ்ஜை நிறைவேற்றிக்கொண்டு வந்தார்கள்.

இக்காரணங்களாலும் இன்னும் பல துவேஷ எண்ணங்களாலும், இக்கஃபா என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தை இடித்தே தீர்த்துவிட வேண்டுமென்று அவன் நாடி, தன்னுடைய அறுபதினாயிரம் படைவீரர்களையும், மஹ்மூதா வென்னும் மகத்தான வெள்ளை

யானையையும், மக்காவுக்கு அனுப்பி வைத்ததோடு, தானும் தனது சந்ததிகளோடு ஆயிரம் யானைகளையும் கொண்டுவந்து, பாளையம் அடித்து, இறங்கினான். அப்துல் முத்தலிப் உடைய இருநூறு ஒட்டகைகளை பிடித்துத் தன் எல்லையில் கட்டிக் கொண்டான். அவர்கள் அவைகளை மீட்க எத்தனிக்கும்போது, அவன் தனது யானைகளைவிட்டு அச்சமுறச் செய்தான். அவைகள் இவர்களைக் கண்டவுடன் முட்டிப் போட்டுக்கொண்டு "அஸ்ஸலாமு அலைக்கும் யா அப்துல் முத்தலிப்!" என்று ஸலாம் சொல்லிக்கொண்டு சாஷ்டாங்கம் செய்து தரையில் விழுந்தன.

இதையறிந்த அப்றஹா என்னும் அரசன் "மக்கத்தார்களே! நான் உங்களோடு போர்செய்ய இங்குவரவில்லை. கஃபாவை இடித்து தரைமட்டம் செய்யவே இங்கு வந்திருக்கிறேன். நீங்கள் எங்களோடு எதிர்க்காதிருந்தால் நாங்கள் உங்களை யாதொரு தொந்திரவும் செய்யமாட்டோம். நான் சொல்வதற்கு நீங்கள் ஒப்பினால் உங்களில் தலைவரானவரை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்லித் தன் தூதனையும் அனுப்பி வைத்திருந்தான். அத்தூதன் தலைவர் யார் என்று விசாரித்து, அப்துல் முத்தலிப் என்பதை தெரிந்து, அவர்கள்பால் சென்று, அவர்களைக் கண்டான். அவர்களைக் கண்டதும் மனம் பதறினவனாக அபயசத்தமிட்டு, நாவு உளறிக் கொண்டு, அடித்து கீழேவிழுந்து, அப்பால் தெளிவு கண்டபின் சொல்லலானான்:—"நீங்களே இந்த குறைஷி வம்சத்தார்களுக்கு நாயகமானவர்கள், உங்களுக்கே இத்தலைமைத்தனம் தகும்" என்று போற்றிப் புகழ்ந்தபின் தன்னரசன் சொல்லியனுப்பிய செய்திகளைத் தெரியப்படுத்தினான்.

அதைக்கேட்டதும் அப்துல் முத்தலிப் "நாங்கள் அரசனோடு எதிர்க்க நாடவுமில்லை" எங்கள்பால் அதற்கு தக்க வலுவுமில்லை. கஃபாவோ அல்லாவுடைய வீடு. அதை நிலைக்கச்செய்வதும் அழிப்பதும் அவனுடைய இராதாவைப் பொறுத்தது அவன் நாடியதுபோல் செய்வான் என்று சொல்லிவிட்டு அத்தூதனோடு அப்றஹாவினிடம் சென்றார்கள். அவன் இவர்களைக் கண்டவுடன் ஆசனத்தைவிட்டு கீழே இறங்கிக்கொண்டு, இவர்களை அவ்வாசனத்தின்பேரில் இருத்தி தானும் மற்றொரு ஆசனத்தின்பேரில் அமர்ந்துகொண்டு, உம்மு

டைய கருத்து என்னவென்று கேட்டான். அதற்கு அப்துல் முத்தலிப் அவர்கள் என்னுடைய ஒட்டகங்களை அவிழ்த்து விட வேண்டுமென்றார்கள். அதற்கு அவன் "நல்லது, ஒட்டகங்களை விட்டு விடுகிறேன். கஃபாவுடைய விஷயத்தில் நீர் ஏதும் பேசக் கூடாது" என்றான். இவர்கள் "நான் ஒட்டகையுடையவன். அவ்வீட்டையுடையவன் வேறு இருக்கிறான், அவன் அதைக் காத்துக் கொள்வான்" என்றார்கள். அதற்கு அப்றஹா அந்த வீட்டை என்னைவிட்டும் விலக்கிக் கொள்ளான். நீர் உம்போக்கில் போகும் என்று சொல்லி ஒட்டகங்களை அவிழ்த்துவிட்டுவிட்டான். இவர்கள் அவ்வொட்டகங்களை கஃபா வீதியில் ஓட்டிக் கொண்டு குறைஷிகளைக் கூட்டிக்கொண்டு கஃபாவிற்குள் சென்று, அல்லாஹு தஆலாபால் "நாயனே! இது உன்னுடைய வீடு, நீயே இதைப் பாதுகாத்துக் கொள்வாயாக" என்று கேட்டு விட்டு அப்றஹாவின் கலகத்திற்குப் பயந்து மலையடிவாரங்களில் போய் இருந்துகொண்டு மக்காவில் நடக்கும் விஷயங்களை கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்றஹாவுடைய சேனைகள் கஃபாவின் எல்லைக்குட் புகுந்ததும், அற்புதமான சம்பவமொன்று நடந்தது. அதாவது திடீரென அல்லாஹு தஆலா அபாபீல் என்னும் ஒருவித சிறிய பக்ஷிகளை, அதன் சுண்டு வாயில் ஒரு கல்லும் அதன் கால்களில் இரண்டு கல்லுமாக, கூட்டம் கூட்டமாக அனுப்பினான். அந்த ஒவ்வொரு கல்லின் மீதும் அதை உடையான் பெயர் எழுதப் பட்டிருந்தது. அக்கல்லை அப்பறவைகள் அதை உடையானை நோக்கி எறிந்தன. அக்கற்கள் அப்படையின் மீது விழுந்து அவர்களுடைய இரும்பு அங்கிகளையும், அவர்கள் சரீரத்தையும் அவர்கள் வாகனத்தையும் துளைத்துக்கொண்டு வெளிப்பட்டு விட்டன. இவ்விதமாய் அல்லாஹு தஆலா அப்றஹா உடைய சேனைகளை ஹலாக்காக்கினான். அவன் சேனை அறுபதினாயிரம் பேர்களில் இராஜனும் சில ஜனங்கள் மாத்திரம் தப்பி ஓடினர். அதுவுமன்றி மழையும் அதிகோரமாக பெய்தது. அதனாலும் மிகுந்த கஷ்டம் உண்டாயிற்று. அப்றஹாவானவன் தன்னுடைய [illegible] போய் சேர்ந்தான். அங்குபோய் சேர்ந்த சில நாட்களில் [illegible] பிடித்து மாண்டொழிந்தான். இச்சம்பவம் [illegible]

சரித்திரத்தில் மிகவும் முக்கியமானது. இச்சம்பவத்திலிருந்து யானை சஹாப்தம் என பெயரிட்டு ஒரு புதிய சஹாப்தத்தை கணக்கிட்டு வந்தார்கள்.

கஃபாவுக்கு தீங்குசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் படையெடுத்து வந்த சேனையானது, ஒருவரும் எதிர் பாராதபடி அதிசயிக்கத்தக்க விதமாய், தோற்கடிக்கப்பட்டுப் போயிற்று. இவ்வதிசயமான சம்பவம் கஃபாவின் மஹத்துவத்தை வெளிக் காட்டுவதுடன், கஃபாவை ஸ்தாபித்த ஹஜ்ரத் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததிகளில் சமீப காலத்தில் வெளி வரப்போகிற முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஓர் அற்புத அவதாரத்திற்கு அறிகுறியாம்.

சர்வரே ஆலம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பூலோகத்தின்கண் அவதரிப்பதற்கு சுமார் 50தினங்களுக்கு முன்பே மேற்படி அப்றஹாவின் யானை யுத்தம் நடந்ததென அறியப்படுகிறது.

7-வது அத்தியாயம்.

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த காரணம்.

ஆமினா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு ஹமல் 9 மாதம் நிறைந்து பேறு காலம் அடுத்தபோது அவர்கள் சொன்னதாவது:-- எனக்கோ பேறு கால் அடுத்துவிட்டது. அதை என்னுடைய குடும்பத்தார்கள் யாவரும் அறியார்கள். நானோ ஒன்றியாய், தனித்திருக்கிறேன். மாமா அப்துல் முத்தலிப் அவர்களும் வெளியில் போயிருக்கிறார்கள். அன்று றபீஉல் அவ்வல்மீ 12உ வெள்ளிக் கிழமையாயிருந்தது. (கி. பி. இங்கிலீஷ் 569ளு எப்ரல்மீ ஆக இருந்தது) அப்போது நான் அதிசயக்கத்தக்க திடுக்கமான சப்தம் ஒன்றைக் கேட்டேன். பிறகு நான் என்னிடம் வெண்மையான பக்ஷி யொன்றைக் கண்டேன். அப்பக்ஷி தன் இறகை விரித்து என் வயிற்றின்பால் தடவினதால் என்னுடைய வருத்தமும் திடுக்கமும் நீங்கி, அதிக சுகம் பெற்றேன். பின்பு எனக்கு தாகமுண்டாயிற்று. அப்போது பச்சை மரகதத்தாலிழைத்த ஒரு

பாத்திரத்தில் மிகவும் வெண்மையும் மதுரமுமான ஒரு பானகத்தை தரப்பெற்று அதை அருந்தினேன். எனது தாகம் நீங்கி, என்னிலிருந்து ஓர் ஒளி பிரகாசித்தது. அப்போது வானலோகத்துக்கும் பூமிக்குமிடையில் ஒரு தியாஜ் என்னும் பட்டுத் திரையை பிடிக்கப்பட்டது. ஒருவர் ஹஸதுக்காரர்களுடைய கல்புகளை விட்டும் பார்ப்பவர்களுடைய கண்களை விட்டும் மறைத்து பிடியுங்களென்று சொன்னார்.

பின்பு சில மனிதர்களைக் கண்டேன். அவர்கள் வெள்ளிப் பாத்திரங்களை கைகளில் கொண்டு ஆகாயத்தில் நின்றார்கள். அப்போது என்னிலிருந்து கஸ்தூரி வாசம் கொண்ட வியர்வை வெளிப்பட்டது. அவ்விரவில் 3-ம் சாமத்தில் என் வீட்டின் முகட்டின் மீதிருந்து ஒரு சப்தம் கேட்டது. நான் அது என்னவென்று பார்க்கும்போது, முகட்டின்மீது ஓரொளி இலங்கியும் இறங்கிக்கொண்டிருந்தது. அவ்வொளியிலே தலைமை வாய்ந்த நாலுபெண்களும் அவர்களோடு அழகிய சில பெண்களும் இறங்கினார்கள். அந்நால்வர்களையும் பார்த்து, நீங்கள் யாரென்று கேட்டேன். அதிலொருவர், சொன்னதாவது: நான் மஸாஹிமுடைய மகள் ஆஸியா. இவர்கள் இஸ்ஹாகு நபியுடைய தாயார் ஆஸியா. இவர்கள் ஈசா நபியுடைய தாயார் மரியம். இவர்கள் மனிதர்களுக்கு தாயாகிய ஹவ்வா அம்மா: மற்றும் உள்ளவர்கள் எல்லாம் சொர்க்கத்து ஹூருல்ஈன் பெண்கள்'' என்றார்கள். பின்பு சில பக்ஷிகளைக் கண்டேன். அவைகளின் சுண்டுகள் பசுமையான மரகதத்தாலும், அருகுகள் மாணிக்கத்தாலுமாயிருந்தன. அவைகள் வந்து என்னுடைய வீட்டை சூழ்ந்து கொண்டிருந்தன. அந்த ஒளியின் பிரகாசத்தால் பஸரா தேசம் என் கண்ணுக்கு நன்றாய் புலப்பட்டது. இன்னும் ஏழுவான் படுவான் எல்லாவற்றையும் பார்த்தேன். பின்பு மூன்று பெயர்கள் மூன்று துவஜம் (ஜண்டா) வோடு வந்து, ஒன்றை மஷ்ரிகிலும் ஒன்றை மக்ரிபிலும், ஒன்றை கஃபாவிலும் நாட்டினார்கள். அவைக் கொண்டு துன்யா அடங்கலும் பிரகாசமாயிருந்தது. அப்போது எனக்கு பிரசவநோய் அதிகமாயிற்று. அதிலொரு பெண் என்னை அடுத்து வந்து என்னை சாய்த்து பிடித்துக்கொண்டாள். மற்றொரு மாது ஓர் அழகிய பாத்திரத்தில் பாலைக்காண வெண்மையும் பனிக்கட்டியைக்காண குளிரும், தேனிலும் இனிப்பாயுமுள்ள மதுரமான

ஒரு பானத்தைத் தந்தாள். நான் குடித்தேன். இன்னமும் கொஞ்சம் குடி என்றுள் குடித்தேன். பின்பு அவள் கையாலே என் வயிற்றைத்தடவி "பிஸ்மில்லாஹி உக்ருஜ் பிஇஸ்னில்லாஹி" بسم الله اخرج باذن الله (அல்லாவின் திருநாமம் கொண்டும் அவனுடைய உத்திரவு கொண்டும் வெளிப்படும்) என்று சொன்னாள். அப்போது அழகிய சங்கையான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை நான் சிசுவாகப்பெற்றேன்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

صلي الله علي محمد صلي الله عليه وسلم

ஆமினா ரலியல்லாஹு அன்ஹா சொல்கிறார்கள், நான் என் பிள்ளை முஹம்மதைப் பெற்றவுடன் உரு தோற்றமில்லாத ஒரு சப்தம் قد جاء الحق وزهق الباطل ان الباطل كان زهوقا (உண்மையாக ஹக்கான மார்க்கம் வெளிவந்துவிட்டது, அதற்கு மாற்றமான மார்க்கம் மறைகிறதாக மறைந்து விட்டது) என்றுண்டாயிற்று.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கோதறப் பழுத்து மதுரமே கனித்த கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித், தீதற நெருங்கி யேவல்செய் திருப்பச் செழுங்கமலாசனத் திருந்த, மாதருக் கரசி யாமினா வுதர மனைவிடத் திருந்துமை விலத்தி, லாதாரம் பெருக நல்வழிப் பொருளா யருமது தோற்றின ரன்றே.

இடந்தொப் பாப்பி வாசங்கொளி பிளித்துக் கிளர்பெ ருவகை முன்னோக்கி, விடங்கொளக் நரகேர் சிரிலியை யுயர்த்தி மெஞ்ஞ பெறச் சுஜூதுசெய் திணைத்தாட், டிடன்பெற மடித்துக் குழிகிடக் கையாற் சேர்த்தொளிர் வலக்கைநான் மேல்வைத், துடனதிற் கலிமா விரலினை யுயர்த்தி யுதித்தனர் முஹம்மது நபியே.

சிரசினி னெய்தோய்த் திருவிழி சுருமை தீட்டிடக் கொப்பூ ழறுங் கொயலாய், மருவு கன்னத்துஞ் செவ்வலைப் புடைக்கின் வழுதிநுதி வொன்றுமில் லாதாய்ப், பரவுமவ் வதி மிசைமென வெளதிநற்

பரிமளங் கமகம கமெனப், பெருகிய வொளிவு வானமட்டுவலப் பிறந்தனர் முஹம்மது நபியே.

செம்மையங் கோட்டுக் கடகரிக் கலகந்தீர்ந்தபி னைம்பாத நாளி, லம்மதி மாசத் தொகையினில் றபீவு லவ்வலிற் பனிரண்டாந் தேதி, யெம்மனைக்கும் பேறெனவரும் பொருளா யிசைத்திடுந் திங்களிரா வின், மும்மையென் றுரைக்கும் புவனமும் புரக்க முஹம்மது நபி பிறந்தனரே.

பூதலத் தரசு பதியென வுதித்த புகழ்பெறு மக்கமா நகரிற், சீதவொண் கதிர்சேர் கஃபதுல் லாவின் றிசையினில் வடகிழக்காக, வேதமொன் றனுகா ஜெம்றத்தி லுஸ்தா வெனுமொரு தலத்தினி னடுவே, மாதவ ரபித்தா விபுதிரு மனையில் முஹம்மது நபி பிறந்தனரே.

நெறிகிலை திரியா மருண்மத மிகுந்து நெடுநில மெங்கணும் பரந்து, துறவறந் தவறி யில்லற மடிந்து சுடரிலா மனையது போலக், குறை படுங்கால மிருளெனுங் குபிரின் குலமறுத் தறநெறி விளக்க, மறுவிலா தெழுந்த முழுமதி போல முஹம்மது நபி பிறந்தனரே.

பானுவின் கதிரா விடருறுங் காலம் படர்தரு தருநிழ லெனலா, யீனமுங் கொலையும் விளைத்திடும் பலநோ யிடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த், தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்க் குறைஷியிற் றிலதமே யெனலாய், மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய் முஹம்மது நபி பிறந்தனரே.

வசனம்.

அப்போது அவ்விடங்க ளெல்லாம் ஒரே ஒளிவாய் இலங்கவும், குற்ற மில்லாத பழுத்துத் தேன்கசிந் தொழுகும் கோவைப் பழம் போன்ற வாயையுடைய ஹூறுல்ஈன் பெண்கள் வாழ்த்தி, கெடுத லில்லாமல், அங்கே நெருங்கி நின்று பணிவிடை செய்யவும், மலக்குகள் மனமகிழ்ந்து சந்தோஷங் கொண்டாடவும், உலகத்திலுள்ள சகல ஜீவஜெந்துக்களும் ஆனந்த பாஸ்கர சமுத்திரத்தில் மூழ்கி மகிழவும், பத்மாசனப்பெண்ணிற்கும் நாயகியான ஆமினாவர்கள் கருப்பாசன வீட்டிலிருந்து, மகத்துவமான பூமியில் ஆதாரம் பெருக நல்வழிப்பொருளாய்ச் சகல படைப்பினங்கட்கும் நாயக சமேதராய் அஹ்மதென்னும் பெயரையுடைய ஹபீபுர்றப்பில் ஆலமீன், செய்

மிதுல் கவ்னைன், தாஜுல் அன்பியா, நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உதயமானார்கள்.

இவ்விதம் நபிகள் நாயகம் உதயமாகியிருந்த இடமெல்லாம் ஒளிவு கதிரிட்டெரிக்க களபகஸ்தூரிவாசனை கமகமவென்று கொப்பளிக்க, பிரகாசமான கிபுலாவென்னும் பைத்துல்லாவை முன்னோக்கி இடம் விரிந்த ஆகாசத்தில் நேராகத் தலையையுயர்த்தி அழகு பொருந்தச் சுஜூதிட்டு இரண்டுகாலையும் இடமுண்டக மடித்து இடதுகையால் மானத்தலமான அபத்தைப்பொற்றி, ஒளியான வலதுகையை முழந்தாளிற்குமேல் வைத்ததுடனே அழகிய கலிமா விரலென்னுஞ் சுட்டுவிரலை உயர்த்தி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள்.

இன்னும், உச்சந் தலையில் நெய்யுந் தேய்த்து, சிறப்பாக இரண்டு கிருபைக் கண்ணிற்குக் கரிய மையுமிட்டு, தொப்புள் அறுத்துத் தீனில் இஸ்லாத்திற்குப் பொருந்திய சுன்னத்தென்னும் கத்னாவுமிட்டு, மற்றும் பிள்ளைகள் பிறக்குபோது உண்டாகின்ற அழுக்குத் துடக்குகள் யாதேனும் ஒன்றுமில்லாமல், விசாலித்திருக்கும் வீடெல்லாம் வாசம் கமகமவென்று பரிமளிக்க, வானமட்டும் பெரிய ஒளிவு பிரகாசிக்க, முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள்.

இன்னும் முன்னர் இதிற் சொல்லிய அப்றஹாம் என்னும் ராஜன், திருமக்கமா நகரத்தையும் கஃபத்துல்லாவையும் அழிக்க விடப்பட்ட மதயானைகளின் கலகந் தீர்ந்து 50-ம் நாளைக்குப் பின்னர், அழகிய றபீஉல் அவ்வல் மாதம் 12-ந்தேதி திங்கட்கிழமை இரவில், எமது மனைக்கும் பேரான அரும்பொருளாய் மிசைந்து வானலோகம், சொர்க்கலோகம், பூலோகம் ஆகிய மூன்று லோகத்திற்கும் ரக்ஷகராகிய நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள்.

இன்னும் பூமியிலுள்ள நகரங்களுக் கெல்லாம் இராஜ நகரமாகத் தோற்றிப் புகழ் பெற்றோங்கும், திருமக்கமா நகரத்தில் குளிர்ச்சியும் அழகும்பொருந்திப் பிரகாசக் கதிரெரிக்கும் கஃபத்துல்லா வென்னுங் கடவுள் ஆலய திசைக்கு வடகிழக்காக, நற்குற்றமும் அணுகாத ஜம்ரத்தில் உஸ்தாவென்னும் ஒப்பற்ற தலத்தி

னிலே, மகா தவத்தையுடைய அபிதாலிபு அவர்கள் வீட்டில் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள்.

இன்னும் மார்க்கநெறி, நீதி இவைகளின்நிலை கெட்டுப் போய், மருள் மாச்சர்யம் இவைகள் மிகுந்து, நீண்ட உலக மெல்லாம் பரந்து பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை ஆகிய இம்மூன்று ஆசைகளை வெறுத்திகழ்ந்து தள்ளிவிட்டுத் தனித்திருந்து, தன் நிலையையும் தன் தலைவ நிலையையும் இன்னதென்று உணர்ந்து, நினைப்பை பலபாலும் ஓடவிடாமல் ஒரு நிலைப்படுத்தி செய்யுந் தவமாகிய துறவாமும் தவறிப்போய், மண்டு மனை பெண்டு பிள்ளைகளுட னிருந்து உத்தம குணத்தோடும், ஒருவர் மனத்தைக் கலங்க வையாது, உண்மையிற் சம்பாதித்து உண்டு உறங்கி, காலையில் எழுந்து கடவுளைத் தொழுது முன்னவர் சொல்லை முழுமையும் பேண வேத விதியை விட்டிடாதிருந்து வாழ்வதாகிய இல்லறமு மடிந்து போய், விளக்கில்லாத பாழ்வீடுபோல் மேன்மைகள் குறைபட்ட காலத்தில், இருளாகிய குபிர்க்குலங்களை அறுத்துத் தரும வழிகளை விளக்கி வைக்க குற்றமில்லாது எழுந்துவரும் பூரண சந்திரனைப் போல் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள்.

இன்னும், உலகம் முடியும்போது மஹ்ஷர் வெளியில் மனிதர்கள் சூரிய வெப்பத்தினால் வாய் விட்டலறி கண்ணீர்கால் வழிய அழும் தீர்ப்பு நாளையிலே, நமது உம்மத்தவர்களென்னும் சீடர்கட் கெல்லாம் வரிஸ்தராய்ப்பரந்து குளிர்ந்த நிழலைக் கொடுக்கும் கற்பக தருவாய், இழிவையுங் கொலை பாதகத்தையும் விளைவிக்கின்ற பாவமென்னும் நோயான இடரைத் தவிர்த்து வைக்கும் அரிதாகிய மருந்தாய், தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கப் பயிரை வளர்க்கின்ற ஒப்பற்ற செழித்த மழையைப் பெய்யும் மேகமாய், குறைஷிக் குலத்தவர்கள் நெற்றியில் அணியுந் திலகமணியாய் பூமிக்கோர் இரத்தின தீபமாய் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தார்கள்.

அப்துர் றஹ்மானிப்னி அவ்ப் றலியல்லாஹு அன்ஹுவுடைய தாயார் ஷப்பா உம்மா சொன்னார்கள்:—நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பிரசவம் ஆனபோது என் கையில் விழுந்தார்கள். அப்போது றஹிமஹுல்லா என்று ஒரு சப்தம் கேட்டேன் என்று.

சில இமாம்கள் சொல்கிறார்கள் :—நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தபோது தும்மல்வர அதற்கு "அல்ஹம்து லில்லா" என்றார்கள். அதற்குப் பிரதியாக மலக்குகள் 'றஹிமஹுல்லா' என்று தஸ்மியத் சொல்லியிருக்க வேண்டும் என்று.

ஸுஹைலி இமாம் அவர்களால் அறிவிக்கப்படுகிறது :— றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிறந்தபோது "அல்லாஹு அக்பர் கபீறு, வல்ஹம்து லில்லாஹி கஸீறு, வஸுப்ஹானல்லாஹி புக்ரதன் வஅஸீலா"

الله اكبر كبيرا والحمد لله كثيرا وسبحان الله بكرة واصيلا

என்று தக்பீர் ஓதினார்கள் என்று.

இன்னுமொரு றிவாயத்தில் "லாஇலாஹ இல்லல்லாஹு வஇன்னீ றஸூலுல்லாஹி"

لا اله الا الله واني رسول الله

என்று ஓதினார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிறந்ததற்காக வானலோகத்து வாயல்களும், சொர்க்கலோகத்து வாயல்களும் திறந்து வைக்கப்பட்டன.

இன்னும் காத்திமுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிறந்தவுடன், மஜூஸிக் காபிர்கள் நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலந் தொட்டு விடாமல் எரித்து வணங்கி வந்த அணையாத நெருப்பு, அதை எரிப்பவர் விடாமல் எரித்துக் கொண்டிருக்கும்போதே அணைந்துபோய் விட்டது. இன்னும் ஹம்தான் என்னும் ஊருக்கும் கம்மு என்னும் ஊருக்கும் இடையிலுள்ள ஸாவா என்னும் சிறுகடல் தண்ணீர் வற்றி வரண்டுபோய் விட்டது. அப்பால் அப்பட்டணம் எடுப்பட்டு விட்டது. இன்னும் ஸாமாவா என்னும் தண்ணீரில்லாத ஓடையில் தண்ணீர் ஓடிற்று. இன்னும் நௌஷேருவான் இராஜனது நகரத்தின் கண், ஆகாயம் வரையும் உயர்ந்து மேகங்கள் அடைகிடந்த கொத்தளங்கள் தம்மிற்றாமே இடிந்து விழுந்து விட்டன. கிஸ்ரா இராஜனுடைய 22-கோட்டை, இரும்புக்கு ஒப்பான கட்டிடம், படால் படாலென பிளந்து 14-கொத்தளம் விழுந்து விட்டன.

ஹஜ்ரத் ஆமினா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னார்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என் கர்ப்

பத்திலிருந்து வெளிப்பட்டபோது நான் யாதொரு வலியையும் வருத்தத்தையும் காணவில்லை. றாஹத்தும் சந்தோஷமுமாகவே பிள்ளையைப் பார்த்தேன். கஃபாவை நோக்கி ஸுஜூது செய்தவராய், விரலைக் கொண்டு வானத்தின் பால் இஷாரா செய்தவராய்க் கண்டேன். நான் அருகில் நெருங்கி பிள்ளையை எடுக்க நாடும்போது ஒருவர் சொல்லுகிறார், "நீங்கள் அந்த பிள்ளையை எடுத்துக் கொள்ளுங்கள். பார்க்கிறவர்களின் கண்களை விட்டு மறையுங்கள். இதை விட்டும் பிள்ளையை அப்புறப்படுத்தி இன்ஸ்கள், ஜின்கள், மலக்குகள், வெருட்சியான மிருகங்கள், பறவைகள் முதலிய இனங்கள் பால் எடுத்து காண்பியுங்கள்; அன்பியாக்கள் பிறந்த ஸ்தலங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்று தவபா செய்யுங்கள்; இன்னும் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய தெளிவையும், நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாமுடைய மேலாம்பரத்தையும், நபி மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய பேச்சையும், நபி லுக்மான் அலைஹிஸ்ஸலாமுடைய ஹிக்மத்தையும், நபி ஸுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய ராஜரீகத்தையும், நபி தாவூத் அலைஹிஸ்ஸலாமுடைய ராக கீதத்தையும், நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய தோழமைத் தனத்தையும், நபி யூஸுபு அலைஹிஸ்ஸலாமுடைய அழகையும், நபி யாகூபு அலைஹிஸ்ஸலாமுடைய நன்றி செலுத்துதலையும், நபி ஐயூபு அலைஹிஸ்ஸலாமுடைய பொறுமையையும், நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாமுடைய ஸிஹ்மத்தையும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய சங்கையையும், நபி நூஹு அலைஹிஸ்ஸலாமுடைய வல்லபத்தையும், நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமுடைய நாவையும், நபி இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாமுடைய பொருத்தத்தையும், நபி ஸாலிஹு அலைஹிஸ்ஸலாமுடைய நாகரிகத்தையும், நபி யூனுஸ் அலைஹிஸ்ஸலாமுடைய வழிப்பாட்டையும், நபி யூஷஃ அலைஹிஸ்ஸலாமுடைய பிரயாசையையும், நபி தானியால் அலைஹிஸ்ஸலாமுடைய பிரீதியையும், நபி இல்யாஸ் அலைஹிஸ்ஸலாமுடைய கண்ணியத்தையும், அந்த முஹம்மது என்னும் பிள்ளைக்கு கொடுங்கள். எல்லா அன்பியாக்களுடைய நற்குணங்களிலேயும் துவைத்தெடுங்கள்" என்று ஒரு சப்தம் கேட்டது.

இவ்விதமாகிய சப்தம் கேட்டவுடன், என் பிள்ளை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமை நான் காணவில்லை. பிள்ளையைக் காணவில்லையே என்று நான் ஆயாஸப்பட்டிருக்கும் போதே, ஒரு

கொடி நேரத்திற்குள் பிள்ளையை மீட்கப்பட்டது. நான் பார்த்தேன்: கண்ணுக்கு சுருமாவுமிட்டு, சிரசுக்கு எண்ணெயுமிட்டு பட்டுப் பிடவையில் பொதிந்ததா யிருந்தது. கஸ்தூரி வாசம் வீசிக் கொண்டிருந்தது. நான் பிள்ளையை எடுக்க நாடினேன். அப்போது ஒரு மேகம் வானத்தை அளாவிக் கொண்டு வந்தது. அதிலே தக்பீர், தஹ்லீல் உடைய சப்தமும், குதிரை சப்தமும் இறகுகளின் சப்தமும் உண்டாயிருந்தன. அப்பவே என்னிடத்தில் இருந்த பிள்ளை எடுத்துக் கொண்டு போகப்பட்டிருந்தது. அப்போது நான் என் பிள்ளையை காணகிலேனே என்ற கவலையோடு அழத் தொடங்கினேன். சொற்ப நேரத்திற்குள் பிள்ளை என்னளவில் மீள்விக்கப் பட்டிருந்தது. பிள்ளையைப் பார்க்கும்போது இரத்தினத்தால் செய்யப்பட்ட மூன்று திறவுகோல்கள் கையில் பிடித்திருந்தனர். அப்போது ஒருவர் சொல்லுகிறார்: உதவியின் திறவுகோல், வெற்றியின் திறவுகோல், கஃபாவின் திறவுகோல் ஆக இம் மூன்று திறவுகோலையும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒப்புக்கொண்டு விட்டார்களென்று.

பிறகு முகவசீகரமுள்ள அழகில் மூன்று வாலிபர்கள் வந்து புகுந்தார்கள். ஒருவர் கரத்தில் வெள்ளிப் பாத்திரமும், மற்றொருவர் கரத்தில் பச்சை மரகதத்தால் செய்யப்பட்ட ஒரு தட்டமும் உண்டாயிருந்தன. அந்த தட்டத்திற்கு முத்தினாலழுத்திய நாலு கோணங்கள் உண்டாயிருந்தன. அதில் ஒருவர் சொல்லுகிறார்:— முஹம்மதே! பரிசுத்தமானவரே! இந்த துன்யா முழுவதும் உமக்காகவே படைக்கப்பட்டிருக்கிறது. இந்த தட்டத்தின் மீது நீங்கள் நாடிய தலத்தை தொடுங்களென்றார். எனவே அந்த தட்டத்தின் நடுவில் தொட்டார்கள். அப்போது அதிலொருவர் "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் கஃபாவையும் அதன் சூழலுள்ளவைகளையும் பற்றி பிடித்துக் கொண்டார். ஆனதால் அல்லாஹு தஆலா கஃபா ஷரீபை அவர்கள் குடியிருக்கும் ஸ்தலமாகவும், கஃபா ஷரீபையே கிப்லாவாகவும் ஆக்கிவிட்டான்" என்றார். பிறகு மூன்றாவதானவர் கரத்தில் அழகாகிய பச்சை பட்டுப்புடவை சுருட்டப்பட்டதாக உண்டாயிருந்தது. அதை அந்த தட்டமுடையவர் கரத்தில் கொடுத்துவிட்டு, வெள்ளிப்பாத்திரத்தில் இருந்த தண்ணீரைக் கொண்டு, [illegible] முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

என்னும் சிறு பாவரை ஏழு விடுத்தம் சுத்தம் செய்தார். பிறகு இருபுயத்துக்கு மிடையில் காத்திமுல் அன்பியா என்னும் நபி பட்டம் பெற்ற உத்திராங்கமும் வைத்தார். பின்பு அவர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காதில் அதிக இரகசியமாக ஏதோ மிகுந்த நேரம் பேசினார். அது இன்னதென்று நான் அறியேன். அது எனக்கும் விளங்கவில்லை. அப்பால் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் இரண்டு கண்ணுக்கு மிடையில் முத்தம் இட்டு "முஹம்மதே! நீர் நன்மாராயம் பெற்றுக் கொள்ளும். உம்மைக்கொண்டு றஸூல்மார்களை பூர்த்தியாக்கி விட்டான். காத்திமுல் அன்பியா என்னும் நாமத்தையும் உமக்கே சொந்தமாக்கி விட்டான்" என்று சொல்லி அப்பட்டுப் புடவையில் பொதிந்து இறகில் தூக்கிக்கொண்டு போய்விட்டார். ஒரு ஸாஅத்துக்குப்பின் மீள்வித்துக்கொண்டு வந்து வைத்துவிட்டார். அவராகிறவர் சொர்க்கலோகத்திற்கு அதிபதியான ரில்வான் அலைஹிஸ்ஸலாமென்று இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா சொன்னார்கள்.

இன்னும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவதரித்த சந்தோஷத்தால் கஃபாவாகிறது மூன்று நாள் இரவும் பகலும் ததும்பி அசைந்து கொண்டே யிருந்தது. இக்ரிமா றலியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்ததையும் வானத்தின் நட்சத்திரங்கள் ஊடுருவி பாய்வதையும் இப்லீஸ் லஃனத்துல்லா கண்டபோது, தனது கூட்டத்தாருக்குச் சொன்னான்:—இன்றைய தினம் நமது காரியங்களை யெல்லாம் பழுதாக்கக்கூடிய பிள்ளை ஒன்று பிறந்து விட்டதென்று. அது கேட்டு அந்த ஷைத்தான் கூட்டங்கள், நீர் ஏன் அந்தப்பிள்ளையை பழுதாக்கிவிடக் கூடாது என்று சொன்னபோது, இப்லீஸ் லஃனத்துல்லா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அடுத்தபோது அல்லாஹு தஆலா வானவர்க் கரசரான ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமை அனுப்பினான். அவர்கள் உடனே வந்து இப்லீஸுல் லஈனை காலால் ஒரு உதை உதைத்தார்கள். அவன் அதன் (ஏடன்) என்கிற ஊரில் போய் விழுந்தான்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த இரவில் [illegible] வரகதிப்னு நௌபல், ஸைதுப்னு உமர்;

உபைதுல்லாஹிப்னு ஜஹ்ஷ் முதலிய ஒரு கூட்டத்தார் தங்களுடைய தெய்வமாகிய விக்கிரகங்களை அடுத்துபோய் பார்த்தபோது அவைகளெல்லாம் முகம்கவிழ அடித்து விழுந்திருக்க கண்டு, அவைகளைத் தூக்கி முன்போல் கட்டுவைத்தார்கள், பின்னும் முன்போல் விழுந்து விட்டன. மூன்றாவதும் தூக்கி கட்டிவைத்தபோதும் அதுபோல் விழுந்து விட்டன. அதனால் அவர்கள் ஆச்சரியப் பட்டுக்கொண்டு போய்விட்டார்கள்.

ஆசிரிய விருத்தம்.

சிறந்தநன் மதலை தனைவிரைந் தெடுப்பத்
தெரிவையர் மனத்தினி னினைப்ப
மறந்திகழ் விழியார் தொடத்தகா தென்றன்
முஹம்மதை விரைவினி லேந்தி

நிறந்திகழ் சுவனப் பதியினிற் கொடுவம்
மென்றன னெடியவ னதனால்
வறந்திக ழாமி னாத்திரு மனைபுக்
கடுத்தவர் பிள்ளையை யெடுத்தார்.

வசனம்.

சிறப்பான தன்மையுடைய பிள்ளையாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்தவுடனே, அவர்களை அங்கு உள்ள பெண்கள் தொட்டு எடுப்பதற்கு ஆரம்பித்தபோது, அல்லாஹு தஆலா "எனது ஹபீபாகிய முஹம்மது நபியை உலகிலுள்ள பெண்கள் தீண்டக்கூடாது. ஆகையால், நீர் விரைந்து சென்று அவரைத் தூக்கிக்கொண்டு சுவர்க்கத்திற்குக் கொண்டுவாரும்" என்று ஜிப்றயீலுக்கு உத்திரவு பண்ணினான்.

அதுகேட்டு வானவர் பெருமானாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் விரைந்து, ஆமினாவுடைய மனைக்குள் புகுந்து, நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இரண்டு கைகளாலும் தூக்கி அணைத்துக்கொண்டு சுவர்க்கம் சென்று, ஹவ்லல் கௌதர் என்னும் சிறந்த நதியிலும், மற்றும் அருவிகளிலும் ஸ்நானம் செய்வித்து, சிரசில் நெய்தடவி, இருவிழிகளிலும் சுர்மாதீட்டி, நறும்புகை புகட்டி கைகளில் ஏந்திக்கொண்டு, அல்லாஹு தஆலாவுடைய ஏவலின்படி வானம், பூமி, மலை, கடல், வனம் எங்கும்

கொண்டுபோய், மலக்குகள், ஜின்கள், மனிதர்கள் அனைவரும் விலங்கினம், புள்ளினம், மீனினம் மற்றும் பிராணிகள் அனைத்தும் செவிகுளிரக்கேட்டு ஆனந்தம் அடையும் வண்ணம், தம் வாய் திறந்து "இவர் அல்லாஹு தஆலாவுடைய றஸூல்மார்களுக்கு நாயகமானவர். உலகம் அனைத்திற்கும் நபியானவர். முஹம்மது என்னுந் திருநாமத்தை யுடையவர். இவரை விசுவாசித்து மலக்குகள் அனைவரும் ஈமான் கொண்டு கலிமா சொல்லி இருக்கிறார்கள். அப்படியே மற்ற படைப்புக்கள் அனைத்தும் ஈமான்கொண்டு கலிமா சொல்லவேண்டும்" என்று மிகப் பிரபல்யமாகப் பிரஸ்தாபஞ்செய்து ஒரு க்ஷணநேரத்தில் ஆமினாவுடைய கையில் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றார்.

பிறகு ஆமினாவிடமிருந்த நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, சபா என்னும் பெண் தன் கைகளால் தூக்கி இரண்டு பாதங்களையும் இருவிழிகளில் வைத்து முகந்து கொண்டு, பலவாறு புகழ்ந்து கொண்டாடி, தமது மடியின்மேல் வைத்தார். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறு குரலிட்டு அழுதார்கள். நபி நாயகம் அழுதவுடனே அல்லாஹ் தஆலாவிடம் இருந்து "சபாவுக்கு றஹ்மத் உண்டாவதாக" வென்று ஒரு சப்தம் பிறந்தது. இந்த அசரீரியான தொனி சபாவுடைய செவிகளில் கேட்ட சமயம் சபாவின் கண்களுக்கு ஷாம் ராஜியத்துப் பிரதான நகரத்தின் மாளிகைகள் அனைத்தும் பிரத்தியட்சமாய் தெரிந்தன. அன்றியும், மஷ்றிக் முதல் மக்றிப் பரியந்தம் உள்ளவை அனைத்தையும் கண் கூடாய்க் கண்டு உள்ளத்தில் அடங்காத ஆச்சரிய மடைந்தார்.

இது இப்படியிருக்க, ஆமினா றலியல்லாஹு அன்ஹாவின் பிரசவ வேதனையை அறிந்த அப்துல் முத்தலிபு, கஃபத்துல்லாவை வலம் வந்து வாசலில் நின்றுகொண்டு உள்ளமுருகி, ஆமினாவுடைய பிரசவ வேதனையைத் தம் சுவாமிகளிடத்தில் முறையிட்டுக் கொண்டு நின்றார். அவ்வமயம் அவர் அங்கு முறையிட்டு நிற்கையில் கஃபத்துல்லாவுக்குள் நிரை நிரையாய் நிறுத்தப்பட்டு இருந்த விக்கிரகங்கள் அனைத்தும், இருந்தாற்போலக் கிளம்பி, முகங்கவிழ்ந்து பெருமூச்செறிந்து காத தூரத்தில் வேறு வேறாய் உருண்டுபோய் விழுந்தன. அன்றியும் அல்லாஹு தஆலாவுடைய ஏவலைக்கொண்டு

ஆதிகாலத்தில் மலக்குகளால் கட்டப்பட்ட சிறந்த கஃபத்துல்லா வானது, நான்கு மூலைகளும் ஒன்றாய் ஆமினா பிள்ளை பெற்ற மனையை நோக்கித் தரையில் விழுந்து சுஜூதுசெய்து, மறுபடியும் முன்போல் எழுந்து நின்று வாய் திறந்து பேசுவது போன்று, எவர் செவிகளுக்கும் கேட்கும்படியாய் "சர்வ அதிகாரமுள்ள அல்லாஹுத் தஆலா இன்று என்னைப் பரிசுத்தம் ஆக்கினான்" என்று சொல்லிற்று. இந்த அற்புதமான காட்சிகளை அங்கு நின்ற அப்துல் முத்தலிபு கண்டு திடுக்கமடைந்து இனி இங்கு நிற்கக் கூடாது என மனம் அஞ்சி, உடனே திரும்பி ஆமினாவிருக்கும் வீட்டு வாசலில் வந்தார். அப்போது சூரியன் உதயமானான்.

பொழுது விடிந்து எங்கும் வெயில் பரக்கவுடன் அப்துல் முத்தலிபு வாசலில் நின்று ஆமினாவை அழைத்து, முழுமதிபோன்ற முகத்தை நோக்கி "ஆமினாவே! உன்னுடைய நெற்றியில் பிரகாசித்துக்கொண்டிருந்த பேரொளி, இப்போது காணப்படாமல் மறைந்து போனது என்னகாரணத்தினால்?" என்று கேட்டார். அதற்கு ஆமினா "நான் இன்று இரவு என் வயிற்றில் இருந்த பிள்ளையைப் பெற்று விட்டேன்" என்றார். இச்சொல்லைக்கேட்ட அப்துல் முத்தலிபு ஆமினாவுடைய குணம்குறிகளை உற்றுநோக்கி, ஆச்சரியம் அடைந்து "அந்தப் பிள்ளையை என்னிடம் கொண்டுவா" என்று கேட்டார். அதற்கு ஆமினா அவரைநோக்கி "என் பிள்ளையை மூன்று தினம் செல்லும் வரையும் ஒருவரும் காணக்கூடாது" என்று மலக்குகளுக்கு அரசராகிய ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் சொன்னதாகக் கூறினார். அப்போது அப்துல் முத்தலிபு கோபம் கொண்டு இருவிழிகளும் தீப்பொறி எழச் சிவந்து "ஆ! இந்த மனையோ நமது மைந்தன் உடைய மனை. பிள்ளையோ நமது மகன்பிள்ளை, ஆதலின், நமக்கு உள்ள சுதந்திரம் வேறு எவருக்கு உண்டு?" என்று எண்ணி, ஆமினாவை உற்றுப்பார்த்தார். இவ்விதம் அப்துல் முத்தலிபு உருத்து நோக்கினதைக் கண்ட ஆமினா மனம் அஞ்சிநடுங்கிட்டு, தமது மாமனாரை நோக்கி "அரசர்களும் அஞ்சத்தக்க பராக்கிரமம் தங்கிய நாயகமே! தங்களுக்கு இவ்வளவு சினம் உண்டாவதற்கு முகாந்திரம் ஒன்றும் மில்லை. இந்த மனையோ தங்களுக்கு சொந்தமானது: பிள்ளையோ தங்களின் மகன்பிள்ளை. ஆகையால் தடை ஏதும் இன்றி, இப்போதே தாங்கள் மனைக்குள் பிரவேசித்துக்

குழந்தையை எடுங்கள்" என்றார். ஆமினா சொன்ன அமிர்தம் போன்ற குளிர்ந்தமொழியைக் கேட்டு, அப்துல் முத்தலிபு சினம் தணிந்து, முகமலர்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை தூக்குவதற்காக மனைக்குள் புகுந்து அறைக்குள் பிரவேசித்தார்.

அந்த அறை வீட்டுவாசலில், உறையிலிருந்து உருவின கூராயுதம் ஒன்றைக் கையிற்பிடித்து நின்றுகொண்டு, அப்துல் முத்தலிபை நோக்கி அச்சங்காட்டுவதாக ஒரு மனிதனைக்கண்டு, தமது மனதில் திகில் விளைந்து கால்கை நடுமாறி, உடல் முழுவதும் வேர்வையால் நனைய திரும்பினார். இவ்விதம் தாம் கண்டபயங்கரமான காட்சியால் அஞ்சித்திரும்பின அப்துல் முத்தலிபு "வீரதீரம் அமைந்த இவன் யார்? அன்னியனாகிய ஆண்மகன் ஒருவன் நம்முடைய மனைக்குள் பிரவேசித்து நின்று நம்மை அச்சங்காட்ட முகாந்திரம் என்ன? இத்தனை சுதந்திரமும் அதிகாரமும் இவனுக்கு ஏது? இந்தக் காரியத்தைப் பராமுகமாய் நாம் விடக்கூடாது. நமது குடும்பத்தில் உள்ள வீரர்களுக்கு இதை அறிவித்து, அவர்களைத் திரண்டுவரச் செய்து, இவனை மனையைவிட்டுத் துரத்தவேண்டும்" என்று எண்ணி, விரைவாய் மனைவாசலை நடந்து நடந்தார். புதிது புதிதாய் நிகழ்வதற்கு ஆரம்பமான ஆச்சரியமுள்ள அற்புதங்களைக் கண்டவுடன் அதை வெளியிடாமல் மனதினுள் மறைத்து வைக்குங்காலம் இது என்பதை அப்துல் முத்தலிபு ஆராய்ந்து அறிந்து, அடங்கியிராமல், கண்ட இப்பயங்கரமான காட்சியைத் தம் குலத்தாருக்குச் சொல்லவேண்டுமென எண்ணினார். ஆனால் இதைக் குறித்து ஒருவார்த்தையாவது பேசுவதற்கு அவருக்கு நா எழவில்லை. இவ்விதம் தமக்குப்பிறருடன் பேச இடம் இன்றி நா அடைத்த படியால், மிகப்பயந்து ஏழுதினம் மட்டும் தமது சொந்த மனைக்குள் புகுந்து வெளிப்படாமல் இருந்து விட்டார்.

அல்லாஹுத் தஆலாவின் கட்டளைப்படி அப்துல் முத்தலிபு தாம்கண்ட காட்சியை மறைக்கும் வண்ணம் நாவடக்கம் கொண்டு தமது மனையிற்போய் வெளியில்வராமல் இருந்தார். பிற்பாடு ஆமினா, தமது குழந்தையாகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை தூக்கி முகந்து பாலூட்டினார். இப்படி ஏழுதினம் வரையும் ஆமினா நபிநாயகத்துக்குப் பாலூட்டிவந்தார். இடை

மிடையே மலக்குகள் வந்து சுவர்க்கத்துத் தண்ணீரினால் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நீராட்டி, ஸலவாத்து சொல்லிப் புகழ்ந்துகொண்டாடிப் போவார்கள்.

இப்படி ஏழுதினங்கள் கழிந்த பிற்பாடு, பிறருடன் பேசும் வண்ணம் அப்துல் முத்தலிபுக்கு நா எழுந்தது. உடனே அவர் மனத்துயர் ஒழிந்து, சந்தோஷம் அடைந்து, பிள்ளைமேல் அன்புமீறி தமது வீட்டை விட்டு எழுந்து ஆமினாவுடைய மனைக்கு வந்து ஆமினாவைநோக்கி "ஆமினாவே, நீ பிள்ளை பெறும்போது உன்வீட்டில் நடந்த வர்த்தமானங்கள் என்ன? அவை அனைத்தையும் எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். அப்போது ஆமினா, அப்துல் முத்தலிபை நோக்கி, வானத்திலிருந்து மலக்குகளும், ஹூறுல் ஈன்களும், பட்சிசாலங்களும் திரண்டு மனையில் வந்து கூடினதும், பறவைகளிலிருந்து ஒரு வெண்பட்சிவந்து தன் சிறகுகளைக் கொண்டு வீசி நின்றதும், மலக்கு ஒருவர் மரகதக் கிண்ணத்தில் தேவாமிர்தம் நிரப்பிக் கொண்டு வந்து கொடுத்ததும், தங்கத் தட்டத்தில் சுவர்க்கத்துப் பட்டாடை ஒன்று தமக்குக் கொடுக்கப்பட்டதும், ஆசியா மறியம் என்னும் இரண்டு பெண்கள் வந்து அருகில் இருந்ததும், பிறகு தாம் கர்ப்ப வேதனை தீர தீம்பானம் பருகினதும், பிரசவித்ததும் ஒன்றும் ஒளியாமல் ஆதியோடந்தம்வரை விவரமாகச் சொல்லி முடித்தார். இவ்வற்புத வரலாறுகளைக் கேட்ட அப்துல் முத்தலிபு ஆச்சரியம் அடைந்து ஆமினாவை நோக்கி, "இந்த அற்புதமான வரலாறுகள் அனைத்தும் மனிதர் பிரமிக்கத்தக்கவையே" என்று புகழ்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை ஆமினாவிட மிருந்து வாங்கி, அன்புடன் முகர்ந்து முத்தம் இட்டார். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அப்துல் முத்தலிபை நோக்கி குறுநகை செய்தார்கள். அப்போது அப்துல் முத்தலிபு ஆனந்தப் பரவசம் அடைந்து, நபிநாயகத்தை தமது இருகைகளாலும் அணைத்துக்கொண்டு, மனையிலிருந்து புறப்பட்டு நடந்து கஃபத்துல்லாவுக்கு வந்தார்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எடுத்து அணைத்துக்கொண்டு வந்த அப்துல் முத்தலிபு, கஃபத்துல்லாவை ஏழுதரம் பிரதட்சனம் செய்து, உள்ளே பிரவேசித்து,

நபிநாயகத்தை மடியின்மேல் வைத்துக்கொண்டு, அல்லாஹு தஆலாவைத் துதித்து வணங்கி இந்த பைத்தை ஓதினார்:—

الحمد لله الذی اعطانی هذا الغلام الطیب الاردان
قد فاق فی المهد علی الولدان اعیذه بالواحد الدیان

பிறகு தமது திருவாக்கினால், நபிநாயகத்துக்கு "முஹம்மது" என்று நாமகரணம் செய்து, திரும்பி வந்து ஆமினாவுடைய கையில் பிள்ளையைக் கொடுத்து "உன்னுடைய பிள்ளையைப்போல் உலகில் ஒருவரும் பெறவில்லை" என்று சொல்லி விட்டுத் தமது மனைக்குச் சென்றார். பிறகு மக்காவிலுள்ள சகல ஜனங்களும் குழந்தையின் அழகையும் ஒளியையும் வந்து பார்த்தார்கள்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குத் தாயாராகிய ஆமினா, ஏழுதின மாத்திரம் பால் கொடுத்தார். பிற்பாடு ஆமினா பாலூட்ட வில்லை. பிறகு அபூலகபு என்பவருடைய மனையில் இருந்த துவைபா என்னும் பெண் சிறப்பும் மேன்மையும் தமக்கு நாளுக்கு நாள் வளர்ந்தோங்கும்படி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பாலூட்டி வளர்த்து வந்தார்.

8-வது அத்தியாயம்.

ஹலிமா பால் ஊட்டியது.

கலி விருத்தம்,

புலிமா னொரு பொய்கையில் நீருணவும்
மலிமா வினை மாரணர் மாழ்கிடவும்
கலிமா நெறி காட்டிடு காரணருக்
ஹலிமா முலையூட்ட லறைந்திடுவாம்.

இதன் பொருள்.

புலியும் மானும் பகைத்துக்கொள்ளாமல் ஓரே தடாகத்தில் ஒன்று நீருந்தவும், அதிக துன்பங்களை விளைவிக்கின்ற மந்திர வசியக்காரர்களான காபிரீன்கள் மயக்கம் பெறவும், தங்களுக்கு ஆண்டவன் கொடுத்த புர்கான் வேதம் சொல்லுகின்றதாகிய கற்பனை யிடையாத கலிமா வென்னும் நீதிவாக்கியத்தை யோதிக்காட்டு

ஒழுங்கு செய்யும் காரணராகிய நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு, ஹலிமா வென்னும் பெயருடைய பெண்ணானவர் தமது பாலூட்டும் முறைமையைச் சொல்ல ஆரம்பிக்கின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

அறிவத பறமுறை பயிற்றி யன்புட
னெறிவளர் தரவளர்த் திடுவ நீயெமக்
குறுதியாய் முஹம்மதை யருளென் றுன்னியே
யிறையுடன் மொழிந்தன ரமர ரியாருமே.

வசனம்

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு துவைபா என்னும் பெண் பாலூட்டி வளர்த்து வரும் காலத்தில், ஒருதினம் மலக்குகள் அனைவரும் ஒருங்கு திரண்டு, "யா அல்லாஹ்! உன்னுடைய ஹபீபாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை எங்கள் இடம் ஒப்புவிப்பாயானால், அவருக்கு நாங்கள் கல்வி அனைத்தையும் புகட்டி, அன்பும் ஆதரவும் பெருக வளர்ப்போம். ஆகையால், நீ எங்கள் பேரில் கிருபை கூர்ந்து அவரைத் தந்தருள்" என்று அல்லாஹு தஆலா இடம் கேட்டார்கள். பிறகு ஹூறுல்ஈன்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு, "யா அல்லாஹ்! உனது ஹபீபாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை எங்கள் இடம் கொடுத்தருள். நாங்கள் சுவர்க்கத்தில் நீராட்டித் தேவாமிர்தம் ஊட்டி வளர்த்து, சுவர்க்கத்திற்கு ஏகாதிபதியாக்கிக் கொள்ளுகிறோம்" என்று மன்றாடிக் கேட்டார்கள். வனத்தில் சஞ்சரிக்கும் விலங்கினம் அனைத்தும் ஒருங்கு திரண்டு, "உனது ஹபீபு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை எங்களிடம் ஒப்புவித்தால், நாங்கள் அவரை அருமையுடன் உபசரித்து வளர்ப்போம்" என்று அல்லாஹு தஆலா இடம் கேட்டன. இவைபோலவே பட்சி சாலங்கள் அனைத்தும் "எங்களிடம் கொடுத்தருள், நாங்கள் அருமையாக வளர்க்கிறோம்" என்று முறைப்பாடு செய்து கேட்டன.

இவ்விதம் மலக்குகள், ஹூறுல்ஈன்கள், விலங்குகள், பறவைகள் எல்லாம் மன்றாடிக் கேட்டதற்கு, அல்லாஹு தஆலா "ஹுனைன் என்னும் நகரத்தில் வாசம் செய்யும் ஹலிமா என்னும் பெண்ணே எனது ஹபீபாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பாலூட்டி வளர்க்கத் தகுந்தவள், மற்ற எவர்களாவது, வேறு எந்தப் பிராணிகளாவது அதற்குத் தகுதி அல்ல" என்றுபதில் சொன்னான். இதைக்கேட்டபோது மலக்குகளும், ஹூறுல்ஈன்களும் இதைக் நாவடங்கி, மனம் கலங்கினார்கள். விலங்கினங்களும், பட்சிசாலங்களும் தத்தம் உடல் ஒடுங்கி அடங்கின.

இது இப்படி யிருக்க, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய செவிலித்தாயாய் அமைந்த ஹலிமா என்பவர் அரபுதேசத்தில் ஹுனைன் என்னும் நகரத்தில் குடியிருந்தார். பலவகைச் செல்வங்களாலும் செழிப்புற்று விளங்கிய அந்த ஹுனைன் நகரத்தில், ஹாரிது என்பவரும் அவர்மனைவியாகிய ஹலிமாவும், புத்திர பாக்கியத்திலும் தனசம்பத்திலும் குறை ஒன்றும் இன்றி வாழ்ந்திருக்குங் காலத்தில், ஹுனைன் நகரம், பஞ்சத்தால் வளம் குன்றிக் கலங்கநேரிட்டது. அங்குள்ள பயிர் பச்சைகள் செழித்து வளரும் வண்ணம் அடிக்கடிப் பெய்யும் மழை, ஒரு துளியுமின்றி நின்று விட்டது. கானலினால் கருகிய சிறுபூண்டு ஒன்றையாவது காணுதல் அரிது. பார்க்கும் இடம் அனைத்தும் பச்சென்று தோற்றும் தன்மை ஒழிந்து, கானல் மலிந்த பாழுந்தரையானது. மாடு, ஆடு, ஒட்டகம், குதிரை முதலிய விலங்குகள் உதிரம் வறண்டு எலும்பும், தோலும், நரம்பும் அன்றி, மாமிசத்தின் கூறியும் இன்றி ஒடுங்கின. வனவிலங்குகள் அனைத்தும் அங்கங்கே இறந்து விழுந்தன. பறவைக் குலங்களும் மாய்ந்துபோயின.

இவ்விதம் மழைமுகம் காணாமையால் கொடிய பஞ்சம் தலைப்பட்டு ஹுனைன் நகரம் பல வழியிலும் கலங்கிற்று. ஆகாயத்திலிருந்து நிலத்தில் விழும் மழைத்துளி என்பது சிறிதும் இன்றி நதிகள், அருவிகள், கால்வாய்கள் முழுதும் வற்றின. குளம் குட்டை, ஊறு, முதலானவைகளில் நீர் ஊறும் ஊற்றுக்கண்களும் அடைப்பட்டன. எங்கும் நியாயம் இன்றி, அநியாயம் தலைப்பட்டது. இப்படி தலையெடுத்த கொடும் பஞ்சம் நாளுக்கு

னால் வளர்வது அல்லாமல், குறையும் வழி ஒரு விதத்திலும் இல்லாமையால், குடிகள் மிக வருந்த நேரிட்டது. உள்ள பொருள் அனைத்தையும் விற்றுண்டு பிற்பாடு யாதொரு பொருளும் இல்லாமல் பசி பட்டினியில் கிடந்து வருந்தி இறந்தவர்கள் அநேகர். உயர் குலத்தில் உள்ளவர்களாயிருந்தும், சீர்கெட்டுத் தாழ்ந்தவர்கள் இடம் அடிமைப்பட்டவர்கள் அநேகர். இறந்து உண்பதற்கும், ஈவார் அற்று ஏங்கித் திரிபவர்கள் அநேகர். அன்னிய தேசங்களில் போய் எவ்வழியிலும் பிழைப்போம் என்றெண்ணித் திக்கற்று பலமுகமுஞ் சிதறுண்டு பரதேசிகளாகப் போனவர்கள் அநேகர்.

இவ்விதமாக அப்பகுதியில் உள்ள அநேக ஆயிரம் ஜனங்கள் வலசைவாங்கி போனமையால் ஹவாஸின் நகரம் வெறுமை யடைந்தது. பிறகு ஹவாஸின் நகரத்திலிருக்கும் குடிகளில் அநேகர் ஒன்று கூடி இவ்விதம் நாம் உண்ணவும் உடுக்கவும் வகையின்றி வறுமையடைந்து உடல்மெலிந்துவருந்துகிறோம்; இதற்குஎன்செய்வதென்று திகைத்துக்கொண்டுவருந்தி யிருக்கிறநாளில், ஒருநாள் உருதோற்றம் இல்லாது ஒரு சப்தம் உண்டாயிற்று. அதாவது அல்லாஹ்வுடைய ஹபீபாகியவரும் ரஹ்மதாகிய பிள்ளையுமாகிய முஹம்மத் இருக்கும் மக்கமா நகருக்கு நீங்கள் விரைந்து போகுங்கள். அப்பிள்ளை உங்கள்பதியில் வந்திறங்கினால் உங்கள் பஞ்சமெல்லாம் பறந்து போய் உங்கள் வறுமையெல்லாம் நீங்கி சந்தோஷம் பெறுவீர்கள் என்பதாகும்.

இவ்வசரீரி சப்தத்தை ஹவாஸின் நகரின் பனூசஃது கூட்டத்தார் கேட்டபோது புதுமையாகி, ஒவ்வொருவரும், நம்முடைய பஞ்சத்துக் கேற்றவாறு ஒரு பாக்கியம் உண்டாயிருக்கிறது. ஆனால் அந்தப் பிள்ளையை நாம் முந்திப்போய் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அந்தரங்கத்தில் ஆதரவு வைத்துக்கொண்டு, விரைவாக உதயத்திற் பிரயாணப்படுவோமென இருந்தார்.

அன்று இரவு ஹாரிதும், அவர் மனைவியாகிய ஹலீமாவும் படுத்து உறங்கும்போது, ஹலீமா தமது மடியில் இலைகள் அடர்ந்த மரகத நிறம் அமைந்த விருட்சம் ஒன்று முளைத்து பொருந்திய கனிகள் கணக்கற்றவை நிறைந்து, வளர்ந்தோங்கி நிற்கவும், அக்கனிகளைத் தமது கையால் பறித்துத் தின்னவும்

கனவுகண்டு விழித்து, தாம் கண்ட கனவின் காட்சியை அங்குள்ளவர்களுக்குத் தெரிவித்தார்.

இக்கனவை ஹலீமாவின் தந்தையாகிய துவைபு என்னும் சாஸ்திரி கேட்டு மகளை நோக்கி, "மகளே! நீ மக்கமாநகரத்துக்குப் போனால், உனக்கு அங்கே உண்மையாய் ஒப்பற்றபாக்கியம் கிடைக்கும்" என்றார். இதைக்கேட்டு ஹாரிதும் ஹலீமாவும், மனம் மகிழ்ந்து, அன்றுகாலையில் பிரயாணப்பட்டார்கள். இவர்களுடன்முன்கூடிப் பேசினவர்களும்சேர்ந்து ஹவாஸின் நகரத்தைவிட்டுப் புறப்பட்டு, மக்கமாநகரத்துக்குப் போகும் மார்க்கத்தைப் பிடித்து நடந்தார்கள். அழகிய பெண்களும் ஆண்பிள்ளைகளுமாகத் திரண்டு எந்தும் தாமுள்ள பிள்ளைகளுடனும், இடுக்கும் தாமுள்ள பிள்ளைகளுடனும் நடந்து, பஞ்சத்தில் அடிபட்ட பரதேசிகளைப்போல் புறப்பட்டுப் போகும் காட்சி மிகப் பரிதாபமாயிருந்தது.

ஹலீமா அம்மா சொல்கிறார்கள், மக்கமா நகருக்கு நாங்கள் செல்லும்போது கூட்டத்தில் என்னிலும் வறுமையாளர் யாருமில்லை. என்னிடத்தில் பலஹீனமுள்ள ஒரு * பெண் கழுதையைத் தவிர வேறு வாகனமுமில்லை. பலமுள்ள வாகனமுடையார் பலர் புருஷனும் மனைவியுமாக நல்ல வாகனத்திலேறி சென்றார்கள். நான் என்புருஷனர் ஹாரிதைப் பார்த்து, நீங்கள் வாகனத்திலேறிச் செல்லுங்கள். நான் இதர மனிதர்களோடு நடந்து வருகிறேன், என்று உரைத்தேன். அதற்கு அவர், "ஹறமுடைய நாயன் அதற்கு பலத்தைக் கொடுப்பான். அது சுமக்கும். அதின் முதுகில் நீ மயங்காமல் தரித்திரு" என்று சொல்லி, என்னையும் என் மகன் ளம்ரத்தையும் அதின் முதுகில் ஏற்றிவிட்டு, அவரும் கூட ஏறிக்கொண்டு மக்காவை நாடிச் சென்றோம். அது அதிக பலஹீனமாக இருந்தது. அல்லாஹு தஆலா, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய பறக்கத்துக் கொண்டு அதற்கு வலுவைக் கொடுத்தான். எல்லோருடனும் நாங்கள் மக்கமா நகரம் போய் சேர்ந்தோம்.

கொடிய பஞ்சத்தால் விளைந்த தரித்திரத்தில் பீடிக்கப்பட்ட ஹவாஸின் ஸவாரிகள், காடுஅடர்ந்த மலைத்தொடர்கள், குன்றுகள், வனங்கள், நதிகள், அருவிகள் அனைத்தும் கடந்து சில நாளில்

* இன்னொரு சரித்திரத்தில் பெண் ஒட்டகம் எனவும் வந்திருக்கிறது

மக்கமா நகரம் வந்து சேர்ந்தார்கள். ஒன்றாய்க் கூடிவந்தவர்கள் நகரத்துக்குள் புகுந்தபோது, அனைவரும் வேறு வேறாய்ப் பிரிந்து, ஆடவரும் பெண்டிருமாகத் தெருக்கள்தோறும் போனார்கள். இவர்களில், பிறர் பிள்ளைக்குப் பால் கொடுத்துப் பிழைக்கக்கூடிய பெண்கள் நாற்பதுபேர் இருந்தார்கள்; இவர்களுள் ஹலிமாவும் ஒருவர். இவர்கள் அனைவரும் தம் தம் புருஷர்களுடன் வீதிகள் தோறும் சென்று "நாங்கள் சிறு குழந்தைகளுக்கு பால் கொடுத்து வளர்க்கும் செவிலித் தாய்மார்கள்" என்று வீட்டுவாசல்களில் நின்று கேட்டார்கள். ஹலிமா நீங்கலாக மற்றவர் அனைவருக்கும் பால் கொடுக்கும் வேலை அமர்ந்தது. அதனால் அவர்களின் பஞ்சத்தால் அடியுண்டு மெலிவடைந்த சரீரங்கள், வயிறார உண்டு பருத்துக் கலிதீர்ந்தார்கள். ஹாரிதும், அவர் மனைவியாகிய ஹலிமாவும், பால் கொடுப்பதற்குப் பிள்ளை கிடைக்காமல் அநேக வீதிகளில் சென்று அலைந்து, மனங்கலங்கி "நம்முடன் கூடிவந்த பெண்கள் அனைவரும் பால் கொடுக்கும் வேலையில் யமர்ந்தனர்; நாம் இவ்விதம் தெருத்தெருவாய்த் திரிந்தும் ஒருவராவது நம்மை நோக்கி என்னவென்று உசாவவும் இல்லை; இதற்குக் காரணம் தெரியவில்லை. ஒருக்கால்நாம் உடல்மெலிந்து, தனம் சூம்பி யிருப்பதால், இவள் எப்படிப்பால் கொடுக்கக்கூடும்? என்று வெறுப்புஅடைந்து விட்டு விட்டார்கள் போலும்" எனவெண்ணினர். முடிவில் கால்கள் ஓய்ந்து, அப்துல் முத்தலிபுடைய வீட்டு வாசலில் வந்துநின்றுகொண்டு "நான் கூலிக்கு பால் கொடுத்துப் பிள்ளை வளர்ப்பேன் இங்கே பிள்ளையுண்டா?" என்று கேட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்ட அப்துல் முத்தலிபு, வீட்டை விட்டு விரைந்து வெளியில் வந்து ஹாரிதும் ஹலிமாவும்நிற்கக்கண்டு, ஹலிமாவை உற்றுநோக்கினார். ஹலிமாவுடைய உடல் மிக மெலிந்து தனம் சூம்பியிருந்தது. இதைக்கண்ட அப்துல் முத்தலிபு, சரீர புஷ்டி இன்றி ஒரு தனம் சூகையாயிருக்கும் இந்தப் பெண், பிறர் பிள்ளைக்குப் பால் கொடுத்து வளர்ப்பே னென்று உறுதியாகத் துணிந்து சொல்கிறார்களே இது மிக ஆச்சரியமா யிருக்கின்றதே. ஆயினும் தேவ சங்கற்பம் எப்படியோ; அதை நாம் கண்டு அறிய வேண்டுமென்று தம் மனதுக்குள் நினைத்து ஹலிமாவை நோக்கி "உன் குலம் ஏது? பெயர் யென்ன?" என வினவினார். இவ்விதம் அப்துல் முத்தலிபு வினவியதற்கு, ஹலிமா அவரை

நோக்கி, "நான் 'ஸாது' என்னும் குடும்பத்தில் பிறந்தவள். என் தந்தையும் தாயும் எனக்கு இட்ட பெயர் ஹலிமா" யென்று விடை பகர்ந்தார். இப்படி ஹலிமா தம் குடும்ப நாமத்தையும் தம் நாமத்தையும் சொன்னவுடன், அப்துல் முத்தலிபு, இழிவு ஒன்றும் இல்லை யெனக்கண்டு, மனம் மகிழ்ந்து ஹலிமாவை நோக்கி, "ஹலிமாவே! ஏழைக்குடியில் பிறந்த பிள்ளை யொன்று இருக்கின்றது. அந்தப் பிள்ளைக்குத் தாய் மாத்திரம் உண்டு. தந்தை சில மாதங்களுக்கு முன் இறந்துபோனார். அதற்குப் பால்கொடுத்து வளர்க்க உன் மனதிற்குச் சம்மதம்தானா?" வென்றார். இதைக் கேட்ட ஹலிமாவும் ஹாரிதும் ஒருவரோடு ஒருவர் "நாம் பஞ்சத்தில் அடியுண்டு சுய நகரத்தை விட்டுப் புறப்பட்டு அன்னிய நகரத்தில் பிரவேசித்துக் கூலிக்குப் பால் கொடுக்கத் தலைப்பட்டதற்குக் காரணம் வயிற்றுப் பிழைப்பே யன்றி வேறல்ல. ஆகையால், ஒரு பாக்கியவான் வீட்டுப் பிள்ளைக்குப் பால் கொடுத்தால் மாத்திரமே நமக்கு உண்ணவும், உடுத்தவும் தாராளமாய் கிடைக்கும். அல்லாமல். இவர் சொன்னபடி ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க நாம்மனம் இசைவோமானால், நம் வறுமை எவ்விதம் நீங்கும்! ஆயினும், நாம் சென்றுபார்த்து அவ்வீட்டையும் பிள்ளையையும் அறிவோம்" என்று இரகசியமாகப் பேசிக்கொண்டு அப்துல் முத்தலிபை நோக்கி, "சரி, அந்தப் பிள்ளையை நாங்கள் போய்ப் பார்க்கிறோம்" என்றார்கள். உடனே அவர், அங்குள்ள ஒருவனுடன் இவ்விருவரையும் கூட்டி ஆமினா இருக்கும் மனைக்கு அனுப்பினார்.

ஹாரிதும் ஹலிமாவும் கூட்டிவந்த ஆளுடன், ஆமினா இருக்கும் மனையில்வந்து, ஹலிமா, ஆமினாவை நோக்கி "உன் பிள்ளைக்குப் பால் கொடுத்து வளர்க்கவேண்டி பிள்ளையைப் பார்க்க வந்தேன்; அந்தப் பிள்ளையைக்கொண்டுவா" என்றுகேட்டார். அப்போது ஆமினா, ஹலிமாவை நோக்கி "என் பிள்ளைக்கு உரிய தந்தை இல்லை. தாயாகிய நான் ஆதரவில்லாதவள். எனக்கு, உற்ற சமயத்தில் உதவி செய்பவர்கள் ஒருவரும் இல்லை; வறுமை என்பது எங்கள் இடத்திலேயே குடியிருக்கிறது. இன்று ஒருவேளைக்கு உண்ணும் உணவும் இங்கு இல்லை. நீங்கள் பஞ்சத்தில் பீடை அடைந்து, தரித்திரம் தலைப்பட்டுப் பசியினால் வருந்திப் பொருள் விருப்பங்கொண்டு, கூலிக்குப்பால் கொடுக்கத் தலைப்பட்டீர்கள். உங்கள் கருத்தின்படி கிடைப்பதற்கு ஒன்றும் வகை யில்லாமையால்,

என் பிள்ளையைப் பால்கொடுத்து எப்படி வளர்ப்பீர்கள்'' என்று சொன்னார். இச்சொல்லைக்கேட்ட ஹலிமா, ஹாரிதை நோக்கி "நாயகரே, நான் பால் கொடுக்க நினைத்த பிள்ளை தந்தை இன்றி, அநாதரவாய் தாயை மாத்திரம் உடையதாய், பிறர் உதவி இல்லாமல் இருக்கிறதாம், தரித்திரம் பொலிந்த குடியாம். இவ்விதமான அநாதைப் பிள்ளைக்குப் பாலூட்டி வளர்க்கத் தலைப்படுவோமானால் நாம் பிழைப்பது எவ்வண்ணம்'' என்று கூறினார். இதை கேட்ட ஹாரிது தமது மனைவியை நோக்கி "ஹலிமாவே! உலகிலுள்ள ஒவ்வொருவரும் செல்வம் அடைவதும் தரித்திரம் அடைவதும் தெய்வசித்தத்தின்படியன்றி, அவர்களால் ஒன்றும் ஆகாது. இதற்கு திருஷ்டாந்தம் அநேகம் உண்டு. ஒருவன் தன் தரித்திரத்தினால் மனத் துயர் பெருகி சரீரம் வருந்த எவ்வளவு பாடுபட்டு உழைத்தாலும் அவனுக்கு விதித்த அளவு கிடைக்குமே அன்றி, எட்பிரமாணமாவது கூடவும் குறையவுமாட்டாது. நீ ஏன் வீணே மனம் வருந்தவேண்டும்? உலகத்தை ஆளும் அரசர்களும் திடீரென்று ஏழைகளாகிறார்கள். ஒவ்வொரு காலங்களில் வறியனான அகதியும் அரசனாக ஏற்படுகிறான், உலகம் இவ்விதம் நடக்கின்றது. தரித்திரம் ஒழிந்து செல்வம் அடையும் விதி நமக்கு உண்டாயிருந்தால் இவ்விதம் அநாதைப் பிள்ளையாலும் நிறைவேறும். 'நாம் இன்னும் தரித்திரத்தில் சிக்கி உழன்று திரியும் விதியிருந்தால் எவ்வளவு பெரிய பாக்கியவான் வீட்டுப் பிள்ளைக்குப் பால் கொடுக்கத் துணிந்தாலும், செல்வத்தின் குறியைக் கூடக் காண்பது அரிதுதான். ஆகையால், நமது தெய்வ சங்கற்பத்தை இந்த எளிய பிள்ளையால் அறியலாம். ஒரு கால் இது அலீர சப்தத்தில் சொல்லியபிள்ளையாயிருக்கலாம், நீ அதற்குப் பிரதியுபகாரம் விரும்பாமல் பாலூட்டி வளர்க்க உடன்படு'' என்றார். இந்த வார்த்தைகள் அனைத்தையும் ஹலிமா கேட்டு மனம் உவந்து, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு பால்கொடுக்க உடன்பட்டார். ஆமினாவை நோக்கிப்' பிள்ளையைக் கொண்டுவரும்படி சொன்னவுடனே, ஆமினா வீட்டில் புகுந்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைத் தூக்கிக் கொண்டு வந்தார். வந்தபோது ஹாரிதும் ஹலிமாவும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முகாரவிந்தத்தைக் கூர்ந்து பார்த்தார்கள். அவ்வேளையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லம் அவர்கள் மூடி இருந்த இரண்டு கண்களையும் திறந்தார்கள். கண்கள் திறந்தபோது அநேக ஆயிரம் சூரியன் ஒன்றாய்த் திரண்டு உலகமெங்கும் கிரணங்களை செலுத்திப் பிரகாசிக்கும் பெரும் பிரகாசத்துக்கும் ஒப்பாகாத பேரொளி அங்கு பிரகாசித்தது. இவ்விதம் பிரகாசித்ததை ஹாரிதும் ஹலிமாவும் கண்டு, மனம் அஞ்சி, ஆச்சரியம் அடைந்து ஸ்மரணை நீங்கி பிறகு உள்ளந்தெளிந்து மகிழ்ந்தார்கள். மகிழ்ந்தபின் ஹாரிது ஹலிமாவை நோக்கி, "ஹலிமாவே, நம்வாழ்க்கைக்கு இன்றியமையா அருமருந்தை யொத்த இப்பிள்ளையை விரைந்து கையேந்தி வாங்கு'' என்று சொன்னபோது, ஆமினாவிடம் இருந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹலிமா வாங்கித் தம் மார்போடு அணைத்தார்.

பாவம், பிணி, வறுமை முதலான தீங்குகளனைத்தையும் அறத் தொலைக்கும் அருமருந்துக்குச் சமானமான நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, ஹலிமா தம் கைகளில் ஏந்தி மார்போடு அணைத்தபோது, வறுமையால் வாடி மெலிந்து இருந்த ஹலிமாவுடைய சரீரம் பூரித்து பருத்தது. கஸ்தூரி மணம் வீசப் பெற்றது. உதிரம் கண்டி சூலைகொண்டு இருந்த வலது தனம் விம்மிப் பொற்கலசத்தை ஒத்துக் கண் திறந்து பால் ஒழுகிற்று. இப்புதுமைகளை அப்போது கண்ணுறக்கண்ட ஹாரிது, சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கி, உடல் பூரித்து ரோமங்கள் சிலிர்த்துப் பரவசம் அடைந்தார்.

பிறகு ஹலிமா, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தம் சிறந்த மடியில் வைத்து, மெல்லிய பாதங்களைக் கரங்களால் வருடி, நபியின் காரணத்தால் பருத்து விம்மின கொங்கையின் அமுதம் குடிக்க ஊட்டினார். உடனே நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் மகிமை பெற்ற திருவாய் திறந்து பால் குடித்தார்கள். வலது கொங்கையில் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்பால் குடிக்கையில், இடது கொங்கையில் ஹலிமாவுடைய ழமுறத்து என்னும் பிள்ளை பால் குடித்தது.

ஹலிமாவின் உடல் பசியால் வருந்தி மெலிந்து பால் சுரப்பின்றி இருந்ததால், ழமுறத்து என்னும் பிள்ளையும் மிக மெலிந்து

நரம்பு எழுந்து எலும்பும் தோலுமாயிருந்தது. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டால் அந்தப்பிள்ளை பால் குடிக்குந்தோறும் வயிறாரப் பருகிக் கொப்பளிக்கும்படி ஆயிற்று. அன்றியும், அந்த ஸமுறத்து என்னும் பிள்ளை சீக்கிரத்தில் உடல் தழைத்து புஷ்டியாக வளர்ந்தது.

இவ்விதம் ஹலீமா, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பாலூட்டிக் கொண்டு சிலகாள் வரை அங்கு இருந்தார். பிறகு ஹுனைன் என்னும் தம் சுயநகரத்துக்குப் போகவேண்டும் என்ற விருப்பம் தமக்கு உண்டாய், ஒருநாள் தம் நாயகராகிய ஹாரிதை நோக்கி கருத்தைத் தெரிவித்தார். அவருக்கும் அது பிரியமானபடியால், இருவரும் எழுந்து அப்துல் முத்தலிபை அடுத்து "நீர் சொன்ன பிள்ளைக்குப் பால் கொடுத்த தன்மை கொண்டு, எங்களுக்கு எங்கும் கிடைக்காத பெரும்பாக்கியம் கிடைத்தது. இனிக் குறை ஒன்றுமில்லை. ஒப்பில்லாத சிறப்பும் செல்வமும் அடைந்தோம். இப்போது நாங்கள் எங்கள் சுய நகரத்துக்குப் போய் வரவேண்டும். நீங்கள் மனமகிழ்ந்து உத்திரவு கொடுங்கள்" என்று கேட்டார்கள். அப்போது, அப்துல் முத்தலிபு அவ்விருவருக்கும் நன்மொழி பகர்ந்து "ஆமினாவிடம் விடை பெற்றுக் கொண்டு போங்கள்" எனச்சொல்லி உபசரித்து அனுப்பினார்கள்.

பிறகு ஹாரிதும் ஹலீமாவும் ஆமினாவை அடுத்து தாங்கள் ஹுனைன் நகரத்துக்குப்போக விருப்பங் கொண்டதாகத் தங்கள் கருத்தை வெளியிட்டார்கள். இதைக்கேட்ட ஆமினா, தமது அருமையான குழந்தையின் பிரிவுக்கு ஆற்றாதவராய் மனம் வருந்தி சஞ்சலத்தில் மூழ்கினார். பிறகு தமது பிள்ளைக்கு ஆடை உடுத்துஇரண்டு கைகளாலும் எடுத்து ஏந்திப் பலதரம் முகந்து முத்தமிட்டு, கண்ணீர் பிரவாகத்தினால் உடல் நனைய அழுது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை பலமொழி கொண்டு புகழ்ந்தார். ஹலீமாவைத் தம் சகோதரி எனக் கட்டியணைத்து, "ஹலீமாவே! இந்த முஹம்மது என் பிள்ளையல்ல; உன் பிள்ளையே" என்று சொல்லி, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஹலீமாவுடைய கையில் கொடுத்து, ஹாரிதுக்கு சொல்லவேண்டிய சொற்களையும் சொல்லி, க்ஷேமமாகப் போய் வாருங்கள் எனப் பிரயாணம் அனுப்பினார்.

ஹலீமா கஃபத்துல்லாவில் போய்த் தேவாராதனை செய்து கொண்டு பின்னர் ஊருக்குப் புறப்படுவோம் என எண்ணி, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தூக்கி அணைத்துக்கொண்டு, கஃபத்துல்லாவை நோக்கி நடந்தார். அப்போது, கஃபத்துல்லாவின் தென் கீழ்த்திசை மூலையில் இருக்கும் "ஹஜறுல் அஸ்வது" என்னும் சிறந்த கல் ஹலீமாவுக்கு எதிர் கொண்டு அழைத்தது. ஹலீமா அக்கல்லைத்தொட்டு முத்தமிட்டுக் கொண்டு, கஃபாவைப் பிரதட்சணம் செய்து வாசலில் நின்றுகொண்டு தெய்வ வணக்கம் செய்கையில், உள்ளிருந்த விக்கிரகங்களுக்கெல்லாம் முதன்மையாக குலதெய்வமாய் விளங்கும் "குபல்" என்னும் விக்கிரகம் தலைகவிழ்ந்து குப்புற விழுந்தது. உடனே மற்ற விக்கிரகங்கள் அனைத்தும் நிலத்தில் சாய்ந்து உருண்டன. இக்காட்சியை ஹலீமா கண்கள் குளிரக்கண்டு" அதிசயமடைந்து, கஃபத்துல்லாவைவிட்டு நீங்கி, தாம் கண்ட புதுமைகளை ஹாரிது இடம் சொன்னார். ஹாரிது கேட்டு "ஹலீமாவே! இந்தப் புதுமைகள் அனைத்தும் உன் கையிலிருக்கும் பிள்ளையால் நடக்கின்றன. அதனால் நாம் ஒப்பற்ற செல்வமும், கீர்த்தியும், மோட்சமும் அடைந்தோம். நம் துக்கம் அனைத்தும் ஒழிந்து போயின" என்று சொல்லி, இருவரும் முன் தாங்கள் ஏறிவந்த ஒட்டகத்தில் ஏறினார்கள். கிழடாய் உடல் வரண்டு நடக்க சக்தியின்றித் தூங்கி விழுந்துகொண்டிருந்த அந்த ஒட்டகம், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை சுமந்து கொண்டு ஹலீமா ஏறினவுடனே கொழுத்துப் பருத்துச் சிறு மலைபோன்று மிக விரைவாய் நடக்க ஆரம்பித்தது.

அப்போது, முன் ஹுனைன் நகரத்தில் இருந்து புறப்பட்டு வந்த ஆண் பெண்கள் அநேகர் இவர்களுக்கு வழித்துணையாய்க் கூடினார்கள். அனைவரும் ஒருங்குசேர்ந்து மக்கமா நகரத்தைவிட்டு வழிதொலைத்து, ஹுனைன் நகரத்தை நோக்கி நடந்தார்கள். இவர்கள் நடக்கும் மார்க்கத்தில் அங்கங்கே உள்ள மலைகள், திடல்கள், கற்கள், மரங்கள், செடிகள், கொடிகள், புற்பூண்டுகள் அனைத்தும் வழிப்போக்கர் அனைவர் செவிகளிலும் நன்றாய்க் கேட்கும் வண்ணம், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு "அஸ்ஸலாமு அலைக்க யாகைரல் பஷர்" என்று ஸலாம் சொல்லின.

இப்புதுமையைக் கண்டு மனம் அதிசயித்தவர்களாய் ஆடவர் பெண்டிர் சிறார் அனைவரும் நடந்து வரும்போது, வேனல் அதிக மானதால் தண்ணீர் தாகம் அதிகரித்து நாவுலர்ந்து உடல் வருந்தினார்கள். இலையென்பது ஒன்றுமின்றிக் கானலில் அடியுண்டு கருகி பட்ட மரங்கள் அடர்ந்து நிழல் அற்ற வனம் ஒன்று தெரிந்தது. அனைவரும் களைதீரும் வண்ணம் அந்த வனத்தில் தங்கினார்கள். ஹலிமாவும் ஒட்டகம் விட்டு இறங்கி, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மடியில் வைத்துக் கொண்டு ஒருபுறம் உட்கார்ந்து இருந்தார். அப்போது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பொருட்டால் அங்கு அடர்ந்து நின்ற பட்ட மரங்கள் அனைத்தும் தழைத்து, இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய், கனிகளால் செழித்து, பறவைகள் சப்திக்கவும், வண்டுகள் பாடவும், கனிகள் சிதறித் தேன்மழை பொழியவும், மலர்கள் சொரியவும் தலைப்பட்டு, பூங்கா பல நெருங்கின பெரும் வனம் ஆயிற்று. அருவிகளும் ஒலித்து ஓடின. இதைக்கண்ட ஜனங்கள் பிரமை கொண்டு ஆனந்தம் அடைந்து அருவியில் நீராடி, தீங்கனிபறித்துத் தின்றும், நறுமலர் கொய்து சூடியும், தண்ணீர் பருகித் தாகம் தீர்த்தும் களைதீர்ந்து சந்தோஷங் கொண்டனர். இவைகளனைத்தும் ஹலிமாவிடம் இருக்கும் பிள்ளையாலேயே நமக்குக் கிடைத்தன என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை புகழ்ந்து கொண்டாடினார்கள்.

நந்தனமாய்த் தழைத்த அந்த வனத்தில் அனைவரும் ஆடிப்பாடி இன்பம் அனுபவித்த பிற்பாடு, அங்கிருந்து புறப்பட்டு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலத்தையும், அங்குள்ள வளங்களையும் கண் குளிரக்கண்டு நடந்து, சில நாள் நடந்து ஹுனைன் நகரத்திற்கு வந்து அவரவர்கள் தம் தம் இருப்பிடம்போய் சேர்ந்தார்கள். ஹாரிதும் ஹலிமாவும் ஷைமாத் என்னும் பிள்ளையையும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் பெரும் பாக்கியமாகப் பெற்றும் தம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அன்று தொட்டு ஹாரிது உடைய வீடு செல்வம் [illegible] நாளாய், [illegible] பாக்கியம் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கத் தலைப்பட்டது.

ஹாரிது உடைய மனைவியாகிய ஹலிமா என்னும் பெண், மக்கமா நகரத்திலிருந்து பாலூட்டி வளர்க்கப் பிள்ளையொன்று கொண்டு வந்த செய்தி, ஹுனைன் நகரம் எங்கும் பிரஸ்தாபம் ஆயிற்று. ஊரில் உள்ள அநேகர் திரள்திரளாய் ஹலிமாவுடைய மனைக்கு வந்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக்கண்டு, ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து, அவர்களின் மெல்லிய பாதங்களைத் தொட்டு முத்தம் இட்டுக்கொண்டு, "இனி ஹலிமாவுக்குக் குறையொன்றுமில்லை. பாக்கியம் அனைத்தும் திரண்டு வந்துவிட்டது" என்றார்கள். பிரதிதினமும் அவ்வூர் ஜனங்கள் ஹலிமாவுடைய மனைக்கு வருவதும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கைகளில் ஏந்திப் பலவாறு புகழ்வதும், ஹலிமாவை வாழ்த்துவதும், கொண்டாடுவதுமே வழக்கமாயிற்று. ஹலிமா தம் குடும்பத்தார் அனைவரையும் அழைத்து முன் ஹுனைன் நகரத்திலிருந்து மக்கமா நகரத்துக்குப் பிரயாணமாக முடிவு செய்து இருந்தனர். அன்றிரவு, கிளை அடர்ந்த விருட்சம் ஒன்று மலர், காய், கனிகள் நிறைந்து தழைத்துத் தம்மடியில் நிற்பதாகவும், தான் அக்கனிகளைப் பறித்துத் தின்று பசிதீர்ந்ததாகவும் கனவில் கண்டுவரலாறுகளைச் சொல்லி, "நம்குலத்து முன்னோர்கள் செய்த தவப்பலனோ! நான்செய்த தவப்பேறோ! இப்பிள்ளையைப் பெற நேர்ந்தது. இப்பிள்ளையின் பொருட்டால் என் மெலிவுற்ற சரீரம் பருத்து சூல்கொண்டிருந்த கொங்கை விம்மிப் பால் சொரிந்து விளங்கப்பெற்றேன்- வறுமையின் பயம் அற்பமாவது எனக்கு இல்லை. முத்திபெறும் நன்மார்க்கமும் கிடைத்தது" என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை மிக வியந்தார். இதைக்கேட்ட குடும்பத்தார் அனைவரும் சந்தோஷம் அடைந்தார்கள்.

ஹலிமா, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு, எப்போதும் வலது கொங்கையின் பாலையே கொடுத்து வந்தார். ஒருநாள், ஹலிமா நாம் நமது சூலையாயிருந்த வலது கொங்கையின் அமுதத்தை மாத்திரம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு கொடுக்கிறோமே அன்றி, இடது கொங்கையின் அமுதத்தை ஒரு தினமாவது கொடுக்கவில்லை. பிள்ளை தாமே வலிய அருந்தவுமில்லை. இதைக் கண்டறிய வேண்டும் என்றெண்ணி, ஒரு இரவு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்கள் அமுதம் அருந்தி நித்திரை செய்கையில், ஹலிமா மெள்ள நெருங்கி இடது கொங்கையை வாயில் வைத்தார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாய் வைத்து அருந்த வேயில்லை. இதைக் கண்டு ஹலிமாவின் மனம் மிகப் புதுமையாய், ஆச்சரியம் அடைந்தார்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய பொருட்டினால், ஹாரிது உடைய இல்லம் செல்வப்பொழிவில் விசேஷித்தது. ஹாரிது ஒப்பற்ற பாக்கியவானும், ஹலிமா ஒப்பற்ற பாக்கியவதியும் ஆனார்கள். மனையில் முன்பஞ்சத்தால் மேய்ச்சல் வளமின்றி உடல் வரண்டு கிழடு தட்டி துங்கின்ற ஒட்டகம், மாடு, ஆடு, முதலானவை மிகக் கொழுமை அடைந்து பருத்து ஒன்று பத்தாய்ப் பல்கின. அதனால், அம்மனையில் வரும் விருந்தினர்களுக்குப் பால், தயிர், வெண்ணெய், நெய் இவைகளுக்கு குறையே இல்லை. ஹாரிதுவுடைய வீடு நாளுக்கு நாள் செல்வஞ் சுரந்து வளர்ந் தேறுவதற்கு முகாந்திரம், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் என, எவர் மனதுக்கும் நன்றாய்த் தெரிந்தது. அதனால், ஹுனைன் நகரத்திலுள்ளவர்களில் வறிஞர்கள், பிணியாளர்கள் அனைவரும், ஹலிமாவுடைய வீட்டுக்கு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தரிசித்துப் பாதமலர்களைத் தொட்டு முத்தமிட்டு, வறுமையும் பிணியும் தீர்ந்து சுகம் அடைவார்கள். இவ்வித மகிமை பிரஸ்தாபப் பட்டது ஹுனைன் நகரத்தில் மாத்திரம் அல்ல, அந்நிய நகரங்களிலும் பரவிற்று. ஆகையால், அந்நகரங்களிலுள்ள வறிஞர்களும், பிரயாணப்பட்டு ஹுனைன் நகரத்துக்கு வந்து, ஹலிமாவுடைய மனையில் நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தரிசிப்பதற்காகக் கூட்டம் கூட்டமாய் திரண்டு நிற்பார்கள். இவ்விதம் வரும் ஜனங் களுடைய கருத்து அற்பமாயினும் தவறாது நிறைவேறும். அதனால் ஹலிமாவுடைய மனையில் மங்களவாழ்த்தின் ஒலி என்றும் ஒலித்த வண்ணமாய் இருக்கும்.

நபிமார்களுக்கு நாயகமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய சரீரத்தில் ஈ, எறும்பு முதலிய ஜெந் துக்கள் நெருங்க மாட்டாது. எத்தனை தினம் வரையும் தண்ணீரில் குளிக்காமல் இருந்த போதிலும் அழுக்குப் பிடி

யாது. புதிய கஸ்தூரி மணம் கமழ்வது ஒரு க்ஷணப் பொழுதும் மாறாது. நாசியில் சளிநீர் அற்பமும் இருக்காது; நித்திரை செய்து எழும்பும் காலத்திலும் கண்களில் பீளை சாறாது, மலம் ஜலம் இவைகளில் நாற்றம் வீசாது. அம்மலம், ஜலம் இவ்விரண்டையும் அன்று அன்று பூமி உண்டுவிடு மன்றி, எவர் கண்களுக்கும் தோற் றாது. நிழல் காணப்படமாட்டாது. பாதங்கள் தரையில் தோயா. உடுத்தும் புடவையிலும் அழுக்குப் பிடியாது. இவையல்லாமல் இரவு தோறும் ஹாரிதும், ஹலிமாவும் நித்திரை செய்யும்போது, வானத்தில் இருந்து சந்திரன் இறங்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நித்திரை செய்யும் இடத்தில்வந்து தன் உருவத்தை மாற்றிக் கொண்டு தொட்டில் ஆட்டிக் கால்வருடி கொண்டு இருந்து, பொழுது விடியும் போது வானத்துக்குப் போய்விடும். அன்றியும், வானத்தில் இருந்து கணக் கற்ற மலக்குகள் திரள் திரளாய்க்கூடி, பூமியில் இறங்கி சூரியன் அஸ்தமித்து உதயமாகிற பரியந்தம் ஹலிமாவுடைய வீட்டை காத்து நிற்பார்கள். இதுவும் இராகாலங்கள் தோறும் வழக்கமா யிருந்தது.

இவ்வித அருங்காவலில் அல்லாஹு தஆலா நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வளர்த்தான். உலகங் கள் அனைத்திற்கும் நாயகமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இருந்துவளரும் பொருட்டினால் ஹாரிது உடைய மனையில் சம்பத்துக்கள் அனைத்தும் ஒப்பற்று விளங்கிற்று. படைக்கப்பட்ட படைப்புகள் அடங்கலும் மகிழ்ச்சி யடைந்து கொண்டாடும்படி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வளர்ந்தார்கள்.

அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் களுக்கு வயது இரண்டாயிற்று. இரண்டு வயது ஆனவுடன், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஹலிமா பால் மறப்பித்தார். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பால் குடிமறந்து, உண்ணும் பதார்த்தங்களில் இன்பமுள்ள பதார்த் தங்கள் புசித்து மனம் மகிழ்ந்து வளர்ந்து வந்தார்கள்.

நபி வளர்ச்சி.

ஆசிரிய விருத்தம்.

எக்கலை மனைத்துந் தினெறி நடப்ப
வியல்பெரு மறைநெறி நடப்பத்

துன்னிய வரத்தின் றுறைவழி நடப்பத்
துன்பமற் றின்பமே நடப்பப்

பன்னருஞ் செங்கோ லுலகெலா நடப்ப
பாரினிற் குலமுறை நடப்ப
மன்னிய ரெவருஞ் சொற்படி நடப்ப
முஹம்மது நபி நடந்தனரே,

நிலமிசை ஹாஷிம் குலம்பெயர் விளங்க
நிகரிலா நேர்வழி விளங்கக்
குலவிய நிறையும் பொறுமையும் விளங்கக்
கோதிலாப் பெரும்புகழ் விளங்க

உலகுயர் புதுமைக் காரணம் விளங்க
வுயர்தரு வேதமும் விளங்க
மலர்தரு சோதி முஹம்மது விளங்க
முஹம்மது சொல்விளங் கினவே.

விண்ணகத் தமரர் மனமகிழ் வளர
வியனுறும் வரிசைகள் வளரக்
கண்ணகத் துறைந்து கருணையும் வளரக்
கவினிறை பிறையென வளர

வெண்ணரும் புதுமைக் காரணம் வளர
விறையவன் றிருவருள் வளர
மண்ணகத் திருந்து கிளையெலாம் வளர
முஹம்மது நபிவளர்ந் தனரே.

பாரினிற் பரந்த குபிர்க்குல மரித்துப்
படர்தரு தீன்பயிர் விளக்கச்
சீருறுங் கனக மாமழை பொழியத்
திரண்டேழுஞ் செழுமுகிற் குலம்போற்

பேர்தருங் குறைஷிக் குலத்தினி லுதித்துப்
பிறங் கொளி முஹம்மது நபிக்கு
வார்பொரு முலையார் மனங்களித் துவப்ப
வருடமு மிரண்டு சென்றனவே.

வசனம்

நிலங்கள் யாவற்றிலும் தீன் மார்க்கம் நடக்க ஒழுங்குபெறு மனுநீதி முறை நடக்க, நிறைந்த தருமத்தின் துறைவழி நடக்க, துன்பமில்லாமல் இன்பமே நடக்க, சொல்ல அரிதான இராஜ செங்கோல் உலகமெல்லா நடக்க, சகல இடங்களிலுங் குல ஆசார முறைமை தவறாமல் நடக்க, அன்னியர்கள் ஒருவர் சொல்ல ஒருவர் தட்டாமல் நடக்க, அஹ்மது முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நடந்தார்கள்.

இன்னும் பூமியினிடத்தில், ஹாஷிம் குலமும் பெயரும் விளங்க, ஒப்பில்லாத நல்வழி வழங்கப் பொருந்துதலான அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடியாகிய ஆண் குணம் நான்கும், பொறுமையும் விளங்க குற்றமில்லாத பெரிய புகழ் விளங்கப் பூலோகத்திலும் வானலோகத்திலும் மிகுந்த காரணம் விளங்க, நான்கு வேதத்திலும் உயர்ந்த புர்க்கான் வேதம் விளங்க, விரிந்த பிரகாசத்தைத்தரும் முக சந்திரோதயந் துலங்க, அதனோடு, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்தின் கற்பூர வாடை கமழும் வாய்ச் சொல் விளங்கின.

இன்னும், வானலோகத்து சகல மலாயிக்கத்துகளுடைய மன மகிழ்ச்சி வளரப் பெருமையாகிய வரிசைகள் வளரக் கண்ணினிடத்திருந்து ஓயாத கிருபையும் வளர, அழகானது பூரண சந்திரனைப்போல் நாளுக்கு நாள் வளர, எண்ணத்தில் அடங்காத நூதனமான காரணங்கள் வளர, அல்லாஹு தஆலாவின் ஒப்பில்லாத திருவருள் வளரப் பூமியிடத்திலிருந்து கிளைகோத்திரங்களெல்லாம் நாள்தோறும் குறைவில்லாமல் வளர, முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வளர்ந்தார்கள்.

இன்னும், பூமியிற் பரந்த குபிர்க்குலத்தை யறுத்து, விளைவைத் தரும் தீனுல் இஸ்லாமென்னும் பயிரை விளக்க, சிறப்புபொருந்திய பொன்னீர் மழைபொழியத் திரண்டெழும்பும் செழித்த மேகக் கூட்டங்கள் போல் பேர்பெற்ற குறைஷிக் குலத்தினிற் பிறந்து ஒளி கதிரிட்டெரிக்கும் முஹம்மது நபி நயினாரவர்களுக்கு, ரவிக்கை மலிந்திருக்கும் பெண்களின் மனஞ் சந்தோஷித்து உவப்புக் கொள்ள வருஷம் இரண்டாயின.

நபிநாயகத்துக்கு வயது இரண்டாய்ப் பால் மறப்பித்த பின் ஒருதினம், ஹலிமா தம் புருஷராகிய ஹாரிதை நோக்கி, "நாயகரே! நம்பிள்ளை பால்மறந்து சிற்றடியெடுத்துச் செவ்வநடை நடப்பதால், நாம் ஒருதடவை மக்கமாநகரத்துக்குப் போய்வரவேண்டும்" என்றார். இதைக் கேட்ட ஹாரிது மனம் இணங்கி, பிரயாணத்துக்கு ஆக வேண்டிய சாதனங்களனைத்தையும் ஒழுங்குபண்ணி, தம்மனையில் நடக்க வேண்டிய காரியங்களுக்கும் தக்க ஏற்பாடுகள்செய்து, தம் மனைவியாகிய ஹலிமாவையும், தம்பிள்ளைகளில் ஒன்றையும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், ஒரு ஒட்டகத்திலேற்றித் தாமும் பிரயாணப்பட்டார். ஹாரிதும், ஹலிமாவும் ஹுனைன் நகரத்தைவிட்டுப் பல மார்க்கங்களையும் கடந்து மக்கமா நகரத்துக்கு வந்துசேர்ந்து, ஆமினாவுடையமனைக்குள் புகுந்தார்கள்.

ஹலிமாவைக் கண்டபோதே ஆமினா ஆனந்தம் அடைந்து மார்போடு அழுந்தத்தழுவி, ஹாரிதையும் ஹலிமாவையும் வியந்து புகழ்ந்து அன்புபாராட்டிக் கொண்டாடினார். பின்னர் ஹலிமா நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஆமினாவுடைய கையில் கொடுத்தார். ஆமினா தம் பிள்ளையை வாங்கி நெஞ்சோடு அணைத்துப் பல தரமும் முத்தமிட்டு, அநேக நாள்வரையும் காணாது நிறைந்திருந்த சஞ்சலம் அனைத்தும் ஒழிந்து, சந்தோஷ சாகரத்தில் மூழ்கினார். ஹலிமா வந்த செய்தியை அப்துல் முத்தலிபு கேள்விப்பட்டு, உடனே எழுந்து ஆமினா மனைக்கு வந்து ஹலிமாவையும் ஹாரிதையுங்கண்டு களித்து நன்மொழி பகர்ந்து, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தூக்கி முகந்து முத்தமிட்டு சந்தோஷம் அடைந்தார். அப்போது ஹலிமா அவரை நோக்கி, "உங்கள் பிள்ளையால் நாங்கள் அடைந்த பாக்யம் கொஞ்சம் அல்ல; எங்கள் வறுமையும் துயரமும் ஒழிந்து, க்ஷேமம் பெற்றோம். இனி, எங்களுக்குக் குறையொன்றும் இல்லை. முக்தி மார்க்கமும் கிடைத்தது" என்று புகழ்ந்து சொன்னார்கள்.

பிறகு ஹாரிதுக்கும், ஹலிமாவுக்கும் அப்துல் முத்தலிபு உடைய குடும்பத்தார் அனைவரும் இடைவிடாது விருந்துகள் கொடுத்தார்கள். இவ்வகைப்பட்ட பலநல்ல உபசாரத்துடன் மனம் களித்து மக்கமா நகரத்தில் இருக்குங் காலத்தில், எட்டு மாதங்கள்

சென்றன. பிறகு ஹலிமா, ஆமினாவையும் அப்துல் முத்தலிபையும் நோக்கி, "நான் ஹுனைன் நகரத்துக்குப்போய் வருகிறேன்; உத்தரவு கொடுங்கள்" எனக் கேட்டார். உடனே, இருவரும் மனமகிழ்ந்து விடைகொடுத்து, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை வாகனத்தில் ஏற்றி "க்ஷேமமாகப் போய்வாருங்கள்" என்று அனுப்பினார்கள். ஹாரிதும், ஹலிமாவும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் தங்கள் மற்றொரு பிள்ளையையும் அழைத்துக்கொண்டு, மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு குன்றுகள், மலைகள், காடுகள், சிற்றூர்கள், அனைத்தையும் கடந்து, நடந்து, ஹுனைன் நகரத்தை யடைந்து, தங்கள் மனையிற்போய்ச் சேர்ந்தார்கள்.

9-வது அத்தியாயம்.

இலாஞ்சனை தரித்தது

கலி விருத்தம்

கலாம்ஷரீ பதை சுரர்கள் கர்த்தர்கொடு வந்தே
சலாம் சொலி யளிக்கவத னாற்குபிரர் தங்கள்
கலாஞ் சிலை யொழுத்திடுமு ஹம்மதுர்ற சூலுக்
கிலாஞ்சனை தரித்ததை யெடுத் தினி திசைப்பாம்.

இதன் பொருள்

கலாம் ஷரீபென்னும் புர்க்கான் வேதத்தை வானவர்க்கு அரசராகிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் அல்லாஹு தஆலா இடத்திலிருந்து பெற்றுக்கொண்டு பூமியினிடத்தில் வந்து, அஸ்ஸலாமு அலைக்கும் யாறஸூலுல்லா வென்று சலாமை முற்படுத்திக் கொடுக்க, அவ்வேதத்தின் ஏவலாகிய ஜெயஉத்தாரங் கொண்டு காபிரீன்களின் கொடுமையான கொண்டாட்டங்களை யொழியச் செய்யும் நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இலாஞ்சனை என்னும் முத்திராங்கம் தரித்த சரித்திரத்தை இன்பமாக எடுத்துச் சொல்லுகிறோம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புரிசைசூழ் மக்கந்தன்னிற் போந்தவ ணிருந்தும் பின்னர்த்
திருவுறைஹுனையி னென்னும் பதியினிற் சேர்ந்தும் பாரிற்
குருசின்மா முஹம்மதென்றுங் குலமணி தமக்கு நாளின்
வருடமூன் றென்னத் தேகம் வளர்ந்தது மிரட்டிதானே.

வசனம்.

உலகம் அடங்கலுக்கும் நாயகமாகிய முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் இரண்டு வயதில் ஹுனைன் நகரத்தை விட்டு மக்கமா நகரத்துக்கு வந்தார்கள். அங்கு எட்டு மாதங்கள் வரையும் இருந்தார்கள். பிறகு மக்கமா நகரத்திலிருந்து ஹுனைன் நகரம் வந்து சேர்ந்த பின் மூன்று வயது, நிரப்பம் ஆயிற்று. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவுடைய பெருங்கருணையால், மிகச் செழிப்பும் சந்தோஷமும் அடைந்து, ஒப்பற்ற அழகுடன் வளர்ந்தார்கள். வயது நான்கு ஆயிற்று. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நான்காம் வயது நிகழும் காலத்தில், ஒரு தினம் ஹலிமாவுடைய பூரண மதிபோன்ற முகத்தை நோக்கி, இன்பம் அமைந்த மதுவாய் மலர் திறந்து, "அன்னாய், தங்கள் புத்திரர்களும் என் தமையன் மார்களும் ஆகிய அப்துல்லா, லமுறத்து என்னும் இரண்டு பிள்ளைகளும் எங்கே போய் இருக்கிறார்கள்?" என வினவினார்கள். அப்போது ஹலிமா, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அழகிய முகமலரை நோக்கி, "என் உயிரை ஒத்த மகனே! உனது தமையன்மார்களாகிய என் இருபிள்ளைகளும் இன்று காலையில் ஆடுகள் மேய்ப்பதற்காக வனத்துக்குப் போயிருக்கிறார்கள்" என்று கூறினார். இதைக்கேட்ட நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், ஆடுகள் மேய்ப்பதற்கு நாமும் போகவேண்டும் என விருப்பங்கொண்டு, ஹலிமாவை நோக்கி, "அன்னையே! நானும் ஆடுகள் மேய்க்க அங்கு போக விடைதாரும்" என்றார்கள். நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹலிமாவிடம் இச் சொல்லை ஒருதரம் மட்டும் சொல்லியிருந்து விட வில்லை. அடுத்து அடுத்துச் சொல்ல ஆரம்பித்தார்கள். இப்படி பல தரமும் அடுத்து அடுத்துச்

சொல்வதை ஹலிமா கேட்டு மனமகிழ்ந்து, நபிகள் நாயகம் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி சொன்னதாவது;

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பிள்ளைமென் கனியே செல்வம் பெறுந்தவப் பலனே யெந்த
முள்ளகத் துயிரே மாமை யோங்கிய முஹம்மதே யிங்
கள்ளிருட் பொழுது நீங்கி விடிந்தபின் தம்பிமார்க
ளுன்னுமென் மறிகண் மேய்ப்பத் துடர்ந்தனர் காட்டிலென்றார்.

வசனம்.

மிருதுவாகிய கனிபோன்ற பிள்ளையே! செல்வம் பெற வந்த தவப்பலனே! எனதுயிரே! கண்மணியான மகனே! முஹம்மதே! இன்று போகட்டும், நாளைக் காலையில் தமையன்மாருடன் ஆடுகள் மேய்க்க வனத்துக்குச் செல்லுக என்று சொன்னார்கள்.

மறுநாள் காலையில், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்களை, ஆடுகள் மேய்க்க அனுப்புவதற்காக ஹலிமா எழுந்தார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர் களுக்கு வெண்துகில் உடுத்தி, மகிமை அமைந்த சிரசில் எண்ணெய் தேய்த்து, வலது கையில் சிறுகோல் ஒன்றைக் கொடுத்து, தம் இரு பிள்ளைகளையும் நோக்கி, "பிள்ளைகளே! நீங்கள் அருமையுள்ள முஹம்மதை அழைத்துக்கொண்டு கற்கள் செறிந்த மலைக்குகைகளிலும், விருட்சம் அடர்ந்த காடுகளிலும், பலவகைச் செடிகள் சூழ்ந்த சர்ப்பங்கள் மலிந்த இடங்களிலும், தருக்களின் நிழல் இன்றிக் கானல் பரந்து தோற்றும் கட்டாந் தரைகளிலும் போகக் கூடாது. மலர்தரும் விருட்சங்கள் அடர்ந்து, பசும்புல் நிரம்பி குளிர்ந்த தடாகம் அமைந்து, பலவகைத் தீங்கனி உதிர்ந்து, வளமுள்ளதாய் விளங்கும் வசதியான இடத்திற்சென்று, ஆடுகளை ஒருபுறம் மேயவிட்டு, முஹம்மதை சூழ்ந்து நிற்கவேண்டும்" என்று கட்டளையிட்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முகந்து முத்தமிட்டு அனுப்பினார்.

ஹலிமா சொன்ன நன்மொழிகளை அப்துல்லாவும், லமுறத்தும் சிரமேற் கொண்டனர். இன்னும் அயல்மனைச் சிறுவர்கள் பின் சூழ்ந்து வர நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களை அழைத்துக்கொண்டு வனத்திற்சென்று, விளையாடுவதற்கு வசதியான இடத்தில் தங்கி, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கிளைகள் அடர்ந்த ஒரு விருட்சத்தின் நிழலில் உட்கார வைத்து, ஆடுகளை ஒருபுறம் ஒதுக்கி மேயவிட்டுக்கொண்டு பிரியா வண்ணம் நின்றனர். திரும்பி வரும் வேளையானவுடன் ஆடுகளைத்திரட்டி நீர் காட்டிக்கொண்டு அன்றயதினம் மூவரும் வீடுவந்து சேரும்போது, ஹலீமா எதிர்சென்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அணைத்து முத்தமிட்டுக் கூட்டி வந்தார். இப்படி பிரதி தினமும் ஆடு மேய்க்கப்போகும் சிறுவர்களுடன் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போய் வருவார்கள். இவர்கள்போய் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் தோறும், அங்கு ஆடுமேய்க்க வரும் மற்ற சிறு பிள்ளைகளும் திரண்டு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அடுத்து நின்று விளையாடுவார்கள் யன்றி, ஒருவராவது வேறிடம் பிரிந்து போக மாட்டார்கள்.

இப்படி நடக்கும் காலத்தில் ஒரு தினம் ஆடு மேய்க்கும் சிறுவர் அநேகர் ஒருங்கு திரண்டு, உகா என்னும் மரத்தின் நிழல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அரசராக இருத்தி, மற்ற பிள்ளைகள் ஒவ்வொருவர் ஒவ்வொரு அதிகாரிகள் என நியமித்து, அரசு செலுத்தும் பாவனையாய் விளையாடிக்கொண்டு நின்றார்கள். இவ்விதம் சிறுவர்கள் அனைவரும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிபட்டு, அடிபணிந்து ஏவல்செய்து விளையாடி நிற்கும்போது அழகில் சிறந்த உருவத்தையுடைய இரண்டு வாலிபர் பட்டாடை யுடுத்தி, பட்டம் பூண்டு, முகங்கள் முழுமதிபோல இலங்கும் வண்ணம், சிறுவர்கள் விளையாடி நிற்கும் இடத்திற்கு வந்தார்கள். அவ்விருவரில், ஒருவர் தம்கைகளில் படிக்கமும், கெண்டியையும் ஏந்தி நிற்க, மற்றொருவர் தம் வலது கையில் கூர் அமைந்த குறுந்டைவாள் ஒன்று பிடித்துக்கொண்டு நின்றார். இவர்கள் நிற்கும் விபரீதக் காட்சியைக் கண்ட சிறுவர் அனைவரும், மனம் அஞ்சித் திடுக்கிட ஆரம்பித்தார்கள். சிறுவர்கள் இவ்விதம் மனங்கலங்கி நிற்கும்போது, வானுலகத்திலிருந்து அல்லாஹு தஆலாவுடைய உத்தரவின்படி வந்த ஜிப்றயீல், மீக்காயீல் என்னும் அவ்விரு மலக்குகளும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்

களை அடுத்து, அல்லாஹு தஆலாவுடைய நபியே! எங்கள் உயிருக்கு உயிரான முஹம்மதே! என்று அழைத்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு அந்த உகாவென்னும் மரத்து அடியிற் சென்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மரத்தடியில் நிறுத்தி, ஒருவர் முன்பக்கம் மற்றொருவர் பின்பக்கமுமாக நின்றார்கள். இதைக்கண்ட சிறுவர்கள் நெஞ்சம் திடுக்கிட்டுப் பதறி, வாய் உலர்ந்து, இச்செய்கை எப்படி முடியுமோ. இவ்விருவரும் எங்கிருந்து வந்தார்களோ! முஹம்மதை என்ன தீங்கு செய்யப்போகிறார்களோ! கையிலுள்ள கருவியினால் கொலைசெய்யத் துணிவார்களோ! தங்கள் நகரத்துக்கு அழைத்துக் கொண்டு போகும் கருத்துடன் வந்தார்களோ! எனத் திகைத்து கண்ணீர் பெருக அழுதார்கள். திரும்பி ஓடுவார்கள். மீண்டும் வருவார்கள். கூச்சலிட்டு ஏங்கிப் பரிதபிப்பார்கள். பெருமூச்செறிந்து, உடல் ஒடுங்கி உயிர் சோர்ந்து விழுவார்கள்.

இவ்விதம் மனங்கலங்கிப் பரிதாப நிலையில் துயர் அடைந்து புலம்பி நின்ற சிறுவர் அனைவரும், தம்தம் மனதைத்தேற்றி ஒருங்கு கூடி நின்று, அவ்விருவரையும் நோக்கி "எங்கள் அருமையான முஹம்மது உடைய உடலைத் தீய சிந்தனையுடன் கையால் தீண்டுவதற்கு நினைத்தவர் இவ்வையகத்தில் ஒருவராவது இல்லை. இப்போது நீங்கள் இருவரும், சிந்தனையின்றி மனம் துணிந்து, அவருடைய கைகளைப்பற்றி உங்கள் வசத்தில் நிறுத்திக்கொண்டீர்கள். நீங்கள் இப்படி செய்வதற்கு முகாந்திரம் இன்னதுதான் என எங்களுக்குத் தெரியவில்லை. அதை நீங்கள் எங்களிடம் சொல்ல வேண்டும். எங்கள் முஹம்மதுடைய உடலில் ஏதும் ஒரு தீங்கு செய்யவேண்டாம். அப்படி நீங்கள் கருதுவீர்களானால், உங்கள் ஏழேழு குடியும் அழிப்படுவது மாத்திரம் அல்ல; தேவகோபமும் நீசாப்பழியும் வந்துபிடிக்கும். எங்கள் முஹம்மது உடைய அழகு அமைந்த உடலில் அற்பமாகிலும் ஒரு வடுகாணப்படுமானால், எங்கள் தாயாரின் பழியையும்அவரைப் பெற்ற ஆமினாவுடைய பழியையும் நீங்கள் இருவரும் சுமப்பீர்கள் அன்றியும், இவர்களின் குடும்பத்தாருடைய பெரும்பகையும் வந்து உங்களைச் சூழ்ந்து கொள்ளும். ஆகையால், வரப்போகும் தீங்கை எண்ணிப்பாராமல், நீங்கள் இருவரும் இப்போது செய்யத்துணிந்த கருமம் நல்லதல்ல.

முஹம்மதை விட்டு விடுங்கள்'' என்று மிகவருந்திச் சொன்னார்கள். சிறுவர் அனைவரும் இப்படி சொன்ன பிற்பாடு, ஹலிமாவுடைய மகனாராகிய அப்துல்லா என்னும் சிறு பிள்ளையை, தம்வாயைத் திறந்து கண்ணீர் சோர அழுது, அவ்விருவரையும் நோக்கி, "இதோ நீங்கள் கூர்ஆயுதத்துடன் வந்து நிற்பதைக் கவனித்தால் முஹம்மதைக் கொலைசெய்ய நினைத்தவர்கள் என்பதற்கு சந்தேகம் இல்லை. ஒருகால், நீங்கான வேறு கருமம் செய்ய நினைத்து இருந்தாலும் இருப்பீர்கள். அவ்வித கொலைத்தொழிலையாவது, நீங்கள் வேறு செய்கையையாவது நீங்கள் செய்து உங்கள் கோரிக்கையை நிறை வேற்றிக்கொள்வதை மறந்து, முஹம்மதை விட்டுவிடுங்கள். அதற்காக நான் இருக்கிறேன். முஹம்மதுக்கு பதிலாக என்னைப் பிடித்துக்கொண்டு உங்கள் கருத்தின்படி செய்யுங்கள்'' என்று பரிதபித்துக் கூறினர்.

சிறுவர்கள் அனைவரும் திரண்டுநின்று சொன்ன சொற்களையும் அப்துல்லா சொன்ன பரிதாப வசனத்தையும் அவ்விருமலக்குகளும் கேட்டு, அவைகளுக்குப் பிரதிமொழி ஒன்றும் சொல்லாமல் குறு நகை செய்துகொண்டு, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை உகாமரத்து அடியில் கிடத்தினார்கள். கிடத்தின பிறகு, ஆயுதம் கையில் வைத்து நின்ற ஜிப்றயீல், நிலத்தில் மல்லாந்து படுத்திருக்கும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி தம் கையில் பிடித்திருந்த கூர்வாளை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மார்பில் வைத்து, நான்கு புறமும் திரும்பிப்பார்த்து மிக மிருதுவாக ஊன்றிக் கீறினர். உடனே இக்காட்சியைப் பார்த்து நின்ற சிறுவர் அனைவரும், திகில்பிடித்து சிதறுண்டார்கள். பிறகு, ஜிப்ரீயில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்புக்கு நேராகக்கீறி, உள்ளிருக்கும் இருதயக் கமலத்தைப் பிளந்து, அதில் அமைந்த அசுத்தம் அனைத்தையும் அறுத்து எடுத்தார். மீக்காயீல் கையிலிருக்கும் சொர்க்கத்து ஜலத்தினால் கழுவிப் பரிசுத்தமாக்கி, ஈமான், இரக்கம், நற்சிந்தனை, நல்லறிவு விசுவாசம் முதலான மேன்மை அடங்கலையும் அதில் நிரப்பி, வடுத் தெரியாமல் பொருத்தி, மார்பிலும் தழும்புகாணமல் முன் இருந்த வண்ணம் செய்தார்கள். அதன் பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பிடரிக்குக் கீழ் இரண்டு புஜங்

களுக்கும் நடுவில், புறா முட்டையின் அளவான சிறந்த முத்திரை ஒன்று தரிப்பித்தார். இலாஞ்சனை என்னும் முத்திரையைத் தரிப்பித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உற்று நோக்கி, அவ்விருவரும் ஒருவரோடு ஒருவர் "இவ்விலாஞ்சனையைத் தரிசித்தவர்கள் சுவர்க்கபதி பெறுவார்கள். இதன் காரணத்தினால் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய நிறை ஆயிரம் மனிதர், அல்லது பதினாயிரம் மனிதர், அல்லது இலட்சம் மனிதர், அல்லது கோடானு கோடி மனிதர்களின் நிறைக்கும் அதிகமாகும். இன்னும் உலகத்தில் மனிதஜனனத்தின் ஆதிதொட்டு அந்தம்வரையும் பிறந்து அழியும் மனிதர் அனைவருடைய நிறையும் ஈடாகாது. நடுத்தீர்க்கும் காலத்தில் இவருடைய மன்றாட்டத்தில் மனிதர்கள் சுவர்க்கம் புகுவார்கள்'' என அதிசயித்துப் பேசிக்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறந்த சிரசைத்தொட்டு முத்தமிட்டு "ஹபீபுல்லாஹ்'' என்னும் திருப் பெயர் சூட்டி, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "முஹம்மதே நீர் எள்பிரமாணமாவது மனதில் பயம் வைக்கவேண்டாம். வரவர உம்மிடத்தில் அநேக அற்புதங்கள் உண்டாகும். அதனால், நீர் எண்ணிக்கையில் அடங்காத மகிமைகளைப் பெறுவீர்'' என்று புகழ்ந்து சொல்லிவிட்டு வானுலகத்திற்குச் சென்றார்கள்.

திகில்பிடித்துப் பலவழியும் சிதறுண்டு ஓடிப்போன சிறுவர்கள், உறுப்புகள் சோர்ந்து உடல் ஒடுங்கி, ஹவாஜின் நகரத்துக்குட் புகுந்து, தாங்கள் கண்ட பயங்கரமான காட்சியை விபரமாக ஒவ்வொருவர் இடத்திலும் சொன்னார்கள். அப்போது அப்துல்லாவும், லமுறத்தும், ஸ்மரணை தப்பினவர்களாய் கண்ணீர் சொரிய அழுது கொண்டு, தாயாகிய தங்கள் ஹலிமாவை நோக்கி, "அம்மா, யாரோ இரண்டு மனிதர்கள் முஹம்மதை கொலைசெய்து விட்டார்கள்'' என்று சொன்னார்கள். இச்சொல் ஹலிமாவுடைய செவிகளில் நுழைந்தபோதே, ஹலிமா ஸ்மரணை இன்றி மூர்ச்சித்து நிலத்தில் விழுந்தார். இச்செய்தியை கேட்ட ஹாரிதும் உள்ளம் கலங்கி, உணர்வு அற்று ஏங்கி, அழ ஆரம்பித்தார். மூர்ச்சித்து விழுந்த ஹலிமா, தம் அழகிய உடல் புழுதியில் புரண்டிடந்து, அழுத்துயர்பெருகிப் புலம்பி, தன் புத்திராகிய அப்துல்லாவை

வழி காட்டும்படி முன்னே நடந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தேடிக் கொண்டு வந்தார். ஹலிமா இவ்விதம், கண்ணீர்ப் பிரவாகத்தினால் உடல் முழுதும் நனைய கூந்தல் அவிழ்ந்து, தரையில் கிடக்க புலம்பிக் கொண்டு வரும் போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உகாமர நிழலில் ஒப்பற்ற வடிவுடனே நின்று வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு இருப்பதைக் கண்டு, விரைந்து தூக்கினார்கள்.

சீறாப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கண்ணினின் மணியே யெந்தன் கருத்துறு மதியே யாமா
விண்ணினிற் குறைபடாமல் விளங்கிய மதியமே யாம்
மண்ணினுக் கரசே நந்த மனைக்குறு செல்வமே யெம்
புண்ணியப் பலனே யென்னப் பூங்கொடி யெடுத் தணைத்தாள்.

வசனம்.

"என் கண்மணியான மகனே! களங்கம் இல்லாத முழு மதியே!! உலகங்களுக்கு நாயகமே!!! நான் செய்த புண்ணியப் பலனே, செல்வமே, முஹம்மதே" என்று பலவாறு புகழ்ந்து தூக்கி மார்புடன் அணைத்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உடல் எங்கும் உற்று நோக்கினார். கருவி பட்ட தழும்பு சிறிதும் காணப்படவில்லை. அதனால், ஹலிமா ஆச்சரியம் அடைந்து, நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, "முஹம்மதே! உன் அழகிய மேனியில் வடு சிறிதும் காணேனே. இங்கு நடந்த வரலாறு இன்னது என்று என்னிடம் சொல்லு" என்று கேட்டார்.

அப்போது நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், ஹலிமாவை நோக்கித் தம் அருமையான வாய்திறந்து "நாங்கள் நிழல் பரந்த இம்மரத்தடியில் விளையாடிக் கொண்டு இருக்கும்போது, யாரோ இரண்டு பேர்வந்து என்கையைப் பிடித்தார்கள். அவர்கள் என் கையைப் பிடித்ததைக் கண்டவுடன், இங்கு விளையாடி நின்ற பிள்ளைகள் அனைவரும் பிதறி ஓடினார்கள். பிறகு என்னை அவர்கள் தரையிற் கிடத்தி, ஒருவர் தம் கையிலிருந்த

வந்து எழுந்து, என் மார்பில் கருவி அழுந்திய வடு இல்லாமை கண்டு அதிசயம் அடைந்து நின்றேன். அப்போது அவ்விருவரும், உள்ளம் உவந்து என் சிரசைத் தொட்டு முத்தமிட்டு முகந்து என்னை நோக்கி "முஹம்மதே! நீர் பயப்படாதீர். உமக்கு இனி அநேக கூர்வாளை என் மார்பில் வைத்து' அழுத்தினர். இதற்குப்பின் நடந்தவை இன்னவை என நான் அறியேன். மறுபடி எனக்கு ஸ்மரணை அற்புதங்கள் உண்டாகும்; அதனால் நீர் மகிமை அடைவீர்" என்று சொல்லி ஒரு 'காரணப்பெயரும் எனக்கு வைத்தார்கள். இவை அல்லாமல், இன்னும் பற்பல வார்த்தைகளை அவ்விருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு, என்னைப் பலவிதம் புகழ்ந்து கொண்டாடினர். இதோ ஆகாயமார்க்கமாகப் போகின்றார் பாருங்கள். அவர்கள் போவதையே நான் பார்த்து நிற்கிறேன். இப்போது தந்தையும் தாயுமாகிய நீங்கள் வந்து என்னைத் தழுவக் கண்டேன்" என்று சொன்னார்கள். முன் ஹலிமா நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தேடி வரும்போது, நகரத்தில் உள்ள அநேகர் கூடவந்தார்கள். அவர்கள் அனைவரும், ஹாரிதும், ஹலிமாவும் சொன்ன வர்த்தமானம் அனைத்தையும் கேட்டு ஆச்சரியம் அடைந்து, மனம் மகிழ்ந்து நகரத்துக்குள் வந்து சேர்ந்து, ஹலிமாவுக்கும் மற்றவர்களுக்கும் நன்மொழி பகர்ந்து அனைவரையும் அவரவர் மனைக்கு அனுப்பிவிட்டு, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அழைத்துக் கொண்டும் மனையில் புகுந்தார்.

அன்று முதற் கொண்டு நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை மனையைவிட்டு வெளியில் செல்லவிட மாட்டார். 'அயல்மனையில் உள்ள சிறுவர்களுடன் இணங்கி விளையாடவும் விடார். உறவின் முறையார் வீட்டுக்கும் போக மனம் இசையார். நெருங்கியான ஒரு வார்த்தையாவது மறந்தும் பேசமாட்டார். இவ்விதம் ஹலிமா மனம் அஞ்சி, தம் உயிரைக் காக்கும் தன்மைபோல, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காத்து வளர்த்தார்.

அக்காலத்தில், ஹபஷிதேசத்தில் இருந்து அநேக நன்முனிகள் [illegible]ன் நகரத்துக்கு வந்தார்கள். அந்த நன்முனிகள் ஒரு தினம் ஹலிமாவையும், நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையும் கண்டு, ஒருவரோடு ஒருவர் "இந்தப் பிள்ளைக்கு நபி

என்னும் இலாஞ்சனை தரிக்கப்பட்டு இருப்பதாலும், உலகம் அனைத்திற்கும் நாயகம் என்னும் இலட்சணம் அமைந்து இருப்பதாலும், ஒப்பில்லாத வடிவமும் அழகும்பொருந்தி வழங்குவதாலும், இப்பிள்ளை நபி என்பதற்கு ஐயம் சிறிதும் இல்லை'' எனப் பேசிக் கொண்டார்கள்.

இவ்விதம் முடிவு செய்து கொண்ட நஸ்றானிக் குலத்தார் அனைவரும், மறு நாள் ஒருங்கு திரண்டு, ஹாரிது உடைய மனையில் வந்து, ஹலிமாவை நோக்கி ''உங்கள் மனையில் உயிரை ஒப்ப வைத்து நீங்கள் வளர்க்கும் அருமையான பிள்ளையை எங்கள் மனையில் வைத்து மிக அருமையுடன் நாங்கள் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என விருப்பங் கொண்டிருக்கிறோம். இதற்கு மனம் இணங்கி, அந்தப் பிள்ளையை எங்கள் இடம் தரவேண்டும். தந்தால் உமக்கு அளவிறந்த திரவியங்கள் நாங்கள் தருகிறோம்'' என்று கேட்டார்கள். நஸ்றானிகள் இவ்விதம் கேட்டபோது ஹலிமா அவர்களை நோக்கி ''நீங்கள் என்னிடம் அடுத்து அச்சம் இன்றி மனம் துணிந்து கேட்கும் பிள்ளை எது? சொல்லுங்கள்'' என்றார். இதைக்கேட்ட வஞ்சகர்களாகிய நஸ்றானிகள் ஹலிமாவை நோக்கி ''நாங்கள் விருப்பம் கொண்டபிள்ளை முஹம்மது'' என்றார்கள். இச்சொல் ஹலிமா உடைய செவியில் நுழைந்து, உள்ளத்தில் சென்று, கோபம் என்னும் அக்கினியை மூளச்செய்தது. உடனே ஹலிமா கடுஞ்சினம் கொண்டு நஸ்றானிகளை நோக்கி ''நஸ்றானிகளே! நீங்கள் சொல்ல வந்த மங்கள வார்த்தை இம்மட்டும்தானே நிறுத்துங்கள். உங்களுக்கு அறிவென்பது அணுவளவும்இல்லை. இச்சொல் என் குடும்பத்தாருடைய செவியில் விழுந்தால் நீங்கள் அனைவரும் கொல்லப்படுவீர்கள். வீணில் உங்கள் உயிர்களைப் பறிகொடுக்காமல், என் வீட்டை விட்டு அகன்று போங்கள்'' என்று கடூரமாகச் சொன்னார். கபட சிந்தை உடைய அந்த நஸ்றானிகள் ஹலிமாவின் கோபாக்கினிக்கு முன் நிற்க சக்தி அற்றவர்களாய் உடனே எழுந்து போய்விட்டார்கள்.

நமது காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வயது ஐந்தும் ஒருமாதமும் ஆயிற்று. பிறகு ஹலிமா, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆடுமேய்க்கப்போன இடத்தில் நிகழ்ந்த புதுமைகளையும், நஸ்றானிகள்வந்து தந்திரத்துடன் கேட்ட புதுமையையும் ஆற அமர்ந்து சிந்தித்து, அருமையான பிள்ளைக்கு ஆறும்வயது நிகழ்கின்றது, நடக்கும் காரியங்களோ அஞ்சத் தக்கவையாயிருக்கின்றன. ஆகையால், இனி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை நம்மிடம் வைத்திருப்பது ஒழுங்கு அல்ல, பெற்ற தாயிடம் சேர்த்து விடுவதே முறைமை எனத் தீர்மானம் செய்து கொண்டு இக்கருத்தைத் தம் நாயகராகிய ஹாரிது இடம் அறிவித்தார். இக்கருத்துக்கு ஹாரிதும் இசைந்தார், ஹாரிதும், ஹலிமாவும் இவர்களின் பிள்ளைகளும், வழித்துணையாகச் சிலரும் ஒன்றுகூடி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துக் கொண்டு, ஹுனைன் நகரத்தைவிட்டு மக்கமா நகரத்துக்குப் புறப்பட்டார்கள்.

இவர்கள் அனைவரும் மலை, வனம் முதலியவைகளைக் கடந்து, சிலநாள் பரியந்தம் நடந்து, ஒரு தினம் காடு அடர்ந்த ஒரு தானத்தில் இளைப்பாறுவதற்காகத் தங்கினார்கள். சற்றுநேரம் அங்கே 'தங்கி சிற்றுண்டி உண்டு தண்ணீர்பருகிக் களை தீர்ந்து புறப்படும் தருணத்தில், நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உட்கார்ந்து இருக்கும் பக்கத்தில், கை ஒன்று நீண்ட பாவனையாய் ஹலிமா உடைய கண்களுக்குத் தெரிந்தது. உடனே அருகில் இருந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கினார்; நபிநாயகம் இல்லை. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காணாமல் போனவுடனே, இவ்விபரீதத்தை அறிந்த அனைவரும், உள்ளம் திகைத்துப் பல பக்கமும் சென்று அலைந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தேடினார்கள். ஹலிமா மனம் கலங்கிக் கண்ணீர்ப் பெருக வாய் திறந்து அலறி, அழ ஆரம்பித்துப் புலம்பினார்.

சரித்திரப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

என்ன மாயமிங் கென்னென நெட்டுயிர்ப் பெறிந்து
[illegible] மென்மலர்க் கரமெலித் துதரத்தில் வைத்துத்
[illegible] பூங்குழல் விரிதரச் செவ்விதழ் துடிப்பக்
[illegible] மழையில் கலங்கினள் புலம்பினள் கதறி.

படியின்மீதினி லோடுவ டேடுவள் பதறிக்
கடிதிற் கன்முழை முட்செறி பொதும்பினுங் கவிழ்ந்து
நெடிது நோக்குவள் செடியறக் கிளறுவ ளிகரில்
வடிவு றும்மக வேயெனக் கூவுவள் வருந்தி.

வெய்ய கானிடை நீங்கவுங் காண்கிலன் வேறோர்
கையலாற் பிளைப் பிறரெடுத்தேகவுங் காணே
உய்யு மாறினி யேதென வுலைந்துட லொடுங்கி
அய்ய கோமக னேவிதி யோவென அழுதாள்.

கவச வல்லுரங் கீண்டவர் வஞ்சனைக் கருத்தோ
ஹபஷி மாநக ஞானிகண் மாயமோ வலது
புவியிற் பூதங்க ளலகைகள் செய்தொழிற் பொருனோ
வெவர்களிவ்விடர் செய்தவ ரெனமன மிடைந்தான்.

வசனம்

ஹலிமா தம் கூந்தல் அவிழ்ந்து தரையில் புரள விழுந்து புலம்பி மரச்செறிவிலும், கற்பாறைகளிலும், மலைப்பொதும்பிலும், செடிகளிலும் சென்று "மகனே முஹம்மதே" எனக் கூச்சலிட்டு அலறித்தேடினார். இவ்விதம் மனமுலைந்து உடல் வருந்தத்தேடியும் பிள்ளையைக் காணாமையால், ஹலிமா மதிமயங்கி "அந்தோ! என் கண்மணியான முஹம்மது, என்னைவிட்டு கொஞ்சம் தூரமாவது விலகிப் போகவுமில்லை! அவர் பக்கத்தில் கையொன்று நீண்டதாகத் தெரிந்தது அல்லாமல், வேறு அந்நியஸ்தர் ஒருவர் வரவும் நான் காணவில்லை. ஆனதால் என்பிள்ளை இங்கிருந்து மறைந்துபோன மாயம் என்ன! முன் ஹுனைனில் ஆடுமேய்க்கும்போது வந்த மரத்தினிழலில் கிடத்தி மார்பில் கூர்வாள் வைத்துக் கீறின இருவருடைய வஞ்சனையோ, அல்லது நம்மிடம் வந்து கேட்ட ஞானிகளுடைய மாந்திரீகமோ ஒருகால் இவ்வனத்தில் சஞ்சரிக்கும் பூதகணங்களின் செய்கையோ! இத்தீங்கு செய்தவர்கள் யாரோ! என் மகனே! முஹம்மதே!" என்று புலம்பிப் பரிதபித்து அழுதார். அக்கினியில் இட்ட மாந்தளிர்போல மேனிவாடி உள்ளம்பதறும், ஹலிமாவின் பரிதாபத்தைக்கண்ட வழிப்போக்கர் அனைவரும் வந்து கூடி, நடந்த சங்கதியை விசாரித்து ஆச்சரியமுற்று, ஹலிமாவை நோக்கி "ஹலிமாவே, உன் பிள்ளையை இவ்வனத்தில் உன்னைவிட்டுப் பிரித்த கடவுள் மறுபடியும் கூட்டிவைக்கவும் வல்லவர். ஆகையால்

நீ மனம் தெளிந்து ஆறி யமர்ந்து இரு" எனத் தேற்றினார்கள். இவர்களின் தேற்றுதலால் ஹலிமாவின் சஞ்சல மணுவளவாகிலும் தணியவில்லை. அப்போது, அங்கு நிறந்த மேனியில் நரம்பு அனைத்தும் எழுந்து, உரோமங்கள் வெண்பஞ்சுபோல நரைத்துக் கூனிய விருதாப்பியன் ஒருவன், தன்கையில் கோல் ஒன்று ஊன்றிக் குடையும் பிடித்துக்கொண்டு, தலைநடுக்கமுற்று தளர்ந்த நடையுடன் வந்து நின்று ஹலிமாவை நோக்கி, "நீ இவ்விதம் துயரடையும் காரணம் என்ன" என வினவினான். ஹலிமா அக்கிழவனை நோக்கி "என் அருமை மகனாகிய முஹம்மதை இவ்வனத்தில் இழந்து விட்டேன்" என்று சொன்னார். அப்போது அவன், ஹலிமாவை நோக்கி "மகளே! நீ மனம் வருந்தாதே, உன்மகனாகிய முஹம்மதை உன்னிடம் சேர்க்கத் தக்க தெய்வம் ஒன்று இங்கு உண்டு. அத்தெய்வத்தினுடைய சன்னதியில் நாம் சென்று முறையிடுவோம் வா" என்று சொல்ல ஹலிமா கேட்டு மனமிசைந்து அவனுடன் பின் சென்றார்.

கிழவனும் ஹலிமாவும், அங்கே சற்று தூரத்தில் நடுவனத்தில் இருக்கும் கோவில் வாசலில் போனார்கள். அப்போது கிழவன் ஹலிமாவுக்காக அக்கோவிலிலிருக்கும் சுவாமி சந்நிதியில் நின்றுகொண்டு, மிக அஞ்சி, வாய்புதைத்து ஒதுங்கி, "ஒப்பில்லாத முதல்வனே, ஆதியே, நீ இப்போது நான் கேட்கும் வரத்தை அனுக்கிரகம் செய்ய வேண்டும். அந்த வரமாவது:-இந்தப் பெண் மிக எளியவள், இவளுடைய அழகில் சிறந்த முஹம்மது என்னும் பிள்ளை இவ்வனத்தில் வரும் வழியில் காணாமல் போய்விட்டது. அப்பிள்ளையைக் கூட்டி விட வேண்டும். இதுதான் நான்கேட்கும் வரம்" என்று சொல்லித் தெண்டனிட்டான்.

முஹம்மது என்னும் ஒப்பற்ற திருநாமம் அங்கிருந்த விக்கிரகத்தின் செவியில் விழுந்த மாத்திரத்தில், அது உள்ளம் கலங்கி உடல் நடுங்கி "முஹம்மது என்னும் அபிதானத்தை நீ உன் நாவினால் உச்சரித்தபடியால், உன் பாதமே எனக்குக் கதியன்றி வேறில்லை" என்பதாகத் தலைகீழா யுருண்டு, அக்கிழவனுடைய பாதத்தில் வந்து விழுந்து, பிரதி தெண்டனிட்டது. இக்காட்சியை ஹலிமா கண்டு கலங்கி "அப்பா முதியவரே, எனக்காக நீர் தெய்வாராதனை செய்த இத்தெய்வம் உம்மிடம் ஈஆராதனை செய்ததும் போதும், இதுமிக

விபரீதம்! நீர்போகும் இடத்திற்குப் போ" என்றார். இதைக் கேட்ட அந்த வயோதிகன் "மகளே! இக்காவில் உன்மகன் பெயர் கேட்கும் தெய்வமடங்கலும் தலைகீழாய் உருள்கின்றன. இவ்விபரீதத்தைக் கவனித்தால், உன் மகனுக்கு வேறேதொரு தெய்வமிருக்கின்றது. அந்த தெய்வத்தினிடம் நீ முறையிடு. உன் மகனைக் கூட்டுவிக்கும்" என்று ஹலிமா இடம்சொல்லிவிட்டுத் தான் செல்லும் மார்க்கத்தைத் தொடர்ந்து போய் விட்டான். பிறகு ஹலிமா, அங்கிருந்து எழுந்து, தம் இருகைகளையும் சிரசின்மேல் வைத்துக் கண்ணீர் சோனைமாரி போல சொரியும்படி அழுதுகொண்டு, ஹாரிதும் மற்றவர்களும் தம்மைச் சூழ்ந்துவர, நான்கு புறமும் கண்பரப்பிப் பார்த்த வண்ணமாய் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் தேடிக் கொண்டு நடந்து, மக்கமாநகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

நடுக்காட்டில் பிள்ளையை இழந்துவிட்டு மனக்கலக்கம் உற்று மக்கமா நகரம் சேர்ந்த ஹலிமா, நேரே ஆமினாவுடைய வீட்டுக்குப் போக மனமின்றி, அப்துல் முத்தலிபு இடம் போய், வனத்தில் நிகழ்ந்தவரலாறு அனைத்தையும் ஆதியோடந்தமாகச் சொல்லி அழுதார். நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காணமற் போனசெய்தி அப்துல் முத்தலிபு உடைய செவிகளில் நுழையவே, அவர் மனம் தீயிலிட்ட மெழுகையொத்து உருகி, உடல் நடுங்கிப் பரதவித்து அழுதார். அப்துல் முத்தலிபு முகமலர் வாடி உள்ளம் உருகி அழும் குரல்கேட்ட அவர்குடும்பத்தார் அனைவரும் வந்து அடுத்து, நடந்த வர்த்தமானத்தை அறிந்து கொண்டு, அப்துல் முத்தலிபை நோக்கி "எங்கள் குல சிரேஷ்டரே! நீர் சஞ்சலமொழிந்து இரு. நம் குலக்கொழுந்தான முஹம்மதை இப்போதே நாங்கள் சென்று, மலை வனம் முதலிய இடங்கள் எங்கும் துருவி தேடிக்கொண்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டுப் பல பல மார்க்கமாய் புறப்பட்டார்கள்.

புறப்பட்டவர்கள் அநேக இடங்களிற்போய்ச் சுற்றித் திரிந்து தேடினார்கள். எங்கே தேடினும் என்ன? அல்லாஹு தஆலா மறைத்த பொருளை அவன் வெளிப்படுத்தினால் அன்றி கண்டுபிடிக்க மனிதர் எம்மாத்திரம்? முடிவில் அவர்கள் எடுத்த கருமம் பலிக்காமல், பட்ட பிரயாசை முற்றும் வியர்த்தமாய், மீண்டுவந்து, அப்துல் முத்தலிபை நோக்கிப் பிள்ளையைக் கண்டுபிடிப்பது மிக அருமையென்று சொல்லி விட்டார்கள்.

பிறகு, அப்துல் முத்தலிபு சஞ்சலம் நீங்காமல் மனையைவிட்டு எழுந்து, கஃபத்துல்லாவில் வந்து பிரதட்சணஞ்செய்து சுவாமியைத் துதித்து, தம் மனத்துயரை முறையிட்டு முன்வாசலில் நின்றார். இவர் இவ்விதம் நிற்கும் அந்நேரத்தில் ஆகாயத்தில் ஒரு சப்தம் "முஹம்மது, கஃபத்துல்லாவின் தென்மேற்குப் புறமுள்ள ஓடைக் கரையின் வாழைமர நிழலில் இருக்கிறார்" என்று தொனித்தது. இந்த அசரீரியான தொனியை அப்துல் முத்தலிபு கேட்டார். இன்னும் சிலர் தம்மை சூழ்ந்துவர மேற்படி இடத்திற்சென்று நோக்கினார். அந்தத் தொனியின் பிரகாரமே, நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழைமர நிழலில் களங்கமில்லாத முழுமதி போன்று பிரகாசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இருப்பதைக் கண்ட அப்துல் முத்தலிபு ஆனந்தமடைந்து, "என் மகன் அப்துல்லாவின் இருகண்மணியாயும், என் உயிருக்கு உயிராயும், எங்கள்குலக்கொழுந்தாயும் வந்த முஹம்மதே!" என்று வியந்து அக் கிநேகஞ்சோடு அணைத்துக் கொண்டு வந்து, நடந்த வரலாறுகளை ஆமினா இடம் சொல்லிப் பிள்ளையைக் கொடுத்தார். ஆமினா பிள்ளையை வாங்கி முகந்து முத்தமிட்டு, மனத்துயர் ஒழிந்து சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கினார்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அகப்பட்ட அற்புதமான செய்தியை ஹலிமா கேட்டு, ஹாரிதும் தம்பிள்ளைகளும் சூழவர, ஆமினாவுடைய மனைக்கு வந்தார். வந்தவுடன் ஆமினாவும் ஹலிமாவும் ஒருவரோடு ஒருவர் அணைத்துத் தழுவி, இன்பமடைந்தார்கள்.

இப்படி சிலநாள் வரை ஹலிமா ஆமினாவுடன் இருந்து பின்னர், தம் நகரத்துக்குப் போக வேண்டுமென்று எண்ணிக்கொண்டு, அப்துல் முத்தலிபு, ஆமினா, மற்ற குடும்பத்தாரிடம் எல்லாம் உத்தரவு பெற்றுக்கொண்டு, நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைத் தூக்கிப்பலதரமும் முத்தமிட்டு, ஆமினா இடம் ஒப்புவித்துவிட்டு, மக்கமா நகரத்தைவிட்டுப் புறப்பட்டு ஹலிமா, ஹாரிது மக்கள் சகிதமாய், மலை வன முதலிய வழிகளைக் கடந்து தம்முடைய நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

10-வது அத்தியாயம்.

புனல் விளையாட்டு.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

முனமிறை யொளியிலோர் முத்தமாகியெக்
கனதியு நிறைந்துறுங் களபமெய் நபி
யினமுறைச் சிறுவரோ டேகி யேதிலரப்
புனல்விளையாடிடும் புதுமை யோதுவாம்.

இதன் பொருள்.

பூர்வீகத்தில் அல்லாஹு தஆலா உடைய ஒளியில் நின்றும் ஒரு முத்துப் பிரமாணம் ஒளிஉருவாகி, எந்தெந்தப் பெருமையும் நிறைந்து தோற்றி, களபகஸ்தூரி வாசனை மாறாத சரீர சோதி விளங்க, நமக்கெல்லாம் நபியாக வந்த முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தங்களின் உறவுமுறைச் சிறுவர்களோடு கூடித் தடாகத்திற்போய் நீராடிவரும் காரணத்தைச் சொல்லுகின்றோம்.

சீறாப் புராணம்.

கலி விருத்தம்.

அலத்தக மலர்ப்பதத் தாமினு வெழிற
கிலைத்தடப் புயமுஹம்மது மெய்ச்சீர்பெறக்
கலைத்தட மதியென வளர்க்கண்டுறு
நலத்தரு கண்களித்திருக்கு நாளினில்.

வசனம்.

காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஆமினா என்னும் தம் தாயாரிடமிருந்து, குறையொன்றுமில்லாமல் குடும்பத்தார் அனைவரும் கொண்டாடும்படி வளருங் காலத்தில், ஆமினா மதீனமா நகரத்திலிருந்த தம் பந்துக்களைக் காண விரும்பி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துக்கொண்டு, தனியே புறப்பட்டு மதீனமா நகரம்போய்ச் சேர்ந்தார். ஆமினா மதீனமாநகரம் சேர்ந்த போது, அங்கு இருக்கும் குடிகளில் ஆமினாவுடைய பெரிய தந்தையின் புத்திரர்களும் சிறியதந்தையின் சந்ததிகளும், மற்ற இனையார்

களும், ஆமினாவை அதிக அன்புடன் உபசரித்தார்கள். ஆமினாவின் பிள்ளையாகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அன்பு பாராட்டி உவந்தார்கள். இவ்வித அழகில் சிறந்த பிள்ளை யொன்றை ஆமினா பெற்றதற்காக மனமகிழ்ச்சி கொள்ளாதவர்கள் அக்குடும்பத்தில் ஒருவருமில்லை. அனைவரும் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உயிரைப்போல் பாதுகாத்து வந்தார்கள்.

இவ்விதம் இருலோக ரக்ஷகர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தம் தாயின் குடும்பத்தில் அளவற்ற அன்பும் ஆதரவும் அடைந்து வளருங்காலத்தில், ஒருநாள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவ்வூரிலுள்ள சிறுவர்களுடன் கூடிக்கொண்டு நீராடுவதற்காக ஒருதடாகக் கரைக்குச் சென்றார்கள். அந்தத் தடாகம், நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நீராடுவதற்காக சுவர்க்கத்திலிருந்து இறங்கினது போல ஒப்பற்று விளங்கிற்று. அதில், குங்குமம், சந்தனம், சண்பகம் முதலிய விருட்சங்கள் நான்கு பக்கமும் சூழ்ந்துநிற்க, கரைகளில் வலம்புரிசங்குகள் ஈன்ற முத்துகள் நட்சத்திரங்களைப்போலப் பிரகாசிக்க, தாமரை முதலான நீர்ப்பூக்களால் அலங்கார மமைந்து கண்களுக்கு இனிமையாய்த் தோற்றும் அந்த தடாகத்தில், நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களுடன் வந்த சிறுவர்களும் இறங்கி நீராடினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீராடும்போது, உலகம் அனைத்திற்கும் நாயகமான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் நம்மிடம்வந்து நீராடினார்கள் என்னும் ஆனந்தத்தினால், அந்தத் தடாகம், தன் கைகளை விரித்து மகிழ்வது போலத் தாமரைகள் மலர்ந்தன; அதன் சரீரத்தின் புளகக்குறிபோல மற்ற மலர்கள் ஒலித்தன: வண்டுகள் இசைபாடின. அன்றியும் கரையில் அடர்ந்த விருட்சங்கள் அனைத்தும் சுவர்க்கத்திலிருந்து வானவர்கள் பொன்மழை பொழிவதுபோல மலர்களைச் சொரிந்தன. இவ்வித அலங்காரத்துடன் நபிநாயகம் சிறுவர்களோடு நீராடிக் கரையை யடுத்து, வஸ்திரம் உடுத்தி அங்கு தங்கினார்கள். அப்போது மதீனத்திலிருக்கும் யஹூதிகள் அநேகர் அங்கு வந்து, நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக்கண்டு அதிசயமடைந்து, இப்பிள்ளை

யின் உடல் ஒளிமயமாய் இலங்குவதாலும், முகம் ஒப்பற்று விளங்குவதாலும், கைகள் கணைக்கால் வரையும் நீண்டிருப்பதாலும், இடது யின்கீழ் முத்திரையொன்று பிரகாசிப்பதாலும், பாதங்கள் தரையில் தோயாமையாலும், நிழல்தோன்றாமையாலும், முன்வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் நபிஒருவர் பிறப்பார் என்று சொல்லப்பட்டது இந்தப் பிள்ளையே யாம் என்று தீர்மானித்தார்கள். இவ்விதம் தீர்மானம் செய்த யஹூதிகள் இச்செய்தியை ஒவ்வொருவர் இடத்திலும் சொல்லி ஊர்எங்கும் பரப்பினார்கள். அதனால் மதீனமா நகரம் எங்கும் பிரஸ்தாபமாயிற்று. எவர் வாயிலும் பிறக்கும் இதுவே சொல் அல்லாமல் வேறு சொல்லில்லை. இவ்விதப் பிரஸ்தாபத்தை ஆமினாவுடைய குடும்பத்தார்கள் கேட்டு அஞ்சினார்கள். ஏனென்றால், பகைவர் மிக உண்டாய், அதனால் பிள்ளைக்குத் தீங்கு வந்தாலும் வரும் என்னும் எண்ணத்தினாலேயே அவர்கள் அஞ்சும்படி நேர்ந்தது.

பிறகு காத்திமுல் முர்ஸலீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடாகக்கரையை நீங்கி, மனைக்கு வந்தார்கள். அப்போது, அம்மனையிலுள்ள ஆண் பெண் அனைவரும், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டு மனமிரங்கி, இந்த மதீனமா நகரத்திலிருக்கும் யஹூதி முதலான பாதகர்கள் இந்தப்பிள்ளையை நபி எனக் குறிப்பிட்டார்களே, ஆகையால், இனி இப்பிள்ளை இவ்வூரில் இருந்தால் ஏதும் தீங்கு வந்து சம்பவிக்கும் என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். பிற்பாடு, ஆமினாவுடைய தமையன், தம்பி முதலான பந்துக்களும், குடும்பத்துப் பெண்களும் ஒருங்கு சேர்ந்து ஆமினாவை நோக்கி, “இவ்வூரில் நம்பிள்ளைக்குப் பகைவர் அனேகர் உண்டாய் இருக்கிறார்கள்; ஆகையால் நீங்கள் இங்கு இருப்பது எங்கள் மனதுக்கு சம்மதமாக இல்லை; நீங்கள் பிள்ளையுடன் மக்கமா நகரத்துக்குப் போங்கள்” எனத் தம் கருத்தைத் தெரிவித்தார்கள். இதைக் கேட்ட ஆமினா உள்ளம் புழுங்கி பதில் வார்த்தை யொன்றும் சொல்லமாட்டாமல், நபிநாயகத்தை அழைத்துக் கொண்டு மக்கமா நகரந்தனைப் புறப்பட்டார்கள்.

மதீனமா நகரத்திலிருந்து பிரயாணமான ஆமினாவும், நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அநேக

இடங்களை யெல்லாம் கடந்த பின்னர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தந்தையும் தம் நாயகருமாகிய அப்துல்லா திருமரணம் அடைந்த அபுவா என்னும் சிற்றூரில் வந்து தங்கினார்கள். அந்த அபுவா என்னும் தலத்தில் வந்து சேர்ந்த போதே, ஆமினாவின் ஜீவிய காலமுடிவு சமீபமானது. ஆனதால் ஆமினாவுக்கு குளிர்சுரம் கண்டு இரண்டொரு தினத்தில் தனியே அகதியாய் மவுத்தானார்கள். ஆமினா மரணம் அடையும் போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வயது ஆறுவருஷமும் ஒருமாதமும் ஆகும். ஆமினாவுக்கு வயது இருபது. தாயார் பரலோகம் அடைந்தவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தமக்கு அங்கு உபகாரி ஒருவருமில்லாமையால் மனம் கலங்கி, உடல் பதறிக் கண்ணீர் சொரிந்து அழுதார்கள். இதை அவ்வூரார்கள் அறிந்து வந்து கூடி நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தேறுதல் சொல்லி, துக்கத்தை மாற்றி ஆமினாவை மதாசாரப்படி அடக்கம் செய்தார்கள். பிற்பாடு அவ்வூர்தலைவர்கள் ஒன்று கூடி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தம்வசம் வைத்துக்கொண்டு, ஆமினா மவுத்தான சங்கதியையும் அவர் பிள்ளையின் ஸ்திதியையும் குறித்து ஒரு கடிதம் எழுதி மக்கமா நகரத்துக்கு அனுப்பினார்கள். அக்கடிதம் அப்துல் முத்தலிபுக்கு எட்டியது. அவர் வாசித்து, ஆமினாவின் தேகவியோகத்தை அறிந்து சஞ்சலமடைந்து, தம்குடும்பத்தில் உள்ள சில பேர்களை யழைத்து, “ஆமினா அபுவா என்னும் இடத்தில் மவுத்தானார். முஹம்மது அகதியாய் இருப்பதால் நீங்கள் அங்கு விரைந்து சென்று, முஹம்மதை அழைத்து வாருங்கள்” என்று கட்டளை பண்ணினார். அப்துல்முத்தலிபு செய்த உத்தரவின் பிரகாரம் சிலர் புறப்பட்டு, அபுவா என்னும் இடம் சேர்ந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்கும் ஜாகை தேடிவந்து நபிநாயகத்தைக்கண்டு, துயரத்தைத் தணித்து, அங்கு உள்ளவர்களிடம் விடைபெற்று நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துக் கொண்டு, அபுவாவை விட்டுநீங்கி மக்கமாநகரத்தை வந்தடைந்து, அப்துல் முத்தலிபு இடம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒப்புவித்தார்கள். அப்துல் முத்தலிபு உடனே நபிநாயகத்தைக் கட்டித்தழுவி

தாயார் மவுத்தான சஞ்சலத்தை மாற்றி, தன் அருகில் வைத்து அருமையுடன் அன்பும் ஆதரவும் பெருக வளர்த்தார்கள்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தந்தையுமின்றி தாயுமின்றி தம்பாட்டனாராகிய அப்துல் முத்தலிபு இடமிருந்து வளரும் காலத்தில் ஏழு வயது நிரப்பம் ஆயிற்று. அக்காலத்தில் மக்கமாநகரத்தார், மழையின்றிப் பஞ்சம் உண்டாகுமோ என்று கலங்கநேரிட்டது. மழைத் துளி ஒன்றும் விழாமல் பூமியில் உள்ள ஏரி, குளம், துறவு முதலானவை வறண்டு, பசும்புல்லின் தலையை காண்பது மிக அரிதாய், குடிகள் துன்பம் அடைந்தபோது, ஒருதினம் அப்துல் முத்தலிபு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துக்கொண்டு ஊரைநீங்கி, ஒரு கற்பாறையின்மேல் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இருத்தி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரு கரங்களையும் எடுத்து ஏந்தச்செய்து, அவ்விருகரங்களையும் தம் இரண்டு கைகளால் தாங்கிக்கொண்டு மழை இறக்கும்படி அல்லாஹு தஆலா இடம் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை துஆ கேட்கச் சொல்லி தாமும் மன்றாடினார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துஆ இரந்ததைக் கொண்டு உடனே மழை பெய்யும்படி அல்லாஹு தஆலா கிருபை செய்தான். ஆகாயம் எங்கும் மேகங்கள் நெருங்கி சோனாமாரி பொழிந்தது. அப்துல் முத்தலிபு ஆனந்தம் அடைந்து இம்மழை வருஷித்தது முஹம்மதுடைய பொருட்டால் அன்றி வேறல்ல என்று ஊரார் அனைவருக்கும் சொல்லி மனம் மகிழ்ந்து இருந்தார்.

அப்போது, ஹபஷி இராஜ்ஜியத்தின் சேனையை அறபிகள் முறியடித்து வெற்றிபெற்றார்கள் என்ற செய்தி மக்கமாநகரத்துக்கு வந்தது. அறபிகள் இவ்வித வெற்றிபெற்றதும் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டினாலே தானென்று யாவரும் நம்பினார்கள்.

பிறகு காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எட்டு வயதும் இரண்டு மாதமும் ஆனபோது, அப்துல் முத்தலிபு வபாத்தானார். அப்துல் முத்தலிபு வபாத்தான உடன், சடங்குகள் முழுதும் செய்து

அவரை அடக்கம் செய்துவிட்டு, இனி முஹம்மதை வளர்ப்பது யார் என்று உறன்முறையார் கூடிப் பேசினார்கள். அப்போது, அப்துல் முத்தலிபு உடைய மூத்த குமாரரும் அப்துல்லாவின் தமையனும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பெரிய தந்தையுமாகிய அபுத்தாலிபு அவர்கள், அக்கூட்டத்தில் எழுந்து நின்று, முஹம்மதைப் போஷிக்கும் பரிபாலகன் இனி நானே யன்றி வேறு ஒருவரும் இல்லை என்று சொல்லி, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அணைத்து அழைத்துக்கொண்டு தம்மனைக்குச் சென்றார்.

11-வது அத்தியாயம்.

புகைருவை கண்டது

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பகையுறு தெவ்வையும் பாதுகாத்திட
நகையுறு துலகுறு நன்முஹம்மதைத்
தகையுறு வினைசுருனி தங்குலம்
புகையுறு கண்டிடும் புதுமையோதுவாம்.

(இ-ள்.) பகை, பொறாமை முதலிய மற்றெதைக் கெடுதலும் சற்றுமில்லாது, எவ்வுயிர்களையும் பாதுகாத்திட, யாதாமொரு இழிவுமில்லாமல் உலகத்தில் வந்த நம் நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தகுதியில்லாத வினைஞர்களான நஸ்றானிக் குலத்தார்கட் கெல்லாம் குருவாகிய புகைரு வென்னும் பெயரையுடைய முதியவன் கண்ட அதிசயத்தைச் சொல்லுகின்றோம்.

கலிநிலைத்துறை

மலையெ னத்திரட் புயத்தபி தாலிபு மனைமி
லலைக டற்புடை வருமுழு மணியற மதலை
நிலைத ரித்தவெண் கதிர்மதி நிகரென வளர
வுலகில் செல்வமும் வளர்ந்தன வொன்றுபற் றெனவே.

வசனம்

இருலோக ரக்ஷகர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது பெரிய தந்தையாகிய அபுத்தாலிபு

உடைய மனையில் இருந்து, குறை ஏதும் இன்றி வளர்ந்து வந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருந்து வளரும் பொருட்டால் அபுத்தாலிபுஉடைய மனையின் வாழ்க்கை நாளுக்குநாள் வளர்ந்தது. அவர் மனையில் உள்ள ஒட்டகம், மாடு, ஆடு முதலியவை விருத்தியாகி ஒன்று பத்தாய் மல்கின. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம் மனையில் அடிவைத்த அன்றுதொட்டுச் செல்வமும் கூடவே குடிபுகுந்தது. அதனால், அபுதாலிபுக்கு முன்னிருந்த கௌரவத்திலும் பலமடங்கான கௌரவ மேற்பட்டது. இவ்வித மேன்மை அனைத்தும் இந்த முஹம்மதின் பொருட்டாலேயே நாம் அடைந்தோம் என அபுதாலிபு மனமகிழ்ச்சியோடு பொங்கியிருந்தார்.

இப்படி இருக்கும் காலத்தில், அபுத்தாலிபு ஷாம் இராஜ்ஜியம் சென்று வர்த்தகம் செய்து வரவேண்டும் எனப் பிரியங்கொண்டு, அதற்கு ஆகுமான கருமங்கள் அனைத்தையும் ஒழுங்கு படுத்தி, ஷாமுக்கு ஏற்ற வர்த்தக சரக்குகள் அடங்கலையும் சேகரித்து ஒரு தானத்தில் சேர்த்து வைத்துவிட்டு, தாம் புறப்படுவதற்காகத் தம் மனைவியிடத்தில் தெரிவித்தார். ஷாம் இராஜ்ஜியத்துக்குப் புறப்படும் சமாசாரம், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செவிகளில் விழுந்தபோது மனங்கலங்கி, அபுத்தாலிபை நோக்கி "என் தந்தையே, நானும் தங்கள் கூட வருவேன்; என்னை அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்று சொன்னார்கள். இவ்விதம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன மொழியை அபுதாலிபு கேட்டு, நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "மகனே, மிகதூரத் தலங்களை யெல்லாம் கடந்து பிரயாணப்பட்டு அந்நிய தேசங்களுக்குப் போவதும், அங்கிருந்து கஷ்டப்பட்டு திரும்பி வருவதும் எளிதல்ல. இங்கிருந்தும் ஷாம் இராஜ்ஜியத்துக்குச் செல்லும் மார்க்கம் மிகக் கஷ்டமானது; கூர் அமைந்த பருக்கைக் கற்களும், முள்களும் செறிந்து, கானல் பரந்த பாலை வனம் உண்டு. நன்கு காதவழி பரியந்தம் தேடி அலைந்தாலும் ஒரு சிறங்கை நீராவது கிடைப்பது அரிது. அங்கே செல்லும் பிராணிகள் வருந்தும் தன்மை அளவற்றது. ஆகையால் இவ்வித நிர்மானுஷியமான வனாந்தர மார்க்கமாய், நானும் வருவேன் என

நீர் சொல்லுவது எனக்கு சம்மதம் அல்ல. ஆகையால் நீ வர வேண்டாம்" என்றார். இதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டு மனத்துயர் பெருகிக் கண்ணீர் விட்டு அழுதார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழுவதை அபுத்தாலிபு கண்டு "மகனே, ஏதோ உன் மனம் விரும்புகின்றது. என் வார்த்தையும் உனக்கு ஏற்கவில்லை. ஆனதால் கூடவா" என்று சொல்லி, அழுகையை மாற்றிப் பிரயாணப்பட்டார். அபுதாலிபுவுடன் அவர் குடும்பத்தார் அநேகர் புறப்பட்டார்கள். நபிகள்திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூட, அபூபக்கர் என்னும் சிறுவரையும் தோழராக்கி அழைத்துக்கொண்டு, மக்கமா நகரம்விட்டு அனைவரும் பிரயாணப்பட்டார்கள். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வயது ஒன்பது ஆயிற்று.

அபுத்தாலிபும், காத்திமுல் முர்ஸலீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்கரும், இன்னும் குடும்பத்தார்களும் சேர்ந்து மலை, குன்று, வனம், வனாந்தரம் முதலான வழிகளையெல்லாம் தொலைத்துப் பல நாள் வரையும் நடந்து, வளம் பொருந்திய புஸ்றா என்னும் நகரம் போய்ச் சேர்ந்தார்கள். அன்று சூரியன் அஸ்தமித்தது. அபுத்தாலிபு அன்றிரவு ஒரு ஜாகையை நியமனம் செய்துகொண்டு, கூடவந்தவர்களுடன் அந்த ஜாகையில் தங்கினார். அன்று இரவு கழிந்து சூரியன் உதயமான பிறகு, அவ்வூரில் உள்ள நஸ்றானிகளுக்கு ஆசிரியனும் முன்னுள்ள மூன்று வேதங்களையும் ஆகம சாஸ்திரங்களையும் முற்றுணர்ந்த பண்டிதனும் ஆகிய புஹைறா என்னும் பாதிரி அங்கு வந்து, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டான்.

சீறாப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நிலையு ருவுறு மெனும்பகுத் தறிவினா னாளும்
வலையு றுகல் முனிகள் குருக்களின் மதியோன்
புலையு றுவென்னும் பெயரின னெத்திசைப் புறத்தும்
பலையு றுதசெம் மலர்முக முஹம்மதைப் பார்த்தான்.

வசனம்

தவத்தில் சிறந்த புகைரு என்னும் பண்டித சிகாமணி நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சரீர லட்சணத்தையும், பிடரியில் இலங்கும் முத்திரையையும், கரங்கள் நீண்டு விளங்குவதையும், பாதங்கள் தரையில் தோயாததையும், நிழல் இல்லாததையும், உடலில் மாசு அணுகாததையும், மற்றும் உள்ள குறிப்புகள் அடங்கலையும் உற்று நோக்கி, "நபி ஒருவர் பிறப்பார் என்று நம்முன்னோர்கள் சொன்ன சொல்லும், நாம் அடிக்கடி கண்ட கனவும் வீணாய்ப் போகவில்லை. முன் உள்ள வேதங்களில், நபி ஒருவர் பிறப்பார். அவர் இலட்சணங்கள் இன்னவை யெனக் குறிப்பிடப்பட்டவை அனைத்தும் இவரிடத்திலேயே விளங்குகின்றன. ஆகையால், அந்த நபி இவரேயன்றிவேறில்லை" எனத் தன் மனதுக்குள் ஆராய்ந்து அறிந்து, அடிக்கடி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிப்பாகப் பார்த்து உள்ளம் பூரித்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கினவனாகி, அபுத்தாலிபை அடுத்து உபசார வசனங்கள் சிலவற்றைப் பேசி, அவரைத் தனது அறச்சாலைக்கு அழைத்துக்கொண்டு போய், அங்குள்ள ஒரு ஆசனத்தில் இருத்தித் தானும் அருகில் உட்கார்ந்து கொண்டு, அபுத்தாலிபை நோக்கி, "உம்முடைய ஊர் எது? குடும்பத்தின் பெயரென்ன? உமது பெயரன்ன? உம்முடன் இருக்கும் அந்த பிள்ளையின் பெயர் என்ன?" என்று விசாரித்தான். அப்போது அபுத்தாலிபு புகைருவை நோக்கி, "எங்கள் ஊர் மக்கா; குடும்பத்தின் பெயர் அத்னான்; என் பெயர் அபுத்தாலிபு; என்னுடன் இருக்கும் பிள்ளை என் தம்பியாகிய அப்துல்லாவுடைய புத்திரன்; பெயர் முஹம்மது" என்று சொன்னார். இவைகளைக் கேட்ட மாதவன் "அபுத்தாலிபே! ஒட்டகம், கோவேறுக் கழுதை, மாடு, முதலியவாகனங்களில் பல பண்டங்களையும் சுமத்திக்கொண்டு அனைவரும் திரண்டு எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு அபுத்தாலிபு "நாங்கள் வர்த்தகம் செய்யும்பொருட்டு ஷாம் இராஜ்ஜியத்திற்குப் போகிறோம்" என்றார். உடனே புகைரு வாய்திறந்து "அபுத்தாலிபே! நீங்கள் அனைவரும் ஷாம் இராஜ்ஜியத்திற்குப் போவதை நிறுத்திவிட்டு, விரைவாய் முஹம்மதை அழைத்துக் கொண்டு மக்கமாநகரம் போய்ச் சேருங்கள். ஷாமுக்குப் "போக வேண்டாம்" என்று தடுத்துச் சொன்னான்.

சாஸ்திர விற்பன்னனாகிய புகைரு இவ்விதம் தடுத்துச்சொன்ன போதே அபுத்தாலிபு அவனை நோக்கி, "நாங்கள் வர்த்தக விஷயமாக இத்தனை தூரம் பிரயாசை யெடுத்து அநேக சரக்குகள் சாமான்களுடன் புறப்பட்டு வந்து இருக்க, நீர் போக வேண்டாம் எனத் தடுப்பதற்கு முகாந்திர மென்ன?" என்று கேட்டார். இவ்வாறு மனங்கலங்கிக் கேட்ட அபித்தாலிபைப் பார்த்து புகைரு என்னும் பண்டிதன் தன் அருமையான வாயைத் திறந்து "அபுத்தாலிபே! "ஆதம் நபியிலிருந்து ஐம்பதாவது சந்ததிக்குப்பின் ஒரு நபி பிறப்பார்" எனக்கடவுள் அருளியதும் மூன்று வேதங்களும் ஐயமில்லாமல் சொல்வதும், முன்னுள்ள வேதாந்திகள் சொன்னதும், இப்போது மெய்யாக நிறைவேறி விட்டது. முந்தியே அறிவிக்கப்பட்ட அடையாளத்தின் பிரகாரமே இப்போது நான் கண்ணாரக் கண்டேன். அந்த நபி இப்போது நீர் கூட்டி வந்திருக்கிற முஹம்மது என்பவரே யன்றி வேறல்ல. அப்படி நபிநாயகமாய் பிறந்த பிள்ளைக்கு எண்டிசையிலும் எண்ணிறந்த பகைவர்கள் உண்டாய் அநேக தீங்குகளை விளைக்கத் துணிந்து நிற்பார்கள் இப்போது, நீர் முஹம்மதை அழைத்துக்கொண்டு ஷாம் இராஜ்ஜியத்திற்கு சென்றால், அவ்விராஜ்ஜியத்தில் அவருக்கு விரோதிகளாகிய யஹூதிகள், நஸ்ரானிகள் முதலான அநேக கூட்டத்தார்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு இந்த முஹம்மது பேரில் தீங்கு செய்ய தலைப்படுவார்கள். அவர்கள் செய்யுங் கொடிய வில்லங்கங்களில் நின்றும் விலகி மீட்சி பெறுவதற்கு, உம்மாலும் உம்முடன் வருபவர்களாலும் முடியாது. ஆனால் உமது பிள்ளையாகிய முஹம்மது, நபிதான் என்பதற்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை. தெய்விகம் அமைந்த நபிக்குத் தீங்குவருவிக்க எண்ணும் பாதகர்களின் எண்ணம் அக்கினிக் குண்டத்தில் விழும் ஒருதுளி ஜலத்துக்கு ஒப்பாய் அழிந்துபோம்; செய்யுந் தீங்கான கருமத்தில் சிறிதும் அந்நபியைசாராது என்பது நிட்சயம். ஆயினும் அவர் சிறு பிராயமாயிருப்பதாலும், நீங்கள் அன்னிய தேசத்திலிருந்து போகும் பரதேசத்தர்களாகையாலும், அப்பகையர் செய்யும் நிலையற்ற தீங்குக்கும் எதிர்த்து நின்று சாதிக்குந்திறம் உங்களுக்கு உண்டாவது அசாத்தியம்; ஆகையால், நீங்கள் வந்த வழியே திரும்பிபோய் விடுவது தான் உத்தமம்" என்று வேண்டிப்பாய் சொன்னான். பின்வரும் கஷ்டநஷ்டங்களைக் குறித்து

தீர்க்கதரிசனமாக புகைறாவென்னும் பண்டிதன் சொன்ன இச்சொற்களை, அபுத்தாலிபு கேட்டு, அவன்சொல்லுக்கு இணங்கி, மக்கமா நகரத்துக்குத் திரும்பி வருவதற்காக இருக்கும்போது, ஒருதினம் யஹூதிகள் சிலர் திரண்டு ஆக்கிரமித்து, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு துன்பம் உண்டு பண்ண வந்து எதிர்த்தார்கள்.

கைகளில் ஆயுதமேந்தி, முகங்கள் சினத்தால் அக்கினியொத்து எரிய, அதிக்கிரமித்து வந்த யஹூதிகளின் மனவெண்ணத்தையும், வாயாற் பிறக்கும் துர்வசனங்களையும், கொலைசெய்வதில் பிரவேசித்து நிற்கும் துணிவையும் புகைறாகண்டு, அவர்களின்மேல் கோபம் மீறி இருவிழிகளும் சிவக்கநோக்கி, "யஹூதிகளே! என்ன காரியத்திற்காக நீங்கள் கூட்டமாய்த்திரண்டு இவ்விதம் குரூரத்துடன் வந்தீர்கள்? நீங்கள் எண்ணிவந்த கருமம் சிறிதும் நிறைவேற மாட்டாது. இப்போது நீங்கள் எண்ணிவந்த தீங்கான எண்ணத்தை ஒழித்து இந்த முஹம்மதைத் துதியுங்கள்" என அவர்கள் கலங்கத்தக்க விதமாகக் கடிந்து சொன்னான். இச்சொலலின் கடுமையை அறிந்த அந்த யஹூதிகள், தங்கள் எண்ணம் சிதறுண்டு, மனம் அஞ்சி, நினைத்து வந்த கொலைத்தொழிலை மறந்து வந்த வழியே மீண்டு போய் விட்டார்கள்.

பிறகு அயல்நகரங்களில் வசிக்கும் நஸ்றானிகளில் ஒன்பதுபேர் ஒன்றுசேர்ந்து புகைறாவிடம் வந்து, புகைறாவுடைய அரமனையை அடைந்து, தங்கள் தங்கள் கைகளை சிரசிலவைத்துத் தெண்டனிட்டு நின்றார்கள். இவ்விதம் தனக்கு முன்வணக்கஞ்செய்து நிற்கும் நஸ்றானிகளைப் புகைறாகண்டு, அவர்களை நோக்கி "நீங்கள் எந்த ஊரிலுள்ளவர்கள்? எங்கே போகிறீர்கள்? இப்போது இங்கே வந்த காரியமென்ன?" என விசாரித்தான். புகைறா விசாரித்தவுடன் அந்த ஒன்பது நஸ்றானிகளும் புகைறாவுடைய சந்நிதியில் வணக்கஞ் செய்து, புகைறாவை நோக்கி "முனிவர்களுக்கு நாயகமானவரே! நமது அருமையாகிய மசீஹின் மார்க்கமும், நம குலம்பழுதும் அழியவுண்டு பேரும் வண்ணம் முஹம்மது என ஒரு நபி பிறப்பார்; அவர் இந்த வருஷத்தில் இந்தமாதத்தில் ஷாம் இராஜ்ஜியத்திற்கு வருவார் என்று முன்னுள்ள வேதங்கள் மூன்றும் கூறியவைகள் சொல்வதை நாங்கள் அறிந்து, நமது மார்க்கத்துக்குத் தீங்கு

விளையாமலும், நம் ஜாதியார் துன்பம் அனுபவிக்காமலும், காக்கும் பொருட்டு ஷாம் இராஜ்ஜியத்தில் செல்லும் மார்க்கங்கள் அனைத்திற்கும் அநேக ஒற்றர்களை அனுப்பி முஹம்மதைக் கண்டுபிடிக்கும்படி நியமித்துவிட்டு, இந்த மார்க்கமாக நாங்கள் ஒன்பதுபேர்களும் வந்து தங்கள் பாதத்தை அடைந்தோம்" என்று மிகமகிழ்வோடு சொன்னார்கள். இவ்விதம் கூறின நஸ்றானிகளைப் பண்டித சிகாமணியாகிய புகைறா நோக்கி "முஹம்மது என்னும் நபி ஒருவர் பிறப்பார்" என முன்னுள்ள வேதங்கள் சொன்ன சொற்கள் அடங்கலும் வாஸ்தவம். அவர் இந்த மாதத்தில் ஷாம் இராஜ்ஜியத்திற்கு இந்த மார்க்கமாக வருவார் என்பதும் வாஸ்தவந்தான். ஆனால் நீங்கள் இவ்விதம் திசைதோறும் ஓடித்திரிந்து அலையவேண்டிய முகாந்திரமென்ன? அவரைக் கண்டுபிடித்து என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான். அப்போது, வன்பகையே குடிபுகுந்து இருக்கும் பாதகர்களாகிய அந்த ஒன்பது நஸ்றானிகளும், புகைறாவை நோக்கி அடிபணிந்து வாய்புதைத்து நின்று கொண்டு "மார்க்கத் தலைவராய் விளங்கும் நாயகமே! நமது அருமையான மார்க்கம் தலைதடுமாறி, ஜாதியார் அனைவரும் துன்பத்தை அனுபவிக்கும்படியாக நபியென நூதனமாக ஒருவன் வருவானாகில், அவனைத் தலையெடுக்காதபடி கொலைசெய்வதே நீதி. ஆனதால், அப்படி நபி எனப் பிறந்த முஹம்மதைப் பிடித்துக் கொன்றுவிட வேண்டும் என்று நாங்கள் இவ்வளவு பிரயாசையுடன் வந்தோம்" என்று சொன்னார்கள்.

இவ்விதம் சொன்ன நஸாறாக்களை நோக்கி புகைறா என்பவன் கடுங்கோபமாய் "அறிவு சிறிதும் இன்றி, வீணான கருமத்தில் தலையிட்டு இத்தனை தூரம் வந்த முழு மூடர்களே! கேளுங்கள்; சர்வாதிகாரம் உடைய கடவுள், நபியாக ஒருவரை இவ்வுலகத்தில் அனுப்புவானானால், அந்த நபிக்கு துன்பம் உண்டு பண்ண வேண்டும் என நீங்களும், உங்கள் ஜாதியார் அனைவரும், உங்கள் அரசர்களும் ஒருங்குதிரண்டு, எவ்வளவு முயர்ச்சிசெய்த போதிலும் அந்த விக்கினத்தில் ஒரு அணுவளவாவது அந்த நபியை அடையாது என்பது உலகறிந்த விஷயம். சிருஷ்டிகர் உடைய காரியத்துக்கு இடையூறு உண்டுபண்ணவேண்டு மென்று சிருஷ்டிகள் துணிந்து நினைப்பது எவ்வளவு அறிவீனமாகும்! மக்கமாநகரத்தில் விளங்கும் குறைஷிக் குடும்பத்து மணிவிளக்கைப்போன்ற முஹம்மது என்னும்

நபிக்குத் தீங்குவிளைவிக்க எண்ணும் மனிதர்கள் யாராலும்சரி, அவர்கள் கொண்ட எண்ணத்திற்குப் பிரதியாக இவ்வுலகில் மாறாத பழிக்கு ஆளாய், சந்ததிசந்ததியாக இழிவு அடைந்து, யுகமுடியும் பரியந்தம் சீர்கேடான ஸ்திதியில் சிக்குண்டு, முடிவில் நரகங் குடிபுகுவார்கள்; அவர்கள் கொண்ட எண்ணத்தில் சிறிதும் பலன் பெறாது. பகைவர்களால் செய்யப்படும் தீங்கான செயல்கள் வந்து அடுக்காமல் அந்த நபியை, எண்ணிக்கை அற்ற வானவர்கள் என்றும் வளைந்து காத்து நிற்பார்கள். நீங்கள், சிந்தனையின்றி கருதும் கருமத்திற்காக இனி நரகத்திற்கிடந்து வெந்து எரியும் போது மிக மனஸ்தாபப்படுவீர்கள். கடவுளுடைய அதிகாரம் பெற்றுவந்த நபியைக் கொலை செய்யவேண்டும் என நீங்கள் நினைத்த பாதகமான நினைவு மிகக் கீழ்மையை உங்களுக்கு உண்டுபண்ணும்" என்று சாஸ்திரயுக்தமாக எடுத்துச்சொன்னான். இவ்வண்ணம் புகைறா மொழிந்த நன்மொழி அனைத்தும் அந்த நஸாறாக்களுடைய செவித் துளைகளின் வழியாய்ச்சென்று அவர்கள் கருத்தைக்கலக்கின. சித்தங்கலங்கின மாத்திரத்தில் அந்தப்பாதகர் ஒன்பதுபேரும் சற்று கவனமாய் சிந்தித்து, நாம் நினைத்த கருமம் மிகத்தீங் கானது எனத்தேறி, புகைறாவுடைய பாதங்களைத் தெண்டனிட்டு வணங்கி நின்று "தேவரீர், அருளிச் செய்த நற்போதனைகளால் நாங்கள் அக்கிரமித்து நினைத்த பொல்லாங்கைத் தவிர்த்து சீர் அடைந்தோம். இனி நாங்கள் இவ்வித எண்ணத்தில் தலையிட மாட்டோம்" என மிகஉறுதியுடன் கூறி விடைபெற்றுக் கொண்டு, வந்த மார்க்கமாகத் திரும்பிப் போய்விட்டார்கள்.

பிறகு அபுத்தாலிபு, புகைறா சொன்னபடியே யஹூதிகள் சிலர் திரண்டுவந்து, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்க்கத் துணிந்ததும், நஸாறாக்கள் வந்ததும் இன்னகாரியத்திற்காக என்பதை சிந்தித்து அறிந்து, புகைறாவை அடுத்து "பண்டிதரே, நான் வர்த்தகத்துக்காக அநேக சாமான்களுடன் புறப்பட்டு இத்தனை தூரம் வந்து விட்டேன். இனி நான் பரிவாரத்துடன் திரும்பிவிடநேரிட்டகாரியம் முக்கிய மானதாய் இருந்தாலும், அதனால் எனக்கு சம்பவிக்கும் கஷ்ட நஷ்டங்கள் சொற்பமாக இராது. ஆனதால், என் பிள்ளை யாகிய முஹம்மதை உற்ற மனிதர் சிலருடன் கூட்டி இங்கிருந்து மக்கமா நகரத்துக்கு அனுப்பி விட்டு, நான் ஷாமுக்குப் போகிறேன்"

என்றார். இச்சொல்லுக்குப் புகைறா இசைந்து நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தன் அறச்சாலைக்கு அழைத்துக் கொண்டு போய், ஒரு ஆசனத்தில் இருத்தி, திராட்சப் பழமும் சிற்றுண்டிகளும் கொடுத்துப் பசியாற்றுவித்து, இரண்டு பாததாமரைகளையுந் தொட்டு முத்தமிட்டு, மகிழ்ச்சி கூர்ந்து வாழ்த்தி அனுப்பினான். உடனே அபூதாலிபு, நபி நாயகத்துடன் அபூபக் கரையும் இன்னும் சிலரையும் சேர்த்து, "நீங்கள் இடையில் ஒரு இடத்திலாவது தங்கித் தாமதிக்காமல் விரைந்து, மக்கமா நகரத்துக்குப் போய்ச்சேருங்கள்" என விடை கொடுத்து அனுப்பி விட்டார்.

புஸ்றாவில் இருந்து தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மக்கமா நகரத்துக்குத் திரும்பி அனுப்பி விட்டு, மறுநாள் காலையில் இச்சங்கதியை புகைறாவுக்கு அறிவித்துத் தாமும் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தம் பரிவாரத்துடன் ஷாம் இராஜ்ஜியத்திற்குப் பிரயாணப்பட்டு பாதைகள் அனைத்தையும் கடந்து நடந்து, ஷாம் நகரம் போய்ச் சேர்ந்தார். அவ்விடம் போய்ச்சேர்ந்த சொற்ப தினங்களுக்குள் தாம் கொண்டுபோன சரக்குகள் எல்லாவற்றையும் நல்ல லாபத் திற்கு விற்று, முதலை ஒரு தொகையாக்கிக்கொண்டு, அங்கே தங்காமல் உடனே பிரயாணப்பட்டு, காலஹரணம் செய்யாமல் அதிக விரைவில் வழிகளைத் தொலைத்து கடந்து மக்கமா நகரத்தில் வந்து சேர்ந்தார்.

அபூத்தாலிபு மக்கமா நகரம் வந்து சேர்ந்த அன்றைய தினமே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு புஸ்றாவில் நேரிட்ட ஆபத்துத் தொலைந்து போனதற்காக மனம் களிகூர்ந்து, எளியோர்களுக்கு விருந்து முதலான தானங்கள் செய்து, முதி யோர்களுக்கு கேட்டபொருள் கொடுத்து, நபிகட்திலகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கட்டித்தழுவி அன்புகூர்ந்து கொண்டாடினார்.

அல்லாஹு தஆலாவுடைய உதவியைக் கொண்டு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அபூத்தாலிபு உடைய மனையிலிருந்து வளர்ந்து வரும்போது, நபிகட்திலகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல

மவர்களுக்கு வயது பதினான்கு நிரப்பம் ஆயிற்று. பதினான்கு வயது சென்று பதினைந்தாம் வயது நிகழுங் காலத்தில், மக்கமா நகரம் கைஸு என்னும் பெரிய சேனையினால் முற்றுகை செய்யப் பட்டது. அப்போது ஊரார் அனைவரும் அச்சேனையை எதிர்த்து நின்று போர் செய்யும் திறம் அற்றவர்களாய், மனம் கலங்கித் தடுமாறினார்கள். அவர்களுள் அநேகர் சினங்கொண்டு "நாம் அஞ்சவேண்டியது இல்லை; எதிர்சென்று போர் செய்யலாம்" என்றார்கள். அநேகர் அச்சொல்லை மறுத்து "நம் சேனை அச் சேனைக்கு முன் நிலைபெற மாட்டாது" என்றார்கள்.

இவ்விதம் அவர்கள் இரண்டு பட்டு, முடிவில் அனைவரும் ஒருங்கே ஆலோசனை செய்து கொண்டு "அப்துல்லாவுடைய மகன் முஹம்மது என்பவரின் பொருட்டினால் இந்த ஊருக்கு அநேக நன்மைகள் விளைந்திருக்கின்றன. இப்போது வந்து வளைந்திருக்கும் சேனையால் உண்டாகும் ஆபத்து அவராலேதான் நீங்க வேண்டும். ஆகையால், நாம் அனைவரும் ஒன்றாய்த் திரண்டு, நமக்கு முன் அந்த முஹம்மதை நடத்திச் சென்று அச்சேனையோடு எதிர்த்து யுத்தம் செய்வோமானால், நாம் தடையின்றி வெற்றி பெறக் கூடும்" என்று சொன்னார்கள். இச்சொல் அனைவரின் மனத் திற்கும் ஒத்ததா யிருந்தது. உடனே அனைவரும் திரண்டு, படை முரசு முதலான வாத்தியங்கள் அனைத்தும் இடி போன்று முழங்கக் குதிரை முதலிய வாகனங்களில் ஏறிச், சென்றனர் ஆயுதங்கள் அனைத்தும் சூரிய கிரணங்களால் மின்னலை ஒத்து இலங்க, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களையும், இபுனு சுத்ஆன் என்பவரையும் சேனைக்குமுன் அணியில் நிறுத்தி, அநேக சேனாதிபதிகள் நெருங்கி வர நடந்து, கோட்டை வாசலைத் திறந்து கைஸு என்னும் சேனையை எதிர்த்தார்கள். எதிர்த்த உடனே இருவகைச் சேனையும் கலந்து கடும்போர் செய்த சொற்ப நேரத்திற்குள் கைஸு என்னும் சேனை முறியடிக்கப் பட்டது. உடனே மக்கமா நகரத்தார் வெற்றி பெற்றார்கள். கைஸு என்னும் சேனை பல வழியிலும் சிதறுண்டு கலைந்து நெறி கெட்டுப் போய்விட்டது. அப்போது மக்கமா நகரத்தார் அனைவரும் வெற்றி பெற்று, பண்டு தொண்டு இதுபரியந்தம் நம்முடன் எதிர்த்த இந்த கைஸு என்னும் சேனைக்கு நாம் புறங்காட்டி ஓடிவந்ததே யன்றி, ஒருமுறையிலாவது அற்ப வெற்றியும் பெற்றதில்லை

இப்போது முஹம்மதுடைய பொருட்டினால், கைசு என்னும் சேனை இனி ஒரு தரம் இத்திசையை எண்ணியும் பார்க்காவண்ணம் சிதறடித்து வெற்றியடைந்தோம். அதனால், நாம் வீரதீரம் அமைந்தவர்கள் என்னும் பிரஸ்தாபம் நமக்கு இன்று கிடைத்தது. இனி ஒருவரும் நம்மை எதிர்த்து சண்டை செய்ய நினைக்க மாட்டார்கள். நாமே சண்டையில் சிறந்தவர்கள் எனப் பிரபல்யம் அடைந்தோம். இந்த மகிமை அனைத்தும் நமக்கு முஹம்மதாலே தான் கிடைத்தது, என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை வாழ்த்திக் கொண்டாடினார்கள்.

12-வது அத்தியாயம்.

பாதை போந்தது.

கலி விருத்தம்.

மேதை யானதை விட்டிகல் காபிர்கள்
வாதை தீர வரும்புர்க் கான்மறை
யோதை மேவு முயர்மக்கம் வாழ்நபி
பாதை போந்திடும் பண்பினை யோதுவாம்.

இதன் பொருள்.

பேறிவானதை இன்னதென்று மனத்திலுணராது, நல்லறி வையுடைய தீனில் இஸ்லாத்தோடும் பகைத்திருக்கும் காபிரீன் களின் துஷ்டச் செய்கையாகிய வருத்தந்தீர, அல்லாஹு தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் புறத்தால் அனுப்பப்பட்ட புறுக்கா னென்னும் நாது வேதத்தினோசையே எவ்விடத்திலும் முழங்கிக் கொண்டிருக்கும் உயர்ந்த புகழையுடைய திருமக்கமா நகரத்தில் வாழும் நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஷாம் தேசத்திற்கு வியாபாரஞ் செய்ய வழி நடந்து போகின்ற சிறப்பை சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குரைகட லனைய செல்வக் குறைஷியின் குலத்து நாப்ப
ணரசினன் குமா ரான அப்துல்லா வரத்தில் வந்த

111360

முருகவீ மூலங்கற் றிண்டோன் முஹம்மது தமக்குச் சார்ந்த
திருவய திருபத் தைந்து நிறைந்தன சிறக்க வன்றே.

வசனம்.

காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், தமது பெரிய தந்தையாகிய அபுத்தாலிபு உடைய மனையில் நாளொருவண்ணமாய் வளர்ந்து வரும் காலத்தில், இருபத்தைந்து வயது நிரப்பமாயிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்னும் நான்கு குணங்களு மமைந்து, அழகு, வீரம், கல்வி, நல்லொழுக்கம், பொறுமை, இரக்கம், ஈகை, முதலான எல்லா நற்கருமங்களும் விளங்கின. நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை மலக்குகள் இடைவிடாமல் பிரதிதினமும் அடுத்து காட்சி அளவைக்குத் தோற்றாமல் பாதுகாத்து நிற்பார்கள். உற்றார் முதலிய ஜனங்கள் அனைவரும் உவந்து அன்பு பாராட்ட மனக்குறை சிறிது மின்றி, கருமேகக் குடையின் நிழலிலுலாவி, திருப்தியடைந்து க்ஷேமமாக வாழும் காலத்தில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளத்தில் ஒரு சஞ்சலம் முளைக்கத் தலைப்பட்டது. அச்சஞ்சலம், தமக்கு உண்ண உடுக்க ஏதும் குறையில்லாமல் இருந்தபோதிலும், தம்மை யொத்த மற்ற வாலிபர்களைப் போல கைத்தாராளமாய்ச் செலவு செய்வதற்கு ஆகும் பொருள் இல்லாமையேயன்றி வேறல்ல. இவ்விதச் சஞ்சலம் தம் மனதில் தலைகாட்டிய அன்று முதற்கொண்டு கருத்தைக் கலக்கிற்று. ஆனதால், ஒரு தினம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது பெரிய தந்தையாகிய அபுத்தாலிபை அடுத்து, "தந்தையே! உலகத்தில் இது ஒரு வஸ்துதான் என மனிதர்களால் மதிக்கப்படாமல் மிக இழிந்த வஸ்துவையும், பின் மதிக்கப் பண்ணுவது பொருளேயன்றி வேறல்ல. எவ்வளவு உயர் நிலையிலுள்ளவர்களையும் இழிநிலையில் ஆக்கி, இழிநிலையிலுள்ளவர்களை உயர்நிலையில் ஆக்குவது பொருள்தான். இவ்வுலகம் நடைபெறுவது பொருளைக் கொண்டே அல்லாமல், மற்றதைக்கொண்டு அல்ல. அப்படியிருக்க, நானோ தந்தை, தாய், சகோதரர் என்னும் உபகாரிகள் அற்று, தனிமையாய், பொருள் சிறிதுமின்றி வருமை அடைந்து காலங்

கழிப்பது பேதைத் தனமாகும். ஆகையால், நான் ஷாம் இராஜ்ஜியத்திற்குச் சென்று, என்னால் ஆகும் வரை ஒரு வர்த்தகத்தைச் செய்து, அதனால் சிறிது பொருள் சம்பாதித்துவர நினைக்கிறேன். தங்கள் பிரியம் எவ்வாறிருக்கின்றதோ" வென முறையிட்டார்கள்.

இவ்விதம் நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், மனோதைரியத்துடன் முகமலர் வாடிச்சொன்ன சொற்களை அபுத்தாலிபு கேட்டு, ஷாம் இராஜ்ஜியத்தில் பகைவர்கள் அதிகம் பேர் இருக்கின்றார்கள் என்பது தமக்கு நன்றாய்த் தெரிந்திருப்பதால் மனம் கலங்கி, மறுபடியும் தம்மனையின் நிருவாகத்தையும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாலியதிசை அடைந்தும் ஒரு தொழிலின் முயற்சியின்றி சோர்வுற்று இருப்பது ஒழுங்கல்ல என்பதையும் கருத்தூன்றி சிந்தித்து, ஒருவாறு மனந்தேறி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கிக் கூறலானார்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

என்னுயிர்த் துணைவனீன்ற விளங்கதிர்ப் பருதியேயிந்
நன்னிலத் தரியபேறே நங்குடி குலத்துக்கெல்லாம்
பொன்னுநன் மணியு மென்னப் பொருந்துநாயகமேதேறு
வொன்னலர்க் கரியே கேளென் னுளத்தினி லுற்றதன்றே.

வசனம்.

என்னுயிருக் குயிராகிய தம்பி அப்துல்லா பெற்ற இளங்கதிரெறிக்கும் சூர்யோதயமே! இந்த உலகத்திற் றேடவரிதாகிய வரப்ரசாதமே!! நமது குடி குலத்துக்கெல்லாம் பொன்னும், பொன்னில் அழுத்திய இரத்தின மணியும்போற் பொருந்திவந்த நாயகமே!!! தெளிவில்லாத சத்துருக்களுக்குச் சிங்கமே! என் மனத்திலுள்ள எண்ணத்தைச் சொல்லுகிறேன். மகனே! முஹம்மது! இதை நீ விளக்கமாகக் கேளும். மகனே, நீர் இப்போது என்னிடம் சொன்ன சொல் சந்தோஷப்படக் கூடிய சொல்லேயானாலும், நீர் வியாபாரத்திற்காக ஷாம் இராஜ்ஜியத்திற்குப் புறப்படும் பட்சத்தில், சொற்பமான வர்த்தகத்தை செய்து வருவது அழகல்ல. பெரிய வர்த்தகத்தைச் செய்து தான் கீர்த்தியடைய வேண்டும். அதற்கு முதலும் அதிகம் வேண்டும். அவ்வளவு முதல் நம் கை யிருப்பிலில்லை,

இவ்வூரில், எண்டிசையிலும் உள்ள வர்த்தகர்கள் அனைவருக்கும் நாயகமாய், நற்குணம் நற்செய்கை முதலானவைகளில் விசேஷித்து விளங்கும் குவைலிது என்னும் தலைவரொருவர் இருக்கின்றார். அக்குவைலிது என்பவர் செய்த தவமடங்கலும் ஒன்றாய்த் திரண்டு மானிட வடிவெடுத்து வந்ததுபோலப் பிறந்த அவர் மகள் ஒரு பெண் உண்டு. அந்தப் பெண்ணின் பெயர் கதீஜா. அந்தக் கதீஜாவுடைய அழகுக்கு ஒப்பான பெண் இங்கு ஒருவரும் இல்லை. நற்பிற்சிறந்த இவ்வூர்ப் பெண்கள் அனைவருக்கும் நாயகமாய், ஒப்பில்லாத முழுமதி யொத்த முக ரூபலாவண்யமுள்ள அந்தப் பெண்ணின் அழகு முதலானவைகளை வர்ணிக்க எப்படிப்பட்டவர்களாலும் முடியாது.

சரித்திரப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தேன்கட லமிர்துந் திக்கிற் றிகழ்வரை யமிர்துஞ் சூழ்ந்த
மீன்கட நடுவிற் றோன்றும் வெண்மதி யமிர்துந் துய்ய
கூன்கட வளையார் வெண்பாற் குரைகட லமிர்துஞ் சோதி
வான்கட லமிர்து மொன்றாய் வடிவெடுத் தனைய பாவை

பைங்கட லுடுத்த பாரிற் பன்மணி வரையிற் றீவிர்
செங்கதிர்க் கனக நாட்டிற் செழுமணி மனைக்கு நாளு
தங்கிய சுடரு மொவ்வாத் தனித் தனி யழகுவாய்ந்த
மங்கையர் தனையொப் பென்ன வகுக்கநா வகுத் திடாதே

வ ச ன ம்.

ஏழு கடல்களில் ஒருகடலாகிய தேன்கட லமுதமும், எட்டுத்திக்குகளி லுண்டாயிருக்கும் பிரகாசமான மலையமுதமும், எண்ணிக் கைகி லடங்காது கடற்போல் விரிவாகச் சூழ்ந்திருக்கும் நட்சத்திரக் கூட்டங்களுக்கு நடுவிற் றோன்றும் பூரணச்சந்திர னமுதமும், குடவயிறும் கூனுமுள்ள சங்கினங்கள் பொருந்தி யிரையும் வெண்மையான பாற்கட லமுதமும், பிரகாசமுள்ள ஆகாசக் கடலமுதமும் ஆகிய இவை யெல்லா மொன்றாகக்கூடித் திரண்டு மனித வடிவெடுத்து வந்தது போலுள்ள பெண்ணானவர். இன்னும் பசியகிற உப்பு நீர்க்கடலை ஆடையாக வளைந்திருக்கும் பூமியிடத்திலும், பல இரத்தினங்க ளுண்டாயிருக்கும் மலைகளிடத்திலும், தீவுகளிடத்திலும் சிவந்த பிரகாசக் கதிரெறிக்கும் ஆயிரமாற்றுப் பொன்னாற் செய்யப்பட்ட சொர்க்கலோகத்திலுள்ள இரத்தின மாளிகைகளிலும், எந்நாளும் தரிப்பட்டிருக்கும் பிரகாசமும் அப்பெண்ணுக்கு ஒப்பாகமாட்டாது. அதுவுந்தவிர, ஒவ்வொரு அங்க அழகும், கற்பனைக் கடங்காது. தனித் தனி அழகு பொருந்தி யிருக்கும் மற்ற உலகப் பெண்களுக்கு ஒப்பாக அப்பெண்ணை சொல்ல மனத்தி லெண்ணினாலும் அவ்வெண்ணத்தை நாவெழுந்து பேசாது.

இதோடு தெய்வ வழிப்பாடும், நல்லறிவும், ஒப்பில்லாத பொறுமையும், சன்மார்க்கர் சாவகாசமும், எளியவர்பேரில் இரக்கமும், அன்பும், ஆதரவும், அடுத்தவர்களுக்கு கற்பக விருட்சம்போன்று கொடுக்கும் கொடையும் தனக்கு ஆபரணமாக அணிந்து, குலத்துக்கு ஒரு மணிவிளக்கை யொத்து விளங்கும் கதீஜா என்னும் பெண்ணரசி, தந்தையின் ஆஸ்திகள் அனைத்திற்கும் பாத்தியமுடையவளா யிருப்பது மாத்திரமல்ல; தன்கையிலும் திரண்ட சொத்துகள் உண்டு. அநேக வர்த்தகர்கள் அந்தப் பெண்ணிடஞ் சென்று முதல்வாங்கி, வர்த்தகம் செய்து நல்ல இலாபத்தை அடைகிறார்கள். நாமும் அந்த கதீஜா என்னும் நாயகியை யடுத்து தகுந்த முதலை வாங்கி வர்த்தகஞ் செய்யத் தொடங்கினால், நல்ல கீர்த்தியும் பிரஸ்தாபமும் இலாபமும் பெறலாம்" என்று சொன்னார்.

அபுத்தாலிபு இவ்விதம் சொன்ன சொற்கள் அனைத்தையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிந்தித்து, நாம் பிறரையடுத்து முதல் வாங்கி வர்த்தகம் செய்யும்படி நேரிட்டதே எனச் சஞ்சலித்தார். ஆயினும் குற்றமில்லை என்று மனந்தேறி, தம் தந்தை சொன்ன வார்த்தைக்கு சம்மதித்து தயாராயிருந்தார்கள். கதீஜாவுடைய ரூபத்தையும், அவயவ இலட்சணங்களையும் குணங்களையும் குறித்து ஒவ்வொன்றாய் விவரித்து முன் அபுத்தாலிபு சொன்னபோதே, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருத்தில், அந்தப் பெண்ணுடைய வடிவமும் பெயரும் தரிபட்டன. எந்த வேளையிலும் கதீஜாவுடைய எண்ணத்தை நினைத்து, சௌந்தரியத்தைப் பற்றி காதல் கொண்டு, அக்காதலைத் தமது பேரறிவால் மூடி மறைத்து வந்தார்கள்,

ஆயினும், கதீஜா பேரில் கொண்ட காதல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மனதில், நாளுக்கு நாள் விர்த்தியாய்க் கொண்டே வந்ததன்றி, சும்மா இருக்கவில்லை. இது, தெய்வ சங்கற்ப மல்லாமல் வேறல்ல. தாம் கொண்ட காதல் இவ்வண்ணம் வளர்ந்து கொண்டு வருவதால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் கதீஜா வாசஞ்செய்யும் மனைவீதியில் எப்போதும் போக்குவரத்தா யிருந்தார்கள்.

இவர்கள் இவ்விதம் போக்குவரவா யிருக்குங் காலத்தில், வர்க்கத்து என்னும் சாஸ்திரி யொருவன், ஒருதினம் நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் கண்டு, சரீர லட்சணத்தையும், பாதம் தரையில் தோயாத புதுமையையும், நிழல் தோற்றாத தன்மையையும், கருமேகம் குடையிடுவதையும், முழுமதியொத்த முகக்காந்தியையும் குறிப்பாய் யுற்றுநோக்கி, "பிற்காலத்தில் நபியொருவர் பிறப்பார்" என்று முன்னுள்ள வேதங்களும் சாஸ்திரங்களும் ஐயமின்றி முறையிடுவது இவரையல்லாமல், மற்ற ஒருவரையுமல்ல. அந்த நபி இவரே என மனம் கூர்ந்து, ஆனந்த பரவசத்தை யுடையவனாய், கதீஜாவுடைய மனைக்குள் சென்று, அந்த நாயகியின் சமுகத்தில் தாழ்ந்து நின்று சொல்லுகிறான்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

குவைலிது தவத்தின் பேறே குரைகடன் மணியே நீண்ட
புவியிடை யமுதே பொன்னே பூவையர்க் கரசே யென்றன்
செவியினிற் பெரியோர் கூறுஞ் செய்தியாற் றேர்ந்து தேர்ந்த
கவினுறும் புதுமை யின்னாட் கண்டுகண் களித்தே னென்றான்

வசனம்.

"குவைலிது உடைய கண்மணியாய், பெண்களுக் கெல்லாம் அரசியாய், என் உயிருக்குயிராய் விளங்கும் கதீஜாவே, முன் நான் வேதாகம சாஸ்திரங்களில் அறிந்து, என் மூதாட்களால் சொல்லப்பட்டுள்ள புதுமையான ஒரு காரியத்தை இப்போது நான் கண்ணாரக்கண்டேன்" என்று சரீரம் புளகிதமடைந்து சொன்னான். இச்சொல்லைக்கேட்ட கதீஜா, அவன் முகத்தை நோக்கி "நீர் கண்டு வந்த புதுமையென்ன?" என்று வினவியபோது, கதீஜாவை நோக்கி வறக்கத் மனமகிழ்ந்து "கதீஜாவே! முன்னுள்ள வேதங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் ஒரு மொழியாய், பிற்காலத்திலே மக்கமா நகரத்தில் ஒருநபி பிறப்பார். அவர்பெயர் முஹம்மது. அவருடைய சரீரத்தில் மாசுபடியாது. கஸ்தூரி வாசம் கமழும், பாதங்கள் நிலத்தில் தோயாது, நிழல்தோற்றாது, பிடரியின் கீழ் முத்திரை யொன்று பிரகாசிக்கும், அவருக்குக் குர்ஆன் என்னும் வேதம் இறங்கும். அவருடைய மார்க்கத்தில் எண்ணிக்கை யற்ற மனிதர்கள் பிரவேசித்து முத்தி யடைவார்கள். அந்த நபி இந்த மக்கமா நகரத்தில் ஒப்பில்லாத ஒருபெண்ணை விவாகஞ் செய்து கொள்ளுவார், என்று முறையிடுகின்றன. இப்படியே நம்முன்னோர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சொல்லின் அச்சு அடையாளப்படி அந்த நபியை இன்று என் கண்ணாரக்கண்டேன். கதீஜாவே, நீயோ பெண்களில் மிகச்சிறந்து, கல்வி கேள்விகளால் விசேஷித்து விளங்கும் அறிவில் ஒப்பில்லாதவளாகையால், உன்னிடம் இச்சங்கதியை விண்ணப்பஞ்செய்தேன். நீ தயவுசெய்து அவரை அழைப்பித்து உன் கண்குளிரக் காண்பாயானால், நான் சொன்னவை புலப்படும்" என்று சொன்னான்.

சாஸ்திரி இவ்விதம் சொன்ன சொற்களை கதீஜா செவியாரக் கேட்டு, உள்ளம் குளிர்ந்து, தன் பணிவிடைக்காரரில் ஒருவனை நோக்கி, நீ இப்போதே அந்த முஹம்மதை இங்கு அழைத்துவா வென்று கட்டளை பண்ணினவுடன், அவ்வேலைக்காரன் விரைந்து, அபுதாலி புடைய மனையில் வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக்கண்டு, சிரம் பணிந்து தாழ்ந்து நின்று சங்கதியைத்தெரிவித்தான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாம்கோரிய கருமம், இன்று நிறைவேறிற்று என மனத்துள் ஆனந்தம் பொங்கி உடனே எழுந்து, கதீஜாவுடைய மாளிகைக்கு வந்தார்கள்.

இருலோக ரக்ஷகரான நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருவதை முந்தி யறிந்த கதீஜா எழுந்து, உவகை மீறித் தன் காந்தள் மலரையொத்த கைகளால் ஆசனம் ஒன்றைத் தூக்கி எதிரில் இட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "இவ்வாசனத்தில் அமருங்கள்" என்று ஆசாரத்துடன் கூறவே, நபிநாயகம் ஸல்லல்

லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனம் குளிர்ந்து அதில் உட்கார்ந்தார்கள். நவரத்தினங்கள் இழைத்த ஆசனத்தின்மேல் ஒப்பில்லாத சூரியன் உதயமானது போல உட்கார்ந்து இருக்கும் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் முகத்தின் பிரகாசத்தையும், பொன்மலையொத்து திரண்டு விளங்கும் புஜங்களின் வடிவையும், சிறந்த கைகளின் நீட்சியையும், இருபைவிளங்கும் கண்களையும், கஸ்தூரிவாசனை வீசும் மகிமையையுமுற்று நோக்கினவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பேரழகு என்னும் பிரவாகத்தில் கதீஜாவுடைய கண்கள் என்னும் சேல்கள் மிதந்து தத்தளித்து இழுப்புண்டன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சித்திரவடிவைப் பார்த்த கண்கள் இரண்டையும், அதில் படிந்த தன்மனத்தையும் திருப்ப இயலாமல் கதீஜா கலங்கி, உள்ளத்தில் மீறியெழுந்த காதலே ஈனம் என்னும் போர்வைகொண்டு போர்த்தி, ஸ்மரணையின்றிச் சோர்ந்து நிற்கும் நிலையை வறக்கத்து என்னும் சாஸ்திரிகண்டு, கதீஜாவை நோக்கி, முஹம்மதை அவர்மனைக்கு அனுப்பி விடுவதே நன்மை என்றான்.

மோக சாகரத்தில் மூழ்கி ஸ்மரணையற்று இருந்த கதீஜா, உறக்கத்தின் சொல்லைக்கேட்டு அறிவுதெளிந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நாயகமே, தாங்கள் தங்கள் மனைக்குப் போய் வாருங்கள்" என்று விடைகொடுத்தார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து, கதீஜாவுடைய கண்களும் மனமும் தம்மைப் பின்தொடர்ந்து வரும் வண்ணம் வீதிகளைக் கடந்து, தமது மனையில் வந்து சேர்ந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து வந்தபிறகு உறக்கத்து என்பவன் கதீஜாவை நோக்கி "கதீஜாவே! முஹம்மது என்பவர் உன் மனையில் அடிவைத்து வந்தபோதே இம்மை மறுமை என்னும் இரண்டுவகைப் பெரிய வாழ்க்கைகளும் உனக்குக் கிடைத்து விட்டன" என்று சொல்லி விட்டு தான் வசிக்கும் இடத்துக்குப் போய்விட்டான். அப்போது கதீஜாவுக்கு உண்டான உள்ளக்களிப்பை மட்டுப்படுத்த எவரால் முடியும்? வேதாகமங்களின் சொல் ஒருசிறிதும் பழுதுறாது; கற்றோர்வாக்கு பொய்க்காது. ஆனபடியால், இன்று நம் மனையில் வந்து

போன நாயகம் உண்மையான நபிதான்; நான் அவர் மனைவிதானென கதீஜா தன் மனதில் உறுதியாய் நம்பியிருக்கையில், கதீஜா என்னும் மாதரசி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நெஞ்சமென்னும் தடாகத்தில் புட்பித்த கருத்து என்னும் தாமரை மலரில் வீற்றிருந்தது.

தாஜுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும், கதீஜா பேரில் கொண்ட காதலை வெளியிடாமல் இருந்தார்கள். இவ்வண்ணம் சிலநாட்கள் சென்ற பிற்பாடு, ஒருதினம் அபுத்தாலிபு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, "மகனே! இன்று நாம் கதீஜாயிடம் சென்று வர்த்தகத்திற்காக பொருள் கேட்போம், கொடுத்தால் ஆகட்டும்; இல்லையென்றால் கருத்தையறிந்து வருவோம் வாரும்" என்றார். இதைக் கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபுத்தாலிபை நோக்கி, நாம் நாளைக்குப் போகலா மென்றார்கள். அவ்விதமே இருவரும் ஒத்து, நாளைக்கு பணம் வாங்கப் போகலாம் எனத் தீர்மானித்திருந்தார்கள்.

அன்று சூரியன் அஸ்தமித்து எங்கும் இருள் பரந்து, நடு இரவாயிற்று. அந்த இரவில் கதீஜா தன் மாளிகையில் நித்திரை செய்கையில், வானத்தில் பிரகாசிக்கும் நட்சத்திர கணங்களின் நடுவே இலங்கிக்கொண்டு நின்ற பூரணச் சந்திரன் வானத்திலிருந்து இறங்கித் தன் மடியின்மேல் விளையாடக்கண்டு, அதை முந்தானையால் மூடுவதுபோல சொர்ப்பனங் கண்டு விழித்து, சூரியன் உதயமானவுடன் உறக்கத்தை யழைப்பித்துக் கண்ட கனவை வகையாகச் சொன்னபோது, கதீஜாவை நோக்கி, "முஹம்மது நபி உன்னை விவாகம் செய்துகொள்ளுவார்?" என வறக்கத்து கூறினான். இம்மங்கள மொழியை கதீஜா செவிகுளிரக் கேட்டு, சந்தோஷமடைந்து இருக்கும்போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும் அபுத்தாலிபும், கதீஜா வுடைய மாளிகைக்கு வந்தார்கள்.

இருவரும் தம் மாளிகைக்கு வரக் கண்டபோதே கதீஜா எழுந்து, தன் கையால் ஆசனமிட்டு உட்காரும்படி உபசரித்து வேண்ட, இருவரும் உட்கார்ந்தார்கள். உடனே கதீஜா ஒதுங்கி

நின்று செவ்வாம்பல் மலரையொத்த வாயைத் திறந்து “தாங்கள் இருவரும் இந்த எளியாளுடைய வீடு தேடிப் பாதமலர் வருந்த நடந்து வந்த காரண மென்ன?” என்று வினவ, அபுதாலிபு கதீஜாவை நோக்கி, “கதீஜாவே! நாங்கள் உன்மனை தேடிவந்த காரணமாவது :—இங்கு என்னுடனிருக்கும் இந்த வாலிபர் என் சகோதரனாகிய அப்துல்லாவுடைய புத்திரர். இப்போது இவர் வாலிப திசையை யடைந்து விட்டபடியால், இவருக்கு விவாகம் செய்விக்க வேண்டியதாயிருக்கிறது. அதன் செலவுக்குப் பணம் வேண்டும். ஆகையால், அவ்விவாகம் நிறைவேற விரும்பியே நாங்கள் இங்கு வந்தோம். இன்று நீ கொஞ்சம் முதல் என் வசங்கொடுத்தால், அதை இவரிடம் ஒப்புவித்து ஷாம் இராஜ்ஜியத்திற்கு அனுப்பி வர்த்தகஞ் செய்து வரும்படியாக நான் செய்வேன். பிறகு முதலை உன்னிடம் கொடுத்துவிட்டு, அதன் லாபத்தைக்கொண்டு கோரியபடி விவாகத்தை நிறைவேற்றி விடுவேன். சீமான்களுடைய உதவி யுண்டாயிருந்தால், எளியவர்களுடைய எண்ணம் நிறைவேறும். இல்லாவிடில் நிறைவேற மாட்டாது” என்று சொன்னார்.

இந்த வார்த்தைகளை கதீஜா கேட்டு தான் கொண்டிருக்கும் கருத்தையும், இப்போது நடக்கப் போகும் கருத்தையும் சிந்தித்து, நமது நாட்டத்தின்படியே இந்த நபியை நாம் விவாகஞ் செய்து கொள்ளத் தடையில்லை என்று மனங் களிகூர்ந்து, அபுதாலிபை நோக்கி, “குறைஷிக் குடும்பத்துக்கு அரசரே, எளியாளுடைய மனையிலுள்ள பொருள்கள் அனைத்தும் தங்கள் மனையின் பொருள்களே யன்றி வேறல்ல. எளியாளாகிய நான் தங்கள் சொல்லின் வண்ணம் நடக்கக் காத்திருக்கிறேன். அதற்குத் தாங்கள் சந்தேகம் கொள்ள வேண்டாம். நானும் என் சொத்துக்களும் தங்களுக்கு சுதந்திரம் என்பதாகப் பாவிக்கும்படி தங்களைப் பிரார்த்திக்கிறேன்” என்று மிக அன்புடன் மொழிந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும், அபுத்தாலிபுக்கும் இன்பமான பதார்த்தங்கள், மதுரம் பொலிந்த கனிவர்க்கங்கள், பானங்கள் முதலிய வஸ்துக்கள் பரப்பி விருந்து அளித்து, பிறகு இருவருக்கும் உயர்ந்த பட்டுகளால் பிரகாசிக்கும் தலைப்பாகை, மேலங்கி முதலான உடைகளும்கொடுத்து உபசரித்து, தன் பணிவிடைகாரர்களை யழைத்துப் பொக்கிஷத்தைத் திறந்து பணங்கொண்டு வரும்படி

கட்டளையிட்டு அப்போதே, அவர்கள் சென்று பொக்கிஷகாரனுக்குத் தெரிவித்தார்கள். உடனே கதீஜாவுடைய கட்டளையின்படி பொக்கிஷக்காரன் பொன்களை வாரி ஏவலாட்கள் வசங்கொடுக்க, அவர்கள் கதீஜாவிடங் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

அப்போது கதீஜா தமது கைகளால் லட்சத்து ஒன்பதினாயிரம் தங்கக் காசுகளின் நிறைக்குப் பொன்னை எடுத்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் கையில் கொடுத்தார். அப்பொன்களை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வாங்கிக்கொண்ட பிறகு, அந்தப் பொன் அல்லாமல், ஷாம் இராஜ்ஜியத்தில் நல்ல இலாபத்துக்கு விற்கப்பட்ட சரக்குகளில் இருநூறு பொதிகளையும், அச்சரக்கைசுமந்துகொண்டுபோக ஒட்டகங்களையும் வீரதீரம் அமைந்த தமது பணிவிடைக்காரரில் இருபது பேர்களையும் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்வசம் ஒப்புவித்தார். இவைகளன்றி, நபிநாயகம் ஏறிச்செல்லுவதற்காக தகுந்த வயதையும் அழகிய வடிவத்தையும் திறம் அமைந்த சரீரத்தையும் பகல் முழுதும் இருபது காதவழி செல்லும் வேகத்தையுமுடைய ஒட்டகம் ஒன்றும், கையில் பிடிப்பதற்காக ஆயுதம் ஒன்றும் இடையில் சொருகும் குத்துடைவாள் ஒன்றுங் கொடுத்தார். இந்த ஒட்டகமும் ஆயுதங்களும் இனாமாகக் கொடுக்கப்பட்டன.

நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கொடுக்கவேண்டியவை அனைத்தும் கொடுத்துத் தீர்ந்த பிறகு, கதீஜா, தம் அந்தரங்க காரியஸ்தராகிய மைஸரா என்பவரை அழைத்து அருகில் இருத்தி “மைஸராவே! உம்மிலும் உரித்தான மனிதர் எனக்கு வேறே ஒருவருமில்லை. ஆகையால், இப்போது திரண்ட முதலையும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் உம்மிடத்தில் ஒப்புவித்தேன். இம்முதலடங்கலும் உமது பொருளே யல்லாமல் எனதல்ல. நீர் முஹம்மதை இமைகண்ணைக்காப்பதுபோலக் காத்து, பிரியாமல் எப்பொழுதும் அவர்கள்கூடவே யிருக்கவேண்டும். நீங்கள் ஷாம் இராஜ்ஜியத்துக்கு செல்லும் மார்க்கத்தில் பண்டிதர் ஒருவர் இருக்கிறார். அவர் என் குடும்பத்தாரிலும்மிகநெருங்கின அன்பை யுடையவர். அவரிடம் நீர் சென்று என் வந்தனம் சொல்லி, நான் கண்ட கனவை யுரைத்து

அதன் பயனைக்கேளும். அன்றியும் நீங்கள் இங்கிருந்து பிரயாணப்பட்டு ஷாம்இராஜ்ஜியத்துக்குப்போய், அங்கிருந்துமீண்டு இவ்விடம் வரும் பரியந்தம் நடக்கும் வர்த்தமானங்களையும். புதுமைகளையும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தீங்கு செய்ய எண்ணினவர்களையும், நன்மைசெய்ய எண்ணினவர்களையும், அவை நிகழ்ந்த விவரங்களையும் ஒன்றுவிடாமல் விவரமாக தினவர்த்தமானியாகயெழுதி அன்றன்று ஆள்வசம் எனக்கு அனுப்பிக்கொண்டிருக்க வேண்டும். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டு நீங்காமல் கூடயிருந்து க்ஷேமமாக வந்துசேரும்" என்று ஆக்யாபித்தார்.

இவ்விதம் ஆக்யாபித்த கதீஜாவின் திருமுகத்தை மைஸரு நோக்கி "கதீஜாவே, உமது சொல்லுக்கு வழிபட்டு நடக்கும் ஊழியன் நான். என்னுயிரைக் காப்பதுபோல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அவர்களின் பாதசேவையில் எப்பொழுதும் உபசரித்து இருந்து, நிகழும் வர்த்தமானங்கள் அனைத்தையும், ஒழுங்காக எழுதி யனுப்பிக்கொண்டு பிறகு இங்கு வந்து சேர்வேன்" என மொழிந்தார்.

பிறகு கதீஜா அபுத்தாலிபை அவர் மனைக்குப் போகும்படி விடைகொடுத்து அனுப்பிவிட்டு, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யாத்திரை புறப்படும்படி உத்தரவு கொடுத்தார். உடனே ஒட்டகங்களை நிரையாக நிறுத்தி, முன்னே நபிநாயகம் தம் கைகளால் இரண்டு சரக்குப் பொதிகளைத் தூக்கியொரு ஒட்டகத்தின்மேல் ஏற்றினபின், மற்றப் பொதிகள் அடங்கலையும் கையாட்கள் எடுத்தெடுத்து ஒட்டகங்களின் மேல் சுமத்தினார்கள். சரக்குகள் எல்லாவற்றையும் வாகனங்களில் ஏற்றித் தீர்ந்தபின், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும் தம் கையாட்கள் இருபது பேர்களும், மைஸருவும் நெருங்கி வரும்படி பிரயாணப்பட்டார்கள்.

அப்போது நபிநாயகத்துடன் வர்த்தகம் செய்ய புறப்பட்டவர் அபூபக்கர், ஜுபைறு, ஹாரிது, அப்பாஸ், அபூஜஹல் என்னும் இந்த உயர்குலத் தலைவர்களும் இன்னும் பலரும். இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி மக்கமா நகரத்தைவிட்டுப் புறப்பட்டு, அதைச்

சூழ்ந்த நீர்வளம் நிலவளம் முதலான வளங்கள் அமைந்த புறநாட்டு எல்லையை யடுத்து, அங்குள்ள செழிப்பான பூங்காவனம், தடாகம், கரும்பங்கொல்லை முதலிய தானங்களையெல்லாம் கடந்து ஒருநாத வழித் தூரஞ்சென்று, அங்கே ஒரு காவனத்தில் தங்கினார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்தது. அன்று இராமுழுதையும் போக்கி சூரியன் உதயமானவுடன் அனைவருமெழுந்து, நம் வர்த்தகக் கூட்டத்துக்கு முன்னிலையாய் செல்பவர் யார்? என ஒருவரோடு ஒருவர் விசாரித்தபோது, அபூபக்கர், அவர்களை நோக்கி "இந்தக் கூட்டத்துக்கு முன்னிலையாய் நடப்பவர் முஹம்மதுதான்" என்றார்.

இச்சொல் அபூஜஹல் உடைய மனதுக்குப் பொருத்தமாயில்லை. அவன் சிறுபிராய முதற்கொண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இடஞ்சல் செய்து வருபவனாகையால், சினங்கொண்டு முஹம்மதை முன்னிலை யாக்கக் கூடாதென்றான். மற்றவர்களெல்லாரும் அவனை நோக்கி "முஹம்மது முன்னிலையாய்ச் செல்வதைச் சிந்தனையின்றி நீ விலக்குவது நீதம் அல்ல" எனத் தடுத்துங் கேளாமல், இக்கூட்டத்துக்கு முன்னிலையானவன் நானே என்று சப்தமிட்டுச் சொல்லி, தான் ஏறியிருக்கும் ஒட்டகத்தை விரைவாகச் செலுத்தி யாவருக்குமுன்னே நடந்தான். அவனை ஒருவருந் தடைசெய்யவில்லை. அனைவரும் அவனுக்கு பின்னே நடந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தாழ்வாக நினைத்தற்குத் தகுந்த பிரயோஜனம் அபூஜஹலுக்கு உடனே கிடைக்காமல் போகவில்லை. சிறிது தூரம் சென்றபிற்பாடு, வழியில் கிடந்த கட்டையொன்று தெய்வ செயலாய் அபூஜஹல் ஏறியிருக்கும் ஒட்டகத்தின் காலில் இடறிற்று. அவ்வொட்டகம் அந்த இடறுதலால் தடுமாறித் தரையில் சாய்ந்துவிழுந்தது. அப்போது முதுகில் உட்கார்ந்திருந்த அபூஹகில் தலைகீழா யுருண்டு நிலத்தில் விழுந்தான். அவன்முகம் தரையில் அடியுண்டு வாயிலும், நாசியிலும் இரத்தம் பிரவாகித்து ஓடிற்று.

மடையர் பிதாஎன அர்த்தந்தரும் அபூஜஹல் என்னும்கொடிய கிஷ்ரேன் இவ்வாறு விழுந்து எழுந்தபின் அங்குள்ளவர்கள் அனைவரும் ஒத்து "இவன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசமின்றி அப்பிரதானமாக எண்ணினபடியால் இவ்விதம் தரையில்விழுந்து முகம் சிதைந்து இரத்தஞ்சிந்த நேரிட்

டது. வரவர இவனுக்கு நேரும் விக்கினங்கள் மிக வுண்டு. இன்னும் மகாபெரிய ஆபத்துக்கள் இவனைப்பிடித்து வருத்தும்" என் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு, உத்துபா என்பவனை அக்கூட்டத்துக்கு முன்னிலையாக நடத்திக்கொண்டு சென்றார்கள். இவ்விதம் உத்துபாவுக்குப்பின் யாவரும் போகிறபோது, மகாபெரிய வேங்கையொன்று சீறிச் சினந்து, இடியின் ஒலிபோலக் கர்ச்சித்து, உத்துபாவுக்கு முன் எதிர்த்து வந்தது. இவ்விதம் குமுறொலியுடன் வரும் வேங்கையை உத்துபா கண்டு உள்ளந் தடுமாறி கால்கை பதறினான். தான் ஏறியிருக்கும் ஒட்டகத்திலிருந்து உருண்டு நிலத்தில் விழுந்தான். உத்துபா கீழே விழுந்தபோதே அவ்வேங்கை அவன் ஏறியிருந்த ஒட்டகத்தைத் தாவிப் பற்றி இழுத்துக் கொண்டு அருகில் உள்ள வனத்துள் சென்றது. இதைக்கண்ட மற்றவர்கள் மனம் கலங்கினார்கள். சூரியன் அஸ்தமாய்விட்டது.

சூரியன் அஸ்தமானது வழி இன்னது எனத் தெரியாவண்ணம் எங்கும் காரிருள் மூடிக்கொண்ட படியால், உடனே சரக்குப் பொதிகள் எல்லாவற்றையும் இறக்கி கொண்டு, அந்த வனாந்தரத்தில் தங்கினார்கள். அன்று இராமுழுதும் எங்கும் இருள்பரந்து இருந்தபடியால், ஒவ்வொருவரும் தத்தம் சரக்குகளுடன் படுத்துக் கொண்டார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும், அவர்களைச் சேர்ந்தவர்களுடன் ஒருபக்கத்தில் நித்திரை செய்தார்கள். அபூஜஹல் என்பவன் முகத்தில் உண்டான காயத்தின் வருத்தத்தால் உடல் ஒடுங்கி, மனம் அஞ்சித் தூக்கம் வராமல் விழித்திருந்தான். பிறகு சூரியோதயமாய் விடிந்தவுடன் அனைவரும் புறப்பட்டார்கள். அப்போது உத்துபா என்பவன் யாவரையும் நோக்கி "நான் முன்னிலையாய் வரமாட்டேன், வேறொருவரை நியமித்துக் கொள்ளுங்கள்" என மறுத்து விட்டான். உடனே அனைவரும் இசைந்து, ஆசு என்பவனை முன்னிலையாக்கி. அவனைத் தொடர்ந்து நடந்தார்கள்.

13-வது அத்தியாயம்.

சுரத்திற் புனலழைத்தது.

கலிச்சந்த விருத்தம்.

பரத்திற்கொரு திருத்தூதுவர் பயகாம்பர்மற் றெவர்க்கும்
வரத்திற்கன திறத்தாரருள் வல்லார்புகழ் நல்லார்
சிரத்திற்குளி ருடுவந்திகழ் தீனாயக ரிறசூல்
சுரத்திற்புன லழைத்தீந்திடு துதியானதை நவில்வாம்.

இதன் பொருள்.

கடவுளாகிய அல்லாஹு தஆலாவுக்கு ஒப்பற்ற தூதர்களுமாய், மற்ற நபிமார்கள் யாவருக்கும் வரத்திலே மிகுந்த திறத்தையுடையவர்களுமாய், அருள் வல்லமையை யுடையவர்களுமாய். நன்மை பொருந்திய கீர்த்தியுடையவர்களுமாய், தலையிலணியும் பாகையினிடத்துட் குளிர்ந்த நட்சத்திர மொன்றிருந்து இலங்குகின்றவர்களுமாய், தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்திற்கு நாயகமுமாய் வருகின்ற றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஷாம் தேசத்திற்குப் போகும் வழியில், கொடூரமாகிய பாலைநிலத்திற்போய் அகப்பட்டதினால், கூடப்போன காபிலாக்களென்னும் பிரயாணிகள் யாவரும், தண்ணீரானது ஒரு சொட்டேனுங் கிடையாமல் அவஸ்தைப்படுவது கண்டு, அவர்கட்கெல்லாம் தாகந் தீரும்படி பூமியிலிருந்து நீர் சுரந்து பொங்கி வர அழைத்து, எல்லோர்களுடைய தாகத்தையுந் தீர்த்து மனங்குளிர வைத்த புகழாகிய காரண சரித்திரத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திரப் புராணம்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

முன்னிலை யாக நடந்திட நடந்து
முதிரட விகள்கடந் ததற்பின்
றன்னிக ரில்லான் றிருவுளப் படியாற்
றரையினில் ஜிப்றயீ லிறங்கி
மின்னிலத் தெவர்க்குந் தெரிகிலா வண்ண
மினம்பிடி யொட்டையோன் றெளிதாய்ப்
பன்னரும் பாதை தலைதடு மாறப்
பண்பொடு கொடு நடத்தினரே.

வசனம்.

நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் கூடிவரு மனைவரும், ஆசு என்பவனுக்கு பின்னடந்து, காடு, மலை, குன்று, குளம், முதலான இடங்களை யெல்லாம் கடந்து போகிற போது, அல்லாஹு தஆலாவுடைய கட்டளைப்படி வானவர் பெருமானாகிய ஜிப்ரமீல் அலைஹிஸ்ஸலாம் ஒரு பெண் ஒட்டகத்தைக் கொண்டுவந்து, அதன் மூக்கணாக் கயிற்றைத் தம் கையில் பிடித்துக் கொண்டு, எவர் கண்ணிற்கும் தோற்றாதபடி ஆசு ஏறி நடத்தும் ஒட்டகத்துக்கு முன் நடத்திச் சென்றார். இப்படி நடத்திக்கொண்டு போகிறபோது, ஆசு ஏறி யிருக்கும் ஆண் ஒட்டகம் நூதனமாய்த் தனக்கு முன்போகிற பெண் ஒட்டகத்தைக் கண்டு அதைத் தொடர்ந்து சென்றது. ஆசுடைய ஒட்டகம் போகும் வழியே மற்றவர்கள் அனைவரும் தத்தம் வாகனங்களையும். பொதியேற்றி யிருக்கும் ஒட்டகம், கோவேறுக் கழுதை, எருது முதலானவைகளை யும் நடத்திக்கொண்டு போனார்கள். இப்படி நடந்து போகிற போது, ஜிப்றமீல் அலைஹிஸ்ஸலாம் தாம் கொண்டு வந்த ஒட்ட கத்தை வர்த்தகக் கூட்டத்தார் கிரமமாய்ச் செல்லும் மார்க்கத்தை விட்டு வேறு மார்க்கத்தில் நடத்தினபடியால், அனைவரும் வழி தவறி அந்த புது மார்க்கத்திற் சென்றார்கள்.

இவர்கள் செல்லும் புது மார்க்கம் முந்தி அகன்று வழி நடைக்கு ஒத்திருந்தது. இருந்தாப்போலிருந்து, வர வரச் சிறியதாய்க் குறுகி, முடிவில் பாதையில்லாத வனாந்தரமாகி விட்டது. அவ்விடம் நிர்மானுஷியமான பாலைவனம், அங்கே பரந்து தோன்றும் கானலின் வெப்பமும், காட்சியும், வடவாமுக அக்கினியானது சமுத்திர ஜலம் முழுமையும் அறக்குடித்து விட்டு அங்கு விளையாடிக்கொண்டு இருப்பதை யொத்திருந்தது. உஷ்ணம் மிக்க கானலினால் கரித்த வெறுந்தருக்களன்றி, பசுமை நிறமுள்ள பூண்டு ஒன்றையாவது அங்கே காணுதலரிது. அநேக இடங்களில் தரைபிள வுண்டும், மலைகள் வெடித்தும் உள்ளிருந்து எழும் அக்கினியின் கொதிப்பால், அவ்விடத்தில் பைசாசங்கள் கால்வைக்கக் கூடுமே யன்றி, மனிதர் அடியிடுவதற்கு இயலாது. ங்கும் அக்கினி மயமாய், மலைகளையும் உருக்க செய்யும் கானல்

பரந்த அந்தப் பாலைவனத்தில், இவர்கள் அனைவரும் சேர்ந்தவுடன் வெப்பத்தைப் பொறுக்க மாட்டாமல் தீயிலிட்ட தளிரைப்போல வதங்க ஆரம்பித்தார்கள்.

அப்போது அக்கினியாய்க் கொந்தளிக்கும் தரையின் வெப்ப மும், மேலே தகிக்கும் சூரிய வெப்பமும் இவர்களைச் சூழ்ந்து கொண்டபடியால், பெரிய வேதனையில் சிக்குண்டு உடல்வாடி, நாவு உலர்ந்து, வாய்நீர் வரண்டு, மனம் பதறி, தாகம் மீறி, நீர் தேடிக் கொண்டு திரிந்தார்கள். சிலர் ஒரு சிறங்கைத் தண்ணீராவது கிடைக்காத அந்தப்பாலையில், நீர் விரும்பி ஓடித் தவித்து, தரைச் சூட்டுக்காகக் கீழே ஆடைகளையிட்டு, மேற் சூட்டுக்காக ஒட்டக வயிற்றின் கீழ் தலையை யிட்டுக்கொண்டு நிற்பார்கள். சிலர், நாம் திரவியம் சம்பாதிக்க வந்தோமா! அல்லது இங்கு வந்து உயிரை யிழக்க வந்தோமா! என்று பரிதபிப்பார்கள். சிலர், இது உலக மெல்லாம் அக்கினி பற்றி யெரியும் காலமோ! என்பார்கள். சிலர் நாம் ஊரைவிட்டு எழுந்த தினத்தின் முகூர்த்த பலனோ! என் பார்கள். இவ்விதம் பலரும் பலவிதம் புலம்பி, உள்ளங் கலங்கி மயங்கினார்கள்.

இவர்கள் இவ்விதம் கலங்கித் தவிக்கும்போது நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அந்தப் பாலையின் தீங்கு அற்பமாவது பாதிக்கவில்லை. அவர்கள் தாம் ஏறியிருக்கும் ஒட்டகத்தின்மேல் முழுமதி யுதயமானதுபோல், வலது கையில் ஆயுதம் தாங்கி, முகமிலங்க, கஸ்தூரி வாசம் நான்கு புறமும் காததூரம்மட்டும் வீசிப் பரிமளிக்க பிரகாசத்துடன் சுகமாய் வீற்றிருந்தார்கள். அப்போது அபூஜஹலென்னும் துஷ்டன் மற்றவர்களை நோக்கி சொன்னதாவது :—

சரித்திர புராணம்.

எழுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்

பாலையி லடைந்து பசியினொ டிடைந்து
பலபல வருத்தமுற் றதுவும்
வேலைவா ருதிபோல் வழிபிழைத்ததும்
விழுதியாரவின் முகமுடைந் ததுவுங்

கோலமாற் புலிவக் ததுமுகம் மதையான்
கூட்டிவந் துறுபவ மெனச்
சாலவு முரைத்தார் னீநிறை வெறுத்த
தறுகணு னெனுமபூ ஜகிலே.

வசனம்.

"நாம் அனைவரும் வரும் வழியில் கான் மேவிழுந்து நாசியும் வாயும் சிதைந்து உதிரம் சிந்தினதும், வேங்கைவந்து உத்துபாவுடைய ஒட்டகத்தை பிடித்துக்கொண்டு போனதும், வழி தடுமாறி மார்க்கமல்லாத மார்க்கம் நடந்ததும் இப்பாலைநிலம் அடைந்து வருந்தியதும் ஆகிய இவற்றிற்கெல்லாம் காரணம் முஹம்மதைக் கூட அழைத்துக் கொண்டுவந்த தோஷமே யன்றி வேறல்ல" என்றான். மனுஷ சுபாவம் சிறிதுமில்லாத அபூஜஹல் என்னும் மூழுமடையனது வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்பவர் ஒருவருமில்லை. ஒவ்வொருவரும் சம்பவித்திருக்கும் அபாயகரமான நிலைபரத்தில் தத்தளித்து மனச்சோர்வடைந்து பரிதபித்தார்கள். அப்போது, அவ்வனாந்தரம் எங்கும் நமர்வழியா யெழும்பும் புகை மண்டி திசை யறியக் கூடாமலிருந்தது. நாம் வரும் மார்க்கத்தில் சம்பவிக்கும் இவ்வித இடையூறுகளுக்கும் ஆபத்துகளுக்கும் நிர்பந்தங்களுக்கும் முகாந்திரம், இன்னதுதான் எனச் சிந்தித்து அறிபவர் அவர்களில் யாருமில்லை. ஆனால், அதன் மர்மம் அபூபக்கர் ஒருவருக்கு மாத்திரம் தெரியும். நேரிட்ட விபத்துகளின் மூலகாரணம் தெரிந்த புத்திக் கூர்மையும், விவேக சக்தியும் சன்மார்க்கமுமுள்ள அபூபக்கர், ஹாரிது என்பவரை விளித்து "நாம் அனைவரும், அபாயகரமான இந்தப் பாலைவனத்தில் அனுபவிக்கும் துன்பம் நீங்கி, செவ்வையான மார்க்கத்தையடைந்து, க்ஷேமமாகவும் விரைவாகவும் ஷாம் இராஜ்ஜியம்போய்ச் சேர வேண்டுமானால், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னிலையாக்கி, நடக்கவேண்டும்" என்றார்.

இச்சொல்லை ஹாரிது கேட்டு, மற்றவர்களுக்கு அறிவித்தார். அனைவரும் அபூபக்கர் சொன்ன உத்தம வசனத்தை ஆராய்ந்தறிந்து ஐக்கியமானார்கள். யார் முன்னிலையாய் நடந்தபோதிலும் தாங்கள் சிக்குண்ட ஆபத்தைவிட்டு விலகிக்கொள்வதுதானே அவர்களின் பிரதானமான கருமம்.

ஆனதுபற்றி, அனைவரும் மனம் ஒத்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அக்கூட்டத்துக்கு முன்னிலையாக்கினார்கள். உடனே அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஏறியிருக்கும் ஒட்டகத்தின் லகாம் கயிற்றைப் பற்றிநடந்தார். ஒருக்ஷணநேரத்துக்குள் அந்தக்கொடுமையான பாலைவனம் தொலைந்து, நாபக்கமும் வழிகள் மிகத் தெளிவாய்த் தெரிந்தன. அப்போது அனைவரும் உள்ளங்குளிர்ந்து "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முதன்மையாக்கி நடந்தபடியால், செவ்வையான மார்க்கங்கள் தெரிந்தன. பாலைவனந் தொலைந்து, அதன் கொடுமையும் ஒழிந்தது. இன்னும் க்ஷணப்பொழுதில் தாகந் தீரத் தண்ணீர்பருகிக் களைதீர்வோம்" என ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

அவ்வேளையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தாங்கள் ஏறியிருக்கும் ஒட்டகத்தின் கழுத்திலிருக்கும் கயிற்றை அசைத்தார்கள். உடனே அதன் கருத்தை அறிந்த அவ்வொட்டகம் தன் வலதுகாலைத் தூக்கி ஓங்கி நிலத்தில் அடித்து அசைத்தது. அவ்வடிபட்ட இடத்தில் ஊற்று ஒன்று பிரவாகித்து ஓடிற்று. வெண்ணுரை சிதறத் திரைகள் மலிந்து பெருக்கெடுத்துப் பாய்ந்த அந்நதியின் பிரவாகம், அந்தப்பாலைவனத்தை மருத நிலமாக்கி விட்டது. அதனால் வேரற்று உலர்ந்து கரிந்த தருக்களெல்லாம் தழைத்தன. தாமரை, அல்லி, குவளை முதலானவை மலர்ந்தன. விருட்சங்கள் எல்லாவற்றிலும் பூ, காய், கனி முதலானவை யனைத்தும் நிறைந்தன. சிறங்கை நீராவது அகப்படாத கொடியபாலை பூங்காவனமானபோது, இக்காட்சியைக் கண்கூடாய்க் கண்ட அக்கூட்டத்தார் மனமகிழ் கூர்ந்து, கனி காய்களைப் பறித்துத் தின்று பசிக்களை தெளிந்து, தாகந்தீரத் தண்ணீர் பருகி, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பலவாறாகப் புகழ்ந்து கொண்டாடித் துதி செய்தார்கள்.

14-வது அத்தியாயம்.

பாந்தன் வதையுண்டது.

கலி விருத்தம்.

காந்துசுர மீதுமிகு காரணம தாக
நீந்துபுன லீந்தநபி நெஞ்சமகிழ் வாகிப்
போந்தவழி தன்னிடை பொருப்பினை யிரைத்தார்
பாந்தளை வதைத்தசரி தம்பகரு வாமே.

இதன் பொருள்.

திரிலோக ரட்க்ஷக சம்பன்ன சௌபாக்கிய தயாநிதியான நபி முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், உஷ்ணம் அதிகரித்த கொடுரமான பாலைநிலத்தில், மிகுந்த காரணமாகப் புது நீரமைத்துக்கொடுக்க, அதையுண்டு யாவரும் மனமகிழ்ச்சியாய்ப் போகும் வழியினிடத்தில், மலைபோல் உடல் பருத்துச் சீறிக்கொண்டு வரும் பாம்பைக்கொன்ற சரித்திரத்தை சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்

கனலுண்ட கடுஞ்சுர மீது நறும்
புனலுண்டு பொருந்தின ரவ்வு மையின்
சினமுண் டெழுசெங் கதிர்போங்கு மிரு
ளினமுண்டு குணக்கி லெழுந் ததுவே.

வசனம்.

மகாபெரிய ஆபத்தாய் வந்து குறுக்கிட்ட பாலைவனம் மருதநிலப்பாங்காய், அனைவரும் தண்ணீர்பருகித் தாகந்தீர்ந்து, ஆனந்தம் கொண்டாடும்போது, சூரியன் அஸ்தமித்தது. அன்றிரவு அனைவரும் அங்கே தங்கிச் சூரியன் உதயமானவுடன் புறப்பட்டு, குதிரை ஒட்டகம், கோவேறுக் கழுதை, எருது அடங்கலையும் நடத்திக்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்தொடர்ந்து நடந்தார்கள். அப்போது, நபிநாயகம் ஏறியிருக்கும் ஒட்டகத்துக்கு முன் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நடந்து சென்றார். இவ்விதம் நடந்து போகும்போது, வானம், பூமி, மலை, வனம், மற்ற திசைகள் ஒன்றும் கண்களுக்குத் தோன்றாதபடி பெரிய இருள் வந்து எங்கும் மூடிக்கொண்டது. பகற்காலத்தில் இருளுண்டாகத் தக்க விதமாய் காரிருள் பரந்து மூடிக்கொண்டவுடனே, வழிதெரியாமல் அனைவரும் உள்ளம் கலங்கினர். மறுபடியும் நபிகட்திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பொருட்டால் இவ்விருளைவிட்டு நாம் மீட்சி பெறுவோம் எனத் தெளிந்து நடந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அச்சம் சிறிதுமின்றி அவ்விருளிலேயே முன் நடந்தார்கள்.

இவ்விதம் அனைவரும் நடந்து உறுவா என்னும் ஆற்றங்கரையில் போய்சேர்ந்தார்கள். அந்த ஆறு மலையிலிருந்து வழியும் பெரிய அருவியாயிருந்தும், அப்போது தண்ணீர் அருகியிருந்தபடியால், இக்கூட்டத்தாரில் சிலர் மாத்திரம் தாகந்தீரத் தண்ணீர் பருகினர், அநேகருக்குநீர் அகப்படவில்லை. அதைக்கண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனமிரங்கி அல்லாஹுத்தஆலாவைத் துதித்துப் பிரார்த்தித்தார்கள். உடனே தண்ணீர் பிரவாகித்து ஓடிற்று. அனைவரும் கண்டுகளித்து குளித்தும், பருகியும், வாகனங்களுக்கு ஊட்டியும் சந்தோஷ மடைந்தார்கள்.

பிறகு, அங்கிருந்து நடந்து பலவழிகளையுங் கடந்து வெகு தூரம் சென்றனர். இவர்கள் செல்லும் மார்க்கத்தில் வழிபோக்கன் ஒருவன் காலும் கையும் பதறி, வேர்வையால் உடல் முழுதும் நனைந்து, வாய்குழறி, நாவுழன்று "அந்தோ அந்தோ!! விதியே! இனி எப்படி பிழைக்கக்கூடும்" என அலறிக்கொண்டு எதிரில் வந்தான். இவ்விதப் பரிதாபமான ஸ்திதியில் திகில்பிடித்து உடல் நடுங்கி வாய்வழங்காது புலம்பிக்கொண்டு வந்தவனை, இக்கூட்டத்தார்கண்டு, அவனைநோக்கி "நீ என்ன காரணத்தினால் இவ்வளவு பயங்கரங்கொண்டு கலங்குகின்றாய்?" என்று விசாரித்தார்கள். அப்போது அவன் இவர்களை நோக்கி சொன்னதாவது.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

சினமுண்ட செழுங்கதிர் வேலுடையீர்
வனமுண்டரை நாழிகை யுள்வழியிற்
கனமுண்டொரு கார்ண மாமலையி
னினமுண்டு பருத்தெழு கின்றதுபோல்

அரவொன்றுள தத்திரி யும்பரியும்
கரமொன்று கரித்திர ளும்மெதிரே
வரவுண்டிரும் வாறலை நீளமதை
யுரமொன்றி யுரைத்திட நாவரிதே.

வசனம்.

இங்கிருந்து அரைநாழிகைத் தூரத்துக்கு அப்புறம் நடுப்பாதையில் சர்ப்பம் ஒன்று இருக்கின்றது, அதன் உடலின்பருமம் மலைக்கு ஒப்பானது. அதன் நீளத்தின் அளவு என்றால் சொல்ல இயலாது. உங்கள் வாகனங்கள் அனைத்தையும் ஒரேவாயில் அது விழுங்கி விடும். அதன் கண்களில் அக்கினிப்பொறி பறக்கும், அதன்கடைவாயிரண்டிலும்உரசி அடிக்கடி நீளும் பிளவான நாவின் வேகத்தையும், பற்களின் கூர்மையையும் விவரித்துச் சொல்ல எவராலும் முடியாது. அது என்னைக் கண்டு சுழல் காற்றைப்போல மூச்செறிந்து, சினம் கொண்டு சீறி, என்னைவிழுங்கும் வண்ணம் ஒரு மலை நடப்பது போல நடந்து வந்தது; அதோ வருகின்றது பாருங்கள்'' என்றான். மன நிலை மயங்கி அவன் பதறிச்சொன்ன வார்த்தையைக்கேட்ட அனைவரும் உள்ளம் கலங்கி, உடல் நடுங்கி, நாவுலர்ந்து, ஸ்மரணையின்றி, அறிவு மயங்கினார்கள். அந்த வேளையில் சர்ப்பம் எதிர்நோக்கிநெருங்கி வந்தது. வழிப்போக்கன் பரிதாபித்துச் சொன்ன சொற்களையும், தமக்குப் பின்வரும் அனைவரும் அதைக்கேட்டு அறிவு மயங்கிக் கலங்கின. கலகத்தையும் சர்ப்பம் எதிர்த்து வருவதையும் நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது காருண்யம் நிறைந்த விழிகளால் கண்டு, தாங்கள் ஏறியிருக்கும் ஒட்டகத்தை விட்டுத் தரையில் இறங்கினார்கள்.

அப்போது அந்தச் சர்ப்பம் குழறொலியிட்டு, நாசியால் புகை மயமான நெடுமூச்செறிந்து, வெகுண்டு வருவதை நோக்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதற்கு முன் சென்றார்கள். நபிநாயகமவர்கள் தனக்கு முன் வந்ததைக் கண்ட சர்ப்பம், சினம் மீறித் தன் படத்தை விரித்து, விஷத்தைச் சோனா மாரிபோலச் சொரிந்தது. உடனே நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தரையில் கிடந்த ஒரு துரும்பைத் தம் கையில் எடுத்து சர்ப்பத்தை நோக்கி வீசினார்கள். ஒருமுழ நீளமுள்ள அந்தத் துரும்பை வீசியவுடன், அந்தச் சர்ப்பத்தின் உடலில் ஊறுபட்டு உதிரம் பிரவாகித்தது. துரும்பினால் அடியுண்ட போதே அது அங்குள்ள வனத்தில் புரண்டு உருண்டு கொண்டு போய், ஒரு பெரிய மலைக்கல்லைக் கடித்துக்கொண்டு தன் உயிரை விட்டது. மலைக்கொப்பான அந்த சர்ப்பம் வதையுண்டு விழுந்ததை கூட்டத்தார் அனைவரும் கண்டு ஆனந்தம்கொண்டு பெரும் சப்தமிட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து, நாம் அனைவரும் முஹம்மதுவுடைய சொல்லுக்கு வழிப்பட்டு நடக்கவேண்டும் என்று சந்தோஷ சமுத்திரத்தில் மூழ்கிச் சொன்னார்சள்.

15-வது அத்தியாயம்.

நதி கடந்தது.

கலிச் சந்த விருத்தம்.

கதியிருந்திடு சுவனமங்கையர் கனகவம்புய பாதமே
யதிவிதங்கொடு துதிபொருந்திட வமரர் வந்து பணிந்திட
மதிவணங்கிடு முஹமதன்பொடு வரத்தகாதிபர் சூழ்வர
நதிகடந்திடு சரிதையின் பரில் நவிலுகிற்பமி யாமரோ.

இதன் பொருள்.

மோக்ஷமிருக்கும் சொர்க்க லோகத்துப் பெண்களாகிய ஹூறுல் ஈன்கள், பொன்னின் தாமரை போன்ற பாதத்தில் அதிக பணிவிடை கொண்டு பொருந்தித் துதிக்க, வானவர்களான மலாயிக்கத்துகள் வந்து பணிய, சந்திரன் வானத்தைவிட்டும் இறங்கி வணங்கும் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அன்போடு, பூர்வீக வர்த்தகர்களாகிய மக்கமா நகரத்தார்கள் சூழ்ந்து வரத் தாங்கள் போகும் வழியில் குறுக்கிட்ட ஆற்றைக் கடந்து, சென்ற சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்,

கட்செவி பகையறுத் தரிய கானகத்
துட்படு மிடர்தவிர்த் தொளிரு வள்ளலை
வட்படும் வேலுடை மாக்க ளியாவரு
நட்பொடு கலந்துடனடந்து போந்தனர்.

வசனம்.

உக்கிரம் மிகுத்து முன்னேறி கர்ச்சனையுடன் எதிர்த்த சர்ப்பத்தை வதைத்து, அதன் ஆபத்திலிருந்து விலக்கின காருண்யராகிய காரணர் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனைவரும் பின்பற்றி, வியந்து கொண்டாடி அங்கிருந்து நடந்து சென்றார்கள். பல இடங்களையும் நடந்து சென்றபின், மிக உயர்ந்த பர்வதங்களும், அவைகளில் நின்று வழிந்து பாயும் அருவிகளும், அடர்ந்து நெருங்கின ஒரு கானம் எதிர்ப்பட்டது. இவர்கள் அனைவரும், அந்த மலைத்தொடர்களுக்கு இடையில் ஊடுருவிப் பாய்ந்தோடுகிற ஆற்றங்கரையில் சரக்குகள் சாமான்கள் எல்லாவற்றையும் இறக்கிக்கொண்டு தங்கி, தண்ணீர் பருகிக் களைதீர்ந்து அன்று பகல் முழுவதும் இருந்தார்கள். பிறகு சூரியன் அஸ்தமித்தது. சூரியன் மறைந்து இருள் படர்ந்து இரவானபோது, அந்த ஆற்றங்கரையிலேயே அனைவரும் படுத்து உறங்கினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஒருபுறம் நித்திரை செய்தார்கள்.

அனைவரும் அயர்ந்து தூங்கும் நடுஜாமத்தில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொர்ப்பனத்தில் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து "முஹம்மதே! இப்போது இந்தப் பெரிய மலைத்தொடர்களையும் அமிழ்த்தி, மேற்கொள்ளத் தக்கதாய் இந்த நதி பிரவாகித்து வரும். தாங்களுந் தங்கள் கூட இருப்பவர்களும் விரைந்தெழுந்து அப்புறம்போங்கள்" என்று மொழிந்துவிட்டுப் போனார். இக்கனவைக்கண்ட நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விழித்து, அருகிலுள்ளவர்களை நோக்கி "இந்த நதி பிரவாகித்து இங்குள்ள மலைகளையெல்லாம் முழுகப்பண்ணும்படி வரப்போகிறது. அனைவரும் எழுங்கள்" என்றார்கள். இச்சொல்லைக் கேட்ட அனைவரும் திகில்கொண்டு, சகலவஸ்துக்களையும் வாகனங்களையும் அங்குள்ள ஒரு பெரிய மலைச் சிகரத்தில் கொண்டுபோய் சேர்த்தனர். அனைவரும் அந்த மலைச் சிகரத்திலேயே தங்கினார்கள். அப்போது பொழுது விடிந்து சூரியன் உதயமாயிற்று. உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்ட கனவின் பிரகாரம் அந்த நதி பிரவாகித்தது.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

அரிசினக் கொடுவரி யமிழ்ந்து போதரப்
பொரியரைத் தருக்களைப் புரட்டிப் பொங்கிய
நுரையிரு கரைகளு நுங்க மானதிப்
பிரளய மிடனறப் பெருகி வந்ததே.

குறவரைக் குறிஞ்சிவிட் டழ்த்துப் பாலையின்
மறவரை முல்லையி லாக்கி மாசுடைத்
தொறுவரை நிரையொடுஞ் சுருட்டி வாரியே
யுறைபுனற் பெருக்கெடுத் தடர்ந்த தெங்குமே.

வசனம்.

சிங்கம், யானை, புலி, கரடி முதலிய வன விலங்குகளும், மிகப் பருத்து ஓங்கியவிருட்சங்களும் அலைகளால் ஒதுக்கப்பட்டுமிதந்தன. திடர்கள், குன்றுகள் யாவும் நீரில் முழுகின. வனங்கள், பாலைகள் எல்லாம் பிரளயத்தால் மூடப்பட்டன. மனிதர்கள் சஞ்சரிப்பதற்கு மலைச்சிகரங்களேயன்றி, தரை முழுவதும் ஜலத்தினால் மூடப்பட்டபடியால், வேறு இடமில்லை. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், மற்றவர்களும் அந்த மலையுச்சியை விட்டு நிலத்தில் தங்குவதற்காவது, அல்லது நடந்து செல்லுவதற்காவது தானமும் வழியுந் தெரியாமல், மூன்றுநாள் பரியந்தம் தங்கி, பிரவாகம் வற்றுவதை கருத்தாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மூன்று நாள் சென்றும் நாட்குநாள் பிரவாகம் மும்முரமாய்ப் பிரவாகித்ததேயன்றி, குறைவதாக இருக்கவில்லை. ஜலப் பிரவாகம் வற்றாத தன்மையைக் கண்ட அவர்கள் அனைவரும் சஞ்சலப் பிரவாகத்தில் மூழ்கினார்கள். இவ்வண்ணம் துன்புற்ற அவர்கள் அனைவரையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நோக்கி "இன்று பகலும் இரவும் இங்கிருந்து, மற்றநாட் காலையில் நாம் புறப்பட்டுப் போவோம்" என்று மொழிந்தார்கள். இதைக்கேட்ட அனைவரும் கரையில்லாத ஜலப் பிரளயமாய் எங்கும் பரந்த மகா பெரிய இப்பிரவாகத்தில் "மற்றநாட் காலையில் போவோம்" என்று முஹம்மது சொல்வதால், அவர் கருத்தின் வெற்றியை இருந்துஅறிவோம் என்று கவலையும் மனச்சோர்வும் அடைந்து இருந்தார்கள். அன்று சூரியன் அஸ்தமித்து நள்ளிரவு

ஆனபோது நபிநாயகத்தின் கனவில் ஜிப்ரயீல் வந்து "முஹம்மதே, இன்று சூரியன் உதயமானவுடன் இங்கிருந்து மான் ஒன்று நடந்து போகும். நீங்கள் அனைவரும் எழுந்து அந்த மானைப் பின்றொடர்ந்து நடவுங்கள்" என்று சொன்னார்கள்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இக்கனவைக் கண்டு விழித்தபோது, சூரியன் உதயமாயிற்று. உடனே அனைவரையும் எழுப்பி மலைச்சிகரத்திலிருந்த சாமான்களை யெல்லாம் வாகனங்களில் ஏற்றுவித்து, தம்மைப் பின்றொடர்ந்து வரும்படி அழைத்துக்கொண்டு, இருந்த தானத்தைவிட்டு இறங்கி, பிரவாகத்தின் கரைப் பக்கத்தில் வந்தார்கள். எங்கும் ஜலப்பிரளயமா யிருந்தபடியால் வழிதெரியவில்லை. அப்போது, பொற்சடலத்தில் வெள்ளிப் பொறிகள் அமைத்த பாவனையாக விளங்கும் செந்நிறமும் வெண் புள்ளியும் உள்ள மான் ஒன்று அங்குவந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன், பிரவாகத்தில் இறங்கி நடந்தது. அதைக்கண்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மகிழ்வடைந்துமானைத்தொடர்ந்து நடந்தார்கள். மற்றவர்கள் அனைவரும் ஆச்சரியமுற்று, நபிநாயகத்தைத் தொடர்ந்து நடந்தார்கள். இவர்கள் நடக்கையில் அனைவருக்கும் தண்ணீர் கணுக்கால் அளவேயிருந்த தல்லாமல் அதிகரிக்கவில்லை. இவ்விதம் நடந்து போகையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தம்மைத் தொடர்ந்து வருபவர்களை நோக்கி "இப்பிரவாகத்தை அறத்தொலைக்கும் தத்துவக்காரன் அல்லாஹு தஆலா ஒருவனே யன்றி வேறில்லை என நீங்கள் உங்கள் இருதயங்களில் எண்ணிக்கொண்டு நடவுங்கள்" என்றார்கள்.

இச்சொல்லுக்கு அனைவரும் பொருந்தி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளை பண்ணினபடியே, இருதயங்களி லெண்ணிக்கொண்டு நடந்தார்கள் நபிநாயகமவர்களின் எந்த விஷயத்துக்கும் இணங்காமல் மாறு செய்யும் அபூஜஹ்லும் அப்படியே எண்ணிக்கொண்டு நடந்தான். இவ்வாறு அனைவரும் நடந்துபோகிறபோது, இவர்களில் ஒரு மாறுகண்ணன் மாத்திரம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தையை மீறி "நம்மை எவ்வகை நிர்பந்தங்களிலிருந்தும் மீட்டுக் காப்பது நம் சுவாமியே யன்றி வேறில்லை. இப்போது

இந்தப் பிரவாகத்திலும் நம்மை அந்த சுவாமியே இரட்சிப்பார்" என விக்கிரகத்தைப் புகழ்ந்து இருதயத்தில் நினைத்துக்கொண்டு நடந்தான். அப்போது அப்பிரவாகத்திலிருந்து சுழியொன்று சுழித்தெழுந்து, அவனைமாத்திரம் அமிழ்த்திக் கொன்றுவிட்டது. இப்புதுமையைக் கண்ட அவர்களனைவரும் அஞ்சி, நபிநாயகத்தின் சொல்லின் பிரகாரமே ஏகநாயனை நினைத்துக்கொண்டு நடந்து க்ஷேமமாய் அக்கரை சேர்ந்தார்கள். வாகனங்கள், சரக்குகள், மற்ற சாமான்களொன்றிலும் யாதொரு பழுதுமின்றி, பிரவாகத்தினால் சற்றும் இம்சை யடையாமல் கரை சேர்ந்தபடியால், எல்லாரும் நபிநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை துதித்துக் கொண்டாடினார்கள்.

16-வது அத்தியாயம்.

புலி வசனித்தது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நலிவுறு மகுஷறில் நமது தீனவர்
மெலிவு கண்டிறை யிடம் வெற்றிமன்றுட்கொள்
மலிபுகழ் முஹம்மதென் றறிந்து வல்லுரப்
புலிவச னித்திடும் புதுமை யோதுவாம்.

இதன் பொருள்.

வருத்தம் பொருந்திய மஹ்ஷர் என்னும் கடையுக நாளில், நமது தீனுல் இஸ்லாமாகிய உடன் பிறந்தான்மார்கள் மெலிவைக் கண்டு அல்லாஹு தஆலாவிடத்தில் வெற்றியாக மன்றாட்டங் கொள்வதைப் பெற்றுக்கொண்ட அதிக புகழுடைய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமென்று அறிந்து, வலுத்த நெஞ்சையுடைய புலியானது வசனித்த அற்புதத்தை சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலிநிலைத் துறை.

படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறிநதிப் பரப்பைக்
கடந்து கான்பல கடந்தரு நெறிசெலுங் காலைக்
கொடுந்த டக்கரித் திரளெனுங் குழுவினு ளொருவ
னடைந்து சீரஹு மதினடி தொழுதலைநீங்குவனால்

வசனம்.

நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை பின்தொடர்ந்து வரும் வர்த்தகர்களும், முன் சொன்ன பிரவாகத்தைக் கடந்து கரைசேர்ந்து, ஷாம் இராஜ்ஜியத்தை நோக்கி, அநேக வழிகளையெல்லாம் கடந்து நடந்தார்கள். இவ்விதம் அனைவரும் நடந்து போகிறபோது, அவ்வர்த்தகர்களிலுள்ள ஒருவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து பணிந்து நின்று "நாயகமே! இப்போது நாம் நடந்துசெல்லும் மார்க்கத்தில், கொஞ்சம் சில தூரங்களுக்கு அப்புறம் ஒருகாத தூரத்தில் நீரோடையொன்று இருக்கின்றது. அந்த நீரோடைக்கு அருகில் அந்தகாரமான வனமொன்று இருக்கின்றது. அந்த விருட்ஷங்களடர்ந்த வனத்துக்குள்ளே மகா பெரிய வேங்கையொன்று வாசம்செய்து கொண்டிருக்கிறது. அவ்வேங்கை எப்போதும் தன் நீண்டவாலைத் தரையிலடித்து, உடலைநீட்டிக் கால்களை மடித்துப் படுத்து, தனதுகடிவாய்ப் பற்களைக்காட்டி, இடிபோல் கர்ச்சித்து, கண்களின் தீப்பொறி நாலா பக்கமுஞ் சிதறும் வண்ணம் குமுறிக்கொண்டு கிடக்கின்றது. அது சிங்கம் தவிர மற்ற வனவிலங்குகள் அனைத்தையும் கொன்று பிளந்து தின்னும். அவ்வேங்கை கிடக்கும் அந்த வனத்தில் யானை, கரடி, எருமை, மான், மரை, பன்றி முதலான மிருகங்கள்ஒன்றும் போகிறதில்லை; போனாலோ மீண்டு வருகிறதில்லை. அங்கேபோகும் விலங்குகளை வேங்கை பாய்ந்து பிடித்துப் பட்சிக்காமல் விடாது. இந்த மார்க்கமாய் வரும் வழிப்போக்கர்கள் அநேகர், அவ்வேங்கைக்கு இரையாகியொழிந்தார்கள். அன்றியும் அநேகரின் ஏறுவாகனங்களாகிய மிருகங்கள் அதன் பாழ் வயிற்றில் ஜீரணித்தன. இப்போது நாமும் அந்த வழியாகத்தான் போக வேண்டும். நாம் போவதும் அச்சந்தான்" என்று சொன்னான்.

இச்சொல்லை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டு அவனை நோக்கி, "அவ்வேங்கை யிருக்கும் தானம் எது?" என்று வினவினார்கள். அப்போது அவன் அவ்விடம் மிக சமீபத்தில் தான் இருக்கிறது எனச் சொன்னவுடன், வலதுகையில் வாளாயுதத்தை பிடித்துக்கொண்டு பிரகாசம் விரிந்து

விளங்கும் உடலின் கஸ்தூரி கமழத் தரையில் பாதங்கள் தோயாமல் நடந்து, அவ்வேங்கை கிடக்கும் இடத்தை நோக்கிச் சென்றார்கள். சூரிய கிரணம் சிறிதும் தோன்றாத குகையில் பயங்கரமுண்டாகத் தக்க விதமாய்க் கிடந்த வேங்கை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருவதைக்கண்டு, உள்ளங் கலங்கி, உடல்ஒடுங்கி தலையைத் தாழ்த்தி வாலை யசைத்துக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமுகத்தில் வந்து வணங்கி நின்றுகொண்டு, தன் வாயைத் திறந்து அஸ்ஸலாமு அலைக்கும் யாறஸூலல்லாஹ் என்று ஸலாம் சொல்லி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி புலியானது பேசியது.

சரித்திர புராணம்

கலி நிலைத் துறை.

நலன்பெ றுங்குறை ஷிகளினில் வந்தநா யகமே
நிலம்ப ரந்துநின் பெருகிட வெழுந்தநீ ணிலமே
புலன்க ணின்புறக் கண்டனன் களித்தனன் பொருவில்
பலன்பெ றும்படி யாயின னெனப்பகர்ந் ததுவே.

வசனம்.

நன்மை பெருநிற்கும் குறைஷிகுலம் அனைத்திற்கும் நாயகமே! குபிர் என்னும் காரிருள் ஒழியத் தீன் என்னும் ஒளிவை விளக்க வந்த முழுமதியே! அல்லாஹு தஆலாவுடைய ரஸூல் என்னும் தூதரே! நபியே! தங்களை நான் என்னுடல் முழுவதும் புளகாங்கிதம் பெறும்படி கண்ணாரக்கண்டு, களித்து அதனால் முத்தி அடைந்தேன் என்று சொல்லிற்று. இவ்வண்ணம் வனவிலங்குகளில் சிறந்த புலி தங்களுக்குத் தெண்டனிட்டு நின்று வசனித்த வசனங்களை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுங் கேட்டு மனங்குளிர்ந்து, அதை நோக்கித் தங்கள் வலதுகையினால் அதன் தலையையும் முகத்தையும் தடவி, "வேங்கையே! நீ இவ்வனத்திலிருந்து கொண்டு வழிப்போக்கர்களையும் அவர்கள் வாகனங்களையும் கொன்று பட்சிப்பதை விட்டு, இன்று தொட்டு நிர்மானுஷ்யமான வேறு வனத்துக்கு போய் விடவேண்டும். இனி இங்கு இராதே" என்று ஆக்ஞை செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த ஆக்ஞைக்கு

அவ்வேங்கை வழிப்பட்டுத் தலைவணங்கி, அப்போதே அந்த வனத்தைவிட்டு வேறொரு வனாந்தரத்தை நோக்கி நடந்து போய் விட்டது. இந்தப் புதுமையைக் கண்ணாரப் பார்த்துநின்ற கூட்டத்தார்களில் அறிவிற்சிறந்த சிலர்“ முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையான நபிதான்” என்றுநம்பி சந்தோஷம் அடைந்தார்கள்.

17-வது அத்தியாயம்.

பாந்தள் வசனித்தது.

கலி விருத்தம்.

மாந்தரொடு விண்ணவரு மற்றுள படைப்பும்
ஆந்தரிக மின்னதென வேயறைய வொண்ணா
வேந்தன்மகிழ் நந்நபிமுஹம்மதை வியந்து
பாந்தள்வச னித்தவொரு பண்பையுரை செய்வாம்.

இதன்பொருள்.

மானிடர்களும், வானவர்களும் மற்றுமுண்டான படைப்புகள் யாவும், அவனது இரகசியம் இன்னதென்று அறியக்கூடாத ஆண்டவனாகிய அல்லாஹு தஆலா மகிழ்ச்சிக்குரியவராகிய நம் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை, ஓர் பாம்பானது துதித்து வசனித்த ஒப்பற்ற தகுதியான சரித்திரத்தை சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

வேங்கை போயபின் வள்ளலு மனைவரும் விரைவிற்
றூங்க ருஞ்சுமை யொட்டகம் புரவியுஞ் சாய்த்து
நீங்க ரும்பரற் கானையா றுகளையு நீந்தி
யோங்க லுஞ்சிறு திடர்களுங் கடந்துட னடந்தார்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உக்கிரம் அமைந்த அவ்வேங்கையை அங்கு நின்று அகற்றி விட்டு மனமகிழ்வுகொண்டு வரும் போது மலைத்தொடர், குன்று,

வனம், நதி முதலிய விடங்களனைத்தையும் கடந்து வர்த்தகர்கள் தம்மைப் பின் தொடர்ந்துவர நடந்தார்கள். அங்கிருந்து வெகு தூரம் சென்ற பிறகு அவர்களிலுள்ள ஒருவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யடுத்து அடிபணிந்து, “நாயகமே! அதோ தெரிகிற மலையின் கிழக்குப் புறத்தில் ஒரு குன்று இருக்கின்றது. அக்குன்றின் பக்கத்தில் பெரிய மலைப் பாம்பு ஒன்று கிடக்கின்றது” என்று சுட்டிக்காட்டி சொன்னான். இச்சொல்லைக் கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அனைவரையும் பிந்தி வரும்படி உத்திரவு செய்துவிட்டு, தாங்கள் மட்டும் அந்த நாகமிருக்கும் தானத்தை நோக்கி முந்தி நடந்து சென்றார்கள். நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அக்குன்றின் பக்கத்தை அடுத்தவுடன் அதன் அடிவாரத்தில் அந்த நாகம் கிடக்கக் கண்டார்கள்.

அதன் பருமன் சுளகின் அளவான புள்ளிகளும் திகில் விளையத்தக்க பருப்பமும், ஒரு சிறு மலையை யொத்த தலையுமுள்ள அந்த நாகம், கண்களில் அக்கினி எரியும்படி புயல் காற்றைப்போல மூச்செறிந்து, இருபிளவான நாவை அடிக்கடி நீட்டி விஷத்தை சிதறிக்கொண்டு, புழுதிகள் எழும் வண்ணம் தரையில் கிடந்து புரள்வதை நபிநாயகம் கண்டு, தங்கள் மனதில் அச்சம் உண்டோ இல்லையோ என்னும் விதம் சற்றே ஆலோசித்தார்கள். அந்த க்ஷணநேரத்திற்குள் “முஹம்மதே, அந்த மலைப்பாம்பு உமது பாதமலர்களைக் கண்டு களிக்க நாடி இந்த வழியில் கிடக்கின்றது. நீர் சிறிதும் அஞ்சாமல் அதை நெருங்கும்” என அல்லாஹு தஆலாவுடைய புறத்திலிருந்து ஒரு பெருந்தொனி, மலைகள் எல்லாம் எதிரொலியிடும்படி ஆகாயத்தில் தொனித்தது. இத்தொனியை காதாரக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன் கருதின சந்தேகமான அச்சம் ஒழிந்து, உள்ளக்தெளிந்து, மிக மகிழ்வாய் நடந்து அந்த நாகத்தை நெருங்கினார்கள்.

குமுறொலியும் நெடுமூச்சு விட்டு விஷத்தைத் திசைதோறும் சிதறிக்கொண்டு கிடந்த அந்த மலைப்பாம்பு, தன் தலையை நிமிர்ந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விழித்து உற்றுநோக்கி, இவர் அல்லாஹு தஆலாவுடைய றசூல் என்று தெளிந்து, நம் துயரம் இன்று ஒழிந்தது என மனமகிழ்ந்து, தனது

அகன்ற வாயைப்பிளந்து, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு சலாம்சொல்லித் தரையில் கிடந்து நெளிந்து வணங்கி "நபிமார்களுக்கு நாயகமே! தங்களின் பாதார விந்தத்தைக் கொண்டு (மனிதர் மாத்திரமல்ல) என்னையொத்த அஃறிணைப் பிராணிகளும் முக்தியடையும் என்னும் நம்பிக்கையை நான் தீரத் தெளியச் சிந்தித்து, நாம் என்று காண்போம்! என ஆவல் வைத்து நீண்ட கால பரியந்தம் இங்கே கிடக்கிறேன். நான் பிறந்த அன்று முதற்கொண்டு இந்நாள்வரையும் தங்களின் திருநாமத்தை மறந்து விடாமல், என் இருதயத்தி லிருத்தி யிருந்தேன். நான் இறந்துபோவதற்கு முன் என் எண்ணப்படி தங்களைக்கண்டு தரிசித்தபடியால், என்னை யொத்துத் தவஞ்செய்தவர்கள் யாருமில்லை" என்றது.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

ஆதிநாயகன் திருவொளி யினில வதரித்த
வேதநாயக மேயுமைக் கண்டதால் விளைத்த
பாதகம்பல தவிர்த்துமுற் பவங்களை யறுத்துத்
தீதிலாதநற் பதவியும் படைத்தனன் சிறியேன்.

வசனம்.

"யாவற்றிற்கும் முதல் இறைவனை அல்லாஹு தஆலாவின் அழகிய திருவொளியிலிருந்து உதயமாகிய சகல வேதங்களுக்கும் நாயகமான நபிகள் பெருமானே! சிறியவனாகிய யான், இன்று எனது கண்களால் தங்கள் பாதமலர்களைத் தரிசித்தபோதே நான் செய்த தீங்குகளெல்லாம் ஒழிந்து பரிசுத்தமாய், மோட்ச சாதனமும் பெற்றேன்" என்று கூறி இதுபோல மறுபடியும் நாம் என்று காண்போமோ! என மயங்கி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைநோக்கி "தங்கள் தீன் என்னும் மார்க்கம் உலகம் எங்கும் பரவி, எக்காலமும் நிலை பெறுவதாக" என வாழ்த்தி "ஏதும் கட்டளை யிடுங்கள்" என்று கேட்டது. இவ்விதம் அஞ்சி வணங்கி முறையிட்ட மலைநாகத்தை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நோக்கி, உள்ளம் களிகூர்ந்து "நீஇன்றுதொட்டு மனித சஞ்சாரமில்லாத மலைத்தொடர்களிலும், பெருங் காடுகளிலும் சென்று வாழ்நாள் கழிக்கவேண்டும். இவ்வித மார்க்கங்களில் இனி இருந்தால், உனக்கு விக்கினம் நேரிடும்" என்று ஆக்ஞை

செய்தார்கள். இவ்வாக்ஞைக்கு கீழ்படிந்த அந்நாகம், உடனே அடி பணிந்து உருண்டு புரண்டு, மலைநெளிவதுபோல நெளிந்து பெருங் காட்டை நோக்கிச் சென்றது. இவ்வாச்சரியகரமான காட்சியைக் கண்ட கூட்டத்தார் அனைவரும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

18—வது அத்தியாயம்.

இசுரு கண்டது.

கலி விருத்தம்.

நஸ்ரு னீக ணடுங்கிடக் காரணம்
விசுரு மாண்பின் விளைத்துறும் பூவினில்
அஷ்ரு பான வஹ்மதைப் பாதையில்
இசுரு காண்சரி தத்தை யியம்புவாம்.

இதன் பொருள்.

இந்த உலகத்தில் நஸ்ருனி ஜாதியார்கள் பயங்கரமாக அற்புதங்களைச் சிதறாமல் அழகாகச் செய்து வரும் சுத்தமான அஹ்மதென்னும் திருநாமத்தைக் கொண்ட நபிநாயகத்தை, பாதையில், இஸ்ருவென்னும் பெயரையுடையவர் கண்ட சரித்திரத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத் துறை.

எரிந்த கட்பொறி யரவுவந் துறையிட மிலனே
யருந்த வப்பொருண் முஹம்மது மடையிட மிவனே
தெரிந்து காண்பதற் கிவையிவை குறியெனச் சேர்த்தி
விரிந்த தம்பெருங் குழுவுட னடந்தனர் விறலோர்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மகா பெரிய அந்நாகத்தை, அங்கிருந்து பெருங்காடு மலைகளில் போய்த்திரிந்து உலவும்படி கட்டளை பண்ணிவிட்டு, வர்த்தகக் கூட்டத்தார் தம்மைப் பின்தொடர்ந்துவர நடந்தார்கள். இவ்விதம் பற்பல இடங்களையும் கடந்து, ஈத்தங்காடு முதலிய பலவகை காய்கனி

கள் நிறைந்த தருக்களடர்ந்த, நறு மலர்களால் அலங்காரம்பெற்ற தடாகங்கள் நெருங்கிக் கண்ணுக்கு இனிமையாய்த் தோற்றும் ஒரு நந்தவனத்தை யடுத்தார்கள். அந்த நந்தவனத்தின் நடுவில் அமைந்த சிறந்த மாளிகையில் குடும்பத்திற் சிறந்த மகாபண்டிதர் ஒருவர் வாசஞ்செய்கிறார் அப்பண்டிதர், முன்னுள்ள வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் ஐயமறக் கற்றுத் தெளிந்து, அவற்றின் உட்பொருள்களின் நுட்பமான கருத்தை சோணமாரி போலச் சொறியும் திராணி பெற்றவர்.

அன்றியும், ஆதம் நபி முதலாயுள்ள நபிமார்கள் அனைவரின் மார்க்க முறைமை யனைத்தையும் தீரத்தெளிய உணர்ந்த புண்யர். இவ்வுலகத்தில் பலவகையாய்ப் பிரிந்த சமயங்கள் அனைத்தையும், அவற்றின் பேதா பேதங்களையும், நுட்ப விஷயங்களையும் முற்ற முடிய கோட்டமிட்டு, இவைகளில் உண்மையான முத்தி மார்க்கம் இன்னது என்பதைக் கருத்தாயறிந்து, தம்மை யடைந்தவர்களுக்கு உபதேசித்து, நல்வழிகாட்டும் மகாபெரிய வேதாந்தியாவர். நல்லறிவு, நல்லொழுக்கம், நற்குணம், நற்செய்கை, அன்பு, ஆதரவு, இரக்கம், பொறுமை தெய்வ வழிபாடுகள் அனைத்திற்கும் இருப்பிடமாய் அகன்ற மனதையுடையவர். சர்வ கலைக்கியானி. இவ்விதத் தகுதிபெற்ற இஸ்ரு என்னும் நாமத்தையுடைய அந்தப் பண்டிதர், நீண்டகாலம் வரையும் அந்த மாளிகையில் தம்மையடுத்த அநேகருடன் வசித்துக்கொண்டிருந்தார்.

அப்பண்டிதோத்தம நிபுணர், ஒருதினம் தம் மாளிகையை விட்டு வெளிவந்து நந்தவனத்தில் உலாத்திக்கொண்டு நிற்கையில், யாதோ ஒரு காரணத்தின்பேரில் தம்மாளிகையின் மேன்மாடத்தில் ஏறி, மப்பு மந்தாரமின்றி விளங்கும் ஆகாயத்தைப் பார்த்தார். ஒரு பக்கத்தில் மேகஜாலங்கள் சூழ்ந்ததுபோலப் புழுதி யெழும்பி ஆகாயத்தை மூடிக்கொண்டிருப்பது கண்டு, இது என்ன புழுதி யென அதிசயித்தார். அப்போது தமது கண்களுள் ஒரு பெருங் கூட்டந் திரண்டு வருவதைக்கண்டு, 'இவர்கள் அறபு இராஜ்ஜியத்தாரோ! ஷாம் இராஜ்ஜியத்தாரோ! அல்லது மக்கமா நகரத்திலிருந்து வரும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வருகையின் ஆடம்பரமோ" எனத் திகைத்து, இவர்களின் வரவுக்கு வழிபார்த்து நின்றார். இவர் இவ்விதம்

நிற்கையில், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூட்டத்தார்களும் வரவர நெருங்கினவுடன், அக்கூட்டத்தின் முன்னிலையில் கார் மேக மொன்று குடையிட்டு வருவதை இஸ்ரு கண் குளிரக் கண்டு ஆநந்தமடைந்தார்.

காத்திமுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கருமேகமொன்று குடையிட்டு வருவதைக் கண்டு ஆநந்தம் கொண்ட பண்டிதர், வருங் கூட்டத்தாரை அடிக்கடி நோக்கி, முன் ஈஸா நபிதமக்குச்சொன்ன வார்த்தைகளை சிந்தித்து, இது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வரவின் ஆடம்பரமேயன்றி வேறல்ல எனத் தெளிந்து, தம் பணிவிடைகாரரில் ஒருவனை யழைத்து "நீ அதோ பாதையில் வரும் கூட்டத்தாரை யடுத்து, அவர்கள் அனைவரையும் நம் நந்தவனத்தில் தங்கி விருந்துண்டு போகும்படி நான் விரும்புவதாகச் சொல்லு" என்று கட்டளை பண்ணினார். உடனே அவன், அக்கூட்டத்தார் முன் அடைந்து "எங்கள் எஜமானனாகிய பண்டிதர் நீங்கள் அனைவரும் வந்து நந்தவனத்தில் தங்கி விருந்துண்டு போகும்படி கேட்டுக் கொள்கிறார்" என்று சொன்னான்.

இந்த உபசார வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அனைவரும், அங்கங் குளிர்ந்து, தங்கள் வர்த்தக சரக்குகள் எல்லாவற்றையும் அந்தப் பூங்காவின் ஒரு பக்கத்தில் இறக்கிவைத்து ஏறு, வாகனங்கள் அடங்கலையும் ஒருபுறம் மேயவிட்டு, அவரவர் விரும்பின வண்ணம் சந்தோஷமடைந்து சுகங் கொண்டாடினார்கள். நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் பாதமலர்கள் தோயாமல் நடந்து அங்கு வந்த பொருட்டினால் அப்பூங்காவனத்திலுள்ள விருட்சங்கள் அனைத்தும் முன்னிலும் பலமடங்கு அதிகமாகச் செழித்தோங்கி மலர், காய், கனியடங்கலையும் சொறிந்து தழைத்தன.

இஸ்ரு என்னும் பண்டிதர் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விருந்து கொடுப்பதற்கு முன்னே, இவர்கள் அவர் வசிக்கும் பூங்காவிலுள்ள பலவிதமான மதுரம் அமைந்த பழவர்க்கங்களைக் கொண்டும், இன்பமான காய் கனிகளைக் கொண்டும், தேனைகொண்டும் பசியாறி, தடாகங்கள், சிறந்த அருவிகள், திரவுகள் முதலான ஜலபானங்களைக் கொண்டு தாகம்

தணித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதம் வனத்தில் சுகமனு பவித்த அனைவரும் உள்ளம் குளிர்ந்து, ஒவ்வொருவரும் வாய் திறந்து "இங்கு வசிக்கும் பண்டிதரும், அவர் ஆட்களும், வேனலில் அடியுண்டு தாகம் மீறி, நாவுலர்ந்து, உடலொடுங்கி, உள்ளம் கலங்கி வரும் வழிப்போக்கன் ஒருவனையாவது இந்த வனத்தின் வேலி நிழலிலும் களைதீரும்படி தங்க மனம் சகிக்கமாட்டார்கள். பலருக்கும் பொதுவாய் எவரிடத்திலும் யாரும் விரும்பி வாங்கிக் கொள்ளதக்க தீ, நீர், உப்பு இவற்றில் ஒன்றையாவது பிறருக்குக் கொடுக்க மனம் பொருந்தமாட்டார்கள். இவ்விதம் கட்டுப்பாடு உள்ளவர்கள் வாசம் செய்யும் அரிய வனத்தில் நாம் அனைவரும் தங்கி, நம் மனப்போக்கின்படி மலர், காய், கனிகளைப் பறிக்கவும், தின்னவும், சிதறவும் இடம் கிடைத்தது மல்லாமல், நமது குதிரை, ஒட்டகம், எருது, கோவேறுக் கழுதை யனைத்தும் எங்கும் உலாவி மேயவும் தடையின்றி வாய்த்தது. இவையனைத்தும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நிமித்தமே என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பலவகையாக வாழ்த்திப் புகழ்ந்து ஆநந்தம் கொண்டாடி மனம் பூரித்தார்கள். மேலும் "நாம் பல மதுரமான கனிவர்க்கங்களைத் தின்று வயிறு நிறப்புகிறோம். இனி இஸ்ரூ பண்டிதர் வீட்டில் எப்படி விருந்து அருந்த முடியும்" என்றும் பேசிக் கொண்டார்கள். இவர்கள் அனைவரும் இவ்விதம் உள்ளம் மகிழ்கூர்ந்து விளையாடி நிற்கையிலேயே, இசுரூ என்னும் பண்டிதர் தமது மாளிகையில் விருந்து கொடுப்பதற்காக வேண்டிய பதார்த்தங்கள் அனைத்தையும் செய்து முடித்துக்கொண்டு இரண்டு ஆட்களை அனுப்பி, அனைவரையும் அழைத்து வரும்படி கட்டளை செய்தார்.

அவ்விருவரும் இவர்களை யடுத்து, "நீங்கள் அனைவரும் விருந்துண்ண மாளிகைக்கு வாருங்கள்" என அழைத்தார்கள். அழைத்தவுடன் அனைவரும் எழும்பும்போது அபூஜஹல் என்பவன் மற்றவர்களை நோக்கி "நாம் அனைவரும் பண்டிதர் மனைக்கு விருந்துண்ணப்போய் விடுவோமானால், இங்குள்ள சரக்குகளைப் பாதுகாத்துக்கொண்டு இருக்க ஒருவர் வேண்டும்; அதற்கு முஹம்மதை நியமித்து விட்டுப்போவோம்" என்றான். இவன் சொன்ன வார்த்தை மனிதப்பழக்கமில்லாத இந்தத் தனிமையான ஜாகையில், [illegible]

யேறப்பெற்ற அதிகமான சரக்குகளைப் பாதுகாக்கும் சக்தியுள்ள மனிதர் நம்மில் ஒருவருமில்லை. அதற்குத்தக்க நிர்வாகி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் என்னும் பாவனையா யிருந்தபடியால், அனைவரும் ஒத்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை, சரக்குக்கு காவல் வைத்துவிட்டு எழுந்தார்கள். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எவர்களிலும் தாழ்ந்தவராகக்கருதி இவ்வித கபடமாக அபூஜஹல் சொன்னான் என்பதை, விவேக சாமர்த்தியமுள்ள உத்தமராகிய அபூபக்கர் அறிந்து, அவன்பேரில் சினம் கொண்டு வாய்திறந்து அதற்காக ஒன்றும் பேசமாட்டாதவராய்ச் சென்றார்.

அனைவரும் இஸ்ருவுடைய மாளிகையில் போய்க்கூடினார்கள். அப்போது இஸ்ரூ என்னும் பண்டிதர், விருந்தினராய் வந்த அனைவரையும் நோக்கி, கார்மேகக் குடையைக் காணாமையினால் மனங் கலங்கி, "நாம் விருந்திடத் துணிந்தது மேகக்குடையின் நிழலின் கீழ் வருபவருக்காகத் தானே? அவர் இல்லாவிடில் நம்விருந்து என்ன வாய் முடியும்," எனத் திகைத்து, "இவர்களெல்லாம் யாவர்? என் பாவ வினை தீர்த்து அடிமைகொள்ளும் நாயகம் வரவில்லையே!" என்று மறுபடியும் தம்மனத்துடன் விசாரப்பட்டு, அவர்கள் அனைவரையும் நோக்கி, "வியாபாரிகளே! இப்போது இங்குவந்து இருக்கும் நீங்கள் அனைவருமல்லாமல், உங்களில் வேறு யாரும் அவ்விடத்திலிருக்கின்றார்களோ!" என்றுகேட்டார். இவ்விதம் கேட்ட மகா பண்டிதோத்தமரை அபூஜஹல் என்னும் பாதகன் நோக்கி, "எங்கள் சாமான்கள் சரக்குகள் அடங்கலையும் காத்துக்கொண்டு முஹம்மது என்ற ஒருவன் மாத்திரம் அங்கு இருக்கிறான், நாங்கள் அனைவரும் வந்து விட்டோம்" என அச்சமின்றிச் சொன்னான்.

சரித்திரப் புராணம்.

கலி நிலைத்துறை.

தீயினுங் கொடிய மாற்றஞ் செவிமடற் றுளையி லோடிப்
போயது சிந்தையூடு புகைந்திடப் புழுங்கிப் பொங்கி
வாயினீர் வறந்து கண்ணில் வளர்தழற் கொழுந்து காட்டிக்
காய்சின வேறு போன்றான் கவலுநாற் புலமை யோனே,

வசனம்.

இச்சொல் இஸ்ருவுடைய செவிகளில் இருப்புச் சலாகையைக் காய்ச்சிச் சொருகினதுபோல நுழைந்தது. உடனே இஸ்ரு தம் இரண்டு கண்களும் சிவக்கச் சினங்கொண்டு, அச்சினத்தை வெளியிடாமல் அடக்கி, "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இங்கு அழையுங்கள்" என்று கூறினார். இவ்விதச் சினக்குறியுடன் இஸ்ருசொன்ன சொல்லை ஹாரிது என்பவர் கேட்டு விரைந்து எழுந்து வனத்திற் சென்று, நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை யடுத்து, "முஹம்மதே! உமது வருகையை காணாமையால் இஸ்ரு கோபம் மீறியிருக்கிறார். இப்போது நீர் எழுந்துவந்து எங்களை அவர் கோபத்திலிருந்து மீட்டவேண்டும்" என மன்றாடினார். ஹாரிது இவ்விதம் மன்றாடிக் கேட்டுக்கொண்டவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறுநகைசெய்து மனங்குளிர்ந்து எழுந்தார்கள். "நபிநாயகம் வருகிறார்கள், எச்சரிக்கை" எனக் கஸ்தூரிவாசனை முன்செல்ல, கருமேகம் குடைநிழல்தர, பாதமலர் தரையில் தோயாமல் நடந்து, இஸ்ருவுடைய மாளிகையில் போய்ப் புகுந்தார்கள்.

இஸ்ருவுடைய சிறந்த மாளிகைக்குள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சென்றார்கள். அங்கு நீண்டகால பரியந்தம் ஒரு துவலை நீருமின்றி வறண்டு இருக்கும் பாழ் கிணற்றின் அருகில், வெகு காலமாய்ப் பட்டுப்போய்க் கிடக்கும் ஈத்தமரக் கட்டையின் பக்கத்தில் உட்கார்ந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் உட்கார்ந்தபோதே, நீரற்றுப் பாழடைந்த அக்கிணறு ஊற்றுக்கண்வழியே நீர்பெருகிப் பொங்கிவழிந்தது. உக்கிப்போய்ச் சரிபாதி நிலத்தில் புதையுண்டு கிடந்த ஈத்தங் கட்டை பசுமையடைந்து தளிர்த்து ஓங்கிவளர்ந்து, உடனே மலர் நிறைந்து காய்த்துக் கனிகுலைக்க சாய்த்தது. பண்டுதொட்டுப் பாழாய்க்கிடந்த கிணறு நீர்வழிந்து பெருகியதையும், மண்ணோடு மண்ணாய் நீண்ட காலபரியந்தம் உக்கிப் புதைந்திருந்த ஈத்தங் கட்டை தளிர்த்து வளர்ந்து கருங்கனியின் குலைசாய்த்ததையும், இஸ்ரு என்னும் பண்டிதர் கண்ணாரக்கண்டு உள்ளங் குளிர்ந்து, ரோமஞ் சிலிர்த்து, ஆனந்த பரவசராய், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கிப் பலவாறு துதித்து, நீண்டகாலம் வரையும் தம்மனத்துள் சேமித்து வைத்திருந்த இரகசியத்தை வெளியிடக் கருதி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, "சர்வ ஜீவ காருண்யனாகிய கடவுளுடைய உண்மையான தூதரே! மனிதர் அனைவருக்கும் நாயகமே! நபிமார்களுக்கு அரசரே! முஹம்மதே, தங்களின் அடியேனாகிய நான் செய்யும் விண்ணப்பத்தைத் தாங்கள் மனம் கூர்ந்து கேட்கவேண்டும் என் ஜீவகாலத்தின் ஆரம்பம் மிக முந்தியுள்ளது. அநேக காலமாக நான் ஜீவனோடிருக்கிறேன். சில நூற்றாண்டுகளுக்குமுன் கடவுளின் தூதராகிய ஈசாநபி அலைஹிஸ்ஸலாம், ஒருதினம் நான் வசிக்கும் இந்த இடத்துக்கு வந்தார். நான் அவர் பாதங்களை வணங்கித் துதித்து, அவரை, நோக்கி, "நபியே! தங்களுக்குப்பின் இன்னும் வேறு நபிமார்கள் உண்டாகி வருவார்களோ" என விசாரித்தேன். நான் இவ்விதம் விசாரித்தபோது, ஈசாநபி அலைஹிஸ்ஸலாம் என்னை நோக்கி, "இஸ்ருவே! மனிதர் அனைவருக்கும் மூதாதையாகிய ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய முதுகின் ஒளியாய்த் திரிபட்டு, அவர் சந்ததிகளிலிருந்து பாரம்பரியமாய் ஒரு கடைசி நபி வருகிறார்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மக்கமா நகரில் வாழு மப்துல்லா மதலையாகித்
திக்கெலாம் விளங்குஞ் செங்கோல் நிலை நிறுத்திவேறு
பக்கமுன் மதங்க ளென்னும் பகையறுத் தரியகாட்சி
மிக்கவ ராகுமற்ற நபிகளின் மேன்மை யாரால்

புவியினின் முஹம்ம தென்னப் பொருந்திய பெயருண்டாகு
மவரலா னபியின் னில்லை யவரும்மத் தானோர்க்கெல்லாம்
பவமறுங் கதியுண்டாகும் படைப்புனும் வானோ ரெல்லாம்
சவைபெறுங் கனிமாச் சொல்வ ரென்னவே சொல்லினாரால்.

வசனம்.

அந்நபி, மக்கமாநகரத்தில் விளங்கும் அப்துல்லா என்பவருடைய மகனாய் இவ்வுலகில் பிறந்து, தமது தீன் என்னும் பரிசுத்தமான முக்திமார்க்கத்தை எத்திசையிலும் நிலைபெறச் செய்து, பலவித துன் மார்க்கங்களாய்ப் பிரிந்த தீய்ச்சமயங்கள் எல்லாவற்றையும்

அற நீக்கி, உலகமனைத்தையும் தம் ஒரு குடைக்கீழாக்கி ஆளும் திறமுள்ளவர். இன்னும், உலகத்தில் நபியாய்ப் பிறந்த அனைவருக்கும் மேலானவர். அவர் திருநாமம் முஹம்மது. அந்த முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப்பின் வேறு நபியில்லை. அவர் மேலான பதவியை யடைந்தவர். அவருக்கு, வானலோகத்தில் இருக்கும் மலக்குகளும் ஈமான்கொள்வார்கள்" என்று சொன்னார். இவ்வசனங்களைக் காதாரக்கேட்ட நான், மறுதரமும் ஈசாநபியைப் பணிந்து, "நபியே! அந்த முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்தக்காலத்தில் பிறப்பார்?" என வினவினேன். அதற்கு அவர் என்னைநோக்கி "இஸ்ரூவே, அந்த முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இன்னும் அறுநூறு ஆண்டுகள் சென்றபிறகு பிறப்பார்" என விடைகொடுத்தார். நான் அறுநூறு ஆண்டுபரியந்தம் ஜீவனோடிருந்து அவரைக்காண்பது அரிதெனத் துன்பமடைந்து, முகம் வாடி நின்றேன். அப்போது ஈசா நபி அலைஹிஸ்ஸலாம் என்னை நோக்கி, "இஸ்ரூவே, நீர் அதைப்பற்றி மனச்சோர்வு அடைந்து கவலைகொள்ளவேண்டாம். அந்த முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்குளிரக் காணும்பரியந்தம் கடவுளுடைய கிருபைகொண்டு இந்தக் காவனத்தில் ஜீவனோடு இருப்பீர். முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கமாநகரத்தில் பிறந்து சில ஆண்டுகளுக்குப்பின், வர்த்தகஞ் செய்யும் பொருட்டு ஷாம் இராஜ்ஜியத்திற்குப் போகவேண்டி வருவார். அப்போது, நீர் அவரைக் காண்பீர்" என்று சொன்னவுடன், நான் "நபியே! முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எந்தத்தானத்தில் நான் காண்பேன்" என மறுபடியும் கேட்டேன். அதற்கு அவர், "இஸ்ரூவே, முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த மார்க்கமாக வந்து, இதோ பட்டு கிடக்கும் ஈத்தமரத்து அடியிலிருப்பார். அப்போது, இம்மரம் உடனே தளிர்த்து வளர்ந்து குலைசாய்த்து கனியுதிர்க்கும். அந்தப்பாழுங்கிணறும் நீர் பெருகித் ததும்பி வழியும். இவ்வடையாளங்களைக்கொண்டு அவர் இன்னார் என்று நீர் அறிந்து, அவருக்கு என் ஸலாமை சொல்லும்" என எனக்கு அறிவித்து, தம்மிரண்டு கரங்களையும் ஏந்தி "கடவுளே, இந்த இஸ்ரூவுடைய ஆயுளை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்து அவரைக் காணும் பரியந்

தம் நீடித்துவை" என இரைந்து கேட்டு எனக்கு அனுக்கிரஹஞ் செய்து சென்றார். அந்தப் பிரகாரமே நான் ஜீவனோடிருந்து தங்கள் பாதார விந்தங்களைக்கண்டு நற்பதவியடைந்தேன். நான் இனி உயிர் பெற்றிருப்பது அரிது. இப்போது தாங்கள் என்னை அடக்கஞ் செய்து விட்டு, பிற்பாடு ஷாம் ராஜ்ஜியத்துக்குச் செல்லுங்கள்" என்றார்.

இவ்வசனங்களை இருலோக ரட்க்ஷகரான நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் கேட்டுக் களிகூர்ந்தார்கள். பிற்பாடு, இஸ்ரா அனைவருக்கும் விருந்து கொடுத்தார். அனைவரும் விருந்துண்டு தீர்ந்த பின் இஸ்ரூ ஒவ்வொருவருக்கும் உபசார வசனங்கள் சொல்லி, அபூபக்கரை நோக்கி, "அபூபக்கரே, நீர் உமது வாணாட்பரியந்தம் ஒருக்ஷணநேரமாவது முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பிரிந்து இருக்காதீர். அவர் கூறும் எந்த வார்த்தையையும் மறுக்காதீர். முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மகிமையனைத்திற்கும் உரியவர் நீரேயன்றி வேறு யாருமில்லை" எனக் கட்டளை செய்து விட்டு, கதீஜா நாயகியாருடைய தாதாகிய மைஸறாவை அழைத்துத் தமக்கு அருகில் உட்கார வைத்து, அவருக்குச் சொல்லவேண்டிய சன்மார்க்க வசனங்கள் அனைத்தையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை குறித்துச் சொன்னார். இவ்விதம் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விஷயத்திற்காக சொல்லவேண்டியவை எல்லாம் சொல்லி முடித்த பின், இஸ்ரூ என்னும் பண்டிதர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் பாதங்களில் தம் இரு விழிகளையும் வைத்து தம்மனையிலுள்ளவர் அனைவருக்கும் சொல்ல வேண்டிய முறைமைகளைச் சொல்லித் தீர்த்து, தமது படுக்கையின் மெல்லணைமேல் சாய்ந்து மனைவி, மக்கள், பந்துக்கள் அனைவரும் தம்மைச் சூழ்ந்து இருக்கும்படி, தம் மதுரம்மொழியும் நாவினால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை அடிக்கடி புகழ்ந்தவண்ணமாயிருந்து தேக வியோகமானார். இஸ்ரூ என்னும் பண்டிதர் பரலோகபிராப்தியடைந்தபோதே நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் முதன்மையாய் நிற்க அனைவரும் செய்ய வேண்டிய சடங்குகள் அடக்கலுஞ் செய்து அடக்கினார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்து இரவான

படியால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும் மற்ற வர்களும் அந்த பூங்காவனத்தில் அன்று இரவுபடுத்து நித்திரை செய்தார்கள்.

19-வது அத்தியாயம்

கள்வரை நதி மறித்தது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தெள்வ ரைப்புய வணிகர்க டிரண்டு மொய்த்திட
வுள்வ ரைமனங் கண்டிடா வோரிறை மகிழ்ச்சி
கொள்வ ரையமில் நபிவழி குறுகியா ரிடத்திற்
கள்வ ரைநதி மறித்திடுங் காரண மொழிவாம்.

இதன் பொருள்.

மலைக்கோப்பாய்த் தெளிவுற்றிருக்கும் புஜபல தாட்டிகத்தை யுடைய வியாபாரிகள் யாவரும் திரண்டு மொய்த்துவர, மனத்தினுள் ளே அளவு காணற்கரிதாகிய ஒப்பற்ற அல்லாஹு தஆலாவுடைய மகிழ்ச்சியைக் கொண்டவர்களாய், சந்தேகத்திற்கிடமில்லாத நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் வழி நடந்து ஓரிடத்திற் பொருந்தியிருக்கும்போது, அவ்விடத்திலுள்ள கள்ளர்கள், இவர்களை நாடிக் களவு செய்ய வராமல், ஓர் புதிய ஆறுஉண்டாகி கள்வரை மறித்த காரணத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

பருதி வானவன் செங்கதிர் பாவிடத் துயின்றோ
ரெருது வாம்பரி யொட்டகம் பரந்திட வெழுந்து
முருகு லாவிய பொழிற்கடந் தருநெறி முன்னித்
திருகு வெஞ்சினக் களிறென நடந்தனர் செறிந்தே.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்கள் கூட இருந்த வர்த்தகர்களும், அன்று இரவு இசுறு வென்னும் பண்டிதருடைய பூங்காவனத்தில் தங்கி இருந்து, மறுநாட்காலையில் அங்கிருந்து புறப்பட்டார்கள். சரக்

குகள் ஏற்றியிருக்கும் ஒட்டகங்கள், எருதுகள், கோவேறுக் கழுதை கள், சாமக்கிரிகைகள் சுமந்து போகும் விலங்குகள் அனைத்தையும் நடத்திக்கொண்டு, அன்று பகல் முழுவதும் நடந்து மலை, வனம் வனாந்தரம், நதி, கால்வாய், நீர்நிலைகள் அடங்கலையும் கடந்து சென்று, பலவித விருட்சங்கள் அடர்ந்த சோலையும், வெண்மணல் பரந்த சமநிலமும், செங்குத்தான சிறு குன்றுகளு முள்ள ஒரு பள்ளத்தாக்கை யடுத்து, அன்று சூரியாஸ்தமன மானபடியால் அங்கே தங்கினார்கள். அனைவரும் அப்பள்ளத்தாக்கில் தங்கிக் களைதீர்ந்து இருக்கையில், ஒருவன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று "நாயகமே! இந்தப் பள்ளத் தாக்கின் அருகிலுள்ள மலைத் தொடர் களுக்கு நடுவே "திருடர்கள் வாசஞ் செய்கிறார்கள். இது முந்தியே நானறிந்த விஷயம். இப்போது நாம் இங்கு விடுதி யிட்ட பிறகும் அத்திருடர்களின் நடமாட்டத்தை நான் கண்டேன்" என்று சொன்னான்.

இவன் இப்படி சொன்னவுடன் அங்கு இருந்தவர்களின் நோக்கம் அத்திசையில் சென்றது. திருடர்கள் சந்தடியைச் சிலர் கண்டு சொல்ல, அனைவரும் திகில் கொண்டு மனங் கலங்கினார் கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனைவரையும் நோக்கி "இங்கே திருடர்களிருக்கிறார்கள் என்பதை குறித்து நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம்" எனத் தைரியஞ் சொன்னார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்தது. எங்கு மிருள் பரந்தது. பிறகு நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அனைவரையும் நிர்ப்பயமாய் நித்திரை செய்யும்படிச் செய்து, தாங்களும் நித்திரை செய்தார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

சோரருண்டென மனத்துணுக் குறல்சுடர் வரையி
னோர தாயொரு நதியுள நிலஞ்சுழித் தெழுந்து
கோரமாய்வருங் கள்ளருங்குறுகிடா ரெனவே
நாரெழுங்குடை முஹம்மது கனவுகண்டனரே.

வசனம்.

அப்போது "திருடர்கள் தங்கியிருக்கும் மலைக்கு எதிரே புதிதாக ஒரு நதி, நிலத்தைச் சுழித்துக் கிளம்பி நீங்களிருக்கும் தானத்திற்கும் திருடர்கள் இருக்கும் தானத்திற்கும் இடையில் பிரவாகித்து ஓடும்; அதனால் அத்திருடர்கள் உங்களை யடுக்கமாட்டார்கள்" என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொப்பனங்கண்டு, நித்திரை தெளிந்து எழுந்து, தாங்கள் கண்ட சொப்பனத்தை அனைவருக்கும் தெளிவாய்ச் சொன்னார்கள். அப்போது, சூரியன் உதயமாயிற்று. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்ட கனவின் பிரகாரமே, குறித்த விடத்தில் ஆறுவொன்று புதிதாய்த் தோன்றிக் கரை புரளப் பிரவாகித்துக் கடலை நோக்கி ஓடிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் அந்தப் பள்ளத்தாக்கை விட்டு எழுந்து, புதிய நதியின் இக்கரை வழியாய் நடந்தார்கள். இவர்கள் இவ்வாறு இக்கரையில் நடந்து போகிறபோது திருடர்கள் அனைவரும் அக்கரையில் தடைபட்டு நின்று இக்கூட்டத்தாரைப் பார்த்தார்கள். திருடர்களின் பார்வைக்குத் தோற்றுவண்ணம் இவர்களை அந்நதியின் வேகமாய் மோதுகிற அலைத்திரள் மிகவும் உயர்ந்து மறைத்தன.

"நாம் அனைவரும் இந்த வர்த்தகர்களை மடக்கி வழிபறிக்க ஆயத்தமா யிருக்கையில், இடையில் புதிதாய் ஒரு நதி பிரவாகித்து நம்மை மறித்துக்கொண்டது மிக ஆச்சரியம்" எனத் திருடர்கள் கூறி ஒப்பற்ற ஆச்சரியமுற்று, உடனே அங்குள்ள ஒருபெரிய மலைச் சிகரத்திலேறி நின்று, இக்கூட்டத்தார்களைப் பார்த்தார்கள். அப்போது அந்நதி முன்னிலும் அதிக மும்முரமாய்ப் பிரவாகித்துப் புரண்டு, திருடர்கள் பார்வைக்குத் தெரியாவண்ணம் இவர்களை மறைத்துக்கொண்டது. அதனால் திருடர்கள் தாங்கள் நினைத்த கருமம் சாயாது ஏமாறி, அந்த இடத்திலேயே ஓய்ந்து இருந்து விட்டார்கள். நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், மற்றவர்களும் இக்கரைபிடித்து நடந்தார்கள். இவர்கள் மக்கமா நகரத்தை விட்டு வெளிப்பட்ட அன்றுதொட்டு இதுபரியந்தம் அடிக்கடி உண்டு பட்ட இடையூறுகளையும், அவ்விடையூறுகளால் நேரிட்ட அதிபார தூரமான பிரதி பந்தங்களினின்றும் மிக எளிதாய் விலகிக் கொள்ளுவதையும், அக்கூட்டத்திலுள்ள விவேகமும் சாமர்த்தியமும் உடைய புத்திமான்கள் ஒவ்வொருவரும் பதைப்பற்று ஆராய்ந்து அறியாமலிருக்கவில்லை. எவ்வித நன்மைகளும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய பொருட்டினால் தான் உண்டாயின என்பது, அவர்களின் உள்ளங்களில் பசுமரத்தி லறையுண்ட இருப்பாணியை யொத்துப் பதிந்தது.

ஆனால், அவர்களிலுள்ள அவிவேகிகளும், படு பாதகர்களும், பரம துஷ்டர்களுமாகிய சிலருக்கு மாத்திரம் இவ்வித நல்லெண்ணம் அணுவத்தனையும் புலப்படவில்லை. அவ்விதக் கொடிய பாதகர்களில் முந்தினவன் அபூஜஹல். அவனுக்கு, பாதையில் நேர்ந்துள்ள விக்கின விமோசனங்களும், நூதன சம்பவங்களும் முஹம்மது வுடைய பொருட்டாலேதான் என்பது தெள்ளத் தெளியத் தெரிந்தபோதிலும், அவை அனைத்தையும் அவன் மனதார ஒப்புக்கொள்ளவில்லை. அபூஜஹல், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிரிடையாய் நின்று நிகழும் புதுமைகளில் ஒன்றை யேனும் விடாமல் எல்லாவற்றையும் மறுத்துப் பேசுவதன் காரண தாத்பரியம் அவனது ஊழ்வினையின் வலியேயன்றி வேறல்ல. மிக்க கொலைக்காரர்களான வழிபறித் திருடர்களின் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டதும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பொருட்டால்தான் என்று புத்தி நுட்பமுள்ள அநேகர் நம்பி அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வியந்து துதித்தார்கள். அது அபூஜஹலுடைய இருதயத்துக்கு இதமாயிருக்கவில்லை. ஆனபடியால் அபூஜஹல் மற்றவர்களை நோக்கி "முஹம்மதானவர், வழியில் வந்த நாகம், புலி என்னும் துஷ்டப் பிராணிகளுக்கு முன் சிறிதும் அஞ்சாமல் எதிரேறிச் சென்று, அவற்றின் துஷ்ட கிருத்தியங்களை விலக்கின தாலும், அவர்கண்ட சில சொர்ப்பனங்களின் பிரகாரமே நடந்தேறின தாலும், இன்னுஞ் சில அற்ப விஷயங்களாலும் எல்லாம் முஹம்மதுடைய பொருட்டாலேதான் என நீங்கள் சொல்லித் துதிக்கிறீர்கள்; அது வாஸ்தவந்தான். ஆனால் அவருக்கு, தெய்வ தத்துவம் அல்லது தேவசகாயம் ஏதும் உண்டு என நீங்கள் ஒருவரும் நினைக்கவேண்டாம். நிகழ்ந்த

நூதனங்கள் அத்தனையும் அவருடைய மந்திர உபாயத்தாலன்றி வேறல்ல" என்று நிராகரித்துச் சொன்னான்.

இச்சொல் அபூபக்கருக்கு மாத்திரம் மனக்கடுப்பை விளைவித்த படியால், அவர் தம் வாயைத்திறந்து "அறக்கீழான தீயோர் சொல்லும் சொற்களுக்கு செவிசாய்க்கும் நல்லோர்களும் தீயோ ராய் நாசமடைவார்கள்" என்றார். அறிவீனர்களின் தாழ்ந்த வசனங்களை விவேகியா யுள்ளவர்கள் ஒருக்காலும் கவனிக்க மாட் டார்கள் என்பதற்குத் தக்க திருஷ்டாந்தமாக, நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவன் வார்த்தையை அற்ப மாவது லட்சியம் செய்யாமல் நடந்தார்கள். மற்றவர்களும் அவர்களைப் பின் தொடர்ந்து அந் நூதன நதியின் ஒரு கரைமார்க் மாகவே நடந்து வெகுதூரம் சென்று, ஷாம் இராஜ்ஜியத்தை யடுத்து, ஷாம் என்னும் பிரதான நகரத்துக்கு ஒருகாத தூரத்திற்கு இப்புறம் விடுதியிட்டுத் தங்கினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தங்கள் பரிவாரத்துடன் தமக்கென்று ஏற்பட்ட கூடாரத்தில் வீற்றிருந்தார்கள்.

20–வது அத்தியாயம்.

ஷாம் நகர் பிரவேசம்.

கலி விருத்தம்.

பாமுகம் விளங்கவுல கிற்பருதி போலே
தோமுகல் குபிர்த்தன துவாந்தமொழி விக்கு
மாமுகம தாண்டகை வர்த்தகர்கள் சூழச்
சாமுநகர் புக்குசரி தைத்திற முறைப்பாம்.

இதன் பொருள்.

இவ்வுலகத்தில் அழகிய புர்க்கானென்னும் வேதம் விளங்க சூரியனைப்போல் உதயமாகி, குற்றத்தைச் சொரியும் காபிர் களுடைய மனத்திருளை யொழியச் செய்யும், முஹம்மதென்னும் திருநாமத்தையுடைய நாயகம், தங்களை வியாபாரிகள் சூழ்ந்துவர ஷாம்தேசத்திற்குப் போகும் சரித்திரத்தின் திறமையைச் சொல்லு கின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

காவ கத்திலன் றிருத்திருள் கடிந்துவெங் கதிரோன்
மேவு வெண்டிரைக் கடன்முகட் டெழுதலு மேலோர்
தாவு வெம்பரி யொட்டகைத் திரளொடுஞ் சாய்த்தே
ஏவி லங்கையி லேந்திய வேந்தலோ டெழுந்தார்.

வசனம்.

நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களைச் சேர்ந்த மற்ற வர்த்தகர்களும், ஷாம் நகரத்திற்குக் காத வழித் தொலையிலுள்ள ஒரு வசதியான ஸ்தானத்தில் தங்கிக் கூடார மிட்டிருந்து, மறுநாட் காலையில் அங்கிருந்து புறப்பட்டார்கள். மலர்தரும் செடி கொடிகளும், பரிமளிக்கும் புஷ்பங்கள் நிறைந்து நெருங்கிய தடாகங்கள் மலிந்துள்ள பூஞ்சோலைகளும், நானாவித மதுரமான கனிவர்க்கம் தரும் விருட்சங்கள் சூழ்ந்த வனங்களும், கமுக மரத்திரள்போல் ஓங்கிவளர்ந்த கருப்பந்தோட்டங்களும், தெளிந்து நிமிர்ந்து வளர்ந்த பசுமையான நெல் வயல்களும், பார்த் துக்கொண்டுநடந்தார்கள். பக்கங்களில் அடர்ந்து நெருங்கின உத்தி யானங்களிலுள்ள வாழைமரங்கள், நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதார விந்தங்களைத் தலைசாய்த்து வணங்கும் பாவனையாய்ப் பொன்மயமான குலைகளைச் சாய்த்து நின்றன. கோகிலோற்சவம் என்னும் மாமரங்கள் அடர்ந்து நீண்ட கிளைதனில் பழுத்த பழக்குலைகளைச் சாய்த்து, தளிர்கள் என்னும் கைகளை யசைத்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விருந்துண்ண அழைக்கும் பாவனை போல அசைந்து ஆடின. மதர்த்து ஓங்கின பலாமரங்கள், நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரும் வழியின் இருமருங் கிலும் பொற்குடங்களை அலங்காரமாக வைக்கும் பாங்காக செந் தேன் ஒழுகும் பொன்னிறம் பொருந்திய சுளைகளமைந்த கனிகளை நிரையாகத்தாங்கி நின்றன.

இன்னும் பலவிதத் தீங்கனிகளையும் அந்தந்த விருட்சங்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாத காணிக்கையாகச் சொரிந்து நின்றன. முத்துப்போலத் தெளிந்து குளிர்ச்சியுடைய தடாகங்களில் மலர்ந்த செந்தாமரைப் புஷ்பங்கள்

மிருதுவாகிய இதழ்களை விரித்து நிற்கும் தோற்றம், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகைக்கென்று எண்ணி அந்த தீபங்களை அணியணியாய் ஏந்தி அதை யொத்திருந்தது. இவ்வகைப்பட்ட அலங்காரங்களையும், வர்ணிப்பதற்கு அரிய இன்னும் பற்பல விசேஷங்களையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கண்குளிர நோக்கி, கோட்டுப்பூ, கொட்டிப்பூ, நீர்ப்பூ, புதர்பூ என்னும் நான்குவகைப் புஷ்பங்களின் வாசனையும் தமது திருமேனியில் இயற்கையாயுள்ள கஸ்தூரி வாசனையே மேற்கொண்டு எங்கும் பரந்து பரிமளிக்கும் வண்ணம் வர்த்தகர்கள் புடை சூழ நடந்து, பிரதான நகரமாகிய ஷாம் என்னும் நகரத்தில் பிரவேசித்தார்கள்.

இவர்கள் நகரத்துள் பிரவேசித்தபோதே, அங்குள்ள இராஜ வீதிகளில் உயர்ந்து விளங்கும் மேல்மாடிதோறும் கட்டுண்டு பறக்கும் நானாவர்ணமான துவஜங்களில், சில "நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இங்கு வருகிறபடியால், பட்டிணத்தை அலங்கரியுங்கள்" எனக் கைகாட்டும் பாவனைபோல அசைந்து பறந்தன; சில துவஜங்கள் "நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வருகிறபடியால், இவ்வூர் அரசர் முதலிய அனைவரும் ஒருங்கு திரண்டு எதிர்சென்று உபசரித்து அவரை அழையுங்கள்" என ஏவும் பாங்காய்ப் பறந்தன; சில துவஜங்கள் "நபிமார்களுக்கு நாயகமே வருக!! ஹபீபே வருக!! முஹம்மதே வருக!! எனக்கைநீட்டி அழைப்பதை யொத்துப் பறந்தன. இவ்வித அலங்காரமான இராஜ வீதிகளையும், இன்னும் மாடமாளிகை கூட கோபுரங்கள் நிறைந்து விளங்கும் தெருக்களையும் கண்டு களித்து, அனைவரும் அந்நகரத்து மதிலின் உட்புறத்தில் விடுதி இட்டுத் தங்கினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்கரும், மைஸரூவும், மற்றக் குற்றேவல்காரரும் சரக்குகள் முதலிய சாமக்கிரிகைகளுடன் அங்கே ஒரு புறத்தில் கூடாரமிட்டு யிருந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் அனைவரும் தங்கின பிற்பாடு, அவ்வூரார்களில் சிலர் வந்து இவர்களை நோக்கி, "நீங்கள் எந்த ஊரிலிருந்து வந்தீர்கள்? எந்த ஊரையுடையவர்கள்? உங்கள் வர்த்தகம் யாது? என்னென்ன சரக்குகள் கொண்டுவந்து இருக்கிறீர்கள்? அந்த அழகிலும் வடிவிலும் சிறந்த பாலியர் யார்?" என விசாரித்தார்கள். அப்போது இவர்கள் அவர்களை நோக்கி, "நாங்கள் அறபு இராஜ்ஜியத்திலுள்ள மக்கமா நகரத்தில் இருந்து வந்தோம்; அனைவரும் அம்மக்கமா நகரத்தார்தாம்; வர்த்தகத்திற்காக இன்னின்ன சரக்குகள் கொண்டுவந்திருக்கிறோம்; அந்த வாலிபர், மக்கமா நகரத்து அப்துல் முத்தலிபு உடைய குமாரராகிய அப்துல்லாவின் புத்திரர்; அவரும் வர்த்தக விஷயமாகவே வந்திருக்கிறார்" என்று உத்திரம் சொன்னார்கள்.

பிறகு அவ்வூர் நஸாருக்களின் ஆசானாகிய ஒருவன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்கும் கூடாரத்தில் வந்து, நபிநாயகம் அவர்களுக்கு அருகே மைஸரூ உட்கார்ந்திருக்கக்கண்டு ஆனந்தமடைந்து, விரைந்து மைஸரூவை யடுத்து மார்போடு அணைத்துக் கட்டி தழுவி, "எனது அத்தியந்தப் பிரிய நேசராகிய மைஸரூ! நீரும் நானும் ஒருவரோடு ஒருவர் உறவாடிப் பழகி பயின்றது இன்று நேற்றல்லவே! உம்மை நான் கண்ணாரக்கண்டு களித்து வெகு காலமாயிற்றே! உமது இஷ்டனாகிய நான் இங்கே இருக்க, நீர் யாத்திரிகளுடன் இந்த ஸ்திதியிலிருக்க வேண்டிய நிமித்தம் என்ன? எழுந்தருளும்; என் மாளிகையில்வந்து சுகாதீதராய் வீற்றிரும்; உமக்கு ஆகவேண்டிய கருமங்கள் அத்தனையும் நானே செய்கிறேன்" என்று மிக உபசரணையோடு வருந்தி அழைத்தான். இவன் இவ்வாறு உள்ளன்போடு உபசரித்து அழைத்தபோது, மைஸரூ தமக்கு கதீஜாநாயகியார் ஆக்கியாபித்த ஆக்ஞையைக் கருதி, அவனை நோக்கி மற்றொன்றும் சொல்லாமல் "என் பிரியமிக்க இஷ்டரே, நான் ஒருக்ஷணப் பொழுதேனும் இவ்வாலிபரைப் பிரிந்திருக்கக்கூடாது; ஆனதினால், நான் எப்படி உமது கோரிக்கைக்கு இசைவேன்? இதைப்பற்றி நீர் மன்னிக்க வேண்டும்" என்று பிரதியுத்தரம் சொன்னார். பிறகு இருவரும் நீண்டகாலத்து அன்னியோந்நிய மித்திரர்களானபடியால் சற்று நேரம் அளவளாவிச் சம்பாஷித்திருந்த பின் அவன் எழுந்து போனான். கோதுமை, காய்கறி, கனிவர்க்கம், பால், தயிர், நெய் முதலிய அனைத்தும் கொண்டுவந்து கொடுத்து மரியாதை பண்ணினான்.

பிற்பாடு மக்கமா நகரத்தார் கொண்டுவந்த சரக்குகள் அனைத்திற்கும் மைஸரூவின் இஷ்டனாகிய அந்த ஆசானே தரகனாகி இருந்து

சிலதினத்தில் சரக்குகள் எல்லாவற்றையும் அவ்வூர் வர்த்தகர்களுக்கு விற்று, பணங்களை கொடுத்து கணக்கு முடித்துக்கொடுத்தான். சரக்குகள்யாவும் அவன்கையிலேயே விற்றுத்தீர்ந்தன. ஒருவன் மாத்திரம் தன் சரக்குகள் விலைப்படாமல் மனம்நொந்து மற்றவர்களை நோக்கி, "என் சரக்குகளில் ஒன்றுவது இன்னும் விலைப்படவில்லையே முஹம்மது சற்றுநேரம் என்விடுதில் வந்திருந்தால் உடனே எல்லாம் விற்றுப்போகும்" என்றான். இதைக்கேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனமுவந்து எழுந்து சென்று, அவன்வேண்டியபடி விடுதியில் போயிருந்தார்கள். உடனே அவன் சரக்குகள் யாவும் நல்ல இலாபத்திற்கு விற்றன. அவன் மனங்களித்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாத தாமரைகளில் விழுந்து வணங்கித் துதித்தான். பிறகு அனைவரும் மேற்படி நாகனைக் கொண்டே கொள்ளவேண்டிய அவ்வூர் சரக்குகள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு, மக்கமா நகரத்திற்கு புறப்பட எத்தனித்து இருந்தார்கள்.

21-வது அத்தியாயம்.

கரம் பொருத்தினது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

வரம் பெருத்திடு நபிகளுக் குயர்மகு மூதர்
தரம் படைத்தவர் செய்வினை தனைச்சுடு மெனல்போன்
முரண் டரித்தவன் செய்வினை முரண்டவர் கறுத்த
கரம் பொருத்திடு காரணந் தனைக்கழ றிடுவாம்.

இதன் பொருள்.

வலிமை படைத்தவர் தங்களுக்குண்டாகும் பொறாமையினால் யாதொருகாரணமுமின்றி பிறர்கெட நினைத்துச் செய்யும் கெடுதொழிலானது திரும்பி அவர்களையே சுடுமென்னும் பழமொழிபோலே பகையைத் தரித்த ஒருவன், நபிநாயகத்திற்குச் செய்தபாதகத் தொழில் திரும்பி எதிர்த்து அவன் கையை யறுத்துவிட்டது. அதை கண்டு, வரம்பெருத்த இலக்ஷத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கட்கும் உயர்வு பொருந்திய மஹ்மூதென்னும் இயற்பெயரையுடைய

புவன உயர்களின் பேரில் கிருபை பொருந்திய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், அறுபட்ட கையை பொருத்திய காரணத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திரப் புராணம்.

கலி விருத்தம்.

மறங்கிளர் வேற்கர வள்ளன் மக்கிக
விறங்கிய விடுதிபுக் கிருக்குங் காலையிற்
கறங்கிய ஸாமினிற் காபிரிற் சில
ரறங்கிளர் நபியை வந்தடுத்து நோக்கினர்.

வசனம்.

நபிகட்திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களுடன் சென்ற வர்த்தகர்களும், வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் அடங்கலையும் தீர்த்துக்கொண்டு மக்கமாநகரத்திற்குப் புறப்பட ஆயத்தமா யிருக்கும்போது, அந்நகரத்திலுள்ள காபிர்களில் சிலபேர், இவர்களிருக்கும் தானத்தில் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யடுத்து நின்று உற்று நோக்கினர்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திவ்விய திருமேனியின் அழகும், அம்மேனியின் கஸ்தூரி வாசனையும் எங்கும் பிரகாசித்து வீசும் தன்மையையும், மிக நீண்டு விளங்கும் இரண்டு கைகளையும். பூரணச்சந்திரன்போல் இலங்கும் முகத்தையும், நிலத்தில் தோயாத பாதங்களையும், மன்னுயிரைத் தன்னுயிர்போல நோக்கும் காருண்ய விழிகளையும், பரிசுத்தமும் மதுரமு மமைந்த திருவாக்கையும், இவை போன்ற இன்னும் பலவித நற்குறிகளையும் அக்காபிர்கள் கண்ணுறக் கண்டு, ஊரிலிருக்கும் இன்னும் அநேகர்களிடம் சென்று, தாங்கள் கண்ட காட்சியைப் பிரஸ்தாபப் படுத்தினர்கள். இப்புதுமையைக் கேட்ட புத்திமான்கள் சிலர் "அவர், பிந்தி நபி யொருவர் பிறப்பார்" என முன்னுள்ள வேதங்களும் சாஸ்திரங்களும் பிரஸ்தாபித்தவராயிருப்பார்" என்றார்கள். பொல்லாங்கு குடிகொண்ட மனத்தையுடைய பாதகர்கள் அநேகர் திரண்டு "நமது மார்க்கமும், குடும்பமும் சிதறுண்டு போகும் வண்ணம் 'பிந்தின காலத்தில் நபியென ஒருவர் பிறப்பார்' என்று வேதங்கள் சொன்னது இவனைத்தான்- அப்படி நமது மார்க்கம்முதலான சர்வமும் அழிந்து போகும்

வண்ணம்நமக்கு இடையூறாய்ப் பிறந்தவனை, தன் நகரத்திற்கு மீண்டு போக விடுவது ஒழுங்கல்ல. நாம் திரண்டு அந்த வர்த்தகர்களுடன் எதிர்த்துச் சண்டைசெய்து அவனைக்கொன்று விடுவதே உத்தமம்" என்றார்கள். இவர்கள் இந்த வார்த்தையைப் பகிரங்கமாகப் பேசிக்கொண்டபடியால், அவர்களுள் சிலர் மற்றவர்களை நோக்கி, "நீங்கள் எல்லாரும் பகிரங்கத்தில் சப்தமிட்டு ஏன் பேசுகிறீர்கள்? வாய்களை மூடிக்கொண்டு சும்மா யிருங்கள். நாம் அதைப்பற்றி ஆலோசனை செய்து, தந்திரமாக அவனை இங்கு அழைப்பித்து, இரகசியத்தில் கொன்று விடலாம்" என்றார்கள்.

அப்போது அவர்களிலுள்ள கபடம்நிறைந்த சிந்தையையுடைய தறுகண்ணன் ஒருவன், மற்ற அனைவரையும் நோக்கி, "மக்கமா நகரத்திலிருந்து நமக்குப் பகைவனாய் வந்து தோன்றின அவனை, இந்த விதமாகத்தான் கொலை செய்யவேண்டும், வேறு விதத்தில் முடியாது" என ஒரு உபாயத்தை விவரித்துக் காட்டிச் சொன்னான். அவன் சொன்ன தந்திரம் அனைவருக்கும் பொருத்தமா யிருந்தது. உடனே தாங்கள் கொண்ட கருத்தை நிறை வேற்றுவதற்குத் துணிந்து, அவர்களில் நான்குபேர் அங்கிருந்து புறப்பட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிருக்கும் ஜாகைக்கு வந்து, நபிநாயகமவர்களுக்கு மிக மரியாதையுடனும் உருக்கத்துடனும் வணங்கி உட்கார்ந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவர்களை நோக்கி, "இங்கே அருகில் வாருங்கள். என்ன காரியத்தைக் குறித்து வந்தீர்கள்?" என விசாரித்தார்கள். அப்போது அவர்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நீங்கள் கொண்டுவந்த சரக்குகள் ஏதாவது இருந்தால் கிரயத்துக்குக் கொடுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகமவர்கள், அந்நான்கு பேர்களையும் நோக்கி, "நாங்கள் கொண்டு வந்த சரக்குகள் எல்லாவற்றையும் விற்று, இவ்விடத்துச் சரக்குகளை வாங்கித் தொழிலை யொடுக்கிக்கொண்டோம். ஆனால், மீந்த சரக்குக் கொஞ்சம் இரண்டொருவரிடத்திலிருக்கவும் போதும்" என்றார்கள். அப்போது அந்நால்வரும் அச்சரக்குகளை விசாரித்து வாங்கிக் கொடுங்கள் எனக்கேட்டவுடன் அங்கு வைத்திருந்த சரக்குகளைக் கொண்டுவந்து காண்பிக்க, அவைகள் எல்லாவற்றையும் சொன்னகிரயத்தைக் கொடுத்து வாங்கி

னார்கள். அக்காபிர்கள் சரக்கு அடங்கலையும் வாங்கிக்கொண்டு மக்கமா நகரத்தாரை நோக்கி "இச்சரக்கின் கிரயத்தொகையை நாங்கள் முஹம்மது கையில் கொடுக்கிறோம். ஆகையால் அவரை எங்கள் இருப்பிடத்துக்கு வரவிடுங்கள்" என்றார்கள்

இச்சொல்லைக் கேட்டவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனம் மகிழ்ந்து, அந்தப் பாதகரின் சொல்லுக்கு இசைந்து, மக்காவாசிகளில் சிலரும், மைஸறாவும் தம்மைச் சூழ்ந்து வரும் வண்ணம், தம்இருப்பிடம் விட்டு எழுந்து அவர்களுடன் சென்றார்கள். ஷாம் நகரத்து சிறந்த வீதிகளில் தோற்றும் பலவகையான, சொல்லுதற்கு அரிய அலங்காரங்கள் அனைத்தையும் கண்டுகளித்து, நடந்து தமது கூடவரும் அனைவருடன் அக்காபிர்களின் மாளிகைக்குட் புகுந்தார்கள். நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் மாளிகையில் வந்து புகுந்தவுடன், அங்குள்ள காபிர்கள் உள்ளம் களித்து, தங்கள் துராலோசனையின் கருமம் சித்திபெறுமென சந்தோஷித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் மைஸறாவையும், தரகனையும், உடன்சென்ற மற்றவர்களையும் வியந்துபேசி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒரு சிறந்த ஆசனத்தில் உட்காரச்செய்து "எங்கள் நாயகமே, தாங்கள் இந்த மனைக்கு எழுந்தருள, முன் நாங்கள் என்ன தவம்செய்து இருந்தோமோ! எங்கள் மனை என்ன தவம் செய்ததோ!" என ஒவ்வொருவரும் பலவகையாகப் புகழ்ந்து, கபடமாய்க்கொண்டாடி, புடைசூழ்ந்து உட்கார்ந்தார்கள். அங்குள்ள காபிர்கள் அனைவரும், துர்ச்சிந்தனையின்படி கபடம் நிறைந்துமனம் வேறும், வாக்கு வேறுமாகத் துதித்து உட்கார்ந்த பின், முந்தியே தாங்கள் நியமித்தவண்ணம் செய்வதற்காக அம்மாளிகையின் மேன்மாடத்துக்கு ஏறிப் போகும் படிக்கட்டின் மேல்வாசலில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நேராக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் கருங்கல்லிடம் போகும்படி ஒருவனுக்கு சைகை பண்ணினார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

தீங்குறு மனத்த னேகிச் செறித்தமேற் பலகை மெல்ல
வாங்கியங் கிருந்தகல்லை வரைப்புயம் பிதுங்க வுன்னித்

தாங்கலி லுருட்டி மெல்லத் தள்ளினன் றள்ளலோடு
நீங்கருங் கரத்தைக் கவ்வி நெரிபட விறுக்கிற் றன்றே

கரத்தினிற் பதிந்தகல்லைக் கழற்றினன் கழற்ற லாகா
துரத்தொடுங் காலையூன்றி யுதைத்திழுத் தசைத்து வெள்வாய்
நிறைத்தபல்ல தரங்கவ்வி நெற்றிமேற் புருவ மோட்டி
வரைத்தடப் புயங்கள் வேர்ப்ப வலித்தறச் சலித்துழன்றான்.

வசனம்.

உடனே ஒருவன் மேன்மாடத்தில்போய், அங்கு இட்டிருந்த மேற்பலகையை யெடுத்துவிட்டு அக்கல்லில் தன் இரண்டு கைகளையும் வைத்துப் பலம் அனைத்தையும் கூட்டித்தள்ளினான். தள்ளினவுடன் அவனுடைய இரண்டு கைகளையும் அந்தக் கல் இறுகப் பிடித்துக் கொண்டது. கல் கொஞ்சமும் அசையவில்லை. தன் இருகரங்களும் கருங்கல்லில் பிடிபட்டவுடன், அப்பாதகன் மனம் கலங்கி, தன் கைகளைக் கல்லிலிருந்து கழற்றிக் கொள்ளுவதற்காக இழுத்தான். கழற்றமுடியவில்லை. அதனால் திகைத்துத் தன் பலம் அடங்கலையும் கூட்டி, கால்களை நிலத்தில் ஊன்றி உதைத்துக் கொண்டு, முகத்தை சுழித்துப் புருவங்களை நெற்றிமேல் ஏற்றி உதட்டைக் கடித்து, உடல் முழுதும் வேர்வை சிந்த வலித்து இழுத்தான். இவன் இவ்வளவு பிரியாசையுடன் இழுத்தபோதிலும் இவனது தீயகரங்களை அக்கருங்கல் விட்டு விடுமா! அதை அறியாதவனாகையால் பின்வரும் தீங்கைக் கருதாமல், மறுபடியும் மூச்சை யடக்கிக்கொண்டு, அசைத்து அசைத்து இழுத்தான். இவன் இழுக்குந்தோறும் இரண்டுகைகளும் வரவரக் கல்லுக்குள் அழுந்தியதேயன்றி, மயிர்க்கடையாவது வெளிவரவுமில்லை; புதைந்தமட்டிலிருக்கவுமில்லை. கருங்கல்லானது இவனுடைய கைகளை மேலும் மேலும் உள்ளுக்கு இழுத்துக் கொண்டிருந்ததால் வேதனையதிகரித்து, வாய் விட்டு அலறமாட்டாமல் துயரத்தையடக்கிப் பெருமூச்செறிந்து, உடலொடுங்கி, மனநிலை தளர்ந்து, "இது யார் செய்த தீவினையோ! என் தலைவிதியோ!! என்ன பாதகமோ" எனப் புலம்பினவனாய் கல்லோடு கிடந்து புரண்டுகொண்டு இருந்தான்.

மேன்மாடத்தில் வைத்திருந்த கருங்கல்லை நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மேல் தள்ளிக் கொலை செய்வதற்காகப் போனவன், கல்லைத் தள்ளாமல் அதிக நேரம் வரை

தாமதப்பட்டுக் கொண்டிருப்பதைக் கீழ் வீட்டிலிருக்கும் காபிர்கள் சிந்தித்து, சிலர் விரைவாய் எழுந்து "பணங்கொண்டு வருவதற்காக மேல்வீட்டுக்குப் போனவன், இந்நேரமட்டும் என்ன செய்கிறான்? ஏன் இவ்வளவு தாமதம்? அங்கே போய்ப் பார்ப்போம்!" எனக் கபடமாகச் சொல்லிக்கொண்டு மேன்மாடத்தில் சென்று பார்த்தார்கள். கருங்கல்லும் தானுமாய்ப் புரண்டு கிடக்கும் அவனுடைய பரிதாபமான அந்த காட்சி, பார்த்தவர்களின் உள்ளத்தைக் கலக்கியுருக்கிற்று. இவர்கள் திகைத்து அவனை யடுத்து நின்று "உனக்கு என்ன அபாயம் வந்தது?" எனக் கேட்டார்கள். அப்போது அவன் மனச்சஞ்சல மடைந்து, இவர்களை நோக்கி "மேன்மாடத்தில் போய்க் கருங்கல்லை புரட்டித் தள்ளு, என நீங்கள் சொன்ன சொல்லை நான் கேட்டேனே அப்போதே நான் கெட்டேன். இனி சொல்லுவது என்ன உண்டு" என்று மனமுருகிக் கண்ணீர் சொரிந்து சொன்னான். இப்பரிதாபமான வார்த்தையைக் கேட்ட அப்பாதகர்கள் மனம் வருந்தி, அவனை நோக்கி ஆச்சரியமடைந்து அனைவரும் அவன் இடுப்பையும், தோட்களையும், விலாபக்கங்களையும், துடைகளையும், கால்களையும் பிடித்துக்கொண்டு, மிக உரத்து இழுத்தார்கள்.

இவர்கள் எவ்வளவு இழுத்தார்களோ அவ்வளவுக்கும் அவன் கைகள் மறுபடியும் கல்லினுள் பதிந்தன. கல்லும் இவன் கைகளைக் கெட்டியாக இறுக்கிக்கொண்டது. இது என்ன புதுமையினாலேயோ என அம்மட்டில் நிறுத்திவிட்டு, இனி நடக்கவேண்டிய காரியத்தைக் குறித்துச் சிந்திக்காமல் "கல்லினுட் புதைந்த கைகள் தாமே" என அற்பமாகக் கருதி, மேன்மாடத்திலேறி நிற்கும் துஷ்டர்களனைவரும் ஒருமிக்க, அவன் உடலெங்கும் பிடித்துக்கொண்டு உரங்கொண்டு மிக வலிமையா இழுத்தார்கள்: அவர்கள் இழுத்தது பழுது போகவில்லை. அவனுடைய உயிர்பிரியும் விதமாக உடல் துடித்து வருந்தும் வண்ணம் இவர்கள் இழுத்த வன்மையால், இரண்டு கைகளையும் கல்லுக்குள் பதிந்த அளவு நீங்கி மற்றவை அற்றுக்கொண்டு வந்தன. இரண்டு கைகளிலும் அதிக பாகம் கருங்கல்லுள் புதைந்துபோக, வெளியிலிருந்தவை உதிரமொழுக அற்றுக் கொண்டு வந்தவுடன், கையிழந்தவன் ஸ்மரணையின்றி மூர்ச்சித்து விழுந்தான். மற்றவர்கள் மனம் ஏங்கி, சஞ்சலத்தில் அமிழ்ந்து "இதற்கு நாம் என்னசெய்வோம்" எனத் தடுமாறிக் கலங்கினார்கள்.

அப்போது, அவர்களில் ஒருவன் விரைவாய் அங்கிருந்து கீழ்விட்டிறங்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருகில் உட்கார்ந்திருக்கும் தரகனை யடுத்து, அவனை இரகசியமாக "சற்றே மேன்மாடத்துக்குத் தாங்கள் வரவேண்டும்" என வேண்டிக்கொண்டான். உடனே தரகன் இசைந்து அவன்கூட மேன்மாடத்தில் ஏறினான்.

இருவரும் அங்கே போனபின், அழைத்து வந்தவன், தரகனை நோக்கி "கனம்பொருந்தின தரகரே, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பவர் வர்த்தக விஷயமாய் இவ்வூருக்கு வந்தபின், அவருடைய அவயவ இலட்சணங்களையும் குணாதிசயங்களையும் நல்லொழுக்கத்தையும் எங்களில் சிலர் கண்டு, "இவர், முன்னுள்ள வேதங்கள் சொன்ன பிரகாரம் பிந்தின காலத்தில் பிறக்கும் நபிதான்" என ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். அப்போது, இந்த மாளிகையிலிருக்கும் இவர்கள் அனைவரும் ஒருமித்து "நமது மார்க்கத்துக்கும், குடும்பத்திற்கும் தீங்கு வருவிக்கும் வண்ணம் புதிதாய் நபியென்று பிறந்த இவனை, நாம் எவ்விதத்திலாவது கொன்றுவிடவேண்டும்" எனத் துராலோசனை செய்து, முஹம்மது இடஞ்சென்று சரக்குகள் வாங்கிக்கொண்டு அவரிடத்திலேயே பணங்கொடுப்பதாகச் சொல்லி அவரை யழைத்துக்கொண்டு வந்து, இன்னதானத்தில் உட்காரவைத்து, அதற்காக மேன்மாடத்தில் ஏற்றிவைத்திருந்த கருங்கல்லை அவருடைய சிரசுக்கு நேராகத் தள்ளிக்கொன்று போடுவதாகத் தீர்மானித்துக்கொண்டு, இங்கு இக்கல்லைக் கொண்டுவந்து வைத்துவிட்டு, அந்த நான்கு பேர்களும் சரக்கு வாங்கவந்தார்கள். வந்தவர்கள் சரக்குகளை வாங்கிக்கொண்டு. பணம்தருவதாக முஹம்மதை அழைத்துவந்து, குறித்த ஸ்தானத்திலிருத்தி மேற்படி கல்லைப்புரட்டித் தள்ளும்படி இந்தக் கையறுந்தானை ஏவினார்கள். இவன் வந்து தன் கைகளைக் கல்லில் வைத்துத் தள்ளின மாத்திரத்தில் இருகைகளும் கல்லுக்குள் பதிந்துவிட்டன. இவனால் இயன்றவரையும் அசைத்து இழுத்தும் சிறிதும் வெளிவராமல், வரவர உள்ளே புகுந்தன. இவன் இவ்விதம் இங்கு வருந்திக்கொண்டு கிடப்பதை யறியாமல், பணம் கொண்டு வரப்போனவன் தாமதப்பட்ட பாவனையாகப் பேசிக்கொண்டு நாங்கள் உயரவந்து பார்த்தபோது, இவன் இருக்கும் பரிதாப நிலையைக்கண்டு சித்தம் பிரமித்து, அனைவரும் ஒருமிக்க அவனைப்

பற்றி யிழுத்தோம். நாங்கள் இழுத்த வலிமையால் புதைந்த அளவு போக இவன் கைகளில்மற்றவை அறுந்துகொண்டு வந்துவிட்டன. இதற்கு நாங்கள் என்ன செய்வோம்? என்று மிக மன சஞ்சலத்துடன் பரிதபித்துச் சொன்னான்.

இவன் இந்த விபரீத வர்த்தமானங்களைச் சொல்லிக்கொண்டு வரும்போது, தரகனுடைய கண்களில் நீர் பெருகிப் பிரவாகித்தது. கண்ணீர்சொரிய அழுதுகொண்டே கேட்ட தரகன், அங்கு இருக்கும் காட்சியைக்கண்டு மனம் வருந்தி, அவர்களை நோக்கி "நீங்கள் அனைவரும் நரகவாசிகளாய் விட்டீர்கள். சிந்தனையின்றிப் பெரியோர்களுக்குத் தீங்கு செய்யவேண்டும் எனக்கருதும் எவ்வகை மனிதர்களும் உள்ள செல்வங்கள் அனைத்தையும் இழந்து அறக் கீழாய் நாசமடைவதுமன்றி தமது சந்தான பரம்பரையையும் நாசமடையச்செய்கிறார்கள். ஒருவன் மற்றொருவனுக்கு விக்கினம் உண்டுபண்ண நினைப்பது, தன் உயிரைக்குடிக்கும் கூராயுதத்தைப் பகைவன் கரத்தில் கொடுப்பதுபோலும், "செய்த தீவினை செய்தவர்க்கு எத்திடும்" என உலகத்தார் சொல்லுவார்கள். அறிவு சிறிது மில்லாத கீழ்மக்கள் பலர் திரண்டு, அறிவுடையவர்களுக்குத் தீங்கு செய்யத் துணிவது ஜலத்தில் அக்கினியைச் சொரியும் தன்மையாகும். தீங்குசெய்ய வேண்டும் என இந்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்துக்கு மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் நினைப்பது நியாயமல்லவே. இதைப்பற்றி நான் சொல்ல என்ன உண்டு. உங்கள் தீவினை உங்களுக்கே கையும் மெய்யுமாய்ப் பலித்தது. அதை நீங்கள் அநுபவித்துக்கொண்டீர்கள். பிறர்செய்யும் தீமையைப் பொறுக்கக்கூடிய சக்தி யுள்ளவர்களுக்கு அவ்விதத் சக்தியில்லாதவர்கள் விக்கினஞ்செய்யத் துணிவது, தம் உயிரைக் கொள்ளை கொள்ளும் யமனை வலிய அழைக்குந் தன்மை யென்பதை நீங்கள் ஆராய்ந்து அறியவில்லை. பின் விளையும் கெடுதியைச் சிந்தித்தறியாமல் இப்போது நீங்கள் செய்த தீவினையைப்பற்றி கவனிக்கத்தக்கது வேறே ஒன்றுமில்லை. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பவர், "கடவுளுடைய தூதராய் ஒருவர் பிறப்பார்" என்று முன்னுள்ள வேதங்கள் சொன்ன சொல்லை நம் மூதாக்கள் வெளியிட்டபடி, நபியாய்ப் பிறந்தவர் என்பதற்கு யாதும் சந்தேகமில்லை. இப்போது இங்கு நிகழ்ந்திருக்கும் சங்கதியை அந்த முஹம்மதுநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

இடம் சென்று முறையிட்டு, அவரைக்கொண்டே இவன் கைகளுக்கு நேரிட்ட விபத்தை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும்" என்று மிக உருக்கத்துடன் சொன்னான்.

அறிவற்றுத் தாங்கள் செய்த கொடுமையைக் குறித்துத் துக்கித்து, நல்லுணர்வு சிறிதுமின்றி மனமயங்கிநிற்கும் அப்பாதகர்கள் அனைவரும் தரகன் சொன்ன உத்தம வார்த்தைகளைக்கேட்டு மனமுவந்து, நடந்த காரியத்தை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் முறையிட சம்மதித்தார்கள். அனைவரும் ஒருமித்து மேன்மாடத்திலிருந்து கீழிறங்கும்போது, மேற்படி தரகன் அவர்களுக்கு முந்திவிரைந்து இறங்கி நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுகத்தில்வந்து பணிந்து நின்று வாய்ப்புதைத்து, "நாயகமே, இந்த மாளிகையிலிருக்கும் அறிவீனர்களாகிய பாதகர்கள், சிந்தனையற்று ஒரு தீங்கு செய்துவிட்டார்கள்; அத்தீங்கு அவர்களுக்கே சம்பவித்தது. அதன் விபரம் இப்படி" என வகையுடன் சொல்லிக் காட்டினான். அதற்குள் அந்தப் பாதகர்கள் அனைவரும் திரண்டுவந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதமலர்களில் விழுந்து வணங்கி எழுந்துநின்று தாங்கள் எவ்வளவு ஆலோசனை இல்லாமல் செய்யத்துணிந்து சிக்குண்ட காரியமடங்கலையும் சொல்லிக்காட்டி "நாயகமே, தங்கள் அடியார்களாகிய நாங்கள் அறிவற்ற ஏழைகள். எங்கள் மௌடகத்தினால்செய்த தீவினையைப்பொறுத்துத் தாங்களே எங்கள் அனைவரையும் இரட்சிக்க வேண்டும்" என மிக சஞ்சலத்துடனே மன்றாடினார்கள். இவர்களுக்காகத் தரகனும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் மிகப் பிரார்த்தித்து வேண்டிக்கொண்டான்.

உலகத்தார்களுக்கு றஹ்மத்தாகிய முஹம்மது முஸ்தபா ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நடந்த வர்த்தமானம் முழுவதையும் செவியாரக்கேட்டு, தரகன் பிரார்த்தித்து வேண்டுவதையும், காபிர்கள் தாங்கள் செய்த குற்றத்திற்காக பச்சாத்தாபப்பட்டு அக்குற்றத்தை மன்னிக்க வேண்டும் என மன்றாடுவதையும், உள்ளத்தில் பொருத்தி, அக்காபிர்களை நோக்கி, "கைகள் அறுப்பட்டுக் கிடப்பவன், எங்கே? அவனை இங்கு கொண்டுவாருங்கள்" என்றார்கள். இவ்விதம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னவுடனே, சில்

விரைந்துசென்று, கைகள் அறுப்புண்டு உதிரம் பிரவாகிக் கிடக்கும் அவனையும், அக்கைகளைச் சிதைத்த அக்கருங்கல்லையும் கொண்டுவந்து நபிநாயகமவர்களின் சந்நிதியில் சேர்த்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கைகள் அறுப்புண்ட பாதகனை நோக்கி, "கருங்கல்லுள் புகுந்து அறுப்புண்ட அக்கைகளின் அறுப்புவாயில், உன்கைகளை ஒட்டிவை" என ஏவினார்கள். உடனே அவன் தன் இரு முண்டிதமான கரங்களையும், கல்லுள் பதிந்திருக்கும் கைகளுடன் வைத்தான்; அக்கைகள் பழையபடி ஒட்டிக்கொண்டன. மறுபடியும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனை நோக்கி' "உன் கைகளை அக்கல்லிலிருந்து அசைத்து நெகிழ்த்து இழுத்து எடு" என்றார்கள். அவன் அவ்விதம் செய்தபோது, முன்னைய பலத்திலும் மிகப்பலங் கொண்டதாய், முறிபட்ட தழும்பின் குறியும் இல்லாததாய், ஜலத்தில் அமிழ்த்தி எடுக்கும் கரங்களைபோல இரண்டு கைகளும் மிக இலகுவாய் வந்தன. உடனே அவன் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிப் புகழ்ந்து எழுந்து நின்றான். மற்ற காபிர்கள், யஹூதிகள், நஸாறாக்கள் அனைவரும் இந்த அற்புதத்தை கண்கள் குளிரக்கண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சொல்லுதற்கு அரிய விதமாகப் புகழ்ந்து துதித்தார்கள்.

22-வது அத்தியாயம்.

மூஸாவைக் கண்டது.

கலிச் சந்த விருத்தம்.

மூஸாநபி யோடு மொழிந்தெழி லார்மிஃ
றாஜெனிய போதொரு காத லுவந்திடுகம்
பூசாபல ரானபு ரோசன மாரிறஸூ
லாசாதமை யென்பொடு கண்டது ரைத்திடுவாம்.

இதன் பொருள்.

அழகிய மிஃறாஜுக்குப் போகும்போது, நான்காவது வானத்தில், நபி மூஸா அலைஹிஸ்ஸலாத்தைக் கண்டு, அவர்களோடு

பேசிக்கொண்டு பின்னர், ஒப்பற்ற அல்லாஹுதஆலாவுடைய திருச்சமூகத்திற்போல், நமக்கெல்லாம் பிரயோஜனமுண்டாகும்படி பேசிவந்த றஸூல் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், ஊசா வென்னும் மகா பண்டிதனை அன்போடு கண்டதைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மிக்க செம்பொனீந் தவர்க்குநன் மொழிபல விளம்பிப்
புக்கிருந்தவ ருடனெழுந் தகன்று பொன் நிகழத்
தக்க மாமணிக் கதிர்விடு மருகினிற் சார்ந்தோ
ரக்க சாலையி னிடத்துவந் திருந் தனரன்றே.

வசனம்.

பின் விளையும் கஷ்ட நஷ்டங்களைப்பற்றிச் சிறிதும் ஆராய்ந்து அறியாமல், பெரியோர்களுக்கு ஆபத்து உண்டு பண்ணத் துணியும் அறிவற்ற கீழ்மக்கள், தாங்கள்கொண்ட கருத்து சித்திபெறாமல் அவ்வாபத்தில் அவர்களே சிக்கிக்கொள்ளுவார்கள் என்பதை, இவ்வுலகத்தாருக்கு சாட்சி பகர்வதாக, அக்காபிர்கள் செய்த தீங்கை சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுப்பார், என்பதை நிரூபிப்பதாக நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொறுத்து, அக்காபிர்களுக்கு நேரிட்ட விக்கினத்தை விலக்கினபடியால், அங்குள்ளவர்களான ஷாமிகள் அனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தக்க ஆசனத்தின் மேல் உட்காரச்செய்து, நானாவிதம் புகழ்ந்து துதித்து, முன்வாங்கி வந்த சரக்கின் கிரயத்தையும் கொடுத்தார்கள். பிற்பாடு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், மைசறாவும், நாகனும், மற்றமக்கிகளும் அந்தமாளிகை விட்டுஎழுந்து நடந்து இரும்பு அடிக்கும் கருமான் ஒருவனுடைய உலைக்கூடத்தில் நுழைந்து, அங்கே சற்று உட்கார்ந்தார்கள். அப்போது, அந்த உலைக் கூடத்தில் இரும்பைக் காய்ச்சி அடித்துக்கொண்டு நின்ற கருமான், இவர்கள் அனைவரையும் நோக்கி "நான் காய்ச்சி யடிக்கும் இந்த இரும்பு பாளத்திலிருந்து அக்கினிப்பொறிகள் சிதறும்; அவை

உங்கள்மேலே தெறிக்கும்; சுடும்! எழுந்து விலகிப்போங்கள்; இங்கே யிருக்கவேண்டாம்" என்றான்.

இச்சொல்லைக் கேட்ட அனைவரும் அஞ்சி எழுந்துபோய் விரைவாக ஒருபுறம் ஒதுங்கி நின்றார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாத்திரம் அக்கருமான் சொன்ன சொல்லைச் சிறிதும் மதிக்காமல் அவ்விடத்திலேயே யிருந்துகொண்டு, அவனை நோக்கி "அந்த அக்கினி உங்களிடத்திலிருந்தே யுண்டாகிறது அல்லாமல், மற்றவர்களிடத்தில் அல்ல, அதன் வெப்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் சக்தி உங்களுக்கே யுண்டு. ஆனபடியால், அது உங்கள்மேலே தான் தெறிக்கும். மற்றவர்கள் உடலில் தெறிக்காது, சில சந்தர்ப்பங்களில் தெரித்தாலும் சுடுங்குணம் அவ்வக்கினிக்கு இல்லை" என்றார்கள். தன் சொல்லை அசட்டைப்பண்ணி நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்விதம் சொன்னவுடன், அந்தக்கொல்லன் சினம்கொண்டு இவ்வார்த்தையை நாம் அறிவோம் எனக் கருதி விரைவாய் மற்றொரு பெரிய இரும்புப்பாளத்தைத் தூக்கி உலைக் களத்திலிட்டு, அதன்மேல் உமியையும் கரியையும் அபரிமிதமாகப் பெய்து, தீமூட்டி ஊதினான். அவ்வுலைக்கூடம் எங்கும் புகைமண்டி அக்கினி மூண்டு எரிந்தது. அதனால், அந்த இரும்புப்பாளம் தன் இயற்கைமாறி முழுதும் அக்கினியாய் விட்டது. கொல்லன் அந்த இரும்புப் பாளத்தைத் தூக்கி வைத்து தன் இருகையாலும் சம்மட்டியைத் தூக்கிக்கொண்டு, கண்கள் தீப்பொறி சிந்த பல்லைக் கடித்து ஓங்கி யோங்கி அடித்தான். இவன் அடிக்கும் வேகத்தால் அக்கினிப் பொறிகள் அதிலிருந்து தெறித்து நான்கு பக்கமும் சிதறின. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமீபத்தில் உட்கார்ந்து இருப்பதால், அவர்களின் திவ்விய திருமேனியிலும் அநேக தீப்பொறிகள் தெறித்தன. அவை, சந்தனமும் பன்னீரும் கலந்து கலவைச் சேறுவந்து அப்பிக் குளிர்வது போல இருந்ததன்றி, சிறிதும் சுடவேயில்லை. அதனால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருந்தபடியே மனம் களித்து சந்தோஷமாய் உட்கார்ந்து இருந்தார்கள்.

உலைகளத்தில் அறக் காய்ந்த இரும்புப் பாளத்திலிருந்து தெரிக்கும் அக்கினிப்பொறிகள் கலவைச் சேறுபோல, நபிநாயகமு

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருமேனியில் பட்டுக் குளிர்வதால், நபிநாயகமவர்கள் சிறிதும் அஞ்சாமலிருப்பதை அக்கொல்லன் பிரத்தியட்சமாகக் கண்டு பிரமித்து "நீர் யார்? உமது குடும்பம் எது? ஊர் எது? உமது பெயர் என்ன? அவற்றை எனக்கு விவரித்துச் சொல்" என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கிக் கேட்டான். அதற்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அவனை நோக்கி "என் குடும்பத்தின்பெயர் அத்னான், ஊர் மக்கா, நான் அப்துல்முத்தலிபு உடைய புத்திரராகிய அப்துல்லாவின் குமாரன். என்பெயர் முஹம்மது" என்று சொன்னார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு சொன்னபோது, மக்கமா நகரத்தில் முஹம்மது என்ற நபியொருவர் பிறப்பார், நமது மார்க்கம், கோத்திரம் அனைத்தையும் அறக்கெடுப்பார். என அவன் மூதாட்கள் சொல்லி யிருந்த சொல் அக்கொல்லனுடைய ஞாபகத்தில் வந்தபடியால், உள்ளம் கொதித்து, திடீரென எழுந்து நின்று "இந்த நகரத்தில் வசிக்கும் வேதபாரகர்களே! சாஸ்திரஞானிகளே கல்விமான்களே! சாமானிய ஜனங்களே! ஓடிவாருங்கள்! சீக்கிரம்! சீக்கிரம்!!! நமது தெய்வமாகிய விக்கிரகம் அனைத்தையும் அறக்கெடுத்து, நம்மைச் சீரழிக்கும் ஒருவன், இப்போது நமது ஊருக்குள் புகுந்துவிட்டான். அவன் இதோ என் உலைக்கூடத்தில் உட்கார்ந்து இருக்கிறான். சீக்கிரம் ஓடிவாருங்கள்!" எனக் கூக்குரலிட்டு அலறினான். இவனிட்ட கூக்குரல் கேட்டமாத்திரத்தில் அந்நகரத்தில் வசிக்கும் விக்கிரக ஆராதனைக்காரர்கள், யஹூதிகள், நஸாராக்கள் ஆகிய பகையர்கள் அநேகர் ஒருங்கு திரண்டு, தத்தம் ஆயுதங்களை யெடுத்துப் பிடித்துக்கொண்டு யுத்த சன்னத்தராய், கொல்லனுடைய உலைக்கூடத்தை நோக்கி வந்தார்கள்.

இவன் தெருப்புறம் நோக்கிக் கூக்குரலிட்டபடியால், பகைவர்கள் பலர்திரண்டு ஆயுதபாணிகளாய் நெருங்கி வருவதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அவர்கள்கூட இருப்பவர்களும் அறிந்து, அந்த உலைக்கூடத்தைவிட்டு வெளிப்பட்டு விரைந்து நடந்து, தங்கள் விடுதிக்கு வந்தார்கள். அம்மட்டோடே பகைவர்கள் நிற்கவில்லை. "யார் அவன்? எங்கே அவன்? தேடுங்கள்!! அடர்ந்துபிடியுங்கள்! வெட்டுங்கள்!!!" என ஒருவரோடொருவர்சொல்லிக்கொண்டு, மக்காவாசிகள் இறங்கியிருக்கும் மதிட்புறத்தை

நோக்கி வந்தார்கள். பகையர்கள் இவ்விதமாக அதிக்கிரமித்து யுத்தப் பிரியராய் வருவதை இவர்கள் கண்டார்கள். கண்டாலும் என்ன? அப்போது அந்தத் துஷ்டர்களுடன் எதிர்த்துச் சண்டையிட தயாராய் இல்லை. அவர்கள் சுதேசிகள்; இவர்களோ பரதேசிகள். அவர்கள் யுத்தப்பிரியமுள்ள சண்டாளர்கள்; இவர்களோ வர்த்தகர்கள். அவர்கள் அநேகர்; இவர்களோ மிகச்சிலர். இவ்விதவித்தியாச முள்ள இவர்கள், அவர்களோடு எதிர்த்து நின்று போராடி வெற்றி பெறுவது எப்படி? இவைகளை யெல்லாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் மற்றவர்களும் தீரத்தெளியச் சிந்தித்து "இவ்வூர்பகையர்கள் மிக மும்முரமாய்த் திரண்டு வருகிறார்கள். இனிநாம் இங்கே தங்கி நிற்பது ஒழுங்கல்ல. நமக்கு ஆகவேண்டிய காரியம் அனைத்தும் முடிந்துவிட்டன. நாம் பிரயாணத்துக்கு எத்தனமாகவே யிருக்கிறோம். அவர்கள் வந்து நம்மை நெருங்கிக் கலகம் விளைவிப்பதற்குமுன் நாம் புறப்பட்டு இந் நகரத்தைவிட்டு வெளிப்பட்டு விடுவதே சரி" என்று தீர்மானித்துக் கொண்டு, மிகத் துரிதமாய் சரக்குகள், சாமக்கிரிகைகள் எல்லாவற்றையும் வாகனங்களில் சுமத்தி, தத்தம் ஏறுவாகனங்களில் ஏறிக்கொண்டு, ஷாம் நகரத்தை விட்டுப் புறப்பட்டு, அதிக விரைவுடன் கோட்டையைக் கடந்து, அறபு இராஜ்ஜியத்தின் மார்க்கத்தைப் பிடித்து நடந்தார்கள்.

நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் நகரத்தை விட்டு வெளிப்பட்டு விட்ட பிறகு, பகைவர்கள் அனைவரும் திறம் குன்றித் தம்மிலேயே கலைந்து போய்விட்டார்கள். கருமானிட்ட ஊளையும் பலனற்றது. பிறகு வர்த்தகர்கள், பகையர்கள் பின்தொடர்வார்கள் என்னும் அச்சத்தால் இரவும் பகலும் நடந்து வெகுதூரம் சென்றபின், ஒரு பக்கம் அச்சமின்றி நடந்து வரும்போது இவர்கள் வரும் பாதையில் அலங்காரமான ஒருமாளிகையை எதிரே கண்டார்கள். அந்த மாளிகையில் முனிவர் ஒருவர் வாசம் செய்தார். அவர் அறிவில் சிறந்த வேதாந்தியும், சாஸ்திர தீட்சா குருவுமாகிய ஊசா என்னும் நாமத்தை யுடையவர்; பல இடங்களிலு முள்ள உயர்குலத்தோர்களால் மதிக்கப்பட்டவர்; திரிகால வர்த்தமானங்களையும் அறிந்து கூறும் நிபுணர்; மகாபெரிய யோகாப்பியாசி. இவ்வாறு

பலவித நன்மைகளிலும் விசேஷித்த ஊசாவுடைய மாளிகையை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், மற்ற வர்த்தகர்களும் கண்டு, இங்கே தங்கி இளைப்பாறும்படி அந்தமாளிகையின் பக்கத்தில் இறங்கினார்கள்.

இவர்கள் அனைவரும் அங்கு விடுதியிட்டவுடன் அந்த ஊசா என்பவர், தம்மாளிகையை விட்டு வெளியில் வந்து நின்று, இந்த வழிபோக்கர்களை நோட்டமிட்டார். அப்போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், கருமேகக் குடையின் கீழ் பாதமலர் நிலத்தில் தோயாமல், கஸ்தூரிமணம் பரிமளிக்க, திவ்விய திருமேனியின் பிரபை ஜொலிக்க, பூரணமதியொத்த முகம் இலங்க நிற்பதைக்கண்டு, உடனே நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யடுத்து, அவர்களின் பக்கத்தில் உட்கார்ந்தார். அருகில் உட்கார்ந்த ஊசா என்னும் பண்டிதர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "அழகிய வாலிபரே, உமது ஊர், குலம், பெயர் முதலானவற்றை எனக்குச் சொல்லவேண்டும்" என்று மாரியாதையுடன் கேட்டார். அதற்கு நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் திருவாய் திறந்து "நான் அதுனான் கிளையிலுள்ளவன்; மக்கமா நகரத்தில் வசிக்கும் அபூத்தாலிபு உடைய இளைய சகோதராகிய அப்துல்லாவின் புத்திரன்; என்பெயர் முஹம்மது" என்று ஊசாவை நோக்கிச் சொன்னார்கள். இச்சொல்லை ஊசா கேட்டு, தாம் ஓதி வந்த வேதங்களில் குறிப்பாகக் கூறப்பட்ட நபி இவர்தான் என மிக உறுதியாய் நிச்சயித்து மனம் மகிழ்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டுப் பிரியாமல் அருகிலிருக்கும் மைஸறாவை நோக்கி "நீர் யார்? உமது குலம் எது? பெயர் என்ன?" என்று உசாவினார்.

அப்போது மைசறா "நான் மக்கமா நகரத்தில் வாழ்க்கையில் சிறந்த குவைலிது என்னும் தனிகருடைய செல்வப் புத்திரியாகிய கதீஜா என்னும் சீமாட்டியின் ஊழியர்களில் ஒருவன்: ஹபஷிக் கிளையிலுள்ள மஷ்றூக்கு உடைய குமாரன்: என்பெயர் மைஸரா" என்று ஊஸாவை நோக்கி மொழிந்தார். குவைலிது, கதீஜா, என்னும் நாமங்கள் ஊசாவுடைய செவிகளில் புகுந்த மாத்திரத்தில், அவர் மைஸறாவை நோக்கி "மைஸறாவே, நீர் சொன்ன குவைலிது

என்பவர் எனக்கு மிக அந்நியோன்னியமான மித்திரர்; மார்க்கமுறை பிறளாத புண்ணியர்; ஒப்பற்ற கல்விமான்; எங்கும் பிரபலமான தனவான்; நற்குணம் நற்செய்கை முதலான நல்லொழுக்கங்களில் விசேஷித்த விவேக சாதுரியர்" என குவைலிதை மிக வியந்து பேசினார். தமது எஜமானியின் தந்தையை அபரிமிதமாய் வியந்து பேசும் ஊசாவை, மைசறா நோக்கி "நீர் இன்னார் என எனக்குத் தெரியவில்லை, உமது பெயர் என்ன" என்று கேட்டார். அதற்கு அவர், மைஸராவை நோக்கி "என் பெயர் ஊசா" எனப்பதில் யுத்தரம் சொன்னார்.

பிற்பாடு, ஊசா என்னும் பண்டிதர் தாம் குவைலிதுக்கு உயிர்ச் சிநேகிதர் என்று சொன்னசொல்லை மைஸறா சிந்தித்து, நாம் மக்கமா நகரத்திலிருந்து பிரயாணமாகிறபோது கதீஜா நம்மை நோக்கி "நீங்கள் போகும் மார்க்கத்தில் ஒரு பண்டிதரைக் காண்பீர்கள். அவர் எங்களுக்கு மிக நெருக்கமான சிநேகிதர். அவரிடத்தில் நீர், நான் கண்ட கனவைச்சொல்லி அதன்பயனைக் கேட்டு வாருங்கள்" என்று சொன்ன மகாபண்டிதர் இவரேயாவர், என நிச்சயித்துக் கொண்டு, மனம் மகிழ்ந்து ஊசாவை நோக்கி "பண்டிதரே! நான் உம்மிடத்தில் சொல்ல வேண்டிய சில சங்கதிகள் இருக்கின்றன. அச்சங்கதிகளை நீர் செவிசாய்த்துக் கேட்க வேண்டும். அவை யாவன:—மக்கமா நகரத்தில் வசிக்கும் குறைஷிகளுக்குள் சிறந்த ஒப்பில்லாதமாணிக்கம் போலவும், உமது அரிய மித்திராகிய குவைலிது உடைய கண்மணி போலவும் பெண்களுக்கு அரசியாகிய எங்கள் எஜமானி கதீஜா, தாம் நித்திரை செய்கிறபோது, பூர்ணச் சந்திரன் ஒன்று தம் மடியிலிறங்கி விளையாடுவதாகவும் அதைத் தாம் தமது முந்தானைகொண்டு மூடுவதாகவும் சொர்ப்பனங் கண்டார். இச்சொர்ப்பனத்தை உம்மிடம் சொல்லிப் பயன் கேட்டு வரும்படி எனக்குக் கட்டளை செய்திருக்கின்றார். அன்றியும் கதீஜா உமக்கு வந்தனம் சொன்னார்" என்று கூறினார். இவ்வாறு மைஸறா சொன்ன சங்கதிகளை ஊசா மனமுவந்து கேட்டு ஆனந்தங் கொண்டு, கதீஜாவின் வந்தனத்துக்குப் பிரதிவந்தனம் மொழிந்து, பிற்பாடு கதீஜா கண்ட கனவை ஆராய்ந்து, சந்தோஷத்தினால் சிரக்கம்பம் செய்துகொண்டு மைஸறாவை நோக்கி "மைஸறாவே! கதீஜா கண்ட கனவின் பயனைக் கேட்பீராக. 'மக்கா என்னும் நகரத்தில் முஹம்மது என ஒரு நபி பிறந்து, குர் ஆன் என்னும் வேதத்தை

யுடையவராய், தமது தீன் என்னும் மார்க்கத்தை எல்லா உலகங்களிலும் பரவச் செய்வார்' என முன்னோர்களால் கூறப்பட்டவர், இந்த முஹம்மதுவே யன்றி வேறில்லை. பூரணச் சந்திரன் மடியில் விளையாடவும், முந்தானையால் மூடவும், கதீஜா கனவு கண்டபடியால், இந்த முஹம்மது நபியை கதீஜா விவாஹம் செய்து இவருக்கு மனைவியாய், சம்பத்துகள் அடங்கலையும் பெற்று இம்மையில் ஒப்பற்று விளங்கி, மறுமையிலும் மேன்மையான பதவியை யடைவார். இதில் எள்ளத்தனையும் தவறமாட்டாது. நான் சொன்ன இந்தச் சொற்களை, நீர் கதீஜா இடம் விவரமாகச் சொல்லும்" என மொழிந்தார்.

ஊசா என்னும் வேதபாரகர் சொன்ன வார்த்தைகளை மைஸரா கேட்டு, உள்ளம் குளிர்ந்து சந்தோஷ மடைந்தார். பிறகு மைஸராவும், ஊசாவும் சற்று நேரம் அளவளாய்ப் பேசியிருந்தனர். மைஸரா கதீஜா நாயகியாருக்குக் கடிதம் ஒன்று எழுதி, அக்கடிதத்தில் ஊசா சொன்ன கனவின் பயனையும் குறித்து, மக்கமாநகரம் விட்டுப் புறப்பட்டு ஊசாவைக் கண்ட தினம் வரையும் அன்றன்று நிகழ்ந்தவைகளைத் தின சரியா யெழுதிவந்த வர்த்தமானப்பத்திரங்களையும் அக்கடிதத்துடன் சேர்த்து ஒருவன் வசம் கொடுத்து, முந்திச் சென்று கதீஜா நாயகியாரிடம் சேரும்படி அனுப்பிவிட்டு, ஊசா இடத்தில் பிரயாணோபசாரம் செய்துகொண்டு புறப்பட்டார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், மற்றவர்களும் எழுந்தார்கள். அப்போது ஊசா, நபிநாயக மவர்களின் பாதமலர்களைத் தொட்டு முத்தமிட்டு, கனிவர்க்க முதலிய தின்பண்டங்கள் கொண்டு வந்து கொடுத்து சங்கை செய்து, வந்தனோபசாரனையுடன் அனுப்பினார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மகிழ்ந்து, தம்முடன் வர்த்தகர்கள் அனைவரும் தொடர்ந்துவர ஊசாவுடைய மாளிகையை விட்டு மக்கமா நகரத்தை நோக்கி நடந்தார்கள்.

23-வது அத்தியாயம்.

கதீஜா கனவு கண்டது

சந்தக்கலி விருத்தம்.

மண்டல மீதுறு மாதர்கள் போற்று
மொண்டொடி யார்கதீ ஜாவொரு போது
கண்டிடு சீர்கன வாகிய காட்சி
விண்டிடு வாமிகு மேன்மைய தாக.

இதன் பொருள்

பூமியினிடத்திற் பொருந்திய மற்றபெண்கள் யாவரும் போற்றும்படியான கைகளிடத்தில் அழகிய வளையலணிந்த கதீஜா நாயகி அவர்கள் ஒருநாள் சிறப்பாகக்கண்ட கனவாகிய அற்புதத்தை அதிக மேன்மையாகச் சொல்லுகின்றோம்.

சரித்திரப் புராணம்.

எழுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முகைமுறுக் கவிழ்த்து முருகுகொப் பளிக்கு
முளரியு முழுமணி நீல
நகைவிரித் தனைய குவளையுந் துகிரி
னறுமலர் விரித்தென விரித்து

திகழ்தருஞ் சேதாம் பலுங்குடி யிருந்து
திருவளர் வாவியின் வாளை
யுகடொறு வெருவி யொதுங்கிய சிறைப்புள்
ளொலித்திடு மிடங்களுங் கடந்தார்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களுடன் வரும் வர்த்தகர்களும், ஷாம் ராஜ்ஜியத்திலிருந்து மக்கமா நகரத்துக்கு வரும் பாதையில் விரைவாய்க் காடு, மலை, வனாந்தரம் முதலான இடங்களையும், மனிதர் வாசஞ் செய்கின்ற குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து வகையான நிலங்களையும் கடந்து கடந்து, ஷாம் ராஜ்ஜியத்

தின் எல்லையை நீங்கி, அரபு இராஜ்ஜியத்தின் எல்லையை யடுத்து, மக்கமா நகரத்தை நோக்கி நடந்து, பாதையில் எதிர்ப்பட்ட ஒரு பூங்காவில் தங்கினார்கள். அந்தப் பூங்கா நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து இறங்குவதற்காக சுவர்க்கத்திலிருந்து இறங்கினதுபோலச் சிறந்து விளங்கிற்று. அந்த வனத்தில் மிக உயர்ந்த புன்னைமரங்கள் ஆணிமுத்துகளைச் சொரிவதுபோல மலர்களைச் சொரிந்தன. நிரைநிரையாய் அமைந்த சண்பகத்தருக்கள் எங்கும் அலங்காரமான கம்பளம்விரித்த பாவனையாக மலர்களைச் சிந்தின; மகிழமரங்கள் குளிர்ந்த வாசனையுள்ள மலர்களை எங்கும் சிறக்கச் சிந்தின; இவைபோன்ற எண்ணிறந்த மலர்தரும் மரங்களும் பலவகைப் புஷ்பங்களை சொரிந்து விளங்கின. அன்றியும், தே, மா, பலா, வாழை, கொழுமிஞ்சி, மாதுளை, நாரத்தை, எலுமிச்சை, நாவல் என்னும் பலவகையான தீங்கனிகளைத்தரும் தருக்கள் எங்கும் வளர்ந்து ஓங்கிநின்று, தத்தம் கனிகளைச் சொரிந்தன. நான்கு வகைப் புஷ்பங்களிலும் நிறைந்துள்ள மதுரமமைந்த தேனை வண்டுகள் பருகிச் சிறகுவிரித்துக் கீதம்பாடின. மயில்கள் களித்தாடின. குயில்கள் கூவின. இவைகளல்லாமல் சொல்வதற்கரிய அலங்காரங்கள் அமைந்து விளங்கின. இவ்வாறு பலவகை வளங்களாலும் விசேஷித்த அந்தப் பூங்காவில் நபிநாயக மவர்களும், மற்றவர்களும் தங்கியிருந்தார்கள்.

இவர்கள் அனைவரும் அந்த வனத்தில் விடுதியிட்டு தங்கியிருக்கையில், அங்கே மக்கமாநகரத்தில், குவைலிதின் செல்வப்புதல்வியாகிய கதீஜா அவ்விரவில் நித்திரை செய்யும்போது, சுவர்க்கத்திலிருந்து அநேக மலக்குகள் திரள்திரளாய் மக்கமாநகரத்திலிறங்கி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சூழ்ந்து நின்று, நபிநாயகமவர்களை மஞ்சனமாட்டி, நல்லுடையுடுத்தச்செய்து பலவகை ஆபரணங்களும் பூமாலையும் அணிவித்து, ஒப்பற்ற ஒரு சிறந்த ஆசனத்திலிருத்தி, அழகுவிளங்கும் ஒரு ஒட்டகத்தின் மேல் ஏற்றி, பலவகை வாத்தியங்கள் முழங்க, குடை, கொடி, ஆலவட்டம், சாமரை முதலிய விருதுகள் நெருங்க, யானை, குதிரை, ஒட்டகம், சிவிகை, இரதம் முதலான ஏறுவாகனங்கள் எங்கும் மலிய, அரம்பையர்களான ஹூறுல்ஈன்கள் அநேகர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இருபுறமும் நெருங்கிவர, வானவர்கள் பொன்மலர் சொரிய புடை சூழ்ந்துகொண்டு மக்கமாநகரத்தின் சிறந்த வீதிகளில் பவனி நடத்தி வருவது போலவும், இவ்வித அலங்காரங்களுடன் பவனி வரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தாம் அடுத்து நின்று கண்ணாரக்கண்டு களித்து, இரண்டு பாதமலர்களையும் பணிந்து நிற்பதுபோலவும் சொர்ப்பனம் கண்டார். இவ்வித மேன்மையான கனவை கதீஜா காணும்போது, அது தம் இருதயத்திற்கு நனவாகவே யிருந்தது. அதனால், கதீஜா மனம் மகிழ்ந்து எழுந்து தம் படுக்கை யறையின் ஜன்னலைத் திறந்து தெருவை எட்டிப் பார்த்தார்; தாம் கண்ட ஆடம்பரங்களில் ஒன்றையாவது காணவில்லை.

ஆனபடியால் மனத்துயர் பெருகி, அந்தப் பாதி யிரவு அனந்த இரவுபோல நீடித்துப் பொழுதுவிடியாமல், தனது சப்பிரமஞ்சத்தில் எழுந்திருக்க வசமின்றிப் படுத்திருந்தார். அன்று முதற்கொண்டு நபிநாயகமவர்கள் மக்கமா நகரத்துக்குவரும் வரையிலும் தம் மனத்துயர் ஒழியவில்லை. நல்ல தின்பதார்த்தங்கள்மேல் விருப்பமின்றி, பாங்கிகளுடன் வார்த்தையாடுதல் ஒழிந்து, ஊண் உறக்கம் அற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் வைத்த காதலே நாளுக்குநாள் அதிகரித்து வந்தது. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பவனிவருவது போல கதீஜா கண்ட கனவு, அவரை சஞ்சலக்கடலில் அமிழ்த்திற்று. அதனால், கதீஜா உடல்மெலிந்து உள்ளங்குன்றி, மற்றொரு எண்ணமுமில்லாமல் நபிநாயகத்தின் எண்ணத்தையே மனதில் பதிய இருத்திக்கொண்டு, நாமிருக்கும் இக்கோலத்தைக்குறித்து நமது தந்தை துன்பமடைந்து மனம் பேதலிக்கும் வண்ணம் இவ்வூரார் என்னென்ன சொல்வார்களோ! நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பிரிய மனையாட்டியாகும் வாழ்வினை நமக்கு உண்டாயிருக்குமோ! பூரணசந்திரன் நமது மடியில்வந்து விளையாடினதும், வறக்கத்து என்னும் சாஸ்திரி சொன்னதும், இப்போது நாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பவனி வருவதுபோலக் கனவுகண்டதும் பொய்க்குமோ! நாம் முந்திகண்ட சொர்ப்பனத்தை மைசறுவுக்குச் சொல்லி அதன் பயனைக் கேட்டு வர சொன்னோமே, மைசறு சொன்னபோது அந்தப் பண்டிதர்

என்ன பயன் சொன்னாரோ! உலகத்தில் நபியாய் பிறப்பவர்களுக்குப் பெரும் பகையுண்டாவது வழக்கம்; அதனால், பாரதூரமான ஆபத்துகள், இடையூறுகள் எல்லாம் அவர்களுக்கு வந்து நேரிடும் எனக் கல்விமான்கள் சொல்ல நாம் அறிவோமே. இப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இங்கிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இதுவரையும் யாதொரு செய்தியும் தெரியவில்லையே. அங்கே என்னென்ன சம்பவம் நேரிட்டதோ! நமது சொந்த மனிதனாகிய மைசரா இடத்திலிருந்து இன்றும் ஒரு கடிதமாவது வரவில்லையே!—என்றும், இன்னும் பலவாராகவும் எண்ணித் துக்கித்துக்கொண்டிருந்தார்.

நல்லூண், நல்லுறக்கம், வெறெண்ணம், நற்பழக்கம் ஒன்றும் இல்லாமல், இவ்விதக் கவலையே தம் இருதயத்தில் வரவர வளரும்படி சஞ்சலத்தில் ஆழ்ந்து கதீஜா இருக்கையில், சில பாங்கிகள் விரைவாக வந்து கதீஜாவை நோக்கி "எங்கள் பெருமாட்டியே, இப்போது நமது மைசரா இடத்திலிருந்து கடிதம் ஒன்று வந்தது" என்றார்கள். உடனே கதீஜா உள்ளம் குளிர்ந்து அக்கடிதத்தை வாங்கி விரித்து வாசித்து, தான் கண்ட கனவுக்கு ஊசா சொன்ன பயானை யறிந்து ஆனந்த சமுத்திரத்தில்மூழ்கி, தினவர்த்தமானப் பத்திரத்தை விரித்து வாசித்து, நிகழ்ந்த அற்புதங்கள் அனைத்தையும் பற்றி மகிழ்வடைந்தார். மைசராவுடைய கடிதம் அப்போது கதீஜாவுக்கு இன்றியமையாப் பொருளாயிருந்தது. அக்கடிதத்தில் முஹம்மது என எழுதியிருக்கும் ஒவ்வொரு வரிகளையும் கதீஜா தம் இரண்டு கண்களிலும் அடிக்கடி ஒத்தி, முத்தமிட்டுக்கொண்டு அக்கடிதத்தையும் பத்திரங்களையும் அபிதாலிபுக்கு அனுப்பினார். அவைகளை அபுதாலிபு வாங்கி வாசித்து அங்கு நிகழ்ந்த புதுமைகளைப்பற்றிப் பேரானந்தம் அடைந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமர்களின் வரவை நோக்கியிருந்தார். அப்போது கதீஜா நாயகியாருக்கும், அபுதாலிபுக்கும் உண்டான சந்துஷ்டிக்கு அளவேயில்லை. இருவர் கண்ணும் கருத்தும் நபிநாயகத்தின் பேரிலேயே வைக்கப்பட்டு இருந்தன.

24-வது அத்தியாயம்.

மணம் பொருத்தினது

கலி விருத்தம்.

குணம்பெருத்த குவைலிது செய்தவ
வணந்தரித்த மகள்கதி ஜாதமைத்
திணஞ் செழித்த திருமஹ் மூதர்க்கு
மணம்பொருத்தல் வழுத்திடு வாமரோ

இதன் பொருள்.

நற்குணம் பெருத்த குவைலித் என்னும் இராஜன் செய்யும் அழகிய தவம்திரண்டோர் பெண்மகளாகத் தரித்துவந்த கதீஜா நாயகியை வளமான புஜபலமுள்ள மேன்மையுள்ள மஹ்மூதென்னும் இயர் பெயரையுடைய, முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கட்குத் திருமணம் பேசிப் பொருத்தல் செய்த முறைமையைச் சொல்லுகின்றாம்.

சீறாப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உடல்குழைத் தெழுந்து செந்தே னொழுகிய மலர்ப்பை ங்காவில்
வடவரை யனைய திண்டோள் வள்ளலு மறுவி லாத
கடகரி யனைய வெற்றிக் காளையர் பலருஞ் சேர்ந்த
விடபமும் பரியுந் துன்ன வெழுந்தனர் விரைவி னன்றே.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அவர்களுடன் வரும் மற்றவர்களும், முன் குறித்த பூங்காவில் தங்கியிருந்து, பிற்பாடு அப்பூங்காவை விட்டுப் புறப்பட்டு அதிக விரைவாய் நடந்து, அறபு இராஜ்ஜியத்தின் எல்லை யனைத்தையும் கடந்து, மக்கமா நகரத்தை நெருங்கி மனிதர்கள், ஜின்கள், மலக்குகள், மற்ற ஜெந்துக்கள் அடங்கலும் போற்றிப் புகழும்படியாய், மக்கமா நகரத்துக்கு சந்தோஷமாகப் புகுந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஷாமிலிருந்து க்ஷேமமாய்த் திரும்பிவந்த சுப சங்கதியைப் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு செவி குளிரக்கேட்டு, தமது மனையை விட்டுப் புறப்பட்டு எதிர்

சென்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மார்போடு அணைத்துக் கட்டித் தழுவிப் பலதரமும் முத்தமிட்டு மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். மனைக்குள் நுழைந்தபோதே அபுத்தாலிபு உடைய மனைவியாகிய பாத்திமா என்பவர், நபிநாயகத்தைக் கண்டு "என் கண்மணியான மகனே, நீ இங்கிருந்து பிரயாணமான நாள்முதல் இதுபரியந்தம் நான் கண்ணொளி மழுங்கியிருந்தேன். இப்போதுதான் கண்கள் திறந்தன" என்று கட்டித் தழுவி உபசரித்தார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஷாமுக்குச் சென்று வர்த்தக லாபத்துடன் இடையூறு இன்றி மீண்டு வந்தற்காக பாத்திமா உள்ளம் மகிழ்ந்து, நபிநாயக மவர்களைச் சிறந்த பீடத்திலிருத்தி கண்ணூறு கழியும் வண்ணம் நீராஞ்சனம் எடுத்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது மனைக்குச் சென்ற பின், அபூபக்கர் தமது மாளிகைக்குச் சென்றார். பிறகு அப்பாஸ், ஆமிறு, ஜுபைறு, ஹாரிது என்பவர்களும் தத்தம் மனைக்குச் சென்றார்கள்.

பஞ்சபாதகங்களையும் தன் மனத்துள் நிரந்தரமாகத் துணிந்து வைத்து நாளுக்கு நாள் அவற்றை வளர்த்து வரும் அபூஜஹல் என்பவனும் தன் மனைக்குச் சென்றான். மற்றவர்களும் அவரவர் வீடுகளுக்குப் போனார்கள். பிறகு, மைசறாவும் அவருடன் வந்த பரிவாரங்களும், சரக்குகளும் கணக்கு முதலானவைகளும் தம்முடன் வர, கதீஜா நாயகியாருடைய அலங்காரமான மாளிகையில் சென்று, கதீஜாவின் சமுகத்தை யடைந்து மரியாதை செய்து நின்று புகழ்ந்து துதித்தனர்.

தமது அந்தரங்க விகிதராகிய மைசறா வந்து நிற்பதை கதீஜா கண்டு சந்தோஷித்து, மைசறாவை நோக்கி, "எனது அருமையுள்ள மைசறாவே! வர்த்தக விஷயம் அனைத்தும் இருக்கட்டும் அதைப் பற்றி பிந்திப் பேசலாம். நீர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் உடன் இங்கிருந்து புறப்பட்டநாள் முதற்கொண்டு இதுவரையும் நடந்த நூதன வர்த்தமானங்கள் என்ன? அவைகளை முந்தி எனக்கு விவரித்துச் சொல்லு" எனக் கேட்டார். கதீஜா இவ்வாறு கேட்டபோது, மைசறா மனம் மகிழ்ந்து கதீஜாவுடைய சமுகத்தில் மரியாதையுடன் உட்கார்ந்து இருந்து, பலவிதமாக கதீஜாவைத் துதித்து நடந்த வர்த்தமானங்களைப்பற்றிச் சொன்னதாவது:—"எனது அருமை எஜமானியான கதீஜாவே! முஹம்மது

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய மகத்துவத்தினால் நிகழ்ந்த அற்புதங்களின் தன்மை இவ்விதமானது எனக் கூறுவதற்கு சக்தி பெற்றவர்கள் இவ்வுலகில் ஒருவருமில்லை; ஆனதால், அவற்றை விவரித்துச் சொல்ல நான் எம்மாத்திரம்? அவர் இன்னின்ன அற்புதங்களை காட்டினார் என ஒவ்வொன்றாகச் சொல்லிக்காட்டுவதற்கு என் நாவெழவில்லை. அவைகளை நான் தங்கள் சந்நிதிக்கு எழுதியனுப்பின வர்த்தமானப் பத்திரங்களே நன்கு அறிவிக்கும். ஆனால்; முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய மகிமையைக் குறித்துப் பிரசங்கிப்பதற்கு நான் அருகன் அல்ல. ஆயினும், நான் அனுபூதி கொண்டு கண்டறிந்தவற்றைச் சுருக்கமாகவாவது சொல்ல வேண்டும் என்னும் பேராசை என் மனதை விட்டு ஒழிய வில்லை; ஆனதால், இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மறைப்பதம் வழுத்தி யன்னோர் வாய்மொழி மாறாது நின்றோர்
திரைப்பெரும் புவியில் மேலோர் செல்வமே பெறுவர் கேளாய்
நிரைபெரு நாக மாழக் கெடுவர்நீ ணிலத்தி லென்று
றுரைப்பதென் சிறியேன் நீட்டு மோலையே யுரைக்கு மென்றான்.

மரவமுங் கியபொற் றிண்டோன் முஹம்மதுவரவு கண்டேன்
கரையிலாக் காட்சி கண்டேன் காசினி தோயாப் பாதம்
பிரிவுறாப் பதவி கண்டேன் பெண்களுக் கரசே யின்னுந்
திருவடி கண்டேன் நானச் செல்வமொன் றில்லை யென்றான்.

தெண்டிரைப் புவன மேழுஞ் சேர்ந்த பொன்னுலக மெட்டுங்
கொண்டதன் னேமி யொன்றாற் கொற்றவெண் குடையு ளாக்கி
வண்டணி துதையுந் தண்டார் முஹம்மதே புரப்பா தேனுங்
கண்டுமொத் தனைய சொல்லாய் காண்பது திண்ண மென்றான்.

வசனம்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய பாதம் கீழ்ப்பட்டு, அவர் சொல்வழி நிற்பவர், இம்மையிலும் மறுமையிலும் உயர்பதவி யடைந்து மகா பாக்கியவான்களாய் வாழ்வார்கள் என்றும், அவரை நிந்தித்து, அவர் சொல்வழி

பொழுகாதவர்கள் எவ்வித மேன்மையான செல்வவான்களானாலும் அறக் கிழாய்த் தாழ்ந்து, மறுமையில் நரகத்துக்கு பாத்திரர்களாவார்கள் என்றும் துணிந்து சொல்லுகிறேன். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஷாம் இராஜ்ஜியம் சென்று மீண்டு வரும் பரியந்தம் அவருடைய பாத சேவையில் நான் நியமிக்கப்பட்டபோதே, பாக்கியம் எல்லாவற்றையும் அடைந்து விட்டேன் என்பது நிச்சயம். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்போது இருக்கும் ஸ்திதியில் நின்று வரவர, உயர்ந்து, சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகப் பரப்பு முழுவதையும் தம் கீழ்ப்படுத்தி அரசாளுவது மன்றி, சுவர்க்கலோகத்துக்கும் அதிபதியாய் விளங்குவதை இன்னும் சொற்ப தினங்களில் பிரத்தியட்சமாக நாம் காண்போம். அவர், கடவுளுடைய தூதர்களில் உயர்ந்தவர்; மனிதர்களுக்கு முக்தி மார்க்கத்தைத் தெளிவாய்க் காட்ட வந்த நபிமார்களுக்குத் தலைவர் என நான் உறுதியாகவே சொல்லுகிறேன். அவருடைய காரியம் இனி எவர் மனதுக்கும் தெளிவாய் விளங்கும்" என்றார்.

மைசறா சொன்ன இந்தச் சொல்லானது, கதீஜாவுடைய காதல் என்னும் படர்கொடி வறிவளர்வதற்கு நாட்டிய கொழு கொம்பை யொத்தது. தம் சொந்த மனிதனாகிய மைசறா சொன்ன சொற்கள் அனைத்தும் கதீஜாவுடைய செவி வழியே சென்று, நெஞ்சத்தின் துயரம் என்னும் ஊற்றுக் கண்ணை யகழ்ந்து பெருகச் செய்தன. அன்றியும் தாம் கண்ட சொர்ப்பனங்களின் அற்புதமும், அவற்றின் பயனாக வறக்கத்து என்னும் சாஸ்திரியும், ஊசா என்னும் பண்டிதரும் சொன்ன வசனங்களும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முகதாவில் கண்ட காட்சியும் ஒன்றாய்த் திரண்டு, கதீஜாவுடைய நெஞ்சத்தில் துயரம் என்னும் அக்கினியை மூட்டத் தக்க துருத்திக்குச் சமானமாயிற்று. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய சொரூப அலங்காரத்தைக் காண வேண்டும் என ஹூருல்ஈன்களே தவம்செய்வார்கள் என்றால், முகதாவில் கண்ணாரக்கண்ட கதீஜாவுடைய நெஞ்சத்தில் இவ்விதத் துயரம் பெருகாமற் போகுமா?

கதீஜா நாயகியார், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது வைத்த பெருங் காதல், நாளுக்குநாள் விர்த்தியா

யிற்று. அதனால், கதீஜா நல்லுறக்கம், நல்லூண் அற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் எண்ணம் அல்லாத மற்ற எண்ணம், நல்லுடை ஒன்றுமின்றி, மனத்துயர் பெருகி வளர சில நாட்கள் சென்றன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உருவமே கதீஜாவுடைய கண்களில் அடிக்கடி தோற்றப்பட்டன. தாங்கள் மோகித்த புருஷர்களின் உருவெளித் தோற்றம் ஸ்திரீகளின் கண்களில் காணப்படுவது சாதாரணமானதால், கதீஜா இவ்விதத்தோற்றத்தால் நாணமடைந்து, தம் படுக்கை யறையில் புகுந்து, கவலையால் உடல்சோர்ந்து நித்திரை செய்யும்போது, தாம் வசிக்கும் மக்கமா நகரத்திலே மாணிக்கத்தால் அமைந்த விருட்சமொன்று வயிரத்தால் அமைந்த வேர்களை நாற்புறத்திலும் ஊன்றி, பல கிளைகள்படர்ந்து, மரகதத் தழைகள் பொலிய ஓங்கி வளர்ந்து நகரத்தைமூடி நின்று, கனிகள் நெருங்கிய பணர்களில் பூத்துள்ள பொன்மலர்கள் தமது சிரசின்மேல் சொரிந்து பரிமளிக்கும்படியாக ஒரு கனவுகண்டு நித்திரை தெளிந்து எழுந்து, உடனே வறக்கத்து என்னும் பண்டிதரை அழைத்து வரும்படி கட்டளை பண்ணினார். அருகில் நிற்கும் குற்றேவலாளரில் ஒருவர் விரைந்து சென்று, மேற்படி பண்டிதரை அழைத்து வந்தபோது, கதீஜா அவரைநோக்கி, தாம் கண்ட கனவை விவரமாகச் சொல்லிக் காட்டினார். கனவுநூலில் தேர்ச்சியடைந்த மகா நிபுணனாகிய வறக்கத்து அக்கனவின் பயனை அமர்ந்து ஆராய்ந்து அறிந்து, கதீஜாவை நோக்கி "மகா பாக்கிய வதியாகிய கதீஜா! நீர் கண்ட அந்த மாணிக்கத் தருவானது முஹம்மது ஆகும்; அத்தருவின் வேரானது ஈமானுடைய நிலையாகும்; அதன் பரிமளமானது தீன் என்னும் மார்க்கமாகும்; அதன் கனியானது கலிமாவாகும்; உமது சிரசின்மேல் அதன் மலர்கள் சொரிந்ததானது உம்மை முஹம்மது விவாகம் செய்து கொள்ளுவதாகும்" என்று சொன்னார். இப்பயன் கதீஜாவுடைய மனதிற்கு சற்றே ஆறுதல் கொடுத்தது.

வறக்கத்து என்பவர் கதீஜாவுக்கு இவ்வித மங்களமான நற்பயன் கூறிவிட்ட பின், அங்கு இருந்து எழுந்து, நேரே கதீஜாவுடைய தந்தையாகிய குவைலீது உடைய மாளிகையில் சென்று, குவைலீதை நோக்கி, கதீஜா கண்ட கனவையும் தாம் சொன்ன

அதன் பயனையும் விவரித்துச் சொல்லிக் காட்டினார். முஹம்மதுக்கு தமது செல்வப்புதல்வி வாழ்க்கைப் படுவார் என்ற சோபன வார்த்தையை குவைலிது கேட்டு, ஆனந்தமடைந்து, களிகூர்ந்து சம்மதித்து இருந்தார். இது நிகழ்ந்த சில தினம் சென்ற பிறகு, ஒரு நாள், கதீஜா தமது ஸிகிதராகிய மைஸறாவை யழைத்து அருகிலிருத்தி, அவரை நோக்கி "மைஸறா! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இன்னும் விவாகம் செய்யாமலிருக்கும் காரணம் என்ன?" என்று கேட்டார்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கூறிய மொழியை வேக்குங் குரிசிலுக்குங் கொடுத்து செந்தேன்
மீறிய மதுரச் சொல்லாய் விரும்பிய பயன்கள் யாவுந்
தேறிய கரண போகஞ் செழும்புவி யாக்கை போல
ஊறிய ஊழி னன்றி முடியுமோ வுலகத் தென்றான்.

வசனம்.

அப்போது மைஸறா, கதீஜாவைநோக்கி "எனது எஜமானியே! உலகத்திலுள்ள மனிதர்களுக்கு கரணம், போகம், யாக்கை என்னும் இம்மூன்றும் ஊழ்வினையின் பிரகாரமே முடியுமன்றி, அவரவர் விரும்பியபோது முடித்துக்கொள்ளத் தக்கவை யல்லவே" என்றார். இந்த சம்பாஷணை இம்மட்டோடு நின்று விட்டது. பின்னர், மைஸறா அங்கிருந்து புறப்பட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இருக்கும் மாளிகைக்கு வந்து, நபிநாயகம் அவர்களைத் தரிசித்துப் பணிந்து நின்று, கதீஜா நாயகியார் கண்ட கனவையும், வறக்கத்துச் சொன்ன அக்கனவின் பயனையும், கதீஜாவுடைய சித்தத்தின் எண்ணத்தையும் குவைலிது களிகூர்ந்து சம்மதித்து இருக்கும் சம்மதத்தையும் விவரித்து இரகசியமாகச் சொன்னார். மைஸறா சொன்ன இச்சமாசாரம் தாம் கோரிய கருமம் சித்தி பெறுவதற்கு முதற் குறி யானதால், நபிநாயகம் தம் மனதுள் அளவில்லாத சந்தோஷ மடைந்து, அச்சந்தோஷத்தை வெளியிடாமல் அடக்கிக் கொண்டு, இந்த வரலாற்றை தமது பெரிய தந்தையாகிய அபூத்தாலிபுக்கு அறியச் செய்யவேண்டும் எனக்கருதி, மைஸறாவை அழைத்துக்கொண்டு போய் அபூத்

தாலிபு உடைய சமுகத்தில் விட்டு, அபுத்தாலிபை நோக்கி "தந்தையே! இவர் கதீஜாவுடைய ஸிநிதர். நம் பந்து ஜனங்களிலும் மிக உரிமையானவர். தங்களுடன் சில இரகசிய வார்த்தைகள் பேசவேண்டும் என வந்தார். 'அவை என்ன?' என்று தாங்கள் கேளுங்கள்" என்று சொன்னார்கள். தமது அருமை மகனாராகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்ன சொல்லைக் கேட்டு அபூத்தாலிபு மகிழ்ந்து, மைசறாவை நோக்கி 'நீர் இரகசியமாக என்னிடம் சொல்லவேண்டிய விஷயம் என்ன? அவற்றை விவரமாகச் சொல்லு" எனக்கேட்டார்.

அப்போது மைசறா, கதீஜா கனவு கண்டதும், வறக்கத்து அதற்கு பயன் சொன்னதும், கதீஜா காதல்கொண்டிருக்கும் உள்ளக்கருத்தும், குவைலிது உடைய விருப்பமும் இன்னபடி என விவரித்து அபூத்தாலிபு இடம் சொன்னார். இச்சங்கதியின் சாரத்தை அபூத்தாலிபு அறிந்து சந்தோஷமடைந்து, மைசறாவை உபசரித்து அனுப்பிவிட்டு, தம் குமாரராகிய நபிநாயகத்துக்கு, கதீஜா வாழ்க்கைப்பட விருப்பங்கொண்டு இருப்பதையும், நிகழ்ந்த சங்கதிகளையும், தமது சகோதரர்களுக்கு அறிவிக்கவேண்டி அவர்கள் அனைவரையும் தம் மாளிகைக்கு அழைப்பித்தார். உடனே அப்பாஸ், ஹாரிது, ஹம்ஸா என்னும் சகோதரர்கள் அனைவரும் வந்து கூடினார்கள். அப்போது அபீத்தாலிபு அவர்களை நோக்கி நடந்த சமாசாரங்களை யெல்லாம் சொல்லிக்காட்டினார். இச்சொல்லைக் கேட்ட சகோதரர்கள் உள்ளம் குளிர்ந்து உவகை மீறி, அபூத்தாலிபை நோக்கி "குலத்திலும், செல்வப் பொருளிலும், கல்விப் பொருளிலும் குணத்திலும், ஒழுக்கத்திலும், கீர்த்தியிலும், அழகிலும், ஒப்பில்லாத கதீஜாவை விவாகம் செய்துகொள்ளுவதற்கு விருப்பம் உள்ளவர்கள் ஒருவர் இருவரல்ல. அவர்களில் ஒருவராவது குவைலிது இடஞ்சென்று 'உமது புதல்வியை நான் விவாகஞ் செய்து கொள்ளுகிறேன்' என்று வாய்திறந்து கேட்பதற்குத் திராணி பெறவில்லை. அவரவர் மனத்துள் வைத்தே காலத்தைக் கழிக்கிறார்கள். இவ்வூரில் அநேகர் இவ்விதம் அஞ்சியிருப்பதையறிந்துதான் நாமும் அவ்விஷயத்தில் பிரவேசிக்கப் பயந்து இருந்து விட்டோம். இப்போது நமது புத்திரராகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கதீஜா வாழ்க்கைப்படுவதாகிய சாமாசாரம்

அங்கிருந்தே பிறந்த படியால், "இனி நாம் துணிந்துபோய்க் கேட்பதற்கு ஏதும் தடையில்லை" என்று சொன்னார்கள்.

சகோதரர்கள் ஒருமித்துச் சொன்ன சொல்லை, அபூத்தாலிபு கேட்டு மகிழ்ந்து, அவர்களை நோக்கி, "நீங்கள் சொன்னவை சரியே. ஆனால், அவ்விதம் குவைலிது இடம் நாடிசென்று கேட்பதற்கு ஒருவர் வேண்டும். வாக்கு வல்லபத்திலும், புத்தி நுட்பத்திலும், உபாயத்திலும், சம்பாஷணையின் சாராம்சங்களை அறிந்து பேசும் திறத்திலும் ஆராய்விலும் சிறந்த நமது கனிஷ்டராகிய ஹம்ஸாவே அதற்கு தகுந்தவர். அவரையே குவைலிது இடம் தூது போக்க வேண்டும்" என்றார். இதைக் கேட்ட சகோதரர்கள் அனைவரும், தம் இளைய சகோதரராகிய ஹம்ஸாவை நோக்கி, "ஹம்ஸாவே, நீர் குவைலிது இடஞ்சென்று விவாக சம்பந்தமான விஷயங்களைத் தீர்க்கமாகபேசி முடிவுசெய்து கொண்டு வாரும்" எனச்சொல்லி அனுப்பினார்கள். உடனே ஹம்ஸா மனம் மகிழ்ந்து எழுந்து வீதிகளைக் கடந்து, குவைலிதுடைய மாளிகையில் புகுந்தார்.

ஹம்ஸா என்பவர் தமது மனைக்குவந்ததை குவைலிது அறிந்து எதிர்சென்று மரியாதையாய் உபசரித்து அழைத்துக் கொண்டுபோய் ஆசனமிட்டு இருக்கச்செய்து, தாமும் அருகில் உட்கார்ந்து, ஹம்ஸாவைப் பலவிதம் வாழ்த்தி, "கனம்பொருந்திய தாங்கள் இந்த எளியவனுடைய வீட்டுக்குவந்த காரியமென்ன?" எனப் பரிவுடன் கேட்டார். அப்போது ஹம்ஸா குவைலிதைப் பார்த்து, கல்வி கேள்விகளாலும், திரவிய சம்பத்தாலும், கோத்திர மகிமையாலும், கீர்த்தியாலும் மிகச்சிறந்து, யாவரும் மதிக்கப் பட்ட குவைலிதே! நான் இங்கு வந்த காரியம் வேறு ஒன்றுமல்ல, எங்கள் குலக்கொழுந்தாய், நாங்கள் செய்த தபோபலமாய் எங்கள் உயிர்களுக்கெல்லாம் உயிராய் என் சகோதரராகிய அப்துல்லாவின் புத்திர ரத்தினமாய்ப் பிறந்த முஹம்மது என்னும் பாலிய சிகாமணிக்கு விவாகஞ் செய்விக்க வேண்டும் என்னும் நாட்டங் கொண்டே இங்கு வந்தேன். இந்த மக்கமா நகரத்திலுள்ள குறைஷிகளாகிய நம் இனத்தாரில் முதன்மையான அநேகர் தம் தம் பெண்களை விவாகஞ் செய்வித்துக்கொள்ளும்படியாக அவர்களே வலிய கூறுகின்றார்கள். அவைகள் எங்கள் மனத்திற்குப் பொருந்தவில்லை. அவர்கள் அனைவரிலும் சகல பாக்கியத்தாலும்

சிறந்த ஒருவர் நீரே இருக்கிறீர், உமக்கும் ஒரு செல்வப் புதல்வியிருப்பதால், இக்காரியங்களை உம்மிடம் அறிவித்து, உமது சித்தத்தையும் அறிந்துவரும்படி எனது சகோதரர்கள் என்னை இங்கு அனுப்பினார்கள். ஆனபடியால், உமது கருத்து எப்படி? உமது கதீஜாவை எங்கள் முஹம்மதுக்கு வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொடுக்க சம்மதமா?" என்று கேட்டார்.

ஹம்ஸா சொன்ன இந்த வார்த்தைகளாகிய அமுதமானது குவைலிது உடைய செவிகள்வழியாய் பாய்ந்து, மனம் என்னும் தடாகத்தை நிரப்பி, முகம் என்னும் செந்தாமரை மலரைப் புஷ்பிக்கச் செய்த படியால், குவைலிது ஆனந்தங்கொண்டு, தம் மகள் கண்ட கனவையும், கடவுளின் நியமிப்பையும், நிகழுங் காரியத்தையும் சிந்தித்து மிகப்பூரித்து ஹம்ஸாவை நோக்கி, "குலத்திலும் குணத்திலும் ஒழுக்கத்திலும், அழகிலும், வடிவிலும் முஹம்மதுக்கு நிகரானவர் இவ்வூரிலும் மற்ற ஊரிலும் ஒருவருமில்லை; இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்யும் அரசர்களானாலும் அவருக்குப் பெண்கொடுக்க பின்னடையார்கள். என் அருமை செல்வ கதீஜாவை முஹம்மதுக்கு மனைவியாக்கி, உங்கள் வசம் கொடுத்துவிட நான் பூரண இருதயத்துடன் சம்மதிக்கின்றேன். அகங்களிகூர்ந்து பொருந்தின சமாசாரத்தைத் தாங்கள் தங்களின் சகோதரருக்குத் தெரிவித்து, விவாகத்துக்கு ஆகுமான வற்றைத் தயாரித்துக்கொண்டு, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எனக்கு மருமகனாக்கி வைக்க வேண்டும்" என்று சொல்லி, ஹம்ஸாவை உபசரித்து அனுப்பினார்.

பிற்பாடு, ஹம்ஸா தாம் கோரிய காரியம் நிறைவேறிவிட்டது என ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி, குவைலிதுடைய மாளிகையை விட்டு எழுந்து நடந்து, தமது சகோதரர்களின் சமுகத்தில் வந்து, தாம் குவைலிது இடஞ்சென்று சொன்ன விஷயங்களையும், அவர் பதில் சொன்னவைகளையும், முடிவில் விவாகத்துக்கு உடன்பட்டதையும் விவரமாகச் சொன்னார். ஹம்ஸா சொன்ன சொல் அபூத்தாலிபுக்கும் மற்றவர்களுக்கும் உள்ளக்களிப்பை யுண்டு பண்ணிற்று. அதனால் அனைவரும் மனம் ஒத்து, உடனே ஹாஷிம்குலத்தார் அனைவரையும், மற்ற குறைஷிகளின் முதியோர்களையும் அழைத்துத் திரட்டிக் கொண்டு, விவாகநாள் முகூர்த்தம்

முதலானவைகளை நிச்சயிக்கும் பொருட்டு குவைலிதுடைய மனைக்குப் புறப்பட்டார்கள்.

ஹாரிஸ், குதம், ஜுபைறு, அப்துல்கஃபா, அபூலஹபு, கைதாக், ஸிருறு, அப்பாஸ், ஹம்ஸா, மூகைரு, அபுத்தாலிப் என்னும் சிறந்த தலைவர்களும், மற்ற பந்து ஜனங்களும் ஒருங்கு திரண்டு, குவைலிது உடைய மாளிகைக்குச் சென்றார்கள். இவர்கள் அனைவரும் இவ்விதம் திரண்டு வருவதை குவைலிது கண்டு, ஆனந்த பரவச மடைந்து, உடனே தம் மாளிகையில் ஆக வேண்டியவற்றைச் சித்தஞ் செய்து, இவர்களுக்கு எதிர் சென்று துதித்து அழைத்துக் கொண்டு போய், அவர்களுக்குத் தக்கபடி ஆசனமிட்டு உபசரித்தார். உபசரிக்கப்பட்ட இவர்கள் அனைவரும், சந்தோஷமாக அவரவர் ஸ்தானத்தில்உட்கார்ந்தார்கள். பிறகு, குவைலிது அனைவரையும் மகிழ்ச்சி கூர்ந்து நோக்கி, "நமது உயிருக்கு உயிராய், அப்துல்லாவுடைய குமாரராய் வந்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு, என் மகளை விவாகம் செய்விக்கும் பொருட்டு, ஹாஷிம் குலத்தாரும், குறைஷிகளின் முதியோரும் என் வீட்டுக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அது நான் செய்த பாக்கியமே யன்றி வேறல்ல" என்றார்.

உடனே அபுத்தாலிபு எழுந்து நின்று, குவைலிதை நோக்கி "குவைலிதே! உமது புதல்வியை என் மகனுக்கு விவாகம் செய்விக்கும் பாக்கியம் எனக்கு உண்டான படியால் நான் எல்லாப் பாக்கியத்தையும் பெற்றேன். இனி எனக்கு ஒரு குறைவுமில்லை" என்றார். இவர் சொன்ன இவ்வார்த்தைகளே விவாகப் பொருத்தமாயிற்று. உடனே மணவாளர் மனையாட்டிக்குக் கொடுக்கும் மஹர் இன்னது, மணயாட்டியின் சொந்தக்காரர் கொடுக்கும் சீதனம் இன்னது என நியமித்து, அபுத்தாலிபு உடைய வலது கரமும், குவைலிது உடைய வலது கரமும் பொருத்தி, அடுத்து வரும் திங்கட்கிழமை இரவு விவாக நாளின் முகூர்த்தம் என்று குறித்து மற்ற விஷயங்களும் நியமித்துக் கொண்டார்கள். சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலானவை பரிமாறித் தீர்ந்து, தானங்கள் செய்யப் பட்ட பின், அனைவரும் குவைலிதிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, அவ்வர் மனையை விட்டு எழுந்து தங்கள் மனைக்கு வந்தார்கள்.

25-அத்தியாயம்.

மணம் புரிந்தது.

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

வணம்புரி மக்கமா நகரின் மன்னுசி
றெணம்புரி கதிஜத்தேந் திழைக்கு மின்பநற்
குணம்புரி முஹம்மதாங் கொற்ற வேந்தர்க்கு
மணம்புரி வாறினை வகுத்துக் கூறுவாம்.

இதன் பொருள்.

வண்ணங்கள் செய்யப்பட்ட திருமக்கமா நகரில் சிறப்புப் பொருந்தி எவர்கள் பேசிலும் நல்லெண்ணமே புரியும் கதீஜா வென்னும் பெயரை யுடைய பெண்ணாருக்கும், எறும்பு முதல் யானை முதலுள்ள ஜீவ ஜெந்துக்கள் பேரிலும், இன்பமாகிய நற்குணமே பொருந்தும் முஹம்ம தென்னும் வெற்றி பொருந்திய இராஜ நாயகருக்கும், திருமணம் புரியும் செய்தியை விபரமாகச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலிநிலைத் துறை.

குறைஷி மன்னவ ருடனபித் தாலிபுங் குழுமி
நிறைசெய் மாமதி முஹம்மதின் மணவினை நிலவ
விறைவ ரியாவரு மறியவிந் நகர்க்கெ ழின்முரச
மறைக வென்றனு மெழுந்தனன் கடிமுர சறைவான்.

வசனம்.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விவாக ஏற்பாடுகள் அனைத்தையும், அபுத்தாலிபு முதலான குறைஷிகள் அனைவரும், குவைலிது உடன் பேசி முடிவு செய்து கொண்டு வந்த பிறகு, இக்காரியத்தை அபுத்தாலிபு தமது மனையாட்டிக்குச் சொல்லி, தம் குடும்பத்திலுள்ள மற்ற பெண்களையும் அழைப்பித்து, ஆக வேண்டிய காரியம் எல்லாவற்றையும் ஆயத்தப் படுத்தினார். கலியாணச் சடங்குக்காக வேண்டிய உபகரணங்கள் எல்லாம் தம் வீட்டில் ஆயத்தமான பின், அபுத்தாலிபு மணமுரசு வைத்து அடித்து மக்கமா நகரம் முழுதும்

அப்துல்லாவின் குமாரராகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், குவைலிதின் குமாரத்தியாகிய கதீஜாவுக்கும் விவாக மென்னும் சமாச்சாரத்தைப் பிரஸ்தாபப்படுத்தினர். இச்சங்கதி நகரம்முழுதும் பிரஸ்தாபமான போது பந்து ஜனங்களும், மற்றவர்களும், தம் தம் மாளிகைகளை வெண்ணிறச் சாந்து கொண்டு துலக்கி, மேல் மாடங்களில் பல வர்ணமான துவஜங்கள் காட்டி, முன்றில்கள் தோறும் பூம்பந்த லிட்டு அலங்கரித்தார்கள்.

மக்கமா நகரத்திலுள்ள எல்லா வீதிகளும், அவ்வீதிகளிலிருக்கும் வீடு வாசல் கூடம், கோபுரம் அனைத்தும் அலங்கரிக்கப்பட்டன. அலஞ்காரஞ் செய்யப்பட்ட மாளிகைள் எல்லாவற்றிலும் விசேஷமாக அபுத்தாலிப் உடைய மாளிகையும், குவைலிது உடைய மாளிகையும் அலங்கிருதம் செய்யப்பட்டு முன்றில்களில் மிகச் சிறந்த பூம்பந்த லிட்டுத் துலங்கின. அன்று பகல், பந்துக்களிலும், உறவின் முறையோர்களிலுமுள்ள புருஷர்கள் அனைவரும் விசேஷமான புதுஉடை புனைந்து, பூமாலை பூண்டு, அத்தர் பரிமளங்கள் பூசி, அபுத்தாலிபு உடைய மாளிகையில் வந்து கூடினார்கள். பெண்களும், தம் தம் கருங்கூந்தல்களுக்கு அகிற்புகை யூட்டி, வார்ந்து முடித்து, மலர்கள் தரித்து, உயர்ந்த பட்டாடை யுடுத்தி, நானாவகையான இரத்தினாபரணங்கள் பூண்டு, கலவைச் சாந்து பூசி, கேசாதி பாதபரியந்தம் அலங்கிருதம் செய்து, கண்களில் கரியமை தீட்டி, அரம்பையர்களுக்கு ஒப்பாய், திரண்டு வந்து கூடினார்கள். அன்று, மனவாளிகள் இருக்கும் இவர் மாளிகையிலும் விருந்து கொடுக்கப்பட்டது மல்லாமல், தானங்களும் செய்யப்பட்டன. மக்கமா நகரம் முழுதும் பரிமளமும், பிரகாசமும், கண்ணுக்கு இனிய அலங்காரமான காட்சியும், செவிக்கு இன்பமான இராக தாளங்களுமே மலிந்தன. அப்போது மக்கமா நகரம் சுவர்க்கத்துக்குச் சாமானமா யிருந்தது.

கலியாணச் சிறப்பாக அனைத்தும் அலங்கரிக்கப்பட்டு தீர்ந்த பின்னர், சூரியன் அஸ்தமித்து இரவானபோது, மக்கமா நகரம் எங்கும் பலவகைத் தீபங்களால் பிரகாசித்து விளங்கிற்று. பிறகு, மணவாளராகிய நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை, தோழர்கள் நெருங்கி அலங்கரிக்கும் வண்ணம், ஆச்சரியகரமாகச் சுவர்க்கத்து மலக்குகள் வந்து, நபி நாயகத்தைத் தனிமையாக ஒரு இடத்திலிருத்திச் சூழ்ந்து நின்று, ஹஜறத்து இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களின் திருக்கரத்தின் விரல்களால் உண்டாக்கப்பட்ட ஜம்ஜம் என்னும் நீரூற்றின் பரிசுத்த ஜலத்தை மொண்டு வந்து நீராட்டி, சுவர்க்கத்தின் பட்டுடையுடுத்தி, சிரசில் பாகை தரித்து, கண்களில் சுர்மா தீட்டி, உலகத்திலுள்ள பெண்களின் திருஷ்டி தீண்டாமல் வேதவாக்கியங்கள் அனைத்தும் வந்து மூடிக்கொண்ட பாவனையாக, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் திருமேனியில் மேலங்கியிட்டு, இடைக் கச்சு இறுக்கி, சூற்றுடைவாள் சொருகி, பாதகாப்புகள் பூட்டி, புஜத்தில் இலங்கிப் பரிமளிக்கும் வண்ணம் மாலை சூட்டி மணக் கோலம் செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சர்வாங்கமாக அலங்கரிக்கப்பட்டு இருப்பதை அபூத்தாலிபும், மற்றவர்களும் கண்ணாரக்கண்டு ஆச்சரியமுற்று, அகம் குளிர்ந்து, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மிக அலங்கரித்த குதிரை மேல் ஏற்றி, குவைலிது உடைய மாளிகைக்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தார்கள். உடனே சுற்றத்தார் அனைவரும் மற்றவர்களும். குதிரைகள் மீதும், யானைகள் மீதும், ஒட்டகைகள் மீதும், சிவிகைகள் மீதும் ஏறி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஏறியிருக்கும் குதிரையை நெருங்கிப் புடை சூழ்ந்தார்கள். ஊரார் அனைவரும் திரண்டு மொய்த்தார்கள். அநேக தீபங்கள் ஏந்தப்பட்டன. பலவகையான துவஜங்கள், குடைகள், ஆலவட்டங்கள், சாமரைகள் அனைத்தும் பிடிக்கப்பட்டன. நானாவகை வாத்தியங்கள் முழங்கின. கற்ற முதியோர்கள் இருமருங்கும் ஆசிகூறி நின்றார்கள். பெண்கள் ஆலாத்தி எடுத்தார்கள். இரத்தினங்களும், பொற் பணங்களும், புடவைகளும் எளியோர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவ்வகை ஆடம்பரம் அனைத்தும் ஆனவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உலாப்போந்து, கதீஜா நாயகியாரிருக்கும் மாளிகைக்குச் செல்ல எழுந்தார்கள். அப்போது, சுவர்க்கங்களைத் திறந்து அலங்கரிக்கும் படிக்கும், நரகங்களை அவித்து அடைக்கும்படிக்கும் மலக்குகளுக்கு அல்லாஹு தஆலாவின் கட்டளை பிறந்தது.

உடனே அநேக மலக்குகள் திரண்டு சுவர்க்கங்களைத் திறந்து அலங்கரித்து, நரகங்களை அடைத்து, ஹூறுல்ஈன்களை நோக்கி

"முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பவனிவருகின்றார்கள்; நீங்கள் அனைவரும் வந்து பாருங்கள்" என்று சொன்னார்கள். இச்சொல்லைக்கேட்ட அரம்பையர் அனைவரும் உள்ளம் பூரித்து, மஞ்சனமாடி, நல்லுடையுடுத்தி, ஆபரணம் பூண்டு, பொற்றட்டுகளில் சுவர்க்கத்திலுள்ள பலவகைப் புஷ்பங்களை நிரப்பிக் கொண்டு வந்து, ஆகாயமுழுவதும் பரவிநின்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பவனிவரும் வீதிகள்தோறும் பூமாரி சொரிந்து புகழ்ந்து கொண்டாடினார்கள்.

காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது மனைவையிட்டு நடந்துவரும்போது வெறும்ஜன சந்தடி மாத்திரமல்ல; மலக்குகளான வானவர்களும் அநேகர் திரண்டு நின்றார்கள். இவ்வகை ஆடம்பரத்துடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உலாவ வருகையில், வீதிகளில் இருமருங்கும் நிரையாயுள்ள மேன்மாடங்கள்தோறும் ஜன்னல்களைத் திறந்துநின்று, அநேக ஆயிரம் பெண்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கண்டு களித்துப் புகழ்ந்தார்கள்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மைச் சூழ்ந்து வருபவர்களுடனே, ஹாமீறுல்சன்கள் அனைவரும் ஆகாயத்தில் திரண்டு நின்று பூமழை பொழிய, மலக்குகள் துதிக்க தமது சிரசுக்குமேலே அற்புதமான மேகக் குடையொன்று நிழல்தர, மற்ற விருதுகள் நெருங்க, வாத்தியங்கள் கடலொலி போல ஒலிக்க, வாகனங்கள் எண்ணிறந்தவை நெருங்க, வேத பாரகர் ஆசீர்வதிக்க, எங்கும் ஏக ஒளிமயமாய்ப் பிரகாசிக்க நடந்து, குவைலீது உடைய சிறந்த மாளிகை முன்றிலில் விசேஷமாக அலங்கரித்து இருக்கும் பூம்பந்தலுக்குள் புகுந்தார்கள். அப்போது அங்கும் அநேக ஆடம்பரத்துடன் பலவகை கீதங்கள் முழங்கின.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்த அலங்காரமான பந்தலுக்குள் நுழைந்தபோதே, அழகில் சிறந்த அநேக வாலிபப் பெண்கள் வந்து ஆலாத்தி எடுத்தார்கள். தீபங்கள் அநேகம் பிடிக்கப்பட்டன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தாங்கள் ஏறி

யிருக்கும் குதிரையை விட்டு இறங்கினவுடன், பின்னும் பல பாலிய ஸ்திரீகள் விரைந்து வந்து, பரிமளநீர் கொண்டு பாதங்களைக் கழுவித் துடைத்தார்கள். பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், சுற்றத்தார் சூழ்ந்து வர அங்கிருந்து நடந்து, குவைலீது உடைய மாளிகையின் மண மண்டபத்தில் அமைத்துஇருக்கும் விவாக பீடத்தில் வீற்றிருந்தார்கள். அம்மண மண்டபம் அபூத்தாலிபும், அவரைச் சேர்ந்தவர்களும், குவைலீதும், அவரைச் சேர்ந்தவர்களும் நெருங்கிச் சூழப்பட்டமையால், உயர் குல மக்கள் நிரைந்து விளங்கிற்று.

சரித்திர புராணம்

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பேரடி கொழுநுப் பெண்ணலங் கனியைப்
பிரசமூறியமொழிக் கரும்பை
யாரணக் கடக் கமுதநா யகியை
யரிவையர் முறைமுறை வாழ்த்திப்

பாரினிற் செறித்த மலர்மிசை நடத்திப்
பல்லிய முரசொடு கறங்க
வார்பொரு முலையார் முஹம்மது மருங்கின்
மணித்தவி சிடத்திருத் தினரே.

வசனம்.

பிறகு கதீஜா நாயகியாரைப் பாங்கியர்கள் சூழ்ந்து நின்று மஞ்சனமாட்டி, கூந்தலுக்கு அகிற்புகையூட்டி, மெல்லிய பட்டாடை யுடுத்தி, கூந்தலில் புஷ்பங்கள் சொருகி முடித்து, தலைக்கோலம் தரித்து கண்களுக்கு அஞ்சனம் எழுதி, மற்றவகை வகையாயுள்ள ஆபரணங்கள் எல்லாவற்றையும் பூட்டி, பரிமள வர்க்கம் பூசி, ஆலாத்தி ஏந்திக் கண்ணூறு கழித்தார்கள். இவ்விதம் கதீஜா நாயகியாருக்கு மணவணியணிவித்துத் தீர்ந்தபின், மாதிகளில் அநேகர், பொற்றட்டுகளில் சந்தனாதி பரிமள வர்க்கங்களும், புஷ்பங்களும் ஏந்தி, நிரைநிரையாய் இருமருங்கும் நிற்க, பராங்கிகள் புடைசூழ நடத்திக்கொண்டு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடன் இருத்தினார்கள். நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும் கதீஜா நாயகியாரும்

விவாக பீடத்தில் வீற்றிருக்கும் தோற்றம், மணமண்டபத்தி லிருக்கும் அனைவர் உள்ளங்களையும் குளிரச் செய்து, கண்களையும் களிக்கச் செய்தது. அபூத்தாலிபுக்கும், குவைலிதுக்கும், இவ்விரு வரின் குடும்பத்தார்களுக்கும் அப்போது உண்டான சந்தோஷத் துக்கு மட்டில்லை.

பிறகு மணவாளிகள் இருவரின் சொந்தக்காரர்களும், மற்றச் சுற்றத்தார்களும் சம்மதித்து, அக்காலத்தில் அங்கு வழங்கும் வெள்ளி நாணயத்தில் ஐந்நூறு வெள்ளிக்காசுகளை மஹராகவைத்து விவாகத்தை முடிக்கும்படி ஹாஷிம்குலத்தார்கள் வேண்டிக்கொண் டார்கள். அப்படியே குறித்த தொகையை மஹர்வைத்து விவாக உடன்படிக்கை யெழுதி முடித்து, ஹஜ்ரத்து இபுறாஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்களுடைய மார்க்க விதிப்பிரகாரம், நபிநாயகம் ஸல் லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கும், கதீஜா நாயகியாருக்கும் நிக்காஹ் முடித்தார்கள். அப்போது செய்யவேண்டிய விவாகச் சடங்குகள் அனைத்தும் செய்து தீர்ந்தவுடன், அந்த விவாக சபை யில் குவைலிது எழுந்து, தமது செல்வப் புதல்வியாகிய கதீஜா வுடைய வலது கரத்தை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லமவர்களின் வலது கரத்தில் சேர்த்து ஆசீர்வதித்து, ஆனந்த சாக ரத்தில் மூழ்கி, "நீங்கள் இருவரும் என்றும் வாழ்ந்து மகிழ்ந்திருப் பீர்களாக" என்று வாழ்த்தினர். வேதபாரகர்கள் ஆசீர்வதித் தார்கள். அபூத்தாலிபும், மற்றவர்களும் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

பிறகு, உலகரட்சகராகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், உலக மாதாவாகிய கதீஜத்துல் குப்றா நாயகியாரவர்களும், விவாகபீடத்திலிருந்து எழுந்து வானவர்கள், அரம்பையர்கள், மனிதர்கள், ஜின்கள், மற்ற பிராணிகள் அனைத் தும் கொண்டாடித் துதிக்கும்படியாகப் பள்ளியறைக்குட் சென்று, ஒருவரோடு ஒருவர் உள்ளங்களித்து ஆநந்தங்கொண்டு இன்பம் அனுபவித்து இருந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு இருபத்தைந்து வயதும் . பத்து மாதங்களும் நிரப்பமாயின.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர் கள் கதீஜா நாயகியாரை விவாகம் செய்து, இருவரும் சம்பதி களாய் வாழ்ந்து இருந்தார்கள். அல்லாஹு தஆலாவின் திருவருள்

இவர்பேரில் நித்தியமாயுள்ள படியால், இல்லறச்சிரமத்துக்கு உரிய சாதனங்கள் ஒன்றிலும் குறைவே யில்லை. கதீஜா நாயகியார் முந்தியே சீமாட்டியாயிருந்தது மல்லாமல், விவாக காலத்தில் தம் தந்தையாகிய குவைலிது கொடுத்த சீதனப் பொருளும் சேர்ந்து திரண்ட ஆஸ்திக்காரரானார்கள். அந்த திரவியம் முழுவதும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கே சொந்தமா யிருந்தது. நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களும், கதீஜா நாயகியா ரவர்களும் வாழும் இல்வாழ்க்கையில், சம்பத்துக்கள் அனைத்தும் நாளுக்குநாள் பெருகி வளர்ந்தன. இவ் விதம் செல்வம் பொழிந்து வாழுங் காலத்தில், கதீஜா நாயகியார் ஜயினபு என்னும் பெண் பிள்ளையைப் பெற்றார்கள். பிறகு, ருக்கையா என்னும் பெண்ணைப் பெற்றார்கள். அதற்கு பிறகு, உம்முகுல்தூம் என்னும் பெண் பிறந்தது. இம்மூன்று பிள்ளைகளும் பிறந்த பின், நான்காவதாக ஹாஷிம் என்னும் ஆண்பிள்ளையும், பிறகு தையிபு என்னும் ஆண் பிள்ளையும் அதற்குப் பிறகு தாகிறு என்னும் ஆண்பிள்ளையும் பிறந்தன. இந்த ஆறுபிள்ளைகளும் பிறந்தபின் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர் களுக்கு வயது முப்பத்தைந்து நிரப்பமாயிற்று. இதற்கு இடையில், அநேக ஆச்சரியகரமான அற்புதங்கள் நிகழ்ந்தன. உலகமாதாவாகிய கதீஜா நாயகியார், நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறு மக்களைப் பெற்ற பின்னர், ஏழாவதாக, பாத்தி மத்துஸ்ஸுஹறா றலியல்லாஹு அன்ஹாவைப் பெற்றார்கள்

நம்பெருமானாரவர்களில் சத்தியம், நீதி முதலிய லக்ஷணங்கள் யாவும் ஒருங்கே பொருந்தி யிருந்தமையால் பெரும்பான்மை யோர் தங்களுக்குள் ஏற்படும் விவகாரங்களைத் தீர்த்து வைப்பதற் காகப் பெருமானாரவர்களையே தங்களுக்குள் மத்தியஸ்தராகத் தெரிந் தெடுப்பார்கள்.

நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முப்பத்தாறும் வயது நிகழும் காலத்தில், அறபு இராஜ்ஜியம் எங்கும் சோரபயத் தினால் திகில்விளைந்து இருந்தது. அப்போது சில திருடர்கள் கஃபா வுக்குள் திரவியம் உண்டு எனக்கருதி, இரவில் அதிக்கிரமித்து வந்து ஒருபுறத்தின் அடியில் சுவரைத் துவாரமிட்டார்கள். அடிச்சுவர்

துளை யுண்டு சரிந்த படியால், மேன் மதில்களும் இடிந்து சரிந்து வீழ்ந்தன. திருடர்கள் உட்பிரவேசித்துத் திரவியம் சிறிதும் இல்லாமையால் ஏமாறி, மனம் நொந்து போய்விட்டார்கள். பொழுது விடிந்தபின் கஃபா இடிபட்டிருப்பதை குறைஷிகள் கண்டு, இது திருடர்கள் செய்த செயல் என அறிந்து, அனைவரும் திரண்டு நின்று பொருள் செலவிட்டு, நான்கு மதில்களாகப் பிரித்துக் கட்டினார்கள். அப்படிக் கட்டி முடிந்த பிறகு, ஹஜறுல் அஸ்வது என்னும் கருங்கல்லை முன்னிருந்த தானத்தில் தூக்கி வைப்பது என்னும் பிரச்னையில் பற்பல சமூகத்தார்களின் தலைவர்களுக் கிடையே விவாதம் ஏற்பட்டது. ஏனெனில் ஒவ்வொரு கூட்டத்தாரும் தாங்களே அச்சின்னத்தைக் கொண்டு போய் அதன் ஸ்தானத்தில் நாட்டும் நற்பாக்கியத்தை அடைவோம் என்பதாக தங்களுக்குள் கலகம் ஏற்படுத்திக் கொண்டதால், அது தடைபட்டு நின்றது. அதனால், குறைஷிகள் அனைவரும் ஒருங்கு கூடி "இக்கல்லைத் தூக்கி முன்னிருந்த தானத்தில் இருத்துபவர் யார்?" என்று ஆலோசித்தார்கள். அப்போது அங்கு நின்ற வேதபாரகர் சிலர், மற்றவர்களை நோக்கி, "இன்ன காலத்தில் இன்ன காரியத்திற்காக கஃபா இடிபடும்; அதைக் குறைஷிகள் கட்டுவார்கள். அப்போது, ஹஜறுல் அஸ்வதைத் தூக்கிப் பழைய தானத்தில் வைக்க விவாதம் ஏற்படும். அந்த வேளையில், பனீஹாஷிமில் உள்ள ஒருவர் அவ்வழியே வருவார். அவரே, அக்கல்லைத் தூக்கி வைப்பதில் மத்தியம் செய்வார்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் தாம் வந்து இதை மத்தியம் கூற வேண்டும் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கே சென்றார்கள். குறைஷிகள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருவதைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமுங் கொண்டு, அடுத்து வந்து நின்று, "எங்கள் குல நாயகமே, இம்மக்கமா நகரத்தில் எங்களால் செய்து முடிக்க இயலாத சில காரியங்கள் தங்களால் செய்து நிறைவேறின. இப்போது இக்கல்லைத் தூக்கிப் பழைய தானத்தில் இருத்துவதில் விவாதம் வந்திருக்கிறது. தாங்கள் தயை கூர்ந்து மத்தியம் கூற வேண்டும்" என வேண்டிக் கொண்டார்கள். இவ்விதம் தம் குலம் பத்தார்கள் வேண்டிக் கொள்ளுவதற்காக நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உள்ளம் மகிழ்ந்து, அவர்கள் அனை

வரும் சந்தோஷ மடையும் படியாகத் தாங்கள் திவ்விய திருமேனியில் போர்த்திருந்த போர்வையை எடுத்துத் தரையில் விரித்து தமது திருக்கரங்களால் அக்கல்லைத் தூக்கி அப்போர்வையின் நடுவே வைத்து, அங்கு நின்றவர்களில் நான்கு தலைவர்களை நோக்கி, "நீங்கள் நால்வரும் இந்தப் போர்வையின் நான்கு மூலைகளையும் பிடித்துத் தூக்குங்கள்" என்றார்கள். எல்லோரும் அத்தலைதைய முடிவை வெகு சந்தோஷத்துடன் அங்கீகரித்துக் கொண்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏவின பிரகாரமே அந்நால்வரும் அப்போர்வையின் நான்கு மூலைகளையும் பிடித்துத் தூக்கினார்கள். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதைத் தாங்கி முன்னிருந்த தானத்தில் இருத்தினார்கள். அது பழையபடியே பொருந்தி விளங்கிற்று. பிறகு, கஃபத்துல்லா மிக அலங்காரத்துடன் கட்டப்பட்டு முடிந்தது.

முதலாவது

விலாதத்துக் காண்டம்

முற்றுப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 FEB 952
MADRAS

இரண்டாவது

நுபுவ்வத்துக் காண்டம்.

௨௰-வது அத்தியாயம்.

நபிப் பட்டம் பெற்றது.

விருத்தம்.

நட்டம் பெற்றிடுங் குபிர் நரலை வற்றுவான்
இட்டம் பெற்றிடும் வழியிலக வந்திடு
திட்டம் பெற்றிடு நபிக் கிறைவர்சீர் நபிப்
பட்டம் பெற்றிடும் வரலாறு பன்னு வாம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சோதியா யெவைக்கு முள்ளுறைப் பொருளாய்த்
  தோற்றமு மாற்றமுந் தோன்றா
வாதிதன் பருமான் கொண்டனி தோங்கி
  யமரிழிந் தமரருக் கரசன்
மேதினி புகுந்து முஹம்மது தமக்கு
  விளங்கிய நபியெனும் பட்டங்
கோதறக் கொடுப்பத் தீன்பயிர் விளைத்த
  கூறெலாம் விரித்தெடுத் துரைப்பாம்.

இதன் பொருள்.

பூமி முதல் அண்டசராசர மெண்டிசை எங்குமுள்ள வஸ்துக்கள் யாவிலும் உள்ளும் புறமும் பிரகாசமாக உறையும் பொருளாய், பிறப்பும் இறப்பும், வேற்றுமையு முண்டாகாத ஆதி காரணனான அல்லாஹு தஆலாவின் உத்திரவு கொண்டு சந்தோஷ முயர்ந்து, வானவர்கட் கிராஜராகிய ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர் அந்தரலோகத்தை விட்டுக் கீழிறங்கிப் பூலோகத்தில் புகுந்து, முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குத் தெளிவான தீர்க்கதரிசி என்னும் நபி பட்டத்தை குற்றமறக் கொடுக்க, அப்பட்டத்தைப் பெற்றுக் கொண்ட நபிநாயகம்

தீனென்னு மார்க்கப் பயிர்விளைத்த காரணங்கள் யாவையும் விரிவாக எடுத்துச் சொல்லுகின்றாம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புள்ளிவண் டருட்ட முண்டிசை பயிலும்
  பொழிறிகழ் மக்கமா புரத்திற்
றெள்ளிய குறைஷிக் குலத்தினி லுதித்த
  செம்மலுக் குறைந்தபே ராண்டு
விள்ளருங் கணக்கா றுறிரண் டதின்மேல்
  மேலவன் றிருவுளப் படியால்
வெள்ளிடை யதனிற் சிறிதொளி திரண்டு
  விழித்திடும் விழிக்கெதிர் தோன்றும்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், அல்லாஹு தஆலாவின் பேரன்பு நாளுக்கு நாள் வளர, மக்கமா நகரத்தில் வாசம் செய்துகொண்டு இருக்கும் காலத்தில், முப்பத்தெட்டு வயது சென்று முப்பத்தொன்பதாம் வயது ஆரம்பமான காலம் முதற்கொண்டு, எண்ணிறந்த அற்புதங்களைக் கண்ணுறக் கண்டு மகிழத் தலைப்பட்டார்கள். தாங்கள் காரியார்த்தமாய் எங்கேனும் செல்லும்போதும், மீண்டு வரும்போதும், ஆகாய வெளியில் ஒளியொன்று திடீர் எனக் கண்களுக்கு எதிரே பிரத்தியட்சமாய்த் தோற்றக் காண்பார்கள். அவ்விதம் கண்ட அப்பிரபையை மறுபடியும் பார்க்க நாடுவார்கள், அது உடனே மறைந்து போய்விடும். அதில் பராக்கு இன்றித் திரும்பி நடப்பார்கள். மறுபடியும் அப்பிரபை திடீரென்று கண்களுக்கு எதிரே தோற்றமாகும். இவ்விதம் தங்கள் கண்களுக்கு எதிரே தோற்றும் பிரபையின் புதுமையைச் சிந்தித்து உள்ளங்களித்து, அதைக் குறித்து ஒருவரிடத்திலும் சொல்லாமல், மனதில் அடக்கி வைத்துக் கொள்ளுவார்கள். அப்பிரபை பிரதிதினமும் தோற்றப்படுகிறபடியால், சில சமயங்களில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் உள்ளத்தில் அச்சம் பிறப்பதும் உண்டு. இதுவன்றி, பல திசைகளிலும், ஆகாயத்திலும் இருந்தும், இராக்காலத்திலும், பகற்காலத்திலும், நபிகட்டிலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் செவிகளில் சில தொனிகள் கேட்கும். தமது செவிகளில் இத்

தொனி விழுந்த மாத்திரத்தில் "இதுயார் இட்டதொனி?" என அத்திசையைக் கண்கூடாகப் பார்ப்பார்கள்; உரு ஒன்றும் காணப்படாது. இவ்விதம் அசரீயாய்ப் பிறந்த தொனி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் செவிகளில் மாத்திரம் கேட்கும்; அவர்களுக்கு அருகிலிருக்கும் மற்றவர் செவிகளில் விழாது. நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் கண்களால் பிரபையைக் கண்டும், செவிகளால் தொனியைக் கேட்டும் ஆச்சரிய மடைந்து, அவற்றைக் குறித்து நினைந்து கொண்டே யிருப்பார்கள். இவ்விதமாகச் சில தினங்கள் சென்றன.

இருலோக ரக்ஷகரான முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், மாளிகையிலிருந்து தமது பிரிய நாயகி யுடன் சம்பாஷித்துக்கொண்டு இருக்கவும், அல்லது உறவின் முறையார் மனைகளில் சென்று பந்து ஜனங்களுடன் சம்பாஷித்துக் கொண்டு இருக்கவும் விருப்ப மற்று, நிர்மானுஷியமான இடங்களில் சென்று தனித்திருக்கப் பிரியமுற்று, ஊருக்கு வெளியிலுள்ள மலைகளில் போயிருந்து வருவார்கள். மற்ற மலைகள், இடங்களை விட ஹிரு என்னும் மலைக்கே அடுத்து அடுத்து போவார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஹிரு மலையில் போய்த் தனித்து இருந்து வருவதே பெரும்பான்மையாயிற்று. இரண்டு மூன்று தினங்கள் வரையும் அந்த மலையில் ஏகாந்தமாய்த் தங்கி யிருந்த பின்னர் மாளிகைக்கு வருவார்கள். சில தினங்களில் தமது பிரிய நாயகியாகிய கதீஜாவையும் உடன் அழைத்துபோய், பகல் முழுவதும் அந்த மலையிலிருந்து, மாலைப் பொழுதானவுடன் திரும்பி மாளிகைக்கு வருவதுமுண்டு. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மாளிகையை விட்டு வெளிப்பட்டுப் போகும்போதும், போன இடத்தில் தங்கியிருக்கும்போதும், மீண்டு வரும்போதும், மக்கமா நகரத்தின் கோட்டை மதிலும், வீதியிலுள்ள மனைகளின் சுவர்களும், வழியில் கிடக்கும் கற்களும், இன்னும் கண்களுக்கு எதிரே தோற்றப்படும் மரம், செடி, பூண்டு முதலான பொருள்கள் அடங்கலும், மனிதர் பாவனையாய் அவர்களுக்கு சலாம் சொல்லும். இவ்விதம் தமக்குச் சொல்லும் ஸலாத்தின் தொனியை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் நாதாரக் கேட்டு, ஆனந்தமும் ஆச்சரியமும் அடைந்து சந்தோஷப்படுவார்கள்.

நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தமக்கு முப்பத்தொன்பது வயது சென்று, மேல் கொண்டு ஆறு மாதங்கள் கழிந்த பிறகு, இராக்காலத்தில் படுத்து நித்திரை செய்யும் தோறும், மனோரஞ்சிதமான சொர்ப்பனங்கள் காண்பார்கள். பொழுது விடிந்தவுடன், அன்று இரவில் கண்ட, சொர்ப்பனத்தின் பலன் அவ்வாறே மெய்யுமாய்ப் பலிக்கும். இரவு தோறும் ஆச்சரியகரமான கனவுகளைக் காண்பதும், கண்ட பிரகாரமே பலிப்பதும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு மிகப்புதுமையா யிருந்தது.

மனிதர்களுக்கு முதற் பிதாவாகிய நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம், ஆதி மனிதராய்ப் பூமியில் தோற்றிய காலம்முதல், ஆயிரத்து நூற்றி இருபத்து மூன்றும் ஆண்டில். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு நாற்பதாம் வயது நிரப்பமாயிற்று.

நபிநாயகம ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், நாற்பதாம் வயதில் சிறந்த றபீயுல் அவ்வல் மாதம் எட்டாம் தேதி சனிக்கிழமை இரவில், மேற்படி ஹிருமலையில் போய்த் தனித்து இருந்தார்கள். அப்போது, மலக்குகள் அனைவருக்கும் அதிபராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், ஒப்பில்லாத அழகுடனும் அலங்காரத்துடனும், இரு சிறகுகளும் ஒளிமயமாய்ப் பிரகாசிக்க மானிட வடிவுகொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இருக்கும் இடத்தில் வந்தார். ஒப்பற்ற மனித சுரூபத்துடன் வந்த ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருமுகத்தை நோக்கி "நிகரில்லாத பரிமள அமைந்த திருமேனியையுடைய முஹம்மதே! இந்த மலையில் தனித்தா இருக்கிறீர்கள்?" என வினவி, வந்தவழியே மீண்டும் வானுலகஞ் சென்றார். அடுத்த ஒன்பதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவிலும், நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அம்மலையி லிருக்கும்போது, பழையபடியே ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அங்கு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "என் உயிருக்கு உயிரான நாயகமே! இவ்விடத்தில்தானா இருக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டு, முன்போலவே வானுலகத்துக்குச் சென்றார். வானவர் பெருமானாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் இப்படி அடுத்து அடுத்து வரும் முகாந்திரம்

இன்னது என்பது, நபிநாயகமவர்களுக்குத் தெரியாது. அவர் வரும் அலங்காரமும், அவர்வடிவின் அழகும், வந்து போகும் துரிதமும், காண்பதற்கு அரிய காட்சியானதால், இவ்விதக் காட்சியை எந்த உலகத்திலும் காண்பது அரிது என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அடிக்கடி சிந்தித்து, இதை நாம் இருந்து அறியவேண்டும் எனக்கருதி, தாங்கள் இருந்த தானத்தைவிட்டுப் பெயர்ந்து போகாமல் இருந்தார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

வரிசைசேர் றபீவு லவ்வல் மாதமீ ரைந்து நாளிற்
றெரிதர விளங்குந் திங்க ளிரவினிற் சிறப்பு மிக்கோ
னருளினில் ஜிபுற யீல்வந் தருவரை யிடத்தில் வைகுங்
குரிசிறங் கமலச் செங்கண் குளிர்தர வெதிர்ந்துநின்றார்.

நானிலம் பரவுஞ் சோதி நாயகக் கடவு டம்மை
வானகத் திருந்த சோதி வந்து சந்தித்த தேபோற்
மானமர் துண்டச் செங்கட் கலைநிலாத் தவழு மியாக்கை
மீனமில் ஜிபுற யீல்வந் திறையவன் ஸலாமுஞ் சொன்னார்

வசனம்.

மேற்படி றபீயுல் அவ்வல் மாதம் பத்தாம் தேதியாகிய திங்கட் கிழமை இரவில், ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடத்தில் வந்தார். நபிநாயகமவர்களின் கண்களுக்கு எதிரே ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நின்று நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா தங்களுக்கு ஸலாம் சொன்னான்" என்று சொல்லி விட்டு, சுவர்க்கத்திலிருந்து தாம் கொண்டு வந்த நவரத்தினங்களின் பிரபைகளால் வன்னமிடப்பட்ட சித்திரப்பூம் பட்டாடையைக் கையில் எடுத்து, தமது வாயினால் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்னும் கலிமாவைச் சொல்லி அவ்வாடையை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வலது கரத்தில் வைத்தார். ஜோதிமயமாய் ஒப்பற்று விளங்கும் அச்சித்திரப்பூம் பட்டாடையை ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்

களின் வலக்கரத்தில் வைத்தமாத்திரத்தில், வானம், பூமி, மலை, கடல், இன்னும் இவைகளிலுள்ள மற்றபொருள்கள் எல்லாம் ஒரே பிரகாசமாய் ஜ்வலித்தன. அப்போது நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நுபுவ்வத்து தரிப்பட்டு, நபிப்பட்டமும் சூட்டப்பட்டது.

மறுபடியும் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! இன்றையதினம் அல்லாஹு தஆலா தங்களுக்கு வேதத்தையுடைய நபி என்னும் 'பட்டத்தைச் சூட்டினான். தாங்கள் வாய்திறந்து வேத வாக்கியத்தை ஓதுங்கள்" என்று கூறினார். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமை நோக்கி "இவ்வுலகில் வழங்கும் சுதேச பாஷை அல்லது அன்னிய பாஷைகளுக்கு உரிய அட்சரங்களில் ஒன்றையாவது இன்னபடி யென்று நான் அறியேன். வேதவாக்கியங்களில் ஒன்றும் எனக்குத் தெரியாது" என்று பதில் சொன்னார்கள். உடனே ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கட்டியணைத்து "நபியே! இப்போது ஓதுங்கள்" என்றார். அதற்கும் நபிநாயகமவர்கள் அவரை நோக்கி "நான் வேதவாக்கியங்களைக் கற்றவனல்ல. என் நாவில் அதன் பழக்கமில்லை" என்று சொன்னார்கள். ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் மறுதரமும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக் கட்டி இறுகத் தழுவி "இப்போது ஓதுங்கள்" என்றார். அப்போதும் நபிநாயகமவர்கள் அவரை நோக்கி "வேதமென்பது இன்னமாதிரியென நான் கண்களால் கண்டவனுமல்ல; செவிகளால் கேட்டவனுமல்லவே; ஆனபடியால் எப்படி ஓதுவேன்?" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை முன்னிலும் வலிமையாக இறுக்கி, அணைத்து உடல் வருந்தி உறுப்புகள் சோர்வடையும் வண்ணம் நெருக்கி, உள்ளத்தில் அச்சமுண்டாக்கத் தக்க விதமாய் அழுந்த அணைத்து "நபியே, இனி ஓதுங்கள்" என்றார். மூன்றாம்தரம் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகமவர்களை மிக வலிமையுடன் இறுக்கி அணைத்து விட்டவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மனம் தெளிந்து, வேதமோதத் தக்க

சக்தியுண்டாயிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமை நோக்கி "வேதத்தில் எந்த வாக்கியத்தை நான் ஓதவேண்டும்?" என்று கேட்டார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மிக்குயர் மறையின் வள்ளல் விளம்பவின் னவர்கள் கோமா
னிக்கற வெனும் சூறத்தி லிருந்துநா லாயத் தின்ப
மெய்க்குற மாலம் யகுல மெனுமட்டும் விளம்பு வீரென்
றொக்கலி லுயிரின் மிக்கா புறுநபிக் குணர்த்தி னாரால்.

வசனம்.

அப்போது ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் "யாறஸூலல்லாஹ்! இக்றஃஉ என்னும் சூறத்தின் ஆரம்பத்திலிருந்து மாலம் யஃலம் என்னும் வரையுமுள்ள நான்கு ஆயத்துகளையும் ஓதுங்கள்" என்று சொல்லி, அந்த நான்கு திருவாக்கியங்களையும் ஜிபுறயீலே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஓதிக்காட்டி அறிவித்தார்.

அந்த நான்கு வாக்கியங்களையும் ஜிபுறயில் அறிவித்ததே போல், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் திருவாய்மலர்ந்து, வேனலிற் கருகிப்பட்ட தருக்களெல்லாம் தளிர்த்தோங்கும்படி அமுதமொழுக, மதுரமான வோசையுடன், அட்சரசுத்தியாக சொல்லியல் வழுவாது, பொருள் அமைதி இனிது விளங்க, தீன் என்னும் பயிர்செழித்துப் படர்ந்து வளர, தங்கள் அடித்தாமரையைத் தொடர்ந்த அடியார்களாகிய நாம் அனைவரும் ஈடேறத்தக்கதாய் "இக்றஃ பிஸ்மி றப்பி கல்லதீ கலக், கலகல் இன்ஸான மின் அலக், இக்றஃ வறப்புகல் அக்றமுல்லதீ அல்லம பில்கலம், அல்லமல் இன்ஸான மாலம் யஃலம்"

اقراء باسم ربک الذی خلق . خلق الانسان من علق .
اقراء وربک الاکرم الذی علم بالقلم . علم الانسان ما لم یعلم .

என ஓதினார்கள்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் வாய்திறந்து இனிய வோசையுடன் அந்த நான்கு ஆயத்து

களையும் ஓதினதை, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் தமது காது குளிரக்கேட்டு ஆனந்தங்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் துதித்துக் கொண்டாடி, அங்கிருந்து மீண்டு வானுலகஞ் சென்றார்.

தமக்கு ஜிப்ரயீல் சில சோபனவார்த்தைகளைச் சொல்லி வேதவாக்கியத்தைக் கற்பித்தவர், அங்கிருந்து போய்விட்டபோது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திகில் கொண்டு நடுக்கமுற்றார்கள். ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் இறுக அணைத்த வருத்தத்தாலும், பயங்கரத்தாலும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு குளிர்சுரம் உண்டாயிற்று. அதனால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த ஹிறாமலையில் இராமல் எழுந்து, அர்த்தசாமத்தில் தனிமையாய் நடந்து தமது மாளிகைக்கு வந்தார்கள். சுரம் தணியாமல் பயங்கரம் அதிகமாயிற்று. மனைக்கு வந்தவுடன் தமது பிரியநாயகியை நோக்கி, "கதீஜா! இன்று எனக்கு குளிர்சுரம் கண்டிருக்கிறது; அதன் முகாந்திரம் தெரியவில்லை. ஒரு துப்பட்டியை எடுத்து எனக்குப் போர்த்துங்கள்" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னசொல் தமது செவிகளில் நுழைந்தபோதே, கதீஜா நாயகியார் உள்ளங் கலங்கி, உடல்பதறி விரைந்து எழுந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சப்பிர மஞ்சத்தில் படுக்கசெய்து, துகில் கொண்டு போர்த்தி, அருகில் உட்கார்ந்துகொண்டு, "என் உயிர் போன்ற நாயகமே! தாங்கள் இவ்விதம் சித்தங் கலங்கி, உடல் ஒடுங்கி, முகமலர் வாடிவந்த காரணம் என்ன?" என்று கேட்டார்கள். அப்போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், கதீஜா நாயகியை நோக்கி, "நான் ஹிறாமலைக் குகையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது என்முகதாவில் ஒருவர் வந்து நின்று, என்கையில் பட்டாடையொன்றைக் கொடுத்து சிலசோபன வார்த்தைகளைச் சொல்லி, என்னை வேதம் ஓதும்படி ஏவினார். "நான் ஓதினவனல்ல" என அவரிடம் இரண்டு மூன்றுதரம் மறுத்துச் சொல்லியும், அவர் என்னை அடிக்கடி இறுகத்தழுவி அணைத்துவிட்டு, மறுபடியும் ஓதும்படி ஏவினார்; எனவே நான் ஓதினேன். அவர் என்னை இறுகஅணைத்ததனால் உள்ளங்கலங்கி, உடல் வருந்தி குளிர் சுரம் கண்டது" என்றார்கள்.

கல்வி கேள்விகளில் சிறந்த உலக மாதாவாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன வசனங்களைக் கேட்டு, ஹிரு மலையில் நிகழ்ந்த சம்பவத்தின் காரணத்தைக் குறித்து மிகச் சிந்தித்து, முன்னுள்ள வேதங்களும் சாஸ்திரங்களும் சொல்லியிருக்கும் சொற்களும், தமது பிரியநாயகராகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன சொற்களும் இன்ன காரியத்திற்கு இசைந்தன என்று உள்ளத்தில் தேறி, இதனால் வேறு விக்கினங்கள் இடையூறுகள் ஒன்றுமில்லை என ஐயமின்றி மகிழ்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, "நாயகமே! உலகத்தில் விளையும் தீங்குகள் அனைத்தையும் அறத்தொலைக்கும் மகிமையுள்ள தங்களுக்கு, மனிதர்களால் செய்யப்படும் விக்கினம் எள்ளத்தனையும் உண்டாகாது" என்று சொன்னார்கள்.

பிறகு சூரியன் உதயமாயிற்று அதிகாலையில் கதீஜா றலியல்லாஹு அன்ஹா எழுந்து, தமது பணிவிடைகாரர்களில் ஒருவனை அழைத்து, "விரைந்து போய், நீ வறக்கத்தை அழைத்துக் கொண்டு வா" எனக் கட்டளையிட்டார்கள். அவ்வேவலாள் புறப்பட்டு, வறக்கத்து என்னும் பண்டிதனிடம் சென்று, "பண்டித சிகாமணியே, எங்கள் எஜமானியாகிய கதீஜாவும் அவர் புருஷ நாயகராகிய முஹம்மதும், உம்மை அழைத்து வரச்சொன்னார்கள்" என்றான். இச்சொல்லைக் கேட்டபோது வறக்கத்து மன மகிழ்ந்து எழுந்து கதீஜா நாயகியின் மாளிகைக்கு வந்தார். உடனே கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவரை உபசரித்து உட்காரச்செய்து அவரை நோக்கி, "மகா பண்டிதராகிய வறக்கத்தே இன்றிரவு ஹிருமலையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் நிகழ்ந்த ஆச்சரியகரமான சம்பவம் சில உண்டு. அவற்றை அவர்களிடத்தில் கேளும்" என்று சொன்னார்கள். அப்போது வறக்கத்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நோக்கி, "முஹம்மதே! தங்களிடத்தில் நடந்தபுதுமைகள் என்ன? அவற்றை விவரமாக என்னிடம் சொல்லுங்கள்" என்று விசாரித்தார்.

நடந்த சங்கதிகளைப்பற்றி விசாரித்தபோது, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த வறக்கத்தை

நோக்கி, "பண்டிதரே! இந்த மாதம் எட்டாம் தேதியாகிய சென்ற சனிக்கிழமை இரவில், ஹிருமலைக் குகையில் நான் போயிருந்தேன். அப்போது யாரோ ஒருவர் என்னிடம், வந்து நின்று என்னை நோக்கி 'முஹம்மதே, இங்கே தனித்தா இருக்கின்றீர்' எனக்கேட்டு விட்டு ஆகாய மார்க்கமாகச் சென்றார். மறு நாள் இரவிலும் அவ்விதமாகவே வந்து விசாரித்து விட்டுச் சென்றார். பத்தாம் தேதியாகிய இன்று இரவும் நான் அங்கு இருக்கையில், அவர் என் முன் வந்து நின்று, எனக்கு அல்லாஹு தஆலா ஸலாம் சொன்னதாகச் சொல்லி, சித்திரப் பூம்பட்டாடை யொன்றை என் வலக்கரத்தில் வைத்து, 'அல்லாஹு தஆலா இன்று உமக்கு நபிப்பட்டம் கொடுத்தான். நீர் வேதத்தை ஓதும்' என்றார். நான் 'அட்சரங்கள் அறியாதவன். வேதம் கற்றவனல்ல' எனக் கூறினேன். அதற்கு அவர், என்னைத் தமது கைகளால் அணைத்து விட்டு 'ஓதும்' என்றார். அப்போதும் 'நான் படித்தவனல்ல' என மறுத்துச் சொன்னேன். அவர் மறுபடியும் என்னை இறுகவணைத்து விட்டு 'ஓதும்' என்றார். அப்போது நான் முன்போலவே 'எழுத படிக்க அறியாதவன், எவ்விதம் ஓத முடியும்?' என்று மறுத்தேன். மூன்றும் தரம் அவர் என்னை உடல் வருந்த நெருங்க இறுக்கி அணைத்து விட்டு 'இனி ஓதும்' என்றார். அப்போது நான் அவரை நோக்கி 'நான் ஓதுவது எது?' எனக் கேட்டேன். உடனே அவர் வேத வாக்கியங்களில் சிலவற்றை ஓதிக் காட்டி எனக்குக் கற்பித்தார். அவர் கற்பித்த வண்ணமே, தடையின்றி நான் ஓதினேன். பிறகு அவர் மனம் மகிழ்ந்து என்னைப் புகழ்ந்து விட்டு, ஆகாய மார்க்கமாகச் சென்றார்" என அனைத்தையும் விவரமாகச் சொன்னார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்ன ஆச்சரியமான இந்த வார்த்தைகள் அனைத்தையும் அப்பண்டிதன் கேட்டு மனம் மகிழ்ந்து, கதிஜா றலியல்லாஹு அன்ஹாவுடைய காதுகள் குளிர்ந்து உள்ளங் களிக்க, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "முஹம்மதே! தாங்கள் அணுத்தனையும் அஞ்ச வேண்டாம். தங்கள் சமூகத்தில் மானிட உருக் கொண்டு வந்தவர் வானவர்களுக்கு அதிபராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம்; தங்கள் வலது கையில் அவர் கொண்டு வந்து வைத்த பட்டாடை நபி என்னும் பட்டம். தங்களை ஓதும்படி கற்பித்தவை தங்களுக்கு இறங்கும்

குறுஆன் என்னும் வேதத்தின் வாக்கியங்கள். இவையன்றி அவர் தங்களை உடல் வருந்த மூன்று தரம் இறுக அணைத்த படியால் தங்களுக்கு மூன்று கண்டங்கள் உண்டாகும். அவை உண்டாய் அப்போதே மாறிப்போம். இவ்வூரில் உள்ள தங்களின் பந்துக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து, தங்களுக்குப் பகைவராய், தங்களை இக்நகரத்தை விட்டுத் துரத்தி விடுவார்கள். இவையே அவற்றின் தத்துவார்த்தம்" என்று அவர் சொன்னார். வறக்கந் சொன்ன வார்த்தைகளில், பந்துக்கள் பகைவராவார்கள் என்ற சொல் செவிகளில் விழுந்த போது, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திடுக்கிட்டு அஞ்சி "எனது பந்துக்கள் எனக்குப் பகைவராவார்களா! அப்பகை வளர்ந்து வருமா!" என்றார்கள். அப்போது வறக்கத்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "முஹம்மதே, தங்களுக்கு முன்னுண்டா யிருந்த நபிகளில் துன்பம் அடையாதவர் ஒருவருமில்லை. அனைவரும் தமக்கு நேரிட்ட இடையூறுகள், ஆபத்துகள் முதலான விக்கினங்களி லிருந்து விலகியே காலம் கழித்தார்கள். தாங்கள் அந்த நபிமார்களுக்கு நாயகமான படியால், இவ்வுலகத்தில் யார் யார் கூடிச் செய்யும் எவ்விதத் தீங்கும் தங்களை யடுத்து, தங்கள் காரியத்துக்கு யாதொரு சங்கடமும் செய்யமாட்டாது. தங்களுக்குப் பின் வேறு நபி இல்லை. ஆனபடியால், தங்கள் பகைவர் விளைக்கும் தீங்கில் சிறிதும் தங்களை யணுகாது" என வுள்ளந்தேற நன்மொழி பகர்ந்து, இருவரிடத்திலும் விடை பெற்றுத் தமது மனைக்குச் சென்றார். பிறகு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுரம் தணிந்து சுகம் அடைந்து இருந்தார்கள்.

27-வது அத்தியாயம்.

தொழுகை வந்த வரலாறு.

கலி விருத்தம்.

மழுகை யேந்தி வயங்கொள்வல் லாளரும்
விழுகை யாகி வியந்து பணிந்திட
வழுகை தீர்மற் றூதர்க் கிறைவனாற்
றொழுகை வந்த வரவினைச் சொல்லுவாம்.

இதன் பொருள்.

மழுவாயுதத்தைக் கையிலெடுத்தேந்தி வலிமை படைத்த சுத்த வீரியரும், வீழ்தலாகித் துதித்துப் பாதம் பணிந்திட அவர்களுக் குண்டாயிருக்குங்கேடாகிய சிறுமைகளைத் தீர்க்கும்மற்றூதென்னும் இயர்பெயரை யுடைய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கட்கு, அல்லாஹு தஆலா புறத்திலிருந்து தொழுகைவந்த வரலாறு இன்னதென்று சொல்லுகின்றோம்.

சரித்திரப் புராணம்.

கலி விருத்தம்.

உடையவனொருவன்ற னுண்மைத் தன்மையை
நடைவர விளக்கிநல் வழியி லியாரையு
மடைதர வழைத்திடற் கனுப்புந் தூதரென்
றிடைவரு மமர்கோ னியம்ப பட்டமே.

வசனம்.

நபிகட்திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு, றபீஉல்அவ்வல் மாதம் பத்தாந் தேதி திங்கட்கிழமை இரவில், ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் மானிட உருக்கொண்டு வந்து நபிப்பட்டம் தரிப்பித்த போதே لا اله الا الله محمد رسول الله லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்னும் கலிமா உணர்த்தப்பட்டது. அக்கலிமாவை ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமே முந்தியோதினர். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வஹி கொண்டுவரத் தொடங்கினது அன்றுதான். நுபுவ்வத்துக்கு முன் அறிவிக்கப்படும் விஷயங்களனைத்தும் சொர்ப்பனத்திலேதான் அறிவிக்கப்பட்டன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு எழுவகையாக வஹி அறிவிக்கப்பட்டு வந்தது. அந்த எழுவகையாவன—நுபுவ்வத்துக்குமுன் சொர்ப்பனத்தில் அறிவிக்கப்பட்டது ஒன்று. (இது நுபுவ்வத்துக்குப் பிந்தியு முண்டு) விழிப்பில் திடீர் என உதிக்கும் மனவுதிப்பில் அறிவிக்கப்படுவது ஒன்று. மானிடவடிவுடன் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து நேரில் அறிவிப்பது ஒன்று. விலங்கினத்தின் கழுத்திற் கட்டும் மணியோசைபோல, உருத்தோற்றமின்றி ஆகாசத்தில் கேட்கும் தொனியால் அறிவிக்கப்படுவது ஒன்று.

ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் தமது இயற்கை வடிவுடன் வந்து அறிவிப்பது ஒன்று. (ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் தமது இயற்கை வடிவுடன் மற்ற நபிமாரிடம் வந்ததில்லை. நமது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்தது இரண்டு தரந்தான்.) இடையில் ஒருதருமின்றி, அல்லாஹு தஆலாவின் வசனத்தை நேரே கேட்டு அறிவது ஒன்று. (இது மூசாநபிக்கு நடந்தது போலாகும்.) அல்லாஹு தஆலாவை நேரில் சந்தித்து அவன் அறிவிக்க அறிவது ஒன்று. (இது மிஃறாஜில் நடந்தது) இவ்வேழு வகைப்பட்ட வழிகளில் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் மானிடவடிவுடன்வந்த ஆரம்பம் நபிப்பட்டம் தரிப்பிக்கும் போதுதான்.

ஈமான் என்பது "அல்லாஹு தஆலா ஒருவனே. முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய உண்மைத் தூதராவர்" என மனவுறுதியுடன் விசுவாசங்கொள்ளுதல் என்றும், இஸ்லாம் என்பது அவ்விசுவாசத்துக்கு ஏற்ற வண்ணம் ஒழுகி நடக்கும் நிபந்தனையான கருமங்கள் என்றும் நபிபட்டம் அளிக்கும் போதே நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அன்று தொட்டு, ஈமான் இஸ்லாம் என்னும் இருவகைக் கருமங்களையும், அவற்றின் நிபந்தனைகளையும், கலிமாவையும் தமது சொந்தமான மனிதர்களுக்குஅறிவித்து, அல்லாஹு தஆலாஒருவனே சிருஷ்டிகளடங்கலுக்கும் நித்திய கடவுளாவன். மற்றத் தெய்வமென்னும் பொருளனைத்தும் அநித்திய மானவை என்னும் வேதவாக்கியத்தையும் நீரத் தெளியஉணர்த்த ஆரம்பித்தார்கள். முந்தி உலக மாதாவாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா, தமது நாயகராகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கையைப் பிடித்து கலிமா சொல்லி, ஈமான்கொண்டு இஸ்லாமானார்கள். பெண்களில் முந்தி இஸ்லாமானது இவர்களே. அதற்குப்பின் மற்றவர்கள் இஸ்லாமாவதற்கு முன்னே, அபூபக்கர் தமது மனையில் படுத்து நித்திரைசெய்யும்போது சூரியன், சந்திரன் இரண்டும் தமது மடியில்வந்து விளையாடிக்கொண்டிருக்கும் வண்ணம் சொர்ப்பனங் கண்டு விழித்து, அதைக் குறித்து ஆலோசித்து, இதனால் நமக்குப் பிரயோசன முண்டாகுமென்று மனம்தேறி, ஒருவரிடத்தி

லும் சொல்லாமல் சந்தோஷத்துடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனைக்கு வந்தார்கள்.

அபூபக்கர் தமது மாளிகைக்கு வந்தவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும் கதீஜா றலியல்லாஹு அன்ஹாவும் உபசரித்து அழைத்து ஆசனத்திலிருக்கச் செய்தார்கள். பிறகு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபூபக்கரை நோக்கி, ஹிறா மலையில் தங்களுக்கு நபிப்பட்டம் வந்த வரலாற்றை சொல்லிக்காட்டினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய்மலர்ந்து சொன்ன சத்தியமான வார்த்தைகள் அனைத்தையும் அபூபக்கர் கேட்டு தாம் கண்ட கனவையும் சிந்தித்து உள்ளம் களித்து ஆநந்தம்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "அதிக ஆச்சரியமான அற்புதங்களைப் பிரத்தியட்சமாகக்காட்டி, கண்டவர் பிரமிக்கத் தக்கவிதம்செய்யும் ஒப்பற்ற மகிமையுள்ள நபிநாயகமே! தங்களின் தத்துவத்தை ஊன்றி அறியும் சக்தியுள்ளவர் யார்? ஒருவருமில்லை! தாங்கள் சொன்னவை யனைத்தும் சத்தியம். தாங்கள் உண்மையான நபியே" என்று வியந்து சொன்னார்கள். அன்றுதொட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வாயில் பிறக்கும் எவ்வித ஆச்சரியகரமான வசனத்தையும் "சத்திய வசனம்" என சிரம் குனிந்து, மனமும் வாக்கும் ஒத்து அபூபக்கர் ஒப்புக்கொள்ளுவார்கள். அதனால் தான் ஸித்தீக்கு (விசுவாசி) என்னும் பட்டம் அப்போதே அளிக்கப்பட்டார்கள்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

என்றுரைத் தருளிய வெழில பூபக்கர்
தன்றிரு மதிமுக நோக்கித் தாழ்விலா
வென்றி கொண் டுறுங்கலி மாவைவிள்ளுத
னன்றுமக் கெனநபி நவிற்றி னாரரோ·

அருமறை நாயக நபிக ளானவர்
தெரிதருப் புதுமையின் வழியிற் சேர்த்துவர்
பெரியவன் றூதென வெனக்கும் பெட்புற
விரிதரும் புதுமையொன் றுதவவேண்டுமே.

வசனம்.

அபூபக்கர் தம் சொல்லை உறுதியாய் நம்பி வியந்து பேசினவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், அவரை நோக்கி "இனி நீர் கலிமாவைச்சொல்லி ஈமான்கொள்ளுவது உத்தமம்" என்றார்கள். அதற்கு அபூபக்கர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தங்கள் சொல்லின்கீழ் அமைந்து பின்பற்றுவதற்குயாதும் ஆக்ஷேபனையில்லை. ஆனால் ஒருவிஷயம். முன்னிருந்த நபிமார்கள் ஒவ்வொருவரும் பிறருக்கு அற்புதங்களைக்காட்டி, அவர்களை ஈமான் கொள்ளுவித்தார்கள். அதுபோல தாங்களும் எனக்காக ஒரு அற்புதம் காட்டவேண்டும்" என்று கேட்டார்கள். இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவரைநோக்கி வேறொன்றும் சொல்லாமல் "அபூபக்கரே! இன்றிரவு நீர் படுத்து நித்திரை செய்யும்போது, சூரியனும் சந்திரனும் உமது மடிமேல் வந்து இறங்க சொர்ப்பனம் கண்டீரா?" என்றார்கள். இதை அபூபக்கர் கேட்டுத் திடுக்கிட்டு, ஆச்சரியமும் பரவசமு முற்று மனமுவந்துமறுத்துப்பேச இடமின்றி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வலக்கரத்தைப் பிடித்துக் கலிமாசொல்லி, ஈமான்கொண்டு இஸ்லாமானார்கள். ஆண்பிள்ளைகளில் முந்தி ஈமான் கொண்டு இஸ்லாமானது அபூபக்கரே.

அபூபக்கர் ஸித்திக்கு றலியல்லாஹு அன்ஹு இஸ்லாமான பின், அபூத்தாலிபின் புத்திரர்களில் அலியும் இஸ்லாமானார்கள். அப்போது அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வயது ஏழு. பிறகு அடிமைகளில் விசேஷித்த மகிமையும் அறிவுமுள்ள ஹாரிதுவுடைய குமாரர் ஸைது என்பவர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குக் கீழ்ப்படிந்து இஸ்லாமானார்.

இத்தனை பெயரும் ஈமான்கொண்டு இஸ்லாமானபின், புத்தி சாதுரியமுள்ள அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு, தமது குடும்பத்தார் அனைவருக்கும் "முஹம்மது நபி அல்லாஹு தஆலாவுடைய மெய்தூத்தர் என்பதற்கு சந்தேகம் சிறிதுமில்லை" என்று இரகசியமாகத் தகுந்த அத்தாட்சியுடன் சொன்னார்கள். இச்சொல்லைக்கேட்ட குடும்பத்தாரில் பலர் ஒருங்கு திரண்டு, அபூபக்கர் நிஷ்கபடியும் விசுவாசியும் சத்திய வந்தருமானவர். அவர் சொல்லும் எவ்வித வார்த்தையும் பழுதுறாது என நம்பி,

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சமூகம் அடைந்து வழிப்பட்டார்கள். இத்தன்மையை அறிந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவாய் மலர்ந்து, "அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹுவுடைய சத்திய வசனத்தை நம்பினவர்கள் அனைவருக்கும் சுவர்க்கபதவி தடையின்றி கிடைக்கும்" என்று மொழிந்தார்கள். இவ் உத்தம வாசகத்தை கேட்டமாத்திரத்தில் அநேகர் ஈமான்கொண்டு இஸ்லாமானார்கள்.

அப்போது ஈமான்கொண்டு இஸ்லாமானவர்களில் முதன்மையானவர்கள், அப்துர் றஹ்மான், ஜுபைறு, தல்ஹா, சஃது, உதுமான் றலியல்லாஹு அன்ஹும் என்னும் இவர்களே. மேல்படி தலைவர்களும், இன்னும் அநேக சாமானிய ஜனங்களும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குக் கீழ்படிந்து ஈமான் கொண்டு இஸ்லாமான பின், நற்கருமத்தில் பிரவேசித்து நடந்து வந்தார்கள்.

நபிகட்திலகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்தில் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிப்பட்டம் சூட்டுதற்கு வந்ததேயன்றி, அதற்கு பிறகு வரவேயில்லை. அன்று ஹிறாமலையில் நம்மிடம் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்தாரேயல்லாமல், பழையபடி ஒரு தினமாவது வரவில்லையே என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மனம் கலங்கி, சிந்திக்க ஆரம்பித்தார்கள். "நபி என்னும் பட்டம் சூட்டப்பெற்றவர்கள் திரிகால வர்த்தமானங்களையும் தம் கூட்டத்தாருக்கு அறிவிப்பார்கள். நாம் அப்பட்டம் தரிக்கப் பெற்று இருக்கின்றபடியால், நம்மை விசுவாசித்தவர்களுக்குத் தீர்க்கத் தரிசனம் கூறுவது நமக்கும் கடமையே. நாம் அவ்விதம் ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்தால், நம்மிடம் யாரும் அதைப்பற்றி கேட்பார்களே அவர்களுக்கு நாம் என்ன சொல்வோம்" என்று அடிக்கடி சிந்தித்து மனமுருகி, சஞ்சலத்தில் மூழ்கினார்கள். இவ்வித வியாகூலத்துடன் மனத்துயர் பெருகித் தமது பிரிய நாயகியுடன் இருப்பார்கள்; பின்பு விரைவாய் எழுந்து ஹிறாமலைக் குகையில் சென்று இரவுமுழுவதும் தங்கியிருந்து, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வருவாரா என எண்ணி, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தவண்ணமா யிருப்பார்கள்; எண்ணியபடி ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வரக்காணாமல் துயர்மூண்டு, அங்கி

ருந்து எழுந்து மனைக்கு வருவார்கள். இதே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வேலையாயிற்று.

தாங்கள் கொண்டிருக்கும் மனோ சஞ்சலத்தைப் பற்றி, நாயகியாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா இடம் சொல்லப்பிரியமின்றி, உள்ளத்திலேயே அடக்கிவைத்துக்கொண்டு இருந்ததுமன்றி, தமது சொல்வழிப்பட்ட கூட்டத்தார்களின் முகத்தைப் பார்க்க நாணமடைந்து, மிகவருந்தினார்கள். "அன்று வந்துபோன ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் மற்றொருதினம் நம்மிடம் வரக்காணோம். அதனால் நாம் இனி என்ன செய்வது?" எனப் பலவாறு மனம் ததும்பிச் சித்த சமாதானம் அற்று, ஒருநாள் தமது நாயகியைப் பிரிந்து ஹிறாமலைச் சிகரத்தில் சென்று, ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் இருந்தார்கள். நெடுநேரம் சென்று தமது சஞ்சலம் தணியும் அறிகுறி சிறிதும் தோற்றாமல், மனம் கலங்கி "நாம் அல்லாஹு தஆலாவுடைய தூதன் என வாய்விட்டுப் பிரஸ்தாபம்செய்து விட்டோம். நமது சொல்லை நம்பி அநேகர் கீழ்படிந்து இருக்கிறார்கள். அதற்குத் தக்கபடி அற்புதங்களை அடுத்தடுத்துக் காட்டவேண்டும். அப்படி அற்புதங்களைக் காட்டுவதற்கு நமக்கு ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமுடைய உபபலம் முக்கியம் வேண்டும். அவர் இப்போது நம்மிடம்வந்து நம்மனத்துயரை மாற்றி, தூதர்களுக்கு உரிய தன்மையை ஸ்தாபித்தால் இனி நாம் கருதிய கருமங்களைச் செய்யக்கூடும். அப்படியில்லையானால், இனி ஒரு தரம் நாம் நம்மை அடுத்தவர்களைச் சந்திக்கும்படி உயிர்வைத்து இராமல் இம்மலைச் சிகரத்திலிருந்து விழுந்து மரணமடைவதே உத்தமம். இதுவன்றி, உயிரோடு இருப்பது மானபங்கம்" எனப் பிரதிக்கினை செய்து கொண்டு, அங்கேயே தங்கியிருந்தார்கள்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸலலம் அவர்கள் இவ்விதம் மனத்துயர் பெருகச் சிந்தனைசெய்து கொண்டு இருக்கையில், திடீர் என ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் விரைந்துவந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமுகத்தில் நின்று "யாமுஹம்மது! தங்களுக்கு என்ன சஞ்சலம்? சிறிதும் விசனிக்க வேண்டாம். தாங்கள் உண்மையான நபியே" என்று சொல்லிவிட்டு, ஆகாய வழியாய்ச் சென்றார்கள். ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து சொன்ன இச்சொல், நபிநாயகம் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களின் வியாகுலம் அனைத்தையும் ஒருங்கே ஒழித்து அத்தியந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அதனால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உள்ளம் குளிர்ந்து முகமலரப்பெற்றார்கள். ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து மேற்படி வசனத்தை சொன்னது ஒருதரமல்ல; பலதரமும் அடுத்தடுத்து வந்து அவ்விதமாக சொல்லிவிட்டுச் சென்றார். அதனால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்தேகம் நிவர்த்தியாகிச் சஞ்சல முற்றும் நீர்ந்தன. சிலதினம்வரையும் வரத்துஒழிந்து நின்ற ஜப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அடுத்தடுத்து வந்து மனதைத் தேற்றுகிறபடியால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனம்பூரித்து, அடிக்கடி ஹிறா மலைக்குச்செல்ல ஆரம்பித்தார்கள்.

ஒருநாள், நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேற்படி மலையின் குகையில் நெடுநேரம் வரையும் உட்கார்ந்து இருந்தார்கள். அப்போது, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் வந்து, ஸலாம்சொல்லி, வேதவாக்கியங்களில் ஒன்றாகிய ஸூறத்துல் முஜம்மிலிலுள்ள ஆயத்தை அறிவித்தார்கள். அன்று அந்த ஆயத்து இறங்கிற்று. அந்த ஆயத்து அறிவிக்கப்பட்டபின், ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மலைச்சிகரத்திலிருந்து அழைத்துக் கொண்டு கீழிறங்கி, கொஞ்சதூரம் சென்று ஒரு இடத்தில் நின்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மருங்கில் அணைத்துக் கொண்டு, தமது வலதுகாலால் தரையைச் சிதைத்து அகழ்ந்தார். அகழ்ந்தவுடன் அங்கிருந்து தண்ணீர் பிரவாகித்து, மதுரமும், குளிர்ச்சியுமுள்ள சுத்தஜலம் குமிழிவிட்டுப் பெருகி ஓடினது. அந்த நீர்க்கரையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தமது அருகிலிருத்தித் தாமும் உட்கார்ந்து, தாம் செய்யும் முறைமைப் பிரகாரம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் செய்யும்படி கற்பித்து, உளுசெய்து கொண்டு, தாம் முன் நின்று நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை தமக்குப் பின்னால் நிறுத்தி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல்லாஹு தஆலாவைத் தொழும்வண்ணம் இரண்டு றக்அத்து தொழுவித்தார். ஜிப்றயீல்

அலைஹிஸ்ஸலாம் தொழுத விதமாகவே அவருக்குப் பின் நின்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், அல்லாஹு தஆலாவைத் தொழுதார்கள். தொழுது தீர்ந்த பின் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பிரிந்து வானுலகம் சென்றார்.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து உலுவின் முறைமையையும், தொழுகையின் விதத்தையும் கற்பித்த பிறகு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அங்கிருந்து மாளிகைக்கு வந்து, தமது பிரிய நாயகியாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹாவை யழைத்து அருகிலிருத்தி, உலுவின் விதத்தையும் தொழுகையின் விதத்தையும், அங்கு செய்த பிரகாரமே செய்வித்து தொழும்படி உணர்த்தினார்கள். அப்படியே உலக மாதாவாகிய கதீஜா நாயகியாரும் தொழுதார்கள். கதீஜா நாயகியார் தொழுத பின் இருவரும் மனம்களித்து இருக்கும் வேளையில், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு முதலாயுள்ள மற்ற ஈமான் கொண்ட முஸ்லிம்கள் அனைவரும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் மாளிகைக்கு வந்தார்கள்.

அபூபக்கர், உதுமான், அலி, ஜுபைறு, தல்ஹா, ஸஃது, அப்துர் றஹ்மான் என்னும் தலைவர்களும், மற்றவர்களும் வந்தவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அவ்வனைவருக்கும் தாங்கள் ஹிராமலையிலிருக்கும்போது இறங்கின ஆயத்தை ஓதிக்காட்டி, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் கற்பித்த தொழுகையின் முறைமை யனைத்தையும், தாங்கள் தொழுத வகையையும் விவரமாகத் தெரிவித்து, அனைவருக்கும் உலுமுறை தொழுகைமுறை இவ்விரண்டையும் கற்பித்து, அனைவரையும் உலு செய்வித்து வரிசையாக நிறுத்தி, தாங்கள் முன்னின்று தொழுவித்தார்கள்.

அன்று தொட்டு ஈமான் கொண்டவர்கள் அனைவரும் அல்லாஹு தஆலாவைத் தொழ ஆரம்பித்தார்கள். ஆனால் தொழுகையில் நேர வரையறையும், றக்அத்தின் வரையறையும் அப்போது குறிக்கப்படவில்லை. ஆனதுபற்றி, நாள் ஒன்றிற்கு இத்தனை வேளைகள் என்றும், வேளை ஒன்றிற்கு இத்தனை

றக்அத்துகள் என்றும், மிஃறாஜிலே நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நியமிக்கப்படும் பரியந்தம் நினைத்த வேளையில் இவ்விரண்டு றக்அத்துகளே தொழுது வந்தார்கள்.

அனைவரும், தாங்கள் தொழும் தொழுகையை அன்னிய மார்க்கத்தார்கள் கண்டால் பரிகாசம் செய்வது மன்றி, ஏதும் விக்கினம் விளைப்பார்கள் என அஞ்சி, வனவிலங்குகள் சஞ்சரிக்கும் காடடர்ந்த இடங்களிலும், மலைச் சிகரங்களிலும், குகைகளிலும், நிர்மானுஷியமான அருவிக் கரைகளிலும், பாழடைந்த இருண்ட வெறுமனைகளிலும் ஒதுங்கி நின்று தொழுது வந்தார்கள் தங்கள் தொழுகையை அன்னிய மதஸ்தர் காண ஒண்ணாது என்னும் பயம் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கும் அவர்களை யடுத்த மற்றவர்களுக்கும் நெஞ்சில் தரிப்பட்டபடியால், மூன்று வருஷம் வரையும் இரகசியமாகவே தொழுகையை நிறைவேற்றிக்கொண்டு வந்தார்கள்.

28-வது அத்தியாயம்.

தீனிலைக் கண்டது.

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

மானிலை கண்டுறும் வழியிற் றோன்றிநீர்
தானிலை கண்டிடா வாற்றைத் தாண்டியீ
மானிலை கொண்டவர் மகிழச்செய் நபி
தீனிலை கண்டிடுஞ் செய்தி செப்புவாம்.

இதன் பொருள்.

ஷாம் தேசத்துக்குப் போன வழியிலுண்டாகி நீர் இவ்வளவு என்று காணக்கூடாத ஆற்றை, அல்லாஹு தஆலாவுடைய அருளால் வந்த மானுடைய நிலைகண்டு, அம்மானுக்குப் பின்னாலே சென்று அவ்வாற்றைக் கடந்து ஈமானிலை கொண்டவர் மனமகிழச் செய்யும், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் தீனுல்லிஸ்லாம் மார்க்கம் நிலைகண்டிடும் செய்தியைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீதவொன் கவிகை நீழ லிருந்திய குரிசி வானோர்
தூதென நபியின் பட்டந் துலங்கிய நான்கா மாண்டில்
வேதம்நல் வணக்க மியார்க்கும் விரித்துற விளக்கு மென்ன
வாதிதன் பருமான் மேற்கொண்டம ரர்க்கோ னுரைத்துப் போனார்.

வசனம்.

நபிகட்டிலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்கள் தோழர்களும் தாங்கள் தொழும் தொழுகையை அந்நிய மதஸ்தர்கள் காணக்கூடாது என மூன்று வருஷம் வரையும் மறைந்து நின்று அந்தரங்கத்தில் தொழுதுவந்தார்கள். இதற்கு இடையில், ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் பலதரம் அல்லாஹு த.ஆலாவின் ஏவல்கொண்டு வஹியுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்துசென்றார். நபிப் பட்டம்பெற்ற நாலாம் ஆண்டு பிறந்தவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து "யாரஸூலல்லாஹ்! குர்ஆன் வேதத்துக்கு உரிய இஸ்லாம் என்னும் பரிசுத்தமார்க்கத்தை பகிரங்கத்தில் பிரஸ்தாபம் செய்ய வேண்டும் என்று அல்லாஹு த.ஆலா கட்டளை பண்ணினான்" என்றார். **(பஸ்தஃ பிமா தூமறூன் வஅஃரில் அனில் முஷ்ரிகீன் வஅன்ஸிர் அஷீரத்தகல் அக்றபீன்)**

فاصدع بما تؤمرون . واعرض عن المشركين
. وانذر عشيرتك الاقربين .

என்னும் திருவாக்கியத்தை வஹி அறிவித்தார். இவ்வொஹி அறிவிக்கப் பட்டதும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதைத் தோழர்கள் அனைவருக்கும் ஓதிக் காட்டி பொருள் விவரித்தார்கள். "மலைகளிலும், கெபிகளிலும், அருவிக்கரைகளிலும், பாழ்மனைகளிலும் மறைந்திருந்து தொழுதல் முறையல்ல; பகிரங்கத்தில் தொழுது மார்க்கத்தை பலக்கச்செய்ய வேண்டும்" என்னும் வேதவாக்கியத்தைக் கேட்ட தோழர்கள் அனைவரும் அச்சந் தீர்ந்து, அகம்களித்து எவர்கண்களும் காண வெளிப்படையில் துணிந்து தொழத் தொடங்கினார்கள். தடாகக்

கரைகளிலும் தருநிழல்களிலும், சோலைகளிலும், மக்கமாநகரத்து வீதிகளிலுள்ள தம்தம் மாளிகை வாசல்களிலும் நின்று அல்லாஹு த.ஆலாவைத் தொழ ஆரம்பித்தபோது, இவர்களின் தொழுகையை குறைஷிக் காபிர்கள் கண்டார்கள். இதுபரியந்தம் இவர்கள் தொழுதல் இன்னபடி என்றும், அல்லது தொழுகிறார்கள் என்றும் அந்தக் காபிர்களுக்குத் தெரியவே தெரியாது. திடீரெனக் கண்ட கண்ட இடங்களில் இவர்கள் கூடிநின்று தொழுவதைக் கண்டவுடன், அக்காபிர்களுக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முதலானவர்கள் தொழும் தொழுகை, விக்கிரக ஆராதனை காரர்களாகிய அந்தக் குறைஷிகளுக்கு நூதனமான படியால், தொழும் இடங்கள் தோறும் கூட்டம் கூடி நின்று பார்க்க ஆரம்பித்தார்கள். முந்தி நீர் கொண்டு உலூ செய்யும் வகையையும், பிந்தி மனதை ஒருமையாக்கி நிலை நின்று வாயடங்க வேதவாக்கியம் ஓதுவதையும், பிறகு இருகரங்களையும் உயர்த்தி வளைத்துக் கட்டிக் கொள்ளும் தக்பீரின் தன்மையையும், இருகரங்களையும் இரண்டு முழந்தாட்களில் வைத்துக் குனிந்து நிற்கும் ருக்கூஐயும், மறுபடி நிமிர்ந்து தரையில் நெற்றி தீண்டத் தாட்களை மடித்து தரையில் பணியும் சுஜூதையும், இருப்பில் இருப்பதையும் கண்டு சிலர் அச்சம் அடைந்தார்கள். அஞ்சா நெஞ்சினராகிய அநேகர், வாய்மதமாக "இது என்ன மார்க்கம்? இது என்ன வணக்கம்? இவ்வணக்கமும் ஒரு வணக்கமா? இது மாறுபாடேயன்றி வேறல்ல. நம் மூதாட்களின் தெய்வ உபாசனைக்கு இது பொருந்துமா? அல்லது, இக்காலத்தில் உள்ள கல்விமான்கள் இந்நூதனமான அங்கசேஷ்டைகளைக் கண்டால், பரிகாசம் செய்து சிரிக்க மாட்டார்களா? நம்மேலான மார்க்கச் செய்கைக்கு இது எவ்வளவு பேதகமானது? இதைக் கண்டவர்கள், கேட்டவர்கள் எல்லாரும் நகைப்பார்களே" என்று வாய் கொண்ட மட்டும் சொல்லிச் சிரித்தார்கள்.

இன்னும் சிலர் "அறிவு சிறிதும் இல்லாத இந்த முஹம்மது என்பவன், தன் இறுமாப்பினால் சிந்தனையற்றுத் தனக்கு வேதம் இறங்கிற்று என்றும், தான்கடவுளுடைய தூதன் என்றும், நபிப்பட்டம் சூட்டப்பெற்றேன் என்றும் தான் ஒரு மகாத்மாவைப் போலப் பேச அச்சமின்றி ஆரம்பித்தானே, அப்போதே நாம் திரண்டு அதை அடக்காமல் விட்டுவிட்டபடியால் தான் இவ்வகை விபரீதம்

அனைத்தும் நிகழத் தலைப்பட்டன. இவைமாத்திரமா? இன்னும் உண்டு" என்று சொன்னார்கள். இன்னும் சிலர் துடிதுடித்து "நல்லது, போனது போகட்டும், இத்தனை தூரம் வேடிக்கையான கருமத்தை முஹம்மது நடத்துவான் என நாம் முந்தியே அறியவில்லை. இப்போது அவன் செய்யும் நூதன கருமத்தைப் பிரத்தியட்சமாய்க் கண்டும், அதற்குப் பரிகாரம் செய்யாமல் பொருத்துக்கொண்டு நாம் போவது சரியல்ல. நமது சிறந்த மார்க்கத்தை நாசம்செய்ய வந்த இவன் மார்க்கத்தை களைபிடுங்குவது போலப் பிடுங்கி எறியும் வண்ணம் அவனுடன் எதிர்த்து, மனம் கலங்கப்பேசி, உக்கிரம் கொண்டு சினந்து தண்டித்தாலன்றி இது ஒழியாது. ஆகையால், அடக்க எத்தனப் படுங்கள்" என்றார்கள். எப்படியும் இவர்கள் தொழும் தொழுகையைக் கலகம்செய்து விலக்கவேண்டும் என அங்கு நின்ற பகைவர் அனைவரும் திரண்டு முடிவு செய்துகொண்டு அடர்ந்து நெருங்கிக் கலகம் செய்தார்கள். "மனஉறுதியுடன் தாம் கொண்ட மார்க்கத்தைப் பிறழவிடாமல் நிர்வகிப்பவர்கள் சுவர்க்க பதவி அடைவார்கள்; தீயமார்க்கத்தில் சென்று நன்மையை நாசம் செய்பவர்கள், நரகம் புகுவார்கள்" என்னும் வேதவாக்கியத்தைக் கொண்டு அறிஞர்கள் சிலர் தடுத்து விலக்கியும் அவர்கள் அடங்கவில்லை.

ஸஃது றலியல்லாஹு அன்ஹு என்பவர், பகைவர்கள் செய்யும் கலகத்தையும், அவர்கள் திரண்டு நின்று கைகொட்டிச் சிரிப்பதையும் அணுத்தனையும் பாராட்டாமல், முஸ்லிம்களில் சிலருடன் ஒருதடாகக் கரையில் சென்று உளுசெய்துகொண்டு, அல்லாஹு தஆலாவைத் தொழுதுகொண்டு இருந்தார். சிலருடன் நின்று ஸஃது தொழுவதை காபிர்கள் கண்டு "இப்போது நெருங்கி ஸஃது தொழுவதை நாம் விலக்குவோம்" என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் "மதப்பேய் பிடித்து சித்த பிரம்மை கொண்ட அவர்களுக்கு நாம் என்னென்ன நியாயங்களையும், மார்க்க முறைகளையும் எடுத்துக் காட்டினாலும் நல்லறிவு உண்டாகாது" என்றார்கள். இவ்விதமாகப் பகைவர்கள், தங்கள் மனம்போன படி சொல்லிக் கொண்டு திரண்டு, தொழும் இடத்தை நெருங்கிநின்று, ஸஃதை நோக்கி "ஸஃதே நம்மூதாட்கள் செய்துவந்த தேவஆராதனையை நீர் இப்போது அறவிலக்கி, நரகம் புகுத்தும் தீயமார்க்கத்தில் நுழைந்து நூதனமான இவ்வகை வணக்கத்தில் பிரியம்

கொண்டீரே, இது என்ன விபரீதம்? நமது பரிசுத்த தேவாலயமாகிய கஃபாவைப் பிரதட்சணம்செய்து, குபல் என்னும் நமது சுவாமியைவணங்கும் மேலான மார்க்கத்தை அறமறந்தீரா? நீர் இவ்விதத் தீய கருமத்தில் பிரவேசித்துத் தீங்கு விளைத்துக் கொண்டபடியால் உமது குடும்பம் முழுதும் தீங்குக்கு உட்பட நேரிட்டதே! நம் முன்னோர்கள் கொண்டு ஒழுகின கொள்கையை விடுத்து, நீர்செய்த தபோபலன் அத்தனையையும் வீணில் இழந்து, எங்களோடு பகைத்து, இனி இவ்வூரில் வசிக்கயோக்யதையின்றி, தெய்வத் துரோகி யானீர்; ஆகையால், நீர் இனி என்ன பிரயோஜனத்தை யடையப் போகிறீர்! ஈற்றில், நரகவேதனை ஒன்றையே கையு மெய்யுமாகப் பெறுவீர். மற்ற ஒருவித நன்மையை அனுபவிக்கமாட்டீர்" எனக்கடிந்து சொன்னார்கள்.

பகைவர் தம்மைச் சூழ்ந்துகொண்டு சொல்லும் இச்சொல் அடங்கலையும் ஸஃது கேட்டு, குறுநகை செய்துகொண்டு, அவர்களை நோக்கி, "குறைஷிகளே, நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேளுங்கள்; நீங்கள் தொன்று தொட்டு வணங்கும் உங்கள் விக்கிரகங்கள் எல்லாவற்றையும் அற நொறுக்கி சமுத்திரத்தில் கொண்டு போய்போடுங்கள். அவ்விக்கிரகங்களுக்குச் செய்யும் ஆராதனையை இன்றோடே ஒழியுங்கள். எங்கள் முஹம்மது நபி வானத்தையும், பூமியையும், மற்ற வஸ்துக்களையும் சிருஷ்டித்த மெய்க் கடவுளுடைய உண்மைத்தூதர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் சொல்படி யொழுகினவர்கள் எவரானாலும் சுவர்க்கம் புகுவார்கள். அவர்கள் மார்க்கத்தைப் பொய்யான மார்க்கம் என்பவர்கள் எவர்களாயிருந்தாலும் நரகம் புகுவார்கள்" என்று முகமலர்ந்து சொன்னார்.

இச்சொல்லைக் கேட்ட காபிர்கள் அனைவரும் உக்கிரம்கொண்டு சினந்து, ஸஃதை நோக்கி வாய்கொண்டமட்டும் தூஷித்து, நெருங்கி அடர்ந்தார்கள். அப்போது ஸஃது அடங்காச்சினம் மீறிக் கண்கள் சிவந்து, அங்கே கிடந்த ஒட்டகத்தின் எலும்பைகையில் எடுத்துத் தம்மையடர்ந்த காபிர்களில் ஒருவனுடைய தலையில் ஓங்கி அடித்தார். அவன் தலை உடைந்து இரத்தம் சொரிந்தது. இரு திறத்தாரும் ஒருவரோடு ஒருவர் கைகலந்து சண்டையிட ஆரம்பமானதை, இடையில் வந்த புத்திமான்கள் சிலர் கண்டு, அவர்களை

யடுத்து இருகூட்டதாருக்கும் இதஞ்சொல்லி சினம் தணித்துக் கலகத்தை யொழித்து, அவரவர் மனைகளில் போய்ச் சேரும்படி செய்தார்கள். காபிராகிய பகையருடன் எதிர்த்து ஆரம்பத்தில் பீஸபீல் இரத்தத்தைச் சிந்துவித்தவர் ஸஃது றலியல்லாஹு அன்ஹுதான். அன்று இருதாத்தாரும் கலைந்து தம் தம் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அவர்களின் தோழர்களும் வரவரத் தமது மார்க்கத்தைப் பகிரங்கமாக்கினார்கள். இஸ்லாம் என்னும் முத்தி மார்க்கத்தையும், அதன் தொழுகையையும் காபிர்கள் பழித்த வண்ணமாயிருப்பதால், காபிர்களின் தீய மார்க்த்தையும் அவர்கள் செய்யும் விக்கிரக ஆராதனையையும் பற்றி இவர்களும் நிந்திக்கத் துணிந்தார்கள்.

ஒரு நாள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யடுத்து நின்ற முஸ்லிமானவர்களில் சிலர், அங்கு நின்ற காபிர்களை நோக்கி, "ஏ! காபிர்களே! நவரத்தினங்களை யிழைத்து, அடையாபரணதிகள் பூட்டி, பூமாலை சூட்டி, பீடத்திலிருத்தி நேரில் நின்று இரு கரங்களையும் குவித்துத் தலைமேல் வைத்து நானாவிதமாகத் தோத்திரம் செய்து கும்பிட்டு விழுந்து, நீங்கள் வணங்கும் விக்கிரகங்கள், உங்களுக்கு என்ன லாபத்தைத் தரும்? அதனால், நீங்கள் பாதகர்களாய் நரகம் புகுதுவீர்கள். இது நிஜம்" என்று சொன்னார்கள். இவ்விதம் இவர்கள் சொன்னவுடன் அக்காபிர்கள் சினம் கொண்டு, "தங்கள் மார்க்கமே மகிமையுள்ளது எனப் பிதற்றித் திரிவதுமன்றி எங்கள் சுவாமிகளையும் தூஷிக்கத் துணித்து தகுமா!" என உக்கிரம் மீறி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குத் தீங்கு செய்ய நாடி, அதிக்கிரமித்து நெருங்கினார்கள். இவர்களுக்கு இடையில் விளையும் இப்பொல்லாங்கை அபூத்தாலிபு அறிந்து உடனே வந்து, நடந்ததை விசாரித்து, கடிந்துகொள்ளக் கூடியவர்களைக் கடிந்துகொண்டும், இதமான வார்த்தை பேசவேண்டியவர்களுக்கு இதம் பேசியும் அன்று உண்டான சினத்தை யாற்றி விலக்கினர்.

"தீச்சமயமாகிய உங்கள் மார்க்கத்தை விட்டு நீங்கள் விலகி கும்பிட்டு வணங்கும் விக்கிரகம் அனைத்தையும் சிதைத்து விடுங்கள்; எங்களின் இஸ்லாம் என்னும் பரிசுத்தமான மூக்தி மார்க்கத்தை தொடருங்கள்" என முஸ்லிம்கள் அடிக்கடி சொல்லுவதும் இச்

சொல்லைக் காஞ்சிரங்காயாகம் பாவித்து அருவருத்துச் சினந்து இவர்கள் பேரில் காபிர்கள் அடர்வதும், இவ்விதம் விளையும் விவகாரத்தில் அபூத்தாலிபு குறுக்கிட்டு கலகத்தை ஒழிப்பதுமே பிரதி தினமும் மக்க மாநகரத்தில் சம்பவமாகியிருந்தது.

இவ்வித விவாதத்தில் சில நாட்கள் சென்ற பின் ஒரு நாள், குறைஷிக் காபிர்களில் தலைவர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு அபூத்தாலிபு உடைய மாளிகைக்கு வந்து, அபூத்தாலிபை நோக்கி, "குடும்பத்தில் விளையும் பிணக்குகளை யறுத்து ஒதுக்கி சமாதானமே நிலைபெறச் செய்யும் புத்தி சாதுரியமுள்ள அபூத்தாலிபே! நம் ஜாதியாருக்கு இடையில் பொல்லாங்கு விளைந்து, அநேக தாறுமாறுகள் நேரிடுவதற்கு முந்தியே அதைத் தடுக்கும்படியாக உங்களிடத்தில் அறிவிக்க வேண்டி நாங்கள் இப்போது இங்கு வந்தோம். ஹாஷிம் குடும்பத்தில் பிறந்த உங்கள் சகோதரனுடைய புத்திரனாகிய முஹம்மது என்பவன், காண்பவர் கேட்பவர் அனைவரும் இகழ்ந்து பரிகாசம் செய்யும் வண்ணம், நமது பந்து ஜனங்களுக்கு இடையிலுள்ள உறவையும், பட்சத்தையும் அறக்கெடுக்க கருதி நமது தெய்வங்களை நிந்திக்கத் தலைப்பட்டான். தந்தை, தாய், மூதாதைகள், பந்துக்கள் சதா காலம் ஒழுகி நின்று நடந்த மார்க்கத்தைத் தூஷிப்பது, தனக்குத்தான் இழிவு என்பதை அவன் ஆராய்ந்து அறியவில்லை. தமது மார்க்கமே மார்க்கமன்றி, நாம் வழிப்பட்டு நிற்கும் தொன்று தொட்டுள்ள மார்க்கம் இழிவானது என்றும், ஆலயங்களில் சென்று வலம் வந்து விக்கிரகங்களை வணங்குகிறவர்கள் அனைவரும் வழி கேடர் என்றும், நமது அறிஞர்களின் மனம் கொதிக்கப் பகிரங்கம் செய்வதைச் சிறிது நேரமாவது ஒழிப்பவனல்ல. தான் பிடித்ததையே சாதிக்கக் கங்கணம் கட்டி நிற்கிறானே யல்லாமல், அண்டை அயலிலுள்ளவர்கள் சொல்லும் சன்மார்க்கத்திற்கு எள்ளத்தனையும் செவி சாய்க்கிறானில்லை. தன் கருமத்தையே சடைப்பிடித்து நிற்கிறானன்றி, வேறு கருமத்தில் சிந்தை செலுத்துவது சிறிதும் அவனுக்கில்லை. அவன் இவ்வாறு அதிக்கிரமித்து தலை தடுமாறி நடக்கத்துணிந்து, நமக்குள் பொல்லாங்கு விளைக்க ஆரம்பித்தபடியால், நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்துப் பெரியோர்களையும் நினைத்துதான் இது பரியந்தம் மனம் பொறுத்து, எங்களுக்கு உண்டான சினத்

தைத் தணித்து வருகிறோமேயன்றி, அந்த முஹம்மதுக்கு அஞ்சியல்ல. உங்கள் முகத்தாட்சணையே பிரதானம் என எண்ணியே இதைப்பற்றித் தங்களிடம் வந்து முறையிட்டுக் கொள்கிறோம். நீங்கள் இனி அந்த முஹம்மதை அக்கிரமத்திலிருந்து விலகும்படி கண்டித்து அடக்குங்கள். நீங்கள் செய்யும் கண்டிப்பை மீறி, உங்கள் சொல்லுக்கு வழிப்படாமல், பின்னும் அவன் அவ்வண்ணமே நடப்பானானால், அதற்குபின் எங்கள் சக்தியை அறிவீர்கள்'' என்று ஒரு மொழிப்பட்டுச் சொன்னார்கள்.

தமது உறவின் முறையாராகிய குறைஷிகள் இவ்விதம் மனம் வருந்தி வந்து சொன்ன சொற்களை அபூத்தாலிபு கேட்டு, மனம் சலித்து நெடுநேரம் சிந்தித்து, அக்குறைஷிகளின் மனக்குறை தீரும்படி நன்மொழி சொல்லி மிருதுவான வார்த்தைகளால் சினத்தையாற்றி, அவர்களின் பிரியத்தின்படி கலந்து பேசினார்கள். அதனால் அக்குறைஷிகள் சினம் தணிந்து திரும்பிப்போய் விட்டார்கள்.

இத்தனை பாரதூரமான வார்த்தைகள் விளைந்தும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும், அவர்கள் தோழர்களும், காபிர்களையும் அவர்கள் வணங்கும் விக்கிரங்களையும் பற்றி கண்டித்துப் பேசுவதைக் கொஞ்சமும் நிறுத்தவில்லை. இதைவிட அநேக ஆயிரமடங்கு அதிகமான சொற்களும், பொல்லாங்குகளும், சங்கடங்களும் உண்டான போதிலும் இவைகளுக்கு அஞ்சி அல்லாஹு தஆலாவின் கட்டளையான ஏவலுக்கு மாறுசெய்ய நினைப்பார்களா!

பிறகு, காபிர்கள் கும்பல்கூடி ''நாம் சொன்ன வார்த்தைகளுக்குச் சிறிதேனும் முஹம்மது இசையவில்லை. நமது தலைவர்களிரண்டு அபூத்தாலிபைக்கொண்டு சொல்லுவித்த சன்மார்க்கத்துக்கும் வழிப்படவில்லை. இனி நாம் கண்சாடையாய் விட்டு விடுதல் நியாயமல்ல. முஹம்மது உடைய குறும்புத்தனத்தை தறித்து விட எத்தனப்படவேண்டும்'' என ஒருமித்தார்கள். ''உண்ணவும் உடுக்கவும் நிருவாகமின்றி, மிக ஏழையாய்த்திரிந்த இவன், இப்போது குவைலிது உடைய மகளாகிய கதீஜா என்னும் சீமாட்டியை விவாகம் செய்துகொண்டு, அந்தப்பெண்ணுடைய திரவியபலத்தினால் செருக்கு அடைந்தல்லவா இவ்விதமான நூதன கருமத்தில் தலையிட்டான்!'' என்றும், ''சரீரவன்மையும், ஜனசங்காத்தமும் இல்லாத இந்த முஹம்மது, தன் குடும்பமாகிய ஹாஷிம்களையார் அதிகமானபேர்கள் உண்டு; அவர்கள் அனைவரும், உற்றசமயத்தில் உதவுவார்கள் என்னும் தைரியத்தைக்கொண்டுதான் இவ்விதமான தீய ஒழுக்கத்தில் பிறவேசித்தான்'' என்றும் ''என்னகாரணத்தினால் இந்த முஹம்மதுக்கு இவ்வளவு குறும்பு உண்டாயிற்று!'' என்றும் பல பலவகையாக, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நிந்தித்தார்கள். இவையல்லாமல், இன்னும் சிலர் ''முஹம்மது என்பவன் தந்திர மொழிகளால், அறிவற்ற மௌட்டியர்கள் சிலரைதன் வசப்படுத்தி, மந்திரோபாசனை கொண்டு தனக்கு ஒருமார்க்கம் புதிதாய் உண்டாயிற்று என்றும், வேதம் இறங்கிற்று என்றும், தான் நபி என்றும் அவ்வறிவிலிகளை மயக்கி நம்புவிக்கிறானேயன்றி, வேறு தேவசகாயம் சிறிதும் அவனுக்குஇல்லை. அவன் தெய்வத் துரோகி''என்று சொன்னார்கள். ''முஹம்மதுடைய செய்கை மாய வித்தையேயன்றி வேறல்ல'' எனச் சிலர் உறுதியாகச் சொன்னார்கள். இன்னும் சில துஷ்டர்கள் குலம்கெட்டு, வழிகேடு அடைந்து, பரம்பரைத் தெய்வங்களை இழந்து, சித்தப்பிரமைகொண்ட இந்த முஹம்மதைக் கொன்றுவிட்டால், பாவம்வரும், பழிவரும்! என அஞ்சி தடவைக்குத் தடவை கூடிக்கூடிப் பலவிதம் பேசுவதில் காரியம் என்ன?'' என்று முணுமுணுத்தார்கள். அதிக பட்சத்தார் ''நமது தெய்வத்தைத் தூஷிப்பவனைக் கொல்லாமல் விடுவது என்ன ஆண்மை?'' என்று அடிக்கடி சொன்னார்கள். இவ்வெழும்புதலான வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் அனைவரும் ஒத்து ''இன்னும் ஒருதரம் அபுத்தாலிபு இடம் அறிவித்துவிட்டு, நாம் நாடியபடி செய்வதுதான் உத்தமம்'' என முடிவு செய்தார்கள்.

இவ்வாறு முடிவுசெய்துகொண்ட குறைஷித் தலைவர்கள் அனைவரும் திரண்டு அபுத்தாலிபு உடைய வீட்டுவாசலில் வந்து நின்றுகொண்டு, அவரை விளித்து ''கனம்பொருந்திய அபுத்தாலிபே! நம் குலமகனாகிய முஹம்மது செய்யும் துஷ்டத்தனத்தைப் பற்றி இது பரியந்தம் நாங்கள் மனம்பொறுத்து இருந்ததுமன்றி, முந்தியே உமக்கும் அறிவித்துவிட்டோம். இனி நாங்கள் இதைக்குறித்து உம்மிடம் அறிவிக்கவேண்டியதே யில்லை. இன்றுதொட்டு நீர் எங்களுக்கு உறவின் முறையாரிலுள்ளவரல்ல என்பதை மாத்திரம்

உமக்குத் தெரியப்படுத்த வந்தோம். நீர் அறிவீராக'' என அதிக கண்டிப்பாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

தமது குடும்பத்தாரிலுள்ள பெரியவர் அனைவரும் ஒருமித்து வாசலில் வந்து நின்று, மனம்வெறுத்துச் சொன்ன இச் சொல்லை அபுத்தாலிபு கேட்டு, அச்சொல்லின் சாரத்தையும், தமது மகனாராகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவாகத்தையும் பற்றி ஆறஅமர சீர்தூக்கிப் பார்த்து மனம் வருந்தி, தமது மனோ துக்கத்தைப் பிறரிடம் தெரிவிக்காமல் இருந்து இன்னும் சிந்தித்து ''நாம் இக்காரியத்துக்காக பந்துக்களை வெறுத்து அவர்களோடு பகைத்துக் கொள்ளுவது நியாயம் அல்ல; நமது புத்திரனுக்குத் தீங்கு உண்டாகும்படி பார்த்துக்கொண்டு இருப்பதும் முறையல்லவே, இதற்கு நாம் என்னசெய்வோம்?'' என மனம் மயங்கிச் சஞ்சலமடைந்து, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அழைத்து அருகிலிருத்தி சலிப்பான சில சொற்களைச் சொன்னார். தமது பெரிய தகப்பனாராகிய அபுத்தாலிபு மனம் சலித்து சொன்னமொழிகளை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கேட்டு, ''ஆராய்ந்து அறிந்தும் நாம் மேற்கொண்டு நடத்தும் கருமத்திற்கு இது ஒரு பிரதிபந்தமாக மாட்டாது. ஆனால், மனம் நொந்துவந்து சொன்ன இனத்தாரின் மனக்குறை தீர நம்மிடம் கண்டித்த பாவனையாகச் சொல்லும் சொல்லே'' இது என இருதயத்தி லிருத்திக்கொண்டு, அபுத்தாலிபு உடைய முகத்தை நோக்கி ''எனது பிதாவே, இவ்வூரிலிருக்கும் அறபிக்குலத்தார் அனைவரும் திரண்டுஒரு மொழிப்பட்டுச் சூரியனை யழைத்து வலது கையிலும், சந்திரனை யழைத்து இடது கையிலும் வைத்துக் கொண்டு எனக்கு அற்புதம் காட்டி, அச்சுறுத்தி, என்மேல் அடர்ந்து நெருங்கி எனக்கு அத்தியந்த கஷ்ட நஷ்டங்களை யுண்டுபண்ணி, என் கருமத்துக்கு நிஷ்டூரம் செய்து விலக்கினாலும், அருமையாக வளர்த்த தந்தையாகிய தங்களின் இருதயத்திற்கு என்னுடைய செயல் இதமல்லாததா யிருந்தாலும், இன்னும் அளவற்ற பலவித வில்லங்கங்கள் வந்து சம்பவித்தாலும், நான் அல்லாஹுத ஆலாவுடைய றஸூல் என்பதை ஸ்தாபித்து, எனக்கு உரிய குர்ஆன் என்னும் வேதத்தைப் பகிரங்கம் செய்து, இஸ்லாம் மார்க்கத்தை எங்கும் பரவவைத்து, நபிப் பட்டத்தையும் நிலைநிறுத்தவேனே யல்லாமல் என் மனதைச் சிறிதும் பேதலிக்க

விடமாட்டேன்'' என மிக உறுதியுடன் சொன்னார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்படி சொல்லும் போதே தங்கள் திவ்விய திருமேனி கண்ணீர்ப் பிரவாகத்தினால் நனைந்தது.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அழுதுரைத் தநன் னெறிமுஹம் மதுதமை யடுத்துத்
தழுவி யென்னுயிர் நீயல தில்லையெனச் சாற்றி
முழுது நின்கருத் துறும்படி முயல்வதே யன்றிப்
பழுதி லென்மனத் திதுகோனின் னயமெனப் பகர்ந்தார்.

சிதைவி லாமொழி தனையபுத் தாலிபு தெளிப்ப
மதலை யாகிய முஹம்மது மனத்திடைக் களித்துப்
புதிய னாயக னாரணம் புடைபரந் தோங்க
விதுவி னெண்கலை வளர்த்தெனத் தீன்பயிர் விளைத்தார்.

வசனம்.

இவ்விதம் தமது புத்திரராகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கண்ணீர் சிந்த அழுதுகொண்டு சொன்ன சொற்களை அபுத்தாலிபு கேட்டு மனமுருகி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தமது நெஞ்சோடு தழுவிக் கொண்டு ''எனது அருமையான மகனே! எனக்குப் பிராணன் நீயே யன்றி வேறில்லை. நீர்செய்யும் கருமம் எதுவானாலும் அது என் இருதயத்திற்கும் சம்மதம். நீர் நாடியபடி நிறைவேற்றும்'' எனக் கிருபையுடனே சொன்னார். தமது கருமத்துக்கு ஒத்தவண்ணம் முழு இருதயத்தோடு அபுத்தாலிபு சொன்னசொல்லை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கேட்டு ஆனந்தமும் சந்தோஷமும் அடைந்து, நடந்த வரலாற்றைத் தமது தோழர்களுக்கு அறிவித்து, முன்னிலும் பலமடங்கு அதிகமாகப் பகைவர்களை நிந்திக்கவும், தமது பரிசுத்தமான முக்தி மார்க்கத்தைப் பகிரங்கம் செய்யவும் ஏவினார்கள். தோழர்களும் அப்படியே மனம் களித்துத் துணிவு கொண்டு, தீன் மார்க்கத்தைப் பரப்பினார்கள்.

நாள் செல்ல தீன்பயிர் படர்வதையும், தீனோர்களின் மனத்தீரத்தையும் காபிர்கள் கண்டு, முற்குறித்த தலைவர்களும், பிறரும் மறுபடியும் ஒன்றுகூடி, கீழ்வருமாறு ஆலோசனை செய்தார்கள்.

"எவ்வளவு பராதூரமான கலகத்தை விளைத்துத் தாங்குதற்கு அரிய நிஷ்டூரங்களை யுண்டுபண்ண நாம் துணிந்தாலும், அந்தமுஹம்மது அணுவளவும் அஞ்சுகிறவனல்ல. அவன பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு எத்தனை தூரம் சன்மார்க்கங்களைப் போதித்துக் கண்டித்தாலும், அதைத் திரணமாகவும் அவன் மதிக்கவில்லை. அதை அந்த அபூத்தாலிபு நன்றாக அறிவார். புத்திரன் என்னும் முறையைப் பாராட்டி அவர் இக்கருமத்தில் கண்சாய்ப்பாயிருக்கிறாரே யன்றி, தம் உள்ளத்தில் சலிப்பு அடைந்து அவனை வெறுத்து இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும், நேரே முஹம்மதுக்குத் தீங்குவிளைப்பது அவர் மனதுக்குப் பொருந்தாது. அதற்கு நாம் ஒரு உபாயம் செய்வோம். அதாவது நமக்குள் வீரதீரத்தில் சிறந்த ஒலீது உடைய மகனாகிய உமாறத்து என்பவனை நாம் அழைத்துக் கொண்டுபோய் அபூத்தாலிபு இடத்தில் ஒப்புவித்துவிட்டு, அந்த உமாறத்துக்கு பதிலாக முஹம்மதை மாற்றிக் கொண்டு வந்துவிட்டால், அதன் பிறகு நாம் நாடிய வண்ணம் என்ன செய்யினும் முஹம்மதைச் செய்யலாம். அப்போது அபீதாலிபும் அதைக்குறித்து விசாரிக்கமாட்டார். இதுவே நல்ல உபாயம்" என இவ்வாறு பரியாலோசனை செய்து முடிவுபண்ணிக் கொண்டு, அனைவரும் திரண்டு அந்த உமாறத்து என்பவனை அழைத்துக் கொண்டு வந்து, அபீத்தாலிபு உடைய மனைவாசலில் கூடிநின்று, அபூத்தாலிபை நோக்கி, மிகமரியாதையுடன் "ஹாஷிம் குடும்பத்துத் தலைவரே! இவ்வூர்த் தலைவர்களில் ஒருவராகிய ஒலீது உடைய புத்திரனாகிய இந்த உமாறத்து, உருவிலும் அழகிலும் மிகச் சிறந்தவன்; கல்வி கேள்விகளில் மகா நிபுணத்துவ முள்ளவன்; மனவூக்கத்தில் நிகரில்லாதவன்; மதயானைச்கு சாமானமானவன்; கவுரமான குடும்பஸ்தன். இளம் பிராயமுடையவன். இவ்வகைச் சிறப்பான மைந்தனை நாங்கள் அனைவரும் சம்மதப்பட்டுத் தங்களுக்கு அர்ப்பணித்து பிள்ளையாக்கித் தருகிறோம். தாங்கள் அங்கீகரித்துக் கொள்ளவேண்டும். அன்றியும், நமது மார்க்கத்துக்கு விக்கினம் விளைத்துக் கோத்திரத்தை யிகழ்ந்து, தெய்வா தூஷணம் செய்து, குடும்பத்தில் பெரும் பகைவிளைத்து, பாவம் பழிக்குச் சிறிதும் அஞ்சாது, நூதனமார்க்கத்தை யுண்டாக்கிக் கொண்டு வழிகேடு அடைந்த தங்கள் முஹம்மதை வெறுத்து, உமாறத்துக்குப் பிரதியாக எங்கள் வசம் கொடுத்து விடவேண்டும். இக்காரியத்திற்குத்தாங்கள் இசைந்து நாங்கள் சொன்னபடி செய்தால், நமக்குள் பொல்லாங்கு சிறிதும் உண்டாகாது. இதைத் தாங்கள் மறுப்பீர்களானால், நம் குடும்பத்திற்குள் பெரும் பகைவளர்ந்து, கலகம் நாளுக்குநாள்மீறி, பழிகள் வந்துநேரிடும்" என்று வற்புறுத்திச் சொன்னார்கள்.

அறிவற்ற இந்தச்சொல் அபூத்தாலிபு உடைய செவிவழியே சென்று, மனத்துள் உறைந்து அக்கினியை எழுப்பிற்று. அதனால், சினம் மீறிக் கண்கள் சிவந்து, அவர்களைநோக்கி "குறைஷிகளே! நீங்கள் நல்ல நியாயம் சொல்ல வந்தீர்கள்! இந்த உமாறத்தை நான் என் மனையில் வைத்து, அவனுக்குத் தீங்கு ஒன்றும் உண்டாகாமல் போஷிக்கவேண்டும்! எங்கள் குலக்கொழுந்தாய், என் சகோதரன் கண்மணியாய், என் உயிருக்கு உயிராய்வந்த முஹம்மதை உங்களிடத்தில் தானமாகக் கொடுத்துவிட வேண்டும்! நீங்கள் எங்கள் முஹம்மதைக் கொண்டுபோய், உங்கள் சினம்தீர ஒவ்வொருவரும் என்னென்ன நிஷ்டூரங்களைச் செய்ய நாடினீர்களோ அவைகளைச் செய்து கொள்ளவேண்டும்! ஆகா இது நல்லவிவேகம்! இதுதான் மனுநீதி! இதுதான் எல்லா இனத்தாரும் சம்மதிக்கத் தக்க முறைமை! இதுதான் சாஸ்திரசித்தம்! இதையொத்த நியாயம் எங்கேயுண்டு? இதைக் கேட்ட பிறதேசத்தார் அனைவரும் "அறபு இராஜ்ஜியத்தில் சிறந்த மக்கா மிகப் பூர்வீக நகரம். அதில் வசிக்கும் அறபிகள் வம்மிசத்திலும், அறிவிலும், கீர்த்தியிலும், எல்லா மேன்பாட்டிலும் விசேஷித்தவர்கள். அவர்கள் செய்த ஒழுங்கைப் பாருங்கள்." என ஒருவரோடு ஒருவர் வியந்து பேசுவார்கள்! உங்களைப் போன்ற மகாத்துமாக்கள் இவ்வுலகில் யார் உண்டு? ஆனால், நீங்கள் இப்போது சொல்லும் வார்த்தைக்கு நான் என்ன பிரதிமொழி சொல்லப்போகிறேன்? ஆயினும் ஒன்று சொல்லுகிறேன். "நீங்கள் கொண்ட கருத்திற்கு என்மனம் இசையாது என்பதுதான்" அது என்று புத்தி நுட்பமுள்ள அபீத்தாலிபு சொன்னார்.

விவாகம் செய்து, ஐந்து ஆறுபிள்ளைகளைப் பெற்று, நாற்பத்து நான்கு பிராயமடைந்த முழு ஆண்பிள்ளையை, சிறுபிள்ளைகளுக்கு ஒப்பாக்கி மாற்றிக் கொள்ளக் கருதின அந்தக் காபிர்களின் மௌட்டியும் எவ்வளவு பாராதூரமானது? அறிவில் சிறந்த அபூத்தாலிபு இக்கருத்திற்கு இணங்குவார் என நம்பின அவர்களின்

நம்பிக்கை எவ்வளவு ஆபாசமானது! பொறுமை கொண்டு அறிவு கெட்ட அக்காபிர்கள் அனைவரும் அபூத்தாலிபு சொன்ன சொல்லைக் கேட்டு மனம் தடுமாறி, "இதற்கு இனி நாம் என்னசெய்வோம்" என ஏங்கி முகங்கள் வெளுத்து, மனோதுக்கத்துடன் திரும்பிப் போய் விட்டார்கள்.

போன பகைவர்கள் சும்மா இருந்து விடவில்லை. அன்று தொட்டு தங்கள் சொல்வழி யொழுகும் கோத்திரத்தார் அனைவரையும் ஒருங்கு திரட்ட ஆரம்பித்தார்கள். அதனால் ஜனத் திரள் அதிகமாயிற்று. கண்டவர் கேட்டவர் அனைவரும் சினந்து, சபதம் கூறி "முஹம்மது உடைய திராணியை இனி அறிவோம்" எனப் பலவாறு பேசிக் கலகம் செய்யத் துணிந்தார்கள்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

வடித்த மெய்ம்மறை நந்நபி வாக்கினிற்
படித்த சொல்லைப் பகர்ந்திடும் பேர்களைப்
பிடித்த டித்துப் பெலன்குறைத் தில்லமு
மிடித்து டைத்திடை யூறு படுத்தினர்.

வசனம்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குக் கீழ்படிந்து ஈமான்கொண்ட முஸ்லிம்களில் சிலரைப் பிடித்து அதிக்கிரமித்து அடித்துத் திகில் உண்டாகத்தக்க நிஷ்டூரங்கள் செய்து, அவர்கள் வசிக்கும் இல்லங்களையும் இடித்து நாசம் செய்தார்கள். முஸ்லிம்களுக்கு இடையூறு விளைத்து வில்லங்கம் செய்வது நாளுக்குநாள் அதிகரித்தது. பகைவர்கள் செய்யும் இவ் விதக்கொடிய நிஷ்டூரங்களை அபூத்தாலிபு பலவகை செய்து தடுத்தும் சிறிதும் அடங்காமையால், அவர் சினங்கொண்டு ஆங்காரத்துடன் "என் புத்திரனைப் பகைத்துத் தீங்குவிளைக்கும் இப்பகைவர் அனைவருக்கும், இனி ஈடுகொடுப்பவன் நானே. அவர்களால் இயன்ற அளவுக்கு என்னுடன் எதிர்க்கட்டும். அனைவரையும் நாசம் செய்கிறேன்" என்று மகாவீரத்துடன் பகிரங்கத்தில் சொல்லிவிட்டு, தாமும் ஜனங்களைத் திரட்டத்தொடங்கி, தமது கோத்திரப் பிதாக்களிலுள்ள சிறந்தவராகிய அப்துல்முனாபு உடைய மக்களில்

ஹாஷிம், அப்துல்முத்தலிபு, அப்துஷ்ஷம்ஸ், நௌபல் என்னும் இந்நான்கு குலத்தாரையும் தமது மாளிகைக்கு அழைத்து, நாள் தோறும் நிகழும் வர்த்தமானங்கள் அனைத்தையும் விவரமாகச் சொல்லிக்காட்டி "என் மகன் முஹம்மதுக்கு விக்கினம் உண்டு பண்ணக்கருதும் எவரையும் இனிக் கொல்லுவதற்கே நான்நிச்சயம் செய்திருக்கிறேன்" எனத் தைரியத்துடன் சொன்னார். இச் சொல்லைக் கேட்டவுடன் முத்தலிபு, ஹாஷிம் என்னும் இரண்டு குடும்பமும் இவர் சொல்லுக்கு வழிப்பட்டன. அப்துஷ்ஷம்ஸ் நௌபல் என்னும் மற்ற இரண்டு குடும்பமும் உடன் படாமல் மறுத்து விட்டு எழுந்து பகைவரோடு போய்ச் சேர்ந்து கொண்டனர். தமது சகோதரர்களில் ஒருவனாகிய அபூலஹப் என்பவனும் பகைவர்களுடன் சென்று கூடிக் கொண்டான். உதிர சம்பந்தமுள்ள கனிஷ்டனாகிய அந்த அபூலஹபும் பகைவனானதைப் பற்றி அபூத்தாலிபு நகைத்துக்கொண்டு, ஆண் சிங்கம் போன்று, "இனி வருவது வரட்டும்" எனத்துணிந்தார்.

பகைமை பாராட்டி, நிஷ்டூரங்கள் விளைக்கத் துணிந்த கலகக் காரர்களாகிய காபிர்கள் அனைவரும் ஒன்று கூடி, வீரத்தில் சிறந்தவன் எனப் பிரஸ்தாபம் பெற்ற ஒலீது என்பவனிடத்தில் சென்று அவனை நோக்கி, "சமீபகாலத்தில் வரப்போகிற இந்த ஹஜ்ஜுப் பெருநாள் சுப தினத்தில், முஹம்மதுடைய மகத்து வத்தைக் கெடுக்கும் வகை யொன்று உண்டு. அதாவது: "ஹஜ்ஜுப் பெருநாளில், இராஜ்ஜியத்தார் அனைவரும் இவ்வூரில் வந்து கூடுவார்கள். அப்போது நாம் கஃபாவில் சென்று கூட்ட மிட்டு, முஹம்மதைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்து, கபடன், சூனி யக்காரன், மாயா வித்தைக்காரன், பேயன், பித்தன் என்னும் இந்த நாமங்களில் ஒரு நாமத்தை முஹம்மதுக்கு இட்டு அழைப்போம். அது பிரஸ்தாப மானவுடன் இராஜ்ஜியம் எங்கும் அந்த நூதன நாமமே அவனுக்கு வழங்கும்" என்றார்கள். சூரியனுடைய வெயிலை உலகம் எங்கும் பரவிப் பிரகாசிக்க விடாமல், தன் கையின் ஒரு விரலால் மறைத்துக் கொள்ளத் துணிந்த அறிவீனனுக்கு நிகராயி யிருந்தது அக்காபிர்கள் சொல். இச்சொல்லை ஒலீது கேட்டு, அவர்களை நோக்கி "நீங்கள் சொல்லும் நாமங்களில் ஒன்றாவது அவனுக்கு இசைந்தது அல்ல. குலத்தைப் பிரித்து பகை விளைக்க வந்த "வஞ்சனைக்காரன்" என நாமம் சூட்டுவதே அந்த முஹம்

மதுக்குப் பொருந்தும்'' என்றான். இச்சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அக்காபிர்கள் அனைவரும் இவ்வருடத்து ஹஜ்ஜுப் பெருநாளில் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மேற்கண்ட நாமத்தையிட ஒருமித்தார்கள்.

பிறகு, சில நாளில் ஹஜ்ஜுப் பெருநாள் அடுத்தது. அறபு இராஜ்ஜியத்தார் அநேகர் மக்கமா நகரத்தில் வந்து கூடினார்கள். நானா நகரத்து ஜனங்களும் வந்து கூடிப் பெரு நாள் கொண்டாடும் அன்று, குறைஷிகள் நாலுபேர் பத்துப் பேராகக்கூடி, ஹஜ்ஜுக்கு வந்த அயல் நகரவாசிகள் இருக்கும் விடுதிகளில் சென்று, அவர்களை வலிய இழுத்து வைத்து "இவ்வூரில் முஹம்மது என்னும் வஞ்சனைக்காரன் ஒருவனிருக்கிறான். அவன் புத்தியைக் கேட்ட பலர் தங்கள் பரிவாரங்களுடன் இவ்வூரை இழந்து, அந்நிய நகரங்களுக்குப் போகிறார்கள்'' என்றும், "இங்கே முஹம்மது என்னும் வஞ்சனைக்காரன் ஒருவனிருக்கிறான். அவன் தாய்க்கும் பிள்ளைக்கும், தந்தைக்கும் மகனுக்கும், புருஷனுக்கும் மனைவிக்கும் இடையில் உபாயமாகப் பகை விளைத்து, ஒருவரை விட்டு ஒருவரைப் பிரித்து விடும் தந்திரம் கற்ற மாயக்காரன்'' என்றும், "இந்த மக்கமா நகரத்தில் வஞ்சனைக்காரன் ஒருவனிருக்கிறான். அவன் இயற்பெயர் முஹம்மது, அவன் கடவுள் வேறே ஒருவனிருக்கிறான் என்றும், தான் அவனுடைய தூதன் என்றும், தனக்கு வேதம் ஒன்று இறங்கிற்று என்றும், விக்கிரகங்கள் அனைத்தும் பைசாசங்கள், என்றும் அவற்றை வணங்குதல் பெரும்பாதகம் என்றும் பலவாறு சொல்லுகிறான். இவ்விதம் சொல்லி அநேகரை மயக்கித் தன் அடிக்கீழ் ஆக்கிக் கொண்டான். நீங்கள் அவனுடைய மாயவலையில் சிக்கிக் கொண்டு, தொன்று தொட்டுள்ள உங்கள் மூதாட்டுகள் ஒழுகி நடந்த மார்க்கத்தை நெகிழ விட்டு வழிகேடு அடையாமல், எச்சரிக்கையா யிருங்கள்'' என்றும் தம் தம் சிந்தையில் உதித்த வண்ணமெல்லாம் சொல்லி எச்சரித்தார்கள்.

இது இவ்விதம் நிகழும் போது, அல்லாஹு தஆலா இடமிருந்து "கீர்த்திப் பிரதாபமுள்ள முஹம்மது நபியை வஞ்சனைக்காரன் என நாமமிட்டுப் பிரஸ்தாபம் செய்த ஒலீது என்பவன் சந்தான பரம்பரையற்று, திரவியம் அழிந்து, கொடிய பாதாள நரகத்துக்குப் பாத்திரன் ஆனான்'' என்னும் தாற்பரியமமைந்த வேத வாக்கியத்தை ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் கொண்டு வந்து நபி

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்துச் சென்றார். இவ்வேத வாக்கியத்தை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பகிரங்கம் பண்ணினார்கள்.

பரிசுத்தராகிய நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஒப்பற்ற திருநாமத்தை மாற்றி, வஞ்சனைக்காரன் எனப் புதுபெயரிட்டு, பகைவர் அனைவரும் திரண்டு கலகம் செய்ததால், மக்கமா நகரம் இரண்டுபட்டிருக்குந் தன்மை இராஜ்ஜியம் எங்கும் பிரஸ்தாபமாயிற்று மதீனா என்னும் நகரத்தில் உள்ளவர்களும் இக்கலகத்தை யறிந்து, மனம் நொந்து "குடும்பத்துக்குள்ளே இவ்வித வேறுபாடும் பொல்லாங்கு உண்டாவது நியாயமல்லவே'' எனத் துக்கமடைந்தார்கள். மக்கமாநகர வாசிகளுக்கும், மதீனமா நகரவாசிகளுக்கும் இடையில், இரத்தபேதம் ஒன்று மாத்திரமன்றி, மற்ற விஷயம் எல்லாவற்றிலும் ஒருமையான ஐக்கியம் உண்டு. ஆனதால், தம் உயிர்போன்ற மக்கத்தாருக்குள் இவ்விதப் பகை விளைந்திருப்பது அவர்களுக்குத் துயரமாயிருந்தது. ஆனது பற்றி, மதீனமா நகரத்தில் குடும்பத்திலும், கல்வியிலும், கீர்த்தியிலும், சம்பத்திலும் மிகப் பிரபலமான அபூகைஸ் என்னும் ஒரு தலைவர், மக்கமா நகரத்தாருக்கு ஒரு நிருபம் எழுதினார். அந்த நிருபம் கவிதைகளால் நிரம்பி யிருந்தது.

சரித்திர புராணம்

எழுசீர்ச் சந்த விருத்தம்.

ஓலை புத்தர முஹம்மதைக் கொடு
முறைத்த நிந்தைபழு தென்ன வுஞ்
சீல மற்றபகை யொருவ ருக்கொருவர்
செய்து கோடல் பழு தென்னவு
மேலு நல்லவழி திருத்தி னோர்கள்பத
மீது சார்தனல னென் னவுஞ்
சால மிக்கவி தைத்தி றத்தொடு
தணப்பி லாதுற வனுப் பினான்.

வசனம்.

அந்த கவிதைகளின் தாத்பரியம் :— "முஹம்மதை தூஷிப்பது மகாபாதகம். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் ஐக்கியமின்றி வேறு

...ட்டுப் பொல்லாங்கு செய்யத் தலைப்பட்டது முறைமையல்ல; நல்ல வழியைத் தெரிவிக்கும் சக்தி பெற்று ஜனங்களைத் திருத்தும் தன்மையுள்ளவர்களுக்குக் கீழ்படிதல் உத்தமம்; இதற்கு மாறு செய்வது அநியாயம்" என்பவையே.

இவ்விதத் தாற்பரியம் அமைந்த கவிதைகளால் நிரம்பிய நிருபத்தை, அந்த அபூலைஸ் எழுதி, மக்கத்தாருக்கு அனுப்பினார். அந்த நிருபத்தை அவர்கள் வாங்கி வாசித்தும் அதன் கருத்தைத் திரணமாகவும் சட்டை பண்ணவில்லை. அறிவு சிறிது மின்றி, பஞ்சமா பாதகங்களையும் ஒருங்கே செய்யத் துணிந்த மூடர்களுக்கு, எவ்வித நல்லறிவுகளை போதிக்கத் தலைப்பட்டாலும் அவை முற்றும் கல்மேல் அறைந்த ஆணிக்கு ஒப்பாய் சிதைவு பெறுமேயன்றி சிறிதும் பலன் பெறமாட்டாது என்பது உண்மை. தாங்கள் பிடித்த பிடியையே சாதிக்கவேண்டும் என்னும் மூர்க்கம் கொண்ட அந்தப் பகைவர்களுக்கு நல்லோர் கூறும் சன்மார்க்க நீதிகள் எள்ளத்தனையும் மனதில் படவில்லை. மேலுமேலும் அக்கிரமித்து நடக்கத் துணிந்தார்கள். ஈமான்கொண்ட முஸ்லிம்களுக்கு நிஷ்டூரம் செய்வதில் அவர்கள் கொஞ்சமும் பின்னடையவில்லை. இவ்வாறு காபிர்கள் திரண்டு பகை சாதித்து, அநேக கஷ்ட நஷ்டங்களை யுண்டாக்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிர்ப்பந்தங்களை அடிக்கடி விளைத்தும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும், அவர்கள் தோழர்களும், தைரிய சித்தத்துடன் சலிப்பின்றித் தங்களுக்கு உரிய முக்தி மார்க்கத்தை விளக்கினார்கள். விளையும் விக்கினங்கள் அனைத்தையும் சகித்து, கொண்ட கொள்கையை நெகிழவிடாமல் நாளுக்கு நாள் அதிகரிக்கச் செய்யும் துணிவைப் பகைவர்கள் சிந்தித்து "முஹம்மதையும் அவன் மாயத்தில் சிக்குண்ட மற்றவர்களையும், கொலை செய்வதே நியாயம் அன்றி வேறில்லை" என முடிவு செய்தார்கள்.

ஒருநாள் நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கஃபாவில் சென்று, தங்களுக்கு இறங்கிய வேதவாக்கியம் கொண்டு அல்லாஹு தஆலாவை ஸ்தோத்திரம் செய்து தொழுது கொண்டு இருந்தார்கள். அப்போது, காபிர்களிலுள்ள ஒரு துஷ்டன் அங்குவந்து, நபிநாயகம் தொழுது கொண்டிருப்பதைக் கண்டு, தனது அங்கவஸ்திரத்தை கையில் எடுத்து முறுக்கி, நபி

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கழுத்திலிட்டு இறுக்கச் சுருக்கினான். அதனால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வாய்திறந்து யாதொன்றும் பேசாமலும், கண் விழித்து அவனைப் பார்க்காமலும், இருந்தபடியே இருந்தார்கள். அக்கொடியவன் செய்த இத்தீங்கை அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு கண்டு, மனம் புழுங்கி விரைந்துவந்து, கழுத்தில் சுருக்கிட்டு இருந்த துணியை யவிழ்த்து எறிந்து விட்டு, அந்தப் பாதகப் பயலையும், அங்கு நின்ற மற்ற காபிர்களையும் நோக்கி உக்கிரமான சிலவார்த்தைகளைச் சொல்லி துரத்தி விட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுது தீரும் வரை உடனிருந்து, பிற்பாடு நபிநாயகமவர்களை யழைத்துக் கொண்டு வந்து மாளிகைக்கு அனுப்பி, தாமும் தமது மனைக்குச் சென்றார்கள்.

அன்று தீர்ந்து சில நாட்கள் சென்ற பிறகு ஒருநாள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கஃபாவில் சென்று, முன்போல் அல்லாஹு தஆலாவைத் தொழுது கொண்டு இருந்தார்கள். அப்போது பகையர்களுக்குத் தலைவனாகிய அபூஜஹல் என்பவனும், அவனை அடுத்திருக்கும் ஷைபா, வலீது, உக்பா, உத்துபா, உமையா, உமறு என்னும் தீய துரோகிகளும் அங்கு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தொழுவதைக் கண்டு, இத்தொழுகைக்கு விக்கினம் உண்டுபண்ண வேண்டும் என எண்ணி, ஒரு அஞ்சாநெஞ்சினனாகிய கொடியவனை அழைத்து, "நீ இன்னபடி செய்" என ஏவினார்கள். அப்பாதகன் விரைவாய் ஊருக்குள் சென்று, அறுத்த ஒட்டகத்தின் கழிக்கப்பட்ட இரத்தம், குடல், எலும்பு, சிதைந்த தசைகள் அனைத்தையும் வாரிக்கொண்டு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறந்த பிடரியின் மேல் போட்டான். நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த நிஷ்டூரத்தைச் சிறிதும் கவனிக்காமல் ஐம்புலன்களையும் ஒடுக்கி, நெற்றியை தரையில் வைத்து ஸுஜூது செய்தார்கள். அதை மேற்படி காபிர்கள் பார்த்து நகைத்துப் பரிகாசம் செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தம் பிடரியிலுள்ள அந்தச் சுமையுடன் செய்த ஸுஜூது நிலைபிரியாமலிருப்பதையும், பகையர்கள் சூழ்ந்து நின்று பார்த்துப் பரிகாசம் செய்வதையும், தயாளசிந்

தையுள்ள ஒரு வாலிபர் கண்டு மனம் கொதித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செல்வப் புதல்வியாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹா இடம் விரைந்துபோய், நடந்த காரியத்தைப் பரிதாபத்துடன் சொன்னார். இதைக்கேட்ட மகளார் உள்ளம் புழுங்கி எழுந்து கஃபாவில் வந்து, தமது தகப்பனாரின் பிடரியில் இருக்கும் சுமையை எடுத்து எறிந்து சுத்தமாக்கி விட்டு பகையர்களை நோக்கி நிந்தித்துப் பேசினார்கள். அதற்கு அவர்கள் ஒன்றும் சொல்லாமல் மௌனமா யிருந்து விட்டார்கள். பிறகு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா தம்வீட்டுக்குச் சென்றார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுது தீர்ந்து, இரண்டு கைகளையும் ஏந்தி "யா அல்லாஹ், உனது ஒப்பற்ற முனிவைக் கொண்டு இந்தக் காபிர்களை நரகத்தில் செலுத்தி, வேதனை செய்" எனப் பகைவரைச் சுட்டி பத்துஆ (சாபம்) செய்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு இல்லம் புகுந்தார்கள்.

இவ்வாறு காபிர்கள் அனைவரும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் துன்பம் உண்டாக்கத் துணிந்து, பலவித அவதூறுகள் பேசி, அறவெறுத்து, பகைசாதிக்கும் காலத்தில், ஹாஷிமுடைய சந்ததியில் ஒருவனாகிய ஹக்கம் என்பவன், தனக்குத் தானே வலிய ஒரு துன்பத்தை விளைத்துக் கொள்ள எத்தனைப்பட்டு, தன் இரண்டு கண்களிலுமுள்ள கருப்புகள் ஒரு புறமாய் ஒதுங்கும் படியும்; இரண்டு உதடுகளும் ஒரே பக்கத்துக் கடைவாயில் செருகிப் பிதுங்கும் படியும் திருகி, முகத்தைச் சுளித்து வளைத்துக் கொண்டு, நாசித் துவாரங்கள் இரண்டும் பருக்கச் சிலிர்த்துக் கழுத்திலுள்ள நரம்புகள் அனைத்தும் விறைத்து மேல் எழும்பிப் புடைக்கச் சுழித்துக் கொண்டு, வாயைப் பிளந்து நாறுனியைக் கீழ் மேலாகப் புரட்டிக் கொண்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கிக் கோரணி காட்டினான். இவ்விதம் இப்பாதகன் காட்டின கோரணி அன்றோடு ஒழிய வில்லை. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காணும் தோறும் வலித்துக் கொண்டு காட்டினான்.

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவன் கோரணியைப் பாராமல் விலகி நடந்தாலும், அவன் குறுக்கிட்டுச் சென்று, எதிரே நின்று வலித்தான். இது அவனுக்கு நித்திய

வழக்கமா யிருந்தது. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ட மாத்திரத்தில் மற்ற பார்க்கை விட்டு விட்டு, இக்கோரணி காட்டுவதே அவனுக்கு தொழிலாயிற்று, இவன் இவ்விதம் வலித்துச் சுழித்துச் கோரணி காட்டும் போது, வழியில் செல்லும் புத்திமான்கள் கண்டு அவனை நோக்கி, "அடா! உனக்கு ஏன் இந்த இழுப்பு? விட்டு ஒழி. சும்மா போ" என்று புத்தி கூறி விலக்குவார்கள். அவ்விலக்குதலுக்கு அவன் சிறிதும் உடன் படுகிறது இல்லை. யார் யார் என்னென்ன சொல்லித் தடுத்தும் தான் கொண்ட கோரணியை அவன் விடவேயில்லை. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ட மாத்திரத்தில் ஆவேசம் கொண்டு கோரணி செய்வது அவனுக்கு பிரஷ்டையான படியால், ஒரு நாள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரும் போது எதிர் சென்று நின்று கொண்டு, மேற்கண்ட வாறு வலித்துக் கோரணி பண்ணினான்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கதிர்விரிக் தொழுகு மெய்யெழி னபியைக்
காண்டொறுங் காண்டொறும் வலித்திட்
டெதிரெதிர் வருவன் விலக்குதற் கமையா
னிங்ஙனஞ் சிலபக றறிந்தான்
புதியவன் றூத ரிவன்றனை நோக்கிப்
பொருவிலாச் செவ்விதழ் திறந்து
பதிபெற வலித்திட் டிதனிலெண் மடங்காய்ப்
பழிப்பொடுந் திரிகுவை யென்றார்.

வசனம்.

அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவனை நோக்கி, மதுரமான திருவாய் திறந்து "துஷ்டனே, இப்போது வலிக்கும் இந்த வலிப்பைவிட எட்டுப் பங்கு அதிகமாக வலித்து, எல்லாரும் பழிக்கும்படி நீ திரியக் கடவாய்" என்று சபித்தார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இட்ட சாபம் அவனுக்கு உடனே பலித்தது. மேற்கண்ட கோரணி வகை ஒவ்வொன்றும் பத்து மடங்கு மேற்பட்டு, மீட்டுக் கொள்ள வாராமல் அப்படியே நின்று விட்டது. அவன் முகத்தின் கோர

ரூபத்தைக் கண்டவர்கள் திகில் பிடித்து மனம் கலங்க நேரிட்டது. அவனுடைய பந்து ஜனங்கள் கண்டு, "இதென்ன விபரீதம்?" என்று மனம் திகைத்தார்கள். இவ்வலிப்பு அவனுக்கு என்றும் உள்ளதாய் நியமிக்கப்பட்ட படியால், அவன் போகும் இடம் தோறும் வலிக்க ஆரம்பித்தான். தன்னைப் பெற்று வளர்த்த தந்தை தாய் இருவர் இடத்திலும், தனக்கு வாழ்க்கைப்பட்ட மனையாட்டி யிடத்திலும் போகுந் தோறும் அவன் இழுத்து இழுத்து வலித்தான்.

இவன் இவ்விதம் இழுத்து வலிப்பதைப் பார்த்த தாய், தந்தை, மனைவி அனைவரும், மனம் வருந்திப் பரிதபித்தார்கள். எவ்விதம் பரிதாபம் அடைந்து திகைத்தாலும், வலிப்பு அணுவத்தனையும் தணியவில்லை. வீதியில் செல்லும்போது எதிர்வரும் பெரிய மனிதர்களைக் கண்டாலும், அவர்கள் முகத்தை நோக்கி நின்றும் வலிப்பதில் தவறாமல் கோரணி காட்டித் திரிந்தான். அன்றியும், அவன் இவ்வித விகார ரூபத்துடன் தெருவழியே வரும்போது எதிர்ப்படும் சிறு பிள்ளைகளும், புது மனிதர்களும் திகில் பிடித்துக் கலங்கி வெருண்டு ஓடுவார்கள். முடிவில் கண்டவர்கள் அனைவரும் இவனை நிந்திக்க ஆரம்பித்தார்கள். தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் போதகராகிய ஆசிரியரைக் கண்டாலும் வலிப்பான். தேவாலயங்களில் சென்று, அங்கிருக்கும் விக்கிரகங்களுக்கு முன் நின்றும் வலிப்பான். இவ்வாறாக அந்தப் பாதகன் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு தீங்கு விளைக்கும் துஷ்டர்கள் இவ்விதக் கோரரூபம் அடைந்து, மனிதர் நிந்திக்கத் திரிவார்கள் என்பதை உலகத்தாருக்குத் திருஷ்டாந்தப் படுத்தித் திரிந்தான். இவன் இவ்வகையாக விழிகள் பிதுங்க, உதடுகள் கடைவாயில் ஒதுங்க, வாய் பிளந்து நா புரள, முகத்தைச் சுளித்துத் திருகிக் கொண்டு, எவர் முன்னும் நின்று வலித்துத் திரிவதைக் கண்ட பந்து ஜனங்கள் வியாகுல மடைந்து, தெய்வங்களுக்குப் பிரார்த்திக்கும் பிரார்த்தனைகளாலும், மந்திரப் பிரயோகத்தினாலும் ஔஷதப் பிரயோகத்தினாலும் கூடிய பாடுபட்டு நிவர்த்தி செய்தும் சித்தி பெறவில்லை. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இட்ட சாபத்திற்கு நிவர்த்தி எதனால் உண்டாம்? காரியம் வாய்க்காமையால் அனைவரும் மனம் சலித்துக் கை விட்டார்கள். அந்தப் பாதகன் பிரதி தினமும் இக்கோரணித் தொழிலைக் காட்டிக்

காட்டி உடல் வற்றி, வரவர உருவம் மாறி, நாளுக்கு நாள் தேய்ந்து போனான்.

நபிகட் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நிந்திக்கும் துஷ்டர்கள் மாறாச் சாபத்தில் கிடந்து, தடுமாறி உழல்வார்கள் என்பதை மேற்படி பாதகன் பிரத்தியட்சமாய் அனைவருக்கும் அத்தாட்சி செய்தும், ஒருநாள் மற்றொரு துஷ்டன், நபி நாயகமவர்கள் காண இடும்பு கருதி, தனது இடது கை கொண்டு உணவு புசித்தான். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அக்குறும்புக்காரனை நோக்கி "ஏ, பேதாய்! நீ புசிக்கும் பதார்த்தங்களை வலது கை கொண்டு புசி" என்றார்கள். அதற்கு அவன் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "எனக்கு இடது கை மாத்திரம் வழங்குமன்றி, வலது கை வழங்க மாட்டாது" என அவர்கள் சொல்லை மறுத்து இறுமாப்புடன் சொன்னான். இதைக் கேட்ட நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அவனை நோக்கி "உன் சொல்லின் பிரகாரமே எந்தக் காலமும் உனக்கு வலது கை வழங்காமல் இருக்கட்டும்" என்று சாபம் இட்டார்கள். அது உடனே பலித்தது. அதனால் அவனுடைய வலக்கரம் நீட்டவும் மடக்கவும் வராமல், உணர்ச்சி யின்றி முடங்கி, காணும் ஆடவர்கள் பெண்கள் அனைவரும் நகைத்து அருவருக்க இழிவு கொண்டு நாசம் அடைந்தான்.

இவ்விருவர் மாத்திரமல்ல, இன்னும் சில பரம துஷ்டர்கள் நபி நாயக மவர்களை அவமதித்து, மரியாதை யின்றி நிந்தித்து, அங்கசேஷ்டை செய்து பரிகாசம் பண்ணின படியால், அவ்வப் பரிகாசக் கோரணிகள் அவர்களுக்கே பலித்து, கண்டவர் நகைக்கத் திரிந்தார்கள்.

பின்னர், நபிகட் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு அல்லாஹு தஆலா இடத்தி லிருந்து "உமது குடும்பத்தார் அனைவரையும் இஸ்லாம் மார்க்கத்தில் அழையும்" என்னும் தாற்பரியம் பொருந்திய வேத வாக்கியம் இறங்கிற்று. வானவர் தலைவராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் இந்த வேத வாக்கியத்தைக் கொண்டு வந்து அறிவித்துச் சென்ற பிறகு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் எழுந்து, சபா என்னும் குன்றில்

ஏறி, அதன்சிகரத்தில் நின்றுகொண்டு, அமுதம் அமைந்த திருவாய் திறந்து, மதுரமான தொனியுடன் "ஜனங்களே ஒரு ஆச்சரியகரமான சமாசாரம் உண்டு; அனைவரும் இங்கே வாருங்கள்" எனத் தங்கள் இனத்தாரை நோக்கி அழைத்தார்கள்.

இவர்கள் அழைத்த தொனியைக் கேட்ட குடும்பத்தார் அனைவரும் திரண்டு, ஒருமித்து "அது என்ன ஆச்சரியம்! நாம் அங்கே போய் அறிவோம்!" எனப் புறப்பட்டு, சபாமலையில் வந்து, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமுகத்தில் கூடினார்கள் பிறகு அனைவரும் நபிநாயகமவர்களை நோக்கி "முஹம்மதே! நீர் எங்களை அழைத்த காரணம் என்ன?" என்று கேட்டார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தங்களுக்கு இறங்கின வஹியின் படி அவர்களை நோக்கி "குறைஷிகளே, இப்போது நான் உங்களை நோக்கி அந்நிய இராஜ்ஜியத்தார் சிலர் திரண்டு உங்களுக்கு சத்துருக்களாய் வந்து, கோட்டையை வளைத்து நின்றார்கள். அவர்கள் உங்களை யடர்ந்து தாக்கி, உங்கள் சொத்துக்களைக் கொள்ளை யிடுவார்கள் என்று சொன்னால், இச்சொல்லை நீங்கள் நம்புவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்குக் குறைஷிகள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நோக்கி "முஹம்மதே! நீர் சத்தியவாசகர்; ஆனபடியால், உமது சொல்லை நாங்கள் நம்புவோம்" என்று பிரதி மொழிசொன்னார்கள். இச்சொல்லை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டு மனம் மகிழ்ந்து, அவர்களை நோக்கி "குறைஷிகளே, எனது இஸ்லாம் மார்க்கத்தை விசுவாசித்து ஈமான் கொள்ளாமல் மறுக்கும் அனைவரையும், நரக வேதனை சூழ்ந்து நித்திய காலமும் பீடிக்கும்" என்றார்கள். இவ்வார்த்தையைக் கேட்டு குறைஷிகள் ஒன்றும் சொல்லாமல் மௌனமா யிருந்தார்கள்.

அப்போது, நபிகட் திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பெரிய தந்தைகளில் ஒருவனாகிய அபூலஹபு என்பவன் இச்சொல்லைக் கேட்டு, சினம் கொண்டு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "நீ நாசமடைவாய்! இதற்காகத்தானா எங்களை இத்தனை தூரம் அழைத்தாய்?" என்று கடிந்து சொல்லிக் கொண்டு, தன் இரு கைகளிலும் புழுதியை வாரி நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

அவர்கள் பேரில் இறைத்தான். உடனே அல்லாஹு தஆலா இடத்திலிருந்து "அபூலஹபு உடைய இரண்டு கைகளும் நாசம் அடையக் கடவது; அவன் முழுதும் நாசம் அடையக் கடவன்" என்னும் அர்த்தம் தருகிற தப்பத்யதா என்னும் ஸூறத்தின் முதலாம் வாக்கியம் (ஆயத்து) நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு இறங்கிற்று. அந்த வேத வாக்கியத்தை நபிகட் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அனைவருக்கும் ஓதிக்காட்டினார்கள். அப்போது, அபூலஹபு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி, "எனக்குக் கேடுவரும் காலத்தில் எனது திரண்ட ஆஸ்தியைக் கொண்டும், புத்திரர்களைக் கொண்டும் அக்கேட்டை நிவர்த்தி செய்து கொள்வேன்" என்று சொன்னான். இவன் இவ்விதம் சொன்னவுடனே "அல்லாஹு தஆலாவுடைய லஃனத்தை, அபூலஹபு உடைய திரவியம் விலக்காது, அவன் மக்களும் அதைத் தடுக்க சக்தி பெற மாட்டார்கள். சுடர் வீசிக் கொழுந்து விட்டு எரியும் நரகத்து அக்கினியில் அபூலஹபு விழுவான். விறகு சுமக்கும் அவன் மனைவியும் நரகத்தில் விழுவாள். அவள் கழுத்தில் ஈத்தநார் கயிறு உண்டு" என்னும் அர்த்தம் அமைந்த மேற்படி சூறத்தின் மற்ற வாக்கியங்களும் அல்லாஹு தஆலா இடமிருந்து நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறங்கின.

குறிப்பு:—அபூலஹபு உடைய மனைவியாகிய உம்முஜமீல் என்பவள், அபூசுபியானுடைய சகோதரி. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு பக்கத்து வீட்டுக்காரி. அவள் பிரதிதினமும் வனத்தில் சென்று முட்களைப் பொறுக்கி கொண்டு வந்து, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் நடக்கும் பாதையில், இரவு காலங்களில் போட்டு வைப்பாள். அதற்காகவே அவள் "விறகு சுமக்கிறவள்" எனக் கூறப்பட்டாள். அவள் முட்களைப் பொறுக்கி, ஈத்த நாரினால் கட்டிக் கொண்டு வருவாள். வழக்கப்படி காட்டில் சென்று முட்களைப் பொறுக்கிக் கட்டி, தலையில் சுமந்து கொண்டு வரும்போது, ஏவலின் பிரகாரம் மலக்குகள் வந்து அந்த சுமையை அவள் கழுத்திலேயே மாட்டி விட்டார்கள். அதைக் கட்டி யிருந்த ஈத்த நாரே அவள் கழுத்தில் தளையாக்கப்பட்டு நாசமானாள். இதற்காகவே அவள் கழுத்தில் ஈத்த நார் கயிறு உண்டு என்று சொல்லப்பட்டது.

அபூலஹபு என்பவன் இம்மையிலும், மறுமையிலும், உக்கிரமான கேட்டை யடைந்து, வேதனை பெறுவான் என வேதவாக்கியம் இறங்கினதைக் கேட்ட மற்ற காபிர்கள் அனைவரும், மனம் புழுங்கி, அகங்காரம் கொண்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், அவர்கள் தோழர்களையும் பிடித்து வருத்தி நிஷ்டூரங்கள் செய்து, கொலை செய்ய வேண்டும் என ஒவ்வொருவரும் ஆயத்தப்பட்டார்கள்.

நபி நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு ஈமான் கொண்டு இஸ்லாமானவர்களில் சிலரைப் பிடித்து உடல் வருத்தி, உயிர் நீங்கும் வண்ணம் வருத்தினார்கள்; சிலரை ஏசியும், சிலரை நானாவிதமான தூஷண மொழிகளால் பேசியும், சிலரைக் கடிந்தும், சிலரை புன்மொழிகளால் வெருட்டியும், பலவாறு நிஷ்டூரம் செய்தார்கள். காபிர்கள் செய்யும் இவ்வித நிஷ்டூரங்கள் அனைத்திற்கும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், அவர்களுக்கு வழிப்பட்ட முஸ்லிம்களும் மனம் சகித்து, தாங்கள் எடுத்த கருமத்தை சோர்வின்றி முடித்து வந்தார்கள். ஒரு நாள் காபிர்களில் பரமதுஷ்டர்களாகிய அநேகர் திரண்டு, அம்மார் என்பவரையும், அவர் தந்தையாகிய ஆசிர் என்பவரையும், தாயாகிய சுமையாவையும், தமக்கை ஒருத்தியையும் அதிக்கிரமித்துப் பிடித்து, "இந்நால்வரும் வஞ்சனைக்காரனாகிய முஹம்மதுக்கு கீழ்ப்படிந்து, புது மார்க்கத்தில் சேர்ந்தவர்களாகையால், இவர்களை வருத்தி வதைப்போம்" என உக்கிரம் கொண்டு சொல்லி, அந்நான்கு பேரையும் நிறுத்தி, கைசலிக்க அடித்தார்கள். நல்வழி புகுந்த அவர்களைப் பகைவர்கள் சூழ்ந்து நின்று சினம் தீரும் பரியந்தம் அடித்தும், அது போதாமல் அவர்களின் கால்களையும் கைகளையும் சேர்த்து இறுக்கிப் பிணித்து, வெயிலின் வெப்பம் மீறி வெடித்து அவ்வெடிப்பின் வழியே புகை எழத்தக்க அக்கினி மயமான கட்டாந் தரையில் கொண்டு போய்க் கிடத்தினார்கள். எதிர்த்து நின்று பகை சாதிக்கும் சக்தியில்லாத இந்நால்வரும், காபிர்கள் செய்த நிஷ்டூரத்தின் வேதனையைப் பொறுக்க மாட்டாமல் மனம் ஏங்கி, கண்ணீர்ப் பிரவாகத்தில் தாங்கள் மிதக்கும் படி அழுதார்கள். புருஷனும், மனைவியும், மக்களுமாகிய இந்நால்வரும், ஒருவர் படும் துயரத்தை ஒருவர் பார்க்க சகிக்காமல் கிடந்து பரிதபித்தார்கள்.

அப்போது அந்நால்வருடைய இருதயத்திலும், "இந்த வேதனையிலிருந்து பல மடங்கு அதிக வேதனையைச் செய்து நம்மை வருத்தினாலும், நாம் தீன் வழியை விட்டுப் பிறழ்தல் கூடாது" என்னும் மனோதிடம் பதிந்தது. ஆனால், சூரிய வெப்பத்தின் உக்கிரத்திற்கு அவர்களின் உடல் ஈடு செய்யவில்லை. நால்வரும், கண்ணீர் சோனாமாரி போலச்சொரிய அழுது துடித்தார்கள். ரோமங்கள் கருகி, உள்ளம் தடுமாறி, ஈரல் வற்றித் துன்பம் அநுபவிக்கும் அவர்களைப் பகைவர்கள் சும்மா விட்டுவிடவில்லை. மறுபடியும் அவர்களை யடுத்து, நிந்தனை பேசி இகழ்ந்து, முன்னே கால் கரங்களைப் பிணித்த பிணிப்பை இன்னும் இறுக இறுக்கி, வற்புறுத்திக் கொடுந் தொழில் செய்தார்கள். தாங்கள் செய்யும் நிஷ்டூரத்தில் எள்ளத்தனையும் குறைக்காமல், மேலும் மேலும் செய்தார்கள். சூரிய வெப்பமாகிய மேல்சூடும், கட்டாந் தரையின் வெப்பமாகிய கீழ்ச்சூடுமான இரண்டு சூட்டிற்கும் இடையில் இந்நால்வரும் பிணிப்புண்டு கிடந்து, தீயிலிட்ட புழுவை யொத்துத் துடித்தார்கள். இவர்கள் இவ்விதம் காபிர்களால் கட்டுண்டு கிடந்து துன்பப்படுவதை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிந்து அவ்விடம் சென்று, தரையில் கிடந்து வருந்தும் நால்வரையும் நோக்கி, "நீங்கள் இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டபடியால், உங்களுக்கு சுவர்க்க பதவியை அல்லாஹு தஆலா கொடுத்து விட்டான்" என்று சொல்லி விட்டுப் போனார்கள். இச்சொல் அவர்களின் செவிக்கு இதமாகவும், இருதயத்திற்கு ஆனந்தமாகவும் இருந்தது. ஆயினும், படுந்துன்பம் தணிதல் இல்லாமையால், வரவர உடல் ஒடுங்கினார்கள். அந்நால்வரில் சுமையா என்னும் பெண், உடல் ஒடுங்கி, மூச்சு அடங்கி, தமது புருஷனையும் மக்களையும் பார்த்த வண்ணமாயிருந்து, இவ்வுலக வாழ்வை விடுத்து, சுவர்க்க பதவி யடைந்தார். தீனுக்காக ஆரம்பத்தில் உயிர் விட்டவர், அம்மார் என்பவரின் தாயாகிய சுமையா என்பவரேயாம்.

மகா கொடிய வேதனையில் கிடந்து வருந்தும் நால்வரில் ஒரு பெண் மரண மடைந்தும், அக்காபிர்கள் சீற்றம் தணியாமல் வரவர அதிகமாகக் கொடுமை செய்தார்கள். கட்டுண்டு சுடு நிலத்தில் கிடந்து வருந்தும் வேதனையைப் பொறுக்க மாட்டாமல், முன் இறந்துபோன சுமையாவுடைய நாயகராகிய ஆசிரும், அவன் மகனும்

சுமையாவுடனேயே சுவர்க்கலோகத்துக்கு குடியாய்ச் சென்றார்கள். தந்தை, தாய், சகோதரி என்னும் மூன்று பேர்களும் காபிர்கள் செய்த தீங்கைத் தாங்கமாட்டாமல் மரண மடைந்த போதே, அம்மார் என்பவர் தாம் படும் வேதனையைப் பற்றி ஆலோசித்து, நாம் இன்னும் தாமதம் செய்து நிற்போமானால் அம்மூவரும் இறந்த வண்ணமே நாமும் இறக்க நேரிடும். ஆகையால், நம்மன உறுதியைச் சிறிதும் பிறழவிடாமல், அக்காபிர்களுக்கு இதமான வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, இந்த வில்லங்கத்திலிருந்து தப்பித்துக் கொண்டுபோய் விடுவதே உத்தமம் என்று தீர்மானித்துக் கொண்டு, காபிர்களை நோக்கி அவர்கள் உள்ளம் உவந்து ஒப்புக்கொள்ளத் தக்க உறுதி யுடனே பலவித இதமான வார்த்தைகளைச் சொன்னார்கள்.

ஆனால், அம்மார் உடைய வார்த்தைகள் அனைத்தும் மனம் வேறும், வாக்குவேறுமாகவே பிறந்தன. இவர் தாம் பற்றிப் பிடித்த இஸ்லாம் மார்க்கத்தின் மன உறுதி சிறிதும் பிறழாமல், வாக்கு மாத்திரம் வேறாக நடித்த பொய் வார்த்தையின் நடிப்பை அக்காபிர்கள் நம்பி, அவரைப் பிணித்திருக்கும் பிணிப்பை அவிழ்த்து விட்டார்கள். அவர் அங்கே நிற்கவில்லை. உடனே அவ்விடத்தை விட்டு அதிவிரைவில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுகத்தில் வந்து நின்று, கண்ணீர் விட்டு அழுதார். அடக்கக்கூடாமல் மனம் ஏங்கி, மூச்செறிந்து அழும் அம்மாரை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோக்கி, தங்கள் கைகொண்டு கண்ணீர்துடைத்து அழுகையைமாற்றி, “எனது பிரியமான அம்மார், நீர் பகைவரின் கைக்குத்தப்பி எவ்விதம் இங்கு வந்தீர்?” என்று வினவினார்கள். அதற்கு அம்மார் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி “யாறஸூலல்லாஹ், நாங்கள் நால்வரும் கட்டுண்டுகிடந்து வருந்தும் போது எனது தந்தையும், தாயும், தமக்கையும் அவ்வேதனை தாங்காமல் மரணமடைந்தார்கள். அதைக்கண்டு நான் மனம் கலங்கி, மனம் ஒன்றும் வாக்கு ஒன்றுமாகச் சில இதமான வார்த்தைகளை உபாயத்துடன் அக்காபிர்களுக்குச் சொல்லித் தப்பித்துக் கொண்டு வந்துவிட்டேன்” என்று மரியாதையாகச் சொன்னார். இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மனமகிழ்ந்து, அம்மாரை நோக்கி “இன்று தொட்டு, பகைவருடைய வில்லங்கத்தில் சிக்குண்ட நமது மார்க்கத்

தார் ஒவ்வொருவரும், மனம்வேறு வாக்குவேறாகப்பேசி, அவ்வில்லங்கத்தை விலக்கிக் கொள்ளுதல் ஆகும்” எனத் திருவாய் மலர்ந்து பகர்ந்தார்கள். இவ்வசனத்தைக் கேட்ட முஸ்லிம்கள் அனைவரும் சந்தோஷமடைந்தார்கள்.

ஒரு நாள், இபுனுகலபு என்பவன் தனது அடியானாகிய பிலாலை நோக்கிப் பலவாறு நிந்தித்து, இரு கண்களும் சிவக்கச் சினந்து, அங்குள்ளவர்களை நோக்கி, “எனது அடிமையாகிய இவன், வஞ்சனைகாரனாகிய முஹம்மது உடைய மாயவலையில் சிக்குண்டு, என் வார்த்தையை மீறி நடக்கிறான். இவனைத் தண்டிக்கவேண்டும்” எனக்கூறி, பிலாலை நோக்கி, “ஏ! தொழும்பா, நீ முஹம்மது இடம் சென்று அவனுடைய இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்தது என்ன ஆண்மைகொண்டு?” என அகங்காரத்துடன் சொல்லி, அவரைப்பிடித்து சுடும்தரையில் கிடத்தி, மிகப்பாரமுள்ள கருங்கல் ஒன்றைத் தூக்கி அவர் மார்பில் வைத்து இருத்தினான்.

அதனால் பிலால் என்பவர் தரைச்சூடும், சூரிய வெப்பமும் ஆற்ற மாட்டாமல் கிடந்து வருந்தினார். மார்பில் பாரமாக ஏற்றப் பட்ட கற்சுமையால் மல்லாந்து முகத்தில், சூரிய கிரணங்கள் தீயைப்போல அழுற்ற மனம் தளர்ந்து, நெடுமூச்செறிந்து, உடல் ஒடுங்கித் தவித்தார். அவர் எஜமானனாகிய இபுனுகலபு என்னும் பாதகன் பிலால் படும் குரூரமான பரிதாபத்தைப் பார்த்து, சீறிக் கனன்று, மறுபடியும் ஒரு கருங்கல்லைத் தூக்கி பிலாலுடைய மார்பி லிருக்குங் கல்லின்மேல் வைத்துச் சுமத்தினான். இரக்கம் சிறிதுமின்றி மனக்கொதித்து, பிலாலை வருத்தும் தீத்தொழிலில் இபுனுகலபு என்பவனுக்கும் சிறிதும் சலிப்பு அடையவில்லை. பருத்த இரண்டு கருங்கற் சுமையை மார்பில் தாங்கிக் கொண்டு சுடுதரையில் கிடந்து துன்ப மனுபவிக்கும் பிலால் என்பவர், மனச்சோர்வுற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பேரில் வைத்த விசுவாசத்திற்கு கொஞ்சமும் பழுது வராமல் காத்து, மன உறுதியுடன் கிடந்தார்.

இவர் இவ்வித பரிதாபஸ்திதியில் கிடந்து வருந்துவதையும், இபுனுகலபு என்பவன் அங்கு நிற்பதையும் அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு கண்டு, இந்தப் பிலால் தாங்குதற்கு அரிய வேதனையைச் சகித்துக்கொண்டு, தாம் கொண்ட ஈமானின்

நிலையை சருக விடாமல் காத்து நிற்பதால், மகா நீர் என மனம் மகிழ்ந்து, அந்த இபுனுகலபு என்பவனை அடுத்து, அவனை நோக்கி "இபுனுகலபுவே, உமது அடிமையாகிய இந்தப் பிலாலின் கிரயத்தைநான் கொடுத்து விடுகிறேன்; உமக்கு உரிய பாத்தியதையை நீக்கி நீர் அவரை விட்டு விடும்" என்று சொன்னார்கள். அப்படியே அவன் பிலாலுடைய கிரயத்தை அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு இடத்தில் வாங்கிக்கொண்டு விட்டு விட்டான். அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவரைத் தமக்கு அடிமையாக்கிக் கொள்ளாமல் உரிமை விட்டுவிட்டார்கள்.

அந்நாளில் காபிர்கள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் கொண்ட பகை சாதிக்கும் தன்மையைச் சிறிதும் தணிக்க வில்லை. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் அனைவரையும் சித்த பிரமை கொண்டவர்கள் என்று நிந்தித்துத் திரிந்தார்கள். அதனால் மக்கமா நகரத்தில் குடும்பத்திற்குள் சமாதானமின்றி குழப்பம் உண்டாயிற்று. அடிக்கடி பிறக்கும் வில்லங்கம் அனைத்திற்கும் முஸ்லிம்கள் பொறுமையோடு இருந்து தங்கள் கொள்கையை நிறைவேற்றி வந்தார்களன்றி, அப்பகைவர்களுக்கு அஞ்சி முயற்சியைத் தளரவிடவில்லை.

ஒருநாள், நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சிறிய தந்தைகளில் ஒருவராகிய ஹம்ஸா என்பவர் தோழர்கள் சிலருடன் எழுந்து காட்டில்சென்று, மிருகங்களை வேட்டையாடிக்கொண்டு சந்தோஷத்துடன் திரும்பி வரும்போது, வழியில் சுத்ஆன் என்பவர் வீட்டு அடிமைப் பெண்களில் ஒருத்தி ஹம்ஸாவைக் கண்டு அவரை நோக்கி "பகையர்களின் உயிரையுண்ணும் கூராயுதம் தரித்த வீரசிங்கம் ஒத்த ஹம்ஸாவே! உமது சகோதரர் என்னும் அப்துல்லாவின் புத்திரராகிய முஹம்மது என்பவர் தெருவழியே போகும்போது, அபூஜஹல் என்பவன் அவரைநோக்கி வாய்கொள்ளாத பேச்சுகளைப் பேசி நிந்தித்தான். அவன் பேசின தூஷண மொழிகள் மிக அருவருப்பானவை. அவற்றை சொல்லிக்காட்ட மனம் சகிக்காது. முஹம்மதுடைய முகத்தை நோக்கிச் சிறிதும் அச்சமின்றி எவர் மனதும் கைக்கத்தக்கத் தூஷண வார்த்தைகளைச் சோனாமாரியாக சொரிந்தான். அதற்கு முஹம்மது, மறுத்து ஒரு வார்த்தையும் பேசவில்லை.

அபூஜஹல் பேசின நிந்தனையனைத்தையும் பொறுத்து, உள்ளம் வருந்தி, முகம் வெளிறி, உறவின் முறையார் அற்ற அகதியைப் போல அவர் போனார். அவன் சொன்ன தூஷணம் கொஞ்சமல்ல" என்று சொன்னாள்.

அவள் சொன்ன இச்சொற்கள் ஹம்ஸாவின் உள்ளத்தில் தைத்து சினத்தை எழுப்பின. உடனே ஹம்ஸா இருகண்களும் சிவந்து, சினம்மீறி, அங்குநின்று திரும்பி அபூஜஹல்இருக்கும் இடத்திற்குச் சென்றார். அப்போது அபூஜஹல் தனது ஜாகையில் அநேக குறைஷித் தலைவர்களும், மகுஜூமிகிளையார்களும் புடை சூழ உல்லாசமாய் வீற்றிருந்தான். ஹம்ஸா அவனுடைய சமூகத்தில் நெருங்கி நின்று, அவனை நோக்கி, "ஏ அபூஜஹல்! நீ எங்கள் முஹம்மதைநோக்கி, வாய்கொள்ளாத தூஷணவார்த்தைகளைப் பேசி நிந்திக்கத் துணிந்தது என்ன ஆண்மை!" என்று உக்கிரத்துடன் சொல்லி, தமது கையில்பிடித்திருந்த வில்லை யோங்கி அவன் தலை சிதைந்து உதிரம் பிரவாகிக்கும்படி அடித்தார். மறுபடியும் ஹம்ஸா சினம் தணியாமல் உள்ளம்கொதித்து, அபூஜஹலை நோக்கி "வஞ்சகனே, அச்சம் சிறிதுமின்றி, இனி எனது தமயன்மகனை நிந்திக்கத்துணிந்தாயானால் உனக்குசொல்லவேண்டியது என்ன உண்டு! இன்றைத்தினமே நான் அந்த முஹம்மதுக்கு கீழ்படிந்து, ஈமான் கொண்டு, கலிமாச்சொல்லி, அவர் மார்க்கத்துக்கு நடுநிலையாயினேன். இவ்வூராரனைவரும் ஒருங்கு திரண்டு, என்னுடன் பகைத்துப் பழி சாதிக்கவந்தாலும் வரட்டும், அவர்கள் பகையை நான் அறிகிறேன்" என்று மிகக் கனன்று சொன்னார். ஹம்ஸா என்பவர் அபூஜஹலுடைய மண்டை பிளந்து இரத்தம் சிந்த அடித்து, அவனுக்குமுன் பலவாறு சினந்துபேசிக்கொண்டு நிற்பதை அவனை சூழ்ந்து இருக்கும் மகுஜூமிகள் கண்டு சினம்கொண்டு, மீசைகள் துடிக்கவும், கண்கள் சிவக்கவும், கைகளில் ஆயுதவர்க்கங்களைப் பிடித்துக் கொண்டு, ஹம்ஸாவை அடர்ந்து தாக்க எத்தனித்தார்கள்.

தன் இனத்தார் உக்கிரம்கொண்டு சினந்து சண்டையிடத் துணிந்ததையும், ஹம்ஸா என்பவர் சிறிதும் அஞ்சாமல் சிங்கம் போன்று நிற்கும் நிலையையும் அபூஜஹல்கண்டு, "இப்போது இங்கு விளையும் இக்கலகத்துக்கு நாம் இடம்கொடுத்தால், அநேக கொலைகள் நேரிடும். அன்றியும் நாட்குநாள் பகை முதிர்ந்து பழி சாதிக்கும் தன்மையால் நகரம் பாழாம்" என ஆலோசித்து, தன் ஜாதியாரை

நோக்கி, "மகுஜமிகளே! ஹம்ஸா என்பவர் முகாந்திரமின்றி அதிக்கிரமித்து அடர்ந்து நம்மைத்தாக்கவில்லை. அவருடைய சகோதரர் மகனாகிய முஹம்மதை நாம் நியாயமின்றி தூஷித்துப் பலவாறு பேசினதற்காகவே பிரதி கருமமாக நம்மைத்தாக்கினார். அதற்காக நீங்கள் வெகுண்டு, ஹம்ஸாவை அடர்வது நீதியல்ல. செய்யத் துணிந்த கருமங்களைச் சீர்தூக்கி, காலமும் இடமும் அறிந்து செய்வதே முறைமை. நீங்கள் இப்போது சினத்தை அடக்குங்கள்" என்று சமாதானம் கூறினான். அதனால் காபிர்கள் சினம் ஆறினார்கள்.

பிற்பாடு ஹம்ஸா அபூஜஹலுடைய சபையை நீங்கி, வேறு இடங்களுக்குப் போகாமல், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இருக்கும் இடத்துக்கு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அடுத்து நின்று, கலிமாவைச் சொல்லி, ஈமான் கொண்டு முஸ்லிமானார்.

வீரம் அமைந்த ஹம்ஸா என்பவர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, ஈமான் கொண்டு இஸ்லாம் என்னும் பரிசுத்த மார்க்கத்தில் பிரவேசித்தார் என்னும் செய்தி பிரஸ்தாபமானவுடன், காபிர்கள் அனைவரும் அஞ்சிக் கலங்கினார்கள். ஹம்ஸா நம்சமுகத்தில் வெகுண்டு சொன்னபடியே நிறைவேற்றி, இஸ்லாம் மார்க்கத்தைத் தொடர்ந்து விட்டார்; இனிபகை சாதிக்கத் துணிந்து முன்நிற்பார் என்னும் கிலேசம் அபூஜஹலின் உள்ளத்தைவிட்டு ஒழியவில்லை. ஹம்ஸா இஸ்லாமான அன்று தொட்டு முஸ்லிம்களுக்கு மன ஊக்கமும், தைரியமும், ஆனந்தமும் உண்டாயின. நாட்குநாள் தீன்வழி வளர்ந்து ஓங்கிக் கொண்டே வந்தது.

29-வது அத்தியாயம்.

உமர் கத்தாபு ஈமான் கொண்டது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஞிமிறு கட்டே னுணுமலர்த்தார் நிலவும் புயம் பூரிக்கமனங்
கமறு மொட்டா ரெதிருமர்க் களத்திற் குதித்துக் கைவாளாற்
குமுறு விட்டா ரிடிபோலக் கொத்திப் பிளந்து வெற்றிபெறும்
உமறு கத்தா பீமான் கொண்டுற்ற வரலா றுரைத்திடுவாம்.

இதன் பொருள்.

மனத்திற் காய்மானமுள்ள சத்துருக்கள் எதிர்த்துவருஞ் சண்டைக்களத்தில், வண்டினங்க ளிருந்து தேனுண்ணும் புட்பமாலை கிடந்திலங்கும் புஜம் பூரிக்கப் பெருமுழக்கமாய்க் குமுறிக்கொண்டு வரும் இடியைப் போல்குதித்து கையிலிருக்கும் வாளாயுதத்தினால் அவர்களைக் கொத்திப் பிளந்து வெற்றியைப் பெறும், உமர்கத்தாப் என்னும் பெயரையுடைய சுத்தவீரர் ஈமான் கொண்டு இஸ்லாம்மார்க்கத்தில் வந்தசெய்தியைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

சமர கேசரியப்துல்லா தருதிரு மதலைக்
கமரர் கோனிழிந் தருநபி யெனும் பெயரளித்துத்
திமிர வெங்குபிர் கடிந்து தீனிலை நெறி நிறுத்திக்
கமைதரும்படி யாண்டு நான் கெனக்கடந்த தற்பின்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது அஸ்ஹாபிமார்களும், எதிர்த்துப் பகைசாதிக்கும் காபிர்களுக்கு சிறிதும் அஞ்சாமல் ஸ்திரமாய் நின்று தங்கள் தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை விளக்கிவருங்காலத்தில் நபிப்பட்டம் கிடைத்த நான்காம் வருடம் சென்று ஐந்தாம் வருடம் ஆரம்பமானது ஒருநாள் அர்த்த சாமத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தனித்திருந்து, அல்லாஹு தஆலாவைத் தொழுது பலவாறு தோத்திரஞ் செய்து, இரு கரங்களையும் ஏந்திப் பிரார்த்தித்தார்கள்.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகி னிற்கரு தலர்க்கட லரியும றினைக் கொண்
டலதபூ ஜஹலினைக் கொடுதீ னிலையதனைப்
பெல னுறும்படி யெனக்கருள் பிறிதிலை யெனவே
வலனொடுந் துஆச் செய்தனர் முஹம்மது நபியே.

1 இந்த மன்னர்க ளிருவரி லொருவரென் வசமாய்த்
தந்து நீனிலை நிறுத்துவை யெனத்துனி யுதலைப்
புந்தி கூர்தர வுரைத்தனர் கேட்டனர் புகழ்ந்தார்
சிந்து வெங்கதி ரெழுந்தது விழுந்தது திமிரம்.

வசனம்.

"யா அல்லாஹ்! தீன் என்னும் மார்க்கத்தை இவ்வையகத்தில் ஸ்தாபிப்பதற்கு உன்னுடைய பலமே போதுமானது. ஆயினும், இடைக்கிடை நேரிடுகிற பற்பல நிர்ப்பந்தங்களுக்கு ஈடு செய்து கொள்ளத்தக்க உபபலமும் வேண்டியதாயிருக்கின்றது. அவ்வுப பலத்துக்குப் பாத்திரர்களாய் இவ்வூரில் இருவர் உளர். அவர்கள் கத்தாபுடைய குமாரர் உமர் ஒருவர்; அபூஜஹல் ஒருவன். இவ்விரு வரில் யாராவது ஒருவரை எனக்கு வசப்படுத்தித் தந்து, அவரைக் கொண்டு தீனை நிலைபெறச்செய்யும் வண்ணம் நீ தயவு செய்ய வேண்டும்" என மனமுருகி இரந்து கேட்டார்கள். அப்பொழுது சூரியோதய மாகும் பரியந்தம் இரந்து துஆ கேட்பதை நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிறுத்தவில்லை. பிறகு சூரியன் உதயமாயிற்று.

அன்று மத்தியான மானபோது, அபூஜஹல் என்பவன் அவ் வூர்த் தலைவர்கள் அனைவரையும் அழைத்து ஒரு சபை கூட்டி அச்சபைக்குத் தானே அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்து, அச்ச பையை நோக்கி "சபையாரே! என் இருதயத்திலிருக்கும் முடிவான ஒரு நிபந்தனையை உங்களிடம் நான் முறையிட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் சிந்தை கூர்ந்து கேட்கவேண்டும். அதாவது சமுத்திரம் சூழ்ந்த இவ்வுலகத்தி லிருக்கும் பல இராஜ்ஜியங்களுள்ளும் இந்த அறபு இராஜ்ஜியம் சிறந்தது. இவ்வறபு இராஜ்ஜியத்திலுள்ள நானு நகரங்களிலும் நாம் வசிக்கும் இந்த மக்கமாநகரம் மிக விசேஷமான நகரம். இதில் குடியிருக்கும் நாமோ மற்ற இராஜ்ஜியத்தாரை விட, திரவியத்திலும், கீர்த்தியிலும், கல்விப் பொருளிலும், வீரத்திலும் மேன்பாடுடையோம் என்பது யாவருக்கும் தெரியும். நாம் எடுத்த எவ்விதக் கருமத்தையும் துணிந்து நின்று சாதிக்காமல் விட்டதில்லை. காரியம் இப்படியிருக்க, இப்போதோ நமது இராஜ்ஜி யத்திற்கும், குடும்பத்திற்கும், மார்க்கத்திற்கும் தீங்குவிளைக்கும் உட் பகையொத்த பாதகர்களுக்கு சமானமாய் முஹம்மது என்பவன்

நபியென்று பிறந்திருக்கிறான். அவன் மாயக்காரனேயன்றி வேறல்ல. இன்னும் அவன் விஷயத்தில் நாம் தாட்சண்யம் பார்க்க வேண் டிய நிமித்தம் என்ன? இனி அவனை ஒரு திரணமாக மதிக்காமல் கொலை செய்வதே சரி. அந்த முஹம்மது உடைய இரத்தம் பிரவகிக்க கொன்று விடுகிறவர்களுக்கு எனது சுதந்திரமான வஸ்துகள் என்னென்ன உண்டோ அவற்றையெல்லாம் கொடுப் பேன்; அன்றியும் திரண்ட ஆஸ்தியையும் கொடுத்து எனக்கு எஜமானாகவும் பாவிப்பேன். இதற்கு சக்தியுள்ளவர் இச்சபையி லுள்ளவர்களில் யார்?" என்று சொன்னான்.

அபூஜஹல் சொன்ன இவ்வார்த்தைகளைக் கேட்ட அச்சபையார் களில் ஒருவராவது அவனை நோக்கி 'தாங்கள் சொன்னது நியாயம்; அல்லது அநியாயம்' எனப் பிரதி சொல்லவில்லை. அனைவரும் மவுனமாகவே யிருந்து விட்டார்கள். முஹம்மதை கொல்ல சக்தி யுள்ளவர் யார்? என அபூஜஹல் கேட்ட கேள்வியால், கத்தாபுடைய மகனார் உமர் என்பவருக்கு மாத்திரம் சினம் பிறந்தது. தம் இரண்டு கண்களும் சுழல அச்சபையாரை நோக்கி "மலைகளையும் எதிர்த்து தகர்க்கும் திறன் பொருந்திய உங்கள் புஜங்கள் முறிந்தா போயின? தனக்கு ஒருபுது வேதமும் புதுமார்க்கமும் இறங்கினவென்று மாறு பாடான பொய்யைச் சொல்லிக்கொண்டு, இவ்வூராராகிய மனுப் பயிருக்குக் களையாய் முளைத்த அந்த முஹம்மதை கொல்லும் வாள் இதோ என் கையிலிருக்கும் வாளன்றி வேறில்லை. நீங்கள் கண்டறி யுங்கள்" என அதிக ஆங்காரத்துடன் சொல்லி விட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொல்லத் துணிந்து, உடைவாளொன்றை அரையிலிருக்கி, உருவிக் கையில் பிடித்துக் கொண்டு அப்போதே அச்சபையை விட்டு எழுந்தார்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொலை செய்வதற்காக உமர் என்பவர் மனம் துணிந்து புறப்பட்டு நடந்தார். தெய்வ சங்கற்பம் இன்னது என முந்தியே அறிந்து கொள்ளும் திறம் எவர்களுக்குமில்லை. ஆனால், நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அன்றிரவு அர்த்தசாமத்தில் அல்லாஹு தஆலா இடம் இரந்ததும், பகலானவுடன் சபைகூடிப் பேசினதும், அதில் உமருக்குக் கோபம் பிறந்து கொலை செய்ய நாடிப் புறப்பட்டதும் தெரிந்திருந்தது. உமர் புறப்பட்டு நபிநாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தேடிக் கொண்டு வரும்போது, உடனே அல்லாஹு த.ஆலாவின் கட்டளையின்படி வானவர்களில் ஒருவராகிய மலக்கு ஒருவர் ரிஷப (காளைமாடு) உருக்கொண்டு, ஒரு க்ஷண நேரத்தில் பூமியில் இறங்கினார். நான்கு கால்களின் திரட்சியும், பிளப்பான குளம்புகளின் உரமும், திருகிவளைந்த இரண்டு கொம்புகளின் அழகும், கழுத்தடியிலுள்ள தோலின் குழைவும், அடிக்கடி நாசித் துவாரங்களில் செல்லும் நாவின் மேன்மையும்—இப்படிப்பட்ட தெனச் சிறப்பிடக்கூடாத உருவத்தில் சிறந்த அந்த ரிஷபம், தன் வாலையடித்துக் கால்களைப் புழுதியெழத் தரையில் வைத்துத்துள்ளி, அருகில் முளைத்துள்ள பசும்புற்களை மேய்ந்து கொண்டு உமர் வரும்பாதையில் நின்று, வியர்வையால் உடல்நனைய, கண்கள் சிவந்து, இதழைக் கடித்து, வாளைக்கையிற் பிடித்துக் கொண்டு வரும் உமறை நோக்கிற்று. அவர் வருவது தனக்குப் புதுமையாயிருந்தபடியால், அந்தகாளை இவ்வுலகத்தில் முஹம்மதைப் பகைக்கும் நிர்வாகமுள்ளவர் ஒருவருமில்லையென்று நகைத்துக்கொண்டு, உமறை விளித்து "உமறிப்னு கத்தாபே! நீர் எங்கேபோகின்றீர்?" என்று சப்தமிட்டுக் கேட்டது. இந்த வார்த்தை தம் செவிகளில் நுழைந்தபோதே உமறு என்பவர் 'இங்கே யார் உண்டு' எனத் திரும்பிப்பார்த்து, ஆள் ஒருவரையும் காணாமையால் முன்போல நடந்தார். மறுபடியும் அப்படியே ரிஷபம் சப்தமிட்டுக்கேட்டது. அப்போதும் அவர் திரும்பிப்பார்த்து மனிதர்களைக் காணாமையால் மீண்டும் நடந்து சென்றார். மறுதரமும் அக்காளை முன்போலவே கூவி வினவிற்று. மூன்றாம் தடவையிட்ட சப்தம் தம் காதில் கேட்டவுடன் உமர் அங்கே நின்று நான்கு பக்கமும் பார்த்தார். மனிதர்களின் ஊசாட்டம் கட்டோடேயில்லை. ரிஷபம் மாத்திரம் ஒன்றுமேய்ந்து நிற்பதைக்கண்டு, சப்தமிட்டு நம்மை வினவினது யார்? எனத்திகைத்து, மனம் மயங்கி அங்கேயே நின்றார்.

அப்போது அந்த ரிஷபம் அவரைநோக்கி, "உமறே! உம்மை விளித்தது நான்தான். என்னை கண்ணாரக்கண்டும் திரும்பிப்பாராமல் உமது மனையை விட்டு எங்கே போகின்றீர்? அதை என்னிடம் சொல்லும்" என்றது. அப்போது உமறு ரிஷபத்தை நோக்கி "ரிஷபமே எங்கள் முன்னோர் விதித்தபடி யொழுகி நடவாமல் பரிசுத்தமான எங்கள் குலதெய்வம் அனைத்தையும் நிந்தித்து,

புதிதாக ஒருமார்க்கத்தை உண்டுபண்ணி, அதற்கு தீன் என்று பெயரிட்டுக் கொண்டு அறிவிலிகளான அநேகர் மனதை மாற்றி அதில் நுழையவைத்து எம் இனத்தார் அனைவரையும் வெறுத்து பகை விளைத்துக் கலகக்காரனாய் தலையெடுத்து, எங்களுக்கு என்றும் இல்லாத வில்லங்கங்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் முஹம்மதைக் கொல்லும்படி புறப்பட்டுப்போகிறேன்" என்று பிரதி உத்தரம் சொன்னார். இதைக்கேட்ட ரிஷபம், உமரை நோக்கி, "உமரே, தெய்வ நிபந்தனையைச் சிறிதும் மதிக்காமல், முஹம்மது கடவுளுடைய தூதர் என்பதை விசுவாசம் கொள்ளாது அவர் சொல்லை மறுத்து, இவ்வுலகத்தார் அனைவரும் திரண்டு அவருக்குத் தீங்கு செய்ய துணிந்தபோதிலும், அத்தீங்கில் எள்ளத்தனையும் அவரை அடையாது. ஆனபடியால் நீர் ஒருவர் அவரைக் கொலைசெய்ய எண்ணிய எண்ணத்தை யொழித்துத் திரும்பிப் போவதே உத்தமம். உமரே! உமது சக்தி எம்மாதிரம்? நீர் முஹம்மதை எவ்விதம் கொன்று வெற்றியடைவீர்? நீர் என் வார்த்தையை மதிக்காமல் உம் மனப் பிரியத்தின்படியே போகவேண்டினீரானால், நானொருவார்த்தை சொல்லுகிறேன். நானோ மானுஷ்யப் பிறவியல்ல. விலங்குகளில் மிக எளிமையான தன்மையுடைய பிறவி. ஆயுதப்பழக்கம் இன்னபடி யென்றும் அறியேன். பகுத்தறியும் சக்தி எனக்கில்லை. இத்தனை இழிந்த நிலையிலுள்ள என்னிடத்தில், உமது தத்துவத்தைக்காட்டி, எனக்கு ஈடுகொடுப்பீரானால், நீர் முஹம்மதைக் கொல்லும் சக்தி உடையவர் என நான் உம்மை மதிப்பேன்" என்று கூறிற்று.

அழகிற்சிறந்த ரிஷபம் இவ்வாறு சொன்னவுடன் உமறு சினம் கொண்டு, மதயானையை யொத்தக் கண்களில் அக்கினிபொறி சிதற அவ்விடபத்தின் சொல்லுக்கு இணங்கி, தன் கைவாளை யசைத்து அதற்குமுன் எதிர்த்து நின்று கொண்டார்.

சரித்திரப் புராணம்.

கலி நிலைத்துறை.

எதிர்த்து நின்றற வீசினர் வீசலு மிடபங்
குதித்து தம்வலப் பாரிச மாகின குறுகி
மதித்து வீசலு மிடப்புற மானது மறுத்தும்
பதித்து வீசலும் பிற்புற மானது பறந்தே.

நான்கு திக்கினுங் குதித்துமுன் னணித்துற நடக்குந்
தேன்கு தித்தசெந் தொடைப்புய நரத்தொடுஞ் சினந்து
வான் குதித்திடின் னெனக்கர வாளொளி மயங்கத்
தான்கு தித்தனர் துரத்தினர் திரிந்தனர் சாரி.

எட்டி யொட்டுவர் வெட்டுவர் வெட்டலு மிடபங்
கிட்டிடாதக லாதுடல் கிழிபட வெதிர்ந்து
முட்டித் தாக்குற வருவபோ லடிக்கடி முடுகுந்
தொட்டி டாதொழி யாதருஞ் சூறையிற் சுழலும்.

சுடுத்து முன்னெதிர்த் திருவளை மருப்பினை யசைக்கும்
வெடித்த வாலிரு புறத்தினு மடிக்கடி விசைக்குப்
படித்த லத்துகள் விசும்புறக் குளம்பினிற் பறிக்கு
மிடித்த வாறுறு மேறென வதிர்ந்திடு மிடபம்.

வசனம்.

இவ்விதம் உமர் கத்தாபு அந்த ரிஷபத்தை இலக்காக்கி வாளால் வீசினர். அப்போது ரிஷபம் விலகிக் குதித்து வலதுபுறம் ஒதுங்கிற்று. மறுபடியும் வீசினர்; இடதுபுறம் விலகிற்று. இப்படி இவர் கைவாளை யோங்கிப் பலதரமும் வீசுந்தோறும், அக்காளை துள்ளித்துள்ளி நான்குபுறமும் குதித்து மின்னல் மறைவது போல ஒதுங்கி நின்றது. அதைக்கண்ட உமறு சினம்மீறி ரிஷபத்தை விலகவொட்டாமல் துரத்தி மடக்கி மறித்து நின்று வெட்டினர். உமர் வெட்டும் வெட்டுக்கு அவ்விடபம் சுழல் காற்றைப் போலச் சுழன்று தப்பித்துக்கொண்டு, மறுபடியும் அவருக்கு எதிரே கொம்புகளை யசைத்து முட்டித்தள்ள வருவது போல எதிர்த்து வந்தது. அதைக்கண்ட உமர் தம் கைவாளை யசைத்து அதை நோக்கி வீசினர். இவர் வீசும் வீச்சு அனைத்திற்கும் அவ்விடபம் நெடுந்தூரம் பின்னிட்டுப் போய் சமுகத்தில் அடுத்து முன் வந்து நிற்கும்; இரு கொம்புகளையும் அசைக்கும்; வாலை அடிக்கடி வீசியடிக்கும்; புழுதியெழக் குளம்புகளால் தரையில் மோதும்; மறுபடியும் கண்காணாமல் மறைந்துபோய் முன்வந்து காலை மடித்து நிலத்தில் படுக்கும்; எழுந்து நிற்கும். இடபத்தின் இவ்வித சேஷ்டையைக் கண்ட உமர் கண்கள் சிவந்து அதைத்தொடர்ந்து போவார்; நெருங்கி நின்று வாளால் வீசுவார். துரத்துவார்; மறிப்பார்; அதன் திரத்தை

நோக்கித் திகைப்பார்; கைகால் ஓய்ந்து மயங்குவார்; உதட்டைக் கடிப்பார்; வலக்கையை அடிக்கடி பார்ப்பார்; வாளை பார்ப்பார்: குறுகுறுப்புடன் ரிஷபத்தை நோக்குவார்; தம்பராக்கிரமத்தை ஆராய்வார்; தனது நிலையை யோசிப்பார்; அபூஜஹுலுடைய சபையில் சொன்ன சொல்லைக் குறித்து ஆலோசிப்பார்; மனச் சோர்வு அடைவார்.

இவ்வாறே ரிஷபத்துக்கும், உமருக்கும் நெடுநேரம்வரையும் போராட்டமாயிருந்தது. இதைக்குறித்து அவருக்கு உண்டான சிந்தனை கொஞ்சமல்ல. தமக்கு முன் சீறிக்கொண்டு எதிர்த்த ரிஷபம், சிங்கம், புலி, யானை, காடி முதலான ஐவாய் மிருகங்களில் ஒன்றல்ல; மனிதர்களுக்கு அஞ்சி வெருண்டோடும் புல்வாய் மிருகங்களில் துஷ்ட விலங்குமல்ல. இதற்கு ஈடு செய்யமாட்டாத தம் வலியைக் குறித்துத் தாம் மிக ஆச்சரியமடைந்து, நாம் அபூஜஹுலுடைய சபையில் வீறுபேசி வந்தபடியே சென்று முஹம்மதைக் கொல்லவுமில்லையே, இடைவழியில் மறித்துக்கொண்ட ரிஷபத்தைக் கொன்று ஜெயமுறவுமில்லை. ஆனபடியால், நமது பராக்கிரமம் என்ன பராக்கிரமம்? என்று தமக்குள் தாமே சிரித்தார். சினத்தினால் தம் வீரத்தைக் கருதிப் புன்னகை செய்து நிற்கும் உமறை ரிஷபம் நோக்கி, குனிந்து தரையை முகர்ந்து, படுத்து அசை வெட்டி இரு காதுகளையும் அசைத்து, விலகாமல் இருந்தது. இதைக்கண்ட உமறு ரிஷபம் நமக்கு முன் ஆறியமர்ந்து இருப்பதால் இனிதடையின்றி வெட்டிப் பிளக்கலாம் என வாளையோங்கி வீசினர். உடனே ரிஷபம் எழுந்து முன் செய்த சேஷ்டைகளைவிடப் பலமடங்கு அதிகமான கோரணிகளைச் செய்தது. உமரும் விடாவண்ணம் துரத்தியும், மறித்தும், குறுக்கிட்டும், வீசியும் பலவாறு திரிந்தார்.

உமர் இவ்வாறு மத்தியானவேளை தொடங்கி சாய்ந்தரமாகும் வரையும் அலைந்து உலைந்து மனம் தடுமாறினரன்றி, ரிஷபத்தைக் கீழ்ப்படுத்த இயலவில்லை. அதனால் அவர் மிக மயங்கி நின்று, நடந்த வர்த்தமானத்தை ஊராரிடம் சொல்லவேண்டுமென்று எண்ணி, அந்த ரிஷபத்தை விட்டுத் திரும்பினர். குறித்து வந்த கருமத்தைக் கை நெகிழவிட்டுத் திரும்பின உமரை விளித்து அந்த ரிஷபம் "உமர்கத்தாபே! முஹம்மது நபியைக் கொல்லத்

துணிந்து வந்த வீரதீரம் அத்தனையும் மறைத்து கொண்டா திரும்பிப்போகிறீர்?" என அட்டகாசம் செய்து விட்டு போய்விட்டது.

பிறகு உமர், தாம் அபூஜஹலுடைய சபையிற் பேசின வீறும், எழுந்த விசையும் ஒடுங்க, கண்ட ஆச்சரியத்தால் தலை குனிந்து, உடல் இளைப்புற்றுச் சோர்ந்து, வியர்வை சொரிய மெல்ல மெல்ல நடந்து, அபூஜஹலிருக்கும் சபையில் வந்தார். முகம் வாடிப் புஜங்கள் சோர்ந்து, தவித்து வந்த உமரை அச் சபையார் நோக்கி, "நிகழ்ந்த வர்த்தமானம் என்ன? முஹம்மது உடைய சங்கதி யாது?" என விசாரித்தார்கள். அப்போது உமர் அவர்களை நோக்கி, தாம் சென்றது முதல் மீண்டு வரும் பரியந்தம் நடந்த சங்கதிகளை யெல்லாம் விவரமாகச் சொல்லிக் காட்டி, அந்த ரிஷபம் பைசாசங்களில் ஒன்றோ! தேவர்களில் ஒன்றோ! ஜின்னோ! பூதத் தோற்றமோ! அல்லது, முஹம்மது செய்த மாயா சங்கற்பமோ! மாயா வினோதமோ, தெரியவில்லை. நான் இக்காரியத்தை சொல்ல நாடி இங்கு வந்தே னன்றி, என் கோரிக்கையை மறந்துவிடவில்லை யென்று சொன்னார். இதைக் கேட்ட அபூஜஹலும் மற்றவர்களும் குடல் புரளும்படி குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

அனைவரும் பெருநகை செய்து தீர்ந்தபின், உமரை நோக்கி, "கத்தாபுடைய குமாரரே, நீர் கண்ட இக்காட்சியை ஒரு புதுமையாக எண்ணிச் சொல்ல வந்தீரே, அந்த முஹம்மது என்பவன் செய்யும் மாயங்கள் ஒருவகை இருவகையா? பற்பல விதமான மாயவினோதங்களை யெல்லாம் அவன் செய்வானே, அவற்றுள் நீர் கண்டது எம்மாத்திரம்? நாங்கள் கண்ட காட்சி எம்மட்டோ உண்டு. நீர் இதை ஒரு நூதனமாகப் பகிரங்கத்தில் பேசினால் உமக்குத்தான் அவமானம். உமது சித்தம் இவ்வகை மாயங்களால் பேதலிக்கலாமா? இன்னும் இதுபோல இலட்சம் பங்குமேலான ஆச்சரியத்தைக் கண்ணார நீர் கண்டாலும், அது முஹம்மது உடைய மாயமென்றே நினைப்பீராக. பிறரிடம் வந்து பெரிய பூத்தானமாகப் பேசுவது சரியல்ல. நீர் கொண்ட கருத்தை விட்டு விடாமல் எப்படியும் முஹம்மதைக் கொன்று வாரும்" என்று சொன்னார்கள்.

தாம்கண்ட காட்சியை லட்சியம் செய்யாமல் அவர்கள் பேசினபடியால், உமர் கத்தாபு அவர்களை நோக்கி, "நான் பொய் சொல்ல

வில்லை; கண்டதையே சொன்னேன். பிரமாணத்தால் தோற்றிய யதார்த்தமான ஒரு விஷயத்தை சுத்த அபத்தம் என்று சொல்லுவது நியாயமல்ல. சம்சயவார்த்தை வசனிப்பதும், கண்ட நூதனத்தை மறைப்பதும் ஒழுங்காகாது. இது உலக வழக்கம்" என்று கூறிவிட்டு தம்மனைக்குச் சென்றார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொல்லவேண்டும் என்னும் எண்ணம் அவர் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அன்று சூரியன் அஸ்தமாயிற்று.

உமர்கத்தாபு அடுத்தநாட் காலையில் எழுந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் கொல்ல நாடி மனையைவிட்டுப் புறப்பட்டு, கையில் வாள்இலங்கப் பிடித்துக் கொண்டு நடந்தார். அந்த வேளையில், நீதிமான்களும், சத்திய வாசகர்களுமாகிய சில அறபிகள் கூடி, தங்களுக்குள் விளைந்த விவகாரம் ஒன்றைத் தீர்த்துக் கொள்ள விரும்பி கஃபத்துல்லாவில் போய், அங்கிருக்கும் சுவாகு என்னும் விக்கிரகத்தை தோத்திரஞ் செய்து "சுவாமீ! எங்கள் விவகாரத்தை விசாரணை பண்ணித் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்" என முறையிட்டு நின்றார்கள். அந்நேரம் உமர் கத்தாபும் அவ்வழியாய் அங்கேபோய் அவர்களுடன் கூடிநின்றார். அப்போது, அறபிகள் வந்து வழக்குச் சொல்வதையும், உமறு கத்தாபு கூடநிற்பதையும் சுவாகு என்னும் விக்கிரகம் கண்டு, தன் வாயைத் திறந்து "அறபிகாள்! சிருஷ்டிகள் அனைத்திற்கும் முதன்மையானவரும் நபிமார்களுக்கு நாயகமானவரும் கடவுளுடைய தூதரானவருமாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பவர் இவ்வூரிலிருக்கின்றார். அவரிடஞ் சென்று, அவர் பாதங்களை வணங்கி கலிமா சொல்லி, அவருடைய தீன்வழியில் புகுவது மனிதர்கள் அனைவர்பேரிலும் கடமை. நான் சொல்லும் இச்சொல்லை வேதவாக்கியமாகக் கொண்டு அந்த முஹம்மதுக்கு வழிப்படுபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நற்கதி யடைவார்கள். நீங்களும் அவரிடம் போய் அவர் மார்க்கத்தைத் தொடர்ந்து ஈமான் கொண்டு, உங்கள் வழக்கின் விஷயத்தை முறையிட்டுத் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளுங்கள். அதைக்குறித்து என்னிடம் முறையிடுவது மகாபாவமாகும்" என்று அங்கு நிற்பவர்களின் காதுகளில் நன்றாய்க் கேட்டு சித்த

பிரம்மை கொள்ளும்படி சொல்லிற்று. இதைக்கேட்ட அவ்வறபிகள் அனைவரும் ஆச்சரியமடைந்து திரும்பிப் போய் விட்டார்கள்.

சுவாகு என்னும் விக்கிரகம் மேற்கண்டவாறு சொன்ன சொற்களை உமறும் காதாரக்கேட்டு, நேற்றையதினம் ரிஷபம் சொன்ன சொற்களையும் நினைத்துச் சிந்திக்கத் தொடங்கினார்.

“நேற்று ரிஷபம் பேசினதும், இப்போது விக்கிரகம் பேசினதும் மிகப்புதுமை யாயிருக்கின்றன. இதைப்பற்றி சிந்திக்குமிடத்தில் ஏதோ ஒரு ஆச்சரியகரமான காரியம் நிகழும்போல்! தெரிகிறது. அதை நாம் கண்டறிய வேண்டும்” என இவ்வாறு நினைத்து ஆலோசித்துக் கொண்டு போகும் போது வழியில் நுஐமுப்னு அப்துல்லா கண்டு “ஓ உமரே! எங்கே போகிறீர்?” என்று கேட்டதற்கு உமர் முஹம்மதை வெட்டப் போகிறேன்” என்றார். அதற்கு அவர் நீர் முஹம்மதை வெட்டி விட்டால் அப்துமுனாப் உடைய புத்திரர்கள் உம்மை இப்பூலோகத்தின் கண் சும்மா வைத்திருப்பார்களா? நீர்முதலில் உமது குடும்பத்தார் இடத்தில்போய் அவர்களை சீர்திருத்திக்கொண்டு வாரும்” என்றார். அப்போது உமர் என்னுடைய குடும்பத்தார் யார்? என்று கேட்க உமது சகோதரி பாத்திமாவும் அவர் புருஷர் சயீதும்தான். இவ்விருவரும் இஸ்லாமை தழுவி யிருப்பதை நீர் அறியமாட்டீரா என்றார். இதைக்கேட்டதும் உமற் மீண்டும் தமது சகோதரியாகிய பாத்திமா வசிக்கும் மனையை நோக்கி நடந்து வந்தார். அப்போது பாத்திமாவும், அவர் நாயகராகிய சயீதும், கப்பாப் என்பவரைத் தமது மனையில் வைத்து அவரிடம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு இறங்கிய வேத வாக்கியங்களைப் பாடம் கேட்டுக்கொண்டும், மார்க்க முறைமைகளை கற்றுக்கொண்டு மிருந்தார்கள். அவ்வேளையில் உமறு கத்தாப் அம்மனைக்குள் பிரவேசித்தார். மனைக்குள் புகுந்ததைக்கண்ட உடனே பாத்திமாவும் அவர் புருஷரும் மனமஞ்சி, மேற்படி கப்பாப் என்பவரை ஒரு மூலையில் ஒளித்து வைத்துவிட்டு இருவரும் இவருக்கு எதிரேவந்து நின்றார்கள்.

தமது சதோதரியாகிய பாத்திமாவும், அவர் புருஷராகிய சயீதும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு ஈமான்கொண்டு, வழிப்பட்ட முஸ்லிம்கள் என்னும் பகைமையினாலும், வேத மோதக்கேட்ட விபரீதத்தினாலும், உமறு

கத்தாபு சினங்கொண்டு, மைத்துனராகிய சயீதை நோக்கி உக்கிர வார்த்தையால் கடிந்துபேசி, அவரைக் கொல்லுவதற்கு நெருங்கி, கண்களில் அக்கினிசிந்த வெகுண்டு நின்றார். சகோதரர், புருஷனைக் கொன்று விடுவேன் எனத்துணிந்து சினந்து நிற்பதை பாத்திமா கண்டு திடுக்கிட்டு அஞ்சி, உமர் கத்தாபை நோக்கி கண்ணீர் சிந்த அழுது “தாங்கள் சத்துருவைப்போல இரக்கமின்றிகொலைத் தொழில் செய்யத் துணிவது தருமமல்ல” என்று சொல்லி, தமது கணவரை நெருங்க விடாமல் விலக்கினார். உதட்டை கடித்துச் சீறிச் சினந்து நின்ற உமர் கத்தாப் தம் சகோதரியாகிய பாத்திமாவை நோக்கி நானாவிதக்கடுஞ் சொற்களால் நிந்தித்து, அங்கிருந்த தண்டாயுதத்தைத் தூக்கி பாத்திமாவுடைய சிரசில் ஓங்கித் தாக்கினார். இவ்வடி பட்டவுடன் பாத்திமாவுடைய இளம் பிறை யொத்த அழகிய நெற்றிக்கு மேற்பக்கத்தில் காயம்பட்டு இரத்தம் பிரவாகித்து ஓடிற்று. அடியுண்டு காயம்பட்ட பாத்திமா மனம் கலங்கித் திகைத்து நின்றார். தாம் அடித்த அடியினால் சகோதரியின் சிரம் உடைபட்டு உதிரமொழுகுவதை உமர் கத்தாபு கண்டு, மனமிரங்கி, தம் சினத்தைத் தணித்து பாத்திமாவைப் பார்த்து “பாத்திமா! நான் வரும்போது நீங்களிருவரும் இங்கிருந்து சிரத்தையாக ஓதிக்கொண்டிருந்தீர்களே அது என்ன? வேறே ஒரு ஆள் இங்கிருந்து பேசினதுபோல் காணப்பட்டதே அவர் யார்?” என வினவினார்.

இக்கேள்விக்கு பாத்திமா பயங்கொண்டு “நாங்கள் யாதொன்றும் ஓதிக்கொண்டிருக்கவில்லை; வேறொரு மனிதரும் இங்கில்லை” என மறைத்துப் பிரதி யுத்தரம் சொன்னார். இதைக் கேட்ட உமர் கத்தாபு இச்சொல்லை நம்பாமல், மறுபடியும் தர்க்கித்துக் கேட்டார். உடன்பிறந்த சகோதரராயிருந்தும் பகை சாதிக்கத் துணிந்து நிற்பதால், அவரை பாத்திமா நோக்கிசிறிதும் அஞ்சாமல் “நாங்கள் ஓதிக்கொண்டிருந்தது அல்லாஹு தஆலா எங்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கின சத்தியவேதம். அதன் மார்க்கத்தை விட்டு விலகினவர்கள் சுத்தம் இல்லாதவர்கள். அவர்கள் கையில் அதைத்தொடும் படி கொடுக்கக் கூடாது. இல்லாவிட்டால் உமது கையில் அவ்வேதவாக்கிய மெழுதின பிரதிகளைத் தருவேன்” என்று சொன்னார். இவ்வார்த்தையைக் கேட்ட உமர் கத்தாபு

இது வாஸ்தவம் என உறுதிக்கொண்டு, விரைவாய் மனையைவிட்டு நீங்கித்தடாகத்தில் சென்று ஸ்நானம் செய்து, புதுஉடை யுடுத்தி அங்கிருந்துமீண்டு பாத்திமாவின் மனையில்வந்து "பாத்திமாவே, நான் ஸ்நானம் செய்து பரிசுத்த மடைந்து, மனத்தூய்மையுடன் வந்திருக்கின்றேன். அப்பிரதிகளை என் கையிற் கொடு" என்று கேட்டார். இவ்விதம் மனம் திரும்பிப் பரிசுத்தத்தோடு வந்து நின்று கேட்கும் தமது சகோதரர் கையில், வேத வாக்கியங்களெழுதிய பிரதிகளையெடுத்து பாத்திமா கொடுத்தார். உமறு கத்தாபு அப்பிரதிகளைக் கையில் வாங்கி "முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுடைய உண்மையான தூதரும் நபியுமானவர்" என அர்த்தம் தரும் தாஹா என்னும் ஸூறத் அதில் எழுதி யிருக்கக்கண்டு, அதை வாசித்துப் பொருளை யுணர்ந்து, இவ்விதச் சொல்லமைதி பொருள் அமைதிகளுடன் அலங்காரமாக வாக்கியம் செய்யத் தகுந்த கல்விமான்கள் இவ்வுலகில் யாருண்டு? ஒருவருமில்லை. ஆனதால், இவ்வாக்கியங்கள் மனிதர்களால் சொல்லப்பட்டவை யல்ல; கடவுளின் வாக்கியங்களே என்று மனதாரத் தெளிந்து, தம் இருதயத்தில் கொண்டிருந்த தீமையனைத்தையும் அறநீக்கி, காபிர்கள் பேரில் வெறுப்பும் பகைமையும் கொண்டார்.

குர்ஆனில் இரண்டொரு வாக்கியங்கள் எழுதியிருக்கும் அப்பிரதிகளை உமர் கத்தாபு கையில் வாங்கினபோதே, அவருடைய இருதயத்திலிருந்த குபிர் என்னும் இருளனைத்தும் அறத் தொலைந்து, தீன் என்னும் பிரகாசம் புகுந்து மனசுத்தமடைந்தார். அவருடைய இருதயத்தில் தீன் என்னும் பேரொளி இடம் பெற்று பிரகாசித்தது. அதனால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் பக்தி மீறி ஆநந்த சாகரத்தில் மூழ்கி நின்றார். உமறு கத்தாபு ஈமான் கொண்டு இஸ்லாமாவதற்கு மனம்பொருந்தி நிற்கின்றா ரென்பதை, ஒளிந்துகொண்டிருக்கும் கப்பாபு என்பவர் தெரிந்து வெளியில் வந்து நின்று உமர் கத்தாபை நோக்கி, "உமறே! உம்மைக் கொண்டு ஒப்பில்லாத வெற்றிகரமான சுபகாரிய மொன்று இன்றைக்கு நடந்தேறும். அதாவது நேற்றிரவு அர்த்த ஜாமத்தில் எங்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனித்திருந்து, "உமரையாவது, அபூஜஹ்லையாவது எனக்கு உபபலமாக

வசமாக்கித் தந்து, தீனை ஸ்தாபிப்பாயாக" என அல்லாஹு தஆலாஇடம் துவா கேட்டார்கள். அந்த துஆ நிறைவேறும் வேளையாயிற்று" என்று சொன்னார். இவ்விதம் சொன்ன கப்பாபு என்பவரை நோக்கி, "இப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் எங்கே யிருக்கின்றார்கள்?" என்று உமர் கத்தாபு கேட்டார்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முதிருங் கருஞ்சூற் சலதரத்தை முடியிற் றாங்கிச் செழுந்தேனை
விதிருஞ் சினைத்தண்டலை யுடுத்து விளங்குங் குவவு சபாவரைக்குச்
சதிரி னணித்தா யொருமனையுன் டதனிற் றரித்தா ரஹ்மதுவு
முதிருங் கலிமா நிலைதவறா முதியோர் சிலரு முரணறவே.

மறைமா மொழிநா வொழியாது வளர்க்கு முதியோ ரினிதுரைப்பக்
கறையா ரிலைவேற் காத்தேந்திக் கடிதின் விருப்பினுட னெழுந்து
குறையா மதிய மெனத்தீனை வளர்க்குங் குரிசின் முஹம்மதுத
முறைவார் பொழில் சூழ் வரையினிடத்துற் றுருமறு கத்தாபே.

வசனம்.

அதற்கு கப்பாபு என்பவர் "உமறே! சபாமலையின் அடிப்பக்கத்தில் தனிமனை யொன்றிருக்கிறது. அந்த மனைக்குள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், சில முஸ்லிம்களும் இருக்கின்றார்கள்" என்று பதில் சொன்னார். உடனே உமறு கத்தாபு வலது கையில் கூர்வாளிலங்கப் பிடித்துக்கொண்டு புறப்பட்டு நடந்து, சபாமலையிலிருக்கும் அந்தத் தனி மனையை நெருங்கி நின்று பார்த்தார். அம்மனையிலும் வெளிப்புறத்திலும் மனிதரின் ஊசாட்ட மில்லாமையால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இங்கே இருப்பார்கள் என நினைத்து அம்மனை வாசலில் வந்தார். கதவு மூடப்பட்டிருந்தது. இதைக்கண்ட உமறு கத்தாபு வாய்திறந்து பேசாமல், தமது கையால் அக்கதவைத் தட்டிக்கொண்டு நின்றார். கதவு தட்டும் சப்தம் கேட்டபோது மனைக்குள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமுகத்தி லிருக்கும் அனைவரும் திடுக்கிட்டு, கதவு தட்டுகிறவர் முஸ்லிமோ அல்லது, பகைவரோ எனக் கதவிலுள்ள துவார வழியாய் உற்று நோக்கி, உமறு கத்தாபு எனவறிந்து, திகில் பிடித்து உள்ளம் பதறி, பொறிக்கிடங்கில் வீழ்ந்து கிடக்கும் யானைகளை

யெர்த்து, முகங்கள் வாடி, நாவுகள் உலர்ந்து, அரவங் காட்டாமல் பதுங்கிக் கொண்டார்கள். உமர் கத்தாபு வரும் நோக்கம் இன்னது என்பது அவர்களுக்குத் தெரியாது; ஆயினும், பகை முதிர்ந்த நெஞ்சினை யுடையவரானதால், தீங்கு கருதி வருகின்றாரென்றே அனைவரும் இவ்விதம் அஞ்சிப் பதுங்கினார்கள்.

கதவுதட்டி நிற்கும் உமறு கத்தாபுக்கு அஞ்சி அரவங்காட்டாமல் அனைவரும் பதுங்கிக்கொண்டவுடன், ஹம்ஸா றலியல்லாஹு அன்ஹு சினம்கொண்டு மற்றவர்களை நோக்கி, “சகோதரர்களே! ஏன் அஞ்சுகிறீர்கள்? இந்த உமறு கத்தாபு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்படிந்து கலிமாச் சொல்ல நாடி வந்தாரேயானால் வரட்டும். நாம் மரியாதையுடன் அழைத்து உபசரிப்போம். அப்படியில்லாமல், ஏதும் தீங்கு செய்ய நினைத்து வந்தாரேயானால், அவர் கரத்தில் பிடித்திருக்கும் வாளைப் பறித்தே அவருடைய சிரசைத் தரித்துக் கொல்லுகிறேன், நீங்கள் அஞ்சாதீர்கள். கதவைத்திறவுங்கள்” என்று உரத்துச் சொன்னார். ஹம்ஸா றலியல்லாஹு அன்ஹு சொன்ன இத் தைரிய வார்த்தையைகேட்ட முஸ்லிம்கள் அனைவரும், மனத்திகிலொழிந்து விரைவாயெழுந்து கதவைத்திறந்தார்கள். கபாடம் திறக்கப்பட்டவுடன் உமறு கத்தாபு மனமகிழ்ந்து மனைக்குள் பிரவேசித்தார். உமறுகத்தாபு மனைக்குள் புகுந்து வருவதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்டு தங்கள் இருப்பைவிட்டெழுந்து எதிர்சென்று, தங்களின் மேலானமார்புடன் உமறுகத்தாபைக் கட்டித்தழுவிக் கையைப் பிடித்துக்கொண்டு “உமறே, வாருங்கள். தாங்கள் வந்த மூகாந்திரம் என்ன”? என்று உபசரணையுடன் பரிந்துகேட்டார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு உபசரித்துக் கேட்டவுடன் உமறுகத்தாபு மகிழ்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி “வானம் பூமியென்னும் இரண்டு உலகத்திற்கும் ஏகாதிபதியே! நபிமார்களுக்கு நாயகமே, அல்லாஹு தஆலாவின் றஸூலே, முஹம்மதே, தமியேனாகிய நான் தங்களின் பாதாரவிந்தங்களுக்குக் கீழ்ப்படிந்து கலிமா சொல்லி, தங்கள் சொற்படி யொழுகி நடக்கும் வண்ணம் இருதயங் கொண்டுவந்தேன்” என்று சொன்னார். இச் சொல்லைக்கேட்டவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆனந்தங் கொண்டு, தாங்கள் கருதியபடி நிறைவேற்றினதற்காக முகமலர்ந்து

அல்லாஹு தஆலாவைத் துதித்து ‘அல்லாஹு அக்பர்’ என்று தக்பீர் சொன்னார்கள்.

பிறகு நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கலிமாவைச் சொல்லிக்கொடுத்தார்கள். உடனே உமர் இபுனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கையைப்பிடித்துக் கலிமாசொல்லி, ஈமான்கொண்டு முஸ்லிமாய், இரண்டாம் கலீபாவும் அமீறுல் மூமினீனுமானார்கள். அன்றுமுதல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கும், மற்ற முஸ்லிம்களுக்கும் இருந்த பயம் அறத்தொலைந்தது. அன்று தொட்டு எதிர்வாதிக்கும் பகையர்களின் வில்லங்கத்திற்கு சிறிதும் அஞ்சாமல் சாதித்து நின்று, தங்கள் தீன் என்னும் ஒப்பற்ற மார்க்கத்தைப் பிரஸ்தாபம் பண்ணினார்கள்.

உமர் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு ஈமான்கொண்டு முஸ்லிமான செய்தியை அபூஜஹல் கேள்விப்பட்டுப் பொறாமை அடைந்து, “உமர் முஹம்மது உடைய மாயத்தில் சிக்கிக்கொண்டார்” என்று புறம்கூறத் தலைப்பட்டான். அன்றியும், பந்து ஜனங்கள் அனைவருக்கும் உமர்கத்தாபு உடையசங்கதியை மிக இழிவாகக்கூறி, பகையை மூட்டினான்.

உமர்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு ஈமான் கொள்ளுவதற்கு முன் முஸ்லிம்கள் முப்பத்து மூன்று ஆடவர்களும், ஆறு ஸ்திரீகளுமே யிருந்தார்கள். பிறகு உமர்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு சேர்ந்து நாற்பதுபேர் நிரப்பமாயிற்று. இவர்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைச் சூழ்ந்திருந்து கொண்டாடி மார்க்கத்தை ஸ்தாபனம் செய்து வந்தார்கள்.

30-வது அத்தியாயம்.

உடும்பு பேசியது

கலி விருத்தம்

இடும்பு பேசியிடுக்கண் விளைத்துமா
கெடும்பு செய்திடுங் கீழ்மைக் குபிரர்கள்
கொடும்ப தாதி குறைக்கு நபியொடும்
உடும்பு பேசிய தோதிடு வராமரோ.

இதன் பொருள்.

மகா இடும்புகள் பேசிப் பலவாறு துன்பம் விளைவித்துக் கெடுதலை செய்யும் ஈனத்துவமான காபிரீன்களின் கொடூரச் சேனைகளை யுத்தத்தில் வெட்டிக் கருவறுக்கும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களாடு உடும்பு பேசிய காரணத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திரப் புராணம்.

கலி விருத்தம்.

வடிவுறு முமறெனும் வள்ள னந்நபி
யுடனுயர் தீனிலைக் குரிய ராயபின்
றிடமுடைத் தவர்களாய்ச் சிந்தையிற் பெறு
மடமக றரப்பெரு மகிழ்ச்சி யெய்தினார்

வசனம்.

நபிகள்திலகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் துவா கேட்ட வண்ணம், அல்லாஹு தஆலா உமர் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களை இஸ்லாம் மார்க்கத்தில் சேர்த்த பிறகு, முஸ்லிம்களுக்கு உண்டான மன ஊக்கமும், தைரியமும் அதிகரித்தன. அதனால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், முஸ்லிம்களும் ஆனந்த மடைந்தார்கள். அஸ்ஹாபிகளாகிய முஸ்லிம்களனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தமது உயிருக்கு சமானமாகப் பாவித்தார்கள்.

ஒருநாள் நபிகள்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தமது தோழர்களில் சிறந்தவர்களாகிய அபூபக்கரிபுனு அபீகுகாஃபா றலியல்லாஹு அன்ஹு, உமர்இபுனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு, உதுமானிபுனு அப்பான் றலியல்லாஹு அன்ஹு, அலி இபுனு அபீத்தாலிபு றலியல்லாஹு அன்ஹு இந்நால்வரும், இன்னும் சில தலைவர்களும் புடைசூழ எழுந்து, மக்கமாநகரத்தை விட்டு, வெளிப்புறத்திலுள்ள ஒரு பூங்காவனத்தில் சென்று தங்கியிருந்தார்கள். நட்சத்திரங்கள் நெருங்க நடுவிலிருக்கும் பூரண மதியைப்போல நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஸ்ஹாபிகளுடன் பூங்காவில் தங்கியிருக்கும் போது,

அங்குள்ள கற்கள், தருக்கள், செடிகள், பூண்டுகள், தடாகங்கள், அவற்றில் மலர்ந்த புஷ்பங்கள், விலங்கினங்கள், பட்சி சாலங்கள், ஊர்வன தவழ்வனவாகிய ஜந்துக்கள், தோற்றப்படும் பொருள்கள் அனைத்தும் வாய்திறந்து, சிறந்த கலிமாவைச் சொல்லி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் துதித்துக் கொண்டாடி சலாம் கூறின. இப்புதுமையைக்கண்ட முஸ்லிம்கள் அனைவரும் ஆச்சரிய முற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் துதித்தார்கள். பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும் மற்றவர்களும் மீண்டும் மனைக்கு வந்தார்கள்.

அன்றுபோய், மற்றநாட் காலையில், நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், முன்வந்தவர்களுடன் புறப்பட்டு மக்கமாநகரத்தை விட்டு வெளிப்புறம்போய் வேறொரு இடத்தில் தங்கியிருந்தார்கள். இவர்கள் இப்படி யிருக்க, மக்கமாநகரத்திலுள்ள வேடன் ஒருவன், வேட்டை யாடுவதற்காக வீட்டைவிட்டெழுந்து, ஆயுதங்களணிந்து புறப்பட்டு, கானகத்தில் சென்று மான், மரை, முயல் என்னும் விலங்குகளைத் தேடி மலைச்சாரல்களிலும், இருளடர்ந்த வனங்களிலும், குகைகளிலும் ஓடியலைந்து வலை வீசியும், பொறிகிடங்கு வெட்டியும், கண்ணி குத்தியும் மிகஉழைத்துப் பிரயாசைப் பட்டான். புசிப்பதற்காக நீண்ட நேரம் வரையும் பாடு பட்டும் அவ்வேடன் மனத் திருப்தி யடையும் வண்ணம் ஒன்றும் அகப்படவில்லை. அதனால் அவன் மனம் நொந்து வாடி, தருக்க ளடர்ந்த வனத்தில் நுழைந்து, மெய் சலித்து வரும் போது, மகா பெரிய உடும்பு ஒன்று ஓடக்கண்டு, உடனே வலையை வீசி அவ்வுடும்பை வலைக்குள் மாட்டிப் பிடித்துக் கொண்டான்.

அவ்வேடன் உடும்பைப் பிடித்துக் கொண்டு ஆநந்தத்துடன் மரச்செறிவுகளை விட்டு வெளியில் வந்து கொஞ்சதூரம் நடந்தான். நடந்து வரும்போது, அங்கே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், அஸ்ஹாபிகள் புடைசூழ நடுவே வீற்றிருப்பதைக் கண்டு நெருங்கிநின்று மற்றவர்களை நோக்கி "இவர் யார்? இவரது செய்கை யென்ன?" என்றுகேட்டான். அப்போது அஸ்ஹாபிகள் அவனை நோக்கி "இவர்கள் அல்லாஹு தஆலாவுடைய றஸூல்; நபிமார்களுக்கு நாயகர்" என்று பதில் சொன்னார்கள். இதைக்கேட்ட வேடன் உடனே நபிநாயகம் ஸல்லல்

லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுகத்தில் வந்து நின்று கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நீர் எந்த வேதக்காரர்? நீர் நடத்தும் மார்க்கம் எது? எனக்கு அவற்றைத் தெளிவுறச் சொல்லு" என்று கேட்டான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனை நோக்கி "நான் நபிமார்களுக்கு முடிவாக வந்தவன். எனக்குப் பின் இனி நபியில்லை. என்னுடைய வேதம் குர் ஆன். போதிக்கும் மார்க்கம் இஸ்லாம். என்சொல்லை விசுவாசம் கொண்டு இஸ்லாம் என்னும் என் மார்க்கத்தை யடைந்து ஒழுகினவர்கள் முக்தியடைவர்; இச்சொல்லை மறுதலித்தவர்கள் நரகமடைவார்கள். ஆகையால், நீயும் கலிமாசொல்லி இஸ்லாத்தில் புகுவாயாக" என்று சொன்னார்கள்.

இதை வேடன் கேட்டு "நல்லது, உமது வார்த்தையை நான் மறுதலிக்க மாட்டேன். ஆயினும், நான் உம்மை நபிதான் என அறிந்து கொள்வதற்கு தகுந்த சாட்சியம் வேண்டும்" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைநோக்கி கேட்டான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்வேடனை நோக்கி "சிருஷ்டிகள் நானா வகையிலும் எதைக் கொண்டு நான் உனக்கு சாட்சி சொல்லுவிக்க வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கு வேடன், அவர்களை நோக்கி "என்னிடத்தில் ஒரு உடும்பு இருக்கின்றது. அது வாய்திறந்து உம்முடன் வசனித்தால் நான் உமது சொல்லை நம்புவேன்" என்றான். இதைக் கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறுநகைசெய்து "உன் உடும்பை இவ்விடத்தில் வெளியில் விடு" என்று சொன்னார்கள். அப்போது வேடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நான் காடு, மலைச்சாரல், குகைகள் எங்கும் ஓடியலைந்து காலோய்ந்து, மெய் வாடி, மனஞ்சலித்து இவ்வுடும்பை மாத்திரம் பாடுபட்டுப் பிடித்தேன். அது இப்போது வெளிவந்தால் இலகுவில் அகப்படாது. ஆனதால் அதை நான் என்மடியில் வைத்திருக்கின்றேன்" என்றான். அதற்கு நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனை நோக்கி "நீ அதை என் எதிரில்விடு; அது நகராமல் நிற்கும்" என்றார்கள். இச்சொல்லைக் கேட்டவுடன் அவன், மடியிலிருந்த உடும்பை எடுத்து நிலத்தில் விடுத்தான்.

வேடன் உடும்பைத் தரையில் விட்ட மாத்திரத்தில், அது தலை நிமிர்ந்து வாலசைத்து, தன் கூரமைந்த நகங்கள் பதியும்படி நிலத்தில் ஊன்றி நகராது நின்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, இவர் கடவுளுடைய தூதர் என்னும் இருதயத்துடன் நோக்கிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது திருவாய் திறந்து "ஓ! உடும்பே!" என்று விளித்தார்கள். விளித்தவுடனே, அவ்வுடும்பு கண்களைத் திறந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உற்று நோக்கி, தன் இரட்டை நாவைக் கொண்டு சொன்னதாவது:—

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

இகம்பர மெனவரு மிருமைக் குண்மையா
யுகம்பல வுதிக்குமுன் னுதித்துப் பின்னுதித்
தகம்பயி லாரணத் துறைந்து செப்புமுச்
சகம்பு கழ்ந் திடவருந் தக்க நீதி யோய்.

அண்டர்கள் பரவுறும் மடியை நாடொருந்
தெண்டனிட் டிருவிழி சிரசின் மீதுறக்
கொண்ட சிற்றடிமையே னுய்யக் கொண்டுவாய்
விண்டெனை விளித்தவை விளம்பு கென்னவே.

வசனம்.

"சர்வ சிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப் படுவதற்கு முந்தி ஆதிகாரணமா யுதித்து, எல்லா உலகங்களுக்கும் எஜமானாய், பிற்காலத்தில் நபிமார்களுடைய அதிகாரத்தை முடிவு செய்யும் நபியாய் பிறந்த நஸலே! சிறந்த வானவர்களும் துதிக்கும் தங்களின் ஒப்பற்ற பாதங்களை என்றும் தியானித்து, சிரசிலும் விழியிலும் அமைத்திருக்கும் இந்தச் சிறிய பிராணியைத் தாங்கள் அருமையான வாய்திறந்து விளித்த காரணம் என்ன?" என்று கேட்டது. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அதைநோக்கி "நீ யாரை வணங்குகின்றாய்" என்று கேட்டார்கள். அது "நாயகமே, நான் வணங்கும் நாயன் தனித்தவன், ஒப்பற்றவன், துப்பறவானவன், அவனுடைய நிகரில்லாத ஆசனம் ஆகாயவிரிவில், ஆளுகை பூமண்டலத்தில், கருணை

சுவர்க்கத்தில், கோபம் நரகத்தில்—இவ்வகைப்பட்ட பெரியவன் ஒருவனையே நான் என்றும் வணங்குகிறேன்" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லிற்று. மறுதரமும் அதை நோக்கி "நீ நியாயம் சொன்னாய். என்னை யாரென்று கருதினாய்?" என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அப்போது அவ்வுடும்பு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "படைக்கப்பட்டவை யனைத்தும் தங்களின் ஒளிவாலேதான் படைக்கப்பட்டன. தாங்களே அனைத்திற்கும் கரு. தாங்கள் நபிமார் அனைவருக்கும் ஆதியாகவும் அந்தமாகவும் வந்தவர்கள். தாங்கள் உண்மையான றஸூல். இனி தங்களுக்குப் பிற்காலத்தில் வேறு நபியில்லை. தாங்கள் இப்போது நடத்தும் ஒப்பற்ற மார்க்கமே முக்தி மார்க்கம். தங்களை விசுவாசம் கொண்டவர்கள் முக்தியடைவார்கள். தங்கள் சொல்லை மறுத்தவர்கள் நரகம் புகுவார்கள். தங்களின் சிறந்த நாமதேயமுள்ள கலிமாவை உயர்திணைகள் உள்ள மூவந்து சொல்லியிருப்பதுமன்றி, என்னையொத்த அஃறிணைப்பிராணிகளும் கூறியிருக்கின்றன. நான் தங்களை இவ்வாறே நம்பி மனவுறுதி கொண்டிருக்கிறேன்" என்று கூறிற்று.

இவ்வாறு உடும்பு பேசின மாத்திரத்தில், அருகில் கேட்டுக் கொண்டு நின்ற வேடன் திடுக்கிட்டு, மனமஞ்சி ஆனந்தபரவசமடைந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாதத்தில் வீழ்ந்து "என்னையும் என் குடும்பத்தையும் இரட்சிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அவ்வறபியாகிய வேடன் இவ்வாறு பிரார்த்தித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் திருவடியைத் தொட்டுக் கண்களில் வைத்து முத்தமிட்டு, கலிமாச் சொல்லி முஸ்லிமானார்.

பிறகு, அவர் தாம் பிடித்துவந்த உடும்பை நோக்கி "உடும்பே! நான் உன்னைப் பிடித்ததால், என்னைப்பிடித்த தீமையனைத்தும் தொலைந்தன. உன்னைக்கொண்டே எனக்கு நல்வழி கிடைத்தது. நீ க்ஷேமமாய் வனத்தில் சென்று வாழ்ந்திரு" என வாழ்த்தினார். அப்போது அவ்வுடும்பு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களையும், அங்குள்ள அஸ்ஹாபிகளையும், அறபியாகிய வேடரையும் . பார்த்துக்கொண்டிருந்தது. உடனே நபிநாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் உடும்பை விளித்து, நீ வனத்தில் உறையிடமடைந்து சுகமாய் வாழ்ந்திரு, வென விடை கொடுத்து அனுப்பினார்கள்.

31—வது அத்தியாயம்.

உத்பா வந்தது

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கத்துவார் கடனிக ராருங் காபிர்கள்
புத்தெலா முடைபடப் புகலு மாமறை
முத்திநா யகநபி முஹம் மதினிடம்
உத்துபா வந்ததை யுரைக்கு வாமரோ.

இதன் பொருள்

சப்திக்கும் நீண்ட கடல்போலே பெருப்பமாகப் பொருந்திய காபிரீன்கள் கைகுவித்து வணங்கும் புத்துசாமிகளை யெல்லாம் உடைக்கும் படியாய், மகத்தாகிய புர்க்கா னென்னும் பெயரையுடைய வேதத்தையோதும் மோட்ச நாயகரான நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில், திருமக்கமா நகரத் தலைவர்களி லொருவனாகிய உத்பா வென்பவன் வந்த வரலாற்றைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அடவியினி லுடும்பகல அறபிவே
டனுமறிவுள் ளகத்திற் றேக்கிப்
புடையகலா நிழல்போலுந் தோழருட
னஹ்மதையும் புகழ்ந்து போற்ற
மடலவிழ்பைங் குவளைசெறி மடுச்சூழு
நீள்புரிசை மக்க மீதி
லுடுவினமு நடிவுறையு நிறைமதியு
நிகர்த்திடவந் துறைந்தா ரன்றே.

வசனம்.

நபிகட்திலகம் தாஜுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சந்நிதியிலிருந்து அந்த உடம்பு

வனத்திற் சென்றபின், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், கலீபாக்களாகிய அருகர் நால்வரும், அஸ்ஹாபிகளாகிய மற்ற தோழர்களும், அப்போது முஸ்லிமான வேடரும் அவ்விடத்தை கடந்து மக்கமா நகரத்திற் பிரவேசித்து, மனத்திருப்தியுடன் சந்தோஷ மடைந்திருந்தார்கள்.

தங்கள் இஸ்லாம் என்னும் ஒப்பற்ற மார்க்கத்தைப் பரப்பும் கருமத்தில் அவர்கள் சோம்பி யிருக்கவில்லை. நாளேற மார்க்கமும் வளர்ந்தேறிவந்தது. அருகர்களில் ஒருவராகிய உமர் கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள், காபிர்கள் பேரில் பகை சாதிக்கும் ஊக்கத்தில் கொஞ்சமும் பின்னிடையாமல் அதிகமான சாதனையில் தலைப்பட்டார்கள். அதனால் பகைவர்களுக்குப் பொறாமை விர்த்தியாயிற்று. ஆனபோதிலும், அப்பகைவர்கள் செய்யும் தீங்கான கருமங்களில் தினையளவாவது சித்திபெறவில்லை.

காரியம் இவ்வாறு நிகழும் காலத்தில், ஒரு நாள் காபிர்கள் அநேகர் ஒருங்கு திரண்டு, துராலோசனை சங்கம் ஒன்று கூட்டுவித்து, அண்டமளாவும் பருப்பத்தை அரித்து அழிப்பதற்காக கொசுக்கள் திரண்டு ஆலோசிக்கும் பாவனையாய், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறித்து ஆலோசித்தார்கள். அன்று கூடிய ஆலோசனை சபையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மிகத்தாழ்த்தி, அவர்களின் திருவாக்கிற் பிறக்கும் வேதவாக்கியங்களை யெல்லாம் சுத்த அபத்தம் என இழிவுசெய்து, ஈமான் கொண்டவர்கள் அனைவரையும் சமுசார சகிதம் பிடித்து வருத்தி, மக்கமா நகரத்தை விட்டுத் துரத்தி, தங்கள் கோத்திரம், தெய்வாராதனை முதலிய கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டும் எனத் தீர்ப்பு செய்தார்கள். அச்சபையிலுள்ள சிலர் இக்கருமத்திற்காக வேண்டிய உபாயங்களையும் சொன்னார்கள். அப்போது றபியாத் உடைய மகன் உத்பா என்பவன் அச்சபையில் எழுந்து நின்று, "சபையார்களே, நான் இப்போது அந்த முஹம்மது இடத்தில் சென்று, சில வினாக்களை வினாவி, அவ்வினாக்களுக்கு அவன் கொடுக்கும் விடையைக் கொண்டே வாதானுவாத வாக்குவாதப் பிரமாணத்தின்படி அவனுடைய மார்க்கத்தை நிராகரணஞ் செய்து, குபல் அல்லாமல் வேறு தெய்வம் ஒன்றுமில்லை என்பதை ஸ்தாபித்து, இனி அவன் தன் மார்க்கத்தைப் பயிரங்கம் செய்யா வண்ணம் நாவடங்கச் செய்துவிட்டு வருகிறேன்"

என்று சொல்லி, மதயானைபோல அச்சபையைவிட்டுப் புறப்பட்டான். இந்த உத்பா என்பவன் இவ்வாறு சொல்லிப் புறப்பட்டது, நிலையற்று வெகுவிரைவாய் நடந்து செல்லும் சூரியனை இரண்டு கால்களும் வழங்காத முடவனொருவன், நான் முன் சென்று மறிக்கிறேன் என்று எழத்துணிந்ததற்கு ஒப்பாயிருந்தது.

சிந்தனையின்றி கர்வமான வார்த்தையை சபையில் சொல்லிவிட்டுப் புறப்பட்ட உத்பா என்பவன், அஸ்ஹாபிகள் புடைசூழ வீற்றிருக்கும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சபைக்கு வந்தான். தமது திருச்சபையில் உத்பா வந்ததை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்டு அவனை நோக்கி சந்தோஷக் குறியுடன் "வாரும், அங்கே உட்காரும்" என அஸ்ஹாபிகளுக்கு சமீபத்தில் ஒரு தானத்தை சுட்டி உட்காரச் செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அமரும் வண்ணம் விடைகொடுத்தவுடன், தன் வலக்கையிற் பிடித்த ஆயுதத்துடனே துர்ச்சிந்தனையுடைய உத்பா உட்கார்ந்தான்.

வன்பகை குடிகொண்ட நெஞ்சினையுடைய உத்பா என்பவன் அச்சபையிலிருக்கும் அஸ்ஹாபிகள் அனைவரையும் புகழ்ந்து துதித்து, பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி, "முஹம்மதே! நான் உம்முடன் சம்பாஷிக்க வேண்டிய சில சம்பாஷனைகள் என் இருதயத்தில் உண்டு; அவற்றை நீர் உவந்து கேட்டுத் தகுந்த உத்தரவு கொடுக்க வேண்டும். அவை: ஒப்பற்ற கடவுள் ஒருவனேயன்றி வேறு தெய்வம் இல்லையென்றும், முன்னுண்டான வேதங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டவை, எனது வாக்கே சத்தியவாக்கு, எனது வேதமோ சத்திய வேதமென்றும், பண்டுதொட்டுள்ள மார்க்கங்களெல்லாம் வழு, எனது மார்க்கமே பரிசுத்தமான மார்க்கமென்றும், எனது மார்க்கத்தில் பிரவேசித்தவர்களே முக்தியடைவார்களென்றும் நீர் சொல்லும் சொற்களனைத்தும், இவ்வுலகத்திலிருக்கும் மனிதர்களுக்குப் பொருத்தமானவை யல்ல என்பது எவருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனால், முதலாவது: நீர் கடவுள் ஒருவனுண்டு என்று மாத்திரம் சொல்லுகிறீரல்லாமல், அக்கடவுள் இன்ன வடிவுடையவன், இன்ன நிறமுடையவன், இன்ன இடத்திலிருக்கிறான் என எவருக்கும் விளங்கத் தெரிவிக்கவில்லை,

இரண்டாவது: தொழுகை என்று நூதனமான ஒரு வணக்கத்தைத் தொடுத்து நிற்கிறீர், அவ்வணக்கம் கை, முகம் கால் என்னும் உறுப்புகளைக் கழுவிக்கொண்டு ஒருதிசையை நோக்கி நின்று குனிந்தும் நிமிர்ந்தும் குப்புற வீழ்ந்தும், எழுந்தும், கைகளை யேந்தி வாய் முணுமுணுத்துப் பலவாறு காட்டும் கோரணியான அங்க சேஷ்டையாகக் காணப்படுகிறதே யன்றி, அவ்வணக்கத்தில் வேறு யாதொரு குறிப்புமில்லை. தொன்று தொட்டுள்ள மனிதர்களில் இவ்வித வணக்கம் யார் வணங்கினது? மூன்றாவது, நான் கடவுளுடைய தூதன் என்று பெயரிட்டுக் கொண்டு, இது வேதவாக்கியம் என நூதனமான சில வசனங்களைச் சொல்லிக் காட்டி, அநேகரை ஈமான் கொள்ளுவித்து உமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டீர். அப்படி ஈமான் கொண்டவர்களில் ஒருவராவது எங்கள் கடவுளை இன்னபடி யென்று பிரத்தியட்சமாய் கண்டு கொண்டேன் என்று சொல்ல இதுவரையும் நான் கேட்டதில்லை. அன்றியும், மோட்சம் ஒன்று உண்டென்று நீர் சொல்லுகிறீர். அது உண்மை தான் என்று கண்டறிந்தவர் யார்? நான்காவது: வனத்திற்பிடிப்பட்ட வேடனுடைய உடும்புக்கு மந்திரசாரணம் செய்து உருவேற்றி அதைபேசுவித்துவிட்டு "நான் உடும்புடன் பேசினேன்!" என்று அந்தரவீச்சு வீசுகிறீர். அது மந்திரஜாலமல்லாமல் வேறென்ன தெய்வீகமோ! உமது நடவடிக்கைகள், மாயவித்தைகள், பொய்யான நிராதாரவசனங்கள் அனைத்தையும் பாமரர்களும், சிறுபிள்ளைகளும் உறுதி கொள்ளுவார்களே யல்லாமல், சர்வ சாஸ்திரஞானிகளாகிய பண்டிதர்களில் யாராவது நம்புவார்களா? முஹம்மதே, நீர் நன்றாய் உற்று ஆராய்ந்து பாரும். நமது பந்துக்களுக்கும், கோத்திரப் பிதாக்களுக்கும், வேதபாரகர்களுக்கும், ஒப்பற்ற இந்த மக்கமாநகரத்துக்கும், குபல் என்னும் சுவாமிக்கும், இன்னுமுள்ள அந்நிய சமயத்துக்கும் நீர் விரோதி யாகி, பிறந்த ஊரில் கலகத்தை விளைவித்து, தீராப்பகையாய் சர்வஜனங்களுடைய பொல்லாங்குக்கும் ஆளாகாமல், உமது பிடிவாதமான கொள்கையை விட்டொழிவது தான் உத்தமம், நியாயமுமாகக் காணப்படுகின்றது. நீர், பிதாமாதாக்களுடைய கோட்பாடுக்குத் தலைசாய்த்து ஒழுகி, நம் மூதாட்கள் நடந்த மார்க்க முறைமைகளைத் தழுவி நடக்க வேண்டும். அப்படி நீர் செய்தால், இப்போது விளைந்துள்ள பெரும்பகை அறநீங்கும்.

ஒரு தீங்கும் உமக்கு உண்டாகாது. அன்றியும், உம்மை சிங்காசனாதிபதியாக்கி நாங்கள் அனைவரும் உமது ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது சத்தியம்" என்று சொல்லி முடித்தான்.

அச்சம் சிறிது மில்லாமல் தனது பேதமையை வெளிப்படுத்தும் வண்ணம் உத்பா என்பவன் சொன்ன சொற்கள் அனைத்தையும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். அவன் தனது பிரசங்கத்தை முடித்தவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சிரிப்பு வந்துவிட்டது. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் உத்பாவை நோக்கி நறுநகை செய்து கொண்டு "ஏ! உத்பா! என்ன நீ நியாய சாஸ்திர நிபுணனாக உன்னைப் பாவித்து, என்னிடம் பலவித உபாய வார்த்தைகளைப் பேசினாயே, நல்லது இருக்கட்டும். எனக்குரிய வேதவாக்கியங்கள் சத்தியமல்ல வென்று நீ சொல்வது, உன் மனப் பொறாமையினாலோ! அல்லது அறிவீனத்தினாலோ! அது எப்படியானாலும் ஆகட்டும், இப்போது நீ என்னிடம் வினவிய ஒவ்வொரு வினாவுக்கும் நான் தகுந்த நியாயங் காட்டி விடைகூறுதல் அத்தனை அவசியமல்ல. உனது வினாக்கள் அத்தனையும் நிராதாரமான ஆபாச வினாக்களே யன்றி, சத்தியம் கொண்டவையல்ல. ஆனால், நீ நியாயவாதியைப் போலப் பேசத் துணிந்தபடியால், நான் அதற்கு நியாயமான ஒரு பதில் சொல்லுகிறேன் கேள்: நான் நபியென்றும், தூதனென்றும், எனக்கு வேத மிறங்கிற் றென்றும் தகுந்த ஆதாரமின்றிச்சொல்லவரவில்லை. முன்னுள்ள வேதங்களும், அவற்றின் கிளைகளாகிய சாஸ்திரங்களுமே, நான் சொல்லுவதனைத்தும் உண்மையெனச் சாட்சி பகரும். இஃது இப்படியாக, நான் சொல்லும் சொற்கள் எல்லாவற்றையும் பொய் யென்று நீயும், உன்னைச் சேர்ந்தவர்களும் நிராதார வார்த்தையாக நிராகரிக்கின்றீர்களே யன்றி, தகுந்த அத்தாட்சியுடன் நிராகரிக்கவில்லை. நான் அபத்தனென்றும், என் சொற்கள் நம்பத்தக்கவையல்ல வென்றும் முன்னுள்ள வேதாகமசாஸ்திரங்களிலுள்ள ஒரு வாக்கியத்தைக் கொண்டாவது நிராகரிப்பதுதான் நியாயம். என்று சொன்னார்கள். இந்த அருமையான வசனத்தை உத்பாஎன்னும் பாதகன் கேட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, "முஹம்மதே, முன்னுள்ள வேதாகமசாஸ்திரங்களின் வாக்கியங்களனைத்தும் இவ்வுலகம்

அறிந்தவைதாமே. அவற்றை இப்போது நான் பேசுவதில் பிரயோசனம் என்ன? இப்போது புதிதாய் உமக்கு இறங்கின வேதத்தில் ஒரு வாக்கியத்தை நீர் சொல்லும் பார்ப்போம்" என்று கேட்டான். இவ்விதம் உத்பா கேட்டவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவைத் துதித்துத் தங்களின் திருவாய் மலர்ந்து பிஸ்மில் சொல்லி, குர்ஆனிலுள்ள ஸூறத்துல் இக்லாஸ் முழுமையும் ஓதிக்காட்டி அதற்கு வியாக்கியானமும்செய்தார்கள்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வேத வாக்கியங்களடங்கிய ஒரு அத்தியாயத்தை யோதி அதன் விருத்தி யுரையுஞ் சொல்லிக் காட்டினதைக் கேட்ட உத்பா மனம்மயங்கி ஆச்சரியமடைந்து, பதில்பேச நாவெழாமல் அடங்கி, இது கடவுளுடைய வசனந்தான் எனத் தெளிவுற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்க வெட்கி, மிருகத்துக்கு சாமானமாய்ச் சபையிலுள்ளவர்களுடன் ஒன்றும் பேசாமல் எழுந்து, தலை குனிந்தவனாய், நாம் நமது சபையாருக்கு முன் மிகக் கர்வமாய் பேசிவிட்டு வந்தோமே, அவர்களுக்கு இப்போது போய் என்ன சொல்லுகிறது என எண்ணி, உள்ளம் தடுமாறி நெடுமூச்செறிந்து புலம்பிக்கொண்டு, சஞ்சலப் பிரவாகத்தில் மூழ்கினவனாய் உடல் சோர்ந்து தனது சபையாரை நாடி வந்தான்.

உத்பா என்பவன் தன் அறிவு நிலைதளர்ந்து, புலன்கள் மாறு பட்டு, முகம் வெளிறி, தலைகுனிந்து வந்ததை அபூஜஹலின் சபையார்கண்டு ஆச்சரிய முற்று, உத்பாவை நோக்கி, நீர் முஹம்மது இடம் சென்ற வகையும், அங்கே நடந்த சம்பாஷணைகளையும், மற்ற வர்த்தமானங்களையும் விவரமாகச் சொல்லும் என்று கேட்டார்கள். அதற்கு உத்துபா சபையாரை நோக்கி "சபையாரே, முஹம்மது உடைய சொல்லை நிராகரித்து எதிர் நின்று சாதிப்பதற்கு வானவர்களாலும் இயலாது. ஆனபடியால், அந்தமுஹம்மது உடன் வாதாறு வாதம் செய்ய மனிதப்பிறவியாகிய நாம் எம்மாத்திரம்?" என்றான். மனக்கலக்கம் பிடித்த உத்பா இவ்விதம் சொன்ன சொல்லைக் கேட்ட அந்தக் காபிர்கள் அனைவரும் அட்டகாசம் செய்து, "ஆ! முஹம்மது என்பவன் அஃறிணைப் பொருள்கள் அனைத்தையும் மனம் பேதலித்து வாய்திறந்து பேசச் செய்கிறது மன்றி, மனிதர்

களையும் தன்மாய வித்தையால் வசமாக்கிக் கொள்ளுகிறான். இவ்வித மாயஜாலங் கற்ற அவன், இந்த உத்பாவுடைய மனதைப் பேத லிக்கப் பண்ணினது என்ன பெரிய காரியமா?" என்றார்கள். உத்பா மனங்கலங்கிச் சொன்னதும், அதற்கு சபையார் சிரித்து மேற் கண்ட வண்ணம் சொன்னதும், உண்மைதான் என்று அபூஜஹல் என்பவன் ஆராய்ந்தறிந்து, அனைத்தையும் உள்ளத்தில் இருத்திக்கொண்டு அச்சமற்றுக் கீழ்வருமாறு தன் சபையாரை நோக்கிச் சொல்லலானான்:—

"சபையிலுள்ளவர்களே, இந்த முஹம்மது என்பவன் தனது திரவியச் செருக்கினாலாவது, குடும்பத்தாரின் மகத்துவத்தினாலாவது எவ்வளவு வீரதீரத்தைக் காட்டி எதிர்த்தாலும், இன்னும் அவன் கற்ற மாயாஜாலங்களைக் கொண்டு எவ்வளவு அற்புதங்களைக் காட்டினாலும், அவன் செய்யும் செய்கைகளுக்கு அஞ்சி நான் கீழ்ப் படிய மாட்டேன். அவனுடன் எதிர்த்து நின்று பழிசாதிக்கும் நிர்வாகம் எனக்கு உண்டு. எவ்வகையாலாவது அவனைக் கொன்று அவனுயிரை வானுலகத்திற்கு அனுப்பி நான் கோரிய கருமத்தை முடிக்காமல் விடமாட்டேன். அவன் இடைக்கிடை காட்டும் ஜாலவித்தைகள் எவ்வகைப் பட்டதாயிருந்த போதிலும், அவைகளில் என் மனம் தளர்வடையாது. கத்தாபு உடைய மகன் உமர் என்பவன் அறிவில் முதிர்ந்தவனல்ல. மனோதைரியமும், சரீரவலிமையுமில்லாதவன். ஆனபடியினாலேதான் முஹம்மது விளைத்த மாயத்தினால் வந்த ரிஷபத்தைக்கண்டு மனம் மருண்டு, அவனுடைய ஜால வலையில் அந்த உமர் சிக்கிக் கொண்டான். நான் உமரைப்போல மருண்டுவிட மாட்டேன். இச்சொற்களனைத்தையும் சத்தியமாக நினையுங்கள். இன்னும் சொற்ப தினத்திற்குள் முஹம்மது உடைய வீரம், தீரம், மாயம் எல்லா வற்றையும் சிதறடித்து, நான் நினைத்த படி முடிக்கிறேன் பாருங்கள்."

என இவ்வாறு தைரியம் குலையாமல் சொல்லி முடித்து விட்டு, அச்சபையை விட்டெழுந்து தனது மாளிகைக்குச் சென்றான். அன்று கூடிய சபை கலைந்தது.

32-வது அத்தியாயம்.

ஒட்டகங்கள் பேசின

விருத்தம்

மடங்கொளுங் குபிர்க்கா டெல்லா மடிதர உலகமுற்று
நடங்கொளுந் தீனேமிக்கு நாட்குநா ளோங்கும் காலம்
வடங்கொளும் பெருமான் முன்னம் வந்துநின் றொடுங்கிமாறுத்
திடங்கொளுஞ் சோகம் பேசும் திரத்தினை கூறுவாமால்.

வசனம்.

அபுல் ஹஸனுல் பக்ரீ உடைய ஸீறுவில் எழுதப்பட்டிருப்பதாவது:— நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தீன் என்னும் பரிசுத்தமான முக்தி மார்க்கத்தை எங்கும் பரவச் செய்து அரசு செய்யும் காலத்தில், அவாதிக் என்னுமூரில் முன்ஸிரு என்றொருவர் இருந்தார். அவருக்கு கணக்கற்ற திரவியங்களும், ஒட்டகங்களும், விலை உயர்ந்த பட்டு வஸ்திர சாமான்களும், உண்டாயிருந்தன. அவர் முன்னுள்ள வேதங்களை ஓதி ஆராய்ந்தவராயும், அவைகளில் மக்கமா நகரில் அப்துல்லாவின் புத்திரர் முஹம்மது அல்லாஹ்வின் திருத்தூதராய் பிறப்பாரென்றும் அவரைப் பின்பற்றியவர்களே மோக்ஷகதி யடைவாரென்றும் ஆராய்ந்து அறிந்திருந்தார். அவருக்கு மரண காலம் அடுத்தபோது, தன் புதல்வர் நாஜீ என்பவரை அழைத்து, முஹம்மது முஸ்தபா றஸுல், ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய ரூபலாவண்யத்தையும், அவர்களின் குறிநிசயங்களையும், வர்ணிப்பையும் தெளிவாகச் சொல்லி தன்னுடைய சொத்துகளிலிருந்து தங்கம் வெள்ளி பட்டு வஸ்திரங்கள் முதலியன பதினேழு ஒட்டகங்கள் மீது சுமக்கும் பாரம் நிறைய ஏற்றி, அவைகளைக்கொண்டு மக்கமா நகரஞ்சென்று, இவை என்னாலளிக்கப்பட்ட ஹதியாவென்று முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கொடுத்துவிடும்படி வஸியத்து செய்துவிட்டு மவுத்தானார்.

அவ்வஸியத்தை அவர் மகனார் நாஜீ ஏற்றுக்கொண்டு நாளாய் அதைமறந்து இருந்துவிட்டார். ஒருநாள் அவருடைய கனவில் ஒருவர் வந்து " ஓ நாஜீ! நீ பொருளின்மீது பேராசை

கொண்டு பிதாவினுடைய வஸியத்தை மறந்து விட்டாயா? பொருளுக்கு உடையார் வசம் பொருளை சேர்த்துவிடு" என்று சொல்லிவிட்டுச் சென்றார். நாஜீ உடனே திகில்கொண்டு விழித்து, தகப்பனார் சொன்ன வஸியத்தின்படி சாமான்களை எடுத்து பதினேழு ஒட்டகங்கள் மீது நிறைத்து சுமத்திக்கொண்டு, தானும் அலங்காரமாகசிங்காரித்து இரத்தின கிரீடம் அணிந்துகொண்டு, ஒட்டகைகள் சகிதம் பிரயாணப்பட்டு மக்கா நகர் வந்து சேர்ந்தார்.

இவர் பதினேழு ஒட்டகங்கள் நிறைய முதல் சாமான் களோடு ஆரவாரமாய் வந்திருப்பதை குறைஷிகள் அறிந்து இதை அவர்களின் தலைவன் அபுஜஹலுக்கு அறிவித்தார்கள். அவன் உடனே வந்து இவரை நோக்கி "நீர் யார்? எங்கிருந்து வந்தீர்!! இவ்வொட்டகமும் இப்பொருள்களும் எதற்கு?" என விசாரித்தான். அதற்கிவர் "இவையாவையும் இந்நகரத்தில் ஒரு மஹான் மஹா கீர்த்தியும், வெற்றியும், சித்தியும், நன்றியுமுடைய ஒருவருக்கு கொடுக்கும்படி என் தந்தையார் வஸியத்து செய்திருந்தார். அதன்படி கொண்டுவந்தேன்" என்று சொல்லி அதன் சம்பந்தமாய் தனக்குள் நிகழ்ந்த விஷயத்தையும் சொன்னார். அப்போது அபூஜஹல் அந்த ஹதியாவுக்கு உடையவர் இந்நகரத்தில் யார் தான் இருக்கிறார் நீர் சொல்லுமே என்றான். அதற்கு நாஜீ "எனது தந்தையார் சொல்லி யனுப்பிய வர்ணிப்புகளை கொண்டுதான்நான் அறிவேன்" என்றார். அப்போது அபூஜஹல் தன் கூட்டத் தாருக்கு அதற்குடையவன் நான்தான் என்று சொல்லுங்கள் என்று தூண்டினான். அதுபோல் அவர்கள் அபூஜஹலைக் காட்டி அது இவர்தான் என்று சொல்ல, நாஜீ அபூஜஹலை கூர்ந்து பார்த்துவிட்டு, அந்த வர்ணிப்புடையார் இவர் இல்லை என்று சொல்லிவிட்டார். பிறகு இன்னொருவன் எதிரே வந்து நின்றுகொண்டு " அது நான்தான், இந்த ஹதியா எனக்குள்ளதுதான்" என்றான். இப்படி பலபேர்கள் வந்து சொல்ல இவர் அவர்களையெல்லாம் பார்த்துவிட்டு, நீங்கள் ஒருவரும் அந்த வர்ணிப்பில் இல்லை என்று மறுத்து விட்டார்.

அப்போது அந்த குறைஷிக் காபிர்களெல்லாரும் அடங்தேற்றமாய் நின்றுகொண்டு அந்த வர்ணிப்புடையவர் எப்படி இருப்பரோ அவர் பெயர் தான் என்ன? அதை சொல்லுமே, பார்க்கலாம் என்று கேட்டார்கள். அப்போது நாஜீ, அவர் பெயர்

முஹம்மதுப்னு அப்துல்லா என்று என் தந்தையார் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, ஒரு மஹா தொனியோடு சப்தமிட்டு "ஓ மக்கத்துடையவர்களே! செய்யிதுல் அவ்வலீன் வல்ஆகிறீன் ஆகிய முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எனக்கு அறிவித்துதர உங்களில் ஒருவரும் இல்லையா?" என்று கேட்க, ஸியாரத் என்றொரு மனிதன் எதிரே, வந்து நான் காட்டிதருகிறேன், வாருமென்று கூட்டிக்கொண்டு, ஒட்டகங்கள் சகிதம் ஹாஷிம் கிளையார் கூடியிருக்கிற கூட்டத்தின் நடுவே, றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய சமுகத்தில் கொண்டு போய்விட்டார். காஜீ என்பவர் இருலோக ரக்ஷகரான காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திவ்விய திருமேனியின் அழகையும், அம்மேனியின் கஸ்தூரி வாசனை எங்கும் பிரவாகித்து வீசும் தன்மையையும், மிக நீண்டு விளங்கும் இரண்டு கைகளையும், பூரண சந்திரனைப் போல இலங்கும் முகத்தையும் மன்னுயிரைத் தன்னுயிரைபோல் நோக்கும் காருண்ய விழிகளையும், பரிசுத்தமும் மதுரமும் அமைந்த திருவாக்கையும், தோள்புயத்தில் பதிந்த இலாஞ்சனை எனும் நுபுவ்வத்தையும் இவைபோன்ற இன்னும் பலவித நற்குறிகளையும் பார்த்த மாத்திரத்தில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதார விந்தத்தில் விழுந்து, சாஷ்டாங்கஞ் செய்து பணிந்தார். அப்போது நாயகமவர்கள் நான் பெருமை அடிக்கின்றவனல்ல. நீர் தலையை உயர்த்து என்றார்கள். உடனே காஜீ தன் தலையை உயர்த்தி, "அஸ்ஸலாமு அலைக்க யா றஸூலல்லாஹி" என்று சலாம் சொல்லி போற்றிப் புகழ்ந்து சில கவிகளை பாடினார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அக்கவிகளைக் கேட்டு சிரித்துக்கொண்டு, எனக்கு கொடுத்து அனுப்பிய அமானத்தை சேர்த்து விட்டீரா? அல்லாஹு தஆலா "இன்னல்லாஹ யஃமுறுகும் அன்து அத்துல் அமானாத்தி இலா அஹ்லிஹா". என்று திருவுளம் பற்றியபடி அமானத்தை அதையுடையவர் பால் இறுத்தி வைத்தீரா என்று சொன்னார்கள். அதைக்கேட்ட காஜீ ஆச்சரியமுற்று நாயகமே! அதை உங்களுக்கு அறிவித்தது யாரென்று கேட்கவும், ஜிப்ரீல்

அலைஹிஸ்ஸலாம் அறிவித்தார்களென்று சொன்னார்கள். இவ்வத்தாட்சியை காஜீ கண்ணாரக் கண்டபின் வேறு அத்தாட்சி எனக்கு வேண்டியதில்லை. இருலோக ரக்ஷகரான நபிகள் நாயகமே! தங்கள் திருகரத்தை நீட்டுங்களென்றார். அவர்கள் நீட்ட, கரத்தை பற்றிக்கொண்டு, அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅன்னக முஹம்மதுர் றஸூலுல்லாஹி என்று திருக்கலிமாவை யோதி ஈமான் கொண்டு இஸ்லாத்தை தழுவினார். உடனே தான் கொண்டு வந்த பதினேழு ஒட்டகங்களையும் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பால் ஒப்படைத்து விட்டார்.

இதை குறைஷித் தலைவனான வம்பன் அபூஜஹல் கேள்வியுற்றபோது மனம்முறிந்து, சஞ்சலித்து, விசாரமுற்று, வெந்து, நொந்து புலம்பலுற்றான். "என்னுடைய கூட்டத்தார்களே! குறைஷிகளே! முஹம்மதால் வரும் ஆபத்துகளைப் பார்க்கவில்லையா! எமன் பதியிலிருந்து நமக்காக பதினேழு ஒட்டகைகளின் மீது ஏற்றி வந்த பொருள்களை முஹம்மதானவர் ஸிஹறு என்னும் வஞ்சகம் செய்து அபகரித்துக்கொண்டார். ஆனதால் குறைஷிக் கூட்டங்களே! அவைகளை எனக்கு வாங்கிதந்தால் சரி, இல்லாவிடில் நான் தற்கொலை புரிந்துகொள்வேன்" என்றான்.

அதைக்கேட்ட குறைஷிகளெல்லாம் "நாங்கள் அனைவரும் உம்முடைய தொண்டர்களாயிருக்க உமது வேண்டுகோளை எப்படி மறுப்போம். நீர் தற்கொலை செய்ய எப்படி பொருந்துவோம். எங்கள் உயிரை கொடுத்தாவது உம்முடைய கோரிக்கையை நிறைவேற்றாமலிருக்கமட்டோம் என்று சொல்லி அனைவரும் ஒன்று திரண்டு படையாயுதங்களை அணிந்துகொண்டு குதிரைமேல் சவாராகி, வீரசந்தர்களாக அபூஜஹலை முன்னிலையாக்கிக்கொண்டு, புறப்பட்டு, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிருக்கும் ஸ்தானத்தை நோக்கி வந்தார்கள். அப்படைக்கு தலைவீரனாகி அபூஜஹல் சில கவிகளை பாடிக்கொண்டு முன்னிலையாக வந்தான். அப்போது குறைஷிகள் அபூஜஹலை நோக்கி "அபல்ஹகமே! நீர் கண்குளிர பார்ப்பீர்; அவர்களில் ஒருவரையாவது விட்டு விடோம்" என்று சொல்லி ஆரவாரித்துக் கொண்டு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இருக்கும் எல்லையை அடுத்தார்கள். அவர்களின் ஆரவாரத்தொனியை றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டுக்கொண்டி

ருக்கும்போது, நாயகத்தின் பெரிய பிதாவாகிய அபூதாலிபு மனம் சஞ்சலித்தவராக, முதலில் றஸூலுல்லா பால் வந்தார்கள். அவர்களை நாயகம் பார்த்து “எனது பெரியபிதாவே தாங்கள் மிகவும் சஞ்சலித்தவர்களாக வந்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பின்னால் பெரிய ஆரவார சப்தமும் முழங்குகிறதே. அது என்ன?”வென்று கேட்டார். அதற்கு, அபீதாலிபு எனது சகோதரரின் புத்திரரே! நீங்கள் இவ்விடத்திலிருப்பது எனக்கு நல்லதாய் தோன்றவில்லை என்றார். அதற்கு நாயகம் அது ஏனென்று கேட்டதற்கு, அபூதாலிபு ‘நீங்கள் வீட்டுக்குள்போய் பதுங்கி யிருங்கள்; குறைஷிகள் அபூஜஹல் தலைமையின் கீழ் நானூறு போர் வீரர்கள் படையாயுதங்கள் அணிந்து, குதிரைகளிலேறி தளத்தோடு தங்களை துன்புறுத்த வருகிறார்கள். அதனால் என்ன ஆபத்து நிகழுமோ தெரியவில்லை நாமோ இவ்விடத்தில் ஒரு மொத்தம் நூற்று ஐம்பது பேர்கள்தான் இருக்கிறோம்’ என்று சஞ்சலித்துச் சொன்னார்.

இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சிரித்துக்கொண்டு “எனது பிதாவே! தாங்கள் துக்கப்படவேண்டாம். என்னுடைய றப்பாகிய அல்லாஹு தஆலா, அனைத்தையும் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருக்கிறான்” என்றார்கள்.

அப்போது நாயகத்தின் அஸ்ஹாபுகளெல்லாரும் அபூஜஹல் படை யெழுப்பிக்கொண்டு வருகிற செய்தியை அறிந்து, ஒன்று சேர்ந்து, உமர் றலியல்லாஹு அன்ஹுவை முன்னிலையாக்கி சில கவிகளைப் பாடிக்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்கும் ஸ்தானத்தில் வந்து சேர்ந்தார்கள். இவர்களுக்குப்பின் அலிறலியல்லாஹு அன்ஹுவும், அதற்குப் பின் உதுமான் றலியல்லாஹு அன்ஹுவும், அதற்குப்பின் ஸஃது ஸயீது றலியல்லாஹு அன்ஹுமா இவர்களும், இவர்களுக்கெல்லாம் பின் அல்லாஹ்வுடைய ஷபுலியும் றஸூலுடைய சிறிய பிதாவுமாகிய ஹம்ஸா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வல்லயந் தாங்கினவர்களாயும் படைகவசம் அணிந்து தலை திறந்தவர்களாயும் வீராவேசம் கொண்டு வந்தார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் கவிகளைப் பாடிக்கொண்டே வீர சிம்மங்களாக கர்ஜித்துக்கொண்டு ஆரவாரத்துடனே வந்தார்கள். இவர்களுக்கெல்லாம் பின் ஹாஷிமுடைய புதல்வர்களும் அப்துல் முனாப் உடைய புதல்வர்களும் புறப்பட்டுவந்து நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களை சூழ்ந்திருந்தார்கள். அவ்வாலிபராகிய நாஜீயும், நடுவே இருக்கின்ற நபிநாயகத்தின் திருமுகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தார்.

அப்போது அபூஜஹல், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஸஹாபாக்களோடும் இனபந்துக்களோடும் கூடியிருக்கும் ஸ்தானத்திற்கு சமீபித்துவந்து நின்றுகொண்டு “எனது கூட்டத்தார்களே! முஹம்மதுடைய பெரிய பிதாவை இங்கே கூப்பிடுங்கள்” என்றான். அப்போது அபுல் பக்தரீ என்பவர், அபூதாலிபிடம் விரைந்துபோய், அபூதாலிபே! அபுல் ஹிகம் தங்களை ஒரு யோசனைக்காக அழைக்கிறார் என்று சொன்னார். அபூதாலிபு அபூஜஹலிடம் வந்து என்னை அழைத்தது எதற்காக வென்று வினவினார். அதற்கு மூடபக்தியுள்ள வம்பன் அபூஜஹல், “உங்கள் தம்பி மகன் முஹம்மது ஒருபெரிய குற்றத்தை செய்து விட்டார். எமன் பதியிலிருந்து ஒரு மனிதன் பைத்துல் ஹராம், ஸம்ஸம் மகாம் அளவிலே நமது சுவாமிகள்பேரில் அர்ப்பணம் செய்வதற்காக கொண்டுவந்த ஹதியாவை அவர்போய் ஸ்வீகாரம் செய்து, அபகரித்துக் கொண்டதோடு, அதைக்கொண்டு வந்த மனிதனையும் சிஹர் என்னும் வஞ்சகத்தால் நமது மார்க்கத்தில் சேர்த்துக்கொண்டார். அவைகளை நாம் கேட்டால் அந்த ஹதியா தனக் குடையதென்று சொல்லுகிறார். ஆனதால் தாங்கள் அவர்பால் போய்கேட்டு அதை எங்களுக்கு மீட்டிதர வேண்டும். இல்லாவிடில் குறைஷிகளுக்கும், ஹாஷிம் கிளைஞர்களுக்கும் இடையில் அநேக வம்பும் போரும் வந்து சம்பவிக்கிறதாய் இருக்கின்றன. நான் தங்கள்பால் சொல்வதெல்லாம் நமக்குள் ஒன்றுக்கொன்று பழிவிளையாதிருக்கும் பொருட்டுதான். அப்படி எங்கள் ஹதியாவை எங்கள்பால் தராவிடில் நாங்கள் யுத்தம் செய்யத் தயாராய் இருக்கிறோம். பகைஎன்பது ஒருகாலமும் தீராது” என்றான்.

அதைக்கேட்டதும் நபிநாயகத்தின் பெரிய பிதாவாகிய அபூதாலிபு, “நல்லது, நீர்சொல்வதை என் புதல்வருக்குப் போய்சொல்லுகிறேன்” என்று சொல்லிவிட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களோடு கூடியிருக்கும் ஸ்தானத்தில் றஸூலுல்லாபால் வந்து, “எனது புதல்வரே! நான் ஒரு வேண்டுகோளை கொண்டு வந்தேன். அதை நீர் நிறைவேற்றுவீரோ?, அல்லது

கிராகரிப்பீரோ நான் அறியேன்" என்றார். அதற்கு நாயகம் எனது பிதாவே! நீங்கள் கேளுங்கள்; உங்களுடைய வேண்டுகோள் அனைத்தையும் முடித்துக் கொடுக்க சித்தமாய் காத்திருக்கிறேன் ஆனால் அபூஜஹலுக்கு ஏமாற்றுதல் உண்டாயிருக்கிறதே அதைத் தவிர" என்றார்கள். அதற்கு அபூதாலிப் சிரித்துக்கொண்டு "எனது அருமை புத்திரரே! நான் உம்மை வீட்டில் வைத்து என் நெஞ்சோடு சேர்த்து அணைத்து வளர்த்தேன். நான் ஈன்ற புத்திரரிலும் உம்மை அதிக மேன்மையாக்கி வைத்தேன் என்று நீர் அறிந்திருக்கிறீர். ஆனதால் உமக்கும், குறைஷி களுக்கு மிடையில் சம்பவித்திருக்கும் பிணக்கை, ஹக்கின் பேரில் ஆணையாக, நான் கேட்கிறபடி அங்கீகரித்து எதிரிகளுடைய வாட்களை உறையிலிடச் செய்வீராக" என்றார்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபூதாலிபின் இம்மொழிகளை கேட்டதும், "எனது பிதாவே! இன்று என்னுடைய இரத்தமும் சதையும் நீங்கள் தான்; என்னை வளர்த்து வாலிபமாக்கினதும் உண்மைதான்; ஆனால் இப்போது தாங்கள் என்ன நாடுகிறீர்கள்?" என்று கேட்டார். அபூதாலிப் "நான் எதைச் சொல்வதாவது உங்களுக்குள் கலகத்திற்கு ஆஸ்பதமாய் யிருக்கும் அவ்வொட்டகங்களை திருப்பிக் கொடுத்துவிடுங்கள். அதை அபூஜஹல் எடுத்துக்கொள்ளட்டும். இந்த கலகம் ஒடுங்கட்டும்" என்றார். அதைக்கேட்டதும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அப்படியானால் என்னுடைய றப்பு எனக்கு அனுப்புவித்ததை அவனுக்கு கொடுத்துவிடச் சொல்கிறீர்களா? என்றார்கள். இவ்விஷயங்களை நாயகத்துக்கு அருகில் இருந்து பார்த்துக்கொண்டும் கேட்டுக் கொண்டு மிருந்த அஸ்ஹாபிமார்கள் அனைவரும் ஒன்றுபோல், அல்லாஹ்வின் பேரில் ஆணையாக ஒருபோதும் அப்படி கொடுக்கப் போகிறதில்லை என்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் "இம்முதல்கள் குறைஷிகளுக்கு வந்ததாக இருக்குமேயானால் நான் ஒருபோதும் அதை அபகரித்துக் கொள்ள மாட்டேன். அவை நமக்காகவே வந்தவை; ஆனதால் அபூஜஹல் அதில் ஒரு ஒட்டகை கேட்டாலும் கொடுக்க மாட்டோம்" என்றார்கள்.

இம்மொழிகளை கேட்ட அபூதாலிப் அபூஜஹலிடத்தில் விரைந்து போய் அவன் சபை நடுவே நின்றுகொண்டு "ஓ

குறைஷிக் கூட்டத்தார்களே! நான் இவ்வொட்டகை விஷயமாக என் தம்பி மகன் முஹம்மதிடம் சென்று என்னாலான பிரயத்தம் சொல்லிக் கேட்டேன். அதற்கு அவர் 'அவை என்னுடைய றப்பிடமிருந்து எனக்கு ஹதியாவாக வந்தவைகளாகும். அதில் அவர்களுக்கு கொடுக்கவேண்டியது ஏதொன்றுமில்லை' என்று சொல்லிவிட்டார்" என்று சொன்னார். இம்மொழிகளை கேட்ட அபூஜஹல் மனம் நொந்து ஆயாசமுற்று அப்படியானால் அவைகளில் பாதியை முஹம்மது எடுத்துக்கொண்டு பாதியையாவது எங்களுக்கு கொடுக்கச் சொல்லும் என்றான்.

இவ்வாயாச மொழிகளை அபூதாலிபு கேட்டு "நல்லது இதைப் போய் நான் சொல்லி பார்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு றஸூலுல்லாஹ்பால் வந்து சொன்னபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபூதாலிபை நோக்கி, "எனது பிதாவே! நான் முன்னதாகவே இதன் முடிவை சொல்லியிருக்க தாங்கள் மீளவும் அதற்கு பங்குகொண்டு வந்திருக்கிறீர்கள். நான் தங்களுக்கு என்ன சொல்லுகிறது. அவைகளில் எந்த வஸ்துவையும் எடுத்துக்கொடுக்க முடியாது" என்று தீர்க்கமாக சொல்லி விட்டார்கள். அதைக்கேட்ட அபூதாலிப் மனம் சோர்வடைந்து நான் கேட்கிறதை விட்டு வெட்கமடைந்தேன் என்று சொன்னார்கள்.

பிறகு நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது பெரிய பிதாவாகிய அபூதாலிப் வெட்கமுற்று சொல்லிய மொழிகளை நாயகம் கேட்டு "எனது பிதாவே! திர்ஷ்டாந்திரம் பாருங்கள். அவனுக்குப்போய் சொல்லுங்கள். அதாவது அவ்வொட்டகைகளிடத்தில் நாம் கேட்போம். அவைகள் வாய்திறந்து யாருக்கு வந்த ஹதியா வென்று மொழிகின்றனவோ அதுபோல் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். மற்றவர் அதை இழந்துவிட வேண்டும்" என்று சொன்னார்கள்.

இம்மொழிகளைக் கேட்டு அபூதாலிப், "மகனே, அப்படி ஷர்த்து செய்தால் அவ்வொட்டகங்கள் உம்முடன் பேசுமா" என்று கேட்டார். அதற்கு நாயகம், என்னுடைய றப்புபேரில் ஆணையாக அவ்வொட்டகங்கள் அறபிப்பாஷையால் நாகரீகமாய் பேசும் என்றார்கள்.

அதைக்கேட்டு அபூதாலிப், மகனே! அழகானதீர்ப்பு சொன்னீர் என்று பதிலளித்து விட்டு, உடனே எழுந்து விரைந்து

போய் அபூஜஹலுடைய கூட்டத்தின் நடுவே முகமலர்ச்சியோடும் கெம்பீரத் தோற்றத்தோடும் போய் நின்றார். அதைக்கண்ட அபூஜஹல் 'அபூதாலிபே, என்ன முடிவாயிற்று' என்று கேட்டான். அவர்கள் உன் வேண்டுகோளை உன் பிரியம் போல் முடித்துவிட்டு வந்தேன் என்றார்கள். அதற்கவன் 'அப்படியானால் நல்லதாயிற்று. ஒட்டகங்களை இழுத்துக்கொண்டுவாருங்கள். அது உங்களுடைய சமாதானத்துக்கும் கௌரவத்துக்கும் பொருத்தமானதுதானே' என்றான். அதற்கு அபூத்தாலிபு 'விஷயம் அப்படியல்ல. அவர் சொன்னதெல்லாம் அவ்வொட்டகங்கள் வாய்த்திறந்து உமக்கு ஹதியாவாக வந்ததென்று சொன்னால் நீர் எடுத்துக் கொள்ளும். அவைகள் எமக்கு ஹதியாவாக வந்ததென்று சொன்னால் நான் எடுத்துக்கொள்ளுகிறேன்' என்று தான் என்றார்.

இவை அபூஜஹல் கேட்டதும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இதுபோன்று கணக்கற்ற முஃஜிஸாத்துகளை செய்து அவன் கண்ணாறக் கண்டவனாதலால், கொஞ்சம் திகைத்து மயங்கி தமாதித்து, இச்சமயத்தில் இந்த தீர்மானத்தை மறுதளிப்பதற்கு எந்தக் காரணமும் சொல்ல ஏலாமல் "நல்லது அதற்கு நாம் ஒத்துக்கொண்டோம்; எங்கிலும் அவர் ஸிஹரு என்னும் வஞ்சகத்தால் ஒருகால் ஒட்டகங்களை பேசவைத்துக் கொண்டு போய் விடுவாரென்று நாங்கள் அஞ்சுகின்றோம்" என்றான்.

அதற்கு அபூத்தாலிபு நீர் நம்பத்தகாத வீண் மொழிகளெல்லாம் பிதற்றவேண்டாம். அவ்வொட்டகங்கள் மக்கத்திலுள்ளவைகளுமல்ல. அவை இந்தவேளையில் வந்ததே தவிர இதற்கு முன் இவ்விடத்திற்கு வந்ததுவுமல்ல. முஹம்மதை அவை அறிந்ததுவுமல்ல. முஹம்மது அவைகளை அறிந்தவருமல்ல. அப்படியிருக்க அவர் அவ்வொட்டகங்களை பேசவைத்து அவைகள் வாய் திறந்து பேசிய பின் அதை நாம் ஒப்புக் கொள்ளாமல் மறுதளித்து விடுவோமே யானால் வாக்கு மாறிகளாகி விடுவோம். அது நியாமற்ற செயலாகும். நீர் நியாயமுள்ளவராயிருந்தால் உமக்கு முன்னூற்று அறுபது நாயன் மார்கள் (விக்கிரகங்கள்) இருக்கின்றனவே, அவைகள்பால் போய் கேட்டு ஒட்டகங்களை பேச வைத்துக்கொள்ளலாமே. முஹம்மதுக்கோ அறியா புறத்தில் ஒரே ஒரு நாயன்தானே இருக்கிறான். அதற்கு நீர் அஞ்சுவானேன்" என்றார்.

இந் நிகழ்ச்சிகள் யாவையும் கேட்டுக்கொண்டிருந்த குறைஷிகளெல்லாரும் "முஹம்மது சொன்னது நியாயந்தான். அபூத்தாலிபு சொன்னதும் ஒழுங்குதான்" என்றார்கள். அதை அபூஜஹலும் ஒத்துக்கொண்டான். இக்காரியங்களை நாளைக் காலை ஸுப்ஹு நேரத்தில் கஃபாவுக்கெதிரே கூடிவைத்துத் தெரிந்துகொள்வோம் என்று முடிவுசெய்து கொண்டு, இருவகுப்புக் கூட்டங்களும் கலைந்து அவரவர் இல்லத்துக்குப் போய் சேர்ந்தார்கள். நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவ்வொட்டகங்களைக்கொண்டு வந்த நாஜியுடனே கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களின் மனைக்கு சந்தோஷமாய் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்று இரவானபோது மூடபக்தியுள்ள அபூஜஹல் கஃபாவுள் புகுந்து அவனது குலதெய்வமாகிய ஹுபல் என்னும் தலைமை விக்கிரகத்திற்கு தீபாஜ் என்னும் பட்டுத்துணி அணிந்து தலைப் பாகையும் வைத்து, இரத்தினக்கோலும் அதன்கையில்கொடுத்து மணந்தரும் புஷ்பங்களும் சூட்டி, புனுகு, ஜவ்வாது, கஸ்தூரி, அம்பர் முதலிய வாசனைகளும்பூசி அம்பர், அகர், சந்தனம் முதலிய பரிமள தீபதூபங்களுமிட்டு தான் அதற்குகெதிரே சாஷ்டாங்கம் செய்து தண்டனிட்டு நெடுநேரம் கிடந்துகொண்டு "எனது நாயனே! என்னை ரக்ஷிப்பவனே!! எனது வேண்டுகோளை நிறைவேற்றுகிறவனே!!! நான் உன்னை நாற்பது வருடமாக வணங்கி தண்டனிட்டு வருகிறேன். நான் யாதொரு வேண்டுகோளையும் உன்னிடத்தில் கோரினவனுமல்ல. நீ அதை பூர்த்தி செய்தவனுமில்லை. இப்போது நமக்கு எமனிலிருந்து வந்த ஹதியாவை முஹம்மது எடுத்துவைத்துக்கொண்டு, தனக்கு வந்ததென்று வம்பு வழக்காடுகிறார். அதனால் இருசமூகத்தாருக்கும் வழக்குண்டாய் அவ்வொட்டகைகள் வாய் திறந்து யாருக்குடையதென்று சொல்லுகின்றனவோ அவர், அவைகளை அடைவதென்று வழக்குதீர்ந்திருக்கிறது. ஆனதால் நான் உன்னிடம் வேண்டிக்கொள்வதெல்லாம் அவ்வொட்டகங்களை முஹம்மது ஸிஹர் என்னும் வஞ்சகத்தால் என்னிடம் பேசவிடாமல் தடுப்பதை காப்பாயாக. அவ்வொட்டகங்கள் என்னோடு பேசவும் நீ அருள் புரிவாயாக. அப்படி அவ்வொட்டகங்களை, எனக்கு சாதகமாகும்படி பேசச் செய்வாயானால், நான் உனக்கு உயர்தர தங்க சவடி ஒன்று போடுவேன். பத்து

அடிமைகளையும் பத்து வெள்ளாட்டிகளையும் உன் பணிவிடைக் காக ஹதியாவாக அளிப்பேன்” என்று சொல்லிப் புகழ்ந்தான்.

இவ்வசனங்களைக்கேட்டறிந்த இப்லீஸ் எனும் ஷைதான் அவ்விக்கிரஹத்தினுள் புகுந்திருந்து கொண்டு, ஹுபல் என்னும் விக்கிரஹம் சொல்லுகிறதுபோல் கூச்சலிட்டு வலமும் இடமும் சாய்ந்தசைந்துகொண்டு “ஓ! குறைஷிகளே! நான் உங்களுடைய கடவுளாயிருக்க ஏன் என்னை வணங்குகிறீர்களில்லை” என்று சொல்லிற்று. அப்போது அபூஜஹல் அதை ஏறிட்டுப் பார்த்தான். அப்போது அது நான் உன்மீது அதிககோபமா யிருக்கிறேன் என்றது. அவன் ஏன் என்றான். நீ என் பால் ஒரு பிரார்த்தனை செய்தாய், அதை நிறைவேற்றவில்லை. ஆயினும் இன்றையில் உன்னுடைய வேண்டுகோளை நான் அங்கீரித்துக் கொண்டேன். நாளையதினம் அவ்வொட்டகங்களை பேசச்சொல்லுகிறேன், அவை கள் பேசும் போ” என்று சொல்லிற்று. இவ்வார்த்தைகளை அபூஜ ஹல் கேட்டதும் மிக சந்தோஷ ஆரபாரத்தோடு தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அங்கு போனதும் தன் கூட்டத்தார்களை அழைத்து தன்னுடைய ஹுபல் என்னும் சுவாமி சொன்ன மொழிகளை அவர்களிடம் சொல்லி சந்தோஷம் கொண்டாடிக்கொண்டிருந்தான். இவன் இங்ஙனம் இருக்க, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டிலிருக்கும் போது பொழுது உதயமாவதற்கு முன் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகத்தின் வீட்டின் கதவைத்தட்டினார்கள். கதவு திறக்கப்பட்டது. உள்ளே போய் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஸலாம் சொல்லி உட்கார்ந்து, அபூஜஹலுக்கும் நமக்கும் நாளை நடக்க வேண்டிய கருமத்தை விசாரிக்க வந்தேன் என்றார்கள். அதற்கு நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அல்லாஹு தஆலா நமது நாட்டத்தை நிறை வேற்றி வைப்பான். ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம், என்றார்கள். இப்படி பேசிக் கொண்டிருக்கும் சமயம் உமர்இப்னுல் கத்தாபு, உத்தமானுப்னு அப்பான், ஸுபைருப்னுல் அவாம், அம்மாருப்னு யாஸிர் (ரலியல்லாஹு அன்ஹும்) முதலிய அஸ்ஹாபுகளெல்லாரும் ஒருவருக்குப்பின் ஒருவராக வந்து கூடினார்கள்.

அப்போது பொழுதும் உதயமாயிற்று. கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் தனது மேல்மாடியில் ஏறி மக்கா பாதைகளை நோக்கின போது, பாதைகளி லெல்லாம் ஜனங்களின் கூட்டங்கள் குழுமிக் கொண்டிருந்தன. இச்செய்தியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்த போது, நாயகமவர்கள் எழுந்து மிஸிர் கிப்தி உயர்தர உடைகளை எடுத்து உடுத்தி தலைப்பாகையும் அணிந்து, அம்பர் கஸ்தூரி முதலிய அத்தர் பரி மளங்களும் பூசி, அறபி பரிவட்டமும் தரித்துக்கொண்டு அலிரலி யல்லாஹு அன்ஹுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு ஒரு பாகத்தி லும், அபூபக்கர் ஸித்தீக்கு ரலியல்லாஹு அன்ஹு மற்றொரு பாகத்திலும், மற்றும் ஸஹாபாக்கள் சூழ்ந்தும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நடுவே நிறைமதி போல பிரகாசிக்க நடந்து சென்றார்கள். இவர்கள் செல்லும் பாதையின் வீதிகளில் இரு மருங் குகளிலுள்ள ஜனங்களும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரும் அலங்காரத்தை, கழுத்துகளை நீட்டி நீட்டிப் பார்ப்பார்கள்.

அப்போது கதீஜா ரலியல்லாஹு அன்ஹாவும் நபிநாயகத்தின் மாமிமார்களான ஸபிய்யா, ஆதிகா, பைலா முதலிய ஹாஷிம் குல பெண்களெல்லாம், நபிகட்திலகம்முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை அடுத்து முஹம்மதே, அபூஜஹலுக்கு அவன் சுவாமி வாக்களித்ததென்று மக்கமா நகர்முழுதும் பேச்சா யிருக்கிறது. முஹம்மதே! உம்முடைய பகைவரை அல்லாஹு தஆலா ஹலாக்காக்கி வைப்பானாக. உம்முடைய காரியத்தை உமக்கு எந்த குறைவு மன்றி வெற்றியாக்கி தருவானாக வென்று துஆ யிரந்தார்கள்.

இம்மொழியை நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டபோது, சிரித்துக்கொண்டு “மாமியாரே நீங்கள் துக்கப்பட வேண்டாம். அந்த சமயம் பேசியது இப்லீஸ் என்னும் ஷைய்த்தான். அல்லாஹு தஆலா பூமியைக் கொண்டு சாட் டப்பட்ட மலக்குக்கு ஏவி அவர் அவனை பிடித்து காபு மலைக்கு அப்பால் தள்ளப்பட்டுவிட்டது. இனி அந்த புத்து பேசவு மாட் டாது. அது அவனுக்கு எந்த உதவியும் செய்யாது. அதனால் அவன் வெற்றிபெறவுமாட்டான்” என்று சொல்லிவிட்டு, நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தோழர்களோடும் ஸஹாபாக்த

ளோடும் சென்று, ஒட்டகங்களை பேசவைக்கும் ஸ்தலத்தில் போய் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் அவ்வூர் ஜனங்கள் சிறியோர், பெரியோர் முதலிய சகலரும், குறைஷிகுலத்தவர்களும் பெரும் திரளாகக் கூடி இருந்தார்கள். ஹாஷிம் கிளையார் அஸ்ஹாபிகள் முதலிய சகலரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை சூழ்ந்திருந்தார்கள் அக்கூட்டத்தில் அபூஜஹல் மாத்திரம் இல்லாதிருந்தான்.

அபூஜஹல் கஃபாவினுள் சென்று தன்னுடைய சுவாமி இடத்தில் சாஷ்டாங்கம் செய்து தண்டனிட்டு எதிரே கிடந்து தன்னுடைய கோரிக்கைகளைச் சொல்லி வரம் கேட்டான். அது ஒன்றும் சொல்லாதிருந்தது. இந்நிலைமையில் கஃபாவின் எதிரே கூடியிருக்கும் ஜனங்கள் பொழுதேறி விட்டதால் வெய்யிலின் வெப்பத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தனர். அதை அறிந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து, வெய்யிலின் வெப்பத்தால் ஜனங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் போது, கஃபாவில் அபூஜஹல் என்ன செய்கிறான்? யாராவது அவனைப் போய்ப் பாருங்கள் என்று சொல்ல அஸ்ஹாபிகளிலொருவர் போய்ப் பார்த்துவிட்டு வந்து, அவன் புத்துக்கு சாஷ்டாங்கம் செய்துகொண்டு வரம் கேட்டுக்கொண்டு கிடக்கிறான்; அது ஒன்றும் பதிலளிக்கவில்லை என்றார். அதைக்கேட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலிறழியல்லாஹு அன்ஹுவை நோக்கி'' ஓ! அபுல் ஹஸனே! சூட்டின் வெப்பத்தால் ஜனங்கள் கஷ்டம் அடைகின்றனர். நீர் இப்பவே சென்று இதை அபூஜஹலுக்கு அறிவித்து அழைத்துக்கொண்டு வாரும் என்றார்கள். அதைக்கேட்டு அலிறழியல்லாஹு அன்ஹு விரைவாய் சென்றபோது அச்சபையிலிருந்த சில காபிரீன்கள் பேரில் கால் பட்டுவிட்டது. ஆனதால் அகபதுப்னு அபீமுயீது என்பவன் அடே! பொடியனே நீ சிறு பிள்ளையாயிருந்துகொண்டு, பெரிய கனவான்களை எல்லாம் மரியாதை இல்லாமல் தூஷித்துக்கொண்டு போகிறாயே. இது உன்னுடைய ஆண்மையா; என்று சொன்னான். இதைக்கேட்டதும் அவர்கள், அவனுடைய சென்னியில் ஒரு அறை அறைந்தார்கள். அவனுடைய இரண்டு சட்டிப் பற்கள் உடைந்து விட்டன. அவனும் மயக்கம் கொண்டு சப்தமிட்டுக்கொண்டு கீழே விழுந்தான். உடனே வஹபுப்னு அஸத் என்பவன் எழுந்து, “அடா! அபூதாலிபுடைய மகனே! நீ சிறுவனாய் இருந்துகொண்டு

எங்கள் குறைஷிகுல தலைமையானவரை இப்படிசெய்யும்படி உனக்கு அதிகாரம் தந்தது யார்? இதுதான் கலகத்திற்கு காரணமாகு மென்றான். உடனே இவர் புலிபோல் அவன் மீது பாய்ந்து, ஓர் அடி அடித்தார். அவன் கல்லின்பேரில் விழுந்து விலா எலும்பு முறிந்து விட்டது. இதையறிந்து வலீதுப்னு முகீறா என்பவன், அடே சிறுவனே! நீ பைத்தியக்காரனாய் இருக்கிறாய். உன்னுடைய குதிப்பை நிறுத்து. இல்லாவிடில் இப்போதே உன்னை கொன்றுவிடுவேன் என்றான். அவனுடைய பிரடியிலும் ஓர் அடி அடித்தார். அவன் குப்புற விழுந்து மண்ணில் புரண்டான். இதைப்பார்த்துக் கொண்டிருந்த குறைஷிகளெல்லாம் அலிறழியல்லாஹு அன்ஹுவை வந்து சூழ்ந்தார்கள். வந்தவர்களை எல்லாம் ஒவ்வொரு அடியில் ஒவ்வொருவனாக மண்ணில் கிடத்தாட்டினார். அப்போது அலி அவர்களுக்கு வயது பதிமூன்று. இதனால் இச்சபையில் கூச்சல் அதிகமாகிவிட்டது. இந்த இரச்சலை அபூஜஹல் கேட்டு, 'நான் என்னுடைய தெய்வத்தினிடத்தில் பேசுகின்றேன். அது ஒன்றும் பதில் தரவில்லை. இந்த நிலைமையில் அங்கென்ன சப்தம்' என்று கேட்டான். குறைஷிகள் இங்குநிகழ்ந்ததைக்கேட்டு சம்பவத்தை சொன்னார்கள். அதற்கு அபூஜஹல் அபூதாலிபுடைய மகனே! இந்த அநியாயஞ் செய்து இக்கலகத்தை ஏன் விளைத்தாய்? எங்கள் கஃபாவிற்குள் ஏன்புகுந்தாய்? என்று கேட்டான். அதற்கு அலிறழியல்லாஹு அன்ஹு அவர்கள், உனக்கென்ன கேடு. இந்த கஃபா யாருக்குரியது? உங்களுக் குரியதா? எங்களுக்குரியதா? என்பதை நீயே சிந்தித்துப்பார். என்னை கஃபாவை விட்டு எப்படி விலக்குவாய்? இது எங்களுக்குப் பாத்தியப்பட்டது. அதை யுடையவர்களுக்கு கொடுத்து விட்டு உன் சுவாமிகளை எடுத்து தோளின்மீது வைத்துக் கொண்டு வெளியில் நடந்துபோ. அப்படி இல்லையானால் அவைகளை இப்பவே உன் தலையில்போட்டு உடைப்பேன் என்றார்கள். அதற்கு அபூஜஹல் 'அதை விடு. நீ வந்த கருமத்தை சொல்' என்றான். ஜனங்களெல்லாம் வெயில் வெப்பத்தால் மடிகின்றனர். உன்னை வழிபார்த்து எவ்வளவு நேரம் கார்த்துக் கொண்டிருக்கிறது என்றார்கள்.

அபூஜஹல் “நான் என்ன செய்கிறது. சுவாமியிடத்தில் வரம் கேட்டேன். அது மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. ஆதலால்

கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். விடைபெற்றுக்கொண்டு வருகிறேன்" என்றான். அதை அலிறலியல்லாஹு அன்ஹு கேட்டதும், "அடா நடவாத கருமத்தை விடு. அது கல்லு. அது ஒரு பிரயோசனமும் சங்கடமும் செய்யாது. நீயும் கெட்டாய். அதுவும் கெட்டது" என்று சொல்லிவிட்டு உடனே வெளியில் வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் நடந்த விஷயங்கள் யாவற்றையும் சொன்னார்கள். அப்போது வானவர்க் கரசரான ஜிபுராயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, அஸ்ஸலாமு அலைக்கும் யாறஸூலுல்லா என்று சலாம் சொல்லி, அல்லாஹு தஆலா தங்களுக்கு சலாம் சொன்னான். நீங்கள் கஃபாவுக்குள்போய் உங்கள் முஃஜிஸாத்தை வெளியாக்குங்கள் என்று சொன்னான் என்றார்கள். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எழுந்து கஃபாவுக்கு புறப்பட்டபோது, கருமேகம் குடைபிடிக்க, அந்த நிழலில் நடந்து கஃபாவுக்குள் புகுந்து, தவாபு செய்துவிட்டு அபூஜஹலை நோக்கி, நீர்சொன்னபடி ஒட்டகங்களை பேசச் சொல்லு என்றார்கள். அப்போது அபூஜஹல் விக்கிரங்களுக்கு முன்னாலே போய் நின்றுகொண்டு, முஹம்மது உன்னை அடுத்து வந்து நிற்கிறார். அவருக்கு கேட்டை உண்டு பண்ணிவை என்று சொன்னான். அவ் விக்கிரகத்திலிருந்து ஒரு சப்தம் உண்டாயிற்று. அதாவது, இவர் உண்மையாக அல்லாஹ்வின் திருத்தூதர். இவரைப் பின் பற்றினவர்களே சொர்க்கப்பதி யடைவார்கள். வெறுத்தவர்கள் நரகமடைவார்கள் இதை அபூஜஹல் கேட்டதும் மிகவும் மனம் நொந்து சலித்து "ஓ கல்முகளே! முஹம்மதாகிறவர் நமது நாயன்மார்களை ஸிஹ்ர் . என்னும் வஞ்சகத்தால் தன் மார்க்கத்தில் அழைத்துக் கொண்டார்" என்று சொல்லிவிட்டு அந்த விக்கிரகங்களை சுற்றி வந்து அதன் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டு "நீயும் கெட்டாய். உன்னைப் பணிந்தவனும் கெட்டான். முஹம்மதும் அவருடைய றப்பும் உன்னிலும் மேலாகவே அறியப் படுகிறார்கள்" என்று சொல்லிவிட்டு அகன்று வந்து, நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி, ஒட்டகங்களை கொண்டு வரும்படி சொன்னான். அதுபோல் கொண்டு வந்து விடப்பட்டன.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அபூஜஹலை நோக்கி பேசச்சொல்லு என்றார்கள். அபூஜஹல் அவ்வொட்டகங்களின் எதிரே நின்றுகொண்டு, ஒட்டகங்காள்!

என்று ஏழுதரம் சப்தமிட்டழைத்தான். அது பதில் சொல்ல வில்லை. பின்னும் ஏழுதரம் அழைத்தான். அதற்கும் ஒன்றும் பேசவில்லை அதனால் அவன் மதிமயங்கி திகைத்து புத்தி தடுமாறி சோர்ந்துபோய் நின்றான். அவனைப்பார்த்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஒட்டகை ஏதும் விடை பகர்ந்ததா? என்று கேட்டார்கள். அவன் 'இல்லை, எங்கிலும் முஹம்மதே அது உம்முடன் பேசுமா?' என்றான். அவர்கள் அப்படியே பேசும் என்றார்கள். அதற்கவன் அப்படிபேசினால் அது உமக்குத்தான் ஜெயம் என்றான்.

உடனே நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து, இரண்டு ரகஅத்துத் தொழுது துஆ கேட் டார்கள். வான வர்க்கரசரான ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் இறங்கி வந்து முஹம்மதே! அல்லாஹு தஆலா உங்களுக்கு ஸலாம் சொன்னான். இன்னும் 'ஆதம் அலைஹிஸ்ஸலாமை சிருஷ்டிப்பதற்கு முன்னமே இந்த ஒட்டகங்களின் முஃஜிஸாத்தையும் சிருஷ்டித் திருக்கிறேன். அதை நீர் பேசச்சொல்லும். பேசும்' என்று சொன்னானென்று சொன்னார்கள். அதைக்கேட்டு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சந்தோஷமுற்று, அல் லாஹு தஆலாவை ஷுக்று செய்துவிட்டு அவ்வொட்டகங் களோடு பேச நாடினபோது, குறைஷிகள் அவ்வொட்டகங்களில் கண்களை கட்டி மூடி மறைத்து விட்டு, அவைகளின் முகத்தையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முகத்துக்கு மாறாய்த் திருப்பிவிட்டு அவ்வொட்டகங்களுக்கும் நபி நாயகத்துக்கும் இடையே குறைஷிகள் சூழ்ந்து சுற்றி வளைந்து மறைத்து நின்று கொண்டார்கள். இதை அறிந்து உமறுகத்தாபு றலியல்லாஹு அன்ஹு இது என்ன ஒழுங்கற்ற நியாயமென்று றஸூலுல்லாவிடம் சொன்னபோது, றஸூலுல்லாஹி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் 'உமரே! தாங்கள் பயப்படவேண் டாம். அல்லாஹு தஆலா அதைப்பார்த்துக்கொண்டிருக்கிறான். அவன் பேரில் ஆணையாக] அவ்வொட்டகங்கள் மஷ்ரிகிலும் மன் மக்ரிபிலும் இருந்தாலும் அவைகள் பேசும்' என்றார்கள்.

பின்பு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அவ்வொட்டகங்களை நோக்கி, "எமன்பதியிலிருந்து எனக்கு அமானத்து கொண்டு வந்த ஒட்டகங்களே! ஆதம் அலைஹிஸ்ஸ

லாமை படைப்பதற்கு முன்பே என்னுடைய றப்பு உங்களிடத்தில் ஈடாக வைத்திருந்த காரணத்தை வெளியாக்கி வையுங்கள். உங்கள் ஸ்தானத்தை விட்டும் இரண்டு இரண்டாய் வந்து வரலாற்றைச் சொல்லுங்கள்'' என்று சொன்னார்கள். இவர்கள் சொல்லி முடிக்கவே அவ்வொட்டகங்கள் இரண்டிரண்டாக வந்து நபிகள் நாயகம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு எதிரே நின்று கொண்டு, சென்னிகளை மண்ணில் பணியவைத்துக் கொண்டு, முன்னங்காலை முட்டுப்போட்டுக் கொண்டு, யாவரும் கேட்கும்படி "அஸ்ஸலாமு அலைக்க யாறஸூலல் லாஹ், அஸ்ஸலாமு அலைக்க யாஹைற கல்கில்லாஹ், நாங்கள் சாக்ஷி பகர்கிறோம், அல்லாஹு தஆலா தங்களை சிருஷ்டிகள் பால் நபியாக அனுப்பினான். நன்மாராயமாகிறது உங்களுக்கும் உங்களை தொடர்ந்தவர்களுக்கும் உண்டாவதாக! கேடாகிறது உங்களை பிணங்கினவனுக்கா யிருக்கும். முஹம்மதே! இந்த ஹதியாவாகிறது உங்களுக்குள்ளதாகும். இதைத் தாங்கள் ஒப்புக்கொண்டு, உங்கள் அஸ்ஹாபுகளுக்கு ஒப்படையுங்கள், நாங்கள் மௌத்தாய் சொர்க்கப்பதி அடையும்படி அல்லாஹு தஆலா இடத்தில் கேட்டுத் தாருங்கள். இந்தப் பூலோகத்தின்கண் நாங்கள் ஜீவித்திருக்க நாடவில்லை'' என்று சொல்லிற்று. அதுபோல் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹு தஆலா யிடத்தில் துவா கேட்டு விட்டு, அவ்வொட்டகங்களை நோக்கி அல்லாஹு தலா உங்கள் ஹாஜத்தை கபூல் செய்து விட்டான். நீங்கள் காட்டுக்குப் புறப்பட்டு போங்கள் என்றார்கள்.

அதுபோல் அவ்வொட்டகங்கள் யாவும் புறப்பட்டு சென்று மௌத்தாய் விழுந்து விட்டன. இச்சம்பவத்தை அபூஜஹல் பார்த்து, ஜனங்களை நோக்கி, முஹம்மதின் மாயத்தை பார்த்தீர்களா? இவ்வொட்டகங்களையும் தமது மாய வஞ்சனையால் மாளச் செய்தார், நமது ஸ்வாமிகளையும் தமது மார்க்கத்தில் புகுதச் செய்தார் என்றான். அதற்கு உமர்கத்தாபு றலியல்லாஹு அன்ஹு இது உண்மையான பகிரங்கமான அற்புதமே யொழிய, ஸிஹர் வஞ்சனை யல்ல. என்றார்கள். அன்று அப்பாஸுப்னு லைதும், அஹ்மதுப்னு ஆமிரும் ஈமான் கொண்டு இஸ்லாத்தை தழுவி னார்கள். இத்திருஷ்டாந்தங்களை கண்ணாரக்கண்ட அபூதாலிபு மனமகிழ்ந்து "என்மகனே இன்று உம்முடைய முஃஜிஸா (அற் புதம்) திட்டமாக வெளியாய் விட்டது'' என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "பிதாவே! தாங்கள் முஸ்லிமாகிறீர்களா?'' என்று கேட்டதற்கு, அபூதாலிபு குறைஷிக ளின் விரோதத்தை பயப்படுகிறேன் என்றார். இக்காட்சியைக் கண்ட சகலரும் மிக்க வியப்படைந்து, ஆச்சரியமுற்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை போற்றிப் புகழ்ந்து விட்டு, அவரவர்கள் வீடுபோய் சேர்ந்தார்கள். அபூஜஹல் தன்னைச் சேர்ந்தவர்களோடு மதி கெட்டு மனம் நொந்து நஞ்சுள்ள பாம்பின்வாயில் அகப்பட்ட தேரை போலாகி, அறிவுகுலைந்து சபையை விட்டும் நீங்கி தெரு வீதிகளின் வழியாக சென்று தன் வீட்டிற்கு போய் புகுந்தான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் தோழர்களோடு பொருள்கள் சகிதம் தங்கள் மாளிகைபோய் சேர்ந்து அப் பொருள்களை பகீர்களுக்கும் மிஸ்கீன்களுக்கும் பங்கிட்டு கொடுத்து விட்டு, தனது தீனுல் இஸ்லா மென்னும் மார்க்கத்தை வளரச் செய்வதில் கண்ணும் கருத்துமா யிருந்தார்கள்.

33–வது அத்தியாயம்.

ஹபீபு அரசர் மக்கத்துக்கு வந்தது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஷபீகுல்முது னபீனாகி யெவரும் போற்றத்
        தரணிமிசை தீன்தழைக்கத் தபன னென்னக்
குபீரிருளை யறுத்தொ துக்கித் தீரவீரக்
        குருநபியைப் பகைத்தென்றும் கொடுமை பூண்ட
அபூஜஹலோ ரேவரு மொன்று கூடி
        யனுப்புகடி தந்தேர் தணிகள் சூழ
ஹபீபரசன் மக்கநகர் வந்த வாறு
        கவலுவாம் நடந்தவைகள் புகலுவாமே.

இதன் பொருள்.

தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது திருநாமங்களில், ஷபீஉல் முதுனபீன் என்னுமோர் அழகிய நாமத்தைக் கொண்டு, எவர்களும் போற்ற இந்த பூலோகத்தில் தீனுல் இஸ்லாமென்னு

மார்க்கம் தழைக்க, சூரியனைப்போ லெழுந்தருளி, குபிரென்னு மிருளை யறுத்தொதுக்குந் தீரவீரமுள்ள குருவாகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் கொடுமை பூண்ட மனத்தில் எப்போதும் பகைத்திருக்கும் அபூஜஹலும், திருமக்கமா நகரத்தார்களு மொன்று சேர்ந்து அதிக வணக்கத்தோடும் எழுதியனுப்பும் கடிதத்தின் வாசகத்தைத் தேர்ந்து, உடனே தமது படைவீரர்கள் சூழ்ந்து வர, ஹபீபு ராஜன் தாமிருக்குந் திமஷ்கு நகரத்தை விட்டெழுந்து, திருமக்கமா நகருக்கு வந்த வரலாற்றைச் சொல்லி, இன்னும் அதிலுள்ள விரிவான செய்திகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அற்றையினி லிரவகற்றி யறிவினா
  லுயர்ந்தோரை யாவி போலு
முற்றவரை மதிக்கேற்ப வுரைகொடுக்குந்
  திறத்தவரை யுறவி னோரை
வெற்றியொடு மினிதழைத்தங் கோர்மாடத்
  திடத்திருத்தி வியந்து நோக்கிக்
குற்றமற வபூஜஹல் தனுளத்தி லூறும்
  வரலாறு கூறு லுற்றான்.

வசனம்.

இவ்விதம் வீட்டில் புகுந்த அபூஜஹல், அன்றைய தினம் இரவு காலத்தை, குத்துபட்டவனுக்கும் குறை வயிற்றுக்காரனுக்கும் நித்திரை வராது என்பதுபோலே, அவன் எண்ணம் முடியாமல் அவ்வொட்டகங்களையும் பொருள்களையும் ஜன சமூகத்திற்கெதிரே இழந்து விட்டு வந்தபடியால், அன்றிரவை மனவருத்தத்தோடு கழித்து சூரிய உதயமாகி நேரம் விடிந்த பின் பாதகனாகிய அபூஜஹல் வேறொரு தனியிடத்தில் ஆலோசனைசபை யொன்று கூடுவித்தான். அச்சபையில் காபிர்களும், புத்திமான்களும், அபூஜஹலுடைய வார்த்தைக்கு மாறு சொல்லாதவர்களும், அவனுடைய அத்தியந்தமித்திரர்களும், பந்துக்களும், கல்விமான்களுமாக அநேகர் வந்து கூடினார்கள். அப்போது அபூஜஹல் தானே சபா நாயகனாக

வீற்றிருந்து, மற்றவர்களை நோக்கி தன் இருதயத்திலுள்ள வரலாற்றை கீழ்வருமாறு சொல்லலுற்றான்:—

“குலமக்களே! நான் சொல்லுவதை கவனமாய்க் கேளுங்கள். முஹம்மத் என்பவன் தான் பிறந்த குலத்தை பழித்து விலக்கிவிட்டு, நமக்கும் நம் குலத்தாருக்கும் பெரும் பகைவனாய் பழிசாதிக்கும் இருதயத்துடன் தலை எடுத்து விட்டான். அவனை நாம் கட்டாயம் கொலை செய்து விடவேண்டும். இல்லாவிடில், அவன் நடத்திக் கொண்டு வரும் தீன் என்னும் புதிய மார்க்கத்தை இன்னும் சொற்ப நாட்களுக்குள் நிலை நிறுத்தி விடுவான். அப்படி நிலைபெற்ற பின் அவன் மார்க்கம் நம் குலத்தையும், பூர்வீக காலந்தொட்டு நிகழும் மார்க்கத்தையும் அறத் தொலைத்துச் சூனியமாக்கி விடும். பிரபுக்களே! நீங்கள் ஒவ்வொருவரும் நன்றாய் ஆற அமர சிந்தித்துப் பாருங்கள். பகை, நோய், அக்கினி, விஷம், துஷ்டர் என்னும் இப் பொருள்களை ஆரம்பத்திலேயே அடக்கவேண்டும். மீறவிட்டால், எவ்வித உபாயத்தினாலும், அறிவினாலும், மந்திரத்தினாலும், ஔஷதங்களினாலும், தேகபலத்தினாலும் அடக்க அசாத்தியமாகும். வேலாயுதம் தரித்த வீரர்களே, நாம் இனி நம் குலத்தையும், மற்றவகையையும் பற்றி ஆலோசித்துக்கொண்டு, முஹம்மதை தண்டிக்காமல் சோம்பேறிகளா யிருப்போமானால், அதிக சீக்கிரத்தில் நாம் அனைவரும் அவனுக்கு தொண்டர்களாய், அவனுடைய ஆக்கினைக்கு உட்பட்டு உழலும்படி நேரிடும். அப்போது நாம் இக்காலங்களில் கூடிப்பேசும் இவ்வளவுக்குக் கூட சக்தியற்று, மூலை நோக்கி ஒடுங்கிக் கிடப்போம். தெய்வத்துக்காகவும், கோத்திரத்துக்காகவும் பாடுபட்டு, நம் ஜாதியாருக்கு வந்த ஆபத்தைத் தொலைக்க வேண்டி முஹம்மதை கொல்லத் தலைபடுவோமானால், நாம் தலை யிட்ட கருமத்திற்குத் தெய்வம் துணை நிற்கும். அப்படி பாடுபடும் நமக்கு அளவற்ற கீர்த்தியும், மோட்சமும் கிடைக்கும். சபையோர்களே! இவ்வித நல்லெண்ணம் என் இருதயத்தில் நாளொரு வண்ணமாய் வளர்கின்றது. நீங்கள் அனைவரும் ஆலோசனை செய்து என் எண்ணத்திற்கு ஒத்தபடி ஒரு முடிவு சொல்லுங்கள், என இவ்வாறு பிரசங்கித்து, சமூகத்தில் கூடியிருக்கும் கூட்டத்தாரை நோக்கி கேட்டான். இவ்விதம் பல நியாயங்களைக் காட்டி அபூஜஹல் கேட்ட கேள்விக்கு, அச்

சபையிலுள்ள காபிர்கள் அனைவரும் ஆலோசித்து, அவனை நோக்கி "எங்கள் தலைவரே! நீர் சொன்னவை யனைத்தும் வாஸ்தவம். நீர் சொல்லும் சொல்லுக்கு மாறு சொல்ல வல்லவர் யார்? உம்முடைய ஆலோசனைக்கு மேலறிவு சொல்ல சக்தியுள்ளவர்கள் இங்கே ஒருவருமில்லை. நீர் சிறந்த புத்திசாதுரிய முள்ளவர். நீர் தீர்க்க சிந்தித்துத் துணியும் ஒரு கருமத்திற்கு யோசனையூட்ட நாங்கள் தகுதியானவர்களல்ல. எப்படியும் நாம் க்ஷேமமாயிருக்க வேண்டியது தான் எங்கள் கோரிக்கை. இக்காரியத்திற்கு நீர் தாமே ஒரு முடிவு செய்து, அவ்வாறு நடத்துவதுதான் எங்களுக்கு சம்மதம்" என ஒரு மொழிப்பட்டுச் சொன்னார்கள். சபையோர் இவ்வாறு சொன்னவுடன் அபூஜஹல் மனமகிழ்ந்து, மறுபடியும் அவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னான்:—

"சபையார்களே! நாம் கருதியவண்ணம் முஹம்மதை கொலை செய்ய வேண்டுமானால், இவ்வூரில் வாசஞ் செய்கிற நாம் அனைவரும் ஒருங்கு திரண்டு, அவனை யெதிர்த்தாலும், அவன் தற்காலம் இருக்கும் ஸ்திதியைக் கவனிக்குமிடத்து எள்ளளவும் வெற்றி பெற மாட்டோம். அத்தனை தூரம் முஹம்மது மந்திரபலம் கொண்டிருக்கிறான். அவன் கற்றிருக்கும் மாந்திரீக பலத்தை அடக்கும் பொருட்டு, அநேக ஆயிர மாந்திரீகர்களை கொண்டு நாம் எதிர்த்தாலும் சித்தி பெறமாட்டோம். அவன் உருவேற்றி விடும் மந்திர பிரயோகம் விஷம் போல நம்மிலேறி நம்மை நாசஞ் செய்யும். நாம் அனைவரும் திரண்டு ஆலயங்களி லிருக்கும் தெய்வங்களிடம் போய் வணங்கி நின்று 'எங்கள் மனக்குறை நீக்கி எங்களுக்கு வந்த ஆபத்திலிருந்து எங்களை இரட்சிக்க வேண்டும்' என மன்றாடிப் பிரார்த்தித்தபோதிலும், அத்தெய்வங்கள் நமக்கு நன்மையான விடை தருமோ? அல்லது, நாம் செய்த பாபத்தைக் குறித்துத் தீமையான விடையைத் தருமோ? நாம் அறிவோம். அதுவும் சந்தேகத்தி லிருக்கின்றது. இவ்விதம் நாம் நாளுக்கு நாள் எண்ணி யெண்ணித் துணிந்த கருமம் அனைத்தும் வீணாகிக் கழிந்தனவன்றி, ஒரு காரியமும் கைகூடி வரவில்லை. குலமக்களே! இப்போது நான் ஒரு கருமத்தை ஆராய்நது முடிவு செய்திருக்கிறேன்: அதாவது திமஷ்கு நகரத்தையாளும் மாலிக் உடைய குமாரராகிய ஹபீபு என்னும் அரசர், எல்லா நன்மைகளிலும் நம்மைவிடப் பல மடங்கு மேன்பாடுள்ளவர். முஹம்மது உடைய அக்கிரமத்தைக் குறித்து இதுபரியந்தம் நாம் அவருக்கு அறிவிக்கவில்லை. இப்போது நாம் தெரிவிப்போமானால், அவர் இதைப் பற்றி கட்டாயம் பிரயாசை யெடுத்து நம் பகையை அறத் தொலைப்பார். நாம் முக்கியமாக அவருக்குத் தெரியப்படுத்தி, நமது ஆபத்தை விலக்கிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இதற்கு நீங்கள் என்ன செல்லுகிறீர்கள்?" என சொல்லி வினவினான்.

இதைக்கேட்ட பகைவர்கள் அனைவரும் ஆராய்ந்து பார்த்து, அவன் சொல்லுக்கு இசைந்து சம்மதித்தார்கள். திமஷ்கு நகரத்து அதிபதியாகிய ஹபீபு என்பவருக்குக் கடிதமெழுதி அறிவிக்க வேண்டும் என்னும் காரியத்தில் அனைவரும் ஒருமித்து, கடிதமெழுதுவதற்காக சுபதினம் சுப முகூர்த்தம் முதலியன ஆராய்ந்தறிந்து, கல்வியில் சிறந்த லிகிதக்காரனொருவனை யழைத்து யாவரும் திரண்டிருந்து கடிதத்தை யெழுதி முடித்தார்கள்.

திமஸ்கு நகரத்து ஹபீபு அரசருக்கு
மக்கமா நகரத்தார் எழுதின நிருபம்.

அலங்காரமமைந்த திமஷ்கு நகரத்தில் வீற்றிருந்து ஷாம் இராஜ்ஜியத்தை யாளும் ஹபீபிப்னு மாலிக் மகாராஜா அவர்கள் திவ்விய சந்நிதிக்கு, மக்கமாநகரத்து அபூஜஹல் முதலான பிரஜைகள் அனைவரும் கைகூப்பி வணங்கி எழுதிக்கொள்ளும்

விஞ்ஞாபனம்.

மகாராஜாவே!

நிகரில்லாத குலதெய்வமாகிய ஹுபல் என்னும் சுவாமி வாசம் செய்கிற விசேஷ ஸ்தலமாகிய இந்த மக்கமா நகரத்தில், ஹாஷிம் வம்சத்தில் அப்துல்லாவுடைய மகனாய், ஆமினாவின் வயிற்றில் முஹம்மது என்பனொருவன் நூதனமாகப் பிறந்திருக்கிறான். அவன் சிறு பிராயத்திலேயே பிதாமாதாக்கள் அற்று, அநாதைப்பிள்ளையாய் வளர்ந்தான். அப்படி வளர்ந்து வருங்காலத்தில், மந்திர சாஸ்திரத்தில் தேர்ச்சிபடைந்து மகாநிபுணனானான். உலகிலுள்ள கொடிய விஷமனைத்தும் திரண்டு மானிடவடிவெடுத்து வந்தாற்போல தலையெடுத்த அந்த முஹம்மது, தான்கற்ற மந்திர சித்தியால் அநேகவித அற்புதங்களைக்காட்ட ஆரம்பித்து, நாளது வரைக்கும் மாயாஜாலங்களை விளைத்த வண்ணமாயிருக்கிறான்.

அவன், கதிபற்ற ஏழைக்குடியிற் பிறந்த தரித்திரன். சிலவருஷங்களுக்கு முன் இவ்வூர்க்குல மக்களில் ஒருவராகிய குவைலீது என்னும் பிரபுவினுடைய புத்திரியாகிய கதீஜா என்னும் சீமாட்டியை விதவாவிவாகம் பண்ணிக்கொண்டான். அதனால் அவனுக்கும் திரண்ட ஆஸ்திகள் கிடைத்தன. பாக்கியவதியாகிய கதீஜாவை விவாகம் பண்ணின அன்றுதொட்டு திரவியபலத்தினால் கர்வங்கொண்டு, உறவின் முறையாரும் ஊராருமாகிய கனவான்களொருவரையும் மதிக்கிறதேயில்லை. அரசர்களைக் கண்டாலும் நிர்தாட்சண்யத்துடன் அவமரியாதையாய் இறுமாந்து திரிகின்றான். ஒழுக்கம், வணக்கம், மானம் என்பவற்றில் சிறிதும் அவனிடத்தில்இல்லை. இன்னும், அவன் தனக்கு நாற்பதுவயது நிறப்பமானவுடன், தண்ணீரைக் கலக்கிச் சேறுக்கத்துணிந்தது போல இந்த மக்கமா நகரத்தைக் கலக்கத்தலைப்பட்டான். கடவுள் வேறு ஒருவன் உண்டென்றும், தான் அக்கடவுளுடைய தூதனென்றும் தனக்கு நபிப்பட்டம் இறங்கிற்றென்றும், குர்ஆன் என்னும் வேதமொன்று தனக்குகடவுளால் கொடுக்கப்பட்டதென்றும், தனக்குரிய கலிமாவைச்சொல்லி. இஸ்லாம் என்னும் பரிசுத்தமார்க்கத்தில் சேர்ந்தவர்களே மோட்சமடைவார்கள்; அல்லாதவர்கள் நரகமடைவார்கள் என்றும் பயிரங்கத்தில் பிரசங்கம் செய்து எங்கும் பிரஸ்தாபம் பண்ணத்தலைப்பட்டான். இதற்கிடையில், தானும் தன்மார்க்கத்தாரும் வணங்கும் வணக்கம் இதுஎன, கண்ட கண்ட இடங்களிலெல்லாம் குப்புறவிழுந்து, சிரசு தரையிற்பட பணிந்து எழும்புகிறான். இதுதான் பரிசுத்தமான முத்திமார்க்கமாம்; மற்ற மார்க்கங்களனைத்தும் அறக்கேடானவையென்று அச்சமின்றி துணிந்து சொல்லுகிறான். தன்னுடைய கட்டுவிசேஷமான வார்த்தைகளாலும், மந்திரபலத்தினாலும், இவ்வூரிலுள்ள அறிவற்ற மக்களில் அநேகரை வசப்படுத்திப் புதியமார்க்கத்தில் சேர்த்துக்கொண்டான். அவன் விளைக்கும் அற்புதங்கள் கொஞ்சமல்ல. வனவிலங்குகளையும், பட்சிஜாலங்களையும் வாய்திறந்து பேசச்செய்கிறான். இன்னும் பலவகையான ஜாலவித்தைகளையெல்லாம் பிரத்தியட்சமாய்க் காட்டுகிறான். இவ்வித மாயா அற்புதங்களை அவன் காட்டுதெல்லாம் மாந்திரீக பலங்கொண்டல்லாமல், வேறே தெய்வதத்துவம், அல்லது தெய்வசகாயம் ஏதும் உண்டென்று நம்ப இடமில்லை. அன்றியும், அந்த முஹம்

மது நமது தெய்வங்களனைத்தையும் குறித்து "இவைகளென்ன விக்கிரகங்கள், கல்லும், மண்ணும், இரும்பும், செம்பும், பித்தளையுந்தானே!" என்று நகைத்துத் தூஷிக்கிறான். தேவாலயங்களைக் காணுந் தோறும் கண்களை மூடிக்கொள்ளுகிறான். நம் மூதாட்கள் ஒழுகி நடத்திய தெய்வாராதனையை நிந்தித்துத் தோஷரோகணஞ்செய்கிறான். இவ்விதகோஷ்டங்கள் செய்யத் தலைப்பட்டபடியால் அவனுடைய குடும்பத்தாரும் அவனை வெறுத்துவிட்டார்கள். இன்னும் "சொற்ப காலத்தில் இவ்வுலகத்தையாளும் அரசர்கள் அனைவரையும் என் அடிக் கீழ்படுத்தித் தொண்டர்களாக்குவேன். அறிவினாலும், பொருளினாலும், சேனைவீரர்களாலும், மற்ற எவ்வகையினாலும் என்னுடன் எதிர்க்கத் சக்தி யுள்ளவர் யார்"? என்று தன்னை யுயர்த்தி இறுமாப்பாய் பேசுகிறான். இவையல்லாமல், இன்னும் அவன் எங்களைக் காணுந்தோறும் சொல்லுகிற வாய்க்கிறுக்குகள் கொஞ்சமல்ல. அவைகளை இக்கடிதத்தி லெழுதுவது யோக்கிய மாகாதென்று நிறுத்துகிறோம். அவனுக்கு வாய்கொழுப்பு மிகவுண்டு. அந்த முஹம்மது என்பவன் வசனிக்கும் காது கொள்ளத் தகாத வசனங்களும், அவனுடைய நடவடிக்கைகளும் மானிட ஜென்மத்துக்கு மிக அருவருப்பும் தீங்குமானவைகளேயன்றி வேறல்ல. முஹம்மது என்பவன் எங்களுக்குப் பெரிய ஆபத்தாய்த் தலையெடுத்து இவ்விதக் கோளாறுகளை யுண்டாக்கத் துணிந்த நாள் முதற்கொண்டு, நாங்கள் அனைவரும் செத்த பிரேதங்களுக்கு சமானமாயிருக்கிறோம். அவனுடைய கோஷ்டங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து எதிர்த்து நின்று சாதிக்க நாங்கள் அருகர் அல்ல; எங்களுக்கு அத்தனை சக்தியுமில்லை. நிருவிசாரமாயிருக்க எங்களுக்கு இடமில்லை. ஊணுறக்கமின்றி, பிரதிதினமும் முஹம்மது உடைய வில்லங்கத்துக்கு அஞ்சித் தடுமாறுகிறோம்.

மகாராஜா அவர்களே! அந்த முஹம்மது உடைய அக்கிரமத்தைப் பொறுக்க எங்களால் முடியவில்லை. இனி தேவரீராகிய தங்களைக்கொண்டே, நேரிட்ட ஆபத்தை விலக்கி க்ஷேமமடையலாமென்று நாங்கள் கருதி, தங்களுடைய மேலான சந்நிதானத்துக்கு இந்த மன்றாட்டப் பத்திரத்தை யெழுதினோம். அந்த முஹம்மது செய்யும் செய்கை ஒவ்வொன்றையும் விவரித்து எழுதமுடியாது. ஆனபடியாலேதான் இரண்டொரு வார்த்தையில் சுருக்கியெழுதினோம். தாங்கள் இந்த எளிய பிரஜைகள் பேரில் இரங்கி, ஒரு

முறை இங்குவந்து தங்கள் கிருபைக் கண்களால் பார்ப்பீர்களானால், அப்போது முஹம்மது உடைய அக்கிரமங்களும், மக்கமா நகரத்தின் நிலைமையும் தங்களுக்கு நன்றாய் விளங்கும். ஆகையால், தேவரீர் தயவுசெய்து திமஷ்கு நகரத்தை விட்டு எழுந்தருளி இந்த மக்கமா நகரத்துக்கு வந்து, முஹம்மது விளைக்கும் மாய ஜாலம் அனைத்தையும் கண்ணாரக்கண்டு, அவனுடைய மந்திரப் பிரயோகம், கர்வம், துஷ்டத்தனம், அக்கிரமம் அனைத்தையும் அடக்கி, எங்களை இரட்சிக்க வேண்டும் என்று மிகவும் தாழ்ந்து பிரார்த்திப்பது மன்றி, தாங்கள் இக்கடிதத்தைக் கண்டவுடன் புறப்பட்டு வருவீர்களென முழுநம்பிக்கையுடன் வழிப்பார்த்துக் கொண்டும் இருக்கிறோம்.

இங்ஙனம்

மக்கா வாசிகள்.

இக்கடிதத்தை யெழுதிமுடித்து மடித்து முத்திரை யிட்டுப் பட்டுஉறையிற் பொதிந்து, கடிதங்கொண்டு போகும் ஒருவனை அழைத்து அவன் கையில் கொடுத்து, திமஷ்கு நகரத்துக்கு அனுப்பினார்கள்.

மக்கமா நகரத்திலுள்ள பகைவர்களனைவரும் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினவுடன், அக்கடிதக்காரன் அனைவரையும் துதித்துப் பிரயாணப்பட்டு மக்கமா நகரத்தை விடுத்து அதிக விரைவாய் திமஷ்கு நகரத்தைநோக்கி நடந்தான். வழியில் வந்த காடுகள், மலைகள், குன்றுகள், வானாந்தரங்கள், ஆறுகள், அருவிகள் அனைத்தையும் கடந்து, ஷாம் இராஜ்ஜியத்தை யடுத்து, அநேக நகரங்களை யெல்லாம் நீங்கி திமஷ்கு நகரத்தைக்கண்டு அந்நகரத்துக்குள் புகுந்தான். அந்தக்கடிதக்காரன் திமஷ்கு நகரத்தின் மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் முதலான அலங்காரமான கட்டிடங்கள், விசேஷமான தானங்கள் அனைத்தையும் கண்டு களித்து இராஜா வீதியிற் பிரவேசித்து, அங்குள்ள சித்திரமமைந்த மாளிகைகளை யெல்லாம் நோக்கி மனங்களித்து, ஹபீபு அரசர் வாசஞ்செய்யும் அரண்மனைவாயலில் சென்றான். அந்த அலங்காரமான அரண்மனைவாசலில் எண்ணிறந்த காவலோர் ஆயுதபாணிகளாய் நெருங்கி நிற்பதைக் கண்டு அவர்களின் தலைவனை யடுத்து நின்று, தான் வந்த வரலாற்றை அவனுக்குத் தெரிவித்தான்.

மக்கமா நகரத்திலிருந்து வந்த தூதன் சொன்ன சொல்லைக் கேட்ட தலைவன் விரைந்து சென்று, ஹபீபு அரசரின் இராஜாசபையில் நின்று, சங்கதியைத் தெரிவித்தான். ஹபீபு அரசர் உடனே அவனை அழைத்து வரும்படி விடைகொடுத்தார். அப்போது அத்தலைவன் மீண்டும் வந்து, கடிதக்காரனை அழைத்துக்கொண்டு போனான்.

மந்திரிகள், பிரதானிகள், சேனாதிபதிகள், புரோகிதர்கள், வேதபாரகர்கள், ஆசியர்கள் எண்ணிறந்தோர் நெருங்க, மெய்க் காப்பாளர்களாகிய இராணுவங்கள் புடை சூழ, நடுவே சிங்காசனாதிபதியாய் வீற்றிருக்கும் ஹபீபு அரசருடைய சமுகத்தில் மக்காவாசிகள் அனுப்பிய தூதன் சென்று கும்பிட்டு நின்று, பலபல வகை கொண்டு அரசரைப்புகழ்ந்து, தான்கொண்டுவந்த நிருபத்தை இராஜசபைக்கு முன் வைத்தான். தமது சந்நிதியில் கடிதம் வைக்கப்பட்டவுடன், ஹபீபு அரசர் அங்குள்ள இராஜவமிசத்து இலிகிதக்காரனை, அக்கடிதத்தை வாசிக்கும்படி கட்டளை பண்ணினார். உடனே அக்கடிதத்தை யெடுத்து அவன் சபையிலுள்ளவர்கள் அனைவரும் கேட்கும் வண்ணம் வாசித்தான்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்

வனைந்த பாசுர மனைத்தையும் வரன்முறை கேட்டுச்
சினந்த யங்குவே லவன்மன துறச்சிரந் தூக்கி
யினந்த னிற்பெரியவர்மறை யவர் கெடுத்தியம்பிப்
புனைந்த பொன்முடி மண்டப மாளிகை புகுந்தான்
தனித் திருந்தொரு மண்டபத் தரசர் கடமையு
நினைத்த சூழ்ச்சியை யுரைதரு நிருபர் கடமையு
மனத்தி னின்புற வழைத்தரு கிருத்திமும் மறையின்
றொனித்த செய்தியு நிகழ்ந்ததுக் தொகுத்தெடுத் துரைத்தான்.

வசனம்.

அக்கடிதம் வாசிக்கப்பட்டு தீர்ந்தபின், ஹபீபு அரசர், கல்வி கேள்விகளில் சிறந்த புத்திமானாகையால் அக்கடிதத்தி லெழுதியுள்ளவை அனைத்தையும் பற்றி சிந்தித்து, ஆசனத்தைவிட்டிறங்கி ஒரு தனி மண்டபத்திற் சென்று, அங்கிருந்து கொண்டு மந்திராலோசனை சபை யொன்று கூடும்படி கட்டளை பண்ணினார்.

மந்திராலோசனை சபைகூட கட்டளை பிறந்தவுடன் வேறொரு தனி மாளிகையில் இராஜவமிசத்துக் கனவான்களும், ஆலோசனையில் வல்ல மந்திரிமார்களும், புரோகிதர்களும் அநேகர் வந்து கூடினார்கள். அப்போது ஹபீபு அரசர் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்து, சபையோரை நோக்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப்பற்றி முன்னுள்ள வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள் குறிப்பாய்க் கூறும் வரலாறுகளையும், தற்காலத்தில் மக்கமா நகரத்தில் உண்டாயிருக்கும் கலகத்தையும், அங்கிருந்து வந்திருக்கும் கடிதத்தையும் குறித்து உபந்நியாசித்தார்.

ஹபீபு அரசருடைய உபந்நியாசத்தை கேட்ட சபையிலுள்ள கனவான்களனைவரும் அதைப்பற்றி ஆலோசித்து, அவரை நோக்கி "தேவரீர் மக்கமா நகரத்துக்குச் சென்று, அங்கு நிகழும் காரியங்களைப் பிரத்தி யட்சமாய்கண்டுதான் அறியவேண்டும். அந்நகரத்தில் சமீபகாலத்தில் காணக்கூடிய புதுமை யொன்று உண்டு" என்று சொன்னார்கள்.

இச்சொல்லைக்கேட்ட ஹபீபுஅரசர் சேனாதிபதியை யழைத்து, மக்கமா நகரத்துக்குப் புறப்படுவதற்காக இராணுவம் எழும்படி கட்டளை பண்ணினார். இராணுவம் எழும்வண்ணம் இராஜ கட்டளை பிறந்தபோதே தெருக்கள் தோறும் முரசு முழக்கினார்கள். உடனே ரத கஜ துரக பதாதிகளென்னும் சதுரங்க சேனையு மெழுந்தன. சேனாவீர ரனைவரும் வாள், வேல், வில், தண்டம், பரிசை முதலான சர்வாயுதங்களும் அணிந்து, தங்கள் தங்கள் வாகனங்களிலும், கால் நடையாகவும் எழுந்தார்கள். இவ்விதம் எழுந்தபின், ஹபீபு அரசர் தமது இராஜ காரியத்திற்காக வேறொரு பிரதிநிதியை நியமித்து அரசியலை அப்பிரதிநிதியின் வசமாக்கி, முரசு முதலிய வாத்தியங்கள் முழங்க, கொடி, குடை, ஆலவட்டம், சாமரம் முதலான சின்னங்கள் நெருங்க, மெய்க்காவற் பட்டாளத்தார் அநேகர் புடைசூழ, ஒற்றைப்பூஞ் சக்கரக்குடை நிழலில் ஆண்சிங்கத்தை யொத்துப் புறப்பட்டார்.

இராஜாதி ராஜராகிய ஹபீபிபுனுமாலிக் மகாராஜா, தமது சேனாசமுத்திரத்துடன் இராஜதானியாகிய திமஷ்கு நகரத்தை விட்டுப்புறப்பட்டு, நாடுகள், நகரங்கள், சிற்றூர்கள், வனங்கள் வனாந்தரங்கள், குன்றுகள், மலைகள், அருவிகள், நதிகள் எல்லாவற்றையும் கடந்து நடந்தார். வாத்தியங்கள் சமுத்திரம் போல

கோஷ்டிக்க சேனாவீரர்கள் அணிந்திருக்கும் ஆயுதங்கள் ஆகாயத்து மின்னலை யொத்துப் பிரகாசிக்க குதிரை முதலான வாகனங்களா லெழும் புழுதி ஆகாயத்தில் மண்டிச் சூரிய கிரணத்தை மறைக்க ஹபீபு அரசன் சேனாவெள்ளம் நடந்தது: இவ்வளவு அலங்காரத்துடன் நடந்து ஷாம் இராஜ்ஜிய எல்லையைக் கடந்து அறபு இராஜ்ஜியத்தை யடுத்து சிங்கம், புலி, யானை, கரடி முதலான துஷ்ட வனவிலங்குகள் அனைத்தும் அஞ்சி நிலைபெயர்ந்தோடும் வண்ணம் ஐவகை நிலத்தையும் கடந்து நடந்து, மக்கமா நகரத்தை யடுத்துள்ள ஒரு சிற்றூரில் படையிறங்கிக் கூடாரமிட்டுத் தங்கினார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மைக்கருங் கவிகை வள்ளல் முஹம்மதுக் குதவி யாகத்
தக்கவனருளாற் செம்பொற் றலத்தினும் பாரிற் றோன்றுந்
திக்கினுங் கதிர் குலாவுஞ் செழுஞ்சிறைத் தடங்கட் செவ்வி
மிக்குயர் வடிவதாகச் சபுறயீல் விசும்பில் வந்தார்.

ஆயிரஞ் சிறையு மெவ்வா வாயிரஞ் சிரசு மாயீ
ராயிரம் விழியுந் தோன்ற வாயிர முகமு மாகி
யாயிர நாவினாலு மஹ்மூதே யென்னக் கூவி
யாயிரம் பெயரி னான்றன் சலாமென வருளிச் செய்தார்.

வசனம்.

ஹபீபு அரசர் மக்கமா நகரத்தையடுத்துப் பாளயம்இறங்கினவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு உதவியாக வானவர் பெருமானாகிய ஜிபுறயீல் ஆகாயத்தில் வந்தார். ஜிப்றயீல் (அலை) ஆகாயத்தில் நின்றுகொண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை விளித்து "முஹம்மதே! தங்களுக்கு அல்லாஹு தஆலா சலாம்சொன்னான்" என்று சப்தமிட்டு சொன்னார். இச்சப்தத்தை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார்கள். பார்த்தபோது, ஆகாயத்திலே ஆயிரம் சிரசுகளும், ஆயிரம் முகங்களும், ஆயிரம் வாய்களும், ஆயிரம் நாவுகளும், இரண்டாயிரம் கண்களும், இரண்டாயிரம் சிறகுகளும் உள்ள ஒருவர் நிற்கக்கண்டு

இவர் ஜிப்றயீலென்று அறியாமல் யாரோவென அச்சங்கொண்டு, மனம் கலங்கினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மைக்கண்டு அஞ்சினதை ஜிப்றயீலறிந்து, மறுபடியும் தமது ஆயிர நாவினாலும் "முஹம்மதே! அஞ்சாதீர்கள். அல்லாஹு தஆலா தங்களுக்கு நிகரில்லாத மகிமையை கொடுத்திருக்கிறான். அன்றியும் 'என்னால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் அனைத்தும் முஹம்மதுக்கு ஈடாகா. முஹம்மதைப் போல ஒன்றையும் நான் சிருஷ்டிக்கவில்லை. சிருஷ்டிகள் அடங்கலுக்கும் என்னுடைய முஹம்மது மேலானவர்' என்று அல்லாஹு தஆலா பிரமாணத்துடன் சொல்லியிருக்கிறான். இப்போது திமஷ்கு நகரத்து அதிபதியாகிய ஹபீபு என்பவர் இவ்வூருக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் பகையர்களின் வேண்டுகோளின் படிவந்து பாளையமிட்டிருக்கிறார். அதனால் ஒரு தீங்கும் தங்களுக்கு உண்டாகமாட்டாது. அந்த ஹபீபு என்னும் அரசர் எவ்வுலகத்திலும் எவர்களாலும் கண்டு கேட்டறியாத, நூதனமான அற்புதமொன்றை நிகழ்த்தும்படி கேட்பார். அதற்குத் தாங்கள் கவனிக்காமல் அல்லாஹு தஆலா இடம் துஆ கேளுங்கள். உடனே அவர் கேட்டபடி நிறைவேறும். அவ்வற்புதத்தை வையகத்தாரனைவரும் கண்ணாரக் காண்பார்கள். அன்றியும், உறுப்பின்றி திரண்ட தசைக்கட்டியொன்றை அவர் கொண்டு வந்திருக்கின்றார். அதை மானிட வடிவமாக்கும்படி தங்களைக் கேட்பார். அதற்கும் தாங்கள் அல்லாஹு தஆலா இடம் துஆ கேளுங்கள், உடனே நிறைவேறும். இன்னும் அந்த ஹபீபு என்பவர் தாம் கற்ற கல்வி சாமர்த்தியத்தினால் பல வினாக்களைத் தங்களிடம் வினவுவார். அதற்கெல்லாம் தாங்கள் திருவாய் மலர்ந்து தக்க விடைகொடுங்கள். சிறிதும் அஞ்சாதீர்கள்" என்று சொன்னார். இதைக் கேட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இருதயம் பூரித்துசந்தோஷங்கொண்டு முகமலர்ந்தார்கள். ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் தம் முன் எப்போதும் வரும் உருவமன்றி, வேற்றுருக்கொண்டு அஞ்சத்தக்க விதமாய் வந்து ஆகாயத்திலேயே நின்றுகொண்டபடியால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "யா அல்லாஹ்! என் உயிர்த்துணைவரான ஜிப்றயீலை இப்போதுள்ள உருவத்தை மாற்றி, எப்போதுமுள்ள உருவத்துடன் என் முன் வரும்படி நீ கிருபை செய்" என்று இரந்து கேட்டார்கள். உடனே ஜிப்றயீல் அலை

ஹிஸ்ஸலாம் பழைய ரூபங்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தில் வந்து நின்று சம்பாஷித்துக்கொண்டிருந்து, வானுலகம் சென்றார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அகங்களித்து நிர்விசாரமாயிருந்தார்கள்.

பிறகு, ஹபீபு அரசர் இன்ன இடத்தில் பாளையமிட்டிருக்கின்றாரென்னும் சங்கதியை அபூஜஹல் முதலானவர்கள் அறியும்படி சில தூதர்கள் மக்கமாநகரத்துக்குள் வந்து தெரிவித்தார்கள். இச்சமாசாரத்தைக் கேட்டவுடன் அபூஜஹல் பூரித்துப் புஜங்கள் விம்ம மகிழ்ச்சி கொண்டு, மற்றவர்களை நோக்கி "முஹம்மதை ஜெயித்து விட்டேன்! முஹம்மதை ஜெயித்து விட்டேன்!! இனி எனக்கு நிகர் யார்?" என்று சப்தமிட்டு, கொண்டாடிக் கொண்டாடி, துள்ளித்துள்ளி, ஆனந்தக் கூத்தாடினான். இவன், ஒரு காரியத்தை சீர்தூக்கி சிந்தித்து, இனி விளைவது எதுவோ வென்று எண்ணிப்பாராமல், மிருகத்துக்கு சமானமாய் நடக்கும் மடையர்களுக்குள் சிரேஷ்டனானபடியினால்தான், அபுல் ஹக்கம் என்னும் விசேஷமான இயற்பெயரை மறைத்து அபூஜஹல் என்னும் காரணப்பெயர் தரிக்கப்பட்டான். இவ்வித மடையர்களுக்குப் பிதாவானவன் சொற்ப காரியத்தில் இறுமாந்து விடுவது நூதனமா? அல்ல. மனதுள் அடங்காத ஆனந்தமும், இறுமாப்புங் கொண்ட அபூஜஹல், தெருக்கள் தோறும் தூதர்களை அனுப்பி, காபிர்களனைவரையும் அழைத்துத் தன் மனை வாசலிற் கூட்டி, அவர்களை நோக்கி "கனவான்களே! நாம் எழுதி அனுப்பின கடிதத்தின் பிரகாரமே ஹபீபு மஹாராஜா வந்து விட்டார். நம்மையும், நம் குடும்பத்தையும், நம் சமயத்தையும் நாசமாகாவண்ணம் காத்து இரட்சிப்பதற்கென்று புறப்பட்டு வந்த அந்த மகாராஜனை, நாமனைவரும் திரண்டு எதிர் சென்று காணிக்கை வைத்து வணங்கி அழைத்து வந்து, இவ்வூரில் தனித்த மாளிகை யொன்று தயார் செய்து அதிலிருத்தி நாமனைவரும் அவருக்குத் தொண்டர்களாக யிருந்து குற்றேவல் செய்து நம் காரியத்தை முடித்துக்கொள்வதுதான் உத்தமம்" என்று சொன்னான். இச்சொல்லைக்கேட்ட அறபிகளனைவரும் சம்மதித்தார்கள்.

உடனே கொற்றர், கொல்லர், சிற்பர், மரவினைஞர், சித்திரக்காரர் அனைவரையும் அழைப்பித்து, ஹபீப் அரசர் வசிப்பதற்காக

அலங்காரமான மாளிகை யொன்றை விரைவில் நூதனமாகக் கட்டி முடித்து, அம்மாளிகையை நானாவகையான சாமான்களைக்கொண்டு சிங்காரித்து, ஆசனமமைத்து, முகப்பில் விநோதமான பூம்பந்த லிட்டு, வாழை, கமுகு, தெங்கு முதலானவை நாட்டி, துவஜஸ்த பங்கள் நிறுவி, இராக்காலங்களில் பிரகாசிக்கும் தீபங்கள் நிரை நிரையாக அமைத்து, மிகுந்த அலங்காரம்பண்ணினார்கள். இவ்வாறு மாளிகையை அலங்கரித்துத் தீர்ந்தபின், மகாபாதக சிரோமணியாகிய அபூஜஹ்லும், குறைஷிகளின் தனவான்களும், தலைவர்களும், வேதபாரகர்களும், ஆசிரியர்களும், மற்ற சாமானிய ஜனங்களு மெழுந்து, ஹபீபு அரசரை எதிர்சென்று அழைத்து வரும் வண்ணம் புறப்பட்டார்கள். வாத்தியங்கள் தொனிக்க, விருதுகள் நெருங்க, ஆசிரியர் ஆசீர்வாதங் கூற, மங்களவாழ்த்தின் சப்தம் சமுத்திரமொத்து முழங்க வந்து, கொண்டுவந்த திரவியங்களை ஹபீபு அரசரின் பாதத்தில் காணிக்கை வைத்துக் கைகுவித்துத் தண்டனிட்டு அணியணியாய் நின்றார்கள். தம் முன் வந்து வணங்கி நிற்கும் மக்காவாசிகளை ஹபீபு அரசர் நோக்கி, அவரவர் தாரதம்மியப்படி உபசரித்து, உட்காரும் வண்ணம் உத்தரவு பண்ணினார். அந்த இராஜ சபையில் அனைவரும் திரண்டு உட்கார்ந்தார்கள்.

பிறகு, திமஸ்கு நகரத்து அதிபதியாகிய ஹபீபு அரசரும் மக்கமா நகரத்தாரும் சற்றுநேரம் பலகாரியங்களைக் குறித்து அளவளாவி சம்பாஷித்துக் கொண்டிருந்து, பிறகு மக்கமா நகரத்துக்குள் பிரவேசிப்பதற்காக எழுந்தார்கள். இரத கஜ துரக பதாதி என்னும் நான்குவகை சேனைகளும் புறப்பட்டன. ஹபீபு அரசர் தமது சேனாசமுத்திரம் புடைசூழ மக்கமாநகரத்துள் புகுந்து, இராணுவங்கள் தங்குவதற்காக நியமித்த ஜாகைகளில் அந்தந்த இராணுவத்தலைவர்களுடன் தங்க விடைகொடுத்துவிட்டு, தாமும், மந்திரிகளும், பிரதானிகளும், சேனாதிபதிகளும், புரோகிதர்களும் தமக்கென்று இயற்றிய புதியமாளிகையில் பிரவேசித்து, ஆசனத்தில் வீற்றிருந்தனர். தமது இராஜசபையில் எண்வகைத் துணைவ ரென்றும் ஐவகை யுறுதிச் சுற்றமென்றும் மக்கமா நகரத்துத் தலைவர்களும் நெருங்கி யிருக்க, சந்தோஷத்துடன் ஹபீபிபுனு மாலிக்கு மகாராஜா இருந்தார்.

34-வது அத்தியாயம்.

மதியை அழைப்பித்தது.

சந்த விருத்தம்.

விதியை விதித்திடு மிறைவ னனுப்பிய விறல்நபிகட் கரசாய்ச்
சதியை விளைத்திடு குபிரரு ளுக்கொரு தபனனை யொத்துறுவோர்
கதியை நமக்கரு ளஹ்மதி டத்தினில் ஹபீபிறை சொற்படியே
மதியை யழைத்திடு சரிதையினைச்சொலும் வகையினுரைத்திடுவாம்

இதன் பொருள்.

சகல படைப்பினங்களுக்கும் பிரமாணத்தோடு விதி என்னுங் கட்டளையை நியமிக்கும் நாயகனான அல்லாஹு தஆலாவால் அனுப்பப்பட்ட வெற்றி பொருந்திய இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிகளென்னும் தீர்க்கதரிசியர்கட்கும், இராஜசமேதருமாய்ச் சதிமானத்தை யுண்டாக்குங் குபிரருளுக்கு ஒப்பற்ற சூரியன்போலுமாய் வந்து விளங்கி, நமக்கெல்லாம் மோட்சந்தருங் கடாட்ச காருண்ய அஹ்மதென்னு முதற்பெயரையுடைய முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், திமஷ்கு மண்டலாதிபன் ஹபீபு ராஜா சொன்னபடி, அமாவாசை இருளிரவிற் பூரணசந்திரனை அழைத்த சரித்திரத்தை, முன்னர் கவிதையினாற் புராணமாகப் பாடிய ஆசிரியரவர்கள் சொற்போலவே யாமும் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தவிசினி லிருந்து வெற்றித் தடமுடி யரசர் கோமா
னபுஜஹ்ல் தன்னைக்கூவி யணிநகர்க் கழைத்த மாற்றங்
கவரற மனத்திற் றுற்றகருமங்க ளனைத்து நாளுங்
குபன்னை மனத்திற் கொண்டோய் கூறெனக் கூறினானால்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குத் தீங்குசெய்யக் கருதி, மக்காவாசிகள் எழுதிய கடிதத்தின்

பிரகாரம், திமஷ்கு நகரத்தை விட்டுப் புறப்பட்டு வந்திருக்கும் ஹபீபிபுனு மாலிக் என்னும் அரசர் தாம் வந்து இரண்டொருதினங்கள் சென்ற பிற்பாடு, ஒருநாள் தமது சமுகத்தில் அநேகர் சூழ்ந்திருக்கும் வண்ணம் சிங்காசனத்தில் வீற்றிருந்துகொண்டு, அபூஜஹலை அழைத்து வரும்படி கட்டளை பண்ணினார். உடனே அபூஜஹல் முதலான காபிர்கள் அனைவரும் அந்த இராஜ சபையில் வந்து கூடினார்கள். அச்சபை அநேக கனவான்களால் நிரப்பப்பட்டிருந்தது. அப்போது ஹபீபு அரசர் அபூஜஹலை நோக்கி, "குபல் என்னும் சுவாமியை எப்போதும் தியானித்து வணங்கும் தகுதியுள்ள அபுல் ஹக்கமே, என்னை இத்தனை தூரம் வருந்தியழைத்த காரியம் என்ன? அவற்றையும் உமது, இருதயத்திலுள்ள சங்கதிகளையும் விவரமாகச் சொல்லுக" என்று கேட்டார். ஹபீபு அரசர் இவ்விதம் கேட்டவுடன் அபூஜஹல், ஒலீது, உத்துபா, உமறு, உக்பா, உமையா, சைபா என்னும் இவ்வேழு பாதகர்களும் அந்த இராஜ சபையிலெழுந்து வணங்கி நின்று, ஹபீபு அரசரை நோக்கி பலவாறாகத் துதித்து "இராஜாதி ராஜராகிய மகாராஜா அவர்களே, தேவரீருடைய அடிமைகளாகிய எங்களுக்கு வந்து நேரிட்டிருக்கும் ஆபத்தின் விதத்தை மனங்கூர்ந்து தாங்கள் கேட்டருள வேண்டும்.

இந்த மக்கமா நகரத்தில் முஹம்மது என்னும் புது மனிதனொருவன் பிறந்து, நமது மார்க்கத்தையும், வணக்கத்தையும், தொன்று தொட்டுள்ள தேவாலயங்களையும், அவைகளிலிருக்கும் சுவாமிகளையும், கோத்திரப்பிதாக்களையும், வேதாகமசாஸ்திர விற்பன்னர்களாகிய குருக்களையும், இன்னுமுள்ள நமது மற்ற நடவடிக்கைகளெல்லாவற்றையும் நிந்தித்துக் கெடுத்து கலகம் விளைத்துக் கொண்டிருக்கிறான். தாங்கள் இராஜரீகத்திலும், வமிசத்திலும், கல்வியிலும், செல்வத்திலும் நிகரில்லாதவர்கள். தங்களுக்கு நிகழும் நூற்றுப்பது வயதுகளில் தேர்ந்த புத்திநுட்பத்தால் இது நன்கு, இது தீது என அறிந்து கொள்ளக்கூடாத காரியம் ஒன்றுமில்லை. நாங்கள் இப்போது தங்கள் சந்நிதியில் நின்று சொல்லிக் கொள்ளும் விண்ணப்பத்தை கேளுங்கள். இன்னும் இவ்வூரார் அநேகர்வந்து தங்கள் திவ்விய சந்நிதானத்தில் முறையிடக் காத்திருக்கின்றார்கள். நாங்கள் முறையிடும் முறைப்பாடுகளால்

மாத்திரமல்ல, அந்த முஹம்மது உடைய அக்கிரமத்தைத் தங்கள் கண்களாலும் பிரத்தியட்சமாகக் காணாமற்போகமாட்டீர்கள். நாங்கள் முன்னர் தங்கள் சமுகத்துக்கு எழுதியனுப்பின கடிதத்தில் குறிக்கப்பட்டவைகளும், இப்போது தங்களின் சமுகத்தில் முறையிடப்பட்டவைகளும், அந்தமுஹம்மது உடைய அக்கிரமத்தில் அநேக ஆயிரம் பங்குகளில் ஒருபங்குகூடக் காணமாட்டாது. எங்கள் சொற்களிலுள்ள சாதகபாதகங்களையும் முஹம்மது உடைய காரியாகாரியங்களையும் பற்றித் தாங்கள் விசாரிக்கும் விசாரணை காலத்தில் மிகத் தெளிவாகக் காண்பீர்கள். இனி நாங்கள் அதிகம் சொல்ல வேண்டியதில்லை" என்று ஒருமொழியாய்ச் சொன்னார்கள். திரிகாலவர்த்தமானங்களையும் பகுத்து ஆராய்ந்தறியும் விவேகசக்தியுள்ள ஹபீபு அரசர் இச்சொற்களை கவனமாய்க் கேட்டு அவர்களை நோக்கி "தலைவர்களே! நாளையதினம் அந்த முஹம்மதை இந்த ராஜசபைக்கு அழைத்து, நிகழும் காரியத்தைப்பற்றி நான் விசாரணைசெய்கிறேன். இப்போது நீங்கள் அனைவரும் உங்கள் மனைக்குச்செல்லுங்கள்" என்றுசொல்லி விடைகொடுத்து அனுப்பினார். அபூஜஹல் முதலானவர்களனைவரும் அச்சபையை விட்டெழுந்து தங்கள் தங்கள் மனைகளுக்குப் போனார்கள். அன்று சூரியன் அஸ்தமித்தது.

அன்று இரவுகழிந்து சூரியோதயமாயிற்று. பொழுதுவிடிந்தவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு, ஹபீபு அரசரைத் தரிசிப்பதற்காகப் பிரியமுற்று, இராஜதரிசனத்திற்குத் தக்க உடைகளுடுத்த எத்தனப்பட்டார். அபீத்தாலீபு, அல்லாஹு தஆலாவின் தோழராகிய கலீல் என்னும் பட்டம்பெற்ற நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய கையொலியை யுடுத்தி, மனிதர்களின் ஆதிதந்தையாகிய நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய மேலங்கியை யணிந்து, நபி இப்ருஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய புத்திர சிகாமணி யாகிய நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமுடைய பாகையைத் தரித்து, நபி ஷீது அலைஹிஸ்ஸலாமுடைய உத்தரீயத்தைப்போர்த்து, நபிஷுஐபு அலைஹிஸ்ஸலாமுடைய பாதகாப்புகளைப்பூட்டி, [illegible] கோத்திரப் பிதாக்களுடைய மந்திரவாள் முதலான ஆயு[illegible]த்து, தம்முடன் வருவதற்காகத் தமது குடும்பத்தாரில் சிறந்த தலை[illegible]களில் நாற்பது கனவான்களைக்கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

111360

சரித்திர புராணம்

கலி விருத்தங்கள்.

மாதிர மெனக்கனக மண்டப நெருங்கும்
வீதியிடை புக்குவிறன் மன்னர்புடை சூழக்
கோதறு மறக்கொடு வரிக்குழிவி னுப்பண்
ணேதமற வந்தவரி யேறென நடந்தார்.

நித்தில நிறைத்து மலர் நீடொடைய னூற்றிப்
புத்தரி சொழக்குமுயர் பந்தரிடை புக்குச்
சித்திர விறற்குருசில் செவ்வியழியாத
மத்தகரி யைத்திமஷ்கு மன்னை யெதிர்கண்டார்.

வசனம்.

இவ்விதம் இராஜதரிசனத்துக்காகப் புறப்பட்ட அபூத்தாலிபு தமது பந்து ஜனங்களாகிய நாற்பதின்மர் புடைசூழ, மக்கமாநகரத்து வீதிகளைக்கடந்து, ஹபீபு அரசர் இருக்கும் மாளிகை வாயலில் சென்று உள்ளே புகுந்து, ஒப்பற்ற சிங்காசனத்தில் ஆண்சிங்கமொத்து வீற்றிருக்கும் அவ்வரசரைத் தரிசித்தார். அபூத்தாலிபு தம்முன் வருவதை ஹபீபு அரசர் கண்டு தமது ஆசனத்தைவிட்டிறங்கி, எதிர்சென்றழைத்து உபசரணையுடன் தமக்கருகில் உட்காரும்படி வேண்டிக்கொண்டார். அவ்வாறே அபூத்தாலிபு ஹபீபு அரசருக்கு அருகிலுட்கார்ந்து அவரை நோக்கிப் புகழ்ந்து, சன்மார்க்கமான சில வசனங்களை வசனித்தார். அபூத்தாலிபு சொன்ன நியாய ஆதாரமான வார்த்தைகளனைத்தையும் ஹபீபு அரசர் மனமுவந்து உற்றுக்கேட்டு சிரக்கம்பஞ் செய்துகொண்டேயிருந்தார். அபூத்தாலிபு சொன்னவை யடங்கலும் சாமானியவார்த்தைகளேயன்றி, ஒருவரைக் குறித்ததல்ல. ஆயினும், அதன் நோக்கம் தற்காலமுண்டாயிருக்கும் கலகத்தைக் குறித்ததாகவே யிருந்தது. வசனித்துத் தீர்ந்தபின், ஹபீபு அரசர் அபூத்தாலிபை நோக்கி பின்வருமாறு சொல்லலானார் :—

"குறைஷிகளில் சிரேஷ்டராகிய அபூத்தாலிபே! இந்த விசேஷஸ்தலமாகிய மக்கமாநகரத்திலுள்ள தலைவர்கள் எவரிலும் தாங்கள் முதன்மையானவர்கள். அப்படியிருக்க, குடும்பத்துக்குள் பழி சாதிக்கும் தன்மையாகவிளையும் பெரும்பகையை ஆரம்பத்திலேயே

விலக்கி சமாதானத்தை நிலைநிறுத்தாமல், பகைக்கப்பட்டவர்கள் துணிந்தவாறே தாங்களும் துணிந்ததாக நான் கேள்விப்பட்டேன். குடும்பத்தலைவர்களாய், நியாயம் வழுவாத தருமவான்களாயுள்ளவர்கள், இவ்வித அதிக்ரமமான கருமங்களை நினைப்பதும் பழுது என விலக்கத் தலைப்படுவார்களென்பது தங்களுக்குத் தெரியாததல்லவே. அறிவு முதிராத சிறியோர்கள் ஏதும் ஒரு குற்றங் குறை செய்யக்கண்டால், பெரியோர்களா யுள்ளவர்கள் அவ்விதக் குற்றங் குறைகளைச் செய்ய விடாமல் தடுத்து விலக்குவதுதான் தருமமும் கடமையுமல்லாமல், அக்கிரமமான கிருத்தியங்களை செய்யப் பார்த்திருந்து, குடும்பத்தில் பெரிய பகையை விளக்க இடங்கொடுத்து நிற்பதும், அப்பகையை நாளுக்குநாள் முதிரச்செய்வதும் பேதைத்தனமல்லவா? வேறு ஒரு கடவுள் உண்டென்றும், தான் அக்கடவுளுடைய தூதனென்றும், நபியென்றும், சொல்லும் சொற்கள் அக்கடவுளால் அனுப்பப்பட்ட தேவவாக்கியங்களென்றும், இன்னும் பலவகையான விரோத வார்த்தைகளைக் கொண்டு தனது மார்க்கம் தான் பரிசுத்தமான மார்க்கமென்றும், முஹம்மது என்பவர் சொல்லுவதாக, இந்த மக்கமா நகரத்துக் கனவான்களாகிய அபூஜஹல் முதலான தலைவர்களும், வேதபாரகர்களும் சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்லும் சொற்களனைத்தும் உண்மையேயன்றி, பிசகல்ல. நபியாய் வருகிறவர் தம்மில் விசுவாசங் கொள்ளாத ஜனங்களுக்கு ஒரு நூதனமான அற்புதத்தைக்காட்டி, தான் நபி என்பதை ஸ்தாபிக்கவேண்டும். அப்படித்தான் முன்வந்த நபிமார்கள் செய்தார்கள். இந்த முஹம்மது, நிராதாரமாக ஆகாயத்திற் கோட்டை கட்டும் பாவனையாய், மந்திரப் பிரயோகத்தை கொண்டு தம்மை நபியென நிலைநாட்டத் துணிந்தது நியாயமுமல்ல, நபிமார்களுக்குரிய இலட்சணமுமல்லவே. இவ்விஷயத்தில் தாங்கள் பிரயாசையெடுத்து, எது உண்மை என்பதை தீரத்தெளிய ஆராய்ந்தறிந்து முடிவான கருமத்தை ஸ்தாபித்து, கலவரங்களை யெல்லாம் விலக்கி சமாதானத்தை நிலைநிறுத்தாமல், இதுவரையும் பராமுகமாயிருந்த காரணம் என்ன? இனி போனவை யெல்லாம் போகட்டும். இப்போது நான் முஹம்மதை இந்த சபையி லழைத்து அவருடன் சம்பாஷித்து அறிய வேண்டும். ஆனபடியால், அவரை இங்கே அழையுங்கள்" எனச் சொன்னார்.

இச்சொற்களைக் கேட்ட அபூத்தாலிபு அவருக்கு மறுமொழி யொன்றும் சொல்லாமல், அச்சபையிலிருந்த ஒருவனை யழைத்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை அழைத்து வரும்படி கட்டளை பண்ணினார். உடனே அவன் புறப்பட்டுபோய் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டு பணிந்துநின்று, பலபலவகை கொண்டு புகழ்ந்து, "நாயகமே! திமஷ்கு இராஜாவாகிய ஹபீபிபுனு மாலிக் உடைய இராஜ சபையில், அபூஜஹல் முதலான அநேகர் கூடியிருக்கிறார்கள். தங்கள் பெரியதந்தையாகிய அபூத்தாலிபும் அங்கிருக்கிறார். தங்களை அந்தச் சபைக்கு அழைத்து வரும்படி யேவினார்கள். நான் தங்களுக்கு அறிவித்து அழைக்க வந்தேன்" என்று சொன்னான். இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அகங்களித்து எழுந்து, மாளிகைக்குள் சென்று, தங்களின் பிராண நாயகியாராகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களை யழைத்து, முன் அபூஜஹல் முதலான பகைவர்கள் திரண்டு துர்ச்சிந்தனையுடன் ஹபீபு அரசருக்கு நிருபமனுப்பினதும், அவர் அந்நிருபங்கண்டவுடன் புறப்பட்டு வந்திருப்பதும், இப்போது அவ்வரசர் அநேக கனவான்கள் நெருங்கிய தமது இராஜசபைக்கு தம்மை வரும்படி யழைத்திருப்பதும் இன்னபடியென்று சொன்னார்கள். பகைவர்கள் திரண்டிருக்கும் சபைக்கு தம்மையழைத்திருப்பதாக நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சொன்ன சொல்லைக் கேட்டவுடன் கதீஜா நாயகியார் மனங்கலங்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அச்சபைக்குச் சென்றால் என்ன விபத்துக்கள் சம்பவிக்குமோ என அஞ்சிக் கண்ணீர் சிந்த அழுது, தமது இருகைகளையும் ஏந்தி உயர்த்தி "யாஅல்லாஹ்! எங்களுக்கு நல்வழி காட்டவந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு நீ அபயம் தரவேண்டும்" என பிரார்த்தித்தார்கள்.

கதீஜா றலியல்லாஹு அன்ஹா இவ்விதம் மனம் நொந்து அஞ்சியழுது இரந்து நிற்பதை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் கண்டு, மனைவியை நோக்கி "கதீஜாவே, தாங்கள் ஏனிப்படி மனங்கலங்கி வருந்துகிறீர்கள்? அல்லாஹு தஆலாவின் பேரருள் நம்மைவிட்டு ஒரு க்ஷணப் பொழுதும் பிரிந்திருக்கவில்லை.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

மன்பெரும் புவியினில் வாழு மாந்தரிற்
துன்புறா தவரிலைத் துன்பைத் துன் புறா
தின்பமே கொள்பவ ரிலங்கும் பொற்பதிக்
கண்பரா யிருப்ப ரென்றறிவு சொற்றதே.

வசனம்.

ஆனதால், தாங்கள் கொஞ்சமும் அஞ்சாதீர்கள் வையகத்தில் மானிட ஜென்மமெடுத்துப் பிறந்தவர்களில் துன்ப மனுபவிக்காதவர் ஒருவருமில்லை. தமக்கு நேரிட்ட துன்பத்தைத் துன்பமாகப் பாவிக்காமல் இன்பமாகப் பாவிப்பவர்கள் மோட்சமடைவார்களென்று வேதஞ் சொல்லுகிறது. நாம் இனமென்னும் பகைக் கடலின் நடுவில் முளைத்திருக்கின்றோம். அக்கடலைக் கடந்து நாம் க்ஷேமமடைவதற்குத் தக்கதாய் அல்லாஹு தஆலாவுடைய அருளென்னும் மரக்கலம் நமக்குண்டு. அதனால் நாம் தைரிய சித்தத்துடனிருக்க வேண்டுமல்லாமல், மனஞ்சோர்வுற்றுக் கலங்குவது புத்தியல்ல. கொடூரம் மிக்க குபிர் என்னும் சத்துருக்களின் சேனைபலத்தை நம் தீன் என்னும் படைக்கலத்தினாலும், சத்துருக்களால் விளையும் துன்பமென்னும் அந்தகாரத்தை சந்தோஷமென்னும் கிரணத்தினாலும் நாசம் செய்யவேண்டும். தருமமே பொருளாகக் கொண்டு அதன் வழி யொழுகி நடக்கும் சத்தியவான்களுக்கு ஒருகாலும் தீங்கு நேரிடாதென்று, முன்னோர்கள் மனப்பூர்வமாய்ச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனபடியால், கதீஜாவே! நாம் அல்லாஹு தஆலாவின் கட்டளைக்கு உட்பட்டு நடக்கின்றோம். நம்மை இச்சத்துருக்கள் விளைக்கும் தீங்குகள் என்ன செய்யும்? தாங்கள் விசாரமன்றி யிருங்கள்" என்று பல நல்லறிவுகளால் மனதைத்தேற்றி ஆகுலத்தை மாற்றிவிட்டு, மாளிகை வாசலில் வந்து நின்றுகொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இருதயானந்தத்துடன் ஆகாயத்தை நோக்கினபோது, அங்கே ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமைக் கண்டார்கள். வானவர் பெருமானாகிய ஜிப்றயீலும், அவர்களுடன் மூவாயிரம் வானவர்களும் திரண்டு நின்றார்கள். அந்த மூவாயிரம் வானவர்களும், சாமானியமான உருவமுள்ளவர்களல்ல. திகில் விளையத்தக்க மகாபெரிய மானிட தேகத்தையுடையவர்கள். சிரசுகள் பெரிய பருவ

தங்களைப்போன்றது, மற்று அவ்வொரு அவயவங்களும் அச்சிரசுக்குத் தக்கபடி பருத்து வளர்ந்தவர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வல்லையத்தைக் கையிற் பிடித்திருந்தார்கள். அவ்வல்லையங்களனைத்தும் அல்லாஹுத்தஆலாவின் சினத்தினால் சிருஷ்டிக்கப்பட்டவை. வல்லைய மொன்றுக்கு எழுபது சிரங்களுண்டு. அந்த ஒவ்வொரு சிரமும் கொடுமை மிக்க அக்கினி மூண்டு, அநேக ஆயிரம் சூரியனுடைய சுடரும் சுடாகாத வண்ணம் பொங்கி எரியப்பட்டு, குணதிசை தொட்டுக் குடதிசைவரையும் நீண்டு விளங்கும் பாரமானது. இவ்விதக் கொடுமையான வல்லையங்களை கைகளிற் பிடித்த அந்த மூவாயிரம் வானவர்களும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நெருங்கி ஸலாம் சொல்லி, "யா றஸூலல்லா! எங்களைத் தங்கள் பணிவிடைக்காக வேண்டி அல்லாஹுத்தஆலா ஏவினான். நாங்கள் மூவாயிரம் பேர்களும் அதற்காகவே திரண்டு வந்திருக்கிறோம். தாங்கள் இந்த மகாபாதகர்களாகிய பகைவர்கள் திரண்டு நிற்கின்றார்களென்பதை குறித்துக் கொஞ்சமும் அஞ்ச வேண்டாம். தாங்கள் இப்பகையரைச் சங்கரிக்கும்படி ஏவுவீர்களானால், இவர்களின் கூட்டம் ஏழு கடலுக்கு நிகராயிருந்தபோதிலும் எங்களுக்கு அது அணுப்பிரமாணமுமல்ல. தாங்கள் மனோதைரியத்துடன் தீனை ஸ்தாபிக்க வேண்டும். தாங்கள் எங்களின் பாராதூரமான பராக்கிரமத்தைக் கண்டறிய விரும்புவீர்களானால், சற்றே கட்டளை யிட்டருளுங்கள். சமுத்திரங்கள் ஏழையும் கலக்கி வறந்திடச்செய்து, பூமியிலுள்ள மலைத்தொடர்களனைத்தையும் பொடி பொடியாக்கி ஒரு க்ஷணப் பொழுதில் மீளுகிறோம்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சந்தோஷமடைந்து அவ்வானவர்களை நோக்கி, "வானவர்களே! நீங்களனைவரும் என்னுடன் வாருங்கள்." என கட்டளையிட்டார்கள்.

பிறகு நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஹபீபு அரசருடைய இராஜ சபைக்குப் போவதற்காக எத்தனப்பட்டவுடன், அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹுவும், உமர் றலியல்லாஹு அன்ஹுவும், உதுமான் றலியல்லாஹு அன்ஹுவும், அலி றலியல்லாஹு அன்ஹுவும் வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடம் நின்றார்கள். பிறகு "நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அற்புத

மென்னும் ஆபரணங்களணிந்து, வெற்றியென்னும் நறு மலர் மாலை சூடி, வீரமென்னும் வேலாயுத மேந்தி, ஒப்பற்ற முழுமதி போல பிஸ்மில்லா சொல்லிப் புறப்பட்டார்கள். தீன் என்னும் வெற்றித் துவஜம் தமக்கு முன்னே பறக்க, ஈமான் என்னும் மதயானை மருங்குவர, கலிமா என்னும் முரசு முழங்க, அல்லாஹுத்தஆலாவுடைய அருள் என்னும் சேனாசமுத்திரம் புடை சூழ மேற்கண்ட நான்கு அருகர்களும் அருகில் நெருங்கி வர மேற்படி மூவாயிரம் வானவர்களும் அரூபிகளாய் பின்தொடர்ந்து வர நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஹபீபு அரசிருக்கும் மாளிகையை நோக்கி நடந்து வந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் வருவதை அபூஜஹல் கேட்டு உயிரொடுங்கி, உணர்வற்று, எப்படி முடியுமோ எனக் கலக்கமுற்று விரைவாயெழுந்து ஹபீபரசரின் அருகில் நின்று கொண்டு, அறபுப் பாஷையில் அலங்காரமான ஒரு கவிதை சொன்னான். அந்தக் கவிதையின் அர்த்தம் இது:—"வேதாகமசாஸ்திர நிபுணராகிய மகாராஜா அவர்களே! முஹம்மது என்பவன் வாக்கிற் பிறக்கும் வார்த்தைகளடங்கலும் தவறும் அவலட்சணமுமானவைகளேயன்றி, ஒன்றாவது உண்மையல்ல. தான் கற்ற மாந்திரீகபலத்தினால் எப்படிபட்ட புத்திசாலிகளையும் மயங்குவித்துத் தனது மாய வலைக்குள் அகப்படுத்திக் கொண்டான்; இன்னும் கொள்ளுகிறான். அவனுடன் எதிர்த்து வாதானுவாதம் செய்யத்துணியும் எவர்களும் அவனுடைய ஜாலத்தில் சிக்கிக்கொண்டு நாவெழாமல் கலங்குகிறார்கள். அவனை அடர்த்து தாக்கத் துணியும் வீரவான்களும் தமது வலியிழந்து அஞ்சுகிறார்களே யன்றி, எதிர் நின்று சாதித்தவர்கள் ஒருவருமில்லை. அந்த முஹம்மது உடைய மாயாவெள்ளம் பிரவாகித்துவரும் இக்காலத்திலே, அப்பிரவாகத்தினால் நாங்கள் வருண்டு மடிந்துபோகாமல் காக்கத்தக்க தனித்த மரக்கலம் போன்று தாங்கள் இங்கே வந்தீர்கள். இனி நாங்களும் அந்த விபத்தை விட்டுவிலகி, நமது மார்க்கமும் நிலைபெற்று நன்மை யுண்டாகு மென்பதில் அணுவளவும் சந்தேகமில்லை. எக்காரியத்துக்கும் நாம் சேனாசமுத்திரங்களைத் திரட்டிக்கொண்டு இத்தனை தூரம் ஒருகாலத்திலும் பிரயாசைப்படவில்லை. முரண்கொண்டு எதிர்க்கும் சக்தி பெற்ற அநேக நூறாயிரம் மனிதர்கள் திரண்டு வந்த போதிலும், நம் வாக்கில் பிறக்கும் ஒருசொல்லால், சூறைக்காற்றில்

சிக்குண்ட இலவம் பஞ்சுபோல நாலுதிசைகளிலும் சிதறுண்டு போவார்கள். எங்கள் இராஜாதிராஜரே, இப்போது அந்த முஹம்மது நபிமார்களைப்போல வேஷம் பூண்டு தன் கீழ்ப்பட்டவர்களோடு இங்கு வருவான். வந்தபின் இச்சபையாரனைவரும் மருளத்தக்க வாய்ச் சம்பிரதாயத்துடன் சம்பாஷிப்பான். அவனுடைய வாய்ச்சொல் ஒன்றையாவது தேவரீர் உண்மையென்று நினைக்காதீர்கள்'' என்பதே.

இவ்வித அர்த்தமமைந்த கவிதையை அபூஜஹல், ஹபீபு அரசரை நோக்கிச்சொன்னவுடன், அவர் இக்கவிதையின் தாற்பரியத்தை அங்கீகரிக்காமலும், அதற்காக சினங்கொள்ளாமலும், அங்கீகரித்து மகிழாமலும் இருந்து, தமது சபையாரை நோக்கித் தாமும் நியாயமான விஷயங்களடங்கிய சில கவிதையை சொன்னார். ஹபீபு அரசர் சொன்ன கவிதைகளின் அர்த்தம் :—''நல்லோர் தீயோர் என்னும் இருதரத்தாரும் தம்தம் தன்மையில் குறைவில்லாதவர்களேயாம். தித்திப்புள்ள சற்கரையை எவனொருவன் மென்றுதின்பானோ அவனுடைய வாய்க்கு இன்பமுண்டாகுமேயன்றி, கசப்பு உண்டாகாது. அவ்விதமாக ஒருவன் வேம்பை மென்று தின்றால் அவன் வாய்க்கு கசப்பு பிறக்குமேயன்றி, சர்க்கரைக்குரிய மதுரம் வேம்பில் உண்டாவது எக்காலத்திலுமில்லை. சுத்த அபத்தமான விஷயம், ஆகாயத்து மின்னலையொத்து ஒரு க்ஷணப்பொழுதில் மாறிப்போம். சத்திய விஷயமோ பசுமரத்தாணிபோல உலகத்தில் பதிந்து என்றென்றும் விளங்கும். பராக்கிரமமுள்ள மதயானையை, சிறிய பூனைக்கு ஈடுசெய்யாத காரெலி எதிர்த்துக் கொல்லமாட்டாது. இவ்விஷயங்களை புத்திமான்களே கண்டறிவார்கள். கீழான வஞ்சகர்களின் மாயாஜாலங்கள் உண்டோ இல்லையோ எனப் பிறரறிவதற்கு முன்னே நாசமடையும். கடவுளுடைய தூதர்களாய் வந்தவர்களின் அற்புதமான செய்கைகள், உள்ளநாள் உள்ளமட்டும் விளங்கிநிற்கும். கடவுளால் அனுப்பப்பட்ட தூதர்கள் செய்யும் செய்கை இப்படிப்பட்டது: மாயவித்தைக்காரர்கள் செய்யும் தந்திரத்தொழில் இப்படிப்பட்டது என வேதாகமசாஸ்திர புண்ய மஹாத்மாக்கள் தங்களறிவு கொண்டு பகுத்து அறிந்து கொள்ளுவார்கள். நாம் முஹம்மது உடைய காரியங்களை இன்று சூரியன் அஸ்தமிப்பதற்குள்ளே கண்டறிவோம்'' என்பதே.

அபூஜஹல் முந்திச்சொன்ன கவிதையையும், பிறகு ஹபீபு அரசர் மேற்கண்ட அர்த்தமடங்கச் சொன்ன கவிதைகளையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு கேட்டுக்கொண்டிருந்து, ஹபீபு அரசரை நோக்கித் தாமும் சிலகவிதைகளைச் சொன்னார். அக்கவிதைகளின் அர்த்தம் இது :—''அறிவினாலும், குணத்தினாலும், அன்பினாலும், பொறுமையினாலும், சத்தியவாசகத்தினாலும், சன்மார்க்கமான மற்ற எந்த விஷயங்களினாலும் எங்கள் முஹம்மதுக்கு நிகரானவர் இவ்வுலகத்தில் யாருமில்லை. அவருடைய வாக்கில் அபத்த வார்த்தை ஒன்றாவது இதுவரையும் பிறந்ததேயில்லை, இனி பிறக்கவுமாட்டாது. மாயம், மந்திரம், சூனியம் முதலானவைகளைக் கற்றுத் தந்திரமான காரியங்களை நடத்திக்கொண்டு திரியும் தீயோர்களுடன் அவர் இணங்கிக் கூடினவரல்ல. அவர் அவ்விதமான ஜாலங்களைக் கற்றதுமில்லை. எனது இளைய சகோதரராகிய அப்துல்லா அவரைப் பெற்றார்; நான் வளர்த்தேன். அவர் பிறந்த அன்றுதொட்டு இது பரியந்தம், யாராயிருந்தாலும் அவர்களுடன் இணங்கி நடப்பதுதான் அவருக்கு விருப்பமல்லாமல், பிறருடன் பிணங்கிக்கொள்வதும் பிறருக்குக் குறைவர நடப்பதும், பிறரை மதிக்காமல் பேசுவதும் அவரிடத்தில் இல்லை. இவ்வித மேன்மையுள்ள என் பிள்ளையைப்பற்றிப் பிறர் அபவாதஞ் சொல்லுதல் நியாயமல்ல. அவர் இன்னும் சொற்பநேரத்திற்குள் இங்கு வருவார். அவரைத் தங்கள் கண்களால் கண்டபின் அவருடைய நடவடிக்கைகள் இவையென்று தாங்கள் கண்டறிவீர்கள்'' என்பதே.

இவ்வாறு இவர்கள் ஒருவருக்கொருவர் கவிதைகளால் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், ''நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வருகிறார்கள், எச்சரிக்கை'' என்று அவர்களின் திவ்வியதிருமேனியில் பரிமளிக்கும் ஒப்பற்ற கஸ்தூரிமணம், ஹபீபு அரசரின் இராஜசபையில் முந்திச்சென்று எச்சரித்தது. பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அருகர் நால்வரும், ஹபீபு அரசரிருக்கும் மாளிகைவாசலையடுத்து மனைக்குள் பிரவேசித்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருவதை ஹபீபு அரசர் கண்டு, தமது சிங்காசனத்தை விட்டிறங்கி எதிர்சென்று, மிகமரியாதையுடன் உபசரித்து

அழைத்துக்கொண்டுபோய், தமக்கு அருகில் உட்காரச்செய்து தாமும் உட்கார்ந்தார். ஹபீபு அரசர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு அடிக்கடி ஒப்பற்ற உபசாரணையும், பணிவிடையும் செய்துகொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் மேல்வைத்த தமது இருவிழிகளையும் திருப்பாமல் உற்று நோக்கினபடியே இருந்தார். ஹபீபு அரசர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அருகிலிருத்திக்கொண்டு உபசரித்தவண்ணமா யிருப்பதை மக்கமாநகரத்துப் பகையர்கள் கண்டு தீயிலிட்டமெழுகுபோல மனமுருகி, ஒருவரோடு ஒருவர் "என்ன ஹபீபு அரசர் தாமேயெழுந்து எதிர்சென்றழைத்து தமக்கருகி லிருக்கும்படி முஹம்மதை கண்யபடுத்திவிட்டாரே, நாம் கோரியகருமம் எவ்விதம் முடியுமோ!" என்று துக்கமுற்று இரகசியமாகப் பேசிக்கொண்டார்கள். அச்சபையிலிருக்கும் பகைமை முதிர்ந்த மக்கா வாசிகள் மனங்கலங்கி வருந்தியிருக்கையில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை ஹபீபு அரசர் தமக்கருகில் இருத்திக்கொண்டதையும், அதற்காக அவர்கள் பொறாமை கொண்டு மனம் கொதித்து இரகசியமாகப் பேசிக்கொள்ளுவதையும் ஹபீபு அரசருடன் வந்த திமஷ்கு நகரத்துக் கனவான்களறிந்து, தாங்களும் ஒருவரோடு ஒருவர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறித்து இரகசியமாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

சரித்திரப் புராணம்.

கலி விருத்தம்.

நிலந்தனிற் சுவடில நிழலுந் தோன்றில
வலந்துமெய் யொளியொடு நறை கமழ்ந்தன
சலந்தரு கவிகையொன் றெழுந்து சார்ந்தன
குலந்தரு மனுவல ரென்னக் கூறுவார்.

கலி நிலைத்துறை.

அருளி னோக்கமு மமுதுரு வசனமு மழகா
யிருளி லாதமெய் யவயவத் தாலிலக் கணமுந்
தெருளுங் கல்வியும் பொறுமையு நிறைந்தவிச் சேவை
மருவிலாதன விடற்கரி தெனச்சிலர் மதிப்பார்.

வசனம்.

திமஷ்கு நகரவாசிகள் அனைவரும் ஒருமித்து "இவருடைய பாதங்கள் தரையில் தோய்ந்து சுவடு தெரியவில்லை. திருமேனியின் நிழல் தோற்றவில்லை. கேசாதி பாத பரியந்தம் ஒப்பற்ற காந்தியும், கஸ்தூரிவாசமும் கலந்து, பிரபையும் பரிமளமும் வீசுகின்றன. கார்மேகமொன்று குடையிட்டு நிற்கின்றது. இவ்வித லட்சணங்கள் சாமானிய ஜனங்களுக்கு உரியவையல்ல. ஆகையால் இவர் நபிதான்" என்று தீர்ப்பிட்டார்கள்.

அவர்களிலேயே சிலர், "கிருபாநோக்கமும், அமுதம் சிந்தும் வாக்கும், அவயவங்களின் ஒப்பில்லாத கட்டழகும் அமைந்த இலட்சணமும், அறிவு-நிறை-ஓர்ப்பு-கடைப்பிடியென்னும் நான்கு குணமும் பொறுமை முதலான நன்னடையுமுள்ள இந்த முஹம்மதை அளவிட்டறிவதற்கு மானிடர் அசக்தர் என்றார்கள். சிலர், "இவர் தமக்கு நபிப்பட்டமும் வேதமுமிறங்கின வென்று சொல்லுவதும், தாம் கடவுளுடைய தூதரென்பதும், தமக்கொரு மார்க்கமுண்டென்று சொல்வதும் வாஸ்தவமேயாம். இவரைக்குறித்து இம்மக்கமா நகரத்தார் சொல்வதனைத்தும் சுத்த அபத்தமும் அபவாதமுமே யாம்" என்பார்கள். சிலர், "அறிவு சிறிது மில்லாத அபூஜஹலென்பவன் முதன்மையாய் நின்று துர்ச்சிந்தனையுடன் எழுதி விட்ட கடிதத்தைப் பொருளாக மதித்து, ஆலோசனையின்றி நாம் புறப்பட்டு இங்குவந்து விட்டோம். இனி இவனுடைய சொல்லைக்கேட்டு அதன்படி நடப்போமேயானால், நாம் அனைவரும் மோட்சவாழ்வை யிழந்து நரகவேதனைக்குக் கீழ்ப்படிவது மல்லாமல், இம்மையிலும் நல்ல பேறின்றி தாழ்வடைவோம்" என்பார்கள். சிலர் "அபூஜஹல் முதலியோர் எழுதிய கடிதத்தினால் நாமனைவரும் இவ்வூருக்குவந்து, பிற்பாடு முஹம்மதுக்கு வழிப்பட்டு நமது பாவவினைகளை யெல்லாம் தொலைத்து, மோட்சமடையத்தக்க வாழ்விதி நமக்குண்டா யிருந்தது. அந்த விதியின் தன்மைதான் நாம் இங்குவந்ததற்குக் காரணம்" என்பார்கள் சிலர் "மானிட வடிவெடுத்துக் கண்களைப் பெற்றவர்களா யிருப்பவர்கள் இந்த முஹம்மது உடைய இலட்சணங்களைக் கண்டு களிப்பார்கள். முகத்தி லிருக்கும் இரண்டு கண்களும் கண்களல்லாமல் புண்களா யிருக்குமானால், அவர்கள் ஒருபோதும் இவருடைய இலட்சணங்களைக்காணார்கள்" என்பார்கள். சிலர், " இந்த முஹம்மது உடைய

பாததாமரைகளைப் பணிந்து தொட்டு முத்தமிடாத மானிடர், மானிடரல்ல" என்பார்கள். சிலர் "நாம் அனைவரும் முஹம்மது நபியுடைய அற்புதங்களைக் கண்டு களித்து, அவருக்கு வழிப்பட்டு, சுவர்க்கத்தை கிரய சாதனம் பண்ணிக்கொண்டு போகத் தான் இங்குவந்தோம்" என ஆநந்தமுற்றுச் சொல்லுவார்கள். சிலர், "நமது அரசராகிய ஹபீபிபுனு மாலிக் அபூஜஹலுடைய சொல்லைக் கேட்டுக்கொண்டு, முஹம்மது நபிக்கு விக்கினமுண்டு பண்ண விரும்பிப் பகை விளைப்பாரேயானால், நாம் அனைவரும் ஒருமித்து நிர்தாட்சண்யமாய் நமது அரசரையும், அபூஜஹலையும் சங்கரிப்பது தான் சத்தியம். நாம் கொஞ்சமும் தாமதிக்கவேண்டியதில்லை" யென்பார்கள். சிலர், "முஹம்மதுக்கு விக்கினமுண்டாக்குவதற்காக இந்த அபூஜஹலல்ல, ஹபீபு அரசரல்ல, உலகிலுள்ள இராஜாக்களனைவரும் ஒருங்கு திரண்டு படையெடுத்து எதிர்த்த போதிலும், சூரியனைக் கண்டபனிபோல சூனியமாவார்களே யன்றி, சிறிதும் சித்தி பெற மாட்டார்கள்" என்பார்கள். இவையல்லாமல், இன்னும் பலரும் பலபல விதமாகப் பேசிக் கொண்டார்கள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் ஹபீபு அரசர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அன்புடன் நோக்கி "குறைஷிக் குலத்திற் பிரதானமான ஹாஷிம் வம்சத்தில் பிறந்த முழுமாணிக்கமே! அப்துல்லாஹ்வின் தபோபலன் திரண்ட குமாரரே! முஹம்மதே! சர்வஜன சம்மதமான சில விஷயங்கள் என் இருதயத்திலிருக்கின்றன. அவற்றைத் தாங்கள் கேட்டருள வேண்டும். அவையாவன: தாங்கள், பிதா மாதாக்களுடையதும் கோத்திரத்தாருடையதுமான மார்க்கத்தை விட்டு விலகினதும், எனக்கு வேறொரு கடவுளுண்டு என்பதும், தொன்று தொட்டுள்ள குலதெய்வமாகிய குபல் என்னும் சுவாமியை தூஷித்துப் பேசுவதும், 'எனக்கு வேதமொன்று இறங்கிற்று, நான்தான் நபி, எனக்குப்பின் நபியில்லை, எனது மார்க்கமே மார்க்கம், எனது கலிமாவை உலகத்தாரனைவரும் சொல்லவேண்டும்' என வாதிப்பதும், குடும்பத்தாருடன் பகைசாதித்துக் கலகம் விளைவிப்பதும், இன்னும் நியாயமற்ற வசனங்களை மனிதர்களின் செவிகள் சுடத்தக்க விதமாக வசனிப்பதும் தங்களுக்குத் தகுதியல்லவே. ஆனதால், முஹம்மதே! இனி தாங்கள் இவ்வித வார்த்தைகளைப் பேசாதீர்கள்.

ஏனென்றால், நபியாய்வருகிறவர்கள் சர்வஜனங்களும் தம்மை ஒப்புக்கொள்ளும்படி அநேக அற்புதங்களைச் செய்து காட்டுவார்கள். அதற்குத் திருஷ்டாந்திரம்— நூஹு நபி பிரளயகலத்தில் தமக்கு வழிப்பட்ட மனிதர் முதலான பிராணிகளைத் தாம் செய்த மரக்கலத்திலேற்றிக் காத்தார். இப்றாஹீம் நபி நம்றூது செய்த அக்கினிக்குண்டத்தைப் பூங்காவனமாய் குளிரப்பண்ணினார். மூஸா நபி, பகைவனாகிய பிர்அவ்னுக்கு எதிரே தமது கைக்கோலை மகாபெரிய சர்ப்பமாக்கினார். தாவூது நபி இரும்பை மெழுகாக்கினார். ஈஸா நபி, நதியில் முதலை வாய்பட்டு இறந்துபோன ஒருவனுக்கு நீண்ட காலத்திற்குப்பின் உயிர் கொடுத்து எழுப்பினார். முஹம்மதே! இவைகளை யறியாதவர்கள் யார்? இவ்வித அற்புதங்களைக் கண்கூடாய்க் கண்டும், அந்தந்த நபிகளுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் சிலரே. அவ்வித அற்புதங்களைக் காட்டத்தக்கவர்கள் இப்போதும் இருப்பார்களேயானால், அவர்களுக்குக் கீழ்ப்படியாத மனிதரும் உண்டா? தாங்களும் அவ்வித அற்புதமொன்றைச் செய்தல்லவா, நபி யென்பதை ஸ்தாபிக்க வேண்டும்?" என இவ்வாறு சொன்னார்.

இச்சொற்களை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கேட்டு, ஹபீபு அரசரை நோக்கி, "இராஜாவே! தாங்கள் சொன்னவை நியாயமானவைகளே. நான் இப்போது தங்கள் கண்காண என்ன அற்புதம் செய்யவேண்டும்? சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். இதை ஹபீபு அரசர் கேட்டு அகங்களித்து சிரசையசைத்துக் கொண்டு, இதைப்பற்றி நாள்தோறும் சிந்தித்து மனதுக்குள் முடிவு பண்ணி வைத்திருந்தபடி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னார்.

"ஜனம்பொருந்திய முஹம்மதே! நாளைக்கு அமாவாசையுடைய இரவாகையால், சூரியன் அஸ்தமித்து இராவானவுடன் ஆகாயமெங்கும் காரிருட்படலமெழும்பி மூடிக்கொண்டிருக்கும். அப்போது தாங்கள் இங்குள்ள அபூகுபைஸ் என்னும் குன்றின் சிகரத்திலேறி நின்றுகொண்டு, குணகடல் முகட்டில் பூரணச் சந்திரன் உதயமாய் வரும்படி அழைக்கவேண்டும். அப்பூரண சந்திரன் உதயமாய் ஆகாயத்திலுயர்ந்து கஃபத்துல்லாவுக்கு நேராக பூமியிலிறங்கி, கஃபத்துல்லாவை ஏழுதரம் பிரதட்சணம்

செய்யவேண்டும். பிறகு அச்சந்திரன் கஃபத்துல்லாவுக்குள் நுழைந்து தலைசாய்ந்து, நின்று தாங்கள் சொல்லும் கடவுளை வணங்கவேண்டும். வணங்கின பின் அச்சந்திரன் கஃபாவை விட்டு வெளியில் வந்து, நெருங்கி நிற்கும் ஜனத்திரளுக்கிடையே கடந்து தாங்கள் நிற்கும் குன்றின்மேலேறித் தங்கள் முன் நின்று, தங்களுடன் சம்பாஷிக்கவேண்டும். அப்போது, அச்சந்திரன் அல்லாஹு தஆலா ஒருவனுண்டென்றும், தாங்கள் அவனுடைய தூதரென்றும் நபியென்றும், வந்து நிற்கும் ஜனங்கள் அனைவர் செவிகளிலும் விளங்கும்படி அறபுப் பாஷையில் சொல்ல வேண்டும். அதன் பிறகு அச்சந்திரன், தாங்கள் தரித்திருக்கும் மேலங்கியுள் புகுந்து, அங்கிருந்து இரண்டு பிளவாகி ஒருபிளவு வலக்கை சட்டை வழியாயும், மறுபிளவு இடக்கைச் சட்டை வழியாயும் வெளிவந்து இருபிளவும் எதிர் நின்று, ஒரு பிளவு குணதிசையிலும், மறுபிளவு குடதிசையிலும் சென்று, இரண்டும் அவ்வழியே வந்து ஆகாயத்தில் ஒன்றாய்ப் பொருந்தி நின்று பிரகாசிக்க வேண்டும். அதன் பின், மறுபடியும் அச்சந்திரன் வாய்திறந்து "அல்லாஹு தஆலா ஒருவனே கடவுள்; அவனுடைய வேதத்துக்கு உரிய தூதராகிய முஹம்மது உண்மையான நபி; அவருடைய இஸ்லாம் என்னும் மார்க்கம் பரிசுத்தமானது" என்று உலகமறிய சப்தமிட்டுச் சொல்லவேண்டும்.

இவ்வித அற்புத தோரணியனைத்தும் குறைவின்றிப் பகிரங்கத்தில் செய்து முடிப்பீர்களானால், நானும், என்னுடன் வந்த பரிவாரமனைத்தும் தங்கள் சொல்படியொழுகி, தங்களின் பாத தாமரைகளில் வீழ்ந்து ஈமான்கொண்டு முஸ்லிமாவதற்குத் தடையில்லை" என்றார்.

சரித்திர புராணம்

கலி நிலைத்துறை.

உள்ள மீதினி விதுகொலோ வின்னுமற் றுளவோ
விள்ளு வாயென நபிதிமஷ் கிறைவனை விளித்துக்
கிள்ளை யின்றிர ளரசருஞ் சேனையுங் கேட்கக்
கள்ள நெஞ்சபூ ஜஹல்மனங் கருகட் டுரைத்தார்.

வசனம்.

இவ்வாறு சொல்லி முடித்தவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திமஷ்கு அதிபதியாகிய ஹபீபு அர-

சரை நோக்கி "அரசரே, தங்கள் இருதயத்திலுள்ள எண்ணம் இதுதானா? இன்னும் வேறேயுண்டா!" என்று கேட்டார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்ட இக்கேள்வி அபூஜஹ்லுடைய உள்ளத்தைக் கலக்கிற்று. அப்போது ஹபீபு அரசர் "இதுவல்லாமல் வேறென்ன உண்டு! ஒன்றுமில்லை" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு விடை பகர்ந்தார். உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனமகிழ்வினால் முகமலர் பூத்து, அவ்விராஜ சபையைவிட்டெழுந்து தங்கள் மாளிகைக்குப் புறப்பட்டார்கள்.

பிறகு, தறுகண்ணனாகிய அபூஜஹல் எழுந்துநின்று, ஹபீபு அரசரை நோக்கி "ஏகாதிபதி! தங்கள் கோரிக்கைக்கு முஹம்மது சம்மதித்தான். அவனுடைய மாயாமந்திர ஜாலமனைத்தும் இனி விளங்கும்" என்று சொல்லிவிட்டு, தானும் தன் மாளிகைக்கு வந்து தன்னைச் சேர்ந்த ஜனங்களை யழைத்து "கனவான்களே! முஹம்மது உடைய வலிமையும், நபிப்பட்டமும், வேதமும், மார்க்கமும், தொழுகையும், கல்வியும், மாயவினோதமும், இன்னுமுள்ள மற்ற செய்கைகளடங்கலும் இன்றோடு தொலைந்தன. இனிமேல் அவனுக்கு நற்காலம் ஏது!" என்று கூறிக் குடல்குலுங்க நகைத்தான். நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சத்துருக்கள் திரள் திரளாய் நின்று பேசும் வார்த்தையொன்றுக்கும் செவிசாய்க்காமல், தங்கள் மனைக்குள் புகுந்து, தமது பிரிய நாயகியாகிய கதீஜத்துல் குப்றா றலியல்லாஹு அன்ஹா அவர்களை அழைத்து, அருகிலிருத்தி, ஹபீபு அரசரின் இராஜ சபையில் நடந்த வர்த்தமானங்களனைத்தையும் விவரத்தோடு சொல்லிக் காட்டினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்லிக்காட்டினவுடன், அனைத்தையுங்கேட்டு கதீஜா றலியல்லாஹு அன்ஹா உள்ளம் அஞ்சித் தங்களின் காந்தன் மலர்போன்ற கைகளை யேந்தி "யா அல்லாஹ்! எனது பிராணனுக்கு சமானமான நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் இருதயத்தில் கருதும் கருமத்தை நிறைவேற்றியருள்" என்று அல்லாஹு தஆலா இடம் துஆ கேட்டார்கள்.

பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மாளிகையில் ஒருதனியிடத்திலிருந்து, அல்லாஹு தஆலாவை

இரண்டு றக்ஆத்து தொழுது, தங்களின் கருமத்திற்காக மன்றாட்டத்துடன் துஆ கேட்டுக்கொண் டிருந்தார்கள். அப்போது வானவர்க்கரசராகிய ஜிப்றயீல் நபிநாயக மவர்களிடத்தில் விரைந்துவந்து "யாரஸூலல்லா! தங்களுக்கு அல்லாஹு தஆலா சலாம் சொல்லி, ஹபீபு அரசர்கேட்டபடி, தங்கள் இருதயத்தில் நினைக்குமுன்னே வரும் என்று சொன்னான்; அன்றியும், சந்திரனை எனது ஹபீபாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டி அமைத்தேன் என்றும் அருளிச்செய்தான்" என்று சொல்லி, இன்னும் பல சோபன வார்த்தைகளைச் சொல்லிவிட்டு வானுலகம் சென்றார். இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அகங்களித்து ஆநந்தத்துடன் நிர்விசாரமா யிருந்தார்கள்.

அப்போது நபிகட் திலகம் காத்திமுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பெரியதந்தையாகிய அபூத்தாலிபு, ஹபீபு அரசரின் சபையிலிருந்து எழுந்து தமது மனைக்குட் சென்று ஒரு தனியிடத்திலிருந்து, நடந்த வரலாற்றைக் குறித்து மனங்கலங்கி விசாரமுற்று, சித்த சலனத்துடன் கீழ் வருமாறு ஆலோசிக்கலானார்:—

"நமது குமாரராகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஒருதுளி ஜலமு மில்லாத பாலைநிலத்தில் தண்ணீர் அழைத்தார். மகாபெரிய வேங்கை, சர்ப்பம் என்னும் துஷ்டப்பிராணிகளுக்கு எதிரே பயங்கரமின்றி நின்று சம்பாஷித்தார். அறுப்புண்ட கரங்களைப் பொருத்தினார். இவ்வித அற்புதங்களையெல்லாம் வெளிப்படையாகச் செய்திருக்க, இப்போது சந்திரனையழைக்க வேண்டுமென்று திமஷ்கு இராஜா கட்டாயமாகச் சொல்லுகிறார். அதற்கு நமது குமாரரும் இசைந்து அவ்வாறு செய்வதாகத் தாம் ஒப்பினாரே, இது எவ்வாறு வந்து முடியுமோ!" —அபூத்தாலிபு இவ்விதம் மதிமயங்கி மனோதுக்கத்துடன் எண்ணமிட்டுக்கொண் டிருக்கையில், அவரிருக்கும் மாளிகையின் ஒரு மதில்சுவர் இடி போல முழங்கி அபூத்தாலிபை விளித்து மலக்குடைய வசனம் போன்று "வீரசிங்கமொத்த அபூத்தாலிபே! நீர் அகல யோசிக்கும் உமது யோசனையையும், மனக் கவலையையும் விரைவாய் நீக்கியெறிந்து நீர் நிராகுலராயிருப்பீராக. உமது

குமாரரிடத்தில் தத்துவக்காரனாகிய அல்லாஹு தஆலாவின் பேரருள் அளவின்றி மலிந்திருக்கின்றது. அதனால் அவர் எண்ணிய கருமம் முடியாததொன்றில்லை. அழைக்கும்போது மிக விரைவுடன் சந்திரன் வரும். அப்போது பகைவரனைவரும் திடுக்கிட்டு இருதய வலியிழந்து மதிமயங்கி, குலைகுலைந்து முகங்கள் கவிழ்ந்து, ஸ்மரணை யின்றிக் கிடப்பார்கள், இதை நீர் காண்பீர். உமதுகுமாரராகிய முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய தீன் என்னும் பிரகாசம் குபிர் என்னும் இருளையறுத்து விலக்கி ஜக மெங்கும் ஜொலிக்கும்; அதையும் நீர் கண்டறிவீர்" என்று வசனித்தது.

தமது மனையின் மதில்சுவர் இவ்விதம் சொன்னதை அபூத்தாலிபு காதுகுளிரக்கேட்டு, இது அத்தியந்த ஆச்சரியமென எண்ணி, அங்கிருந்து புறப்பட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைக்குவந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி, சுவர் சொன்னவைகளைச் சொன்னார். பெரியதந்தை சொன்ன புதுமையை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் கேட்டு, தங்களுக்கு ஜிப்றயீல் வந்து சொன்ன வரலாற்றை அவரிடம் சொன்னார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் சொன்னவற்றை அபூத்தாலிபு கேட்டு மனக்களிப்புற்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "மகனே, உமது கடவுளுடைய தத்துவங்கொண்டு ஒப்பற்ற அற்புதங்களும், மகிமைகளும், பாக்கியங்களும் உமக்கு யாதொரு பிரதிபந்தமு மின்றி வந்துசேரும்" என்று புகழ்ந்து சொல்லி விட்டுத் தமது மனைக்குச் சென்றார்.

அன்று சூரியன் அஸ்தமித்து இரவாய்ப் பிறகு பொழுது விடிந்து முற்பகல் தீர்ந்த போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தமது பிராணனையொத்த அருகர் நால்வரையும், மற்றத் தோழர்களனைவரையும், தமது குடும்பத்தார்களையும் அழைத்துத் தம்மை நெருங்கி வரும்வண்ணம் திரட்டிக் கொண்டு, தாங்கள் புறப்படும் சங்கதியை ஹபீபு அரசருக்கு அறிவிக்கும்படி தூதனொருவனை முந்தி யனுப்பி விட்டு, தாங்கள் புறப்பட்டார்கள். பஞ்ச பாதகங்களும், அவைக்கு ஆதாரமாகிய குபிரும் அறத்தேய்ந்து போகும்படி நல்லறந் திரண்டு

வருவதுபோல, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மைச் சேர்ந்தவர் புடைசூழ, கஸ்தூரி வாசனை வீசிக்கமழ நடந்து கஃபத்துல்லாவுக்கு வந்து, தமது அருகர் நால்வருடன் பிரதட்சணம் செய்து, அல்லாஹு தஆலாவைத் தொழுது, சற்றுநேரம் அங்கிருந்து, மறுபடியும் தமது ஜனங்கள் நெருங்க கஃபாவை விட்டுப் புறப்பட்டார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்கள் சிரசுக்கு மேல் கார்மேகமொன்று குடைநிழல்தர, வானவர்கள் திரண்டு நெருங்கியெங்கும் பரந்து நிற்க, நடந்து அபூகுபைசு என்னும் குன்றின் மேல் ஏறினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அபூகுபைசு என்னும் சிறுமலைச் சிகரத்தில் நிற்கும்போது, மக்கமாநகரத்திலுள்ள ஆண், பெண், சிறார் அனைவரும் திரண்டு, நிகழும் அற்புதத்தைப் பார்க்க வேண்டி வந்து, அக்குன்றைச் சூழ்ந்து நெருங்கி நின்றார்கள். பிறகு திமஷ்கு வேந்தராகிய ஹபீபு அரசர், தமது இரத கஜ துரக பதாதி யென்னும் நான்கு வகையான சேனை சமுத்திரம் எழுந்து பரவ, மெய்க்காப்பாளர் நெருங்கி நிற்க, பலவகை வாத்தியங்கள் கடல் போலொலிக்க, விருதுகள் விளக்க அலங்காரத்துடன் புறப் பட்டு மேற்படி அபூகுபைசு என்னும் குன்றை யடைந்தார். அச்சிறு மலைதொடுத்து மக்கமா நகரத்து வீதிகள், நகர்ப்புற மைதானங்கள் எங்கும் எள்ளிட இடமின்றி ஜனங்கள் திரண்டு நின்றார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

கலையி ழுந்தன மானின கடிசுரை கவிழ்பான்
மூலையி ழுந்தன கன்றுகள் விலங்கின முழுது
நிலையி ழுந்தன பறவைக ளெடும் விசும் பெழுந்த
மலைய மிழ்ந்திய திரைதரு வெனுமனுக் கடலுள்.

வசனம்.

பார்க்கு மிடந்தோறும் மனுக்கடல் பரவிச் சந்தடி மிகுந்த படியால், விலங்கினங்கள் ஒன்றையொன்றிழந்து தடுமாறின. பட்சிசாலங்க ளனைத்தும் தரிப்பிடமற்று ஆகாயத்தில் பறந்து திரிந்தன. அப்போது சூரியன் அஸ்தமனமாயிற்று. அன்று சூரியன்

அஸ்தமித்த தோற்றமானது, திமஷ்கு இராஜாவின் கோரிக்கைப் படி சந்திரனையழைத்து இருபிளவாகப் பிளப்பதற்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நிற்றார்கள். ஒருகால், சூரியனையும் இரண்டாய்ப் பிளந்து காட்ட வேண்டுமென்று அவ்விராஜா கேட்டால் நாம் என்ன செய்வோம் என அஞ்சிநடு மாறிகடலுக்குள்புகுந்து மறைந்தது போலிருந்தது. இன்னும், திமஷ்கு மகாராஜாவாகிய ஹபீபு சொன்ன சொற்படி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஏவின ஏவலைக்கொண்டு சந்திரனை வரச்சொல்லுதற்குச் செல்லும் தூதைப்போல, சூரியன் போய் அஸ்தமித்து, அத்திசைச்சண் செக்கர் பரந்து தோன்றிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்த அபூகுபைசு என்னும் குன்றின்சிகரத்தில் நின்று, தமது இரு கரங்களையும் ஏந்தி அடியில் வருமாறு அல்லாஹு தஆலாவைத் துதித்தார்கள்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதிநா யகனே யழிவிலா தவனே
யளவறுத் திடற்கரும் பொருளே
சோதியே யெவயு னுவமையில் லவனே
தொடரின்ப துன்பமற் றவனே

நீதியே குபிரத் தெளிதரும் டடியா
ரினைத்தவை முடித்தி டென்றுருகிக்
கோதற மனமும் வாக்குமொன் றாகிக்
குதாதனை யடிக்கடி புகழ்ந்தார்.

இரந்து நின் றதற்கா யாதிவல் லவனு
மிருட்டறை மலக்கினைக் கூவிப்
பரந்திட விருளிற் சிறிதெடுத் தாசித்
துளையினுட் படவிடு கென்னத்

திருந்திட வுரைப்ப அம்மலக் கெழுந்து
செறியிருட் பிழம்பினிற் சிறிது
பொருந்திட விடுத்தார் ககனமும் புவியும்
பொதுவற விழுங்கிய தன்றே.

வசனம்.

"சிருஷ்டிகளுக்கும் எல்லாவற்றிற்கும் எஜமானனானவனே, அனாதியானவனே, நித்தியானவனே, வாக்கு மனாதிகளுக்கு அகோசரமானவனே, தேஜோமயமானவனே, அசமானமானவனே, நிருவிகற்பமானவனே, யா அல்லாஹ், காபிர்கள் அனைவரும் அஞ்சித் தடுமாறி மனந்தெளியும் வண்ணம் என் மன்றாட்டத்தை யுவந்து, நான் கோரிய கருமத்தை நிறைவேற்றி யருள்வாயாக" என இவ்வாறு தமது மனம், வாக்கு, காயம் இம்மூன்றும் ஒத்து நெக்குருகி கெஞ்சிக் கேட்டார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் துஆவை அல்லாஹு தஆலா உடனே யுவந்து, இருளுக்கு அதிகாரியாகிய மலக்கைக் கூவி "நீர் ஒரு ஊசித் துவாரம் கொள்ளத்தக்க அத்தனை இருளைப் பூமியில் செலுத்து" என்று கட்டளை பண்ணினான். அவ்வாறே அந்த மலக்கு குறித்த அளவு இருளைப்பூமியி லிறக்கினார். அவ்விருள் வானந் தொட்டுப் பூமிவரையும் பரந்தது. அப்போது இருட் பிரவாக மொன்று பிரவகித்து வானம், பூமி, மலை, கடல் முதலானவை யனைத்தையும் ஆழ்த்தி மேற்கொண்டு எங்கும் செறிந்தாற்போலிருந்தது. கொள்ளிக்கும் விள்ளாத காரிருள் ஒப்பற்றுப் பரந்தபடியால், ஒன்றையொன்று அறியாமல் உலகம் தலைதடுமாறிற்று. இவ்விதமெங்கும் இருள்பரந்து மூடிக்கொண்ட மாத்திரத்தில், மக்கமா நகரத்திலிருக்கும் மனிதர்கள் அனைவரும் மனமயங்கி, "இது என்ன விபரீதம், யுகாந்தத்தின் அறிகுறியோ, முஹம்மதை அவமரியாதை யாக்கக் கருதின பாதகர்களால் நேர்ந்த விபத்தோ! மனிதரனைவருக்கும் கண்ணொளியற்றதோ! மனநிலை மயங்கிற்றே! கொடிய நாகத்தின் விஷங்கள் அனைத்தும் ஒருமிக்கதிரண்டு இந்த மக்கமா நகரத்திற்கு வந்துவிட்டதோ, எனப்புலம்பிப் பரிதபித்தார்கள். அநேகர், இது முஹம்மது உடைய அற்புதமேயன்றி வேறல்ல வென்றார்கள். சிலர் இக்காலம் சூரியன் இறந்துபட்டு இருளிருந்து இராஜ்ஜிய பரிபாலனம் பண்ணுங்காலம் என்றார்கள். பலர் திரண்டு, இன்னும், க்ஷணப் பொழுதில் சூரியன் உதயமாகாவிட்டால் அனைவரும் இறந்து போவோம். நம் நம் மனைகளுக்கு மீண்டு போய்ச் சேர்தல் இனிக்கனவிலுமில்லை யென்று சப்தமிட்டார்கள். இவ்வாறு திரள்திரளாய் நின்றுபேசுவதுமன்றி, "பஞ்சமாபாதகனாகிய அபூஜஹல் என்பவன் ஒழிந்து போகுந்தனையும் துன்பமும் ஒழியமாட்

டாது. இதுவல்ல, இதனினும் பலமடங்கு அதிகமான கேடெல்லாம் இங்கு விளையும்; முஹம்மது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிப்படாத தறுகண்ணர்வசிக்கும் "இந்நகரத்தில் நாம் குடியிருப்பது பழுது; இவ்விருள் என்று தீரும்" என்று புத்திமான்களா யுள்ளவர்கள் சொன்னார்கள். இன்னும் இது திமஷ்கு அரசனைக் கொல்லத் துணிந்த உபாயம் என்றும், முஹம்மது நபியினைக்கும் அற்புதமேயன்றி இது வேறு ஒன்றுமல்ல வென்றும் பலர் கூறினார்கள்.

கண்ணொளி பிரயோஜனப் படாவண்ணம் காரிருள் பரந்தபடியால், அங்கங்கே நின்ற ஜனங்கள் மத்திட்டுக்கடையுண்ட தயிர் போலச் சிதறினார்கள். தந்தை, தாயை, புருஷனை, பிள்ளையை, சகோதரரை, சிநேகிதரை, பந்துக்களைப் பிரிந்துநின்று மனம் கலங்கும் ஆடவரும், பெண்டிரும் கொஞ்சமல்ல. இரத கஜ துரக பதாதி யென்னும் நான்கு வகைச்சேனையும் அணிபிரிந்து கலையுண்டு குடையொருபுறம், கொடியொருபுறம், ஆலவட்டமொருபுறம், சாமரையொருபுறம், இரதமொருபுறம், யானையொருபுறம், குதிரையொருபுறம், சிவிகையொருபுறம், முரசொருபுறம், மேளமொருபுறம், குழலொருபுறம், கொம்பொருபுறமாக சிதறின. விலங்கின மனைத்தும் கலைந்தன. பட்சிசாலங்களெல்லாம் ஆகாயத்திலெழுந்து பறந்து ஒலித்தன. அப்போது ஹபீபு அரசர் தாம் காணாநிகழ்ந்த காட்சியால் களித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைத் துதித்து நாம் உயிர் பதவிபெற்றோம் எனச் சந்தோஷமுற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை விளித்து "முஹம்மதே, இந்த மகாபெரிய இருளைத் தொலைத்துச் சந்திரனை யழையுங்கள்" என்றார். இச்சொல்லைக் கேட்டபோதே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹு தஆலா இடம் "யா அல்லாஹ்! பூரணச் சந்திரனை வரச்செய்வாயாக" என்று இரந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் துஆ கேட்டவுடன் அல்லாஹு தஆலாவின் கட்டளைப்பிரகாரம் காரிருள் அனைத்தும் ஒதுங்கி மறையும்படியாகக் குணதிசை வெளுத்து, பூரணச்சந்திரன் உதயமாயிற்று. குணதிசையில் உதயமான பூரணச்சந்திரன் காபிர்களின் முகங்கள்வாடி, தீன்பயிர்செழித்து, குபிர்ப்பயிர் கருகி,

நித்தியானந்தமான கீர்த்தி நிலைபெறும்படியாக நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி ஆகாயத்திலெழுந்தது.

சந்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விண்ணகத் தமுதங் கான்றவெண் மதிய
மீனடு மதியினிற் றிசழ்ந்து
மண்ணக நோக்கி மெலமெலத் தாழ்ந்து
மக்கமா நகரியிற் கஃபா

கண்ணிவின் முகட்டி னடுநிலை நோக்கி
லெங்கெழுங் கலைநிலா வொழுகப்
பண்ணுதற் கியைந்த வெள்ளிவெண் குடம்போற்
பரிவுற வினிதுவந் துறைந்த.

படியினிற் சுவனப் பதிநிகர்த் தனைய
பழமறைப் பள்ளியிற் சிறந்த
கொடுமுடி யெனலா யுறைந்த வெண்மதியங்
குவலயத் திடத்தினிற் றாழ்ந்து

வடிவுறுங் கஃபா வாயிலி னெதிர்ந்து
மகிழ்வொடு மெழுதரம் வலம்வந்
துடல்குழைத் தரிதி னுள்ளுறப் புகுந்தங்
குறைந்தது திசைதிசை யொளிர.

வசனம்.

இவ்வாறு எழுந்த சந்திரன் ஆகாயத்தில் வந்துநின்று அங்கிருந்து மெள்ள மெள்ளக் கீழிறங்கி, கஃபத்துல்லாவின் உச்சியில் சிகரம்போல சற்றுநேரந் தங்கியிருந்து, பிறகு தரை யிலிறங்கிக் கஃபாவின் வாசலில்வந்து நின்று, அக்கஃபாவை எழுதடவை பிரதட்சணம் செய்து உள்ளே புகுந்தது. கஃபத்துல்லா என்னும் ஆலயத்திற்குள் சென்ற சந்திரன் அங்கே தங்கியிருந்து அல்லாஹு தஆலாவை தொழுது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் துதித்து, அங்கிருந்து திரும்பி வெளியில் வந்து வாசலில்நின்று, அங்கிருந்து சந்தடிகளுக்கு விட்டே நடந்து, அபூகுபைசு என்னும் குன்றையடுத்து அதன் சிகரத்திலேறி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களின் திவ்விய சந்நிதானத்தில் வந்து பணிந்து நின்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி ஸலாம் சொல்லி "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்னும் கலிமாவை யோதி நின்றது. தமது எதிரில் வந்து நிற்கும் சந்திரனை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோக்கி "பிரகாசமுள்ள சந்திரன்! எனது வருகையைப் பற்றின வரலாற்றை இந்த ஜனங்களுக்கு விவரமாகச்சொல்" என்றார்கள். அப்போது அந்தப்பூரணச் சந்திரன் அறபு பாஷையால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் புகழ்ந்து யாவருக்கும் கேட்கும்படி கீழ்வருமாறு சொல்லியது.

"சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் ஆதியாய் ஒப்பற்ற ஒளியா யிருந்து, பின் அப்துல்லாவின் குமாரராய் ஆமினாவுடைய வயிற்றில் தறித்து, மானிடர்களுக்கு நல்வழிகாட்டவந்த நபியே, முஹம்மதே, அல்லாஹு தஆலாவுடைய றஸூலே, காரணக்கடவுளே, இவ் வுலகத்திலுள்ள மனிதர்களில், யார்யார் தங்களுடைய கலிமாவைச் சொல்லி தங்களுக்குக் கீழ்படிந்தார்களோ அவர்களே மோட்ச மடைவார்கள். மற்றவர்கள் என்றைக்கும் நரகத்திற்கிடந்து வேதனையை அனுபவிப்பார்கள். நான் சொல்லும் இச்சொல் சத்தியம்" என்று சொல்லிற்று.

இவ்விதம் சொல்லி நின்ற அச்சந்திரன், நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மேலங்கிபுட்சென்று, மார்புக்கு நேரிருந்து இருபிளவாகி ஒருபிளவு வலக்கரவழியாயும், மற்றொரு பிளவு இடக்கரவழியாயும் வெளிவந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முன் இருபாதி யாய் நின்றது. நின்ற இரண்டு பிளவுகளில் ஒன்று குணதிசை யிலும், மற்றொன்று குடதிசையிலும் சென்று, அவ்விரண்டும் அவ்விரு திசைகளில் இருந்து ஆகாய மார்க்கமாக உதித்து வந்து, ஆகாயமத்தி யிலிருந்து கீழிறங்கிக் கஃபத்துல்லாவின் சிகரத்தில் இருபிளவும் ஒன்றாய்ப் பொருந்தி நின்று மறுபடியும் மனிதர்களின் செவிகளில் நன்றாகக் கேட்கும்படி "முஹம்மது உண்மையான நபியும், றஸூலுமானவர். அவருடைய கலிமாவை படைப்பு களனைத்தும் சொல்லி அவருக்குக் கீழ்ப்படிவது கடமையாகும்".

என்று மொழிந்து, நபிநாயகமவர்களை நோக்கி ஸலாம் சொல்லிவிட்டு ஆகாயத்தில் உயர்ந்தது. இவ்விதம் ஆகாயத்திலுயர்ந்த சந்திரன், அங்குநின்று தனது பதினாறு கலைகளையும் பரப்பிப் பிரகாசித்து நடைபெற்றுச் சென்று கடலுள் புகுந்து மறைந்தது.

இவ்விதம் தாம் சொன்னவாறே, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பூரணச்சந்திரனை யழைத்துக் காட்டிய அற்புதக் காட்சியை திமஷ்கு அதிபராகிய ஹபீபு அரசர்கண்டு, அடிக்கடி ஆநந்த வார்த்தைகூறிச் சிரக்கம்பம் செய்தார். பிறகு, தமது சமுகத்தில் நிற்கும் மந்திரிமார், பிரதானிகள், சேனாதிபதிகள், புரோகிதர், வேதபாரகர் அனைவரையும் நோக்கி "நான் இந்த முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய பொருட்டால் மோட்சமடைந்துவிட்டேன்" என்று அகங்களித்துச் சொல்லி, முன்னுள்ள தவுறாத், ஜபூர், இன்ஜீல் என்னும் மூன்று வேதங்களிலும், இம்மூன்றல்லாத மற்ற சுஹுபுகளிலும், ஏனைய சாஸ்திரங்களிலும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறிப்பிட்டுக் கூறியவற்றைத்தாம் கற்றமட்டும் பிரசங்கித்து "முஹம்மது உண்மையான நபிதான்" என்று நிரூபித்தார். ஹபீபு அரசருடைய உத்தமவசனங்களைக் கேட்ட அவருடைய ஜனங்களனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் விளைத்த புதுமையை கண்டும், தமது அரசரின் பிரசங்கத்தைக் கேட்டும் ஆநந்த பரவசமடைந்தார்கள். அவர்களில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை விசுவாசித்துக் கொண்டாடிப் புகழாதவர்கள் ஒருவருமில்லை.

பிறகு, திமஷ்கு வேந்தராகிய ஹபீபு அரசர் சந்தோஷமா யெழுந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் இரண்டு பாததாமரைகளையும் தமது கைகளால் தொட்டு கண்களில் வைத்து முத்தமிட்டுக் கொண்டு, ஈமானை அகத்தில் தரிபாடாக்கி நின்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "அல்லாஹு தஆலாவுடைய றஸூலே, உலகமனைத்திற்கும் ஏகாதிபதியே, பாவக்கடலில் மிதக்கும் மனிதர்களை மோட்சக்கரை சேர்க்கவந்த மரக்கலம் போன்ற திரு நபியே! தங்கள் சொல்படி யொழுகினவர்களே மோட்சமடைவார்கள், மற்றவர்கள் நரகம் புகுவார்கள் என்பது சத்தியம். தங்களின் மகிமையை

அறிபவர் யாவர்? இக்குன்றின் சிகரத்தை விட்டிறங்கி மாளிகைக்கு போங்கள்" என்றார். உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சந்தோஷமுற்று அபூகுபைசு என்னும் குன்றின் சிகரத்தை விட்டு தமது அருகர் தோழர் அனைவரும் உடன் வர இறங்கி மாளிகைக்கு வந்தார்கள். பிறகு ஹபீபு அரசர் தமது சேனாசமுத்திரம் புடை சூழ குன்றை விட்டிறங்கித் தம் ஜாகைக்கு வந்தார். மதியை யழைப்பிக்கும் அற்புதக் காட்சியைக்காண வந்த மற்ற ஜனங்களெல்லோரும் கலைந்து தத்தம் ஜாகைக்குச் சென்றார்கள். கொள்ளிக்கட்டை கொண்டு தன் பறட்டைத் தலையைப் பிறாண்டும் மதியிலிபோல், எந்தக் காரியத்திலும் தனக்கே விக்கின மூண்டுபண்ணிக் கொள்ளப் பிரவேசிக்கும் அவிவேகியும் மூர்க்கனும் சண்டாளனுமாகிய அபூஜஹலும், அவனைச் சேர்ந்த மக்கமா நகரத்துக் குறைஷிகளும் முகங்கள் வெளிறி, ஒருசொற் சொல்லவும் நாவெழாமல், நெஞ்சுபுறைசாற்ற வெட்கமுற்று, தலை குனிந்து தங்கள் ஜாகையில் சென்று ஒன்றுகூடி "நூற்றருபது வயதுக்கு மேற்பட ஜீவனோடிருந்து, வேதாகமசாஸ்திரங்களை யெல்லாம் ஐயந்திரிபறக்கற்றுத்தேறி, இராஜ்ஜியபாரம் தாங்கி நிற்கும் அதிபதியாகிய இந்த ஹபீபு, முஹம்மது செய்த மாயா ஜாலத்தில் மருண்டு பதில் கூற வசமற்று கட்டுண்ட திருடரைப் போல விழித்தானேயானால், இனிச்சொல்ல வேண்டியது என்ன உண்டு? இனி எவ்வித வேதாந்த சித்தாந்த புண்ய சாதுக்களையும் இந்த முஹம்மது உடைய மந்திரம் ஜெயிக்கும். இனிமேல், வீரசிங்கம் போன்ற சேனாபலத்தினாலும், மற்றெவ்விதப் பலத்தினாலும், அபூஜஹல் முதலான நாமனைவரும் திரண்டு செய்யும் நிஷ்டூரமனைத்தும் முஹம்மதை ஜெயிக்கமாட்டா. தொன்று தொட்டு விளங்கும் நமது மார்க்கம் இனி வரவரக் குன்றும். நம் ஜாதியாரும் நெருக்குண்டு இம்சையடைவார்கள். குபல் முதலான சுவாமிகளெல்லாம் மூலைநோக்கி முடங்கிக்கிடந்து, நாசமடைவதில் சமுசயமில்லை. முஹம்மது உடைய இஸ்லாம் மார்க்கம் வையமெங்கும் பரவி ஓங்கி வளரும். அவனுடைய குர்ஆன் என்னும் வேதம் ஸ்தாபனமாகும். இன்னும் சொற்பகாலத்தில் உலகமெல்லாம் அவன் கீழ்ப்படும். ஆ! முஹம்மது மகா மாய வித்தைக்காரன்! மாந்தரீகன்!! சூனியக்காரன்!!! இனி எல்லாம் அவனுடையவைதான். எல்லாம் அவன் வசம்தான்" என்று எரிந்து பேசினார்கள். அந்தப்

பாதகர்களுக்கு கொஞ்சமும் நித்திரைவரவில்லை. அன்றிரவு முழுதும் இதே புலம்பலும், அழுகையுமா யிருந்தார்கள். தாங்கள் எண்ணிய கருமம் கடைத்தேறாமையால், இனிவரும் கஷ்டநஷ்டங்களைக் குறித்து ஆலோசித்து, இரவெல்லாம் உழன்றார்கள். திமஷ்கு வேந்தராகிய ஹபீபு அரசரைக் கொண்டாவது வெற்றிபெறலாமென்று காத்திருந்த பகைவர்களுக்கு வந்து நேரிட்ட தன்மை எவ்வளவு ஆத்திரங்கொண்டது? ஆனபடியால் அவர்கள் மதிமயங்கிப் பிரமைகொண்டு புலம்பாது வேறென்ன செய்வார்கள்? விடியும் பரியந்தம் மேற்கண்டவாறு இறுகிறுப்புற்றுப் புலம்பித் தீர்த்துப் பொழுதை விடித்தார்கள். அன்றிரவு கழிந்து சூரியன் உதயமாயிற்று.

35-வது அத்தியாயம்.

தசைக்கட்டியைப் பெண்ணுரு வாக்கியது.

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

இசைக்கட் டினிமை பொருத்தியிறை
யிறக்கும் புர்க்கான் மறையுலகோர்
வசைக்கட் டகல விளக்கு திறல்
வள்ளல் முஹம்மதெழில் திமஷ்குத்

திசைக் கட்டாளும் ஹபீபரசர்
திகழக் கொணர்ந்து முனில் வைத்த
தசைக்கட்டி யைப்பெண் ணுருவமைத்த
சரிதந் தனையோ திடுவாமே.

இதன் பொருள்.

அல்லாஹு தஆலா, இராகமும் சொற்கட்டும் இன்பமும் பொருந்தி இறக்கிய புர்க்கானென்னும் வேதத்தைப் பூமியோர்களுடைய வசையகலப் பிரகாசமாக விளக்கஞ்செய்யும் திறமையையுடைய வள்ளலான முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், அழகிய திமஷ்கு நகரத்தைச்சேர்ந்த மண்டலமெட்டுத் திசைகளிலுஞ் செங்கோல் செலுத்தி யரசாட்சி செய்யும் ஹபீபு ராஜாவானவர், தமதிடத்திலிருந்து கொண்டுவந்து

சமூகத்தில் வைத்த தசைக்கட்டியைப் பெண்ணுருவாக்கிய சரித்திரத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மருமலர் சுமந்து தேன்வழிந் தொழுகு
மணிப்புய முஹம்மது நபியுந்
தெரிதருந் தீனி னெறிமுறை யவருஞ்
சிந்தையிற் களிப்பொடுஞ் சிறப்ப

வரிய மெய்ப் பொருளை முறைமுறை வணங்கி
யற்றையிற் கடன் கழித் தமரர்
திருவடி பரவத் தம்முயி ரனைய
செல்வரோ டுறைந்திடுங் காலை.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மதியை வரவழைத்த அன்றிரவு கழிந்து, சூரியோதயமானவுடன், தமது கலீபாக்களாகிய அருநர் நால்வரும், மற்ற அஸ்ஹாபிகளாகிய தோழர்களும் புடைசூழ நின்று, அல்லாஹு தஆலாவைத் தொழுது முடித்து, தம்மைத் தொடர்ந்தோர்களுக்கு மார்க்கத்தின் நிபந்தனைகளைப்பற்றிப் பிரசங்கித்துக்கொண்டு தங்கள் மாளிகையிலிருந்தார்கள். அன்று காலையில் ஹபீபு அரசர் எழுந்து கடமை முடித்து, மந்திரிகள், பிரதானிகள், சேனாதிபதிகள், புரோகிதர்கள், வேதபாரகர் பலரும் திரண்டு தமது இருமருங்கிலும் நெருங்கி வரும் படிக்கும், மெய்க்காப்பாளராகிய அநேக வீரர்கள் பின்தொடர்ந்து வரும்படிக்கும், இராஜ சின்னங்கள் பிடித்து வாத்தியங்கள் முழங்கும்படிக்கும், தமது ஜாகையை விட்டுப் புறப்பட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தரிசிப்பதற்காக வந்தார். இவ்வாறு வந்த ஹபீபு அரசர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிருக்கும் மாளிகைக்குள் புகுந்து மரியாதையுடன் பணிந்து ஸலாம் சொல்லி ஒருபுறம் ஒதுங்கி நின்றார்.

அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஹபீபு அரசரை நோக்கி உபசாரவார்த்தை பகர்ந்து அழைத்து

தமக்கு அருகில் உட்காரும்படி யிருத்தினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அழைத்து இருத்தினவுடன், ஹபீபு அரசரும், அவருடன் வந்த பரிஜனங்களும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்நிதியில் இருந்தார்கள். பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹபீபு அரசரை நோக்கி "அரசரே, தாங்கள் வாய்திறந்து கலிமா சொல்லுங்கள்" என்றார்கள். அப்போது ஹபீபு அரசர் அகங்களித்து எழுந்து நின்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பலவாறு புகழ்ந்து, மிகமரியாதையுடன் "நபியே, நான் தங்கள் சமூகத்தில் வேண்டிக் கொள்ளத்தக்க பிரார்த்தனை இன்னமொன்று உண்டு" என்று சொன்னார். இதைக்கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஹபீபு அரசரை நோக்கி குறுநகைசெய்து கொண்டு "அரசரே, தங்கள் பிரார்த்தனை எனக்குப் புலப்பட்டது. தங்கள் புத்திரியின் பழயவினை தீர வேண்டுமென்பது தான் அது" என்றார்கள். இச்சொல்லைக் கேட்டவுடன் ஹபீபு அரசர் ஆனந்தபரவசமுற்று, "நபியே, தங்கள் ஊழியனாகிய நான் தங்களின் பாததாமரைகளைத் தரிசிக்கப் பெற்ற போதே மோட்சமும் மட்டற்றபாக்கியமும் அடைந்தேன். தங்களின் அற்புத அலங்காரங்களைக் கண்குளிரக் கண்டு, என்பாவத்தைத் தீர்த்துக் கொண்டேன். இனி எனக்கு வேண்டுமென்று நான் விரும்பத்தக்கது ஒன்றுமில்லை. சமஸ்தமும் எனக்கு வசமாயின" என்றார். பிறகு நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், ஹபீபு அரசரும் சற்றுநேரம்அளவளாவி கலந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவ்விதம் சந்தோஷத்துடன் சம்பாஷித்திருக்கும்போது, அல்லாஹு தஆலாவின் உத்தரவின்படி வானவர்பெருமானாகிய ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடத்தில் வந்தார்.

ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் மானிடவடிவில் தமது சிறகுகளை யொடுக்கிக்கொண்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு அருகில் வந்து மற்றவர் கண்களுக்குத் தோற்றப்படாமல் நின்று, அல்லாஹு தஆலாவின் ஸலாம் சொல்லி "யாறஸூலல்லா! தாங்கள் ஹபீபு அரசர் கொடுக்கும் தசைக்கட்டியைக் கஃபத்துல்லாவில் கொண்டுபோய் நிலத்தில் வைத்துக் தம்

பனத்தால் போர்த்து மூடி, ஜம்ஜம் என்னும் சிறந்த நீரூற்றின் ஜலத்தை கைகொண்டு தெளித்து, அல்லாஹு தஆலா இடம் அதைப்பற்றிப் பிரார்த்தித்து துஆ கேளுங்கள். அப்போது அத்தசைகட்டி பெண்வடிவாகும்" என்று சொல்லிவிட்டு வானுலகம் சென்றார்.

பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் மாளிகையைவிட்டு எழுந்து அருகர் நால்வரும்,மற்ற அஸ்ஹாபிகளும், திமஷ்கு வேந்தராகிய ஹபீபு அரசரும் அவரைச் சேர்ந்த மற்றபரிவாரங்களும் தொடர்ந்துவர நடந்து கஃபத்துல்லாவின் மதிலுக்குள் புகுந்து ஒருபுறத்தில் உட்கார்ந்தார்கள். அனைவரும் திரண்டு நெருங்கி உட்கார்ந்த பின், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹபீபு அரசரை நோக்கி "தங்கள் மகளாகிய தசைக்கட்டியை இங்கே எடுத்துவரச் செய்யுங்கள்" என்றார்கள். தசைக்கட்டியைக் கொண்டுவரும்படி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் உத்திரவு செய்தவுடன், ஹபீபு அரசர் அவ்வாறே தமது ஏவலாட்களுக்குக் கட்டளை பண்ணினார். அப்போது அவ்வேவலாளர் அநேகர் விரைவாய் அரசருடைய விடுதிக்குட்சென்று, மிகப்பத்திரத்துடன் யானைத்தந்தத்தினால் செய்யப்பட்ட சிறு பேழைக்குள் சேமித்து வைத்துக்கொண்டு வந்திருக்கும் தசைக்கட்டியை, அப்பேழையுடன் கொண்டு வந்து நபிநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமூகத்தில் வைத்து, பேழையைத்திறந்து அத்தசைக்கட்டியை வெளியிலெடுத்து வைத்தார்கள். அப்போது, இவ்வதிசயத்தைக் கேள்வியுற்ற மக்கமாநகரத்து ஆடவர், பெண்டிர், சிறார் பலரும் திரண்டு வந்து கஃபாவில்கூடினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமூகத்தில் வைக்கப்பட்ட தசைக்கட்டி, ஹபீபு அரசரின் மகளாய்ப்பிறந்ததும் ஜீவனும் அவயங்களின் அடையாளமுமின்றி வெறும் தசைக்கட்டியாயிருந்தது. அதைப்பிற்காலத்தில், நபிநாயகம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் பெண்ணுருவாகவேண்டியே அல்லாஹு தஆலா இவ்விதம் அமைத்தான்.

தங்கள் மகிமையை வெளிப்படுத்துவதற்காக அமைத்திருந்த அந்தத் தசைக்கட்டியை, நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்கள் உற்றுநோக்கி, இது அல்லாஹு தஆலாவின் தத்துவத்தைப் பற்றியது என்று அதிசயித்து, அதை கம்பளத்தால் மூடி ஜம்ஜம் என்னும் கிணற்றின் ஜலத்தைக்கொண்டுவரச் செய்து, தமது வலதுகைகொண்டு அதன்மேல் தெளித்து, தமது இருகரங்களையுமேந்தி, அல்லாஹு தஆலாவைப் பலவாறு புகழ்ந்து தோத்திரம் செய்து, இதைப் பெண்வடிவாக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பிரார்த்தனையை அல்லாஹு தஆலா உடனே உவந்து கிருபைசெய்தான். அப்போதே அதன் கீர்த்தி யுகாந்தவரையும் எங்கும் பரவும்படிக்கும், அங்கு கூடி நிற்கும் பகைவர்களின் மனம் குலைந்து மதிமயங்கித் தடுமாறும்படிக்கும், அல்லாஹு தஆலாவின் தத்துவத்தினால் அத்தசைக்கட்டி பெண்ணுருவாயிற்று. தசைக்கட்டி வடிவுமாறிப் பெண்வடிவெடுத்த அந்தமாது, உடனே தன் வாயினால் "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்னும் கலிமாவை ஓதிக்கொண்டு கம்பளமென்னும் காரிருட்பிழம்பிலிருந்து உதயமாகும் ஒரு பூரணமதிபோல, அப்போர்வை நீக்கி யெழுந்து, அச்சபை ஆநந்தபரவசமுற நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சமூகத்திலே நின்றாள்.

இருலோக ரக்ஷகரான நபிகட்திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமூகத்தில், எவரும் அதிசயிக்கத்தக்க அற்புதத்துடன் எழுந்துநின்ற அந்தப் பெண்ணின் அழகிய அவயவ இலட்சணங்களைப்பற்றி, சீறாப்புராணத்தில் வித்துவ சிகாமணியாகிய உமறு புலவரவர்கள் நிகரில்லாதவண்ணம் வர்ணித்துக் கூறியிருக்கின்றார்கள். அதைப்பற்றி இங்கும் அவ்வாறே வருணிப்பதற்கு நாம் சக்தியுள்ளோமல்ல. ஆயினும், அப்பெண்ணை அலங்கரித்துச் சொல்லிய ஒரு பாடலை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

சீறாப் புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

விண்ணகத் தரம்பை குலத்தினும் வடிவாய்
விரிகடன் மகளினும் வியப்பாய்
மண்ணகத் துறையு மெழுவகைப் பருவ
மடந்தைய ரணிந்திடு மணியாய்
கண்ணினுக் கடங்கா தழகினைச் சுமந்த
கனியுரு வெடுத்த காட்சியதாய்ப்
பெண்ணலங் கனிந்து கவினெழில் பிறங்கப்
பெருநிலத் தெழுந்துநின் றனளே.

வசனம்.

வானுலகத்தில் வசிக்கும் அரம்பைகளுக்கு சமானமாய், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் எழுவகைப்பட்ட பருவ மாதர்களும் விரும்பியணியத்தக்க தோர்ஆபரணம் போன்று, பார்ப்பவர் கண்களில் அடங்காத அழகை சுமந்து கனிந்த கனிபோல் எழுந்து நின்றாள்.

இவ்வித அவயவ இலட்சணங்களையுடைய அந்தப்பெண் திடீரென எழுந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பணிந்து கலிமா சொல்லி நின்று, பலவாறு புகழ்ந்து துதித்தாள். இக்காட்சியை அங்குவந்து கூடி நிற்கும் ஆண், பெண் அனைவரும் கண்டு தம்மை மறந்து பரவசமானார்கள்.

36-வது அத்தியாயம்.

ஹபீபு ராஜா வரிசைவர விடுத்தது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குபாடமுறு மனத்தனபு ஜஹலு மற்றக்
குபிரர்களு நாட்குநா ளொடுங்கியஞ்சச்
சுபாவமறை தனைவிளக்கு முஹம்மதுற
சூல்மகிழ திமசுகக ரதனிற் சென்று
சபாசனர்க ளுடனிருந்து தீநெறியைத்
தமதுகிளை யவர்கள்கோ ளச்சாற்றிநல்ல
ஹபீபரசர் வரிசைவர விடுத்தவந்தக்
காரணத்தை யினிதெடுத்துக் கழறுவாமே.

இதன் பொருள்.

குபாடம் பொருந்திய மனத்தனான அபூஜஹலும், மற்றக் காபிரீன்களும் நாட்கு நாளொடுங்கி அவர்கள் நெஞ்ச மஞ்ச, இயல்பான

புர்க்கான் வேதத்தை விளக்கஞ் செய்யும் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மகிழ்ச்சியாக, கன்னையுற்ற ஹபீபு ராஜா, திருமக்கமா நகரத்திலிருந்தெழுந்து திமஷ்கு நகரம் போய், அங்கு சபையோர்களுடனிருந்து தீனுல் இஸ்லாம் மார்க்கத்தைத் தமது கிளைஞோர்களும் ஏற்றுக்கொண்டு நடக்கச் சொல்லிப் பின்னர் நபிநாயகத்துக்கு, சீதிகலை முதலிய வரிசைகள் வரவிட்டதின் காரணங்களை இன்பமாக எடுத்துச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்

கலி விருத்தம்.

பூங்கொடி யெனமுன் நின்ற பூவையைத்
தேங்கம முழுதவாய் திறந்து நந்நபி
தாங்குதெண் டிரைத்தடத் திமஸ்கு மன்னவன்
பாங்கினி லுறைகெனப் பரிவிற் கூறினர்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், தமது சமுகத்தில் அழகிய பூங்கொடிக்கு சமானமான ஒப்பற்ற சித்திர ரூபத்துடன் நின்ற அந்தப்பெண்ணை நோக்கி, திமஷ்கு வேந்தராகிய ஹபீபு அரசரிடத்தில் இருக்கும்படி உத்தரவு செய்தார்கள். உடனே அவள் தனது தந்தையாகிய ஹபீபு அரசரின் பாதங்களைப் பணிந்து அருகில் நின்றாள். அதைக்கண்டு ஹபீபு அரசர் அளவற்ற ஆனந்தமும் சந்தோஷமுமடைந்து, தமது மனக்குறை யொழிந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கையைப்பிடித்துக் கலிமா சொல்லி, முஸ்லிமானார். ஹபீபு அரசர் ஈமான்கொண்டு முஸ்லிமானவுடன் அவருடன் வந்த மந்திரிகள், பிரதானிகள், சேனாதிபதிகள், புரோகிதர்கள், வேதபாரகர்கள், மற்ற சேனாவீரர்கள், பரிவார ஜனங்கள் அனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு வழிப்பட்டு ஈமான் கொண்டு, முஸ்லிமானார்கள். கூடவந்த ஸ்திரிகளும் அநேகரும் இஸ்லாத்திலானார்கள். அன்று இஸ்லாமான அரசர் முதலான அனைவரும், மார்க்கத்தின் முறைமைகளனைத்தையும் ஐயமறக் கற்றுக்கொண்டு, தொழுகையின் நிபந்தனைகளையும், மற்ற நடவடிக்கைகளையும் நிரத் தெளிய ஆராய்ந்து, இரண்டொரு

தினத்தில் தேறினார்கள். ஹபீபு அரசர் தமக்குஆகவேண்டிய கருமங்களனைத்தையும் முடித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, தமது நகரஞ் செல்லப் புறப்பட்டார்கள். உடனே இரதகஜதுரகபதாதி யென்னும் சதுரங்க சேனாசமுத்திரம் எழுந்தது. அப்போது ஹபீபு அரசர் மக்கமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு ஓரிடத்தில் தங்கியிருந்துகொண்டு, அபூஜஹல் என்பவனை அழைப்பித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைப்பற்றி சில சன்மார்க்கமான விஷயங்களைச் சொன்னார். அவர் சொன்ன விஷயங்களின் பிரதானமான கருத்தடங்கலும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு வழிப்படவேண்டு மென்பதே. ஹபீபு அரசர், "முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் உண்மையான நபிதான். றஸூல்மார்களுக்கு நாயகமானவர்தான். அவருக்கு வழிப்பட்டு ஈமான்கொண்டு, அவர்களுடைய மார்க்கத்தில் பிரவேசித்தவர்கள் முத்தியடைவார்கள். மற்றவர்கள் நரகம் புகுதுவார்கள். ஆகையால், அனைவரும் அவருக்கு வழிப்பட வேண்டும்" என்று அடிக்கடி அபூஜஹலுடைய மனதில் பதியும்வண்ணம் இடித்துக் கூறிவிட்டு, ஷாம் இராஜ்ஜிய மார்க்கத்தைப் பிடித்து நடந்தார். அதிக விரைவாய் நடந்து சொற்ப தினத்துக்குள் ஷாம் இராஜ்ஜியத்தையடைந்து, சீக்கிரத்தில் திமஷ்கு நகரம் போய்ச் சேர்ந்தார். தமது இராஜதானி சேர்ந்த ஹபீபு அரசர், பிரதிநிதி வசமிருந்த இராஜ்ஜிய பாரத்தை ஒப்புக்கொண்டு, அங்குள்ள ஆண், பெண் அனைவரையும் சிலதினத்திற்குள் இஸ்லாம் மார்க்கத்திலாக்கினார். அவ்வூரானைவரும் முஸ்லிமானார்கள்.

சரித்திர புராணம்

கலி விருத்தம்.

தீன்முறை நடத்திய திமஸ்கு மன்னவர்
மான்மதங் கமழ்ந்தமெய் நபிக்கு மாசிலாப்
பான்மதிக் கலைகளை பணிபொன் பட்டிவை
கூன்வெறிந் தொறுவினிற் கொடுத்த னுப்பினர்.

வசனம்.

பிறகு ஹபீபு அரசர் தமது இராஜபொக்கிஷத்திலிருக்கும் பலவர்ணப் பட்டாடைகள், இரத்தினங்கள், பொன்னினாலும்

வெள்ளியினாலும் வழங்கும் நாணயங்கள், ஆபரணங்கள் இவைகளில் விசேஷமானவைகளை யெடுத்து, பத்து ஒட்டகங்களில் சுமத்தி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குக் காணிக்கையாக மக்கமாநகரத்துக்கு அனுப்பினார். இவற்றைக் கொண்டு வந்தவர்கள் காடு, மலை, வனாந்தரம் முதலானவைகளைக் கடந்து கடந்து, மக்கமாநகரத்தையடுத்து, அந்நகரத்திற்கு அருகிலுள்ள ஒரு மைதானத்தில் தங்கினார்கள். ஹபீபு அரசர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வரிசை வரவிடுத்திருக்கின்றார் என்னும் சத்தம் அபூஜஹலுடைய காதில் விழுந்தது. இச்செய்தி கேட்டவுடனே அபூஜஹல் புறப்பட்டுப் போய், அந்த வரிசைக் கொண்டு வந்தவர்களை யடுத்து, இதை ஹபீபு அரசர் எனக்கு அனுப்பினார் என்று பலவந்தத்துடன் சொல்லித் தடைபண்ணினான். ஹபீபு அரசர் வரவிட்ட வரிசையைக் கொடுக்க விடாமல் அபூஜஹல் தடுக்கின்றான் என்னும் சங்கதியை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கேள்விப்பட்டு, தோழர்கள் சிலருடன் எழுந்து சென்று விசாரித்தார்கள். அப்போது அந்தப்பாதகன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "இந்த வரிசைப் பொருளுக்கு உடையவன் நானே யன்றி வேறுயாருமில்லை; அரசருக்கு நான் முன்னம் அளித்திருந்த காணிக்கைக்கு பகரமாக அரசர் எனக்குத்தான் அனுப்பினார்" என்று சினந்து சொன்னான். அப்போது அங்கே கூடிநிற்போர் சிலர் அபூஜஹலை நோக்கி, இது முஹம்மது நபிக்கு வந்ததென்றும், அல்லது உனக்குத்தான் வந்ததென்றும் இதைக்கொண்டுவந்தவர்கள் தாமே உண்மை சொல்லுவார்களே அப்படியிருக்க, நீ அதிக்கிரமமாகக் குறுக்கிட்டுத் தடுப்பது நியாயமல்லவென்று பலதரம் விலக்கியும் அவன் கேளாமல், கோபமாய் அவர்களை நோக்கி "ஹபீபு அரசர் விரவிடுத்த இந்த வரிசை இன்னாருக்குத்தான் என இந்த ஒட்டகங்களே வாய் திறந்து சாட்சி சொல்லும்" என்றான். இச்சொல்லைக்கேட்டவர்கள் அனைவரும் "நீ சொன்னது எங்களுக்கு சம்மதந்தான், நீயே இவ்வொட்டகங்களை சாட்சி கேள்," என்றார்கள். அப்போது அபூஜஹல் "இக்காரியத்தை இன்றைக்கு நிறுத்தி வைக்கலாம் நாளையுதினம் இவ்வொட்டகங்களை நான் சாட்சிசொல்லச் செய்கிறேன்" என்று சொன்னான். இச்சொல்லுக்கு நபிநாயகம் ஸல்லல்

லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சம்மதப்பட்டு, தங்கள் தோழர்களுடன் அங்கிருந்து மனைக்கு வந்தார்கள்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காரியங்களை நாளடைவில் நைபுமெய்புமாய்க் கண்டறிந்திருந்தும், மறுபடியும் இவ்வித செய்கையில் வலிய பிரவேசித்துத் தனது அறிவீனத்தை வெளிப்படுத்தி, மேற்படி அற்புதங்களை மேலும் மேலும் மகிமைப்படுத்தா நிற்கும் பாதகனாகிய அபூஜஹல், உடனே தன்னைச் சேர்ந்த காபிர்கள் பலர் திரண்டுவரும்படி கஃபத்துல்லாவில் சென்று, அங்கிருக்கும் விக்கிரகத்துக்குப் பட்டாடை உடுப்பித்து, புஷ்பாதி பரிமளவர்க்கம் கொண்டு சாத்தி, தீபதூபமிட்டு அர்ச்சனை செய்து, கும்பிட்டு விழுந்து எழுந்து நின்று "சுவாமீ! பகையனாகிய முஹம்மது உடைய சொல் பழுதாய், என் சொல் நிறைவேறவேண்டும். ஆனபடியால், ஹபீபு அரசர் வரவிட்ட வரிசை அபூஜஹலுக்குத்தான் என்று அந்த ஒட்டகங்கள் வாய்திறந்து என்னைநோக்கி சொல்லும் வண்ணம் தாங்கள் கிருபை செய்வீர்களாக" என்று தன் இரு கரங்களையு மேந்திக் கண்ணீர் சொரிய அழுது பிரார்த்தித்தான். இவ்வாறு பிரார்த்தித்து வரங்கேட்டு ஆலயத்தைவிட்டு வெளியில் வந்தான்; அப்போது சூரியன் அஸ்தமனமாயிற்று.

அன்று சூரியன் உதயமாய் விடிந்த அதிகாலையில் அபூஜஹல் எழுந்து, தன் இனத்தாரனைவரையும் திரட்டிக்கொண்டு மேற்படி வரிசை வந்திருக்கும் மைதானத்துக்குப் போனான். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் தமது தோழர்களுடன் புறப்பட்டு அங்கே சென்றார்கள். இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காக அநேகர் போய்க் கூடினார்கள் பிற்பாடு, நேற்றையதினம் வழக்குத் தீர்ப்பதற்கு நீதி சொன்னவர்கள் அபூஜஹலை நோக்கி 'ஒட்டகங்கள் சாட்சி சொல்லும்படி யுக்தி சொல்பவர்யார்?' என்று கேட்டார்கள். அப்போது அபூஜஹல் "ஒட்டகங்களைச் சாட்சி சொல்லச்சொல்பவன் நான்தான்" என்றான். அனைவரும், 'நல்லது அப்படியே சொல்' என்று உத்திரவு செய்தார்கள். உடனே அபூஜஹல் அந்தப் பத்து ஒட்டகங்களையும் ஒன்றாகத் திரட்டிக் கொண்டு, அவ்வொட்டகங்களை நோக்கி "ஒட்டகங்களே! நீங்கள் சுமந்து கொண்டு வந்திருக்கும் வெகுமானப்பொருள்களை ஹபீபு அரசர்

யாருக்கு அனுப்பினார்?" என்று கேட்டான். அவன் கேள்விக்கு அந்த பத்து ஒட்டகங்களும் உத்தரம் சொல்லாமல் பதுமைகளைப் போல நின்றன. அதைக்கண்டு அபூஜஹல் மறுபடியும் அவைகளை நோக்கி அவ்வாறே கேட்டான். அதற்கும் பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லாமல் சும்மா நின்றன. அதனால் அபூஜஹல் வீரங்குன்றி, முகம்வாடி மூன்றாந்தரமும் முன் கேட்டபடியே கேட்டான். அப்போதும் அந்த ஒட்டகங்கள் யாதொன்றும் பேசாமல் நின்றன. அங்கு நிற்கும் மத்யஸ்தர்கள் இதைக் கண்டு, ஒட்டகங்கள் சாட்சி சொல்லவில்லையே யெனக் கூச்சலிட்டு கூறி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "முஹம்மதே, தாங்கள் இந்த வொட்டகங்களை சாட்சி பகரும்படி சொல்லுங்கள்" என்றார்கள். அப்போது நபிநாயகமவர்கள் சந்தோஷமுற்று, ஒட்டகங்களை விளித்து "ஒட்டகங்காள்! இப்பொருட்கள் யாருக்கு வந்தன?" என்று வினவினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அமுதவாய் திறந்து கேட்டவுடன் அந்த ஒட்டகங்கள் பத்தும், தன் தன் வளைந்த கழுத்தை நீட்டி வாலையசைத்து, கண்களை விழித்து, வாயைத்திறந்து அறபு பாஷை கொண்டு "அல்லாஹு தஆலாவுடைய றஸூலாகிய நபியே, முஹம்மதே, திமஷ்கு வேந்தராகிய ஹபீபிபுனு மாலிக் மகாராஜா அவர்கள், இந்த வரிசையைத் தேவரீர் தங்கள் சந்நிதானத்திற்குத் தான் அனுப்பினார்கள்" என்றன. இதை காதாரக் கேட்ட ஜனங்களில் அநேகர், இது மகா அற்புதம்! என்று நபிநாயகமவர்களைத் துதித்து ஆச்சரியமுற்றுச் சென்றார்கள். அப்போது அபூஜஹல் வெட்கமுற்று, ஔஷதப் பிரயோகத்தினாலும் மற்ற மணிமந்திரங்களினாலும் தீராத கருமவியாதி கொண்ட சண்டாளன்போல முகங் கருகி, வாய்வெளிறி, நாவுலர்ந்து, தலைகுனிந்து, ஆறாத்துயரமும் அடங்காச் சினமும் கொண்டு தன் இனத்தாருடன் திரும்பிப் போனான். பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த பத்து ஒட்டகச் சுமைகளையும் ஒப்புக்கொண்டு, தங்கள் மாளிகையில் சேர்த்து, அவற்றில் அநேகத்தைத் தோழர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்.

37-வது அத்தியாயம்.

ஈமான் கொண்டவர்கள் ஹபஷா ராஜ்ஜியத்திற்குப் போனது.

தோமா திகளா கியகுபிரர்
    தொடர்பாய் நிதஞ்செய் கொடுவினையால்
ஏமா கரணஞ் சிறந்த நபி
    நபினார் சொற்கேட் டகமகிழ்ந்தே

ஈமா னிலைகொண் டவர்கள்பல
    ரெழிலார் ஹபஷா ராஜ்ஜியம் போய்ச்
க்ஷேமா திகளாய்ச் சுகித்திருந்த
    செய்தி யனைத்துஞ் செப்பிடுவாம்.

இதன் பொருள்

பொல்லாங்குகளுக்கு முதன்மையாகிய காபிரீன்கள் தொடர்ச்சியாக அநுதினமும், முஸ்லிமானவர்கட்குச் செய்கின்ற கொடூரமான துன்பத்தினாலே, சிறப்பாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன் பது திருநாமங்களையுடைய நபிகள்நபினார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்லைக்கேட்டு மனமகிழ்ந்து ஈமானில் கொள்ளுதலென்னும் குர்ஆன் வேதத்தை நிலையாக விசுவசித்தவர்களில் பலபேர்கள், அழகுபொருந்திய ஹபஷா ராஜ்ஜியத்திற்குப்போய், அங்கே, யுண்டிநின்றிகளுக்கு யாதொரு குறைவுகளுமில்லாமல் க்ஷேமமாகச் செழிப்புற்றிருந்த செய்திகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

சரித்திரப் புராணம்.

கலி நிலைத்துறை.

மாசி லானருள் பெருகிய மக்கமா நகரி
லாசி லாநபி தீனிலை நிறுத்துமக் காளிற்
பாச மற்றவ னபூஜஹல் கிளைபல பகுப்பாய்ப்
பூசலிட்டனர் பெரும்பழி யடுகிலை புகுந்தே.

வசனம்.

நபிநாயகம் காத்திமுல் அன்பியா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அல்லாஹு தஆலாவின் ஒப்பற்ற தத்துவத்தைக்கொண்டு தங்கள் தீன் என்னும் பரிசுத்தமான மார்க்கத்தைப் பரப்பி, காபிர்களின் வலிமையையழித்து, நாளுக்குநாள் மேற்

பட்டு வரும் வண்ணம் நடத்தி வந்தார்கள். குறைஷிகள் தாங்கள் தலையிட்ட கருமம் ஒன்றிலாவது வெற்றிபெறாமல் அவமானம் பட்டுக்கொண்டேயிருப்பதால், அபூஜஹ்ல் முதலான காபிர்களுக்கு ரோஷம் பிறந்து, அதிக சினங்கொண்டு, கூட்டங்கூட்டமாய்த் திரண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வழிப்பட்ட அஸ்ஹாபிகள் மேல் அடர்ந்து அடித்தடித்துப் போரிட்டார்கள். போர்செய்யாத நாள் ஒன்றுமில்லை. முன்னிலும் பல மடங்கு அதிகமான கலகம் மக்கமாநகரத்தில் உண்டாயிற்று. கொடிய பாதகர்களாகிய காபிர்கள் ஒருமித்துத் திரண்டு செய்யும் கலகம் பெருகியது. அக்காலத்தில் மக்கமாநகரத்தில் பஞ்சமும் உண்டாயிற்று. சமகாலத்தின் கொடுமையும், பகைவர் விளைக்கும் கலக கிஷ்டமும் ஒன்றாய்ச்சேர்ந்து முஸ்லிமான ஜனங்களுக்கு மிகப் பீடையை உண்டுபண்ணிற்று. காபிர்களால் அடுத்தடுத்து நேரிடும் உக்கிரமான தொந்தரவுகளும், தாங்கமுடியாத உபத்திரவமும் முஸ்லிமானவர்களை நெருக்கி வருத்துவதால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு விசாரம் உண்டாயிற்று. நமக்குச் சேம்படித்த நமது தோழர்களைக் கசிப்புத் தலையெடுத்துப் பிடிக்கின்றது. அன்றியும், அவர்களனைவரையும் அவரவர்களின் சுற்றத்தார் அனைவரும் இரக்கமின்றி வெறுத்து துன்புறுத்துகின்றார்கள். பார்க்குமிடந்தோறும் பகைவர் செய்யும் கிஷ்டம் நாளொருவண்ணமாய் விர்த்தியாகின்றது. “உங்கள் பகைவரை நீங்கள் சங்காரஞ் செய்யுங்கள்” என்று அல்லாஹு தஆலா இடத்திலிருந்து நமக்குக் கட்டளையும் வரவில்லையே, இதற்கு நாம் என்னசெய்வோம் என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடிக்கடி கவலைப்பட்டார்கள். அன்னியர்களாயுள்ள பகையர்மாத்திரமன்றி நெருங்கிய பந்துக்களும் பகைவராய், ஜாதிவிலக்கி, முகத்தில் விழிப்பதற்கும் சகிக்காமல் கட்டுப்பாடு செய்து கொண்டிருப்பதால், நாம் இனி இவ்வூரில் வாசஞ் செய்வது தகாது என நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எண்ணினார்கள். இவ்வெண்ணம் அவர்கள் மனதை வெகுதூரம் தாக்கிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது மூன்றாம் கலீபாவாகிய உதுமானிபுனு அப்பான் றலியல்லாஹு அன்ஹு அவர்களையழைத்து ஒரு தனியிடத்திலிருத்தி, இறந்தகாலவர்த்த மானங்

களையும், நிகழ்கால வர்த்தமானங்களையும், எதிர்காலவர்த்த மானங்களையும் குறித்து நெடுநேரமட்டும் சம்பாஷித்துக் கொண்டிருந்து, தற்காலத்தின் ஸ்திதியைக் கொண்டு, இனிவரப்போகிற பாரதூரமான காரியங்களை யெல்லாம் குறிப்பால் அறிவித்து, முடிவில் “தாங்கள் இனி இவ்வூரிலிருக்க வேண்டாம். தாங்களும் தங்கள் சொற்கேட்கும் பந்துக்களும் புறப்பட்டு ஹபஷ் இராஜ்ஜியத்திற் சென்று, அவ்விராஜ்ஜியத்தின் அதிபதியாகிய நஜ்ஜாஷி மகாராஜா வசிக்கும் இராஜதானியில் போய் அவருடைய அடைக்கலத்திலிருங்கள்” என்றார்கள். இவ்வேவலுக்கு உதுமான் றலியல்லாஹு அன்ஹு சம்மதித்தார்கள்.

நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமக்கு நபிப்பட்டம் இறங்கின ஐந்தாம் வருஷம் றஜபுமாதத்தில் உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்களையும், தமது குமாரத்திகளுள் ஒருவராகிய றுக்கையா றலியல்லாஹு அன்ஹாவையும், நடுஜாமவேளையில் பிறர் அறியாமல் ஹபஷ் இராஜ்ஜியத்துக்கு அனுப்பினார்கள். அப்போது உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் புறப்பட்டவர்கள், றுக்கையா றலியல்லாஹு அன்ஹாவும், வேறுபெண்கள் மூவரும், ஆடவர் பத்துபேர்களுமே. இவர்களனைவரும் புறப்பட்டு, ஹபஷ் இராஜ்ஜியம் சேர்ந்த செய்திகேட்டபின், அபூத்தாலிபு உடைய குமாரர்களிலொருவராகிய ஜஃபருடன் முஸ்லிமான சிலரைச்சேர்த்து, ஹபஷ் இராஜ்ஜியத்துக்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுப்பினார்கள். அவ்விராஜ்ஜியஞ்சேர்ந்தவர்கள் பெண்களும், சிறுவர்களும் அல்லாமல், ஆண்பிள்ளைகள் மாத்திரம் தொண்ணூற்றிரண்டு பேர். இவர்களனைவரும் அவ்வூரில்சேர்ந்து நிர்விசாரமாய் க்ஷேமமடைந்து இருந்தார்கள். அந்த இராஜ்ஜியத்து அதிபதியாகிய நஜ்ஜாஷி மகாராஜா மக்கமா நகரத்திலிருந்துவந்த இவர்கள் அனைவரையும் ஆதரித்து, நல்லுடைகள் நிதிகள் முதலானவை கொடுத்து உபசரித்து, நன்மொழியுடன் களிப்படுத்தினர். முஸ்லிமானவர்களை நஜ்ஜாஷி மகாராஜா ஆதரித்துக் களிப்படுத்தினர் என்னும் சங்கதி அபூஜஹலுடைய காதில் விழுந்தது. அதனால் அவன் சினங்கொண்டு தன் இனத்தாரனைவரையும் அழைத்து ஆலோசித்து தக்க முடிவு செய்துகொண்டு, தனது பொக்கிஷத்தி

உள்ள இரத்தினமாலைகள், பட்டாடைகள், பொன் வெள்ளிப் பாத்திரங்கள், இன்னும் பல அருமையான சாமான்கள் அநேக மெடுத்துப் பொதியாக்கி, அதில் தனது முத்திரையிட்டு, ஒரு ஒட்டகத்திலேற்றி, சர்வகலா பண்டிதர்களில் இரண்டுபேரை யழைத்து அவர்கள் வசம் அவ்வொட்டகத்தை ஒப்புவித்து, தான் நஜ்ஜாஷி மகாராஜாவுக்கு எழுதின ஒரு கடிதத்தையும் கொடுத்து, இந்த வெகுமானங்களில் இன்னது அரசருக்கு இன்னது அமைச்சருக்கு எனச்சுட்டிக் கூறி, இன்னும் சொல்ல வேண்டியவற்றையும் சொல்லி ஹபஷ் இராஜ்ஜியத்துக்கு அனுப்பினான். உடனே அவ்விரு பண்டிதர்களும் புறப்பட்டார்கள்.

மக்கமா நகரத்திலிருந்து புறப்பட்டு அவ்விருவரும் அதிக விரைவாக நடந்து காடு, மலை, வனாந்தரம் அடங்கலையும் கடந்து ஹபஷ் இராஜ்ஜியம் சேர்ந்து, பல நகரங்களையும் கடந்து இராஜதானியில் புகுந்து, அரண்மனையில் சென்று மகாராஜாவுடைய சமுகத்தை யடுத்து நின்று, கொண்டுவந்த காணிக்கையும் வைத்துக் கடிதத்தையும் கொடுத்தார்கள். அப்போது நஜ்ஜாஷி மகாராஜா அக்கடிதத்தை வாசிக்கும்படி கட்டளை பண்ணினார். உடனே அக்கடிதம் அந்த இராஜ சபையில் வாசிக்கப்பட்டது.

ஹபஷி நஜ்ஜாஷி மகாராஜாவுக்கு
அபூஜஹல் எழுதின நிருபம்.

வளம் பொருந்தின ஹபஷ் இராஜ்ஜியத்து அதிபதி யவர்களின் சமுகத்திற்கு, மக்கமா நகரத்து அபூஜஹல் என்னும் அபுல் ஹக்கம் அடிபணிந்து எழுதிக் கொண்ட

விக்ஞாபனம்.

ஐயா!

இந்தச் சிறப்பான மக்கமா நகரத்திலுள்ள ஹாஷிம் என்னும் குடும்பத்தில் நூதனமாய் ஒருவன் தலையெடுத்திருக்கிறான். அவன் நாமம் முஹம்மது. அவன் தான் கற்ற மாயஜாலத்தைக் கொண்டும், மாந்திரீகத்தைக்கொண்டும், பார்ப்பவர் பிரமிக்கதக்க அற்புதங்களை யெல்லாம் விளைவித்து, ஆட்களை மருளச் செய்து, தன் வசம் படுத்துகிறான். முன்னுள்ள வேதாகம சாஸ்திரமனைத்தும் மாறு பட்டன வென்றும், தனக்கொரு புதியவேதமும் புதிய மார்க்கமும் உண்டாயிருக்கின்றன வென்றும், அவைகளே உண்மையானவை

யென்றும், அனைவரும் தனக்கு வசப்படவேண்டு மென்றும் புரளி பண்ணின வண்ணமா யிருக்கிறான். அநேகர் அவனுடைய மாய வித்தையில் மருண்டுபோனார்கள். பூர்வீக முதற்கொண்டுள்ள நமது மார்க்கத்தையும், சுவாமிகளையும், வணக்கத்தையும் பழிக்கிறான். அதனால் எங்களூரில் பாரதூரமான கலகங்கள் விளைந்து, குடும்பங்களுக்குள் பகை முதிர்ந்து, நாளுக்கு நாள் பழிகளும், பாவங்களும் அதிகரிக்கின்றன. இன்னும் அந்த முஹம்மது "விக்கிரக ஆராதனையை நாசமாக்குகிறேன்" என்று துவஜங்கட்டித் துணிந்து நிற்கிறான். இத்தன்மையால் மக்கமா நகரம் செழிப்பற்று உறங்குகின்றது. மகாராஜாவே! அந்த முஹம்மதையாவது ஒரு பங்கில் நல்லவனென்று சேர்க்கலாம்; அவனுக்கு வசப்பட்டவர்களோ, அவனிலும் பலமடங்கு மேற்கொண்ட துஷ்டர்கள். அவர்கள் அடியிட்ட இடமெல்லாம் நாசமாகும். இப்போது அவர்களில் அநேகர் கனம்பொருந்திய தங்கள் இராஜ்ஜியத்தில் வந்து, தங்கள் இராஜதானியில் வாசஞ் செய்கிறார்கள். அந்தச் சிறந்த இராஜ்ஜியத்தையும் பாழாக்குவதற்கு முன் அவர்களைத் தாங்கள் தண்டித்து, தங்களின் ஆணையின் கீழடங்கிய எந்தத் தானத்திலும் இருக்கக்கூடாதென்று துரத்தும்படி, நான் தங்களின் மேலான கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

தங்கள் விதேயன்,

அபுல் ஹக்கம்.

இக்கடிதம் வாசிக்கப்படும்போது அந்த இராஜசபையிலிருக்கும் அனைவரும் கேட்டார்கள். கடிதம் வாசித்துத் தீர்ந்தபின், அங்குள்ளவர்களை நோக்கி மக்கமாநகரத்திலிருந்து வந்த இரண்டு பண்டிதர்களும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பற்றி அதிகமாகப் பழித்துப் பேசினார்கள். அப்போது அச்சபையார் 'முஹம்மது கலகக்காரரே! அல்லது, மஹாத்மாவான தீர்க்கதரிசியோ' என ஆராய்ந்தார்கள். மேற்படி பண்டிதர்களுடைய சொல்லைக் கொண்டு, முஹம்மது கலகக்காரரே என்று முடிவு செய்து கொண்டு, அபூஜஹலுடைய கடிதத்தின் பிரகாரம் நடத்தத்தான் வேண்டு மென்று அனைவரும் ஒருமித்துத் துணிந்தார்கள். அப்போது நஜ்ஜாஷி மகாராஜா தமது புத்திக்

கூட்டைகொண்டு ஆராய்ந்தறிந்து, முஹம்மது நபியை சேர்ந்த ஜனங்களை நாம் சங்கை செய்து ஆதரிப்பதுதான் முறைமையென அவர்களனைவருக்கும் தக்க ருசாக்தாரத்துடன் எடுத்துக்காட்டிச் சொன்னார். பிறகு அவ்விராஜா மக்கமா நகரத்திலிருந்து வந்த பண்டிதர் இருவரையும் நோக்கி "நீங்கள் இனி என் நகரத்தில் இருக்கக் கூடாது. வெகு சீக்கிரத்தில் இவ்வூரைவிட்டு வெளிப் பட்டுப் போய்விட வேண்டும்" என்று கண்டித்து, அபூஜஹல் அனுப்பிய வெகுமானத்தையும் அப்பண்டிதர்க ளிடத்திலே கொடுத்து அபூஜஹலுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார். அவ்விரு பண்டிதர்களும் நாணினவர்களாய் மீண்டார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சேர்ந்தவர்களை ஆதரித்து, அபூஜஹல் அனுப்பிய வெகுமானங்களை வெறுத்துத் திருப்பி யனுப்பிவிட்டாரென்னும் சங்கதியை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு கேள்விப்பட்டு, அந்த நஜ்ஜாஷி மகாராஜாபேரில் சந்தோஷமுற்று அவர் பேரில் பல வாழ்த்துக் கவிதைகள் பாடி, அபூஜஹலுடைய கடிதத்தைக் கண்டித்து அனுப்பினார். இக்கவிதைகளைக் கண்ட போதே நஜ்ஜாஷி மகாராஜா ஆனந்தமடைந்து, அங்குள்ள முஸ்லிமானவர்களை மேலும் மேலும் உபசரித்துக் கனப்படுத்தினார். இவைகளையெல்லாம் அபூஜஹல் கேள்விப்பட்டு துக்கசாகரத்தில் மூழ்கினான்.

இப்படி யிருக்குங்காலத்தில், மக்கமா நகரத்தில் வசிக்கும் குறைஷிகளில் அநேகர் மனந்திரும்பி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு வழிப்பட்டு ஈமான்கொண்டு முஸ்லிமானார்கள். மக்கமா நகரத்திலிருக்கும் அதிக பாகத்தார் முஸ்லிமானார்கள் என்னும் சமாசாரம் ஹபஷ் இராஜ்ஜியம் வரையும் பிரஸ்தாபமாயிற்று. அப்போது அங்கிருக்கும் முஸ்லிமானவர்களில் சிலர் திரும்பிவர மனப்பிரியமின்றி அங்கேயே யிருந்தார்கள்; சிலர் அச்சமின்றித் திரும்பினார்கள். ஹபஷ் இராஜ்ஜியத்திலிருந்து திரும்பி மக்கமா நகரத்துக்கு வந்தவர்கள், உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களுடன் முப்பத்தி மூன்று பேர்களுமே. இவர்களுடன் றுக்கையா றலியல்லாஹு அன்ஹாவும் வந்தார்கள். இவர்களனைவரும் வரும்பாதையில் அஞ்சினவர்களாய், இரகசியத்திலும் பிறருடைய அபயத்திலுமாகவே மக்கமா நகரம் வந்து

சேர்ந்தார்கள். இப்படி வந்தவர்களில் அபூஸல்மா என்பவரொருவர் மாத்திரம் தமது சொந்த இடத்தில் போய் இராமல், அபூத்தாலிபு உடைய மனையில் போயிருந்தார். அப்போது அபூஜஹலும் அவனிடமிருக்கும் காபிர்களும் ஒன்றுகூடி வந்து, அபூத்தாலிபை யடுத்து "அபூத்தாலிபே, நீர் எங்கள் பகைவனாகிய முஹம்மது என்பவனைத்தான் சேர்த்து வைத்துக்கொண்டீர். இப்போது அபூஸலமா என்பவனையும் உமது மனையில் சேர்த்து வைத்திருப்பது நியாயமல்ல. ஆனபடியால் நீர் அவனைத் துரத்திவிடும். இல்லாவிடில் நாங்கள் திரண்டு ஆயுதபாணிகளாய் உம்மை யெதிர்த்துத் தாக்கி, இவ்வூரிலிருக்க வொட்டாமல் உம்மையும், உமது இனத்தாரையும் துரத்திவிடுவோம்" என்று வற்புறுத்தி சொன்னார்கள். இவர்கள் இவ்விதம் வந்து உக்கிரத்துடன் சொல்லுவதை, அபூதாலிபு உடைய சகோதரனாகிய அபூலஹபு என்பவன் கேள்விப் பட்டு, அப்பகையர்களை யடுத்து "நீங்கள் எனது தமையனுக்குத் தீங்குவிளைக்கத் துணிவது எனக்கு மனஸ்தாபத்தைத் தரும். ஆகையால் நீங்கள் என் தமையனை அணுகாமல் விட்டுவிட வேண்டும். இல்லாவிடில், இப்போதே நான் முஹம்மது இடம் போய் சேர்ந்துகொண்டு, அவருடைய மார்க்கத்தைப் பலப்படுத்துவேன்" என்றான். அபூலஹபு சொன்ன இச்சொல்லைக் கேட்ட அபூஜஹல் முதலான பகைவர் அனைவரும் அஞ்சி, பதில் பேசத் தைரியமற்று திரும்பிவிட்டார்கள். காபிர்களுடைய அதிக்கிரமம் வரவரக் குறைந்துகொண்டே வந்தது. ஆயினும், கலகமும், பயங்கரமும், தீங்கும் ஒழியவில்லை. முஸ்லிமானவர்கள் தாங்கள் கொண்ட கொள்கையைப் இடை யூறின்றி நடத்திவந்தார்கள்.

நபிப்பட்டம் இறங்கின ஆறும்ஆண்டு பிறந்தது. அக்காலத்தில் தீன் என்னும் பரிசுத்தமான மார்க்கத்தை எங்கும் விளக்கி பரத்தி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சந்தோஷத்துடன் இருந்தார்கள்.

39-வது அத்தியாயம்.

மானுக்குப் பிணை நின்றது.

கொச்சகக் கலிப்பா.

வானுக்கும் புவிக்கும் புக ழாகவு
    மாமறைக்கு மணிவிளக் காகவுந்
தீனுக்குந் துரை யாகவுங் காபிர்கள்
    செய்கையாவுஞ் சிதையவுஞ் செப்புமீ
மானுக்குங்குரு வாகவும் வந்திடும்
    வள்ளலான முஹம்மது நந்நபி
மானுக்குப் பிணை நின்ற சரித்திர
    வண்மையாவும் வழுத்திடு வாமரோ.

இதன்பொருள்.

வானலோகத்திற்கும் பூலோகத்திற்குங் கீர்த்தியாகவும், மாட்சிமையான புர்க்கான் வேதத்திற்கு இரத்தின மணி விளக்காகவும், தீனுல்இஸ்லாம்மார்க்கத்திற்குத் துரையாகவும், காபிரீன்கள் செய்யும் செயல்கள் யாவுங் கெட்டுப்போகவும், சொல்லுகின்ற ஈமானென்னும் மனோவுறுதிக்குக் குருவாகவும் வந்திடும், வள்ளலான நமது முஹம்மது நபிநாயகம், காட்டினிடத்தில் வேடன் பிடித்துக் கட்டிப்போட்ட ஓர் பெண் மானுக்குப் பிணைநின்று அதனை மீட்டிவிட்ட சரித்திரப் புகழ்யாவையுஞ் சொல்லுகின்றோம்.

சரித்திரப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குயினிழல் பரப்பச் செவ்விக் கொழுந்தொடை நறவஞ் சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி வளர்ந்த திண்புயத்து வள்ளல்
செயிரது மறையின் றீஞ்சொற் செழுமழை பொழிந்து தீனின்
பயிர்வளர்ந் தேறச் செய்து பரிவுட னிருக்கு நாளில்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களின் தீன் என்னும் ஒப்பற்ற மார்க்கப்பயிரை நாளுக்குநாள் விர்த்தியாகும் வண்ணம் அதிக பிரயாசையுடன் பாடுபட்டு தங்கள் சத்துருக்களால் நேரிடும் கடும் கிலேசங்களையெல்லாம்

பொறுத்து, அல்லாஹு தஆலாவின் பேரருளால் பரப்பிக்கொண்டு வந்தார்கள். வரவர மக்கமா நகரத்தார் அநேகர் மனந்திரும்பி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டே வந்தார்கள். இப்படியிருக்குங் காலத்தில், ஒருதினம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் தோழர்களென்னும் அஸ்ஹாபிகள் புடைசூழ எழுந்து மக்கமாநகரத்தைவிட்டு வெளிப்பட்டு, சிறுகுன்றின் பக்கத்தின் கானுவனகத் தருக்காடர்ந்த ஒரு சோலையில் சென்றார்கள். அந்தச்சோலையானது, மலையிலிருந்து பாயும் தெண்ணீர் அருவியையும், கனிகளையும், மலர்களையுஞ் சொரியாநிற்கும் விருக்ஷங்களையும், பலவன்னப் பக்ஷிசாலங்கள் ஒலிக்கும் பேரொலியையும், வண்டுகள் பாடும் இசையையு முடையதாய், ஒரு குன்றின்மேல் அமைந்திருந்தது. இவ்விதம் அலங்காரமமைந்த அச்சோலையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நடந்து போகிறபோது அங்கே ஒரு வேடனைக் கண்டார்கள். அவ்வேடன் வனத்தில் சஞ்சரிக்கும் விலங்குகளைக் கொன்று, அவற்றின் தசைகளை வகிர்ந்து கோலிற்கட்டித் தீயிலிட்டுத் தன்னந் தனியேயிருந்து தின்று தன் உடலை வளர்க்கும் தொழிலில் கொஞ்சமும் சளிக்காதவன். அவன் கற்ற கல்வி இதுவேயன்றி, மற்றுலகவிஷயங்களில் ஒன்றுவது அவனுக்குத் தெரியாது. பிரதிதினமும் வனவிலங்குகளைக் கொன்று தின்னும் அவன், காலில் செருப்பும் கையில் வலையும், தோளில் வில்லும், இடையில் வாளும், ஒருபாரிசத்தில் மான் முதலியன பிடிக்கும் வலையும், மற்றொரு பாரிசத்தில் பறவைகள்பிடிக்கும் கண்ணியும் கொண்டு, தன்தலைமயிரை விரித்தவனாய் வியர்வை சிந்தும் வண்ணம் அலைந்து திரிந்தான். அவன் வனத்தில் வலை வீசிப் பெண் மான் ஒன்றைப்பிடித்துக் கட்டி வைத்துக்கொண்டு நின்றான். அவ்வேடனைக்கண்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அங்கே இதழ்கள் விரிந்து தேன்களை யொழுக்கும் மலர் செறிந்த தருக்களையாவது, குன்றுகளிலிருந்து பாய்ந்து ஒலித்தோடும் தெண்ணீரருவியையாவது, குளிர்ந்த விருட்ச நிழலில் நின்று மரகதச்சிறகை விரித்தாடும் மயில்களையாவது, கூய்குயில் கூட்டத்தையாவது, ஈச்சமரங்கள் சொரியாநிற்கும் கருங்கனித் திரளையாவது, மற்ற ஒரு பொருளையாவது திரும்பிப் பாராமல் அவ்வேடனிடத்தில் கட்டுண்டு கிடக்கும் மானைப் பார்த்

துக் கொண்டே போனார்கள். கிருபாநோக்கம் குடிகொண்ட கண்களும், பிரகாசம் ஒழுகும் முகாரவிந்தமும், கஸ்தூரி பரிமளிக்கும் திருமேனியுமுள்ள ஒருவர், கருமேகங் குடையிட நடந்து தன்னை நோக்கி வருவதை அந்த மான்கண்டு, இவர் அல்லாஹுத் தஆலாவுடைய றஸூலாகிய முஹம்மது நபியென்றறிந்து 'இப்போது முஹம்மது நபி இங்கே வந்து விட்டார்கள். இனி இந்த வேடனால் யாதொரு ஆபத்தும் நமக்கு நேரிடாது. தடையின்றி நாம் நம் இனத்துடன் போய்ச் சேர்ந்து கண்டுகளிக்க மீட்சி பெறுவோம்' எனத் தன் மனத்தோடு சொல்லிக்கொண்டு, தன் கண்களை யிமைக்காமல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பார்த்தவண்ணமாயிருந்தது. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்தவிடத்தில் நெருங்கித் தங்கள் அஸ்ஹாபிகள் சூழநின்று, அங்கே நெருப்பு மூட்டி ஊனைவாட்டித் தின்று கொண்டிருக்கும் அந்தவேடனையும், கட்டுண்டு கிடக்கும் மானையும் நோக்கினார்கள். அந்தப் பெண்மானானது, வெள்ளியையுருக்கி வார்த்தாற்போல மடிமீறி யொழுகும் பாலுடன் அழுது கெட்டு விர்த்து, கால்களைச்சேர்த்து இறுகிக்கட்டிய கட்டுடன் கிடந்து வருந்துவதை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நோக்கி, அதன் பேரில் இரக்கமுற்று நின்றார்கள்.

மன இரக்கத்துடனும், கிருபா நோக்கத்துடனும் தன்னையடுத்து நின்று பார்த்துக்கொண்டிருக்கும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அம்மான் பார்த்து, தனது வாலையசைத்து, கழுத்தை நீட்டி, வாயைத்திறந்து "அஸ்ஸலாமு அலைக்கும் யாறஸூலல்லாஹ்" என்று சலாம் சொல்லிவிட்டு, மறுபடியும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி சொல்லியதாவது:—

சீறாப் புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வல்லவ னுண்மைத்தூதே மன்னுமா நிலத்தின் மாந்த
ரல்லலை யகற்றி வேதத்தறநெறி பயிற்றிச் சொர்க்கத்
தில்லிடை புகுத்தப் பூவி னிடத்தினி லுதித்த கோவே
யொல்லையி னெனது சொற்கேட்டு வந்தரு ளளிக்க வேண்டும்.

வசனம்.

"அல்லாஹுத் தஆலாவுடைய றஸூலே, நபிமார்களுக்கு நாயகமே, முஹம்மதே, தாங்கள் என்னுடைய மொழியைக் கேட்டு என்மேல் இரங்கிக் கிருபை செய்யவேண்டும். நானும் என் கலையும் ஒன்றாய்க்கூடி, எங்கள் ஜாதியாகிய அன்னிய மான், கலை, கன்றுகளோடு சேர்ந்து நின்று, வனவிலங்குகளுக்கு இலக்காகாமல் உயிரோம்பி, இம்மலைச்சாரலில் அநேக நாள் வரையில் அச்சமேயின்றி ஜீவித்திருந்தோம். அக்காலில் என் வயிற்றில் ஒரு கன்று பிறக்காத மனக்குறையால் விசாரமுற்று, நானும் என் கலையும், தேவரீர் ஆகிய தங்கள் பாதாரவிந்தங்களை இருதயத்தில் நிறுத்தித் தியானித்தோம்; அப்போது நான் ஒரு கன்றை ஈன்றேன். என்னுயிரும், என்கலையுயிரும் ஒன்றாய் வந்ததையொத்த அக்கன்றும், கலையும், நானும் ஒன்றாய்க்கூடி, வேறு மான்களுடன் சேர்ந்து மலையடிவாரத்தில் மேய்ந்து விளையாடிக்கொண்டு நின்றோம். அந்த வேளையில், நாங்கள் மேய்ந்து கொண்டு நின்ற இடத்துக்கு எதிராக மேற்பக்கத்திலுள்ள மலைச்சிகரத்தில், எங்களுக்குப் பகையாகிய வேங்கையின் கர்ச்சனையானது, திகிலுண்டாக்கத்தக்கவிதமாய் இடிபோல் குமுறிக்கேட்டது. வேங்கை குமுறின அவ்வொலியைக்கேட்ட மாத்திரத்தில் நாங்கள் அனைவரும் அஞ்சித் தறிகெட்டுச் சிதறினோம். என் கலையும் கன்றும் போனவழி எனக்குத் தெரியாது. நான் போனவழி அவைகளுக்கும் தெரியாது. இப்படி ஒன்று போனவழி ஒன்றறியாமல் சிதறுண்டபின், நான் மாத்திரம் சுழல்காற்றிற் சிக்குண்ட துரும்பைப் போல மனம் சுழன்று, தருக்களடர்ந்த வேறொரு வனத்திற்குள் நுழைந்தேன். அவ்வடவியில் நான் கலங்கி நின்று வருந்தும் வேளையில் இவ்வேடன் என்னை நெருங்கி வந்து தன்வலையை என்பக்கம் வீசினான். நான் புலியின் கர்ச்சனையைக்கேட்டு மனநிலை தளர்ந்து திகில் பிடித்துத் தறிகெட்டோடி மயங்கி நின்றபடியால், இவன் வீசிய வலையில் இலகுவில் சிக்குண்டேன். நான் வலைக்குள்ளே மாட்டிக்கொண்டதைக்கண்ட இவ்வேடன் சந்தோஷமுற்று, என்னை நோக்கி "என் உடலைவருத்தும் பசிக்கு நல்ல இரையாக நீ இன்று எனக்கு அகப்பட்டாய்" என்றுகூறி, என்னை நிலத்திற்கிடத்தி, தனது ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு தான் கொண்டுவந்திருக்கும் கயிறுகளில் திறமுள்ள ஒரு கயிற்றை யெடுத்து என் நான்கு

கால்களையுஞ் சேர்த்து இறுக்கிக்கட்டி, என்னை வலையைவிட்டு வெளிப்படுத்தித் தன் தோளின் மேல் சுமந்து கொண்டு நடந்து வந்து, இந்த இடத்தில் இறக்கி வைத்திருக்கின்றான். நான் இவ்விதம் கட்டுண்டு, மனக் கவலையில் உழன்று நெட்டுயிர்த்து, உயிரற்ற பாவனையிற் கிடக்கும் வேளையில், தேவரீராகிய தங்களின் பாதார விந்தங்களைத் தரிசிக்கப் பெற்றேன். அப்போதே என் மனத்துயர் தொலைந்தது. நபியே, நான் விலங்கினத்தில் மிகத் தாழ்ந்த விலங்காயிருந்த போதிலும், எனது வசனங்களைத் தாங்கள் சிந்தை கூர்ந்து கேட்பீர்களென்று திடங்கொண்டிருக்கிறேன். ஆனால், நான் இந்த வேடனுடைய கையால் இறந்து போவேனே வென அஞ்சி இவ்வளவு தூரம் தங்களிடம் முறையிடவில்லை. உலகிலுள்ள சர்வஜீவன்களும் இறந்து போவது நிச்சயம். நானோ பிறந்து நீண்ட காலம்வரையும் ஒரு கலையுடன் மருவியிருந்து கன்றையுமீன்று, எல்லா இன்பங்களையும் அநுபவித்துவிட்டேன். இனி மேலும் நான் ஜீவித்திருக்க வேண்டுமென்பதில்லை; சமீபகாலத்தில் நான் இறந்து போவதே உத்தமம். அன்றியும், அந்தகாரமான வனத்திலும், வனாந்திரத்திலும், மலையிலும் வருந்தப்பட்டு அவக்கேடாய் மரணமடையாமல், தங்களுடைய பாதாரவிந்தத்தைத் தரிசித்து, இவ்வேடனுடைய உதராக்கினி யென்னும் பிணி தீரும்படி நான் மரணமடைவதில் புண்ணியமுண்டு. ஆகிலும் ஒரு விஷயம். அஃதாவது:—என் கலை இதுவரையும் என்னைத் தேடி எந்தெந்த மலைகளிலும் வனங்களிலும் ஓடித்திரிந்ததோ, அல்லது உயிருடன் இருக்கின்றதோ தெரியவில்லை. அது உயிருடனிருந்தாலும், ஒருகாய்ந்த புல்லையும் முகர்ந்து பாராது. தண்ணீர் பருகாது; ஒரு இடத்திலும் நிலைகொள்ளாது. உடல் வருந்தி உள்ளங்கலங்கி அழும். அது படும் துயரத்தை என்னால் சொல்லி முடியாது.

அன்றியும், என் கன்றையீன்று இன்றோடே மூன்றுதினங்கள் தான் ஆயின. பிறந்து மூன்று நாளான என் இளங் கன்று புல் பூண்டுகளைக் கடித்து மேயவும், தண்ணீர் பருகவும் இன்னும் பழகவில்லை. தமியேனுடைய மடிசுரந்து பாலும் சுரு நாவில் வழிந்தோடுகின்றது. ஆனதால், என் கன்று என்னபாடு

படுகின்றதோ தெரியவில்லை. அக்கன்று கலையுடன் கூடிக் கொண்டதோ? அல்லது, தறிகெட்டுச் சிதறிப்போனவிடத்தில் கொடியவேங்கைக்கு இரையாயிற்றோ! என்னைத்தேடி மரச்செறிவுகளிலும் போதும்புகளிலும் ஓடித்திரிகின்றதோ? பசியின் கொடுமையால் வாட்டமுற்று இறந்ததோ! அல்லது எங்கேயாவது இளைத்துவிழுந்து கிடக்கின்றதோ—இன்னபடிதான் என்று நான் தெரிந்துகொள்ளக் கூடவில்லையே. நபியே, தற்சமயம் இவ்வித மனக்கவலைதான் என் மனதை உருக்குகின்றதல்லாமல், இவ்வேடன் என்னைக் கொன்று விடுவானே யென்று நான் வருந்தவில்லை. இது உண்மை. இப்போது நான் இவ்வேடனுடைய பசியைத்தீர்த்து வைப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால், தாங்கள் எனக்காக இந்தவேடனிடத்தில் பிணைபட்டுக் கொண்டு என்னை யவிழ்த்து விடவேண்டும். அப்படி விடுத்தால், நான் என் கலையைத் தேடிப்போய்க் கண்டு பிடித்து அதன் விசாரத்தை மாற்றி, என் கன்றைக்கண்டு அதன் பசிதீரப் பாலூட்டி, என்ஜாதிகளான மான்களுக்குச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி. என் கலையையும், கன்றையும் அவற்றோடு சேர்த்துவிட்டு, அதிக விரைவாய் இங்குவந்து சேர்கிறேன். அதன்பின் தாங்கள் என்னை வேடனிடம் ஒப்புக்கொடுத்து விட்டுத் தங்கள் பிணையை நீக்கிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிற்று.

இவ்விதம் மான் சொன்னவுடன் நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அதன்மேல் இரக்கமுற்று, அங்கு நிற்கும் வேடனை நோக்கி "இந்தமான் வனத்திற்சென்று அதன் கன்றுக்குப் பாலூட்டி மீண்டு இங்கே வரும்; அதுவரையும் அதற்காக நான் பிணை நிற்கிறேன்; ஆகையால் அதை அவிழ்த்து விடு'' என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்ன இச்சொல்லைக் கேட்டவுடன் அவ்வேடன், புயங்கள் குலுங்கச்சிரித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "தாங்கள் நன்று சொன்னீர்கள்! கற்களும் முட்களுஞ் செறிந்த வனத்தில், வெய்யிலின் வெப்பத்தைப் பொறுத்து உச்சி வியர்வை உள்ளங்கால் வரையும் ஒழுகி களைப

ஓடித்திரிந்து, ஒன்றுங் காணாமையால் மனங் குலைந்து, பசியின் வேதனை சகிக்கக் கூடாமல் வருந்தித் திரும்பும் வேளையில் இந்த மானைக்கண்டு வலைவீசிப் பிடித்தேன். தேகபுஷ்டியுள்ள இந்த மானின் கொழுந் தசையினால் பசி தீரும் என்று எண்ணிச் சந்தோஷத்துடன் இருக்கிறேன். அப்படியிருக்க, என் சந்தோஷம் தொலைந்து சஞ்சலம் விளையத்தக்க வார்த்தையைத் தாங்கள் சொல்ல வந்தீர்கள். தாங்கள் சொன்ன இச்சொல் யாருக்குத்தான் சம்மதமாகும்? காட்டில் பிடிபட்டமானை அவிழ்த்து அக்காட்டில் விட்டால், அந்தமான் மறுபடியும், திரும்பி பிடித்தவனிடத்தில் வருமோ? இப்படி எந்தக் காலத்திலாவது நிகழ்ந்த துண்டா? அல்லது சாஸ்திரங்களிலாவது சொல்லியிருக்கின்றதா? தாங்கள் இன்னுமொருதரம் இச்சொல்லைச் சொல்லாதீர்கள்" என்றான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவனை நோக்கி "நீ என் ஆலோசிக்கின்றாய்? என்னுடைய பிணையில் போகும் இந்த மான் ஒரு நாழிகைப் பொழுதில் மீண்டு உன்னிடம்வரும். அப்படி வராவிட்டால் உன்பசி தீரும்பொருட்டு ஒருமானுக்குப் பதிலாக இரண்டு மான்களை நானே உனக்குத் தருகிறேன்நீ இதற்காக அஞ்சாதிரு" என்றார்கள். இச்சொல்லைக் கேட்ட அவ்வேடன், 'இவர் கூறுவது மிகப்புதுமையாய் இருக்கின்றதே. இதை நாம் கண்டறியத்தான் வேண்டும். அப்படிப் போன மான் வராவிட்டால் ஒன்றுக்கு இரண்டு தருவதாக ஒப்புக்கொள்ளுகிறாரே நமக்கென்ன பயம்!' எனத் தன் இருதயத்தில் எண்ணிக் கொண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "உயிர்கள்மேல் என்னளவும் இரக்கமின்றி கொன்று பக்ஷிக்குந் திருட்டு சித்தத்தையுடைய வனவேடர்களிலுள்ளவன் என என்னைத் தாங்கள் அறிந்திருந்தும், இவ்வாறு விருப்பங்கொண்டீர்கள். ஆகையால், நான் தங்கள் வார்த்தைக்கு மாறுபேசுவது ஒழுங்கல்ல. தங்கள் சொல்லுக்கு இசைந்தேன். தாங்களே அந்த மானை அவிழ்த்துவிடுங்கள்" என்றான். உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மான்பக்கம் நெருங்கி, அதன் கால்களில் பிணித்திருந்த கயிற்றை அவிழ்த்து "மானே, உன்கன்றுக்குப் பாலூட்டி மீண்டுவா" என்று சொல்லி விடுத்தார்கள்.

சீறாப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

இருந்தகால் மடக்கி நீட்டி யெழுந்துடன் முறுக்கு நீக்கி
மருந்தெனு மமுதந் தீஞ்சொன் முஹம்மதின் வதன நோக்கிப்
பொருந்திய கலிமா வோதிப் புகழ்ந்துடற் பூரிப்போடுந்
திருந்தவே டனையும் பார்த்துச் சென்றது கானின்மானே.

வசனம்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், கட்டுண்டு கிடந்தமானை அவிழ்த்து விட்ட மாத்திரத்தில் அது நான்கு கால்களையும் மடக்கி நீட்டி யெழுந்து, சரீரத்தின் முறுக்குத் தீர நெளித்து நின்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்று கலிமா சொல்லி மகிழ்வுடன் வேடனையும் திரும்பிப் பார்த்து விட்டு, வனத்தை நோக்கிச் சென்றது. தன் மடிக்கண் திறந்து அமுதம் சிந்தும் வண்ணம் வனத்துட்சென்ற மான், கலையையும் கன்றையும் தேடி ஓடியோடித்திரிந்து, ஒரு பக்கத்திலும் அவைகளைக் காணாமல் மனமுருகிக் கலங்கி நிற்கையில், ஒரு கற்செறிவுள்ள தானத்தில் தன் கலையும், கன்றும் நிற்கக்கண்டு, அதிக ஆவலுடன் அவற்றையடுத்து கலையை நெருங்கி அதன் துயரத்தை மாற்றி விட்டுக் கன்றையடுத்து அணைத்து முகந்து வாலையசைத்துப் பாலூட்டிற்று. கன்றின் பசி தீரும்படியும் தன் வேட்கை தீரும்படியும் பாலூட்டித் தீர்ந்தபின், தன் கலையையும், அங்கு நிற்கும் மற்ற மான்களையும் நோக்கி, தான் வேங்கையின் ஓசைக் கேட்டு தறிகெட்டு ஓடினபின் வேடன் வலையில் சிக்குண்டது முதல், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிணைப்பட்டு விடுவித்து விட்டது பரியந்தம் நிகழ்ந்த வர்த்தமானங்கள் அனைத்தையும் விவரத்துடன் சொல்லிக் காட்டிற்று. நான் சொன்ன சொற்களில் எனக்காக நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிணையாய் நின்று மீட்டுவிட்டிருக்கின்றார்கள். நான் போய் அவர்கள் பிணையை நீக்கிவிடவேண்டுமென்று சொன்னது. இச்

சொல் கலைமானுடைய காதில் விழுந்தபோதே அது மிகக்கலங்கி, மனஞ்சோர்ந்து பெருமூச்செறிந்து, தன் பெண்மானை நோக்கி "என் உயிரே, நீ என்ன வார்த்தை பேசுகின்றாய்! பகைவராகிய மானிடரைகளில் நின்று, நம்மைப்போன்ற ஒருமான் மீண்டுவந்தால், மறுபடியும் தன் பிராணனைப் பறிகொடுக்கும்படி அந்த மானிடர் வசம் போய்ச் சேருமா! இது எப்போதாவது எங்கேயாவது நடந்திருக்கின்றதா? நீ மதிகெட்டு மற்றொன்றும் பேசாதிரு. என்னையும் இளங்கன்றையும், இனத்தையும் வெறுத்துவிட்டுப் போகவா துணிந்தாய்? போகாதே" என்று தடுத்தது. இவ்வாறு தடுத்தவுடன் பெண் மான், கலைமானை நோக்கி "என்பிராணநாதா, எனக்காகவேண்டி வேடனிடத்தில் பிரயாசையெடுத்துப் பிணைப்பட்டு நிற்கும் பிணைக்காரர் அல்லாஹு தஆலாவுடைய றஸூல்மார்களுக்கு நாயகர் சராசரம் அனைத்தையும் காக்கும் தத்துவமுடையவர். அந்த நபிக்கு நிகர் யாருமில்லை. நான் இப்போதே போய், என் ஜீவனை வேடனிடம் ஒப்புவித்து அந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிணையை மீட்கவேண்டும். இல்லாவிடில் கொடிய நரகத்தில் விழுந்து மாறாதவேதனை அனுபவிக்க நேரிடும். இவ்வித மாறுபாடு நான் செய்வேனேயானால், தற்காலம் உயிரைக் காத்துக்கொள்ளுவதென்று தானே அர்த்தம்? வேறொன்றும் இல்லையே. அதனால் பிந்திவரும் கஷ்டநஷ்டங்கள் எம்மட்டோவுண்டு. அப்படி நான் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மாறுசெய்து, தற்காலம் ஜீவனைக் காத்துக்கொண்டாலும், எத்தனை யாண்டுகள் வரை தான் இருப்பேன்? எப்போதாவது ஒரு காலத்தில் வனவேங்கைக்கு இரையாய் மாண்டுபோவது உண்மை. அப்படியிருக்க நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மாறுபண்ணுவது நியாயமாகுமா? அந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முன் ஷாம் இராஜ்ஜியத்துப் பாதையில் பிரவாகத்தில் நடந்து போகிறபோது அவர்களின் சொல்லை மீறின வொருவன் சுழியிலமிழ்ந்திறந்து போனானே. அதென்ன நமக்குத்தெரியாதா? இந்த உலகந்தான் அறியாதா? இவைகளை அறிந்திருந்தும், என்னைப் போக வேண்டாமென்று விலக்குவது தகுமா? நான் போகவேண்டும்" என்று சொல்லி, தன் இனமான்களுக்கெல்லாம் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிவிட்டு தன் கலைக்குத் தேறுதல் கூறிக் கன்றைக் கலையிடம் ஒப்புவித்து, மறு

படியும் அதற்குப் பாலூட்டி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வருவதற்காகப் புறப்பட்டது.

அந்தப்பெண்மான் இவ்விதம் தன் கலையையும், கன்றையும், இனத்தையும் விடுத்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி வனங்களைக்கடந்து நடந்துவரும்போது, அதன் கன்றானது துள்ளித் துள்ளித் தாய்மானுக்குமுன் ஓடிவந்து அது தடுத்தும் போகாமல் நின்றுகொண்டு, தாய்மானை நோக்கி "நீ நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதாரவிந்தங்களை தரிசித்துக் கலிமா சொல்லி, ஈமான்கொண்டு மோக்ஷமடைவது போல நானும் அடையவேண்டும். அப்படிக்கில்லாமல், நான் உன்னை யிழந்துவிட்டு நற்கதியன்றி வீணே காலங்கழிப்பதில் பிரயோஜனமென்ன? ஆகையால், நானும் உன் கூடவே வருவேன்" என்றது. இதைக்கேட்ட தாய்மான், இது நாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தரிசித்த பலன். நமது கன்று கொண்ட கோரிக்கையைத் தடுக்காமல் கூட்டிக் கொண்டு போவதே உத்தமம். அதனால் நமக்கு நற்பேறு கிடைக்கும் என எண்ணிக் கொண்டு, தன் கன்றுடன் வனங்களைக்கடந்து வேடனிருக்கும் தானத்தை நோக்கி நடந்துவந்தது. தாயும், கன்றுமாக வருவதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்டு அகங்களித்து, வேடனை விளித்து "இதோ பார்த்தாயா! ஒரு மானுக்கு இரண்டு மான் உன்னிடம் வருகின்றன" என்றார்கள். இதைக் கேட்ட வேடன் மானைக் கண்டு ஆனந்தமுற்றான். பிறகு, கன்றும், தானுமாக வந்த மான், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சலாம் சொல்லிப் பாதாரவிந்தங்களில் விழுந்து பணிந்து "யாறஸூலல்லாஹ்! பாவியாகிய என்னை வேண்டி வேடனிடம் பிணைப்பட்ட தங்கள் பிணையை மீட்டிக்கொள்ளுங்கள்" என்றது. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வேடனை நோக்கி "இதோ மானை ஒப்புக்கொள் என் பிணையை விட்டுவிடு. உன் பசி தீரும் வண்ணம் கொன்று தின்னு" என்றார்கள். அப்போது அந்த வேடன், இவர்கள் அல்லாஹு தஆலாவுடைய உண்மையான றஸூல்தான் என்று இருதயத்தில் உறுதிகொண்டு, ஆனந்தபரவசமுற்று, வேறொன்றுஞ் சொல்லமாட்டாதவனாய்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாத பங்க யத்தைப் போற்றிப் பருவர லகற்றி யாதி
நாதுவ ரிவரே யல்லா விலையென மனத்திற் பூரி
வேதநா யகமே யென்பால் விருப்புறுங் கலிமா தன்னை
யோதுமென் றிருகை யேந்தி யுவந்து நின்றுரைப் பதானுன்.

கருமுகிற் கவிகை வேந்த கானக வேடனென்று
முருவினன் விலங்கோ டொப்பே னுள்ளறி வுணர்வு மில்லேன்
றெருளுறப் பாவி யென்னைத் தீனிலைக் குரிய னென்னப்
பெரிதளித் திடுதல் நுந்தம் பெருமையிற் பெருமை யென்றான்.

வசனம்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாத தாமரைகளில் விழுந்து, கண்ணீர் சொரிய மனம் உருகி, "நபியே, தங்கள் அடியேனாகிய நான் வனவேடர் குலத்திலுள்ளவன். அன்றியும், நன்மையிது, தீமையிது எனப் பகுத்தறிய மாட்டாத மிருகத்துக்கு சமானமானவன். இவ்விதமான என்னைப் பாவச்சிறையிலிருந்து மீட்டு இரட்சித்து, தங்களின் ஒப்பற்ற மார்க்கத்தானாகச் செய்ய வேண்டும். தங்களுடைய பரிசுத்தமான கலிமாவை எனக்குச் சொல்லிக் கொடுங்கள்" என்றான்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், இவ்வாறு பிரார்த்தித்து நிற்கும் வனவேடனுக்குக் கலிமா சொல்லிக் கொடுத்தார்கள். உடனே அவ்வேடன் கலிமா சொல்லி முஸ்லிமானான். பிறகு அவ்வேடர் அங்கு நிற்கும் மானை நோக்கி "மானே, உன்னால் எனக்கு கிடைத்த நற்பேறுக்கு அளவில்லை. என் பாவங்களனைத்தும் தொலைந்தன. கொலைத் தொழிலை விட்டு விலகினேன். இனி எனக்குக் குறை யொன்றும் மில்லை. நீயும் சஞ்சலப் படாமல் கன்றுடன் போய்க் கலையோடு சேர்ந்து வாழ்" என்றார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் மானை நோக்கி, வனத்திற் சென்று இனத்துடன் வாழ உத்தரவு செய்தார்கள். அப்போது மானும், கன்றும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து நின்று புகழ்ந்து, வேடரையும் நோக்கி மகிழ்வுடன் புகழ்ந்து விட்டு

வனத்துட் சென்றன. பின்பு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுத் தங்களின் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த வேடரும் ஒப்பற்ற மனப்பாக்கியத்துடன் தமது ஜாகை போய் சேர்ந்தார். இந்த வேடரைப்பற்றி, சீறாப்புராணஞ் செய்த வித்துவ சிகாமணியாகிய உமர் புலவர் அவர்கள் தமது புராணத்தில், "வேடர் மானைக் கொண்டு வரப்போய் ஈமானைக் கொண்டகத்திற் புக்கான்" என்று சொன்னார்கள். நாம் அதை விட வேறென்ன சொல்லக்கூடும்!

39-வது அத்தியாயம்.

ஈத்தங்குலை வரவழைத்தது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய வருத்தம்.

எத்தும் புகழார் மக்காவி லிருந்தீனவர்கட் கிடறு செய்யுந்
தீத்தன் குலத்துக் குபிரர்களைச் சேர்ந்துற் றிருக்கு மோரறபி
நாத்தன் குறைவிருப்பாக நண்ணிக் கேட்டபடி இறஸூல்
ஈத்தன் குலையை வரவழைத்த விசையைப் பிசகா தியம்பிடுவாம்.

இதன் பொருள்.

யாவர்களும் துதிக்கும் புகழ்பொருந்திய திருமக்கமா நகரத்தில் மகத்துவமான தீனுல் இஸ்லா மானவர்களுக்கு இடறு செய்யும் செருப்புற்ற மனத்திரான காபிரீன்களைச் சேர்ந்து பொருந்தியிருக்கும் ஓர் அறபி வம்மிசத்தான் வந்து, நாவில் விருப்புற்ற பேச்சோடு அவன் கேட்டபடிக்கு, றஸூல் நாயகமான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஈத்தங் குலையை வரவழைத்து கீர்த்திப் பிரபல்யத்தை பிசகில்லாமற் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்

கலி விருத்தம்.

கருதியின் முறைவழித் தணைவர் சூழ்தரக்
கருமுகி னிழலொடுங் கருணை பொங்கிட
மருவுமெண் டிசைக்குமான் மதங்க மழ்ந்திட
விருமலம் புகழ்நபி யிருக்கும் போதினில்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குர்ஆன் என்னும் சத்தியவேதத்தை எங்கும் பரவச் செய்து, தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை நிலைநிறுத்தி, அஸ்ஹாபிகள் புடை சூழ்ந்திருக்கக் கருமேகக்குடை நிழலில் வீற்றிருந்து, காத தூரம் வரையும் கஸ்தூரி பரிமளங் கமழ வாழுங் காலத்தில், ஒருதினம் காலில் செருப்பும், கையில் வாளும், மேலில் அங்கியும், இடையில் கச்சையும், தோளில் பரிசையும் தரித்த அறபி யொருவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்நிதியில் வந்து நின்று கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "இவ்வுலகிலுள்ள மனிதர்களில் நீர் யார்?" என மிக அகங்காரத்துடன் கேட்டான்.

அச்சம் சிறிதுமின்றி உரத்துக்கேட்ட அவ்வறபியை நோக்கி "நான் அல்லாஹு தஆலாவுடைய உண்மையான தூதன்" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உத்தரம் சொன்னார்கள். இதைக் கேட்ட அந்த அறபி "நீர் அல்லாஹு தஆலாவுடைய தூதர் என என்மனம் ஒப்புக்கொள்ளும்படி எதைக் கொண்டு சாட்சி சொல்லப் பண்ணுவீர்" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கேட்டான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நான் அல்லாஹு தஆலாவுடைய தூதன் தான் எனத் தகுந்த சாட்சி சொல்லுவித்தேனானால், நீ எனக்கு கலிமா சொல்லி வழிப்படுவாயா?" என்று அவ்வறபியை வினவினார்கள். அதற்கு அவ்வறபி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நீர் அவ்வாறு தகுந்த சாட்சி சொல்லுவிப்பீரானால், உம்மை நபியென்று நம்பி உமக்கு நான் வழிப்படுவேன்" என்றான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த அறபியை நோக்கி "இந்த உலகத்திலுள்ள வஸ்துக்களில் எதை உனக்கு சாட்சி சொல்லுவிக்க வேண்டும்?" என்று கேட்டார்கள். அப்போது அவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "இதோ நம்மிருவருக்கும் எதிரே நிற்கின்ற ஈத்த மரத்தின் பழக்குலையை இங்கு வரவழைப்பீரானால், நான் உமக்கு வழிப்படுவேன்" என்றான். அப்போது நபிநாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த ஈத்தமரத்தை விளித்து "உன் பழக்குலையை இங்கு வரவிடு" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னவுடனே அந்த ஈத்த மரத்தின் கருங்கனி நெருங்கிய பெருங்குலையானது, திடீரென்று மரத்தடியிலிறங்கிச் சிறிதும் பழுதுறாமல் மெள்ள மெள்ள நகர்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுகத்தில் வந்து நின்றது. இப்புதுமையை அநேகர் பார்த்து நின்றார்கள். உடனே அவ்வறபி பிரமித்து, இதைவிட அற்புதம் வேறென்ன வேண்டும் என ஆச்சரியமடைந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உண்மையான நபிதானென்று உறுதிகொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "நபியே ஈத்தங்குலையை பழயபடி மரத்தில் சேர்த்து விடுங்கள்" என்று மரியாதையுடனும் அச்சத்துடனும் சொல்லி மன்றாடினான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அக்குலையை நோக்கி "நீ உன் ஸ்தானத்திற்குப் போய்ச்சேர்" என்று கட்டளையிட்டார்கள். அது உடனே நகர்ந்து சென்று மரத்திலேறி தன் ஸ்தானத்தில் பொருந்திற்று. அப்போது அந்த அறபி தனது இருதயத்துக்குள்ளே, இது ஒரு விலங்கினத்தி லுள்ளது மல்ல, விருட்சவர்க்கத்தி லுள்ளது. அதை தம் சமுகத்தில் வரவும் போகவும் செய்யும் தத்துவம் இவருக்கு இருப்பதால் இவர் நபிதான் என்று ஆராய்ந்தறிந்து சந்தோஷமுற்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கையைப் பிடித்துக் கலிமாச்சொல்லி, ஈமான் கொண்டு மூஸ்லிமானார். அன்று தொட்டு அவ்வறபியும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்களில் ஒருவரானார்.

40-வது அத்தியாயம்.

ஒப்பெழுதித் தீர்ந்தது.

கலி விருத்தம்.

எப்பொழு திறையவன் றூதைய
கப்பொழுதுங் காபிர்கள் கூடியே
தப்பொழுக்கஞ் சாதி விலக்கென
ஒப்பெழுதி முடித்ததை யோதுவாம்.

இதன் பொருள்.

மனப்பழுது பொருந்திய காபிரீன்கள் எப்பொழுதும் அல்லாஹு தஆலாவின் தூதரான நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை, தப்பிதத்தையும் பதனழிதலையுமுடைய காபிரீன் தங்கள் ஜாதிக்கு விலக்கென்று கூட்டங் கூடிப்பேசி முடிவுசெய்து, அந்த முடிவு தவறிப்போகாமல் ஒப்பெழுத லென்னும் சம்மத உறுதிப் பத்திரம், தாங்கள் பேசிமுடித்தபடி யெழுதி முடித்த காரணங்களைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்

கலி விருத்தம்.

பரிவுறு நபியென்னும் பட்டமாகிய
வருடமே ழினிற்றின முஹற்ற மாதத்திற்
றெரிதரும் பிறைமுத லிரவிற் சேரலர்க்
குரியவர் குறைஷிக ளொருங்கு கூடினர்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், மக்கமா நகரத்தில் தமது தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை விளக்கிக் கொண்டிருக்குங் காலத்தில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பட்டம் இறங்கின ஏழாம் வருஷம் முஹர்றமாதத்து முதல்தேதி இரவில், அபூஜஹல் முதலான பகைவர்கள் அனைவரும் ஒரு கூட்டம் கூடினார்கள். அன்றிரவு கூடின அந்த ஆலோசனை சபையில், இந்த மக்கமா நகரத்திலிருக்கும் ஹாஷிம், முத்தலிபு என்னும் இவ்விரண்டு கிளையார்களோடு வர்த்தக சம்பந்தமொன்றுஞ் செய்யாமல் நாம் நிறுத்திக்கொள்ள

வேண்டுமென்று அவர்களுக்குள் ஆலோசித்தார்கள். இவ்வாறு ஆலோசித்து, பொருத்த சீட்டேடு (உடன்படிக்கை) ஒன்று எழுதினார்கள். பகைவர்கள் தமக்குள்ளே எழுதிக்கொண்ட அந்த பொருத்தச் சீட்டின் நிபந்தனைகளாவன:— முதலாவது, மேற்குறித்த ஹாஷிம், முத்தலிபு என்னும் இரண்டு குடும்பத்தார்களுடன் வர்த்தகாதி சம்பந்தங்களில் ஒன்றுஞ்செய்யாமல் நிறுத்திக்கொள்ளுவது. இரண்டாவது, அக்குடும்பத்தார்களை ஜாதி விலக்கி, நெருப்பு, நீர் முதலானவை கொடாமல் கட்டுப்பாடா யிருப்பது. மூன்றாவது, அவ்விரு குடும்பத்தாரையும் மற்றவர்களனைவரும் எப்போதும் பகைத்து நெருக்கி இழித்துக் கொண்டே யிருந்து, இவ்வூரிலிருக்க விடாமல் துரத்துவது. இம்மூன்றும் அனைவர் பேரிலும் கடனான காரியமென்றும், இதற்கு மாறுசெய்தவர்கள் இன்ன தண்டனைக்கு உட்படவேண்டுமென்றும் நியமித்து, மேற்படி உடன்படிக்கையை யெழுதி, அபுஜஹல் முதலான அனைவரும் கையெழுத்திட்டு, இதை ஊரார் அனைவரும் அறிய வேண்டுமென அந்தப் பொருத்தச் சீட்டைகொண்டு போய் கஃபத்துல்லாவின் வாசலில் கட்டித் தொங்கவைத்தார்கள். அந்தப் பத்திர மெழுதின அன்று தொட்டு ஊரார் ஒருமித்து மேற்படி இரண்டு கிளையார்களையும் ஜாதிவிலக்கி, உடன்படிக்கைப் பிரகாரம் நடத்திவந்தார்கள். இச்சங்கதி பகிரங்கமானவுடன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிப்பட்ட முஸ்லிமானவர்க ளனைவரும் ஒரு கூட்டம்கூடி ஆலோசித்து, முன் குறித்த ஹாஷிம், முத்தலிபு என்னும் இரண்டு குடும்பத்தாருள்பட முஸ்லிம்களனைவரும் இனி எந்தக் கருமத்தில் பகைவர்களுடன் ஐக்கிய மற்றிருக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, தங்களை நடத்துந் தலைவராக அபூத்தாலிபை நியமித்துக் கொண்டு, அவருடைய புஜங்களென்னும் ஆதரவை சூழ்ந்திருந்து வாழ்ந்தார்கள்.

இது இப்படியிருக்க, மதீனமா நகரத்தில் அங்குள்ள அவுஸ் கஸ்ரஜ் என்னும் இந்த இரண்டு குலத்தாருக்குள் எப்போதும் பகை முதிர்ந்தவண்ணமா யிருந்தது. இப்பகை உண்டானது இன்று நேற்றல்ல. நூற்றிருபது வருஷம் வரையும் நீண்டு, வரவர முதிர்ந்தது. இவர்களுக்கிடையில் அடிக்கடி நேரிடும் சண்டையில் கஸ்றஜ் என்னும் கூட்டத்தார்களே வெற்றி பெற்றுவந்தார்களன்றி, அவுஸ்

என்னும் கூட்டத்தார் ஒருதரமாவது வெற்றி அடைந்தவர்களல்ல. தொன்று தொட்டு நிகழும் சண்டையனைத்திலும் தோல்வியுற்று வர வரப் பலம் குன்றி, அவுஸ் என்னும் கிளையார் தளர்ந்து போனார்கள். மனத்துயர்பெருகிய அவுஸ் குடும்பத்தார் ஒருதினம் தங்களில் ஒரு கூட்டம் கூடி, நாம் கஸ்ரஜ் கூட்டத்தாருடன் சண்டை செய்து ஒரு தடவையிலாவது அற்பவெற்றியும் பெறவில்லை. நாளுக்கு நாள் தீரம் குன்றுகின்றோமே யன்றி, ஊக்கம் மேற்கொள்ளவில்லை. இனி நாம் ஒரு கருமம் செய்யவேண்டும். அதாவது:— இப்போது நம்மிலுள்ள இரண்டொருவரை மக்கமா நகரத்துக்கு அனுப்பி, அங்குள்ளவர்களில் சிலரை வசப்படுத்தி அழைத்துக் கொண்டு வந்து, நமக்குத் துணைப்படையாகச் சேர்த்து மேற்படி கஸ்ரஜ் கூட்டத்துடன் எதிர்த்துப் போராடிப் பார்ப்போம். அப்போது தான் நமக்கு வெற்றி யுண்டாகும். இல்லாவிட்டால் நாம் ஒரு காலத்திலும் வெற்றி பெறமாட்டோம் என ஆலோசித்துத் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தங்களில் விவேக சாமார்த்தியமுள்ள அயாஸ் என்பவருடன் நான்கு பேர்களைச் சேர்த்து, மக்கமா நகரத்தாருக்குப் பலவித வெகுமானப் பொருள்களும் கொடுத்து அனுப்பினார்கள். மேற்படி அயாசும் அவரைச் சேர்ந்தவர்களும் மதீனமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு மக்கமா நகரம் வந்து சேர்ந்து, ஒரு ஜாகையைத் தயார் பண்ணிக் கொண்டு அதிலிருந்தார்கள். மதீனமா நகரத்திலிருந்து இன்ன காரியத்திற்காகச் சிலர் இங்கு வந்திருக்கின்றார்களென்பதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களறிந்து, தாங்களே புறப்பட்டு, அந்த அயாஸ் இருக்கும் விடுதியிற் போய் சற்றுநேரம் வேறு காரியங்களைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்து விட்டு, மறுபடியும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அயாஸை நோக்கி "நீங்கள் உங்கள் பகைவரால் நெருக்குண்ணும் சங்கடம் தீரும் பொருட்டு உதவி தேடுவதற்காக இங்கு வந்திருக்கின்றீர்கள். இப்போது என் வார்த்தையை நீங்கள் கேட்டு நடப்பீர்களானால் நீங்கள் நாடிவந்ததை விட அதிக மேலான வெற்றியும், கீர்த்தியும் உங்களுக்கு உண்டாகும்" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட மாத்திரத்தில் அயாஸ் என்பவர் மன மகிழ்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" எனக் கேட்டார். அப்போது நபிநாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், என்னை அல்லாஹு தஆலா தனது தூதனாக நியமித்து நபிப் பட்டத்தையும் கொடுத்திருக்கிறான். அன்றியும், குர்ஆன் என்னும் சத்திய வேதமும், இஸ்லாம் என்னும் பரிசுத்த மார்க்கமும் எனக்குண்டு. இவைகளையெல்லாம் நீங்கள் உண்மை தான் என்று நம்பி, எனக்கு வழிப்பட்டு கலிமா சொல்லுவீர்களானால், உங்கள் சத்துருக்கள் நாசமடைவார்கள்; நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று அயாஸை நோக்கிச் சொன்னார்கள். இதைக்கேட்ட அயாஸ் என்பவர் தம்முடனிருக்கும் மற்றவர்களோடு ஆலோசித்து, இதைவிட நமக்கு வேறென்ன வேண்டுமென்று அங்கீகரித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "நபியே, நான் மதீனமா நகரம் போய் தாங்கள் சொன்ன சொல்லை எங்கள் கிளையாரிடத்தில் சொல்லி, திரும்பி வந்து தாங்கள் சொற்படி நடத்துகிறேன்" என்றார். அதற்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சம்மதித்தார்கள். பிறகு அயாஸ் தாம் வந்த கருமத்தில் பிரவேசிக்காமல் மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு மதீனமா நகரம் போய்ச் சேர்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்ன சொல்லைத் தமது அவுஸ் கூட்டத்தாரிடம் சொன்னார். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சொல்லுக்கு அந்த அவுஸ் கூட்டத்தாரனைவரும் இசைந்தார்கள். அக்கூட்டத்தார் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வழிப்படுவதாக ஒருமித்து இருக்கையில், கஸ்ரஜ் கூட்டத்தார்கள் இவர்களையெதிர்த்து வந்து தாக்கினார்கள். இவர்களும் மனந் தளராமல் நின்று வீரத்துடன் போராடினார்கள். அன்று நடந்த சண்டையில், ஒரு போதும் தோல்வியுறாத கஸ்ரஜ் கூட்டத்தார்கள் அவுஸ் கூட்டத்தாருக்கு ஆற்றமாட்டாமல் தோற்று, பலவழியில் சிதறி முறிந் தோடினார்கள்.

அவுஸ் கூட்டத்தார்களுக்கு ஆற்றாமல் கஸ்ரஜ் கூட்டத்தார் தோற்று முறிந்தோடினார்க ளென்னும் சங்கதி, இராஜ்ஜியமெங்கும் பிரஸ்தாபமாயிற்று. அப்போது, நாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கண்டு பேசின பொருட்டினால், என்றும் பெறாத வெற்றியைப் பெற்றோம். 'இனி அந்த நபி நாயகமவர்களின் வேத வழி மொழி சமயம் என்றுமே யாகும். இவ்வுலகத்தில்

தமக்கு ஈடுசெய்பவர்கள் ஒருவருமில்லை' யென்று அவர்கள் உட்படத் தாரனைவரும் அதிசயஆனந்தத்துடன் சொன்னார்கள். இதுவன்றி அவர்கள் ஒவ்வொருவர் பலமுறையும் பதிந்தபடியால், நாம் அனைவரும் முஹம்மது நபிக்கு ஈமான் கொள்ளவேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். உடனே அவர்களில் ஆறுபேர்கள் மதீனமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு, மக்கமா நகரத்தில் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதங்களைப் பணிந்து ஈமான் கொண்டு முஸ்லிமானார்கள். அதனால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மதீனமா நகரத்தார் தமக்குத் துணைவர்களானார்களென்று சந்தோஷமுற்றிருந்தார்கள்.

இக்காலத்தில் இஸ்லாம் என்னும் பரிசுத்த மார்க்கம் நாளுக்கு நாள் பரவிக் கொண்டே வந்தது. பிறகு, நபிப்பட்ட மிறங்கிய எட்டாம் ஆண்டு பிறந்தது. வெகுகாலத்திற்கு முன் ரூம் இராஜ்ஜியத்தாருக்கும், பாரிசு இராஜ்ஜியத்தாருக்கும் உண்டாயிருந்த வன்பகை நாளடைவில் முதிர்ந்துவந்தபடியால், நபிப்பட்ட மிறங்கின எட்டாம் ஆண்டாகிய நிகழும் வருஷத்தில் நடந்த யுத்தத்தில் பாரிசுக்காரர்கள் வெற்றி பெற்றார்கள் என்னும் சங்கதி மக்கமா நகரத்துக்கு வந்தது. இதைக்கேட்ட காபிர்கள் அனைவரும் இருதயம் களித்து, பாரிசுக்காரர்கள் வெற்றி கொண்டதால் எங்களுக்குப் பலமுண்டாயிற்று; தீனோர்களுக்குக் கஷ்டகாலமுண்டாயிற்று எனப் பகிரங்கத்தில் பேசினார்கள். காபிர்கள் இவ்வாறு பேசத் தலைப்பட்டவுடன் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் "ரூமிகள் வெற்றி பெறுவார்கள், பாரிசுக்காரர்கள் முறிந்தோடுவார்கள் என்று எங்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய சொல் ஒரு காலமும் பிசகமாட்டாது. ஆனதால் பாரிசுக்காரர்கள் தான் தோற்றார்கள்" என்று சொன்னார்கள். இச்சொல்லைக்கேட்ட இபுனு கலபு என்பவன், அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "நீங்கள் சொல்லும் சொல் பழுதுபட்டு, பாரிசுக்காரர்களே தோற்றார்களென்னும் சங்கதி உண்மையானால், நான் உமக்கு நூறு ஒட்டகங்கள் தருகிறேன்" என்றான். அதற்கு அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவனை நோக்கி "எங்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சொல் பழுதாய்

ரூமிகளே தோற்றார்களென்னும் சங்கதி உண்மையானால், நான் உனக்கு நூறு ஒட்டகங்கள் தருகிறேன்" என்றார்கள். இவ்வாறு அவ்விருவரும் பந்தயமிட்டு ஒட்டகங்களை வைத்துக்கொண்டு, யதார்த்தமான செய்திக்கு வழிபார்த்துக் கொண்டு இருந்தார்கள். அக்காலத்தில், பாரிசுக்காரர்கள் தோற்று ரூமிகள் ஜெயம் கொண்டார்கள் என்னும் வதந்தி எங்கும் உலாவிற்று. மேற்படி சங்கதி பிரஸ்தாபமானவுடனே இபுனு கலபு என்பவன் பந்தயத்தின்படி நூறு ஒட்டகங்களையும் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கொடுத்தான். அந்த நூறு ஒட்டகங்களையும் அவர்கள் கொண்டு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சமூகத்தில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த நூறு ஒட்டகங்களையும் கஃபத்துல்லாவில் கொண்டுபோய் நிறுத்தி காபிர்கள் மனம் வருந்தும் வண்ணம் எளியவர்களுக்கு சதகா (தானம்) கொடுத்துவிடும்படி கட்டளை பண்ணினார்கள். அப்படியே அந்த நூறு ஒட்டகங்களும் தானஞ் செய்யப்பட்டன.

பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பட்டங்கிடைத்த ஒன்பதாம் ஆண்டு பிறந்தது. முன் காபிர்கள் ஒருமித்து எழுதி கஃபாவாசலிற் கட்டித் தூக்கியிருந்த அந்த உடன்படிக்கைப் பத்திரம், நபிப்பட்டமிறங்கின ஒன்பதாம் வருஷம் பிறக்கும் பரியந்தம் இருந்து, பின்பு செல்லரித்துவிட்டது. உடன்படிக்கை செல்லரிக்கப்பட்ட சங்கதியை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு இடம் சொன்னார்கள். இதைக்கேட்ட அபூத்தாலிபு அதைப்பற்றி சில காபிர்களிடம் அறிவித்தார்கள். அபூத்தாலிபு சொன்னவுடன் காபிர்களில் ஐந்துபேர் ஒருமித்து மனப்பகை நீங்கி, அந்த உடன்படிக்கையை கிழித்து எறிந்துவிடுவோமென்று சொல்லி எழுந்து விரைந்து கஃபத்துல்லாவுக்கு வந்தார்கள். அபூத்தாலிபு உடைய சொல்லைக் கேட்டுக்கொண்டு முன்னெழுதின ஒப்பந்தத்தை கிழித்தெறியும்படி ஐந்துபேர்கள் வருகிறார்களென்னும் செய்தியை அபூஜஹல் கேட்டு சினங்கொண்டு, விரைந்து வந்து கடுகடுப்புடன் அவ்வைவரையும் தடுத்தான். இவ்விதம் அபூஜஹல் தடுத்தும் அவர்கள் கேளாமல் அந்த உடன்படிக்கையை அவிழ்த்துப் பார்த்தார்கள். அதில்

"அல்லாஹ்" என்றெழுதின ஒருவரிமாத்திர மிருக்கமற்ற அக்ஷரங்களெல்லாம் பறிபட்டு வெறுமையாயிருந்தது. இதைக்கண்ட அந்த ஐந்து பேர்களும் அப்பத்திரத்தை அபூஜஹலுக்குக்காட்டி "இதை நீர் பார்த்தீரா? 'அல்லாஹ்' என்பதொழிய மற்ற லிபிகள் ஒன்று மில்லையே. இது இருந்து என்ன பலனைத்தரும்? இதை எழுதப் பட்ட காலத்தில் எங்களுக்கும் சம்மதமில்லை. இப்போதும் எழுத்தனைத்தும் மறைந்து போயின. ஆனபடியால், இனி கிழித்து தான் எறியவேண்டும்" எனப் பலர் பார்க்க அவ்வுடன்படிக்கைப் பத்திரத்தைக் கிழித்து எறிந்தார்கள். அன்றோடே ஜாதிவிலக்கும் ஒழிந்தது. மேற்படி பத்திரத்தை எழுதின மன்சூர் என்பவன் இரண்டு கைகளும் வழங்காமல் பெருவியாதிகொண்டு செத்தான்.

41-வது அத்தியாயம்.

விக்கிரகம் பேசியது.

கலி விருத்தம்.

முத்தி நாதர் முகம்மது நபி
சித்தி யாகிய நீதி யமைத்திடும்
குத்தி மேவு ஹுசைன்கொடு வந்தவின்
புத்து பேசும் பொருட்டினை யோதுவாம்

இதன் பொருள்.

மோக்ஷ நாயகரான எம் நபி முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மகிழ்ச்சியாகிய நீதம் இவ்வுலகத்தி லமைத்திடும் நேர் பொருந்திய ஹுசைன் என்னும் பெயருடைய ஓர் அரபி கொண்டு வந்த விழுகிய புத்தென்னும் விக்கிரகம் நாவைத் திறந்து பேசிய அற்புதத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நிலத்தரசுக் கிறைத்த சுடர்சிரத்தினணி
யெனச்சிறப்பு மிறைமக் காவிர்
குலத்தரசு சினிதுவப்பக் கலிமாவென்
... முழுதுங் கூறி யோண்

நிலத்தடக்கை வயவேந்த ரினிதுரும்
திருக்குநபி செய்லி நோக்கி
மலைத்தடத்தின் புயகுசைனு வெகுமதி
மகிழ்வினொடும் வந்துற்றானே.

வசனம்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கமா நகரத்திலிருந்து தங்கள் தீனை பிரசாரம் செய்து கொண்டிருக்குங் காலத்தில், அங்கிருக்கும் ஹுசைன் என்னும் ஒரு அரபி ஒருவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சபைக்கு வந்தான். தம்மிடம் வந்த ஹுசைன் என்னும் அரபியை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோக்கி "வாரும்; அமரும்" என்று சொன்னார்கள். இவ்வாறு தன்னை அழைத்து, இருக்கும்படி உத்தரவு சொன்னதை மதித்த அந்த அரபி மனமகிழ்ந்து, அந்த சிறந்த சபையில் ஒரு புறத்தில் உட்கார்ந்தான். அப்போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனை நோக்கி, தங்களின் ஒப்பற்ற திருவாய் திறந்து "சாஸ்திர நிபுணனாகிய ஹுசைனே, மோட்சம் தரும் ஸ்ரீ ஆண்டவனுக்குரிய எனது இஸ்லாம் மார்க்கத்தை இதுவரையும் நீ அனுசரிக்காம லிருப்பதேன்? இன்றாவது கலிமாவைச் சொல்" என்றார்கள். இதைக்கேட்ட அந்த ஹுசைன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "முகம்மதே, அடியேனாகிய நான் தங்கள் சொல்படி யொழுகி, தங்களின் மேலான மார்க்கத்தைத் தொடர்வதற்கு யாதொரு பிரதிபந்தமுமில்லை. தாங்கள் நபிதான் என்பதையும் நான் இதய பூர்வமாய் அறிவேன். சந்திரன், உடும்பு, மான், புலி, நாகம் இவைகள் பணிந்து தங்களோடு வசனித்ததை நான் அறியேனா! தங்களின் ஒப்பற்ற மார்க்கத்தில் அநேக ஜனங்கள் பிரவேசித்து நன்மை பெற்று வருவது எனக்குத் தெரியாத விஷயமல்லவே! ஆயினும், எனக்கென்று தாங்கள் ஒரு அற்புதம் காட்டினாலொழிய, தங்களின் கலிமாவைச் சொல்ல என் இதயம் பொருந்த மாட்டாது" என்றான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனை நோக்கி "ஹுசைனே, என்னால் நிகழ்ந்த அற்புதங்கள் பல உனக்குத் தெரிந்திருந்தும், அவைகளெல்லாம் அற்புதங்களல்ல

வென்று நீ இப்போது மறுக்கின்றாய். நல்லது, நீண்டகாலமாக உனது பணியில் வைத்து, பூசை முதலானவை செய்து நீ வணங்கும் உன் விக்கிரகமானது வாய்திறந்து, என்னுடன் சம்பாஷித்தால் என் சொற்படி நீ கலிமா சொல்லுவாயா?" என்று கேட்டார்கள். இதைக்கேட்ட அந்த குசைன் "முஹம்மதே, தாங்கள் சொன்னசொல் எனக்கு மிக ஆச்சரியத்தைத் தருகின்றது. நான் அறுபத்தைந்து வருஷங்கள் வரையும் வைத்து, பூசை முதலியன செய்து, மனமுருகி கைகுவித்து சிரம் வணங்கி நின்று பிரதிதினமும் வணங்கும் எனது விக்கிரகம் ஒருபோதாவது என் இதயம்களிக்கத் தன் வாயைத் திறந்து ஒரு வார்த்தையும் என்னுடன் பேசினதல்ல. பிரதிதினமும் பணிவிடை செய்து, பட்டாடை புனைந்து, பொற்பணிபூட்டி, புஷ்பாதி பரிமள மிட்டு தீபதூபத்தோடும் சேவித்து நிற்கும் என்னுடன் ஒரு பொழுதும் பேசாத அது, இப்போது தங்களுடன் சம்பாஷிக்குமென்று எனக்கு நம்பிக்கையில்லை. அப்படி அது தங்களுடன் சம்பாஷிக்குமானால், வேறு அற்புதம் என்னவேண்டும்! உடனே தங்கள் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து வழிப்பட்டு, கலிமா சொல்லுவேன். இதற்கு ஏதும் தடையில்லை" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கிக் குறுநகையுடன் சொன்னான்.

இச்சொற்களைக் கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குசைனை நோக்கி "நல்லது இருக்கட்டும், உனது சுவாமியாகிய அந்த விக்கிரகத்தை இப்போது இங்கே கொண்டுவா" என்றார்கள். உடனே குசைன் எழுந்து தனது மனைக்குச் சென்று, அந்த விக்கிரகத்துக்குப் பட்டாடையுடுத்தி, ஆபரணாதிகள் பூட்டி, நறுமலர் சுமத்தி, நறும்புகையூட்டி, ஒரு சிறந்த போர்வை கொண்டு போர்த்து, தன்மார்போடு தூக்கியணைத்துக்கொண்டு, வீட்டைவிட்டுப் புறப்பட்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தில் வந்து, அவ்விக்கிரகத்தை வைத்துவிட்டுத் தான் ஒருபுறம் உட்கார்ந்தான். முன் இவன் வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் பேசினதும். எனக்கென்று வேறு அற்புதம் காட்டவேண்டும் எனக் கேட்டதும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வார்த்தையை மறுத்துப் பேசினதும், விக்கிரகத்தை [illegible] கொண்டு வந்ததும், தன் [illegible]

வாசத்தினாலல்ல. சர்வகலை ஞானியான, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்கள் முதலானவை அனைத்தையும் முன்னமே அறிந்தவனானபடியால், மேலும் மேலும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களை வெளிப்படுத்தவேண்டுமென்னும் நல்ல எண்ணத்துடன் தன்னை ஒரு பேமடசனாகப் பாவனை காட்டி, இவ்விதஞ் செய்தான். அவன் விக்கிரகத்தைக் கொண்டு வந்து தங்கள் திருச் சமூகத்தில் வைத்த பிறகு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதைநோக்கி "ஏ விக்கிரகமே! இப்போது நீ உன் வாயைத் திறந்து, உன்னை வணங்கி வந்த குசைனுடைய இருதயம் களிகூரும்படிக்கும், இங்குள்ளவர்களும் இனி எங்குமுள்ளவர்களும் அறிந்து ஆநந்தங் கொள்ளும்படிக்கும், என் வரலாற்றையும் என் நாமத்தையும், என்னுடைய வேதாபிமானத்தையும், மிகத் தெளிவாகச் சொல்லு" என்று ஆக்ஞை செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்விதம் ஆக்ஞை செய்தவுடனே அந்த விக்கிரகம் தன் வாயைத் திறந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "சர்வ வல்லவனாய் விளங்கும் அல்லாஹு தஆலாவுடைய றஸூலே! மானிடர்களுக்கு நல்வழிகாட்ட வந்த நபியே!! முஹம்மதே!!! அண்டசராசரமனைத்தும் தங்கள் பேரொளியிலிருந்தே உண்டாயின என்பதை இதய பூர்வமாயறிந்து, தங்களுக்குரிய மேலான குர்ஆன் என்னும் வேத நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் கலிமாவைச் சொல்லி ஈமான் கொள்ளாதவர்கள் யாரானாலும் சரி, அவர்கள் நரகப் பிரவேசிகளாய், உள்ளநாள் உள்ளமட்டும் வேதனையை அநுபவிப்பார்களென்பதில் சம்சய மில்லை. தங்களுக்கு வழிப்பட்டுக் கலிமா சொல்லி ஈமான் கொண்டவர்கள் சுவர்க்கவாசிகளாய் என்றென்றும் இன்பமநுபவிப்பார்கள். இதை என்னை யொத்த கல்லுக்குஞ் சமானமானவர்கள் அறியமாட்டார்கள். இது சத்தியம்" என்று சொல்லிற்று.

விக்கிரகம் இவ்வாறு சொன்னவுடன், குசைன் என்னும் அறபி ஆநந்த சாகரத்தில் மூழ்கி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாததாமரைகளைத் துதித்து கலிமாச்சொல்லி ஈமான் கொண்டு முஸ்லிமானார். அன்று நபிநாயகம் ஸல்லல்

லாஹூ அலைஹி வஸல்ல மவர்களின் திருச் சபையிலிருந்த அஸ்ஹாபிகள் அனைவரும் களிப்புற்றார்கள்.

42-வது அத்தியாயம்.

அபூத்தாலிபும் பிராட்டியாரும் பொன்னுலகு புக்கது.

கலிசந்த விருத்தம்.

அன்னநடை மின்னினிடை யாதிமுதல் நிலின்
முன்னுபுகழ் கற்புடைய மூதறிவி னல்லார்
மன்னர்மறு மூதுமகிழ் வாகிய பிராட்டி
பொன்னுலகு புக்குசரி தம்புகலு வாமே.

இதன்பொருள்.

அன்னப்பட்சி போன்ற நடையையும், மின்னலைப்போல் பிரகாசிக்கு மிடையையும், கற்பு நிலையையும், பேரறிவையும், தீனுல் இஸ்லாத்தின் வழியை அறிந்து ஆதியில் யாவருக்கும் முன்னுறுதி கொண்ட புகழையுமுடைய நல்லாருமாய், இராஜசமேதராய் மஹ்மூதென்னுமியற் பெயர் கொண்ட முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்ல மவர்களின் மனமகிழ்வாகிய பிராட்டியாருமாய் விளங்கும், கதீஜா நாயகியவர்கள் பொற்பிரகாசமான சொர்க்கலோகம் போன சரித்திரத்தைச் சொல்லுகின்றாம்.

சீறாப் புராணம்.

கலி நிலைத்துறை.

தனுவின் மான்மத முலவிய முஹம்மது தழைப்பப்
புனித மாமறை பதிகளி மாக்கதிர் பொழிய
வினிதில் நின்றிசை விளங்கிட விருந்து மக்காவி
லனில மொத்தபூத் தாலிபுக் கடைந்ததா யாசம்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்ல மவர்கள், தீன் என்னும் ஒப்பற்ற சூரியப் பிரகாசம் குபிர் என்னும் இருளை முற்றும் அறுத்து ஒதுக்கவும் கலிமா முழக்கம் எங்கும் பரவவும் தோழர்களாகிய அஸ்ஹாபிகள் புடை சூழ்ந்திருந்து வாழும் காலத்தில், தங்கள் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபுக்குச் சௌக்கிய வீனம் வந்து நேரிட்டது. தமக்குண்டான சுகக்குறைவினால் அபூத்தாலிபு மிக வருந்திப் பீடையடைந்திருந்தார். அதனால் நபிநாயகம் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்ல மவர்கள் துக்கக் கடலில் மூழ்கினவர்களாய், மனம் நொந்து வாட்ட முற்றார்கள். அபூதாலிபுக்கு உண்டான சுகவீனம் வரவர அதிகரித்து, மரணத் தறுவாயானது. இந்த சங்கதியைக் கேள்விப்பட்டவுடன், மக்கமா நகரத்து அபூஜஹல் முதலான குறைஷித் தலைவர்கள் அநேகர் அபூத்தாலிபு உடைய மனையில் வந்து கூடியிருந்தார்கள்.

அபூத்தாலிபு தமக்கு மரணவேளையானதை அறிந்து, தமது சமூகத்தில் வந்து கூடியிருக்கும் குறைஷிகள் அனைவரையும் நோக்கி, அநேக சன்மார்க்கமான விஷயங்களை எடுத்துச்சொல்லிக் கொண்டே யிருந்தார். தமது பந்து ஜனங்களுக்கும் பல பல நற்போதனைகளைப் போதித்தார். தம் சமூகத்தில் கூடியிருக்கும் பலரையும் பொதுப்பட நோக்கி "நீங்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் பிணக்கின்றி சமாதானமா யிருங்கள். குடும்பத்திற்குள் பகையொழிந்து ஐக்கியப் பட்டிருங்கள்" என்றே அடிக்கடி சொன்னார். தங்கள் பெரிய தந்தையாகிய அபூதாலிபுக்கு நிர்யாண தசை யடுத்ததென்பதை நபிநாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்ல மவர்களறிந்து, அவருக்கு அருகில் நெருங்கியிருந்து "பிதாவே, கலிமாச் சொல்லுங்கள்" என்று சொன்னார்கள் இச்சொல்லுக்கு அபூத்தாலிபு பிரதி யொன்றும் சொல்லாமலிருந்தார். மரணவேளை யானதால் நம்சொல் காதில் கேட்க வில்லைபோலும் என நபிநாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்ல மவர்கள் எண்ணி, மறுபடியும் "எனது அருமையான தந்தையே, இந்த வேளையில் தாங்கள் கலிமாவைச் சொல்லுங்கள்" என்று உரத்துச் சொன்னார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்ல மவர்கள் அபூத்தாலிபை கலிமாச்சொல்லும்படி கட்டாயப் படுத்துவதை அபூஜஹல் அறிந்து, உள்ளங்கொதித்து, சினந்து, ஜனங்களை விலக்கிக்கொண்டு அபூத்தாலிபை நெருங்கி நின்றுகொண்டு "தாங்கள் யுக்தி சாதுரிய முள்ளவர்களாயிருந்தும் மூதாட்களுடையதும், பிதா மாதாக்களுடையதுமான மார்க்கத்தை வெறுத்துவிட்டு, முஹம்மது உடைய சொல்லுக்கு இசைந்து இதுவரையிலும் இருந்தீர்கள். பிந்தின காலமான இந்த மரணவேளையிலும்

அப்படியிராமல், ஏகோ மார்க்கவன்னார் ஒருதெய்வத்தை இருதயத்தில் இருத்திக் கொள்ளுங்கள். அதை மறக்காதிருங்கள்" என்று ஆங்காரத்துடன் சப்தமிட்டுச் சொன்னான். படுபாதகனாகிய அபூஜஹல் தன் உளறு வாய்த்திறந்து, இவ்வாறு சப்தமிட்டு அலறின பேரொலியால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் மெல்லிய தொனி அவர் செவியில் நுழையவில்லை. அன்றியும் பந்துக்களின் கூக்குரலும் அதிகமாயிருந்தது. ஆனதால் அபூத்தாலிபு உள்ள நாள்வரையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிப்பட்டிருந்தும், கலிமா மாத்திரம் சொல்லாமல் தேகவியோக மடைந்தார்.

சீறாப் புராணம்.

கலி நிலைத்துறை.

வட்ட வாரிதிப் புவியிடை முஹம்மது தமக்குப்
பட்ட மென்பவ திறங்கிய வருடம்பத் ததின்மே
லெட்டு மாதமும் பதினொரு நாளுஞ்சென் றிதற்பின்
எட்ட கந்தனை விட்டுயிர் பிரிந்தவண் சார்ந்தார்.

வசனம்.

நபிதிலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு நபிப்பட்டம் இறங்கின தினம் முதல் பத்து வருஷங்களும் எட்டு மாதங்களும் கழித்து, ஒன்பதாம் மாதத்துப் பனிரண்டாம் தினம் வபாத்தானார். அபூத்தாலிபு தேகவியோக மானவுடன் மக்கமா நகரத்திலுள்ள அவரது பந்துக்கள் முதலானவர்களாகிய ஆண், பெண் அனைவரும் ஏங்கி அழுதார்கள். ஹாஷிம் குடும்பத் தலைவராகிய இவர் நிரியாண மானதைக் குறித்துத் துக்கப்படாதவர் ஒருவருமில்லை. அனைவருள்ளும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களே கவலைக் கடலில் மூழ்கினார்கள். தங்கள் பெரிய தந்தையும், பரிபாலகரும் உற்ற துணைவருமா யிருந்தவருடைய நிரியாணம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் உள்ளத்தை மிக வருத்திற்று. பிறகு அனைவரும் திரண்டு நின்று அபூத்தாலிபை அடக்கம் செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்ல மவர்கள் தங்கள் பெரிய தந்தை இறந்த துக்கத்தினால் மனம் நொந்து, முகம்வாடி, மனைக்குள்ளேயே இருந்தார்கள்.

சீறாப் புராணம்.

கலி நிலைத்துறை.

அகத்தி னிற்பெருந் துன்பொடு மிருக்குமுன் னூனர்
வகுத்த நாயகன் விதிவழி குவைலிது மகளார்
சகத்தி னிற்புகழ் நிறுத்திவிண் ணகம்புக ழிலங்கத்
தகுத்தொ டும்பெரும் புதுமையிற் றிருவடி சாய்ந்தார்.

வசனம்.

அபூத்தாலிபு தேகவியோகமான மூன்றும் நாள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பிரிய நாயகியும் குவைலிதின் செல்வப்புதல்வியும் உலகமாதாவுமாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், இவ்வுலகவாழ்வை மறுத்து சுவர்க்கம் குடி புகுந்தார்கள். கதீஜா றலியல்லாஹு அன்ஹா வபாத்தான போது, குவைலிதின் குடும்பத்தார்களும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அஸ்ஹாபிகளும், பிறரும் துக்கக் கடலில் மூழ்கி, கதீஜா றலியல்லாஹு அன்ஹா அவர்களை அடக்கம் செய்தார்கள்.

தங்களின் பிராண நாயகியாகிய கதீஜா றலியல்லாஹு அன்ஹா வபாத்தானதால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு உண்டான வியாகுலத்திற்கு அளவில்லை. பெரிய தந்தை இறந்த சஞ்சலமும் தணியுமுன், பிராட்டியார் வபாத்தான சஞ்சலமும் சம்பவித்தபடியால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் இருதயத்திலிருந்த கவலை பலவாய்ப் பல்கிற்று. அதனால், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் மனந்தளர்ந்து மிகவும் கலக்க முற்றிருந்தார்கள். இவ்வித சஞ்சலப் பெருக்கினால் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பிறருடன் சம்பாஷணையின்றி தன்னந்தனியே யிருந்து வருந்தினார்கள்.

43-வது அத்தியாயம்

பருவத ராஜரைக் கண்ணுற்றது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சருப்பமும் வேங்கையுந் தாளிற் றாழ்ந்திட
விருப்பமதாகவே விண்டு வெற்றிகொள்
மருப்பொதி மேனியின் முஹம்ம தாண்டகை
பருப்பத ராஜரைப் பார்த் தோதுவாம்.

இதன் பொருள்.

பாம்பும் வேங்கையும் புலியும் விரைவாக வந்து பாதத்தில் தாழ்ந்து பணிய, அவைகளோடு யெதிர்பேசி வெற்றிக்கொண்டவர்களுமாய்ச் சரீரத்தில் வாசனை பொதிந்தவர்களுமாய் விளங்கும் முஹம்மதென்னுந் திருநாமத்தை உடைய ஆண்டகை யவர்கள், மலைகளுக்கெல்லாம் இராஜராகிய வானவரைக்கண்ட சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

சீறாப் புராணம்.

கலிநிலைத்துறை.

ஆரணப்பொருளஹ்மது மவதியுற் றதனாற்
காரணப்பல வறிந்தும்வஞ் சனையெனுங் காபிர்
பாரனைத்தெறிக் திருநகவுண் மதசாபம் பரப்பும்
வாரணத்தினு மும்மடங் கெனும்படி வலித்தார்.

வசனம்.

நபிகட்திலகம் சர்வரே ஆலம் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், முன்சொன்ன மனத்துயரினால் தளர்வடைந்து, வெளியில் வராமல் மனைக்குள்ளேயே தனித்திருந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்கள் பெரிய தந்தையையும், பிராண நாயகியையும் இழந்துவிட்டுத் துக்கக்கடலில் மூழ்கியிருக்கிறார்களென்பதைப் பகைவர்கள் ஆராய்ந்தறியாமல், தங்களுக்குப் பயந்துதான் இவ்விதமிருக்கிறார்கள் என்று எண்ணி, முன்னிலும் பலமடங்கு தீங்குசெய்யத் தலைப்பட்டார்கள் அடிக்கடி காபிர்கள் திரண்டு பலவிதக் கலகங்களையும், நிஷ்டூரங்களையும் செய்தார்கள். பகைவர்கள்

செய்யும் கொடுமை வரவர அதிகரித்தது. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், நிகழும் கொடுமைகள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு, மனவேதனையோடு இருந்தார்கள். அபூத்தாலிபு தேகவியோகமடைந்து மூன்று மாதங்கள் கழிந்தபின் ஒரு நாள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்களைத் தம் உயிரைப்போல் பாவித்திருந்த பெரியதந்தையும், தங்களுயிரையொத்த மனைவியும் இறந்துபோன சஞ்சலத்தையும், பகைவர்களால் அடுத்தடுத்து நேரிடும் வில்லங்கங்களையும் எண்ணி மனம் நொந்து, " இனி நாம் இச்சஞ்சலத்திலே நாட்களைக் கழிப்பது முறையல்ல. நமது மார்க்கத்தைப் பரத்த வேண்டும். அதற்கு இவ்வூர் பகைசாதிக்கின்றது. ஆனபடியால், இப்போது இங்கிருந்து தாயிபு என்னும் நகரத்துக்கு ஒரு முறை போய் வரலாமெனக்கருதி, பிறர் துணையின்றி தன்னந்தனியாய்ப் புறப்பட்டுத் தாயிபை நோக்கி நடந்தார்கள். அந்தத் தாயிபு என்பது மக்கமா நகரத்தையடுத்து மிகச் சமீபத்திலுள்ள ஒரு நகரம். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்நகரத்தில் பிரவேசித்தபோது, அங்குள்ள குறைஷிகளில் இபுனு அப்துயாலில் என்னும் தலைவனொருவனை எதிர்கண்டார்கள்.

அந்த இபுனு அப்துயாலில் என்பவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் கண்ட மாத்திரத்தில் விரைந்து வந்து, நபிநாயகத்தின் பாதங்களைப் பணிந்து, இனிய மொழிகளுடன் உபசரித்து, தனது மனைக்கு அழைத்துக்கொண்டு போனான். தன் மனையில் சென்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை ஒரு ஆசனத்திலிருத்தி, தான் அவர்கள் சமுகத்தில் மரியாதையுடன் நின்றுகொண்டு, பலவாறாகப் புகழ்ந்து "நாயகமே! தாங்கள் மெல்லடி வருந்தத் தமியேனிடத்தில் வந்த காரியம் என்ன?" என்று கேட்டான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், இவன் நம்மைக்கண்ட மாத்திரத்தில் மிக உபசரிக்கின்றான் என மகிழ்ந்து, அவனை நோக்கி "அல்லாஹு தஆலா இடத்திலிருந்து நபிப்பட்டமும் குர்ஆன் என்னும் வேதமும் எனக்கு வந்திருக்கின்றன. மலக்குகளுக்கு இராஜராகிய ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து எனக்கு அப்பட்டத்தைச் சூட்டி, வேதத்தையும் ஒப்புக்கொடுத்த அன்று முதற்கொண்டு, தீன் என்னும் எனது மார்க்கத்தைப் பிரஸ்

தாபம் பண்ணி வருகிறேன். மக்கமா நகரத்தார் அநேகர் எனக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றார்கள். இந்தத்தாயிபு நகரத்தில் நீர் ஒரு தலைவரா யிருப்பதால் உம்மையும் என் மார்க்கத்தில் சேர்த்து இவ்வூராரனைவரையும் நல்வழிப்படுத்தலாம் என்று நாடி நான் இப்போது இங்குவந்தேன்" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சொன்ன இச்சொல்லை அந்த இபுனு அப்துயாலில் என்னும் பாதகன் கேட்டு, தான் அதற்கு உடன்பட்ட பாவனையாய் நடித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களையும், குர்ஆன் வேதத்தையும், இஸ்லாம் மார்க்கத்தையும் புகழ்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி, "நாயகமே, தாங்கள் சொன்ன உத்தம வார்த்தைகளை என்னுடைய குடும்பத்தார்களுக்கு அறிவித்து அவர்களை வசப்படுத்திக்கொண்டு, இன்னும் இரண்டொரு தினத்திற்குள் தங்களிடம் வந்து, தங்கள் சொற்படி வழிப் படுகிறேன். தாங்கள் இப்போது தங்கள் நகரத்துக்குப் போங்கள்" என்று வஞ்சகத்துடன் சொன்னான். இந்தப் பாதகனுடைய சொல்லை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் நம்பிக்கொண்டு, சந்தோஷமுற்று, தாயிபை விட்டுப் புறப்பட்டு மக்கமா நகரத்தை நோக்கி நடந்து வந்தார்கள்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் புறப்பட்டவுடனே அந்த இபுனு அப்துயாலில் என்பவன் விரைந்து போய், தெருக்களில் விளையாடிக்கொண்டு நிற்கும் சிறுவர்களையும், மடமை குடிகொண்ட சில தறுகண்ணர்களையும் ஒருங்கு சேர்த்து, அவர்களுக்கு இதமான வார்த்தை கூறி "அதோ ஒருவன் போகிறான். அவன் வெறிகொண்ட பயித்தியக்காரன். இப்போது இங்கு வந்து விட்டுத் தனிவழியாய்ப் போகிறான். நீங்கள் அனைவரும் விரைந்துபோய், அவனை நெருங்கி நின்று, அவனுடைய உறுப்புகள் சிதைந்து பின்னப்படும்படி கற்களை யெடுத்து அவனை நோக்கி எறியுங்கள்" என்று சொல்லி ஏவினான். உடனே அவர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு விரைவாய் வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை வளைத்து நின்றுகொண்டு கற்களை யெடுத்து எறிந்தார்கள். வந்து வளைந்த பாதகர்கள் கண்கள் சிவக்கப் பற்களைக் கடித்துக் கொண்டு மிக விசையாய் எறிந்த கற்கள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்

களின் திவ்விய திருமேனியில் மழைபொழிவது போலச் சொரிந்தன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஒப்பற்ற சிரசிலும், முகத்திலும், மார்பிலும், கையிலும், காலிலும் கற்கள் வந்துபட்டன. அந்த பாதகர்கள் அம்மட்டோடேனும் விடவில்லை. கல்லாலெறியத் தொடங்கின அந்த ஸ்தானத்திலிருந்து, கர்னுத்தாலிபு என்னும் இடம் வரையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கிக் கல்லாலெறிந்து துரத்திக் கொண்டு வந்து அந்தத் தலத்தில் விட்டு விட்டுத் திரும்பினார்கள். அப்பாதகர்கள் எறிந்த கற்களில் ஒன்று நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் ஒரு முழந்தாளில் தாக்கி ஊறு பட்டு உதிரம் ஒழுகிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் முழந்தாளிலுண்டான காயத்தின் வருத்தத்தையும், பசிவேதனையையும் சகித்துக் கொண்டு, பகைவர்கள் தொடர்ந்ததால் விரைந்து நடந்து வந்து சரீர அயர்வில் சோர்ந்து, "இத்தனையும் அல்லாஹு தஆலாவினால் நடக்கும் சோதனையே யன்றி வேறல்ல. அவன் செய்வதெல்லாம் நன்மையின் பொருட்டே யாகும்" என மனந்தேறி அந்தத் தலத்தில் தங்கினார்கள்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சற்று நேரம் அங்கே தங்கி இளைப்பாறின பின், ஆகாயத்தை யண்ணாந்து பார்த்தார்கள். அப்போது ஜிபுறயீல் அலைஹிஸ் ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை விளித்து சலாம் சொல்லிக் கொண்டு வந்தார். அவர் வருவதைக் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். பிறகு ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நெருங்கி நின்று "யாறஸூலல்லாஹ்! தாங்கள் அஞ்சாதீர்கள். மனம் வருந்தாதீர்கள். இப்போது தங்கள் ஊழியத்திற்காக மலைகளுக்கு அதிகாரியான ஒரு மலக்கை அல்லாஹு தஆலா அனுப்பியிருக்கிறான். அவர் தங்களின் சத்துருக்கள் எவ்வளவு திரளாயிருந்தாலும் நாசமாக்கிவிடுவார்" என்று கிருபையுடன் சொல்லி விட்டு வானுலகம் சென்றார். ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் இவ்விதம் சொல்லி விட்டுச் சென்ற அந்த க்ஷணநேரத்தில் மலக்குகளுள் மலைகள் எல்லாவற்றிற்கும் அதிகாரியான ஒரு மலக்கு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்க

ளிடத்தில் வந்தார். அவர் எத்தன்மையினர் எனில், உலகிலுள்ள பருவதங்கள் அனைத்தையும் தமது ஒரு கையினால் பிசைந்து புழுதியாக்கி. சமுத்திரத்தில் இறைத்து நாசஞ் செய்யும் சக்தியுள்ளவர்; எங்கும் பரந்தேயும் வடவைத் தீயையும் அறத் தொலைக்கும் சினமுள்ளவர்; மேற்றிசை, கீழ்த்திசை யென்னும் மஷ்ரிக் மக்ரிபு மட்டும் தொடக்கூடிய நெடிய இருகைகளையு முடையவர்; விண்ணை மண்ணாகவும் மண்ணை விண்ணாகவும் புரளச் செய்யும் பலாட்டிய முள்ளவர்; கண்ணிமைப்பொழுதிற்குள் ஆகாயமிரிவெங்கும் திரிந்துவரும் வரம்பெற்றவர்; எந்த நேரத்திலும் அல்லாஹு தஆலாவின் ஆஞ்ஞைக்கு செவிசாய்த்து நின்று உற்றுக்கேட்ட வண்ணமாயிருப்பவர். இவ்வித வீரமமைந்த அம்மலக்கு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சமூகம் வந்து நின்று ஸலாம் சொன்னார். அவரை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் உபசரித்து இருக்கும்படி சொன்னார்கள் அப்போது அவர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்ல மவர்களுக்கு அருகில் மிகமரியாதையுடன் உட்கார்ந்து கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! எல்லா வல்லமையுள்ள அல்லாஹு தஆலா என்னைத் தங்கள் ஊழியத்திற் சென்று கட்டளை பண்ணி அனுப்பினான், அதனாலேதான் நான் இப்போது இங்கு வந்தேன். தாங்கள் என்பேரில் கிருபை கூர்ந்து, திருக்கண் சாத்தி ஏதும் கட்டளை பண்ணுவீர்களானால், அதை நான் மறுக்க மாட்டேன். இப்போது, தங்கள் ஒப்பற்ற கலிமாவைச் சொல்லி வழிப்படாதவர்கள் வசிக்கும் ஊர் எது? தங்கள் மனம் நோவப் பகைத்தவர்கள் யார்? தங்கள் சொல்லுக்கு அடங்காதார் இருக்கும் இராஜ்ஜியம் எது? தங்கள் இருதயத்திற்கு பொருத்த மில்லாத திசை எது? சொல்லுங்கள். உடனே அந்தத்திசையையும் இராஜ்ஜியத்தையும், ஊரையும் பகைவர்களையும் ஒருங்கே வாரி சமுத்திரத்தில் ஆழ்த்திவிடுகிறேன். இல்லாவிடில், ஒருபருவதத்தினால் மண்ணுடன் மண்ணாகும்படி அரைத்துவிடுகிறேன். எனது பராக்கிரமத்தைத் தாங்கள் அறியுங்கள்" என்றார். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அவரை நோக்கி "மலக்கே, நீ சொன்ன பிரகாரம் என் பகைவர்கள் அனைவரையும் நாசம் செய்துவிட்டால், இனி எனது மார்க்கத்தில்

பிரவேசித்துக் கலிமாச் சொல்லுகிறவர் யார்? இராஜ்ஜியம் முழுமையிலும் என் பகைவர்கள் தானே வசிக்கிறார்கள்? அனைவரையும் எப்படி சங்கரிக்கக்கூடும்? நான் அனுபவிக்கும் துன்பம் எல்லாவற்றையும் அல்லாஹு தஆலா என் இருதயத்தை சோதிக்கும்படியே அனுப்பினான். அதையறிந்து நான் பொறுமையுட னிருப்பது தான் என் கடன். நான் அனுபவித்த துன்பத்திற்காக மனிதர்களை நாசஞ்செய்வது ஒழுங்கல்ல. சினத்தை அடக்குவது மகா உத்தமம். இப்போது உள்ளபகைவர்கள் தங்கள் தங்கள் மனப்பொறாமை நீங்கி, எனக்கு வழிப்பட்டு, இக்காலத்தில் இணங்காமல் போன போதிலும், இவர்கள் சந்ததியார்களாவது பிற்காலத்தில் எனது மார்க்கத்தில் பிரவேசிப்பார்களல்லவா? ஆனபடியால் நாம் சினந்து நிற்பது நியாயமல்ல. நீர் இப்போது வானுலகம் செல்லும். இனி நான் உம்மை நினைக்கும் காலங்களில் என்னிடம் வாரும்" என்று சந்தோஷத்துடன் சொன்னார்கள். உடனே அந்த மலக்கு, நியாயம் என எண்ணிப் போய்விட்டார். பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் அந்த இடத்திலேயே எழுந்தருளி யிருந்தார்கள்.

44-வது அத்தியாயம்.

அத்தாஷ் ஈமான் கொண்டது.

கலிச்சந்த விருத்தம்.

முத்தா லேதான் முன்ன ரமைந்த விறசூல்நா
லெத்தா ரோரா லூறஃ தெய்தி யும்மிறைவ
னைத்தா னேரே நின்றுவ ணங்கி யுறும் போதில்
அத்தா சீமான் கொண்டதை யன்பினறைவாமே.

இதன் பொருள்.

முன்னர் ஆரம்பத்தில் முத்தொளியால் அமைந்த றஸூல் நாயகம் தங்களுடைய காலில், அணைப்புதலையுடைய காபிரீன்கள் அடித்த கற்களாலே காயம் பட்டிருப்பதைத் தாங்களொரு பொருட்டாகப் பார்க்காமல், அல்லாஹு தஆலாவின் சமூகத்தை நோக்கி நோகநின்று தொழுது தீர்த்திருக்கும் போதில், அத்தாஷ் என்னும் பெயரையுடையவன் வந்து ஈமான் கொண்ட சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறைகலை புகழ்ந்த செவ்வி முஹம்மது தனித்துத்தாக
நிறையொடும் பசியுந்துன்னி நீ ணெறி யிருப்பவனு
றிறபீஆ புதல்வர் தம்மி லிருவர்களினிது நோக்கிக்
குறைவிலாமனத்தினேர்ந்து மனையிடங் குறுகினாரால்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மலைகளுக்கு அதிகாரியாகிய வானவர் சென்ற பின்பு, அந்தக் கர்னுதாலிபின் என்னும் மார்க்கத்தில் பசியினால் வருந்தி உடல் சோர்ந்து தன்னந்தனியே உட்கார்ந்திருந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்விதம் உட்கார்ந்திருப்பதை அங்குள்ள றபீஆவுடைய மக்களில் இரண்டு பேர்கள் வந்து கண்டு, மனமிரங்கி அதிவிரைவாய் தங்கள் மனைக்குச் சென்று தங்கள் அடிமையாகிய அத்தாஷ் என்பவரை யழைத்து "அத்தாஷே, இன்ன இடத்தில் ஒருவர் பசியால் இளைத்துக் களைப்புடன் உட்கார்ந்திருக்கிறார்; நீ மிகவிரைவாய்க் கொஞ்சம் திராக்ஷைப் பழம் கொண்டு போய்க் கொடுத்து, அவருடைய பசியை ஆற்றிவா" எனக்கட்டளை பண்ணினார்கள். உடனே அந்த அத்தாஷ் என்பவர் கொஞ்சம் திராக்ஷைப் பழத்தையெடுத்து, ஒரு தட்டில் வைத்துத் துணியால் மூடிக் கையிலேந்திக்கொண்டு, அதிக விரைவாய் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சமுகத்தில் வைத்தார். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவரை நோக்கி, சந்தோஷத்துடன் இருக்கச் சொல்லிவிட்டு, தங்கள் வலது கைகொண்டு தட்டைத் திறந்து, பழத்தை யெடுத்துப் பிஸ்மில் சொல்லித் தின்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கனியைபுசித்துப் பசியாறின பின், மனமகிழ்ந்து, அத்தாஷை நோக்கி "நீர் எந்த ஊர்? உமதுபெயர் என்ன?" என்று உபசாரத்துடன் கேட்டார்கள். அப்போது அத்தாஷ் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பணிந்து மரியாதையுடன் நின்று "நாயகமே, நான் நீனவா என்னும் நகரத்தி

லுள்ளவன். ஈசுறானி மார்க்கக்காரன். றபீஆ என்பவரின் வீட்டு அடிமை. என் பெயர் அத்தாஷ்" என்றார். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவரை நோக்கி "அத்தாஷே, உமது நகரத்தில் தானே யூனுசு நபி குடியிருந்தார்கள்?" என்று கேட்டார்கள். உடனே அத்தாஷ், தமது இருதயத்திற்குள்ளே நீண்ட காலத்திற்கு முன்னுள்ள யூனுஸ் நபியை இவர் எப்படியறிவார் எனச் சிந்தித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "தாங்கள், யூனுஸ் நபியை எப்படி யறிவீர்கள்?" என்றார். அப்போது "அத்தாஸே அந்த யூனுஸ் அல்லாஹு தஆலாவின் நபி எனப்பட்டம் பெற்ற றஸூல். நானும் நபி என்னும் பட்டம் பெற்ற றஸூலே. ஆனபடியால் அந்த யூனுஸ் நபி எனக்கு சகோதரராவர். மற்ற நபிமார்களும் அப்படியே" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பதில் சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்டவுடன் அத்தாஸ் என்பவர், இவர் அல்லாஹு தஆலாவுடைய உண்மையான றஸூல் தான் என விசுவாசம் கொண்டு, 'நற்கதி பெற்றேன்' என்று பேரானந்தம் கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதமலர்களில் விழுந்து கலிமாச் சொல்லி முஸ்லிமானார். அத்தாஸ் ஈமான்கொண்டு இஸ்லாத்திலானபின் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார். இவர் ஈமான்கொண்ட சங்கதியை றபீஆவுடைய மக்கள் கேட்டு, அட்டகாசம் செய்து "நமது தொண்டன் விபரீத மாயத்தில் சிக்குண்டான்" என எண்ணி யெண்ணி மனம் நைந்திருந்தார்கள்.

45-வது அத்தியாயம்.

ஜின்கள் ஈமான் கொண்டது.

கலி விருத்தம்.

பொன்னி ருட்டைப் புரக்குமு ஹம்மதி
னன்ன பத்தடி நன்னில னங்கியே
ஜின்னி னங்களீமான் கொளுஞ் செய்தியிற்
முன்னு காரணம் யாவையுஞ் சொல்லுவாம்

இதன் பொருள்

பொன்னினா லலங்கரிக்கப்பட்ட சுவர்க்கலோகத்தை யரசாட்சி செய்யும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய நல்ல நயமான பாதகமலங்களில் வந்து வணங்கி ஜின்கூட்டங்கள் ஈமான்கொண்ட செய்திகளிலடங்கிய காரணங்கள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

படர்ந்துவண் டினந்தேனுண்டு செவ்வழி பாடுங்கஞ்சத்
தடந்திகழ் கர்னுதஆலி பெண்ணுமத் தலத்தை நீந்திக்
கதந்தனிற் குபிரென் றோதும் களிறட ரரியே றென்ன
நடந்துநன் னகுலாவென்னுந் தலத்தினை நண்ணினாரால்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அத்தால் என்பவர் கலிமாச் சொல்லிப் பரிசுத்த மார்க்கத்தில் பிரவேசித்துக் களிப்புடன் சென்ற பிறகு அந்தக் கறுனுதாலிபு என்னும் தலத்தைவிட்டு நீங்கி, நகுலாவென்னும் தலத்தில் வந்தார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்து எங்கும் காரிருள் பரந்தது. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அன்றிரவு ஒரு ஜாகையில் தனியே தங்கியிருந்தார்கள்.

அவர்கள் இப்படியிருக்கையில், பஞ்சபாதகங்களின் வழியையே காட்டி மானிடர்களை அறக்கெடுக்கும் தீயோனாகிய இபுலீசு என்பவன், தன்மக்களையும் ஜின்களையும் அழைத்துக் கூட்டமிட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் குறித்து சில பிரசங்கஞ் செய்தான். பிறகு சில ஜின்களை நோக்கி "ஜின்காள் நீங்கள் புறப்பட்டு இராஜ்ஜியங்களெங்கும் சுற்றித்திரிந்து முஹம்மது இப்போது இன்ன இடத்தில் இருக்கிறார் என்பதை அறிந்துகொண்டு அதிக விரைவில் என்னிடம் வாருங்கள்" என ஆக்ஞை செய்தான். தங்கள் அரசனாகிய இபுலீஸ் இவ்விதம் ஆக்ஞை செய்தவுடன், அந்த ஜின்கள் புறப்பட்டுத் திசாமுகங்களிலுள்ள எல்லா இராஜ்ஜியங்களிலும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்ல மவர்களைத் தேடிச்சென்றன. அந்த ஜின்களில் ஒன்பது ஜின்கள் ஒருங்கு சேர்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடிக்கொண்டு, அறபு இராஜ்ஜியத்துக்கு வந்தன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் நகுலா என்னும் இடத்தில் இருந்து அல்லாஹு தஆலாவை அந்தரங்கத் தொழுகை தொழுது ஓதிக் கொண்டிருந்தனர். அன்றிரவு, மேற்படி ஒன்பது ஜின்களும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிருக்கும் தானத்திற்கு வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஓதிக் கொண்டிருக்கும் இனிய குரலோசையைக் கேட்டு, ஒரு இடத்தில் நின்றுகொண்டுசந்தோஷத்துடன் நோக்கி, இப்படி ஓதி வணக்கஞ் செய்து கொண்டிருக்கும் இவர்தான் முஹம்மது நபி. இவர் ஓதும் இதுதான் குர்ஆன் வேதம் என நிச்சயித்து, ஆனந்தம் கொண்டு ரோமங்கள் சிலிர்த்து, மனமாயை அனைத்தையும் அறத் தொலைத்து, இருதயத்தூய்மை கொண்டு, அவ்வொன்பது ஜின்களும் ஒருமித்து "நாம் இத்தனை காலம்வரையும் வழிகேட்டிலிருந்தோம். இன்று நமக்கு நற்காலம் கிடைத்தது. இவர் உண்மையான றஸூல் தான். நாம் இவருக்கு ஈமான்கொண்டு கலிமாச்சொல்லி, முஸ்லிமாய்விடலாம் என முடிவு செய்துகொண்டு, அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிருக்கும் இடத்தில் வந்து, அவர்கள் சமுகத்தில் பணிந்து நின்று "யாறஸூலல்லாஹ்! எங்கள் தலைவனாகிய இபுலீஸ் எங்களையும், இன்னும் சில ஜின்களையும், தாங்கள் இருக்கும் தலத்தை அறிந்து வரும்படி அனுப்பினான். அப்படியே அந்த ஜின்கள் பலதிசைகளிலும் தங்களைத் தேடிப் போயிருக்கின்றன. நாங்கள் ஒன்பது பேர்களும் இங்கே வந்தோம். ஆனால், பிற்காலத்தில் நபியொருவர் பிறப்பாரென்று முன்னுள்ள வேதாகம சாஸ்திரங்கள் சொல்லியிருப்பவற்றை நாங்கள் அறிந்திருந்தோம். அவ்வாறே தங்களை இன்று நாங்கள் கண்குளிரக்கண்டு கொண்டோம். இத்தக்ஷணமே தாங்கள் எங்களுக்கு இரங்கி, கலிமாவைச் சொல்லித்தந்து எங்களை இரக்ஷிக்க வேண்டும்" என்று மன்றாடின. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கலிமா சொல்லிக்கொடுத்தார்கள். உடனே அந்த ஒன்பது ஜின்களும் ஈமான்கொண்டு முஸ்லிமாய், தங்கள் இருப்பிடம் நோக்கிச்சென்றன.

இந்த ஒன்பது ஜின்களும், முஸ்லிமாகி தங்கள் ஜாதியார் இருக்கும் இடஞ்சென்று, தங்கள் ஜாதியார்களின் முதன்மையான அநேகரை ஒருங்கு திரட்டி, தாங்கள் ஒன்பதுபேர்களும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தேடிக்கொண்டு அறபு இராஜ்ஜியத்திற்குச்சென்றதும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக்கண்டதும், தாங்கள் ஈமான்கொண்டு கலிமாச் சொன்னதும் இன்னபடியென விவரமாகச் சொல்லிக்காட்டி "ஜின்களுக்கு நாயகமானவர்களே! இப்போது மக்கமா நகரத்தில் முஹம்மது நபி பிறந்து, தமது இஸ்லாம் என்னும் மார்க்கத்தைப் பிரஸ்தாபம் செய்து கொண்டிருப்பது உண்மை. அவர் உண்மையான நபியும், றஸூலுமானவர். அவருடைய குர்ஆன் சத்திய வேதம். அவருடைய மார்க்கம் பரிசுத்த மார்க்கம். நாம் அவரை தரிசிக்காமலிருப்பது மகா பாவமாகும். நாம் இதுவரையும் பாதகனாகிய இபுலீசுக்குக் கீழ்ப்படிந்து, அவனுடைய தீங்கான ஏவலுக்கு இசைந்து, கொடியவர்களாய் நாட்கழித்தோம். வேறு உண்மையான தெய்வத்தை அறிந்து ஒருபொழுதும் வணங்கியறியோம். நமது செய்கை யனைத்தும் நல்லோர்களுக்குத் தீங்கு செய்து, அவர்களை வழிகேட்டி லாக்குவதே யன்றி, வேறொரு நற்கருமத்தையும் செய்யவில்லை. நாம் ஒழுகி நடப்பதெல்லாம் பாதாள நரகத்தில் கொண்டு தள்ளும் பாதையே யன்றி வேறல்ல. நாம் இனிமேலும்கொடியோனாகிய இபுலீஸின் அக்கிரமமான ஆணைக்கு கீழ்ப்பட்டுக் கெட்டுப்போவது நியாயமல்ல. மோக்ஷமடையும் வழியை யடையவேண்டும். மனிதர்களில் அநேகர் முஹம்மது நபிக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்கள். நாமும் அவ்வாறு அவருக்குக் கீழ்ப்படிந்தால், ஒப்பற்ற முத்தியும் மகிமையும் செல்வமும் நமக்குக் கிடைக்கும். முன்னுள்ள வேதங்களுக்கும், ஆகமங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் இதுதான் சம்மதம். இதற்கு நாம் மாறு செய்வது மகா தீங்காகும். இதைப்பற்றி நாம் ஆழ ஆராய்ந்து, முஹம்மது நபிக்குக் கீழ்ப்படிவதற்காகவேண்டி இவ்விருந்து கட்டாயம் புறப்பட்டுப் போகவேண்டும்" என்றும் சொல்லின.

இதைக்கேட்ட மற்ற ஜின்களெல்லாம் ஒருமித்து, உள்ளம் உவந்து, நாம் முஹம்மது நபிக்கு ஈமான்கொண்டு வழிப்படுவதுதான் மேன்மையென்று முடிவு செய்துகொண்டு, உடனே தாங்கள் வசிக்கும் இடத்தை விட்டுப்புறப்பட்டன. அன்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் ஈமான்கொள்ள நாடிப் புறப்பட்ட ஜின்கள் பன்னீராயிரம்.

மேற்படி பன்னீராயிரம் ஜின்களும் புறப்பட்டு முஸ்லிமான ஒன்பது ஜின்களையும் கூடக் கூட்டிக்கொண்டுவந்து, மக்கமா நகரத்திற்கு அருகில் ஒருதலத்தில் தங்கியிருந்து கொண்டு, இக்காரியத்தை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குத் தெரிவிக்கும்படி ஒரு ஜின்னை தூதாக மக்கமா நகரத்திற்கு அனுப்பின. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த நகுலா என்னும் தானத்தை விட்டெழுந்து, மலக்குகள் எண்ணிறந்தோரின் பாதுகாப்பில் நடந்து மக்கமா நகரம்வந்து சேர்ந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நகரத்திற்குள் பிரவேசித்தார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வந்தனு திருந்த செவ்வி மதிமுஹம் மதுவைக் கண்டு
கந்தமென் மலர்த்தாள் வீழ்ந்து கைகுவித்தெழுந்து போற்றிச்
சிந்தையின் மகிழ்ந்தன் பாக ஜின்களால் விடுக்கவந்து
சந்தியா னென்னச்சாற்றிப் பின்வருஞ் சாற்று மன்றே.

எங்கடங் குலத்தி னுள்ளா ரெண்ணிலர் நகர்க்க னித்தாப்
மக்குவின் கனிகை போய்நும் மலர்ப்பதங் கண்டு தீனி
னிங்கிதத் தொடுமீ மான்கொண் டேகுதற் கிசைந்து நின்றா
ரங்கெழுந் தருள வேண்டு மென்றினி துரைத்த தன்றே

வசனம்.

அப்போதே தூதாகவந்த ஜின்னும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைத்தரிசித்து, பாதமலர்களைத்தொட்டு முத்தமிட்டு நின்று யாறஸூலல்லாஹ் நான்ஜின் கூட்டத்தினால் விடப்பட்ட தூதன். எங்கள் ஜாதியாகிய பன்னீராயிரம் ஜின்கள் திரண்டு, தங்களுக்கு ஈமான்கொண்டு வழிப்படுவதற்காகவேண்டி, இவ்வூர்ப்புரத்தில் விடுதியிட்டிருக்கிறார்கள். தாங்கள் கிருபை புரிந்து அந்த இடத்திற்கு எழுந்தருள வேண்டும்" என்றது. இதைக்கேட்ட மாத்திரத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்கள் உள்ளங்குளிர்ந்து, முகமல மலர்ந்து, ஆநந்தத்தில் மூழ்கி பிஸ்மில் சொல்லி எழுந்து நகர்ப்புரத்தில் கூடியிருக்கும் ஜின்கூட்டத்திடம் வந்தார்கள். கருமேகக்குடை நிழலில் பாதமலர் தரையில் தோயாமலும், கஸ்தூரி மணம் பரிமளிக்கும் படிக்கும் வந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை அந்த ஜின்கள் கண்டு, சந்தோஷமுற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு வஸல்லமவர்களைவாழ்த்தி, "யாறஸூலல்லாஹ்! நாங்கள் அனைவரும் தங்களுக்கு ஈமான்கொண்டு கீழ்ப்படிந்து ஒழுகவேண்டி வந்திருக்கின்றோம். ஆனால், அல்லாஹு தஆலா தங்களுக்கு நபிப்பட்டம் கொடுத்தது உண்மைதான் என்பதற்கு ஒரு தகுந்த சாக்ஷி வேண்டும். அப்படித் தாங்கள் அத்தாட்சி பண்ணினால் இன்று நாங்கள் அனைவரும் தங்களுக்குக் கீழ்ப்படிவோம்" எனக்கூறின.

இச்சொல்லை ஜின்களுக்குத் தலைமையான ஜின்னே முக்யமாக சொல்லிற்று. அதற்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்த தலைமை ஜின்னை நோக்கி "நான் நபிதான் என்பதற்கு சாக்ஷியம் கேட்கிறீர்கள். வனவிலங்குகளைக் கொண்டா பக்ஷிசாலங்களைக் கொண்டா? மற்ற ஜெந்துகளைக் கொண்டா? அல்லது விருக்ஷங்களை கொண்டா? எதைக்கொண்டு உங்களுக்கு சாக்ஷியம் சொல்லுவிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். அப்போது அந்தத்தலைமையான ஜின், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நோக்கி, "யாறஸூலல்லாஹ்! இந்த வழியிலிருக்கும் விருக்ஷங்களில் ஒன்று தங்கள் சமூகத்தில் வந்து நின்று, தாங்கள் உண்மையான நபிதான் என்று ஒரு சொல் மாத்திரம் சொன்னால் போதும். நாங்கள் கலிமாச் சொல்லி விடுகிறோம்" என்றது. உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அங்கு நின்ற வஞ்சிமரம் ஒன்றை விளித்து "நீ உன்வேர்களில் சிறிதும் பழுதுறாமல் பெயர்ந்து இங்கு வா" என்று அழைத்தார்கள். அப்போதே அந்த வஞ்சித்தரு தனது நுண்ணிய வேர்களில் ஒன்றாவது சிதையாமல் அசைந்து நிலையை விட்டுப் பெயர்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சமூகத்தில் நகர்ந்து வந்து நின்று கொண்டு, அறபு பாஷையில் தனது பணர்களைக் கொண்டு தரையில் கலிமாவை யெழுதி, தலைசாய்த்து நபிநாயகம் ஸல்லல்

லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதமலர்களைப் பணிந்து நிமிர்ந்து நின்றது.

பிறகு நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்தத் தருவை நோக்கி "நீ இங்குள்ள ஜின்கள் அனைத்தும் காதாரக் கேட்கும் வண்ணம் நான் இன்னான் என்பதை விவரமாகச்சொல்" என்று ஆக்ஞை செய்தார்கள். உடனே அம்மரம் "தாங்கள் அல்லாஹு தஆலாவுடைய உண்மையான றஸூல்" என்றது. தரையில் நீண்டகாலமாக வேரூன்றி நின்ற அந்த வஞ்சித்தரு பெயர்ந்துவந்து பணிந்து நின்று சாக்ஷி சொன்ன போதே, அந்தப் பன்னீராயிரம் ஜின்களும் காதாரக் கேட்டு உள்ளங்குளிர்ந்து, ஆநந்த பரவசமுற்று, ஒவ்வொரு ஜின்களும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாதமலர்களைத் தொட்டு முத்தமிட்டுக்கொண்டு, கலிமாச் சொல்லி முஸ்லிமாயின. பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் சமூகத்தில் நிற்கும் விருக்ஷத்தை நோக்கி அதன் தானத்தில் போய்த் தங்கும்படி உத்தரவு செய்தார்கள். அப்படியே அது தன் தானத்தில் போய் முன்போலத் தங்கிற்று. பிறகு ஜின்களில் தலைமையான ஜின், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! நாங்கள் அனைவரும் இப்போது தங்களுக்கு வழிப்பட்டுவிட்டோம். இனி நாங்கள் உண்ணும் உணவுகள் இன்னவை என அறிவிக்க வேண்டும்" என்று கேட்டது. அதற்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அதை நோக்கி "இனி நீங்கள் தின்ன வேண்டியவை விலங்குகளிலும், பட்சிகளிலும், அல்லாஹு தஆலாவின் கட்டளைப் பிரகாரம் தக்பீரால் அறுப்புண்டவை யெல்லாம் ஆகும்" என்று உத்தரவு செய்தார்கள். பிறகு அந்த ஜின் "எங்கள் வாகனங்கள் உண்ணவேண்டியவை எவை" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடம் வினவிற்று. அப்போது நபிநாயக மவர்கள் முஸ்லிமான மனிதர்களின் வாகனங்கள் தின்று ஒழித்தவை எவையோ அவை அடங்கலையும் உங்கள் வாகனங்கள் தின்னலாம்" என்று கட்டளையிட்டார்கள். பிறகு அந்தப் பன்னீராயிரம் ஜின்களும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாதமலர்களைப்

பணிந்து துதித்து, உத்தரவு பெற்றுக்கொண்டு, தங்கள் இருப்பிடம் நோக்கிச் சென்றன.

மேற்படி ஜின்கள் கலிமாச் சொன்ன இரவிலே, அந்தப்பன்னீராயிரம் ஜின்கள் ஈமான்கொண்டு முஸ்லிமாய், தங்கள் ஜாகைக்குப் போய்விட்ட பிறகு, அன்றிரவிலேயே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்த இடத்தைவிட்டுத் தங்கள் மாளிகைக்கு வந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மாளிகைவந்து சேர்ந்த சற்று நேரத்திற்குப்பின் சூரியன் உதயமாயிற்று. சூரியன் எழுந்த பின் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்கள் அஸ்ஹாபிகள் அனைவரையும் அழைப்பித்து, தாங்கள் நடுநாயகமாய் வீற்றிருந்துகொண்டு ஜின்கள் ஈமான் கொண்டவரலாறு அனைத்தையும் விவரத்தோடு சொல்லிக்காட்டினார்கள். சொல்லித் தீர்ந்தபின், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "எனது அருமைத்தோழர்காள்! முஸ்லிமானவர்கள் தின்றுமீந்த இறைச்சியனைத்தையும் முஸ்லிமான ஜின்கள் தின்னும்படி நான் கட்டளை பண்ணிவிட்டேன். ஆகையால், இன்றுதொட்டு முஸ்லிம்கள் தின்று மீந்தவை யனைத்தையும் வெளிப்புறத்தில் எறிந்து விடுதல் கடனாகும்" என்றார்கள்.

பன்னீராயிரம் ஜின்கள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குக் கீழ்ப்படிந்து ஈமான் கொண்ட சமாசாரத்தைக் கேட்ட அஸ்ஹாபிகள் அனைவரும் அகங்களித்து ஆனந்தங் கொண்டாடினார்கள்.

46-வது அத்தியாயம்.

ஆயிஷா நாயகியின் திருமணம்.

றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இஸ்லாம் மதப்பிரசாரத்தை வெகு மும்முரமாக செய்து கொண்டிருந்ததன் பயனாக, அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும், நபி பெருமானாரவர்களுடனேயே அடிக்கடி இருந்து வரும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தது. ஆயிஷா நாயகிக்கு அப்போது 5 அல்லது 6 பிராயம் இருக்கும். ஆனால் அப்

போதைய நிலைமையோ மிகவும் கொடியது. அதாவது குறைஷிய காபிர்கள் நாளடைவில் விளைவித்துச் செல்லும் கஷ்ட நஷ்டங்களுக்கு ஓரளவில்லை. இஸ்லாத்தை தழுவுவோர் பேரில் அநேக கொடுமைகளும் அக்கிரமங்களும் செய்யப்பட்டன. அக்கொடுமைகள் எப்பேர்பட்டவை என்பதை சொல்லி முடியாது. அமைதி, சமாதானம் என்ற பொதுஜன கதிமோக்ஷம் போனவிடம் தெரியாமலிருந்தது. மனம் நடுங்குகின்றது; உள்ளம் பதறுகின்றது. அல்லாஹ்வுடைய உண்மை தீர்க்கதரிசியாகிய நமது நாயகத்தை சிரச்சேதம் செய்யவேண்டுமென்ற சதியாலோசனைகள் பகைவர்களுக்கிடை நடந்து கொண்டிருந்தன. எளிய முஸ்லிம்களை நிர்வாணமாக்கி சூடான மணலில் அவர்களைக்கிடத்தி, அவர்களின் சரீரங்களின் மீது பாரமான கற்களைத் தூக்கிவைத்து, "நீங்கள் முஹம்மதுடைய கலிமா ஓதுவதைத் தவிர்த்து, விக்கிரக ஆராதனையைக் கைக்கொள்ளுகிறீர்களா?" எனக் கேட்பார்கள். இது மட்டுமோ? நபி பெருமானாரவர்கள் மீது கற்கள் எறியப்படும்; அவர்களது திருச் சிரசின் மீது குப்பை கூளங்கள் கொண்டு வந்து போடப்படும். அத்தனைக்கும் இருலோக ரக்ஷகரான நம் நபி பெருமானாரவர்கள், அந்தப் பகைவர்களுக்கு ஒன்றும் சொல்லாமலே வானத்தை அண்ணாந்து பார்த்து மௌனமாயிருந்து விடுவார்கள். இச்சந்தர்ப்பத்தில், அவர்களது பொறுமை பெருந்தன்மையை விளக்கிக்காட்டிக் கொண்டிருந்தது.

ஒருபுறம் இவ்வாறிருக்க, மற்றொருபுறத்தின் நிகழ்ச்சிகளைக் கவனிப்போம். ஹஜ்ரத் கதீஜா பிராட்டியார், இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உலகத்தைவிட்டு மரித்துச் சென்றிருந்தார்கள். அடுத்தாற்போல் நபி பெருமானாரவர்களின் பெரிய பிதாவாகிய அபூத்தாலிப் அவர்களும் காலஞ் சென்றிருந்தார்கள். அந்தோ! நம் நபிபெருமானாரவர்கள் எதற்கென சஞ்சலமடைவது? யாருக்கென துக்கப்படுவது? கஷ்டகாலத்தில் தமக்கு பலவித அரிய மொழிகளைக்கொண்டு ஆறுதலேற்படுத்தி வந்த அத்தியந்த தோழருக்கொப்பாக இருந்து வந்தவரன்றோ கதீஜா பிராட்டியார்.

நபிபெருமானாரவர்கள் கதீஜா பிராட்டியாரின் விஸ்வாசம், அன்னியோன்னியம், ஒத்தாசை முதலியவைகளைப் பற்றி நினைத்து

வருந்தி வந்தார்கள். தனியே இருந்துகொண்டு அவர்களது தோற்றத்தைத் தம் மனத்துள் அமைத்துப் பார்ப்பார்கள்.

இந்த நிலைமையில், ஒருநாள் பகைவர்கள் நபிபெருமானாரவர்களுக்கு எதிர்ப்பாராத கடுந்துன்பங்களை இழைத்தனர். அவற்றை அனுபவித்து நபிகள் நாயகம் அவர்கள் வீட்டிற்கு வருவார்கள்; வீடு கதீஜா நாயகியின்றி காலியாய்க் கிடந்தது. சீமாட்டி என்ற அந்தஸ்தை முன்னிட்டு குறைஷிக் காபிர்களை இச்சந்தர்ப்பத்தில் அதட்டிப் பெருமானாரவர்களுக்கும் ஆறுதல் செய்துவைக்கத் தகுந்தவர்களாயிருந்துவந்த அந்த மாது சிரோமணியைக் காணோமே என்ற துக்க உணர்ச்சி நபிபெருமானாரவர்களுடைய மனதில் உதித்து, அவர்கள் இரவு முழுதும் மனக் கலகத்தையே அடைந்தார்கள்.

இந்த நிலைமையில் மறுநாள் விடியும் காலமானதும் "ஹகீம் இப்னுல் அவ்கஸ் உடைய புதல்வியும், உஸ்மான் பின் மஸ்தோன் என்னும் பிரபல ஸஹாபியின் மனைவியாருமாகிய கௌலா என்ற பெண்மணியானவர், நபி பெருமானாரவர்களுடைய சந்நிதானத்திற்குச் சென்று, அவர்களுடைய பரிதாப நிலைமையையுணர்ந்து, "றஸூலுல்லாஹ்வே! தாங்கள் ஏன் மறு நிக்காஹ் செய்து கொள்ளக் கூடாது? தனிமையில் மனகலக்க மடைந்து கொண்டிருந்தால் இயற்கையாகுமா?" என முறையிட்டார்கள்.

அப்போது நபிபெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஏ கௌலாவே! கதீஜாவைப் போன்ற நல்லாசாரங்களும், விசுவாசமும், அந்நியோந்நியமும் மற்றும் லக்ஷணங்களும் ஒருங்கே படைத்துள்ள சௌபாக்கியவதி இப்போது கிடைத்தல் சாத்தியமா?" என விடை பகர்ந்தார்கள். அப்போது கௌலா, "பெருமானே! கதீஜா நாயகியின் லக்ஷணங்களுக்கு மேற்பட்ட லக்ஷணங்களமைந்துள்ள சில பெண்கள் இப்போதும் மக்கத்தில் இல்லாமற்போகவில்லை. ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வியாகிய ஆயிஷா தங்களுக்கு பொருத்தியவர்களேயாவர். ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய புதல்வியாராயும் கன்னிப் பெண்ணாயும் இருந்து வருகின்றார். இவருடைய விருத்தாந்தங்களைத் தாங்கள் நன்கறிவீர்கள்.

நிற்க, இவரை ஆதரிக்க வேண்டுமென்பதற்குரிய கடமையையும் தங்கள்பேரில் கொஞ்சமேனும் இருந்து வருகிறது" என விரிவாய் எடுத்துரைத்தார்கள். அப்போது நபி பெருமானாரவர்கள் சற்றுநேரம் வரையில் தமக்குள் சிந்தித்துப் பார்த்த பின்னர், "கௌலா! சரி உம்மிஷ்டபடியே நீர் இந்த பெண்ணுடைய ஜாகைக்கு சென்று மணம்பேசு. நான் உம்முடைய அபிப்பிராயத்தை நிராகரிக்க விரும்பவில்லை" என்று திருவுளம் பற்றினார்கள்.

அதைக்கேட்ட கௌலா மிக்க சந்தோஷத்துடன் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டிற்குப் போய், ஆயிஷா நாயகியின் தாயாராகிய சௌதா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம், "சகோதரியே! உங்களுக்கு நன்மை உண்டாகுக!" என ஆசி கூறிவிட்டு, "றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சார்பாக நான் ஆயிஷா நாயகியை மணம்பேச வந்திருக்கின்றேன்" என செய்தியை அறிவித்தார்கள். அதைக்கேட்ட ஆயிஷா நாயகியின் தாயாரவர்கள், "ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களது மார்க்க சகோதரர் என்ற உறவைக் கொண்டவர்கள். அதையனுசரிக்கும் போது, அவர்கள் ஆயிஷாவுக்கு சிறிய பிதாவாவார்கள். இம்முறையில் நிக்காஹ் செய்தல் கூடுமா? எல்லாவற்றிற்கும் நீங்கள் சற்று தாமதியுங்கள். வெளியில் போயிருக்கும் ஆயிஷாவின் தந்தையார் வந்தவுடன், இதைப்பற்றி நான் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து உங்களுக்குப் பதிலளிக்கிறேன்" என்றார்கள்.

இதற்குள் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் வீடுவந்து சேர்ந்தார்கள். அவர்களிடம் இச்செய்தி கூறப்பட்டது. அப்பொழுது அவர்களும் தம் மனைவியார் அளித்துள்ளபதிலையே அளித்தனர். அதன்பேரில்கௌலா நபிகள் பெருமானாரவர்கள் சமூகத்திற்கு வந்து, பெண்வீட்டினர் கூறிய மொழிகளை தெரிவித்தபோது, நபிபெருமானாரவர்கள் "கௌலா! நீர் போய் ஸித்தீக் அவர்களுக்கு இவ்வித சம்பந்தம் நம் மார்க்கத்தில் கூடும் என்றும், அபூபக்கர்தான் நம்மார்க்க சகோதரரேயன்றி உடன் பிறந்த சகோதரர் அல்லவென்றும், பெண் தன் தந்தையுடன் பிறந்த

சகோதரர் (சிறிய பிதா) உடனே அல்லது ஒரே தாயிடம் பால் குடித்த சகோதரனுடனே தான் மணம்புரிதல் கூடாது என்றும் கூறு" எனக் கட்டளையிட்டார்கள்.

கௌலா, மீண்டும் பெருமானாரவர்களின் தீர்ப்பை ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற்கு எட்டிவைத்தார். அப்போது அவர்களும், அவர்களது மனைவியாராகிய ஸௌதா அவர்களும் அதே சமயம் ஆயிஷா நாயகியை நபி பெருமானாரவர்களுக்கு மணம் செய்து கொடுக்க சந்தோஷத்துடன் இசைந்து கொண்டார்கள்.

ஏற்கனவே ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களை ஜுபைர் பின் முத்அம் என்பவருக்கு நிக்காஹ் செய்து கொடுப்பதாய் நிச்சயிக்கப் பட்டிருந்ததாகவும், ஆனால் கலியாணத்திற்குரிய எத்தகைய ஏற்பாடும் முடியாமலிருந்தாகவும், நபிபெருமானாரவர்கள் மணம் பேச செய்தி அனுப்பிய பின்னர், ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஏற்கனவே கேட்டுள்ளவர்களிடம் பெருமானாரவர்களின் கோரிக்கையை வெளிப்படுத்தி ஆலோசனை கேட்டபோது, அவர்கள் நபிபெருமானாரவர்களுக்கே ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களைக் கொடுக்கும்படியாக சம்மதித்து விட்டதாகவும் தெரிகிறது.

திருமணமும் பெருமானாரவர்களின் பிராயமும்.

கௌலா, ஹஜ்ரத் ஸித்தீக் அக்பர் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு, பெருமானாரவர்களிடம் ஆஜராகிப் பெண்வீட்டுக்காரர்களின் சம்மதத்தை அறிவித்தபோது, பெருமானாரவர்கள், ஸித்தீக் அக்பர் அவர்களுடைய வீட்டிற்குப் புறப்பட்டுப் போனார்கள். இறைவனது அருளைக் கொண்டு நிக்காஹ் முடிந்தது. இந்த நிக்காஹின்போது நபி பெருமானாரவர்களுக்கு 50 பிராயம் நிறைந்திருந்தது. ஹஜ்ரத் ஆயிஷா நாயகி, நபிகள் பெருமானாரவர்களுக்கு நிக்காஹ் செய்து கொடுக்கப்பட்டபோது, அவருக்கு எட்டுபிராயமிருந்து வந்ததாக திருவுளம் பற்றி இருக்கிறார்கள்.

அல்லாமா அப்துல் கர்மி அவர்கள், தாம் கோர்வை செய்துள்ள "இதாபுல் இஸ்தீஆப்" என்னும் கிரந்தத்தில்,

அபீஉபைதா உடைய வியாக்யானமொன்றை அறிவித்து நம் நபிபெருமானாரவர்கள், ஆயிஷா நாயகியை ஹிஜ்ரத்திற்கு இரண்டு வருஷகாலத்திற்கு முன் மக்காவில் மணம்புரிந்து கொண்டார்களென குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மஹர் (விவாகக்கட்டணம்) விவரம்.

அபூஸல்மா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவுளம் பற்றியிருக்கிறார்கள்:—"நான் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களிடம், நபிபெருமானாரவர்கள் தங்கள் நம்பிராட்டியார்களுக் காக நிக்காஹ்வின்போது நிர்ணயித்துள்ள மஹர் எவ்வளவு?" எனக் கேட்டேன். அதற்கு ஆயிஷா நாயகியவர்கள், "பன்னிரண்டு அவ் கய்யாவும், பன்னிரண்டு நுஷ்ஷும்" (அவ் கய்யா நாற்பது திர்ஹம் நாணயங்களைக் கொண்டது) என்று மொழிந்ததோடு, "நுஷ் என்பது எவ்வளவென உமக்குத் தெரியுமா?" என என்னைக்கேட்டார்கள். நான் "தெரியாது" என்றேன். அப்போது அவர்கள், "நுஷ் அவ்கய்யாவின் அரைவாசி மதிப்புள்ளது" என மொழிந்தார்கள்; இந்த விவரப்படி 500 திர்ஹம் மஹர் என ஏற்படுகிறது.

உத்பா உடைய ரிவாயத்தை யனுசரிக்கு மிடத்து, ஹஜ்ரத் ஆயிஷா நாயகியின் மஹர் 50-திர்ஹம் என்று மட்டுமே தெரிய வருகிறது.

சுருக்கக் கூறுமிடத்து, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கத்தை விட்டும் ஹிஜ்ரத் செய்ததற்கு, 2. அல்லது 3-வருஷங்களுக்கு முந்தியும், ஆயிஷா நாயகிக்கு 8, அல்லது 9-பிராயம் இருந்தபோதும் அவர்களுடைய நிக்காஹ் நிகழ்ந்துள்ளது. இதற்குபின் நபி பெருமானாரவர்கள் ஹிஜ்ரத் செய்யும்படியாக அவர்களுக்கு இறைவனுடைய கட்டளை இறங்கிய போது, அவர்களும் ஹிஜ்ரத் செய்ய ஆயத்தமாய் விட்டார்கள். ஆயினும் ஆயிஷா நாயகியின் இளம்பிராயத்தைப் பாராட்டி அவர்களுடைய பெற்றோர், அவர்களை நபிபெருமானாரவர்களுடன் அனுப்பி வைக்க உடன்படவில்லை. ஆதலால், ஆயிஷா நாயகி தம் பெற்றோரின்வீட்டிலேயே இருந்து கொள்ள நேர்ந்தது.

47-வது அத்தியாயம்

காம்மா வந்தது.

கலிவிருத்தம்.

கோமாத்திற லார்பணி யுங்குறைஷிச்
சாமார்திய ரானமு ஹம்மதுதம்
பாமாப்பதம் வந்து பவங் கவிதீர்
காமாச்சரி தங்களியின் கவல்வாம்.

இதன் பொருள்

மகாதிறமை பொருந்திய இராஜாக்கள் பணியுங் குறைஷிக்குல சாமார்த்தியரான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தங்களின் அழகிய தெய்வீக பாதத்தை வந்து வணங்கிப், பாவத்தையும், கேடான துன்பத்தையும் நிவர்த்திசெய்த காம்மா வென்னும் பெயரையுடையவனின் சரித்திரத்தை சந்தோஷமாகச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நரையொளி பிறங்க வுடம்பெலாத் திரைந்து
நரம்புக டெரிந்திட வறந்து
தெரிதருங் கட்பா வையினொளி மழுங்கித்
திரள்படப் பீழையுஞ் சாடித்
தரிபடாநாசித் துளையினீர் ததும்பத்
தைத்தறக் கிழந்தோர் துணியு
மரையிடை கிடந்து சரிந்தடிக் கடிவீழ்ந்
தவிழ்ந்திட வொருகரந் தாங்க.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒருநாள், தங்கள் தோழர்கள் புடைசூழ வீற்றிருக்கும் போது அறத்திரைந்த சரீரத்தில் நிறைந்துள்ள உரோமங்கள் அனைத்தும் வெண்பஞ்சையொத்து நரைத்து, தசைப்பற்றின்றி யுலர்ந்து நரம்புகளெழுந்து, பீளைசாறிய இருகண்களும்

ஒளிமழுங்கி, நாசி துவாரத்தில் சளியொழுகி, காண்பவர் அருவருக்கத்தக்க விருத்தாப்பியன் ஒருவன், மிகவும்புராதனமான பழந்துணியுடுத்தி, அவ்வாடை அடிக்கடி அவிழ்ந்து சரிய, ஒருகையால் தாங்கிக்கொண்டு, மற்றொரு கையில் பிடித்த ஊன்றுகோலின் ஆதரவில நின்று மிகத்தள்ளாடி, அறக்கூனி, தலைநடுக்கத்துடன், அடிக்கடிஉண்டாகும் இளைப்பினால் அடுத்தடுத்து இருமிக்கொண்டு, தளர்ந்து செவிகள் அடைப்புற்று வருந்தினவனாக வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி, வாய் நீர் வழிய பற்களைத் திறந்து சலாம் சொல்லி நின்றான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவனுக்குப் பதில்சொல்லிவிட்டு, 'இவன் இன்னான்; இன்ன காரியத்திற்காக வந்திருக்கிறான்' என அறிந்துகொண்டு, அவனை ஒரு புறத்தில் உட்காரச்செய்து, அவனை நோக்கி "நீ யார்? உனது தந்தை தாய் யாவர்? நீ எந்த மார்க்கத்தான்? உன் பெயர் என்ன? உன் குடும்பத்தின் பெயர் யாது? உனது இருப்பிடம் எங்கு? இவைகளை விவரமாகச்சொல்" என்று வினவினார்கள். அப்போது அந்த காம்மா என்னும் விருத்தாப்பியன், "நபிப் பட்டம் பெற்றவர்கள் திரிகாலவர்த்தமானங்களையும் அறிந்தவர்கள். எவர் கருத்தினுள்ளும் உள்ள மறைவான விஷயங்கள் எல்லாவற்றையும் நினைத்த மாத்திரத்தில் தெரிந்துகொள்ளும் சக்தி யுள்ளவர்கள். ஆனதால் இந்த முஹம்மது நபி நமது விருத்தாந்தம் அடங்கலையும் யாதொரு சந்தேகமின்றி அறிவார். இப்போது இவர் அறியாதது ஒன்றுமில்லை. ஆனபடியால் இவருக்கு நான் யதார்த்தமானவைகளை சொல்ல வேண்டும்" என எண்ணிக்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "வானுலகத்தையும் பூலோகத்தையும் தனக்குள் அடக்கி, நல்லோர்களுக்குத் தீங்கு விளைக்கும் செய்கையில் கங்கணங்கட்டி நின்று, அநேக ஆயிரம் சேனைகள் புடைசூழ வீற்றிருந்து, பல வித மாயைகளை எல்லாம் உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் இபுலீஸ் உடைய புத்திரனாய், அவனிலும் பலமடங்கு அதிகஞ் சிறந்தவனாய் விளங்கிய இலாக்கிஸ் என்பவனுடைய குமாரனாகிய காயிம் என்பவன் பெற்ற மகன் நான். என்பெயர் காம்மா" என மரியாதையுடன் புகழ்ந்து சொன்னான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஆறுதலை செய்துகொண்டு "நீ இப்போது தளர்ந்தவனாய் நடை

நன்னாட்டத்தோடு என்னிடம் வந்த முகாந்திரம் என்ன?" என்று அவனிடம் கேட்டார்கள்.

நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்படி கேட்ட மாத்திரத்தில், அந்த காம்மா என்பவன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி "அல்லாஹு தஆலாவுடைய றஸூலே, ஆதிகாலத்தில் நான் எனது சிங்காசனத்தில் வீற்றிருந்து கொண்டு, பாதகம் என்பன அனைத்தும் வினையும் இடத்திற்கு சமானமாய், தவம், ஒழுக்கம், இரக்கம், ஈகைமுதலான நன்மைகள் அடங்கலையும் வெறுத்து, பாவம், பழியடங்கலையும் நித்திய கடனாகக்கொண்டு, இரதகஜ துரக பதாதி என்னும் சதுரங்கசேனை புடைசூழ அரசுசெய்து வாழ்ந்திருந்தேன். நான் சிந்தனை யற்றுக் கர்வங்கொண்டுடத்தும் அதிக்கிரமம் அனைத்தும் எனக்கு நன்மையாய்த் தோற்றினவேயன்றி, தீமையென அணுவளவும் தோற்றவில்லை. பின்னர் எனக்குவருங்கஷ்டகாலத்தைக் குறித்து என்னளவும் தெரியாது. ஒருகால் ஏதும் ஒரு வில்லங்கம் நமக்கு வந்தாலும்வரும்., அப்போது நமது அதிக்கிரமத்தைப்பற்றி நாம் துக்கிக்க நேரிடும் எனக்கொஞ்சமும் நான் எண்ணிப்பார்க்கவில்லை. இவ்வித மௌட்டியமே நான் தீங்கான கருமத்தில் பிரவேசித்துச் செய்துவர இடந்தந்தது. இவ்வாறு நான் கொடுங்கோல் செலுத்தும் அக்காலத்தில், ஒருநாள் எவனோ அயலானொருவன் என்னிடம் வந்து, எனது உடலும் உள்ளமும் நடுங்கத்தக்க விதமாய் என்னைக் கடித்து வற்புறுத்திக் குரூரமான பார்வைக்கொண்டு பார்த்து, என்னை அழைத்துத் தனக்கு முன்இருத்தி, என்காலில் இரு பெருவிரல்களையும் ஒன்றாகச் சேர்த்து நெருக்கி, ஒரு கயிற்றினால் இறுக்கிக்கட்டி விட்டுச்சென்றான். நபியே, என் உடலெங்கும் வருந்தத்தக்க விதமாய் அவன் பிணித்த பிணிப்பை என்னால் இயன்றவரையும் அவிழ்த்துப்பார்த்தேன். சற்றும் நெகிழவில்லை. அதனால் நான் படும்பரிதாபத்தை நோக்கி மனஞ் சகிக்காத அநேகர் அப்பிணிப்பை அவிழ்த்தார்கள்; அது அவிழவில்லை. பலதரமும் கூர் அமைந்த கருவிகளால் அறுத்தும், வகிர்ந்தும், பலவாறு பாடுபட்டார்கள். அக்கருவிகள் கூர்மழுங்கிப் போயினவன்றி, கட்டிய பிணிப்பு சிறிதும் சிதையவில்லை. கூராயுதங்களால் அறுப்புண்ணாத புதுமையைக் கண்டு ஆச்சரியமுற்று, இப்பிணிப்பு இவற்றால் அவிழாது, அக்கினியில் பிடித்தால் எரிந்து போம் என எண்ணி, எனது இரு

விரல்களையும் அக்கினியில் காட்டினேன். எனது விரல்கள் எரிந்து கரிந்துபோக நேர்ந்ததன்றி, மேற்படி துரும்பில் அக்கினிபற்றுகிறதில்லை. நபியே! பிணிப்பை அவிழ்க்க இதைக்காட்டிலும் வேறே என்ன உபாயம் செய்யக்கூடும்? அந்தப் பிணிப்பை அவிழ்க்கப்படும் பிரயாசையில் பிரவேசிப்பதை அன்றோடு நிறுத்திவிட்டு, நாம் செய்த பாவங்களனைத்தும் திரண்டு இந்தத் துரும்பாக உருக்கொண்டு வந்ததோ! அல்லது எனது ஊழ்வினையோ! அல்லது இராஜ்ஜிய பரிபாலனம் செய்யும் பலனோ! அல்லது எந்த முநிவோர்கள் முனிந்தமுனிவோ—என இராப்பகல் இதே சிந்தனையுற்று, பிணிப்பின் வாதனை பொறுக்கமாட்டாமல் கிடந்து, நீண்ட காலம் வரையும் வருந்தினேன். நபியே! இந்த வில்லங்கமான வாதனையில் சிக்குண்ட நான் எத்தனைகாலம் வரையும் வருந்தித் தாங்கக்கூடும்? முடிவில் ஆற்றமாட்டாதவனாய், எனது இராஜ்ஜிய பாரத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, எனது கிளையிலுள்ள முதியோர்களிடத்திலெல்லாம் சென்று என் குறையை முறையிட்டேன். அவர்கள் ஒவ்வொருவரும் என்னையழைத்து அருகிலிருத்தி, என் பிணிப்பையும் பரிதாபத்தையும் பார்த்து, இரங்குவார்களன்றி, அப்பிணிப்பை அவிழ்க்க ஒருவருக்காவது சக்தியில்லை. வனங்கள், வனாந்தரங்கள், மலைகள் எங்கும் இப்பிணிப்பை யவிழ்க்கும் தத்துவக்காரர் யாராவது உண்டோவெனத் தேடித்திரிந்தேன்; ஒருவரும் கிடைக்கவில்லை. என் கால்விரலில் பிணிக்கப்பட்டபிணிப்பு ஒருவகையாலும் அவிழ்க்கப்பட மாட்டாதென்று நான் கண்டு மனம்வருந்தி, மற்ற எண்ணம் ஒன்றுமின்றி இராப்பகல் இதுவே எண்ணமாய், ஆறாத் துயரத்தில் காலத்தைப் போக்கினேன். என் காலம் சஞ்சலமாகவே கழிந்துவந்தது. இவ்வாறு துக்கசாகரத்தில் கிடந்து தத்தளித்து அளவற்ற காலத்தை கழித்த பிறகு, ஆதி மனிதராகிய ஆதம் நபி (அலை) சிருஷ்டிக்கப்பட்டு, இவ்வுலகில் வாழ்ந்திருந்தார். இனி அந்த ஆதம் நபியினாலாவது இப்பிணிப்பு அவிழும் என நான் கருதி, அவரிடம் சென்று காலைக் காட்டி முறையிட்டேன். அவர் என் கால்பிணிப்பை உற்றுநோக்கி 'இதைப் பிணித்தவர் யாரோ அவரே அவிழ்க்க வல்லவர்; மற்றவரால் முடியாது' என்றார். ஆதம் நபி இப்படி சொன்னதால், நான் மனந் தளர்ந்து வருந்தி, பழையபடியே காலத்தைக் கழித்தேன். அந்த ஆதம் நபிக்குப்பின் நபிப்பட்டம் பெற்று ஒவ்வொருவராய் அநேகர் வந்தார்கள்.

அப்படி வந்த நபிமார்களில் ஒருவரையாவது நான் விடவில்லை. ஒவ்வொருவர் காலத்திலும் அவரவர் இடத்தில் சென்று என் குறையை முறையிட்டேன். அவர்கள் அனைவரும் "இந்தப் பிணிப்பு மற்ற யாராலும் அவிழ்க்கப்பட மாட்டாது. பிற்காலத்தில் முஹம்மது நபி பிறப்பார்; அவரைக்கொண்டே அவிழ்க்கப்படும்" என்று ஒரேவாக்காக சொன்னார்கள். அச்சொல்லைக்கேட்ட நான், "அந்த முஹம்மது நபி எந்தக்காலத்தில், எந்த இராஜ்ஜியத்தில் எந்த நகரத்தில் பிறப்பரோ?" என எண்ணி, வேறு சிந்தனையற்று இதே சிந்தனையாய் அநேக காலங்களைப் போக்கினேன். பிறகு, தேவரீராகிய தாங்கள் இந்த மக்கமாநகரத்தில் பிறந்து, நபிப்பட்டம் பெற்று, வேதமும் இறங்கி, தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை நிலைநிறுத்தி வருகின்றீர்களென்று எங்கும் பிரஸ்தாபமாயிற்று. இதை நான் கேள்விப்பட்ட உடன், எண்ணிறந்த காலம் அநுபவித்த நமது துன்பம் ஒழியும்காலம் கிட்டிற்று என ஆநந்த முற்று, உடனே புறப்பட்டு இந்த மக்கமாநகரத்தில் வந்து தங்களின் பாதார விந்தங்களைத் தரிசித்தேன். அதனால், என் துயரம் அனைத்தும் அறத்தொலைந்த தென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. நான் அநுபவிக்கும் வாதனை முற்றும் பற்றறத் தொலைந்து போகும் காலம் இதுவென மன உறுதி கொண்டு தங்களின் பாதமலர்களில் வீழ்ந்தேன். அடியேன் மீது மன மிரங்கி, என் பிணிப்பை அவிழ்த்து நல்வழிகாட்டி இரட்சிக்கும் வண்ணம் மிகவும் மன்றாடு கின்றேன்" என்று சொல்லி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதங்களில் வீழ்ந்து தண்டனிட்டான்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இரங்கிநின் றிறைஞ்சி யுரைத்தவா சகத்தை
 யிருசெவி குளிர்தரக் கேட்டு
நெருநிட விறுக்கி வைத்தவர் பெயரை
 நினைத்தரு ளொடுமுறு வலுத்து
மருங்கினி லொடுங்கி யிருந்தகாம் மாவை
 விழித்தணி மதுரவாய் திறந்துன்
னுரங்கெட விடுக்கண் வினைதவரியாவ
 ருரையென முஹம்மது முறைத்தார்.

வசனம்.

காம்மா என்பவன் தங்களின் பாதமலர்களில் வீழ்ந்து முறைப் பாடுசெய்த வர்த்தமானங்கள் அடங்கலையும், நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள்கேட்டு, மேற்படி கட்டைக் கட்டினவரை நினைத்துக் குறுநகை செய்து கொண்டு, அவனை நோக்கி "உன்னை இவ்விதம் வருத்த நாடிக் கட்டினவர் யார்?" எனக் கேட்டார்கள். அப்போது அவன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! இப்படி கட்டினவன் இன்னவூரான், இன்னகுலத்தான், இன்னான் மகன், இன்னபெயருள்ளவன் என இதுவரையும் எனக்குத்தெரியாது. அன்று கட்டும்போது நான் அவனைக் கண்டதன்றி, எண்ணிறந்த காலம் ஊரூராய்த்திரிந்தும் ஒருபொழுதிலும், ஒரு இடத்திலும் அவனை இரண்டாந்தரம் காணவில்லை. இனி அவனை என் கண் எதிரே கண்டால் தான் தெரியும்" என்று சொன்னான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்கள் சபையிலுள்ள அஸ்ஹாபிகளில் ஒருவரைக்கூவி, அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து வரும்படி உத்தரவு செய்தார்கள். அவர், அலிறலியல்லாஹு அன்ஹு இடம் சென்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அழைப்பதாகச் சொன்னவுடன், அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆயுதம் தரித்து, அசதுல்லா என்னும் பட்டத்திற்கேற்ப எழுந்து நடந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிருக்கும் திருச் சபையை நாடிவந்தார்கள். அல்லாஹு தஆலாவின் புலியாகிய அலி றலியல்லாஹு அன்ஹு வருவதை காம்மா என்பவன் கண்டான். கண்ட மாத்திரத்தில் பயங்கொண்டு ஸ்மரணையற்று, பொறிகள் ஒடுங்கி, உள்ளம் தடுமாறி, கால்கை நடுங்க, நாவு குளறி, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் முக மதியை நோக்கி "யாறஸூலல்லாஹ்! என் இராஜாங்கத்தை யழித்து, என்னை யும் கெடுத்து, நான் இத்தனை தூரம் வருந்தி யுழலும்படிசெய்த புண்ணிய பிரபு அதோ வருகிறான். என்னைப் படுத்தினபாடு இம்மட்டும் போதாமல் இன்னும் இங்கு வருகிற படியால், ஒருகால் இதைக் காட்டிலும் வேறு என்னென்ன ஆபத்துகள் எனக்கு நேரிடுமோ? அறியேன். இப்போது எனக்குப் பயங் கரம் அதிகரிக்கின்றது. நாயகமே! அடியேன் தங்கள் பக்கம்

அடைக்கல மானேன். என்னைக் கட்டி விட்ட பாதகன் இதோ சமீபத்தில் நெருங்கி விட்டான். என் இருதயம் நடுங்குகின்றது. தாங்கள் அவனை சற்று விலகி யிருக்கக் கட்டளை பண்ணுங்கள். இந்த வேளையில் எனக்குக் கை கொடுத்து, என்னைக் காத்து இரட்சிப்பது தங்கள் கடன்'' என்று கண்ணீர் சிந்த அழுது சொன்னான். அப்போது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அவனை நோக்கி ''காம்மா! அஞ்சாதிரு'' எனக் கூறி விட்டு, அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ''யா அலீ! இந்த காம்மா நம்மிடம் இரட்சிப்பு தேடி வந்தவன். இப்போது அவன் கால் விரல்களில் பிணித்திருக்கும் பிணிப்பை அவிழ்த்து விடுங்கள்'' என்றார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சொன்னபடியே அலி றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்கள், ஆலம் அறுவாஹில் கட்டிய கட்டின் மீது திருக்கண் சாத்தினார்கள். உடனே அப்பிணிப்பு அறுப்புண்டது. கட்டு அவிழ்ந்த மாத்திரத்தில், காம்மாவிடம் உள்ள தீங்குகள் அத்தனையும் அறுப்புண்டு சிதறின.

என்றும் தீராதவாதனையை, அவன் செய்யும் அக்கிரமத்திற்குப் பிரதியாக அனுபவிக்கும் வண்ணம் கட்டிய கட்டு அவிழ்ந்தது. துயரொழிந்தவுடன் அந்த காம்மா அகங்களித்து ஆநந்த பரவசமுற்று, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாத தாமரைகளைப் பணிந்து, ஜீவாமிர்தம் போன்ற கலிமாவை சொல்லி முஸ்லிமானார். காம்மா ஈமான் கொண்டு முஸ்லிமான பிறகு அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களை வியந்து துதித்து, மற்ற அஸ்ஹாபிகளையும் புகழ்ந்து, ஒப்பற்றிலங்கும் தீன் நாடோறும் வளர்ந்தேறக் கடவது என்று வாழ்த்தி, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு தாம் வாசஞ் செய்யும் திசையை நோக்கிச் சென்றார்.

48-வது அத்தியாயம்

விருந்தூட்டியது.

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

திருந்திய மாமறைத் தீனுள்ளோர்மகிழ்
பொருந்த வெங்கணும் புகழ் பரப்பு நந்நபி
வருந்தவில் லாதுறவாளர் தங்கட்கு
விருந்தினை யூட்டிடு மேன்மை யோதுவாம்.

இதன் பொருள்.

மகாதிருத்தமான புர்க்கான் வேதத்தை யொப்புக்கொண்டு இஸ்லாத்தில்சேர்ந்து முஸ்லிமானவர்க ளெல்லாம் மனமகிழ் பொருந்த எவ்விடத்திலுங் கீர்த்தியைப் பரப்பும் நம் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் வருத்த மில்லாது, தாங்களின்பந்துகளுக்கு விருந்தினை யூட்டி வைத்த மேலான விஷயத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

புவியி லின்பம் பொருந்திப் புகழ்பெறு
நபி முஹம்மது நண்பொடுத் தங்கிளை
யவர்கட் கன்புற் றரிய விருந்தெனக்
கவலு மென்றலிக் கோதினர் காமுற்றே.

வசனம்.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒருநாள் அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களை அழைத்து, இன்றைய தினம் நமது மனையில் வந்து விருந்துண்ணும்படி, நம் குடும்பத்தார்களுக்கு சொல்லுங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். இச்சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அலி றழியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்கள் குடும்பத்தார்கள் வசிக்கும் ஒவ்வொரு மனையிலும் சென்று விருந்துக்குச் சொன்னார்கள். எனவே அவரவர்கள், அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களுடனே புறப்பட்டார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பெரிய தந்தைமாரும், சிறிய தந்தைமாரும், இவர்கள் புத்தி

ரர்களும், மற்ற முறைமையை யுடையவர்களும், அவர்களைச் சேர்ந்த பிறருமாகப் புறப்பட்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சிறந்த மாளிகையில் வந்து கூடினார்கள். சிறு பிள்ளைகளும், ஸ்திரீகளும், தரித்திரர்களும் தவிர, ஹாஷிம் வம்சத்துத் தகுந்த கனவான்கள் நாற்பது பேர்கள் வந்திருந்தார்கள். அப்போது விருந்துண்ண வந்திருக்கும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு செம்மறிக் கடாவின் இறைச்சி அத்தனையையும் பாதிவேகுமுன் தின்றுவிட்டு, பதினாறு இருத்தல் பாலைக் குடிக்கும் பெருந்தீனிகள். இவ்விதப் பெருந்தீனிகாரர் அனைவரையும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வந்து நின்று உபசரித்து, பந்தி வைத்தார்கள். அனைவரும் பந்தி போஜனத்திற்கு உட்கார்ந்த பின், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் குற்றேவலாளரை நோக்கி, ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் சோற்றையும், பாலையும் கொண்டு வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அவ்வேலையாட்கள் வீட்டிற் புகுந்து, ஒரு படி யரிசில் சமைத்திருக்கும் சாதத்தையும், ஒரு சிறிய கருங்கற் கலசத்தில் ஊற்றி வைத்திருந்த அரைப்படி பாலையும் கொண்டு வந்தார்கள். அப்போது விருந்தினர்கள், குறித்த சாதத்தையும் பாலையும் பார்த்து ஏக்கமுற்று "இதென்ன விபரீதம்! அற்ப சாதமும், பாலும் மாத்திரம் ஒருவர் கையில் கொண்டு வந்திருக்கிறார். முஹம்மது, வந்தவர்களை யெல்லாம் பந்தி வைக்கின்றாரே" என ஆச்சரியமுற்று சொன்னார்கள். அவர்களில் சிலர் "இவர் நம்மை விருந்துண்ண அழைக்கவில்லை; தமது வேதக் கொள்கையைப் பற்றிய சமாசாரத்தை அறிவிக்க அழைத்தார் போலும்" என்றார்கள். சிலர் "நல்லது, இவருடைய விருந்தின் புதுமையை இருந்து அறிவோம். சாதமும் பாலும் மிகக் கொஞ்சம்; விருந்தினர் அதிகம். ஆனதால் ஏதும் புதுமை நிகழும் போலும்" என்றார்கள். அனைவரும் இவ்வித சிந்தனையுடனிருக்கையில், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த சாதத்தையும், பாலையும் எல்லார்க்கும் பரிமாறினார்கள். ஆடவர்கள், ஸ்திரீகள், சிறு பிள்ளைகள் ஒவ்வொருவரும் வயிறார, விலாப்புடைக்க உண்டார்கள். அந்தக் கொஞ்ச உணவைக் கொண்டு அனைவரும் போதும், போதும் என்னும் வரையும் விருந்தூட்டினார்கள். வந்தவர் அனைவரும் உண்டதுமன்றி, மனையிலுள்ளவர்களும் அதைக் கொண்டே பசியாறினார்கள். இப்படி அவர்கள் அனைவரும் உண்டும், மேற்படி ஒருபடிச் சாதமும் அரைப்படி பாலும் எள்ளளவும் குறையாமல் அப்படியே யிருந்தன. இதைக் கண்ட அவர்களனைவரும் ஆச்சரியமுற்று "நபி மார்களுக்கு இது ஒரு பெருங்காரிய மல்ல" என்று மகிழ்ந்துகொண்டு சென்றார்கள்.

49-வது அத்தியாயம்.

நபிநாயகம் (ஸல்) மிஃறாஜுக்குப் போந்தது.

சரித்திராசிரிய இமாம்களால் சொல்லப்பட்டிருக்கிறது:—நபிகட் திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபிப்பட்டம் பெற்ற 12-ம் வருடம் ரஜபு மாதம் 27உ திங்கட்கிழமை இரவு மிஃறாஜுக்குச் சென்றார்கள்.

அன்று அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா, வானலோகத்திற்கரசரான மலக்குகளில் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம், இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் இவர்களை ஒவ்வொருவருடனும் எழுபதினாயிரம் மலக்குகளுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பால் அனுப்பி வைத்தான். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அபூதாலிபுடைய புதல்வி உம்முஹானி உடைய வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்தனர். அப்போது எந்த அரவமும் இல்லாமல் இருளும் மின்னலும் மிகுந்த நேரத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்தில் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் தனது சுயரூபத்தோடு வந்து, அவர்களை கட்டித் தழுவி அணைத்து, இருகண்களுக்கு மிடையில் முத்தமிட்டு "முஹம்மதே! எழுந்திருங்கள். இது நித்திரைக்குடைய நேரமல்ல" என்றார்கள். உடனே நபிகட் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் விழித் தெழுந்து "யாஹமுகல்லாஹ் நீர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு, "நான் ஜிப்ராயீல் என்னுடன் மீக்காயீலும், இஸ்ராபீலும் இருக்கிறார்கள்- ஹையுல் கையூமான அல்லாஹு தஆலா தங்களோடு பேசிக் கொள்ள அழைத்து வரச்சொன்னான். தாங்கள் ஆயத்த மாகுங்கள்" என்றார்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினதாவது:—அப்போது ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம்

என் கையைப் பற்றிக் கொண்டு கஃபாவில் ஜம்ஜம் ஊற்று ஜலம் அருகே அழைத்துக் கொண்டுபோனார்கள். மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமை ஹௌளுல் கவ்தர் என்னும் தண்ணீர் கொண்டு வரச் செய்து இருவித ஜலத்தைக் கொண்டும் என்னை ஒலு செய்வித்து புறப்படுங்கள் என்றார். எவ்விடத்திற்கு என்றேன். சிறப்புடைய நாயனளவில் என்று சொன்னார். உடனே கஃபாவை விட்டும் வெளிப்பட்டு நடந்தோம். கொஞ்ச நேரத்திற்குள் மக்கா வாசல் போய்ச் சேர்ந்தோம். அங்கு மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமுடன், றூயாயீலும் அவர்களுடன் புறாக் என்னும் சொர்க்கத்து வாகனமும் உண்டாயிருந்தன. அதன் தோற்றம் கழுதைக்கு உயர்ந்ததும், கோவேறுகழுதைக்கு தாழ்ந்ததுமாகும். முகம் மனிதர் முகம் போலும், சிரம் குதிரைச் சிரம்போலும், நெஞ்சு புலியின் நெஞ்சுபோலும், முதுகு கோவேறு கழுதையின் முதுகு போலும், வால் ரிஷபம் வால் போலும், கால் யானைக்கால் போலும் இருந்தது. மேலும் அதன் வால் பச்சை மரகதத்தாலும் இருகண்ணும் சிவந்த மாணிக்கத்தாலும், நிறம் பொழுதைப்போல் பிரகாசித்தும், இருகண்ணுக்கும் இடையில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் ரஸூலுல்லாஹி என்னும் திருக்கலிமா வரையப்பட்டும், இருந்ததோடு, இரு மருங்கிலும் இரு சிறகுகளும் உண்டாயிருந்தன. ஒவ்வொருசிறகிலும் எழுபதினாயிரம் தூவல்களும்இருந்தன ஒவ்வொரு தூவல் எழுபது முழம் உள்ளதாய் இருந்தன. மேலும் முத்து இரத்தினங்களால் இழைத்த மூக்கணைச் சரடிட்டு தீபாஜுப் பட்டால் அங்கவடியிட்டு, ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் மூக்கணைச்சரட்டையும் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் அங்கவடியையும் பிடித்து என்முன்னே கொண்டு வந்து விட்டு, இவ்வாகனத்தில் ஏறுங்களென்றார்கள். நான் அதன்மீது ஏறுவதற்கு துணிந்தபோது, அவ்வாகனம் என்னை ஏறவிடாமல் துள்ளித் ததும்பி மிரண்டு குதித்தது. அதற்கு ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் சமாதானம் பகர்ந்து பதப்படுத்தினபோது, அது இருலோக ரக்ஷகரான நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் என்னை கியாமத்து நாளையில் மன்றாட்டம் செய்து ரக்ஷித்து சொற்கம் புகுதவைப்பதாக வாக்கு தந்தால் நான் வழிப்படுவேன் என்று சொல்லிற்று. அதன் படி நான் வாக்குறுதி செய்தேன். அதற்குப்பின் அந்த புறாக் என்னும் வாகனம் எனக்கு

வசப்பட்டு அமர்ந்து நின்றது. ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் “முஹம்மதே! இதன் மீது ஏறி தரித்திருங்கள்” என்றார். நான் பிஸ்மில்லா என்று சொல்லி அதன் முதுகின் மீதேறி, செவ்வையாய் தரித்திருந்தேன். ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் என் வலது புறமும் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் இடது புறமும், றூயாயீல் அலைஹிஸ்ஸலாம் முன்னாலுமாக சென்றோம். அப்போது ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் “முஹம்மதே! பைதுல் முகத்தஸ் போய் சேரும் பரியந்தம், யாருடைய அழைப்புக்கும் ஜவாபு சொல்லாதிருங்கள்” என்றார்கள். புறாக் பறந்து என்னை ஆகாசமார்க்கமாய் கொண்டு சென்றது. அப்போது சந்திர சூரியனுடைய ஒளிவுக்கு மேலாக பிரகாசிக்கக்கூடிய மகா உன்னதமான பருவதத்தைக் கண்டேன். அதில் மலாயிக்கதுகள் அல்லாஹு தஆலாவை தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தார்கள். ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவ்விடத்தில் புறாக்கை நிறுத்தி இவ்விடத்திலிறங்கி இரண்டு ரக்அத்து தொழுங்கள் என்றார். அதுபோல் தொழுதேன். பிறகு ஜிப்ராயீல் இடம், இது எந்த ஸ்தலமென்று வினவினேன். மூஸா அலைஹிஸ்ஸலாம் அல்லாஹு தஆலா வுடன் வசனித்த தூரு சீனா மலை என்றார்.

பின்பு அம்மலையை விட்டுப் புறப்பட்டு புறாக்கின் மீதேறிக் கொண்டு அல்லாஹு தஆலா நாடியமட்டும் நடந்தோம். அங்கோர் தலத்தில் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் வாகனத்தை நிறுத்திக் கொண்டு இந்த ஸ்தலத்தில் இறங்கி இரண்டு ரக்அத்து தொழுங்கள் என்றார். அது போல் இறங்கித் தொழுதேன். பிறகு இந்தஸ்தலம் எது வென ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமிடம் வினவினேன். இத்தலம் யஹ்யா நபியுடைய வீடும் ஈசாநபி பிறந்த ஸ்தலமுமாகு மென்றார். பிறகு அதை விட்டு மேலே சென்றோம். எனது வலதுபுறத்தில் ஒரு சப்தம் “முஹம்மதே! கொஞ்சம் நில்லும். நாம் சொல்லும் உபதேசத்தை கேட்டுக் கொண்டு போம்” என்று உண்டாயிற்று. நான் நிற்கலாமென்று நினைத்த போது புறாக் நில்லாமலே சென்றுவிட்டது. அதுவும் அல்லாவின் கற்பனை தான். அப்படி இன்னும் சிறிது தூரம் சென்றபோது முன்போல் இடது புறமும் ஒரு சப்தம் கேட்டது. அதற்கும் நில்லாமல் அல்லாஹு தஆலாவின் நாட்டப்படி சென்றோம். அப்போது ஒரு பெண் பிள்ளை, தலைமயிரை வார்ந்து சீவிக்கொண்டு இரத்தி

ஞூதிகளால் அலங்கரித்து இருகரங்களையும் விரித்து நின்று கொண்டு "யா முஹம்மது! அஹ்மது! உமக்கும் உமது கூட்டத்தாருக்கும் நசீஹத்து சொல்கிறேன்; கேட்டுக் கொண்டுபோம்" என்றாள். அல்லாஹு தஆலாவுடைய கிருபையினால் அதற்கும் ஜவாபு சொல்லாமல் சென்றோம்.

அச்சமயம் ஒரு கூட்டத்தார் கூடியிருந்து ஒருமாட்டை அறுத்து கொம்பும் குழம்பும் ஒருபங்கும், சாணியும் இரத்தமும் ஒருபங்கும், ஜவ்வும் நரம்பும் ஒருபங்கும், தசைமாத்திரம் ஒரு பங்குமாக நாலுபங்கு வைத்தனர், அங்கு கூடினவர்கள் நாலு கூட்டமாக பிரிந்து நாலு பாகத்தையும் எடுத்துக் கொண்டார்கள். அதையுங் கண்டு அதற்குப் பிறகும் சென்றோம். பூமியினுள்ளிருந்து ஒருசேவல் வெளிப்பட்டு அதற்கு இரண்டு கொம்பு முளைத்ததால் மீண்டு உள்ளேபோக முடியாமல் நின்று விட்டது. அதையுங் கண்டு சென்றோம். அருவியும் புல்பூண்டுமுள்ள ஒரு செழிப்பான பூங்காவனத்தில் மிகவும் மெலிவான சதையற்ற மாடுகள் நிற்கக்கண்டு ஆச்சரியமுற்று அதற்குப் பிறகும்சென்றோம். அருவியும் புல்பூண்டு மில்லாத வரண்ட தோப்பில் கொழுத்த மாடுகள் நிற்கக்கண்டு ஆச்சரியமுற்று பிறகும் சென்றோம். ஒரு கூட்டத்தார் விதை விதைக்கிறார்கள். அது அப்பவே முளைத்து விடுகிறது. அப்பவே அறுத்தும் விடுகிறார்கள். மீளவும் விளைந்து விடுகிறது. அறுந்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் பார்த்துக் கொண்டு மேலும் சென்றோம். சிலபேர்களுக் கெதிரே மணமான மாமிசமும், நாற்றமுள்ள மாமிசமு முண்டாயிருக்க, அவர்கள் நல்லதை விட்டு விட்டு நாற்றமுள்ள மாமிசத்தை தின்னுகிறார்கள். அதையும் பார்த்துவிட்டு அதற்கப்பாலும் சென்றோம். பிறகும் இதுபோல் அநேக அதிசயங்களைப் பார்த்துக் கொண்டே, கடைசியாக சிறப்பான பைத்துல் முகத்தஸ் பள்ளியை கண்டு, அங்கு பாபு நசாவில் இறங்கி அவ்விடத்தில் முன்னுள்ள நபிமார்கள் கட்டிய வளையத்தில் புறாகை ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் கட்டினார். பைதுல் முகத்தஸ் பள்ளியினுள்ளே புகுந்தபோது நமது பாவா ஆசம் அலைஹிஸ்ஸலாம், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம், மூஸா அலைஹிஸ்ஸலாம், முன்னுள்ள அன்பியாக்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) மலாயிக்கத்துகள் அனைவரும் சப்பு சப்பாக நின்றார்கள். ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம், என்னை இமாமாக

நின்று தொழுவிக்கச் சொன்னார்கள். நான் ஆதம் அலைஹிஸ்ஸலாமை அல்லது மற்ற நபி மார்களை இமாமாக நின்று தொழுவிக்க சொன்னேன். அதற்கு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம், தாங்கள் தான் முன்நின்று தொழவேண்டும், அப்படியே அல்லாஹு தஆலாவும் அருளி இருக்கிறான் என்று சொன்னார். அதுபோல் நான்முன் நின்று இரண்டு ரக்அத்து தொழுது விட்டு மிஹ்றாபில் அமர்ந்து அல்லாஹு தஆலாவை புகழ்ந்து தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தேன். அப்போது ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் 'எனக்கருகே வந்து 'நாம் வரும் பாதைகளில் நிகழ்ந்த விஷயங்கள் இன்னதென அறிவீர்களா?' என்று கேட்டார். நான் அறியேன் என்றேன். அதற்கு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம், முதலாவதுசப்தம் யஹூதுடைய அழைத்தல். அதற்கு தாங்கள் ஜவாபு சொல்லி இருந்தால் தங்களின் உம்மத்துகள் யஹூதியாய் விடுவார்கள். இரண்டாம் சப்தம் நஸாறாக்களின் அழைத்தல். அதற்கு ஜவாபு சொல்லி இருந்தால், தங்கள் உம்மத்துகள் நஸாறாக்களாகி விடுவார்கள். அழகிய பெண்பிள்ளையாகிறவள் துன்யா. அவளுக்கு ஜவாபு சொல்லி இருந்தால் தங்கள் உம்மத்துகள் ஆகிறத்தை விட்டு துன்யாவை பற்றிப் பிடித்து நரகத்திலாவார்கள். இன்னும் மாட்டின் கொம்பும் குழம்பும் எடுத்தவர்கள் யஹூதிகளாவர். ஜவ்வும் நரம்பும் எடுத்தவர்கள் நஸாறாக்களாவர். இரத்தமும் சாணியும் எடுத்தவர்கள் மஜூஸிகளாவர். தசையை எடுத்தவர்கள் முஸ்லிமானவர்களாவர். அந்த சேவலாகிறது உமது உம்மத்துக்கு உவமை யாகும். அவர்கள் ஒரு பேச்சு பேசினால், அதை மீட்க இயலார்கள். அந்த மெலிந்த மாடுகள் தீனை விட்டுப் போட்டு பணத்தை கைகொண்டவருக்கு உவமை. கொழுத்த மாடுகள் பணத்தை விட்டுப்போட்டு தீனை கைகொண்டதற்கு உவமையுமாகும். பயிரிட்டு உடனே அறுத் தெடுப்பது நன்மையைச்செய்து பலமடங்கு ஸவாபை பெறுவதற்கு உவமையாகும். தசையில் நல்லதை விட்டு கெட்டதை தின்பது ஹலாலான பெண்ஜாதியைவிட்டு ஹறாமான ஸினாவை செய்வதற்கு உவமை யாகும் என்றார். இதுபோல் கண்ட காரணங்கள் அனைத்திற்கும் விடை பகர்ந்தார் பின்பு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என் கரத்தை பற்றிக்கொண்டு பைதுல் முகத்தஸின் பால் ஸஹறன் இடத்தில் வட்டப்பாறைக் கல்லின் மீது விட்டு தொழச்

சொன்னார். அதுபோல் தொழுதேன். பிறகு என் வலது பாரிசத்தில் அழகிய ஒரு வாலிபனைக் கண்டேன். அவர் என்னை சமீபத்தில் அழைத்து என் கழுத்தைக்கட்டி ஆலிங்கனம் செய்தார். பிறகு அவரை பார்த்தேன். என்கண்ணுக்கு அகப்படாமல் மறைந்து விட்டார். அதனால் நான் ஆச்சரிய முற்று, ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமிடம் வினவினேன். அந்த வாலிபர் தீனுல் இஸ்லாம் என்று சொன்னார் பிறகு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமும் மறைந்து விட்டார். சிறிது நேரம் தாமதித்து காணப்பட்டார். அவருடன் சொர்க்கத்து தலைமை மலக்குகளி லொருவர் வந்தார். அவர் கரத்தில் கள்ளும் பாலும் உள்ள இரண்டு பாத்திரங்கள் உண்டா யிருந்தன. அவர் இவை தங்களுக்கு அல்லாஹு தஆலாவால் வந்த ஹதியாவாகும், இவைகளில் தாங்கள் நாடியதை குடியுங்கள் என்றார். நான் எதைக் குடிப்பதென்று ஆலோசித்துக் கொண்டு நிற்கும் போது "உருத் தோற்ற மில்லாத ஒரு சப்தம் முஹம்மது கள்ளைக் குடித்தால், அவருடைய உம்மத்துகள் அழிச்சாட்டியமாகி விடுவார்கள், பாலைக் குடித்தால் நேர்வழி பெறுவார்கள்" என்று கேட்டது. ஆனதால் நான் பாலை எடுத்து கொஞ்சம் அருந்தி விட்டு, மீதத்தை ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமிடம் கொடுத்து விட்டேன். அச்சமயம் மற்றொரு சப்தம் முஹம்மது அந்தபால் முழுவதையும் அருந்தியிருந்தால் அவருடைய உம்மத்தில் ஒருவராவது நரகம் புகுதமாட்டார், என்று கேட்டது. அதைக் கேட்டதும் நான் துரிதமாய் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலா மிடத்தில், அந்தபாலை தாருங்கள் என்று கேட்டேன். அதற்கு ஜிப்ரயீல் "முஹம்மதே! போதும்! போதும்! காரியம் கற்பிக்கப்பட்டு விட்டது. கலத்தின் மசியும் உலர்ந்து விட்டது. கற்பித்தபடி முடிந்து விட்டது என்றார்.

பிறகு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என் கரத்தை பற்றிக் கொண்டு பாபுர் றஹ்மா வென்ற வாயலளவில் அழைத்துக் கொண்டு போனார். அங்கு மிஃறாஜ் என்ற ஏணியை பைதுல் முகத்தஸின் கல்லின் மீது வைத்து, முதல் வானத்து வாயலளவில் நாட்டப்பட்டிருந்தது. அவ்வேணியின் படி ஐம்பத்தைந்து. ஒரு படிக்கும் மற்றொரு படிக்கும் மிடையிலுள்ள தூரம் சரியான குதிரையின் நடைக்கு நாற்பது வருடத்து தூரமுண்டு. ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என் கையை பற்றிக் கொண்டு அவ்வேணியின் மீது நடந்து

முதல் வானத்தின் வாயல் கதவை தட்டினார். அதிலுள்ளவர், அங்கு யாரென்று கேட்டபோது, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் நானும் என்னுடன் முஹம்மதும் இருக்கிறோம். கதவைதிறவுங்கள் என்றார். உடனே திறக்கப்பட்டது. நாங்கள் முதல் வானத்தில் சென்றோம். அங்கிருந்து பூலோகத்தை நோக்கின போது அது ஒருகிந்தீலுக்கு (விளக்கு கூண்டுக்கு) சமானமாய் தெரிந்தது. முதல் வானத்தில் ஒரு மலக்கை பார்த்தேன். அவரது பாரதூரம் இந்த ஏழுவானமும் பூமியும் அவருடைய கடவாய்க்கு சமானமாகும். அப்பிரதான மலக்கு யார் என்று ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமிடம் வினவினேன். இவ்வான லோகத்திற்கு அதிபதி என்று அறிவித்தார். அவருக்கு ஸலாம் சொன்னேன். அவர் பதில் சொல்லி எனக்கு சுபசோபன வாழ்த்தும் கூறினார். அவ்வானத்திலுள்ள மலக்குகளெல்லாம் சுப்ஹான தில்முல்கிவல் மலகூத்தி, என்று தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் அவ்விடத்தில் சிருஷ்டிகளில் மிகவும் பாரமான ஒரு அழகிய மனிதர் இருக்கிறார். அவருக்கு வலது புறத்தில் ஒரு வாயல் திறக்கப் பட்டிருக்கிறது. அதில் முஸ்லிமான அர்வாஹ்கள் உண்டா யிருக்கிறார்கள். அவ்வாயலைப் பார்த்தால் சந்தோஷமாய் சிரிக்கிறார். அவருக்கு இடது புறத்தில் மற்றொரு வாயல் திறக்கப்பட்டிருக்கிறது. அதில் காபிறான அர்வாஹ்கள் உண்டா யிருக்கிறார்கள். அவ்வாயலைப் பார்த்தால் சலிக்கிறார், அழுகிறார். இதை நான் பார்த்ததும் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமிடத்தில், இவர் யார் என்று கேட்டேன். "இவர் ஆதம் அலைஹிஸ்ஸலாம். அவருக்கு சலாம் சொல்லும்" என்றார். நான் அருகில் போய் சலாம் சொன்னேன். அவர் எனக்கு பதில் சொல்லி சுபசோபன வாழ்த்தும் கூறினார். இந்த வானத்திற்கும் இதை அடுத்த வானத்திற்கு மிடையில் ஐநூறு வருடதூர அடிப்பாடு உண்டு. இப்படியே ஏழு வானம்மட்டும் ஒவ்வொரு வானத்திற்கிடையிலும் இதே தூரமுண்டு.

நான் இரண்டாம் வானம் சென்றதும் அவ்விடத்தின் மலக்குகளைக் கண்டு இரண்டு ரக்அத் தொழுதேன். இரண்டாம் வானத்தில் நபி யஹ்யா அலைஹிஸ்ஸலாம், நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் இவர்களையும், மூன்றாம் வானத்தில் நபி யூஸுபு அலைஹிஸ்ஸலாம், நபி தாவூத் அலைஹிஸ்ஸலாம், நபி சுலைமான் அலைஹிஸ்ஸலாம் இம்மூவர்களையும், நாலாம் வானத்தில் நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம்

அவர்களையும் தரிசித்து, அவர்களுக்கு என்னுடைய சலாம் சொன்னேன். அவர்கள் ஒவ்வொருவரும் எனக்கு ஜவாபு சொல்லி சுப சோபன வாழ்த்தும் கூறினார்கள்

இன்னும் அவ்விடத்தில் குர்ஸியின் பேரில் மகா பாரதூரமான பிரதான மலக்கு ஒருவர் இருந்தார். அவரை சூழ்ந்து பல்லாயிரம் மலக்குகள் தண்டனிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய இரண்டு பாதமும் ஏழு பூமிக்கு தாழாலும் அவரின் தலை அர்ஷுக்கு தாழாலும், இரு கரங்களும் எடுவாலும் படுவாலும் எத்திக் கொண்டிருக்கின்றன. முன் பின் இடம் வலம் ஆகிய நாலு புறத்துக்கும் நாலு முகங்கள் உண்டாயிருக்கின்றன. அவர் முகத்தின் நீளம் ஐநூறு வருடத்து தொலைபாலுண்டு. அவரின் வலது புறத்தில் லௌஹூம் இடது புறத்தில் ஒரு விருட்சமும் உண்டாயிருக்கின்றது. அவ்விருட்சத்தில் சிருஷ்டிகளுடைய எண்ணத்திற்கு பச்சை இலைகளும், ஒவ்வொரு இலைக்கு ஒவ்வொரு கனியும், ஒவ்வொரு இலையிலும் கனியிலும் இன்னான் மகன் இன்னானுக்கென்று இரண்டு வரியும் எழுதப்பட்டிருக்கின்றன. அம்மலக்கை நான் கண்ட போது என் உறுப்புகள் அனைத்தும் நடு நடுங்கியது. ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமிடத்தில் இவர் யாரென்று கேட்டேன். ஜிப்ராயீல் இவர் இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம். இவருக்கு சலாம் சொல்லுமென்றார். நான் சலாம் சொன்னேன். அவர் பதில் சொல்லவில்லை. ஜிப்ராயீல் என்னை அறிவித்துக் கொடுத்த பின் எனக்கு பதில் சொன்னார். அவர் கியாம பரியந்தம் சிரிக்கவே மாட்டாரென்றும் சொன்னார். பின்பு அதை விட்டும் சென்றோம். ஐந்தாம் வானத்தில் நபி ஹாரூன் அலைஹிஸ்ஸலாமையும், ஆறாம் வானத்தில் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமையும் சந்தித்து, சலாம் சொன்னேன். ஜவாபு சொல்லி எனக்கு நன்மாறாயம் கூறினார்கள். பிறகு ஏழாம் வானத்தில் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமையும் அவர்களின் மனைவி சாறா அம்மாவையும் சந்தித்து சலாம் சொன்னேன். அவர்கள் பதில் சொல்லி சோபன வாழ்த்து கூறினார்கள். அங்கு பைதுல் மஃமூர் பள்ளியையும் கண்டேன். பிறகு இடது புறம் திரும்பிப் பார்த்தேன். ஆகிறத்துடைய வருடத்துக்கு ஆயிரம் வருடத்து தொலை தூரமுள்ள குர்ஸியின் மீது ஒரு மலக்கு இருக்கிறார். அவருக்கு கணக்கற்ற தொண்டர்களும் இருக்கிறார்கள். இவர் யாரென்று ஜிப்ராயீலிடத்தில் வினவினேன்,

இவர் நரகத்திற்கதிபர் மாலிக், இவருக்கு சலாம் சொல்லுமென்றார். சலாம் சொன்னேன். பதில் சொன்னார். பிறகு நரகத்தையும் சுற்றிப் பார்த்தேன். அப்பால் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் என்னை அழைத்துக்கொண்டு ஐம்பதினாயிரம் அடி தூரமுள்ள வெண்மையான மேகத்திடத்தில் கொண்டு போனார். பிறகு அடர்ந்த இருளையும் கடந்து சொர்க்கப்பதியில் கொண்டுபோய் விட்டார். சொர்க்கத்தையும் சுற்றிப் பார்த்தேன். பிறகு அதை விட்டும் ஸித்ரத்துல் முன்தஹா வென்னும் விருட்சத்திடம் கொண்டு போனார். அவ்விடத்தில் என்னை விட்டுப் பிரிந்தார். ஏன் பிரிகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஜிப்ராயீல் "எங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸ்தானம் உண்டு. அதுவரையிலும் தான் செல்ல வேண்டும். அதற்கு மேல் சென்றால் ஒளியால் எரிந்து விடுவோம். என்னுடைய மகாம் இது மட்டும் தான்" என்றார். எனக்கு அச்சம் உண்டாயிற்று. உடனே என்னை ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் கட்டி அணைத்து முத்தமிட்டு "முஹம்மதே! நீர் அஞ்சவேண்டாம். எல்லையை அடைந்து விட்டீர். உமது நாயன் பால் நீர் செல்வீராக! உம்மை அவன் அன்புடன் வரவேற்று சங்கையும் கனமுமாக்கி வைப்பான்" என்றார்.

அப்போது மிகவும் மேன்மை பொருந்திய றப்றபுல் அக்லா என்னும் ஒரு வாகனம் எதிரே வந்து நின்றது. அதன் மீது ஏறினேன். அது என்னைக் கொண்டு எழுபதினாயிரம் திரைகளையும் கடந்து சென்றது. அங்கு மகா வனப்பமான ஒரு மலக்கு சமுத்திரக் கரையிலிருந்து தண்ணீரை அளந்தும் நிறுத்தும் மேகத்திடத்தில் ஊற்றிக் கொண்டிருக்கிறார். அவருக்கு சலாம் சொன்னேன். அவர் ஜவாபு சொன்னபின், நீர் யார் என்று வினவினேன். மீகாயீல் அலைஹிஸ்ஸலாம் என்றார். அப்பால் அல்லாஹு தஆலாவை தஸ்பீஹ் செய்து கொண்டிருக்கிற கற்றூபியான மலக்குகளின் சப்புகளை கடந்துபோனோம், அங்கு இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமை கண்டு சலாம் சொல்லி பேசிக்கொண்டு நிற்கும் போது, நான் எத்தலத்தில் இருக்கிறேன் என்று அவரிடம் வினவினேன். அவர் நீர் மேலே அண்ணாந்து பாரும் என்றார். அது போல் பார்த்தபோது, என் தலைக்கு மேலாலே அர்ஷைக் கண்டேன். அப்போது "அஹ்மதே! அர்ஷின் மேல், ஏறிவாரும்" என்று ஒரு சப்த முண்டாயிற்று. அதுபோல் அர்ஷ் அளவில் செல்லு

என் செருப்பை கழற்ற நாடினேன். "செருப்புடனே வாரும் அது கொண்டு என் அர்ஷ் கியாமத்து நாள் பரியந்தம் பெருமை பேசும்" என்று சப்தம் உண்டாயிற்று. செருப்புடனே ஏறிப்போனேன். இன்னும் முடுகி வாருமென்று சொல்ல ஓர் அடி எடுத்து வைத்தேன். அந்த ஓர் அடியும் ஐநூறு வருஷத்து துலதூர முள்ளது. இப்படியாக போகவும் யாதொரு அறவுமில்லாததால் என்மனதில் அச்ச முண்டாயிற்று. அப்போது அஹ்மதே! அஞ்சவேண்டாம். நான் உன்னுடைய றப்பு. ஆனதால் நெருங்கி வாரும் என்று சொல்ல, நானும் அப்படியே ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து "காப கௌஸைனி ஔ அத்னா" வரையும்நெருங்கினேன் அப்போது என்னுடைய றப்பு எனக்கு ஞானத்தை உண்டாக்கி வைத்தான். நான் அத்தஹிய்யாத்து அல்முபாறகாத்து அஸ்ஸலவாத்து அத்தையிபாத்து லில்லாஹி என்று சொன்னேன். அதற்கு என் றப்பு அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் னபிய்யு வறஹ்மதுல்லாஹி வபறகாத்துஹு என்று பதில் சொன்னான். அதற்கு நான் அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் என்று சொன்னேன். அதற்கு அர்ஷை சுமந்த மலக்குகள் அஷ்ஹது அன் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு என்று சொன்னார்கள். அப்போது எனக்கு ஞானம் உண்டாயிற்று. நான் ஆமனர் றஸூலு பிமா உன்ஸில இலைஹிமின் றப்பிஹீ வல் முஃமினூன் என்ற ஆயத்தை பக்றாவு அலல்கவ்மில் காபிரீன் வரை ஓதினேன்.

பிறகு நான் என்னுடைய றப்பிடம் பேசவேண்டிய தெல்லாம் பேசிக் கொண்டு திரும்ப நாடும்போது, என்பேரிலும் எனது உம்மத்துகள் பேரிலும், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை தொடர்ந்து ஐம்பது வக்து தொழுகை பர்லாக்கினான். இதை என்னுடைய உம்மத்துகள் சகிக்கமாட்டார்கள் என்று மன்றாடினதின் பேரில் பத்துபத்து வக்துகளாக குறைத்து கடைசியில் ஐந்து வக்து தொழுகையை பர்லாக்கினான். ரமலான் மாதம் நோன்பு பிடிக்கவும் கட்டளை இட்டான். பிறகு நான் றப்பிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பி வந்து ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமுடைய முந்திய ஸ்தானத்தில் சேர்ந்தேன். ஜிப்ராயீல் என்னை தன்னுடைய இறகில் சுமந்து வந்து பைதுல் முகத்தஸ் அளவில் இறக்கினார். அந்த இரவானது நான் சென்ற இரவாகவும் அதே நேரமாகவும் இருந்தது. பைதுல் முகத்தஸின் மஸ்ஜிதின் பேரில் புறாக் நான் விட்ட தலத்திலேயே

நின்றது. அதன் பேரில் ஏறினேன் அது ஆகாய மார்க்கமாய் பறந்து மக்காவில் கொண்டு வந்து விட்டது. கீழே இறங்கினேன். உடனே ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம் என் கழுத்தை கட்டி அணைத்து முத்தமிட்டு விடைபெற்றுக் கொண்டு சென்றார். நான் ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமிடம் என்னுடைய கௌமுகள் நான் மிஃறாஜுக்கு சென்றதை சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டார்களே என்று சொன்னேன். சித்தீகுல் அக்பர் உண்மையாக்கி வைப்பார் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

அன்றிரவு, முதலாவதாக எனது சிறிய தந்தையார் அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுவைக் கண்டேன். "உம்முடைய கருமம் என்ன" வென்று வினவினார். அதற்கு நான் "மிஃறாஜு சென்றேன். ஏழுவானங்களையும் கடந்து அல்லாஹு தஆலாவின் தரிசனம் கண்டு அவனிடம் பேசவேண்டியவைகளெல்லாம் பேசினேன். இன்னின்ன புதுமைகளை எல்லாம் கண்டேன்" என்று சொன்னேன். அதைக் கேட்டதும் அவர் பரிகசித்து சிரித்துக்கொண்டு "என் சகோதரின் புதல்வரே! மகனே! இச்செய்தியை மறைத்துக்கொள்; இதைகுறைஷிகள் அறவே ஒப்புக் கொள்ள மாட்டார்கள்" என்று சொன்னார். நான் பிதாவே! அவர்கள் ஒப்பினாலும் சரி ஒப்பாவிட்டாலுஞ்சரி நான் சொல்லத்தான் செய்வேன் என்று சொல்லிவிட்டு அபூதாலிபுடைய மகள் உம்முஹானி வீட்டுக்கு வந்து கொஞ்ச நேரம் நித்திரை செய்து விழித்தேன்.

அன்று பொழுது உதயமான போது, நான் மிஃறாஜுக்கு சென்று வந்த விஷயமனைத்தையும் உம்முஹானிக்கு அறிவித்தேன். அவள் யாறஸூலல்லாஹ்! இச்செய்தியை குறைஷிகளுக்கு சொல்லி விடாதீர்கள். அவர்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள் என்றாள். நான் கட்டாயமாகச் சொல்லத்தான் செய்வேன் என்று மொழிந்து விட்டு வீட்டை விட்டு வெளிப்பட்டேன். அவள் என்னுடைய வஸ்திரத்தை பிடித்து என்னை போகவேண்டாமென்று தடுத்தாள். நான் அவள் கையை தட்டிவிட்டு வெளியில் வந்து, பள்ளியினுள் புகுந்து வாசலடியில் உட்கார்ந்திருந்தேன். அவள் தன்னுடைய தாதியை அங்கு என்ன நடக்கிறது பார்த்துக்கொண்டு வா வென்று அனுப்பி வைத்தாள். நான் பள்ளியடியில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, முதலாவதாக ஹிஷாமுடைய மகன் அபூ

ஜஹ்ல் என் அருகே நெருங்கி வந்திருந்து கொண்டு, “முஹம்மதே! ஏதும் விசேஷமுண்டா?” என்று வினவினான். நான் மிக்க மேலான செய்தி உண்டென்று சொன்னேன். அது என்னவென்று கேட்டான் “நான் இன்றிரவில் பைதுல் முகத்தஸ், ஏழுவானம், நரகம், சொர்க்கம் முதலானவைகளெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு என் றப்பாகிய அல்லாஹுதஆலாவை தரிசித்தேன். என் றப்பிடம் பேசவேண்டியவை எல்லாம் பேசினேன். எனக்கும் என்னுடைய உம்மத்துகளுக்கும் இன்னின்ன கட்டளையை தந்தருளினான்” என்று சொன்னேன். அதற்கு அபூஜஹ்ல் “இவ்வளவு அளவற்ற தூரமெல்லாம் சுற்றிப்பார்த்து விட்டு பொழுது விடிவதற்குள் மக்காவில் வந்து சேர்ந்து எங்களுடனும் வந்து கூடிக்கொண்டீரா” வென்று பரிகசித்து மொழிந்தான். நான் ஆம் உண்மைதான் என்றேன். அவன் அப்படியானால் இச் செய்தியை மற்றும் பேர்களுக்கும் சொல்வீரா என்றான். ஆம் தடையின்றி சொல்வேன் என்றேன்.

அபூஜஹ்ல் முஹம்மதை கேலி பண்ணுவதற்கும், பரிகசிப்பதற்கும் அவருடைய வார்த்தையை பொய்யாக்குவதற்கும் சரியான சந்தர்ப்பம் கிடைத்ததென்று மூடபக்தியால் நினைத்துக்கொண்டு “பனீகஃபுடைய கூட்டங்களே! யாவரும் வாருங்கள். முஹம்மதுடைய கூற்றை கேளுங்கள்” என்று அபய சப்தமிட்டு அலறி அழைத்தான். ஒரு நொடிநேரத்திற்குள் யாவரும் வந்து கூட்டமாய் கூடிவிட்டார்கள். அப்போது அபூஜஹ்ல் யாவர்களையும் விளித்து, முஹம்மது ஏதோ ஒரு பெரிய அதிசயத்தை சொல்லுகிறார் கேளுங்களென்று சொல்லிவிட்டு, முஹம்மதே! நீர் என்னிடம் சொன்னீரே அந்தச் செய்தியை ஒன்றும் விடாமல் இவர்களிடம் சொல்லு என்றான். “நான் பைத்துல் முகத்தஸ் சென்று அங்கு சகல நபிமார்களுடன் பேசினேன். அவர்களுக்கு இமாமாக நின்று தொழுதேன். அங்கிருந்து ஏழுவானங்கள் மட்டும் சென்றேன் அதில் கணக்கற்ற அதிசயங்களை கண்டேன், அவ்விடத்திய சகல நபிமார்களை கண்டு தரிசித்தேன்” என்று சொல்லிநரக சொர்க்கத்தைக் கண்டதும், காபகௌஸைன் வரை சென்று என்னுடைய றப்புடன் வசனித்ததும் ஒன்றும் விடாமல் சொன்னேன். அதுகேட்டு குறைஷிகள் அனைவரும் ஆச்சரியமுற்றார்கள். அதில் சிலர் மெய் யென்றும் சிலர் பொய் யென்றும் சொன்னார்கள். பிறகு ஜனங்கள் அபூபக்கர்

ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹுவிடம் சென்று இக்காட்சியை சொல்லி வினவியபோது, அதற்கு ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு “உண்மைதான்; நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இதை சொல்லி இருப்பார்களானால் உண்மையைத் தான் சொல்லி இருப்பார்கள்” என்றார்கள். அதற்கு அவர்கள், தாங்கள் இதை உண்மைக் கொள்கிறீர்களா? என்று கேட்ட பொழுது அதற்கு அவர்கள் நான் அவர்களை இதைக் காண முரண்பட்ட காரியத்திலும் உண்மை கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒரு நாளையில் பல விடுத்தமும் வானலோகத்து செய்திகளை ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் கொண்டு வந்து சொல்லுகிறதாக சொல்லுகிறார்கள் அவைகள் அனைத்தையும் நான் உண்மை கொள்கிறவன். இதை நான் உண்மை கொள்ளமாட்டேனா? அவர்கள் உண்மையே யொழிய பேச மாட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். இதற்காக அவர்களுக்கு ஸித்தீக் என்று பேர் வழங்கப்பட்டது. அலிறலியல்லாஹு அன்ஹு, அபூபக்கருக்கு ஸித்தீக் என்னும் நாமம் அல்லாஹ்விட மிருந்து கிடைத்ததாகும் என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அபூஜஹ்ல் இவர் வானுலகமெல்லாம் சென்று விட்டு வந்தேன் என்று சொல்லுகிறது இருக்கட்டும். பைத்துல் முகத்தஸ் சென்று அங்கிருந்து வானுலகம் சென்றேம என்கிறாரே, அந்த பைத்துல் முகத்தஸைப்பற்றி செய்தியை கேளுங்கள் உண்மை விளங்கிவிடும் என்றான். அதுபோல் குறைஷிகள் என்னிடம் ‘நீர் பைத்துல் முகத்தஸ் சென்றேன்; அங்கு நபிமார்களை சந்தித்தேன்’ என்று சொன்னீரே அவர்களின் வடிவங்களை சொல்லும் பார்ப்போ மென்றார்கள். அப்போது நான் ஈஸா அலைஹிஸ்ஸலாமின் வடிவமாகிறது, அவர் நெட்டையுமில்லை கட்டையு மில்லை, நடுத்தரமானவர்கள், புயம் விரிந்தவர்கள், முடி சுருண்டவர்கள், செம்பட்ட முடியுள்ளவர்கள், சிவந்த நிறமுள்ளவர்களாவர் என்றும்; மூஸா அலைஹிஸ்ஸலாமின் வடிவமாகிறது, உடல் பருத்தவர்கள், சாம்பல் நிறமுள்ளவர்கள், நெட்டையானவர்கள், சரீரத்தில் முடி அடர்ந்தவர்கள், உதடு விரிந்தவர்கள், கடு கடுத்தவர்களாவர் என்றும்; இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாமாகிறவர்கள், அல்லாஹ்வின் பேரில் ஆணையாக சிருஷ்டியாலும், குணத்தாலும், என்னைப்போலிருப்பார்களென்றும் சொன்னேன். இதைக் கேட்டதும் குறைஷிகளெல்லாம் பொய் பொய் என்று கைகொட்டி

சிரித்து, இது ஒப்புக்கொள்ளத் தக்கதல்லவென்று சொல்லி, நாங்கள் பைத்துல் முகத்தஸுக்கு போகிறதனால், ஒட்டகை மீது சென்றால் ஒரு மாதமாகிறதே, நீர் ஒரே இரவில் போய் வந்து விட்டதாக சொல்லுகிறீர். லாது உஸ்ஸா வென்னும் ஸ்வாமி பேரில் ஆணையாக. நாங்கள் உம்முடைய சொல்லை நம்பவேமாட்டோம் என்று சொன்னார்கள். இந்த சந்தேகத்தால் முன் ஈமான் கொண்டவர்களில் சிலரும் முர்தத்தாகி இஸ்லாமைவிட்டும் விலகி இருந்தார்கள்.

பிறகு குறைஷிகளில் சிலர் பைத்துல் முகத்தஸுக்கு போய் வந்தவர்கள் இருந்துகொண்டு, "முஹம்மதே! பைத்துல் முகத்தஸுக்கு எத்தனை வாசல்? எத்தனை விளக்கு? இதை சொல்லு" என்று கேட்டபோது, அதை நாம் சரிவர கவனிக்க வில்லையே, என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, அல்லாஹு தஆலா ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமை அனுப்பி பைத்துல் முகத்தஸ் பள்ளியை எனது ஹபீபாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிரே கொண்டு வந்து காட்டி விட்டு வாரும் என்று கட்டளையிட்டான். அதுபோல், ஜிப்ரயில் அலைஹிஸ்ஸலாம் பைத்துல் முகத்தஸை எனக்கெதிரே அமைத்து விட்டார்கள். அதைக்கண்டு நான் சந்தோஷமுற்று, குறைஷிகளின் கேள்விகளுக்கு பைத்துல் முகத்தஸிலுள்ள சகல உருக்களையும் ஒன்றும் தவறாதபடி சொன்னேன். அதற்கு குறைஷிகள் "இப்போது நீர் சொன்னது சரிதான். ஆனால் நீர் இப்போது போய் விட்டு வந்தபடி ஒருவரும் போய் வரவு மில்லையே; அப்படி போய் வந்ததாக நாங்கள் கேள்விப்படவு மில்லையே. ஆனதால் இதல்லாத வேறு எந்த அத்தாட்சியாவது சொல்ல முடியுமா?" வென்று கேட்டார்கள். அதற்கு நான் பைத்துல் முகத்தஸுக்குப் போகும் பாதையில் ரூஹா என்னும் ஸ்தலத்தில் வியாபாரிகளான (காபிலாக்களை) கூட்டத்தார்களைக் கண்டேன். அவர்கள் ஒரு ஒட்டகையை தவற விட்டுவிட்டு தேடிக்கொண்டிருந்தார்கள். இதை அவர்களுக்கு அறிவித்துவிட்டு, அவர்கள் சாமான் சரக்குகள் வைத்திருக்கும் ஸ்தானத்திற்குப் போனேன். அவ்விடத்தில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதை நான் எடுத்து குடித்து விட்டு மீத தண்ணீரை கீழே கொட்டிவிட்டு போனேன். இச் செய்தியை அந்த காபிலாக்கள் இடம் கேளுங்கள். அவர்கள் இத்தனை

ஒட்டகக்காரர்களாவர். இன்னகிழமை பொழுது உதயமாகும் போது இவ்விடம் வந்து சேருவார்கள். அவர்கள் வரும்போது முதலில் இன்னநிறமுள்ள ஒட்டகை முன்னாலே வருமென்று சொன்னேன். இதைக்கேட்டதும் இந்த குறைஷிகளெல்லாம் அந்த காபிலாக்கள் வருகிற நேர வழி பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி இருக்கையில், அவர்களிலொருவன் அல்லாஹ்வின் பேரில் ஆணையாக இதோ பொழுது கிளம்பிவிட்டது. காபிலாக்கள் வரவில்லை, என்றுகூச்சலிட்டான். இன்னொருவன் அல்லாஹ்வின் பேரில் ஆணையாக முஹம்மதுடைய சொற்படி இதோ காபிலாக்கள் வந்து விட்டதென்று சொன்னான். அதுபோல் காபிலாக்கள் வந்து சேரவே அவர்களிடம் செய்தியை கேட்டபோது முஹம்மதை, நாங்கள் கண்டோமென்றுசாட்சி பகர்ந்தார்கள். அதைக்கேட்டு சகலரும் உண்மை கொண்டார்கள். அதனால் முர்தத்தானவர்களெல்லாம் தவ்பா செய்து இஸ்லாத்தில் மீண்டு விட்டார்கள். இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அன்றையதினம் நாலாயிரம் குறைஷிகள் இஸ்லாத்தைத் தழுவினார்கள் என்று சொல்லுகிறார். மற்றும் முஷ்ரிகானவர்களெல்லாம் இது வஞ்சனை சூனியமென்று சொல்லி விட்டுப்போய் விட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் தோழர்களோடு வீடு வந்து சேர்ந்தார்கள்.

இரண்டாவது

நுபுவத்துக் காண்டம்

முற்றுப்பெற்றது.

மூன்றாவது

ஹிஜ்றத்து காண்டம்.

50-வது அத்தியாயம்.

மதீனத்தார் ஈமான் கொண்டது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மதிநத்தாத குபிரர்செய்யு மத மாச்சரியங்கெட மறையை
மதிநத்தாசை கொளவுரைக்கு முஹம்ம துறஸூல் மக்காவில்
மதிநத்தாருந் தோழருடன் மகிழ்வுற்றிருக்கும் போதடைந்தே
மதிநத்தாரீ மான்கொண்ட வரலா றனைத்தும் வகுத்திடுவாம்.

இதன்பொருள்.

நற்புத்தியை விரும்பாத காபிரீன்கள் செய்யும் பொல்லாங்காகிய உட்பகையும், எரிச்சலுங் கெட்டுப்போகப் புர்க்கான் வேத அறிவை யாவரும் நத்தாசை கொள்ளப் பிரசங்கிக்கும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், திருமக்கமா நகரத்திற் சங்கையை நத்துகின்ற தங்கள் தோழன் மார்களான தீனுடையவர்களுடனே மனமகிழ்ச்சி பொருந்தி யிருக்கும்போது, திருமதீனமா நகர்வாசிகள் வந்து தீனுல் இஸ்லாம் மார்க்கத்தை விரும்பி ஈமான் கொண்ட வரலாறுகள் யாவையுஞ் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மணிதிரண் டனைய திண்டோன் முஹம்மது மக்கமீதி
லணிபெற விருந்து வல்லோ னருளொடு மதீனத்தேகிப்
பணிபரித் துவந்த பாரிற் குபிரிருட் படலநீக்கித்
தினிசுடர் நிலாத்தீனேங்கச் செய்தவை யெடுத்துச் சொல்வாம்.

வசனம்.

இரத்தினங்கள் ஒன்றோடொன்று திரண்டாற்போன்ற தோள் புயத்தையுடைய நபிகட் பெருமான் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவின் கிருபையோடு திருமக்கமா நகரத்தின் கண் இருந்து மதீனமா

நகரத்திற்கு சென்று, குபிறாகிய அந்தகாரத்தை யொழித்து தீனுல் இஸ்லாமென்னும் திவ்விய மார்க்கத்தை சந்திர பிரகாசத்திற் கொப்ப பிரகாசிக்கச் செய்தவற்றை யாம் எடுத்துக் கூறுவோம்.

விருத்தம்.

நதிமனைக் குரியதாரை காட்டுநல் வினையு மூழற்
பதிசெய்தீ வினையுமாறு பட்டொரு தலஞ் சேர்ந்தென்ன
விதிமறை நதிர் மெய்த்தீனும் வெங்குபிர்க் களையுமொன்றாய்ப்
பொதுவறக் கலந்து மக்கா புரத்தினிலிருக்கும் நாளில்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், மனிதர்களின் பாவத்தை அறத்தொலைக்கும் திவ்வியஸ்தலமாகிய மக்கமாநகரத்தில் சிறப்பும் தகுதியும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கும் வண்ணம் வீற்றிருந்துகொண்டு, தங்கள் மார்க்கத்தைப் பரத்தி வந்தார்கள். இதற்கிடையில் ஈமான், இஸ்லாம் என்னும் இரண்டு காரியத்திற்கு முள்ள பதினொரு நிபந்தனைகளும் நியமிக்கப்பட்டன. அந்த நிபந்தனைகள் ஒவ்வொன்றிற்குமுள்ள ஏற்பாடுகளும் விதிக்கப்பட்டன. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அல்லாஹு தஆலாவின் சமுகத்திற்கு மிஃறாஜு சென்று மீண்டார்கள். இவ்வளவும் நிகழ்ந்த பின் அக்காலத்தில், மக்கமாநகரத்தில் மோக்ஷத்திற்கு செல்லும் பாதையாகிய தீன் என்னும் பரிசுத்த மார்க்கமான சிறந்தபயிரும், நரகத்திற்குச் செல்லும் குபிரென்னும் அசுத்த மார்க்கமான முட்செடிகளும் ஒன்றாய்க் கலந்து வளர்ந்து வந்தன. பகைசாதிப்பதில் காபிர்கள் கொஞ்சமும் பின்னடைந்து நிற்கவில்லை. தீனோர்களும் அவர்களுக்கு அஞ்சியடங்க வில்லை. ஒருவரோடு ஒருவர் முரண்டு கொண்டே இருந்தார்கள். பகை வரவர முதிர்ந்தது.

இப்படியிருக்குங் காலத்தில், மக்கமாநகரத்தில் இராஜ்ஜியத்தார் அனைவரும் வருஷத்துக்கு ஒருதரம் வந்து கூடிக்கொண்டாடும் ஹஜ்ஜுப்பெருநாள் அடுத்தது. அதற்காக வேண்டி மதீனமா நகரத்தாரும் அநேகர் வந்தார்கள். அப்போது மதீனமா நகரத்துத் தலைவர்களில் அஸ்அது என்பவரும் வந்திருந்தார்கள். அந்த அஸ்அது என்பவர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தரிசிக்க விரும்பி, தன்னுடன் வந்திருக்கும் மற்ற தலைவர்கள்

பன்னிரண்டுபேர்களுக்கும் இதம் சொல்லி, அவர்களையும் அழைத்துக்கொண்டு, அகபா என்னும் இடத்தில்வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதமலர்களைத் தரிசித்தார். மதீனமா நகரத்துத் தலைவர் பன்னிரண்டு பேர்களும், அஸ்அது என்பவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வழிப்பட்டு, ஈமான்கொண்டு முஸ்லிமானார்கள். மதீனமா நகரத்து தலைவர்கள் கலிமாசொல்லி முஸ்லிமானது மாத்திரமல்ல; "இன்று தொட்டு தங்களுக்கு என்னென்ன விபத்துகள் நேரிட்டாலும் தங்களின் சொல்வழி ஒழுகி நிற்போம். தங்களுக்காகவேண்டி நாங்கள் அனைவரும் உயிரை பலியிடுவோம்" என வார்த்தைப்பாடும் பண்ணிக்கொடுத்தார்கள். அவர்கள் வார்த்தைபாடு பண்ணிக்கொடுத்த பின், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! நாங்கள் எங்கள் மதீனமா நகரத்திற்குப் போகிறோம். நாங்கள் அங்கே போய் சேர்ந்தபின் எங்களுக்கும், இனி நமது மார்க்கத்தில் பிரவேசிக்கும் மற்றவர்களுக்கும், மார்க்க முறைமைகளைக் கற்பிக்கும் பொருட்டு, ஒருவரை எங்கள்கூட அனுப்புங்கள்" என்று கேட்டார்கள். அனைவரும் ஒருமித்து இவ்வாறு கேட்டதற்கு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மனம் மகிழ்ந்து தங்களின் அஸ்ஹாபிகளில் மார்க்கமுறைமையை முறையே கற்பிக்கும் திருவாகமுள்ள முஷயிப் என்பவரை அந்த மதீனத்தார்களுடன் சேர்த்து அனுப்பினார்கள்.

பின்னர் அஸ்அதும், முஷயிபும் மற்ற பன்னிரு தலைவர்களும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு, வனம், வனாந்தரம், மலை, நதிமுதலான பல இடங்களையும் கடந்து மதீனமா நகரம் சேர்ந்தார்கள். இவர்கள் மதீனமாநகரம் போய்ச்சேர்ந்து, ஒப்பற்ற தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தின் முறைமைப்படி யொழுகி, அவரவர் மனைகளில் இருந்து வணக்கஞ் செய்துவந்தார்கள்.

ஒருநாள் மதீனமா நகரத் தலைவர்களில் ஒருவராகிய மேற்படி அஸ்அது என்பவரும், முஷயிபும் தங்கள் மனையைவிட்டெழுந்து நகர்ப்புறத்திலுள்ள ஒரு பூங்காவனத்தில் சென்று, ஸ்நானம்செய்து விதிப்படி உலுசெய்துகொண்டு, ஒரு சிறந்த மாநிழலிலிருந்து அல்லாஹு தஆலாவைத் தொழுது முடித்து ஓதிக்கொண்டும், நபி

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைப் புகழ்ந்து வாழ்த்திக் கொண்டும் உட்கார்ந்திருந்தார்கள். இவ்விருவரும் உலு செய்வதையும், தொழுவதையும், ஓதிக்கொண்டிருப்பதையும், மதீனமாநகரத்திலுள்ள தலைமைக் குடும்பஸ்தனாகிய அஸ்அது உடைய குடும்பத்திலுள்ள சஃது என்பவன் ஒருமறைவில் ஒளித்து நின்று பார்த்துக்கொண்டு, சினமும் ஆச்சரியமுமுற்று, அவ்விருவர் பேரிலும் வெறுப்புடன், மக்கமாநகரத்தில் விளைந்த தீங்குகள் அடங்கலும் இந்த மதீனமா நகரத்திலும் விளையத்தொடங்கிற்றே என மனம் புழுங்கி, அவ்விருவருக்கும் எதிர்செல்லாமல் மீண்டும் ஊருக்குள் புகுந்து, உசைது என்பவனிடம் சென்று, அவனைநோக்கி "கனம்பொருந்திய உசைதே, மக்கமாநகரத்தில் ஹாஷிம் குடும்பத்தில் முஹம்மது என்பவன் பிறந்ததுமுதல் அவ்வூர் பெரும் பகையும் கலகமும் விளைந்து செழிப்பின்றி உறங்குகின்றது. ஒருவருக்கொருவர் மாறுபட்டு, செல்வம்குன்றி, மிகப்பீடை யடைகின்றார்கள். தானம், தருமம் முதலான நற்கருமங்கள் அனைத்தும் சிதைவுபட்டன. பழியும், பாவமும் மிகுந்தன. இவ்வித கோளாறுகளெல்லாம் அந்த முஹம்மதாலே உண்டாயின. அங்கே அப்படியிருக்க, இங்கே எனது பெரியதாயின் புத்திரனாகிய என்தமையன் அஸ்அது என்பவன், மக்கமாநகரத்தானாகிய முஷயிபு என்பவனுடன் கூடிக்கொண்டு, அந்த முஹம்மதுடைய மாயத்தில் சிக்குண்டு, இந்த மதீனமா நகரத்தையும் சீரழிக்கத் தலைப்பட்டிருக்கிறான். இதற்கு நாம் என்னசெய்ய முடியும் ஆனால், இனி அறிவற்ற அந்த மக்கமா நகரத்தாரைப்போல நாமும் பார்த்துக்கொண்டு, மவுனமாயிருந்து விடுவது சரியல்ல. நமது நகரத்தில் அவ்விதத் தீமைகள் முளைக்க எத்தனப் படுவதற்குமுன் அதைப் பற்றிப் பின்வரும் கஷ்டநஷ்டங்களுக்காக ஆலோசித்துக்கொண்டு காலைப்போக்காமல், உடனே மேற்படி புதிய மார்க்கத்தாரைக் கொன்றுவிடுவதே உத்தமம். இதைக்குறித்து நாம் சும்மா இருக்கக் கூடாது" என்று உக்கிரத்துடனே, அந்த உசைது உடைய மனம் கொதித்து சினத்தீ பற்றும்படி சொன்னான். சஃது சினந்து சொன்ன இச்சொற்களை அந்த உசைது கேட்டு, கண்கள் சிவக்க சஃதை நோக்கி "வெற்றிவாள்தரித்த தலைவராகிய சஃதே, தெய்வத் துஷணத்துடன் வழிகெட்டுப் புதியமார்க்கத்தில் பிரவேசித்து வருந்தும் அந்தப் பாதகத் தொழில் இந்த மதீனமா

நகரத்திலுமா நடைபெறத் தொடங்கிற்று? ஆஹா!! அதை இவ்வூரார் அறிந்து கலகம் விளைக்கவும், சிலர் அதற்கு உடன்பட்டு நிற்கவும் நேரிடுவதற்கு முன்னம், நாமே அந்தத் தீமையான தொழிலைத் தொலைத்து விடவேண்டும். அதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்?” என்றான். உசைது இவ்வாறு கேட்டபோது சஃது என்பவன் அவனை நோக்கி “உசைதே! அந்த அஸ்அது என்பவன் எனக்குத் தமையன் முறையிலுள்ளவன். அவனை நான் கொல்லுவேனானால் அது உலகத்திற்குப்பொருந்தாது. நீர் அவனைக் கொல்லலாம். நீர் கொன்ற பின் அது பிரஸ்தாபமானால், சொந்த மார்க்கத்தை யிழந்து நூதனமார்க்கத்தில் புகுந்தபடியால் அஸ்அது கொலையுண்டான் என யாவரும் சொல்லுவார்கள். அதற்காக உம்மைப் பழிவாங்க வருவார் ஒருவருமில்லை. நான் அவனைக் கொல்லுவேனானால் அந்தப்பழி என்னைச்சூழும். அதனால் பாரதூரமான வீண் பொல்லாங்குகளும் விளையும். ஆகையால், உசைதே, நீரே எழுந்து சென்று விரைவில் அவனைக் கொன்று விடும்” என்றான். சஃது சொன்னசொல்லை உசைது கேட்டு இது நியாயந்தான் எனசிரக்கம்பஞ் செய்து கொண்டு வலதுகையில் வாளை யுருவிப் பிடித்தவனாய், சினம் மீறிக் கண்களில் தீப்பொறிபறக்க முகத்தில் வியர்வை சிந்த ஆண்சிங்கம்போல ஆக்கிரமத்துடன் நடந்து, அஸ்அதும் முஷையிபும் இருக்கும் மரத்தடியை நோக்கி வந்தான். உக்கிரகம்கொண்டு ஆயுதபாணியாய் வரும் உசைதை நோக்கி, அஸ்அதும் முஷையிபும் சந்தேக முற்றுக் கலங்கினார்கள். அவன் நெருங்கிவருவதற்கு முன் அஸ்அது என்பவர் முஷையிபை நோக்கி “முஷையிபே, இதோ சினத்துடன் வரும் உசைது என்பவன் இவ்வூராரனைவருக்கும் தலைவன்; ஒப்பற்ற சினமுள்ளவன் மகாதீரன். இவன் இப்போது வெகுண்டு வருகின்றான். இவன் வரும் வரவைக் கவனிக்குமிடத்தில், நம்மிருவரையும் கொன்று விடுவான் போலத்தோற்றுகின்றது” என்றார். அப்போது முஷையிபு அஸ்அதை நோக்கி “அஸ்அதே, வெகுண்டுவரும் அவனை நோக்கி நாம் மனம் கலங்குவது சரியல்ல. அல்லாஹு தஆலாவின் உதவியும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் கருணையும் நம் மீது இருக்கின்றன. இப்போது அவன் இங்கே நம்மிடம் வரட்டும். நான் உபாயமான சில இதமுள்ள வார்த்தைகளால் அவன் மனதைத் தெளிவிக்கின்றேன்” என்று சொன்னார்.

இவ்விருவரும் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், மேற்படி உசைது என்பவன் வந்து அவ்விருவரையும் நெருங்கி நின்று, மனம்புழுங்கி, கண்களால் தீப்பொறி சிந்த, உக்கிரத்துடன் நோக்கி, திகில் உண்டாகத் தக்கவிதமாய்க் கீழ்வருமாறு சொல்லலானான் :—

நீங்கள் இருவரும், சிறந்த மக்கமா நகரத்தைச் சீர்கேடாக்கிப் பாரதூரமான பொல்லாங்குகளை யுண்டுபண்ணிவிட்ட குடும்பக் கோடாரியான முஹம்மதுக்கு கீழ்ப்பட்ட தீயோர்களுடன் கூடியிருந்து, இங்கேவந்து இந்த மதீனமா நகரத்தையும் சீரழிக்க நாடி இவ்வூராருக்கு அந்த மாயா விநோதமான புதியமார்க்கக் கோட்பாடுளைப் போதிக்க தலைப்பட்டு விட்டீர்கள். அது அநியாயமான செய்கை. இனி நீங்கள் அவ்விதமான துற்போதனைகளை இவ்வூர் ஜனங்களுக்குப் போதிப்பதை நிறுத்திவிட்டு, இப்போதே இவ்வூரை விட்டு அப்புறப்பட்டுப் போய்விடுவது மகா உத்தமம் என்று உங்களுக்கு அறிவிக்கிறேன். இப்போது நான் சொல்லும் இந்த உபகாரமான வார்த்தையை அலக்ஷியம் செய்து மறுத்து விட்டு, இங்கேயே மறுபடியும் இருப்பீர்களானால், உங்கள்வுயிரை இதோ என் கையிலிருக்கும் வாளுக்கு விருந்தாகக் கொடுத்து விடுவேனென்று மிகஉறுதியுடன் சொல்லுகிறேன். இந்த சொல்லை உங்களுடன் நான் தருமார்த்தமாகச் சொல்ல வந்தேனே யன்றி, உங்களுக்கு அஞ்சியல்ல. நீங்கள் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு இந்த க்ஷணமே அப்புறப்பட்டுப் போய்விடுவது உத்தமம் என மறுபடியும் சொல்லுகிறேன்-”

இவ்வாறு உசைது சொன்னபோது, இச்சொல்லை முஷையிபு கேட்டு அவனை நோக்கி “நீர் சொன்னது வாஸ்தவந்தான். அதுவும் எங்களுக்கு அனுகூலமே யன்றி, பிரதிகூலமல்ல. உமது சொல் தருமார்த்தமா யிருந்த போதிலும் நீர் சற்றுநேரம் எங்களுடன் சம்பாஷித்து இருந்துவிட்டுப் போக வேண்டும். அதற்குப்பின் நீர் சொன்னவாறே நாங்கள் நடந்து கொள்ளுகிறோம்” என்றார். முஷையிபு சொன்ன இச்சொல்லை அந்த உசைதுகேட்டு, இவன் சொல்வது நமது இருதயத்திற்கு இதமல்லாததா யிருந்த போதிலும், ஒருவாறு கேட்டறிவோம் என எண்ணிக் கொண்டு, தனது கோரிக்கையை ஒரு புறத்தில் அமைத்துக் கொண்டு, முஷையிபுக்கு அருகே அந்த மரநிழலில் உட்கார்ந்தான். உசைது

உட்கார்ந்தவுடன் முஷையிபு மனம் களித்து, அல்லாஹு தஆலாவைத் துதித்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை வாழ்த்தி, தமது திருவாய்திறந்து 'பிஸ்மில்லாஹ்' சொல்லி, குர்ஆனில் தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தின் மகிமையைக் குறிக்கும் இரண்டொரு வாக்கியங்களை, அந்த உசைது உடைய இருதயத்திலுள்ள குபிரிருள் நீங்கும் படி ஓதிக்காட்டினார். இவ்வாறு முஷையிபு வேதவாக்கியத்தை ஓதினபோது அதன் உள்ளுறை பொருள் மிகத் தெளிவாய் விளங்கினபடியால், உசைது உடைய இதயத்திலுள்ள தீமை களனைத்தும் பற்றற நீங்கிற்று. உடனே உசைதுக்குப்பேரறிவு உண்டானது. அதனால், அவர் முஷையிபு ஓதின வேத வாக்கியத்தை இருதயாநந்தமும், செவிக்கு இன்பமும் விளையும்படிகேட்டு, குபிர் என்னும் தீயமார்க்கத்தில் அலைந்து திரிந்து நரகம் போய்க் குடிபுகாமல், இந்த முத்தி மார்க்கத்தில் பிரவேசிக்கும்படி இன்று நம்மைத்தூண்டிவிட்டது நமது தொல்வினையே யன்றி வேறல்லவென்று மட்டில்லாத சந்தோஷமுற்று, முன்கோரிவந்த கோரிக்கையை அறமறந்து, தமது வாய்திறந்து "இதுதான் உண்மையான மார்க்கம்! இதுதான் சத்திய வேதம்! இதுதான் சர்வஜீவன்களும் கடைத்தேறத்தக்கது! இதுதான் எல்லா உலகங்களும் விரும்பக்கூடியது! இதுதான் சுவர்க்கத்தில் சேர்ப்பது! இந்த மார்க்கத்திற்கு உரிய முஹம்மது நபி உண்மையான றஸூலும், உலகரக்ஷகருமாவர்" என வியந்தார்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மனத்தினன் மகிழ்ச்சி கூர்ந்து முசுஹபைப் போற்றி மன்ன
ரினத்தினு முயிரின் மிக்கா யெனவெடுத் தினிய கூறிக்
கனத்தநூன் முறையின் வாய்த்த நபிகலி மாவை யோதிச்
சினத்திடர்க் குபிரை மாற்றித் தீனிலை நெறியின் ரூரே.

வசனம்.

அஸ்அதையும் முஷையிபையும் கொன்று விடுவதற்காக ஆங்காரங்கொண்டு திகிலுண்டாகும்படி வந்த உசைது, வேதவாக்கியத்தை ஓதக் கேட்டபோது தாம் நின்ற தீயமார்க்கத்தை வெறுத்து மனந்திரும்பி "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றஸூலுல்லாஹி" எனக்கலிமா சொல்லி முஸ்லிமானார். இவ்விதம் உசைது ஈமான் கொண்டு முஸ்லிமானபின், அஸ்அதையும், முஷையிபையும் சந்தோஷத்துடன் நோக்கி "சகோதரர்களே, என் இருதயத்திலுண்டான ஒரு கருமத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள். எனக்கு அத்தியந்த மித்திரராகிய ஸஃது என்பவர், கல்விகேள்விகளில் சிறந்தவர்; கோத்திரத்தில் உயர்ந்தவர்; ஒப்பற்ற வீரம்பெற்றவர்: மகிமையில் விசேஷமானவர்; இந்த மதீனமாநகரத்துத் தலைவர்களுக்கெல்லாம் தலைவர்; என் பிராணனுக்கு சாமானமானவர்; என்வார்த்தைக்கு முரண் பேசாத ஒற்றுமையுள்ளவர். இவ்வித மேன்பாடுள்ள அந்த ஸஃது என்பவர், கலிமாச்சொல்லி இஸ்லாத்திலானாரே யானால், இந்த மதீனமா நகரம் ஒருமிக்க முஸ்லிமாய் விட்டதென்று சொல்லுவதற்கு யாதொரு சந்தேகமில்லை. ஆனதால், நான் இப்போதே அவரிடம் சென்று, அவர் மனதைக்கரைத்து உங்களிடம் வரச்செய்கிறேன். அவர் வந்தவுடன் நீங்கள் வேதவாக்கியங்களை ஓதிக்காட்டி, மனதைத் திருப்பித் தேற்றி, இஸ்லாம் மார்க்கத்தில் சேர்த்து விடுங்கள்" என்றார். இதைக்கேட்ட இருவரும் சந்தோஷமுற்றார்கள். பிறகு உசைது அங்கிருந்து புறப்பட்டு, கலிமாச்சொல்லி முஸ்லிமான மகிமையால் இதயம் களிப்புற்று முகமலர்ந்து விளங்க, புஜங்கள் விம்ம, சந்தோஷக்குறியுடன் ஸஃதை நோக்கிவந்தார். கண்கள் அக்கினிகக்க உக்கிரம்கொண்டு, உருவியவாளுடன் வெகுண்டு சென்ற உசைது அதற்கு மாறாய், சந்தோஷத்துடன் மீண்டுவருவதை ஸஃது நோக்கி "மிகுவேகமாய் மீசைகள் துடிக்க, வெகுண்டு வாளையுருவிக்கொண்டு சென்ற உசைது, சந்தோஷமாய் முகமலர்ந்து வருகிறார். இவர் அங்கே போனபின் நிகழ்ந்தவை தெரியவில்லையே அவற்றை அறியவேண்டும்" என சிந்தித்துக்கொண்டு நின்றான்.

ஸஃது இவ்வாறு சிந்தித்துக்கொண்டு நிற்கையில், உசைது என்பவர் ஸஃது இடம் நெருங்கினார். அப்போது அவர் உசைதை நோக்கி "இஷ்டரே, நீர் இங்கிருந்து வெகுண்டு சென்றதும், அங்கிருந்து மகிழ்ந்து மீண்டதும் எனக்கு வியப்பாயிருக்கிறது. நிகழ்ந்த காரியம் என்ன?" எனக்கேட்டான். அப்போது உசைது ஸஃதை நோக்கி "எனது பிராண சிநேகிதராகிய ஸஃதே, நாம் முடிவு செய்தவாறே அஸ்அதைக் கொன்று போடுவதற்காக நான் வெகுண்டு இங்கிருந்து அந்தப் பூங்காவனத்திற்குப் போனேன். போய்ப்பார்த்தபோது, நீர் சொன்ன அவ்விருவரும் அங்கிருக்கக்கண்டு, அவர்களை

நெருங்கி சங்கதியை யறிந்தேன். அவர்கள் நடத்தும் மார்க்கம் நியாயமானதாயும், யதார்த்தமானதாயும் காணப்படுகிறதன்றி, வேறே யாதொரு பிசகும் அதில் இல்லை. இதை நான் மிகத்தெளிவா யறிந்துகொண்டு, இன்னும் அதைப்பற்றி ஆராய்ச்சி பண்ணி நின்றேன். அந்த வேளையில் உமது தமையனாராகிய அந்த அஸ்அது என்பவரைக் கொலை செய்வதற்காக அவருடைய குடும்பத்தி லுள்ள நீண்டகாலத்துப் பகைவராகிய பனீயாரிதா என்னும் கூட்டத்தார் திரண்டு வருகிறார்கள் என்னும் செய்தி என் காதில் விழுந்தது. அதை உம்மிடம் தெரிவிக்கவேண்டும் என்று உடனே அங்கிருந்து மீண்டு வந்துவிட்டேன்" என்றார். தொன்று தொட்டுள்ள பகைவராகிய பனீயாரிதாக் கூட்டத்தார் திரண்டு தனது தமையனைக் கொல்ல வருகிறார்களென்ற சொல் காதில் விழுந்த மாத்திரத்தில் சஃதுக்கு மற்ற விரோதமான எண்ணங் களனைத்தும் மறந்தன. உடனே சஃது உக்கிரத்துடன் வேங்கை போல கர்ஜித்து கண்களில் தீப்பொறி பறக்க, மீசைகள் துடிக்க சினந்து எழுந்து நின்று தனது வலக்கரத்துவிரலை மூக்கில் வைத்துக் கொண்டு "எனது பெரிய தாயின் புத்திரராகிய அஸ்அதைக் கொல்லத் துணிபவன் எவனாயிருந்தாலும் சரி, அவனுயிரை இப்போதே என்வாளுக்கு இரைகொடுத்து விடுகிறேன்" என்று உசைதை நோக்கிச்சொல்லிவிட்டு மிக விரைவாய் அஸ்அதும் முஸைபும் இருக்கும் இடத்தை நோக்கிவந்தார்.

தெய்வசங்கற்பம் எவ்வாறோ என ஆராய்ந்துணராத சஃது இவ்வாறு பனீயாரிதாக்கள் பேரில் சினங்கொண்டு விரைவாய் வந்து பார்த்தார். முன்குறிக்கப்பட்ட அந்த மரநிழலில் தனது தமையனாராகிய அஸ்அதும் முஸைபும் மாத்திரம் உட்கார்ந்திருக்கிறார்களன்றி, வேறு பகைவர் ஒருவரின் நடமாட்டமும் அங்கில்லை. சஃது அந்த வனமுழுதும் கண்பரப்பிப் பார்த்துப் பகைவரைக் காணாமையால், மேற்படி இருவரையும் நோக்கி "நீங்கள் இருவரும் அதிக விரைவில் இவ்விடத்தை விட்டு அப்புறப்பட்டு வேற்றூருக்குப் போய்விடவேண்டும். அது என்ன காரணத்திற்காகவென்று என்னிடம் கேட்கக் கூடாது. அப்படி கேட்டால், உடனே உங்கள் இருவரையும் கொன்று போடுவேன். இச்சொல்லை இப்போது நான் உங்களுக்குச்சொன்னது, உங்களில் ஒருவர் தமையன் முறையிலுள்ள

வரானதாலும் "பகைவருக்கும் தருமார்த்தமாக ஒருவார்த்தை அறிவித்துத்தான் பின்பு பழிசாதிக்க வேண்டும்" என அறிவாளிகள் சொல்லி யிருப்பதாலுமே யன்றி, பழிக்கு அஞ்சியல்ல. ஆனதால் நீங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் விக்கினமுண்டு பண்ணிக்கொள்ளாமல் எழுந்துபோய்விடுங்கள்" என்றான். சஃது இவ்வாறு சொன்னவுடன் முஸைபு என்பவர் சஃதைநோக்கி "நீர் கூறியது யதார்த்தந்தான், பகைவருக்கும் தருமார்த்தமாக ஒரு வார்த்தையை அறிவித்துத்தான் பின்பு பழிசாதிக்க வேண்டுமென்பது, நீரும் அறிந்த காரியமானபடியால், இப்போது நீர் தயவுசெய்து ஒருக்ஷணப் பொழுது எங்கள் சமூகத்தில் உட்கார்ந்திருந்து, நாங்கள் சொல்லுவதைக் கேட்டு, பின்பு எழுந்து செல்லலாம். நாங்கள் உமது விருப்பத்தின்படியே நடத்துகிறோம்" என்றார். முஸைபு இப்படி சொன்னவுடன், சஃது நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டவன், ஆனதால், இவ்விருவருக்காக வேண்டி நாம் சற்று நேரம் இருந்து, இவர்கள் சொல்லுவதைக் கேட்டறிவோம் எனக்கருதி, தமது கோபாக்கினியை ஆராய்வென்னும் தண்ணீரால் அவித்து, மேற்படி மரநிழலில் உட்கார்ந்து கொண்டு முஸைபை நோக்கி "நீங்கள் சொல்லுவது என்ன?" என வினவினான். அப்போது, மதீனமா நகரத்துத் தலைவனும் கல்வியில் சிறந்த பண்டிதனும் ஒப்பற்ற வீரனுமாகிய சஃது; நமது சொல்லுக்கு வசப்பட்டா னென்று முஸைபு மனமகிழ்ந்து, முன் உசைதுக்கு ஓதிக்காட்டின வேதத்தை சஃது உடைய செவிகள் குளிர ஓதிக்காட்டினார். முஸைபு ஓதின வேதவாக்கியங்கள் சஃது உடைய செவிவழியாய்ச் சென்று, இருதயத்திலுள்ள குபிரின் அத்தனையையும் அறுத்து விலக்கின. உடனே சஃது அந்த வேதவாக்கியங்க ளடங்கிய மகிமையான அர்த்தங்களை அறிந்து மனம் உருகினார்.

சரித்திரபுராணம்,

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆமுதலைய வேதத்திருமொழி யகத்துட் டேக்கிப்
பேருணர் பொங்கி யாவுந் தோற்றிடாப் பெருக்காநந்தக்
கார்முகிற் கவிகை வள்ளல் தீனெனுங் கடலு ளாழ்ந்து
வாரமுற்றினிலி மானெனும் போகந் துய்த்தார்.

மாதவர்நருலென்னு முஹம்மதை வாழ்த்தி வாழ்த்தி
வேதநன் னிலையிற் றென்றும் விதிமுறைக் கலிமா வோதிப்
பூதலத் துயர்ந்த நல்லோர் புகழ்ந்திட இஸ்லாமாகி
மூதறிவுடைய வள்ளன் முஸ்ஹபைத் தழுவினாரால்.

வசனம்.

வேதவாக்கியங்களைக் காதாரக்கேட்ட சஃது மறுத்து, ஒன்றும் பேசவில்லை. ஆநந்த சமுத்திரத்தில் மூழ்கி, தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தில் பேராசை மீறி, குபிர் என்னும் தீயமார்க்கத்தை ஒழித்து, முஸ்அபு உடைய கையைப்பிடித்து கலிமாச்சொல்லி முஸ்லிமானார். சகுது ஈமான் கொண்டு திருக் கலிமாவை ஓதி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைப் புகழ்ந்து வாழ்த்தி, முஸ்அபையும் மார்போடு தழுவினர். பிறகு, சஃது தமது தமையனாராகிய அஸ்அதை நோக்கி "என் பிராணனுக்கு சமானமான சகோதரரே, என் அறிவற்ற தன்மையால் தங்களை கொல்லத் துணிந்தேன். அதைத் தாங்கள் மன்னிக்கவேண்டும்" எனக் கண்ணீர் சிந்த அழுது, அவருடைய பாதங்களைப் பணிந்து, இருவரையும் நோக்கி "மோக்ஷத்திற்கு செல்லும் இந்தப் பரிசுத்த மான மார்க்கம், அங்கே நிற்கும் உஸைது உடைய பொருட்டாலேயே எனக்குக் கிடைத்தது" என்று வியந்து சொன்னார்.

முன் உஸைது இடத்திலிருந்து சஃது என்பவன் பூங்காவனத் திற்கு வந்தபின், உஸைது என்பவர் பின்தொடர்ந்து மறைவாய் வந்து, நிகழும் காரியங்களை ஒருபுறம் ஒளிந்துநின்று பார்த்துக் கொண்டு இருந்தார். சஃது ஈமான்கொண்டு கலிமாச்சொல்லி தமையனையும் முஸ்அபையும் தழுவி, தன்னையும் வியந்து பேசுவதைக் குறிப்பாலறிந்துகொண்டு, அவரும் மேற்படி மரத் தடிக்கு வந்தார். பிறகு, சஃது என்னும் தலைவர் தமது சகோத ராகிய அஸ்அதையும், முஸ்அபையும், உஸைதையும் அழைத்துக் கொண்டு, அந்த வனத்தை விட்டு மதீனமா நகரத்தில் புகுந்து தமது மாளிகைக்குச் சென்றார். மூவரையும் மனைக்கு அழைத்துக் கொண்டு போய், இன்பமான பதார்த்தங்கள் பரப்பி விருந்து கொடுத்து, அம்மூவரையும் நோக்கி, "சகோதரர்களே! இனி எனது இனத்தார் அனைவரையும் இஸ்லாம் மார்க்கத்தில் தடையின்றி சேர்ப்பேன்" என்றார். இதைக்கேட்ட மூவரும்

சந்தோஷமுற்று விடைபெற்றுக் கொண்டு, தங்கள் ஜாகைக்குச் சென்றார்கள்.

பிறகு சஃது தமது குடும்பத்தார் அனைவரையும் அழைத்து தமது மனையில் வைத்துக்கொண்டு, அவர்களை நோக்கி "நீங்கள் எல்லோரும் என்னை யாரென்று மதிக்கிறீர்கள்? அதைச் சொல்லுங் கள், பின்னர் நான் எனது அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்" என்றார். இதைக்கேட்ட அவர் குடும்பத்தாரனைவரும், இவர் என்ன காரணத்திற்காக இப்படி கேட்கின்றாரோ வென்று அஞ்சி மனம் நொந்து, சஃதை நோக்கி "தாங்கள் இந்த மதீனமாநகரத்துத் தலை வர்களுக்கெல்லாம் நாயகர்; கோத்திரத்தாரனைவருக்கும் பிராண னனவர் என நம்பியிருக்கிறோம்" என்றார்கள். இதைக்கேட்ட சஃது, இச்சொல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் மகிமையாலேதான் இவர்கள் வாக்கில் பிறந்தது என வியப்புற்று, மறுபடியும் அவர்களை நோக்கி, "நீங்கள் அனைவரும் இப்போது முஹம்மது நபிக்கு ஈமான்கொண்டு கலிமாச் சொல்லா விட்டால், இன்று முதல் உங்களில் ஒருவரையும் நான் பந்துவாகப் பாவிக்க மாட்டேன்" என்றார். இதைக்கேட்ட அவர் கிளையாரனை வரும் "எங்கள் எஜமானே! தங்களின் சொல்படி ஒழுகாமல் நாங்கள் மாறு செய்வோமானால், அனைவரும் பைத்தியக்காரர் கள் என்று இகழப்படுவோம். தங்களுக்கு ஒத்தபடி நடக்க எங்களுக் கும் சம்மதம்" என்று கூறி, அனைவரும் நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு ஈமான் கொண்டு, கலிமாச் சொல்லி முஸ்லி மானார்கள். அன்று முதற்கொண்டு மதீனத்தார் களுக்கு அன்சாரீன் என்னும் நாமம் வழங்கத் தொடங்கிற்று.

51-வது அத்தியாயம்.

மதீனத்தார் வாய்மை கொடுத்தது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மதியுற் றோசை யுறமொழியு முஹம்ம தறசூல்பதத் தனுகித்
துதியுற் றுசை யொடுகுபிரைத் தொலைத்துச் சிறப்பா யிஸ்லாத்திற்
பதிவுற் றீமான் கொண்டுநல பண்பே பெருகி வளர்மேன்மை
மதீனத் தார்கள் வாய்மைதரும் வரலாற னைத்தும் பகுத்திடுவாம்.

இதன் பொருள்.

துதியோடும் ஆசை பொருந்தி குபிரிய்யத்தை யடியோடு தொலைத்து விட்டு, சிறப்பாக இஸ்லாம்மார்க்கத்திற் பதிவாகி ஈமான் கொண்டு நல்ல தகுதி பெருகி வளரும் மேன்மையையுடைய திருமதீனமா நகரத்தார்கள், பூர்ண சந்திரன் வந்து பெரிய சப்தத்துடனே பேசிய மகா காரணத்தையுடைய முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாத கமலங்களில் பணிந்து வாய்மை கொடுத்ததென்னும், மெய்மையுறுதி செய்து கொண்ட வரலாறுகள் யாவையுஞ் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

உயர்புகழ் முஹம்மதுக் கும்பர் கோனபிப்
பெயரளித் தாண்டுபன் மூன்று பேர்பெற
நயமுற நடக்குமந் நாளில் ஹஜ்ஜினுக்
கியல்பெற யாவரு மீண்டி னாரரோ.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு, மதீனமா நகரத்துத் தலைவர்களனைவரும் ஈமான்கொண்டு கலிமாசொல்லி வழிப்பட்ட பிறகு, தீன் என்னும் பரிசுத்த மார்க்கம் அந்த மதீனமா நகரத்திலும் பரவத் தொடங்கிற்று. அங்கே அப்படி நிகழுங்காலத்தில் இங்கே மக்கமாநகரத்தில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சந்தோஷத்துடன் வாழ்ந்திருந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு நபிப்பட்டம் அருளப்பட்ட பதின் மூன்றாம் ஆண்டு பிறந்தது. அந்த வருஷத்தில் இராஜ்ஜியத்தார் அனைவரும் மக்கமா நகரத்திலிருக்கும் கஃபா என்னும் திவ்விய தேவாலயத்திற்கு வந்து கூடும் திருநாளாகிய ஹஜ்ஜுப் பெருநாள் வந்தது. அப்பெருநாளுக்காக அநேக இராஜ்ஜியத்தார்கள் திரண்டு மக்கமா நகரத்தில் வந்து கூடினார்கள். அன்றியும், மதீனமா நகரத்திலிருந்து, முன் முஸ்லிமாகிய ஸஃது றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அஸ்அது றலியல்லாஹு அன்ஹு அவர்களும்,

உபைது றலியல்லாஹு அன்ஹு அவர்களும், இன்னமுள்ள அன்சாரீன்களும், இவர்களல்லாத மற்ற அவ்வூர்க் காபிர்களில் அநேகரும் புறப்பட்டு மக்கமா நகரத்திற்கு வந்தார்கள். இவர்கள் மக்கமாநகரம் வந்துசேர்ந்தபோது ஹஜ்ஜுத் தினமும் அடுத்திருந்த படியால், அனைவரும் கஃபாவில் சென்று முறைப்படி ஹஜ்ஜை முடித்தார்கள். அது தீர்ந்த பின் மதீனமா நகரத்துத் தலைவராகிய ஸஃது றலியல்லாஹு அன்ஹு முதலான அன்சாரீன்கள் அனைவரும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தரிசிப்பதற்காக வந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அபூத்தாலிபு உடைய மாளிகையில் வந்து வீற்றிருந்தார்கள். மதீனமா நகரத்தார் அந்த மாளிகையில் வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருச் சமுகத்தில் கூடி யிருந்தார்கள். அன்று சூரியன் அஸ்தமித்து இரவாயிருந்தது. மதீனத்தார்கள், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்திருக்கிறார்களென்னும் சமாசாரத்தை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சிறிய தகப்பனாராகிய அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு கேள்விப்பட்டு, தாமும் அந்தசபைக்கு வந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் திருச்சபை மக்கமா நகரத்தாராலும், மதீனமா நகரத்தாராலும் சிறந்து நிரம்பியிருந்தது.

பிறகு நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், தங்கள் சமுகத்தில் கூடியிருக்கும் மதீனமாநகரத்தாரை நோக்கி, சன்மார்க்கமான சில வாக்கியங்களைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு மதீனத்தார்களை நோக்கி “ மகாகனம் பொருந்திய மதீனத்தார்களே, நீங்கள் எங்கள் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஈமான்கொண்டு. தீன் என்னும் சன்மார்க்கத்தைத் தொடர்ந்து, கலிமாச்சொல்லி, முஸ்லிம்களாய் விட்டீர்கள்: ஆனபடியால், இன்றுதொட்டு எங்களுக்கும் எங்கள் குடும்பத்தார்களுக்கும் பிராணநேசர்கள் நீங்களே யன்றி, இந்தஉலகத்தில் வேறு ஒருவருமில்லை. இந்த மக்கமா நகரத்திலிருக்கும் ஹாஷிம் வம்சத்தா ரனைவருக்கும் கண்மணிக்கு

ஒப்பானவர்கள் இந்த முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே. மேற்படி வம்சத்தார்களுக்கு உரிய அரும் பொருள் முஹம்மது நபியேயன்றி வேறில்லை. அன்றியும் மதீனவாசிகளாகிய நீங்களோ குலத்திலும் குணத்திலும் தேகபலத்திலும், பகையரை நாசஞ் செய்யும் சேனைபலத்திலும், கல்விப் பொருளிலும், செல்வப்பொருளிலும், மற்றமேன்மையான எல்லாவற்றிலும் விசேஷமானவர்கள். உங்களுக்கு சமானமானவர்கள் எங்குமில்லை. ஆனதால், குலமக்களே, இப்போது நான் உங்களுக்கு சொல்லப் போகிற என் வார்த்தையின் குறிப்பை ஆராய்ந்தறிந்து, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஒவ்வொருவர் மனதிலும் இரகசிமாக பாதுகாத்து வைத்துக் கொள்ளவேண்டும். என் வார்த்தையை நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு உறுதிகொண்டு, அதற்கு ஒழுகி நடக்கவேண்டும். இந்த முஹம்மது நபி எனது பிராணனையொத்த சகோதரரின் கண்மணியாய், அற்புத வாரிதியாய், மதிப்பிடக் கூடாத கல்விக்களஞ்சியமாய், இவ்வுலகத்திற்குஒரு மாணிக்க விளக்கைப்போல வந்தவர்கள். இந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிறந்த நாள் முதற்கொண்டு, அவர்களுக்குப் பகைவர்களாலுண்டான வில்லங்கங்கள் கொஞ்சமல்ல; அவற்றுள் ஒன்றாவது அவர்களை யடுக்கவில்லை. அவர்களின் குடும்பத்தாரனைவரும் அவர்களுக்கு தீங்கொன்றும் அடையாமல் காத்து, துதித்து வழிப்பட்டிருக்கின்றார்கள். நாங்கள் எங்கள் கண்மணியைக் காப்பதுபோல காத்து, தீன் என்னும் அவர்களின் முக்திமார்க்கத்தைப்பற்றி ஒழுகி நிற்கின்றோம். எங்களைப் போலவே நீங்களும், உங்கள் இனத்தாரும் வழிப்பட்டு முஸ்லிம்களாய் விட்டீர்கள். மதீனத்தாராகிய நீங்கள் என்றைய தினம் ஈமான் கொண்டு முஸ்லிமானீர்களோ, அன்றையத்தினமே எங்கள் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உங்களை யடுத்து உப பலமாககொண்டு தீனைப் பரத்த விருப்பங் கொண்டு விட்டார்கள். மதீனத்தாராகிய உங்கள் மனதும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மனதும் ஒரே மனதாய், உங்களை உயிர்த்துணையாகக் கொண்டு இந்த மக்கமா நகரத்தை விட்டு நீங்கி, மதீனமாநகரத்தில் வந்து குடியிருக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களின் நெஞ்சைவிட்டுப்போகவில்லை. இனி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்கள் இந்த மக்கமா நகரத்தை விட்டு நீங்கி, உங்கள் மதீனமா நகரத்தில் வந்து வாசஞ் செய்வது நிச்சயம். ஆனால், அந்த மதீனமா நகரவாசிகள் முழுதும் உங்களை யொத்த முஸ்லிம்களல்ல. பெரும்பாலோர் காபிர்களாகவே யிருக்கின்றார்கள். இனியொருகாலத்தில் அவர்களால் விளையும் கஷ்ட நஷ்டங்கள் இன்னவை யென்றும், அதனால் உங்களுக்கு உண்டாயிருக்கும் கோரிக்கை இன்னதென்றும் எனக்குத்தோன்றவில்லை. அவற்றை நீங்கள் பரிஷ்காரமாகச் சொல்லவேண்டும்'' என்றார்கள். அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்ன இச்சொல்லைக்கேட்டு மதீனமாநகரத்தாரனைவரும் சிரக்கம்பஞ் செய்து கொண்டு, அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "அகில ரட்சகராகிய நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை, மதீனமாநகரத்திற்கு அதிபதியாக நியமித்து, நாங்கள் அனைவரும் அவர்களுக்குத் தொண்டுசெய்து ஒழுகி நடக்கவேண்டுமென்று எங்களுக்குள் முன்னமே முடிவு செய்திருக்கின்றோம். நாங்கள் எங்கள் இருதயங்களில் எண்ணி முடிவு செய்திருப்பதற்கு ஏற்ப இப்போது தாங்களும் சொன்னீர்கள். இவ்வேற்பாடு அல்லாஹு தஆலாவினால் உண்டானதாகையால் அதனை மறுத்துப் பேசுவதென்பது கூடாது. இப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எங்கள் இருதயம் களிக்க "இன்னது செய்யவேண்டும்'' என ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லுவார்களானால், அச்சொல்லுக்கு நாங்கள் ஒரு தினைப்பிரமாணமும் பழுது உண்டாக்கமாட்டோம் '' என்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த மதீனத்தார்களை நோக்கி வேதத்தின் சம்மதப்பிரகாரம் கீழ்வருமாறு சொன்னார்கள்:—

" அருமையான அன்சாரீன்களே, எனக்கு உரிய குர்ஆன் என்னும் சத்தியவேதமும், தீன் என்னும் பரிசுத்தமான முக்தி மார்க்கமும் இவ்வுலகத்தில் பரவும் பொருட்டு, உங்களுடைய சிறந்த நகரமாகிய மதீனத்தில் வந்து குடியிருப்பதற்கே என் மனம் விரும்பி விட்டது. அவ்விருப்பம் உங்களுடைய ஐக்கிய சம்பந்தமான நேச பந்தத்தினால் உண்டானதன்றி, மற்றொன்றினாலல்ல,

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

எமக்கணு வெனுமிட ரியையுமேனுமர்
தமக்குவந் தவையெனுந் தகைமை வேண்டுமால்
கமைக்கருத் தொடுமவ னுரைவன் காணுங்குங்
குமக்குவ டெனும்புயக் கொற்ற வேந்தரே.

வசனம்.

எனக்கு ஒரு அணுப்பிரமாணம் வில்லங்கம் உண்டாகும் போது, அவ் வில்லங்கத்தை உங்களுக்கு வந்த பாரதூரமான வில்லங்கமாக நீங்கள் பாவிக்கவேண்டும். இனி நான் இவ்வூரை விட்டுப் புறப்பட்டு உங்கள் மதீனத்துக்கு வந்துவிடுவது உண்மை" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இப்படி சொன்னவுடன், அச்சபையிலுள்ள மதீனா வாசிகளில் ஒருவராகிய பரூ என்பவர் எழுந்து நின்று "எங்கள் குடும்பத்தாராகிய மதனிகள் அனைவரும் நியாய பிரமாணத்தில் ஒரு அணுவளவும் பிசகாதவர்கள்; வம்சபரம்பரையாக வீரத்தில் சற்றும் இளைக்காத வர்கள்; கீர்த்திப் பிரதாப முள்ளவர்கள்; கல்விமான்கள்; பாக்கிய வான்கள்; இவ்வகை மேன்மையையுடையவர்களும், இப்போது இங்கு வந்திருக்கும் நாங்களும், தேவரீருடைய சொல்லுக்குக் கீழ் படிந்து, தங்களின் ஆக்ஞை என்னும் ஒளிவட்டத்தில் பிரதிபிம்பம் போல நின்று, தீனைப் பெருகச் செய்வதில் பின்னடையமாட்டோம். நான் சொல்லும் இச்சொல்லின் முடிவைத் தாங்கள் மதீனமா நகரத்திற்கு வந்த பின் நன்றாயறிவீர்கள். நாங்கள் சொல்லும் எங்கள் சொற்களைத் தாங்கள் யதார்த்தமானவை என்று உறுதி கொண்டு, இந்த மக்கமா நகரத்தைவிட்டு நீங்கி, எங்கள் மதீனமா நகரத்திற்குவந்து எங்களுக்கு எஜமானனாய் வீற்றிருந்து ஆளுகை செய்வீர்களானால், தற்காலம் தங்களுக்கு எதிரிடையாயுண்டாயிருக் கும் சத்துருக்களின் பலத்தை ஒடுக்கிவிடுவது மாத்திரமல்ல, தங்களின் திவ்விய திருமேனியின் வியர்வை நிலத்தில் சிந்தும் பட்சத்தில் அவ்வியர்வை சிந்துதலுக்கு காரணமாயுள்ள பகை யரின் உதிரமனைத்தும் நிலத்தில் சிந்தும்படி செய்வோம். சந்தேகம் சிறிதுமின்றி மேற்சொன்னவாறே செய்வோமென்று நாங்கள் அனைவரும் தங்களுக்கு வாக்குதத்தம் பண்ணித் தருகிறோம்.

எங்கள் வாக்கு சிறிதும் பிசகமாட்டாது" என்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி சொன்னார்.

இவ்விதம் பரூ என்பவர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சமூகத்தில் நின்று வாக்கு கொடுக்கும் போது, மதனியர்களில் ஒருவராகிய கைதம் என்பவர் எழுந்து நின்று, பரூவைப் பேசவிடாமல் அமர்த்திக்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சொன்ன சொற்களுக்கு இசைந்து பரூ என்பவர் சொன்ன சொற்கள் நியாயமானவை யும் உறுதி யானவையுமாயிருந்த போதிலும், அச்சொற்களில் குறிக்கொள்ளத் தக்க விஷயங்கள் சில உண்டு எனச்சொல்லி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "நபியே, இந்த மக்கமா நகரத்திலுள்ள குறைஷி களுக்கும் மதீனமா நகரத்தாராகிய எங்களுக்கும் இடையிலுண் டான சிநேக சம்பந்தம் முதலிய நடவடிக்கைகளெல்லாம் இன்று நேற்று உண்டானவையல்ல. தொன்றுதொட்டு எங்களுக்கும் அவர்களுக்கும் உண்டாயிருக்கும் வார்த்தைப் பாட்டின்படியே இது பரியந்தம் யாதொரு பொல்லாங்கு மின்றி, நாங்கள் ஒருவருக் கொருவர் ஒற்றுமையோடு வாழ்ந்திருக்கின்றோம். இனி தேவரீராகிய தங்களின் திருவாக்கில் பிறக்கும் சொல்லுக்கு நாங்கள் கீழ்ப்படிந்து விட்டால், எங்கள் சம்பந்தம் அனைத்தும் தன்னிலே முறிந்து போகும். இல்லாவிட்டால் நாமே வலிய உறவின்முறை, சிநேகம் என்பனவற்றை முறித்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் நாங்கள் தொன்று தொட்டுள்ள எங்கள் அன்னியோந்நிய சம்பந்தத்தை முறித்துப் பகைசாதிக்கத் தலையிடுவது தங்களுக்காக வேண்டியே யன்றி வேறல்ல. ஆனதால், இனி இந்த மக்கிகள், தீன் என்னும் நமதுமார்க்கத்தில் உறுதியற்றுப் பகைசாதிக்கும் காலத்தில், மதனி யர்களாகிய நாங்கள் அனைவரும் அவர்கள் மேல் பழிசாதிக்கத் துணிந்தோம். அப்படி நிகழும் காலங்களில், இவர்கள் நமது பந்துக் களல்லவா என அவர்கள் பேரில் தங்கள் சித்தம் இறங்குமானால், அப்போது எங்களின் நிலை எவ்வாறாகும் என்பதைத் தாங்களே தீரத்தெளிய ஆராய்ந்து, இதற்கு தக்க ஒரு முடிவு சொல்ல வேண்டும்" என்று சொன்னார்.

மேற்படி கைதம் சொன்னசொல் இம்மாத்திரமல்ல; இன்னும் பல நியாயங்களையும் எடுத்துக்காட்டினர். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் குறுநகை செய்துகொண்டு, அவரை நோக்கி "கைதமே, தாங்கள் என்ன கவனிக்கின்றீர்கள்? அல்லாஹு தஆலாவின் கட்டளைக்கு உட்பட்டு எனக்குக் கீழ்ப்படிந்து, கலிமாச் சொல்லி முஸ்லிமானவர் யாரானாலும் சரி; அவர்கள் தாம் என் பிராணனுக்குச் சமானமான பந்துக்களும் சிநேகிதர்களுமாவார்கள். மற்றவர்கள் எவ்வளவு நெருங்கின பந்துவானாலும், இம்மையிலும் மறுமையிலும் எனக்கு விரோதிகளாகத் துன்பத்துக்கு ஆளாவார்கள். ஆனதால், முஸ்லிம் ஆகாதவர்களின் பேரில் பட்சம் வைத்து இரங்குவேனென்று தாங்கள் கருதவேண்டாம். சூரியன் நிலைமாறி உதயமாவது நடைபெற்றாலும் கடல் வறண்டு பாழ்த்தரையானாலும், பூமியிலுள்ள பருவதங்களெல்லாம் நிலைபெயர்ந்து உருண்டுபோனாலும், மண் விண்ணாய் விண்மண்ணானாலும், நான் சொன்ன வாக்கை மறுத்துப் பிறிது சொல்லமாட்டேன். தாட்சணியத்திற்காக முகதாவில் முகமலர்ந்து பேசிவிட்டு, பகைவிளையும் காலத்தில் அதை மறந்து சிநேகிதர்களோடு பகைமை பாராட்டுவது, தருமார்த்தமான எல்லா விஷயங்களையும் அறக்கெடுக்கும். தீயோரின் சகவாசத்தை வெறுத்து நல்லோர்களுடன் சகவாசம் செய்யாதவர்கள் நற்குணமற்ற சிறியவர்களென்பது சர்வமத சம்மத மாத்திர மல்ல; உலக வழக்கத்திலும் உண்டு. ஆகையால், இப்போது நான் சொன்ன சொற்கள் மிக உறுதியானவை. என் சொல்லை நீங்கள் அனைவரும் நம்புங்கள். இனி உங்களுக்குள் ஒரு முடிவை நான் செய்கிறேன். உங்களில் கல்வி கேள்விகளிலும், கௌரவத்திலும், குலத்திலும் சிறந்தவர்களாகப் பன்னிரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வாருங்கள்" என்று சொன்னார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இவ்வாறு சொன்னபோது, மேற்படி கைதம் என்பவரும், மற்றவர்களும் சந்தோஷமடைந்து, அந்த சபையைவிட்டு எழுந்துபோய், மற்ற மதீனத்தார்களிடத்தில் நடந்த வர்த்தமானங்கள் எல்லாவற்றையும் சொல்லிக்காட்டினார்கள். அப்போது மதீனமா நகரத்தார் எல்லோரும் ஒருமனமாய் சம்மதித்து, வீரத்திற் சிறந்த கசுறசுக் குடும்பத்தாரில் ஒன்பது பேர்களையும், அவ்சுக் குடும்பத்தாரில் மூன்றுபேர்களையும் தெரிந்தெடுத்துக்கொண்டு, நபிநாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சமுகத்தில் அழைத்து வந்தார்கள்.

நபிகட்டிலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கசுறஸ், ஔசு என்னும் இரண்டு குடும்பங்களிலுமுள்ள மேற்படி பன்னிரண்டு பேர்களை, அப்போது ஈமான் கொண்ட முஸ்லிம்களாயிருந்த மதனியர் எழுபத்து மூன்று பேர்களுக்கும் தலைமைக்காரர்களாக்கி, அந்தப் பன்னிரண்டு பேர்களுக்கும் அசுஅது றலியல்லாஹு அன்ஹுவைத் தலைவராக நியமித்து, அனைவரையும் நோக்கி "கனம் பொருந்திய மதீனத்தார்களே, இப்போது நான் உங்களுக்குச் சொல்லப்போகிற சொற்களை, நீங்கள் ஒவ்வொருவரும் மிக உறுதியாகக் கொண்டு நடக்கவேண்டும். உங்களில் பகுக்கப்பட்டுள்ள கசுறஸ், ஔசு என்னும் இரண்டு குடும்பத்திற்கு மிடையில் என்னென்ன மனப்பொல்லாங்குகள் விளைந்த போதிலும், அவற்றைப் பாராட்டாமல், அன்றைக்கன்றே மறந்து, ஒருவருக்கொருவர் விசுவாசமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். அன்றியும், உங்களுக்குள் எவ்வித விவகாரங்கள் உண்டான போதிலும், உங்கள் குடும்பத்தில் சிலர் கீழ்ப்படியாமல் மாறுபட்டபோதிலும், இந்த மக்கமா நகரத்து குறைஷிகள் அதிக்கிரமித்து அடர்ந்தபோதிலும், அந்நிய இராஜ்ஜியத்தார் உங்கள் பேரில் படையெடுத்த போதிலும், அல்லது மற்ற வகைகளைக் கொண்டு பாரதூரமான கஷ்டநஷ்டங்கள் உங்களுக்கு வந்து நேரிட்டபோதிலும், நீங்களனைவரும் உயிரும் உடலும்போல ஒற்றுமைப்பட்டு, இந்த பன்னிரண்டு பேர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். எந்தக் காரியத்திலும் இந்த பன்னிரண்டு பேர்களும் தங்கள் தலைவராகிய அசுஅதை உசாவி, அவருடைய சொற்படி நடந்துகொள்ள வேண்டும்" என இவ்வாறு ஆக்ஞை செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் ஆக்ஞைக்கு மதீனமா நகரத்தார் எல்லாரும் கீழ்ப்படிந்து, இந்தக்கட்டளைக்கு என்றும் பழுதில்லை யென்று உறுதிகொண்டு சம்மதப்பட்டு, அனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தங்களின் மேலான ஆக்ஞைக்கு நாங்கள் அனைவரும் கீழ்ப்படிந்தோம்; தாங்கள் திவ்விய வாய் திறந்து எங்களுக்கு கட்டளை யிட்டபோது நாங்கள் நல்லறிவு, நற்குணம், நல்லொழுக்கம், நற்கீர்த்தி, நன்னடக்கை முதலான சர்வமேன்மை

களையும் மோட்சத்தையும் அடைந்தோம்- இனி இந்த இடத்தில் நாங்கள் செய்யவேண்டியது என்ன? அதைக்கட்டளை பண்ணுங்கள்" என்றார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

அந்த வேளையி லருளுடை யமரருக் கரச
ரிந்த மாநிலத் தரசெனு முஹம்மதி னிடத்திற்
சிந்தை கூர்தர வாதிதன் றிருச்சலா முரைத்து
வந்தி ருந்தனர் பிறரவ ரறிகிலா வண்ணம்.

இறைவன் றூதுவ வெனதுயிர்த் துணைவவிவ் விரவே
யறிவி னுயர் மதனியர் தம்மகத் துண்மை
யுறைய வாய்மையிற் பெருகவொவ் வொருவர்பா லொழுங்கா
முறையி வர்க்குப் பணிவரென மொழிந்துவிண் போனார்

வசனம்.

இதுஇவ்வாறு நிகழும்போது, மலக்குகளனைவருக்கும் அதிபதியாகிய ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம், அல்லாஹு தஆலாவின் ஏவல் பிரகாரம், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் திருச்சபையில் பிறரறியா வண்ணம் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா தங்களுக்கு சலாம் சொன்னான். இப்போது தாங்கள் இந்த மதீனத்தார் ஒவ்வொருவரிடத்திலும் வார்த்தைப்பாடு பெற்றுக் கொள்ளுங்கள்" எனக் கூறிவிட்டு, வானுலகத்துக்குச் சென்றார். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் உடனே எழுந்து, ஒரு ஆசனத்தின் மீது உட்கார்ந்து கொண்டு மதீனத்தார் அனைவரையும் நோக்கி "இப்போது நீங்கள் அனைவரும் என் வலக்கையைத் தொட்டு வார்த்தைப்பாடு பண்ணுங்கள்" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இவ்வாறு சொன்னபோது மதீனமாநகரத்தார் அனைவரும் சம்மதப் பட்டு ஒவ்வொருவராய் எழுந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு பைஅத்து செய்து கொடுத்தார்கள். அன்று இரவில் அபூதாலிபு உடைய மாளிகையில் மதீனமாநகரத்தா ரனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு பைஅத்து கொடுத்துவிட்டு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்களின் சமூகத்தில் சிங்கக்கூட்டம் போல திரண்டு உட்கார்ந்திருந்தார்கள். அது காபிர் என்னும் பகைவரை நாசம் பண்ணுவதற்கு அஸ்திவாரம் போடப்பட்ட இரவானதால் அன்றிரவு மிக மேலான இரவாய் விளங்கிற்று. மதீனத்தார் அனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தங்களின் தொண்டர்களாகிய நாங்கள் இனி தீனுக் காகப் பாடுபடுவதற்கு ஆரம்பித்து செய்யும் செய்கையைத் தாங்கள் கண்ணாரக் காண்பீர்கள்" என்றார்கள். அதற்கு நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சந்தோஷமடைந்து "இப் போது நீங்கள் சொன்னசொல்லை அல்லாஹு தஆலா நிறைவேற்றி, என்றைக்கும் ஒரே தன்மையா யிருக்கும்படி கிருபைசெய்து, உங்கள் ஒவ்வொருவருக்கும் சிறந்த வெற்றியையும் சுவர்க்கத்து மேலான பதவியையும் தருவானாக" என்று சொன்னார்கள்.

அன்றிரவு மதீனத்தார்கள் நீண்டநேரம் வரை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் திவ்விய சபையில் பல விஷயங்களைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்து, பின்பு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவரவர்கள் விடுதிகளுக்குச் சென்றார்கள்.

52-வது அத்தியாயம்.

யாத்திரை.

சந்தக் கலி விருத்தம்.

பூத்தொடை மேவு புயத்திற சூல்தன்
கோத்திர ராடல் கொடுஞ்செய லாலே
மாத்திரை மேமதி னாக ருக்கு
யாத்திரை யானதை யாம்புகல் வாமே.

இதன் பொருள்.

பூமாலை யணிந்த தோளையுடைய றஸூல் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தங்கள் இனச் சத்துருக்கள் செய்யும் கொடூரமான செய்கையினால் செல்வம் மிகவும் மேவி விளங்குந் திருமதீனமாநகரத்திற்குப் பிரயாணமான செய்தியை யாம் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மண்ண கம்புகழ் முஹம்மது மனங்களித்திருப்பப்
புண்ணு லாவயிற் கரத்தரும் விடுதியிற் புகுதக்
கண்ண கன்புவிக் கெலவ விளைந்தன வெனக்கருத்தி
லெண்ண மோடழிக் தெழுந்திருந் தன னிபுலீஸு.

வசனம்

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பைஅத்துப் பெற்றுக்கொண்டபின் மதீனத்தாரனைவரும் தங்கள் தங்கள் விடுதிகளுக்கு எழுந்துசென்ற வுடனே, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் களிப்புற்று இருந்தார்கள். அப்போதே நிகழ்ந்த வர்த்தமானங்கள் எல்லாவற்றையும் இப்லீஸ் என்னும் பாதகன் அறிந்து "ஆ! இவ்வுலகத்துக்கு என்ன கேடுவந்து சம்பவித்துக்கொண்டது?" என ஸ்மரணையற்றவனாய் தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்தான். மேற்படி பாதகன் அன்றிரவு அர்த்த ஜாமத்திலே மக்கமா நகரத்து நடுத்தெருவில் வந்து நின்று கொண்டு, உருத்தோற்றமின்றி, மகாத்மாக்களின் வார்த்தையைப் போலே எங்கும் கேட்கும்படி சப்தமிட்டு "மகிமை பெற்று விளங்கும் மக்கமா நகரத்து குறைஷிகளே! இந்த ஊரிலிருக்கிற முஹம்மது என்பவனும், தற்காலம் ஹஜ்ஜுக்காக வந்த மதீனத்தார்களும் ஒருமனப்பட்டு, குறைஷிகளும் அரபிகளுமாகிய உங்களை சங்கரித்து கஃபா முதலான ஆலயங்களை யெல்லாம் இடித்து வீழ்த்தி, இந்த நகரத்தைப் பாழாக்குவதாக இரகசியத்தில் துராலோசனை செய்து இன்றிரவு வார்த்தைப்பாடு பண்ணிக்கொண்டார்கள். முஹம்மது என்ன சொன்னாலும் கேட்டு நடப்பதாக, மதீனத்தார் களனைவரும் அவனுடைய வலதுகையைத் தொட்டுச் சத்தியம் செய்து கொடுத்து விட்டார்கள். இனி அதிக சீக்கிரத்தில் மிகப் பாரதூரமான சங்கடங்க ளெல்லாம் உங்களுக்கு உண்டாகும். இனி நீங்கள் எச்சரிக்கையோ டிருங்கள்" என்று பெருங் கூக்குரலாகச் சொன்னான். இவன் இப்படி அந்த ஒரு வீதியில் மாத்திரமல்ல, மக்கமா நகரத்து வீதிகள் எல்லாம் சென்று சென்று மேற்கண்டவாறே நின்று அலறிக்கூறினான். இப்படி வீதிகள்தோறும்

சென்று சொல்லும் இபுலீசுடைய கூக்குரலை, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டு வெளியில் வந்து நின்று, இபிலீசை நோக்கி "வஞ்சகனே! உன்னுடைய ஆண்மையை நான் கெடுத்து நாசஞ்செய்கிறேன்" எனக்கடிந்து சொன்னார்கள். அப்போது அவன் மறைந்து போய்விட்டான். பிறகு சூரியன் உதயமாயிற்று.

பொழுது விடிந்த காலையில், மக்கமாநகரத்து அபூஜஹல் முதலான காபிர்களனைவரும் எழுந்து ஒரு ஸ்தானத்தில் கூடியிருந்து அன்றிரவு அர்த்தஜாமத்தில் கேட்ட தொனியைப்பற்றி ஆலோசனை பண்ணினர். இங்கே மதீனத்தார்கள் இருந்தால் அவர்களைப் பலாத்காரமாய்ப் பிடித்து இழுத்துக்கொண்டு வாருங்கள் என்று சில ஆட்களைத் தெருக்கள்தோறும் அனுப்பினார்கள். உடனே அவ்வாட்கள் மதீனத்தாரைத் தேடிக்கொண்டு மக்கமா நகரத்து வீதிகள் தோறும் திரிந்தார்கள். அப்போது மக்கமா நகரத்தில் ஹஜ்ஜுக்காக வந்த மதீனமா நகரத்துக் காபிர்களும், முஸ்லிம்களுமாகிய இருதரத்தாரும் இருந்தார்கள். ஆகையால் இன்னார்தான் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு வார்த்தைப்பாடு கொடுத்த முஸ்லிம்க ளென்று, தேடிப்போனவர்களுக்கு எப்படி தெரியும்? பொதுவில் எல்லாரும் மதீனத்தார்களானதால், பகைவர்கள் தேடும்போது முஸ்லிமான மதீனத்தார் ஒருவரும் அகப்படவில்லை. மதீனத்துக் காபிர்கள் மாத்திரம் சிலர் குறுக்கிட்டார்கள். தேடிச்சென்றவர்கள் அந்த மதீனமாநகரத்துக் காபிர்களை பற்றி இழுத்துக்கொண்டு, குறைஷிக் காபிர்கள் கூடியிருக்கும் சபையில் வந்துவிடுத்தார்கள். அப்போது குறைஷிக்காபிர்கள் மதீனத்துக்காபிர்களை நோக்கி "மதீனத்தார்களே! இன்றிரவு அர்த்த ஜாமத்தில் ஒருவிபரீதமான தொனியை நாங்கள் அனைவரும் காதாரக் கேட்டோம். அந்தத்தொனியானது:— மதீனத்தாரனைவரும் முஹம்மதுக்குக் கீழ்ப்படிந்து, அவனுடைய புதிய மார்க்கத்தில் சேர்ந்து கொண்டு, முஹம்மதை மதீனத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் அதிபதியாக்கி, எங்களுடன் பகை விளைப்பதற்காக வார்த்தைப்பாடு பண்ணிக்கொடுத்து, ஒருவருக்கொருவர் இரகசியத்தில் முடிவுபண்ணிக் கொண்டார்களென்பதுதான். இப்படி நேரிட்டதற்கு மூகாந்திரம் என்ன? நீங்கள் அனைவரும் எங்கள் விரோதியாக முஹம்மதுக்கு வசப்பட்டு, எங்களுக்கு

இடைஞ்சல் உண்டுபண்ண எண்ணியது ஏன்? என்றும் பழிகள் விளைந்துகொண்டிருக்கும்படி அஸ்திவாரம் போட்டுவிட்டீர்களே! அது எதற்காக? இச்சமாசாரத்தைக் கேள்விப்படும்யாருக்குத் தான் இது பொருத்தமாயிருக்கும். யுகம் முடியும் பரியந்தம் இதைப்பற்றி உலகம் சிரித்த வண்ணமாயிருக்கு மல்லவா? ஏன்இந்த அனியாயத்திற்கு உடன்பட்டீர்கள்? நீங்கள் மேற்கண்ட படி உடன்படிக்கை பண்ணிக்கொண்டது உண்மையாயிருக்கும் பட்சத்தில், கசுறஜ குடும்பத்தாரும், ஔசுகுடும்பத்தாரும் திரண்டு பகையை மூட்டிவிளைப்பதற்குத்தான் இந்த மக்கமாநகரத்திற்கு வந்ததல்லாமல், ஹஜ்ஜு செய்வதற்கல்ல. ஆனதால், நமக்குள் இனி பாரதூரமான பொல்லாங்குகள் விளையுமே” என்றார்கள். குறைஷிக்காபிர்கள் இவ்வாறு சொன்னதும் மதீனத்துகாபிர்கள் இதைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாகையால் ஆச்சரியமுற்று, குறைஷிக்காபிர்களை நோக்கி “குறைஷிகாள்! இப்போது நீங்கள் சொன்ன விஷயங்களில் ஒன்றாவது எங்கள் ஊரார் நினைத்ததல்ல. எங்கள் ஜாதியாரில் ஒருவராவது இதற்கு உடன்படவில்லையே. இதைப்பற்றி இப்போது நீங்கள் சொல்லத்தான் எங்களுக்குத் தெரியும். எங்களுக்கு இது ஆச்சரியமா யிருக்கின்றது. இதைப் பற்றி ஒரு குறிப்பும் இதுவரையும் நாங்கள் அறிந்ததில்லை; நமது தெய்வத்துக்கும், சமயத்துக்கும், நமக்கும் விரோதியாகிய முஹம்மது இடத்தில் நாங்கள் ஒருக்ஷணப் பொழுதாவது நெருங்கி யிருந்தவர்களல்ல. உங்களைப்பகைத்துக்கொண்டு, அவனுடன் இணங்கி யிருக்கமாட்டோ மென்பது நீங்கள் அறியாததா? அப்படி அறிந்திருந்தும் இப்போது நீங்கள் எங்களை இவ்வாறு கேட்பது நியாயமல்லவே. ஆனால், இதைப்பற்றி இன்றிரவு அந்த ஜாமத்தில் ஒரு பெருந்தொனி கேட்டதாக சொல்லுகிறீர்கள். அது வாஸ்தவம். ஆயினும், மக்கிகளாகிய உங்களுக்கும், மதனிகளாகிய எங்களுக்கும் இடையிலுள்ள நேக சம்பந்தத்தைப் பற்றி அந்த முஹம்மது என்பவன் பொறாமைப்பட்டு, இருதாத்தாருக்கும் பொல்லாங்கு உண்டுபண்ணி நேசத்தைப் பிரிக்கும் பொருட்டு கலகம் விளைப்பதற்காகத் தன்னுடைய மந்திர பலத்தினால் இவ்விதம் தொனி யுண்டாகும்படி செய்தாலும் செய்திருப்பான். நாங்கள் அப்படித்தான் நினைக்கிறோம். அது முஹம்மதுடைய மாயத்தினால் தொனித்த தொனியே யன்றி நடந்ததாக

எந்த மகாத்மாவினாலாவது தொனிக்கப்பட்ட உண்மையான தொனியல்ல. இதைக்குறித்து நீங்கள் கவலைப்படாதீர்கள். நீங்கள் எண்ணியவண்ணம் ஒருபொழுதும் நிகழ்ந்திருக்கமாட்டாது. மதீனத்தார்கள் அவ்வளவு அவிவேகிகளல்ல. இதைநீங்கள் நம்புங்கள்” என்றார்கள். அவர்கள் தங்களுக்குத் தெரிந்த மட்டிலும் நியாயமாகவே உண்மையைச் சொன்னார்கள். இதைக்கேட்ட குறைஷிக் காபிர்கள் அனைவரும் மேற்படி தொனி முஹம்மது உடைய மாய தொனியா யிருந்தாலும் இருக்கும் என நம்பிக்கொண்டு, மதீனத்துக் காபிர்களுக்கு உபசரணை செய்து அனுப்பிவிட்டு, தங்கள் தங்கள் மனைகளுக்குச் சென்றார்கள்.

மதீனமாநகரத்துக் காபிர்கள் சொன்ன சொற்களை உறுதியாகக் கொண்ட குறைஷிக்காபிகள், மனத்திருப்பதியோடு தம்தம் மனைகளுக்குச் சென்றனர்பின்னர், ஹஜ்ஜுப் பெருநாளாகக்குறிக்கப்பட்ட தினங்களும் கழிந்தன. உடனே மதீனமாநகரத்தி லிருந்து வந்தகாபிர்களும், அவ்வூர்முஸ்லிம்களில் இரண்டொருவர் தவிர மற்றவர்களும் மக்கமா நகரத்தைவிட்டுப் புறப்பட்டு மதீனமா நகரத்துக்குப் போய்விட்டார்கள். மற்ற ஊரார்களும் அவரவரூர்களுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். பிறகு மதனியர்களில் சிலர், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்படிந்து நபிமாச் சொன்னது உண்மைதான் என்னும் சங்கதி, எவ்வாறாகவோ மறுபடியும் மக்கமா நகரத்தில் பிரஸ்தாப மாயிற்று. முன் மதனியர்களால் அதைப்பற்றி நிராகரித்துச் சொன்ன சொல் குறைஷிகளுக்கு வாஸ்தவமாக மனதில் பட்டிருந்தபோதிலும், பின் உண்டான பிரஸ்தாபத்தினால் அனைவரும் உண்மைதான் எனவெண்ணி, அதைக் குறித்து தக்கமுடிவொன்று செய்வதற்காக சபைகூடினார்கள். அபூஜஹல் முதலான குறைஷித்தலைவர்களும், மற்ற காபிர்களும் ஒருங்கு திரண்டு ஆலோசனைபண்ணி, மதீனமா நகரத்தார்களை மறுபடியும் பலாத்காரமாய்த் தேடிப்பிடித்து கொண்டுவரும்படி, வீதிகள் தோறும் ஆட்களையனுப்பினார்கள். அவ்வாட்கள் மக்கமா நகரத்து வீதிகளிலும், சந்துகளிலும், கோவில்களிலும், மனைகளிலும் கடைத்தெருக்களிலும் தேடித் திரிந்தார்கள். அனைவரும் மதீனமா நகரத்துக்குப் போய்விட்டபடியால், ஒருவரையும் கண்டு பிடிக்க முடியவில்லை. முடிவில் மேற்படி ஆட்கள் தெருத்தெருவாய்த் திரிந்து அலுப்புற்று ஒருவரையுங் கண்டு கொள்ளாமல், மீண்டு

வரும்போது, மதீனமா நகரத்துத் தலைவர்களின் ஒருவரும் முஸ்லி மானவருமாகிய சஃது றலியல்லாஹு அன்ஹுவையும், முன்திர் றலியல்லாஹு அன்ஹுவையும் ஒருவீதியில் கண்டு, அவ்விரு வரையும் பலாத்காரமாய் பிடித்து இழுத்துக் கொண்டு போய், குறைஷிக் காபிர்களின் சபையில் விடுத்தார்கள். இவ்விரு வரையும் கொண்டுபோய் விடுத்தபோது, அவ்விடத்தில் ஜனங்கள் நெருங்கிய சந்தடியா யிருந்தபடியால், முன்திர் என்பவர் மாத்திரம் அவ்விடத்தைவிட்டுத் தப்பிக்கொண்டு, பிறர்காணாமல் மறைவாய் ஓடிவிட்டார். முன்திர் ஒளித்தோடினவுடன் அவரை நாலுபக்கமும் பகைவர்கள் தேடினார்கள்; அவர் அகப்படவில்லை. அதனால் பாதகர் கள் அனைவரும் சஃது றலியல்லாஹு அன்ஹுவை மாத்திரம் நடு வில்விட்டு சூழவளைந்தார்கள். பாதகர்களாகிய அக்காபிர்கள் சஃது றலியல்லாஹு அன்ஹுவை வளைந்து நின்றுகொண்டு, அவமான மாகப் பண்ணின நிஷ்டூரங்கள் கொஞ்சமல்ல. அடித்தும், பறித் தும், இழுத்தும், குத்தியும், தூஷித்தும், உதைத்தும் பலவாறாகத் துன்பம் செய்தார்கள். கொடியோராகிய அப்பகைவர்கள் திரண்டு இவ்வாறு செய்யும் கொடுமைக்கு சஃது றலியல்லாஹு அன்ஹு பிரதியொன்றும் செய்யாமல் சகித்துக்கொண்டு, சும்மா நின்றார்கள். அவ்வளவு கொடுமைசெய்தும் மேற்படி பகைவர்களின் சினம் தணி யவில்லை. மேலும் மேலும் அக்கிரமித்து அடர்ந்து தாக்கினார்கள்.

அபூஜஹல், ஒலீது, உமையா, உக்பா உம்று, சைபா, உத் துபா, என்னும் இத்தலைவர்களும், மற்றகாபிர்களும் கூடிநின்று சஃது றலியல்லாஹு அன்ஹுவை இவ்வாறு நிஷ்டூரம் செய்யும் போது, ஜுபைறு, ஹாரிது என்னும் இரண்டு கனவான்களும் அவ்வீதி வழியே வந்தார்கள். வரும்போது பகைவர் திரண்டு நின்று சஃது றலியல்லாஹு அன்ஹுவை செய்யும் கொடுமையான செய்கையை நோக்கி, உள்ளம் இரங்கி, பகையர் களை நெருங்கி "நின்று அவிவேகிகளே! என்ன அநியாயம் செய்ய தலைப்பட்டீர்கள்? இந்தக் கனவானாகிய சஃது உத்தமர் அல்லவோ. மதீனமா நகரத்திலுள்ள கசுறசு, ஒளசு என்னும் இரண்டு குடுபத்திற் கும் தலைவராய் ஆண்சிங்கம் போன்ற வீரரல்லவா? இவருடன் நீங்கள் பகை விளைத்துக் கொள்ள உங்களுக்கு அவ்வளவு திராணி ஏது? இவர் எதிர்க்கும் காலத்தில் இந்த மக்கமா நகரத்து எல்லா வம்சத்தாரும் ஒருங்கு திரண்டாலும் எதிர்நின்று பகைசாதிக்க இய லாதே. ஆ! இதென்ன அறிவீனம்! இது பரியந்தம் மதீனமாநகரத் தாருக்கும், இந்த மக்கமாநகரத்தாருக்கும் அந்நியோந்நிய பேதம் சிறிது மின்றி இருநகத்தாரும் உடலும் உயிரும் போல ஒத்து வாழ்ந்தார்கள். இப்போது இந்த சஃதை நீங்கள் இவ்வாறு நிஷ் டூரங்கள் செய்த காரணத்தினால், இன்று தொட்டு இருநகரத்தாருக் கும் இடையில் பெரும் பகைவிளையைத் தலைப்பட்டு விட்டதில் சந்தேகமில்லை. இப்பகையை நிவர்த்தி செய்வதற்கு இனி எவ ராலும் இயலமாட்டாது. நீங்கள் சிறிதும ஆலோசனை யின்றி இவ்விதக் கெடுதியை யுண்டு பண்ணி விட்டீர்கள். இது இலகுவில் தீரு மென்று நினைக்காதீர்கள். நீங்கள் இப்படி செய்தது சிறிதும் பொருத்தினதல்ல" என இவ்வாறு கண்டித்துப் பேசினார்கள்.

ஜுபைறும், ஹாரிதும் இவ்வாறு நியாயமாக கடிந்துபேசின வுடன் அப்பகைவர்களின் மனதில் திகில் உண்டாயிற்று. சஃது றலி யல்லாஹு அன்ஹுவை அடர்ந்து தாக்கி நின்றவர்களும், அதைப் பார்த்துக் களிப்புற்று நின்றவர்களும், அப்படியே கலைந்தார்கள். காபிர்களனைவரும் ஜுபைறு, ஹாரிது என்னும் இரு விவேகிகளின் சொல்லால் அஞ்சி, சஃது றலியல்லாஹு அன்ஹுவை விட்டுவிட்டு, தம் தம் ஜாகைகளுக்குப் போய் விட்டார்கள். பிறகு சஃது றலியல் லாஹு அன்ஹு மனம்வருந்தி யாதொன்றும் பேசாமல் அவ்விடத்தி னின்று மீண்டு, வேறு இடங்களுக்குப் போகாமல் நேரே நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல'மவர்களின் சமூகத்தில் வந்து, நிகழ்ந்த வர்த்தமானங்களை யெல்லாம் விவரமாகச் சொல்லிக் காட்டி விட்டு, தாம் மதீனமா நகரத்திற்குப் போக உத்தரவு பெற்றுக் கொண்டு, அப்போதே மக்கமா நகரத்தை விட்டுப் புறப் பட்டார்கள்.

சஃது றலியல்லாஹு அன்ஹு மதீனமா நகரத்திற்குப் புறப் பட்டுப் போனவுடனே, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் முஸ்லீமானவர்கள் அனைவரையும் அழைத்துத் தங்கள் மாளிகையில் வைத்துக் கொண்டு "எனது தோழர்களே! அல்லாஹு தஆலா நமக்கும் நமது தீனுக்கும் உதவியாக சிறந்த மதீனமா நகரத்தார்களை வசமாக்கித் தந்திருக்கின்றான். மதீனமா நகரத்தார்கள் நமக்கு உயிரை யொத்த துணைவர்கள், வெற்றிக் கிசைந்த வயிர புஜங்கள் போன்றவர்கள். நாம் இந்த மக்கமா

நகரத்தில் உள்ள நாள் மட்டும், உடலி லிருந்து வருத்தும் கொடிய ரோகத்தை யொத்த பகைவர்களுடன் இருந்து வருந்தி நாள் கழிப்பதை விட, இனியாவது அந்த மதீனமா நகரத்துக்குக் குடிப் போய் விடுதல் மகா உத்தமம். அப்படி நாம் நமது சுயநகரத்தை வெறுத்து அந்நிய நகரத்திற்குப் போய் விடுவதற்கு அல்லாஹு தஆலா இடமிருந்து இன்னும் உத்தரவு வரவில்லை. நினைத்த படியே மதீனமா நகரத்திற்குப் போய் விடுவோமானால், இந்த மக்கமா நகரத்தாராலும் பிறராலும் உண்டாகும் இடையூறுகளனைத்தையும் அவ்வூராரின் உதவியைக் கொண்டு நாசம் பண்ணி, நமது தீனை நிலை நிறுத்த என்னளவும், பிரதிபந்த முண்டாகாது. ஆனபடியால், நாம் அவ்வாறு புறப்பட்டுப் போய் விடுவதற்கு அல்லாஹு தஆலா இடமிருந்து உத்தரவு வரும் பரியந்தம் நான் இவ்வூரில் இருந்து, அவனுடைய உத்தரவு வந்த பின் புறப்பட்டு வருகிறேன்; நீங்கள் அனைவரும் முந்தி மதீனமா நகரத்திற்குப் போய்ச் சேருங்கள்'' என்று சொன்னார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சொன்ன இச்சொல்லைக் கேட்டு முஸ்லிம்க ளனைவரும் சந்தோஷமுற்று, ஊரை விட்டுப் புறப்படுவதற்கு சம்மதித்தார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

சோதி நாயகன் றிருமறைத் தூதுவ ரிறசூ
லோதும் வாய்மையு மறைப்பொரு ளென வுளத் திருத்தி
சாதி மன்னவர் மூவரு மிருவருந் தனித்தும்
போதும் வல்லிருட் பொழுதிலும் பகலினும் போனார்.

வசனம்.

நபிகட் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சொல்லுக்கு இசைந்த முஸ்லிம்கள் அனைவரும், நாம் இனி இந்நகரத்தை விட்டு வெறுத்து, மதீனமா நகரத்திற்குப் போய் விடுவது தான் நன்மை என மனமுவந்து, காபிர்கள் அறியா வண்ணம் தனித்து இரண்டு பேர் மூன்றுபேராக இரவிலும், ஜனச் சந்தடியற்ற பகற் காலத்திலும் புறப்பட்டு, இரகசியத்தில் மதீனமா நகரம் போய்ச் சேர்ந்தார்கள். சுயநகரத்தை வெறுத்து வந்தவர்களுக்கு மதீனமா நகரத்தார் மிக

உபசாரணையுடன் உதவி செய்தார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் சொல்லுக்கு வழிப்பட்டு, சுயநகரத்தை வெறுத்து அந்நிய நகரத்திற்குக் குடிபோன அவர்களுக்கு, அன்று தொட்டு முஹாஜிரீன் என்னும் பட்டம் வழங்கத் தொடங்கிற்று. நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் கட்டளைப்படி முஸ்லிம்க ளனைவரும் சில தினங்களில் மதீனமா நகரம் போய்ச் சேர்ந்தார்கள். மக்கமா நகரத்தில் தங்கி யிருந்தவர்கள் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், அவர்களின் தோழர்களாகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு, உமர் றலியல்லாஹு அன்ஹு, உதுமான் றலியல்லாஹு அன்ஹு, அலி றலியல்லாஹு அன்ஹு என்னும் இந்நால்வரும், பகைவர்களின் சிறையிற் சிக்குண்டிருக்கும் சிலருமேயன்றி வேறு ஒருவரும் இல்லை. முஸ்லிம்க ளனைவரும் மதீனமா நகரத்திற்குக் குடிபோய் விட்டார்கள் என்னும் சங்கதி பிரஸ்தாபமா யிற்று. அப்போது முஸ்லிம்கள் வரத்துப் போக்கின்றி யிருப்பதால், அனைவரும்போய் விட்டார்க ளென்றும் அபூஜஹல் முதலான தலைவர்களும், மற்ற காபிர்களும் அறிந்து மனக்கவலை யடைந்தார்கள். அவர்கள் கவலை யடைந்த காரணம் தப்பிக் கொண்டு போய் விட்டார்களே யென்பதன்றி வேறல்ல. அபூஜஹல் என்னும் பாதகன் மனவருத்தமுற்று, வேதபாரகர்கள், சாஸ்திரிகள், புரோகிதர்கள், வீரத்தில் சிறந்த தலைவர்கள், மற்ற சாமானியர்கள் அனைவரையும் அழைத்து ஒரு ஆலோசனை சபை கூட்டுவித்து, தான் சபா நாயகனாய் வீற்றிருந்தான். மக்கமா நகரத்து முஸ்லிம்க ளனைவரும் மதீனமா நகரத்திற்குப் போய் விட்டார்க ளென்று மனம் வருந்தி, அதற்குத் தக்க ஏற்பாடு செய்வதற்காக அபூஜஹல் சபை கூட்டி யிருப்பதால், அச்சபைக்கு நாமும் போக வேண்டுமென்று இபுலீஸ் என்னும் கொடியோன் எண்ணி, அறிவிலும் பொறுமையிலும் வணக்கத்திலும் கீர்த்தியிலும் மிகச் சிறந்தவன் போல அறபிக் குலத்திற் பிறந்த வயோதிகன் போலவும், மக்கிகளுக்கு மிக அந்நியோன்ய மானவன் போலவும் வேஷந்தரித்துத் தன் ஜாகையை விட்டுப் புறப்பட்டு, அபூஜஹலுடைய சபைக்கு வந்தான். வந்தவுடன் அவன் மக்களாகிய ஷைத்தான்களுக்கு சமானமான குறைஷிக் காபிர்க ளனைவரும் கண்டு, அவனுடைய பொய்யான நடிப்பைப் பற்றி ஒரு மகாத்மாவாகப் பாவித்து, மிக மரியாதையுடன்

அழைத்து உபசரித்து தகுந்த ஆசனமிட்டு இருத்தினார்கள். அப்போது அந்த சபை பாதக சிகாமணிகளால் நிரம்பி யிருந்தது. சபை நிரப்பமான பின் சபா நாயகனாகிய அபூஜஹல் சபையாரை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னான் :—

“கனவான்களே! இந்த மக்கமா நகரத்திற்கு விலக்கரிய ஆபத்தாய்ப் பிறந்த முஹம்மது என்பவன், தான் கற்ற மந்திர சித்தியால் கல், மரம், விலங்கு, பறவை முதலானவைகளைப் பேசுவித்து, இது மகா அற்புதமெனச் சொல்லி, நம் ஜாதியாரில் அநேகரை வசப்படுத்திக் கொண்டு, தனது நாமத்தையும், வேதத்தையும், மார்க்கத்தையும் இவ்வுலகத்தில் ஸ்தாபித்து விட்டான். நாம் ஒருவர் இருவரன்றி அநேகம் பேர் இருந்தும், இது வரையும் அதற்குத் தக்கபரிகாரம் செய்து முற்றமுற்ற தொலைப்பதற்கு நமக்குத் திராணியில்லை. நாம் முஹம்மதுடைய மாயாசங்கற்பத்திற்கு ஆற்றமாட்டாதவர்களாய்ப் போனோமென்னும் அவமானத்தை, உலகம் உள்ளமட்டும் நிலைநிறுத்தி விட்டோம். நமக்குண்டாயிருந்த மகிமையனைத்தும் அடியோடு தொலைந்தன. நமது மரியாதை அறிவு கௌரவம் எல்லாம் பாழாயின. இனி, நடந்து போன காரியங்களைக் குறித்து எண்ணியெண்ணி மனக்கிலேசமுற்று வருந்துவதில் யாதும் பிரயோசனமில்லை. இத்தனை தூரம் அந்த முஹம்மது உரங்கொள்ளும்படி நேரிட்டதற்கு முகாந்திரம் நாமே ஒவ்வொரு சமயங்களில் நிகழும் விஷயத்திற்காக அன்றன்று கூட்டங்கூடிப் பேசிவிட்டு, அதற்குத்தக்க பிரவர்த்திகளில் பிரவேசிக்காமல் கலைந்துபோவதேயன்றி வேறல்ல. இனி நாம் அப்படிச் செயலற்று சோம்பியிருப்பது சரியல்ல. இன்றுதொட்டு நேரிட்டிருக்கும் சங்கடத்தை நாம் ஒவ்வொருவருக்கும் வந்ததாகப் பாவிக்க வேண்டும். அப்படிபாவித்துத் தக்க முயற்சி செய்வோமானால் முஹம்மது உடைய பலம் குன்றி நமக்கு மகிமையுண்டாகும். இனி மேல் முஹம்மதை ஜெயிக்கமுடியாது; அவன் காரியம் பலித்து விட்டது என எண்ணிக்கொண்டு, தைரிய வீனமுள்ள பெண்களைப்போல மனைக்குள்ளிருந்து பேசத் தலைப்படுவோமானால், நமது ரணகம்பீரமான மனோதைரியமும் புஜவன்மையும் நாளுக்கு நாள் குறைந்து, உலகஅபவாதத்திற்கு இலக்காகுவதன்றி, ஓயாமல் ஒன்றின்பின் ஒன்றாய் அடுத்தடுத்துவரும் கடற்றிரைபோல் நம்மீதுபகையும் பழியும் வந்தவண்ணமாயிருக்கும். சித்தசமாதான

மாய் வாழ்ந்திருப்பது அசாத்தியம். ‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’ என்று உலகத்தார் சொல்லுவார்கள். எவ்வித அருந்தொழிலையும் பலரோர்த்து முயன்று செய்தால் நிறைவேறாமற் போகாது. இனி நாம் இவ்விஷயத்தில் பிரயாசை மிகக்கொண்டு முயல வேண்டும். அப்படி நாம் துணிந்து நிற்போமானால், இந்த முஹம்மதை அடியோடு தொலைப்பது நமக்கு ஒரு பிரமாதமல்ல. பிரபுக்களே! சிறியேனாகிய நான் சொல்லும் இச்சொல் உங்கள் இதயங்களுக்கு எவ்விதம் தோற்றுகின்றது? கவனியுங்கள். முன்னமே நாம் முஹம்மது உடைய அதிக்கிரமத்தைக் குறித்து, அவன் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபுக்கு அறிவித்து வற்புறுத்தி கண்டித்திருப்பதை அவன் திரணமாகவும் மதிக்கவில்லை. வேங்கைக்கு வாலுருவி விட்டதுபோல இருந்தான். பிற்பாடும் நாம் எடுத்த கருமம் ஒன்றும் கடைத்தேறவில்லை. இனிமேலும் நாம் இதற்குத் தகுதியான ஒரு ஏற்பாடு செய்யாமல் சும்மா இருந்து விடுவோமானால், அவனுடைய பகைக்கு எவ்வளவும் ஈடு செய்ய மாட்டோம். இப்போது அவன் நமக்கு எள்ளத்தனையும் அஞ்சி யிருக்கவில்லை. இயன்றமட்டும் எதிர்நின்று சாதிக்க அவன் பின்டையமாட்டான். சில நாட்களுக்கு முன் ஒரு இரவு அர்த்த சாமத்தில் கேட்ட பெருங்குரல் தெய்வீகமானதென்று நாம் கண்டறியவில்லை. விடிந்த பின் அக்குரலைக்குறித்து முற்றும் விசாரித்தும் அதன் உண்மை வெளிப்படவில்லை. நேற்றையதினம் அது உறுதிப்பட்டது. மதீனமா நகரத்தார்கள் முஹம்மதுக்கு கீழ்ப்படிந்து ஈமான் கொண்டு வார்த்தைப்பாடு கொடுத்தது பொய்யல்ல. முஹம்மதை மதீனத்திற்கு அதிபதியாக்குவதில் சிறிதும் சமுசயமில்லை. அதற்குத் திருஷ்டாந்தமாக அவனுக்கு வழிப்பட்ட நம்ஊரார் அனைவரும் மதீனத்திற்குப் போய் விட்டார்கள். அந்த மதீனமா நகரத்தார்களும், இங்கிருந்து சென்றவர்களை ஆதரித்துக்கொண்டு அவனுடைய மார்க்கத்தைப் பரப்பத்தொடங்கி விட்டார்கள். முஹம்மதும் கட்டாயம் மதீனமா நகரத்திற்குப் போய் விடத்தயாராய் இருக்கிறான். அவன் இங்கிருந்து புறப்பட்டு மதீனமா நகரம் போய்ச் சேர்வானானால், அப்போது வெல்லற்கரிய பகையும் தாங்கற்கரிய சங்கடங்களும் நமக்கு உண்டாகும். அதற்குப் பிறகு, விளையும் வில்லங்கங்களுக்கு அஞ்சாது எதிர்நின்று சாதிக்கும் திராணியுள்ளவர்கள் இங்கே ஒருவருமில்லை.

முஹம்மது இங்கிருந்து மதீனத்திற்குப் புறப்பட்ட அன்றைக்கே, நாமும் இவ்வூரையும் இனத்தையும், சமயத்தையும், ஆலயங்களையும், தெய்வங்களையும் இழந்துவிட்டு புறப்பட்டு வனவாசிகளாய்ப் போய்விடவேண்டும். இல்லாவிடில், தாங்கமுடியாத கஷ்டங்களில் சிக்குண்டு வருந்தும்படி நேரிடும். ஆகையால், சபையார்களே! முன்சொன்ன ஆபத்துகள் நமக்கு வந்து சம்பவிக்குமுன், நீங்கள் அனைவரும் சிந்தித்து இனி வரும் விக்கினங்களைத் தடுக்கும் உபாயம் ஒன்றை முடிவு செய்து, நமது ஜாதியார்களுக்காகவும் தெய்வங்களுக்காகவும் மார்க்கங்களுக்காகவும் பாடுபடுவதற்காக வேண்டி மார்க்கம் சொல்லுங்கள்."

குறைஷிகளுக்குத் தலைவராகிய அபூஜஹல் மேற் குறித்தபடி சொன்ன சொற்களை, மேற்படி சபையாரனைவரும் கேட்டு, இது அனைத்தும் வாஸ்தவம் எனச் சிரக்கம்பஞ் செய்துகொண்டு, அபூஜஹல் சொன்னவண்ணம் ஆலோசனைப்பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்போது அச்சபையிலுள்ள காபிர்களில் ஒருவன் எழுந்து நின்று, சபையை நோக்கி "நாம் அன்று பிடித்து வருத்தின மதீனத்துத் தலைவர்களில் ஒருவராகிய சஃது என்பவனைச் சிறைப் படுத்தாமல் விட்டது பிசகு" என்றான். உடனே மற்றொருவன் எழுந்து நின்று "நடந்து போன காரியத்தைக் குறித்துப் பேசுவது சரியல்ல; நடக்க வேண்டியதை ஆராய்ந்து முடிவு செய்வது தான் சிலாக்கியம். நாம் ஏதும் ஒரு கருமத்தைச் செய்யத்துணிந்தால் பழிபாவங்கள் வருமோ என அஞ்சி மூலையில் படுத்து உறங்குவது பகைக்கு இடங்கொடுப்பதாகும். ஆனபடியால் இனிச் செய்ய வேண்டியதைக் கவனியுங்கள்" என்றான். அப்போது வேறொருவன் எழுந்து நின்று "சபையார்களே! இவர் சொன்னது நல்ல உபாயம். முஹம்மது என்பவனைக் கொன்று விடத்தான் வேண்டும். ஆனால் கொன்றவர் இன்னார் கொலையுண்டவன் இன்னான் எனப் பிறரறியாவண்ணம், இரகசியத்தில் கொல்ல வேண்டுமன்றி, ஒருவர் மீது பழிசுமத்திக் கொல்வது சரியல்ல" என்றான். இவன் இப்படிச் சொன்னவுடன் இன்னுமொருவன் எழுந்து நின்று "இவர் சொன்னது சரியல்ல. அவனை அப்படிக்கொல்வது நியாயமல்ல. முஹம்மதைப் பிடித்து இருளடர்ந்த ஒரு பாழறைக்குள் அடைத்து, அன்னபானாதிகள் சிறிதும் உதாவாமலும், நடக்கப் படுக்க இடங்கொடாமலும், நிர்பந்தமான கடின காவலில் வைப்

பேசமானால், மிகப் சமீபத்தில் இறந்து போவான். பிறரொருவர் மீதும் பழிவராது. நமது பகையும் தொலையும்" என்றான். முஹம்மதை இருளடர்ந்த பாழறையில் அடைக்க வேண்டுமென்ற சொல்லைக் கேட்டமாத்திரத்தில் இபுலீஸ் குதூகலை செய்துகொண்டு "ஆஹா! நீர் நல்ல உபாயம் சொன்னீர்! முஹம்மதை அப்படி பாழறையில் அடைத்துப் பால நாட்கள் கழிந்தபின் பார்த்தால், உல்லாசமாய் சப்பிரமஞ்சத்தில் படுத்து நித்திரை தெளிந்து எழுந்து வருபவன் போல் வருவானே, அவனுக்குப் பசியேது? சாக்காடு தான் ஏது? அவன் கற்ற வஞ்சனைத் தொழிலுக்கு இவையெல்லாம் ஈடல்ல" என்றான்.

சரித்திர புராணம்.

வேறு.

காட்டினில் விடுத்தீர் குடியறக் கெடுத்தீர்
கடுவிடப் பாந்தளும் புலியுங்
கோட்டுடைக் களிறுங் கரடியின் குழவுங்
கொணர்ந்து நம் பதியினில் விடுத்து

வீட்டுவன் குலத்தி னொடுமவன் படித்த
விச்சையி னொடுந் தொழிக
தீட்டுவெண் புகழீர் மறுத்தொரு சூழ்ச்சி
செப்புமென் றுரைத்தனன் றீயோன்.

வசனம்.

இபுலீசு இப்படி நிராகரித்துச் சொன்னவுடன் வேறொரு காபிர் எழுந்து நின்று சபையை நோக்கி "ஆனால் இன்னொரு காரியம் செய்வோம். அதாவது:—தந்திரமிக்க முஹம்மதைப் பிடித்து ஒரு ஒட்டகத்தின் முதுகில் வைத்து இறுகப் பிணித்து, சிங்கம், புலி, யானை, கரடி, முதலிய துஷ்ட விலங்குகளும் பாம்பு முதலான விஷ ஜெந்துகளும் திரண்டு நெருங்கியுள்ள அந்தகாரமான வனத்தில் கொண்டுபோய் விட்டுவிடலாம். அப்படிவிட்டு விட்டால், உடனே அவனை அங்குள்ள மேற்படி துஷ்டப் பிராணிகள் பட்சித்து விடும். அப்போதே அவன் நாமமும், மார்க்கமும் கீர்த்தியும் பற்றின்றித் தொலைந்துபோகும்" என்றான். இச்சொல் தனது செவிகளில் நுழையுமுன்னே இபுலீசு வெகுண்டு "ஓ! ஓ!! நீங்கள்

கருதினபிரகாரம் முஹம்மதைப்பிடித்து ஒட்டகத்தில் சேர்த்துப் பிணித்து, வனத்தில் கொண்டுபோய் என்றைக்கு விட்டீர்களோ அன்றைக்கே மக்கமா நகரத்தாரின் குடிகளையெல்லாம் அறக் கெடுத்து விட்டீர்கள். ஏனென்றால், அந்த அந்தகாரமான வனத்தில் சஞ்சரிக்கும் கொடிய விஷமுள்ள பாம்பு முதலான பிராணிகளையும், சிங்கம், புலி, யானை கரடி என்னும் இத்துஷ்ட மிருகங்களையும் திரள் திரளாகச்சாய்த்துக்கொண்டு வந்து மக்கமாநகரத்தில் விட்டு விடுவான். அப்போதுஉங்கள்கதி எப்படிமுடியும். அவன் கற்றிருக்கும் மாயவித்தைக்கு இப்படி செய்வது அவனுக்குப்பிரமாதமான தொழில் அல்லவே. இதற்கு மேற்படவும் செய்வானே. ஆனதால், இவை யெல்லாம் சரியல்ல. வேறே தகுந்தபடி ஒன்றை யோசியுங்கள்'' என்றான்.

இவ்வாறு ஒவ்வொருவர் சொன்ன சொற்களையும், அவற்றில் சிலதை நிராகரித்துஇபுலீசு சொன்னவைகளையும் அபூஜஹல்கேட்டுக் கொண்டிருந்து, நீள அகலச் சிந்தித்துச் சபையாரை நோக்கி "கனவான்களே! இச்சபையிலுள்ள சிலர் எவர் மனதுக்கும் இதமான வார்த்தைகளாகவே சொன்னார்கள். இது பரியந்தம் நான் ஆலோசித்ததில் என் மனதிலும் ஒரு யோசனை பிறந்தது. அதை நீங்கள் அனைவரும் கேட்கவேண்டும். அதாவது:—நம்மில் யாராவது ஒருவர் அல்லது இருவராக முஹம்மதைக்கொல்லுவது சரியல்ல. இங்குள்ள பலகுடும்பத்தார்களில் ஒவ்வொரு குடும்பத்தில் ஒவ்வொருவராகப் பலர்கூடி வாட்களை யுருவிக்கொண்டு முஹம்மதை நெருங்கிவளைந்து, அனைவரும் ஒரேவீச்சாக வீசிக் கொன்று விடலாம். அப்படி கொல்லுவோமானால் அவன் பழி நம்மில் ஒருவருக்கு மாத்திரம் நேரிடாது. இன்னார்தான் முஹம்மது உடைய பழிக்கு உத்தரவாதியென்று குறிப்பிட இயலாது. எத்தனைபேர் கூடிநின்று வெட்டினோமோ அத்தனை பேர்களுக்கும் தலைக்குக்கொஞ்சமாய்ப்போகும். இதுதான் நல்ல உபாயம்'' என்றான். இவ்விதம் அபூஜஹல் சொன்னபோது அச்சபையார் அனைவரும் குதூகலிப்புற்று, இதுதான்சரி. இப்படியே செய்ய வேண்டுமென்று உள்ளமுவந்து ஆநந்தத்துடன் சொல்லி, தேவீராகிய தங்களையொத்த புத்திக்கூர்மையும், விவேகசாமர்த்தியமு முள்ளவர்கள் ஒருவருமில்லையென அவனை வியந்தார்கள். அப்போது இபுலீசு அனைவரையும் நோக்கி "குறைஷிகாள்! இவ்வகை

காட்டிலும் குறிக்கொள்ளத்தக்க உபாயம் வேறொன்றில்லை. ஆனால், இப்போது குறிப்பிட்ட கருமம் சிதைவுறாமல் நிறைவேறும்படி முஹம்மது மதீனத்திற்குப் பிரயாணப் படுவதற்குமுன்னமே விரைந்துசென்று காரியத்தைமுடியுங்கள்'' எனக்கூறிவிட்டு, மேற்படி சபையை நீங்கித்தன் ஜாகைக்குச்சென்றான். பிற்பாடு காபிர்கள் அனைவரும் அபூஜஹல் சொன்ன தீர்மானமே சரியென இருதயங்களில் இருத்திக் கொண்டு, தம்தம் மனைக்கு எழுந்தார்கள். அன்று கூடிய துராலோசனைச்சபை கலைந்தது.

காபிர்கள் திரண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொல்லுவதற்காகத் துராலோசனைசெய்து முடிவுபண்ணிக்கொண்டு போனபிற்பாடு, வானவர்பெருமானாகிய ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடத்தில் வந்து, ஸலாம்சொல்லி, காபிர்கள் சபைகூடி ஆலோசித்ததையும், கொலை செய்வதற்காக முடிவுபண்ணி யிருப்பதையும் விவரமாகச்சொல்லிக் காட்டி, மக்கமாநகரத்தை விட்டுப் புறப்பட்டு மதீனமாநகரத்திற்குப் போகவேண்டும் என்றும், கீழ்ப்பட்டு ஈமான்கொள்ளாத காபிர்கள் எல்லாரையும் பீசபீல்செய்து சங்கரிக்கவேண்டும் என்றும் ஏவுகிற வேதவாக்கியங்களையும் அறிவித்துவிட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் துதித்து வாழ்த்தி வானுலகம் சென்றார். ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் மேற்கண்ட சமாசாரங்களை அறிவித்தபோது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்கள் இருதயத்தில் எண்ணி யிருப்பதற்கு ஏற்ப ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் அறிவித்தபடியால், அகங்களித்து, மக்கமாநகரத்தை விட்டு மதீனமா நகரத்திற்குப் பிரயாணப்பட ஆயத்தமானார்கள்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்களுக்கு நபிப்பட்டம் கிடைத்த பதினான்காம் வருஷம் றபீயுல் அவ்வல் மாதம்ஐந்தாம் திகதியாகிய திங்கட்கிழமை இரவில் ஹிஜ்ரத் யாத்திரை செய்ய இருந்தார்கள். முந்தின ஞாயிற்றுக் கிழமைப் பகலில் இபுலீசு என்னும் பரமதுஷ்டன், முன்போல மகாத்துமாக்களுக்கு சமானமான வேஷம் பூண்டு, அபூஜஹல் முதலான குறைஷிக் காபிர்களிடம் சென்று, இன்றிரவில் அடுத்த ஜாமத்தில் முஹம்மது மதீனத்திற்குப் பிரயாணமாகவிருக்

கிறாரென்று தெரிவித்தான். இச்சங்கதியை கேட்டமாத்திரத்தில் அபூஜஹல், வலீது, உமையா, உத்துபா, உக்பா, உமறு, சைபா, என்னும் இப்பாதக சிரோன்மணிகளும், மற்ற குறைஷிக் காபிர்களும் ஒருங்கு திரண்டு, தாங்கள் ஆலோசித்துத் தீர்மானித்த கருமத்தை இன்னபடி செய்வதென மறுபடியும் தெளிவாக முடிவாக்கிக்கொண்டு, அன்று சூரியன் அஸ்தமித்து இராவாய் இருள் பரந்தவுடன், ஆயுதபாணிகளாய் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மாளிகையைத் தேடி அனைவரும் புறப்பட்டார்கள். காபிர்கள் ஏராளமாய் கூடி சபதவார்த்தைகளுடன் இபுலீசு என்னும் பாதகனை முன்னே நடத்திக்கொண்டு வீதிகளைக் கடந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிருக்கும் மாளிகையை வந்து வளைத்தார்கள். பின்வரும் தீங்கான கருமத்தை சிந்தித்தறியாத அவிவேகிகளும், பொறாமையும் புன்குபிர் இருளும் குடிகொண்ட தறுகண்ணருமாகிய மேற்படி காபிர்கள் அனைவரும், ஒருவரை யொருவர் பிரியாமல் அறநெருங்கி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிருக்கும் சிறந்த மாளிகையின் நாலுபக்கமும் வளைந்து, ஒருஈயாவது வெளியிலிருந்து மாளிகைக்குள் புகுதவும், உள்ளிருந்து வெளிப்படவும் இடம் கொடாமல், அதிக ஜாக்கிரதையுடன் விழித்த கண் இமைக்காமல் காத்து நின்றார்கள். இவர்கள் இவ்வண்ணம் மாளிகையைச் சூழ்ந்து காத்து நிற்கையில், அவர்களிலுள்ள சில சண்டாளர்கள் மற்றவர்களை நோக்கி "ரணவீரர்களே, நாம் இப்பொழுது முஹம்மதைப் பிடிப்பதற்காக எச்சரிக்கையோடு வந்திருக்கிறோம். அவனோ இருந்தது இருந்தாற்போல, ஒரு கைநொடிப் பொழுதில் மறைந்து போவான்; பிறர் கண்களுக்குத் தோற்றாமல் ஆகாய கமனஞ் செய்வான்; தன்னுருவை மாற்றித் திடீரென வேற்றுரு கொள்வான்; அநேக ஆயிரம் பேர் தனக்கு எதிரே சூழ்ந்திருந்த போதிலும், அவர்களனைவரையும் சித்தப் பிரமை கொள்ளுவித்து, மதியைமயக்கி, விழித்த கண் விழித்தபடி நவழுங்காமல் பதுமைகளைப்போல அசைவற்றிருக்கும்படி மாயாஜாலம் செய்வான். அவன் கற்ற தந்திரங்கள் எத்தனை வகையோ வுண்டு; அன்றியும் இப்போது அவன் இந்த மனைக்குள் இருக்கின்றானோ, அல்லது, நாம் வரும் ஸசாட்டடத்தை யறிந்து முன்னமே வெளிப்பட்டு விட்டானோ தெரியவில்லை. அதை யாரால் அறிய முடியும்? விலங்கு

கள், பறவைகள் முதலான பிராணிகளும், தருக்கள் செடிகள் முதலான தாவரவர்க்கங்களும், மனமுருகி அஞ்சத்தக்க தனது மாந்திரீக பலங்கொண்டு இப்போது நம்மை எதிர்த்தானானால், நாம் எவ்வாறு அவனுக்கு எதிர் நின்று ஈடு கொடுப்போம்? இப்போது நம்ஜாதியார் எண்ணிறந்தோர் திரண்டு அவனைக் கொலை செய்ய நாடி இங்கு வந்து வளைந்திருக்கிறார்கள். இதற்குப் பிரதியாக அவன் தன் மந்திரோச் சாரணத்தினால் என்னென்ன விக்கினங்களை விளைவிப்பானோ! அப்படி அவன் செய்தால் அதற்குப் பிரதி செய்து தடுக்க நம்மாலாகாதே. தற்சமயம் நிகழப்போகிற காரியங்கள் மிகவும் அஞ்சத்தக்கதாகவே யிருக்கின்றன" என்று பயங்கரத்துடன் சொன்னார்கள்.

இவ்வாறு சிலர் சொன்ன சொல்லை இபுலீஸ் கேட்டு, அவர்களை நோக்கி "எண்ணாத தெல்லாம் எண்ணி யெண்ணி, உள்ளம் உழன்று அஞ்சித் தடுமாறிபேசும் வார்த்தைகளை நிறுத்த மாட்டீர்களா? ஒன்றும் பேசாவண்ணம் உங்கள் வாய்களை மூடிக்கொள்ளுங்கள். இப்போது முஹம்மது இந்த மனைக்குள்ளே தான படுத்திருக்கிறான். ஒளித்துக்கொண்டு போய்விடவில்லை. இன்னும் க்ஷணநேரத்தில் நமது கையில் அகப்பட்டுக்கொள்வான். நாம் கோரிய கருமம் நிறைவேறி விட்டதாகவே நினையுங்கள்; நீங்கள் கொண்ட துணிவையும், மனவூக்கத்தையும் நழுவ விடாதீர்கள்; சந்தேகமான எண்ணங்களை எண்ணாதீர்கள். தைரியத்துடனிருங்கள்" எனக்கூறி, காபிர்களுக்கு உற்சாகம் உண்டு பண்ணிக் கொண்டிருந்தான். அப்போது அபூஜஹல் என்னும் தறுகண்ணன் அனைவரையும் விளித்து "வீரர்களே, சப்தமிட்டுப் பேசுவதை அடக்குங்கள். கூக்குரல் போடாமலும், நித்திரையில் மயங்காமலும் ஜாக்கிரதையாயிருங்கள். திசைக்குத்திசைப் பத்துப் பேர்களாக நின்று நாலு புறங்களிலும் கண்பரப்பிப் பார்த்துக் கொண்டு நில்லுங்கள். இனி முஹம்மது ஒளித்துக்கொண்டு போவதற்கு இடமில்லை. அவன் மதீனமா நகரத்தை இனிகனவிலுங் காணமாட்டான். அவனுடைய புதிய மார்க்கமும் இன்றோடு தொலைந்தது இனி அவன் தலையெடுப்பது அசாத்தியம். நீங்கள் அனைவரும் எச்சரிக்கையா யிருங்கள்" எனச்சொல்லி விட்டு, தானும் ஒரு பக்கம் குந்தி யிருந்தான்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொலைசெய்யக் கருதிய அறிவற்ற காபிர்கள் இவ்வாறு மாளிகையைச் சூழ்ந்து கொண்டிருக்கும் அன்றிரவில், ஆகாயம் முதல் பூமி பரியந்தம், காரிருட்படலம் மூடிக்கொண்டது. அவ்விருட் படலத்துடன் அல்லாஹு தஆலா மேற்படி காபிர்களுக்கு தாங்கரிய நித்திரையொன்றை இறக்குவித்தான். அந்தக் கொடிய நித்திரையானது வந்து அவர்களனைவரையும் சூழ்ந்தது மேற்படி நித்திரையின் கொடுமையால் காபிர்களனைவரும் ஸ்மரணையற்று, ஒருவர்மேல் ஒருவர் சாய்ந்து கொண்டு, கால் கரங்களை முடக்கிக் கொண்டும், நீண்டுகிடந்து கண்களைச்செருகிக் கொண்டும், வாய்களைப் பிளந்துகொண்டும், ஐம்பொறிகளும் அவிந்துசெத்த பிரேதங்களுக்கு சமானமாய், மாளிகையை வளைந்து கிடந்து தூங்கினார்கள். சிந்தனையற்று வந்து இறுமாப்பாய்ச் சூழ்ந்து நின்ற கொடிய காபிர்கள் அனைவரும் இபுலீசு என்னும் படுபாதகனும் பிரக்ஞையின்றி, கடல் உறங்குவது போல உறங்கினார்கள்.

சரித்திர புராணம்.

வேறு.

அமரருக் கரசர் மொழிப்படி இருந்த
அலிதமை யணையிசை படுத்தித்
தமரொடு மிருந்து மூன்று நாள் கடந்தென்
றன்வயின் சாருமென் றுரைத்துக்

கமைதரு மிருகண் மணியினுஞ் சிறந்த
புதல்வியர் தமக்குங்கட் டுரைத்துத்
தமைவளர்த்து வந்த பாத்திமா வெனுமத்
தாயர்க்கு முரைத்தெழுந் தனரால்

திருமனைப் புறத்தி னின்றொருபிடிமண்
செங்கையி னினிதெடுத் தேந்தி
யொருதரம் யாசீ னோதிநாற் றிசையு
முறங்கிய காபிரை நோக்கி

யிருதிருக் கினும்வா யினும்புக வெனவென்
றெண்ணியம் மண்ணினை யெறிந்து
சொரிகதிர்ச் சுதைமா மனையிடங் கடந்து
தோன்றினர் மீண்டமா மறுகில்.

வசனம்.

அப்போது அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்தில் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை விளித்து, அல்லாஹு தஆலாவின் சலாம் சொல்லி "யாறஸூலல்லாஹ்! தாங்கள் பிரயாணப்படும் வேளையாயிற்று. இந்த மாளிகையிலுள்ள தங்களின் படுக்கையறையில் தங்கள் அருகர்களிலொருவராகிய அலியைபடுத்து நித்திரை செய்யும்படி செய்து, தாங்கள் போர்த்திக்கொள்ளும் உத்தரீயத்தை அவர்மேல் போர்த்திவிட்டு, வெளிப்பட்டுத் தங்கள் வலது கையால் ஒருபிடி மண்ணை யள்ளி யாசீன் என்னும் தலைப்பினையுடைய குர்ஆன் அத்தியாயம் முழுமையும் ஓதி, மேற்படி மண்ணை மனைப்புறம் சூழ்ந்திருக்கும் காபிர்களின் முகங்களில் விழும்படி வீசி எறிந்து, சீக்கிரம் பிரயாணப்படுங்கள்" எனக் கட்டளை பண்ணிவிட்டு வானுலகம் சென்றார். ஜிபுறயீல் வந்து மேற்கண்ட வண்ணம் உத்திரவு பண்ணினவுடனே, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலிறலியல்லாஹு அன்ஹுவை அருகில் அழைத்து "தாங்கள் மூன்று தினம் வரையும் இங்கிருந்து, பிற்பாடு என்னிடம் வரவேண்டும்" எனக்கட்டளை பண்ணித் தங்களின் சப்பிரமஞ்சத்தில் படுக்கச் செய்து, உத்தரீயங் கொண்டு மூடிவிட்டு தங்கள் அருமை மகளாராகிய பாத்திமத்து றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு சொல்லவேண்டியவைகளைச் சொல்லிவிட்டு, தங்களின் பெரிய தந்தையின் மனைவியும் வளர்த்த மாதாவுமாகிய பாத்திமா என்னும் பெண்கள் நாயகியாரிடம் விடைபெற்றுக் கொண்டு மாளிகையை விட்டு பிஸ்மில்லாஹ் சொல்லிப் புறப்பட்டார்கள்.

நபிகட்டிலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்தப் பேரிருள் மலிந்த அர்த்த ஜாமத்தில் மாளிகையை விட்டு வெளியில் வந்து பார்த்தார்கள். காபிர்கள் கணக்கின்றி மனையை சூழ்ந்து ஸ்மரணையின்றி நித்திரை செய்வதைக் கண்டு சந்தோஷ மடைந்து, தங்களின் வலதுகையால் ஒரு பிடி மண்ணை யள்ளிக்கொண்டு, நாலாபக்கமும் படுத்து உறங்கிக் கிடக்கும் காபிர்களை நோக்கி மேற்குறித்த யாஸீன்ஸூறாவை ஓதி, இம்மண், இந்தக் காபிர்களின் வாய்களிலும் விழிகளிலும்

விழக்கடவது என இருதயத்தில் எண்ணி அக்காபிர்கள் மேல்வீசி யெறிந்து விட்டு, மிகவிரைவாய் வீதியின் பக்கத்தில் வந்தார்கள். இவ்விதம் தெருப்புறம் வந்த நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அங்கு நில்லாமல் மிக விரைவாய் நடந்து, தங்கள் உயிரை யொத்த பூர்வ சிநேகிதரும் அருகர்களில் முதல் வருமாகிய அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவாசலில் வந்து நின்று கொண்டு, மெல்லிய குரலாய் அவர்களின் நாமத்தைச்சொல்லி அழைத்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தனது நாமத்தை சொல்லி அழைத்ததொனியை அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு கேட்டு இது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் குரலோசை தான் எனத் தெளிந்து "நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஒருதரமாவது இவ்வித அர்த்த ஜாமத்தில் நம்மைத்தேடி வந்தவர்களல்ல. இப்போது இந்த இருள் மலிந்த நடுசாமத்தில் என்ன காரணத்தினால் புறப்பட்டு இங்கு வந்தார்களோ தெரியவில்லையே" என இருதயத்தில் எண்ணிக்கொண்டு ஆயுதபாணிகளாய் விரைந்தெழுந்து மனைவாசலில் வந்து கதவைத் திறந்தார்கள். அபூபக்கர் ஸித்தீக் றலியல்லாஹு அன்ஹு கதவைத் திறந்த மாத்திரத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் எதிரே தனித்து நிற்பதைக்கண்டு "அகில ரக்ஷகராய், அற்புதவாரியாய் ஆநந்தப் பிரவாகமாய், நபிமார்களுக்கு நாயகமாய் அவதரித்த யாறஸூலல்லாஹ்! தாங்கள் சொல்லற்கரிய இருளால் மூடப்பட்ட இந்த அர்த்த ஜாமத்தில், தன்னந்தனியே புறப்பட்டு இங்கு வந்த காரணம் என்ன? தமியேன்மீது இரங்கிச் சொல்லவேண்டும்" என வினவினார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் "இப்போது நான் தங்களோடு சம்பாஷிக்கவேண்டிய உறுதியானவையும் இரகசியமானவையுமான சில விஷயங்கள் உண்டு. மனைக்குள் அந்நியர் யாருமிருந்தால் அப்புறப்படுத்துங்கள்" என்று அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹுவை நோக்கிச் சொன்னார்கள். உடனே அவர்கள் "மனைக்குள் பிறர் ஒருவருமில்லை; வாருங்கள்" என்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை அழைத்துக்கொண்டு போய் சிறந்த ஒரு ஆசனத்திலிருத்தி, தாங்களும் அருகில் உட்கார்ந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்ல மவர்கள், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "அபூபக்கரே, நான் இன்றிரவு மதீனமா நகரத்துக்குப் பிரயாணப்பட எத்தனமாயிருக்கிறேன். அதை இபுலீசாகிய பாதகன் அறிந்து காபிர்களுக்கு அறிவித்த படியால் அவர்கள் கூட்டமாக வந்து மாளிகையை வளைந்து கொண்டு ஸ்மரணையற்றுத் தூங்குகின்றார்கள். பிறகு ஜிபுறயீல் வந்து, படுக்கையறையில் தோழர் அலியைப் படுக்கவைத்துப் போர்வையால் போர்த்து, ஒருபிடி மண்ணையள்ளி யாசீனை ஓதி மேற்படி காபிர்கள்மேல் எறிந்துவிட்டு புறப்படும்படி உத்திரவு செய்தார். அப்படியே நான் செய்துவிட்டு வந்தேன்" என்று சொன்னார்கள். "நான் இன்றிரவு மதீனமா நகரத்திற்குப் பிரயாணம் செய்கிறேன்" என்ற சொல் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் செவிகளில் நுழைந்தவுடன், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லா! நான் தங்களைப் பிரிந்து ஒரு இமைப் பொழுதாவது இங்கிருக்கமாட்டேன். நானும் தங்கள் கூடவே வருவேன்" என்றார்கள். உயிர்த்துணைவராகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூடவருவதாகச் சொன்ன சொல்லைக் கேட்ட நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஆநந்தங் கொண்டு, அவர்களை நோக்கி "அபூபக்கரே, நாம் நமது பகையரறியாத வழியைப் பிடித்து அதிக விரைவாய்ச் செல்லவேண்டும். அப்படிச் செல்லுவதற்குத் தகுந்த வாகனங்கள் இல்லையே. நாம் இருவரும் தனித்து நடந்து போவது அல்லாஹு தஆலாவின் பொருட்டேயாகும்" என்றார்கள். அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தாங்கள் வாகனங்களில்லை யென்று மலைக்காதீர்கள். மிகவும் உரத்துப் பருத்து, சுமைக்கும் நடைக்கும் சற்றும் இளைக்காத இரண்டு ஒட்டகங்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றில் ஒன்றை நான் தங்களுக்கு இனாமாகத் தந்து விட்டேன்" என்றார்கள். அதற்கு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் "அவ்வொட்டகத்தை எனக்கு கிரயமாகக் கொடுங்கள்" என்றார்கள். அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு சம்மதித்து ஒரு ஒட்டகத்தை கிரயமாக நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குக் கொடுத்தார்கள்.

பிற்பாடு, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு, தங்கள் இரகசியத்தை மறைத்து வைக்கத்தக்க உற்ற மனிதன் ஒருவனை யழைத்து அவனிடம் அவ்விரண்டு ஒட்டகங்களையும் ஒப்புவித்து "நாங்கள் இங்கிருந்து புறப்பட்டது முதல் மூன்று நாட்கள் கழிந்த பின், நான்காம் நாளில் நீ இவ்விரண்டு ஒட்டகங்களையும் வெருட்டிக் கொண்டு தௌர் என்னும் மலையின் அடிவாரத்திற்கு வா" எனக் கட்டளை பண்ணி, அவனுக்குக் கூலியும் கொடுத்தார்கள். பிறகு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பிரயாணமானார்கள். அப்போது, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவி யவர்கள், அந்த அர்த்த ஜாமத்தில் தமது மனையி லிருந்த கொஞ்சம் திராக்ஷை பழத்தையும், சிற்றுண்டியையும் எடுத்து ஒரு சீலையில் வைத்து இறுகக் கட்டி தம் புருஷர் கையில் கொடுத்தார்கள். அதை அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கையில் வாங்கிப் பிடித்துக் கொண்டு, தங்களின் ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பராகிய ஆமீர் என்பவரை யழைத்து "ஆமீரே, நாங்கள் தௌர் மலையின் குகையில் இருப்போம். நீர் பிரதி தினமும் இங்கு நிகழும் வர்த்தமானங்களைத் தெளிவா யறிந்து கொண்டு, அடிக்கடி அங்கே வந்து எங்களுக்கு அறிவிக்க வேண்டும்" என்று உத்தரவு செய்து விட்டு, மனைவி மக்களுக்குச் சொல்ல வேண்டிய சங்கதிகளைச் சொல்லி முடித்து, தங்களின் அருமை மகனாராகிய அப்துல்லா என்னும் சிறுவரையும் கூட அழைத்துக் கொண்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடன் பிரயாணப் பட்டார்கள். இருளடர்ந்த அந்த அர்த்த ஜாமத்தில், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அப்துல்லா என்னும் சிறு பிள்ளையும் மனையை விட்டு வெளிப்பட்டு, அதிக விரைவாய் நடந்து தௌர் மலையின் அடியிலுள்ள ஒரு குகைக்குள் புகுந்து, மூன்று சிங்கங்கள் ஒரு மலைக்குகையில் பதுங்கி யிருக்கும் பாவனையாகத் தங்கி யிருந்தார்கள். அப்போது இருளகலச் சூரியன் உதயமாயிற்று.

பொழுது நன்றாய் விடிந்த பின் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் மாளிகையைச் சூழ்ந்து பிரக்ஞை தப்பிக் கிடக்கும் பகைவர்கள் ஒருவராவது தமக்கு வந்து பிடித்த

பாழும் நித்திரைதெளிந்து எழவில்லை. எல்லாருக்கும் முந்தி இப்லீஸ் மாத்திரம் தூக்கம் தெளிந்து எழுந்தான். அவன் எழுந்திருக்கும் போது தனக்குக் கிடைத்திருக்கும் விபரீதமான காரியத்தைப் பற்றி அவன் சித்தம் கலங்க கேட்டது. அவன் தூக்கம் தெளிந்து எழுந்த போது தனது இரண்டு கண்களிலும் வாயிலும், முகத்திலும் மண் திணிக்கப் பட்டிருப்பதைத் யறிந்து, பிறரறியு முன் விரைவாய் தன் கைகளால் அம்மண்ணைத் துடைத்துக் கொண்டு "ஆ, இந்த பாழும் தூக்கம் எல்லாருக்குமா வரும்!" என ஆச்சரியமுற்று, மறுபடியும் "முஹம்மது இத்தனை வீரர்கள் புடைபெயராமல் வளைந்திருக்க, இப்படி மாயமாய்ப் போய் விடுவானோ" எனச் சினத்தால் உதடுகளை கடித்தும், இன்னும் "அந்த முஹம்மது இவ்விதம் எல்லார் வாய்களிலும் மண்ணைப் போடுவானோ" எனத் தனக்குத்தானே நகைத்துக் கொண்டும், மனம் உழன்று "இனி என்ன?' வெல்லற்கரிய பெரும்பகை விளைந்து விட்டது" எனத் தடுமாறிக் கொண்டிருந்து, அனைவரையும் விளித்து "முஹம்மது உடைய மாளிகையைச் சூழ்ந்து, அவனைப் பிடிப்பதற்காக விழித்துக் கொண்டிருக்கிற வீரர்களே! உங்கள் அனைவர் வாய்களிலும் அந்த முஹம்மது மண்ணைவாரிப் போட்டு விட்டு, தான் கற்ற மாயவித்தைக் கொண்டு வெளிப்பட்டு விட்டான். இப்படி செத்த பிரேதங்களைப் போல ஸ்மரனை யற்றுத் தூங்கும் நீங்கள் தாமோ, முஹம்மதைப் பிடிக்கிறவர்கள்? இவ்விதச் சோம்பேறிகள் என்ன இலாபத்தை யடைவார்கள்? எழுந்திருங்கள், எழுந்திருங்கள்" என்று கூறினான்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அதிருந்தொனியா லிபுலீசு
மறையக் கேட்டு நடுங்கியுடற்
பதறி யெழுந்தார் சிலர் குழறிப்
பகர்ந்திட் டெழுந்தார் சிலர் முகத்திற்
புதயக் கிடந்த பூழ்தி துடைத்
தெழுந்தார் சிலர்வாய் மண்ணை யுமிழ்ந்
திதென்ன கொடுமை கொடுமையென
வெழுந்தார் சிலர் நெஞ் சிடைந்தாரே.

குழிமிக் கிடந்த பலதிசையுங்
குழறி யெழக்கண் டபூஜஹலு
முழுகிக் கிடந்த குலத்தினடு
வெழுந்தான் முகம் வாய் முழுதினுமண்
விழுமித் தொழிலியா தெனக் கேட்ப
விரைவி னிபுலீ சென்பவனியா
ரொழிய வெவர்க்கும் வாயினின்மண்
விழுந்த தெனக்கட் டுரைத்தனனால்.

வசனம்.

இவ்வாறு இபுலீஸ் கூக்குரலிட்டு சொன்னதை, உணர்வற்றுக் கிடந்த பகைவர்களில்அநேகர் கேட்டுஅலறிக்கொண்டுஎழுந்தார்கள். சிலர், வாயில் மண் திணிக்கப் பட்டிருப்பதால் பேசமாட்டாமல் நாத்தடுமாறி உளறிக்கொண்டு எழுந்தார்கள். சிலர், எழுந்தபோதே மண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தார்கள். சிலர், வாய் மண்ணை உமிழ்ந்துகொண்டு எழுந்தார்கள். சிலர், இதென்ன கொடுமை என ஏங்கிக்கொண்டு எழுந்தார்கள் இவ்வாறாய்ப் பல புறத்திலும் உள்ள அனைவரும் தடுமாறிக்கொண்டு எழுந்த போது, தலைவனாகிய அபூஜஹல் திகில்கொண்டு விரைவா யெழுந்து, தன் முகத்திலும், வாயிலும், கண்களிலும் மண் நிரம்பி யிருக்கிறதைக் கண்டு, ஆச்சரியமடைந்து "இதென்ன செய்கை? இப்படிச் செய்தது யார்?" என வினவினான். உடனே இபுலீஸ் அபூஜஹலையடுத்து "தலைவரே, நான் ஒருவன் நீங்குதலாக, மற்ற எல்லார் வாயிலும் முஹம்மது, மண்ணை வாரிப் போட்டு ஓடி விட்டான். இனி கவனிப்பது என்ன? நம் ஜாதி யாராகிய அனைவர் வாய்களிலும் மண்ணைப்போட்டு, நமது குடிகளை யெல்லாம் கெடுக்கவேண்டு மென்று கெடுத்துவிட்டு தப்பித்துக்கொண்டு, தனக்குக் கீழ்ப்படிந்து உதவி செய்கின்றவர் களிருக்கும் மதீனமா நகரத்திற்கு அவன் போய்விட்டான். இனி அந்த முஹம்மது என்பவனால் விளையும் வெல்லற்கரிய பகையைத் தடுக்க தகுந்த மனிதர் ஒருவருமில்லை" என்று துக்கத்துடன் சொன்னான்.

இபுலீஸ் இவ்வாறுசொன்ன சொற்களை அபூஜஹல் கேட்டு துக்கசாகரத்தில் அமிழ்ந்து, உடல் ஒடுங்கி, உள்ளங்கலங்கி, ஸேனை

யழைத்து "நீங்கள் இந்த மாளிகையில் பிரவேசித்து உள்ளே இருப்பவர் யாரென்று பாருங்கள்" என ஏவினான். உடனே சிலர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் மாளிகைக் குள் புகுந்து பார்த்து, மீண்டு வந்து அபூஜஹலை நோக்கி "மனைக் குள்ளே முஹம்மதுடைய அருகராகிய அலி மாத்திரம் இருக்கிறார். வேறு ஒருவருமில்லை" என்றார்கள். பிறகு அபூஜஹல் அனை வரையும் நோக்கி "வீரர்களே, முஹம்மது இன்றிரவு இந்த மனையிலேதான் இருந்தான். அவன் அர்த்தஜாமத்தில் எழுந்து நம்மை மயக்குவித்து மோசம் செய்துவிட்டு வெளிப்பட் டிருக்கிறான். இன்னும் அதிகமான தூரந்தொலையில் போயிருக்க மாட்டான். அன்றியும், அவன் மதீனமா நகரத்திற்குச் செல்லும் பகிரங்கமான பாதையிலும் போகிறவனல்ல. வழிக் குறிப்பற்ற மலைத்தொடர், வனம், வனாந்தரங்களிலுள்ள குறுக்குப்பாதையைத் தேடி இதுவரையும் திரிந்துகொண்டு தான் இருப்பான். ஆகை யால், நீங்கள் அனைவரும் அவனைத்தேடிப் புறப்படுங்கள்" என்றான். அபூஜஹல் இவ்வாறு சொன்னவுடனே காபிர்கள் அனை வரும் ஆயுதபாணிகளாய், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத்தேடிப் பலவழியும் விரைந்து சென்றார்கள். பகைவர்கள் மலை, வனம், வனாந்தரங்களில் மாத்திரம் தேடிப்போக வில்லை. மக்கமாநகரத்திலுள்ள முஸ்லிம்கள் வசித்த மனைகளிலும், பாழடைந்த வீடுகளிலும், கோவில்களிலும், மற்ற விடங்களிலும் போய், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடினார்கள். காபிர்கள் இப்படிப் பல பல இடங்களிலும் தேடிக் கொண்டு போன பின், இபுலீஸ் என்னும் பாதகன் "ஆ ஹா! முஹம்மது மனைக்குள்ளிருக்கும் போதே அவனைப் பிடிக்க திராணி இல்லாத இவர்களா, அவனை வெளிப்பட்டபின் பிடிக்கப் போகிறார்கள்? இது விபரீதம். இனி யாரால் அவன் கண்டு பிடிக் கப்படுவான்? ஒரு போதும் பிடிபடமாட்டான். அவன் சென்ற வழியைக்கூட இவர்கள் காண்பது அரிது" எனத் தனது இருதயத்தி லெண்ணி கொண்டு, தானும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடிப்போகிறவன் போல் விரைந்து நடந்து தன்ஜாகைக்குச் சென்றான்.

காபிர்கள் இவ்வாறு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடிக்கொண்டு திரிகின்றபோது, தௌர்மலைக்

குகையிலிருக்கும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அப்துல்லா என்னும் சிறுவரை நோக்கி "நீர் இங்கிருந்து பிறரறியா வண்ணம் ஊருக்குள்ளே சென்று, அங்கு நிகழும் வர்த்தமானங்களை அறிந்து கொண்டு வாரும்" எனக்கூறி அனுப்பினார்கள். அப்துல்லா பிரதிதினமும் மக்கமா நகரத்திற்குள் வந்து காபிர்களின் சங்கதிகளைத் தீரத்தெளிய அறிந்துகொண்டு, குகையில்போய் அறிவித்துக் கொண்டிருந்தார். முன் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு கட்டளை யிட்டவண்ணம் ஆமிறு என்பவர் ஆடுகளை ஓட்டிக்கொண்டு தௌர்மலையின் சாரலில் வந்து மேய்த்துப் பாலைக்கறந்து பிறரறியாமல் காய்ச்சி, குகைக்குள் கொண்டு போய் இருவருக்கும் பருகக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவருக்கு மூன்று நாட் பரியந்தம் இதுவே தொழிலாயிருந்தது. அப்துல்லா போய் வந்து கொண்டிருப்பதும், ஆமிரு என்பவர் வந்து பால் கறந்து காய்ச்சிக் கொடுத்துக் கொண்டிருப்பதும் பிறருக்குத் தெரியவே தெரியாது. இரண்டு நாள் வரையும் இவ்வாறு பொழுது போக்கினார்கள். மூன்றும் நாள் மத்தியானமான போது அக்குகையின் வாசலில் இருக்கும் ஒரு சிலந்திப்பூச்சி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அங்கு வந்திருப்பதை யறிந்து, 'நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை காபிர்கள் தேடிக்கொண்டு ஒருகால் இங்கு வருவார்களானால் அவர்கள் அறிந்து கண்டுகொள்ளா வண்ணம் நாம் ஒரு உபாயம் செய்யவேண்டும், எனக்கருதி, அக்குகையின் வாயைத் தன் நுண்ணிய நூல் கொண்டு இழைத்து அடைத்து விட்டது. அன்றியும், அக்குகையின் வெளிப்பக்கத்தில் ஆணும் பெண்ணுமாகிய இரண்டு புறாக்கள் கூடுகட்டி. அக்கூட்டில் முட்டையிட்டு அடைகாத்தன.

இது இப்படியிருக்க, நபிகட்திலகம காத்திமுல் அன்பியா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பிரயாணப்பட்ட அன்று காலை முதற்கொண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடிக்கொண்டு புறப்பட்டு, தருக்கள் அடர்ந்த வனங்களிலும், மலைகளிலும், வனாந்தரங்களிலும் திரிந்த அநேக காபிர்களில் சிலர், அந்த மத்தியான வேளையில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிருக்கும் தௌர் மலைச்சாரலில் வந்தார்கள். வந்த காபிர்கள் அம்மலைச்

சாரலிலும் மரச் செறிவுகளிலும், கற்பாறைகளிலும், பள்ளங்களிலும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடி, காணாமல் அலுப்புற்று, மேற்படி குகையின் வாசலில் வந்தார்கள். கைகளில் ஆயுதங்களும், கால்களில் பாதகோசங்களும் தரித்துக்கொண்டு முகத்தில் வியர்வை சிந்தக் குகை வாசலில் வந்து நிற்கும் காபிர்களை குகைக்குள்ளிருக்கும் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! நாம் பிறரறியாமல் அர்த்த ஜாமத்தில் புறப்பட்டு இங்கு வந்திருக்கிறோம். நம்மை தேடிக்கொண்டு காபிர்கள் இந்த ஒதுக்கமான இடத்திற்கும் வந்து விட்டார்கள். அவர்கள் வெளியில் நிற்பது உள்ளிருந்து பார்க்கும் நமக்கு, அவர்களின் முழுக்கரட்பரியந்தம் தெரிகின்றது. நம்மைத் தேடிவந்த அவர்கள் இக்குகை வழியே குனிந்து பார்ப்பார்களானால் நம்மைப் பிரத்தியட்சமாய்க் கண்டு கொள்ளுவார்களே" என்று கூறினார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "அபூபக்கரே! நாம் இருபேரும் இக்குகையில் தன்னந் தனியே யிருக்கிறோம். எல்லா ஜீவன்களையும் சிருஷ்டித்துக் காக்கும் தத்துவத்தையுடைய அல்லாஹு தஆலா நமக்குத் துணையாய், நம்மைவிட்டும் நீங்காமலிருக்கிறான். அப்படியிருக்க அந்தப் பகைவர்கள் நம்மைக்கண்டு கொள்ளுவதும் உண்டோ" என்றார்கள். பிறகு அக்கெபிவாசலில் வந்து நிற்கும் காபிர்களில் இரண்டொருவர் மற்றவர்களை நோக்கி நாம் இந்தக்கெபிக்குள் நுழைந்துபார்ப்போம் வாருங்கள். முஹம்மது அங்கிருக்கவுங்கூடும் என்றார்கள். அதற்கு மற்றவர்கள் "இதென்ன ஆச்சரியம்! குகையின் வாசல் சிலந்தி நூலால் இழைக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், புறாக்கள் அடைகாக்கின்றன; ஆகையால், மேற்படி சிலந்தி நூல் சிதையாமலும், புறாக்கள் கலையாமலும் மனிதன் எப்படி குகைக்குள் புகுந்திருப்பான், ஒருவனும் குகைக்குள் நுழையவில்லை. நாம் ஏன் விருதாவில் உள்ளே போகவேண்டும்?" எனக்கூறித் தடுத்து விட்டு, அனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கண்டு கொள்ளாத கவலையால், உள்ளம் புழுங்கி அவ்விடத்தை விட்டுப்போய் விட்டார்கள்.

53-வது அத்தியாயம்

விஷம் மீட்டியது.

கலிச்சந்த விருத்தம்.

படமீட்டிய திறலாரெழு பாரும்புக ழிறசூல்
திடமீட்டிய அபூபக்கரு சித்தீக்கொருதாளிற்
படமீட்டிய நாகங்கடி பட்டேசிர சேறும்
விடமீட்டிய சரிதந்தனை வியலாக விண்டிடுவாம்.

இதன் பொருள்.

வெற்றியுற்ற விருது கொடிகளோடும், ஏழுபூமியும் புகழ் பொருந்தி வரும் றஸூல் நாயகமான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திடத்தை சம்பாதித்த தங்கள் தோழரான அபூபக்கர் சித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஒப்பற்ற ஓர் காலிற் படத்தை யளவுப்படுத்தும் பாம்பு வாய்க்கடிப் பட்டு அவர்கள் தலைக்கேறும் விஷத்தைத் திருப்பிய சரித்திரத்தை யொழுங்காக சொல்லுகின்றாம்.

சரித்திரப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நகரைவிட் டகன்று கான்சூழ் நகத்திடத் துறைந்து தேடு
மிகலவர் கண்ணிற் காண திருந்தவ ணிருக்குங் காலைப்
புகலபூ பக்கர் செவ்வி மடிமிசை பொருந்த வாசந்
திகழ்சிரஞ் சேர்த்தி வள்ளல் செழுந்துயில் புரிவ தானார்.

வசனம்.

ஒப்பற்ற மேற்படி தௌர் என்னுஞ் சிறந்த மலையின் குகையின் வாசலில் தேடிவந்து நின்ற பகைவர்கள் போன பிறகு, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மடிமேல் தங்களின் மகிமை வாய்ந்த சிரசை வைத்துப் படுத்து, சற்று நேரம்வரையும் நித்திரை செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இப்படி துயில் புரியும் அந்த வேளையில், எண்ணிறந்த வானவர்கள் வானம்முதல் பூமிவரையும் திரண்டுநெருங்கி அந்த தௌர் மலையைக் காத்து நின்றார்கள்.

மேற்படி மலையின் குகைக்குள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் படுத்து நித்திரை செய்யுமிடத்தில் பாம்பின் புற்றுகள் அநேகம் இருந்தன. அப்புற்றுகளுள் ஒரு புற்று வழியாய்க் கருநாகம் ஒன்று தலையை நீட்டிற்று. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் படுத்து நித்திரை செய்யும் போது மேற்படி நாகம் வளையில் தலையை நீட்டியதை, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு, "நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அயர்ந்து தூங்குகின்றார்கள்! இவ்வளையிலிருந்து கருநாகமொன்று புறப்படுகின்றது. ஆனபடியால், என்ன தீங்கு சம்பவிக்குமோ" வென அஞ்சி, தாங்கள் போர்த்திருக்கும் உத்தரீயத்தில் கொஞ்சம் கிழித்துச் சுருட்டி, அந்த நாகம் தலைநீட்டிய வளையில் திணித்து அடைத்தார்கள். இவர்கள் இப்படி அடைத்தவுடனே அந்த நாகம் அடைப்பட்ட வளையை விட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சமீபத்திலுள்ள மற்றொரு வளையில் வந்து தலையை நீட்டிற்று. அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு, மறுபடியும் அந்த உத்தரீயத்தில் இன்னும் கொஞ்சம் கிழித்து முன்போலவே அந்த வளையையும் அடைத்தார்கள். அப்போது மேற்படி நாகம் அந்த வளையையும் விட்டு வேறொருவளையில் வந்து தலைநீட்டிற்று. அவ்வளையும் முன்போலவே உத்தரீயத்தை கிழித்து சுற்றி அடைத்தார்கள். மூன்று வளைகளை யடைத்தும் அந்த நாகம் இருந்துவிடாமல், அங்குள்ள எல்லா வளைகளிலும் ஒன்றின்பின் ஒன்றன் வழியாய் வந்து தலையை நீட்டிற்று. அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அந்நாகம் தலைநீட்டும் ஒவ்வொருவளையையும் மேற்படி உத்தரீயத்தைக் கிழித்து அடைத்த வண்ணமா யிருந்தார்கள். அந்த நாகமும் சலிக்காமல் வந்து கொண்டேயிருந்தது. பிறகு, எல்லாவளைகளும் அடைக்கப்பட்டன. ஒரு வளைமாத்திரம் மீதியாயிருந்தது. உத்தரீயம் முழுமையும் கிழித்துத் தீர்ந்தது. பிறகு அந்த நாகம் மீதியாயிருக்கும் அந்த ஒருவளையிலும் வந்து தலையை நீட்டிற்று.

எல்லா வளைகளும் அடைப்பட்டு, மீந்துள்ள ஒரு வளையிலும் அந்த நாகம் வந்து தலையை நீட்டிய மாத்திரத்தில், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு, அவ்வளையையும் முன் போல அடைத்து விடுவதற்கு துணி யில்லாமையால் திகில்

கொண்டு, நாம் எல்லாவளைகளையும் அடைத்தோம் மீதியாயிருந்த இவ்வொரு வளையிலும் இந்த நாகம் தலையை நீட்டுகின்றதே. இதையும் அடைத்து விடலாமென்றால் உத்தரீயமும் இல்லை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நித்திரையையும் பழுது படுத்தக் கூடாது. ஆகையால், நாம் இப்போது என்ன செய்யலாம் என உள்ளம் மிகக் கலங்கினார்கள். மேற்படி நாகம் வரும் நோக்கம் இன்னதென்று அறியாத அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு ஆலோசனை பண்ணிக் கொண்டு மனமயங்கி இருக்கும் போது, அந்த நாகம் மேற்படி வளை வழியாய்த் தனது இரட்டை நாவை நீட்டிக் கொண்டு புறப்பட எத்தனித்தது. அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதைக் கண்டு, இனி நாகம் விரைவாய் வெளிவரும்; அப்படி வருமுன் நாம் நமது ஒரு காலைக் கொண்டு அந்த வளையையும் அடைத்துக் கொள்ள வேண்டும் என எண்ணி, தங்களின் மடிமேலிருக்கும் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சிரசு அசைவுறாமல், மெதுவாக வலது காலை நீட்டி, நாகம் வரும் அந்த வளையின் வாசலில் உள்ளங்காலை வைத்து நெருக்கி யடைத்தார்கள். புறப்படவிருந்த நாகம் வெளிவரவிடாமல் அடைத்தது மன்றி, முடிவில் மீந்துள்ள ஒருவளையையும் வெளிப்பட வொட்டாமல் உள்ளங்காலைக் கொண்டு அடைத்துக் கொண்ட படியால், மேற்படி நாகம் சினங் கொண்டு கண்கள் சிவக்கச் சீறி, அவ்வளைக் குள்ளிருக்கும் தன் உடலை நெளித்து நீட்டி தன் இரு கடைவாய்களிலு முள்ள நான்கு நச்சுப் பற்களும் படாமல் நிமிர்த்திக் கொண்டு நேர்ந்த பாடாய் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் உள்ளங்காலில் ஊன்றிக் கடித்தது. கொடிய விஷமுள்ள மேற்படி நாகம் கடித்த போது அக்கடிவாய் வழியாய் உதிரம் பிரவகித்தது. அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்களின் காலைச் சிறிதும் தளரவிடாமலும், அந்த நாகம் வெளிவர இடங் கொடாமலும், நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நித்திரைக்குப் பழுது வருத்தாமலும், தைரியத்துடன் பயங்கரமின்றிப் பாதத்தை யழுத்திக் கொண்டிருந்தார்கள்.

இவர்கள் இவ்வாறு வைத்த பாதத்தைச் சிறிதும் பெயர்க்காமல் கடியைப் பொருத்துக் கொண்டிருப்பதை நாகம் கண்டு, நாம் உக்கிரம் கொண்டு கடித்தும் இவர் காலைப் பெயர்க்க வில்லையே

யென மனங்கொதித்து, மறுபடியும் மேற்படி நச்சப்பற்கள் நான்கும் பதித்து அவற்றின் முனைகள் வழியாய் நஞ்சு பாய்ந்து உடலில் ஏறும் வண்ணம் சாய்த்துக் கொண்டு, சீறிச் சீறிப் பலதரம் அடுத்தடுத்துக் கடித்தது. உக்கிரமான வேகத்துடன் தன்னிலுள்ள நஞ்சடங்கலும் உடலில் ஏறும்படி அந்த நாகம் பல தடவையுஞ் சீறிச்சீறிச் கடித்தவுடனே, பஞ்சிற் பற்றும் தீயைப்போல அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சரீரத்தில் விஷமேறிற்று. தாங்கரிய கொடிய விஷமானது சரீரம் எங்கும் பாய்ந்து தலைக்கேறின படியால் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சற்று மயக்க முண்டாயிற்று. விஷத்தின் கொடுமையால் மயக்குற்றும் அவர்கள் நிலைதளராமல் இருந்தபடியே யிருந்தார்கள். அச்சமயத்தில் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நித்திரை தெளிந்து விழித்தெழுந்து, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மயக்க முற்றிருப்பதைக் கண்டு "அபூபக்கரே இப்பொழுது இங்கே நூதன சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்ததுண்டோ? அப்படி இருந்தால் சொல்லுங்கள்" எனக் கேட்டார்கள். அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தமக்கும் நாகத்திற்கும் நடந்த வரலாறுகள் அனைத்தையும் விவரமாய்ச் சொல்லிக் காட்டி, அதுவரையும் தாங்கள் உள்ளங்காலை வைத்து மேற்படி வளையை அடைத்துக் கொண்டிருப்பதையுங் காட்டி, அந்நாகம் கடித்ததால் விஷம் தலைக்கேறி யிருப்பதையும், அதனால் தாங்கள் மயக்க மடைந்ததையும் சொன்னார்கள். இந்த வரலாறுகளைக் கேட்ட நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி, தாங்கள் வளை வாயை அடைத்துக் கொண்டிருக்கும் வலக்காலைப் பெயர்த்து எடுங்களென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அவர்கள், வளையின் வாயை அடைத்துக் கொண்டிருக்கும் பாதத்தை பெயர்த்து தூக்கினார்கள். பாதத்தைத் தூக்கின மாத்திரத்தில் மன வேகத்துடன், உள்ளிருந்த நாகம் சீறிக் கொண்டு, துருத்திக்குள் அடைப்பட்டிருக்கும் தண்ணீர் துவாரம் வழியாய்ப் பீறிடும்பாவனை போல வெளிப்பட்டது.

வளையிலிருந்து வெளியே புறப்பட்ட அந்தநாகம் தன்வேகத்தை யடக்கிக் கொண்டு, நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சமுகத்தில் நின்றபோது, நபிநாயகமவர்கள் அதை நோக்கி

"மகத்தான அல்லாஹு தஆலாவின் சிருஷ்டி வர்க்கங்களில் ஒன்றாகிய நாகமே! நாங்கள் எங்கள் பகைவரின் வில்லங்கத்திற்கு அஞ்சி மனத்துயரடைந்து, இந்த இருண்ட குகைக்குள் வந்திருக்கின்றோம். இவ்வாறு துன்புற்றிருக்கும் நாங்கள் உனக்கு யாதும் ஒரு தீங்கு செய்ததுண்டா? அல்லது எங்களின் மூதாட்களில் யாராவது ஒரு தீங்கை செய்திருக்கின்றார்களா? அப்படி ஒன்றுமில்லையே. ஆனபடியால் நியாயமற்றவர்களைப்போல நீ வெகுண்டு, கொடிய விஷம் தலைக்கொள்ளத் தக்கதாய்கடித்த முகாந்திரம் என்ன?" என்று கேட்டார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மறையின் வாயுரை கேட்டெழின் முகம்மதை நோக்கி
நிறுவி நின்றிடு நெடுந்தலை நிலத்திடை சேர்த்தி
முறைமை யின்சலா முறைத்துமுள் ளெயிற்று வாய் திறந்து
குறைவி லாதனைத் திருந்தலை யனைத்தையுங் கூறும்.

ஆதி நாயகன் திருநபி யேயிவ ணடியே
னீதி யன்றியே தீண்டின வலனெடுங் காலம்
பூத ரத்தினெம் முன்னவர் சிலமொழி புகன்ற
ரேதெ னச்செவி கொடுத்திட வேண்டுமெய் யெழிலாம்.

வசனம்.

அப்போது அந்தப் பாம்பு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொல்லியது, அஸ்ஸலாமு அலைக்கும் யாறசூலல்லாஹ்! தேவரீர் தங்களின் தொண்டர்களுக்குத் தொண்டனாகிய நான், தகுந்த முகாந்திரமின்றி இவரைத் தீண்டவில்லை. பூர்வகாலந்தொட்டு இங்கே வசிக்கும் எனது கோத்திரப் பிதாக்கள் பரமரகசியமான சிலவசனங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வசனங்கள் பரவணியாக வந்து, என்னுடைய காலத்தில் எனக்கும் அறிவிக்கப்பட்டன. அவை, மகத்தான கடவுளுடைய திருவொளியினால் உருக் கொண்டு, அக்கடவுளின் மெய்த்தூதராய், குர்ஆன் என்னும் சத்திய வேதத்திற்கும், இஸ்லாம் என்னும் முக்திமார்க்கத்திற்கும் எஜமானாய், முகம்மது என்னும் திருநாமத்தையுடைய நபியொருவர், இந்த மக்கமா

நகரத்தில் ஹாஷிம் வமிசத்தில் பிறந்து, பகையென்னும் குபிரிருள் அற, இஸ்லாமென்னும் பிரகாசத்தை விளக்கிக் கொண்டிருந்து, ஒரு காலத்தில் மதீனமா நகரம்போய் அரசராயிருந்து விளங்குவதற்காக, இந்த மலைக்குள் வந்திருப்பார். அவருடைய இலட்சணங்கள் இன்னவை. அந்த முகம்மது நபிக்கு வழிபட்டுக் கலிமா சொன்னவர்கள் மேலான பதவியைப் பெறுவார்கள்; அல்லாதவர்கள் என்றும் அவியாமல் நின்றெரியும் பாதாளமான நரகமென்னும் தீக்கடலில் வீழ்ந்து அமிழ்த்தப் படுவார்கள்— என்பவையே. இவற்றைக் கேள்விப்பட்ட தமியனாகிய நான், அன்று தொட்டு இது பரியந்தம், அந்தமகிமையுள்ள முகம்மது நபியைத் தரிசித்து என்றைக்கு நாம் முக்தியடைவோமோ என அபேட்சைகொண்டு, பிரதி தினமும் இதே சிந்தனையாயிருந்தேன். நான் இவ்வாறிருக்க, இந்த மூன்று நாள் வரையும் அதி நூதனமான ஒப்பற்ற பரிமள மொன்று என் நாசித்துவாரம் அடைபடத்தக்க விதமாய்க் கமழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த புதிய பரிமளம் நம் மூதாட்கள் சொன்ன முகம்மது நபியுடைய இலட்சணங்களில் ஒன்றாகிய கஸ்தூரிப் பரிமளந்தான் என்று நான் உள்ளந்தேறி, இந்த மூன்று நாளாக இம்மலையை சூழ வானவர்களின் சலவாத்து தொனி முழங்குவதையும் காதாரக்கேட்டு, நமது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்போது இங்கே வந்திருக்கிறார்களென்று உறுதியாய் நம்பி, சந்தோஷ முற்று இன்றைத்தினம் தங்களின் பாதாரவிந்தங்களைத் தரிசித்துப் பரிசுத்தமாகி மோட்ச ஆனந்த மடையலாமெனக்கருதி, நகர்ந்து கொண்டு இம்மலை முழுவதும் சுற்றிப்பார்த்தும் காணாமல், கடைசியில் இக்குகைவாசலை வந்து பார்த்தேன். இவ்வாசல் சிலந்தி நூலிழைக்கப்பட்டு புறாக்கள் அடைகிடந்து பிறர் நுழைவதற்கு இடமின்றிக் காக்கப்பட்டிருப்பதைக் கண்டு இச்சிலந்தி நூலும், புறாக்கள் அடைகிடப்பதும் ஒரு முகாந்திரமன்றி யிரா எனச்சிந்தித்து, அவற்றைச் சிதைவுபடுத்தாவண்ணம் விலகிப்போய் அங்குள்ள ஒரு சிறிய வளைக்குள் புகுந்து இங்கு வந்து தலையை நீட்டினேன். அப்போது இவர் என்னைப் புறப்பட வொட்டாமல் அவ்வளையைச் சீலையால் அடைத்தார். உடனே நான் மற்றொரு வளையில் தலைக்காட்டினேன்; அதையும் மேற்சொன்னபடியே யடைத்தார். இப்படி நான் நுழைந்து தலை நீட்டும் ஒவ்வொரு வளையையும் இவர் அடைத்துக்கொண்டிருந்த

பின், மீந்திருந்த இவ்வொரு வளையிலும் வந்து தலையை நீட்டினேன். அதற்கும் இவர் அடைப்பதற்குச் சீலையற்றபடியால், தமது உள்ளங்காலை வைத்து இந்த வளையையும் அடைத்துக் கொண்டார். அகில இரக்ஷகராகிய நாயகமே, நீண்ட காலம் வரையும் தங்களைத் தரிசிப்பதற்கு அபேக்ஷை கொண்டிருந்து, தெய்வ சித்தத்தின்படி காணக்கிடைத்தபோது, கண்டுகளிப்படையாமல் இவர் தடுத்தார். நான் வரும் ஒவ்வொரு வளையையும் அடைத்துக்கொண்டால் என் கதி எப்படியாகும்? நான் மறுபுறம் பெயர்ந்து போகவும் இடமின்றி, தங்களைத்தரிசித்து மூக்திபெறும் வழியுமற்று, உள்ள நான் உள்ள மட்டும் இக்குகைக்குள் கிடந்து வருந்தி இறப்பதேயன்றி, எனக்கு வேறே என்னபேறு கிடைக்கும்; இவைகளைப்பற்றி நான் மிகக் கிலேசமுற்று, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதங்களைத் தரிசித்து ஆத்மரக்ஷை பெறுமல் நம்மைத் தடுப்பது பாதகமல்லவா எனச் சிந்தித்து, இவர் காலை எடுக்கட்டுமென மூந்தியொருதரம் நஞ்சுபாயாமல் பொய்க்கடியாகக் கடித்தேன். இவர் அதற்கு அஞ்சிக்காலைப் பெயர்க்காமையால் வேகங்கொண்டு எனக்கு நேரிட்ட பிரதிபந்தம் நீங்க நினைத்து உக்கிரங்கொண்டு மறுபடியும் கடித்தேன். நபியே, நீண்ட காலம் வரையும் தகுந்த ஒரு பிரயோசனத்தைக் கருதிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு அந்தப் பிரயோசனம் நிறைவேறும் தருணத்தில் குறுக்கிட்டுத் தடுக்கும் எப்படிப்பட்டவர்களையும் கண்டிப்பது நியாயந்தான் என்னும் தகுந்த ஆதாரங்கொண்ட இவரை நான் கடித்தேன். நான் நியாயப் பிரமாணத்தில், சிறிதும் பிசகிப் போகவில்லை'' என்று கூறிற்று.

நாகம் இவ்வாறு தன் வர்த்தமானத்தோரணைகளை முறையிட்டபோது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கேட்டுக் களிப்படைந்து, அந்த நாகத்தைத் தங்களுக்கு அருகிலழைத்து, அமுதவாய் திறந்து 'நாகமே, இப்போது நீ சொன்னவையனைத்தும் வாஸ்தவந்தான். நீ உன் அவாவின்படி என்னைக்கண்டு கொண்டாய். நீண்ட காலமாய் கொண்டிருந்த உன்கோரிக்கை நிறைவேறிற்று. உன் பாவம் அனைத்தும் இன்றோடு முற்ற முடியத் தொலைந்தன. நல்கதியை யடைந்தாய். இனி ஒரு குறையுமின்றி, உன் இனத்துடன் சேர்ந்து வாழ்ந்திரு'' எனக்கூறி ஆசீர்வதித்தார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

வேத நாயக ருரைத்தலும் விடத்தெயிற் றரவம்
பாத மென்மல ரிடத்தினிற் சிரங் கொடு பணிந்து
கோத றக்கலி மாவெடுத் தேர்திமெய் குழைத்துப்
பூத ரத்துறு நெடுவளை யிடைபுகுந் ததுவே.

வசனம்.

உடனே மேற்படி பாம்பு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பாதங்களில் சிரசைவைத்துப் புரட்டிப் பணிந்து எழுந்து நிமிர்ந்து நின்று வாக்கும் மனமும் ஒத்துக் கலிமாசொல்லி விடை பெற்றுக்கொண்டு, வந்த வளையில் புகுந்து போய்விட்டது.

பிறகு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் வலது பாதத்து கடிவாயில், தங்களின் திருவாயிலுள்ள அமிர்தமும் ஒப்பாகாத மகிமை பெற்றிலங்கும் திவ்விய உமிழ்நீரை விரலால் தொட்டுத் தடவினார்கள். சஞ்சீவிக்கு சமானமான உமிழ்நீர் கடிவாயில் பட்டமாத்திரத்தில் உடல் முழுவதும் பரந்து, அவ்விஷத்தின்கொடுமையை யடக்கிற்று. ஆயினும் அவ்விஷம் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் உமிழ்நீர் பட்டமாத்திரத்தில் அறத் தொலையாமல் உடலுக்குள் அடங்கியிருந்து, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வபாத்தாகும் தறுவாயில் வெளிப்பட்டது என்றும், அவ்விஷத்தின் கொடுமையே மூகாந்திரமாக வபாத்தானார்களென்றும், இதைப்பற்றியே மற்ற மூன்று கலீபாக்களைப்போல இவர்களும் ஷகீதெனும் பதவியை அடைந்தார்களென்றும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும் ஒரு விருந்தை புகட்டிய நஞ்சு வுடலிலிருந்து உபாத்தாகும்போது வெளிப்பட்டதென்றும், அதுவும் ஷகீதெனும் மவுத்துத்தான் என்றும், இவர்கள் ஷகீதெனும் மவுத்தை யடையவேண்டுமென்றே மகத்தான அல்லாஹு தஆலா இவ்வாறு விஷங்களை உடலில் எற்றுவித்திருந்தான் என்றும் பலமான ஐதிகம் உண்டு. உடனே அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் விஷத்தின் உக்கிரம் தணியப் பெற்று மயக்கமற்று, உள்ளம் தெளிந்து சந்தோஷமடைந்தார்கள்.

பிறகு இருவரும் அக்குகைக்குள்ளேயே அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்.

54-வது அத்தியாயம்.

சுருக்கத் பின் தொடர்ந்தது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

புறுக்குற் றகல்வான் கடந்தறுஷிற்
போந்தார்க் கிறையோ டுரைத்துவரும்
ஒருக்கற் புயத்தி னிறசூலே
நகர்மக்காவி லிருந் தெழுந்தே
யருக்கப் பிகளாங் குபிரர் பல
ராங்காங் கோடுத் தேடுசிற்
சுருக்கத் தென்போன் றொடர்ந்துவருந்
துணிவை யெடுத்துச் சொல்லிடுவாம்.

இதன் பொருள்.

புறுக்என்னும் பெயர் பொருந்தி மனிதர் முகம்போல் முகமுள்ள குதிரை வாகனத்தி லேறிப்போய், அகன்ற வானங்கள் ஏழையுங் கடந்து, அர்ஷ் என்று பேர் சொல்லப்படும் பரிசுத்த தீர்க்கதரிசனச் சிம்மாசனத்திலேறி, அதில் பொருந்தியிருந்து, அல்லாஹு தஆலா வோடு இரகசியங்கள், பராசியங்களான இருபத்து நான்காயிரம் வசனங்களைப், பேசிவந்த வாசனை பரிமளித் தலோடு, கல்லைப்போல் திண்ணங்கொண்ட தோளையுடைய, றசூல் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் திருமக்கமா நகரத்தி லிருந்தெழுந்து, அறிவென்னுந் தீட்டலுக்கு அருதகுறு நல்களான காபிரீன்கள் ஆங்காங்கு திசைகள் தோறும் போய்க் கொலைசெய்யத் தேடின பேர்களில், சுருக்கத்என்னும் பெயரை யுடையவன், நபி நாயகத்தைத் தொடர்ந்து வந்த துணிகரத்தை யெடுத்துச் சொல்கின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

அடுக்க லின்புற மூன்று நாளிருந்துகா லாதோன்
விடுக்குஞ் செங்கதி ராதவன் மேற்றிசைக் கடலு
ளொடுக்கு மேல்வயி னத்திரி யிரண்டுட னுவனு
மிடுக்க ணின்றி மெய்திடத்தொடு மவ்விடத் தெதிர்ந்தான்,

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், மகிமை பெற்ற உயிர்த் துணைவராகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் தௌர் மலையின் குகைக்குள் இருக்கும்போது, அன்று மூன்றும் நாட்பகல் தீர்ந்து சூரியன் அஸ்தமித்து எங்கும் இருள் பரந்தவுடன், முன் பிரயாணப்படும்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் இரண்டு ஒட்டகங்களையும் ஒப்புவித்து, மூன்று நாட்கள் கழிந்த பின் இவ்வொட்டகங்களைக் கூட்டிக்கொண்டு தௌர் மலைக்கு வாவென்று கட்டளை பண்ணி அமர்த்தின கூலியாள், அவ்வொட்டகங்கள் இரண்டையும் வெருட்டிக்கொண்டு குறித்த வண்ணம் அங்கு வந்தான். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அதைக்கண்டு, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "அபூபக்கரே, சூரியன் அஸ்தமித்து எங்கும் இருளாயிற்று; நாம் அமர்த்தின கூலியாள் ஒட்டகங்களைக் கொண்டு வந்து விட்டான்; இனி நாம் இம்மலையை விட்டெழுந்து, புதுவழி யொன்றைப் பிடித்து நடக்கவேண்டும்; ஆகையால் விரைவில் புறப்படுங்கள்" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சொன்னபோதே, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சம்மதித்தார்கள். பிறகு இருவரும் அக்குகையை விட்டு வெளிப்பட்டார்கள். அப்போது எங்கும் காரிருள்படலம் மூடி, சஞ்சரிக்கும் துஷ்ட வனவிலங்குகள் செவியதிர குமுறி, குளிறி, ஊளையிடும் பயங்கரமான கோஷ்டமாயிருந்தது. எங்கும் வனவிலங்குகளின் குமுறொலியும், கர்ச்சனையும், காரிருளும் படர்ந்த அன்றிரவில், கூலியாள் கொண்டுவந்த ஒட்டகங்களில் ஒன்றின்மேல் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஏறினார்கள். மற்றொரு ஒட்டகத்தில் அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏறினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஒட்டகங்களில் ஏறிப் பிரயாணமானவுடன், ஒட்டகங்கள் கொண்டுவந்த கூலியாளும் ஆமிரும் குறுக்கு மார்க்கமாக மக்கமா நகரத்திற்கு திரும்பிச் சென்றான்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அபூபக்கர் சித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அந்தகாரமான

அவ்விரவில், எவரும் சாதாரணமாய் மக்கா நகரத்திலிருந்து மதீனமாநகரத்திற்கு செல்லும் வழக்கமான பாதையைவிட்டு, கூழாங்கற்களும், கூர்முட்களும் செறிந்த குறுக்கான வேறு பாதையைத் தொடர்ந்து அன்று இராமுழுவதும் நடந்தார்கள். இவ்விருவரையும் சுமந்து செல்லும் அவ்விரண்டு ஒட்டகங்களும், வானவிலங்குகள் கர்ச்சிக்கும் பயங்கரமான கர்ச்சனைக்கும், அடர்ந்து நெருங்கிய காரிருளுக்கும் சிறிதும் அஞ்சாமல், எதிரிருப்பவர்கள் இன்னவாறுசெல்லெனக் கயிற்றை யசைத்துக் குறிப்பிக்காவண்ணம் மிக்க சாதுவாய் நடந்து சென்றன. இருவரும் துஷ்ட விலங்குகள் சஞ்சரிக்கும் வனங்களையும், வனாந்தரங்களையும், குன்றுத் தொடர்களையும் கடந்து நெடுந்தூரம் சென்ற பின் சூரியன் உதயமாயிற்று. சூரியன் உதயமான தோற்றம்; நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் மக்கமாநகரத்தை விட்டு இந்த நிர்மானுஷியமான கொடிய கானகத்தில் வந்திருக்கும் காரணம் என்னவென்று பார்ப்பதற்கு மனங்கலங்கி வந்ததுபோலிருந்தது. இவ்வாறு சூரியன் உதயமாய் நடுப்பகல் ஆகும் வரையும் நடந்தார்கள். மத்தியானமானபோது, சூரிய வெப்பம் அதிகமானபடியால், இருகுன்றுகளுக்கு மிடையிலுள்ள ஒருபள்ளத்தாக்கான, இடத்தில் இருவரும் ஒட்டகம் விட்டு இறங்கினார்கள். அபூபக்கர்றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இருக்கும் வண்ணம் சிறுகூடாரமொன்று போட்டார்கள். நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அந்த சிறுகூடாரத்தில் படுத்து இளைப்பாற நித்திரை செய்தார்கள். அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாலு புறத்திலும் கண்பரப்பி, பகைவர் யாரும் வருகிறார்களோவென்று அஞ்சிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படி அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், இடையன் ஒருவன் தனது ஆட்டு மந்தைகளை வெருட்டிக் கொண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் நித்திரை புரியும் தானத்தில் வந்துநின்று, ஒப்பற்ற சூரியனைப் போலப் பிரகாசிக்கும் தேககாந்தியுள்ள இவர் யாரோவெனப் பிரமையுற்றுப்பார்த்தான். அதிசயித்துப் பார்த்து நிற்கும் அவ்விடையனை அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நோக்கி "இவ்வாடுகள் எல்லாம் உனக்குச் சொந்தமா? பிறருக்கு உரியவையா?" எனக்கேட்

டார்கள். அதற்கு அவ்விடையன் "இம்மந்தையில் எனக்குரிய ஆடுகளும், கூலிக்கு மேய்க்கும் பிறருடைய ஆடுகளும் கலந்து நிற்கின்றன" என விடைகொடுத்தான். அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவனைநோக்கி "நீ கூலிக்கு மேய்க்கும் ஆடுகள் அல்லாத உனது ஆடுகளைமத்திரம் பிடித்து, அவற்றின் பாலைக் கறந்து எனக்குக்கொடு" எனக் கேட்டார்கள். உடனே அவன் தனக்குச் சொந்தமான ஆடுகளை ஒருபுறம் ஒதுக்கி, அவற்றின் பாலைக்கறந்து, பாத்திரத்தோடு அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமூகத்தில் கொண்டு வந்து வைத்தான். அச்சமயத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் நித்திரை தெளிந்து எழுந்தார்கள்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் எழுந்திருந்த பின், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மேற்படி பாலைக் கொடுத்துப் பருகும்படி வேண்டிக் கொண்டார்கள். உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பாலைவாங்கிப் பருகினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பாலைப் பருகின பின், அவ்விடையன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாதார விந்தங்களைத் தொட்டு முத்தமிட்டுப் பலவாறு துதித்து விடைபெற்றுக் கொண்டு மீண்டு போனான். பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், இனி இங்கே தங்கியிருந்து காலகரணம் செய்ய வொண்ணாது விரைந்து போக வேண்டுமென்று கருதி, ஒட்டகங்களிலேறி கஷ்டமான குறுக்குப் பாதையை விட்டு மதீனமா நகரத்திற்குச் செல்லும் பகிரங்கமான பாதையைப் பிடித்து நடந்தார்கள்.

நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், சித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் இவ்வாறு செல்லும்போது, முன் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மக்கமா நகரத்தில் தங்கள் மாளிகையி லிருந்து பிரயாணப்பட்ட அன்று காலையில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தேடிப் பிடிக்கும் வண்ணம் அபூஜஹல் அனுப்பிய ஆட்கள், நாலுதிசை களிலும் தேடிக் கொண்டுதான் இது வரையும் திரிந்தார்கள். அந்த ஆட்களில் சுறுக்கத் என்னும் பெயரினையுடைய ஒருமகன், தன்வலது கையில்நீண்ட வேலைப் பிடித்துக்

கொண்டு, உடல் வியர்வை பொங்கிவழிய கண்களைப் பரப்பி நான்கு திசைகளையும் பார்த்துக் கொண்டு தான் ஏறியிருக்கும் குதிரையை மிக விசையாக நடத்தி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்கள் செல்லும் மார்க்கத்தில் நெருங்கினான். மேற்படி சுறுக்கத் உக்கிரத்துடன் நெருங்கி வருவதை அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்களை நோக்கி "யாறசூலல்லாஹ்! நமது பகைவனாகிய அபூஜஹல் நம்மைப் பிடிக்கும்படி திசைதோறும் அனுப்பியிருக்கும் ஆட்களில், இதோ நம்மைத் தொடர்ந்து வேகமாய் வரும் இவனும் ஒருவனல்லாமல் வேறல்ல. அவன் வரும் வேகத்தைக் கவனிக்குமிடத்தில், நம்மையடைந்து தாக்கக் கருதியே வருகிறான் போலத் தோற்றுகின்றது. கட்டாயம் அவன் நம்முடன் எதிர்த்துப் போராட வருகிறான்" என்றார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்கள் சித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி "அபூபக்கரே! ஒருவன் வலிய வந்து தாக்க எத்தனித்தால் அவனுடன் எதிர்த்து நின்று பகைசாதிப்பதுதான் முறைமை. அவ்வாறு அவன் நம்மை வலிய நெருங்கி ஏதும் தீங்கு செய்யக் கருதுவானானால் நாம் கட்டாயம் அவனை யெதிர்த்து நின்று சாதிக்க வேண்டும். அதற்காகத் தாங்கள் அஞ்சாதீர்கள். இப்போது இங்கே நாம் இரண்டு பேர் இருக்கின்றோம். அன்றியும், மகத்தான அல்லாஹு தஆலா ஒருவன் நமக்குத் துணையாய் நம்மை விட்டு நீங்காமலிருக்கிறான். நம்மை அடர்ந்து தாக்க வருபவன் ஒருவன் தானே. அப்படியிருக்க, இவ்வொருவனால் நமக்கு என்ன வில்லங்கம் உண்டாகக்கூடும்? இதைப்பற்றி தாங்கள் கவலைப் பட வேண்டாம். இதற்குக் கவலைப் படுதல், ஈமானும் வீரதீரமும் அற்றவர்களின் குணம். ஆனதால், தாங்கள் தைரியசித்தத்துடன் இருங்கள்" என்றார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்கள் இப்படிச் சொன்ன போது, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மன உற்சாகங் கொண்டார்கள். இதற்குள் அந்த சுறுக்கத் முஹம்மதை வசப்படுத்திக் கொண்டேனென்று களிப்புற்று, இவ்விருவருக்கும் மிகச் சமீபத்தில் நெருங்கினான். கொடியவனாகிய சுறுக்கத் மிக நெருங்கித் தொடர்வதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்கள் கண்டு ஆச்சரியமுற்று, பூமியை விளித்து "நீ அந்தக் கொடியோன் ஏறியிருக்

கும் குதிரையின் நான்கு கால் குளம்புகளையும் பெயர்த்தடி வைக்க விடாமல் இறுகப் பிடித்துக்கொள்" என்று ஆக்ஞை செய்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்கள் இப்படி ஆக்ஞை செய்த அக்ஷணமே பூமியானது, சுறுக்கத் ஏறிவந்த குதிரையின் நான்கு குளம்புகளையும் கவ்விக் கொண்டது. நான்கு குளம்புகளையும் பூமி கவ்விப்பிடித்து கொண்டதால், அந்தக் குதிரை குலாலன் செய்து வைத்த பொய்க் குதிரை போல அசைவற்று நின்றது. தான் ஏறியிருக்கும் புரவி அடிபெயர்த்து வைக்காமல் பதுமைக்குச் சாமனமாய் நிற்பதை சுறுக்கத் என்பவன் கண்டு சினங்கொண்டு, மத்திகையையோங்கி உக்கிரத்துடன் குதிரையின் உடலிலும் கால்களிலும் உரத்து அடித்தான். அவன் அடிக்குந் தோறும் அது தலையை மாத்திரம் அசைத்து நிமிர்த்திக் கொண்டிருந்த தல்லாமல், ஓரடியும் எடுத்து வைக்கவில்லை. எவ்வளவு உரத்து அடித்தும் தன் புரவி சிறிதும் நகராமல் ஒரே நிலையாய் நிற்பதை சுறுக்கத் அறிந்து,

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தொலை தொடர்ந்தெய்த் திடுங்குணமோ கடி விசையாற்
        குளம்பு துண்டப்பட்ட தோமெய்
மலைதரவஞ் சனைவிளைக்கு முஹம்மது செய்
        வினைத்திறனோ மாய மியாதென்
றலைவுறுநெஞ் சினனாகிக் கவிழ்ந்து நோக்
        கனுபவேக மொடுங்க வாசி
நிலைபடநாற் குளம்பையும் பூதலம்புதையப்
        பிடித்திறுக்கி நெறுக்கக் கண்டேன்.

வசனம்.

இதென்ன வியப்பு? நம்மைச் சுமந்து கொண்டு அதிதூரம் ஓடி வந்ததால் இளைப்புற்று இப்படி நிற்கின்றதோ! அல்லது, விசையாய் வருகையில் தரையிற் கிடக்கும் கற்களில் இடறுண்டு, குளம்புகளில் ஒன்றிரண்டு பழுதுற்றவோ! ஒரு கால் மாயக்காரனாகிய இந்த முஹம்மது செய்த மாந்திரீக பலத்தாலுண்டான மாயமோ எனப் பலவாறு சிந்தித்து, மனமுயன்று, குதிரையிலிருந்தபடியே கீழ்புறம் குனிந்து அதன் நான்கு கால்களையும் உற்றுப்பார்த்தான். பார்த்த

மாத்திரத்தில் தன் புரவிதன் நான்கு கால்களையும் பூமி கவ்விப் பிடித்து நெருக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு இது முஹம்மது செய்த மாயந்தானென எண்ணி, அதற்காகச் சினங் கொள்ளாமல், முகமலர்ந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை விளித்து, "தயாளசித்தமுள்ள முஹம்மதே! நான் இனி தங்களைத் தொடர்ந்து வரமாட்டேன். என் மனதிலுள்ள பகையை ஒழித்து விட்டு, மக்கமா நகரத்திற்கு மீண்டு போய் விடுகிறேன். என் குதிரையின் குளம்புகளை விடும்படி பூமிக்குத் தாங்கள் கட்டளை பண்ணுங்கள்" எனத் தந்திரத்துடன் பரிந்து சொன்னான். இவன் இப்படிப் பரிந்து சொன்ன போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனமிரங்கி, பூமியை விளித்து "நீ பிடித்த பிரதி பந்தமான பிடியை விட்டுவிடு" எனக் கட்டளை பண்ணினார்கள். உடனே பூமி நான்கு குளம்புகளையும் விட்டது. அப்போது சுறாக்கத்தின் குதிரை கால்களைப் பெயர்த்து நடக்க ஆரம்பித்தது.

குதிரை முன்போல் நடக்கத் தலைப்பட்டதும் சுறாக்கத் என்னும் பாதகன், புன்மை மலிந்த இருதயத்தையுடைய கயவர்களுக்கு எவ்வளவு தூரம் சன்மார்க்கமான விஷயங்களைப் போதித்தாலும் சிறிதுந் திருந்த மாட்டார்களென்பதைத் திருஷ்டாந்தப் படுத்தும் பாவனையாய், இந்த வேலை தெரிந்த முஹம்மதைக் கொல்லுகிறேன் எனத் தன் இதயத்துடன் சொல்லிக் கொண்டு, குதிரையைச் செலுத்திக் கொண்டு மறுபடியும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பின் தொடர்ந்தான். சிந்தனையற்ற அவிவேகியாகிய சுறாக்கத், தன் சொல்லுக்குமாறாய் மறுபடியும் தொடர்ந்து வருவதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்டு, சினங் கொள்ளாமல் குறுநகை செய்துகொண்டு, பூமியை விளித்து "முன் போல இவன் குதிரையின் கால்களைப் பிடித்துக் கொள்" என்று கட்டளையிட்டார்கள். உடனே பூமி சுறாக்கத் ஏறியிருக்கும் குதிரையின் நான்கு கால்களையும் முழந் தாள் வரையும் உள்இழுத்துக் கவ்விக்கொண்டது. அதனால் குதிரை அசைவற்று நிற்பதை சுறாக்கத் கண்டு, முன்போலவே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை விளித்து, "கருணை நிறைந்த இருதயத்தையுடைய முஹம்மதே, நான் மதி கெட்டு இப்போது செய்தது குற்றந்தான். பிறர் செய்யும் எவ்விதக்

குற்றங் குறைகளையும் பொறுத்துக் கொள்ளுதல் தங்களுக்குரிய வேதத்தின் மேன்மையான நிபந்தனைகளில் ஒன்றல்லவா? ஆனதால் நான் செய்த குற்றத்தை மன்னித்து, என் குதிரையின் கால்களைவிடும்படி பூமிக்குக் கட்டளை யிடுங்கள்" என மிக மன்றாடிக் கேட்டான். சுறாக்கத் இரண்டாந்தரம் இப்படி மன்றாடிச்சொன்ன சொல்லும் இரண்டகமான சொல்லேயன்றி உறுதியல்ல. இவன் மறுத்தும் வாக்கொன்று மனமொன்றாய்ச் சொன்னதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கேட்டு, நிஷ்டூரமாய்ப் பகைசாதித்த ஒருவன், மனந்திரும்பித் தான் செய்த குற்றத்திற்காக மனக்கஷ்டம் படுவானானால், அதைப்பொறுத்து நன்மை செய்தல் தருமந்தான் என எண்ணி, பூமியை நோக்கி "குதிரையின் கால்களை விட்டுவிடு" என்றார்கள். உடனே பூமி அக்குதிரையின் கால்கள் நான்கையும் விட்டுவிட்டது.

நீங்கற்கரிய ஆபத்து இரண்டுதரம் வந்தும் சுறாக்கத்துக்கு நல்லறிவு வரவில்லை. மூடனை நூறு அடியடித்தாலும் திருந்தமாட்டானென்பது அவனால் திருஷ்டாந்தப்பட்டது. தன் குதிரைகால்களைப் பெயர்த்து நடக்க எத்தனித்தவுடன், தனக்கு வரும் மரணத்தை சிந்தித்தறியாத விட்டில் பூச்சி விளக்கில் விழுந்து மாண்டு போக வருவதுபோல, இனி நாம் முஹம்மதைத் தொடர்ந்து நெருங்கினால் நம் குதிரையின கால்களை முன்போலக் கட்டாயம் பூமி இறுகப் பிடிக்கும். அப்படிப் பிடிப்பதற்கு முன்விரைந்து போய்க் கொன்றுபோடவேண்டுமென்று எண்ணிக்கொண்டு, குதிரையை விசையாய்ச் செலுத்தி நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தொடர்ந்தான். தான் கருதிய கருமத்திற்கு இருதடவை ஆபத்தான பிரதிபந்தம் நேரிட்டும், சிந்தனையற்று மறுபடியும் பின் தொடர்ந்து வரும் சுறாக்கத்துடைய மனத்துணிவையும் வீரத்தையும் பார்த்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வியப்புற்று, நாம் நமது பகையை மதீனமா நகரம் போய்ச் சேர்ந்த பிற்பாடு தான் எதிர்த்து நின்று சாதித்து நாசம் செய்ய வேண்டுமென்றால், இப்போது நம்மைப் பாதையில் மறித்துக்கொண்டு சாதிக்கும் இவன் பகையை விட்டு எப்படி நாம் விலக்கிக்கொள்ளலாம் எனப்பரியாலோசித்து, பூமியை விளித்து "ஓ! பூமியே இந்தச்சண்டாளன் அச்சம் சிறிதுமின்றி முரண்கொண்டு ஒரே சாதனையாய், என்னைக் கொல்ல விரும்பி மறுபடியும் தொ

டர்ந்து வருகின்றான். இவனுடைய வீரதீர மனைத்தும் சிதறுண்டு போகும்படி கவ்விப் பிடித்துக்கொள்” என்று சொன்னார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் இப்படிச் சொன்ன மாத்திரத்தில், சுறாக்கத் ஏறியிருக்கும் குதிரையின் நான்கு கால்களையும், அதன் அடிவயிற்றையும், அங்கபடியில் வைத்திருக்கும் அவன் கால்களையும் சேர்த்து இழுத்து அமிழ்த்தி, கவ்விக்கொண்டது. நபிநாயகத்தின் திருவாக்கை மறுதலித்த பகைவரை, நரகத்தில் கிடக்கும் கொடிய சர்ப்பங்கள் இவ்வண்ணம் தான் விழுங்கும் எனக்குறித்துக் காட்டும் பாவனையாய், கீழ்புறம் அரைப்பாகம் வரையும் விழுங்கிப் பிடித்துக் கொண்டபோது, சுறாக்கத்துடைய துணிவு, மறம், உற்சாகம், சினம், வேல்வலம் அனைத்தும் முற்றமுடியத் தொலைந்தன. தாங்கரிய சங்கடமும், வருத்தமும், பயங்கரமும், துன்பமும் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டன. அவ்வேளையில், சுறாக்கத்து ஏறியிருக்கும் குதிரை தலையை நிமிர்த்தி நிமிர்த்தி அசைத்து, வாலைவீசி வீசி அடித்துக் கொண்டு நின்று படும்பாடு மிகப்பரிதாபமாயிருந்தது. சுறாக்கத் என்னும் பரமசண்டாளன் ஊக்கம் குன்றி திகில்பிடித்து மனம் கலங்கி “பட்டால் அறிவான் சண்டாளன்” என்பதை அடிக்கடி நினைத்து, கையில் பிடித்திருந்த வேலை நிலத்தில் வீசிஎறிந்து விட்டு, வாயைப் பிளந்து கொண்டு, இன்னதுதான் பேசக்கூடியது என அறியாமல் நாக்குளறி, விழி சுழல நின்று, இருதலைக் கொள்ளியில் பட்ட எறும்புபோல நின்று மயங்கினன்.

சுறாக்கத்து மேற் குறித்தபடி நின்று மயங்கினது மன்றி, பின்னும் உள்ளம் தடுமாறி, அபூஜஹ்லுடைய சொல்லுக்குக் கீழ் படிந்து இந்த முஹம்மதைத் தேடிக்கொண்டு பலதிசையும் சென்றவர்களைப்போல் நாமும் ஒருதிசை செல்லாமல் நம்மைத் தடுத்து, இந்தத் திசையில் கொண்டுவந்து இவ்வித ஆபத்துக்கு ஆளாக்கினது நமது ஊழ்வினையேயன்றி வேறல்ல. இதைப்பற்றி நாம் இனி துக்கப்படுவதால் ஆவது ஒன்றுமில்லை. இனி இந்த முஹம்மது நம்பேரில் இரங்கி, விட்டு விடும்படி ஒருக்கால் சொன்னாலும் இந்தப்பூமி விடமாட்டாது. நமது மரண தசை அடுத்து விட்டது என எண்ணி யெண்ணிப் புலம்பினன். அன்றியும் தன் மனைவி, மக்கள், மாளிகை, ஆடுமாடு, திரவியம் முதலிய பலவகையான சம்பத்துக்களையும் நினைத்துப் பரிதபித்து, கண்ணீர் பெருகஅழுது,

இன்னும் ஒருதரம் நாம் இந்த முஹம்மதைப் பிழை பொறுக்கும்படி மன்றாடுவோம். ஒருக்கால் இரங்கினும் இரங்குவார் என மனம் தெளிந்து, அழுது கொண்டு, “மகத்தான கடவுளுடைய உண்மைத் தூதராய், பொறுமையில் ஒப்பற்றவராய், கீர்த்திப் பிரதாப முடையவராய் அவதரித்த முஹம்மதே, தங்கள் தொண்டன் சொல்லும் இச்சொல்லை மாத்திரம் கிருபைசெய்து கேட்டருள வேண்டும். என்னைபோத்த கீழ்மக்கள் மதிகெட்டு ஆயிரம் குற்றங் குறைகளைச் செய்த போதிலும் ஒப்பற்ற ஞானசிகாமணிகள் பொறுத்து ஆதரிப்பார்க ளென்னும் மேலோர் வசனத்தை இப்போது நான் தங்களிடத்தில் கையும்மெய்யுமாய்க் கண்டறிந்தேன். ஏறியேறுகிய நான் இந்த மரணத் தறுவாயில் நின்று விலகி உயிர் பெறும் பொருட்டுத் தாங்கள் தயவுசெய்யவேண்டும். அப்படித் தாங்கள் தயவுசெய்வது தங்களின் இயற்கையான தன்மையும், வேதவிதியுமாகு மென்று நம்பியிருக்கிறேன். இப்போது நான் வேண்டிக் கொள்வதைத் தாங்கள் உறுதிகொண்டு யதார்த்தமாக நம்பி, என்னை விடுதலை செய்யும்படி பூமிக்கு கட்டளை பண்ணுவீர்களானால், இனி எதிர் நின்று ஒன்றும் பேசாமல், வந்த வழியே மீண்டுபோவது மன்றி, தங்களைத்தேடி வருபவர்களுக்கும் தக்கபடிச் சொல்லி, தடுத்து அழைத்துக்கொண்டு போய்விடுவேன். இது சத்தியம். நான் இச்சொல்லை எனது தந்தை தாயார்பேரிலும், எங்கள் குல தெய்வமாகிய ஹுபல் என்னும் சுவாமி பேரிலும் பிரமாணிக்கமாகச் சொல்லுகிறேன். முன் இரண்டு தரம் இவ்வாறு பிரார்த்தித்தும் தாங்கள் செய்த கிருபைக்கு அபாத்திரனாய், சொல் தவறிப்போனேன். ஆனதால், இச்சொல்லும் அப்படித்தானென்று எண்ணாதீர்கள். பழுதுபட்ட சொல்லை திடனாகச்சொல்ல என் நா எழவில்லை. இன்னும் க்ஷணப்பொழுதில் என் இரண்டு கால்களும் அறுப்புண்டுபோவது மாத்திரமல்ல; என்குதிரையின் பிராணனும், என் பிராணனும் போய்விடுவது நிச்சயம். இப்போது நான் குறைப் பிராணியாயிருக்கிறேன். இத்துடன் என்னைக்கொன்று விடுதலும், இரக்ஷித்து விடுதலும் தங்கள் சித்தம்” என இவ்வாறு மனங்கலங்கி மன்றாடினன்.

சுறாக்கத் இவ்விதம் மன்றாடின மன்றாட்டத்தினால் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் சித்தமிரங்கி, இனித் தொடர்ந்துவர அவன் மனம் துணியான் என அறிந்து, அழுத

வாய் திறந்து பூமியை விளித்து, பிடித்த பிடியை விட்டு விடும்படி உத்திரவு செய்தார்கள்; உடனே பூமிவிட்டது. மகாபெரிய வில்லங்கத் திலிருந்து தப்பின சுறுக்கத் மனத்திகில் ஒழிந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைப் பணிந்து, அங்கே அற்ப நேரமாயினும் நில்லாமல் போய், வழியில் தேடி வருபவர்களுக்கும் தக்க முகாந்திரம் சொல்லி அழைத்துக்கொண்டு, உயிரோடு மீண்டதே பிரதானமான காரியம் என மக்கமாநகரம் போய்ச் சேர்ந்தான்.

55-வது அத்தியாயம்.

உம்மி மருபதுவைக் கண்டது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கம்மினிடத் துடுமொன்று திகழலல
 காரணத்தின் கடலாய்த் தோன்று
நம்பிறசூல் முஹம்மதனுர் செலும்வழியி
 லாய குல நாரியாகி

யிம்மியெனுங் கருமையின்றி நரையிறங்க
 வுற்றிருக்குமூப் பியான
உம்மிமரு பதுசரித வியப்பதனை
 நயப்போடு முரைசெய் வாமே.

இதன் பொருள்.

தலையினிடத்தில் நட்சத்திர மொன்றிருந்து பிரகாசிக்கும், நல்ல அற்புதத்தையுடைய கடலாகத் தோற்றும், நமது நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் போகின்ற வழியிலிருக்கும் இடையர் குலப் பெண்ணாகி, ஓர் இம்மிபோலவாவது ரோமங்கள் கருமையின்றி வெண்மையான நூலைப்போல் நரை பிரகாசித்திருக்கப் பொருந்தி, வயதாலும் முதிர்ந்தவளான உம்மி மருபது என்பவளுடைய ஆச்சரியமான சரித்திரத்தை நயப்பாகச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

காயும் வெஞ்சுரத்திடை தொடர்ந்தனன் மனங் கலங்கிப்
பாயும் வீரவெம் பரியுடன் வரும்வழி பார்த்துப்
போய பின்னபூ பக்கரு முஹம்மதும் புளகித்
தேயி மிந்தறி வுடன் றெழு தவிடம் விட்டெழுந்தார்.

வசனம்.

நபிகட்திலகம், தாஜுல் அன்பியா, முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், சித்தீக் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், தங்களைத் தொடர்ந்து வந்த சுறுக்கத் என்பவன் இரட்சிப்பு பெற்று போனபிறகு, அகங்களித்து, ஒட்டகங்களை விட்டு இறங்கி அல்லாஹு தஆலாவை தொழுது கொண்டு, மறுபடியும் ஒட்டகங்களில் ஏறி மதீனமா நகரத்தை நோக்கி நடந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் செல்லும் மார்க்கத்தில் இருமருங்கிலுமுள்ள பட்டவிருக்ஷங்களனைத்தும் தளிர்த்துத் தேன்மாரிபொழிந்தன. பலவித அழகிய பக்ஷிசாலங்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மெய்க்கீர்த்தியைப் பாடிக் களிகூர்ந்தன. இன்னும் பல அலங்காரங்களும் எங்கும் மிகுந்துவிளங்கின. பாதையில் விளங்கும் பலபல விநோதக்காட்சிகள் எல்லாவற்றையும் கண்குளிர நோக்கினர். குன்றுகள், அருவிகள், வனங்கள், வனாந்தரங்கள் அடங்கலையும் கடந்து கடந்து போகும்போது, ஆற்றுநீர் பாயும் வளமமைந்த ஆய்ப்பாடியொன்று எதிர்ப்பட்டது. கிளைகளடர்ந்த விருக்ஷங்களின் பரந்த குளிர்நிழலாலும், சுழன்று ஓடும் ஆற்றுத் தண்ணீராலும் எங்கும் தண்ணென்று விளங்கும் இடைச்சேரியொன்று எதிரிட்டதை நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருகராகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு, ஆநந்தமுற்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை நோக்கி யாறசூலல்லாஹ்! நாம் இப்பொழுது சற்று நேரம் இந்தப்பாடியில் இறங்கியிருந்து இளைப்பாறிவிட்டுப் போகலாம்" என்றார்கள். இச்சொல்லுக்கு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இசைந்ததால் இருவரும் ஒட்டகம் விட்டிறங்கி, அப்பாடியிலுள்ள [illegible]

பட்ட தருமனையை நோக்கி, இந்த ஏழை மனைக்கே போகவேண்டுமென்று விரும்பி அங்குவந்தார்கள். இருவரும் அங்குவந்தபோது அந்த மனைக்குள்ளிருக்கும் அறமுதிர்ந்த விருத்தையாகிய ஆய்ச்சியொருத்தி, இவர்களை நோக்கி, பற்களற்று வெறிதாயிருக்கும் தன் வாயைத்திறந்து "கனவான்களே! நீங்கள் யாவர்? வாருங்கள்" என்று உபசாரணையுடன் வினவி அழைத்தாள்.

உம்மிமதுபது என்னும் பெயரையுடையவிருத்தையாகிய அந்த ஆய்ச்சி உபசரித்து அழைத்தபோது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவளை நோக்கி "அம்மையே, எங்கள் பசிதீரும்படி உன்மனையில் பதார்த்தங்கள் ஏதுமிருந்தால் கொண்டுவா" என்றார்கள். அப்போது அவள் இவர்களை நோக்கி "மேன்மக்களே! இந்த எளியாளுடைய பாழ்மனை பஞ்சத்திற்கு உறைவிடமும், தரித்திரியத்திற்கு விளைநிலமும், கலிக்கு வளர்தலமுமானது. இவ்வித நிர்வாகமற்ற மனையில் உங்கள் பசிதீர புசிக்கும் உணவு சிறிதுமில்லையே" என்றாள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவ்விருத்தையின் வீட்டுப்புறத்தில் இரையின்றிப் பசியால் களைத்து முடங்கிக்கொண்டிருக்கும் ஆடொன்றைப் பார்த்து, அவளை நோக்கி மேற்படி ஆட்டைச் சுட்டிக்காட்டி "அம்மையே! அதோ இருக்கும் ஆட்டுக்குப் பால் சுரப்பு இல்லையா?" எனக்கேட்டார்கள். அதற்கு அக்கிழவி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி "நீர் குறித்துக் காட்டிய அவ்வாடு, வயதில் எனக்கும் மிகமுத்தது. அது என்றும் தீராதநோய் வாய்ப்பட்டு மெலிந்து, ஊர்ந்து திரிவதற்கும் ஜீவனின்றி வருந்தும் மலட்டாடு. அவ்விதக் கிழட்டுத் தன்மையும், மலடும் வறட்டுமானது எப்படிபால் கறக்கும்? நீங்கள் இருவரும் பசித்துவந்து இந்த நிர்ப்பாக்யயான என்னிடம், சொன்ன சொல்லிலும் எனது தரித்திரம் பெரிதாய்க் காணப்படுகின்றதே" என மிகப் பரிதாபமுற்றுச் சொன்னாள். உம்மி மதுபது என்னும் அக்கிழவி, மனோதுக்கத்துடன் பரிதபித்துச் சொன்ன போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனமிரங்கி, அவளை நோக்கி "நோயால் வருந்தி இரையின்றி மெலிந்திருக்கும் அந்தக் கிழடுபற்றிய மலட்டு ஆட்டை என்னிடம் கொண்டு வாராயே!" என்றார்கள். உடனே அவள் அக்கிழட்டாட்டை

மெல்ல மெல்ல நகர்த்திக்கொண்டு வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமுகத்தில் விடுத்தாள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை

நிகரி லானருட் டூதுவர் நெடுங்கர நீட்டித்
தகையு மைமுது கிடத்தினிற் பயப்பயத் தடவப்
பகரு தற்கரி தாமிடக் தழைத்துடல் பருத்துப்
புகர றக்கொழுத் திளமையிற் செழுமையும் பொதிந்த.

நிரைத்த செம்மயிர்க் குறங்குக ளகறா நிமிர்ந்து
விரித்த திற்றிரண் டடிவயி றுறமடி வீங்கிச்
சுரித்த சின் முலை நீண்டுவிம் மிதத்தொடுஞ் சுரந்து
புரைத்த லந்திறக் தமுதெழுந் தோடின புவியில்.

வசனம்.

அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தங்கள் வலது கையை அந்த ஆட்டின் முதுகில் வைத்து மெள்ள மெள்ளத் தடவினார்கள். மகத்தான அல்லாஹு தஆலாவின் தோழரும் தூதரும் உலகரட்சகருமாகிய நபிகட்திலகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தங்களின் ஒப்பற்ற திருக்கரங்கொண்டு தடவின மாத்திரத்தில், அறமுதிர்ந்திருந்த அவ்வாடு பருவமடைந்து, மலடுநீங்கி, நோயற்று சுகம்பெற்று, மிகக் கொழுத்துப் பருத்து, மடிசுரந்து வீங்கி, முலைக்காம்புகள் நீண்டு விளங்கா நின்றது. உடனே மடிக்கண் திறந்துசுரந்து விம்மியிருக்கும் பால் பீரிட்டு ஓடிற்று. அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கிழவியை நோக்கி, பாலைக்கறந்து கொள்ளும்படி கட்டளை பண்ணினார்கள்.

தீராப்பிணியும் பெருங்கிழடும் வன்மலடும் கொண்டு ஒரு அடி நகரவும் சக்தியற்றிருந்த அந்த ஆடு, இளம்பருவமடைந்து பருத்துக் கொழுத்து பால்சுரந்து தானாக வழிந்தோட நிற்பதை உம்மி மருபது என்னும் விருத்தை கண்ணாரக் கண்டு களித்து, கடைகால் கொண்டு வந்து பாலைக்கறந்து பாத்திரங்களில் நிறைத்தாள். பாத்திரங்கள் நிறையுந்தோறும் பால் ஓரே தன்மையாய் வழிந்து கொண்டிருந்ததால், தன் மனையிலுள்ள எல்லாப் பாத்திரங்களிலும் கறந்து நிரப்பியும் பால் குறையாமையால் வைசவித்து

"இனி என்னால் கறக்க இயலாது; பாத்திரங்களு மில்லை" யென்று கடைகாலை நிலத்தில் வைத்து விட்டு. தன் அயன்மனையார்களாகிய இனத்தார்களை விளித்து, மேற்படி ஆட்டின் பாலைக் கறந்து கொள்ளும்படி ஏவினாள். அவர்களில் அநேகர் வந்து கணக்கற்ற பாத்திரங்களில் கறந்து நிரப்பிக் கொண்டு போனார்கள். அநேகர் வந்து கறந்துகொண்டு போயும் அதன் பால் பழைய விதானத்தில் கொஞ்சமும் குறையாமல், தானாகவழிந்தோடிக் கொண்டேயிருந்தது அது அப்படியிருக்கையில் உம்மி மகுபது தான் முன் கறந்த பாலில் கொஞ்சம் ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து வற்றக் காய்ச்சி, மிகு விரைவாய் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சமுகத்தில் கொண்டு வந்து வைத்தாள். உடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அப்பாலைக் குடித்துப பசி தீர்த்தார்கள். பிறகு, உம்மி மகுபது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை யணுகி வழிப்பட்டு, ஈமான்கொண்டு முஸ்லிமானாள்.

இச்சமாசாரம் அவ்விடைச்சேரி முழுதும பிரஸ்தாபமாயிற்று. இப்புதுமையை கேள்விப்பட்ட அப்பாடியிலுள்ள ஆயர் ஆய்ச்சியர் எல்லாரும் வந்து கூடி, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி, மரியாதையாய் நின்று, அந்த அற்புதமான ஆட்டைப் பார்த்து "இதுமகா ஆச்சரியம்!" என வியப்புற்று, ஆண் பெண் அனைவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வழிப்பட்டு இஸ்லாத்திலானார்கள். உம்மி மகுபது உடைய பொருட்டால் அந்தப்பாடி முழுதும் முஸ்லிமாயிற்று.

அன்று பகல் மக்கமா நகரத்தில், நான்கு புறமும் காதாரச் செவியதிரக் கேட்கும் வண்ணம் ஆகாயத்தில் அசரீரியாய் ஒரு கவிதையின் தொனி சப்தித்தது. அக்கவிதையின் அர்த்தம் இது:— "மதீனமா நகரத்திற்குப் போகும் பாதையிலுள்ள ஒரு இடைச்சேரியில் இரண்டுபேர் வந்து தங்கி, ஒருகிழவி வீட்டிலுள்ள கிழட்டாட்டைப் பருவமாக்கி, அற்புதம் விளைத்தார்கள். அவ்வற்புதத்தைக் கண்ட மாத்திரத்தில் அப்பாடியிலுள்ள அனைவரும் அவர்களுக்கு வழிப்பட்டு, இஸ்லாம் என்னும் மார்க்கத்தில் சேர்ந்தார்கள். அதனால், அவ்விடையார்கள் அளவற்ற பாக்கியமும் சற்கிருபையுமடைந்

தார்கள். ஆனதால், தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை நிராகரிப்போர் கொடுமையான வேதனையால் பீடிக்கப் படுவார்கள்."

இவ்வர்த்தம் அமைந்த கவிதையான்து ஆகாயத்தில் சப்தித்தவுடன், அதைக்கேட்ட மக்கமா நகரத்துக் காபிர்கள் எல்லாரும் முகம் கருகினார்கள். இச்சப்தம் அவர்களுக்குப் பயங்கரமும், மனத்திகிலும், சஞ்சலமுமாயிருந்தது. ஆனபடியால், அவர்கள் இதைக் குறித்து ஒன்றும் தெளிவு பெறாமல் கலங்கி, ஆலோசித்துப் பலவாறு உழன்று, இச்சப்தம் முஹம்மதுக்குக் கீழ்ப்படிந்த ஜின்களில் ஒன்று ஆகாசத்தில் வந்து நின்று, நம்மை அச்சுறுத்தி இவ்வாறு தொனித்ததன்றி, வேறு ஒன்று மல்லவென்று மனதுக்கு ஆறுதல் செய்து கொண்டிருந்தார்கள். இருந்தாலும் அவர்களுக்கு முன்னிருந்த பலம் பலமடங்கு குறைந்து போயிற்று. நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஊரை விட்டு வெளிப்பட்டபோதே தங்களுக்கு வில்லங்க முண்டாகிவிட்டதென அக்காபிர்களுக்கு நன்றாய்த்தெரியும். முடிவில் பல்விதத்திலும் அவர்கள் சஞ்சலத்தில் சிக்குண்டார்கள்.

ஆகாயத்தில் தொனித்த அசரீரியான கவிதையின் தொனியைகேட்டுக் கலங்கி யிருக்கையில், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், உம்மிமகுபது என்னும் விருத்தைக்கும் மற்ற ஆய்பாடி ஜனங்கள் அனைவருக்கும் சொல்லவேண்டிய மார்க்க உபதேசம்முதலானவை அடங்கலையும்சொல்லிவிட்டு, ஒட்டகங்களில் ஏறி, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் துணைவர அந்த ஆய்ப்பாடியைக்கடந்து மதீனமாநகரத்தை நோக்கி நடந்தார்கள்.

56-வது அத்தியாயம்.

மதீனமா நகரம் சேர்ந்தது.

சந்தக் கலி விருத்தம்.

நதிகம் புக்குயர் காவல் புரிந்து கெடு
சதிகம் புக்கொரு தாரியை நேர்குபிரர்
அதிகம் பிக்கை யறுத்திட நம்பிறசூல்
மதினம் புக்குயர் வண்மை யுரைத்திடுவாம்.

இதன் பொருள்.

செகதலாவ நபியானவர்கள் [illegible] சென்று புகுந்து போவதற் கொப்பாக [illegible] சரிசமானமான [illegible] பிக்கையில்லாம் அது போது மறைந்துபோக, போட்ட கதிரை கர்புகளுக் கூர்ந்த காவல் செய்யும், [illegible] முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், [illegible] நகரத்திற் குப் போன சிறப்பைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

உதய மால்வரைப் பரிதியை நிகர்ப்பவொட் டகத்தின்
விதிய வன்றிருத் தோழருந் துணைவரும் விரிபூ
வுதிருஞ் சோலைவி னவிரிரைத் திரைதிசை போங்கும்
பொதுவர் முல்லையுங் குறிஞ்சியுங் கடந்தபல் போனார்.

வசனம்.

நபிகள் நாயகம் சர்வரே ஆலம் முஹம்மது முஸ்தபா அஹமது முஜ்தபா றஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அபூ பக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், உம்மிகுபது என்னும் விருத்தை வசிக்கும் சிறந்த ஆய்ப்பாடியை விட்டு மதீனமாநகரத்தை நோக்கி, உயர்ந்து வளர்ந்த மலைத்தொடர் செறிந்த குறிஞ்சியையும், கானல் பரந்து சமர்வெடித்து அக்கினிமயமாய் எரியும் பாலையையும், காடடர்ந்த முல்லையையும், குளிர்ந்த தடாகங்களும் பூங்காக்களும் தானியவர்க்கம் விளையும் சிறந்தவளமான இடங்களும் அமைந்து விளங்கும் மருதத்தையும், கடல்சார்பா யமைந்திருக்கும் நெய்தலையும் கடந்து, உதயமாய்ப் பர்வதத்தின் சிகரத்தில் தோற்றி விளங்கும் சூரியனைப்போல, ஒட்டகத்தின் சிறந்த முதுகில் தேககாந்தி திசை முகந்தோறும் பரவ வீற்றிருந்து நடந்தார்கள். இவர்கள் இவ்வாறு நடந்து வருகையில், முன்மக்கமா நகரத்திலிருந்து மதீனமா நகரத் திற்குப் புறப்பட்ட அஸ்ஹாபிகளாகிய முஹாஜிரீன்களில் சிலர், ஒவ் வொருவராய்ப் பாதையில் வந்து நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். அடுத்த நாள் பகலில் பின்னும் முஹாஜிரீன்களில் நூற்றுக்கு அதிகப்பட்டவர்கள் ஒரு கூட்டமாய், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுடன் வந்து சேர்ந்தார்கள். அநேக வேங்கைகள் புடைசூழ

நடுவில்வரும் ஒருஆண் சிங்கம் போலவும், நக்ஷத்திரங்கள் சூழ்ந்து விளங்க நடுவில் பிரகாசித்துத் தோற்றும் பூரணசந்திரன் போலவும், உயிரையொத்த தோழர்கள் பலர் புடைசூழ்ந்துவர நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மதீனமாநக ரத்தை நோக்கி நடந்தார்கள் இரவு காலங்களில் தங்குவதற்கு வச தியான இடத்தில் விடுதிவிட்டு, சூரியோதயத்திற்கு முன் எழுந்து தொழுது முடித்து அவரவர் வாகனங்களிலேறி நடந்தார்கள். பகற் காலங்களிலும் உஷ்ணமான மத்தியான வேளைகளிலும் வசதியான இடங்களில் தங்கி இளைப்பாறி யிருந்து தொழுதுமுடித்து மீண்டும் நடந்தார்கள். தொழுகைக்கு குறிப்பிடப்பட்ட அவ்வவ் வேளை களில் முக்கியமாய் வாகனங்களை விட்டிறங்கி, தொழுது முடித்து நடந்தார்கள்.

இவ்வாறு கண்ணை இமை காப்பதுபோல நபிநாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களை அஸ்ஹாபிகள் காத்து நெருங்கி வரும் வண்ணம் சந்தோஷத்துடன் நடந்து, மதீனமாநகரம் கண் பார்வைக்கு எட்டித் தோற்றும் சமீபத்திலுள்ள கறு என்னும் இடத்தை நெருங்கினர்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும், அவர்களின் தோழர்களும், கறு என்னுமிடத் தை சேர்ந்தபோது அவர்கள் கண்களுக்கு மதீனமா நகரத்திலிருக் கும் உன்னதமான மீனார்களும், மிக உயர்ந்து விளங்கும் மேன் மாடங்களும், மிகத் தெளிவாய்த் தெரிந்தன. இவர்கள் அவற்றின் அலங்காரமான காக்ஷியைக் கண்கள்குளிரக்கண்டு ஆனந்தங்கொண்டு மேற்படி கறு என்னுந் தலத்தில் செல்லும்போது, மதீனமா நகரத் திலுள்ள காபிர்களில் ஒருவன், தனது மாளிகையின் மேன் மாடத் தில் ஏறி நின்று உலாத்திக் கொண்டிருந்தவன், கறு என்னும் தலத் தின் திசைப்புறம் கண் செலுத்திப் பார்த்தான். பார்த்தபோது அழ கிற்சிறந்த கருமேகமொன்று மிகக்கீழா யிறங்கி ஒரு மனிதருக்குப் பிடிக்கப்படும் குடைக்கு சமானமாய்த் தோன்றுவதைக் கண்டு, மறுபடியும் மிகக் கூர்ந்து நோக்கினன். நோக்கினவுடன், அழகில் ஒப்பற்று விளங்கும் சிறந்த உருவத்தையுடைய ஒருவர், அநேகர் புடைசூழக் கருமேகக்குடை நிழற்ற வருவதைக் கண்டு வியப்புற்று இவ்விதக் கெம்பீரத்துடன் வரும் இவர் யாரோவெனப் பலவாறு சிந் தித்து, மக்கமா நகரத்தில் நூதனமாய்ப் பிறந்திருக்கும் முஹம்மது நபிக்குத்தான் மேகக் குடையிடுகிற தென்று நாம் கேள்வியுற்றிருக்

னின்றேம். அவரும் இம்மதீனமா நகரத்திற்கு வரப்போவதாகப் பிரஸ்தாபம். ஆனால் இப்போது நாம் காண்பவர் அந்த முஹம்மது நபிதான் எனத்தெளிந்து, அந்த மேன் மாடத்திலேயே நின்று கொண்டு ஊராரை விளித்து "இந்த மதீனமா நகரத்தில் பிறந்து பூர்வீகமான நமது மேலான மார்க்கத்தை நிராகரித்து விட்டு, பந்துக்களையும் தெய்வங்களையும் இழந்து, புதிய மார்க்கத்தில் புகுந்திருக்கும் வீரர்களே, நீங்கள் பிரதி தினமும் முஹம்மது நபி வருகின்றாரென்று எதிர்சென்றழைக்கக் காத்து வெகுதூரம் தொலையில் சென்றும், மறுபடியும் அவரைக்காணாமல் மனம்வருந்தி மீண்டும் வருகின்றீர்களே, இப்போது அந்த முஹம்மது நபி அநேகர் புடைசூழ கருமேகக்குடை நிழலில் அதோ கறு என்னும் தலத்தில் வருகின்றார்" என்று உரத்த தொனியுடன் கூக்குரலிட்டுக் கூறினான்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

மாதவ நபியிவண் வருகின்றா ரெனக்
காதினிற் கேட்டலுங் களித்தன் சாரிகள்
சீதவொண் கவிகையின் றிசையை நோக்கிய
பாதையி னிடமறப் பற்றி யேகினர்.
ஒருவருக் கொருவர்முன் னோடி யாவரும்
வருபவ ரிவ்வழி விரைவின் வாமென
விருளறு மனத்தரா யெதிர்ந்து சென்னெறித்
திருநபி பதத்தினிற் சென்று சேர்த்தினர்.

வசனம்.

இவன்போட்ட இப்பெருந் தொனியை மதீனமா நகரத்திலிருக்கும் அன்சாரீன்கள் அனைவரும் காதுகள்குளிரக்கேட்டு ஆனந்தபரவசமடைந்து, உடனே புறப்பட்டு மதீனமாநகரத்தை கடந்து வெளிபட்டு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குக் குடையிடும் கருமேகம் தோற்றும் திசையை நோக்கி, அதிக விரைவாய் நடந்து வந்தார்கள். மதீனமா நகரத்து அன்சாரீன்கள் அனைவரும், நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களை எதிர்கொண்டு அழைக்கும்படி மிகவிரைவாய் வந்து, முன்சொன்ன கறு என்னும் ஸ்தலத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்ல மவர்களை சந்தித்து, ஒவ்வொருவரும் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பாதமலர்களைப் பணிந்தார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மதீனமா நகரத்தார் ஒவ்வொருவரையும் மார்போடு இறுகக் கட்டித் தழுவினார்கள். மக்கமா நகரத்து முஹாஜிரீன்களும் மதீனமா நகரத்து அன்சாரீன்கள் ஒவ்வொருவரையுங் கட்டித் தழுவினார்கள். அப்போதே மக்கமா நகரத்தார்களும் மதீனமா நகரத்தார்களும், உடலும் உயிரும், காந்தமும் இரும்பும்போல ஐக்கியப் பட்டார்கள். அவ்வேளையி லுண்டான பரமானந்தத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் திருமுகம் நிகரில்லாத சூரியனாகவும், இருவகை அஸ்ஹாபிகளின் முகங்கள் அச்சூரியனைக்கண்டு மலர்ந்த செந்தாமரை மலர்களாகவு மிருந்தன. மக்கமா நகரத்தாரும் மதீனமா நகரத்தாரும், கறுஎன்னும் தலத்தில் அளவளாவிக் கலந்து அந்நியோந்நியமாயினர். பிறகு, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அளவற்ற சந்தோஷத்துடன் அனைவரும் புடைசூழ, அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமீபத்தில் நெருங்கிவர, கறுவைவிட்டு நடந்து அதையடுத்த ஒரு சிறுபாடியையும் கடந்து, பனீ அமறு என்னும் கூட்டத்தார்கள் வசிக்கும் குபா என்னும் தலத்தை யடைந்தார்கள். றபீயுல் அவ்வல் மாதம் பனிரண்டாந்தேதியாகிய திங்கட்கிழமையன்று, அந்தச் சிறப்பான குபா என்னும் தலத்தில் தங்கினார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும், முஹாஜிரீன்களும், அன்சாரீன்களும் அந்த மேன்மையான குபாவில் தங்கியிருக்கும்போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மக்கமா நகரத்தை விட்டு யாத்திரை போகும்போது மூன்று நாட்கள் கழிந்தபின் புறப்பட்டு வரும்படி உத்தரவு செய்த வண்ணம் நான்காம் நாள் மக்கமா நகரத்தை விட்டும் புறப்பட்ட அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்து சேர்ந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைக் கண்டு களித்து ஆனந்த மடைந்தார்கள். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களும் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கட்டித் தழுவினார்கள்.

பிறகு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் மேற்படி குபா என்னும் தலத்தில் ஜுத்மா பள்ளி (மஸ்ஜித்)

ஒன்று கட்டுவித்து அதில் தொழுதார்கள். நான்கு நாள் வரையும் அங்கிருந்து ஐந்தாம் தினம் குபாவை விட்டும் புறப்பட்டு, குபாவுக்கும் மதீனமா நகரத்திற்கு மிடையிலிருக்கும் பனீசாலிம் என்னும் கூட்டத்தார் வசிக்கும் ரூத் தானு என்னும் ஸ்தலத்திற்கு வந்தார்கள். அந்த ரூத்தானு என்னும் ஸ்தலத்தில் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், தோழர்கள் புடை சூழத் தங்கியிருந்தனர். அப்போது, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் மக்கமா நகரம் விட்டுப் புறப்பட்ட உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், தங்கள் பெரிய தகப்பனார்களில் ஒருவராகிய ஹம்ஸா றலியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்து, நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். இம்மூவரையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டித் தழுவி அகங்களித்து, அந்த ரூத்தானுவில் நான்கு நாள் வரையும் தங்கியிருந்து, பனீசாலிம் கூட்டத்தாருக்கு அறிவு புகட்டினர்.

சரித்திரப் புராணம்.

கலி விருத்தம்.

அத்தலத் துறைந்நபி யடுத்த வெள்ளிநா
ளுத்தமத் தமரொடவ் வுறைந்த பேர்கட்
கித்தலத் தின்று தொட்டிறு நாண்மட்டுங்
குத்துபா வென நபி குறித்துக் காட்டினர்.
மாமுகிர் குடைநபி வகுத்த வாசகத்
தேமலர் புயத்தவ ரியாருஞ் சிந்தித்துப்
பூமரு வண்டெனப் பொலிய நந்நபி
தோமில்வண் குத்துபாத் தொழுவித் தாரரோ.

வசனம்.

பிறகு அடுத்து வந்த வெள்ளிக்கிழமை யன்று அவ்விடத்தில் குத்பா தொழுது, முடித்து முஸ்லிம்களை நோக்கி "இன்றுதொட்டு யுகம் முடியும் பரியந்தம் வெள்ளிக்கிழமை தோறும் இந்த இடத்தில் குத்பா தொழவேண்டும்" எனக் கட்டளை பண்ணினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆதியில் குத்பா வோதி, வெள்ளிக் கிழமையின் ஜும்ஆத் தொழுகை தொழுதது அந்த ரூத்தானுவி லேதான். அன்று தீர்ந்து அடுத்த சனிக்கிழமையில் அந்த

ரூத்தானுவி லிருந்து பிரயாணப்பட்டு, தோழர் நால்வரும் முஹாஜிரீன்களும், அன்சாரீன்களும் புடைசூழ மதீனமா நகரத்தை நோக்கி நடந்தார்கள்.

நபிகட்திலகம் செய்யிதுல் முர்ஸலீன் காத்திமுல் அன்பியா முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள் அருகர்கள், தோழர்கள் புடைசூழப் பாதையைக் கடந்து, அலங்காரமான மாடமாளிகைகளாலும், உன்னதமான ஸ்தூபிகளாலும், சந்தடி மிக்க இராஜ வீதிகளாலும், செல்வம் பொலிந்த ஆவணவீதிகளாலும் சிறந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் நிகரற்ற சிங்காசனத்தில் வீற்றிருந்து உலகமனைத்தையும் ஆதிக்கத்தின் கீழ்படுத்தி, தீன் என்னும் செழும் பயிரோங்க ஆளுகை செய்தற்கென்று, எல்லா நகரங்களிலும் விசேஷித்து மானிடப் பிறவிக்கு ஆதித் தந்தையாகிய ஆதம் அலைஹிஸ்ஸலாமின் உடலை சிருஷ்டிப்பதற்கு மண் எடுத்ததானமாய் நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாய் அடக்கப்படும் ஒப்பற்ற இடமாய், யுகம்முடியும் சமீபகாலத்தில் உலகில் அதிக்கிரமித்து வரும் தஜ்ஜால், குறுமூசு என்னும் கொடியதுஷ்டர்களின் வில்லங்கத்திற்கு இலக்காகாமல் காக்கப்பட்டும், தாப்பதுல் அர்லு என்னும் கொடிய சிருஷ்டியால் விளையும் தீங்குக்கு சார்பாகாமல் தூய்மையாக்கப்பட்டும், என்றும் செல்வம் குன்றாத இராஜமாபுரமாகிய மதீனமா நகரத்தில் தீன் என்னும் பேரொளி முழங்க, இஸ்லாம் பரிசுத்த மார்க்கம் நிலைபெற, குபிர் என்னும் காரிருட்படலம் தேய்ந்து அற, பிஸ்மில் சொல்லிப் புகுந்தார்கள்.

சர்வரே ஆலம் தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தில் பிரவேசித்த போது அவ் வூராராகிய அன்சாரீன்கள் ஒவ்வொருவரும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏறியிருக்கும் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்து "என் மாளிகைக்கு வரவேண்டும், என்மாளிகைக்கு வரவேண்டும்" எனத் திரண்டு மொய்த்து நின்று கூக்குரலிட்டு ஆர்ப்பரித்து அழைத்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகக் கயிற்றில் விழுந்திருக்கும் கைகள் ஒன்றிரண்டல்ல; அன்சாரீன்கள் எல்லார் வாயிலும் "நபிநாயகம் (ஸல்) அவர்களை என் மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போவேன்" என்னும் சொல் மாறாமல் முழங்கின. மேலும், ஒருவர் கையாவது ஒட்டகத்தின் கழுத்

துக் கயிற்றில் படாமலிருக்கவில்லை. அன்சாரீன்கள் அனைவரும் இவ்வாறு ஆர்ப்பரித்துத் தங்கள் தங்கள் மாளிகைக்கு நபிநாயகம் (ஸல்) அவர்களை அழைத்துப்போக விரும்பிக் கயிற்றைப் பற்றி இழுப்பதை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏறியிருக்கும் ஒட்டகம் கண்டு, ஒரு அடியாவது எடுத்துவைத்து நடக்காமல் சித்திரப் பாவைபோல அவ்விடத்திலேயே அசைவற்று நின்றது. ஒவ்வொருவரும் ஆர்பரித்து சந்தோஷத்துடன் ஒட்டகக் கயிற்றை பற்றி இழுப்பதையும், அது அசைவற்றுப் பெயராமல் நிற்பதையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அன்சாரீன்களை நோக்கி "கனம் பொருந்திய அன்சாரீன்களே, குதிரையின் வேகத்திலும் அதிக வேகமாய் வரும் இவ்வொட்டகத்தை நீங்கள் நெருங்கி நின்று தொடவேண்டாம். அதன் கயிற்றைப் பற்றி ஒருவரும் இழுக்காதீர்கள். விட்டுவிடுங்கள். அதன் கயிற்றைப் பிடித்து நீங்கள் தடைப்படுத்துவீர்களானால், அது நடக்கமாட்டாது. இவ்வொட்டகம் அல்லாஹு தஆலாவின் கட்டப்படி வருகின்றது. ஆனபடியால், இவ்வொட்டகம் இம்மதீனமா நகரத்திலேயோ, அல்லது வெளிப் புறத்திலேயோ, எந்த இடத்தில் தரிப்பட்டு இறங்கும்படி எனக்கு இடந்தருமோ அந்த இடத்திலேதான் நான் இறங்குவேன். நீங்கள் ஒருவரும் பலாத்காரம் பண்ணவேண்டாம்" என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு சொன்னவுடன், ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்திருந்த அன்சாரீன்கள் அனைவரும் கயிற்றை விட்டுவிலகினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் தாங்கள் பிடித்திருந்த அதன் மூக்கணக்கயிற்றை இளக்கி விட்டுவிட்டார்கள். கழுத்தின் கயிற்றை அன்சாரீன்கள் பிடித்து இழுக்கும்போது அடிபெயர்த்து வைக்காமல் தடைபட்டு நின்ற ஒட்டகம், அக்கயிற்றை விடுத்து அனைவரும் விலகின மாத்திரத்தில், முன்போல் மதீனமா நகரத்து வீதியில் நடந்து சென்றது.

மகத்தான அல்லாஹு தஆலாவின் திருவுளப்படி, நபிநாயகம் (ஸல்) அவர்களைச் சுமந்துகொண்டு வரும் சிறந்த ஒட்டகம், மதீனமாநகரத்து வீதியில் விரைவாய் நடந்து வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் தாயாராகிய ஆமினாவின் மாதுலராகிய பனீநஜ்ஜாறுகளுக்கு சொந்தமான காணி நிலத்தில் வந்து நின்றுகொண்டு, நான்கு புறம் திரும்பிப்பார்த்துவிட்டு, மெல்ல தன்கால்களை மடக்கித் தானாக நிலத்தில் படுத்தது. இவ்விதம் சற்றுநேரம் அங்கு படுத்திருந்த

ஒட்டகம் மீண்டும் எழுந்து, அங்கிருந்து பலரும் புடைசூழ்ந்துவர நடந்து சிலவீதிகளைக் கடந்து, அந்த மதீனமா நகரத்து அன்சாரீன்களில் ஒருவராகிய அபூ அய்யூபு என்பவர் வாசம் செய்யும் சிறந்த மாளிகையின் முன்வாசலில் சென்று, சற்றுநேரம் நின்று அந்த வாசலிலேயே தன் கால்களை மடக்கி படுத்துக்கொண்டது. சற்றுநேரம் வரையும் அபூ அய்யூபின் மனைவாசலில் படுத்திருந்த ஒட்டகம் மறுபடியு மெழுந்து, பலரும் கண்டு வியப்புறும்படி நடந்து, முந்திவந்து படுத்திருந்து எழுந்த பனீநஜ்ஜாறுகளுக்குரிய சொந்தக் காணி நிலத்தில்மறுபடியும் சென்று நபிநாயகம் (ஸல்) அவர்களை சுமந்தபடியே படுத்துக் கொண்டது. இவ்வாறு அங்கு படுத்துக் கொண்ட ஒட்டகம் தனது நீண்ட கழுத்தின் சுருக்கம் நிமிர நீட்டி, வாயைப் பிளந்து நாவெடுத்து சப்தமிட்டது. அங்கு சூழ்ந்து நிற்கும் எல்லார் செவிகளிலும் நன்றாய்க் கேட்கும்படி தொனித்த ஒட்டகத் தொனியின் அர்த்தம் இன்னதுதான் என அறிந்த நபிநாயகம் (ஸல்) அவர்கள், உடனே அதன் முதுகில் இட்டிருக்கும் தவிசைவிட்டு இறங்கினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் ஏறிவந்த ஒட்டகத்தை விட்டு இறங்கி நின்றுகொண்டு, தங்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "அஸ்ஹாபிகளே! இன்று முதற்கொண்டு நான் மரணத்தை யடையும் பரியந்தம் எனது நான்கு கலீபாக்களுடன் வசித்து மார்க்கத்தை விளங்கும் ஸ்தலம் இதுதான். இச்சொல் அல்லாஹு தஆலாவின் சொற்படியாயிருக்கும். நான் வாசஞ் செய்யும் இடம் இதுவன்றி வேறில்லை. இவ்வொட்டகம் இரண்டாந்தரம் போய்ப் படுத்திருந்த அபூ அய்யூபுக்கு சொந்தமான அந்த மாளிகையானது எனக்கென்று இந்தக் காணி நிலத்தில் ஒரு மாளிகை கட்டும் வரையும நான் வாசஞ்செய்ய ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அதனால் இங்கோர் மாளிகை கட்டும் வரையும் நான் அபூ அய்யூபு உடைய மாளிகையிலே தான் இருப்பேன்" என்றார்கள். இச்சொல்லைக்கேட்ட அன்சாரீன்களும், முஹாஜிரீன்களும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் தொனிப்பொருளை அறிந்து தான் இவ்விதம் சொன்னார்களென்று ஆச்சரியமுற்று, மட்டற்ற சந்தோஷங் கொண்டார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்தாராகிய முஹாஜிரீன்களை அழைத்து, நீங்கள் அனைவரும் இவ்வூரில் உங்களுக்கு உகப்பான ஜாகைகளில் போயிருங்கள் என்று கட்டளை பண்ணி

விட்டு, மதீனத்தாராகிய அன்சாரீன்களை அழைத்து, நீங்களும் உங்கள் மனைக்குப் போய்ச் சேருங்களென்று உத்தரவு பண்ணி விட்டு, தாங்கள் அபூ அய்யூபு உடைய மாளிகைக்கு மிகுந்த உபசாரத்துடன் சென்றார்கள். முஹாஜிரீன்களும் தங்கள் பந்துக்கள், சிநேகிதர்கள் முதலானவர்கள் இருக்கும் வீதிகள் தோறும் சென்று, ஒவ்வொரு மனையிலும் தங்கினார்கள். அன்சாரீன்களும் அவரவர் மனைகளில் சென்றார்கள்.

—:ஓ:—

57-வது அத்தியாயம்

கபுஹாப் வந்தது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குபிரோர் செயல் கெடவே யுயர் குர்ஆ னெனு மறையைப்
புவிமீதெமர் கொளவே யருள் புகழார் முஹம் மதனர்
சவியார் மஜி லிஸிலே மதி தனைநே ருறு மழகார்
கபுஹா பெனு மிளவாலிபர் கமையோ டுறல் மொழிவாம்.

இதன் பொருள்.

காபிரீன்கள் செய்யும் துஷ்டச் செயல்கள் யாவுங் கெட்டுப் போக, முன்னுள்ள வேதங்கள் மூன்றுக்கு முயர்த்தியான குர் ஆனென்னும் வேதத்தை பூமியினிடத்தில் "எமர்களென்னும்" எம் பிறவி மார்களான மூமீன் முஸ்லிம்கள் யாவரும் விசுவாசங் கொள்ளத் திருவாயினா லருளிச்செய்து புகழைப் பொருந்தும்முஹம் மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய பிரகாசமான சபையினிடத்திற் பூரண சந்திரன் போன்ற அழகோடும், கபுஹாப் என்னும் பெயரையுடைய ஓர் இளம் வாலிபர் மஹா பொறுமை யோடு வந்த வரலாறுகளை சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மாரியங் கவிகை வள்ளன் மதீனமா நகரம் புக்குச்
சீரிய மறையின் தீஞ்சொற் செவ்விவோர்க் கினிதி னூட்டிக்
கூரிலைக் கதிர்வேற் செங்கைத் தினவர் குழாங்கொண் டேத்த
வேரணி அபுஅய் யூபி னில்லிடத் திருக்கு நாளில்.

வசனம்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இராஜமாநகராகிய மதீனாபுரத்தில், அஸ்ஹாபிகளில் ஒருவராகிய அபூ அய்யூபு என்பவரின் சிறந்த மாளிகையில் வீற்றிருக்குங் காலத்தில், தர்மார்த்தமான எல்லா விஷயங்களிலும் ஒப்பற்று விளங்கும் தங்கள் அஸ்ஹாபிகளில் அம்மார் என்பவர், நிகரில்லாத தேககாந்தியும் அலங்காரமான அழகிற் சிறந்த உருவமுள்ள ஒரு பாலியரின் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் வீற்றிருக்கும் திவ்விய சபைக்கு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் சந்நிதானத்தில் நின்றார் அம்மார், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து நின்றவுடன், அவருடன் வந்த பாலியர், நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பில்லாத அவயவ லக்ஷணங்களையும் களங்க மற்ற முழுமதி போன்ற முகவசீகரத்தையும் கண்டு களிப்புற்று, தமது இரண்டு கைகளையும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாதாரவிந்தங்களில் வைத்து முத்தமிட்டு, தன் அறிவு சிறிது மின்றிப் பரவசமடைந்து, வாய்திறந்து சலாம் அல்லது வேறு யாதொன்றும் பேசாமல் ஆநந்தக் கண்ணீர் சிந்த அழுதுகொண்டு நின்றார். தங்கள் பாதமலர்களைத் தீண்டி முத்தமிட்டுப் பணிந்துநின்று கண்ணீர் சொரிய அழும் பாலியரை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு அவரை அழைத்து வந்த அம்மார் என்பவரை நோக்கி "அம்மாரே, இந்த அழகிற் சிறந்த பாலியன் யார்?" என வினவினார்கள். அப்போது அந்த அம்மார் என்பவர் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தங்கள், ஊழியனாகிய நான் எனது மனைக்குள்ளிருந்து ஒப்பற்ற தங்களின் சிறந்த நாமதேய மமைந்த கலிமாவை அடிக்கடி ஓதிக்கொண்டும், தங்களைப் போற்றிக் கொண்டும், வேதவாக்கியங்களில் சிலவற்றைச் சொல்லிக்கொண்டு மிருந்தேன். இவ்வாறு நான் ஓதிக்கொண்டிருந்த தொனியை இப்பாலியர் காதாரக் கேட்டு திடீரென்று என் அகத்தில் வந்து நின்று என்னை நோக்கி சலாம் சொன்னார். எனக்கு சலாம் சொல்லி விட்டு எதிர் நின்ற இவர், மறுபடியும் என்னை நோக்கி "ஆதியும் அந்தமுமில்லாத மகத்தான அல்லாஹு தஆலாவின் தூதர்களுக்கு நாயகராகிய முஹம்மது நபிக்குரிய கலிமாவையும் வேதவாக்கியங்களையும், கீர்த்தி பிரதாபத்தையும் தாங்கள் மிகத்

தெளிவாகச் சொல்லுகிறீர்களே? ஆனதால் தாங்கள் அந்த முஹம்மது நபியைக் கண்கள் குளிரக் கண்டிருக்கிறீர்களா? அல்லது யாரும் சொல்வதைக் கேட்டுச் சொல்லுகிறீர்களா"? எனக்கேட்டார். அதற்கு நான் இவரைநோக்கி "அழகிய பாலியரே, நான் அந்த முஹம்மது நபிக்குப் பிரதி தினமும் தொண்டு செய்வதற்கு அடிக்கடி அங்கு போய், அவர்களின் பாதசேவையி லிருந்து, கண்கள் குளிரக்கண்டு, பாவத்தொடரை யறுத்து வருகின்றேன். அதனால் அவர்களின் வேதமும், மார்க்க நீதிகளும் எனக்கு நன்றாய் தெரியும் நான் செவிச் சொல்லாய் சொல்லவில்லை" என்று விடைக்கொடுத்தேன். நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நான் பிரதி தினமுங் காணப்பெறுகின்றேனென்னும் சொல் இவர் செவிகளில் நுழைந்தமாத்திரத்தில் ஆனந்த பரவசமுற்றார்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கண்டன னென்னு மாற்றஞ் செவிப்புக ஹபீபைத்தேடிக்
கொண்டுற நடந்த பொற்றுளிது கொலோ வென்னக்கூறி
முண்டக மலரின் வாய்ந்தமுகத்தையென் றுளிற்சேர்த்திப்
பண்டருந் திருவாய் முத்திப் பற்பல்கால் மோந்துகொண்டார்.
காலிணை விடுத்து மாறாக் காரணர் வடிவை காணு
மாலுறப் பருகுங் கண்க ளிவையென மணிவாய் வைத்து
மேலுற முகந்து முத்தி மெய்ம்மயிர் சிலிர்ப்பப் பூரித்
தோலவா றுதியை யொப்பா ருவந்தெனைப் புகழ்ந்து நின்றார்.

வசனம்.

பிறகு 'மகத்தான அல்லாஹு தஆலாவின் திருத்தூதராகிய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பாதசேவை செய்யும் பொருட்டு பிரதிதினமும் வருந்தி நடந்து செல்லும் பாதங்களா இவை!' என்று இருகால்களிலும் தமது அழகிய முகத்தைவைத்து முகந்து பலதரம் முத்தமிட்டார். பின்பு முஹம்மது நபியின் தேஜஸைக்கண்டு களிக்கும் கண்களா இவை! என்று எனதுஇருக்கண்களையும் அடுத்தடுத்து முகந்தார். அன்றியும், தமது திருமேனி முழுவதும் மயிர்கூச்செறிய என்னை நோக்கிப் பலவாறு துதித்துக்கொண்டு சந்தோஷத்துடன் எனக்கெதிரே

நிற்கின்றார் இவ்விதம் இந்த பாலியர்செய்த செய்கையைப்பற்றி நான் வியப்புற்று, இவர் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருநாமத்தைக் காதில்கேட்டல்லவா இவ்வாறு ஆநந்தப் பிரவாகம் பெருக்கெடுத் தோடநின்றார்? இனி அவர்களைக் கண்களால் கண்டால் என்ன மகிழ்ச்சி யுறுவாரோ! என அகங்களித்து, இவர் சிறந்த பக்தர் என நினைத்து, இவருடன் யாதொன்றும் பேசாமல் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு, தேவரீருடைய சமூகத்திற்கு விரைந்து வந்தேன்" என்று பதில் சொன்னார்.

அம்மார் என்பவர் சொன்ன இச்சொற்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, மகிழ்ச்சிக்கொண்டு, அவருடன் நிற்கும் அந்தப் பாலியரை விளித்து "அழகிய பாலியரே, நீர் யார்? உமது நாமம் என்ன? நீர் வசிக்கும் ஊர் எது? உமது தந்தை யார்? நீர் இங்கு வந்த முகாந்திரம் யாது? உமது வர்த்தமானங்கள் யாவை? இவைகள் எல்லாவற்றையும் என்னிடம் விவரித்துச் சொல்லு" என்று கேட்டார்கள். அப்போது அந்தப் பாலியர் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி கீழ்வருமாறு சொன்னார்

"மகத்தான அல்லாஹு தஆலாவின் திருத்தூதராய், பாவச் சூழலில் சிக்குண்டு வருந்தும் மனிதர்களை மீட்டி இரக்ஷிப்பதற்கு வானவர்களும் வணங்கம் செய்யத்தக்க நபியாய், நிகரில்லாத மகிமையுடன் இவ்வுலகில் அவதரித்து வந்த நாயகமே! தமியேனாகிய நான், தங்கள் அரிய ஆசனத்தில் வீற்றிருந்து இராஜ்ஜிய பரிபாலனம் செய்யும் தகுதியான பேற்றைப் பூர்வீகத்திலேயே நீண்டகாலம் பரியந்தம் தவம்செய்து பெற்றுக்கொண்ட இராஜதானியாகியஇந்த மதீனமா நகரத்திலுள்ள யூதஜாதியான். என் தந்தையோ மூன்று வேதங்களையும், மற்ற ஆகமசாஸ்திரங்களையும் ஐயந்திரிபின்றிகற்றுத் தெளிந்த பண்டித சிகாமணி. சர்வகலா பண்டிதராகிய என் தந்தையும் தாயும் செய்த தவங்களெல்லாம் திரண்டு ஒரு பிள்ளை வடிவாய், ஒரே புத்திரனாக நான் பிறந்தேன். நான் பிறந்த போது என் பிதா மாதா இருவரும், அவர்களின் குடும்பத்தார்களும் மகிழ்ச்சி கொண்டு, சாஸ்திரங்களை ஆராய்ந்து கபுஹாபு என்று எனக்கு நாமகரணஞ் செய்தார்கள். என் தந்தைக்கும் தாய்க்கும் வேறு சந்ததி யில்லாமையால், அவ்விருவர்ஆவியும் வைக்கப்பட்ட

ஒரு உடலைப்போல என்னைப் பேணி, ஞானசிகாமணிகள் தாங்கள் செய்தபோதனைப் பின்னமடையாவண்ணம் காப்பது போல காத்து, உத்தமர்கள் தாங்கள் முயன்று பெற்ற அருட்செல்வம், பொருட்செல்வம் என்னும் இருவகைச் செல்வங்களையும் போஷிக்கும் பாவனையாகப் போஷித்து, நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக என்னை உவந்து வளர்த்தார்கள். எனக்குகல்வி பயிலும் பிராயம் வந்தபோது, எனது இளம்பிராயத்தின் சேஷ்டைத் தன்மையான குணங்கள் நீங்க, வேதங்களையும் சாஸ்திரங்களையும் ஆகமங்களையும் புராணங்களையும் வேறு பல பிரபந்தங்களையும், கலைஞானங்களையும், சிறிதும்பழுதடையாமல் கசடற என் தந்தையே எனக்குக் கற்பித்து வந்தார். என்தந்தை தாம்கற்றிருக்கும் கல்வித் திறம் அனைத்தையும் எனக்குப் போதித்ததுமன்றி, எனது வாழ் வலியால் அவரினும் பலபடங்கு மேற்கொண்ட கல்விமானாக நான் பயிற்சியடைந்து இலௌகிகம், வைதீகமென்னும் இருவகைச் சாதனங்களிலும் தேர்ச்சியடைந்தேன். எனக்கு நாளுக்கு நாள் கல்விப் பழக்கமே முதிர்ந்தது. கல்வியால் விளையும் பலன் இன்னதென்று நான் வரவரக் கண்டறிந்த படியால், எனக்கு அதுவே அப்பியாசமாயிற்று. என் தந்தை எனக்கென்று பலநாள் சேர்த்து வைத்த வேத புத்தகங்களும், ஆகம நூல்களும், புராணங்களும், காவியங்களும் அலங்காரமான கவிதைகளால் விளங்கும் பிரபந்தங்களும், ஞான நூல்களும் கொஞ்சமல்ல. எங்கள் மனையில் இவ்வித நூல்களடங்கிய பெரிய பெட்டகங்கள் மாத்திரம் நூற்றுக்கு அதிகமாயுண்டு. அவற்றில் ஒன்றையாவது என்தந்தை எனக்கு மறைத்து வைக்கவில்லை. அதுகளை பூட்டித் திறக்கும் அதிகாரம் என் வசமேயிருந்தது. ஆனபடியால், நான் நினைத்த வேளையில், நினைத்த பெட்டகத்தைத் திறந்து, மனம் விரும்பின புத்தகத்தையெடுத்து வாசித்துக்கொண்டிருப்பேன். என் தந்தை நான் கல்வி பயிலும் விஷயத்தில் சிறிதும் தடை செய்யாதிருந்தார். நான் கல்விமானாவதே அவரது கருத்து. நான் பிரதிதினமும் கல்விப் பழக்கமாயிருந்து வரவரத் தேர்ச்சியடைவதைப்பற்றி என் தந்தைக்கு உண்டாயிருந்த ஆனந்தம் அற்பசொற்பமல்ல. அதனால் நான் அவரைமேலும் மேலும் பிரியமூட்டும்படி வேறு பராக்கின்றி, எப்போதும் புத்தகமுங் கையுமாகவே யிருப்பேன். இவ்வாறு நான் கல்வி பயில்வதே தொழிலாயிருக்கும் காலத்தில், ஒரு என்

மனையிலுள்ள புத்தகப்பேழைகளை ஒவ்வொன்றாகத் திறந்து, நாம் பார்த்திராத நூல்கள் ஒன்றிரண்டு இராதாவென்று தேடிப்பார்த்தேன். அப்போது ஒரு பெட்டகத்தின் கள்ளறைக்குள் பொற் செப்பு ஒன்று இருந்தது. இது என்னவென்று பார்ப்போமென வெண்ணி அச்செப்பைக் கையிலெடுத்துப் பார்த்தேன். அது முத்திரையிடப்பட்டிருந்தது. அதனால், 'நாம் கருதினபொருள் இதில் இராது. இதற்குள் வேறு என்ன இருக்கின்றதோ' வென்று எண்ணி, பழயபடி அது இருந்த ஸ்தானத்திலேயே வைத்துப் பெட்டியைப் பூட்டி விட்டேன். ஆயினும், அச்செப்பினுள் என்ன இருக்கின்றதோ என்னும் சமுசயம் என் இருதயத்தில் பதிந்தது. ஆனபடியால், நாம் அதன் முத்திரையை விடுத்துத் திறந்து பார்ப்பது முறையல்லவென்று நான் நினைத்து, என் தந்தையிடம் சென்று, அவரை நோக்கி "தந்தையே, இன்ன பெட்டகத்துக் கள்ளறைக்குள்ளிருக்கும் அந்தப்பொற் செப்பில் என்ன இருக்கின்றது?" என விசாரித்தேன். அப்போது அவர் என்னை நோக்கி "மகனே, இங்கேவா. நீ சொல்லும் மேற்படி செப்புக்குள் உன்னையறியாமல் இரத்தினங்களையாவது, நாணயங்களையாவது பொன் நகைகளையாவது அடக்கி உனக்கு ஒளித்து மறைத்து நான் வைத்திருக்கவில்லை. நீ அப்படியொன்றும் நினைக்காதே. ஆனால் அச்செப்புக்குள் ஓர் அபூர்வ வஸ்து இருக்கின்றது. அதாவது: தெய்வதா தூஷணம், மந்திரோச்சாரணம், மாயாஜாலம், பொய், அதிக்கிரமமாகிய இவ்விதத் தீய விஷயங்கள் எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டி, இது நான்காவதாகிய குர்ஆன் என்னும் வேதம் என்று பெயர் சூடிக்கொண்டும் பாதாள நரகத்திற் கொண்டு தள்ளும் ஒரு புதிய மார்க்கத்தைப் பிரஸ்தாபித்துக் கொண்டும், தொன்றுதொட்டுள்ள கோத்திரப்பிதாக்களின் கோட்பாடுகளெல்லாவற்றையும் நிந்தித்துக் கொண்டும், முஹம்மது நபியென்று ஒருவன் பிற்காலத்தில் மக்கமா நகரத்தில் பிறப்பான். அவனால் மனிதர்களுக்குள் பகை முதிர்ந்து தாங்கரிய வில்லங்கங்கள் உண்டாகும். என்னும் இவ்வரலாற்றை நம் மூதாட்களிலிருந்த சாஸ்திரவான்கள் தாங்கள் கற்ற வேதங்களில் கண்டறிந்து, அப்படி நிகழ்வது நிச்சயமெனத்தேறித் தெளிந்து, அவன் நாமத்தையும், மனிதர்களுக்குப் போதிக்கும் அவனுடைய உபதேசத்தையும், அவன் பிறக்கும் காலத்தையும் ஒரு துண்டுக் கடிதத்தில் தீட்டி வைத்தார்கள். அந்தத்

111360

துண்டுக் கடிதந்தான் மேற்படி செப்புக் குள்ளிருக்கின்றது. அச் செப்பு நம்மில் பரவணியாய் வருகின்றது. வேறு யாதொரு வஸ்துவும் அச்செப்பில் இல்லை. ஆனபடியால் மகனே! நீ அதைத் தீண்டாதே என்று உபசாரணையுடன் சொன்னார். என் தந்தை இவ்வாறு அதை எடுத்துப் பார்க்கவொட்டாமல் தடுத்துச் சொன்னதைக் கேட்ட நான், பூர்வீக காலத்திலிருந்த கல்விமான்களால் குறிக்கப் பட்டுள்ள விஷயத்தைப் பார்த்தறிவதுதான் உத்தமம் என என் இருதயத்தி லெண்ணி, தந்தை யிட்ட கட்டளையை மீறி நடப்பதும் நியாயமல்ல யென்று அடிக்கடி சிந்தித்து, சில தினங்கள் வரையும் அதில் பிரவேசிக்காம லிருந்தேன். ஆனாலும் அதைப் பார்க்க வேண்டுமென்னும் கட்டாயமான எண்ணம் என் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதனால், நல்ல கருமத்தில் பிரவேசிப்பதைத் தடுக்கும் பிதாவின் கட்டளையை அத்தனை தூரம் முக்கியமாகப் பாராட்ட முகாந்திரமில்லை யென்று, சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன். அச்செப்பை இரகசியத்தில் திறந்து பார்ப்பதற்கு நான் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் காலத்தில், ஒரு நாள் என் தந்தை ஈத்தங்கள்ளை அளவிற்கு அதிகமாகக் குடித்துக் கண்கள் சிவப்பேறி, சித்தப் பிரமைகொண்டு ஸ்மரணையற்று, வெறி பிடித்து, பிரக்ஞைதப்பிக் கிடந்தார். அப்போது நான் இது தான் தருணமென்றெண்ணி, என் தாய்க்குத் தெரியாவண்ணம் அறைக்குள் பிரவேசித்து பெட்டகத்தைத் திறந்து, அதன் கள்ளறைக் குள்ளிருக்கும் மேற்படி செப்பை யெடுத்துக் கொண்டு அதை வீட்டை விட்டு வேறொரு தனியிடத்தில் சென்று, அச் செப்பின் முத்திரையை உடைத்துப் பார்த்தேன்; அதில் என் தந்தை சொன்னது போல ஒரு துண்டுக் கடிதந்தான் இருந்தது.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பத்தியின் றந்தை கூறும் படிக்கொரு கடுதா சங்கண்
வைத்திருந் ததின்மே லோர்பால் வரியொன்றிற் கலிமா வென்று
முத்தாம் பிறக்கத் தீட்டு மெழுத்தினை வாசித் தோர்ந்து
வித்தையும் வீடும் பெற்றே மெனவிரு விழியிற் கொண்டேன்..

விரித்ததை நோக்கும் போழ்தின் விறனபி முஹம்ம தென்னத்
திருத்திய பெயரும் வீருஞ் சிறப்பு மெய்ப் புதுமைப் பேறுங்
கருத்துறத் தெளிய வாசித் தனன்கடு தாசின் கண்ணே
யொருத்தருந் தெரியா வண்ண மொளியொன்று பிறந்ததன்றே.

வசனம்.

உடனே நான் அக்கடிதத்தை யெடுத்துப் பார்வை யிட்டேன்; அதில் முதல்வரியாக "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்று எழுதியிருந்தது. இந்த மேன்மையான வசனங்களை நான் வாசித்தபோதே, நாம் இன்றுதான் நற்கதியும் பூரணமான அறிவையும் அடைந்தோமென்று என் இதயங் குளிர நினைத்து, அக்கடிதத்தை அடிக்கடி கண்களில் ஒத்திக் கொண்டு, மறுபடியும் அதில் எழுதியுள்ள வரிகளை நன்றாக, வாசித்தேன். முஹம்மது என்னும் திருநாமம் அடுத்தடுத்து எழுதப்பட்டிருந்த படியால், என் உடல் புளகிதம் கொள்ளும் வண்ணம் இதயங்களிக்க முழுதும் வாசித்துப்பார்த்தேன் அதை நான் வாசிக்கும்போது, அக்கடிதத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரகணம் முதலான ஒளிவுகளனைத்தும் ஈடாகாத பேரொளிவொன்று ஆச்சரியகரமாகப் பிரகாசித்தது. இவ்விதப் பெரிய பிரகாசம் அக்கடிதத்தில் பிரகாசிக்கக் கண்டமாத்திரத்தில் என் கண்கள் கூசி, எனக்கு ஆகந்தமான பயங்கரமுண்டாய், அவ்வச்சத்துடன் முன்னே நான் முதல் வரியில் வாசித்த கலிமாவான வேரானது என் நெஞ்சத்தில் ஊன்றி, ஈமான் என்னும் செழும்பயிர் தழைத்து, பேராசை அதிகரித்தது. இந்த முஹம்மது நபியைக்கண்ணாரக் காண வேண்டுமென்னும்காதல் என்உள்ளத்தில் பிரவாகமாகப்பெருகி உடலெங்கும் பரந்தது. அதனால், எனக்கு வேறே யாதொரு நினைவுமில்லை. இவ்வாறே நினைவுடன் சித்தம் மயங்கி, என் வாயைத்திறந்து "யா முஹம்மது! யா முஹம்மது!! எனக்கூக்குரலிட ஆரம்பித்தேன். சித்தப்பிரமை கொண்டு நான் நின்று கூக்குரலிட்டு அலறும் தொனி என் தாயின் செவியில் விழுந்த மாத்திரத்தில், அவள் மனங்கலங்கி ஏக்கமுற்று,என் இவன் இப்படிப் புலம்புகின்றானென்று சொல்லிக் கொண்டு கால் கைபதற, நான் இருக்கும் இடத்திற்கு ஓடி வந்தாள். வந்த தாய் என்னைக் கட்டியணைத்து உபசரித்து, "மகனே! ஏன் புலம்புகின்றாய்? உனக்கென்ன சம்பவித்தது, சொல்?" என்று

பலதரம் கேட்டும் நான் அவளுக்குப் பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லாமல், சிலையாய் நின்று முன்போலவே தங்களின் நாமதேயத்தை சொல்லிச் சத்தமிட்டவண்ணமா யிருந்தேன். தன் கேள்விக்குப் பிரதி சொல்லாமல் நான்புலம்புவதால், மிகப் பயங்கரமும் சஞ்சலமு மடைந்து, திகில் பிடித்து, விரைந்துபோய்த் தன் பந்துக்களான ஆடவர்களைக் கூவினாள். அப்போது என் தாயிட்ட பரிதாபமான கூக்குரலைக் கேட்டு, பந்துஜனங்களிலுள்ள சிலர் திகில்கொண்டு விரைந்து ஓடிவந்தார்கள். வந்தவுடன் அவர்களனைவரையும் என் தாய் நோக்கி, 'நான் ஒன்றும் அறியேன். இவன் என்றும் போல நல்ல சுபாவத்துடன் இருந்தவன், திடீரென்று இவ்விதம் புலம்புகின்றான். பித்தம் தலைக்கேறி இப்படி புலம்புகின்றான், பிறர்யாராவது சூனியம் செய்து விட்டார்களோ ஒன்றும் தெரியவில்லை. ஆனபடியால், இவனுக்குச் சம்பவித்திருப்பது இன்னதுதான் என்று நீங்கள் குறிப்பாய்ப் பார்த்துச் சொல்ல வேண்டும்" என மிகக் கலங்கி கண்ணீர் சிந்த அழுது சொன்னாள். அவர்கள் என்தாய் படுந்துயரத்தையும், நான் இருக்கும் நிலையையும் பார்த்து ஒன்றும் சொல்லாமல், என் கையைப்பற்றி யழைத்துக் கொண்டு எனது தந்தையிருக்கும் இடத்திற்குப் போனார்கள். இதற்குள் என் தந்தை அளவின்றிச் செய்திருந்த மதுபானத்தின் வெறி தீர்ந்து சித்தந்தெளிந்தார். ஆனபடியால், பந்துஜனங்கள் என்னைச் சூழ நின்று அழைத்துக்கொண்டு போவதைச் சந்தோஷத் துடன் இருந்த அவர் கண்டு, நமது புத்திரனுக்கு என்ன சம்பவித்ததோவென்று திகில்கொண்டு, தமது இருப்பிடத்தை விட்டெழுந்து எதிர்கொண்டு ஓடிவந்தார். எதிரே ஓடிவந்த தந்தை ஏக்கமுற்றுத் திடுக்கிட்டுப் பதறிஎன்னையணைத்துக்கட்டிக்கொண்டு, என்னை நோக்கி அடிக்கடி "அப்பா மகனே! அப்பா மகனே!!" என்று கூவி கண்ணீர் பிரவாகத்தால் உடல் நனைய அழுது, மிகப் பரிதாபித்து அழுதுகொண்டு நிற்கும் என் தாயையும், சூழ்ந்து நிற்கும் பந்து ஜனங்களையும் நோக்கி, என்குமாரனுக்கு சம்பவித்த ஆபத்து என்ன? என்று கேட்டார். அதற்கு அவர்கள் நாங்கள் ஒன்றும் அறியோம் என்று சொன்னார்கள். அப்போது என் தந்தை என்னை மறுபடியும் நோக்கி "மகனே, உனக்கு இருந்தாற் போல நேரிட்ட விபத்து என்ன? அதை என்னிடம் சொல்" என்று கண்ணீரொழுக அழுதுகொண்டு கேட்டார். இரக்ஷகராகிய

நபியே, என் தந்தை பரிதாபமுற்றுக் கேட்டபோது தமியேனாகிய நான் தங்களின் திருநாமத்தையே இருதயத்தி லிருத்திக்கொண்டு, என் தந்தையையும், மற்றவர்களையும் நோக்கி "பிதாமாதாக்களா யுள்ளவர்கள் தாங்கள் கற்றிருக்கும் பஞ்சமாபாதகங்களையும் அற விலக்கி, நற்கதியும் கொண்டு போய்ச் சேர்க்கத்தக்க இரகசியப் பொருளை, தங்கள் மக்களுக்குப் போதிக்க வேண்டுமென்பது நியாயமான விஷயம். புருஷன் தன் மனைவிக்கும், மற்றவன் தன் பந்துக்களுக்கும் . இதை போதிக்க மறைக்கக்கூடாது. அப்படி வஞ்சித்து மறைத்தால், அவர்கள் என்றும் வேதனை செய்யும் பாதாளநரகத்தில் விழுவார்கள். அன்றியும், தந்தைதாய் மார்கள் தங்கள் வசமுள்ள சுதந்தரமான பலவகை திரவியங்கள் எல்லா வற்றையும் தங்கள் மக்களுக்குக் கொடுத்து விடுதல் உலகவழக்க மாத்திரமல்ல; சாஸ்த்திர சம்மதமுமாம். அப்படியிருக்க உலகம் கதிபெறத்தக்க ஒரு மொழியாகிய இரகசிய மந்திரத்தை அவர் கள் மக்களுக்கு வஞ்சித்து மறைத்து வைப்பது நியாயமாகுமா? அவ்வித அரும்பொருளை ஒளிப்பது, அறக்கீழான ஜாதியாருக்கும் இழிவாகுமே. தாம் பெற்ற மக்கள் கல்வியிற் சிறந்து கீர்த்திப் பிரதாபமடையும் பொருட்டு, வேதாகம சாஸ்திர புராணங்கள் எல்லாவற்றையும் புகட்டியும், புகட்டு வித்தும், மோக்ஷமடையதக்க நல்ல மார்க்கத்தில் செலுத்தி, இலௌகீக வைதீக விஷயத்தில் தெளிவுபெறச் செய்வது தந்தைகளுக்குக் கடனேயன்றி, குறிப்பான காரியங்களை மறைத்து ஆத்மரட்சை பெறவிடாமல் தடுத்து, அந்தகாரம் நிறைந்து மனக்கண் மூடி அழியச்செய்வது தருமமல்லவே. என் தந்தையே, இப்போது என்னிடத்தில் நீர் என்ன கேட்கின்றீர்? என்னுடைய இதயா சனத்தில் வீற்றிருக்கும் மகத்தான கடவுளுடைய தூதர்களில் விசேஷித்தவரும் மனிதர்களைப் பாவச்சிறையிலிருந்து மீட்டி இரக்ஷிப்பவருமாகிய மேன்மையான முஹம்மது நபியின் வருகை யை யுணர்த்தும் சில குறிப்புகளையும், அவரது சிறந்த மந்திரமாகிய கலிமாவையு மெழுதி ஒரு செப்புக்குள் ளடக்கி அச் செப்பை மிகவும் அந்தரங்கத்தில் ஒளித்து வைத்திருந்ததுமன்றி, என்னை யும் அதைப்பார்த்து முத்திபெறவொட்டாமல் தடுத்தீர் ஆனதால், இப்போது நான் உமக்குச் சொல்லவேண்டியது என்னஉண்டு? என் இருதயத்திலுள்ள இரண்டொரு வார்த்தைகளை இப்போது

உம்மிடஞ் சொன்னால், பொல்லாங்கு விளையுமேயன்றி, பிரயோஜனம் ஒன்றுமில்லை. மோக்ஷவாழ்வில் இருக்கும் கருணாலயமாகிய முஹம்மதுநபியுடைய நாமதேயத்தைக் கண்டறியா வண்ணம் புத்திரனாகிய எனக்கு நீர்வஞ்சித்து மறைத்த காரணத்தினால், உமது முகத்தை எறிட்டுப் பார்ப்பதற்கு என்மனம் வெட்கி அருவருத்து துணுக்குறுகிற தன்றி, விபரீதமான விஷயம் ஒன்றும் எனக்கு வந்து சம்பவிக்க வில்லை'' என்று சொன்னேன். நான் இவ்வாறு சொன்ன சன்மார்க்கமான சொற்களனைத்தும் என் தந்தைக்கு முற்றிலும் வேம்பா யிருந்தது. அதனால் அவருக்கு என்மேலிருந்த புத்திர வாஞ்சையான இன்பம் பற்றின்றித் தொலைந்தது. உடனே அவர் தம்முடைய அவிவேகத்திற்கு ஒத்தபடி, பொறாமை மேற்பட்டுக் கண்கள் சிவந்து, சினம்மீறி, வெறிகொண்டவனைப்போல என்னை உறுக்கிப் பார்த்தார்; அப்பார்வையால் நான் எள்ளத்தனையும் அஞ்சவில்லை. பிறகு ஆருச்சினங் கொண்ட என் தந்தை என்னை விளித்து, 'மதி கெட்டவனே, முஹம்மது என்னும் சொல்லை இனி உன்நாவினால் சொல்லாதே' என்று சொல்லி என் முகம், கை, கால் என்று பாராமல் கண்டபடி என்னையடித்து நிலத்தில் வீழ்த்தி, பகைவர்களுக்கும் மனம் சகிக்காத நிந்தனை வார்த்தைகளால் தூஷித்து, பலவாறு அக்கிரமம் பண்ணினார். அவர் அம்மட்டோடு விட்டுவிடவில்லை. அடிப்பார்; போவார்; மறுபடியும்வந்து கால்களால் உதைப்பார்; தம் இரு கரங்களையும் கொட்டி மூக்கில்வைத்து நகைப்பார்; ஆச்சரியப் படுவார்; இதழ்களை உதிரஞ் சிந்தக் கடிப்பார்; 'பயலே, உன் உயிரைக் கசக்கி அந்தரத்தில் போக்குகிறேன் பார்' என்று ஆங்கரிப்பார். சீறுவார்; மனம் நோவார். இவை மாத்திரமா? இன்னும் அவர் என்னை உற்றுநோக்கி வற்புறுத்தி தடியொன்றை தூக்கி என் தலைக்குமேலாக ஓங்கிக்கொண்டு, 'துஷ்டனே இதோ உன் உடலைப் பொடிபொடியாக நொறுக்குகிறேன் பார்' என்று சொல்லி, ஒரு இமைப்பொழுதிற்குள் அநேகந்தரம் தம்மீசையை முறுக்குவார்; வாளையெடுத்து அதன் புறத்தினால் அடிப்பார்; சற்றுநேரம் தரையில் இருப்பார்; மறுபடியும் கடுகடுத்துக் கோபமாய் ஆடையை இடுப்பில் இறுக்கிக் கொண்டு எழுந்திருப்பார்; ஓடிவந்து உதைப்பார். நபியே, என் தந்தை என்னை வருத்தின வருத்தம் கொஞ்சமல்ல. மறுபடியும் அவர் அங்கே நிற்பவர்களைப் பார்த்து

"அருமையான தவஞ்செய்து பெற்றெடுத்து, கண்ணை இமைக் காக்கும் பாவனையாய்க் காத்து, இருதயத்திற்குள் இருத்தி, மேனி வருந்தா வண்ணம் ஆதரித்து இவனை வளர்த்தேன். அப்படி பெற்றுவளர்த்த தகப்பனாகிய என்சொல்லை மீறி அதிக்கிரமித்து, வஞ்சனைகாரனாகிய முஹம்மது உடைய பெயரைச் சொல்லித் துதித்துக் கொண்டிருப்பதால், இவ்விதத் துஷ்டன் இவ்வுலகத்தில் இனி இருந்தென்ன? இறந்தென்ன?'' என்று சொல்லி முன்னிலும், பலமடங்கு அடித்தும், மிதித்தும், உதைத்தும் பலவாறு துன்பப் படுத்தினார். அவர் அடிக்கும் அடிகள் ஒன்றிலாவது என் உடல் அதிர்ந்து வருந்தவில்லை; அவர் நிந்திக்கும் நிந்தனைகளால் என்மனம் தளரவுமில்லை. அவர் செய்யும் இவ்வித நிஷ்டூரங்களில் நான் தாங்கள் திருநாமத்தை மறந்து போகவில்லை. அவர் அடிக்குந்தோறும் 'யாமுஹம்மது!' என்று அடிக்கடி சொன்ன வண்ணமாயிருந்தேன். நான் இப்படி சொல்லுந் தோறும் என் தந்தை என்னை மேலும் மேலும் உக்கிரம் கொண்டு அடித்தார். அன்று முழுவதும் என்னைப்பலவாறு அடித்தவண்ணமாயிருந்து, அன்றிரவிலும் சலிப்படையாமல் அடித்து, அடுத்த நாட்காலை தொடுத்தும் அடிக்க ஆரம்பித்தார். இவ்வாறு என் தந்தை என்னையடித்தது ஒருநாள் இரண்டுநாளல்ல; பலநாள் வரையும் அவருக்கு இதுவே தொழிலாயிருந்தது. பிரதிதினமும் தங்களின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதே எனக்கு வேலை; அத்தொனியைக் கேட்குந் தோறும் அடுத்தடுத்து ஓடிவந்து என்னையடித்து பங்கப்படுத்துவதே என் தந்தைக்கு வேலை; இந்த கன்றாவியைப்பார்த்து சகிக்காமல் கண்ணீர் சொரிய அழுது கொண்டிருப்பதே என் தாய்க்கு வேலை; இக்கூக்குரலின் புரளிகேட்டு ஓடிவந்து பார்த்து மனமிரங்கி நிற்பதே உறவின் முறையர்களுக்கு வேலையுமாயிருந்தது. நாள்தோறும் இதே அமளியா யிருப்பதால், ஒருநாள் இக்கொடுமையைக் கண்டவர் கேட்டவர் அனைவரும் திரண்டு, எங்கள் மனைக்குள் வந்து என் தந்தையை நோக்கி "பண்டிதரே! நீர் என்ன கருமம் செய்கின்றீர்? புத்திரர்கள் யாதும் ஒரு குற்றங் குறைசெய்தால், கண்சாடை கைசாடையா உருட்டி கோபித்து விடுவதுதான் தந்தைகளுக்கு இலக்ஷணம். அப்படி யன்றி, எந்த காலத்திலும் இதேவேலையாய் நிஷ்டூரம் செய்து கொண்டிருப்பது நியாயமல்லவே. இதைப்

பெரியோர்கள் கேட்டால் என்ன சொல்லுவார்கள்? போதும், இம்மட்டோடே உமது சினத்தை யடக்கும்; உமது குமாரனுக்குச் செய்யும் தீங்கை நிறுத்தும்; அவன் மிகவும் தண்டிக்கப்பட்டிருக்கிறான்" என்று சமாதானம் பண்ணினார்கள். அப்போது என் தந்தை அவர்களை நோக்கி "பந்துக்களே, நீங்கள் சொன்னது நியாயந்தான். ஆனாலும், நமக்குரிய தொன்று தொட்டுள்ள மேலான மார்க்கத்தை விட்டு விலகி முஹம்மது என்பவனுக்கு இவன் வழிப்பட்டு விட்டான். ஆனபடியால், இப்போது இவன் 'இனிநான் அந்த முஹம்மதை நினைக்கவுமாட்டேன், அவனுடைய நாமத்தை நாவினால் சொல்லவுமாட்டேன்' என்று பிரமாணிக்கம் பண்ணி மீளுவானேயானால், நான் அவனுக்குச் செய்யும் தீங்கை விட்டொழிவேன். அப்படிச் செய்யாவிட்டால், எவ்விதத்திலும் இவனுடைய ஆவியைப் போக்கடிப்பேன்" என்று கூறினார். இச்சொல் அவர்களுக்கு இதமாயிருந்தது. ஆனபடியால் அவர்கள் மூதாட்கள் கொண்ட வழிபாட்டை மாறி விரோதிக்கும் பாவிகளைத் தண்டனைக் குட்படுத்துவது யாருக்கும் பொதுவே என்று எண்ணிக் கொண்டு, என்னை நோக்கி "விவேக சாதுரியமுள்ள கபுஹாபே! பூர்வீக காலந்தொட்டுள்ள மூதாட்களும், பிதாமாதாக்களும் பற்றி நின்று ஒழுகிவந்த மார்க்கத்தை அறவெறுத்து, புதுவேதமும், புதுமார்க்கமும் தனக்குக் கடவுளால் கிடைத்தன வென்று மக்கமா நகரத்தில் பிறந்த முஹம்மது என்பவன் பிதற்றிக்கொண்டு திரிவதால், அவன் பெரியோர்களாலும் குடும்பத்தாராலும் நிந்திக்கப் பட்டிருப்பது உனக்குத் தெரியாததல்லவே. அவ்வித இழிவடைந்த அந்த முஹம்மது பேரில் நீ விசுவாசங் கொண்டு, அவனுடைய பெயரைச் சொல்லுவது புத்தியல்ல. அது உனக்கு வமிச பரம்பரையாய் வடுவாய் விளங்கும். மானிடப் பிறவியாய்ப் பிறந்து விளங்கும் ஒருவன், தருமார்த்தமான காரியங்களில் பிரவேசித்துக் கல்விமானென்று நல்லோர்களால் மதிக்கப்பட்டு முத்தியடைவதெல்லாம் தகப்பனிட்ட கட்டளைக்கு அமைந்து நடப்பதால் உண்டாவதன்றி, மற்றபடியல்லவே! நீ கற்ற எத்தனையோ நூல்களில் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' யென்பதை அடுத்தடுத்துக் கண்டிருப்பாய். ஆனபடியால் நீ தந்தைக்குக் கீழ்ப்படிந்துதான் நடக்க வேண்டும். உன் தந்தை உன்பேரில் மிகப் பிரீதியுள்ளவர். அவர் இப்போது இவ்விதம் உன்னை உக்கிரமாய்த் தண்டிப்ப

தெல்லாம், நீ சன்மார்க்கத்தில் வரவேண்டு மென்னும் நோக்கம் பற்றியேயன்றி, உன் பேரில் பக்ஷம் அற்றல்ல. ஆகையால் கபுஹாபே! நீ நன்றாய் ஆராய்ந்துபார். அவர் உனக்காக எவ்வளவு பாடுபட்டார்! அப்படியிருக்க, நீ அவர் உள்ளத்திற்கு வெறுப்பு தோன்ற நடப்பது நியாயமல்ல. நீ மிகக் கற்றுத் தெள்ளத்தெளிய ஆராய்ந்த கூர்மதியுள்ளவன். உனக்கு நாங்கள் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. வேண்டாம், இனிமுஹம்மது என்னும் சொல்லை நீ சொல்லாதே. இவ்வூரிலுள்ள சர்வ ஜனங்களுக்கும் பொருத்தமல்லாத அச்சொல்லை, உன் தந்தைக்கும் பிரீதியற்றதென்று கண்டிருந்தும், நீ ஒரு பொருளாக மதித்துச் சொல்லத் துணிந்து நிற்பதெல்லாம் உன் சிறு பிராயத்தின் தன்மையாலன்றி வேறல்ல. ஆகையால் கபுஹாபே! இம்மட்டோடே நிறுத்திவிடு. உன் தந்தையின் அன்பை பெற்றுக்கொள்; அதனால் உனக்கு அளவற்ற நன்மை கிடைக்கும்" என்று சொன்னார்கள். நபியே! இவர்கள் இவ்வாறு என் தந்தையின் சினம் தணியும் படிக்கும், என் தாயின் சஞ்சலம் நீங்கும்படிக்கும், நேரிட்டிருக்கும் வில்லங்கத்திருந்து நான் மீட்சி பெறும்படிக்கும் சொன்ன இச்சொற்களை நான் கேட்டு அவர்களை நோக்கி "கனவான்களே, நீங்கள் சொன்னவையெல்லாம் வாஸ்தவமேயாம். ஆனாலும் நான் விசுவாசங் கொண்ட முஹம்மது சாமானியமான மனிதர்களிலுள்ளவரல்ல. அவருடைய பாதம் நிலத்தில் தோயாது. நிழல் தோன்றாது. கருமேகமொன்று எப்போதும் அவருக்குக் குடையிடும். கஸ்தூரிவாசம் அவருடைய திருமேனியில் என்றும் பரிமளிக்கும். அவரது தேககாந்தியும், அவயவ லட்சணங்களும் ஒப்பில்லாதவை. இவ்விதப் புதுமைகளெல்லாம் அந்த முஹம்மது நபிக்கேயன்றி, மற்ற நபிமார்களுக்கு கிடைக்கவில்லையே. நீங்கள் நன்றாயறியுங்கள். திமஸ்ஷ் நகரத்து அதிபதியாகிய ஹபீபு அரசரின் விருப்பத்தின் வண்ணம், அமாவாசை யிரவில் பூரணச் சந்திரன் உதயமாய், அந்த முஹம்மதுக்கு எதிர்வந்து நின்று, அவருடைய கீர்த்திப் பிரதாபத்தைப் பகிரங்கத்தில் சொல்லி, கலிமாவையும் ஓதி வசனித்து மீண்டது என்னும் மகாபெரிய அற்புதத்தைக் கேட்கும் யாருக்குத்தான் அவர் நபியோ அல்லவோ வெனச் சமுசயமுண்டாகும்? சொல்லுங்கள் பார்ப்போம். நியாய சாஸ்திரப் பிரகாரம் எனக்கு நல்லறிவு புகட்டவந்த விவேகிகளே! இன்னுமொன்று சொல்லுகிறேன்

கேளுங்கள்: கடைகாலத்தில் மக்கமா நகரத்தில் முஹம்மது என நபியொருவர் பிறப்பார். அவருடைய குர்ஆன் வேதத்தையும், இஸ்லாம் மார்க்கத்தையும் தொடர்ந்தவர்கள் ஆத்மரட்சை பெற்று முத்தியடைவர்களென்று, முன்னுள்ள தௌறாத், ஜபூர், இன்ஜீல் என்னும் இம்மூன்று வேதங்களும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாய்த் தெளிவுபடக் கூறுகின்றன. இதைக்கண்டு அறிந்திருக்கும் யார்தான் மறுத்துப் பேச வாய்த்திறப்பார்கள்? வேதாகமசாஸ்திரப் பயற்சியில்லாத மௌடீகர்கள் தாம் இதற்கு மறுதலையாய்ப் பேசுவார்கள். உண்மையான விஷயத்தை நிராகரிப்பது உலகத்திற்கு இழிவாகும். இவற்றையெல்லாம் நான் நன்றாயறிந்திருந்தும், உங்கள் போதனைக்கு உட்படுவேனென்று நீங்கள் நினைக்காதீர்கள். என் உடலைவிட்டு உயிர் நீங்கும் பரியந்தம் இந்தச் சாதனையை நான் விடமாட்டேன். இப்போது என் தந்தை என்னை வருத்துவது மாத்திரமல்ல; இன்னும் அவர் ஜாதியாராகிய யூதர்களனை வரும் ஒருங்கு திரண்டு, இதனிலும் பலமடங்கு உக்கிரங்கொண்டு என்னை நிஷ்டூரம் பண்ணும்படி நீங்கள் சொன்னாலும் சரி. நான் முஹம்மது நபியின் ஒப்பற்றகலிமாவைச் சொல்லிக்கொண்டிருந்து மரணமடைந்து, மோட்சத்திற் சேர்வேனே யன்றி நீங்கள் சொல்லும் சொற்களால் மனம் வேறுப்பட்டு, நரகத்திற் போய் விழமாட்டேன்" என்று மிக உறுதியுடன் சொன்னேன். நான் சொன்ன தைரியமான இந்த வார்த்தைகளை அவர்கள் கேட்டு அட்டகாசஞ் செய்து, இந்தப் பாவி நாம் சொல்வதை சிந்தித்தறியவில்லை. இவனுக்குப் பழவினையால் நேரிடும் துன்பத்தை மாற்றக்கூடிய திராணியுள்ளவர்கள் யார்? என்று என்மேல் சினங்கொண்டு, என் தந்தையை நோக்கி அவருடைய இதயத்திற்கு ஒத்த வண்ணமாயும் எனக்கு மேலும் மேலும் வில்லங்கம் விளையும் படியும் சொல்லுகின்றார்கள்:—

சாஸ்திர விற்பன்னராகிய பண்டிதரே! நீர் உமது புத்திரனைப் பயமுறுத்திக் கண்டித்து அடக்கி வளர்க்காமல், அறுசுவை பாதார்த்தத்துடன் நெய், பால், தயிர், முப்பழம், சர்க்கரை முதலிய நல்லுணவுகள் சேர்ந்த உயர்தரசாதம் ஊட்டி, பிரகாசம் விளங்கும் பட்டு வஸ்திரம் அணிவித்து, உல்லாசமாய் உலாத்தித்திரியும் வண்ணம் அவன் மனஞ்சென்ற வழியில் விட்டு வளர்த்தபடியாலல்லவா அவனுக்கு இத்தனை தூரம் குறும்பு செவிட்டது? நீர்

பிள்ளை என்னும் வாஞ்சையை மனதில் அமைத்திராமல், உமது கண்கள் களிக்க அலங்கரித்துச் செல்வ பிள்ளையாக வளர்த்துக் கெடுத்துவிட்டீர். அதனாலேதான் அவன் கர்வம் கொண்டு, நாம் பாக்கியவானாயிற்றே நம்மை யார் என்ன செய்யக்கூடுமென்று இறுமாந்து வெறிபிடித்து, தகப்பன் என்னும் அச்சஞ் சிறிது மின்றி, உமது கொள்கைக்கும், உமது கோத்திரப் பிதாக்களின் கொள்கைக்கும் நேருக்கும் முற்றிலும் மாறுபட்டு, உமது தண்டனையை திரணமாகவும் மதிக்காமல், எவர் மனதுக்கும் இதந்தராத துர்நாமத்தை சொல்லிப் புலம்பத்தொடங்கினான். நீர் அவனைச் சிறுபிராயத்திலேயே கண்டித்து வளர்த்திருந்தால் இப்படி நேரிட்டிராது. அவன் தான் பிடித்த பிடியை விடாது சாதிக்குந் தரத்தில் மீறிப்போனபடியால், அவனுடைய சேஷ்டைக்குத் தக்கபடி செய்யவேண்டுமன்றி, இப்போது அடித்து வருத்திவரும் தண்டனை சரியல்ல. அவன் கொண்ட கொள்கையை தவிர்ப்பதற்குத் தகுந்த உபாயமொன்று உண்டு. அதாவது, அவன் உடுத்திருக்கும் உயர்தரமான ஆடைகளையெல்லாம் உரிந்துகொண்டு, ஒரு கருப்பு கம்பளத்தை மாத்திரம் போர்த்தி, அந்தகாரமான பாழறையில் கொண்டு போய் அடைத்துவைத்து, ஒருவர் முகத்தையும் பார்க்கவிடாமல் உப்பை அதிகமாகக் கலந்து சமைத்த போஜனத்தில் ஒருபிடியும் உவர் நீர் ஒருபிடியுமாக, மூன்று நாளுக்கு ஒரு தடவை கொடுத்து வரவேண்டும். இன்றுதொட்டு இவ்விதம் நீர் செய்து வருவீரானால் சொற்ப தினத்தில் அவன் தான் கொண்டிருக்கும் கர்வம், வெறி, மதம் அனைத்தையும் விட்டு விலகி, சன்மார்க்கத்தில் இலகுவில் மீண்டுவிடுவான். அதனால் தீங்கொன்றும் நேரிடாது. இதுதான் உத்தமம் என்றார்கள். நாயகமே! அந்தப்பாம சண்டாளர்கள் சொன்ன சொல் என் தந்தைக்கு மிகப்பொருத்தமாயிருந்தது. அதற்கு எனது மாதாவும் உடன்பட்டாள். அடுத்தநாள் காலையில் அவ்வாறே என் தந்தை, நான் உடுத்திருக்கும் ஆடைகளைக் களைந்து கம்பளத்தால் போர்த்து, பாழடைந்த இருளறையில் கொண்டுபோய் அடைத்து, மூன்று நாளுக் கொருதரம் உப்புக்கலந்த போஜனமும், உவர்நீரும் மிகக் கொஞ்சமாகக் கொடுத்துவந்தார். தமது பந்து ஜனங்களின் சொற்பிரகாரம் மற்றற்ற கசப்பான போஜமும், உவர் நீரும் கொண்டுவந்து மூன்றுநாளைக்கு ஒரு தடவையாக வைக்கும் போது, அந்தகாரமான அவ்வறைக்குள் கொண்டுவந்து வைத்துவிட்

டுப்போகும் அரவாறிந்து, என் கைகளால் தடவிப்பார்த்துப் பாத்திரத்தைத் தூக்கி, அதில் இட்டிருக்கும் போஜனத்தில் கொஞ்சமெடுத்து நாவில் வைப்பேன்; அது என் நெஞ்சுபரியந்தம் விஷமேறுவதுபோலக் கசக்கும். அதனால் அச்சாதத்தை உமிழ்ந்துவிட்டு அந்நீரில் கொஞ்சம் குடிக்கலாமென்று வாயில்வைப்பேன்; அதுவும் கொடிய நைப்பாய்க் கைக்கும். என் தந்தை எனக்களிக்கும் கிட்டிமையான போஜன பானத்தின் கைப்புக்கு உவமைசொல்ல, இவ்வுலகில் அவ்வளவு கசப்பான பதார்த்தம் ஒன்றுமில்லை. அக்கசப்பின் கொடுமையை சொல்லும்போது, கேட்பவர்களின் செவிகள் எல்லாம் கைப்பேறும். இவ்விதக் கொடிய கைப்புள்ள போஜனத்தைப் புசிக்கவும், கடல் நீரிலும் பலமடங்கு மேற்படக் கசக்கும் உவர் நீரைப் பருகவும், பல நாள் பட்டினிக்காரனுக்கும் மனம் பொருந்தாது. ஆனபடியால், மூன்று நாளைக்கு ஒரு தடவை கொண்டுவந்து வைக்கும் அந்தப் பாழும் போஜனத்தைத் தீண்டிப் பார்க்கவும் கருதாமல், சில தினங்கள் வரையும் பட்டினி கிடந்து வேதனைப்பட்டேன். எத்தனை நாள் அப்படி பட்டினி கிடக்கக் கூடும்? என்னால் பட்டினி கிடந்து சகிக்கமுடியவில்லை. சில நாள் பட்டினியால் உடலொடுங்கித் திராணிகுன்றி, முடிவில் ஆற்ற மாட்டாதவனாய் யிருந்தேன்.

சரித்திர புராணம்.

அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இருளடை மனையின் முன்ன ரிருந்தபா ளிதத்தை யேந்திப்
பரிவினல் லமுத மாகத் தருகெனப் பணிந்து நீங்கா
வரிசைநங் நபியே நும்பேர் பற்பல்கால் வழுத்தி வாழ்த்தி
யரிதினிற் கலிமா வோதி யன்னையா லருந்தி னேனால்.

வசனம்.

ஒரு தினம் அன்றுகொண்டு வந்து வைத்த போஜனத்தையும் உவர்நீரையும் கையிலெடுத்து ஏந்திக்கொண்டு, தேவரீராகிய தங்களின் திருநாமத்தைச் சொல்லி, 'மகத்தான நபியே! தமியேன் பட்டினிகிடந்து வருந்துவது தங்களுக்கு சித்தமாயிராது ஆனபடியால், நான் பசிதீரப் புசித்து ஜீவகளை திரும்வண்ணம் இந்தக் கைப்பான போஜன பானத்தை இன்பமாக்கித் தரவேண்டும்,' என்று

பிரார்த்தித்து, கலிமாவை ஓதிக்கொண்டிருந்தேன். இவ்வாறு சற்றுநேரம் பிரார்த்தித்துப் பிறகு அந்த போஜனத்தில் சிறிதை எடுத்து நாவில் வைத்துச் சுவை பார்த்தேன்; அதைப்போஜனமும் நீரும் அச்சமயம் தேவாமிர்தமாக மாறியிருந்தன. நிற்பந்தமான சிறைச்சாலையில் பட்டினி கிடந்து வருந்தி மாண்டு போவதற்கு சித்தமாயிருக்கும் எனக்கு, அந்த கைப்பான போஜனமும் நீரும் தேவாமிர்தமா யிருந்தபடியால், எனது உள்ளங்கொண்ட உவகைக்கு அளவில்லை. உடனே நான் ஆநந்தமுற்று அந்த அமுதத்தை புசித்து, நீரையும் பருகினேன். அவற்றின் இன்பம் என் உடலெங்கும் பரந்து பூரிக்கப் பண்ணிற்று. மதுரத்தில் நிகரில்லாத தேவாமிர்தத்திற்கு சமானமான ஒரு பிடிச் சாதமும், ஒரு மிடர் நீரும் என் வயிற்றில் நிரம்பினபடியால், பத்து நாள் வரையும் பசி தோன்றவில்லை. அந்த ஒருபிடிச் சாதமும் நான் உண்ண உண்ணப் பசிதீரும்வரையும் வளர்ந்து கொண்டே வரும். பசிதீரப் புசித்த பின் பத்துநாள் செல்லும் பரியந்தம் பசியெழாது. இதற்கிடையில் என் தந்தை கொண்டுவந்து வைக்கும் போஜனத்தை நான் திரும்பிப் பார்க்கிறதில்லை. பத்து நாட்கள் சென்றபின் அச்சமயத்தில்கொண்டு வந்து வைத்த சாதத்தை யெடுத்து மேற்சொன்னவாறு பிரார்த்தித்து புசிப்பேன். நபியே! தங்களின் ஒப்பற்ற கருணையினால், நான் அச்சிறைசாலையில் ஆநந்தமுற்று இருந்தேனேயன்றி, குறையொன்று மில்லை. அச்சிறையிருப்பு எனக்கு மனோரம்மியமாகவே இருந்தது. இவ்வாறு நான் சந்தோஷத்துடன் தந்தையிருத்திய சிறைச்சாலையி லிருக்குங் காலத்தில், ஒரு நாள் என் தந்தை எனது சித்தப்பிரமை தீர்ந்து குணப்பட்டேனோ இல்லையோவென்று அறிவதற்கு விரும்பி, நான் இருக்கும் சிறைச்சாலைக்கு வந்து ஒரு புறம் ஒளித்துநின்று பார்த்தார். நான் என்றும்போல 'யாமுஹம்மது! யாமுஹம்மது!!' என்று சப்தமிட்டுக் கொண்டே யிருந்தேன். அச்சப்தம் அவர் செவியில் விழுந்தமாத்திரத்தில், இவனுக்கு இன்னும் இப்பித்தம் தெளியவில்லையா வென்று வெகுண்டுபோய், முன்னிலும் மும்மடங்கு அதிகமான கைப்பிட்ட அன்னபானங் கொடுக்க ஆரம்பித்து அவ்வாறே கொடுத்து வந்தார். அவர் எவ்வளவு அதிகமான கைப்புக்கலந்த பதார்த்தங்களை கொடுத்தபோதிலும், அதனால் எனக்கென்ன கஷ்டம்! அத்தனையும் அமிர்தமாய் இன்பந் தருவதால், அதைப்பற்றி எனக்கு மனவருத்தம் சிறிதுமில்லை.

தங்களின் பாதாரவிந்தங்களைக்கண்டு, என் துன்பங்க ளெல்லாம் விலகி, இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்க்கையும் பெற்றேன்" என இவ்வாறு கபுஹாபு என்பவர் தமது வர்த்தமானங்கள் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார்.

இந்த வர்த்தமானத் தோரணை எல்லாவற்றையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு மிக சந்தோஷமுற்றார்கள். அப்போது உடனே அல்லாஹு தஆலாவின் உத்தரவு கொண்டு ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இடத்தில் வந்தார்.

வானவர் பெருமானாராகிய ஜிப்றயீல் (அலை) நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, "அஸ்ஸலாமு அலைக்கும் யாறஸூலல்லாஹ்! தங்களுக்கு அல்லாஹு தஆலா சலாம் சொன்னான்" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "இப்போது அல்லாஹு தஆலா 'நபிமார்களி லொருவராகிய ஐயூபு அலைஹிஸ்ஸலாமையும், இந்த கபுஹாபு என்பவரையும் ஒருவருக் கொருவர் சமானமாக்கினேன்' என்று தங்களுக்கு அறிவிக்கச் சொன்னான்" என்று கூறிவிட்டு வானுலகம் சென்றார். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள், ஜிப்றயீல் வந்து சொன்ன சமாசாரத்தை தங்கள் சபையிலுள்ள அஸ்ஹாபிகளுக்கு அறிவித்து, கபுஹாபு என்னும் சிறப்பான பக்தரை மிகவும் உபசரித்து ஆசீர்வதித்து, அவரை யழைத்து வந்த அம்மாறையும் புகழ்ந்து ஆசீர்வதித்தார்கள். இந்த ஆச்சரியகரமான வர்த்தமானத்தை கேட்டுக் கொண்டிருந்த அஸ்ஹாபிகள் அனைவரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினார்கள்.

58-வது அத்தியாயம்.

விருந்திட்டு ஈமான் கொள்வித்தது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கருஞ்சுட்டாரு மனத்துடைய காபிர் குலத்தைக் கருவறுத்து
வருங்கட்டாண்மை யுளதோழர் மகிழவருத்தி வித்தவர்க்குத்
தருங்கட்டாத கொடைக்கரமு ஸம்மில் முகம்மில் முஹம்மதனார்
விருந்திட் டீமான் கொள்வித்த வியப்பையெடுத்து விளம்பிடுவாம்.

இதன் பொருள்.

கருமையான எண்ணம் பொருந்தும் மனத்தையுடைய காபிரீன்கள் குலத்தை, யுத்தத்திற் கருவறுத்துவரும் பேராண்மையுள்ள தங்களுடைய தோழன்மார்கள் மனமகிழ, வீட்டிற்கு அழைப்பிவித்து அவர்கட்கு, கற்பகதருவும் சம்பந்தப்பட வொவ்வாதகொடைகொடுக்கும் முழங்காலுக்கு நீண்ட இராஜானுவாகு வென்னுங் கையையுமுடைய முஸம்மில், முகம்மில், முஹம்மதென்னுந் திருநாமங்களையுடைய நபிநாயகமவர்கள், விருந்து கொடுத்து ஈமான் கொள்வித்த காரணமான அற்புதத்தை யெடுத்துச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மதிமுஹம் மதுதா யாமினக் குரிய
மாதுலர் பனீநச்சா றுகளின்
முதியரை யழைத்திந் நிலம்விலைப் படுத்தித்
தருகென மொழிதலு மெவர்க்கும்

புதியவ னெமக்கு விலைகொடுத் தருள்வ
னும்மிடம் பொருள் கரேளா மென்ன
விதமொடு முரைப்ப வவர்தமக் கெதிரி
னபூபக்க ரினி தெடுத் துரைப்பார்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், மதீனமாநகரத்தில் அபூ அய்யூபுடைய மாளிகையில் மனமகிழ்வுடன் இருக்குங் காலத்தில் ஒருநாள் தங்களின் தாயாராகிய ஆமினாவின் மாதுலராகிய பனீ நஜ்ஜாறுகளை அழைப்பித்து "நான் வரும்போது என் ஒட்டகம் படுத்துக்கொண்ட இடமாகிய உங்களுக்குச் சொந்தமான நிலத்தை, எனக்கு கிரயமாக்கிக் கொடுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "நபியே, எங்கள் காணியாகிய நிலத்தை தங்களுக்குக் கொடுக்கும் கிரயமாக மகத்தான அல்லாஹு தஆலா பிரதி செய்வான். ஆனபடியால் நாங்கள் தங்களிடத்தில் கிரயம் வாங்க மாட்டோம். தாங்கள் இனாமாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று உத்தரம் சொன்னார்கள். அப்போது அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள்,

அந்த பனீ நஜ்ஜாறுகளை நோக்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கி வாழ்தற்குக் கட்டும் மாளிகையின் நிலத்தைக் கிரயத்திற்குக் கொள்ளுவதுதான் உத்தமம்; ஆனபடியால் அந்நிலத்தை நீங்கள் விலைக்கே கொடுங்களென்றார்கள். அதனால், அங்குள்ளவர்கள் அந்த நிலத்திற்கு விலை பத்து தங்கக் காசுகளென்று தீர்த்தார்கள். உடனே அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள், பத்து தங்க காசுகளை யெடுத்து மேற்படி பனீ நஜ்ஜாறுகள் கையில் கொடுத்தார்கள். அவர்கள் அந்த நாணயங்களைப் பெற்றுக்கொண்டு, அந்த நிலத்தை அப்போதே நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு சொந்தமாக்கிக் கொடுத்தார்கள். நிலத்தை கிரயமாக்கிக் கொண்ட பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் வாசஞ் செய்வதற்காக ஒரு வீடும், அல்லாஹு தஆலாவைத் தொழுவதற்காக ஒரு சிறந்த மஸ்ஜிதும் கட்டும்படி உத்தரவு செய்துவிட்டு, தாங்கள் அபூ அய்யூபு உடைய மாளிகையிலேயே யிருந்தார்கள்.

இவ்வாறு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மனமகிழ்வுடன் இருக்குங் காலத்தில், ஒருநாள், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாங்களிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரராகிய அபூ அய்யூபை விளித்து, பசி தீர்வதற்காக உணவு ஏதுமிருந்தால் கொண்டு வாருங்களென்று கட்டளை பண்ணினார்கள். அப்போது அவர் தம் மனைக்குள்ளிருந்த சொற்ப உணவை கொண்டுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்வைத்து "யாறஸூலல்லாஹ்! இது இரண்டு பேர்கள் உண்ணப் போதும், அதற்கு மேற்பட்டவர்கள் உண்ண போதாது" என்றார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அதைத்தாங்கள் எடுத்து வைத்துக்கொண்டு, அபூ அய்யூபை நோக்கி "தாங்கள் இந்த மதீனமா நகரத்தில் கோத்திரத்தில் சிறந்த தலைவர்களில் முப்பது பேர்களை விருந்துண்ண அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டார்கள். உடனே அபூஅய்யூபு எழுந்து விரைந்து சென்று, இவ்விருந்துண்ணத் தக்கவர் இன்னார் இன்னாரென ஆராய்ந்து, முப்பது தலைவர்களை யழைத்து வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் முன் விட்டார். அந்த முப்பது பெயர்களும் காபிர்கள். அவர்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் உபசரித்து அழைத்துப் பந்திவைத்து, தங்களிடத்தி லிருக்கும் மேற்படிஉணவைக் கொடுத்து அனைவரும் உண்ணுங்களென்று சொன்னார்கள். அந்த முப்பது பெயர்களும்

மேற்படிஉணவை உவந்து வாங்கி, வயிறார உண்டார்கள். அவர்களனைவரும் வயிறு நிரம்பஉண்டு தீர்ந்த பின் அந்தஉணவு அப்படியே குறைவின்றி யிருந்தது.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உண்டிரு வருக்கிவ் வமுதென விருந்தோ
ரூரவர் முப்பது பெயருங்
கொண்டிட வமுதுங் குறைந்தில விவர்தங்
குறிப்பினை யெவர்வகுத் துரைப்பார்

கண்டிடாப் புதுமை புதுமையீ தென்ன
யாவரு மொருப்படக் கலிமா
விண்டன ரீமான் கொண்டசு ஹாபி
மார்களாய் வீடுபெற் றனரால்.

வசனம்.

இதையவர்கள் கண்டு, 'இதென்ன ஆச்சரியம்! நம்மிடம் உண்ணும்படி கொடுத்த உணவு இரண்டுபேர் உண்ணத் தக்கதன்றி, மூன்று பேர்களுக்கு காணமாட்டாதே. அவ்வளவு சொற்பமான உணவை நாம் முப்பது பேர் வயிறார உண்டோம். அதுவே மகா ஆச்சரியம்! அவ்வுணவு மறுபடியும் சிறிதும் குறையாமல் பழைய படியே இருக்கின்றதே, இது ஆச்சரியத்திலும் ஆச்சரிய மல்லவா? இந்த முஹம்மது மகத்தான கடவுளுடைய தூதர் என்பதற்கும், நபி யென்பதற்கும் யாதொரு தடையில்லை' யென்று வியப்புற்று, அந்த முப்பது பேர்களும் ஈமான்கொண்டு கலிமாச்சொல்லி முஸ்லிமானார்கள்.

பிறகு அந்த உணவு சிறிதும் குறையாமலிருந்ததால், நபி நாயகம் (ஸல்) அவர்கள் மறுபடியும் அபூ அய்யூபை விளித்து தாங்கள்போய் இன்னும் அறுபது பேர்களை விருந்துண்ண கூட்டி வாருங்களென்று உத்தரவு செய்தார்கள் உடனே அவர் எழுந்து போய் அறுபது பேர்களை தெரிந்தெடுத்து அழைத்து வந்து நபி நாயகம் (ஸல்) அவர்கள் சந்நிதியில் விட்டார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அறுபது பேர்களையும் பந்திவைத்து

மேற்படி யுணவைத் தங்கள் கையாலெடுத்து அவர்களிடம்கொடுத்து உண்ணும்படி யேவினார்கள். அறுபது பேர்களும் அதை வாங்கிக் குறைவின்றி, வயிறார உண்டு சந்தோஷப்பட்டார்கள். கொஞ்சமான உணவு அறுபது பேர்களுக்கு உண்ண உண்ணக் குறையாம லிருந்ததால், அவர்களுக் குண்டான மகிழ்ச்சியும், ஆச்சரியமும் மிகப் பெரியதா யிருந்தன. அதனால் அவ்வறுபது பேர்களும் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, "நாயகமே! சின்னஞ் சிறிய பாத்திரத்தில் மிகக் கொஞ்சமாக வைத்திருந்த போஜனம், தங்களின் சிறந்த கரங்கள் பட்டமாத்திரத்தில் அறுபது பேர்கள் உண்ணும் பரியந்தம் வளர்ந்து வந்து, அறுபது பேர்கள் வயிறாரஉண்டும் சிறிதும் குறையாமையால் இருக்கிறதே! இனி பேசவேண்டிய தென்ன? தாங்கள் நபிதான் என்பதற்கு திருஷ்டாந்தரம் வேறே வேண்டியதில்லை. தங்களின் சிறப்பான திருக்கலிமாதான் மானிடர்கள் ஆத்மரட்சை பெறத்தக்க அருமருந்து. அதற்கு ஈடு இவ்வுலகில் வேறொன்றுமில்லை" என வியந்து தோத்திரஞ் செய்து, அவ்வறுபது பேர்களும் ஈமான் கொண்டு முஸ்லிமானார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூ அய்யூபை நோக்கி, "நமது போஜனம் குறைவற்று முன்போலவே யிருப்பதால், தாங்கள் இன்னும் சென்று தொண்ணூறு பேர்களை அழைத்து வாருங்கள்" என்றார்கள். அப்படியே அவர் மதீனமா நகரத்து வீதிகள் தோறுஞ் சென்று, தொண்ணூறு பேர்களை அழைத்துக் கொண்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் சந்நிதானத்தில் விடுத்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள், அந்தத் தொண்ணூறு பேர்களையும் உட்காரவைத்து, மேற்படி உணவை அவர்களிடம் கொடுத்து, "நான் தரும் இந்தப் போஜனத்தைப் புசித்துவிட்டுப் போங்கள்" என்றார்கள். உடனே அந்தத் தொண்ணூறு பேர்களும் பந்தியிருந்து, அந்த சொற்ப உணவை வயிறாரக் கொஞ்சமும் குறைவின்றிப் புசித்தார்கள். தொண்ணூறு பேர்கள் புசிக்குந் தோறும் அது வளர்ந்து கொண்டே வந்தது. புசிக்கப் புசிக்க வளர்ந்து, புசித்துத் தீர்ந்து வயிறுகள் நிரம்பின. பின்னும் அப்போஜனம் முன்னிருந்த நிதானத்திலேயே யிருந்தது. இவ்வற்புதத்தை மேற்படி தொண்ணூறு பேர்களும் கண் குளிரக் கண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களைத் துதித்து, பாததாமரைகளில் கண்களைவைத்து முத்தமிட்டு, இதயத்தில் இருத்தும் பொக்கிஷப்

பொருளிலும் சிறந்த திருக்கலிமாவைச் சொல்லி மிகுந்த மனோரம்மியத்துடன் முஸ்லிமானார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் அன்று பகலில் தம்மிடமிருந்த இரண்டு பேர்கள் உண்ண நக்கதான அற்ப உணவைக் கொண்டு, மிகவும் வியக்கத்தக்கதாய் நூற்றெண்பது பேர்களுக்கு விருந்து கொடுத்து, அவர்களை இஸ்லாத்தில் சேர்த்துத் தங்களுக்கு அன்சாரீன்களாக்கிக் கொண்டார்கள் என்றும் மகா பெரிய அற்புதம் எங்கும் பிரபலமாயிற்று. இதை கேள்வியுற்ற மற்ற அன்சாரீன்கள், முஹாஜிரீன்கள் எல்லாரும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் அற்புதத்திற்காக ஆச்சரிய முற்றுப் புகழ்ந்தார்கள். மிக இலகுவில் நூற்றெண்பது வீரர்கள் முஸ்லிமாய், அஸ்ஹாபிகளில் சேர்ந்தபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்களும் அகங்களித்து, மகத்தான அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து கொண்டு, அந்த அபூ அய்யூபின் மாளிகையில் தங்கி இருந்தார்கள்.

59-வது அத்தியாயம்.

உருபான் ஈமான் கொண்டது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

அகதானவ னருளால்நனி யழகார்திரு மதினா
நகர்மீதினில் நபிநாயக நலவாயெவர் களுமே
புகழோதிட மகிழ்வாயுறு பொழுதாயர்கள் குலனும்
உகுபானவர் வழிமேவிய வுயர்காரண மொழிவாம்.

இதன் பொருள்.

ஆயிரம் பெயர்களில் அஹத் என்னும் பெயரையுமுடைய அல்லாஹு தஆலாவின் அருளினால், மிகுந்த அழகுற்ற திருமதீனமா நகரில் நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களது நன்மையை யாவர்களும் புகழாக சொல்லும்படியாய், தாங்கள் மகிழ்ச்சிக் கொண்டு இருக்கும்போது இடையர் குலத்தவனான உகுபா என்பவன் நமது தீனுல் இஸ்லாம் மார்க்கவழியிற் பொருந்திய உயர்வான காரணத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மலிபெரும் புகழான் அபூ அய்யூப் மனையின்
மனமகிழ் திருக்குமந் நாளி
னிலைபெறு மனையும் பள்ளியும் வனைந்த
தெனுமொழி தொழிலவர் நிகழ்த்த
விலையுறும் பெயரிற் சைதையும் அபாரு
பிகையுநண் புடன்விரைந் தழைத்தே
யலகில்வண் புகழ்சேர் மக்கமா நகருக்
கனுப்பினர் முஹம்மது நபியே.

வசனம்.

நபிகள்திலகம் ஸெய்யிதுல் முர்ஸலீன் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள், மேற்படி அபூ அய்யூபின் மாளிகையில் வாசஞ்செய்து கொண்டிருக்கும் காலத்தில், பனீநஜ்ஜார்களிடத்தில் கிரயத்திற்கு வாங்கின நிலத்தில், கட்டளைப்பிரகாரம் ஒரு மாளிகையும், சிறந்ததேவாலய மொன்றும் கட்டிமுடித்தனர். இக்கட்டிடங்கள் கட்டிமுடிந்த சமாசாரத்தை கட்டியவர்கள் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சொன்னார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் தோழராகிய ஸைது என்பவரையும், அபூருபிகு என்பவரையும் அழைத்து, தங்களின் புத்திரிகளையும், மற்ற பந்துக்களிலுள்ள பெண்களையும் அழைத்துக் கொண்டு வரும்படி, மக்கமா நகரத்திற்கு அனுப்பினார்கள்.

பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் மக்கமா நகரத்தை விட்டு வந்தபின், அங்கிருந்து புறப்பட்டு வந்த முஹாஜிரீன்களில், சமுசார சகிதமாய் வந்தவர்கள் தவிர, தனித் தனியாய் வந்த மற்றவர்களை யழைத்து, புதிதாய் கட்டிய தேவாலயத்திற்கு அருகில் கூடாரங்களிட்டு அவைகளில் வாசஞ் செய்து கொண்டிருக்கும்படி உத்தரவு செய்தார்கள். அவர்க ளனைவரும் அக்கட்டளைப் பிரகாரம், அந்தப் புதிய ஆலயத்திற் கருகில் கூடாரங்கள் அமைத்து, அக்கூடாரங்களில் வாசஞ்செய்து கொண்டிருந்தார்கள்.

பின்பு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் உத்தரவுப்படி மதீனமா நகரத்திலிருந்து பிரயாணப்பட்ட ஸைது, அபூருபிகு என்னும்

இருவரும், மக்கமா நகரத்திற்குச்சென்று, அங்குள்ள பகைவராகிய காபிர்கள் அறியாவண்ணம், அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிரியநாயகியான சௌதா றலியல்லாஹு அன்ஹாவையும், அவர் புத்திரியாகிய ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவையும், அபூத்தாலிபின் மனைவியும் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயாருமாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவையும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் அருமைப் புதல்விகளாகிய ஜெயினபு றலியல்லாஹு அன்ஹா, றுக்கையா றலியல்லாஹு அன்ஹா, உம்மு குல்தூம் றலியல்லாஹு அன்ஹா, பெண்கள் சிகாமணி பாத்திமா றலியல்லாஹு அன்ஹா என்னும் இந்நால்வரையும், அடிமைகள் இருவரையும், இரகசியமாக அழைத்துக்கொண்டு மதீனமாநகரத்திற்கு வந்தார்கள்.

மக்கமா நகரத்திலிருந்து வந்தவர்களை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டித்தழுவி உபசரித்தார்கள். மக்கமா நகரத்தை வெறுத்துவிட்டு நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் மதீனமா நகரத்தில் வந்து குடியேறிய முஹாஜிரீன்களுக்கு சொந்தமாயிருந்த வீடுகள் எல்லாவற்றையும், காபிர்கள் விற்றுவிட்டார்களென்னும் சங்கதியை அங்கிருந்து வந்தவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார்கள். இதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, அஸ்ஹாபிகளை நோக்கி, ''எனது கிருபையுள்ள முஹாஜிரீன்களுக்கு அல்லாஹு தஆலா சுவர்க்க லோகத்து அலங்காரமான மாளிகைகளில், ஒன்றுக்கு ஆயிரம் வீதம் அவர்களின் வீட்டுக்குப் பிரதியாகக் கொடுத்து விட்டான்'' என்றார்கள். இதைக்கேட்ட முஹாஜிரீனனைவரும் இருதயானந்தமுற்று நபிநாயகம் (ஸல்) அவர்களை தோத்திரம் பண்ணி வியந்தார்கள். மக்கமா நகரத்திலிருந்து வந்த பெண்களனைவரும், அவரவர்க்கென்று நியமிக்கப் பட்டிருந்த மனைகளில் குடியிருந்தார்கள். ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா தமது தந்தையாகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்கும் மனையி லிருந்தார்கள்.

அக்காலத்தில் மதீனமா நகரத்தில் புதுக்குடி யேறியிருக்கும் மக்கமாநகரத்து ஆடவர், பெண்டிர், சிறார் அனைவரும் தேக சௌக்கியமின்றி பிணியால் பீடிப்பட்டார்கள். இவ்வாறு அவர்களுக்கு சரீர சௌக்கிய முண்டாவதற்கு முகாந்திரம் ஒன்றிரண்டல்ல. இவர்

கள் மக்கமாநகரத்தி லிருக்கும்போது, நிற்பயமாய் வெளியில் வந்து போய்க் கொண்டிருக்க இடமின்றி, மனோரம்மியமற்று, சிறையி லடைக்கப்பட்டதுபோல் என்றும் நிற்பந்தமான ஸ்திதியிலிருந்தபடியாலும், பிறகு யாத்திரையாகி வரும்போது பகையர்கள் பின் தொடர்ந்து வருவார்களோ வென்னும் பயத்தினால் இராப்ப பகல் ஓய்வின்றி வருந்தி நடந்து வந்ததாலும், அக்காலத்தில் மதீன மாநகரத்தில் நானாவித வியாதிகளும் அடிக்கடி இருந்ததாலும், தண்ணீர் ஒவ்வாமையாலுமே இவர்கள் எல்லோரும் பிணியால் வருந்த நேரிட்டது. பெரும்பாலும் குளிர்ஜுரமே அதிக மும்முரமாய் எல்லாரையும் தாக்கிற்று. முஹாஜிரீன்களும், பெண்களும், சிறுபிள்ளைகளுமான மக்கத்தா ரெல்லாரும் குளிர்ஜுரங் கண்டு வருந்துவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து சஞ்சலமுற்று, இருகைகளையுமேந்தி "யா அல்லாஹ்! இந்த மதீனமா நகரத்திலுண்டாயிருக்கும் ஜுரநோயை அறப்போக்குவாயாக!" எனப்பிரார்த்தித்து துஆ இரந்தார்கள். அதனால், உடனே அனைவரும் ஜுரநோய் நீங்கி சுகமடைந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அன்று துஆ இரந்து கேட்ட பொருட்டினால், அந்த மதீனமா நகரத்தில் இது பரியந்தம் ஜுரநோய் சிறிதும் உண்டாகவில்லை. இன்னும்யுகமுடியும் பரியந்தம் அந்நகரத்தில் ஜுரநோய் உண்டாக மட்டா தென்பது மிகவுறுதியான பிரஸ்தாப சமாசாரம்.

பின்பு, நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள், மக்கமாநகரத்து முஹாஜிரீன்களையும் மதீனமா நகரத்து அன்சாரீன்களையும் பல வகைகளைக் கொண்டு சம்பந்தப்படுத்தி வைத்தார்கள். அதனால், இருதரத்தாரும் உடலும் உயிரும் போல ஐக்கியப்பட்டார்கள். ஒருநாள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் திருச்சபையில் கூடியிருக்கும் முஹாஜிரீன்கள், அன்சாரீன்கள், புறநகர் முஸ்லிம்கள் அனைவரையும் நோக்கி "எனது அருமையான அஸ்ஹாபிகளே! இப்போது நாம் அல்லாஹு தஆலாவை வணங்குவதற்காக ஆலய மொன்று கட்டி முடித்தோம். ஆனபடியால், இந்த றஜபு மாதம் முதற் கொண்டு இந்த மாதத்திலும், ஆஷூரு என்னும் முஹர்றம்மாதத்திலும் குறித்ததினங்களில் உபவாசவிரதம் இருந்து வாருங்கள். அன்றியும், இன்றுதொட்டு, தொழுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தினமொன்றுக்கு ஐந்து வேளைகளிலும்

பாங்கு சொல்லக்கடவீர்களாக" என்று கட்டளைப்பண்ணினார்கள். அப்படியே அஸ்ஹாபிகளனைவரும் நிறைவேற்றி வந்தார்கள்.

அக்காலத்தில் அலங்காரமும் மகிமையும் சிறந்து விளங்கும் ஒப்பற்ற மதீனமாநகரத்தில், உகுபான் என்பவன் ஒருவனிருந்தான். அவன் தொழில் ஆடுகள் மேய்ப்பதன்றி வேறல்ல. பிரதிதினமும் அவன் ஆட்டு மந்தைகளை நிரைநிரையாக சாய்த்துக்கொண்டு வனத்தில் சென்று மேய்த்துவருவதே வழக்கம். ஒருநாள் மேற்படி உகுபான் என்பவன் தன் ஆடுகளை சாய்த்துக்கொண்டு ஒருமலைச் சாரலில் பசும்புல் அடர்ந்த ஸ்தானத்தில் மேயவிட்டு, தான் கிளைகளடர்ந்த ஒரு மர நிழலில் உட்கார்ந்திருந்தான். அப்போது அவ்வாடுகள் பிரவாகம் பரந்த பாவனையாய்ப் பல இடங்களிலும் பரந்து மேய்ந்து கொண்டிருந்தன. தனது ஆட்டு மந்தை சிதைவற்றுப் பரந்து நின்று மேய்வதைக்கண்டு, தனது நிரையோட்டும் சிறுகோலும் கடைகாலும் பிடிக்கப்பட்டுள்ள வலக்கரத்தில் தலையை வைத்துக்கொண்டு நிலத்தில் படுத்துஅயர்ந்து தூங்கினான். அப்போது, அங்கு அடுத்துள்ள வனத்திற்குள் தின்பதற்கு ஒன்றும் அகப்படாமல் பட்டினி கிடந்து வருந்தின மகாபெரிய வேங்கையொன்று, அவ்வடவியை விட்டு வெளிப்பட்டு, அங்கு நிர்ப்பயமாய் மேய்ந்துகொண்டு நிற்கும் பரந்த ஆட்டு மந்தையைக் கூர்ந்து நோக்கிற்று. அச்சமற்று மேய்ந்து கொண்டிருக்கும் செம்மறியாட்டு மந்தையை அவ்வேங்கை கண்டமாத்திரத்தில், தன் பசிக்கு தக்கவுணவு கிடைத்ததென்று களிப்புற்று, அங்குள்ள ஒரு கற்பாறையில் பதுங்கி நின்று, கால்களை மடக்கி, உடலைச் சுருக்கி, வாலை நிமிர்த்துக்கொண்டு அவ்வாட்டு மந்தையில் பாய்ந்து, ஒரு ஆட்டைப் பிடித்தது. உடனே மற்ற ஆடுகள் அனைத்தும் திகில் கொண்டு பல திசையும் சிதறியோடின. அக்கினி மயமாய் விளங்கும் கண்களையுடைய வேங்கை, தான் பிடித்த செம்மறியாட்டைக் கவ்விக்கொண்டு போகும்போது, அதன் பயங்கரமான வாயிற் சிக்குண்ட அவ்வாடு, தன் வாயைத் திறந்து பலதரம் சப்தமிட்டு அலறிற்று. ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டபடியால் பெருந்தொனியோடு அலறும் தனது ஆட்டின் பெருங்குரல் அடுத்தடுத்து தன் காதில் விழுந்தபடியால், படுத்துறங்கும் உகுபான் என்பவன் நித்திரை தெளிந்து பதறி யெழுந்து, இது மரணத்தறுவாயில் சிக்குண்ட ஆட்டின் குரலேயன்றி வேறல்லவென்று கருதி, அங்குள்ள

ஒரு குன்றின் சிகரத்திலே நின்று நான்கு பக்கமும் கண்பரப்பி தன் ஆட்டு மந்தைகளை நோக்கினான். அம்மந்தைகளிலுள்ள ஒரு ஆடாவது அவன் கண்ணில் தோற்றவில்லை. அப்போது உகுபான் என்பவன் மனம் வருந்தி, 'நம் ஆட்டு நிரையனைத்தும் நெறிகெட்டு பலவழியும் போயின; இப்போது செவியதிரத்தக்க பெருங்குரலாய் ஆடொன்று அலறுகின்றதே, அது எவ்விடத்திலோ!' என எண்ணி அச்சிகரத்தை விட்டிறங்கி, ஆட்டின் குரலோசை கேட்கும் திசையைத் தொடர்ந்து அடவிக்குள் ஓடிப்போய்ப் பார்த்தான். பார்த்தபோது தனது ஆடுகளிலொன்றைப் பெரிய வேங்கை யொன்று கவ்விக்கொண்டு போவதைக்கண்டு, அவ்வாடு சினையாடாயிருந்ததால் மனமிரங்கிப் பதறி, மிக வெகுண்டு அவ்வேங்கையை வெருட்டிக் கொண்டும் அயலில் ஆடு மேய்க்கும் இதரஇடையர்களை விளித்துக் கூக்குரலிட்டும், அங்கிருக்கும் செடிகொடிகளைப் பற்றி அசைத்துக்கொண்டு அவ்வேங்கையைப் பின் தொடர்ந்துபோனான். உகுபான் என்பவன் பரபரப்பாய்க் கூக்குரலிட்டு அச்சமுறுத்தி வெருட்டிக்கொண்டு சென்றும் அவ்வேங்கை அஞ்சி பிடித்த ஆட்டை விடவில்லை. அதனால் அவன் மறுபடியும் நிலத்தில் கிடக்கும் கருங்கற்களை எடுத்து வேங்கையைத் துரத்தி எறிந்து, ஆர்ப்பரித்து கோலால் புடைத்துப் பலவாறு வேங்கைக்குப் பயமுறுத்தினான். உகுபான் செய்த பயங்கரமான செய்கைகளால் அவ்வேங்கை அஞ்சி தான் கவ்விக்கொண்டு போகும் ஆட்டை மெல்லவிட்டு விட்டு, அடவிக்குள் சென்று பதுங்கிக் கொண்டது. உடனே உகுபான் வேங்கையைத் துரத்தி ஆட்டைத் தூக்கிக் கொண்டு, மெதுவாக நடந்து, தான் பாடுபட்டு வேங்கையைத் துரத்தி யோடித் தவித்ததினால் இளைப்பாறுவதற்கு விரும்பி, அங்குள்ள கிளைகள் மலிந்த ஒருதருவின் நிழலில் வந்து, வேங்கை வாய்ப் பட்டு மீண்ட ஆட்டை அந்நிழலில் விட்டுத் தானும் உட்கார்ந்தான்.

உகுபான் என்பவன் இவ்வாறு தன் ஆட்டை மீட்டுக் கொண்டு வேங்கையை அடவிக்குள் துரத்திவிட்டு, மரநிழலில் வந்து இளைப்பாறிக்கொண் டிருக்கையில், முன் ஆட்டைப்பற்றி இழுத்துச் சென்ற அந்த வேங்கை, அங்குள்ள ஒரு குன்றின் சிகரத்தில் ஏறி நின்று, உகுபானைவிளித்து "பாதகனே! மகத்தான கடவுள் என் பசி தீரும்படி இன்று கொடுத்த இரையை, நான்புசிக்க வொட்டாமல்

தடுத்தாயே அது நியாயந்தானா?" என்று உரத்த தொனியுடன் மிகத் தெளிவாய்க் கூறிற்று. வேங்கை கூறிய இச்சொல்லை உகுபான் கேட்டு, இது யாரிட்ட சப்தம் என்று நானாபுறத்திலும் கண்பரப்பிப் பார்த்தும், ஆள் ஒருவரும் இல்லாமையால் வியப்புற்றுத் திகைத்து நின்றான். அவன் இச்சொல் சொன்னவர் இன்னாரெனத் தெரிந்து கொள்ளாதவனாய் மயங்கி நிற்கும்போது, மறுபடியும் அவ்வேங்கை வாய்திறந்து "அச்சொற்களைச் சொன்னது இதோ குன்றின் சிகரத்தில்நிற்கும் வேங்கையாகிய நான் தான்" என்றது. அப்போது உகுபான் என்பவன் ஆச்சரியமடைந்து, "மனிதர் வசனிப்பதுபோல் வனவிலங்கும் வசனிப்பதுண்டா? இது மகப்புதுமை! புதுமை!!" என அதிசயித்து, அங்கே தன்னை யொத்த ஆடுமேய்க்கும் மற்ற இடையர்களை எல்லாம் விளித்து "மேய்ப்பவர்களே, சீக்கிரம் இங்கே ஓடிவாருங்கள்; எந்த காலத்திலும் யாராலும் கண்டு கேட்டறியாத ஒரு ஆச்சரியகரமான நூதன சம்பவத்தை வந்து பாருங்கள். இதோ குன்றின் சிகரத்தில் நிற்கும் வேங்கையானது என்னை விளித்து விவேகமுள்ள சிலவசனங்களை வசனிக்கிறது. இந்த மகா அற்புதம் வானுலகத்திலும் காண்பது அரிது. விரைவாய் வாருங்கள்" எனக் கூக்குரலிட்டுக் கூவினான். அங்குள்ள இடையர்களனைவரையும் விளித்து நின்று சப்தமிடும் உகுபானை மறுதரமும் அந்த வேங்கை நோக்கி "பேதையே, இந்த உலகத்தில் வன விலங்காகிய நான் வாய்திறந்து பேசினதையா புதுமையென்று வியப்படைகின்றாய்? இது அத்தனை தூரம் வியக்கத்தக்க புதுமையல்ல. உண்மையான புதுமை வேறொன்றுண்டு. அதாவது:—

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மக்கமா நகர்விட் டணிமனை மதீனா
நகரினின் முஹம்மது நயினார்
புக்கின ரவர்சொ லுண்மையென் றீமான்
கொண்டுளம் பொருந்தித் தீனிலையைக்

கைக்கொளா திருத்தல் புதுமையே யன்றிக்
கானிடை விலங்கின மொழிவ
திக்கணம் புதுமை யெனவெடுத் திசைத்த
லேழைமை யெனவுரைத் தகன்ற.

வசனம்.

"மக்கமா நகரத்தில் கவுரவமான ஹாஷிம் வம்சத்தில் பிறந்த முஹம்மது நபி, மகத்தான கடவுளுடைய உண்மையான தூதரும், குர்ஆன் என்னும் நான்காம் வேதத்திற்கு உரியவரும், மனிதர்களைப் பாவத்திலிருந்து மீட்டு மோக்ஷத்தில் சேர்க்கும் இரக்ஷகருமானவர். அவர் தற்காலம் அந்த மக்கமா நகரத்தை வெறுத்து, இந்த மதீனமா நகரத்தில் வந்திருக்கிறார். அவருடைய பரிசுத்தமான தீனைத் தொடர்ந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து கலிமா சொல்வது எல்லார் பேரிலும் கடன். அப்படியிருக்க, மனிதர்கள் அவரையும் அவர் மார்க்கத்தையும் மறுத்து ஈமான்கொண்டு கலிமாச்சொல்லாமல் எதிர்த்து நின்று பகைசாதிக்கத் துணிவதல்லவா புதுமையிலும் மகா புதுமை! அது கிடக்க, வனவிலங்கு பேசுவது புதுமையாகாது. அவ்வாறு அதைப் புதுமையென்பது அறிவற்ற தன்மையும் ஆச்சரியமுமாகும்" என்று கூறிவிட்டு, அக்குன்றின் சிகரத்தைவிட்டு இறங்கி அடவிக்குள் சென்றது. ஆச்சரியமுறத் தக்க விதமாய்க் குன்றின் சிகரத்தில் நின்ற வேங்கையானது இவ்வாறு கூறிச் சென்றபின் உகுபான் என்பவன் தன் வசமின்றிப் பரவசமடைந்து, "ஏவல் விலக்கல் என்னும் இரண்டு விஷயங்களையும் மானிடப்பிறவிகள் பகுத்தறிந்து, கைக்கொண்டு ஒழுகி நடப்பதே முறைமையும் உரிமையுமாகும். அப்படியிருக்க, அவ்விஷயங்களைக் குறித்து வனவிலங்குகள் பகுத்துக்கூற நாம் காதாரக்கேட்டும் அதற்கு உடன் படாமல் இருப்பது மதி கெட்ட தன்மை" யென்று இருதயத்தில் எண்ணி, தன் மனத்துள் நிரம்பியிருக்கும் குபிர் என்னும் அந்தகாரத்தை ஈமான் என்னும் விளக்கைக்கொண்டு விலக்கினவனாய், அந்த க்ஷணமே தான் இருக்கும் வானத்தைக் கடந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் இருக்கும் ஸ்தானத்தைத்தேடி வந்தான். ஆனந்தத்துடன் நபிநாயகம் (ஸல்) அவர்களின் சந்நிதியில் வந்து பணிந்து நின்று, மிக மரியாதையாய் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, "நபியே, தமியேனாகிய நான் பிறந்து நடையின்ற நாள் முதற் கொண்டு, இது பரியந்தம் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டும், அந்த மாடுகளுக்கு சமானமாய் வனத்திலேயே திரிந்தேன். வேதம், ஆகமம், சாஸ்திரம் என்பன இன்னவையென்று மனிதர்களுக்கு உணர்த்தும் அறிவு பெற்ற வேதாந்திகளை நான் கண்ணால் கண்டவனுமல்ல. விவேகிகளுடன் ஒரு க்ஷணப்

பொழுதாவது நான் பழகவுமில்லை. மிருகத் தன்மையுள்ள என்னையொத்தவர்களுடன் கூடிக்குலாவித் திரிவதே யன்றி, மனிதசுபாவமுள்ளவர்களின் சகவாசம் எனக்கு இல்லை. தற்காலம் தங்களின் பொருட்டால், வனத்தில் சஞ்சரிக்கும் ஒருபெரிய வேங்கையானது எனக்கு நல்லறிவு புகட்டியது. அவ்வேங்கை இடித்துக்கூறிய அறிவைக் கொண்டு என் மடத்தன்மை எல்லாவற்றையும் விலக்கி, ஈமான் என்னும் உறுதியை இருதயத்திலிருத்திக் கொண்டு, தங்கள் சந்நிதிக்கு வந்தேன்" என்றான். இவ்வாறு தன் வரலாற்றை முறையிட்ட உகுபான், அப்போதே கலிமாச்சொல்லி முஸ்லிமானார்.

வனத்தில் திரியும் வேங்கையின் போதனையினால் உகுபான் இஸ்லாத்திலானார் என்னும் சமாசாரம் மதீனமாநகர மெங்கும்பிரஸ்தாப மாயிற்று. இதைக் கேள்வியுற்ற அஸ்ஹாபிகளனைவரும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் அற்புதத்திற்காக ஆச்சரியமடைந்து உகுபானை வியந்தார்கள். பிறகு, உகுபான் என்பவர் அங்கு வந்து கூடிய அஸ்ஹாபிகளுக்கெல்லாம் ஸலாம் சொல்லி, நபிநாயகம் (ஸல்) அவர்களையும் துதித்து விடைபெற்றுக்கொண்டு, தாம் வாசஞ்செய்யும் இடைச்சேரிக்குச் சென்றார்.

60-வது அத்தியாயம்.

சல்மான் பாரிஸி வந்தது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கல்மா ராயஞ் சொல்வா யாரும் நபி நாதர்
வெல்மா தீனை யில்மா லாய்ந்தே மெய்யுற்ற
கல்மா வோதித் தில்மீ தாசைக் கடல் மீறும்
சல்மான் பாரி சின்சீர் சரிதந் தனைச்சொல்வாம்.

வசனம்.

ஆண்டவனொருவ னுண்டு என்று, அவனாலனுப்பப்பட்ட புர்க்கான் வேதத்தைக்கொண்டு, மானிடர்களுக்கு கல்மாராயஞ் சொல்லும் கற்பூரவாடை கமழ்கின்ற திவ்வியமான வாயையுடைய நபிநாதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வெற்றியுற்ற தீன்மார்க்கம் நிஜமென்று கல்வியினாலாய்ந் துணர்ந்து, மெய்ம்மையான கலிமா

வென்னும் திருமந்திரத்தை யோதி, மனத்தினிடத்தில் அந்த நபியைக் காணவேண்டு மென்கிற ஆசையாகிய கடல் மீறி யதிகரித்த சல்மான் பாரிஸி என்பவருடைய சிறப்பான சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூண்டநற் கலம்போற் காரண வரைகள்
  புடையுடுத் திருந்தமக் காவிற்
கூண்டிருந் தெழுந்து மதினமா நகரிற்
  குலத்தொடு மினிதுறப் புகுந்தோ

ராண்டு சென் றதற்பி னஹ்மது மறையோ
  ரணிதர விருக்குமந் நாளிற்
காண்டகண் களிப்ப வந்தொரு முதியோன்
  கட்டுரை யொடும்சலா முரைத்தான்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தாங்கள் அவதாரமான மக்கமா நகரத்தை வெறுத்து யாத்திரையாகி, மதினமா நகரத்திற்கு எழுந்தருளிய அன்று முதற்கொண்டு தான் ஹிஜுறத்து என்னும் முஹம்மதிய ஆண்டு குறிப்பிடப்பட்டது. நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதினமா நகரத்தில் குடிபுகுந்த ஹிஜ்றத்து முதலாம் ஆண்டிலேதான் கபுஹுபு வந்ததும், விருந்திட்டு ஈமான் கொள்வித்ததும், உருபான் ஈமான் கொண்டதும், இன்னும் பல விசேஷ சம்பவங்களும் நிகழ்ந்தன.

பின்பு ஹிஜ்றத்து இரண்டாம் ஆண்டு ஆரம்பமானவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் அஸ்ஹாபிகள் புடைசூழ வீற்றிருந்து மார்க்க போதனைகளையும் வேதக் கொள்கைகளையும் பற்றி உபந்நியாசம் செய்து கொண் டிருந்தார்கள். அப்போது கல்வியில் மகாபாண்டித்திய மடைந்த விருத்தாப்பியர் ஒருவர், அந்த மகத்தான திருச்சபையில் வந்து நின்று ஸலாம் சொன்னார். மிக மரியாதையோடும் தாழ்மையோடும் வந்து நின்று ஸலாம் சொன்ன விருத்தாப்பியரை நபிநாயகம் (ஸல்) அவர்கள் நோக்கி,

இவர் நற்குணம், சன்மார்க்கம், காருண்யம், இரக்கம், பொறுமை, அறிவாதி நற்கருமங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவராகக் காணப்படுகின்றார், ஆகையால், இவரைக் குறித்து நாம் விசாரிக்க வேண்டும் என்றெண்ணி "வயோதிகரே, நீர்யார்? உமது வர்த்தமானங்க ளென்ன? இங்கே வந்திருந்து, விவரமாகச்சொல்லும்" என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் உபசரித்து வினவிய மாத்திரத்தில், அவர் உட்கார்ந்து நபிநாயகமவர்களின் முழுமதி போன்ற முகத்தை நோக்கிக் கீழ்வருமாறு தமது வர்த்தமானத்தை சொல்லத் தொடங்கினார் :—

"கடவுளுடைய தூதர் அனைவருக்கும் நாயகமாய், மனிதர்களை இரட்சிக்கவந்த நபியாய் அவதாரமான முஹம்மதே! தங்கள் அடிமையாகிய நான், செல்வம் பொலிந்து, விளங்கும் பாரிஸ் இராஜ்ஜியத்து தலைநகரத்தில் பிறந்தவன். என்னைப் பெற்றபோது என் பிதா மாதக்களிருவரும் சல்மான் என்று எனக்கு நாமமிட்டார்கள். நான் சிறு பிராயத்திலேயே கல்விகற்றுத்தேறி, சாஸ்திரப்பழக்கமும் அறிஞர் சகவாசமும் பெற்று,சன்மார்க்கத்தில் விர்த்தியடைந்திருந்தேன். பிற்காலத்தில், மகத்தான கடவுள் எனக்குக்குறித்த நியதியின் பிரகாரம் என் சுய இராஜ்ஜியத்தைவிட்டுப் பிரிந்து அன்னிய இராஜ்ஜியமான அரேபியாவந்து, இந்தமதீனமாநகரத்துப் பிரபு ஒருவருக்குத் தொண்டனாய் விலைப்பட்டேன். நான் விலைப்பட்டிருந்தும் அத்தனை தூரம் அவனுக்கு உட்பட்டு நிர்ப்பந்தமான ஸ்திதியிலிருக்கவில்லை. எண்ணிய இடங்களுக்குப்போகவும் வரவும் என் இஷ்டப்படி இடம் பெற்றிருந்தேன். ஆனாலும், நான் சிறு பிராயத்தில் கற்றிருந்த நூற்களை வாசிக்கவும் அறிவுமுதிர்ந்த ஆன்றோரிடஞ் சென்று சன்மார்க்க சம்பந்தமான விஷயங்களையும் ஆகமங்களையும் கேட்டுத் தெளியவும் சோம்பலடையவில்லை. அவற்றின் அப்பியாசம் எனக்கு என்று முள்ளபடியே யிருந்தது. அக்காலத்தில், மனிதர்களுக்கு ஆதிதந்தையாகிய ஆதம் நபிமுதற் கொண்டு ஐம்பது தலைமுறைக்குப் பிறகு நபியொருவர் பிறப்பாரென்றும், அவருக்கு குர்ஆன் என்னும் வேதம் இறங்கு மென்றும், அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய மார்க்கத்தில் சேர்ந்தவர்கள் மோட்ச ஆநந்த மடைந்து சுகம் பெறுவார்களென்றும், அல்லாதவர்கள் என்றும் அவியாத பாழுந்தீ மூண்டெரியும் நரகத்தில் விழுந்துகெடுவார்களென்றும், முதியோர்களின் வாய்ப்பிறப்பால் நான் அறிந்து கொண்டது மாத்திரமல்ல. தௌறாத்,

ஜபூர், இன்ஜீல் என்னும் மூன்று வேதங்களிலும், மற்றகணக்கற்ற ஆகமசாஸ்திர நூல்களிலும் தெள்ளத்தெளியக்கண்டு உணர்ந்தேன். இந்த மகிமையான வரலாற்றை நான் அறிந்துகொண்ட அன்று தொட்டு, அதன் விஷயத்தில் அவாவும் தேட்டமும் எனக்கு அதிகரித்தன. அந்த நபியை நாம் தரிசிக்காமல் இருப்பது பாதகம் என்று நான்கருதி, அவர் அவதாரம் செய்யும் இராஜ்ஜியம் எவ்வளவு தூரம் தொலையாயிருந்தாலும் தேடித்திரிந்து கண்டறிய வேண்டுமென்று பேராசைமீறி, இந்த நகரத்திலிருந்து ஒருவரும் அறியாமல் புறப்பட்டேன். நான் இங்கிருந்து புறப்பட்டு ஒவ்வொரு இராஜ்ஜியங்களிலும் சென்று, அங்குள்ள ஒவ்வொரு வேதசாஸ்திர நிபுணர்களையும் அடுத்து, விசாரித்தேன். அந்த ஞானவான்கள் ஒவ்வொருவரும் ‘அவர் அறபு இராஜ்ஜியத்தில் பிறப்பார்’ என்று உறுதியுடன் சொன்னார்கள். ஆனபடியால் நான் மறுபடியும் இந்த அறபு இராஜ்ஜியத்திற்கு வந்தேன். நான் இவ்விராஜ்ஜியத்தில் வந்தும், தங்களின் விசாரணையிலேயே பிரதிதினமு மிருந்தேன்.

இவ்வாறு தங்களின்பேரில் காதல் மீறித் தேடித் திரிந்தவன் நான் ஒருவன் மாத்திரமல்ல. இந்த இராஜ்ஜியத்து குறைஷி வமிசத்தில் பிறந்து, வேதாகம சாஸ்திர நிபுணர்களான ஜைது, உறக்கத்து, உதுமான், உபைதுல்லா என்னும் ஞானசிகாமணிகள் நான்கு பேர்களும், முஹம்மது நபியை என்று காண்போமோ என்று ஒரே நினைவால் காமுற்று, முடிவில் அந்நால்வரும் தாம்தாம் நாடியதிசையை நோக்கிப் பரதேசிகளாய் போய்விட்டார்கள். ஒப்பற்ற தங்களின் பாததாமரைகளைத் தரிசித்து முக்தியடையக்கருதி, பல திசைகளிலும் சென்று திரியும் அந்நால்வரில் முதலாவது ஜைது என்பவர் ஷாம் இராஜ்ஜியம் சென்று, அங்குள்ள சாஸ்திரிகளிடம் தங்களைக் குறித்து விசாரித்ததில், அவர்கள் அந்த முஹம்மதுநபி இப்றாஹீம் நபியுடைய மார்க்கக்காரராய், அவருடைய குமாரராகிய இஸ்மாயீல் நபியின் வம்சத்தில் அறபு இராஜ்ஜியத்தில் பிறப்பாரென்று சொன்ன படியால், அவர் அறபு இராஜ்ஜியத்தை நாடி ஷாமிலிருந்து மீண்டும்வரும்போது பாதையில் தேகவியோக மடைந்தார். இரண்டாவது உறக்கத்து என்பவர் தங்களைத்தேடி நானு திசையும் சென்று திரிந்து, அறபு இராஜ்ஜியத்தில் தாங்கள் பிறப்பதாக முடிவில் கேள்வியுற்று, மக்கமா நகரத்திற்குவந்து, அந்நகரத்து மகாபிரபுவாகிய குவைலிதின் செல்வக் குமார்த்தியான கதீஜா

வுக்குப் பிரதிதினமும் நற் கருமங்களை யுணர்த்தும் சாஸ்திரியாக அமர்ந்து, தங்களின் வரலாற்றின் குறிப்பான விஷயங்களையும் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருந்தார். அவரை தேவரீராகிய தாங்கள் அறிந்திருப்பீர்கள். மூன்றாவது உதுமான் என்பவர் றூம் இராஜ்ஜியம் சென்று, அங்குள்ள சாஸ்திரிகளுடன் பழகி, தங்களின் விஷயங்களைக் குறித்து சம்பாஷித்து, தங்களின் மார்க்கந்தான் முக்தி மார்க்கமென்று அவ்விராஜ்ஜிய மெங்கும் பிரஸ்தாபம் பண்ணி, அவ்விராஜ்ஜியத்து அரசனையடுத்து அரண்மனை சாஸ்திரியாக அதிகாரம் பெற்றிருந்தார். நான்காவது உபைதுல்லா என்பவர் தங்களைத் தரிசிக்கும் பேராசையில் ஒப்பற்றவராய், தகுந்த கல்விமான்களும் சாஸ்திராப்பியாசிகளுமான ஞானவான்களிடம் சென்றுசென்று விசாரித்தும், தாம் கற்ற சாஸ்திரங்களாலும் கணிதங்களாலும் ஆராய்ந்து கொண்டும் பரதேச சஞ்சாரியாய் இன்னும் தான் திரிகின்றார்.

நபிகள் சிகாமணியே! தங்களைத்தேடுபவர்கள் இன்னும் பலருண்டு. அவர்களன்றி, மேற்படி நால்வரின் வரலாறும் இவ்வாறாக. ஏழையாகிய நான் தாங்கள் இந்த மதீனமா நகரத்திற்கு வருவீர்களென்பதை மிகத் தீர்ப்பாய்த் தெரிந்து கொண்டு, சிலநாள் பரியந்தம் இங்கே காத்திருந்தேன். இன்னும் ஷாம் இராஜ்ஜியத்து யூதர்களில் தலைவராகிய இபுனுகைபான் என்பவர் ஒருவர், கல்வி கேள்விகளில் மிகச்சிறந்து தங்களைத் தரிசிக்கும் பேராசையால் தமது இராஜ்ஜியத்தை விட்டுப்புறப்பட்டு, நானுதிசைகளிலும் சென்று விசாரித்து, தாங்கள் அறபியில் பிறப்பதாக கேள்விப்பட்டு, நான் இவ்வூரில் இருக்கும்போது அவரும் இங்குவந்தார். அந்த இபுனுகைபான் என்பவர் இங்குவந்த பின், தாங்கள் சமீப காலத்தில் இங்கு வருவதாக அறிந்து அகங்களித்து, பனீகுறைலாவின் ஜாகையில் தங்கி, அநேகருக்கு நல்லறிவு புகட்டிக் கொண்டிருந்தார். இவரைக் காட்டிலும் சிறந்த ஞானசிகாமணி வேறில்லையென்று பலர் உபசரிக்க வீற்றிருக்கும் காலத்தில், அவருக்கு மரண காலம் சமீபித்தது. தமக்கு மரணமடுத்த தென்பதை நன்குயறிந்த அந்த இபுனுகைபான், மேற்படி பனீகுறைலாவையும் தமக்கு ஒழுகிய மற்றவர்களையும் அழைத்து “கனவான்களே! முஹம்மது நபி அதிக விரைவில் இந்த மதீனமா நகரத்திற்கு வருவார்; நீங்கள் அனைவரும் அவருடைய பாததாமரைகளைப்

பணிந்து வழிப்பட்டு, அவருடைய மார்க்கத்தில் சேர்ந்து, உங்கள் பாவங்களை விலக்கிக் கொள்ளுங்கள். ஏழையாகிய நான் நீண்ட காலம் வரையும் அவரைத் தரிசிக்க விரும்பி இங்கே காத்திருந்தும், சமீபகாலத்தில் எனக்கு மரணம் வருகிறபடியால், அவரை தரிசிக்கும் விதி எனக்கு இல்லாமற்போயிற்று. ஆனாலும் அவர் என் இருதயத்திலிருந்து நீங்கவில்லை. இனிநான் இறந்துபோனால், நீங்கள் அந்த முஹம்மது நபியிடம்சென்று என் ஸலாம் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு மவுத்தானார். அந்த இபுனுலகைபான் என்னும் பண்டிதசிகாமணி தாங்கள் இங்கு வருவீர்களென்று இங்கே காத்திருந்த படியாலேதான் நானும் இங்கேயே தங்க நேரிட்டது.

பிற்பாடு தாங்கள் மக்கமாநகரத்திலிருந்து ஹிஜ்ரத் யாத்திரையாய் இந்த மதீனமாநகரத்திற்கு வந்து விட்டீர்களென்னும் சமாசாரம் என் செவிகள் குளிர நுழைந்தது. அதனால் நான் ஆனந்தமடைந்து, தங்களின் பாததரிசினைக்காகப் புறப்பட எத்தனப்பட்டேன். நபியே! நான் தங்கள் பேரில் காதல்கொண்டு பரதேசியாய்த் திரிந்ததும், பிறகு தங்களை நாடியே இவ்வூரில் தங்கியிருப்பதும் என்னை முன்விலைக்கு வாங்கினவருக்கு நன்றாக நன்றாகத்தெரியும். ஆனாலும் அக்காலங்களில் அவர் இதைக்குறித்து என்னைத் தடுக்கவுமில்லை; கண்டிக்கவுமில்லை. பிந்தி தாங்கள் வந்துவிட்டதாக அறிந்து, காணுவதற்குப் புறப்படுவதைக் கேள்வியுற்ற அந்த எஜமானனவர், என்மேல் சினம் கொண்டு, தங்களைக் காணவொட்டாமல் கட்டாயப் படுத்தித் தடுத்தார். அவர் என்னைத் தடுத்து மாத்திரமல்ல; நிர்ப்பந்தமாக வருத்தினார். அவர் செய்யும் நிஷ்டூரங்கள் எல்லாவற்றையும் நான் இருதயத்தில் இருத்திக் கொண்டு, "இவர் இன்னும் நம்மை என்னதான் செய்வார். அறிவோம்?" என்று கருதி, அவருடன் ஒன்றும் பேசாமல் மவுனமாயிருந்தேன். என்னை எவ்வளவுதூரம் கஷ்ட நஷ்டங்களைச் செய்து வருத்தினாலும், நான் தங்களை யடைந்து தங்கள் மார்க்கத்தை யநுசரிக்காமல் விடமாட்டேனென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். அதனால் அவர் ஜனங்களைக் கூட்டி என் வர்த்தமானத்தை அவர்களிடம் சொல்லி, 'இவன் புதியமார்க்கக்காரனாகிய முஹம்மதை என்றும் இருதயத்தி லிருத்திக்கொண்டு அதே நினைவாக யிருந்தபடியால், பித்தம் கொண்டு விட்டான். இனி

இவனை வெளியில் விடக்கூடாது; சிறைப்படுத்தி வைப்பதுதான் உத்தமம்' என்று சொல்லி என்னை ஒரு இருட்டறையில் அடைத்தார். என்னை இவ்வண்ணம் நிர்ப்பந்தமான காவலில் வைத்து, அவரும், அவரைச் சேர்ந்தவர்களும் என்னைப் படுத்தின பாடு கொஞ்சமல்ல. எனக்கு அவர்கள் கொடுக்கும் போஜனத்தையும் குறைத்தார்கள்; என்னைச் செவிகொள்ளாத தூஷண வார்த்தைகளைச் சொல்லி நிந்திப்பதை நாளுக்குநாள் அதிகமாக்கினார்கள். முடிவில் அவர்கள் தீங்கான நியாயமற்ற அதிக்கிரமங்கள்எல்லாவற்றையும் என்மீது செலுத்தி வந்தார்களேயன்றி, முன்பின் வேண்டுமென்று கொஞ்சமும் நினைத்துப் பார்த்து இரங்கினவர்களல்ல. அவர்கள் சிறிதும் இரக்கமின்றிச் செய்யும் நிஷ்டூரங்கள் அனைத்தையும் நான் ஒரு திரணமாக மதிக்கவில்லை. அவர்கள் இதைவிடப் பலமடங்கு கஷ்டப்படுத்தின போதிலும், அவையெல்லாம் சிறியேனுக்குப் பிரமாதமாய்த் தோற்றவில்லை. அவர்கள் செய்யும் அதிக்கிரமத்திற் கெல்லாம் நான் மனந்தளராமல் பிடிவாதங் கொண்டிருக்கும் நிலைபரத்தை அவர்களறிந்து, 'இவன்நாம்செய்யும் நிஷ்டூரங்களுக்குக் கொஞ்சமும் அஞ்சவில்லை. தான்பிடித்த பிடியாகிய இஸ்லாம் என்னும் மார்க்கத்தையே சாதித்து நிற்கிறா'னென்று கண்டு, ஒருநாள் என்னை யடுத்துவந்து நின்று "ஒருவன் எவனுக்கு அடிமையாய் விலைப்பட்டானோ அவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் செய்யும் ஆக்கினைக்கு உட்படவேண்டும். அப்போதுதான் தான்நினைத்த கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளுவான். அப்படியன்றி, தன்னை விலைக்குவாங்கின எஜமானனுக்கு மாறுகொண்டு எதிர்த்து ஒட்டாரஞ் செய்வானானால், கட்டாயம் கொல்லப்படுவான்; இதில் சந்தேகமில்லை" என்றார்கள். இச்சொல் என்காதில் விழுந்த மாத்திரத்தில் நான் அவர்களை நோக்கி, 'நான் முஹம்மது நபிக்குக் கீழ் படிந்து, ஈமான் கொள்ள நாட்டமுற் றிருக்கிறேனே யன்றி, வேறொரு நாட்டமும் என் இருதயத்திலில்லை. ஆகையால், நீங்கள் செய்யும் நிஷ்டூரங்களனைத்தும் அதைத் தடை செய்யமாட்டாது. ஆனால் என் பேரில் பழிசாதிக்கும் எண்ணத்தை நீங்கள் விலக்கி, வேறு ஏதுவும் ஒருகடினமான நிபந்தனையைச் செய்து, இதற்கு நீ உடன்பட்டால் விட்டு விடுகிறோமென்று நியமித்தால், நான் அவ்வாறு செய்து மீண்டு போய் விடுகிறேன். மற்றபடி ஒன்றும் நிறைவேறாது, எனப் பிரதி சொன்னேன்.

சரித்திர புராணம்

கலி நிலைத்துறை.

கன்று நன்றெனச் சிரமசைத் தனைவரு நலியா
தின்று தொட்டுமுந் நூற்றினிற் குறைந்திடா தீத்தங்
கன்று வைத்துநீ ரிறைத்தவை பலன்படக் காய்த்து
நின்ற வண்மொழி லாக்கிநீ யளிப்பது மல்லால்;

ஆயிரத்திரு நூற்றின்மே லைம்பதி னளவி
னேய தானவி ராகனென் றோதிய வெடையின்
றாய தங்கமு மளித்தியேற் றாதரென் பவர்பாற்
போயீ மான்கொளத் துணிவது துணிவெனப் புகன்றார்.

வசனம்.

நான் சொன்னது அவர்களுக்கு இதமாய்த் தோற்றின படியால், நல்லதென்று அவர்கள் சிரக்கம்பஞ் செய்துகொண்டு, என்னை நோக்கி "நீ இத்தனை தூரம் வருந்த வேண்டியதில்லை, இப்போது நாங்கள் இடும் நிபந்தனைக்கு உடன்படவேண்டும். அதாவது: இன்று முதற் கொண்டு, இவ்வூரில் வளமுள்ள ஒரு மைதானத்தில் முந்நூறு ஈத்தங் கன்றுகளை நட்டு நீர்ப்பாய்ச்சி, அக்கன்றுகள் வளர்ந்தோங்கிக் காய்த்து ஈத்த வனமானபின் அவ்வனத்தை எங்கள் வசம் ஒப்புவிக்க வேண்டும். அன்றியும், ஆயிரத் திருநூற்றைம்பது வராகன் நிறை கொண்ட தங்கத்தை நிறுத்து கொடுக்க வேண்டும். இவ்விரண்டு ஏற்பாட்டின்படி நீ நிறைவேற்றுவாயானால், உன்கோரிக்கையின் பிரகாரம் முஹம்மது நபியிடஞ்சென்று ஈமான் கொள்ளுவதற்கு யாதொரு பிரதிபந்தமும் நேரிடமாட்டாது" என்றார்கள். நபியே! என் எஜமானனும், அவரைச் சேர்ந்தவர்களும் இப்படிச் சொன்ன மாத்திரத்தில் நான் அதற்கு இசைந்து, அவ்வாறே செய்வதாக அவர்களுக்கு வாக்கு கொடுத்துவிட்டு இங்கு வந்தேன். இனி தேவரீராகிய தாங்கள் என்னாலாகக் கூடுமானதாக இதற்கொரு முடிவு சொல்லவேண்டும்" என்றார்.

பாரிஸு இராஜ்ஜியத்து சல்மான் என்னும் வயோதிபர், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் தமது வரலாற்றை இப்படி முறையிட்ட போது, அவ்வரலாறுக ளனைத்தையும் நபிநாயகம்

(ஸல்) அவர்கள் கேட்டு, அவர்மீது பட்சமுற்று, இவரோர் சிறந்த பக்தரென்று சந்தோஷ மடைந்து, அவரை நோக்கி "சல்மானே! உமது வரலாறு களடங்கலும் எனக்கு அத்தியந்த சந்தோஷத்தைக் கொடுத்தன. நான் நபியாய் அவதாரம் செய்வதையறிந்து, என்னைத் தரிசிப்பதற்காக விருப்பமுற்று, மெய்வருந்தப் பரதேசிகளாய்த் திரியும் பக்தர் ஒவ்வொருவரும் என்னைத் தரிசித்தாலும், அல்லது தரிசிக்காமல் இறந்து போனாலும், என்னுடைய மார்க்கத்தில் சேர்ந்த உம்மத்து மார்களோடு கூடி க்ஷேமமடைவார்கள். அது அப்படியாக, இப்போது உம்மை விலைக்கு வாங்கி யிருக்கும் எஜமானன் நியமித்த வண்ணம் நீர் ஈத்தவனமும், குறித்த நிறைகொண்ட தங்கமும் இன்று முதற் கொண்டு ஒருவருஷத்திற்குள் சரிப்படுத்திக் கொடுப்பதாக போய் அவர்களுக்கு ஒரு உடன்படிக்கை எழுதிக் கொடுத்து விட்டு இங்கு வாரும்" என்று சொன்னார்கள்.

நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் இப்படிச் சொன்னவுடன், சல்மான் களிப்புற்று நபிநாயகம் (ஸல்) அவர்களின் சபையை விட்டெழுந்து, தமது எஜமானனும் அவனைச் சேர்ந்தவர்களும் இருக்கும் இடம் சென்று, நீங்கள் நியமித்த பிரகாரம் ஈத்தவனமும், தங்கமும் ஒரு வருஷத் தவணைக்குள் சரிப்படுத்தித் தருகிறேனென்று ஒரு பத்திரமெழுதி அவர்கள் கையில் கொடுத்தார். சல்மான் பார்ஸி எழுதிக் கொடுத்த தவணைசீட்டைப் பெற்றுக் கொண்ட அவர்கள், "நீ குறித்த பிரகாரம் உடன் பட்டுப் பத்திர மெழுதித் தந்தபடியால், இனிநாங்கள் உன்னை நிர்ப்பந்தஞ் செய்யமாட்டோம். நீ உன்னைச் சேர்ந்தவர்களிருக்கு மிடம்போய், உன் கருத்தின்படி முஹம்மது நபிக்கு வழிப்பட்டு ஈமான் கொள். ஆனால், எங்களுக்குக் கொடுப்பதாக நியமிக்கப்பட்ட ஈத்தவனம் உண்டாக்குவதிலும், தங்கம் சேகரிப்பதிலும் மறதியின்றி சுறுசுறுப்பாயிருக்க வேண்டும்" யென்று சல்மானுக்குச் சொன்னார்கள். உடனே அவர் அங்கிருந்து புறப்பட்டு நபிநாயகம் (ஸல்) அவர்களின் சபையில் வந்து நின்று, தாம் ஒரு வருஷத் தவணைக்குள் குறித்த வண்ணம் ஈத்தவனமும் தங்கமும் கொடுப்பதாகப் பத்திரமெழுதிக் கொடுத்ததை நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் பிராண சிநேகிதர்களாகிய அருகர் நால்வரும், தோழர்களில் சிலரும் புடை

சூழ்ந்து வரும்படி தங்களின் மாளிகையை விட்டுப் புறப்பட்டு, சல்மான் பார்ஸியையும் கூட அழைத்துக்கொண்டு ஒருவனத்திற் சென்று, அங்கே ஒரு மைதானத்தைக் குறிப்பிட்டு நின்று, சல்மானை நோக்கி அங்கே முளைத்திருக்கும் ஈத்தங் கன்றுகளைப் பிடுங்கிக்கொண்டு வாருமென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அவர் முந்நூறு கன்றுகளைப் பிடுங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்களின் முகதாவில் கொண்டு வந்து வைத்தார். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் நிகரற்ற செந்தாமரை மலர்போன்ற கைகளால் அக்கன்றுகளை ஒவ்வொன்றாக எடுத்து, குறித்த ஸ்தானத்தில் நாட்டினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு தங்களின் சிறந்தகைகளால் ஈத்தங்கன்றுகளை நட்டிக் கொண்டு வரும்போது, அஸ்ஹாபிகளில் வயோதிபராகிய ஒருவர் தாமும் ஒரு கன்றை யெடுத்துக்கூட நட்டினார். முந்நூறு கன்றுகளும் நட்டித்தீர்ந்த பின் அவ்வொவ்வொரு கன்றுகளும் வளரத் தலைப்பட்டன. நபிநாயகம் (ஸல்) அவர்கள் கையால் நட்டின இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது கன்றுகளும் உடனே செழித்துத் தளிர்த்து வரவர வளர்ந்தன. மேற்படி அஸ்ஹாபி ஒருவர் நட்டின ஒருகன்று மாத்திரம் அப்படியே உலர்ந்து போனது. அதைக்கண்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் மறுபடியும் அக்கன்றைப் பிடுங்கி வேறு இடத்தில் தங்கள் கையால் நட்டினார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

ஈத்தங் காவகம் பனிரண்டு வருடத்தி னியல்பாய்க்
காய்த்து நற்பலன் றருதல்போல் நபிசெழுங் கரத்தால்
வாய்த்து மாதம்பன் னிரண்டினிற் குறைவற வளர்ந்து
பூத்துக் காய்த்துநற் பழக்குலை யொடும் பொருந்தினவால்

மதுரமூறிய பழக்குலை பொறுக்கிலா வளைந்து
சிதறு மின்றனை துடலைகண் டருங்கனி சிறந்து
துதிகள் வேல்வலக் தாங்குசல் மான்றனை நோக்கி
யிதுகொல் நீயவர்க் களித்திடு நிதியமென் றெடுத்தார்.

வசனம்.

ஆக முந்நூறு கன்றுகளும் ஒரு தன்மையாய்த் துளிர்த்து, ஓங்கிவளர்ந்து வந்தன. நட்டின நாள் முதற்கொண்டு பன்னிரண்டு வருஷங்கள் சென்ற பிறகு பூத்துக் காய்க்கும் தன்மையுள்ள ஈத்தங்கன்றுகள், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் சிறந்த கைகளால் நட்டின மகிமை கொண்டு பன்னிரண்டு மாதத்திற்குள் பன்னிரண்டு வருஷஞ்சென்ற ஈத்தவனம் போல ஓங்கி வளர்ந்து பூத்து, திரள் திரளாய்க்காய்த்து, குலைகுலையாய்ப் பழுத்து நின்றன. நட்டின ஒரு வருஷத்திற்குள் பழுத்துக் குலைசாய்த்து நிற்கும் ஈத்தங்காயை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு களித்து, ஸல்மானை நோக்கி, ஸல்மான்பாரிஸே, நீர் கோரியவண்ணம் ஈத்தவனம்தயாராய் விட்டது. இனித் தங்கம் தான் வேண்டுமென்று சொல்லி, தங்கள் வசமுள்ள ஒரு கோழிமுட்டைப் பிரமாணமுடைய தங்கக்கட்டியை யெடுத்து, அதில் தேவாமிர்தத்திலும் சிறந்த தங்களின் உமிழ் நீரை விரலில் தோய்த்துத் தடவி, அக்கட்டியை ஸல்மான் கையில் கொடுத்து, அவரை நோக்கி "நீர் உமது எஜமானனிடம் சென்று மேற்படி ஈத்தங்காயை ஒப்புக்கொடுத்து விட்டு, அவர் கேட்டபடி ஆயிரத்திரு நூற்றைம்பது விராகன் நிறைக்கு இந்தத் தங்கக்கட்டியில் நறுக்கி நிறுத்துகொடும்" எனக்கட்டளை பண்ணினார்கள். உடனே ஸல்மான்பாரிஸி சந்தோஷசாகரத்தில் முழுகி, தங்கக்கட்டியை வாங்கித் துகிலில் பொதிந்துகொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாதமலர்களைப் பணிந்து அஸ்ஹாபிகளைத் துதித்து ஸலாம் சொல்லிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டார். ஸல்மான் என்பவர், "நாம் முயன்று வளர்த்த முந்நூறு தருக்களையுடைய ஈத்தவனத்தையும், ஆயிரத்திரு நூற்றைம்பது விராகன் நிறையுள்ள தங்கத்தையும் கொடுத்து, ஸுவர்க்கத்தைக் கிரயமாக வாங்கிக் கொண்டோம் இப்பேறு முஹம்மது (ஸல்) அவர்களைத் தரிசித்ததால் உண்டான பேறே" யென்று இருதயத்தில் ஆனந்த வெள்ளம் பிரவாகிக்க நடந்து, தன்னைக் கொண்ட எஜமானனும் அவனைச் சேர்ந்தவர்களும் இருக்கும் இடத்தில் சென்று, அவர்களை நோக்கி "சிறியேனாகிய நான் தங்களுக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தின் பிரகாரம் நிறைவேற்ற வந்திருக்கிறேன்; தயவு செய்து ஒப்புக் கொள்ளுங்கள்" என்று மரியாதையுடன் சொன்னார். இதைக்கேட்ட எஜமானனும் மற்றவர்களும், இவரை யழைத்துக்கொண்டு ஈத்தவனத்தை

ஒப்புக் கொள்ளுவதற்காகப் புறப்பட்டார்கள். அனைவரும் வனத்திற்சென்ற வுடன், ஸல்மான் அவர்களை நோக்கி "கனவான்களே! இதுதான் தாசியேன் தங்களுக்குக் கொடுக்கும்படி பயிரிட்ட ஈத்தங்கா" என்று கூறி, அவ்வனத்தைச் சுட்டிக்காட்டினார். அவர்கள் அந்த வனத்தைச் சுற்றிவந்து, முந்நூறு தருக்களையும் கணக்கிட்டுக் கொண்டு சிரக்கம்பஞ் செய்து, ஸல்மானை நோக்கி, "ஸல்மானே! நீ எங்கள் நிபந்தனைப்படி ஈத்தங்காயை ஒப்புக் கொடுத்தாய்; அது போல் குறித்த நிறைக்குத் தங்கமும் கொடு" எனக் கேட்டார்கள். உடனே ஸல்மான், தாம் கொண்டு வந்திருக்கும் தங்கக் கட்டியை யெடுத்து வைத்துக் கொண்டு, துலாக்கோல் கொண்டுவரச் செய்து, ஒரு தட்டில் ஆயிரத்திரு நூற்றைம்பது வராகனை வைத்து, மற்றொரு தட்டில் மேற்படி தங்கக் கட்டியில் ஒரு துண்டு நறுக்கி வைத்து நிறுத்தார். இடை சரியாயிராமல் குறைந்து கொண்டே வந்தபடியால் குறையுந் தோறும் நறுக்கி நறுக்கி வைத்து நிறுத்தார். நறுக்குந் தோறும் மேற்படி தங்கக்கட்டி குறைவுபடாமல் முன்னிருந்த நிதானத்திற்கு வளர்ந்து கொண்டே இருந்தது. பிறகு குறித்த நிறைக்குச் சரியாய் வந்தபின், அத்தங்கத்தையும் அவர்கள் வசம் கொடுத்தார். அதை அவர்கள் பெற்றுக்கொண்டு ஸல்மானை நோக்கி, "ஸல்மானே! நீ உடன்பட்ட பிரகாரம் கொடுத்துத் தீர்த்தாய். இனி எங்களுக்கும் உனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. நீ நாடியபடி செல்" என்று சொல்லி, மேற்படி தவணைச் சீட்டையும் கொடுத்தார்கள். உடனே ஸல்மான், அவர்களை விட்டு மீண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்களின் சபைக்கு வந்து, சங்கதிகளைச் சொல்லி, தங்கக் கட்டியையும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் முகதாவில் வைத்தார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி, "ஸல்மான் பாரிஸீ! நீர் உமக்கிருந்த நிர்ப்பந்தத்தை விட்டு மீட்சி பெற்று, சுவர்க்க வாழ்வு மடைந்தீர். இத்தங்கக்கட்டியை நீரே எடுத்துக் கொள்ளும்" என்று கட்டளை பண்ணினார்கள். அன்று தொட்டு ஸல்மான் பாரிஸுக்கு வறுமை என்பது இன்னதென்று தெரியாது. அந்தத் தங்கக் கட்டியின் மகிமையால் தம் வீட்டுச் செலவும், தருமச் செலவுமான சர்வ செலவும் தாராளமாகச் செய்து வந்தார். அப்படிச் செலவு மிதமிஞ்சி செய்தும், அத்தங்கம் வளர்ந்துகொண்டே யிருந்தது. அதனால் அவர் ஒரு மகா பிரபுவாக வாழ்ந்திருந்தார்.

61-வது அத்தியாயம்

கஃபத்துல்லாவை நோக்கி தொழுதது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சொகு சுற்றஞ் சேரும் வேதத் துரை முஹம் மதர்முன் னுறு
மிகு பற்றின் றோழ ரோடவ் வேந்தர்பின் னுறு நின்றே
தகு முத்திப் பேறு கொள்வான் தனியனைக் கருத்துட் போற்றிக்
கஃபத்துல்லாவை நோக்கித் தொழுதிடுங் கருமஞ் சொல்வாம்.

இதன் பொருள்.

அழகுஞ் சௌக்கியமும் பொருந்திய புர்க்கான் வேதத்துரையான முஹம்மது (ஸல்) அவர்கள் முன்னிலையாகி, மிகுந்த பற்றுசை நத்தாசையை யுடைய தோழர்களான அஸ்ஹாபிமார்களும் அவ்வஸ்ஹாபிமார்களின் தலைவர்களான இராஜாக்கள் யாவரும் பின்னால்நின்று, தகுந்த மோட்ச கதி பெறு கொள்ளும் பொருட்டுத் தானும் தானாகத் தனித்தவனான அல்லாஹு தஆலாவை கருத்துள்ளே யிருத்திப் போற்றிப் புகழ்ந்து கஃபத் துல்லாவைப் பார்த்துத் தொழுதிடுங் கருமத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலிவிருத்தம்.

நபியெனத் தீனிலே நடத்து நாண் முதற்
கவினுறும் பைத்துல் முகத்தி லென்னுமத்
தவிசினை நோக்கியே தக் பீரொடும்
புவியிடைத் தொழுகையைப் பொருந்தி நின்றனர்.

வசனம்.

நபி நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களுக்கு நபிப் பட்டம் கிடைத்து அல்லாஹு தஆலாவை தொழுதுவர ஆரம்பித்த அன்று முதற் கொண்டு, ஷாம் இராஜ்ஜியத்திலிருக்கும் சிறந்த நகரமாகிய பைத்துல் முகத்திஸ் என்னும் திவ்விய பட்டணத்தில் பைத்துல் 'முகத்திஸ் என்னும் பரிசுத்த ஆலயத்தையே கிபுலாவாக்கித் தொழுது வந்தார்கள். (ஆலயத்தின் நாமத்தையே அந்நகரத்திற்கு இடப்பட்டது.) பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் மக்கமாநகரத்திலிருந்து மதீனமா நகரம் வந்து பல நாள் வரையும் அப்படியே

தொழுது வந்தார்கள். அது பரியந்தம் கஃபத்துல்லாவை முன்னிலையாக்கித் தொழுது வரும்படி அல்லாஹுத் தஆலாவின் கட்டளை பிறக்கவில்லை. பின்பு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தில் வந்து சேர்ந்த இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, ஷஃபான் மாதத்துப் பதினைந்தாம் தேதியாகிய செவ்வாய்க்கிழமை பகல் ளுஹர் வேளையில், நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் அஸ்ஹாபிகள் அநேகர் ஜமாஅத்தாக தாங்கள் இமாமாக நின்று, பர்லாகிய நான்கு றக்அத்தில் முந்தின இரண்டு றக்அத்தையும் தொழுது, நடு இருப்பி லிருந்து அத்தஹிய்யாத்து ஓதிக்கொண்டிருக்கையில், வானவர் பெருமானாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத் தஆலாவின் ஏவலின்படி நபி நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். தமது சிறகுகளை யொடுக்கி மானிட உருக்கொண்டு வந்த ஜிப்றயீல், நபி நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி சொல்லலானார்:

சரித்திர புராணம்.

கலிவிருத்தம்.

இறையவன் கஃபத்துல் லாவென் றெய்திய
அறவியர் பள்ளியை நோக்கித் தான்றொழ
மறையுரை வழங்கின னென்ன மன்னபி
முறைமிதென் றுணர்ந்தக் கடலின் மூழ்கினர்.

வசனம்.

"யாறஸூலல்லா! இந்த க்ஷணமே தாங்கள் பைத்துல் முகத்திசை நோக்கித் தொழுவதை விட்டுத் திரும்பி மக்கமா நகரத்திலிருக்கும் ஒப்பற்ற தேவாலயமாகிய கஃபத்துல்லாவை கிப்லாவாக்கிக்கொண்டு முன்னோக்கித் தொழ வேண்டுமென்றும், இன்று முதற்கொண்டு என்றும் அப்படியே தொழுதுவரவேண்டுமென்றும், வஹீ யறிவித்தான்" என்று கூறினார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷ மடைந்து, அந்த நடு இருப்பிலிருந்து ஓதவேண்டிய மட்டுக்கும் அத்தஹிய்யாத்தை ஓதிவிட்டு, மறுபடியு மெழுந்து மக்கமா நகரமிருக்கும் திசையை நோக்கித் திரும்பிநின்று கஃபதுல்லாவை கிப்லாவாக்கிக் கொண்டு, மற்ற இரண்டு றக்அத்துகளையும் தொழுது முடித்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் நடுத்தொழுகையில் யாதொன்றும் அறிவிக்காமல் திடீரென்று வேறொரு திசையை நோக்கித்

திரும்பி நின்று தொழுதபோது, ஜமாஅத்தாக அவர்களைப் பின்பற்றி நின்ற மற்ற அஸ்ஹாபிகளும் நபி அவர்களைப் போலவே திரும்பி நின்று தொழுது முடித்ததாக சீறாப்புராணம் குறிப்பாய்க் கூறுகின்றது; வேறே அதன் விவரத்தைக் கூறவில்லை. ஆனால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாதித் தொழுகையில் வஹியை யுணர்ந்து வேறு திசையை நோக்கி திரும்பின மாத்திரத்தில், முகாந்தர மறியாத அஸ்ஹாபிகள் அநேகர் மலைத்து முன்னிருந்தபடியே நின்று விட்டார்களென்றும், அருகர்களாகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு, உமர் றலியல்லாஹு அன்ஹு, உதுமான் றலியல்லாஹு அன்ஹு, அலிறலியல்லாஹு அன்ஹு இந்நால்வரும், அஸ்ஹாபிகளில் சயீது றலியல்லாஹு அன்ஹு, சஃது றலியல்லாஹு அன்ஹு, தல்ஹா றலியல்லாஹு அன்ஹு, ஜுபைறு றலியல்லாஹு அன்ஹு, அபூ வுபைதா வென்னும் மறுநாம முள்ள ஆமிர் றலியல்லாஹு அன்ஹு, அப்துர் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹு இவ்வறுவரும் ஆகிய பத்துப்பேர்கள் மாத்திரம், காரியம் எப்படியிருந்தாலும் இருக்கட்டும், நாம் நபிநாயகம்(ஸல்) அவர்களைத் தொடர்ந்து நிற்பதால், அவர்கள் செய்வது அனைத்தையும் நாமும் செய்யக்கடவோம் எனக் கருதி, நபி நாயகத்தோடு திரும்பி நின்று கஃபாவை நோக்கித் தொழுது முடித்தார்களென்றும், அதற்காகத்தான் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி பத்துப்பேர்களையும் இம்மையிலேயே சுவர்க்கத்தைப் பெற்றுக் கொண்ட "அஷறத்துல் முபஷ்ஷறூஹ்" என்றழைத்தார்களென்றும் பல நூல்களும் உண்மையாகவும் பகிரங்கமான ஐதிகமாகவும் கூறுகின்றன.

அவ்வாறு தொழுது தீர்ந்த பிறகு, மதீனமா நகரத்திற்கும் மக்கமா நகரத்திற்கு மிடையிலுள்ள உன்னதமான பர்வதங்கள், மலைத்தொடர்கள், குன்றுகள், திடர்கள், விருக்ஷங்க ளடர்ந்த வனங்கள் எல்லா வற்றையும் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் தமது கையினால் அமிழ்த்தித் தரையோடு தரையாக்கினர். அப்போது இரு நகரங்களுக்கும் இடையில் பூமி மேடுபள்ளமும், ஒருசிறிய பூண்டு மின்றிச் சமதரையாயிற்று. அப்போது மக்கமாநகரத்திலிருக்கும் கஃபத்துல்லா வென்னும் அல்லாஹுத் தஆலாவுடையு

பரிசுத்த வீடு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் கண்களுக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்தது.

கஃபத்துல்லாவை நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் கண்களால் கண்ட பிறகு, மதீனமா நகரத்தில் தாங்கள் கிரயத்திற்கு வாங்கின இடத்தில் அலங்காரமாகக் கட்டி முடித்த புதிய மஸ்ஜிதை, கஃபத்துல்லாவுக்கு நேராகத் திருப்பிக் கட்டினார்கள். அன்று தொட்டுத்தான் யுகம் முடியும் வரைக்கும் கஃபாவை நோக்கித் தொழும்படி நியமகமானது.

62-வது அத்தியாயம்.

ஓநாய் பேசியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வானோர்புகழ் வாகையின் மாதவ ராமிறசூல்
தீனேபெரி தாமென மானுடர் தேறுரைபோல்
மானோடிக லாய்ஹறம் வாயிலில் மேவியவோர்
ஓநாயது பேசிய காரண மோதிடுவாம்.

இதன் பொருள்.

வானவர்களென்னும் மலாயிக்கத்துமார்கள் புகழுகின்ற வெற்றி பொருந்திய மகா தவமுற்றவர்களான றஸூல்நாயக முஹம்மது (ஸல்) அவர்களுடைய தீனுல் இஸ்லாம் என்னும் மார்க்கமே பெரிதான தென்று, கல்வியிலே தேறினமானுடர் வாக்கியம் போல், ஒருமானோடு பகைத்துக் காட்டில் நின்றும் அதனைத் துரத்திக் கொண்டு, திருமக்கமா நகரத்திலிருக்கும் திரு கஃபத்துல் லாவைச் சூழ்ந்த ஹறமென்னு மதில் வாயில் மட்டிலும் வந்து நெருங்கியவோர் ஓநாயானது பேசிய காரணத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

நலனுறு மக்கமா நகரைச் சுற்றிய
மலைகளி னொருவரை யடவி யின்வயி
னிலை கொளாப் பறமொடு நிறைந்த புள்ளிமான்
கலையொடுஞ் செறிந்துபுற் களித்து நின்றதே.

வசனம்.

நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள், மதீனமா நகரத்தில் தங்களின் தீன் என்னும் பரிசுத்த மார்க்கம் நாளுக்கு நாள் விளங்கி எங்கும் பரவும் வண்ணம் வீற்றிருந்து அரசு செய்யுங் காலத்தில், ஒருநாள் மக்கமா நகரத்தைச் சூழ வளர்ந்து நிற்கும் மலைத்தொடர்களுக்கு இடையிலுள்ள ஒரு அகன்ற வனத்தில், அநேக மான் கூட்டங்கள் தன்தன் கன்றுகள், கலைகளுடன் உல்லாசமாய் உலாவி, புல்மேய்ந்து விளையாடிக் கொண்டு பயமின்றி நின்றன. இம்மான் கூட்டம் இவ்வண்ணம் விளையாடிக் கொண்டு நிற்கையில், பசிமிகுந்து பல நாள் வரையும் பட்டினியாய் வனத்துட்கிடந்த ஓநா யொன்று வெளிப்பட்டு நின்று, அழகிய மான்கள் வேறுபராக்கின்றி விளையாடிக் கொண்டு நிற்பதைக் கண்டு, இம்மான்களி லொன்றைப் பிடித்துப் பசிதீரப் புசிப்போ மெனக்கருதி, அதிகவிசை கொண்டு அந்த மான்களை நோக்கிச் சென்றது. ஓநாயொன்று மூர்க்கத்துடன் எதிர் நோக்கி மிகவிரைவாய் வருவதை மேற்படி மான் கூட்டம் கண்டு, சித்தம் கலங்கித் தெறிகெட்டுப் பல திசையும் சிதறின. மான்கள் தடுமாறிப் பலவழியாய்ச் சிதறி ஓடினபோது, ஒருமான் மாத்திரம் அந்த ஓநாய்க்கு மிக நெருக்கத்தில் ஓடுவதைக் கண்டு, இது எங்கே சென்றாலும் பின்தொடர்ந்து பிடித்துக் கொள்வலா மென்று அது எண்ணி, அந்த ஒற்றை மானை விடாமல் பின்பற்றி ஓடிற்று. ஓநாயைக் காட்டிலும் மான் மிக விரைவாயோடு மென்பது வழக்கமான சொல்லாயினும், பசியால் வருந்தும் மேற்படி ஓநாய், தனக்கு முன் விரைந்து செல்லும் மானைத் தொடர்ந்து ஓடுவதில் சற்றும் இளைப்புற வில்லை. ஓநாய் மிக நெருக்கத்தில் தொடர்ந்து வரும் அச்சத்தினால், சற்றும் தொய்ந்து போகா வண்ணம் ஒரே ஓட்டமா யோடும் அந்தப் புள்ளிமான், வனத்தை விட்டு மக்கமா நகரத்தில் நுழைந்து, கஃபத்துல்லாவை நோக்கிச் சென்றது. மேற்படி ஓநாயும் பின் நெருங்கித் தொட்டதோ இல்லையோ வென்னும் அத்தனை சமீபத்தில் தொடர்த்து போயிற்று. ஓநாயின் வாய்க்குத் தப்பிப் பிழைக்கக் கருதிச் சென்ற மான், கஃபத்துல்லா என்னும் தேவாலயத்தின் எல்லையாகிய ஹறம் என்னும் ஸ்தானத்தில் சேர்ந்தது. தன்னால்

தொடரப்பட்ட மான் ஹறத்திற்குள் பிரவேசித்ததைத் தொடர்ந்து வந்த ஓநாய் கண்டு, 'ஆ! நாம் தொடர்ந்து வந்த மான் ஹறத்தில் நுழைந்து கொண்டது. அந்த ஹறம் மலக்குகளால் குறித்துக் கட்டப்பட்ட படியால், அதில் அடைக்கலமாகப் புகுந்த மானைப் பின்தொடர்ந்து நாம் கொல்லுவது மகா பாதக' மென்றெண்ணி, அந்த ஹறத்திற்கு வெளிப் புறத்திலேயே நின்று கொண்டது.

வனத்திலிருந்து மானொன்று மிகவிரைவாயோடி வந்து ஹறத் துட் பிரவேசித்ததையும், அதைத் தொடர்ந்து வந்த ஓநாய் திகைத்து நிற்பதையும், அபூஜஹல், அபூசுபியான், சபுவான் என் னும் இம்மூன்று காபிர்களும் ஒரு ஸ்தானத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். இக்காட்சி மேற்படி மூவருக்கும் ஆச்சரி யமாய்த் தோற்றிற்று. ஆனபடியால், அம்மூவரும் வாய்திறந்து ஒருவருக்கொருவர் "அந்தப்புள்ளிமான் அந்த ஓநாயிடம் எப்படி யும் அகப்பட்டு இறந்துபோமென்றல்லவா நாம் நினைத்திருந்தோம். அந்த மானனது ஹறத்தில் நுழைந்து கொண்டபடியால், ஓநாய் இந்த ஹறத்தை மேன்மைபடுத்தி அதன் மரியாதைக்காக உள்ளே பிரவேசித்து அதைப்பிடிக்காமல் விட்டுவிட்டு நிற்கின்றது தனது கொடிய பசியை அடக்கிக் கொண்டு ஹறத்திற்குச் சங்கை செய்து ஓநாய் நிற்பதும், ஹறத்திற்குள் அடைக்கலம் புகுந்த மான் வெளிப்படாமல் நிற்பதும் மகா ஆச்சரியம்!" என்று பேசிக் கொண்டார்கள். மேற்படி மூன்று காபிர்களும் இவ்வாறு பேசிக் கொள்வதை அங்கு நிற்கும் ஓநாய் கேட்டு, அவர்களை நோக்கித் தன் வாயைத்திறந்து "அறிவு சிறிது மில்லாத காபிர்களே, நான் மகத்தான கடவுளுடைய வீட்டின் ஹறத்தை சங்கை பண்ணினது உங்களுக்கு ஆச்சரியமாகவா இருக்கின்றது?" என்றது. அப்போது அம்மூன்று பேர்களும் வியப்படைந்து, ஓநாயை நோக்கி "ஓநாயே நீ ஓட்டம் தவிர்ந்து ஹறத்தை மேன்மையாகக் கருதி இப்புறம் நின்றுகொண்டதுதான் எங்களுக்கு ஆச்சரியமாயிருந்தது; இப் போது நீ சொன்ன சொல் அதனிலும் மகா ஆச்சரியம்" என்றார் கள். அதைக் கேட்ட ஓநாய், மறுதரமும் அவர்களை நோக்கி "பாவிகாள்! இன்று நான் உங்களுக்கு எதிர்நின்று பேசுவதை ஆச்சரியமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இந்த ஹறத்திற்கு உரிய மகத்தான அல்லாஹு தஆலாவின் பேரில் சத்தியமாக,

இதைக்காட்டிலும் பெரிய ஆச்சரிய மொன்று உங்களிடத்தில் இருக்கின்றதே" என்று கூறிற்று. இச்சொல்லைக்கேட்ட அம் மூவரும் திகைத்து, மேற்படி ஓநாயை நோக்கி "ஓநாயே, அதிசயிக் கத்தக்க ஆச்சரிய மொன்று எங்களிடத்தில் யிருப்பதாக நீ சொல்லுகின்றாய். நாங்கள் அறியாவண்ணம் இருக்கும் அந்த மகா ஆச்சரியம் என்ன? இப்போது நீ விபரமாக அதைச் சொல்ல வேண்டும்" என்று கேட்டார்கள்.

சரித்திரப் புராணம்.

கலிவிருத்தம்.

ஆதிதன் னொளியினிற் றரித்த வாதிதன்
றூதென வுலகினிற் றோன்றி நின்றனர்
வேதமு மிறங்கின மெய்மை வேதத்தி
னீதமு நடத்தினர் நிகரு மில்லையால்.
அந்நபி நன்மறை யறைந்தி மான்கொளச்
சொன்னவை யனைத்தையு மறுத்துச் சூழ்தர
வின்னலைப் பொருந்தினீர்த லாலினிப்
பன்னரும் புதுமையொன் றில்லைப் பாரிலே.

அவர்கள் இப்படிக் கேட்டவுடன் ஓநாய், அந்த மூவரையும் நோக்கி "பாதகர்களே, நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மகத்தான அல்லாஹு தஆலாவின் ஒப்பற்ற பேரொளியால் சிருஷ் டிக்கப்பட்டு றஸூல்மார்களுக்குத் தலைவராயும், மனிதர்களை பாவச் சிறையி லிருந்து ஆத்மரக்ஷை பெறும் வண்ணம் மீட்டி இரக்ஷிக்கும் நபி மார்களுக்கு நாயகராயும் அவதரித்து, தங்களின் இஸ்லாம் என்னும் மார்க்கத்தை நியாகமாகவே நடத்துகின்றார் கள். அவர்களுக்கு நிகர் எங்கும் ஒருவருமில்லை. இவ்விதமகத் தான அந்த முஹம்மதுநபி தங்களுக்கு இறங்கிய குர்ஆன் வேதத் தைப் பிரஸ்தாபம் பண்ணி, சன்மார்க்கத்தையும் எடுத்துக்காட்டி 'இதை நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள்; கலிமாச்சொல்லி இஸ்லாத் தில் வாருங்கள்' என்று சொன்ன சொற்கள் அனைத்தையும் மறுத்து, அவர்களுக்கு விக்கினம் விளைக்க நீங்கள் ஒருப்பட்டுத் துணிந்தீர்களே, இதைவிடப் புதுமை இவ்வுலகத்தில் வேறொன்று உண்டா? இல்லை! இல்லை!! ஆ, நபிநாயகத்தின் சொல்லை மறுத்துப்

பகை சாதிக்கும் பாதகர்களாகிய உங்கள் முகத்தில் நான் விழிப்பது சொல்லரிய தீமையை யுண்டுபண்ணும்'' என்று அவர்களுக்குப் பிரதியுத்தரம் சொல்லிவிட்டு, வனத்தை நோக்கிச் சென்றது. ஓனாய் மீண்டு போனபின் ஹறத்தில் புகுந்திருந்த மானும் புறப் பட்டுப்போய் விட்டது.

மேற்படி ஓனாய் மேற்கண்டவாறு சொல்லிவிட்டுப் போன பிறகு, அபூஜஹல் என்னும் சண்டாளன், மற்றவர்களை நோக்கிக்கீழ் வருமாறு சொல்லலானான் :—

“கனவான்களே! வனத்தில் உலாவும் வேங்கை, நாகம், உடும்பு, மான் முதலான விலங்குகளையும், மரம் கல் முதலானவை களையும் பேசும்படி மந்திரோச்சாரணம் செய்யும் முஹம்மது என் பவன், இந்த ஓனாயை இப்படிபேசும் வண்ணம் செய்தது நூதனமா? இது அவனுடைய மாந்திரீகமென்று சொல்லவுமா வேண்டும்? இந்த மக்கமா நகரத்தாராகிய நம்மையெல்லாம் நாசமாக்க நினைத் திருக்கும் அந்த முஹம்மது, இவ்வூரைவிட்டு வேற்றூர் குடிபோயும், தான் நடத்தும் மாயஜாலத்தை விட்டொழிக்கவில்லை. இன்னும் அதைச் செய்த வண்ணமாகத்தா னிருக்கிறான். முஹம்மது நம்மை விட்டு நீங்கி வேற்றூருக்குடியாய்ப் போய்விட்டானென்று நாம் அச்சமற்றிருக்கக் கூடாது. அப்படி யிருந்தால், பிறகு வெல்லற்கரிய சங்கடங்கள் விளையும். பகைவர்களுக்கு இடங்கொடுப்பது புத்தி மான்களின் இலக்ஷணமல்ல அவன் அந்நிய நகரத்தாருடன் கூடி, பலமாயிருந்தாலும் இருக்கட்டும். நாமும் நம் சொல்லுக்குக் கீழ்ப் படும் அயல்நகரத்தார்களைத் திரட்டி அவனுடன் எதிர்க்கும்படி, பகையை மூட்டி, அவனைத்தொலைக்க வேண்டும். அன்றியும், அவனுக்கு வசப்பட்டவர்களையும் நாசமாக்கவேண்டும். பகைவரா யுள்ளவர்கள் நமக்குக் கீழ்படிந்து, திறைகொடுத்து, கைகுவித்து வணங்கி நின்று, தாழ்மையும் இனிமையுமான வசனங்களுடன் மரி யாதை செய்தாலும், அதை உண்மையாக நினைத்து நாம் சிந்தனை யற்றிப்பது பழுது. அது புத்திமான்களின் செய்கையல்ல. எந்தக் காரியத்திலும் எச்சரிக்கையோடு விழித்திருப்பதே சிலாக்கியம். முஹம்மது வசிக்கும் மதீனா நம் மக்காவுக்கு அடுத்ததல்ல; தூரத் திலுள்ளதென்று நாம் கருதி பராக்காயிராமல், அடிக்கடி ஒற்றர்

களை யனுப்பி அவ்விடத்துக்காரியங்களை அறிந்து கொண்டு தான் இருக்கவேண்டும். அந்த முஹம்மது இந்த மக்கமா நகரத்தாரில் தனக்குக் கீழ்படிந்தவர்களைத்தான் தீயோர்களாக்கி இழுத்துக் கொண்டு போய்விட்டானே, இனி இந்நகரத்தின் பேரில் கருத்து செலுத்த மாட்டானென்றும் நாம் நினைக்கக்கூடாது. அவனை இவ்வுலகத்தில் உயிருடன் இருக்கவொட்டாமல், அவன் எங்கிருந் தாலும் நாம் படையெடுத்துச் சென்று, அவனை இரக்கமின்றிக் கொன்று நம் கீர்த்தியை நிலைநாட்டவேண்டும். அதற்கு பிறகு தான் நமதுஜீவியகாலம் மனோரம்மியத்துடன் நடைபெறும். இல்லா விட்டால் சொல்லற்கரிய துக்கமும் துயரமுமாகவே முடியும்'' என கூறினான்.

இதைக்கேட்ட மற்றவர்கள் இச்சொற்கள் ஒவ்வொன்றும் அரு மையான புத்தியேயென்று சிரக்கம்பம் செய்து, வன்பகை மூண்ட வர்களாய், மக்கமாநகரத்திலும், அயல் நகரங்களிலும், சிற்றூர் களிலுமுள்ள காபிர்களை யெல்லாம் ஒருங்கு திரட்டி, அன்றுமுதற் கொண்டு படை சேகரித்து வந்தார்கள்.

63-வது அத்தியாயம்.

வத்தான் படை யெழுச்சி

வண்ணச் சந்த விருத்தம்.

முத்தானகை யொப்பாமிறை தற்சோதியின்
முற்காலம மைத்தேபுக ழுற்றோர்
வித்தாரம துற்றோர்நபி யைத்தா னினி
வெப்போடு மெதிர்ப்போமென நட்பாய்ப்
புத்தானதை வைத்தேநகு வித்தேதொழு
புத்தீனம துற்றோர்குபி ரொட்டார்
வத்தானெனு மத்தானம திற்கூடிடு
வற்பானதை நித்தாரவு ரைப்பாம்.

இதன் பொருள்.

அல்லாஹுத் தஆலா வென்னுங் கடவுளானவன் தானுந்தானாக யாதாமொன்றையும் படைக்காம லிருந்த ஆதிகாலத்திலே, அவன் தன்னொளியில் நின்று மோர் முத்தைப்போ லுண்டாக்கி, புகழப் பெற்றோர்களுமாய் அகண்டிதமான அறிவுகளெல்லாம் பொருந்தி னோர்களுமாய் விளங்கும் நபி முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களை, இனிகடுமையாக எதிர்த்துச் சண்டை செய்வோ மென்று மன நேசத்தோடும், புத்தென்னும் விக்கிரக மானதைப் பூமியில் நாட்டிவைத்து, அதனைக் கைகுவித்துத் தொழுகின்ற புத்தியீனம் பொருந்திய காபிர் சத்துருக்கள், வத்தானென்னும் பெயரையுடைய ஸ்தலத்தில் வந்து கூடிய வலிமையை யெடுத்து, அதி லுள்ளவைகளையெல்லாம் பொருந்தச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

மாறரு நெடுவரை மக்க மாநகர்த்
தேறல ரினையன நிகழ்த்துஞ் செய்கையைக்
கூறரும் பெரும்புகழ் கொண்டன் மானபி
வீறுடைத் திருச்செவி வினையக் கேட்டனர்.

வசனம்.

நபிகட்திலகம் முஹம்மது (ஸல்) அவர்களின் மேன்மையும் கீர்த்தியும் உண்மையும் விளங்கத் தக்கதாக, வனவிலங்குகளி லொன் றாகிய ஓனாய் எடுத்துக் கூறினதால் பொறாமையும் சினமும் அதிகரித்த அபூஜஹல் முதலான மக்கமா நகரத்துக் காபிர்கள் யாவரும் நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் போராடுவதற்காக சேனை திரட்டித் தயாராகும் சங்கதி, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்தது. மக்கமாநகரத்தார் போருக்கு எத்தனப்பட்டு சேனை சேர்க் கிறார்களென்னும் செய்தியை நபிநாயகம் (ஸல்) அவர்க ளறிந்த வுடன் ஆசுத்தமடைந்து, தமது சமூகத்திலிருக்கும் ஒருவரை விளித்து, அஸ்ஹாபிகளனைவரையும் அழைத்து வரும்படி ஆக்ஞை செய்தார்கள். உடனே அவர் சென்று, அஸ்ஹாபிகள் ஒவ்வொருவரையும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் திருச்சபைக்கு

வரும்படி தெரிவித்து அழைத்தார். நபிநாயகம் (ஸல்) யாது காரணத்தினாலேயோ அஸ்ஹாபிக ளனைவரையும் தங்கள் சமூகத் திற்கு அழைக்கிறார்களென்று அபூபக்கர் சித்தீக் றலியல்லாஹு அன்ஹு, உமர் றலியல்லாஹு அன்ஹு, உதுமான் றலியல்லாஹு அன்ஹு, அலிறலியல்லாஹு அன்ஹு இந்த நான்கு அருகர்களும், மற்ற அஸ்ஹாபிகளாகிய தோழர்களும் நபிநாயகம் (ஸல்) அவர் களின் முகதாவில் வந்து கூடினார்கள். அன்று கூடிய சபையில் அஸ்ஹாபிகள் எல்லாரும் வந்திருந்தார்கள். அனைவரும் வந்து கூடின பின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அனைவரையும் நோக்கி சந்தோஷத்துடன் கீழ்வருமாறு சொல்லலானார்கள்:—

“ எனது சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என்றும் துணைவராய், மக்கமா நகரமாகிய ஜனன ஸ்தலத்தை வெறுத்து என்னுடன் புறப்பட்டு வந்துவிட்ட முஹாஜிரீன்களே! வில்லங்கமான காலத்தில் உதவி செய்து என்னையாதரித்துக் களிப்படுத்தின அன்சாரீன்களே! நான் சொல்லப்போகிற சமாசாரத்தை நீங்களனைவரும் கவனமாய்க் கேட்க வேண்டும். இப்போது மக்கமா நகரத்து ஆபூஜஹல் முதலான குறைஷிக் காபிர்களும், மற்ற அயல் நகரத்துப் பகைவர் களும் ஒருங்கு திரண்டு, நம்மை யெதிர்க்கும்படி சைனியஞ் சேர்த்துக்கொண்டு சண்டைக்கு எத்தனமா யிருக்கிறார்களென்று நான் கேள்விப்பட்டேன். அது வாஸ்தவமாகவே யிருக்குமென்பது எனது நம்பிக்கை. நான் மக்கமா நகரத்திலிருந்து பிரயாணமாகிற போது ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் வந்து, தாங்கள் மதீனமா நகரம் போய்ச் சேர்ந்த பின் பகைவர்களைச் சங்காரம் செய்யுங்கள் என அல்லாஹுத் தஆலா கட்டளை பண்ணினானென்று சொன்னசொல் சும்மாபோகிறதல்ல. நாம் அச்சொல்லின் பிரகாரம் நடத்தி, நமது திறமையை நிலைநிறுத்தி, பகைவர்களை யெல்லாம் நாசஞ்செய்யவேண்டும். நமக்கு இடையூறு விளைக்கும் பகையர் களை சங்கரிப்பதும், நமது தீன் என்னும் மார்க்கத்தைப் பரப்பு வதுமே எப்போதுமுள்ள நமது தொழிலேயன்றி, வேறே எண்ணமும் தொழிலும் இல்லை. ஆகையால் எனது சிநேகிதர் களே! தற்காலம் நமது தீனின் பேரில் படையெடுக்கும் சத்துருக் களை அறத்தொலைக்கும் உபாயம் நாமே அவர்களுக்கு எதிர்சென்று

போராடுவது உத்தமமென்று நினைக்கிறேன்" என இவ்வாறு பரிந்து சொன்னார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன இச்சொல்லைக் கேட்ட அன்ஸாரிக ளனைவரும் ஒருமித்து, நாம் நபிநாயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கிற் பிறக்கும் எந்த வார்த்தைக்கும் உடன்பட்டு நிற்கும் ஊழியர்களாகையால், இச்சொல்லுக்குத் தடையில்லை யென்று துணிந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாரஸூ லல்லாஹ்! தங்களின் ஊழியர்களாகிய நாங்கள் தங்கள் வாக்கி லிருந்து எப்போது என்ன கட்டளை பிறக்குமோ வென்று ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். இப்போது இந்த உத்தமமான வசனம் தங்களின் திருவாக்கிற் பிறந்தது, எங்கள் பாக்கியம். இனி தாங்கள் இவ்வாறு இன்னதைச் செய்யுங்க ளென்று எங்களுக்கு ஆக்ஞை செய்யவேண்டியது தான்" என மிக மரியாதையுடன் சொன்னார்கள். இதைக்கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆனந்தமடைந்து, அவர்களை நோக்கி "அன்ஸாரி களே! இனி நீங்கள் பிசபீலுக்கு ஆகவேண்டிய காரியங்கள் எல் லாவற்றையும் சுறுசுறுப்புடன் நடத்துங்கள்" என்று உத்தரவு செய்தார்கள்.

நபிநாயக மவர்கள் இவ்வாறு கட்டளை பண்ணினவுடன், அன்ஸாரிக ளனைவரும் யுத்தத்துக்குரிய உபகரணங்கள் எல்லா வற்றையும் சேகரிக்கத் தலைப்பட்டார்கள். யுத்தங்களில் பயின்று தேறிய குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள், கோவேறுக் கழுதை கள், இரதங்கள், சிவிகைகள் என்னும் வாகனங்களும்; கொடிகள், குடைகள், ஆலவட்டங்கள், சாமரைகள் என்னும் விருதுகளும், அஸ்திர சஸ்திரம் என்னும் இரு வகுப்பினையுடைய அம்பாதி, வாளாதி யாயுள்ள பதினெட்டுவகை ஆயுதங்களும், முரசு முதலான வாத்தியங்களும் உணவுகளும், குறைவின்றிச் சேகரித்து ஆயத்த மானார்கள். சேனைக்குரிய இலக்ஷணப் பிரகாரம் அனைத்தும் சேகரமான பின்பு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அன்ஸாரி களில் வீரதீரத்திற் சிறந்த ஒருவரை சேனாதிபதியாக நியமித் தார்கள்.

இவ்வண்ணம் நபிகட்திலகம் (ஸல்) அவர்கள் சேனை திரட்டிப் போருக்கு ஆயத்த மாயிருக்கும் போது. சிலநாட்கள் சென்ற பின், அபூஜஹல் முதலான குறைஷிக் காபிர்களும் அவர் களைச் சேர்ந்த கனைக் கூட்டத்தார்களும் பெரும்படையாய்த் திரண்டு, வத்தான் என்னும் ஸ்தலத்தில் வந்து பாளைய மிறங்கி யிருக்கின்றார்க ளென்று, மதீனமா நகரத்திற்குச் செய்தி வந்தது. சத்துருக்களின் சைனியம் வலிய வந்து கூடியிருக்கின்றார்களென் பதை யறிந்த அன்ஸாரி களனைவரும் சினங்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, நாம் நமது சேனையை நடத்திக் கொண்டு அந்த வத்தானில் சென்று பகையர்களுடன் எதிர்த்துப் போராட வேண்டு மென்று சொன்னார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் இசைந்து. முன் மதீனமா நகரத்துத் தலைவர் களுக்கு நாயகமாய் விளங்கி யிருந்த சஃது றலியல்லாஹு அன்ஹு வைத் தங்களுக்குப் பிரதிநிதியாக மதீனமா நகரத்திற்கு நியமித்து விட்டு, அன்ஸாரிகள் என்னும் சேனாவெள்ளம் புடை சூழ, பகை வர்கள் பாளைய மிறங்கி யிருக்கும் வத்தானை நோக்கி, புறப்பட்டார் கள். சத்துருக்களுடன் போராடு வதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் படையெடுத்ததின் ஆரம்பம் இதுதான். நபிநாயகமவர்கள் தங்களில் மகா வீரமமைந்த சேனையாகிய அன்ஸாரிகள் அனைவரும் ஆயுதபாணிகளாய், அணியணியாய்ப் பின்வர, அருகர் நால் வரும் பக்கத்தில் நெருங்கிவர, மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, முரசுகள் இடிபோல் முழங்க, வாகனங்களின் விரைந்த நடையா லெழும் புழுதிகள் ஆகாயமெங்கும் பரவ, ஆயுதங்கள் வெயில்போற் பிரகாசிக்க, தக்பீரும், ஸலவாத்தும் கடலொலி யொத்து ஒலிக்க நடந்து, மேற்படி பகையர்களிறங்கி யிருக்கும் வத்தான் என்னும் தலத்தை நெருங்கினார்கள்.

வத்தான் என்பது, மக்கா மதீனா வென்னும் இரு நகரங் களுக்கு மிடையில் கடலடுத்த ஒரு சிற்றூர். அவ்வூருக்குள்ளேயே பகையர்கள் திரண்டு பாளைய மிட்டிருக்கிறார்க ளென்பதையறிந்து, தாங்கள் தங்களின் சேனா சமுத்திரத்தைக் கொண்டு அந்த வத் தானை முற்றுகை போட்டார்கள்.

நபிகட்திலகம் (ஸல்) அவர்களின் இராணுவம் வந்து தனது வத்தானை முற்றுகை யிட்டிருப்பதை அவ்வூர் அரசனாகிய மஹ்தி

என்பவன் எழுந்து, மக்கமா நகரத்தாரும், மதீனமா நகரத்தாரும் ஒருவருக்கொருவர் பொல்லாங்கு மூதிர்த்து போராடிக் கொள்ளும் காரியத்தில் முன்னிட்டு, நம்மூரில் வந்து பாளைய மிட்டிருக்கிறார்கள். இப்போது நிகழும் காரியத்தைப் பற்றி ஆராயுமிடத்தில், இனிபாரதூரமான வெல்லரிய சங்கடங்கள் நமக்குவந்து சம்பவிக்கும். சேனாபலமும், திரவிய செருக்குமுள்ள அவ்விருதிறத்தாரும் எதிர்த்து நின்று பகை சாதிக்கும் போது அத்தனை தகுதியற்ற நாம் இடையில் சிக்குண்டு வருந்த வேண்டிய முகாந்தரமென்ன? இனி நாம் இதற்கொரு தகுந்த முடிவு செய்து விலகிக்கொள்ள வேண்டுமென்று அதிகமாய்க் கவனித்து, இதைப் பற்றி தனது மந்திரி பிரதானிகளுக்கு அறிவித்து, தனது தலைவர்களில் ஒருவனை யழைத்து, நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்கும் வண்ணம் தனது எண்ணத்தை தெரிவிக்கும்படி, நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்திற்குத் தூதாக அனுப்பினான். வத்தானின் குறுநில மன்னனாகிய மஹ்சி யனுப்பின அந்த தூதன், நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று சொல்லலானான்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

இறையவன் றிருநபி யுலகுக் கின்புறு
மறைவழி யொழுகியவ் வணக்க வாசக
முறைமையி னடத்தியா மூழுது மிவ்வழி
னுறைகுவ தலதுவே றுறுதி வேண்டுமோ.

மருசியென் றோதும் வத்தானி னேந்தலு
மிகுபடைத் தலைவரும் வேறு றொரு
தகைமையிற் பணிவது சரத மின்று நீ
ரிகன்மறுத் தணிநகர்க் கெழுக வென்றனன்.

வசனம்.

"நபியே! தாங்கள் மனிதர்களை இரக்ஷிக்கும் நபியாய் அவதாரஞ் செய்து, தீன் என்னும் பரிசுத்தமான மார்க்கத்தை உலகமெங்கும் பிரஸ்தாபஞ் செய்து, காணரிய அற்புதங்களை விளைத்து மனிதர்களை மோக்ஷத்தில் சேர்த்துக்கொண்டிருப்பது உலகமறிந்த விஷயம்தானே. தங்களுடைய காரியங்கள் உண்மையானவை என்

பதற்குத் திருஷ்டாந்தம் வேறு வேண்டிய தில்லை; தங்களுடைய மகிமையான நடவடிக்கைகளே தகுந்த சாக்ஷி பகரும். இப்போது நான் தங்களுக்கு உறுதியான ஒரு சொல் சொல்லுகிறேன். அதாவது: இந்த வத்தான் என்னும் சிற்றூரை யாளும் அரசனாகிய மஹ்சியும், அவனது சர்வ ஜனங்களும், இனி சிறிதும் பிசகாமல் தங்களுக்குக் கீழ்ப்படிவது சத்தியம். ஆனபடியால், தாங்கள் இன்றைக்கே புறப்பட்டு, சேனா சமுத்திரத்துடன் மதீனமா நகரம் போய்ச் சேரும்படி, தங்களை மிக மன்றாட்டத்துடன் நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். மக்கமா நகரத்து குறைஷிகளும் இவ்விதமே புறப்பட்டுப் போய்விடுவார்கள்" என்று மிகப்பரிந்து சொன்னான். வத்தான் அரசனும் அவன் ஜனங்களும் கீழ்ப்படிந்து விடுவதாகச் சொன்ன சொல், நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது. பகைவர்களும் போய்விடுவார்களென்றபடியால், இனி அங்கே வேறு அலுவலொன்று மில்லையென்று நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இராணுவங்களைப் புறப்படும்படி கட்டளை பண்ணினார்கள். இட்ட முற்றுகையை விட்டு நபி நாயகம் (ஸல்) அவர்களின் சேனை புறப்படக்கண்ட மேற்படி தூதன், நபி நாயகம் (ஸல்) அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஊருக்குள் சென்று, நடந்த சங்கதியை மஹ்சிக்கு அறிவித்தான்.

பிறகு நபி நாயகம், (ஸல்) அவர்கள், அந்த வத்தான் முற்றுகையை விடுத்து, தங்கள் சேனா சமுத்திரம் பின் தொடர நடந்து மதீனமா நகரத்தை நோக்கி வரும்போது, பாதையி லெதிர்ந்த ஒரு தருக்களடர்ந்த வனத்தில் கூடாரமிட்டு இறங்கும்படி தலைவர்களுக்குக் கட்டளை பண்ணினார்கள். கட்டளைப் பிரகாரம் இரத-கஜ-துரக-பதாதி யென்னும் நான்கு வகை சேனையும், அது அதன் ஸ்தானங்களில் தங்கின பிறகு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுக்கிட்ட அலங்காரமான கூடாரத்திலிருந்து கொண்டு அஸ்ஹாபிகளாகிய முஹாஜிரீன்களில் எண்பது வீரர்களை ஒருங்கு சேர்த்து, உபைதா என்பவரை அந்த எண்பது வீரர்களுக்கும் தலைவராக நியமித்து, அவரைநோக்கி இதமான சில போதனைகளை போதித்து, "நீர் இந்த எண்பது வீரர்களையும் அழைத்துக் கொண்டு போய், மக்கமா நகரத்திற்கு அடுத்திருக்கும் நாட்டுப்புறத்து கிராமங்களுக்குச் சென்று, இஸ்லாத்தை பிரசாரம் செய்யுங்கள்." என்று ஏவினார்கள். இவ்வாறு கட்டளை யிட்ட பிறகு,

நபி நாயகம் (ஸல்) அவர்கள் அந்த எண்பது வீரர்களையும், தலைவராகிய உபைதா றலியல்லாஹு அன்ஹுவையும் தங்களின் காருண்யம் நிறைந்த கண்களால் நோக்கி, மனமகிழ்ச்சியுடன் வெற்றிக் கொடி யொன்றைத் தங்கள் கையால் எடுத்து உபைதா றலியல்லாஹு அன்ஹு கையில் கொடுத்து, ஆசீர்வதித்து அனுப்பினார்கள். பின்பு உபைதா றலியல்லாஹு அன்ஹுவும், எண்பது வீரர்களும், நபி நாயகம் (ஸல்) அவர்களின் பாத தாமரைகளைப் பணிந்து சலாம் சொல்லிக் கொண்டு. தங்கள் தங்கள் குதிரைகளி லேறி மக்கமா நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். மேற்படி வீரர்கள் சென்ற பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் அந்த வனத்தை விட்டுப் புறப்பட்டு, சேனைகள் புடைசூழ நடந்து, மதீனமா நகரம் வந்து சேர்ந்து, தங்கள் ஆசனத்தில் வீற்றிருந்தார்கள்.

தருக்களடர்ந்த அடவியி லிருந்து புறப்பட்ட உபைதா றலியல்லாஹு அன்ஹு அவர்களும், எண்பது வீரர்களும், வனம் வனாந்தரம், மலை, குன்று, அருவியடங்கலையும் கடந்து மக்கமா நகரத்தை யடுத்த கிராமங்களில் சென்று, இஸ்லாத்தை பிரசாரம் செய்தார்கள். அதற்கு ஊரார் எதிர்த்ததால் சூறையாடுவதற்குத் தலைப்பட்டார்கள். அந்தக் கிராமங்களில் வசிக்கும் பிரஜைகளாகிய காபிர்களனைவரும், மேற்படி வீரர்கள் போய்க் கிராமங்களில் பிரவேசித்த மாத்திரத்தில் திகில் பிடித்துத் தெறிகெட்டுப் பலவழியும் சிதறியோடினார்கள். கிராமங்களில் திடீரென்று கலக முண்டாய், அக்கிராம வாசிகளாகிய ஆண், பெண், சிறுர் அனைவரும் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு, சுதந்திரமான பொருள்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டுப் பலவழியும் சிதறித் தெறிகெட்டுப் போய் விட்டார்கள். முஹம்மது நபியாலவரவிட்ட உபைதாவும், எண்பது வீரர்களும் வந்து இக்கலக்கத்தை விளைத்தார்களென்ற சங்கதி, இராஜமா நகரமாகிய மக்காவுக்கு எட்டியது. உடனே குறைஷிக் காபிர்களனைவரும் சினங் கொண்டார்கள். அடுத்த கிராம வாசிகளுக்கு உண்டான விபத்தை விலக்குவதற்காக வேண்டி, அபூஜஹல் என்னும் சண்டாளனுடைய குமாரனாகிய இக்ரிமா என்பவன் துணிந்து, குறைஷிக் காபிர்களில் அநேக வீரர்களை யழைத்துக் கொண்டு மக்கமா நகரத்தை விட்டு வெளிப்பட்டுக் கலக முண்டாய் இருக்கும் கிராமங்களை நோக்கி வந்தான்

இக்ரிமத்திப்னு அபூஜஹல் பெரும் படையுடன் தம்மை யெதிர்க்க வரும் சமாசாரத்தை உபைதா றலியல்லாஹு அன்ஹு கேட்டு எதிர்த்து நின்று போராடுவதற்குத் தயாராய், மன உற்சாகத்துடன் நின்றார்கள். அப்போது இக்ரிமாவுடைய சேனை முன்னேக்கி வந்து அணிவகுத்து நின்றது. காபிர்களின் படை அணி வகுத்து நிற்பதைக் கண்ட உபைதா றலியல்லாஹு அன்ஹு, தமது எண்பது வீரர்களையும் நிரையாக நிறுத்தி, தாமும் முன்னின்றார். இவ்வாறு இரண்டு சேனையும் ஒன்றோடொன்று கை கலந்து போராட ஆயத்தமாயிருக்கையில், இக்ரிமாவுடைய சேனையிலுள்ள மிகுதாது என்பவரும், உதபத்து என்பவரும், தீனை விரும்பித் தங்கள் சேனையை விட்டுப் பிரிந்து உபைதா றலியல்லாஹு அன்ஹு இடத்தில் வந்து சேர்ந்தார்கள். குறைஷிகளில் தலைவர்களாயுள்ள இவ்விருவரும் இஸ்லாம் மார்க்கத்தில் விருப்பமுற்று அஸ்ஹாபிகளுடன் வந்து கூடிக் கொண்டவுடன், அஸ்ஹாபிகளி லிருக்கும் உக்காஸ் உடைய புத்திரர் ஸஃது (றலி), பகைவர்கள் மேல் அஸ்திரப்பிரயோகம் செய்யத் துணிந்து, தமது வில்லை வளைத்துப் பகைவர் சேனையை நோக்கி அம்புகளைச் சோனுமாரி போலப் பொழியக் கருதி முந்தி ஒரு அம்பை யெய்தார். அது பகையர்களில் சிலரைக் கொன்று :சென்றது. மிகுதாது, உதபத்து என்னும் இரண்டு பேர்களும் சத்துருக்களுடன் சேர்ந்து கொண்டதையும், ஸஃது என்பவர் அஸ்திரப் பிரயோகஞ் செய்யத் துணிந்து நிற்பதையும் இக்ரிமா கண்டு பயந்து தன் தளத்தைவிட்டு பின் வாங்கிக்கொண்டு மீண்டான். கை கலந்து சமர் செய்யாமல் பகையர்கள் தளஞ் சாய்ந்து போவதை உபைதா (றலி) கண்டு. இம்மட்டோடு நாமும் மீண்டு போய் விடுவதே உத்தம மென்றெண்ணி, நிகழ்ந்த க்ரியம் நமக்கு வெற்றிதா னென்று சந்தோஷமுற்று, தமது வீரர்களை யழைத்துக் கொண்டு, மலை வனம்முதலான எல்லாவற்றையும் கடந்து மதீனமா நகரம் வந்து சேர்ந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நடந்த காரியங்களைத் தெரிவித்தார்கள். கொண்டு வந்த கொள்ளைப் பொருளுக்காகவும், ஸஃது என்பவர் பிசபிலுக்கென்று முந்தி அஸ்திரம் விடுத்ததற்காகவும் நபி நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷ முற்றார்கள்.

64-வது அத்தியாயம்.

பாத்திமா நாயகியின் திருமணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நேத்தியார் காரண நீணபி கற்பகம்
பூத்தசீர் மாமணப் புட்பமா தியினை
யேத்தியே நாளெலா மிறைஞ்சு நேரிழை
பாத்திமா நாயகி திருமணம் பகர்வாம்.

இதன் பொருள்.

நன்மை பொருந்திய காரணம் கொண்ட நபி முஹம்மது என்னும் கற்பக விருட்சத்தில், மகா மணத்தோடுஞ் சிறப்பாகப் பூத்த புட்பமாகி, ஆதி நாயகனை அல்லாஹு தஆலாவை யெந்நாளும் குறைவில்லாமல் பக்தி வணங்கும் பெண்கள் சிகாமணியான பாத்திமா நாயகியவர்களின் திருமண வரலாற்றைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திங்கள்வந் திறைஞ்சிப் போற்றி செய்தெதிர் பேசப் பேசு
மங்குலங் கவிகை வள்ளல் வளம்பெறு மதீனத் தன்னிற்
பொங்குதீன் வியங்க நாளுங் காரணப் புதுமை யோங்கி
யெங்கணும் படரச் செங்கோ னெறியர சியற்று நாளில்.

வசனம்

நபிகள் திலகம் முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கள், தீன் என்னும் பரிசுத்தமும் மகிமையும் பெற்றோங்கும் மார்க்கம் நாளுக்கு நாள் விர்த்தியாகும் வண்ணம், இராஜமாபுரமாகிய மதீனாவி லிருந்து அரச பரிபாலனஞ் செய்து வரும் காலத்தில், நபி நாயகம் (ஸல்) அவர்களின் பிரிய நாயகியாராகிய கதீஜா (றலி) அவர்கள் ஈன்ற குமாரத்திகள் நால்வரில், கனிஷ்டையாகிய பாத்திமா (றலி) அவர்களுக்குப் பருவம் வந்து ருதுவானார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்களின் செல்வப் புதல்வியாகிய பாத்திமாவின் அவயவ இலக்ஷணங்களையும் குணாதிசயங்களையும் விவரித்துச் சொல்லி முடிப்பதற்குத் தக்கசக்தி பெற்றவர் வானவர்களிலு மில்லை. ஆகையால் அந்தப் பெண் மாணிக்கத்தை வருணித் தெழுத அறிவற்ற நாம்

எம்மாத்திரம்? சுவர்க்கத்தில் வாசஞ் செய்யும் அரம்பையர்கள் இமையா நாட்டம் பெற்றிருப்பதற்கு மூகாந்திரம் பாத்திமா (றலி) கட்டழகை இமைக்காமல் நோக்கி ஆனந்த மடைவதற் கல்லவா? பிரகாசமமைந்த சந்திரன் ஒருவாறு உள்ளந்தேறி அமர்ந்திராமல் நாளுக்குநாள் வளர்ந்து பூரணமாய், மறுபடியும் நாளடைவில் குறைந்து போய், நிலையற்றிருப்பதற்கு மூகாந்தரம் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவின் முகவஜீகரத்துக்குச் சமானமாக வழி யில்லாமை யல்லவா? முடிவில் பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவின் இலக்ஷணங்களை ஒருவாறு உவமித்து இங்கெழுதினும் எழுதலாம். அவ்வுவமானங்களெல்லாம், இவ்வுலகத்து அன்னிய மாதர்களுக்கு எடுத்துக் காட்டி வருணித்த உவமானங்களேயன்றி வேறல்ல· அவைகள் மேற்படி பெண்ணரசிக்குப் பொருந்தாதாகையால், அதைப்பற்றி நாம் சிறிதும் எழுதாமல் நிறுத்தி, தமக்கு நிகரான மாதர் வானுலகத்திலு மின்றித் தாமே நிகராகிய அந்த மாதரசியின் விவாக வரலாற்றைப் பற்றி இங்கெழுதுகிறோம்.

நபிகள் திலகம் முஹம்மது (ஸல்) அவர்களின் செல்வியாகிய பாத்திமாவுக்கு, மாற்றுயர்ந்த தங்கப் புஷ்பத்திற்குப் பரிமளம் வாய்த்தது போலவும், பிரகாசம் மிக்க மாணிக்கத்திற்கு மதுரம் வாய்த்தது போலவும், இன்பமான கரும்புக்கு முத்து வாய்த்தது போலவும் பாலிகின் பருவம் வந்தது. பாத்திமா பாலிகான பின், கற்பின் மேன்பாட்டிலும், ஒப்பற்ற அறிவிலும், களங்கமற்ற கல்வியிலும், கட்டழகிலும் பிறமாதர்களிலும் அநேக ஆயிர மடங்கு விசேஷித்து, அரம்பையர்களும் மருண்டு போகத் தக்க விதமாய் விளங்கினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் இளைய புதல்வி பருவமடைந்திருப்பது மதீனமா நகரத்திலிருக்கும் முஸ்லிமான பிரபுக்க ளனைவருக்கும் தெரிந்தது. 'இந்தப் பெண்ணரசை நான் விவாகம் செய்து கொள்வேன்' என்று நாவுயர்த்தித் துணிந்து சொல்வதற்குத் தகுதி பெற்றவர், இவ்வுலகத்தில் யாருண்டு? அதனால், அநேக கனவான்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களின் புதல்வியாகிய பாத்திமாவை விவாகஞ்செய்து கொள்ளக் கேட்பவர் யாரோவென்று பிரதி தினமும் நெஞ்சுருகி நின்றார்கள். அன்றியும், குடும்பத்திலும், திரவியத்திலும், கல்வியிலும் சிறந்த பல தலைவர்களொருங்கு கூடி, மேற்படி பெண்

மணியின் விவாகத்தைக் குறித்து ஒருவர்க்கொருவர் கலந்து சம்பாஷித்தார்கள். இவ்வாறு பலர் கூடிப் பேசியும், ஒருவரே தம் இருதயத்துடன் முறையிட்டும் ஆவதென்ன? கோரிய கருமத்தை இரகசியத்தில் வைத்துக் கொள்ளக் கூடுமேயன்றி, வெளிக்குக் கொண்டுவர ஒருவராலும் இயலாது; காரியமும் அப்படியே நிகழ்ந்தது.

இவையல்லாமல் நபிநாயகம் (ஸல்) அவர்களின் குமாரத்தியாகிய ஒப்பற்ற பெண்மணியை விவாகஞ்செய்து கொண்டு இவ்வுலகம் வாழ்த்த மகிமை பெற்றிருக்கும் ஊழ்வினையுள்ளவர் நம்மில் எவரோவென ஜனங்கள் கூடிப் பேசிக் கொள்ளுவார்கள். இன்னும் பலர் தம் தம் இருதயத்திலே இதைப் பலவாறு கருதி, வெளியிடமாட்டாமல் மவுனமாய் அவாமீறி யிருப்பார்கள். இன்னும் சிலர், நேரே நாம்போய்க் கேட்பது முறையல்லவென் றெண்ணி, அயல் நகரங்களில் வசிக்கும் தம் தம் பந்துக்களுக்கு நிருபமனுப்பி, நபிநாயகம் (ஸல்) அவர்களின் செல்வ மகளை விவாகஞ் செய்து கொள்ளக் கேட்கும்படி தூண்டுவார்கள்.

இவ்வாறு நிகழுங் காலத்தில், கோத்திரத்திலும் கல்வியிலும் விசேஷமுள்ள சில திரவியவான்கள், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் இரகசியமாக வந்து மட்டற்ற திரவியங்களைத் தேவரீருடைய மகளுக்காகக் கொடுக்கிறோம், தாங்கள் விவாகஞ் செய்து கொடுங்களென்று தனித் தனியே கேட்டார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உரைபல ரிணைய வண்ண முலகவ ரியம்ப யாணர்
மரைமலர் வதன வள்ளன் மங்கைதம் வதுவை வல்லோன்
றிருவுளப் படிய தன்றிச் செய்வதின் றென்னச் செவ்வி
தருமனத் திருத்தி யாருஞ் சாற்றுதல் பொருந்தி லாரால்.

வசனம்.

அவற்றிற்கெல்லாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பொருந்தவில்லை. வந்துகேட்பவர்களை நோக்கி "கனவான்களே! என்மகளாகிய பாத்திமாவின் விவாகம் என்னுடைய சித்தத்தின்படி நடப்பதல்ல; அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படிக்கும் கட்டளைப்

படிக்குமே நடக்கும் என உத்தரஞ்சொல்லி விட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு சொன்னது பிரஸ்தாபமான பின், அநேகர் அதைப்பற்றி வாய்த் திறக்கத் தகுதியின்றி மவுனமாயிருந்து விட்டார்கள்.

இது இப்படி யிருக்குங் காலத்தில், நபிநாயகம் (ஸல்) அவர்களின் செல்வமகளாரை விவாகஞ்செய்து கொள்ள வேண்டுமென்னும் பேராசை, பிறர் மனதிலுண்டான அளவுக்கு அனேகம் பங்கு அதிகமாக, நபிநாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபின் குமாரரும், அருகர்கால்வரிலொருவரும், அல்லாஹு தஆலாவின் வேங்கை யென்னும் பட்டம் பெற்றவருமாகிய அலி (றலி) அவர்கள் இருதயத்தில் உண்டாயிருந்தது அந்தப் பேராசை அவர்கள் இருதயத்தில் நாளுக்கு நாள் விர்த்தியாய்க் கொண்டே வந்தது. இவ்வாறு காதல்மீறிய அலி (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களின் செல்வமகளாரின் விவாகத்தைக் குறித்து மதீனமா நகரத்தார் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதையும், அயல் நகரங்களிலிருந்து வரும் தூது, நிருபம் இவற்றின் தன்மையையும், அவற்றிற்கெல்லாம் நபிநாயகம் அவர்கள் சொன்ன பிரதியுத்தரத்தையும், அவர்களின் சித்தத்தையும் நினைத்து, காரியம் எவ்வாறு முடியுமோவென்று மனந்தேறாது வருந்தினார்கள். ஆனால், பாத்திமா (றலி)வைவிவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்னும் பேராசை அலி (றலி) அவர்களின் மனதிற் பிறந்தது இன்று நேற்றல்ல; இவர்களெல்லாரும் ஒரு குடும்பமாக வாசஞ் செய்வதால், பாத்திமாவின் சிறு பிராயத்திலேயே யுண்டு. அந்தப் பேராசை நாளுக்கு நாள் நீடித்து வந்ததுமன்றி, பிறர் விவாகத்திற்கு எத்தனித்தமையால் இவர்களுக்கு இது அதிகமாயிற்று. பின்னும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைப் படிக்கும், கட்டளைப் படிக்குமே நடக்க வேண்டுமென்றபடியால், எப்படி முடியுமோவென்று கலங்கவும் நேரிட்டது. அதனால், அலி (றலி) அவர்கள் நல்லூண், நல்லுடை, நல்லுறக்கம் முதலிய சுகங்களெல்லாவற்றையும் வெறுத்து, இராப் பகல் இதுவே சிந்தனையா யிருந்து வருந்தினார்கள். உன்னதமான பர்வதங்களையும் இடித்துத்தகர்க்கும் வல்லமை வாய்ந்த அலி (றலி) அவர்களின் இருபுஜங்களும், பாத்திமா மீதுவைத்த பேராசையால்

மெலிந்தன. பாத்திமாவின் கட்டழகென்னும் சமுத்திரத்தில் வீழ்ந்து அமிழ்ந்திய அலி (றலி) அவர்களின் இருக்கண்ணுக்கும் அந்த பாத்திமாவின் சிறந்த உருவொன்றே தோற்றப்படுமன்றி, பிறவுருவொன்றும் தோற்றப்படுவதில்லை. அலி (றலி) அவர்களின் விழிகளில் பிரதி தினமும் தோற்றப் படுகிற பாத்திமாவின் உருவொளித் தோற்றத்தின் விழிகளாகிய இரண்டு கயல்கள் பாய்ந்து, அவர்களின் அகக்கடலை யுழக்கின. அலியென்னும் வேங்கை பாத்திமா வென்னும் அழகிய மானின் இயல்பில் மருண்டு, தனது வீரத்தை யிழந்து ஒடுங்கிக் கிடந்தது.

பாத்திமா (றலி) யை விவாகஞ் செய்துகொள்ளும் தெய்வநியமமும், ஒருதரமாவது தரிசித்திருக்கும் கண் காக்ஷியு மில்லாத அந்நியப் பிரபுக்களின் மனங்கள், கேள்வியால் பலவாறு ஏக்கம் கொண்டு கலங்கின வென்றால், தமக்கே நாயகியாகும் ஊழ்வினையும் பிரதி தினமும் அடுத்தடுத்துத் தரிசிக்கும் கண்காக்ஷியுமுள்ளவராய், என்றும் அந்த பெண்ணாயகத்தை இருதயத்திலிருத்தி யிருக்கும் அலி (றலி) யின் பேராசையையும், மனக்கலக்கத்தையும் விவரித்துக்கூற யாரால் இயலும்? அதற்குத் தக்க திறமையுள்ளவர் ஒருவருமில்லை.

இவ்வாறு பேராசையால் வருந்தா நிற்கும் அலி (றலி) அவர்கள், தாங்கள் பாத்திமாவை விவாகஞ் செய்து கொள்ளுதற்காகுமான பல வழிகளை யோசித்தும், ஒன்றும் முடிவு பெறாமையால், இக்காரியத்திற் காகவேண்டி நாம் படும் பிரயத்தனம் அல்லாஹு தஆலாவிடம் இரந்து கேட்பதே யன்றி வேறில்லை யென்றெண்ணி, தமது இரு கரங்களையும் உயர்த்தி, "யா அல்லாஹ்! அடியார்களின் கோரிக்கையை முடித்து மகிழச் செய்யும் தயாளனே! நீ நாடிய எவ்விதக் கருமத்தையும் குறைவின்றி முடிப்பாய். நீண்ட காலமாக என் இருதய கமலத்தில் குடியிருக்கும் பெடையன்னமாகிய பாத்திமாவை எனக்கு நாயகியாக்கி யருள்வாயாக" என்று மன்றாடி துஆ இரந்து. கேட்டார்கள். இவ்வாறு அலி (றலி) அவர்கள் பாத்திமாவை தமக்கு நாயகியாக்கித் தரும்படி அடுத்தடுத்து அல்லாஹு தஆலாவிடம் துஆ இரந்து கேட்டார்களேயன்றி, பிறரிடம் வாய்விட்டுச் சிறிதும் சொல்லவில்லை. தன்பக்கம் பிரதி தினமும் மன்றாடி துஆ இரக்கும் அலி (றலி) அவர்களின்

பிரார்த்தனையை அல்லாஹு தஆலா உவந்து பொருந்திக் கொண்டான். அலி (றலி) அவர்களின் கோரிக்கைப் பிரகாரம் அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் நிறைவேறிற்று.

பிறகு, அல்லாஹு தஆலாவின் உத்தரவுப்படி வானவர்களுக்கு அதிபதியாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து ஸலாம் சொல்லி, நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஆனந்த சாகரத்தில் மூழ்கும் வண்ணம் நோக்கி சொன்னதாவது:

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அரியவன் றிருமெய்த் தூதே யண்ணலே யிறையோன் சோதிக்
குருமணி யினத்தாற் போதாற் கொழுந்துகி லதனாற் செம்பொற்
றிரு நகர் மனைக டோறுஞ் சிறப்பிக்க வருளிச் செய்தா
னுரையருட் படியே வானோ ரும்பரின் விளக்கஞ் செய்தார்.

பொன்னகர் விளக்கிப் பின்னர் புகழ்தர மகரு நாட்டி
யென்னுட னிசுறா பீல் மீக் காயீலுஞ் சாக்ஷி யேயப்
பன்னரு மலியார்க் கின்பப் பாத்திமா தமைநிக் காஹு
முன்னிய தருத்து பாவின் முடித்தன னிறைவ னன்றே.

வசனம்.

"யாறஸூலல்லாஹ்! மகத்தான அல்லாஹு தஆலா எட்டுசுவர்க்கங்களையும் அலங்கரித்து விளங்கும்படி மலக்குகளுக்கும், ஹூறுல் ஈன்களுக்கும் கட்டளை பண்ணினான். அவ்வாறே அலங்கரித்து முடித்தனர். பிறகு அல்லாஹு தஆலா, தானே ஒலியாய் நின்று என்னை மணவாளர் புறத்தானாக்கி, ஐந்நூறு வெள்ளி நாணயங்களை மஹர் வைத்து, இஸ்றாபீலையும், மீக்காயீலையும் சாக்ஷிகளாக நியமித்து, தங்கள் கண்மணியான மகளாகிய பாத்திமாவுக்கும். அபூத்தாலிபின் குமாரராகிய அலிக்கும், துபா என்னும் விருக்ஷத்தடியில் நிக்காஹ் முடித்தான். இந்த சமாசாரத்தைத் தங்களுக்கு அறிவிக்கும்படி எனக்கு அல்லாஹு தஆலாவின் கட்டளை பிறந்தது; ஆகவே இப்போது நான் இங்குவந்தேன்" என்று சொன்னார்.

தங்கள் செல்வப் புதல்விக்கும், அலிக்கும், அல்லாஹு தஆலா விவாகம் முடித்தானென்ற சொல்லை ஜிப்றயீல் சொன்ன மாத்திரத்தில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆனந்தமீறி உள்ளமும் புஜங்களும் பூரித்தார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்கர் (றலி), உமர் (றலி), உதுமான் (றலி) என்னும் இம்மூன்று அருகர்களையும் மற்ற அஸ்ஹாபிகளாகிய முஹாஜிரீன்கள், அன்சாரீன்கள் என்னும் இருதிறத்தார்களையும் அழைத்து, மேற்படி மங்களகரமான சமாசாரத்தைச் சொன்னார்கள். இதைக்கேட்ட அனைவரும் சந்தோஷத்தில் மூழ்கி, நாங்களும் தங்கள் அருமை மகளை அலிக்கே விவாகஞ் செய்ய வேண்டுமென்று கோரியிருந்தோம். 'அல்லாஹு தஆலா எங்கள் எண்ணப்படி நிறைவேற்றினானென்று சொல்லி, அலி (றலி) அவர்களைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் இருவரையும் விளித்து, அலி (றலி) அவர்களைத் தங்கள் சபைக்கு அழைத்து வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அவ்விருவரும் எழுந்து அலி (றலி) அவர்களிடம் சென்று, அவர்களுக்கு சலாம் சொல்லி நின்று "யா அலி! தங்களுக்கு மங்களம் உண்டாவதாக! விரைவாயெழுந்து நபிநாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு வாருங்கள்" என்றார்கள். மங்களமென்ற சொல் அலி (றலி) அவர்களின் செவிகளில் நுழைந்த மாத்திரத்தில், 'நமக்கென்ன மங்களம்? ஒருகால் நம் கோரிக்கைதான் நிறைவேறிற்றோ' வென்றெண்ணி விரைவாயெழுந்து நடந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சபையில் வந்து, அனைவருக்கும் ஸலாம் பகர்ந்து இளஞ்சிங்கம்போல ஒரு புறம் உட்கார்ந்தார்கள்.

அலி (றலி) அவர்கள் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் சபையில் இருந்தபின், அங்குள்ள சில முதியோர்கள் அலி (றலி) அவர்களை நோக்கி, அல்லாஹு தஆலா தூபா விருக்ஷத்து அடியில் விவாகம் முடித்து, ஜிப்றயீலை அனுப்பினதும், அவர் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் சொன்னதும், அதைக்கேட்டு நபிநாயகமவர்கள் ஆனந்த மடைந்ததும் இன்னபடியென்று விவரமாகச் சொல்லிக் காட்டினார்கள் தமக்கும் பாத்திமாவுக்கும் விவாகம் நிறைவேறி விட்டதென்ற சோபன வார்த்தை காதில் விழுந்தவுடன், அலி (றலி) அவர்களுக்கு உண்டான மனமகிழ்ச்சியை எடுத்துரைக்க

யாரால் இயலும்? நீண்ட கால பரியந்தம் எண்ணியிருந்த எண்ணம் தெய்வ சித்தத்தின்படி முடிந்ததற்காக, முன்மெலிந்த இரு புஜங்களும் பூரித்து, அலி (றலி) அவர்கள் அல்லாஹு தஆலாவை இதயபூர்வமாகத் துதித்து, அவனுடைய கருணைக்காக மனமுருகி பரவச மடைந்திருந்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சில முதியோர்களை விளித்து, நீங்கள் என்மகளாகிய பாத்திமாவிடம் சென்று "உன்னை அல்லாஹு தஆலா ஐந்நூறு வெள்ளி நாணய மஹருக்கு அலிக்கு மனைவியாக்கி விவாக முடித்ததாகத் தெரிவியுங்கள்" என்று கட்டளை பண்ணினார்கள். உடனே மேற்படி முதியோர்கள் எழுந்து பாத்திமா (றலி) அன்ஹாவிடம் சென்று, ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்த விவாக சமாச்சாரம் அத்தனையையும் சொன்னார்கள் இச்சமாசாரத்தை பாத்திமா (றலி) அன்ஹா கேட்டு, மேற்படி முதியோர்களை நோக்கி "முதியோர்களே! எனக்காக அல்லாஹு தஆலா செய்த காரியத்தைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி கூறுகிறேன். அதை எனது தகப்பனாரவர்கள் மனம் பொருந்தி சந்தோஷப்பட்டது நான் தலைமேற் கொள்ளத் தக்க பாக்கியமேயாம். ஆனாலும் நிகழ்ந்த காரியத்தில் என் இருதயத்திற்கு அதிருப்தியான காரியம் ஒன்றிருக்கின்றது. அதாவது: அபூதாலிபின் குமார சிகாமணிக்கு நான் பாரியாய் விட்டதில் இணிப் பிசகேயில்லை, ஐந்நூறு வெள்ளி நாணயங்களை மஹராக ஏற்படுத்தினது மாத்திரம் எனக்குப் பொருத்தமல்ல. அந்த மஹர் என் கோரிக்கைப் பிரகாரம் ஏற்படுத்த வேண்டும்" என்றார்கள். இதைக் கேட்ட மேற்படி முதியோர்கள் மீண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தார்கள். அதனால், நபிநாயகமவர்களும் மற்ற அஸ்ஹாபிகளும் மனங்கலங்கிக் கவலை கொண்டிருந்தார்கள். உடனே ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகமவர்களிடம் வந்து "யாறஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா மஹர் விஷயத்தைப் பற்றி தங்கள் மகளார் கோரிக்கையைக் கேட்டுவரும்படி கட்டளை பண்ணினான்" என்றார். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள், சில முதியோர்களைத் தங்கள் மகளாரிடம் சென்று, அவர் கோரியிருக்கும் மஹர் என்னவென்று கேட்டுவரும்படி ஏவினார்கள். அவர்கள் ஏவற் பிரகாரம் பாத்திமா (றலி) விடம் வந்து கருத்தை விசாரித்தார்கள். அப்போது

பாத்திமா (றலி) அவர்கள் வந்தவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொல்லலானார் :—

“பாத்திமாவாகிய நான், அலிக்கு மனைவியாய் வாழ்க்கைப்படுவதற்காக வேண்டி நியமித்த மஹரானது, யுகாந்தத்தின் பின்னுண்டாகப் போகிற மஹ்ஷர் என்னும் நடுத்தீர்ப்பு நாளில், என் தந்தையாகிய முஹம்மது நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்ட என்னையொத்த பெண்களில் பாவியாகிய பெண்களனைவரையும் இரக்ஷிக்கும்படி நானே அல்லாஹு தஆலாவிடம் ஷபாஅத்து செய்ய வேண்டும் அந்த ஷபாஅத்தை நாயன் பொருந்திக் கொண்டு, எனக்காக அந்தப் பெண்களை சுவர்க்கம் புகுத்த வேண்டும். இது தான் மேற்கண்ட மஹர். இதற்கு அல்லாஹு தஆலா சம்மதிப்பானானால் என் நாயகராகிய அலி எனக்குத் தர வேண்டிய மஹரை நான் பெற்றுக் கொண்டதாக உறுதி சொல்லுகிறேன்” என்றார்கள்.

இதைக் கேட்டு முதியோர்கள் மீண்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் சொன்னார்கள். இச்சொல்லை நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜிப்றயில் அலைஹிஸ்ஸலாமுக்குச் சொல்ல, அவர் சென்று அல்லாஹு தஆலாவிடம் தெரிவித்தார். உடனே அல்லாஹு தஆலா, “எனது ஹபீபாகிய முஹம்மது நபியையும், அவர் புதல்வியாகிய பாத்திமாவையும், அந்த பாத்திமாவின் நாயகராகிய அலியையும் உவந்து பாராட்டும் மானிடர்கள் செய்த குற்றங்களனைத்தையும் நான் மன்னித்துக் கொள்ளுவேன். அன்றியும், நடுத்தீர்ப்பு நாளில், பாத்திமா கேட்டதுபோல பாவியாகிய முஸ்லிமான பெண்களுக்காக என்னிடம் மன்றாடும் அதிகாரத்தை அவருக்குக் கொடுப்பேன். இதை நீர் சென்று அறிவிப்பீராக” என்று ஜிப்றயீலுக்கு அறிவித்தான். அவர் உடனே வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார். இதைக் கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் அகங்களித்து, தமது மகளாருக்கு சொல்லி யனுப்பினார்கள். அல்லாஹு தஆலா தமது கோரிக்கைக்கு சம்மதித்ததாக வந்து சொன்ன சொல்லை பாத்திமா கேட்டு சந்தோஷமடைந்து, இவ்விதமாக உடன்படிக்கையொன்று எனக்கு எழுதித்தர வேண்டும் என்றார்கள். இவ்வாறு கேட்பதை சென்று அறிவிப்பவர்கள் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள்பால் அறிவித்தபோது, அதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜிப்றயீலுக்குச் சொன்னார்கள். அவர் போய் அல்லாஹு தஆலாவிடம் அறிவித்தார். உடனே உடன்படிக்கை யெழுதிக்கொடுப்பதாக அல்லாஹு தஆலா பொருந்தினான். அப்போதே, பச்சை காகிதத்தில் பொற்சாயத்தால் விவாக உடன்படிக்கையொன்றெழுதுவித்து, ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் கையில் கொடுக்கப்பட்டது. மேற்படி உடன்படிக்கையை ஜிப்றயீல் கொண்டுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் கையில் கொடுத்தார். அதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் வாங்கிக் கண்களில் வைத்து முத்தமிட்டுக்கொண்டு, அருகிலிருக்கும் தங்கள் இலிகிதர் கையில் கொடுத்து வாசிக்கச் சொன்னார்கள். அவர் அதை வாங்கி முகந்து முத்தமிட்டு, அந்த சபையாரனைவரும் கேட்கும்படி வாசித்தார். அந்த விவாக வுடன்படிக்கையின் சாரம் இது:—

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

என்னடி யவரின் மிக்கா முஹம்மதி னினிதி னீன்ற
பொன்னிழை தனக்கு மென்ற னலியெனும் புலிக்கு மின்ப
மன்னிய வதுவைக் காண மகளென இஸ்லாத் துற்ற
பன்னிகள் பவத்தி னுற்றோர் பல்லர்க்குங் குறைக டர.

இறுதிநா ளினின்மன் றாடித் தன்ஷபா அத்தினீ டேற்ற
மறை தொறும் விளங்கச் சொல்லு முஹம்மதும் ஜிபுறயீலு
மறநெறி மீக்கா யீலுஞ் சாட்சிய தாக நானே
மறுவறக் கபூல்செய் தேனென் றிருந்ததை வாசித் தாரால்

வசனம்.

“எனது அடிமைகளில் விசேஷித்தவரும், நபிமார்களுக்கு நாயகமுமாகிய முஹம்மது உடைய செல்வ மகளார் பாத்திமாவுக்கும். என்னிடம் புலியென்னும் பட்டம் பெற்றவரும், அபூதாலிபு உடைய குமாரருமாகிய அலிக்கும் விவாகம் செய்யப்பட்டது. மணமகன் மணமகளுக்குக் கொடுக்கும் மஹராக முஸ்லிமான பெண்களில் பாவியாயிருப்பவர் களெல்லாரையும், கியாமத்து நாளில் இரக்ஷிப்பதற்காக என்னிடம் மன்றாடி அவர்களை ஈடேற்றும் அதிகாரத்தை மணமகளாகிய பாத்திமாவுக்கு நான்

கொடுத்தேன். இதற்கு சாக்ஷிகள் முஹம்மது நபி, ஜிப்றயீல், மீக்காயீல்" (ஆவார்) என்பதே.

இக்கருத்தமைந்த விவாக வுடன்படிக்கை வாசித்துத் தீர்ந்த பின், அனைவரும் ஆனந்தமடைந்து, இவ்விதமகிமை பெற்றவர் இவ்வுலகத்தில் அலியேயன்றி மற்றவரில்லை யென்று அலி (றலி) அவர்களை வியந்து புகழ்ந்து வாழ்த்தினார்கள். பிறகு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி உடன்படிக்கைப் பத்திரத்தைத் தாங்கள் வாங்கிக்கொண்டு, அந்த சபையை விட்டெழுந்து நடந்து, தங்கள் மாளிகைக்கு வந்து, தங்கள் கண் மணிக்கு சமானமான பாத்திமா (றலி) அவர்களை யழைத்து, சமாசாரத்தை அறிவித்து, பத்திரத்தையும் வாசித்துக் காட்டி, இனி மஹ்ஷருடைய நாளில் இந்த விவாக வுடன்படிக்கை என் கையிலிருக்க வேண்டும். ஆகையால், நீர் அப்போது இதை என்னிடம் தர வேண்டும். ஆனபடியால், பிறர் ஒருவரும் தீண்டாவண்ணம் வெகு பத்திரத்துடன் இதைச் சேமித்து வை என்று சொல்லி, மேற்படி உடன்படிக்கையை மகளார் வசம் கொடுத்தார்கள். அப்போது பாத்திமா (றலி) ஆனந்தத்துடன் அதை வாங்கிப் பலதரம் முகந்து முத்தமிட்டுக் கண்களில் வைத்து, ஒரு தங்கச் செப்பில் அடக்கி வைத்துக் கொண்டார்கள்.

பிறகு நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மாளிகையை விட்டும் புறப்பட்டுத் தேவாலயத்திற்கு வந்து இருந்துகொண்டு, அபூபக்கர் (றலி) அவர்கள் முதலான அஸ்ஹாபிகளனைவரையும் நோக்கி "என் மகளுக்கும் அலிக்கும் முடிந்த விவாகத்தை இவ்வூருக்கு அறிவிக்கும் பொருட்டும், அவ்விருவருக்கும் நடத்த வேண்டிய மற்றசடங்குகளை நடத்தும் பொருட்டும் செய்யத் தக்கவை யனைத்தையும் செய்யுங்கள்" என்று கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிகள் திரண்டு மண முரசடிப்போர்களை யழைப்பித்து, தெருக்கள் தோறும் சென்று, சமாசாரத்தைத் தெரிவித்து பட்டணத்தை யலங்கரிக்கும் படி ஏவுங்களென்று உத்தரவு செய்தார்கள். உடனே முரசடிப் போர் ஒருங்குகூடி, தங்கள் ஒட்டகங்களுக்குப் பரிமளம் பூசி புஷ்பமாலைகள் சூட்டி, முதுகில் பட்டுச் சேணங்களிட்டு, பணமுரசுகளேற்றி, மதீனமா நகரத்து வீதிகள்தோறும் சென்று கீழ்வருமாறு சொல்லி முரசடித்தார்கள் ;

"இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்க்கைக்கும் ஆதாரமாகிய தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தில் ஒழுகி நடக்கும் முஸ்லிமான ஜனங்களே, நீங்கள் நாடோறும் மங்களகரத்துடன் வாழ்வீர்களாக. புகழ்தலுக்குப் பாத்திரவாளுகிய மகத்தான அல்லாஹு தஆலாவின் உண்மைத் தூதரான முஹம்மது (ஸல்) அவர்களின் செல்வ மகளாராகிய பாத்திமத்துஸ் ஸுஹறா (றலி) அவர்களுக்கும், அல்லாஹு தஆலாவின் வேங்கை யென்னும் பட்டம் பெற்ற அலி (றலி) அவர்களுக்கும், சுவர்க்கலோகத்து மகிமையான தூபா விருக்ஷத்து அடியில் விவாகம் நிறைவேற்றப் பட்டது. அதற்கு சாதனமான மற்ற சடங்குகளை இப்போது இங்கே நடத்தப் போகிறார்கள். இந்த சோபன சங்கதியை நீங்கள் எல்லாரும் அறிந்து, மகிழ்ச்சி கொண்டாடுவீர்களாக. அன்றியும், நபிநாயகம் (ஸல்) அவர்களையும், அவர்கள் மகளாராகிய பாத்திமாவையும், அவர் நாயகராகிய அலியையும் நீங்கள் உவந்து மேற்படி விவாகச்சடங்குக்காக உங்களின் மாளிகைகளையெல் லாம் தூய்தாக்கி, பூம்பந்தலிட்டு, துவஜஸ்தம்பங்கள் நாட்டி, தோரணந்தூக்கி, பலவகைத் தீபங்களமைத்து அலங்கரியுங் கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஸ்நானஞ் செய்து, உயர்ந்த புத்துடை யுடுத்தி, சந்தனுதி பரிமளம் பூசி, மாலைகள்சூடி, ஆனந்தமடையுங்கள். அன்றியும், வாழை, மா, பலா என்னும் முக்கனிகளுடன் சர்க்கரை, நெய், பால் முதலிய பதார்த்தங் களமைத்து, பலவகை சாதங்களும், பலகாரவர்க்கங்களுஞ் சமைத்து மனோரம்மியத்தோடு விருந்து கொடுங்கள். இக்காரியத்தில் நீங்கள் எவ்வளவும் பராக்காயிருக்கக் கூடாது. விரைவாய் எத்தனப் படுங்கள்" என இவ்வாறு உரத்த தொனியுடன் சொல்லி முரசடித்த மாத்திரத்தில், இதைக்கேட்ட முஸ்லிமாகிய ஆடவர் பெண்டிர் அனைவரும் சந்தோஷமுற்று மேற்கண்டபடி செய்ய ஆரம்பித்தார்கள்.

மதீனமாநகரத்து வீதிகள்தோறும் வசிக்கும் முஸ்லிமான ஜனங்களனைவரும், தங்களின் ஒவ்வொரு மாடமாளிகை, கூட கோபுரங்களையும் மாசுபோகத் துடைத்துத் தூய்மையாக்கினர். பெண்கள் கூந்தலுக்கு ஊட்டும் அகிற்புகையால் கருமை பெற்றிருக் கும் சுவர்களில் முத்துகளை நீற்றிய வெண்சாந்து தீற்றி, காண்பவர் கண்கள் வழுக்கிக் கூசும் வண்ணம் கண்ணாடி போன்று பளபளப்

பாக மெழுகி, கண்ணாடிப் படங்கள், படிகத்தீபங்கள் முதலியவற்றால் அலங்கரித்து, இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட மாளிகைகளின் முன்றில்கள் தோறும் சந்தனம், குங்குமம், அகிலாதி வாசனைத் தருக்களால் கால்கள் நாட்டி, விட்டங்கள் பரப்பி, அலங்காரமான பந்தரிட்டு, கலிமாவெழுதிய பட்டுக்கொடிகளை ஸ்தம்பங்களிலேற்றி வாழை, மா, பலா, கமுகு, தெங்கு, தாழை, மாதளை, கொழிஞ்சி முதலாயுள்ள கனிதரும் விருக்ஷங்களைப் பழக்குலைகளுடன் கொண்டு வந்து பந்தல்களின் பக்கத்தில் நிரை நிரையாக நாட்டி, தேன்வழியும் கனிவர்க்கங்களையும், பரிமளமிக்க புஷ்பங்களையுஞ் சரமாகக் கோத்துப் பந்தலுக்குள் தொங்கவிட்டு, மகாதோரணங்கள் கட்டி, இராக்காலத்திற் பிரகாசிக்கும்படி பலவகைத் தீபங்களமைத்து அலங்கரித்தார்கள். மதீனமா நகரத்து வீதிகளெல்லாம் இவ்வகையலங்காரமான பந்தர்களால் மூடப்பட்டன. மேற்படி பந்தர்களில் தோற்றி விளங்கும் பலவகை கனிகளும், காய்களும் புஷ்பங்களும் தென்றற் காற்றால் அடியுண்டு உதிர்வது, விவாகத்தின் பொருட்டு வறிஞர்களுக்குப் பொன்மலர் வெள்ளிமலர்களையும், நவரத்தினங்களையும் வாரிச் சொரிவதற் கொப்பாயிருந்தது. வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை என்னும் பஞ்சவண்ணப் பட்டாடைகளைப் பந்தலில்கட்டியிருப்பதால், அவைகள் பார்ப்பவர் கண்களுக்கு இந்திர ஜாலம் போன்று விளங்கிற்று. அழகிய செந்தாமரைப் புஷ்பத்தை வெண்மையான தாழம் பூவிற் கட்டித் தூக்கியிருப்பது, அல்லிப் புஷ்பத்தைச் சொண்டில்பற்றி நிற்கும் அன்னப் பக்ஷிபோன்றிருந்தது. இப்படியே ஒவ்வொரு செய்கையும் ஒவ்வொரு உவமானத்துக்கு உவமேயமாய் விளங்கிற்று. மேற்படி பந்தல்கள் நினைத்த பொருளைக் கொடுக்கதக்க விதமாயலங்கரிக்கப் பட்டிருந்தபடியால், அவை கற்பகவனத்துக்குச் சமானமாயிருந்தன. அவற்றின் அலங்காரங்களையும், மகிமையும் விவரித்துச் சொல்லுதற்கு எவ்வகைப்பட்ட வித்துவான்களாலும் இயலமாட்டாது.

அன்றியும், வீதிகள்தோறும் செல்லும் யானை, குதிரை, இரதம், பல்லக்கு, இவற்றின் பிரதிவிம்பங்களும், மானிடர்களின் பிரதி விம்பங்களும், மாளிகையின் மதிட்சுவர்களில் அதன் பளபளப்பினால் விம்பித்துத் தோற்றப்படுவது, சூத்திரப்பாவைகள் இயங்குவது போன்றிருந்தது. உன்னதமான கோபுரங்களிலும், மேன்மாடங்களிலும், புதுமலர்த் தொங்கல்சாற்றி, துவஜங்களேற்றி

பொற்குடங்களமைத்துச் சிங்காரித்திருப்பதால், அவைகள் பார்ப்பவர் கண்களுக்கு, மேற்படி விவாகச் சடங்கின் ஆடம்பரத்தைப் பார்ப்பதற்காக அநேகமான பொற்பர்வதங்களும், வெள்ளிப்பர்வதங்களும் சிங்காரத்துடன் வந்திருப்பதுபோலத் தோற்றின. அந்த மேன் மாடங்கள் தோறும் கூந்தலுக்கு ஊட்டப் பெண்கள் புகைக்கும் அகிற் புகை மலிந்து, மேகஜாலங்கள் போற்பரவி, நாசிகள் அடைக்கத் தக்க விதமாய்க் கமகம வென்று கமழ்ந்தது. இட்ட பூம்பந்தலிலுள்ள பலவகைப் புஷ்பங்களிலு முறைந்த தேன்களும், மகரந்தங்களும் வண்டுகளால் உழக்குண்டு சிந்தித் தரையை மூடியிருப்பதால், இந்த மகிமையான விவாகத்திற்கென்று புதிதாகப் பொற்றரை சமைத்திருக்கும் பாவனையா யிருந்தது.

முடிவாகச் சொல்லுமிடத்து, முஸ்லிமான ஆடவர்களும், பெண்டிர்களும் ஒருங்குகூடி, மதீனமா நகரத்தின் வீதிகள் எல்லாவற்றையும் சந்தனக்கலவையால் சேறுபடுத்தி, அச்சேற்றில் மகிமை பெற்ற விவாகமென்னும் வித்தைவிதைத்து, அலங்காரமென்னும் பயிரை வளர்த்தார்கள். அதனால், மதீனமா நகரம் சுவர்க்க நகரமாகவே விளங்கிற்று.

இவ்வாறு வீதிகள் தோறுமுள்ள மாடமாளிகை, கூடகோபுர மனைத்தும் அலங்காரஞ் செய்து, பந்தரிட்டுச் சிறப்பித்தபின், பெண்களனைவரும் ஒருங்கு திரண்டு தாமரை மலர்ந்த வாவிகளிற் சென்று நீராடி, பட்டாடைதரித்து, தேசாதிபாத பரியந்தம் ஆபரணவகையால் அலங்கரித்து, கலவைச்சேறுபூசி, நறியபுஷ்ப மாலைகள் சூடி, பூங்காவனங்கள் தோறும் நெருங்கி, சாயலால் மயில்கள் நாணவும், இசையால் குயில்கள் நாணவும், நடையால் அன்னங்கள் நாணவும், ஆடிப்பாடி, அலி (றலி) அவர்களையும், பாத்திமா (றலி) அவர்களையும் துதித்துக் கொண்டாடினார்கள். மனைகள் தோறும் அறுசுவைப் பதார்த்தங்களுடன்விருந்து கொடுக்கப்பட்டது.

அன்றியும் முஸ்லிமான ஆடவர்கள் திரள் திரளாய்த் திரண்டு கலியாண வாழ்த்துக் கவிதைகளைத் தெருக்கள் தோறும் பாடிக்கொண்டு உலாவினார்கள். இவ்வாறு இவர்கள் பாடித்திரிதலாலெழும் வாழ்த்துக் கவிதைகளின் ஓசையும், முதியோர்கள் ஓதுதலாலெழும் வேத வாக்கியங்களின் மகிமையான ஒலியும் அங்கங்கே

அடிபடும் மண முரசின் ஒலியையு மடக்கி, மும்முரமான கோஷ்டத்தோடும் மேற்பட்டது.

அலி (றலி) அவர்களுக்கும், பாத்திமா (றலி) அவர்களுக்கும் நடத்தப்படும் விவாகச் சடங்குக்காக அலங்கரித்திருக்கும் மதினமா நகரத்து ஆடம்பரமான அலங்காரத்தை விவரித்துச் சொல்ல ஒருவராலும் இயலாது. ஆகையால், இம்மட்டில் நிறுத்தி, இனி நிகழும் வர்த்தமானங்களைக் கூறுவோம்.

தங்கள் மகளாராகிய பாத்திமா (றலி)யின் விவாகத்தின் பொருட்டு, மதினமா நகரம் முழுவதும் அலங்கரித்துத் தீர்ந்ததென்னும் சங்கதியை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு மனமகிழ்ந்து, தங்கள் அருகர்களாகிய அபூபக்கர் (றலி), உமறு (றலி), உதுமான் (றலி) இம்மூவரும், மற்ற அஸ்ஹாபிகளாகிய முஹாஜிரீன், அன்சாரீன்கள் இருதாத்தாரும் புடைசூழப் புறப்பட்டு, அலி (றலி) அவர்களின் மாளிகைக்கு வந்தார்கள். பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஏவற்பிரகாரம் அஸ்ஹாபிகள் கூடி அலி (றலி) அவர்களை யழைத்துப் பீடத்தி லிருத்தி, பரிசுத்தமும் நறுமணமும் அமைந்த தெண்ணீர் கொண்டு வந்து நீராட்டி, புத்துடை யுடுத்தச்செய்து, பச்சைக் குப்பாயு மிட்டு, மகிமையான சிரசில் சிறந்த பாகை தரிப்பித்து, இடைக்கட்டிறுக்கி, பாத கோசங்களிட்டு, பொன்மலையில் வழிந்தோடும் தெண்ணீரருவி போலப் புஷ்பமாலை சூட்டி, தக்க ஆபரணங்கள் பூட்டி, கருணை நிறம்பிய கண்களில் சுறுமாதீட்டி, மணக்கோலஞ் செய்தார்கள். செய்த பின் நீராஞ்சனமெடுத்து முடித்தனர். பிறகு, வானவர்களும், அரம்பையர்களும் வாழ்த்தி நிற்க, அஸ்ஹாபிகள் ஸலவாத்து, தக்பீர் முதலானவை முழக்க, தமது தாயாராகிய பாத்திமாவின் கண்கள் களிக்க, எங்கும் பூமாரி பொழிய, இடையில் துல்பகார் என்னும் சிறந்த வாள் கிடந்து பிரகாசிக்க, அலி (றலி) அவர்கள் பவனி வருவதற்காக அலங்கரித்த தமது துல்துல் என்னும் ஒப்பற்ற குதிரையின்மேல் பிஸ்மில்லாஹ் சொல்லி யேறினார்கள்.

அலி (றலி) அவர்கள் பவனிவரக் குதிரையிலேறினவுடன், பலவகை வாத்தியங்கள் முழங்கின. அழகிய பூச்சக்கரக் குடையொன்று பிடிக்கப்பட்டது; இருபுறமும் வெண்சாமரைகள் வீசப்பட்டன. இன்னும் குடை, கொடி, ஆலவட்டம், சாமரம்

என்னும் விருதுகள் எண்ணில்லாதவை பிடிக்கப்பட்டன. யானைகள், குதிரைகள், இரதங்கள், பல்லக்குகள் கணக்கில்லாமல் செறிந்தன. அபூபக்கர் (றலி) அவர்களும், உமறு (றலி) அவர்களும், உதுமான் (றலி) அவர்களும் தங்கள் தங்கள் குதிரைகளிலேறி, அலி (றலி) அவர்களை நெருங்கி நின்றார்கள். மற்ற அஸ்ஹாபிகளாகிய முஹாஜிரீன், அன்சாரீன் இருவகையார்களும் தத்தம் வாகனங்களிலேறிப் புடை சூழ்ந்தார்கள். இவ்வகை யலங்காரங்களனைத்தும் நிகழ்ந்த பின், அலி (றலி) அவர்கள் ஏறியிருக்கும் மகிமை பெற்ற துல்துல் என்னும் குதிரையை நடத்துவதற்கு ஆரம்பித்த போது, மாலைப்பொழுதான படியால் தீவட்டிகள் பிடிக்கப்பட்டன. மேற்கண்ட சொல்லரிய சிறப்புடன் அலி (றலி) அவர்கள் பவனி வந்தார்கள்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் அருகர்களிலொருவரும், மருகருமாகிய அலிஇபுனு அபூத்தாலிபு (றலி) அவர்கள் வரும் ஆடம்பரமான சிறந்த பவனியைத் தரிசித்து ஆனந்த மடைவதற்காக வேண்டி மதினமா நகரத்து முஸ்லிமான பெண்களனைவரும் ஒருங்கு திரண்டு, ஆபரணதியணிந்து, சந்தனதி பரிமளம் பூசி, ஒப்பற்ற அலங்காரத்துடன் வந்து கூடினார்கள். மேற்படி பவனியைச் சூழவந்து திரண்டு மொய்த்த பெண்களின் அழகையும் அலங்காரத்தையும் தன்மையையும் விவரித்து எழுதத் துணிந்தால் மிக விரியுமாகையால் சுருக்கி எழுதுகிறோம். முடிவில் அங்கு வந்து கூடிய பெண்களின் கூட்டம் கண்களென்னும் கெண்டை மீன்களையும், கழுத்துகளென்னும் சங்குகளையும், தந்தப் பந்திகளென்னும் முத்துக்களையும், இதழ்களென்னும் பவளங்களையும், பசலையென்னும் பசுமையையும், புஷ்பமாலைகளென்னும் நுரைகளையும் பெற்றிருப்பதால், அமுதக் கடலுக்கு ஒப்பாயிருந்தது. இதுவன்றி இன்னும் பலபல மேன்மையோடும், அலங்காரத்தோடும் வந்து திரண்ட மாதர்கள் ஒருவரை யொருவர் நோக்கி, இந்த அலியுடைய அவயவ இலக்ஷணங்களைப் பார்க்கும் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ஆயிரம் கண்கள் வேண்டுமென்றும், இந்த அழகிற் சிறந்த அலி வரும் பவனியை நான் பார்க்கக் கிடைத்தது, நபிநாயகம் (ஸல்) அவர்களின் செல்வமகளாராகிய நமது எஜமானியான பாத்திமாவாலன்றி வேறல்ல வென்றும், இன்றுநாம் இச்சிறந்த பவனியைக் காணப்பெற்ற படியால், ஈஸா மஹதீயுடைய காலத்தில்

நபிநாயகம் (ஸல்) அவர்கள் வரும் திருக்கலியாணத்து மேலான பவனியையுங் காணப்பெறுவோமென்றும், பெண்களுக் கரசியாகிய பாத்திமாவை அல்லாஹு தஆலா நிகரற்ற அழகுடன் படைத்திருக்கின்றான்; அவ்வித அழகிய பெண்ணரசிய பாத்திமாவுக்கு இணையான மணவாளர் இவ்வுலகத்தில் யாருண்டென்று நாம் யெண்ணியிருந்தோமே, இப்போது அவர் மணவாளராகிய அலியை நோக்கும் போது, அந்த பாத்திமாவினும் பன்மடங்கதிகமான அழகையுடையவரும் இணையான வருமாயிருக்கின்றாரே யென்றும், இவ்வித அழகிய அலியை மணவாளராகப் பெற்ற பாத்திமா அடைந்த பாக்கியமே பாக்கியமென்றும், பலவிதமாகச் சொல்லிக் கொண்டார்கள்.

இவ்விதம் வியந்து பேசும் பெண்களனைவரும், அந்த ஊர் கோலத்துடன் தெருக்கள் தோறும் தொடர்ந்து சென்று தரிசித்து ஆனந்த மடைந்தார்கள். மேற்படி பெண்கள் பவனிக் காக்ஷிக்காக ஓரிடத்திலும் தரிபட்டிராமல் பின்றொடர்ந்துகொண்டே செல்வதால் அவர்களின் சிற்றடிகள் தரையில் தரிக்காமையாலும், கண்களை இமைக்காமல் நோக்குவதாலும், ஹூறுல் ஈன்களென்னும் அரம்பையர்களுக்கு சமானமாய்த் தோற்றப் பட்டார்கள். இத்திருமணத்தின் சிறப்பையும், பெண்மணிகளின் அலங்காரத்தையும் சீறாபுராணத்தில் புலவர் பெருமான், பருவத்துக்கு தக்கபடி பலவாறு வர்ணித்திருக்கின்றார்கள். அவைகளை இங்கு விட்டிருக்கின்றோம்:

இவ்வாறு ஒவ்வொரு பருவமாதரும் தன் தன் அறிவிற்கேற்றபடி பவனி பார்க்க வந்து பலவாறு பேசிக்கொண்டு போகும் வண்ணம், அலி (றலி) அவர்கள் மதீனமா நகரத்து வீதிகள் தோறும் உலாப்போந்தார்கள். முன் செல்லும் மேள வாத்தியங்களனைத்தும், தன் தன் ஒலி வாய் திறந்து 'அல்லாஹு தஆலாவின் பராக்கிரம மிக்க வேங்கையும், பகைவரை நாசஞ்செய்யும் நரசிங்கமும் நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் மருகரும் அபூத்தாலிபு உடைய புத்திரரும், பெண்ணரசியான பாத்திமா (றலி) யின் மணவாளருமாகிய அலி (றலி) அவர்கள் உலாவருகின்றார்கள்'' என முழங்கிக் கூறும் வண்ணம் இருந்தது. பாத்திமா (றலி) அவர்களிருக்கும் நபிநாயகம் (ஸல்) அவர்களின் மாளிகை வாசலில் அலங்கரித்திருக்கும் சித்திரப் பூம்பந்தலில் வந்து அங்

ஹாபிகளில் சிறந்தோர் சிலாகைகொடுப்பத் தாங்கள் ஏறியிருக்கும் குதிரையை விட்டிறங்கி, வானவர் பூமழை பொழிய, முஸ்லிம்கள் கலிமா முழக்க, முதியோர்கள் ஆசிகூற, அரம்பையர் நீராஞ்சன மெடுப்ப, நடந்து அலங்காரமான மாளிகைக்குட் சென்று அங்கிட்டிருக்கும் விவாக பீடத்தில் உட்கார்ந்தார்கள்.

அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள், அலங்காரம் அமைந்த விவாஹ பீடத்தி லிருந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்களும், அருகர் மூவரும், மற்ற அஸ்ஹாபிகளும் அந்த மாளிகை முழுதும் நிரம்ப உட்கார்ந்தார்கள். அனைவரும் இங்கு இவ்வாறிருந்தபின், மாளிகையின் அந்தப்புரத்தி லிருக்கும் மூஸ்லிமான பெண்கள் அனைவரும் திரண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் கண்மணிக்குச் சமானமான மகளாராகிய பாத்திமா (றலி) அவர்களுக்கு நீராட்டி, வஸ்திராதி ஆபரணங்களனைத்துஞ் சூட்டி, சந்தனாதி பரிமளம் பூசி, மணவணியால் அலங்கரித்து பாங்கியர் நெருங்க அழைத்துக் கொண்டு, அலி (றலி) அவர்களிருக்கும் மணவறைக்கு வந்தார்கள். வந்தவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்களெழுந்து தங்கள் அருமையான மகளாரை அலி (றலி) அவர்களுக்கு அருகில் மேற்படி விவாக பீடத்தில் இருத்தினார்கள்.

நாயகராகிய அலி (றலி) அவர்களும், நாயகியாகிய பாத்திமா (றலி) அவர்களும் விவாகபீடத்தில் உட்கார்ந்த பின், ஏழு வானங்களும் பூமியும், அவற்றிலுள்ள சராசரங்களனைத்தும் சோபனங் கொண்டாடின. மேற்படி நிகரில்லாத விவாகசபையில் நிரம்பியிருக்கும் அஸ்ஹாபிகளனைவரும் சந்தோஷக்கடலில் மூழ்கினார்கள். பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மகளாரையும் மருமகரையும் நோக்கிக் கண்கள் குளிர்ந்து ஆனந்தமுற்று, தங்கள் திருவாய்மலர்ந்து பாத்திஹா ஓத ஆரம்பித்தார்கள். அப்போது மலக்குகளுக்கு அதிபதியாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயக மவர்களிடத்தில் வந்து, நபிநாயக மவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! இன்றிரவு அல்லாஹு தஆலா மலக்குகள், ஹூறுல் ஈன்கள் அனைவருக்கும் ஸுவர்க்கங்களை யெல்லாம் அலங்கரித்து, நீங்கள் அனைவரும் மகிழ்ச்சிகொண்டாடுவது மல்லாமல், பட்டாடைகளையும் இரத்தினங்களையும், புஷ்பங்களையும் வாரிவாரி எனது ஹபீபாகிய முஹம்மது நபியின் மகளாரான பாத்திமாவுக்

கும், அவர் மணவாளராகிய அலிக்கும் கண்ணூறு கழியும் வண்ணம் பரிகரித்து எறியுங்களென்று கட்டளை பண்ணினான். அப்படியே அவர்களனைவரும் கும்பல் கும்பலாய்க்கூடி, ஸுவர்க்கத்து மாளிகைகளெல்லாவற்றையும் அலங்கரித்து தீபங்களேற்றி, தூபங்கள் நிறப்பி ஆடையாபரணாதிகளா லலங்கரித்து கொண்டு, நந்தவனங்களில் சென்று ஆடிப்பாடி விளையாடி, அநேக நிறமான ஸுவர்க்கத்து சித்திரப்பூம் பட்டாடைகளையும், இரத்தினங்களையும் புஷ்பங்களையும் வாரி சித்றத்தல் முந்தஹா என்னும் விருக்ஷத்து அடியில் நின்று கண்ணூறு கழியச் சுற்றி வீசி யெறிந்தார்கள். அப்படி சுற்றி யெறிந்த சித்திரப் பூம் பட்டாடைகள் எல்லாவற்றையும் தங்கள் உம்மத்துமார்களில் நல்லோர்களாய் மவுத்தையடைந்து, பிறகு தமக்கு மணவாளராய் வரப்படும் ஆடவர்களுக்கென்று ஹூறுல் ஈன்க ளெடுத்துக் கட்டி பத்திரமாய் வைத்திருக்கின்றார்கள். இவ்வித ஆடம்பரம் இன்றிரவு ஸுவர்க்கத்தில் நிகழ்ந்தது" எனக் கூறினர். இந்த சமாசாரத்தைக் கேட்ட நபி நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமுற்று, மற்ற அஸ்ஹாபிகளுக்கெல்லாம் சொல்லிக் காட்டினார்கள். இதை அனைவரும் கேட்டு ஆச்சரியமடைந்து ஆநந்தங் கொண்டார்கள். பாத்திஹா ஓதி முடித்த பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்களெழுந்து நின்று தங்கள் மகளாரையும், மருகரையும் வாழ்த்தினார்கள். அஸ்ஹாபிகளனைவரும் அலி (றலி) யையும் பாத்திமா (றலி) ஆக இருவரையும் புகழ்ந்து வாழ்த்தினார்கள். அன்றிரவு நெடுநேரம் வரையுமிருந்து சடங்கு நிறைவேறின பின், பிறர் அனைவரும், தம்தம் மனைகளுக்குச் சென்றார்கள். அலி (றலி) அவர்களும், பாத்திமா (றலி) அவர்களும் தங்களுக்கென்று அலங்கரித்திருக்கும் படுக்கையறையில் புகுந்தார்கள்.

ஆண் சிங்கத்தை யொத்த அலி (றலி) அவர்களுக்கும், மாதர்க் கரசியாகிய பாத்திமா (றலி) அவர்களுக்கும் விவாகச் சடங்குகள் நிறைவேறின. அன்றிரவு கழிந்து, சூரியோதயமாகும் தருணமாயிற்று. அந்த வைகறைப்பொழுதில், மிகவும் எளிய யாசகர் ஒருவர் அன்றிரவு முழுதும் பட்டினி கிடந்து வருந்திக் குளிர்தீரப் போர்த்துக் கொள்ளுவதற்குத் தக்க ஆடை யின்றிக்கிடந்து நலிந்து, இருள்புலர்வது கண்டெழுந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் புதல்விக்கு இன்றிரவு விவாகம் நடந்ததே, அங்குசென்றால்

பசிக்கு உணவும் குளிருக்கு ஆடையுங் கிடைக்குமென்று கருதி, பாத்திமா (றலி) யின் மணமாளிகையின் முன்னிலில் வந்து நின்று சப்தமிட்டார். அப்போது, பாத்திமா (றலி) அவர்கள் இச்சப்தத்தை கேட்டு விரைந்து, வந்து பசியால்வாடி மெலிந்த சரீரத்தில் பீற்றலாடை புனைந்து நிற்கும் ஏழையைநோக்கி "நீர், இங்கு வந்து நின்று சப்தமிட்ட காரணம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு மேற்படி எளியவர், பாத்திமா (றலி) அவர்களின் ஒப்பற்ற முகாரவிந்தத்தை நோக்கி "அம்மா! இது கலியாண வீடாயிற்றே என்றெண்ணி அதிகாலையில் இங்கு வந்தேன். இப்போது எனக்குண்டாயிருக்கும் தாங்கரிய பசிவேதனையை யொழித்து, குளிர் நீரும்வண்ணம் போர்த்துக் கொள்வதற்கும் தக்க ஆடையொன்று தரும்படிப் பிரார்த்திக்கின்றேன்" என்று விடை கொடுத்தார். இச்சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் பாத்திமா (ரலி) அவர்கள் மனமிரங்கி வீட்டுள் சென்று, அங்கிருந்த தின்பண்டங்களில் சிலவற்றைக் கொண்டு வந்து, அந்த எளியவர் முன் வைத்து, தாங்கள் அன்றிரவு கலியாணத்திற் கென்று தரித்திருந்த புதிய மேலங்கியையுங் கழற்றி அவர் கையில் கொடுத்தார்கள் உடனே மேற்படி எளியவர் அகங்களித்து, கொண்டுவந்து வைக்கப்பட்ட தின்பண்டங்களைப் புசித்துத் தண்ணீர் பருகி, மகிமை பெற்று விளங்கும் அழகிய மேலங்கியையுந் தரித்துக்கொண்டு இருதயங் குளிர்ந்து பலவாறு துதித்துச் சென்றார். இதற்கிடையில் சூரியன் உதயமாய் நன்றாய் விடிந்தது.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களும், அருகர் மூவரும் சில அஸ்ஹாபிகளுமாக, மனையின் வெளிப்புறத்திலிருந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். பாத்திமா (றலி) அவர்கள் தங்கள் தகப்பனார் இருக்குஞ் சபைக்கு'வந்து, அனைவருக்கும் ஸலாம் சொன்னார்கள். அதற்கு எல்லோரும் பிரதி சொன்னார்கள். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மகளாரைநோக்கி "பாத்திமாவே! நீ புதிய மணப்பெண்ணாயிருக்க, அணிந்திருக்கும் : ஆபரணங்களுடன் பழைய குப்பாயத்தை யணிந்திருக்கவேண்டிய முகாந்தரம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு பாத்திமா(றலி), தந்தையை நோக்கி "பிதாவே! நான் புதுக் குப்பாயந்தான் இன்றிரவு அணிந்திருந்தேன். ஆடையின்றிக் குளிரா லொடுங்கின எளியவரொருவர் இன்று அதிகாலையில் நம் மனைவாசலில் வந்து நின்று இரந்து

கேட்டார். அவர் கையில் அதைக் கழற்றிக் கொடுத்து விட்டு, இந்தப் பழையதை தரித்திருக்கிறேன்" என்று விடைபகர்ந்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் மறுபடியும் மகளாரை நோக்கி "அம்மா! நீ புது மணப் பெண்ணா யிருப்பதால், அந்த மணக்கோலத்திற்கு ஏற்ப புதுக் குப்பாயமன்றோ அணிந்திருக்க வேண்டும்? வாசலில் வந்து இரந்த எளியவருக்கு இந்தப் பழையதைக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்றார்கள் அதற்கு பாத்திமா (றலி), தகப்பனாரை நோக்கி "தந்தையே! நான் கவுரவத்தைக் கருதிப் புதுக் குப்பாயத்தைக் கொடுக்கவில்லை. 'அழகான பொருள்கள் எல்லாவற்றையும் அல்லாஹுத்தஆலாவுக்காக வேண்டி அதிகமான பிரீதியுடன் கேட்போருக்கு கொடுக்க வேண்டும்' என்று தங்களுக்குரிய குர்ஆன் என்னும் சத்தியவேதம் பகர்வதாலேயே புதுக் குப்பாயத்தை அந்த எளியவருக்கு நான் கொடுத்தேன்" என்று உத்தரஞ் சொன்னார்கள். அதைக்கேட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷ முற்றார்கள்.

பிறகு நபிகள் பெருமான் தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள், மகளாரை நோக்கி "மகளே! உன்னை அழைத்துக் கொண்டுபோய் அலியுடைய வீட்டில் விடுவதற்காக வேண்டி நானும், மற்றவர்களும் வந்திருக்கிறோம்" என்றார்கள். உடனே பாத்திமா (றலி) அவர்கள் மனமகிழ்வு கொண்டு, அந்த மனையிலுள்ள சீர்சாமான்களை யெல்லாம் எடுத்து வந்து தகப்பனார் சமூகத்தில் வைத்தார்கள். அவை களாவன தாங்கள் வைத்து குடித்தனம் பண்ணின போஜன பதார்த்தங்கள் வைத்துத் தின்னும் பிங்கானும், பாயும் தலையணையும், இரத்தினக் கம்பளமும், மாவரைக்கும் யந்திரமுமே. இவற்றை நபிநாயகம் (ஸல்) அவர்கள் நோக்கிச் சந்தோஷ முற்று இந்தசாமான்களை நாம் நமது மகளாருக்குச் சீதனப் பொருளாகக் கொடுக்கவேண்டு மென்று கருதி, தங்களின் மகிமைபெற்ற கையில் யந்திரத்தைத் தூக்கிக்கொண்டார்கள். உடனே அருகில் நின்றவர்களில், அபூபக்கர் (றலி) அவர்கள் பாயையும், உமறு (றலி) அவர்கள் தலையணையையும், உதுமான் (றலி) அவர்கள் இரத்தினக் கம்பளத்தையும், உஸாமா (றலி) அவர்கள் பிங்கானையும் தம் தம் கைகளில் எடுத்துக் கொண்டார்கள். இவர்கள் இவைகளை யெடுத்துக் கொண்டபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் மகளாரை நோக்கி "என் கண்மணி

யான பாத்திமாவே! நீ உமது மணவாளர் மனைக்குப்போய் வாழ்ந்திருப்பதற்காக வேண்டி பிஸ்மில்லா சொல்லிப் புறப்படும்" என்று உத்திரவு செய்தார்கள். அப்போது பாத்திமா (றலி) அவர்கள் தாங்கள் தரித்திருக்கும் பழைய மேலங்கியுடன் பாத தாமரைகளில் செருப்பு அணிந்து மனையைவிட்டு வெளிப்பட்டார்கள்.

பாத்திமா (றலி) அவர்கள் தங்கள் மணவாளர் மனைக்குப் போகத் தங்கள் மனையின் வாசலில் வந்தவுடனே, வானவர் எல்லோருக்கும் அதிபராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து தமது மேன்மையும் அழகும் வாய்ந்து பிரகாசிக்கும் ஒப்பற்ற சிறகை மேற்படி மாளிகையின் வாசலிலிருந்து அலி (றலி) அவர்கள் வசிக்கும் மனை வாசல்போகிற வரைக்கும் ஆடை விரித்தாற்போலத் தரையில் விரித்துக்கொண்டு நின்றார். அப்போது பாத்திமா (றலி) அவர்கள் தங்கள் தகப்பனாராகிய நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் பின்தொடர்ந்துவர, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமுடைய சிறகின் மீது நடந்து மணவாளரின் மனைவாசல் சேர்ந்தார்கள்.

மலக்குகளுக்கு அரசராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் (ஸல்) அவர்களின் மகளாராகிய பத்திமா (றலி) அவர்களை தமது சிறகின்மேல் இருத்திக்கொண்டு வந்து, மணவாளர் மனை வாசலில் விட்டுவிட்டு வானுலகஞ் சென்றார். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மகளாரை யழைத்துக் கொண்டு, அலி (றலி) அவர்கள் மனைக்குட் பிரவேசித்தார்கள். உடனே அங்கிருப்போர் இவர்களை உபசரித்து அழைக்க, அனைவரும் களிப்புடனிருந்தார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கொண்டுபோன சீதனப் பொருள்கள் எல்லாவற்றையும் கொடுத்து, மகளாரையும் மருமகனாரையும் வாழ்த்தி துஆச் செய்தார்கள். துஆச் செய்த பின் மகளாரிடத்திலும் மருமகனாரிடத்திலும் விடைபெற்றுக் கொண்டு, தங்கள் அஸ்ஹாபிகளுடன் புறப்பட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்று தொட்டு பாத்திமா (றலி), அலி (றலி) என்னுமிருவரும், உடலும் உயிரும் போல ஒத்து, பாலும் நீரும் போலக் கலந்து, மனோரம்மியத்துடன் க்ஷேமமாய் வாழ்ந்திருந்தார்கள்.

65-வது அத்தியாயம்.

ஷீபுல் பகுறு படை எழுச்சி

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மாபுல் நிகர மதீனாவில் வாழும் முஹம்மது றசூல்தம்
நாபுல் வசனந் தவறாத நன்மை யசுஹாபிகளோடுந்
தீபுல் மனத்தி னபுஜஹுல்தன் சேனையுடன் வந்தெதிரேறிச்
சீபுல் பகுறு மண்டலத்திற் செய்த சமரின் முயற்சி சொல்வாம்.

இதன் பொருள்.

மகா மாட்சிமை பொருந்திய வேங்கைப்புலிக்கு நிகராகத் திரு மதீனமா நகரத்தில் தீனுல் இஸ்லாமென்னு மார்க்கத்தை நடத்திக் கொண்டு வாழ்ந்திருக்கும் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களின் திவ்விய நாவினால் சொல்லப்பட்ட வசனங்களை பேதகமாக்காமல் நன்மையாக நடக்கும் அஸ்ஹாபிமார்களோடும், தீமையற்ற மனத்தையுடையவனான அபூஜஹு லென்பவன் தனது சேனைகளோடு வந்து எதிரேறி ஷீபுல் பக்றென்று பேர் சொல்லப்பட்ட யுத்தகளத்தில் செய்த சண்டை முயற்சியை சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

இறையவன் றூதரு மியார்க ளால்வரு
மறைவழி பெருக்கிய மன்ன ரியாவரு
மிறைதர விருக்கு மக்காளி னேரல்
ருறைபதி யிடத்திருந் தோற்ற ருற்றனர்.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தில் அரசியற்றிக் கொண்டு, காபிர்கள் ஏனுக்கு ஏன் ஒடுங்கி யடங்க, தீன்பயிர் வரவர வளர்ந்தோங்க, மனமகிழ்ச்சியுடனிருக்கும் காலத்தில், மக்கமா நகரத்து குறைஷிக் காபிர்களின் அதிக்கிரமத்தினாலும் அவர்கள் அடுத்தடுத்து விளைக்கும் கலகத்தினாலும், அயலிடங்களி லுண்டாகும் சங்கதிகளை யறிந்துகொள்ளுவதற்காக வேண்டி, அங்கங்கே நபிநாயகம் (ஸல்) அவர்கள் நியமித்திருக்கும்

ஒற்றர்களில் சிலர் விரைந்து வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாத மலர்களைப் பணிந்து நின்று, மிகமரியாதையுடன் முகாரவிந்தத்தை நோக்கி "யாறஸூலல்லா! இந்த மதீனமா நகரத்திற்கும் மக்கமா நகரத்திற்கும் மிடையில் ஷீபுல் பகுறு என்னும் சிற்றூரொன்று இருக்கின்றது. அந்தச் சிற்றூரில், மக்கமா நகரத்துக் குறைஷிகளில் முந்நூறு குதிரை வீரர்களுடன் அபூஜஹுல் வந்து பாளையமிட்டிருக்கிறான். அவன் வந்தது மிகவும் இரகசியமாகும்; நம்முடன் எதிர்த்துப் போராடுதலுக்கே யல்லாமல் வேறு காரணம் பற்றியல்ல" என்று சொன்னார்கள். இதைக் கேட்ட நபிநாயகம் அவர்கள், உடனே அஹ்ஹாபிகளனைவரையும் அழைத்துவரும்படி ஆளனுப்பிவிட்டு, தங்கள் சிறிய தந்தையாகிய ஹம்ஸா (றலி) அவர்களைத் தங்களருகி லழைத்து "தந்தையே, அபூஜஹுலும் முந்நூறு குதிரை வீரர்களும் ஷீபுல் பகுறு என்னும் தலத்தில் வந்து இறங்கி யிருக்கின்றார்களாம். ஆகையால் தாங்கள், தமது அஸ்ஹாபிகளில் முப்பது குதிரை வீரர்களையும், அஸ்திரப் பிரயோகத்தில் கைதேர்ந்த சில காலாட் படைகளையும் அழைத்துக் கொண்டு அந்த ஷீபுல் பகுறுக்குப்போய் அந்தப் பகைவர்களுடன் எதிர்த்துப் போராடி, அனைவரையும் சங்கரித்து வெற்றி பெற்று வாருங்கள்" எனக் கட்டளை பண்ணினார்கள். இக்கட்டளை பிறந்தபோதே ஹம்ஸா (றலி) அவர்கள் ஆநந்தமடைந்து, இதற்குள் அங்கு வந்து கூடிய அஸ்ஹாபிகளில் முப்பது துரகவீரர்களையும், சில அஸ்திரப் பிரயோக வல்லராகிய காலாட் படைகளையும் அழைத்துக் கொண்டு, தங்கள் குதிரை மேலேறினார்கள். உடனே முரசு இடி போல முழங்கிற்று. கொடி, குடை, ஆலவட்டம், சாமரம் என்னும் விருதுகள் பிடிக்கப்பட்டன. பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள், ஹம்ஸா (றலி) அவர்களையும், அவர்கள் இராணுவத்தையும் வாழ்த்தி அனுப்பினார்கள்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

பரகதிப் படையொடும் படைக்கு நாத்தொடும்
வரமுறு முஹம்மதை வாழ்த்தி வாண்மறுக்
கரதல ரெனுமஹமு சாபெய் கார்முகிற்
பொருதிரை கடற்கரை யிடத்திற் போயினர்.

நபிகட்பெருமான் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய ஹம்ஸா (றலி) அவர்களும், அவர்கள் இராணுவமும் நபிகள் திலகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து மதீனமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு விரைவாய் நடந்து, ஸீபுல் பகுறு என்னும் தலத்தை நோக்கிக் கடற்கரை மார்க்கம் பிடித்து நடந்தார்கள். ஹம்ஸா (றலி) அவர்கள் இராணுவத்துடன் வரும் சங்கதி, ஸீபுல்பகுறுவி லிருக்கும் பாதகனாகிய அபூஜஹல் காதில் விழுந்தது. உடனே அவன் தனது முந்நூறு குதிரை வீரர்களையும் போர்க்கோலங் கொண்டு எழும்படி உத்தரவு பண்ணினான். முந்நூறு குறைஷிக் குதிரை வீரர்களும் சமர்க்கோலத்துடன் தயாரானார்கள். இதற்கிடையில், ஹம்ஸா (றலி) அவர்களும் தங்கள் இராணுவத்துடன் ஸீபுல்பகுறு என்னும் சிற்றூரை நெருங்கினார்கள். இவர்கள் நெருங்கின மாத்திரத்தில், அபூஜஹல் தன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு, படை முரசுகள் கடல்போலக் கோஷிக்க வந்து, ஹம்ஸா (றலி) அவர்களுடன் எதிர்த்தான். ஹம்ஸா (றலி) அவர்களும் தங்கள் சேனையை, அபூஜஹலுடைய சேனை மேல் விழுந்து தாக்கத் தூண்டினார்கள். இவ்வாறு இருவகைச் சேனையும் ஒன்றோடொன்று எதிர்த்து கைகலந்து சண்டை செய்ய ஆயத்தமானபோது, நபி நாயகம் (ஸல்) அவர்களிடத்திலும், மக்கமா நகரத்து குறைஷி காபிர்களிடத்திலும் பகைக்காது உறவாடி ஒத்திருந்து, இருவருக்குமிடையில் எதும் ஒரு பகையை மூட்டாமல் தன் காரியத்தில் மாத்திரம் கண்ணுங் கருத்துமா யிருந்து காலங்கழிக்கும் தந்திரமுள்ள மஜ்தி என்னும் காபிர் ஒருவன், அந்த சமயத்தில் அபூஜஹலுடைய தளத்தி லிருந்தான். இரு படையும் எதிர்த்துப் போர்த் துணிந்தவுடன் அவன் தனித்து ஹம்ஸா (றலி) அவர்களிடத்தில் வந்து, அவர்கள் சித்தத்திற்கு ஏற்றபடி சில சங்கதிகளைச் சொல்லி, போரை நிறுத்தும் வண்ணம் வேண்டிக் கொண்டான். அதற்கு ஹம்ஸா (றலி) அவர்கள் இசைந்து, போராடாமல் தங்கள் வீரர்களைத் தடுத்துக் கொண்டார்கள். இந்த மஜ்தி என்பவன் உடனே அங்கிருந்து எழுந்து அபூஜஹல் இடம் சென்று, அவனுக்கும் ஏற்கும்படி சில சங்கதிகளைச் சொல்லி போருக்கு வராமல் தடுத்து, சேனையைத் திருப்பி அழைத்துக்கொண்டு போய், மக்கமா நகரத்திற்கு அனுப்பிவிட்டுச் சென்றான். மஜ்தியுடைய தந்திரத்தினால் அன்று விளையும் பயங்கரமான யுத்தம் ஒழிந்தது.

அபூஜஹல் தனது சேனையுடன் மக்கமா நகரத்திற்கு மீண்டபடியால், ஹம்ஸா (றலி) அவர்களும் அங்கிருந்து மீண்டு, மதினமா நகரம் வந்து சேர்ந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் அங்கு நிகழ்ந்தவை யனைத்தையும் சொல்லிக் காட்டினார்கள்.

66-வது அத்தியாயம்.

புவாத்து படையெழுச்சி.

கலி விருத்தம்.

நபாத்தி ரன்றன துத்தமச் சோதியில்
சிபாத்த தான திருமஹு மூதர்பல்
துவாத் தியங்கள் துளக்கப் படையொடும்
புவாத்தி லுற்ற புதுமையை யோதுவாம்.

இதன் பொருள்.

நன்மை பொருந்திய இரட்சகனான அல்லாஹு தஆலா, தன்னுடைய உத்தம தாத்தாகிய சோதியான முதற்றுறையில் நின்றும், சிபாத் என்னும் பிரிவினையற்ற இரண்டாந் துறையிலான மஹ்மூதென்னு மியற் பெயரையுடைய முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள், பலபல சேர்மானமான யுத்த வாத்தியங்கள் கர்ஜித்து முழங்கப் படைவீரர்களான அஸ்ஹாபிமார்களோடும் புவாத் என்னும் தலத்திற்குப் போன புதுமையைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

ஸீபுல்ப குறுவெனுந் தலத்தின் செய்தியைக்
காவலர் முஹம்மதங் கறிந்து கல்விசேர்
நாவல ருடனினி திருந்து நாளினில்
வேவுகொண் டொருவர்வந் திறைஞ்சி விள்ளுவார்.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா ரஸூல் (ஸல்) அவர்கள் தங்கள் சிறிய தகப்பனாராகிய ஹம்ஸா (றலி) அவர்கள் வந்து சொன்ன ஸீபுல் பகுறுவில் நிகழ்ந்த சமாசாரத்தைக் கேட்டு, சற்றே

கருத்துச் செலுத்திச் சிந்தித்தார்கள். ஏனென்றால் அங்கே தொடங்க யத்தனித்த கொடிய சண்டையைத் தடுத்து, பகைவர்களை மீட்டுக்கொண்டு சென்ற மேற்படி மஸ்ஊதி என்பவன் முஸ்லிம்கள், காபிர்களென்னும் இருதரத்தாருக்கும் ஒற்றுமை யானவனும் பொதுவானவனும் சமாதானப் பிரியனுமாகத் தன்னைக்காட்டி நடக்கும் கபட சித்தத்தையுடைய தந்திரக்காரனே யன்றி, முஸ்லிம்கள் பக்ஷத்தில் முழு இருதயத்துடன் நேசிப்பவனல்ல. பெரும்பாலும் அவன் காபிர்கள் பக்ஷத்திலேயே இருப்பவன். முஸ்லிம்களுடைய வில்லங்கத்தில் காபிர்கள் சிக்குண்டு வருந்தும்போதும், காபிர்களுக்கு முஸ்லிம்களால் ஆபத்துகள் அடுக்கும் போதும் தான்வந்து குறுக்கிட்டு, சமாதானஞ்செய்யும் பாவனையாய் நடித்து, காபிர்களைத் தப்பவைத்துக்கொண்டு போகச்செய்யும் உபாயமுள்ளவன். ஆனபடியாலே தான்நபிநாயகம் (ஸல்) அவர்கள், ஷீபுல்பகுறுவில் அபூஜஹல் முதலானபகையர்கள் கனத்த சேதத்தை யடைவார்களென்பதை அந்த மஸ்ஊதி யறிந்துகொண்டே தந்திரஞ் செய்து அவர்களைத் தப்பிப்போகச் செய்து விட்டானென்று உணர்ந்து இதைக்குறித்துத் தங்கள் அஸ்ஹாபிகளுக்கும் அறிவித்துவிட்டு சில ஒற்றர்களை விளித்து, மஸ்ஊதி என்பவன் எந்த ஸ்தானத்திலிருக்கிறானென அறிந்து வாருங்களென்று கட்டளை யிட்டார்கள். ஒற்றர்கள் அந்தப் பகுதிகளிற் சென்று, அந்த மஸ்ஊதி புவாத்து என்னும் சிற்றூரிலிருக்கிறானென அறிந்துகொண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து தெரிவித்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் உடனே தங்கள் அஸ்ஹாபிகளை யழைத்து, நாம் புவாத் என்னும் சிற்றூருக்குப் படை கொண்டு போக வேண்டும். ஆகையால், இன்று பகற் பொழுதிலேயே நீங்கள் போர்க் கோலத்துடன் புறப்படுங்களென்று சொன்னார்கள். இச் சொல்லைக் கேட்டவுடன் முஹாஜிரீன், அன்ஸாரீன் என்னும் இரு தரத்தாரில் வீரம் மிக்க பலர் திரண்டு சமர்க்கோலம் புனைந்து, குதிரை மீதேறியும், பாதசாரிகளாகவும் புறப் பட்டார்கள். சேனை ஆயத்தமான பின், நபிநாயகம் (ஸல்) அவர்களும் ஆயுதாதி யணிந்து, தங்கள் அருகர் நான்கு பேரும் புடைவரப் புறப்பட்டார்கள். இவர்கள் புவாத்துக்குச் சென்று மீண்டும் மதீனமா நகரம் வந்து சேரும் வரையும், இராஜ காரியங்களை நடத்துவதற்காக ஒரு தகுந்த பிரதிநிதி நியமிக்கப்பட்டார். பிறகு நபிநாயகம் (ஸல்)

அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளென்னும் சேனா வெள்ளத்துடன் மதீனமா நகரத்தை விட்டு புறப்பட்டார்.

நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளென்னும் சேனா வெள்ளம் புடைசூழ, படைமுரசுகள் இடிபோல் முழங்க, கொடி, குடை, ஆலவட்டம், சாமர முதலானவை நெருங்க, மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு புவாத்தை நோக்கி நடந்தார்கள்.

மேற்படி புவாத்தில் தாகமீறிய மனிதர் எத்தனை தூரந் தொலையில் அலைந்தலைந்து தேடின போதிலும் ஒரு துளி நீராவது அகப்படாது. கொடிய கானல் மிக்க பாலை நிலத்திலுள்ள அரண் சூழ்ந்த இடம் அது. அதில் வசிக்கும் மக்கள் பருகும் நீர் வனாந்தரங்களில் அகழ்ந்துள்ள ஊற்றுக்களிலுள்ளதும், மழை நீருமேயன்றி வேறில்லை. கோடைக் காலங்களில் இவ்விருவகைப் புனலுமின்றி மனிதர்கள் மிகப் பாடுபடுவார்கள். கடுங்கோடைக் காலங்களில் எத்தனை யாழம் வரையும் தரையை தோண்டினாலும் ஒரு துளி ஜலத்தையாவது காண்பது அரிது. இவ்வகைப்பட்ட பாலை நிலமாகிய புவாத்தை நபி நாயகம் (ஸல்) அவர்கள் நெருங்கி தங்கள் சேனையைக் கொண்டு அதன் மதிலை நான்கு புறமும் வளைந்து முற்றுகை யிட்டார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் பாளையமிறங்கிக் கோட்டையை முற்றுகை யிட்டவுடன் சூரியன் அஸ்தமித்தது.

நபிகள் திலகம் தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், தங்கள் சேனையோடு வந்து புவாத்தை முற்றுகை யிட்டுக் கொண்டார்களென்பது, அங்கிருக்கும் கபட சிந்தையுள்ள மஸ்ஊதி யென்பவனுக்குத் தெரிந்தும், அதற்காக அவன் பகிரங்கத்தில் ஒன்றும் நடத்தத் துணியவில்லை. அன்றிரவு கழிந்து சூரியோதயமாகும் வைகறைப் பொழுதில் நபி நாயகம் (ஸல்) அவர்களெழுந்து, பஜர் தொழுகைக்காக உளுசெய்வதற்குத் தண்ணீர் கொண்டு வரும்படி கட்டளை பண்ணினார்கள். குற்றேவலாட்கள் உடனே யெழுந்து சேனையில் கொண்டு வந்திருக்கும் நீர்த்துருத்திகளனைத்தையும் ஒவ்வொன்றாகப் பார்த்தார்கள். ஒரு துருத்தியிலாவது ஒரு துளி நீருமின்றி எல்லாம் வெறுந் துருத்திகளா யிருந்தன. துருத்திகளில் அடைத்திருந்த நீர்

அனைத்தும் செலவாய் வெறுமை யுற்றிருப்பதைக் கண்டமாத்திரத்தில், அவ்வேவலாட்கள் விரைவாய்ப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு, பல திசைகளிலும் நீர் தேடி ஓடினார்கள். அக்காலம் வேனிற் காலமாகையால் நீர் எங்கிருந்து இவர்களுக்கு அகப்படும்? அநேக இடங்க ளெல்லாஞ் சென்று தேடித் திரிந்தும், நீரகப்படாமையால் மனம் நொந்து திரும்பி வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் நின்று "யாறஸூலல்லாஹ்! நமது சேனைக் கென்று கொண்டு வந்த நீர் முழுவதும் செலவாய்த் துருத்திகள் வெறிதா யிருக்கின்றன. ஆனதால், நாங்கள் விரைந்து போய் இந்தப் பகுதியிலுள்ள ஸ்தானங்களில் எங்கும் நீர் தேடினோம்; ஒரு துளி நீராவது அகப்படவில்லையே" என்று சொன்னார்கள். இதைக் கேட்ட நபி நாயகம் (ஸல்) அவர்கள் நீரின்றி யிருக்கும் வெறுந்துருத்திகளி லொன்றை யெடுத்து இங்கே கொண்டு வாருங்க ளென்று கட்டளை பண்ணினார்கள்.

உடனே சாபிர் என்பவர் விரைந்து சென்று நீரற்ற துருத்தி யொன்றைக் கொண்டு வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வைத்து நின்றார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் வலது கையால் மேற்படி துருத்தியைத் தொட்டு நீருக்காக வேண்டி அல்லாஹு தஆலா இடம் மன்றாடிப் பிரார்த்தித்தார்கள். சற்று நேரம் வரையும் வேத வாக்கியங்களில் சிலவற்றை யோதிப் பிரார்த்தித்தபின், சாபிரை நோக்கி மட்பாத்திர மொன்று கொண்டு வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அவர் போய் அங்கிருக்கும் மட்பானைகளில் ஒன்றை யெடுத்து வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வைத்தார். அப்போது * நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் வலது கரத்தை விரித்து மேற்படி பானை வாயில் மல்லாத்தி வைத்து மூடிக் கொண்டு, சாபிரை நோக்கி "சாபிரே! இந்த துருத்தியை தூக்கி என் கையின் மேல் நீரூற்றுவது போலக் கவிழ்த்துக" என்று சொன்னார்கள். அவர் அந்த வெறுந் துருத்தியைத் தூக்கி, பானை வாயில் பரப்பி, மூடிக் கொண்டிருக்கும் தாமரை மலர் போன்ற சிறப்பான கரத்தின் மேல் சாய்த்தார். சாய்த்த மாத்திரத்தில் மேற்படி வெறுந் துருத்திக் குள்ளிருந்து ஒரேயொரு துளி ஜலம் பட்டவிடம் ஈரமாக நபி நாயகம் (ஸல்) அவர்களின் கையில் விழுந்தது.

* சீறா புராணம்.

கலி விருத்தம்.

கையின்மே லொருதுளி நான்ற போழ்தினின்
மெய்யொளி முஹம்மது பிஸ்மிலோதினார்
செய்யமென் விரலிடை நான்கிற் சேணதி
பெய்புனல் லருவிபோற் பிறந்தெ ழுந்ததே.

வசனம்.

ஒரு துளிஜலம் கையில் விழுந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந்து "பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்" என்று சொன்னார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு பிஸ்மில் ஓதினவுடனே, பானைவாயில் விரித்துவைத்திருந்த கையின் ஐந்து விரல்களுக்கு இடையிலுள்ள நான்கு வெளிகளிலு மிருந்து நான்கு நதிகள் பிரவகித்து ஓடின.

அகிலரட்சகராகிய நபிநாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் விரல் வெளிகள் நான்கின் வழியாய், ஆச்சரியகரமாக நான்கு ஆறுகள் பிரவகித்து அற்புதமாய் ஓடினபோது, கண்டவர் அனைவரும் களிப்புற்று அதிசயித்து நின்று துதித்தார்கள். எங்கும் கமர்பிளந்து கானல் மலிந்த சுரநிலமாகிய மேற்படி ஸ்தானத்தில் நூதன நதிகள் நான்கு கரைபுரண்டோடுவதால், அந்தசுர நிலத்தை நீர்வளமுள்ள மருதநில மென்று கூறும்படி நேரிட்டது. நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் மேற்படி நதிக்கரையிலிருந்து உளுசெய்துகொண்டு அல்லாஹு தஆலாவை தொழுதார்கள். விலங்குகளும் தாகந் தீரத் தண்ணீர் பருகின.

இவ்வண்ணம் மூன்று தினம்வரையும் மேற்படி புவாத் கோட்டையை நபிநாயகம் (ஸல்) அவர்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். நான்காம் நாள், முன் சொன்ன மலஉதி என்பவன் புவாத்திலிருந்து பிறரா ரறியாமல் ஒளித்து ஓடிவிட்டானென்னும் செய்தி நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்தது. அதனால் நபி நாயகம் (ஸல்) அவர்கள் அப்போதே புவாத்தின் முற்றுகையை எடுத்துத் தங்கள் சேனையை மீட்டிக்கொண்டு மதினமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

67-வது அத்தியாயம்.

அசிருப் படையெழுச்சி.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

நபிபா னதிலுயர் நபிமுஹம் மதரோ
டொசிரு மியார்களு முடனெல் லோர்களுந்
தசிரு மதினத் திற்றரித்து வாழ்கையில்
அசிரு வெனுந் தலத்தானவை யறைவாம்.

இதன் பொருள்.

ஜாதகத்திலுள்ளபடி உயர்ந்த மேன்மை யோகங்கள் யாவையு முடைய நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களுக்கும், தங்களின் மந்திரிமார்களான அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் முதலிய நான்கு பேர்களோடு மற்ற அஸ்ஹாபிகளென்கிற தோழன்மார்களுடன், குபேரனென்னுஞ் சூரியனுட்சிபோல அரசாட்சி செய்து வாழ்ந்திருக்கையில், அசிரு வென்னுந்தலத்தில் நிகழ்ந்த செய்தியைச் சொல்லுகின்றாம்.

சிந்திர புராணம்

கலி விருத்தம்.

வானவர் பரவிய வள்ள னந்நபி
தினெனும் பெரும்பெய ராக செய்யுநா
ளினவன் குபிரவ ரியற்றுஞ் செய்கையைத்
தானறிந் தொருவர் வந்தவையிற் சாற்றுவார்.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் புவாத் என்னும் தலத்தை விட்டு எழுந்து, தங்கள் இராஜதானியாகிய மதீனமா நகரம் வந்து சேர்ந்து, தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை நானா திசைகளிலும் பரப்பிக் கொண்டு வருங் காலத்தில், பகைவர்களின் வர்த்தமானங்களை அறிந்து வந்து தெரிவிப்பதற்காக வேண்டி அங்கங்கே நியமித்திருக்கும் ஒற்றர்களில் ஒருவர், ஒருநாள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்நிதியில் வந்து நின்று, நபிநாயகமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! மக்கமா நகரத்தில் வசிக்கும் நமது பகைவர்களாகிய

குறைஷித் தலைவர்கள் சில வர்த்தகர்களைத் திரட்டி, அவர்கள் வசம் அறபு இராஜ்ஜியத்துப் பட்டு வஸ்திரங்கள், நாணயங்கள், இரத்தினங்கள், இன்னும் விற்பனைக்கேற்ற பலவகை சரக்குகள் அனைத்தையுங் கொடுத்து, குதிரை, ஒட்டகம், கோவேறுக்கழுதை, எருது இவைகளையும் நிரைநிரையாகக்கூட்டி வியாபாரத்தின் பொருட்டு, ஷாம் இராஜ்ஜியத்திற்கு அனுப்பி யிருக்கின்றார்கள். இவ்வர்த்தகப் பொருள்களுக்குக் காவலாக அநேக வீரர்கள் புடைசூழ்ந்து செல்லுகின்றார்கள். ஆகையால், இது நமக்கு நல்ல தருணம். அவர்கள் எல்லாரையும் சங்காரஞ் செய்து அவர்கள் கொண்டு போகும் விலையேறப்பெற்ற பொருள்கள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு வந்துவிடலாம்" எனக் கூறினர். ஒற்றர்வந்து சொன்ன இச்சொல்லைக் கேட்டபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமடைந்து, தங்கள் சபையிலிருக்கும் தலைவர்களை நோக்கி, "நாம் நமதுதோழர்கள் களிகூறத்தக்க சமாசாரத்தை இன்று கேட்டோம்" எனப் பகர்ந்து, உடனே சேனையெழும்படி ஆக்ஞை செய்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஆக்ஞைபிறந்த போதே அஸ்ஹாபிகள் ஆயுத வர்க்கங்களை அணிந்து, இரணசிங்கங்களுக்கு ஒப்பாய் புறப்பட்டார்கள்.

அருகர் நால்வரும், அஸ்ஹாபிகளில் சிறந்த தலைவர்களும், மற்றத் தோழர்களும் இராணுவ முஸ்தீபுகளோடு தயாரானபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் இராஜரீகத்திற் பழகிய அபூஸல்மா என்பவரை மதீனமா நகரத்தில் தங்களின் பிரதிநிதியாக நியமித்து, தாங்களும் புறப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) தங்கள் சேனைக்கு முன்னே தமது சிறியதந்தையாகிய ஹம்ஸா (றலி) அவர்களைச் சில வீரர்களுடன் செல்லும்படி கட்டளை பண்ணினார்கள். அப்படியே ஹம்ஸா (றலி) அவர்கள் ஆண் சிங்கம் போன்ற சில வீரர்கள் புடைசூழ நடந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனைக்கு முன்னேசென்றார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இராணுவத்துடன் மதீனமாநகரத்தை விட்டு வெளிப்பட்டு, ஒற்றர்வழிகாட்ட நடந்தார்கள். இவர்களுக்கு முன்னே ஹம்ஸா (றலி) அவர்கள், நபிநாயகமவர்களின் "உகாபு" என்னும் வெண்கொடியை பிடித்துச் சென்றார்கள். இரண்டு பிரிவாய் ஒன்றின்பின் ஒன்றாய்ச் செல்லும் சேனையின் அலங்காரமான காட்சி மிக மும்முரமாயிருந்தது. அச்சேனையில் முழங்கும்

படை முரசுகளின் கோஷ்டமும், "தக்பீர்" "சலவாத்து" களின் ஓசையும் அதிகமான இடிமுழக்கத்தை யொத்திருந்தன.

இவ்வித மும்முரத்தோடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனைகளை நடத்திக்கொண்டு வனம், வனாந்தரம், மலைத்தொடர். சிற்றூர்கள் எல்லாவற்றையும் கடந்து நடந்து, ஒற்றர் அறிவித்த படி மக்கமாநகரத்திலிருந்து ஷாம் இராஜ்ஜியத்துக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள அசீரு என்னும் ஒரு சிற்றூரில் போய்ப் பாளையமிட்டார்கள். அசீருவின் புறத்தில் தங்கள் சேனையைப் பரப்பிக் கூடாரமிட்டுக் கொண்டு ,பகைவர்கள் வரும் வழியைப் பார்த்து இரண்டுநாள் வரையும் இருந்தார்கள். பகைவர்களில் ஒருவராவது அந்தப் பாதையில் வரவேயில்லை. பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்தத்திசைகளில் ஒற்றர்களைப் போய் விசாரிக்கும் படி கட்டளை யிட்டார்கள். மேற்படி ஒற்றர்கள்போய் விசாரித்து நபிநாயகமவர்களிடத்தில் வந்து "யாறஸூலல்லாஹ்! நாம் நமது சேனையோடு இங்கு வருவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னே மேற்படி பகைவர்கள் இந்த மார்க்கமாகவே, அநேக பொருள் களோடு ஷாம் இராஜ்ஜியத்திற்குப் போய்விட்டதாகக் கேள்விப் பட்டோம்" என்றார்கள். இச்செய்தியைக்கேட்ட நபிநாயகம் (ஸல்), அவர்கள் மிஞ்சிப் போய்விட்டார்களென்று இருந்தார்கள்.

அப்போது அந்த அசீருஎன்னும் ஸ்தலத்தில் வசிக்கும் அறபிகள் அனைவரும் திரண்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களைத் தரிசித்தார்கள் அந்த அசீருவிலுள்ள பனிமுத்லஜு, பனீல முறத்து என்னும் இரண்டு கிளையாருக்கு மிடையில் நீண்டகால மாகப் பகைமுதிர்ந்து அடிக்கடிக் கலகமுண்டாய்க் கொண்டிருந்தது. அந்தப் பகையையும் அவ்வறபிகள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் முறையிட்டுக்கொண்டபடியால் நபிநாயகமவர்கள் அவ்விரு கிளையாருக்குமிடையில் சமாதானஞ்செய்து, ஒருவருக்கொருவர் ஐக்கியமாயிருக்கும்படி திட்டஞ் செய்து விட்டு, அந்த ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு மதீனமா நகரத்தை நோக்கி வந்தார்கள்.

நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் தங்கள் இராணுவத்தோடு அசீருவைவிட்டு மீண்டு, மதீனமா நகரத்துக்கு வரும்வழியில், வேறு சில ஒற்றர்கள் வந்து, நபிநாயகமவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தாங்கள் மதீனமாநகரத்தை

விட்டுப் புறப்பட்டபின், குறுநிலமன்னர்களில் ஒருவனாகிய குறுசு என்பவன் தனது சேனையோடுவந்து, மதீனமாநகரத்துப் புறநாடுகளில் வசிக்கும் குடிகள் திகில்கொள்ள அதிக்கிரமித்து அடர்ந்து, மாடு, ஆடுகள் எல்லாவற்றையும் கவர்ந்துகொண்டு போய்விட்டான். அதனால் அக்குடிகள் மிகக்கலக்க முற்றிருக்கின்றார்கள்" என்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஒற்றர்களை நோக்கி "பொருள் கவர்ந்துபோன மேற்படி குறுசு என்பவன் வசிக்கும் ஸ்தலம் எது?" எனக்கேட்டார்கள். அதற்கு அவ்வொற்றர்கள், "அவன் சபுவான் என்னும் மலைச்சாரலிலுள்ள ஒரு சிற்றூரில் வசிக்கின்றான்" என்று விடைபகர்ந்தார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் இராணுவத்தை மேற்படி சபுவான் என்னும் மலையடிவாரத்தை நோக்கி நடத்திக் கொண்டு சென்றார்கள்.

மகத்தான அல்லாஹு தஆலாவின் தூதராகிய நபிநாயகம் (ஸல்) அவர்கள் தன்னையெதிர்த்து, கவர்ந்துவந்த பொருளைமீட்டு தற்காக சேனையோடு வருகின்றார்களென்னும் செய்தி அந்த குறுசு என்பவன் காதில் விழுந்தது. அதனால் அவன் திகில் பிடித்து, இனி நாம் இங்கிருப்பது பழுது எனவெண்ணி, தனது திரவியங்கள், கொள்ளையடித்துச் சேர்த்திருக்கும் பல பொருள்கள் எல்லாவற்றையும், போட்டுவிட்டு ஒளித்து ஓடிப்போய் விட்டான். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இராணுவத்தோடு அந்த சபுவான் என்னும் மலையடிவாரத்தில் வந்து, குறுசு ஒளித்தோடிவிட்டபடியால் எதிர்ப்பாரின்றி அங்குள்ள பொருள் அனைத்தையும் மீட்டிக்கொண்டு, அங்கிருந்து திரும்பி மதீனமாநகரத்தை நோக்கி வந்து வழியிலுள்ள ஒரு பூங்காவில் தங்கினார்கள்.

எங்கும் தண்ணென்று விளங்கும் பசுமலர் சொரியப் பெற்ற பூங்காவில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் இராணுவத்தோடு கூடாரமிட்டிருந்து, தாங்கள் அன்றையத்தினமே ஒரு கடிதமெழுதி முத்திரையிட்டு, அப்துல் முத்தலிபு உடைய புதல்வியும் தங்கள் தந்தையின் சகோதரியுமான பெண்ணரசியின் குமாரராகிய அப்துல்லாஹ் என்பவரையுமழைத்து, அவருடன் மக்கமாநகரத்தாராகிய முஹாஜிரீன்களில் எட்டு வீரர்களைச்சேர்த்து, அக்

கடிதத்தை மேற்படி அப்துல்லா கையில்கொடுத்து, அவரை நோக்கி "எனது அருமை மாமியின் குமாரரே! தாங்களும், இந்த முஹாஜிரீன்கள் எண்மரும் இங்கிருந்து புறப்பட்டு, பத்னுன்னக்லா என்னும் சிற்றூருக்குப்போக வேண்டும். அங்கேபோய்ச் சேர்ந்த பின் இதோ இந்தக் கடிதத்தை முத்திரைவிடுத்து வாசித்து அதில் எழுதியிருக்கும் வண்ணம் நடத்தவேண்டும். அவ்வாறு நடத்தும் வரையும் அந்த பத்னுன்னக்லாவிலேயே தங்கியிருங்கள்" என்று கட்டளைபண்ணி அனுப்பினார்கள். உடனே அப்துல்லாவும் முஹாஜிரீன்கள் எண்மரும், தங்கள் தங்கள் குதிரைகளிலேறி, வெற்றித் துவஜம் ஒன்று முன்னிலங்க, பத்னுன்னக்லாவை நோக்கி விரைந்து சென்றார்கள்.

நபிகட் திலகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாவை அனுப்பிவிட்டு, தாங்கள் பாளையமிறங்கிருக்கும் பொழிலிலிருந்து சேனையோடு புறப்பட்டு மதீனமாநகரத்தை நோக்கி நடந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் அநேக சேனாவீரர் புடைசூழ நடந்து வரும்போது, அப்பாதையில் அறபி யொருவர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்துநின்று "நபியே, முன்னுள்ள வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள் அனைத்தும் 'பிற்காலத்தில் நபியொருவர் வருவார்' என்று பரிஷ்காரமாய்க் கூறின. அதனால், தமியேன் அந்த நபியைக் காண வேண்டுமென்று விரும்பிப் பல இராஜ்ஜியங்களுஞ் சென்று தேடித் திரிந்தேன்; கண்டுகொள்ளவில்லை. இப்போது என் ஊழ்வினையே பரதேசியாய்த்திரியு மென்னை யிழுத்துக்கொண்டு இங்கே விட்டது. கருமேகம் குடை நிழற்றுவதையும் பாததாமரைகள் நிலத்தில் தோயாததையும், கஸ்தூரி பரிமளம் கமழ்வதையும் கண்டு, முன்சொன்ன நபி தாங்கள் தானென்று உறுதிகொண்டு தங்கள் சந்நிதியில் வந்தேன். ஆனாலும், தாங்கள் உண்மையான நபியென்பதற்குத் திருஷ்டாந்தமாக என் கண்ணார நான் ஒரு அற்புதத்தை தங்களால் காணவேண்டும். அப்படி கண்டபின் எனக்கு வேறு திருஷ்டாந்தம் வேண்டியதில்லை" என்று கூறினார். இதைக்கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி அறபியை நோக்கி "அறபியே, நீர் அதோ தூரத்தில் நிற்கும் மரத்தை நோக்கி அழையும். அது உம்மிடம் வரும்" என்றார்கள்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்

தாதுவ ருரைவழி யறபி தூரத்தின்
மாதரு நிலையினை நோக்கி வாவெனக்
கோதறக் கூறினன் கூற வத்தருப்
பூதலம் விரிதரப் புறத்தெ ழுந்ததால்.

எழுந்தருப் பணர்கிளை யாவும் பின்னரின்
விழுந்திட வெரைமுன் னீட்டி மேதினி
யழுந்திட வூர்ந்ததி சயிப்ப வாசவச்
செழுந்தொடைப் புயநபி திருமு னின்றதே.

வசனம்.

உடனே அவ்வறபி அந்தத்தருவை விளித்து அழைத்தார். அந்த விருக்ஷம் அவர் அழைத்தமாத்திரத்தில், தான் நிற்கும் நிலையைவிட்டுப் பெயர்ந்து, வேர்பக்கம் பின்னுமாய் நிலத்தில் விழுந்து நகர்ந்து, இலைமுதலிய ஒன்றும் உதிராது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகம்வந்து நின்று, வானவர் மனிதர் என்னும் இருவகையார்களும் செவிகுளிர கேட்கும் வண்ணம், நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்லி, பிறகு "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்று கலிமாவும் ஓதிற்று. வனத்தில் நின்ற விருக்ஷம் இவ்வாறு வந்துநின்று சலாம் சொல்லிக் கலிமாவையும் பகர்ந்த புதுமையை அறபி பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து ஆச்சரியமடைந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "தேவரீர் தயவு கூர்ந்து இந்தத்தருவை அதன் ஸ்தானத்துக்குச் செல்லும்படி கட்டளை பண்ணுங்கள்" என்றார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி விருக்ஷத்தை நோக்கி "நீ உன் ஸ்தானத்திற் போய்ச் சேர்" என்றார்கள். உடனே அம்மரம் மறுபடியும் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு சலாம் சொல்லிவிட்டு, தான் நிற்கும் ஸ்தானத்திற் சென்று முன்போல நின்றது.

இலைகளில் ஒன்றும் உதிராமல், வேர்கள் கெடாமல் பெயர்ந்து வந்த விருக்ஷம் மறுபடியும் தனது ஸ்தானத்திற்போய்ச் சேர்ந்த பின், மேற்படி அறபி அகங்களித்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு ஈமான் கொண்டு, கலிமாச் சொல்லி முஸ்லிமானார்

மரத்தின் திருஷ்டாந்தத்தினால் மனம் பூரித்து முஸ்லிமான அவர், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லா! தங்கள் ஊழியனாகிய நான் தாமரை மலர் போன்ற மெல்லிய தங்கள் பாதங்களை சுஜூதுசெய்து துதித்து முத்தியடையும் வண்ணம் எனக்கு உத்தரந்தர வேண்டும்" என்று கேட்டார்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த அறபியை நோக்கி "சிருஷ்டிகர்த்தனாகிய மகத்தான அல்லாஹு தஆலாவையே சிருஷ்டிகளனைத்தும் சுஜூது செய்யத் தகுமன்றி, மானிடர் முதலான சிருஷ்டிகளை சுஜூது செய்வது தகாது" என்னும் அர்த்தந்தரும் வேத வாக்கியத்தை ஓதிக்காட்டி, நீர் அவ்வாறு செய்வது தகாது, என்று விலக்கினார்கள். மறுபடியும் மேற்படி அறபி நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்துநின்று "யாறஸூலல்லா! தமியேன் தங்களை சுஜூது செய்யாவிட்டாலும், தங்கள் பாத மலர்களைத் தொட்டு என்கண்களில் வைத்து முத்தமிட்டுக் கொள்ளவாவது உத்தரந்தர வேண்டும்" எனக்கேட்டார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்ய சம்மதித்தார்கள். உடனே அவ்வறபி நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாதமலர்களைத் தொட்டு தமதுவிழிகளில் வைத்து, அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும், மற்ற அஸ்ஹாபிகளுக்கும் சலாம் சொல்லி விடைபெற்றுக் கொண்டு, தாம் வாழும் ஸ்தலத்தை நோக்கிச்சென்றார்.

மேற்படி அறபி பரிசுத்தமான முக்திமார்க்கத்தில் சேர்ந்து, தமக்கு நிகரில்லாத ஆநந்தபரவசமுடையவராய் அங்கிருந்து போன பின் நபிநாயகம் (ஸல்) அவர்களும், சேனா வீரர்களாகிய அஸ்ஹாபிகளும் அங்கிருந்து வனம், வனாந்திரம், மலை, குன்று, சிற்றூர் அனைத்தையும் கடந்து நடந்து, மதீனமாநகரம் வந்து சேர்ந்தார்கள்.

68-வது அத்தியாயம்.

பத்னுன் னக்லாவின் சண்டை.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

முத்தநன் மணிபோல் முன்னுதித்த முறுசல் முஹம்மதனுப் பிவை
தத்துமின் னிகரப் பாய்ந்து செலுஞ்சடில வீரரெண்மரோடுந் [த்த
தத்துவம் மிகுந்த சிங்கமப் துல்லா தாமும் புகழ்ந்திறையைப் [ம்.
பத்துனுன் னகுலாத் தலம்போந்து படுத்துஞ் செய்கை பகர்ந்திடுவா

இதன் பொருள்.

பூர்வீகத்தில் அல்லாஹு தஆலாவின் ஒளியில் நின்றுமோர் ஆணிமுத்து ரூபமாகவுண்டாகி, இலட்சத்திருபத்து நான்காயிரம் நபிகளென்னும் தீர்க்கதரிசிகளில்தலைமையரான முந்நூற்றுப் பதின்மூன்று முர்சல்களான பெரிய தீர்க்கதரிசியர் களுக்கும் முதன்மைத் தீர்க்கதரிசியரான முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், அசீறுவென்னுந் தலத்தை விட்டுத் திருமதீனமாநகரத்திற்கு வருகிற நடுவழியி லிருந்து, பத்னுன் னக்லாவுக்கு அனுப்பிய மின்னலைப் போல் தத்திப்பாய்ந்து நடக்கும் குதிரை வீரர்கள் எட்டுபேர்களோடும், அதிகாரத்தில் மிகுந்த சிங்கேறனை அப்துல்லா (றலி) அவர்களும், அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்து கொண்டு, அந்த பத்னுன் னக்லா வென்னுந் தலத்திற்போய்த் தங்கள் வசப்படுத்திய செய்கையைச் சொல்லுமென்றும்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறை தவழ் கவிகை வள்ளல் முஹம்மது நினைப்போற்றி
யெழிப்பெறு மப்துல் லாவு மெண்மரும் நடந்து சுற்றிச்
சுழிவெறி யாறுங் காறுஞ் சுரங்களுங் கடந்து செந்தேன்
பொழிதரக் கனிக டேங்கும் பொழிலிடை யிறங்கி னாரால்.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது (ஸல்) அவர்கள், தங்கள் மாமி மகனாராகிய அப்துல்லாஹ்வையும் எட்டு வீரர்களையும் பத்னுன் னக்லாவுக்கு அனுப்பிவிட்டு, மதீனமா நகரம் வந்து சேர்ந்த பின் மேற்படி அப்துல்லாவும் எட்டு பேர் முஹாஜிரீன்களும், நபி

நாயகம் (ஸல்) அவர்களைப் பிரிந்து இரண்டு நாள் முழுவதும் நடந்து, மூன்றாம் நாள் மத்தியானமானபோது பத்னுன் னக்லாவை யடுத்துள்ள ஒரு வனத்தில் கூடாரமிட்டுத் தங்கினார்கள். அன்று அப்துல்லா, நபிநாயகம் (ஸல்) அவர்கள் எழுதி முத்திரையிட்டுக் கொடுத்த கடிதத்தை யெடுத்து, தமது வீரர்கள் எண்மரும் கேட்கும் வண்ணம், அதன் முத்திரையைத் தகர்த்து வாசித்தார்கள். அக்கடிதத்தில் "வியாபாரத்தின் பொருட்டு ஷாம் இராஜ்ஜியத்திற்குப் போயிருக்கும் நமது சத்துருக்களாகிய மக்கமா நகரத்து காபிர்கள் அங்கிருந்து மீண்டு வரும் வரையும் நீங்கள் ஒன்பது பேர்களும் பத்னுன் னக்லாவிலேயே தங்கியிருந்து அவர்கள் வரும் போது வழிமறித்து அடர்ந்து தாக்கி, அவர்கள் கொண்டு வரும் திரவியங்களையும் ஒட்டகங்களையும் குதிரைகளையும் எருதுகளையும் கவர்ந்துகொண்டு மதீனமா நகரம் வந்து சேரவேண்டும்" என்று எழுதியிருந்தது. இப்படி எழுதியிருந்ததை வாசித்து அப்துல்லாவும், மற்ற எட்டு வீரர்களும் ஆனந்தங்கொண்டு, உடனே அந்த வனத்தை விட்டு எழுந்து பத்னுன் னக்லாவுக்கு வந்தார்கள். மேற்படி பத்னுன் னக்லா மக்கமா நகரத்திற்கும், அதன் அயல் நகரமாகிய தாயிபுக்கும் மத்தியிலுள்ள ஒரு சிற்றூர். அந்த பத்னுன் னக்லாவில் இவர்கள் ஒன்பது ரணவீரர்களும் ஒருஸ்தானத்தில் கூடாரமிட்டு இருந்துகொண்டு, ஷாம் இராஜ்ஜியத்திலிருந்து வரும் பாதையில் ஒற்றர்களை நியமித்து வைத்து, பகைவர் வருவதை எதிர்நோக்கி யிருந்தார்கள்.

இவர்கள் இவ்வாறு வழிபார்த்துக் கொண்டு பலநாள் வரையும் காத்திருந்தார்கள். இப்படி யிருக்கையில், ஷாம் இராஜ்ஜியஞ் சென்ற மக்கவாசிகள் அங்கிருந்து திரும்பி, தாயிபு என்னும் நகரத்திற்குஇப்புறம் வந்து விட்டார்களென்னும் செய்தி அப்துல்லாவுக்கு எட்டியது. ஆனதால், உடனே அப்துல்லாவும் எட்டு ரணவீரர்களும் யுத்த சன்னதராய்த் தங்கள் குதிரைகளிலேறி எதிர்சென்று மறித்தார்கள். மக்கமா நகரத்து பகைவர்களாகிய அந்த வர்த்தகக் கூட்டத்துக்குத் தலைவர்களாக நான்கு பேர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். அந்நால்வரில் அம்று என்பவனே பிரதானமான தலைவன். அப்துல்லாவும் எண்மரும் குறுக்கிட்டுத் தமக்கு பொல்லாங்காக வழிமடக்கிக் கொண்டதை மேற்படி அம்று கண்டு, கொண்டுவரப்

பட்ட சொத்துக்களை ஒருபுறத்திலாக்கி, தன்னைத் தொடர்ந்துவரும் காபிர்களுக்கு உற்சாக மூட்டி எதிர்நின்று சமர்செய்யும்படி தூண்டி விட்டு, தானும் உக்கிரத்துடன் எதிர்த்தான். அதனால் இருதரத்தாரும் ஒருவரோடொருவர் கைகலந்து கடுஞ்சமர் செய்தார்கள். பகைவர்கள் பெருந் திரளாயிருந்தும், அப்துல்லாவும் எட்டு அஸ்ஹாபிகளும் மனோ தைரியத்துடன் சற்றும் இளைக்காமல் நின்று தாக்கினார்கள் வாளாலும், வேலாலும், அஸ்திரத்தாலும், தண்டாலும், இன்னும் வகை வகையான ஆயுதங்களாலும் ஒருவருக்கொருவர் உக்கிரத்துடன் போரிட்டார்கள். தம்மை வழிமறித்தவர்கள் சொற்பதொகையானதால் காபிர்களுக்கு உற்சாகம் பிறந்து, சற்று நேரம் வரையும் எதிர்த்து நின்றே சாதித்தார்கள்.

இவ்விதம் ஒருவரோடொருவர் கலந்து நின்று போர் செய்யும் போது, சத்துருக்களின் தலைவனாகிய அம்று என்பவன் ஆக்கிரமித்துக் குதிரையைச்செலுத்தி வந்து அப்துல்லாவை எதிர்த்தான். அப்போது அப்துல்லா சினங்கொண்டு தமது குதிரையைத் தூண்டி அம்று மேல் விடுத்து, கண்களில் அக்கினிப் பொறி சிந்த வெகுண்டு அவனும், அவன் ஏறியிருக்கும் குதிரையும் இரண்டிரண்டாய்ப் பிளக்கும் வண்ணம் தமது வாளால் வெட்டினார்கள். அவ்வெட்டு மேற்படி அம்று உடைய சிரசிற்பட்டு இருபிளவாய் நிலத்திற் சாய்ந்தது மன்றி, அவன் குதிரையும் இரண்டு பதியாய்ச் சரிந்தது. அம்று கொல்லப்பட்டபோது மற்ற தலைவர்கள் மூவரில் இருவர் சினந்து குதிரைகளைச் செலுத்திக் கொண்டு வந்து அப்துல்லாவை எதிர்த்தார்கள். பகைவரின் தலைவர்களாகிய இருவர் வந்து எதிர்த்த மாத்திரத்தில், அதை அஸ்ஹாபிகளில் இருவர் கண்டு தங்கள் குதிரைகளை நடத்திக் கொண்டு வந்து மேற்படி இரு தலைவர்களையும் எதிர்த்து, அவ்விருவரையும் குதிரையிலிருந்து கீழேதள்ளித் தாங்களும் கீழிறங்கி ஒருவருக்கொருவராய் நின்று மல்யுத்தஞ் செய்தார்கள். ஆயுதப் பிரயோகமின்றி மல்பிடித்ததால் உடல் வலியற்ற அவ்விரு பகைவரும் தளர்ந்து போனார்கள். அதனால், முஸ்லிம்கள் இருவரும் அவ்விருவரையும் தரையில் வீழ்த்திக் கயிறு கொண்டு இறுகப் பிணித்தார்கள். தன்னையொத்த தலைவர் இருவரும் கட்டப்படுவதை மீந்திருக்கும் மற்றொரு தலைவன் கண்டு, திகில்பிடித்து வெருண்டு புறங்காட்டி ஓடினான்.

பிரதானமான தலைவனாகிய அம்று என்பவன் கொலையுண்டு, வேறிரண்டு தலைவர்கள் சிறையுண்டு, மற்றொரு தலைவனும் வெருக்கொண்டு ஓடிவிட்டதால், இக்காட்சியை மற்ற காபிர்கள் கண்டு அஞ்சிப் பலதிசைகளிலும் தெறிகெட்டுச் சிதறி முறிந்தோடினார்கள்.

சமுத்திரம் போல பரந்து வந்த பகைவர்கள், முஸ்லிம்களாகிய ஒன்பது பேர்களோடு எதிர்த்து நின்று சாதிக்க ஆற்றமாட்டாதவர்களாய், படுகளத்தில் அநேகரை மடியக் கொடுத்துவிட்டு கொண்டுவந்த திரவியங்கள், வாகனங்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டு ஓடிவிட்டபடியால், மேற்படி சொத்துக்களைத்தும் முஸ்லிம்கள் கைவசமாயின. பொன்னாணயங்க ளடங்கிய பெட்டிகள், ஷாம் இராஜ்ஜியத்து விலையேறப் பெற்ற சரக்கு பொதிகள், ஒட்டகங்கள், குதிரைகள், எருதுகள், கோவேறுக் கழுதைகள் அனைத்தையும், அப்துல்லாவும் ஏனையரும் தங்கள் வசமாக்கி கொண்டு, சிறைப்பட்ட இருவரையும் அழைத்துக்கொண்டு பத்னுன் னக்லாவை விட்டுப் புறப்பட்டார்கள்.

அப்துல்லா தமது வீரர்களோடு பத்னுன் னக்லாவைவிட்டு விரைந்து நடந்து, மதீனமா நகரம் வந்து சேர்ந்து, பகைவர்களிடம் கொண்ட சொத்துகளையெல்லாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்திற் சேர்த்து, நடந்த வர்த்தமானங்களையுஞ் சொன்னார்கள். அதனால், நபிநாயகமவர்கள் மிகவும் சந்தோஷ மடைந்தார்கள். மேற்படி கொள்ளைப் பொருள்களை இனி காபிர்களைத் தாக்கிச் சூறையாடுவதற்கு வசதியாகாத காலங்களில் செலவு செய்வதற்காக வேண்டி பொக்கிஷத்திற் சேமித்து வைக்கும்படி, நபிநாயகம்(ஸல்) அவர்கள் கட்டளை பண்ணினார்கள். சில நாட்களுக்குப்பின் அப்பொருள்களை அஸ்ஹாபிகளுக்குப் பாகித்துக் கொடுக்கும்படி அல்லாஹு தஆலாவின் கட்டளை வந்தது. (வேதவாக்கியம் இறங்கிற்று.) அதனால் உடனே பகிர்ந்து கொடுத்தார்கள். சில தினங்களுக்குப் பின், சிறைப்பட்ட இருதலைவர்களுக்கும் பிரதியாக்கிரயங்கொடுத்து அவ்விருவரையும் மக்கமா நகரத்துக் காபிர்கள் மீட்டுக் கொண்டார்கள்.

69-வது அத்தியாயம்

பதுறு யுத்தம்.

கலி சந்தவிருத்தம்.

புதுமையி னற்புத மிகவுநடத்திய புகழினை யுற்றிரசூல்
சதுமறை யொப்பிய பிறவியர் பற்பலர் தமைநவி லற்கரிதார்
குதிரைகள் பொற்புள விருதுக ளெட்டிசை குவிதர நட்பொடுபோய்
பதுரத னிற்பெரு மமரநடத்திய வகையை யுரைத்திடுவோம்.

இதன் பொருள்.

ஆச்சரியங்களுள்ளவையான மிகுந்த காரணங்களைச் செய்வித்த கீர்த்தி பொருந்தியிருக்கும் றசூல் நாயகம் முஹம்மது(ஸல்) தங்களுக்குண்டாகிய நான்காம் வேதமான புர்க்கான் வேதத்தை யொப்புக்கொண்ட, நமது பிறவிகளான பல அஸ்ஹாபிமார்களும் மதிக்க அரிதான நடையையுடைய குதிரைகளும், குடை கொடி முதலிய விருதுகளும் நெருங்க, விருப்பத்தோடும் போய் பத்ரு என்று பேர் சொல்லப்படும் தலத்திலே பெரிதான யுத்த நடத்திய விபரத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நெறியொடும் புறுக்கா னன்னேர் நிகழுமவ் வருடந்தன்னிற்
பெறுகதி றமலா னென்னப் பெருகிய நோன்பு தன்னை
யுறுதிகொண் டவர்க்குஞ் செவ்வியுறப்பறு லாக்கினே னென்
றிறையவ னருளி னுயத் திறங்கிய தெவர்க்கு மன்றே

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், இடைக்கிடை பகைவராகிய காபிர்களின் அதிக்கிரமத்தை யொடுக்கி, அவர்கள் சொத்துகளையும் சூறையாடுவித்து, தங்கள் தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை நாளுக்குநாள் அதிகமாகப் பல்குவித்துக் கொண்டு வந்தார்கள். சத்தியவேதமாகிய குர்ஆனும் பரிசுத்த மார்க்கமாகிய தீனும் சூரியகிரணம்போல எங்கும் வியாபகமாய் வரும் காலமான ஹிஜ்றத் இரண்டாம் வருஷத்தில், பாவநாசஞ்செய்யும் மகிமைபெற்ற றமலான் மாதம் சமீபத்தில் அடுத்தது.

அப்போது, இந்த றமலான் மாதத்து முப்பது தினத்திலும் நீங்கள் உபவாச விரதம் நோற்கவேண்டும் என்றும், இந்த ஆண்டு தொடங்கி இனி வருஷந்தோறும் றமலான் மாதத்து முப்பது தினமும் உபவாச விரதம் நோற்பதை உங்கள் ஒவ்வொருவர்பேரிலும் பர்லாக்கினேன் என்றும் அல்லாஹுதஆலா, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வேதவாக்கியத்தை இறக்கிக் கட்டளை பண்ணினான். அடுத்துப் பிறந்த அந்த றமலான் மாதத்து முதல் தினத்திலேயே நபிநாயகம் (ஸல்) அவர்களும், முஸ்லிம்களுள் எல்லாரும் உபவாசம் நோற்கத் தொடங்கினார்கள். நோன்பு இருப்பின் ஆரம்பவேளையும் இப்தார்செய்யும் வேளையும் இன்னவையென்று நிபந்தனை செய்யப் பட்டது. அவ்வாறே நோன்பு நோற்றுவந்தார்கள். அந்த றமலான் மாதத்துப் பதினேழாந்தேதி வந்தது. அன்று வெள்ளிக்கிழமையானதால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் குத்பா ஓதி, தொழுது தீர்ந்த பின் பள்ளிவாசலிலிருந்து அஸ்ஹாபிகளுக்கு நல்லறிவுகளைப் போதித்துக் கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மார்க்க விஷயங்களைப் பற்றிப் பிரசங்கஞ் செய்து கொண்டிருக்கையில், அந்த மேலான திவ்விய சபையில், ஒற்றர்களிலொருவராகிய பஸ்பசா என்பவர், நடையால் வருந்தி உடலில் வெயர்வை யொழுக விரைந்துவந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சலாம்பகர்ந்து நின்றார். இவ்வாறு தளர்ந்து வந்து அயர்வோடு நிற்கும் அவரை நபிநாயகம் (ஸல்) அவர்கள் நோக்கி "பஸ்பசா! நீர் ஏன் இவ்வாறு அயர்ந்துவந்து நிற்கிறீர்? காபிர்களின் சங்கதி ஏதும் உண்டோ?" என்று வினவினார்கள். அப்போது அவர், நபிநாயகம் (ஸல்) அவர்களைநோக்கிப் பணிவோடு கீழ்வருமாறு சொல்லுகின்றார்:—

"யாறஸூலல்லாஹ்! நமக்கு இதுபரியந்தம் வாய்த்திராத நல்ல சமயம் ஒன்று இப்போது வந்து வாய்த்திருக்கின்றது. அதாவது நமது விரோதிகளாகிய மக்கமா நகரத்துப் பிரபுக்களின் திரண்ட முதலும் ஷாம் இராஜ்ஜியத்தில் விற்கத்தக்க மேலான சரக்குகளும் சில நாட்களுக்குமுன் மக்கமா நகரத்திலிருந்து ஷாம் இராஜ்ஜியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன. அந்தச் சங்கதி எனக்கு நன்றாய்த் தெரியும். அவ்வாறு அங்கே சென்ற சரக்குகளெல்லாம் நல்ல

இலாபத்திற்கு விலைப்பட்டன. விலைப்பட்டபின் அந்த முதலுக்கும் கொண்டு போன ரொக்கத்திற்கும், அவ்விராஜ்ஜியத்தி லுள்ள விலைபெறுஞ் சரக்குகளைக் கொண்டு, குதிரைகளிலும் ஒட்டகங்களிலும், கோவேறுக் கழுதைகளிலும், எருதுகளிலும் பொதிபொதியா யேற்றி, அங்கிருந்து மீண்டு மக்கமா நகரத்திற்கு வருவதாக நான் கேள்வியுற்று, அதன் விஷயத்தில் பிரயாசை கொண்டு அறிந்தேன். மேற்படி வியாபாரப் பொருள்கள் எல்லாவற்றையும் அதிக காவற்பாட்டோடு வைத்துக் கொண்டு, மக்கமா நகரத்து கறுபுவுடைய குமாரன் அபாஸுபியான் என்பவனும், நாற்பது குறைஷி வீரர்களும் வருகிறார்கள். இவர்கள் ஷாம் இராஜ்ஜியத்து எல்லையைக் கடந்து அரபு இராஜ்ஜியத்து எல்லைக்குள் வந்து விட்டார்கள். இச்சமயத்தில் நாம் எதிர்சென்று மறித்து, அத்துஷ்டர்களை சங்கரிப்போமானால், திரண்ட சொத்துக்கள் நமக்குக் கிடைப்பது மன்றி, மக்கமா நகரத்தாருடைய பலமுங்குன்றும். இது நல்ல சமயம். இதுபோல் இனியொருகாலத்தில் திரண்ட சொத்துக்கள் வலிய வந்து வாய்ப்பது அசாத்தியம். இச் சமசாரத்தை தேவரீருடைய சமூகத்தில் தெரியப்படுவதற்காகவே நான் அதிகமான தூரத்தொலைவி லிருந்து, வெயிலிலடியுண்டு இளைத்து வந்தேன்" என்றார்.

ஒற்றர்களில் சிறந்த தந்திரமிக்க பஸ்பசா என்பவர் சொன்ன இவ்வரலாற்றைக் கேட்டபோது நபிநாயகம்(ஸல்) அவர்கள் இதயத்தில் சந்தோஷம் பிறந்தது. காபிர்களாகிய சத்துருக்களின் ஆஸ்திகள் முழுவதையும் அல்லாஹுதஆலா, முஸ்லிம்களுக்கு உரித்தாக்கி யிருப்பதுமன்றி, இடைக்கிடை அவற்றை வலியவரும்படிக்கும் கிருபை செய்வதற்காக வேண்டி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சி கூர்ந்து, தங்கள் அருகர் நால்வரையும் நோக்கி "இந்த க்ஷணமே நமது அஸ்ஹாபிகளில் அநேகர் யுத்த சன்னத்தராய்ப் புறப்படவேண்டும். அதற்காக நீங்கள் உத்தரவு கொடுத்து, அனைவரையும் அழையுங்கள்" என்று ஆக்ஞை செய்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஆக்ஞைப்படிக்குச் சேனை புறப்படும்படி கட்டளை பிறந்தது.

இராணுவம் எழும்படி உத்தரவு பிறந்தவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமாநகரத்தையும் அடுத்த கிராமங்களையும்

பரிபாலனஞ் செய்வதற்காகத் தங்களுக்குப் பிரதிநிதியா யிருக்கும்படி அபூலுபானத் (றலி) யை நியமகஞ் செய்துவிட்டு, முஸ்லிம்களுக்கு இமாமாய் நின்று தொழவும் பிரதிதினமும் மார்க்க விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்துக் கொண்டிருக்கவும் கல்வியிற் சிறந்த நிபுணராகிய இபுனு உம்மிமக்தூம் (றலி) யை நியமித்தார்கள் இராஜ்ஜிய பரிபாலனத்திற்கும் மார்க்க விஷயத்திற்கான போதனைப் பிரசங்கங்களுக்கும் இரண்டு தலைவர்களை நியமித்துத் தீர்ந்த பிறகு, அஸ்ஹாபிகளாகிய தீரமமைந்த சேனை புறப்பட்டது.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வீரவெண் மடங்க லென்னும் வறலபூ பக்கர் வேக
மாருத மடங்கத் தாவும் வயப்பரி யுமறுஞ் சேர்ந்த
கூருயி ருங்குஞ் செங்கைக் கோவுது மானும் வெற்றித்
தார்கெழும் வடிவா ளேந்துங் தடப்புய அலியும் வந்தார்.

இயன்மறை தெரிமு ஹாஜிரீன்களெண் பத்து மூன்று
பெயருமன்சாரி மாரிற் பேர்பெறுந் தலைமை மிக்கோ
ருயரிரு நூற்று மூப்பத் தொருபெய ரவரும் கைவா
ளயருறா வெற்றி வீரத்தவருட னீண்டினரால்.

வசனம்.

முந்தி நபிநாயகம் (ஸல்) அவர்களின் அருகர்களாகிய அபூபக்கர் சித்தீக் இபுனு அபீகுகாபா (றலி) அவர்களும், உமர் இபுனு கத்தாப் (றலி) அவர்களும், அலி இபுனு அபூதாலிபு (றலி) அவர்களும், சருவாயுதசன்னர்களாய் தங்கள் தங்கள் மனைவிமக்களுக்குப் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு அசுவங்களிலேறிப் புறப்பட்டார்கள். அன்றியும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆக்ஞையின்படி அப்போது யுத்தசன்னத்தராய்ப் புறப்பட்ட அஸ்ஹாபிகள் முஹாஜிரீன்களில் எண்பத்து மூன்று வீரர்களும், அன்சாரீன்களில் நூற்று முப்பத்தொன்று வீரர்களுமேயாவர். மக்கமாநகரத்தாரிலும், மதீனமாநகரத்தாரிலும் இரு நூற்றுப் பதினான்கு அஸ்ஹாபிகளும் அருகர் நால்வரும், நபிநாயகம் (ஸல்) அவர்களும் பகைவர்மேல் அடர்ந்து யுத்தஞ்செய்வதற்காகத் தயாரானார்கள்.

மேற்கண்ட இருவகை சேனைவீரர்களும் அஸ்திரம், சஸ்திரம் என்னும் இருபகுதியாய், பலவகையாய் வழங்கும் எல்லா ஆயுதங்களும் அணிந்து, யுத்தசன்னத்தர்களாய், தம்தம் குதிரைகளிலேறித் தயாரானவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்களும் தங்கள் ஆயுதங்களையணிய ஆரம்பித்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் உடைகளை யுடுத்தினபின், போருக்காகத் தலைச்சீருவணிந்து, இடைக்கச்சை இறுக்கி, குற்றுடைவாள் செருகி, சூரியனை யொத்து ஜொலிக்கும் கேடயம் தரித்து, பிறைபோலும் வடிவுடைய வில்லைத் தோளில் மாட்டி, அம்பறாத்தூணியும் ஒரு புறந்தரித்து, மரவயிரத்தினாலான தண்டத்தை இடதுகரத்திற் பிடித்து, முன்வியாபாரநிமித்தம் ஷாம் இராஜ்ஜியஞ் செல்லப் புறப்படும்போது உலக மாதாவாகிய கதீஜா (றலி) அவர்கள் வெகுமானமாகக் கொடுத்த வேலாயுதத்தை வலது கரத்திற் பிடித்து, பகைவருக்கு இடிபோன்று மனோவேகத்திலும் அதிவேகத்தோடு செல்லும் சிறந்த பஞ்சகல்யாணிப் புரவியின்மீது பிஸ்மில்லா சொல்லி ஏறினார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் குதிரை மேலேறினவுடன் அவர்களுக்கு முன் உக்காபு என்னும் வெள்ளைத் துவஜத்தை விரித்து, மிஸ்அபு (றலி) பிடித்து நின்றார்; படை முரசுகள் இடிபோன்று முழங்கின; தக்பீறும், சலவாத்தும் மிக மும்முரமாய்க் குமுறின; ஆயுதங்கள் சூரியகிரணத்தினால் மின்னையொத்துப் பிரகாசித்தன. வெற்றிக் குறியாக அஸ்ஹாபிகள் ஏறியிருக்கும் குதிரைகளெல்லாம் கனைத்தன. குடைகள், கொடிகள், ஆலவட்டங்கள், வெண்சாமரைகள் கணக்கின்றி நெருங்கின. மதீனமாநகரத்தாராகிய அன்சாரீன்கள் ஒரு நூற்று முப்பத்தொரு வீரர்களுக்கும் முன்னால் வெற்றித் துவஜமொன்று பிடிக்கப் பட்டது. ஆண்சிங்கங்களுக்கு சமானமான ரண வீரர்களாகிய அஸ்ஹாபிகளனைவரும் சந்தோஷக்குறியுடன் ஆர்த்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் மிஸ்அபு கையிற் பிடித்திருக்கும் உக்காபு என்னும் வெற்றித் துவஜம் இலங்கவும், அருகர் நால்வரும் சேனாதிபதிகளாய் அருகில் நெருங்கி வரவும், முஹாஜிரீன் அன்ஸாரீன்கள் என்னும் இருவகை ரணவீரர்கள் பின்வரவும் படைமுரசு முழங்கவும் மதீனமாநகரத்தை விட்டு வெளிப்

பட்டு நடந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனாவெள்ளம் பரந்து செல்லும் போது, யுத்தவீரர்கள் ஏறியிருக்கும் குதிரைகளின் காற் குளம்பினா லெழும் புழுதிகள் எங்கும் பரந்து சூரிய கிரணத்தை மறைத்து விட்டன. சேனாவிருதுகள் பல ஒன்றோ டொன்று நெருங்கின. படை முரசுகளின் ஒலியையும், குதிரைகள் கனைக்கும் ஓசையையும், தக்பீருடைய ஒலிமேற்கொண்டு பெருந்தொனியாகத் தொனித்தது. இவ்வித மேன்மையோடு நபிநாயகம் (ஸல்) அவர்களின் தளம் மாற்றாரைநோக்கிச் சென்றது.

இவ்வாறு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கருமேகக் குடை நிழலில் குதிரை செல்லத் தங்கள் சேனையை நடத்திக்கொண்டு குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலத்தையும், அங்கங்கே எதிர்படும் சிற்றூர்களையும், நிர்மானுஷியமான வனங்களையும் குறுகி நடந்து, சில தினங்கள் சென்ற பின்னர் வளம் பொருந்திய ஒரு மலைச்சாரலில் பாளையமிட்டார்கள். உன்னதமான மலைப்பக்கத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாளையமிறங்கி, கூடாரங்களிட்டு, இலாயங்க ளமைத்து, ஆண்சிங்கக்கூட்டங்கள் வந்திருந்தாற் போல தங்கியிருந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இராணுவத்தோடு மதீனமாநகரத்தை விட்டு புறப்பட்டு இன்னமலையடிவாரத்தில் பாளையமிட்டிருக்கிறார்களென்னும் செய்தி, ஷாம் இராஜ்ஜியத்திலிருந்து வரும் அபாசுபியானுடைய காதில் விழுந்தது. அதனால் அவன் மனங்கலங்கி, தன்னோடுவரும் நாற்பது பேர்களையும், வியாபாரப் பொருள்களையும் காக்கவேண்டு மென்று கருதி, தான் வரும் வழியின் பக்கத்திலுள்ள ஒரு அடவியில் இறங்கினான்.

அபாசுபியான் அடவியில் விடுதியிட்டு, தான் கொண்டுவரும் பட்டு வஸ்திரப்பொதிகள், நாணயப்பெட்டிகள் அனைத்தையும் ஒரு புறத்தில் சேர்த்து, பராக்கிரமமுள்ள சிலரைக் காவலுக்கு நியமித்துக்கொண்டு, அந்த க்ஷணமே ஒரு கடிதமெழுதி அபூஜஹல் முதலான குறைஷித் தலைவர்கள்வசம் கொடுக்கும்படி ஒரு ஒற்றன் கையிற் கொடுத்து மக்கமாநகரத்திற்கு அனுப்பினான்

மேற்படி கடிதத்தை வாங்கின ஒற்றன், அந்த அடவியிலிருந்து புறப்பட்டு மலை, வனம், வனாந்தரமடங்கலையும் அதிக விரைவாய் நடந்து நடந்து, மக்கமாநகரம் போய்ச் சேர்ந்து

கடிதத்தைக் கொடுத்தான். அபாசுபியான் வரவிட்ட கடிதத்தை அந்தத் தலைவர்கள் வாங்கிக் கொண்டு பெருஞ்சபை யொன்று கூடினார்கள். அந்த சபையில் அபூஜஹல் முதலான குறைஷித் தலைவர்கள் எல்லாரும் கூடியிருந்தார்கள். அப்போது மேற்படி கடிதம் வாசிக்கப்பட்டது.

அபாசுபியான் எழுதியனுப்பின கடிதம் இது:—

“நலம்பொருந்திய மக்கமாநகரத்துத் தலைவர்கள் அனைவருக்கும் கறுப்பு உடையமகன் அபாசுபியான் வந்தனத்தோடு எழுதித் தெரிவிப்பதாவது:—

நானும் நாற்பதுபேர்களும் ஷாம் இராஜ்ஜியம் போய்ச் சேர்ந்து, கொண்டுபோன சரக்குகள் எல்லாவற்றையும் நல்ல இலாபத்துக்கு விற்று, நமது தேசத்துக்கு ஆகுமான பலவித சரக்குகளையும் வாங்கிக்கொண்டு அங்கிருந்து திரும்பினோம். நாங்கள் இவ்விதம் திரண்ட திரவியங்களோடும், சரக்குகளோடும், சாமான்களோடும் வருவதை, மதீனமாநகரத்தி லிருக்கும் நமது பகைவனாகிய முஹம்மது கேள்வியுற்று, அநேக சேனாவீரர்களோடு புறப்பட்டு வந்து, நாங்கள் வரும் பாதையை மறித்துக் கொண்டு பாளைய மிட்டிருக்கிறான். இந்தச் செய்தியை நான் அறிந்த மாத்திரத்தில் எதிர் நோக்கிவர அஞ்சி, மேற்படி நாற்பது பேர்களோடு சரக்குகளையும் ஒரு புறத்தில் அமைத்துக்கொண்டு ஒரு அடவியில் விடுதி விட்டிருக்கின்றேன். இக்கடிதம் கண்ட க்ஷணமே நீங்கள் அனைவரும் திரண்டு, மக்கமாநகரத்தி லிருக்கும் நமது ஜாதியார்களைத் திரள் திரளாகக் கூட்டிப் பெருஞ்சேனை யொன்று தயார் செய்துகொண்டு புறப்பட்டு வரவேண்டும். அவ்வாறு சேனாவீரர்களோடு வந்து, எங்களை வழிமறித்துப்பறிக்க வந்திருக்கும் முஹம்மதையும், அவன் வீரர்களையும் கொன்று உதவி செய்யவேண்டும். அப்படி நீங்கள் செய்யா விட்டால், எதிரி என்னையும் என்னோடிருக்கும் நாற்பது பேர்களையும் சங்கரித்து, தேடரிய திரவியங்கள் அனைத்தையும் கைக்கொண்டு, மதீனமாநகரத்திற் போய் உல்லாசமாய் சுகிப்பான். முஹம்மது கட்டாயம் அப்படிச் செய்யத்தான் இங்கே வந்திருக்கிறான். நேரிட்ட பயங்கரமான ஆபத்திலிருந்து எங்களை நீங்கள் காப்பாற்றி விட்டால் மேற்சொன்ன வண்ணம் முஹம்மது செய்வதில் சந்தேக

மில்லை. இதைப்பற்றி நான் உங்களுக்கு முந்தியே எச்சரிக்கின்றேன். இவ்விஷயத்தில் நீங்கள் கட்டாயம் பிரயாசையெடுத்து எங்களுக்கு வந்திருக்கும் வில்லங்கமான பிரதிபந்தத்தை ஒழிப்பது உங்கள் பேரில் கடன். இப்படிக்கு. அபாஸுபியானிபுனு ஹறுபு."

இக்கடிதம் வாசிக்கப்பட்டுத் தீர்ந்தவுடன், அச்சபையிற் கூடியிருக்கும் தலைவர்களனைவரும் விழுந்து விழுந்து கலகலவென்று சிரித்து, ஒருவரோடொருவர் "நமது கண் காணப்பிறந்த எளிய முஹம்மது இத்தனை தூரம் பலத்து விட்டானென்றால், இனி பேசுவதென்ன! அவன் எந்த காலத்திலும் வனங்களில் பதுங்கியிருந்து நம்மவர்களின் திரவியங்களைக் கவர்ந்து சென்று வாழ்ந்திருக்கும்படி நாமே அவனுக்கு இடம் கொடுத்து விட்டோம். அவ்வாறு அவன் செய்யத் துணிந்து தலைப்பட்ட ஆரம்பத்திலேயே நாம் கண்டித்திருந்தோமானால், இத்தனை தூரம் அவன் தலையெடுத்திருக்க மாட்டான். நம் ஊரார் எப்போதும் வியாபாரத்தின் நிமித்தம் போய் வருவதற்கும் இடையூறுகள் உண்டாகாது. நாம் அதில் கவனிப்பின்றி யிருந்ததாலேதான், அவனுக்கு வழிபறியே தொழிலாயிற்று. அப்படி செய்து செய்து ருசியை கைகண்டவன். ஆகையால், இப்போதும் சேனையோடு புறப்பட்டு வந்து பாதையைக் கட்டிக் கொண்டிருக்கின்றான். இப்போதாவது நாம் திரண்டு சென்று அவனைக் கொன்று தொலைக்காவிட்டால், இனிமேல் அவன் தன் பலத்தையும் கீர்த்தியையும் ஸ்தாபித்துவிடுவான். நமது ஜாதியாருக்கும், திரவியத்திற்கும் ஹானியாய் வந்து குறுக்கிட்டு வழிமடக்கி நிற்கும் முஹம்மதைக் கொன்று, நம்மவர்களையும், நம்மவர் சொத்துகளையும் காப்பாற்றாமல் நாம் இருந்து விட்டால், ஆயுதஞ் சுமந்த நமது கைகளின் பலம் என்ன பலம்? புஜங்களின் வீரம் என்ன வீரம்? ஜாதி மானம் என்ன மானம்? நமது தலைமைதான் என்ன தலைமை? அனைவரும் சுதேசாபிமானம், குலாபிமானம், ஐக்கியம் அனைத்தும் இழந்த கைமைக்குச் சமானமாவோ மல்லவா?" என்று பேசிக் கொண்டார்கள்.

மேற்படி தலைவர்கள் அனைவரும் ஒருவரோடொருவர் இவ்வாறு பேசிக்கொண்ட போது, அவர்களுக்குமுன் உட்கார்ந்திருக்கும் அபூஜஹல் என்னும் சண்டாளன் மனத்துள் சிரித்துக் கொண்டு, விழிகளில் அக்கினி சிந்த வெகுண்டு, அத்தலைவர்களுக்கு ரோஷம்

உண்டாகும் வண்ணம் தன் வாயைத் திறந்து, "ஆம்! ஆம்!! நீங்கள் நன்றாய்ச் சொன்னீர்கள். முஹம்மது என்பவன் பிறந்து அக்கிரமஞ் செய்யத் தலைப்பட்ட அந்நாள் தொடுத்து இது பரியந்தம், நீங்கள் எல்லாரும் அவன் விஷயத்தில் வீண்பேச்சுப் பேசிக் காலத்தைக் கழித்தீர்களே யல்லாமல், ஒரு கருமத்தையாவது செய்து நிறைவேற்றினது உண்டா? நமக்கெல்லாம் ஆண்மை என்பது அணுப் பிரமாணமாவது இருக்கின்றதா? நம்மை அந்நிய இராஜ்ஜியத்தார்கள் ஆண்மக்களென்றுதான் எண்ணி யிருக்கின்றார்களென நீங்கள் மனதார நம்புகிறீர்களோ? ஏன் விருதாவில் வாய் பிதற்றுகிறீர்கள்? வெறுந்தரை தடவாதீர்கள்; சும்மா வாய்களை மூடிக்கொண்டிருங்கள்" என்றான்.

அபூஜஹல் இவ்விதம் வெட்கம் வரச்சொன்னபோது, இச்சொல்லைக் கேட்ட தலைவர்களனைவரும் சினங்கொண்டு, கண்கள் சிவக்க உதடுகளை மடக்கிக் கடித்து, கைகளைப் பிசைந்து, புஜங்களை குலுக்கி ஆர்ப்பரித்து, எல்லாரும் வாய்களைத் திறந்து ஒரேமொழியாக, "போனவை யெல்லாம் போகட்டும். இப்போது, வழிபறிக்க நாடிவந்து பாதையை மறித்துக் கொண்டிருக்கும் முஹம்மதுடைய சிரசைத் தரித்து, அபாசுபியானுக்கும், நாற்பது பேர்களுக்கும் நேரிட்டிருக்கும் விபத்தை விலக்காமல் விடுவோமானால், நாம் அனைவரும் நமது சுவாமியாகிய ஹுபல் என்னும் தெய்வத்தை வெறுத்துப் பாதாள நரகத்தில் விழும் பெரும் பாவிகளாகக் கடவோம்" என்று சபதம் மிட்டார்கள். தன்னையொத்த தலைவர்களனைவரும் சினங்கொண்டு இவ்வாறு சபதமிட்டபோது, அதைக் கேட்ட அபூஜஹல் என்னும் பாதகனுக்கு உற்சாக முண்டாயிற்று. அதனால் அவனும் எழுந்து நின்று "இதை நான் எனக்கு நேரிட்ட மானபங்கம் என்று எண்ணி பழிவாங்கியே தீருவேன்" என சபதம் கூறினான்.

இந்தத் துஷ்டர்களின் வாக்கில் இவ்வித சபதங்கள் ஒரு போதும் பிறந்ததேயில்லை. இது அவர்கள் மாண்டுபோகுங் காலமானபடியால் இப்போது இவ்வித கேவலமான சபதங்கள் பிறந்தன. இவ்விதம் எல்லாரும் சபதமிட்டுத் தீர்ந்தபின், அபாஸுபியானைக் காப்பாற்றும் பொருட்டு நபி நாயகத்தோடு போராடுவதற்காக சேனைத் திரட்ட எத்தனித்து, படை முரசடிப் போர்களை

யழைத்து, தெருக்கள் தோறும் முரசடித்துப்போர் வீரர்களையழைக்கும்படி கட்டளை பண்ணினார்கள்.

முரசடிப்போர் கட்டளைப்படி காரியத்தைச் சொல்லி தெருக்கள் தோறும் முரசடித்தனர். மேற்படி முரசின் ஓசையைக் கேட்டவுடன் மக்கமா நகரத்து வீரர்களனைவரும் தத்தம் மனைவி, மக்கள், பந்துஜனங்கள் எல்லாருக்கும் பிரயாணம் பகர்ந்து விடைப்பெற்றுக் கொண்டு, போர்க்கோலத்துடன் மனைகளைவிட்டு வெளிப்பட்டு கஃபத்துல்லா என்னும் தேவாலயத்தில் வந்து கூடினார்கள். யுத்த வீரர்கள் அனைவரும்வந்து திரண்டு கூடினபின் உத்பா, உமையா, ஒலீது, ஷைபா, உமறு, உக்பா என்னும் தலைவர் ஒவ்வொருவரும் போர்க்கோலம் பூண்டு, தம் தம் குதிரைகளில் ஏறிக்கொண்டு வந்தார்கள். இவர்களும், இவர்களையொத்த இன்னுமுள்ள மற்ற தலைவர்களும் வந்து சேர்ந்த பிறகு, அபூஜஹல் என்னும் துஷ்டன் யுத்த சன்னத்தனாய் வந்து சேர்ந்தான்.

அப்போது யுத்தத்திற்குத் தயாராய் வந்த சேனா வீரர்களில் அபூஜஹலுடன் எண்பது சிற்றரசர்களும், மக்கமா நகரத்து குறைஷித் தலைவர்களில் ஆயிரம் குதிரை வீரர்களும், அநேக காலாட்களும் இருந்தார்கள். இவர்களன்றி, அடுத்த கிராமங்களிலும், சிற்றூர்களிலும் வசிக்கும் அறபிக் காபிர்கள் கணக்கில்லாமல் வந்து கூடினார்கள். ஆகையால், காபிர்கள் சேனை பெருந்திரளாயிருந்தது. அந்த சேனாவீரர் ஒவ்வொருவரும் உன்னதமான பர்வதங்களையும் பொடிசெய்து, வடவைத்தீயையும் அவித்து, சமுத்திரத்தையும் கலக்கிவிடத் துணியும் சக்தியோடு, உயிரைக் கொடுத்துக் கீர்த்தியை ஸ்தாபிக்க வேண்டுமென்று கருதும் திடச்சித்தமுமுள்ள கொடிய சண்டாளர்கள். அவர்கள் ஏறியிருக்கும் குதிரைகளோ காற்றோடு காற்றாய்ச் செல்லும் மகா வேகத்தையுடையன. இவ்விதக் குதிரைகளில் ஏறியிருக்கும் துரக வீரர்களும், காலாட்களும் பிரவாகம் போலப் பரந்து நிற்பதை, அபூஜஹல் கண்ணாரக் கண்டு பூரித்து, இனி முஹம்மதை வெல்லுவதற்கு சமுசயமில்லை யென்றுசொல்லி ஆனந்த நடனமாடினான்.

படை முரசுகள் இடிபோல முழங்க, வாளாதி ஆயுதவர்க்கம் மின்னல் போல மின்ன, குதிரைகளாலெழும் தூசிகள் மந்தாரம் போல ஆகாயத்தை மறைக்க, குடைகள், கொடிகள், ஆல

வட்டங்கள், சாமரங்களனைத்தும் காடு போல் பரவக் காபிர்களின் தளம் மக்கமா நகரத்துக் கோட்டை வாசல் வழியாய் வெளிப்பட்டு, பல தளபதிகளின் கட்டளை கீழ் நடந்தது.

அதிக ஆக்கிரமத்துடன் எழுந்த காபிர்களின் சேனா சமுத்திரம், பார்ப்பவர் அஞ்சத்தக்க விதமாய், வழிக்கணுள்ள அழகிய சோலைகளை யெல்லாம் நாசமாக்கிக் கொண்டு, மலைகள், வனங்கள், வனாந்தரங்கள், சிற்றூர்கள் எல்லாவற்றையும் கடந்து அதிக விரைவாய் நடந்தது.

கொடிய பாதகம்மிக்க அபூஜஹலும், அவன் சேனா வீரர்களும் இவ்வாறு சில தினங்கள் வரையும் நடந்து, ஒரு தினம் வழியில் குறுக்கிட்ட ஒரு கான்யாற்றங் கரையில் பாளைய மிறங்கி கூடாரங்களிட்டு குதிரைப் பந்திகள் முதலியன வமைத்து, புலிக்கூட்டங்கள் திரண்டு வந்திருக்கும் பாவனையாய்த் தங்கியிருந்தார்கள்.

அபூஜஹல் தனது இராணுவத்துடன் கூடாரங்களிட்டு இறங்கினபோது சூரியன் அஸ்தமித்தது. அன்றிரவு அபூஜஹல் முதலான இராணுவ வீரரனைவரும் இராப்போஜனஞ் செய்து படுத்து நித்திரை செய்தார்கள். பெரிய சமுத்திரம் அசைவற்று உறங்குவது போல அனைவரும் நித்திரை செய்யும் அந்த அர்த்த சாமத்தில், சேனையிலுள்ள ஒவ்வொருவரும் பயங்கரமான ஒருவிதப் பாழ் கனவு கண்டு வெருண்டு, தூக்கந் தெளிந்து அனைவரும் எழுந்தார்கள். அபூஜஹல் முதலாய் எல்லோரும் ஒரே தன்மையான கனவைக் கண்டு அஞ்சி விழித்தெழுந்து அக்கனவைப் பற்றி ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளாமல் தம்தம் மனதிலேயே அடக்கிவைத்துச் சொண்டு மவுனமாயிருந்தார்கள். தாம்கண்ட கொடிய கனவின் பயங்கரத்தால் விடியும் வரையும் ஒருவருக்காவது தூக்கம் வரவில்லை. அதனால் எல்லாரும் திகில் கொண்டு கலக்கமுற்றிருக்கையில் சூரியன் உதயமாயிற்று. சூரியன் உதயமாய் நன்றாய் விடிந்தவுடன் சேனையெழும்படி அபூஜஹல் கட்டளை பண்ணினான். அப்போதே முரசாதி வாத்தியங்கள் முழங்க சேனாவீரரனைவரும் புறப்பட்டார்கள்.

அன்றிரவு பாளைய மிறங்கியிருந்த ஸ்தானத்திலிருந்து அபூஜஹலும், அவன் சேனையும் நடந்து, வேறொரு வசதியான ஸ்தானத்துக்கு அருகில் வந்தார்கள். ஷாம் இராஜ்ஜியத்திலிருந்து அபூசுபியானோடு வந்திருக்கும் வீரர்களல்லாமல், மக்கமா நகரத்தி

விருந்து அபூஜகல் பெருஞ் சேனையொன்றைத் திரட்டிக்கொண்டு வந்திருக்கும் சங்கதியையும் ஒற்றர்கள் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சொன்னார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

இருவகைப் பெரும் படையும் வந் தடுத்த தென்றிசைப்ப
மரும லர்ச்செழும் புயநபி முகம்மது கேட்டுத்
திருகு வெஞ்சினத் திருநிலம் பிளந்துமண் சிதறப்
பொருமு ருமத கயமென விருத்துமப் போழ்தில்.

முகிற்ப ரப்பிய நிழல்வரு முகம்மது தமக்குப்
பகைப்ப தற்கிட மில்லெனும் பரம்பொரு ளருளா
லிகற்ப டும்பகை யிரண்டிலொன்று மதுகை யிடத்தி
னகப்ப டுத்தின னெனுமொழி யிறங்கிய தன்றே.

வசனம்.

நாங்கள் குறித்துவந்த மாற்றார்களன்றி, பின்னும் பெரும் படை திரண்டு அந்த மாற்றார்களுக்குத் துணையாய் வந்திருக்கின்ற தென்னும் செய்தியை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டும் சந்தோஷத்தோடு அச்சமற்றிருந்தார்கள். அப்போது மகத்தான அல்லாஹுதஆலா இடத்திலிருந்து "முஹம்மதே, பகைவர்களா லாகும் காரியங்கள் இரண்டில் ஒன்றை உமக்கு நாம் வசப்படுத்தினோம்" என்று வேதவாக்கியம் இறங்கிற்று. இவ்வேத வாக்கியம் தங்களுக்கு வந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சி கூர்ந்து, அபூபக்கர் (றலி) முதலான அருகர்களையும் மிக்தாது, சஃது சகீது முதலாயுள்ள அன்ஸாரிகளில் சிறந்த அநேகரையும் அழைத்து அவர்களை நோக்கி "எனது அருமையான பிராண சிநேகிதர்களே, 'முஹம்மதே பகைவர்களாலாகும் காரியங்கள் இரண்டில் ஒன்றை உமக்கு நாம் வசப்படுத்தினோம்' என்று அல்லாஹுதஆலா இப்போது அறிவித்திருக்கின்றான். அது அப்படியிருக்கட்டும். நாம் மதீனமா நகரத்திலிருந்து யுத்த முஸ்தீபுகளோடு புறப்பட்டு வந்த நோக்கமானது, அபா ஸுப்யானையும், அவனைச் சேர்ந்தவர்களையும் எதிர்த்துத் தாக்கி அவன் கொண்டு வரும் சொத்துக்களை கொள்ளையிடுவதே யன்றி வேறல்ல; அப்படியிருக்க, இப்போது

திடீறாய் அபூஜகல் பெருந்தனத்தோடு மக்கமா நகரத்திலிருந்து வந்திருப்பதாகக் கேள்விப்படுகின்றோம். காரியம் இவ்வாறாய் விட்டபடியால், இனி நாம் செய்யவேண்டியது நாம் கருதிவந்த பிரகாரம் அபாஸுப்யானை எதிர்த்து அவன் சொத்துகளைச் சூறையாடுவதா? அல்லது அபூஜகலுடைய சேனை மேல்பாய்ந்து போராடுவதா? இவ்விரண்டு காரியங்களில் எது உத்தமம்? ஆராய்ந்து சொல்லுங்கள்" எனக் கேட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கேட்டபோது விவேகமும், புத்திசாதுரியமுமுள்ள முஸ்லிம்களுக்கு நாயகமான அபூபக்கர் (றலி) அவர்கள் சற்றுநேரம் சிர்தாக்கிச் சிந்தித்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் முகாரவிந்தத்தை நோக்கி "யாறஸூலல்லாஹ் தருமத்தையும் கீர்த்தியையும் வளர்த்து, தேசங்களைக்கட்டி இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யும் தத்துவத்தைக் கொடுத்து, மாற்றார்களின் பலத்தை யொடுக்கி நாசஞ் செய்து உலக சக்கரவர்த்தியாகும்படி அறக்கிறான ஒருவனை மிகவும் உன்னதமாக உயர்த்துவது இவ்வுலகத்தில் பொருளேயன்றி வேறல்ல என்பது தாங்கள் அறியாததல்ல. ஒருவன் கையில் பொருள் உண்டாயிருந்தால், அவனுக்கு சர்வசித்தியு முண்டாய் விடும். இது இலௌகிக விஷயத்தில் சாமானிய மல்லவா? ஆனபடியால், இப்போது நாம் அபாஸுப்யான் மேற்சென்று அவன் சொத்துகள் எல்லாவற்றையும் கைக்கொள்ளுவதுதான் உத்தமம். மேற்படி திரண்ட சொத்துகள் நம் கைவசப்படுமானால், நமது பகைவர்களை நாம் நாசஞ்செய்து மேற்கொள்ளுவது ஒரு பாரமல்ல. அதை மனோ தைரியத்தையும், சரீர பலத்தையும் கொண்டு, நாடியபோது செய்துகொள்ளாமல், இவ்வித அருமையான திரண்ட திரவியங்கள் வந்து சிக்குவதுதான் கஷ்டம்" என்று விடைபகர்ந்தார்கள். அபூபக்கர் (றலி) அவர்கள் இவ்வாறு சொன்னபோது உமறு (றலி) அவர்களும், மிக்தாது (றலி) அவர்களும் "ஆம், இதுதான் உத்தமம். எங்களுக்கு இதுவே சம்மதம்" என்றார்கள்.

அபூபக்கர் (றலி) அவர்களும், உமறு (றலி) அவர்களும், மிக்தாது (றலி) அவர்களும், இவ்விதஞ் சொன்னதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு இருதயத்தில் அமைத்துக்கொண்டு, அங்கே கூடியிருக்கும் மற்ற அன்ஸாரிகளையும் நோக்கி "எனதான

களே! நீங்களும் இவ்விஷயத்தில் ஆலோசனை செய்து உங்கள் கருத்துக்களையும் சொல்லுங்கள்" என்றார்கள். இப்படி கேட்ட போது புத்தி கூர்மையும் யுத்தோபாயமும், தந்திரமுமிக்க தலைவர்களாகிய முஹாஜிரீன் அன்சாரீன் என்னும் இருவகைத் தோழர்களும், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸுலல்லாஹ்! மகத்தான அல்லாஹு தஆலாவின் கட்டளைப் பிரகாரம் தாங்கள் இராஜ்ஜிய பாரந்தாங்கி ஆளுகை செய்கின்றீர்கள். ஆனபடியால், திரிகால வர்த்தமானங்களையு முணரும் சக்தியுள்ள தங்கள் சித்தத்திற்கு ஏற்றவாறு சொல்லுவதற்குத் தக்க மனிதர் இவ்வுலகத்தில் ஒருவருமில்லையே. ஆனதால் தேவரீருடைய இருதயத்திலுள்ளதைத் திருவாய் மலர்ந்து வெளியிடுவீர்களானால், அது யாதொரு பிரதிபந்தமுமின்றி அப்படியே நிறைவேறும். அகிலரட்சகரும் நபியுமான தேவரீருக்கு ஆலோசனை சொல்ல தாழ்ந்த மனிதர்களாகிய அடியேன்கள் எம்மாத்திரம்? இப்போது தேவரீர் ஊழியர்களான எங்களை நோக்கி, நீங்கள் எல்லோரும் மாற்றார்மேல் விழுந்து பொருதுமடித்து போங்களென்று கட்டளை யிடுவீர்களானால், அப்படியே செய்வதற்கு நாங்கள் காத்திருக்கின்றோம். ஆகையால் தங்கள் சித்தத்தின்படி எங்களுக்குக் கட்டளையிடுங்கள்" என்றார்கள்.

உயிரையொத்த தோழர்கள் நாம் நமது கருத்தின்படி நடத்தச் சொல்லுவது தகுதியல்ல வென்றஞ்சி, இவ்வாறு ஒரே மொழியாகச் சொன்னவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மகிழ்வுற்று, அனைவரையும் நோக்கி "வீரர்களே, இப்போது நாம் பொருளை விரும்பி அபாஸுபியான் மேற் செல்லுவதுதான் உத்தமமானாலும், அது ஒருபுறம் இருக்கட்டும். இப்போது மக்கமா நகரத்திலிருந்து பெருஞ் சேனையோடு திடுகூறாய் வந்திருக்கும் அபூஜஹலையும் அவன் வீரர்களையும் சங்கரித்து நமது வீரத்தையும் கீர்த்தியையும் ஸ்தாபிப்பதுதான் பெரிய காரியம்" என்றார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பாகச் சொன்ன இச்சொல்லைக்கேட்ட அஸ்ஹாபிகள் எல்லாரும் அதற்கு சம்மதித்து, சந்தோஷக்குறியுடன் நிரக்கம்பஞ் செய்தார்கள்,

அபூஜஹலுடைய சேனையோடு எதிர்த்து யுத்தஞ் செய்வதே காரியமென்று முடிவானபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள்

சேனையை எழும்படி ஏவினார்கள். உடனே அஸ்ஹாபிகளனைவரும் படைமுரசுகள் கோஷிக்கவும், விருதுகள் பிடிக்கவும் யுத்த சன்னத்தர்களாய்ப் புறப்பட்டார்கள். உக்காபு என்னும் வெற்றித் துவஜம் முன்செல்ல நபிநாயகம் (ஸல்) அவர்களும், அவர்கள் சேனையும் அன்று கூடாரமிட்டு இறங்கியிருந்த ஸ்தானத்தைவிட்டுப் புறப்பட்டு அதிக தூரம் நடந்து, யுத்தஞ் செய்வதற்கு வசதியும் விசாலமுமுள்ள உன்னதமான பதுறு மலையின் அடிவாரத்தில் தாளையமிட்டார்கள். நபிநாயம் (ஸல்) அவர்களும், அவர்கள் இராணுவமும் பதுறு என்னும் மலைச்சாரலில் பாளையமிறங்கின பிற்பாடு, முன் ஷாம் இராஜ்ஜியத்திலிருந்து வந்து வனத்தில் விடுதிவிட்டிருந்த அபாஸ்பியானும், நாற்பதுபேர்களும் வியாபாரப் பொருள்களோடு அங்கிருந்து எழுந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாளையத்திற்குத் தென்புறம் ஒரு காத தூரத்திலுள்ள கடற்கரையில் வந்து கூடாரமிட்டுத் தங்கினார்கள். அதற்குப்பின் அபூஜஹலும், அவன் சேனையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இருக்கும் பதுறுமலைக்குத் தென் மேற்கில் தண்ணீர் அருவிகளும், மலைத்தொடர்களுமுள்ள பதிவான இடத்திற்கு அப்புறம் வந்து பாளைய மிறங்கினார்கள். இந்த மூன்று தாத்தாருக்குள் ஒருவர் வந்திருப்பது ஒருவருக்குத் தெரியவராது. பத்றுமலைச் சாரலில் நபிநாயகம் (ஸல்) அவர்களும் கடற்கரையில் அபாஸுபியானும், மலைத்தொடர்களுக்கு அப்புறமுள்ள வனத்தில் அபூஜஹலும் தம் தம் வீரர்களோடு தங்கியிருந்தார்கள்.

யுத்தஞ் செய்வதற்காக ஒருவர் வந்திருக்கும் செய்தி ஒருவருக்குத் தெரியாமல் இம்மூன்று தாத்தாரும் இருப்பதால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சில ஒற்றர்களை அழைத்து, மாற்றார்களின் சங்கதிகளைத் தெரிந்து கொண்டு வாருங்க ளென்று பல திசைகளிலும் அனுப்பினார்கள். உடனே மேற்படி ஒற்றர்கள் பல வழிகளிலுமுள்ள வனம், வனாந்தரம், மலைத்தொடர் எங்குஞ் சுற்றித்திரிந்து, மாற்றார்கள் வந்திருப்பதை யறிந்து கொண்டு மீண்டுவரும்போது, ஒரு பாலைவனத்தில் அறபிக் காபிர்கள் சிலர் கோதுமை, சோளம், நெல், கம்பு முதலான தானியங்களை சுமை சுமையாக ஒட்டகங்களிலேற்றிக் கொண்டு வரக்கண்டு, அவர்களையும் சுமை ஒட்டகங்களையும் மேற்படி ஒற்றர்கள் பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில்

விட்டார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி அரபிக்காபிர்களை நோக்கி "நீங்கள் எங்குள்ளவர்கள்? இப்பாதையாக எங்கே போகிறீர்கள்?" எனக்கேட்டார்கள். அதற்கு அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "நாங்கள் மக்கமா நகரத்திலிருந்து வருகின்றோம்" என்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் மறுபடியும் அவர்களை நோக்கி "வர்த்தகத்திற்காக ஷாம் இராஜ்ஜியஞ் சென்று அங்கிருந்து மீண்டு வரும் அபாஸுபியான் என்பவன் எங்கே விடுதிவிட்டிருக்கின்றான்? சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அந்தக்காபிர்கள் "ஷாம் இராஜ்ஜியத்திலிருந்து வரும் அபாசுபியான் தங்கியிருக்கும் இடமாவது, எல்லையாவது எங்களுக்குத் தெரியாது. மக்கமா நகரத்திலிருந்து அபூஜஹலும், அவனைச்சேர்ந்த தலைவர்களும், பெருஞ்சேனையோடு புறப்பட்டு வந்து, இந்தப்பதுறு மலைக்கு அப்புறமுள்ள வனத்தில் பாளையமிறங்கி யிருக்கின்றார்கள். அந்த சேனைக்குப் போஜனத்திற்காக வேண்டி இந்ததானியங்களை நாங்கள் கொண்டு போகின்றோம். இதுதான் நாங்கள் அறிந்த விஷயம். மற்றதொன்றையும் அறியமாட்டோம்" என விடைபகர்ந்தார்கள். இதைக்கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் அகங்களித்து, அஸ்ஹாபிகளை நோக்கி "இந்த காபிர்களைச் சிறைபடுத்திக் காவலில் வைத்து விட்டு, ஒட்டகங்களிலேற்றி யிருக்கும் தானியப்பொதிகளையிறக்கி ஒரு புறத்தில் சேர்த்து வையுங்கள்" என்று கட்டளை பண்ணினார்கள். அஸ்ஹாபிகள் அந்தக்கட்டளைப் பிரகாரம் உடனே செய்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பிராணனுக்குச் சமானமான அஸ்ஹாபிகளை நோக்கி "என்னருமைத் தோழர்களே, நமது மாற்றார்களின் தளம் நமக்குச் சமீபத்தில் நெருங்கி வந்து விட்டது. ஆகையால் நாம் திடகூறாய் அவர்களைச் சூழ வளைந்து யுத்தஞ்செய்து வெற்றிபெறவேண்டும். அப்படி நாம் செய்வதற்கு இதுதான் நல்ல சமயம். அல்லாஹு தஆலாவும், நமக்கு வெற்றியைத் தருவதாக அறிவித்திருக்கின்றான். அதனால் நமது தீனை வளர்க்கும் தத்துவம் நமக்கு மேன்மேலும் உண்டாவதாக" என்று பிரியத்துடன் சொன்னார்கள். இவ்வருமையான வசனத்தைக் கேட்டபோது எல்லாரும் உற்சாகமுற்று மகிழ்ந்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளில் வீரர்களைத் தேர்ந்தெடுத்து, அப்புறங்களிலுள்ள அருவிகள், மடுக்கள், சோலைகள், கணவாய்கள், மலைச்சாரல்கள் எங்கும் காவல் நியமித்து மாற்றார் எதிரேறிவர இடங்கொடாமல் திடப்படுத்தினார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்தது. சூரியன் அஸ்தமித்து எங்கும் இருளானபோது அன்றிரவுமுழுதும் அஸ்ஹாபிகளை விழித்திருந்து கூடாரங்களைக் காக்கும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆக்ஞை செய்தார்கள். அந்த ஆக்ஞையின்படி அஸ்ஹாபிகளில் அநேகர் அன்றிரா முழுதும் கண்விழித்து பாளையை காத்திருந்தார்கள். பிறகு சூரியன் உதயமாயிற்று.

சூரியோதயமாய் விடிந்தபின் அபூஜஹல் தனது ரணவீரர் எல்லாரையும் போர்க்கோலத்துடன் புறப்படும்படி கட்டளை பண்ணினான். உடனே பகைவர்களின் இரத கஜ துரக பதாதி என்னும் சதுரங்க சேனையும் செவிபதிரத் தக்க முரசு முழக்கோடு போர்க்கோலம் தரித்து எழுந்தன.

பொழுது விடிந்த அதிகாலையில் மாற்றார்கள் திரண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனையிருக்கும் திசையை அறியாமல் யுத்தசன்னத்தர்களாய் வந்தார்கள். தாங்கள் காவலிருக்கும் திசையைநோக்கி மாற்றார்கள் வருவதை, முன்னர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பல ஸ்தானத்திலும் நிறுத்திய காவல் வீரர்கள்கண்டு, சிலர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் விரைந்துவந்து, "அபூஜஹலும், அவன் சேனைவீரர்களும் புறப்பட்டு நாம் இருப்பதை அறியாமல் மிக ஆரவாரத்தோடு வருகின்றார்கள்; நமக்கு எதிர் முகமாகவே வருகின்றார்க" என்று அறிவித்தார்கள். மாற்றார் தளம் திரண்டு வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு தங்கள் அஸ்ஹாபிகள் எல்லோரையும் போர்க்கோலம் புனைந்து குதிரைகளிலேறும்படி உத்தரவு செய்தார்கள். உடனே ரணசிங்கங்களான அஸ்ஹாபிகள் எல்லாரும் யுத்தசன்னத்தர்களாய், நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டார்கள். குடை, கொடி, ஆலவட்டம், வெண்சாமரை முதலான விருதுகள் இலங்கவும், பதினெண் மேள வாத்தியங்கள் முழங்கவும், வாளாதி ஆயுதங்கள் பளீர் பளீரென்று மின்னவும், தக்பீர், ஸலவாத்து முதலானவை தொனிக்கவும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை புறப்பட்டது. நபிநாயகமவர்கள்

முன்னே உக்காபு என்னும் வெள்ளை வெற்றிக் கொடிபறக்க, வானவர் வாழ்த்த, கலிமா முழங்க, வெகு ஆரவாரத்தோடு முஸ்லிம்களின் இராணுவம் சென்றது.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை பாளையமிடத்தை நீங்கிச் சிறிது தூரம் நடந்து, அங்குள்ள ஒரு மணர்திடர்மேலேறி அடுத்த பள்ளத்தாக்கி லிறங்கி, பதுறு என்று வழங்கும் ஸ்தானத்தில் ஆயினார்கள். அப்போது அடுத்து வரும் அபூஜஹலும், அவன் இராணுவ வீரர்களும் முஸ்லிம்களின் சேனையைக் கண்டு கொண்டார்கள். இவர்கள் சேனையை மாற்றார்கள் கண்டுகொண்ட போதே மாற்றார் தளத்தையும் நபிநாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் கண்டார்கள். இவ்விதம் ஒருவர் வருவதை ஒருவர் கண்டு கொண்டபின், மாற்றார்சேனை அதிகமா யிருப்பதால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இருகரங்களையும் அல்லாஹு தஆலாவின் பக்கத்தில் உயர்த்தி "யா அல்லாஹ்! உனது ஒப்பற்ற திருவசனமாகிய குர்ஆனை சுத்த அபத்தமென்றும், உன்னால் ஏவப்பட்ட தூதனாகிய என்னை அபத்த னென்றும் துணிந்து நிந்திக்கும் துரோகிகளாகிய சத்துருக்கள் இதோ எதிர்த்து வந்து விட்டார்கள். அவர்கள் அனைவரையும் சங்காரஞ்செய்து வெற்றி பெறத்தக்க வாள் பலத்தை எனக்கு நீ கொடுத்தருள்" என்று மன்றாடி துஆ இரந்து கேட்டார்கள். இவர்கள் இவ்வாறு இரந்து கேட்கும்போது ஆகாயத்தில் அநேக மலக்குகள் இறங்கி நின்று ஆமீன் கூறினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் துஆக்கேட்டு, பாத்திஹாஓதித் தீர்ந்த பின் தங்கள் அருகர்களையும், அஸ்ஹாபிகளையும் நோக்கி, நமது பகைவர்களில் இன்னார் இன்னார் இன்ன, இன்ன இடத்தில் வெட்டுண்டு மடிவார்கள் என்றும், மற்ற காபிர்கள் இந்த ஸ்தானத்தில் மாண்டு போவார்கள் என்றும், பகைவர் பெயரையும் இறக்கும் இடத்தையும் குறித்துக் காட்டித் தங்கள் உண்மையான திருவாக்கினால் சொல்லி விட்டு, சேனையை அணிவகுப்பதற்குக் கருதி, முந்தி அஸ்திரப் பிரயோகத்தில் தேர்ந்த அஸ்ஹாபிகளின் சிலரைச் சேர்த்து அவர்களை ஒரு தானத்தில் நிறுத்தி "வீரர்களே, மாற்றார்தளம் திரண்டு வந்து உங்கள் மேல் விழுந்து எவ்வளவு நிஷ்டூரத்துடன் அடர்ந்து தாக்கினாலும், நீங்கள் இந்த ஸ்தானத்தை விட்டுப் பெயர்ந்து போகக்கூடாது. அன்றியும், அப்பகைவர்கள்

தங்கள் ஆயுதங்களைக் கொண்டு உங்களை அறநெருங்கி வளைந்து வெட்டும்போதும் நீங்கள் ஒருவரும் உறையில் கிடக்கும் பட்டயத்தை உருவிக் கையிற்பிடிக்கக்கூடாது. நீங்கள் ஒவ்வொருவரும் வில்லுகளை வளைத்து நாணேற்றிப் பாணங்களைத் தொடுத்து அப்பகைவர்கள் மேல் பிரயோகித்துக் கொண்டிருங்கள். அஸ்திரப் பிரயோகம் ஒன்று மாத்திரஞ் செய்யவேண்டுமே யல்லாது, வேறு ஆயுதங்களை நீங்கள் கையிலெடுக்கக் கூடாது. இனி நான் உங்களுக்கு வேறு கட்டளையிடும் பரியந்தம் இந்த ஸ்தானத்திலேயே, நான் சொன்னவாறே நிற்கவேண்டும்" என்று ஆக்ஞாபித்தார்கள். அதன் பிறகு அபூபக்கர் (றலி) அவர்களை நோக்கி சொன்னதாவது :—"அபூபக்கரே, மகத்தான அல்லாஹு தஆலாவின் உதவி கொண்டு நமக்குத் துணைப்படையாக மலக்குகள் ஆகாயத்தில் வர நான் கண்டேன்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஓங்கல் போலுமை யாயிர மலக்குக ளுடனே
நீங்கில் பஞ்சகல் யாணியிற் றமறிய நிறந்த
பாங்க ரின்சரு வந்தனிக் தரும்படைக் கலன்க
டாங்கி விண்ணிடை யெதிர்த்தன ரிருவழி தழைப்ப.

எந்த மாருயிர்ச் சபுறயீ லிவணம ரடுத்து
வந்து நின்றனர் வெற்றியும் பிடித்தவாள் வலியு
மந்த நாயக னமக்களித் தனனென வறைந்தா
ரிந்து வக்தெதிர் பகிர்தரப் பகர்தரு மிறசூல்.

வசனம்

"மேற்படி மலக்குகள் ஐயாயிரம் பேர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பர்வதத்தைப் போலப் பருப்பமுடையவர்களாய், சிரசில் பொற்பாகை தரித்தவர்களாய், சுவர்க்கத்துப் பஞ்ச கல்யாணிக் குதிரையி லேறினவர்களாய், போர்க்கோலம் புனைந்தவர் களாய், யுத்தத்துக்குத் தயாராய் நிற்கின்றார்கள். அவர்களுக்குச் சேனாதிபதியாய் என் பிராணனுக்கு நிகரான ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் நிற்கின்றார்கள் அதனால் நமக்கு வெற்றியும், வாட்பலமு முண்டா யிருக்கின்றன" எனக்கூறிவிட்டு,

தங்கள் சேனையில் முந்தி அஸ்திரப்பிரயோகஞ் செய்யும்படி கட்டளை பண்ணி நிறுத்தப்பட்ட சிலர் போக மற்ற அஸ்ஹாபிகளனைவரையும் நான்கு பிரிவாகப் பிரித்து, ஒரு பிரிவுக்கு அலி (றலி) அவர்களையும், ஒருபிரிவுக்கு ஹம்ஸா (றலி) அவர்களையும், ஒருபிரிவுக்கு உபைதா (றலி) அவர்களையும் சேனாதிபதிகளாக நியமித்து விட்டு, மற்றொரு பிரிவைத் தங்களுக்குக் கீழ் நிறுத்திக் கொண்டு போருக்கு ஆயத்தமாய் நின்றார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையை நான்கு பிரிவாகப் பிரித்து அணிவகுத்து நிற்பதை அபூஜஹல் கண்டு அவனும் தன்சேனையை நான்காகப் பிரித்து, ஒருபிரிவுக்கு உத்பாவையும், ஒருபிரிவுக்கு ஒலீதையும், ஒருபிரிவுக்கு ஷைபாவையும் சேனாதிபதிகளா நியமித்து விட்டு, மற்றொரு பிரிவுக்குத் தானே தளபதியாய் நின்று, முஸ்லிம்களின் நான்கு பிரிவான இராணுவங்கள் மேல் தனது நான்கு பிரிவான இராணுவங்களையும் நடத்தினான். நான்கு பிரிவுகளாக அணிவகுக்கப் பட்ட இருவகைத் தளமும் ஒன்றோடொன்று நெருங்கிக் கைகலந்து போராட எத்தனமானவுடன், மாற்றார் தளபதியாகிய அபூஜஹல் தனது குதிரை மேலேயே இருந்துகொண்டு, இரண்டு கைகளையும் உயர்த்தி "ஆண்டவனே, ஓர் ஊரிலே, ஒரு கோத்திரத்திலே பிறந்தும், தொன்று தொட்டுள்ள உனது மேலான மார்க்கத்தை நிந்தித்து பந்துக்களுடன் பகை சாதிக்கும் இந்தப் பாதகர்களை நீ நாசமாக்குவாயாக" என்று இரந்தான். இவ்வாறு அவன் இரந்து கேட்டது தன்னைத் தானே சபித்துக் கொண்டதன்றி வேறல்ல.

பிறகு, உதுபா, ஒலீது, ஷைபா என்னும் மூன்று தளபதிகளும் கண்களில் அக்கினிப் பொறி சிதறச் சினந்து தங்கள் மூன்று பிரிவுகளையும் அஸ்ஹாபிகள் மேல் செலுத்தினார்கள். அப்போது அலி (றலி) ஹம்ஸா (றலி) உபைதா (றலி) இம்மூன்று சேனாதிபதிகளும் தங்கள் இராணுவத்தின் மூன்று பிரிவுகளையும் அவர்கள் மூன்று பிரிவின் மேல் செலுத்தி அடர்ந்து எதிர்த்தார்கள். இரண்டு திசைகளும் ஒன்றோடொன்று எதிர்க்கும் பாவனையாய், பூமி அதிர்ந்து அஷ்டகிரிகளும் பாதாளத்திலாழ் அமிழ்ந்தும் படி, செவியதிரத்தக்க மும்முரமான கோஷ்டத்துடன் இருபடைகளும் ஒன்றோடொன்று எதிர்த்து தாக்கின. இருவகைச்

சேனைகளிலும் படை முரசுகள் கடலொலி யடங்கும் வண்ணம் ஓயாமல் ஒலித்தன. காபிர்களின் வாயில் பிறக்கும் சபதத்தொனியை முஸ்லிம்களின் தக்பீறின் ஓசை மேற் கொண்டு தொனித்தது. குதிரை வீரர்கள் வையாளி விடுவதாலெழும் புழுதியும், காலாட்கள் குதித்து திரிவதால் எழும் புழுதியும், ஆகாயத்திற் பரவி சூரியனை மறைத்துக் கொண்டன. மேற்படி புழுதிகளே ஆகாயத்தில் மந்தாரமாகவும், ஆயுதாதிகளாலெழும் ஓசையே இடியாகவும், வாட்கள், வேல்கள், தண்டங்கள் முதலானவை ஒன்றோடொன்று தாக்குவதால் உண்டாகும் ஒளியே மின்னலாகவும், குதிரைகள் மூச்செறிவதா லெழும் காற்றே புயற்காற்றாகவும், வில்களிலிருந்து பறக்கும் பாணங்களே மழைத்துளிகளாகவும், தரையில் சிந்தியோடும் உதிரமே மழைப் பிரவாகமாகவும் தோற்றுவதால், அந்த யுத்த களத்தில் மாரிகால முண்டா யிருந்த பாவனையாய் விளங்கிற்று. இன்னும், இருவகைச் சேனையும் அதிக தூரம் பரவி நிற்பதால் சமுத்திரத்திற்கு சமானமாகத் தோற்றிற்று

யுத்த களத்தில் ஒருவரோ டொருவர் எதிர்த்துப் பொரும் போது, அஸ்ஹாபிகள் செலுத்தும் அசுவங்கள் உக்கிரங் கொண்டு சினந்து, இடிபோலக் கனைத்து, குயவன் சக்கரம் போலச் சுற்றி, சூறாவளி போலச் சுழன்று, பல இடங்களிலும் சென்று சென்று, காபிர்கள் சிரசுகளிலும், முகங்களிலும், மார்புகளிலும், விலாக்களிலும், வயிறுகளிலும், தொடைகளிலும், கால்களிலும் மிதித்துச் சிதைத்து, மூளைகள், உதிரங்கள், குடல்கள் எல்லாவற்றையும் கலக்கிச் சேறாக்கிப் பந்துகளைப் போல் துள்ளித் துள்ளித் திரிந்தன. குதிரைகள் காபிர்களை இவ்வாறு சின்ன பின்னமாக்கி திரிவதுமல்லாமல், ரண கம்பீர சிங்கங்களாகிய அஸ்ஹாபிகள் காபிர்களின் உச்சி முதலாய் உள்ளங்காலீறாயுள்ள ஒவ்வொரு உறுப்புகளிலும் உதிரம் ஊற்றெடுத்தோடப் பலவகை ஆயுதங்களை கொண்டு அடர்ந்து தாக்கினார்கள். முஸ்லிமான ரணவீரர்களின் கூர் கொண்ட ஆயுதப் பிரயோகத்தினால் சிந்தும் உதிரம் பிரவாக மொத்து ஒலித்தோடிற்று. மாற்றார்களில் பலர் சிரசுகள் அறுப்புண்டும், வயிறுகள் பிளப்புண்டும், குடல்கள் சரியுண்டும் வீழ்ந்து மாண்டது மன்றி, அநேகர் முகங்கள் சிதைக்கப்பட்டும் கால் கை ஒடியப்பட்டும், மற்ற உறுப்புகள் குறைக்கப்பட்டும் குறைப் பிராணியாய் யுத்தகளத்தில் விழுந்தார்கள்.

அஸ்ஹாபிகள் கைகளிற் பிடித்துப் பிரயோகிக்கும் வேற்படைகள் காபிர்கள் பிரயோகிக்கும் படைக்கருவிகள் எல்லாவற்றையும் நொறுக்கி, எதிர்வரும் சத்துருக்களின் பிராணனைப் போக்கி, பாய்ந்து வரும் அவர்கள் குதிரைகளின் உரங்களைப் பிளந்து, தலைவர்கள் மார்புகளிலும் சென்று பாயா நிற்கும் பாணங்கள், பகைவரின் கைகளையும் கேடகங்களையும் உருவிச் சென்று, மார்புகளைத் துவாரமிட்டு உட்சென்று உயிரைக் குடித்து, அப்புறப் பட்டு செல்லா நிற்கும் அஸ்ஹாபிகள் கைகளிற் பிடித்த தண்டங்களால், மாற்றார்களின் குடை, கொடி முதலான விருதுகள் எல்லாம் ஒடிந்து நொறுங்கின; படை முரசுகள் உடைந்து உருண்டன; சிரசுகள் சிதைந்தன; முடிகள் தகர்ந்தன.

இவ்வாறு அஸ்ஹாபிகள் தாங்கரிய சினங் கொண்டு, சொல்லரிய உக்கிரத்துடன் அடர்ந்து, மாற்றார் தளத்தின் அணியைக் கலக்கி ஊடுருவிச் சென்று தாக்கி, ரணவீரர்களை மாளச் செய்தார்கள். காபிர்களும் இயன்றவரையும் இளைக்காது எதிர்த்தே நின்றார்கள். ஆனாலும் காபிர்கள் சேனை வரவரக் குறைந்து கொண்டேயிருந்தது. அநேக வீரர்கள் குறைப் பிராணத்துடன் விழுந்து போனார்கள். அநேக வீரர்கள் மாண்டு போனார்கள். கணக்கற்ற குதிரைகள் குடல் சரிந்து விழுந்தன. ரணவெறி கொண்ட காபிர்கள் மதிமயங்கிப் பிரமைக் கொண்டு தங்களிலேயே ஒருவரை யொருவர் வெட்டிக் கொண்டு மடிந்தார்கள். ஆனாலும், பெருஞ் சேனை யாகையால் விரைவில் முறிந்து சிதறவில்லை.

இவ்வளவென்று சொல்லரிய கொடிய யுத்த களத்தில் அஸ்ஹாபிகள் மிக உக்கிரங் கொண்டு பொருது நிற்கும் போது, அஸ்ஹாபிகளில் உக்காஸ் என்பவர் அதிவீரத்துடன் ரணசூரர்களும் வியக்கத்தக்க விதமாய்த் தமது குதிரையைக் கடாவி, காபிர்களைப் பிரேதங்களாகக் குவை குவையாய்க் குவித்து, அநேக குதிரைகளை மடித்து அடர்ந்து நின்றார். அவர் அத்தனை தூரம் அடர்ந்து தமது ஒரு வாளைக் கொண்டே வெட்டி நின்றபடியால், கையில் பிடித்திருந்த அவருடைய வாள் திடீரென்று முறிந்தது. தமது வாள் முறிந்த மாத்திரத்தில் உக்காஸ் குதிரையைத் திருப்பிக் கொண்டு விரைவாய், நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில்

வந்து நின்றார். தங்கள் முன் வந்து நின்ற உக்காஸின் முகக் குறிப்பை நபி நாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அங்கே கிடந்த ஒரு சிறிய கோலை யெடுத்து அவர் கையிற் கொடுத்தார்கள். அவர் வாங்கி பிடித்த மாத்திரத்தில் மேற்படி கோல் சிறப்பும் பிரகாசமும் கூர்மையுமுள்ள ஒரு வாளாயிற்று. அதைக்கண்டு உக்காஷா மனம் பூரித்து தமது குதிரையைச் செலுத்திக் கொண்டு மாற்றார் தளத்துள் பிரவேசித்து, முன்னிலும் பலமடங்கு அதிக மும்முரத்துடன் அடர்ந்து தாக்கினர்.

அற்புத வாளைக் கைக்கொண்ட உக்காஸ் முன்னிலும் பல மடங்கு அதிக ஆரவாரத்தோடு மாற்றார் தளத்தில் விழுந்து வெட்டினர். உக்காசுடைய கையி லிருக்கும் மகிமையான அற்புத வாளால், காபிர்களின் சிரங்கள், புஜங்கள், வயிறுகள், துடைகள், கால்கள் பல அறுப்புண்டு திரள் திரளாய்க் குவிந்தன. அதனால் இரத்தம் பெருகி ஆறாய் ஓடிற்று. வாள்வலி மிக்க உக்காஸ் செய்யும் சமர்த்தியத்தை வியக்கத் தக்கவர்கள் வானவர்களேயன்றி மனிதரல்ல. அத்தனை தூரம் ஆச்சரியகரமாக நின்று பகைவரைச் சங்கரித்தார்.

மற்ற அஸ்ஹாபிகளும் அவ்வாறே அடர்ந்து நின்று சமர் செய்யும் போது, மாற்றாரின் தளபதிகளில் ஒருவனாகிய சைபா என்பவன் தனது அசுவத்தை நடத்தி அஸ்ஹாபிகள் நின்று போரிடும் ஓரிடத்தில் வந்து அடர்ந்தான். சைபா உக்கிரங் கொண்டு வந்து எதிர்த்ததை ஹம்ஸா (றலி) அவர்கள் கண்டு வேகங் கொண்டு கண்களில் தீப்பொறி சிதறத் தங்கள் குதிரையைக் கடாவி, மேற்படி சைபா என்னும் பாதகனுக்கு முன் சென்று அவனோடு எதிர்த்தார்கள். ஹம்ஸா (றலி) தங்கள் குதிரையை நடத்தி அவனுக்கு முன் செல்லும் போதே, அவனை விளித்து "ஏ சைபா! மகத்தான அல்லாஹு தஆலாவின் தூதரும் அகில ரக்ஷகருமாகிய எங்கள் முஹம்மது நபிக்கு உரிய கலிமாவை வெறுத்து, அவர்களுக்கு நீ பெரும் பகைவனாய் அல்லவா? அதி வற்று நீ இவ்வாறு பகைத்து தற்காலம் போரிடுவதற்கும் கருதி வந்தனை. நீ இவ்வுலக வாழ்விலிருந்து பாதாள நரகத்திற்குக் குடிபோகக் குறித்த காலத்தின் முடிவு இதுதான் போலும், சொல்லுக" என அட்டகாசம் செய்து கோப மூட்டினார்கள்.

ஹம்ஸா (றலி) அவர்கள் இவ்வாறு சொல்லி ஷைபாவுக்குக் கோப மூட்டி எதிர்த்த போது, அவன் வெகுண்டு தனது இதழ்களைக் கடித்து மீசை துடிக்கப் பட்டையத்தைப் பிடித்து அசைத்து, குதிரையைக் காற்றாடிபோலச் சுழலவிட்டு, மகா தீரத்துடன் இவர்களை நோக்கி, "ஹம்ஸா! பிரிவினையின்றி ஒருவரோடொருவர் ஒன்றிவாழும் உற்ற குடும்பத்தை முற்றமுடிய இழந்து, தொன்று தொட்டுள்ள நமது குலதெய்வத்தையும் கோத்திர பிதாக்கள் ஒழுகி நடந்த பூர்வீக மார்க்கத்தையும் வெறுத்து, நரகத்தில் கொண்டு தள்ளும் புதிய மார்க்கத்தில் சேர்ந்து, அவமே போனபாதகன் நீயே யல்லவா? இன்னும் கேள், ஹம்ஸா! நீ உனது சகோதரன் மகனாகிய முஹம்மதோடு கூடிவழி கெட்டுப்போன பாவத்தின் மன்னிப்புக்காக வேண்டிஉன் குதிரையை விட்டுக் கீழிறங்கி என்னை எதிர்த்து நின்று, என்னை ஒருதரம் வணங்கு. நீ மன்னிப்புப் பெறுவாய் இல்லாவிடில், உன்னை ஏவி விட்ட முஹம்மதென்னும் அபத்தனிடம் இனி மீண்டும்போக இடம் பெறாமல் ஒருக்ஷணத்திற்குள் கொல்லப்படுவாய், நீ கொல்லப்படுவாய் என்றே மீண்டும் சொல்லுகிறேன், சத்தியமாகவே சொல்லுகிறேன்" என்று கூறி எதிர்த்தான்.

சண்டாளத்துவமுள்ள ஷைபா இவ்வாறு கூறி எதிர்த்தபோது, ஹம்ஸா (றலி) அவர்கள் உக்கிரங்கொண்டு, நாம் இவனோடு வாக்குவாதம் பண்ணிக் கொண்டு நிற்பதில் பிரயோஜனம் இல்லையென்றெண்ணி, அவனை விளித்து, "துஷ்டனே! இதில் காரியம் இல்லை; போராடிப் பார்ப்போம் வா" எனப்பகர்ந்து, தமது புஜங்களையும் பட்டயத்தையும் பார்த்துக் கண்கள் சிவந்தார்கள். ஹம்ஸா (றலி) கண்கள் சிவந்து சினந்து நிற்பதை ஷைபா கண்டு தனது வாளை ஓங்கி, இவர்கள் சிரசை இலக்காக்கி ஓங்கினான்; உடனே இவர்கள் அவ்வெட்டைக் கைக்கேடகத்தில் தாங்கிக் கொண்டு அவனை நோக்கித் தமது வாளால் வெட்டினார்கள்; அவனும் அப்படியே கேடகத்தினால் தாங்கினான். இவ்வாறு வெட்டைப் பரிசையால் தடுத்துக் கொண்ட ஷைபா தனது வேலையோங்கி ஹம்ஸா (றலி) உடைய சரீரத்தில் பாயக்குத்தினான். அக்குத்து இவர்கள் இட்டிருந்த இரும்பு மெய்ச் சோவின் வன்மையால் சரீரத்தில் படவில்லை. அதைக் கண்டு இவர்கள் தமது தண்டத்தைதூக்கி மகா உக்கிரத்துடன் அவன் தலையில் ஓங்கி அடித்தார்கள்; அவ்வடியை ஷைபா

பரிசையால் தாங்கினபடியால், மேற்படி பரிசை பொடிப் பொடியாய் நொறுங்கிற்று.

ஷைபாவின் பரிசை நொறுங்குண்டபின் இவன் தனது படைக்கலன்கள் ஒவ்வொன்றையும் பிரயோகித்து நின்று அயர்ந்தான். ஹம்ஸா (றலி) அவர்களும் அவனோடு எதிர்த்து நின்று வெட்டினார்கள். இவ்வாறு ஒருவரோடொருவர் குதிரைகளைச் சரிசெய்து மறித்து, வெட்டியும், குத்தியும், அடித்தும், இடித்தும், தடுத்தும் பலவாறு நெடுநேரம் வரையும் போராடினார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் சற்றும் இளைக்கவில்லை. இவ்விருவரும் இரண்டு ரணசிங்கங்கள் எதிர்த்து நின்று, ஒன்றோடொன்று தாக்கிக் கொள்ளும் பாவனையாய், யுத்த களத்தில் நின்று போராடினர். பின்னர், ஷைபா சினந்து உதட்டை கடித்து, தண்டத்தையோங்கி ஹம்ஸா (றலி) உடைய விலாப்பக்கத்தில் அடித்தான். அவ்வடியை அவர்கள் சட்டை செய்யாமல் உடனே வாளையோங்கி அவனை வெட்டினார்கள். அவ்வெட்டு, குதிரையின் கடிவாளத்தைப் பற்றியிருந்த அவன் இடது கரத்திற்பட்டு, அக்கரம் அறுந்து விழுந்தது. இடது கை தறிப்பட்டபோது மறுபடியும் மேற்படி தண்டத்தை ஓங்கி அடித்தான். அவ்வடி தமது சரீரத்திற் படுமுன், ஹம்ஸா (றலி) அவர்கள் வாளையோங்கி அவன் சிரசில் வெட்டினார்கள். அவ்வெட்டு ஷைபாவின் மண்டையில் தாக்கிற்று. அதனால் அவனும், அவன் குதிரையும் இருபிளவாய், பிரேதமாய் சரிந்தார்கள்.

திரமிக்க ஷைபா பிளப்புண்டு நெடு மரம் சாய்வது போலச் சாய்ந்து மாண்டுபோனதை, அபூஜஹல் சேனையின் மற்றொரு பிரிவுக்குத் தலைவர்த்தனாய் நிற்கும் வலீது என்னும் சண்டாளன் கண்டு, தாங்கரிய சினங்கொண்டு, மதயானை ஆங்கரிப்பதுபோல ஆங்கரித்து, மின்னலை யொத்துவிளங்கும் பட்டயத்தை யுருவிக் கையிற் பிடித்துக் குதிரையை நடத்திக்கொண்டு, தானணிந் திருக்கும்ஆயுதங்கள் கலீர் கலீரென்று சப்திக்கும்படி ஹம்ஸா (றலி) அவர்கள் நிற்கும் ஸ்தானத்திற்கு வந்தான். வலீது சினங்கொண்டு வருவதை அஸ்ஹாபிகளின் ஒருபிரிவுக்கு அதிபதியாய் நின்று சமர் நடத்தும் அலி (றலி) அவர்கள் கண்டு, நெடுநேரம் யுத்தம் செய்து இளைத்து நிற்கும் ஹம்ஸா (றலி) அவர்களை மறுபடியும் எதிர்த்துப் போராடவிடாமல் தடுத்து, தங்கள் துல் துல் என்னும் புரவியை

ஒலீது அஞ்சத்தக்க விதமாய் நடத்திக் கொண்டு, நாம் முதல் தடவையாகப் போர்விளையாடும்படி இன்று கிடைத்ததென்று அகங் கழித்து, அவனை மறுத்து எதிர்த்தார்கள். தனக்குமுன் அலி (றலி) அவர்கள் எதிர்த்ததை ஒலீது கண்டு, அவர்களை நோக்கி, "அலியே! உலகறிந்த வீரவானாகிய என்னோடு எதிர்த்து போராடி, என் புஜபலம் இம்மட்டென்று அறிந்து கொள்ளுவதற்கு மனோதிடமுள்ள முஹம்மதுதான் வரவேண்டும். அவனன்றி, யுத்தவீரன் போல ஆயுதங்களை யணிந்த சிறுவனாகிய நீயா என்னோடெதிர்ப்பவன்? எனது வீரத்திற்கு நீ எம்மாத்திரம்? நீ அணிந்திருக்கும் ஆயுதங்களுடன் உன்னையும், உன்குதிரையையும் சேர்த்துப்பிடித்து நிலத்திற் றாக்கி நொறுங்கச் செய்வது எனக்கென்ன அரிதா? மிகவும் சின்னஞ் சிறிய நீ, என்னோடு எதிர்ப்பாயாயின், சிறுவனாயிற்றே யென்று உன்னை மன்னிக்கமாட்டேன். உன் உயிருக்கு முடிவு சம்பவிக்கு முன் தப்பிப் பிழைத்துப் போய்விடு" என்று புஜங்கள் குலுங்க நகைத்துச் சொன்னான். ஒலீது சொன்ன இச் சொல்லை அலி (றலி) அவர்கள் கேட்டு அவனை நோக்கி "ஒலீதே! யாரைச் சிறுவனென்றாய்? விதிவிலக்குகளை இன்னவை யென்று பகுத்தறியும் அறிவு சிறிதுமில்லாத மௌட்டிகனே; நான் தோற்றத்தில் சிறுவனாயினும் மகத்தான அல்லாஹு தஆலாவிற்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டவர்களுக்கும் உள்ள ஆண்மையும், தைரியமும், பைசாசங்களை ஆராதனையும் செய்யும் அவிவேகமுள்ள உன்னையொத்த பருத்த தேகிகளுக்கு ஏது? இவ்வுலகத்தில் பெருமை சிறுமைகளைப் பற்றி அறிவது அறிவாலன்றி, உருவத்தாலல்ல என்பதை நீ அறிவாயாக" என்றார்கள். இதைக் கேட்ட ஒலீது, மறுபடியும் அலி (றலி) அவர்களை நோக்கி, "சின்னஞ் சிறிய உன்னைக்கொல்வது தருமமல்லவே யென்று கருதி, இச்சொல்லை நான் சொன்னேன். நீ அதை வன்மமாகக் கொண்டு என்னை நிந்திக்கின்றாய். இப்போது உன்னைப்பிடித்து இறுகப் பிணித்து அக்கினியிற்போட்டு எரித்துச் சாம்பலாக்குகிறேன் பார்" என்றான். அப்போது அலி (றலி) அவர்கள் அவனை நோக்கி "சண்டாளனே, அல்லாஹு தஆலாவின் உண்மைத் தூதராகிய எங்கள் நபிகள் சிகாமணியை, முன் மக்கமாநகரத்தில் கொடிய வஞ்சனைக்கார னென்று பிரஸ்தாபம் பண்ணினவன் நீயல்லவா? அதற்கும், இப்போது என்னை அக்கினியிற் போட்டு

எரித்துச் சாம்பலாக்குகிறேன் என்றதற்கும் தண்டனையாக, இதோ உன் ஊத்தவாயைக் கிழிக்கிறேன் பார்!" என்று சொன்னார்கள். இச்சொல் அவனுக்குக் கோபத்தீயை மூட்டிற்று.

அலி (றலி) அவர்களின் தீரமான வார்த்தையால் ஒலீது உள்ளங் கொதித்து, கண்கள் அக்கினி சிந்த அழன்று, குதிரையை மத்திகையால் புடைத்து, இடக்காத்துக் கேடகத்தை யசைத்து, வலக்கரத்தால் வாளை யோங்கி அலி (றலி) அவர்களை உக்கிரங் கொண்டு வெட்டினான். அவன் வெட்டின வெட்டை அலி (றலி) அவர்கள் தங்கள் தண்டத்தால் தாங்கினார்கள்; அவன் வாள் இரண்டாய் முறிந்தது. வாளொடிந்த மாத்திரத்தில் வேலையோங்கி எறிந்தான். அவ்வேலை அலி (றலி) அவர்கள் பரிசையால் எற்றினார்கள். அவ்வேலும் இருதுண்டா யொடிந்தது. வாளும், வேலும் ஒடிந்துபோனதால் திகைத்து, சினங்கொண்டு, உதட்டைக்கடித்து நிற்கும் ஒலீதை நோக்கி "ஏன் மலைத்து நிற்கின்றாய்? இன்னும் வேறே ஆயுதங்களில்லையா? இருந்தால் எடு" என்று அலி (றலி) அவர்கள் சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்டவுடன் அவன் அழன்று, தண்டத்தை யோங்கி அடித்தான்; அலி (றலி) அவர்கள் மேற்படி தண்டத்தைத் தங்கள் இடது கையாற் பிடித்து சுழற்றி அவன் புஜங்களிலேயே எறிந்தார்கள். அதனால் அத் தண்டமும், அவனணிந்திருந்த இரும்பு மெய்ச்சீராவும் பொடி பொடியாய் நொறுங்கின. மறுபடியும் அவன் உடைவாளை யெடுத்து இவர்கள்மேல் நீட்டினான்; அதைத் தங்கள் துல்பகார் என்னும் இருமுனைப் பட்டயத்தினால் விலக்கிவிட்டு, துல்துலை இடமும் வலமும் சாரிசெய்து அவனை வெருட்டினார்கள். அவனும் மகாவீரனாகையால், சற்றும் இளைக்காமல் தனது குதிரையையும் சாரி பண்ணி நின்று எதிர்த்தான். இயற்கையிலேயே தெய்வவேங்கையாகிய அலி (றலி) அவர்களும், வீரவான் என்று பட்டம் பெற்ற ஒலீதும் யுத்த களத்தில் நின்று புரியும் போரைக் கண்டவர்களெல்லாம் அதிசயித்து நின்றார்கள். ஊழிக் காற்றும், வாடைத் தீயும் கொதித்தெழுந்து ஒன்றோடொன்று மோதிக் கொண்ட பாவனையாய், படைக்கலத்தொனி செவியதிரத் தொனிக்க இருவரும் அடர்ந்து போரிட்டார்கள். இவ்வாறு பொரும்போது அலி (றலி) அவர்கள் திடீரெனப் பொறிதெறித்தாற் போலத் தங்கள் சிறந்த பட்டயத்தினால் ஒலீதை வெட்டினார்கள். அவன் மேற்படி

வெட்டுக்குத் தப்பவசமற்று, நெடுமரஞ் சாய்வது போல நிலத்தில் பிணமாய் வீழ்ந்து மாண்டான்.

பராக்கிரம மிக்க ஒலீது, அலி (றலி) அவர்கள் வாளால் வெட்டுண்டு மாண்டுபோனதை இன்னுமொரு தளகர்த்தனாகிய உத்துபா என்பவன் கண்டு, அகங்காரங் கொண்டு, தனது குதிரையை விசையாய் நடத்திக்கொண்டு வந்தான். உத்பா உக்கிரத்துடன் வரும்போதே, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனைக்கு அதிபதிகளான மூவரில் சைபா, ஒலீது இருவரையுங் கொன்ற இருவர் போக மற்றொரு தளபதியாகிய உபைதா (றலி) எதிர் சென்று, உடனே வாளை யோங்கி உத்பாவை வெட்டினார்கள்; அவன் அதைத் தண்டத்தால் விலக்கிக்கொண்டு வேலை யோங்கி இவர்கள் மேல் எறிந்தான். அந்தவேலை இவர்கள் வாளால் அறுத்து ஒதுக்கிவிட்டு அவனை வெட்டினார்கள். இவ்வாறு உபைதா (றலி) அவரும், உத்துபாவும் ஒருவருக் கொருவர் மாறிமாறி ஆயுதங்களைப் பிரயோகித்து நின்று எதிர்த்தார்கள். அப்போது அவ்விருவர் குதிரைகளும் கொள்ளி சுழற்றும் வட்டம் போலச் சுழன்று சுற்றின. சுழல் காற்றைப் போன்றும், இடியைப் போன்றும், தீயைப் போன்றும் இவர்கள் குதிரைகளே சீற்றங்கொண்டு மோதிக் கொள்ளுமானால், அவற்றில் ஏறியிருக்கும் வீரர்களின் பராக்கிரமத்தை விவரித்துச் சொல்லுபவர் யார்? ஆயுதப் பிரயோகத்தினால் இருவர் உடலிலும் அநேக ஊறுகள் பட்டன. அவ்வூறுகள் வழியே உதிரஞ்சிந்தி உடல்களை நனைத்து இரத்தமய மாக்கிற்று. இத்தனை காயம் வாங்கியும் இருவரும் இளைக்காது நின்று, மேலும் மேலும் உக்கிரங் கொண்டு போரிட்டார்கள். முடிவுகாணுதற்குக் கூடாத விதமாய் இருவரும் வேகந்தணியாமல் போரிடுவதையும், உத்பாவே சற்று மேற்பட்டு அடர்வதையும் அலி (றலி) அவர்களும், ஹம்ஸா (றலி) அவர்களும் கண்டு, இனிநாம் பார்த்து நிற்போமாயின் உத்பாவே மிகைப்பானென்றெண்ணி, தங்கள் குதிரைகளை நடத்தி வந்து மேற்படிகொடியவனை இரண்டு துண்டாகப் பிளந்து தரையில் வீழ்த்தினார்கள்.

சைபா, ஒலீது, உத்பா என்னும் மூன்று தளபதிகளும் மாண்டு போனதைப் பார்த்து நின்ற அபூஜஹல், ஆறாச்சினங்

கொண்டு கண்களில் அக்கினிப் பொறி தெறிக்க அழன்று, தமது சேனையை முன்னிலும் அதிக மும்முரமாக அஸ்ஹாபிகள் மேல் நடத்தினான். அப்போது இருசேனைகளும் ஒன்றாய்க் கலந்து கடும் போர் செய்தன. வீரர்கள் சிங்கம் போல கர்ஜ்ஜித்து, குதிரைகளை வேகமாய்ச் சாரிசெய்து அடர்ந்தார்கள். அஸ்திரங்களாலும், கவண்களாலும் ஆகாயம் மறைக்கப்பட்டது. ரண வீரர்களின் கைப்படைகள் ஒன்றோடொன்று தாக்குவதாலெழும் ஓசையும் பிரகாசமும் அதிகமாயின. வெட்டுண்ட வீரர்களின் உதிரம் பெருகிப் பலவழியிலும் ஆறாயோடிற்று. ஒவ்வொரு வீரர்களும் உதிரத்தால் உடல் நனைந்து செந்நிறமுற்றார்கள். அன்று நடந்த பயங்கரமான யுத்தத்தினால், ஆகாயத்து மேகஜாலங்கள் வெருண்டு பர்வதங்களின் உன்னதமான சிகரங்களில் மறைந்தன. வேங்கைகளைப் போலச் சினந்து நிற்கும் யுத்த வீரர்களின் உக்கிரம் வரவர அதிகரித்து, யுத்தம் மிகப்பெரிதாயிற்று. சொல்லரிய விதமாய் இருவகைச் சேனாவீரர்களும் அடர்ந்து போரிடும்போது, காபிர்கள் அநேகர் மடிந்து போனதுமன்றி, அஸ்ஹாபிகளும் சிலர் ஷஹீதானார்கள். காபிர்களில் அநேகர் மடிந்தும் தைரியங் குன்றாமல் நின்று போரிட்டார்கள். திகில்தரும் இப்போர் நெடு நேரம்வரையும் கலையாமலிருப்பதாலும், அஸ்ஹாபிகள் கொஞ்சம் பேர்களானதாலும் காபிர்கள் கை சற்று மிகைத்தது. அப்படி மிகைத்தும் அஸ்ஹாபிகள் தீனுக்காகப் பாடுபட்டு, தீரங் குன்றாமல் நின்று பகைவரை வெட்டினார்கள்.

சமீபத்தில் முடிவு அறியக் கூடாதவிதமாய் இருதாத்தாரும் அடர்ந்து நின்று யுத்தஞ்செய்வதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, உண்டோ இல்லையோ என்னும்படி சினமெழ ஆரம்பித்து, கருணை நிறைந்த இருகடைக் கண்களும் சிவக்க எத்தனித்தன. காபிர்கள் சிறிதும் இளைக்காமல் வரவர உக்கிரங் கொள்ளுகின்றார்களே யென்னும் கருத்தால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்கள் சிவக்க ஆரம்பித்த போது, அவர்கள் இருதயக் குறிப்பை யுணர்ந்த பூமி "இப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் இடும் கட்டளைக்கு நான் கீழ்ப்படிந்து அவர்கள் ஏவின பிரகாரம் செய்வேன்" என்று வானவர் செவிகளிலும் விழும் வண்ணம் உரத்த தொனியாகத் தொனித்தது. இவ்விதம் பூமி தொனித்து

சொன்னதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு அகங்களித்து, அல்லாஹுத்தஆலாவைத் துதித்து, தங்கள் குதிரையிலிருந்து நிலத்தில் இறங்கி, ஒப்பற்ற வலது கையினால் பூமியின் மணலில் ஒருபிடி யள்ளி, வேதவாக்கியங்களில் சிலதையோதி, யுத்தகளத்தில் வேகத்தோடு நின்று பொரும் காபிர்கள் மேல் வீசியெறிந்து விட்டு, மறுபடியும் குதிரையிலேறிக் கொண்டு தங்கள் சேனையைக் காபிர்கள் மேல் அதிக மும்முரத்துடன் நடத்தினார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் வலது கையால் அள்ளியெறிந்த ஒரு பிடிமண், ஆகாயத்திலுயர்ந்து எங்கும் பரவி, யுத்தகளத்திற் படிந்து, காபிர்கள் ஒவ்வொருவர் முகத்திலும், கண்களிலும், வாயிலும் செருகிற்று. அதனால் அவர்கள் திகில்பிடித்துத் திகைத்து, வலிமையற்று, உற்சாகம் குன்றி, மனம் தடுமாறி, பயங்கரங்கொண்டு மருண்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் காபிர்கள் மேல் எறிந்த ஒருபிடிமண், அக்காபிர்களுக்கு நாசத்தை வருத்தும் நச்சுமருந்தாய்ப் பலவாறு கலக்கிற்று. காபிர்கள் எல்லாரும் ஊமையும், குருடும், செவிடுமடைந்து அஞ்சி அறிவழிந்து சித்தப்பிரமை கொண்டார்கள். காபிர்கள் திடீரென்று செயலற்று ஓய்ந்து நிற்பதை அஸ்ஹாபிகள் கண்டு, எல்லாரும் ஒரு முகமாய்த்திரண்டு சிங்கங்களைப் போல கர்ஜித்து விழுந்து தாக்கினார்கள். மதயானைகளை யொத்திருந்தும் அப்போது எதிர்ப் போர் வசமற்றுப் பிரக்கினை தப்பி நிற்கும் பகைவர்கள், அஸ்ஹாபிகளின் தாக்கால் கலங்கி, பலவழியுஞ் சிதறி தெரிகெட்டு முறிந்து ஓடினார்கள். சிங்கங்களைக் கண்டு யானைகள் வெருண்டோடுவது போலும், புலிகளைக்கண்டு மான்கள் வெருண்டோடுவது போலும், அஸ்ஹாபிகளைக் கண்ட காபிர்கள் ஆற்றமாட்டாமல் புறங்காட்டி யோடினார்கள். படுகளமெங்கும் பிரேதக் குவியல்களும், யானை, குதிரை, ஒட்டகங்களின் சவத்திரள்களும், ஒடிந்து விழுந்த விருதுகளும் யுத்தக்கருவிகளும் கணக்கின்றி மலிந்தன. சற்றும் அடங்காது முழங்கின பெரு முழக்கம் ஓய்ந்தது. காபிர்களுக்குரிய சமஸ்தமும் நாசமாயின. காபிர்களின் பாசறைகள் ஆளரவமின்றி வெறிதாயின. ரணக்களத்தில் பிணந்தின்னும் நாய், நரி முதலான விலங்குகளும், கழுகு, பருந்து, காகம் முதலான பக்ஷிகளும் ஒன்றோடொன்று மோதிநெருங்கின இடைக்

கிடை எண்ணற்ற கவந்தங்கள் கிடந்து துடித்தன. பைசாசங்கள் ஆனந்தம் குடியாயின.

இவ்வாறாகச் சிதறி முறிந்தோடின காபிர்களில் சிலர், உன்னத மான மலைகளிலேறி அங்குள்ள குகைகளில் நுழைந்து பதுங்கிக் கொண்டார்கள். சிலர், படைக்கருவிகளை யெறிந்து விட்டு, குதிரையை விட்டுக்குதித்தோடி சென்று அடவிகளிலும், புதர்களிலும், மரப் பொதும்புகளிலும் ஒளித்துக் கொண்டார்கள். சிலர், சவத்தின் குவியல்களுக்குள்ளே பதுங்கி அச்சத்தால் வெளிவராமல் மறைந்து கொண்டார்கள். சிலர், அறிவழிந்து நிர்மானுஷிய கானல் மிக்க சுரங்களில் சிக்கி தவித்து, இளைப்புற்று மாண்டார்கள். அநேகர் மக்கமா நகரத்தை நோக்கி மனோவேகத்தோடு பறந்தார்கள். இறந்த காபிர்களின் தொகை இவ்வளவென்று அறியக்கூடவில்லை. காபிர்களில் எழுபது பேர் சிற்றரசர்கள் மாண்டார்கள்; எழுபது தலைவர்கள் யுத்தகளத்தில் அஸ்ஹாபிகளிடம் சிறைப்பட்டார்கள். சிறையாக்கப்பட்ட எழுபது பேர்களல்லாமல், நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய அப்பாஸும், அலி (றலி) அவர்களின் தமையனாராகிய உக்கைலும், ஹாரிதுடைய குமாரன் நவ்பலும் பிடிபட்டார்கள். சமர்க்களம் வெறிதான பின் அஸ்ஹாபிகள் அனைவரும் திரண்டு, வெற்றி முரசு முழங்க, சிறையானவர்களை முன் நடத்திக் கொண்டு கூடாரங்களுக்கு வந்தார்கள்.

இரண கம்பீரர்களான அஸ்ஹாபிகள் வெற்றிசிறந்து பாசறை வந்து சேர்ந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிலரை யழைத்து, காபிர்கள் கையால் ஷஹீதான தோழர்களின் ஜனாஸாக்களை யுத்த களத்தில் தேடி யெடுத்து அடக்கஞ் செய்யும்படி ஏவினார்கள். அவ்வாறே அவர்கள் படுகளத்திற்சென்று, காபிர்களின் பிரேதங்கள் கவந்தங்களுக் கிடையில் அங்கொன்று இங்கொன்றாய்க் கிடக்கும் பதினான்கு மையித்துகளையும் எடுத்து அடக்கஞ் செய்தார்கள். பத்று யுத்தத்தில் தீனுக்காகப் பாடுபட்டு உயிர்துறந்து ஸுவர்க்கஞ் சென்ற அஸ்ஹாபிகள் பதினான்கு பேர்களேயாவர். இவ்வளவில் சூரியன் அஸ்தமாயிற்று. அனைவரும் தொழுது முடித்து, இராப் போஜனஞ்செய்து, பகல் முழுதும் போராடின களை தீரும்படி படுத்து நித்திரை செய்தார்கள்.

அன்று இரவுகழிந்து சூரியன் உதயமான அதிகாலையில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து தொழுது முடித்து, அஸ்ஹாபிகளில் ஒருவராகிய இப்னு மஸ்ஊதை யழைத்து "நமது பகைவனாகிய அபூஜஹல் வெட்டுண்டு மரணமடைந்தானோ? குறைப்பிராணியாய் யுத்தகளத்தில் கிடக்கின்றானோ? அல்லது தப்பியோடி விட்டானோ? தெரியவில்லை. இப்போது நீர் படுகளத்திலும், கூடாரங்களிலுஞ் சென்று பார்த்துக் கொண்டுவாரும்" என்று சொல்லி அனுப்பினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு ஏவினவுடன், மேற்படி இபுனு மஸ்ஊது தம்மை யொத்த அஸ்ஹாபிகள் நால்வரைக் கூட அழைத்துக்கொண்டு, அபூஜஹலைத்தேடி ஆயுதபாணியாய் ரணகளத்தை நோக்கிப் புறப்பட்டார்.

இப்னு மஸ்ஊது (றலி)வும் நான்கு அஸ்ஹாபிகளும் வரும் போது யுத்தகளத்தில் கண்டகாக்ஷிகள் அநந்தம். காபிர்களில் உடல் சின்னாபின்னப்பட்டு மாண்டவர்கள் ஒருபுறம்; விலாக்கள் திறந்து மாண்டவர்கள் ஒருபுறம் ; கைகளிழந்து மாண்டவர்கள் ஒரு புறம்; கால்களிழந்து மாண்டவர்கள் ஒருபுறம்; சிரந்தறிக்கப்பட்டு மாண்டவர்கள் ஒருபுறம்; வயிறுபிளந்து குடல்சரிந்து மாண்டவர்கள் ஒரு புறம்; சல்லுக்கருவிபோல மேனிமுழுதும் பாணங்களால் துளைக்கப்பட்டு மாண்டவர்கள் ஒரு புறமாகக் கிடந்தார்கள். அன்றியும் குறைப்பிராணியாய்க் கிடந்து வருந்தினவர்கள் அநேகர். தறிபட்ட சிரங்கள், கைகள், கால்கள் கணக்கின்றிக் குவிந்து கிடந்தன. மூளைகள் சிதறி எங்கும் பரந்திருந்தன. நாய், நரிகள் வளையிட்டுப் பிணங்களைத் தின்று கொண்டு எண்ணில்லாதவை திரிந்தன. கழுகு, பருந்து, காகங்கள் அநந்தம் பிணங்களைக் கொத்திக்கொத்தித் தின்று கொண்டும், ஆகாயத்தில் பந்தலிட்ட பாவனையாய்ப் பறந்து கொண்டு மிருந்தன. பிரவாகித்து ஓடும் உதிரப்பெருக்கில் காபிர்களின் அறுப்புண்ட அவயவங்களும், சேனைவிருதுகளும், உடைப்பட்ட முரசாதி வாத்தியங்களும் அதிகமாய் மிதந்தன. அநேக பிரேதங்கள் முழுகியும், மிதந்தும் கிடந்தன. இவையல்லாமல் பைசாசங்கள் பல ஆநந்தங்கொண்டு, அந்த யுத்தகளமெங்கும் உலாவி நடித்துத் திரிந்தன. பலவித அங்கசேஷ்டைகளான கோரணிகளோடு முகத்தை வலித்துக்கொண்டும், கால்கரங்களை இழுத்துக் கொண்டும், கண்களைப் பிதுக்கிக்கொண்டும், நாவைத் தள்ளிக்

கொண்டும், உதட்டைக் கடித்துக்கொண்டும், பற்களை இளித்துக் கொண்டுங் கிடக்கும் பிரேதங்களின் காக்ஷி, பார்ப்பவர்களுக்கு பயங்கரம் தராமல் போகாது. இவ்வித விரூபமான பிரேதங்களையும் மற்றக்காக்ஷிகளையும் இபுனு மஸ்ஊதும், மற்ற நால்வரும் பார்த்துக் கொண்டு, அபூஜஹலுடைய பிரேதங்கிடக்கின்றதா? அல்லது அவன் குறைப்பிராணியாய்க் கிடக்கின்றானா? எனத் தேடிப்பார்த்துக் கொண்டு போனார்கள். இவர்கள் இவ்விதம் தேடிப்போகையில், அங்கங்கே ஒலீது, உத்பா, ஷைபா என்னும் இம்மூவரும் வெட்டுண்டு மாண்டு கிடப்பதையும், இவர்களை யொத்த உக்பா, உமையா, உமறு என்னும் வேறு மூன்று தலைவர்களும் கொலையுண்டு கிடப்பதையும் கண்டார்கள். பத்று யுத்தகளத்தின் காக்ஷி அஸ்ஹாபிகள் ஐவருக்கும் ஆநந்தத்தை கொடுத்தது. அதனால் ஐவரும் மகிழ்ந்து பின்னும் தேடிக்கொண்டு போனார்கள். போகும் போதும் மேற்படி யுத்தகளத்தின் நடுவே பரமசண்டாளனும் தெய்வத் துரோகியும் துஷ்டப்பகைவனும் பாவியுமான கொடியோனாகிய அபூஜஹல் குறைப் பிராணியாய் கிடப்பதைக் கண்டார்கள்.

நெற்றியில் வியர்வை சிந்த, கண்களிரண்டும் உதிரமயமாய்ச் சிவந்து, முறுக்கின மீசையோடும் உதட்டைக் கடித்தவனாய், சூழ உறைந்த இரத்தத்தில் பலவூறுகள் பட்ட உடலம் நனையக் கிடந்து, நெட்டுயிர்ப்புடன் புரண்டு கொண்டு கிடக்கும் பாதகனாகிய அபூஜஹலை, இப்னு மஸ்ஊது (றலி) கண்டு, அஸ்ஹாபிகள் நால்வருடன் அவனருகிற்போய் நின்று கொண்டு, தமது வாயைத் திறந்து. "ஆண் சிங்கத்திற்கும் வனவேங்கைக்கும் மதயானைக்கும் நிகராய் மக்கமா நகரத்து குறைஷித் தலைவர்கள் எல்லாருக்கும் அதிபதியாய் குடும்பத்திற் சிறந்தவனாய் விளங்கிய பாரக்கிரமமுள்ள அபூஜஹலே, உனது திரவியசெருக்கு, கோத்திரமகிமை, சேனாபலம், சரீர வன்மை, மனோதிடம் எல்லாவற்றையும் பாரதீனமாக அவமே விநியோகஞ் செய்து விட்டாயா? சுவர்க்கத்து அழியா வாழ்க்கையை இழந்தாயே. இது பரியந்தம் நீ போஷித்து வளர்த்த உன்னுடல் நரகத்திற்கு அல்லவா இரையாயிற்று? உனது இருதயத்திற் பதிவிருந்த எண்ணங்களெல்லாம் எங்கே போயின? இவ்விதத் தீமையனைத்தும் உனது அறியாமையால் எங்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் பகை சாதித்து, அவர்களின் மூத்திமார்க்

கத்தை வெறுத்து நின்றதாலல்லவோ உனக்கு வந்து சம்பவித்தன? உனது ஊழ்வினை இன்னபடியென்று அறியுங்காலம் இதுவேயாம். பாவி! போனவை யெல்லாம் போகட்டும்; இனியாவது மோக்ஷந் தரும் சிறந்த கலிமாவைச் சொல்லி, எங்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வழிபடு. இப்போதே இங்கிருந்து உன்னை கொண்டு போய் நபிநாயகமவர்கள் சந்நிதியில் விடுத்து, குறைப்பிராணியாய்க் கிடந்து வருந்தும் உனது மரணத்தருவாயின் அவஸ்தயை நீக்கி, மக்கமா நகரத்திற்கு உன்னையே அதிபனாக நியமிக்கும்படி செய்கிறேன். மனவைராக்கியமான பகையை இத்தருணத்தில் ஒழித்துவிடு; கலிமாவைச் சொல்லி வழிப்படு. மன்னிப்பு பெற்று இரக்ஷிப்பில் மீளு. பகைசாதித்துக் கையுமெய்யுமாய்க்கண்டபலன் போதும். என் சொல்லைக் கேள்'' என இவ்வாறு பரிந்து சொன்னார். இப்னு மஸ்ஊது சொன்ன இச்சொல் அவனுக்குக் கோபத்தீயை எழுப்பின. குற்றுயிராய்க் கிடக்கும் சினம் தணியாதவனாகையால், மேற்படி வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் வெகுண்டு, இப்னு மஸ்ஊதை நோக்கி ''ஏ! மஸ்ஊதுடைய மகனே, எனது மரணவேளையிலும் வந்து கலிமாச்சொல்லும்படி யா கட் டாயப் படுத்துகின்றாய்? இப்படி நீ சொல்லுவது ஜாதிகளில் அறக்கிழான இடைஜாதியிற் பிறந்த மதியல்லவா? உன்னைப் பிளந்தெறியத் தக்கவர் ஒருவரும் இன்றுஎன்னோடில்லை யென்று துணிந்தா இவ்விதஞ் சொல்ல வந்தாய்? எனது ஸ்திதி அபாயமானதால், உன்னிலும் இழிந்த இழிகுலத்தானும் இதனிலும் கொடிய சொல்லைச்சொல்லாமல் இரான். இது என் கால வித்தியாசம்'' என்று சொல்லி இன்னும் பலநிந்தனையான சொற்களையும் சொல்லி நிந்தித்தான். அபூஜஹல் தம்மை நிந்தித்துப் பேசுவதை இப்னு மஸ்ஊது கேட்டு மனம் அழன்று கண்கள் சிவந்து, இடையிலிருக்கும் உடைவாளை வலக்கரத்தி லெடுத்து, இடக்கரத்தால் அவனுடைய நீண்ட தாடியைப் பிடித்து இழுத்துச் சுற்றிக் கொண்டு கழுத்தை அறுத்தார். உடனே நரகஞ்சேர்ந்தான். பிறகு அபூஜஹலுடைய உடலையும், அவன் அருகர்களான ஒலீது, உமையா, உக்பா, உத்பா, உமறு, சைபா என்னும் ஆறு பேருடைய பிரேதங்களையும் தூக்கி அங்குள்ள ஒரு பாழுங்கிணற்றில் எறிந்து விட்டு, அபூஜஹலுடைய தலையை மாத்திரம் கையிற் பிடித்துக் கொண்டு, யுத்தகளத்தைக் கடந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் நால்வருடன் வந்தார்.

சிந்திர புராணம்.

வேறு.

ஆதியைப் புகழ்ந்து காபிர்தம் வலியு
    மற்றது தினெனும் பயிரின்
கோதறுங் கொழுந்துங் குவலயம் படர்ந்த
    தின்றென யாவர்க்குங் கூறித்

தீதுறுங் கொடிய பாதகன் சிரசை
    யகற்றுமி னெனச்செழு மறையின்
மூதுரை தெரிந்த புரவல ருடனு
    மிருந்தனர் மூன்றுநா ளவணின்.

வற்றுறு வளமை மக்கமா நகரார்
    வந்தது மெதிர் மலைத் தவணி
னுற்றது மெழுவ ருடனபூ ஜஹல்த
    னுயிரிழந் ததுவும்வெஞ் சமரில்

வெற்றியு மியாவும் வரிப்பட வெழுதி
    விரைவினின் மாருத மியையா
வொற்றர்கைக் கொடுத்து மதினமா நகருக்
    கனுப்பினே ரெவரினு முயர்ந்தோர்.

வடிவுறுஞ் சாலை வெளியுறு நபிதம்
    மக்களில் றுக்கையா வென்னுங்
கொடியிடை யுதுமான் மனைவிய ரென்னுங்
    குயின் மொழித் திருமயி லிறந்து

படியினி லடக்கி யவருந் திரண்டு
    பள்ளியி லிருக்குமப் போதி
லுடைபடப் பதுறிற் பொருதுவென் றெழுது
    மோலையைக் கொடுத்தன ரோட்டார்.

புவியினிற் புதுமைக் காரண மதினு
    புறத்தினி லுறைந்தவ ரெவரு
மபூஜஹல் படைகொண் டெதிர்த்திறந்
    தனனென் றமறு வாசக மறிந்து

நபிதிரு மகளா ரடைந்தன ரெனுமந்
நடுக்கமுங் கலக்கமு மகற்றிக்
கவலுதற் கரிய வாநந்தப் பெருக்கின்
களிக்கடல் குளித்துமூழ் கினரால்.

பதுறெனும் புடவிவரையடி விடுத்தம்
மாற்றல ரிடத்தினிற் பறித்த
கதிர் கொளுந் துல்புக் காறெனும் வாளைக்
கரதலத் தெழிற வேந்திக்

கொதிநுனை வடிவேன் மன்னவர் சூழக்
குதிரையின் றொகுதிக ளீண்ட
வதிர்முர சமும்பே ரிகைகளு மார்ப்ப
அஹ்மது நபியெழுந் தனரால்.

வசனம்.

இப்னுமஸ்ஊது, அபூஜஹலுடைய தலையை நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் வைத்து, நடந்த வர்த்தமானங்களை சொன்னார். தலையைப் பார்த்தவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆநந்தங்கொண்டு, அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து, அஸ்ஹாபிகளை நோக்கி "எனது அருமையான தோழர்காள்! தீனுக்குப் பிரதி பந்தமாயிருந்து எப்போதும் நம்மை வருத்தின நமது பகை இன்றுதான் தொலைந்தது. இன்றோடே காபிர்களின் பராக்கிரமம் அழிந்தது. இன்றுதான் நமது மார்க்கம் தடையின்றிப் பரவத் தொடங்கிற்று" என்று சொல்லிவிட்டு, இப்பாதகனுடைய தலையை அப்புறப்படுத்துங்களென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அத்தலையை அதிதூரத்திற் கொண்டுபோய் எறிந்துவிட்டார்கள். அன்று காலையிலேயே பகைவரின் பாசறை கொள்ளையிடப்பட்டது.

பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள், தாங்கள் புறப்பட்ட நாள் முதற்கொண்டு நடந்த வர்த்தமானங்களையும், கடும்போர் மூண்டு நிகழ்ந்ததையும், அஸ்ஹாபிகளில் இன்னார் இன்னார் ஷஹீதானார்களென்பதையும், காபிர்களில் அபூஜஹலும் அவன் அருகர் அறுவரும், வேறு குறிப்பிடத் தக்க தலைவர்கள் இத்தனை பெயரும், எண்ணிறந்த காபிர்களும் யுத்தத்தில் மடிந்து போனார்களென்பதையும், பிற விஷயங்களையும் விவரமாக எழுதி, ஒரு ஒற்றர்

கையில் கொடுத்து மதீனமா நகரத்திற்கு அனுப்பினார்கள். அவ்வொற்றர், பாதைகளையெல்லாம் அதிக விரைவாய் நடந்து நடந்து, மதீனமா நகரம்போய்ச் சேர்ந்தார். அன்றைத் தினம் அங்கே நபிநாயகம் (ஸல்) அவர்களின் குமாரத்திகளில் ஒருவரும், மூன்றும் அருகராகிய உதுமான் (றலி) அவர்களின் பிராண நாயகியாருமான றுகையா (றலி) வபாத்தானதால், முஸ்லிம்கள் அனைவரும் திரண்டு, அவர்களை அடக்கஞ்செய்து விட்டு, துக்கத்தோடு தேவாலயத்தில் கூடியிருந்தார்கள். அப்போது மேற்படி ஒற்றர், நபிநாயகம் (ஸல்) அவர்கள் எழுதிய கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுத்தார். அபூலுபானத்து (றலி) அவர்கள் கடிதத்தை வாங்கி, அஸ்ஹாபிகளனைவருக்கும் வாசித்துக் காட்டினார்கள். அபூஜஹலென்னும் மாபாதகன் கொலையுண்டு இறந்து போனானென்பதை அறிந்தவுடன் அஸ்ஹாபிகளனைவரும் முன்னிருந்த துக்கத்தையொழித்து, ஆனந்தப் பிரவாகத்தில் மூழ்கி, அல்லாஹுத் தஆலாவையும், நபிநாயகம் (ஸல்) அவர்களையும் துதித்துப் புகழ்ந்து கொண்டாடி மகிழ்ச்சி கூர்ந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் கடிதமெழுதி மதீனமா நகரத்துக்கு அனுப்பினபின், மூன்று நாள் வரையும் அங்கிருந்தார்கள். நான்காம் நாள் அதிகாலையில் சேனையைப் புறப்படும்படி கட்டளை பண்ணினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை பண்ணினவுடன் காபிர்களின் பாசறையில் சூறையிட்ட திரவியங்கள், வாகனங்கள், கூடாரங்கள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் அதிக காவற்பாட்டுடன் ஒருங்கு சேர்த்துக் கொண்டு, தங்கள் தங்கள் குதிரைகளிலேறி வெற்றி முரசு முழங்க, விருதுகள் நெருங்கப் புறப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் உக்காபு என்னும் வெற்றித் துவஜம் முன் செல்ல சேனை முன் சென்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனையெழும்போது அஸ்ஹாபிகளை நோக்கி "இந்தப் பதுறு யுத்தத்தில் நின்று தீனுக்காகப் பாடுபட்டு போர்செய்த அஸ்ஹாபிகளாகிய முந்நூற்றிபதின்மூன்று வீரர்களுக்கும் சுவர்க்கமாராய முண்டாவதாக" என்று பகர்ந்தார்கள். அதனால் அஸ்ஹாபிகள் ஆநந்தமுற்று மதீனமாநகரத்தை நோக்கி நடந்தார்கள்.

(இந்த ஸ்தானத்தில் துல்பகார் என்னும் இருமுனைப்பட்டயம் காபிர்களிடத்திலிருந்து பறிக்கப்பட்டதாக சீறாப்புராணம் சொல்

ஆகின்றது. மேற்படி வான் இதற்கு முன்னும் அலி (றலி) அவர்கள் வசமிருந்ததாக நாம் இக்கிரந்தத்தில் எழுதியிருப்பதால் அதைப்பற்றி இங்கெழுதவில்லை. இதுவே வாஸ்தவமானால் இவ்வாறே கொள்க.)

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்களும், சேனாவீரர்களும், மதீனமா நகரத்தை நோக்கி நடக்கும்போது, அஸ்ஹாபிகளில் ஒருவர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து "யாறஸூலல்லாஹ்! இங்கிருந்து ஒருகாத தூரத்திலுள்ள கடற்கரையில் அபாஸுபியான் திரண்ட சொத்துக்களுடன் விடுதியிட்டிருக்கின்றான். நாம் நேரே அங்குச் சென்று அவனை அடர்ந்து தாக்கி, மேற்படி சொத்துகளைக் கவர்ந்து கொள்ளலாம்" என்றார். இதைக்கேட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விதஞ் செய்ய சம்மதித்தார்கள். அப்போது, சிறைப்பட்டபின் யுத்தமுண்டான வர்த்தமானங்களெல்லாவற்றையும் விவரமாக அறிந்திருக்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிறிய தந்தையாகிய அப்பாஸ், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "மகனே! தங்களுக்குப் பகைவராலாகும் காரியம் இரண்டிலொன்றை வசமாக்கித் தருவதாக அல்லாஹு தஆலா அறிவித்தானே; அந்தவாக்கு நிறைவேறி, தங்கள் சத்துருக்கள் நாசமானார்கள். ஆனதால், மறுபடியும் வேறுகாரியத்திற் பிரவேசித்து, அடங்கின அமளியை உண்டாக்குதல் நியாயமாகக் காணப்படவில்லை" என்று கூறித்தடுத்தார். இதைக்கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் நியாயம்தானென்று பொருந்தி, அபாஸுபியான் மேற்செல்வதை விலக்கி விட்டு, ஒரேபாதையாய் மதீனமா நகரத்தை நோக்கி நடந்தார்கள்.

வெற்றி சிறந்த நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளென்னும் மகிமையான சேனையும், மலை, வனம், வனாந்திரமெல்லாவற்றையும் கடந்து, மலீக்குஸ்ஸபுறு என்னும் ஸ்தலத்தில் வந்து விடுதியிட்டுத் தங்கினார்கள். அங்கே தங்கின பின், காபிர்களின் கூடாரத்தில் கொள்ளையிட்ட பல பொருள்களையும், யுத்தகளத்தில் மடிந்து போன எழுபது சிற்றரசர்களின் முத்து மாலைகள், கிரீடங்கள் கடகங்கள், அஸ்திர சஸ்திரங்கள், குதிரைகள் எல்லாவற்றையும் பாகித்து, தங்கள் சேனையிலுள்ள வீரர்களுக்குக் கொடுத்தார்கள். பிறகு மேற்படி மலீக்குஸ்ஸபுறுவென்னும் ஸ்தலத்திலிருந்து

பிரயாணப்பட்டு தங்கள் சேனையோடு றவ்கா என்னும் ஸ்தலத்துக்கு வந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் க்ஷேமத்துடன் வெற்றிபெற்று றவ்காவுக்கு வந்துவிட்டார்களென்பதை, மதீனமா நகரத்திலிருக்கும் அஸ்ஹாபிகள் கேட்டு, அநேகர் திரண்டு எதிர் சென்று உபசரித்து அழைக்கும்படி, மதீனமா நகரத்தை விட்டு மேற்படி றவ்கா என்னும் ஸ்தலத்தில் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களையும், சகோதரர்களாகிய மற்ற அஸ்ஹாபிகளையும் சந்தித்து உபசரித்தார்கள். ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி சலாம் சொல்லி முடிந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனாவீரர்களும் எதிர் கொண்டழைக்க வந்த அஸ்ஹாபிகளும் புடைசூழ, வெற்றிக் கொடி முன்செல்ல, முரசு முழங்க, கலிமாவும் தக்பீறும் செவி அதிரத் தொனிக்க, விருதுகள் நெருங்க வானவர் வாழ்த்த அங்கிருந்து நடந்து மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இராஜதானிக்கு வந்த அப்போதே, அபூலுபாபத்து (றலி) வசமிருந்த இராஜ்ஜியபாரத்தையும், இப்னு உம்மிமக்தூம் (றலி) வசமிருந்த மார்க்க விஷயத்தின் அதிகாரத்தையும் ஒப்புக் கொண்டார்கள்.

அன்று தீர்ந்து அடுத்தநாள் காலையில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை விளித்து, பத்று யுத்தக்களத்தில் சிறைப்பட்டவர்கள் எல்லோரையும் தங்கள் சமுகத்திற் கொண்டுவரும்படி உத்தரவு பண்ணினார்கள். அப்போதே அஸ்ஹாபிகளில் சிலர் சிறைச்சாலையிற் சென்று தளை பூட்டியிருக்கும் எழுபது தலைவர்களையும் கூட்டிக்கொண்டு வந்து விடுத்தார்கள். விலங்கிடப் பட்டிருக்கும் எழுபது பேர்களையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து, ஆரிது உடைய மற்றொரு மகனாகிய நலுறு என்பவனையும், உக்குபத் என்பவனையும் கோட்டை மதிலுக்கு வெளியிற் கொண்டு போய்த் தலையைத் தறிக்கும்படி ஆக்ஞை செய்தார்கள். உடனே அவ்விருவரும் இட்ட விலங்குடன் குறித்த ஸ்தானத்தில் கொல்லப் பட்டார்கள். மற்ற காபிர்கள் அறுபத்தெட்டு பேர்களையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் யுத்தம் செய்த வீரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். சில தினங்களுக்குப்பின் மேற்படி அறுபத்தெட்டு பேர்களையும், ஒவ்வொருவருக்கும் நாலாயிரம் நாலாயிரம் திர்ஹம் கிரயமாகக் கொடுத்து மக்கமா நகரத்தார் மீட்டுக் கொண்டு போனார்

கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் என்பவர் தமக்கு ஆரிது உடைய மகன் நௌபலுக்கும், அபூதாலிபு உடைய மூத்த குமாரன் உக்கையிலுக்கும் அப்படியே கிரையங்கொடுத்து மீட்டு, மேற்படி இருவரையும் மக்கமா நகரத்திற்கு அனுப்பினர். அப்பாஸ் என்பவர் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டு ஈமான் கொண்டு முஸ்லிமாய், முஹாஜிரீன்களுக்கும், அன்சாரீன்களுக்கும் உயிர்போன்று சில தினம் வரையும் மதீனமா நகரத்தில் இருந்தார். அப்பாஸ் (றலி) அவர்கள் மக்கமா நகரத்து ஜம்ஜம் என்னும் கிணற்றின் அதிகாரியாகையால், சில நாட்களுக்குப்பின் மக்கமா நகரம் போய்ச் சேர்ந்தார்கள். இதற்கு இடையில் றமலான் மாதத்து முடிவு நெருங்கினபடியால் றமலான் கடைசியில் ஜக்காத்துக் கொடுப்பது தனவான்கள் பேரில் பறுலு என அல்லாஹு தஆலா நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வேத வாக்கியத்தைக் கொண்டு அறிவித்தான். அப்படியே எல்லாரும் கொடுத்து, சந்தோஷத்தோடு இருந்தார்கள்.

70-வது அத்தியாயம்.

சவீக்கு படை யெழுச்சி.

கலி விருத்தம்.

காக்கு நாயன் கருணையி னாலுமுன்
டாக்கு சிரி யஹ்மத ரோடெதிர்த்
தாக்க புசுபி யான் பொர வந்தச
வீக்கு மீதில் விளைந்ததை விள்ளுவாம்.

இதன் பொருள்.

படைப்பினங்கள் யாவையும் காத்து ரட்சிக்கும் வல்ல நாயகனான அல்லாஹு தஆலாவின் கிருபானுகூலத்தினால் உண்டாகும் சிறப்பையுடைய அஹ்மதென்னும் முதல் நாமமுற்ற முஹம்மது நபிநாயகம் (ஸல்) அவர்களோடும், எதிர்த்தவலிமையான அபாஸுபியானென்னும் பெயரையுடையவன் சவீக் என்னும் தலத்தில் படைகளோடு யுத்தம்செய்ய வந்ததில் உண்டானவைகளை சொல்லுகின்றோம்.

சந்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரண முறையின் றினெறி பெருக்கி
யஹ்மதுந் துறையுமக் காலிற்
காருறை பொழில்சூழ் மதீனமா நகரிற்
சூதரிற் கயினுக்கா றென்னும்

வீரர்கள் கூட்டம் வாய்மையை முறித்து
வேறொரு தலத்திடைப் புக்குப்
பாரினில் தீனுக் கிடர்கடத் தினர்க
ளெனுமொழி பகர்தரக் கேட்டார்.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் பத்று யுத்தத்தில் அபூஜஹல் முதலான சத்துருக்களை நாசம் செய்து வெற்றி பெற்று, தீன் என்னும் பரிசுத்தமான மார்க்கத்தை உலகமெங்கும் பரவ விளக்கிக் கொண்டு, மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பரிபாலனம் செய்து வருங்காலத்தில், மதீனமா நகரத்திலுள்ள யூதர்களில் கைனுக்காஉ என்னும் குடும்பத்தார், நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் செய்திருந்த உடன்படிக்கைக்கு விரோதமாய், அங்கிருந்து வேறொரு ஸ்தலத்திற் சென்று இருந்துகொண்டு தீனுக்கு எதிரிடையாகக் கலகம் விளைத்துக் கடும் பகைவராய்ச் சலஞ்சாதித்தார்கள். இச்சங்கதி நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்தது. உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் சில அஸ்ஹாபிகளோடு புறப்பட்டு மேற்படி கைனுக்காஉ என்னும் கூட்டத்தாரிருக்கும் ஊரிற்சென்று, அவ்வூரை முற்றுகையிட்டு, கோட்டை கொத்தளங்களை யெல்லாம் இடித்து நாசம் செய்து, அவர்களையும் அஞ்சத்தக்க விதமாய் அடக்கிவைத்து, சொத்துகளை யெல்லாம் கொள்ளை யிட்டுக்கொண்டு, கைனுக்காஉ குடும்பத்தார் எல்லாரையும் அப்துல்லா இபுனு உபை என்பவர் வசமொப்பிவித்து, அவர்களை நடத்தும் விதமும் அறிவித்து விட்டு, மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

அந்த கைனுக்காஉ என்னும் குடும்பத்தாரின் நிமித்தம் அல்லாஹு தஆலா இடமிருந்து, "இனி நசாறாக்கள், யஹூதிகள்,

காபிர்கள் என்னும் இம் மூவகைப் பகைவருடன் யாதொரு சமாதான உடன்படிக்கை செய்து, அவர்கள் வாக்கை உறுதியென்று நம்பி உறவாடி யிருக்க வேண்டாம்” என்னும் அர்த்தந்தரும் வேத வாக்கியம் ஒன்று நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கிற்று. அன்று தொட்டு மேற்படி பகைவர்களின் உறவை அற ஒழித்தார்கள்.

இது இங்கே இப்படியிருக்க, முன் பத்று யுத்தத்தில் காபிர்களில் அபூஜஹல் முதலானவர்கள் அநேகர் மடிந்து, சேனை முறிந்து விட்டபின், கடற்கரையில் விடுதியிட்டிருந்த அபாசுபியான் யாதொரு சேதமுமின்றி, தனது திரவியங்களோடு க்ஷேமமாய் மக்கமா நகரம் போய்ச் சேர்ந்தான். அபாஸுபியான் மக்கமா நகரம் போய்ச் சேர்ந்த சில தினங்களுக்குப்பின், மக்கமா நகரத்துக் குறைஷித் தலைவர்களில் சிலரை யழைத்து சபையொன்று கூட்டுவித்து, தானே அக்கிராசனாதிபதியா யிருந்து கொண்டு, மேற்படி சபையி லுள்ளவர்களை நோக்கி கீழ்வருமாறு சொல்லுகின்றான்:—

“கனவான்களே! கேளுங்கள். இந்த மக்கமாநகரத்துக் குடும்ப விசேஷ முள்ளவர்களும், ஆண்மை சிறந்தவர்களும், என் உயிரை யொத்தவர்களுமான அநேக வீரவான்கள், பத்றுப் படு களத்தில் மடிந்து போனார்கள். அவர்கள் அவ்வாறு மடிந்து போனதற்கு காரண கர்த்தன் நானேயன்றி மற்றொருவனுமல்ல. மிகவும் எளிய ஒருவனாகிய என்னை வேண்டியே, நமது பிரதான தலைவராகிய அபூஜஹலும், அவருடைய அருகர்களாகிய ஒலீது முதலான அறுவரும் இறந்து போனதால், அது எனக்கு என்றும் தீராத் துயரத்தைத் தராமற் போக வில்லை. என்னையும், என் சொத்தையும் காப்பதற்காக வேண்டி அவர்கள் படையெடுத்துவந்து தங்கள் தங்கள் உயிரைப் பலிகொடுக்கும் போது, நானும் கூடவே நின்று போரிட்டு மடிந்து போகாமல் வேறிடத்தில் பதுங்கியிருந்து, யாதொரு தீங்கு மின்றி க்ஷேமமாக வந்து விட்டே னென்னும் அவமானம் யுகமுடியும் பிரியந்தம் எனக்கு உண்டாய் விட்டது. எனக்கு உதவியாக மாண்டுபோன கனவான்களின் பழிகளனைத்தும் நான் ஒருவனே சுமக்கப் பாத்திரனானேன். எனக்காக பாடுபட்டு நேரிட்ட ஆபத்தை விலக்கி, குறிக்க தக்க வீரவான்கள் பண்

மாண்டுபோக, நான் மாத்திரம் வில்லங்கமின்றி திரவியத்துடன் நகரடைந்து, நல்லுணவுண்டு, நல்லுடையுடுத்தி, மனைவியுடன் புஷ்பசயனத்தில் படுத்துறங்கி உல்லாசத்தோடு சுகித்திருப்பது மிகவும் நன்றோ! ஆ! இதைவிட வேறு நிந்தனை எனக்கு என்ன வேண்டும். மேற்படி தலைவர்களை விருதாவில் உயிரிழக்க செய்தவனும், அப்பழிச்சுமையைச் சுமந்து கொண்டவனும், வெட்கங் கெட்டவனும், உலகத்தார் எந்தக் காலத்திலும் சொல்லிச்சிரிக்க இலக்கானவனும் நானே. இவ்வித இழிவடைந்த என்னை இனி ஆண்மக னென்று யார்தான் சொல்லுவார்? உபகாரஞ் செய்தவர்களுக்குப் பிரதியுபகாரஞ் செய்வது மானுஷிகத்தனமாயிருக்க, என் ஒரு உயிருக்கு உதவி செய்து பலஉயிரைக் கொடுத்த கனவான்கள் பழிக்குப் பிரதி பழிவாங்காமல் நான் விடுவேனானால், இம்மையிலும், மறுமையிலும் எனக்கு நற்பேறில்லை. என்னை வேண்டி மாண்டவர்களோடு நானும் மாண்டுபோவதே சிலாக்கியம். ஆகையால், இனிநான் மவுன மாயிருப்பது நியாயமல்ல. இப்போதே பெருஞ்சேனையொன்று தயார் செய்து கொண்டு, மதீனமாநகரத்தை முற்றுகையிட்டு, முஹம்மதையும், அவன் சேனையையும் சங்கரித்துப் பழிமீட்காவிட்டால், இனி நான் என் மனைவி முகத்தைப் பார்க்கவே மாட்டேன்” என்றான்.

அபாஸுபியான் இவ்வாறு சபதமிட்டுச் சொன்னது தனது குடும்பப் பெருக்கினாலும் திரவியச் செருக்கினாலும் ஜனத் திரளினாலும் தேகபலத்தினாலும் மனோதைரியத்தினாலுமே யன்றி வேறல்ல. இச்சொல் மேற்படி சபையிலிருந்த காபிர்களனைவருக்கும் மார்பில் தைக்கும் பாணத்தை யொத்திருந்தது. ஆனதால், அவர்கள் எல்லாரும் நாம் இப்போது அபாஸுபியானுடைய கருத்திற்கு இணங்கி நடவா விட்டால், நமது வீரம், செல்வம், மகிமை எல்லாவற்றையும் இழந்து அவமான மடைவோமென்று ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டு, அபாஸுபியானை நோக்கி “மாட்சிமைமிக்க கர்பு உடைய குமாரரே! நாங்கள் எல்லோரும் அதிபதியாகிய அபூஜஹல் இறந்தபோதே நமது ஆண்மையும் செல்வமும் வீரமும் அழிந்து போயின வென்று எண்ணியிருந்தோம். இப்போது தங்கள் வாக்கிற் பிறந்த சொல் அப்படிப் போய் விடவில்லை யென்றும், இன்னும் வரவர அதிகரிக்கின்றன வென்றும் நன்றாக அத்தாட்சி பண்ணுகின்றது. அதனால் இனி

நமக்கு யாதொரு குறைவுமில்லை. முன்னிலும் பலமடங்கு ஆண்மையும் வீரமும் பெற்று நாங்கள் சத்துருவை நாசஞ் செய்து வாழ்வோமென்று இதயபூர்வமாக நம்புகின்றோம். இப்போது தாங்கள் இக்காரியத்தில் துணிவுகொண்டபடியால், பத்றுப்படுகளத்தில் மடிந்து போனதலைவர்களின் பழியைத் தடையின்றி வாங்கி, மக்கத்தாருக்கு மகிமையையுண்டு பண்ணி கீர்த்தியுமடைவோம். நமது திறன் இனி மேலேதான் எங்கும் பிரபலமாகும். இனி இவ்விஷயத்தில் தாமதப் படலாகாது. இப்போதே சேனை தயாராகும்படி முயற்சி செய்து புறப்பட வேண்டும்'' என்று ஒருமித்து சொன்னார்கள். வீரர்களனைவரும் தன் கருத்துக்கு உடன் பாடாய்ச் சொன்ன மாத்திரத்தில் அபாஸுபியான் மகிழ்ந்து, பத்றில் மாண்டு போனவர்களின் பழிக்குப் பிரதி பழிவாங்க அனைவரும் யுத்த சன்னத்தராய் வரவேண்டுமென்று கட்டளை பண்ணி விட்டு, தான் மனையில் சென்று ஆகவேண்டிய கருமங்களனைத்துஞ் செய்து முடித்து, ஆயுதங்கள் தரித்துக் குதிரையிலேறிப் புறப்பட்டான். அபாஸுபியான் வந்தபின் மக்கமாநகரத்திலுள்ள தலைவர்களில் இருநூறு பேர்கள் யுத்த சன்னத்தர்களாய் குதிரைகளிலேறி வந்தார்கள். குதிரைவீரர்கள் இருநூறு பேர்கள் அல்லாமல், வேறு காலாட்களும் அநேகர் கூடினார்கள்.

இருநூறு குதிரைவீரர்களும், அநேக காலாட்களும் வந்து கூடித் தயாரானவுடன் அபாஸுபியானே சேனாதிபதியாய் நின்று, கொடி, குடை முதலான விருதுகள் பிடிக்கவும், படை முரசொலிக்கவும், படைக்கருவிகள் பளிர்ப்பளிரென்று மின்னவும் சேனையை நடத்தினான். அபாஸுபியானுடைய தளம் மக்கமாநகரத்தை விட்டுப் புறப்பட்டு, மதீனமாநகரத்து வழியைப் பிடித்து நடந்தது.

வஞ்சகம் மிக்க கர்பு மகன் அபாஸுபியான் தனது தளத்தை அதிக விரைவோடு நடத்திக்கொண்டு, சவீக் என்னும் ஸ்தலத்தைச் சேர்ந்தான். மேற்படி சவீக் என்னும் ஸ்தலம் மதீனமாநகரத்திற்கு நான்கு காததூரத்திலுள்ளது. அந்த சவீக்கில் அபாஸுபியான் பாளையமிறங்கி, கூடாரங்களிட்டுத் தங்கும்படி தனது சேனாவீரர்களுக்குக் கட்டளை பண்ணினான். உடனே பந்திபந்தியாய்க் கூடாரங்களும், இலாயங்களும், வேறு ஸ்தானங்களும் நியமித்தார்கள். நடுவே இட்ட உன்னதமான கூடாரத்தில் அபாஸுபியான் தங்கினான்.

அன்று சூரியன் அஸ்தமித்து இரவானபின் அனைவரும் இராப்போஜனஞ் செய்து, காவல் வீரர்களைப் பாதுகாப்புக்காக நியமித்துவிட்டுப் படுத்து உறங்கினார்கள். எல்லாரும் அயர்ந்து தூங்கும் அர்த்த சாமத்தில், அபாஸுபியான் மாத்திரம் எழுந்து உருவம் மாறிக் கொண்டு ஆயுதபாணியாய், தனது சேனாவீரர்கள் அறியாவண்ணம் பாளையத்தை விட்டு வெளிப்பட்டு, மதீனமாநகரத்தை நோக்கிக் கால் நடையாகத் தன்னந்தனியே நடந்தான். பிறர் அறியாமல் கோலம்மாறிக் கொண்டு தனிமையாய்வரும் அபாஸுபியான் மதீனமாநகரத்தில் பிரவேசித்து, சிலவீதிகளைக்கடந்து, வேறொரு தெருவிற் சென்று அங்கு வசிக்கும் தனக்கு அறிமுகமான அக்தபு உடைய மகன் வீட்டு வாசலிற் சென்றான். அப்போது அவ்வீட்டின் கபாடம் சாத்தப்பட்டிருந்தது. அதனால் அபாஸுபியான், அங்கு நின்று கொண்டு மெல்ல மேற்படி கதவைத் தட்டினான். கதவுதட்டும் சப்தம் அக்தபு உடைய மகன் காதில்விழ, விரைவாய் எழுந்து வந்து, கதவு தட்டினவர் யாரென்று உற்று நோக்கினான். அப்போது கள்ளிருளாகையால், அவன் ஆளையறியாமல் மறுபடியும் கூர்ந்து நோக்கினான். மக்கமாநகரத்து கர்புமகன் அபாஸுபியான் என்று தெரிந்து கொண்டபடியால், மேற்படி அக்தபு மகன் பிரமித்து நின்று பலவாறு சிந்தித்து, இப்போது நாம் இவனுக்கு முகங்கொடுத்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய்ச் சம்பாஷிப்போமானால், பாரதூரமான சங்கடங்கள் விளையுமென்று தீர்மானித்துக்கொண்டு, அபாஸுபியானோடு ஒன்றும் பேசாமல், விரைவாய் மனைக்குள் புகுந்து, திறந்த கபாடத்தையும் சாத்திக்கொண்டு போய்விட்டான். அக்தபுமகன் தன்னை உபசரித்து அழைக்காமலும், ஒன்றும் பேசாமலும் கபாடத்தை சார்த்தி கொண்டு போய்விட்ட பின்னும், அபாஸுபியான் அங்கு நின்று கொண்டு மறுபடியும் அவனை விளித்துக் கதவை தட்டினான். பலதரம் விளித்து விளித்துக் கதவைத் தட்டியும் உள்ளிருந்து யாதொரு சப்தமுங் கேட்காதபடியால் மனம் தளர்ந்து, அங்கிருந்து நடந்து வேறொரு வீதியிற்போய், அங்கே வசிக்கும் தன் இஷ்டனாகிய மஸ்கம் என்பவனுடைய மனை

வாசலிற் சென்று, அங்கும் கபாடம் சாத்தப்பட்டிருந்ததால் அவனை அழைத்துக் கபாடத்தைத் தட்டினான். கபாடத்தட்டும்தொனி மஸ்க்கம் காதில் விழுந்தவுடன் அவன் விரைவா யெழுந்து, இந்த இருட்டு வேளையில் வந்து கதவு தட்டுகிறவர் யாரென்று மனைவியுடன் சொல்லிக்கொண்டு வந்து, கதவைத் திறந்து பார்த்தான். பார்த்த போது அபாஸுஃபியான் நிற்கக்கண்டு, ஆனந்தத்தோடு அவன் கையைப்பிடித்து "இஷ்டரே, இந்த வேளையில் தமியேனுடைய மனையைத் தேடிவந்த காரணமென்ன? உள்ளே வாரும்" என்று சொல்லி மனைக்குள் அழைத்துப் போய்ப் பீடத்திலிருத்தி மதுரமான பலவகைச் சிற்றுண்டிகளும், நீம்பானமும் கொடுத்துப் பசியாற்றினான். மஸ்க்கம் தன்னை உபசரித்து அழைத்துச் சென்று பசியாற்றி, வந்த காரணத்தையும் கேட்பதால் அபாஸுஃபியான் அகங்களித்து, பசியாறித்தீர்ந்தபின் மஸ்க்கமை நோக்கி "எனது பிரியமான சினேகிதரே! நான் இப்போது தனித்து இங்கு வந்த காரணம் வேறே யொன்றுமல்ல. முஹம்மது உடைய காரியா காரியங்களைப் பற்றி விசாரித்து அறியவேண்டியே வந்தேன். இப்போது இந்த மதீனமா நகரத்தின் ஸ்திதி என்ன? முஹம்மது உடைய நிலவரம் எப்படி? அவன் சேனையின் தொகை எவ்வளவு? சேனாவீரர்களின் பலம் எவ்வாறு? இவையனைத்தையும் எனக்கு விவரமாகச் சொல்லு" என்று வினவினான்.

அபாஸுஃபியான் இப்படி வினவினபோது, மஸ்க்கம் அவனை நோக்கி, இந்த மதீனமா நகரம் முழுவதும் முஹம்மதுக்குக் கீழ்ப்படிந்துவிட்டதென்றும், யஹூதிகளிலும், ஸாரூக்களிலும், காபிர்களிலும் சிலர் சிலரே, இப்போது இங்கே குடியிருக்கின்றார்களென்றும், அவர்கள் முஹம்மதுக்குச் சிறிதாவது பிரதிகூலஞ்செய்யச் சக்தியுள்ளவர்களல்ல வென்றும், முஹம்மதுக்கு சேனைத்திரள் அதிகமாயினதென்றும் அச்சேனாவீரரனைவரும் எப்போதும் இரத்தப் பிரியர்களாய் யுத்தஞ் செய்வதற்கே கண்ணுங் கருத்துமாயிருக்கும் மனோதைரியமுள்ள வீரவான்களென்றும், இனி முஹம்மதுக்குப் பகையில்லை யென்றும், தீன் மேலும் மேலும் வளர்ந்து எங்கும் படர்கின்றதென்றும் ஒவ்வொன்றையும் விரித்து விவரத்தோடு சொல்லிக் காட்டினான். மஸ்க்கம் சொன்னவை அனைத்தையும் அபாஸுஃபியான் தலை கவிழ்ந்தவனாகக் கேட்டுக் கொண்டேயிருந்தான். அனைத்தையும் சொல்லித்தீர்ந்தபின் தலையை

நிமிர்த்தி மஸ்க்கமை நோக்கி "நல்லது இருக்கட்டும். நான்போய் வருகிறேன்; விடைகொடு" என்றான். உடனே மஸ்க்கம் அபாஸுஃபியானை மரியாதையாக உபசரித்து விடைகொடுத்து அனுப்பினான்.

மஸ்க்கம் இடத்தில் விடை பெற்றுக்கொண்டு அபாஸுஃபியான் உடனே அவன் மனையைவிட்டு வெளிப்பட்டு, அதிதீவிரமாக மதீனமா நகரத்தைக்கடந்து, சவீக்கில் கூடாரமிட்டிருக்கும் தனது பாளையத்தில் வந்து நுழைந்து படுத்திருந்தான். அப்போது சூரியன் உதயமாயிற்று.

பொழுதுவிடிந்த அதிகாலையில் அபாஸுஃபியான் எழுந்திருந்து, தனது குடும்பத்திலுள்ள தலைவர்களில் நான்குபேரை அழைத்து, அவர்களை நோக்கி "நீங்கள் நால்வரும் சில வீரர்களோடு சென்று மதீனாவின் புறநாடுகளைக் கொள்ளையிட்டு, ஆங்காங்கே குடியிருக்கும் முஹம்மதுக்கு வழிப்பட்டவர்களை யெல்லாம் சங்கரித்து, ஆடு, மாடு, ஒட்டகங்கள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு வாருங்கள்" எனக் கட்டளையிட்டான். இக்கட்டளை பிறந்தபோது மேற்படி தலைவர் நால்வரும் சில ரணவீரர்களோடு புறப்பட்டு, அந்த அதிகாலையிலே மதீனமா நகரத்தைச் சூழ்ந்துள்ள கிராமங்களில் வந்து பிரவேசித்து எதிர்த்தவர்களையெல்லாம் சங்கரித்து, இடையர்களைத் தாக்கி, குதிரைகள், ஒட்டகங்கள், மாடுகள், எருதுகள், கோவேறுகழுதைகள், ஆடுகள் அனைத்தையும் கவர்ந்து, மற்றப் பொருள்களையும் கொள்ளையிட்டார்கள். பகைவர்கள் திடுகூறாய் வந்துவிழுந்து நிஷ்டூரஞ்செய்வதால், அக்கிராமங்களில் வசிக்கும் குடிகளனைவரும் திகில் கொண்டு வெருண்டு, மதீனமாநகரத்தில் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்நிதியில்முறையிட்டார்கள். இக்கலகத்தை நபிநாயகமவர்கள் கேட்டு, அங்கிருந்த ஒற்றர்களில் ஒருவரை நோக்கி "இதென்ன விபரீதம் இக்கலகத் தலைவன் யார்?" எனக்கேட்டார்கள். அப்போது அவ்வொற்றர் எழுந்து நின்று "யாறஸூலல்லாஹ்! மக்கமா நகரத்து ஹர்பு உடையமகன் அபாஸுஃபியான் என்பவன், சில ராணுவங்களோடு சவீக் என்னும் ஸ்தலத்தில் வந்து பாளையமிட்டுக் கொண்டிருக்கிறான். அவன் தான் இவ்வித நிஷ்டூரமான கலகத்தைக் கிளப்பி, கிராமங்களைச் சூறையாடுகிறான்" என்று விடைபகர்ந்தார்.

மாற்றார்கள் திரண்டுவந்து கலகம் விளைக்கிறார்களென்னும் சொல் செவிகளில் புகுந்த மாத்திரத்தில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூலுபாபத்து (றலி) யை தங்கள் பிரதிநிதியாக நியமித்து விட்டு, சில அஸ்ஹாபிகளாகிய ரணசிங்கங்களோடு மதீனமா நகரத்தை நீங்கி, மாற்றாரைத் தேடிப் புறப்பட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ராணுவ வீரர்களோடு சிறிது தூரம்வரையும்நடந்து, அங்கேஎதிர்ப்பட்ட கறுகறு என்னும் ஸ்தலத்தில் வந்து பாளைய மிட்டார்கள். இச்சமாச்சாரம் அபூஸுப்யான் காதில் விழுந்தது. நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனையோடு புறப்பட்டு வந்திருப்பது தன்காதில் விழுந்தபோது, தான் ஷாம் இராஜ்ஜியத்திலிருந்து வரும்போது வழியில் சிக்கிக்கொண்டதும், அபூஜஹ்ல் முதலானவர்கள் உதவி செய்ய வந்து மாண்டு போனதும், தான் உயிர் தப்பிப் பிழைத்துப்போய் மக்கமா நகரஞ் சேர்ந்ததுமான ஆபத்துக்களெல்லாம் ஞாபகத்தில் வந்தன. அதனால், இப்போதும் நாம் இங்கே அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வோம், பயங்கரமான தீங்குகள் வந்து சம்பவிக்குமே என்று மனம் தளர்ந்து பலம் குன்றி, சூரியன் அஸ்தமிக்கும் வரையும் அதே சிந்தனையா யிருந்தான். பிறகு சூரியன் அஸ்தமித்து இருளாயிற்று.

எங்கும் இருள் பரந்த பின் திகில் கொண்டிருக்கும் அபூஸுப்யான், தன்னந்தனியேயிருந்து பலவாறுசிந்தித்து, இப்போது நாம் நமது சேனையோடு புறப்பட்டு, வந்த வழியைப் பிடித்துச் செல்வோமானால், முஹம்மது உடைய ராணுவம் கட்டாயம் நம்மைப் பின் தொடர்ந்து வரும். அப்போது எதிர்த்து நிற்க நம்மால் முடியாது. ஆனதால் இப்போதே நாம் மாத்திரம் பிறரறியா வண்ணம் தனிமையாய்ப் புறப்பட்டு, ஒளித்தோடிப் போய்விடுவதுதான் புத்தி சாலித்தனமென்று எண்ணிக் கொண்டு, சேனைமுதலானதெல்லாம் இருந்தபடியிருக்க, அவன் மாத்திரம் ஒருவருமறியாமல் ஒளித்து ஓடிவிட்டான்.

தங்கள் தளபதியாகிய அபூஸுப்யான் ஒளித்தோடிப் போய் விட்ட சங்கதி, அப்போதே பாசறை முழுதும் பிரஸ்தாபமாயிற்று. நேரிட்டிருக்கும் கஷ்டகாலத்தைப் பற்றி சிந்தித்துத் தப்பவழி தேடிக்கொண்டு அடங்கியிராமல், சும்மாவிருந்த குறைஷிகளை

வலிய இழுத்துவைத்து வீறுபேசி, பழிவாங்க வந்த திடபுருஷனே தரிப்பிடமின்றி இருட்காலந்தேடி ஓடிவிடுவானானால், அவனுக்கு வழிப்பட்டுப் பின்பற்றி வந்தவர்கள் கதி எப்படி முடியும்? அனைவரும் அஞ்சித் தடுமாறி, தங்கள் படைக்கலன்கள், குதிரைகள், வேறு யுத்தோபகரணங்கள் எல்லாவற்றையும் கூடாரங்களோடு போட்டு விட்டு. நின்ற நின்றபடியே ஓட்டம் பிடித்துப் போனார்கள். அன்றிராப் பொழுதிலேயே எல்லாரும் ஓடிவிட்டார்கள். பிறகு சூரியன் உதயமாயிற்று.

பொழுது விடிந்த அதிகாலையில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனாவீரர்களோடு கறுகறுவிலிருந்து புறப்பட்டு, சவீக் என்னும் ஸ்தலத்திற்கு அபூஸுப்யானைத் தேடிவந்தார்கள். சவீக்கில் வந்து பார்த்தபோது ஆளரவமின்றி கூடாரங்களும் சாமான்களும் மாத்திரமிருந்தன. போராடப் பிரியங்கொண்டு வந்த வீரர்கள் கண்ணில் பகைவர் ஒருவரும் எதிர்படாத படியால், சற்று நேரம் அந்த ஸ்தலத்தில் தங்கி களைப்பாறி யிருந்து, பிறகு பகைவருடைய பண்டங்கள், கூடாரங்கள் எல்லாவற்றையும் எதிர்பாரின்றித் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் ராணுவங்களுக்கு யுத்தோபகரணம் அதிகமாகும் வண்ணம், சும்மா விருந்த அபூஸுப்யான் படைக் கலங்களையும், கூடாரங்களையும் சேகரித்து வலியகொண்டு வந்து கொடுத்து உதவினது வியப்புத்தானே? இதைப் பற்றி நபிநாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு தஆலாவை மிகப்புகழ்ந்து துதித்தார்கள். பகைவருடைய பொருள்களெல்லாவற்றையும் கைக்கொண்டபின், அவர்களின் கூடாரங்களையும் பெயர்த்துப் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். சர்வ சாமான்களையும் எடுத்துக் கொண்டபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ராணுவவீரர்களுடன் மேற்படி சவீக்கு என்னும் ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு, மதீனமாநகரம் வந்து சேர்ந்து, அபூலுபாபத்து (றலி) வசமிருந்த இராஜ்ஜியபாரத்தை ஒப்புக்கொண்டு அரசு செய்திருந்தார்கள்.

71-வது அத்தியாயம்.

குதிரிப் படை யெழுச்சி.

கலி விருத்தம்.

முதிரியாக முஹம்மத ரோடுமே
யெதிரி யாயிக லெண்ணி யிணக்கத்தை
யதிரி யின்றி முறித்தடை யார்கள்தாம்
குதிரி மீதினிற் செய்தவை கூறுவாம்.

இதன் பொருள்.

முதிர்ந்த தகுதியையுடைய முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களோடும், செய்த சமாதான இணக்கத்தை முறித்துப் பயமின்றி எதிரியாகிப் பகையை யெண்ணி சத்துருக்களாகிய காபிரீன்கள், குதிரி யென்று பெயர் சொல்லப்படும் தலத்திற் செய்தவைகளைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கொற்றவெண் கவிகைநீழ லுலகெலாங்குளிரச்செய்து
வெற்றிகொண் டிஸ்லா மோங்க விறைபி யிருக்கு நாளிற்
பற்றலர் தேயந்தோறும் பற்பல்கா லிருந்து சாவு
மொற்றரி லொருவர் தோன்றிச் சிலமொழி யுரைப்பதானார்.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து அரசுசெய்து கொண்டு, தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை விளக்குங்காலத்தில், மாற்றார்களின் சமாசாரங்களை அடிக்கடி அறிந்து வந்து தெரிவிக்கும் ஒற்றர்களில் ஒருவர், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து நின்று, சலாம் பகர்ந்து "யாறஸூலல்லாஹ்! நமது மதீனமா நகரத்திற்குத் தென்கீழ்பக்கம் எண்காத வழித்தூரத்தில் குதிரி என்று ஒரு ஊர் இருக்கின்றது. அவ்வூரில் பனீகலீமுக் கூட்டத்திலுள்ள காபிர்கள் அநேகர் வாசஞ் செய்கின்றார்கள். மேற்படி கூட்டத்தார் நமது வேதத்தையும் மார்க்கத்தையும் சுத்த அபத்தமென்று நிந்தித்து, கலிமா சொன்னவர்களைக் கண்டால் பிடித்து கிஷ்டங்கள் செய்து

வருத்தி, அச்சமற்றுக் கலகஞ்செய்த வண்ணமாயிருக்கின்றார்கள்" என்று சொன்னார். ஒற்றர் சொன்ன இச்சொல்லை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, உடனே இப்னு உம்மிமகதூம் (றலி) அவர்களைப் பிரதிநிதியாக நியமித்து விட்டு, அஸ்ஹாபிகளான சிலகுதிரை வீரர்கள் புடைசூழப் புறப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும், ராணுவங்களும் முரசாதி வாத்தியம் முழங்க மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, மலை, வனம், வனாந்தரங்களை யெல்லாங் கடந்து, குதிரியை நோக்கி நடந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை எண்காத வழியையும் விரைவாக கடந்து நடந்து, குதிரிக்குச் சமீபத்திலாயிற்று. அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் படையெடுத்து வருகிற சங்கதி தங்களுக்கு எட்டியதால், குதிரி அரசனும், குடிகளும், பனீஸலீம் என்னும் கூட்டத்தார்களும் நடுநடுங்கி, குதிரியை விட்டுப் புறப்பட்டுப் பல திசையும் சிதறி ஓடிப் போய் விட்டார்கள். தாங்கள் குதிரியை அடுக்கு முன்னே, அவ்வூரார் அஞ்சி ஓடிவிட்ட சங்கதியை ஒற்றர் மூலம் அறிந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் நகைத்து, வெற்றிக்கொடி முன்செல்ல, வீரர்கள் ஆர்ப்பரிக்க, வெற்றி முரசு முழங்கத் தங்கு தடை சிறிதுமின்றி மேற்படி குதிரிக்குள் பிரவேசித்து, பகைவர்களின் சொத்துக்களை யெல்லாம் சூறையாடினார்கள். அன்றியும், ஒட்டக முதலான வாகனங்கள், சினைமாடுகள், பாலாடுகள் அநந்தம் அகப்பட்டன. அபரிமிதமாகக் கிடைத்த பொருள்கள் எல்லாவற்றையும், பொதிபொதியாக ஒட்டகாதி வாகனங்களின் மேலேற்றிக்கொண்டும், கவர்ந்த நிரைகளையும் சாய்த்துக் கொண்டும் நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் குதிரியைவிட்டு நடந்து மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள். குதிரியில் சூறையாடிய பொருள்கள் அநந்தம்; ஒட்டகங்கள் மாத்திரம் ஐந்நூறு. மேற்படி சொத்துகளையெல்லாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விட்டு, மேற்படி ஐந்நூறு ஒட்டகங்களிலும் நானூறு ஒட்டகங்களை அஸ்ஹாபிகளுக்கு மார்க்க நியமகப்படி பகிர்ந்து கொடுத்து, மீந்த நூறு ஒட்டகங்களையும் பொக்கிஷத்திற்காகத் தங்கள் வசம் வைத்துக் கொண்டார்கள். மேற்படி குதிரிப் படையெழுச்சியால் அஸ்ஹாபிகளில் அநேகர் திரவியவான்க ளானார்கள்.

ஒவ்வொரு படை யெழுச்சியிலும் திரண்ட சொத்துகள் கிடைப்பதாலும், பீசபீலில் வெட்டுண்டு இறக்க வேண்டுமென்னும் பேராசையாலும் அஸ்ஹாபிகளுக்கு எப்போதும் படையெழுச்சியிலேயே விருப்ப முண்டாயிருந்தது. அடிக்கடி படையெடுத்து மாற்றாரை அடக்க வேண்டுமென்று நபிநாயகம் (ஸல்) அவர்களும் விருப்பங் கொண்டிருந்தார்கள். அல்லாஹுதஆலா அவர்கள் எண்ணப்படியே நிறைவேற்றி வந்தான்.

72-வது அத்தியாயம்.

தியம்று படை யெழுச்சி.

கலி விருத்தம்.

காயம்பெறு காபிர்க ளாங்கத்துபான்
மாயம்பெறு வம்பர்கள் தங்களைநீ
நேயம்பெறு பாக்கிட நேர்றஸூல்
தியம் புது சென்றுறல் செப்பிடுவாம்.

இதன் பொருள்.

குற்றம் பெற்ற காபிர்களாகிய கத்துபானென்னும் வஞ்சகமுற்ற கூட்டத்தார்களான வம்பர்களைத் தீனுல்இஸ்லாம் மார்க்கத்தில் நேய முள்ளவர்க ளாக்கிவைக்க, நேர்நெறியையுடைய றஸூல் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல்(ஸல்) அவர்கள், தியம்ரு என்று பேர் சொல்லப்படும் ஊரில் போய், அங்கு நடத்தியதைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பானலங் கழனி சூழ்ந்த நசுதெனும் பதியி லுறுங்
கோனிலை பொருந்தி வாழுங் கத்துபான் கூட்டத் தாரைத்
தீனிலை படுத்த வேண்டுஞ் செயலினைக் கருத்துட் கொண்டார்
மாநிலம் பாதந் தோயா வள்ளன்மா முஹம்ம தன்றே.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அடிக்கடி சத்துருக்களை சங்கரித்து, திரவியங்களைக் கவர்ந்து, திக்விஜயம் செய்து கொண்டிருந்தார்கள். அதனால், பகைவர்களுக்கு அச்சம் மிகுந்து,

சித்த சமாதானமின்றி வில்லங்கப்படும் பயங்கரமான ஆபத்துகள் அடுத் தடுத்து நேரிட்டுக் கொண்டே யிருந்தன. அக்காலத்தில் நஸ்து என்னும் நகரத்தில் கத்பான் குடும்பத்தார்கள் மிகவும் பலமான அந்தஸ்தில் செல்வத்தோடு வாழ்ந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தா ரனைவரையும் தீனில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்னும் விருப்பம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இருதயத்திற் பிறந்தது. கத்பான் குலத்தாரைத் தங்கள் மார்க்கத்தில் சேர்த்து விடவேண்டு மென்னும் விருப்பமுண்டானபோது, நபிநாயகம்(ஸல்) அவர்கள் தங்கள் பிரதிநிதியாக உதுமான் (றலி) அவர்களை மதீனமா நகரத்தில் நியமித்து விட்டு, அஸ்ஹாபிகள் சிலர் புடைசூழப் புறப்பட்டு மேற்படி நசுது என்னும் நகரத்திற்குச் சென்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் நஸ்து நகரம் போனபோது, அங்கு வாழும் கத்பான் குலத்தார் திரண்டு வந்து உபசரித்து அழைத்துச் சென்றார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் விருப்பத்தின் படி மேற்படி கத்பான் குலத்தார் அனைவரும், ஈமான் கொண்டு முஸ்லிமானார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் கோரிய கருமம் நிறைவேறினபின் ஒருமாதம் வரையும் நஸ்து நகரத்திலிருந்து, பிறகு கத்பான் குலத்தார்களால் மகிமையும் மரியாதையும் உபசாரணையும் செய்யப் பெற்று, மனமகிழ்வோடு புறப்பட்டு, மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு நாள் சில ஒற்றர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று, "யாறஸூலல்லாஹ்! அடுத்தடுத்து ஷாம் இராஜ்ஜியம் சென்று வர்த்தகம் செய்து வரும் மக்கமா நகரத்தார் அஞ்சி அந்த இராஜ்ஜியத்து வியாபாரத்தை நிறுத்தி விட்டார்கள். தற்காலம் இராக்கு இராஜ்ஜியத்திற் போய்த் தொழில் செய்துவரத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதற்குச் சில தினங்களுக்கு முந்தி, நமது பகைவனாகிய அபாஸுபியான் சில வர்த்தகர்களோடு விலையேறப் பெற்ற சரக்குகளைக் கொண்டு விற்பனைக்காக மேற்படி இராக்குக்குப் போயிருக்கின்றான். இன்னும் அவன் அங்கிருந்து திரும்பவில்லை" என்று சொன்னார்கள்.

இச்சொல்லைக் கேட்டவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமுற்று, ரணசிங்கங்களாகிய அஸ்ஹாபிகளில் சில குதிரை வீரர்களை ஒரு சேனையாகச் சேர்த்து, அவர்களுக்குத் தளபதியாக

காரிதாவுடைய குமாரர் ஜைது என்பவரை நியமித்து, அவர் கையில் ஒரு வெற்றி துவஜமுங் கொடுத்து, "ஜைதே! நீர் நமது சேனை வீரர்களோடு சென்று, இராக்கிலிருந்து மக்காவுக்கு வரும் வழியைக் கட்டிக்கொள்ளும். அபாஸுப்யான் வருவான்; அவன் வரும்போது அவனையும், அவன் வீரர்களையும் அடர்ந்து தாக்கி, திரவியங்களனைத்தையும் கவர்ந்து கொண்டு வந்து சேரும்" என்று கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

ஜைதும் அவர் சேனை வீரர்களும், நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்து விடைப் பெற்றுக்கொண்டு, குதிரைகளில் ஏறி மதீனமா நகரத்தை விட்டு, அநேக மலைகள், குன்றுகள், அருவிகள், வனங்கள், வனாந்தரங்கள், சிற்றூர்கள் அனைத்தையும் சில நாட்கள் வரை கடந்து, மக்கமா நகரத்திலிருந்து இராக் இராஜ்ஜியம் செல்லும் பாதையில் நடந்து சென்றார்கள். அந்த பாதையில் சில தூரம் சென்று, இராக் இராஜ்ஜியத்துக்கும், அறபு இராஜ்ஜியத்துக்கும் மத்தியிலுள்ள நியம்று என்னும் நகரத்தையடுத்தார்கள். இராக்குக்குப் போன வர்த்தக அறபிகள் மேற்படி நியம்று நகரத்தின் மார்க்கமாகத்தான் வரவேண்டும். ஆனதால், ஜைது தமது சேனைவீரர்களை நியம்று நகரத்திற்கு அயலிலுள்ள ஒரு வனத்தில் மரச்செறிவுகளில் கூடாரங்களிட்டுத் தங்கியிருக்கும்படி நியமித்து விட்டு, தாமும் தமது அடிமைகளில் நான்குபேருமாக நியம்றில் போய் ஒரு மனையில் வாசஞ் செய்து கொண்டிருந்தார்கள். சில தினங்களுக்குள் அபாஸுப்யான் வருகிறானென்னும் சமாசாரம் ஜைது காதில் விழுந்தது. உடனே அவர் தமது அடிமைகளோடு வீரர்களிருக்கும் வனத்தில் வந்து, அனைவரையும் யுத்த சன்னத்தர்களாக்கி, தாமும் ஆயுதபாணியாய், இருபுறமும் தருக்களடர்ந்த பெரிய வனமுள்ள பாதையில் காத்து நின்றார். அப்போது, அபாஸுப்யான் அநேக வர்த்தகர்களுடன் வருவதை ஜைதும் அவர் வீரர்களும் கண்டு, சிங்கங்கள் போலக் கர்ஜ்ஜித்துத் திடுகூறாய்ப் போய்விழுந்து தாக்கினார்கள். நினையாவிதமாகத் தங்கள்மேல் படை வந்து விழுந்ததை அபாஸுப்யானும், மற்றவர்களும் கண்டு நடுமாறின போதிலும், திரவியத்தைக் காக்கும்பொருட்டு சற்றுநேரம் அஸ்ஹாபிகளோடு எதிர்த்து நின்று போரிட்டார்கள். ஆனாலும், அவர்களால் சாதிக்க முடியவில்லை. அதனால், அபாஸுப்யானும், அவனைச்சேர்ந்த வர்த்தகர்களும் சற்றுநேரத்திற்குள் நில்லென்று

சிதறி, திரவியாதி யெல்லாப் பொருள்களையும் இழந்துவிட்டு மக்கமா நகரத்தை நோக்கி ஓடிவிட்டார்கள்.

உடனே ஜைதும், அவர் வீரர்களும் பகைவருடைய திரண்ட திரவியங்களையும், மற்றப் பொருள்களையும் கைக்கொண்டு, அங்கிருந்து சில தினத்தில் மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள். உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி சொத்துக்களை முறைபடி அஸ்ஹாபிகளுக்கு பாகித்துக் கொடுத்தார்கள்.

73-வது அத்தியாயம்.

அபூறுபிகு வதை யுண்டது.

கலிச் சந்தவிருத்தம்.

கவிராஜர்கள் புகழ்பாடிடு ஹபிபாமுஹம் மதர்தீ
னவமாமென வுறுவோர்களை நவையார் கொடுமைகளே
புவிமீதுசெய் குவதேயொரு பொருளாயுடையவனும்
அபிறுபிகுவதை யானதை யழகாய் மொழி குவமால்.

இதன் பொருள்.

கவிதை பிரபந்தங்களுக்கு இராஜரான கஃபிலான்இபுனு தாபித் (றலி) அவர்கள் முதலான புலவர்கள் புகழ்ந்து பாடும் அல்லாஹுத் தஆலாவுடைய ஹபீபென்னுந் தோழரான நபி முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களின் தீனென்னும் மார்க்கம் அற்புதத்தையுடைய தென்று, அம்மார்க்கத்தில் வந்தவர்களைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் குற்றமுற்ற கொடுமைகளையே, இந்த பூமியினிடத்திற் செய்வதே தனக்கொப்பற்ற பொருளாகக் கொண்டிருப்பவனாகிய அபூறுபிக் என்னும் பெயரையுடையவன் வதைப்பட்டிறந்ததை அழகாகச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மக்கமா நகரில் வாழுங் காபிரி லொருவன் மாறு
பிக்யன மென்ப யாவும் விளைத்திடுங் கொடிய தீரான்
மைக்கலச் சுயருஞ் சோலைக் கைபறில் வாள்வோ னாதுந்
துக்கமு மிழிவும் வீறும் விளைப்பது துணிந்து நின்றோன்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல) அவர்கள் மதீனமாநகரத்தி லிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து வருங்காலத்தில், கைபறு நகரத்தில் அபூருபிக் என்னும் சண்டாளன் ஒருவன் இருந்தான். அவன் முந்தி மக்கமா நகரத்திலுள்ளவன். பிந்தி யாது காரணத்தினாலோ சுயநகரத்தை விட்டு அந்நியநகரத்தில் குடியிருக்கும்படி நேரிட்டது. மேற்படி அபூருபிக் உள்ளநாள் உள்ள மட்டும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் பேரில் பகை முதிர்ந்து வைராக்கியஞ் செய்யும் வஞ்சக நெஞ்சையுடையவன். கொலை, பொய், களவு, சுராபானம், குருநிந்தை என்னும் இப்பஞ்சபாதகங் களுக்கும் உறைவிடமானவன். பரம துஷ்டனும், தெய்வத் துரோகியும், அவிவேகியுமானவன் யாரென்று தேடினால், அக் காலத்தில் மேற்படி அபூருபிகையே பார்க்கலாம். அத்தனை தூரம் கொடியோனாகிய அவன், நபிநாயகம் (ஸல்) அவர்களின் திரு நாமத்தைச் சொன்னவர்களைப் பிடித்து நிஷ்டூரஞ் செய்து வந்தான்; முஸ்லிமானவர்களை தன்கண்களாற் காணச்சகிக்க மாட்டான். நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பகைத்து அங்கங்கே வசிக்கும் காபிர்கள் எல்லாருக்கும் தன்னாற் கூடியவரையும் உதவி செய்து, பாடுபடும் சண்டாளத்துவ முடையவன். தயவு தாக்ஷண்ணியம் என்பவற்றில் அணுவளவும் அவனிடம் இல்லை. முடிவில் அவனை இபுலீஸ்உடைய மக்களில் ஒருவனென்றே சொல்லவேண்டும்.

இவ்விதக் கொடிய அபூருபிகு, கைபறு நகரத்திலிருந்து கொண்டு பிரதி தினமும் காபிர்களுக்கு உபகாரமும், முஸ்லிம் களுக்குத் தீங்கும் செய்த வண்ணமா யிருப்பதை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் முந்தியே கேள்வியுற்றிருந்தார்கள். ஆனாலும், அவனுக் குக் குறித்திருக்கும் காலவிதி வரும் வரை பொறுத்திருந்தார்கள். அக்காலவிதி சமீபமாய் விட்டதால், அஸ்ஹாபிகள் சிலர் அவனுடைய நிஷ்டூரத்தைப்பற்றி ஒரு நாள் நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து அதிகமாக முறையிட்டார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் சபையிலிருக்கும் வீரர்களில், உதைக் உடைய மக்களிலொருவராகிய அப்துல்லாஹ்வை அருகி லழைத்து "எனது பிரியமுள்ள அப்துல்லாஹ்வே! நமது விரோதி

களில் மிகவுங் கொடியோனாகிய அபூருபிகு என்பவன் கைபறு நகரத்திலிருந்துகொண்டு நமக்கு இடையூறுகளை விளைத்தவண்ணமா யிருக்கின்றான்; இனிநாம் அவனைக் கொன்றுவிடத்தான் வேண்டும். ஆனபடியால், நீர் இந்த மதீனமாநகரத்து அன்சாரீன்கள் பத்து பேரைக் கூட்டிக்கொண்டு கைபறுக்குப்போய், அந்தச் சண்டாளனை அவ்வூர்க் காபிர்கள் அறியாதபடி கொன்றுவிட்டு வாரும். உமக்கு அல்லாஹுத்தஆலா துணைசெய்வான்" என்று சொன்னார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்விதஞ் சொன்னவுடன் அப் துல்லாஹ் மனம் மகிழ்ந்து விடைபெற்றுக் கொண்டு, அனைவருக் கும் யாத்திரை பகர்ந்து, அன்சாரீன்களில் பத்துப் பேர்களையும் அழைத்துக்கொண்டு, ஆயுதங்களணிந்து, குதிரையிலேறி மதீன மாநகரத்தை விட்டுப்புறப்பட்டார்.

அப்துல்லாவும், அன்சாரீன்கள் பதின்மரும் குதிரைகளில் ஏறி மதீனமாநகரத்தை விட்டுப் புறப்பட்டு, கைபறு நகரத்தை நோக்கி நடந்தார்கள். சில தினங்களுக்குள் இப்பதினொரு வீரர்களும் கைபறு நகரத்தை யடுத்து, அதன் கோட்டை வாசலில் சென்றார் கள். இவர்கள் இங்கிருந்து புறப்படும்போதே சில வர்த்தகப்பொருள் கள் தயார் செய்து கொண்டு போயிருந்தபடியாலும், எங்கும் கலக மான காலமானபடியாலும், இவர்கள் கைபறு நகரத்திற்கு அந்நியர் களானபடியாலும், அவ்வூரார் தங்களையடுத்து "யார்? என்ன? எங்கு வந்தீர்கள்" என விசாரிக்க இடங்கொடாமல், வர்த்தகர்களைப் போல கோட்டை வாசலிலேயே விடுதிவிட்டு, தாங்கள் கொண்டு போயிருந்த சொற்பமான வர்த்தக சரக்குகளை வைத்து விற்றுக் கொண்டு, இரண்டு நாள் வரையும் இருந்தார்கள்.

மூன்றாம் நாள் சூரியன் அஸ்தமித்து இரவானபோது, தமது தோழர்கள் பதின்மரையும் விடுதியிலேயே யிருக்கும்படி நியமித்து விட்டு, அப்துல்லாஹ் மாத்திரம், எழுந்து, இடையில் குற்றுடைவா ளொன்றை மறைவாய் வைத்துக்கொண்டு பாதசாரியாகப் புறப் பட்டார். அப்போது மேற்படி கோட்டை வாசல் கதவு சாத்தப் பட்டிருந்தது மன்றி, அநேக காவல்வீரர்களும் அங்கே படுத்திருந் தார்கள். மேற்படி கதவு பூட்டிடப்பட்டிருந்த படியால், அப் பூட்டின் திறவுகோல் இக்காவல் வீரர்கள் வசந்தான் இருக்கு

மென்று அப்துல்லாஹ் எண்ணி, அயர்ந்து தூங்கும் காவல் வீரர்களறியாமல் அரவமின்றித் திறவுகோலைத் தேடினார். அத்திறவுகோல் அங்கிருந்து இவர் கையில் அகப்பட்டது. உடனே அப்துல்லாஹ் மனம்பூரித்துப் பூட்டைத் திறந்து கபாடத்தைத் தள்ளிக்கொண்டு ஊருக்குள் தனிமையாய்ப் பிரவேசித்தார்.

தந்திரமதியும் மனோதைரியமு முள்ள வீரம் மிக்க அப்துல்லாஹ் ஊருக்குள் புகுந்த போது கைபறு நகரம் அரவமொடுங்கியிருந்தது. அதனால், இவர் தன்னந் தனியே நடந்து, அந்நகரத்து அலங்காரமான வீதிகளையும், உன்னதமான கூடகோபுரங்களையும், விசித்திரமான மாட மாளிகைகளையும் கண்டு களிப்புற்று, மேற்படி அபூருபிக் என்னும் சண்டாளன் வாழும் மாளிகை வாசலிற் சென்றார். அப்போது அவன் மாளிகையில் ஆட்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அதை அப்துல்லா கண்டு, இது மிக விசாலமும், பல கூடங்களும், அறைகளும், முற்றங்களுமுள்ள அகன்ற மாளிகையானதால், நாமும் ஒரு புறத்திற் சென்று அரவமொடுங்கும் வரையும் ஒளித்துக் கொண்டு அதன் பின் வந்த அலுவலில் பிரவேசிப்போமென்றெண்ணி, பிஸ்மில்லா சொல்லி மேற்படி மாளிகைக்குள் புகுந்து ஒருமூலையிற் போய்ப்பதுங்கி, அங்கு நடக்கும் காரியங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அபூருபிக் தனது அலுவல்களையெல்லாம் முடித்து, அங்குள்ள ஒரு கூடத்தின் வழியாய்ச்சென்று படுக்கையறைக்குப் போய்விட்டான். மற்றவர்களும் தங்கள் தங்கள் படுக்கை ஸ்தானங்களுக்குப் போய்விட்டார்கள். பிறகு வேலையாட்கள் தலைவாசற் கபாடம் முதலாக எல்லாக் கபாடங்களையும் சாத்திப் பூட்டிவிட்டு, திறவுகோல்களை ஒரு கூடத்திற்கிடக்கும் ஒருபெரிய பெட்டகத்தைத் திறந்து வைத்துவிட்டு, தத்தம் படுக்கை ஸ்தானங்களிற் போய் படுத்து உறங்கினார்கள். வீட்டு மனிதர் எல்லாரும் தூங்கி விட்டபடியால், மாளிகை ஆரவ மின்றி ஓய்ந்திருந்தது.

அரவமொடுங்கி அர்த்த சாமமானபோது, மூலையில் ஒளித்திருந்த அப்துல்லாஹ் மெள்ள வெளியில்வந்து, அங்கங்கே தூங்குகிறவர்களையெல்லாங்கடந்து திறவுகோல் கொத்து வைத்திருக்கும் பெட்டியிடம் போய், அதைத்திறந்து திறவுகோல்களை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு கூடத்துக் கபாடங்களையும், அறைவீட்டுக்

கதவுகளையும் மெள்ளத் திறந்து கொண்டு, மெல்லமெல்ல நடந்து, அபூருபிக் படுக்கும் அலங்காரமான பள்ளியறையுள்ள கூடத்திற்கு இட்டிருக்கும் திண்ணமான கபாடங்களையும் திறந்து உட்சென்று, அங்குள்ள விசித்திரமான காட்சிகளையெல்லாம் கண்டுகளித்து அபூருபிக் படுத்திருக்கும் பள்ளியறைக் கபாடத்தை மெதுவாகத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

அப்போது அபூருபிகும், அவன்மனைவியும் சுற்றிலும்மஞ்சபாரகமிட்ட சப்பிரமஞ்சத்தின் புஷ்பசயனத்தில் உல்லாசமாய்ப் படுத்திருந்தார்கள். அருகில் அலங்காரமானதீபம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. இருவரும் படுத்திருப்பதையும் தீபம் விளக்கமாயெரிவதையும் அப்துல்லாகண்டு, அபூருபிகு தூங்குகின்றானா இல்லையா? என ஆலோசித்துச்செவி சாய்த்துக்குரலோசையை உற்றுக்கேட்டுக் கொண்டுநின்றார். அப்போது பிரகாசித்துக் கொண்டிருந்த தீபம் தானாய் அவிந்தது. விளக்கு அவிந்தபின் அப்துல்லா அச்சமின்றித் தாராளமாய்ப் பிரவேசித்து, புருஷன், மனைவி இருவரும் விழித்திருப்பதையறிந்து உறங்கும் வரையும் பார்ப்போமென்றெண்ணி ஒரு மூலையிலேயே நின்றார். அதிகநேரம்வரையும் காத்திருந்தும் இருவரும் உறங்கவில்லை. நெடுநேரமாயும் நித்திரையின்றி, அபூருபிகும் அவன் மனைவியும் விழித்திருப்பதை அப்துல்லா உணர்ந்து இவ்வாறு சிந்தித்தார்:— "அபூருபிகும், அவன்மனைவியும் இன்னும் நித்திரைகொள்ளாமல் விழித்திருக்கின்றார்கள். நேரமும் அதிகமாயிற்று. ஆனதால், அவனைக் கொல்லுவதற்கு இந்தக் காரிருளில் நமது ஆயுதத்தைப் பிரயோகிப்போமானால், அவ்வாயுதம் அபூருபிகுமேல் பிடிக்குமோ? அல்லது அவன் மனைவிமேல் பிடிக்குமோ தெரியவில்லையே! இப்போது நம்மால் எறியப்படும் ஆயுதம் அபூருபிகு உடைய உடலிற்பாய்ந்து அவன் இறந்தால் தான் உத்தமம்; அவன் மனைவி உடலிற்பாய்ந்து அவள் இறந்தால், அதிகவிரைவில் கலகம் மூண்டுவிடுமே. அப்போது தன்னந்தனியே நிற்கும் நாம்அகப்பட்டுக் கொள்ளுவோமே; ஒருகால் தப்பித்துக்கொண்டு போய்விட்ட போதிலும், ஸ்திரீயை கொன்றோமென்னும் அபகீர்த்தி நமக்குநேரிடுமே. இதைக்குறித்து இன்னும் எவ்வளவு நேரம் வரையும் ஆலோசித்துக் கொண்டிருப்பது? சொல்லரிய பிரயாசையுடன் பாடுபட்டு இத்தனை தூரம் வந்து பகைவனை அடுத்திருந்தும் முழுமையும் நிறைவேற

வில்லையே, இனி இதற்கு என்ன செய்யலாம்! இப்போது நாம் இங்கிருந்து வந்தவழியே போய்விடலா மென்றால், இடையில் என்னென்ன பிரதிபந்தங்கள் சம்பவிக்குமோ? நாம் நடத்தின காரியங்களையும், தற்சமயத்து நிலைவரத்தையும் கவனிக்குமிடத்தில், நமக்கே ஆபத்துவந்து சம்பவிக்கும் போல் காண்கின்றது. இன்னும் சொற்ப நேரத்தில் பொழுது விடிந்துபோமே; அதற்குப்பின் நமதுகதி எவ்வாறாகுமோ?” என்று ஆலோசித்துக் கொண்டு நின்றார்.

அப்போது அபூறாபிகு “நான் தான் நீர் குறிப்பிட்ட உமது பகைவன். இதோ என் தொனி வழியே வந்து என்னைக்கொன்று விடும்” என்று அப்துல்லாவுக்கு தன்னைத் தெரிவிப்பவன்போல, வாயைத்திறந்து மனைவியை விளித்து “பெண்ணே, இப்போது நீ பேசிக் கொண்டிருக்கும்போதே எனக்கு சற்று உறக்கம்வந்தது. அந்த நித்திரையில் ஒரு அழகான கனவுகண்டேன். நான் ஒருபோதும் இப்படி கண்டதில்லை. மிகவும் அழகுள்ள வாலிபப் பெண் ஒருத்தி, விலையுயர்ந்த வஸ்திரங்கள் அணிந்து, முத்தாரம் முதலான ஆபரணங்கள் பூண்டு, புஷ்பமாலைசூடி, பரிமளம் பூசி கண்ணைக்கவரத்தக்க அலங்காரத்துடன் என் அருகில் முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டு படுத்திருந்தாள். நான் அவளை உபசரித்துத் தழுவுந்தோறும், எனக்கு அமையாமல், வெடுவெடுப்பாய் என்னென்னவோ சொல்லி நிந்தித்துக் கொண்டிருந்தாள். அதனால் நான் மயங்கி விழித்துக் கொண்டேன், இதென்ன கனவு பார்” என்றான்.

அவன் கண்ட கனவைக் கேட்டமாத்திரத்தில் அவள் சினங் கொண்டு “நல்லதுபோம். நீர் அந்நியமாதர்மேல் மோகித்து அதே சிந்தனையாய்ப் படுத்திருந்ததினா லல்லவா இவ்விதசொர்ப்பனங் கண்டீர்? என்னிடத்தில் இனி உமக்கென்ன அலுவலுண்டு? அங்கே போம்; அவளிடத்திற்போம். அவளையே இன்னும் பணிந்து உபசரணை செய்யும்” என்று கண்கள்சிவக்க ஆங்காரித்துச் சொன்னாள். அப்போது அபூறாபிகு எழுந்து உட்கார்ந்துகொண்டு, குப்புறப்படுத்து முரண் செய்யும் தன் மனைவியைத் தழுவி “என் பிராணநாயகி, நீ என்ன நினைக்கிறாய்? உன்னிலும் அழகி இவ்வுலகத்தில் எங்கேயுமுண்டா? ஆ நீ இருக்க, வேறொரு பெண்ணை

இந்த எளிய அபூறாபிகு நாடுவானா? இறந்தாலும் அவ்விதம் நாட மாட்டானென்று நினை. உனது சிற்றடிகளுக்கே தொண்டுசெய்து நான் இறந்துபோகத் தெய்வம் கிருபைசெய்யும். ஆ கண்மணி! ஏதோ பைசாசங்களின் கோட்டியால் நான் மேற்படி கனவைக் கண்டேன். நான் வேறு பெண்கள்மேல் இச்சைக் கொள்கிறவனல்லவென்று சத்தியஞ்செய்கிறேன். பெண்ணே இங்கே வா ; திரும்பு; சினத்தையாற்றி எளியேனைக் கடைக்கண் சார்த்தி இரக்ஷித்தருள்” என்றும், இன்னும் பலவாறும் பகர்ந்து உபசரித்து அவள்கொண்ட ஊடலைத் திருத்தினான். அவன் எவ்வளவு பணிந்து தாழ்மையோடு பகர்ந்தும், அவள் பிணக்குமுற்று ஏதேதோ சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

இருந்தவ ரெழுந்து வீழ்ந்த திரையினை யீழ்த்துட் புக்கி
யரிக்கிடுங் கதிர்வெள் வாளை யங்கையிற் பூட்டி யன்னோர்
றிருந்தவன் கவனுக் கோது மொழிவழிச் சென்று சென்னீர்
சொரிந்திட வெறிந்து நின்றார் சூரர்க டிலத மன்னார்.

ஊறுபட் டெழுந்து வாய்விண் டரப்பியாங் கிரித்திவ்வில்லின்
வேறுபட் டெவரோ கொன்றா ரென்னவாய் வெருவிக் கூவ
வேறுபட் டவரியார் கொன்றா ரெவரென விடைந்து மாந்தர்
தேறுபட் டிலராய் மாழ்கி மனையிடஞ் செறிந்தார் மன்னோ.

வசனம்.

இவ்வாறு நாயகன் நாயகி இருவருக்கு மிடையில் பிணக்கு உண்டாய் சம்பாஷணைகள் நிகழும்போது காத்து நிற்கும் அப்துல்லா அகங்களித்து, அவன் தொனியையும் அவள் தொனியையும் அறிந்து, இடக்குறிப்பையும் நிதானித்து, மஞ்சபாரகத்தின் ஒருபக்கத்தை இடது கையால் உயர்த்திக் கொண்டு, வலது கையில் கூற்றுடை வாளை யோங்கி, அவன் தொனிவழியே குறிப்பிட்டு வெட்டினார். அவ்வெட்டு அபூறாபிகு உடலில் தாக்கிப் படுகாயமாயிற்று. வெட்டுப்பட்ட மாத்திரத்தில் அவன் ஒரு துள்ளுதுள்ளி “என்னை யாரோ கொன்று விட்டார்கள்” என்று அலறிக்கொண்டு சப்பிரமஞ்சத்தில் சாய்ந்தான். புருஷன் இவ்வாறு வாய்விட்டு அலறிச்

சாய்ந்தவுடன் பிணங்கிக்கொண்டு அவனை வெருட்டி நின்றமனைவி திடுக்கிட்டுப் பதறி, வாயுளறி, "கொலை! கொலை!! பயங்கரமான கொலை!!!" என்று கூக்குரலிட்டாள். இக்கூக்குரல் கேட்டவுடனே அந்த மாளிகையிலுள்ளவர்கள் எல்லாரும் திடீரென்று விழித்தார்கள். அனைவரும் பதறியெழுந்து, அபூரூபிகுவின் பள்ளியறையில் எழும் கூக்குரலைக் கேட்டு, அங்கு வந்து புகுந்தார்கள். அபூரூபிகை யாரோ மறைந்திருந்து கொன்று விட்டுப் பதுங்கிப் போய் விட்டார்களென்று ஆச்சரியமு பரிதாபமு முற்று, அவன்சாய்ந்து கிடக்கும் சப்பிரமஞ்சத்தை நெருங்கினார்கள். அப்போதும் இருளாயிருந்த படியால், அப்துல்லா தாம் பிரயோகித்த ஆயுதத்தினால் அவனுக்குண்டான ஊறு சிறிதாக விருக்குமோ வென்றெண்ணி, அங்கு வந்து கூடினவர்களோடு தாமும் ஒருவராய் நெருங்கி நின்று, உடைவாளைக் கரத்திற் பிடித்துக்கொண்டு, மேற்படி கொலையைக் குறித்து விசாரிப்பவர்போல் "எங்கே பார்ப்போம்? யார் கொன்றது? ஆ! பரிதாபம்!! பரிதாபம்!!!" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் மேற்படி உடைவாளை, மஞ்சத்தில் விழுந்து மரணத் தறுவாயிற் கிடைக்கும் அபூரூபிகுவின் உடலில் அழுந்தத் தாக்கிவிட்டு, மேற்படி பள்ளியறையை விடுத்து மென்ன வெளிப்பட்டார். வெளிப்பட்ட அப்துல்லா, மனையை விட்டுப் புறப்படாமல், 'கொடிய சண்டாளன் இறந்து போனானென்றும், அல்லது குறைப் பிராணியாய்க் கிடைக்கிறானென்றும் தெரியவில்லை; அதை நாம் அறிந்துகொண்டு தான் இம்மாளிகை விட்டுப் போகவேண்டு' மென்று கருதி. அங்குள்ள ஒரு கூடத்தில் பதுங்கிக் கொண்டு நின்றார். இதற்குள் தலைவாசற் கபாடங்களும் திறக்கப்பட்டு அநேகர் அயலார்கள் வந்து மாளிகையில புகுந்தார்கள். ஆட்கள் பலர் வரத்துப் போக்காய், எல்லார்க்கும் அபூரூபிகுவின் பரிதாப மரணத்தின் சிந்தனையா யிருப்பதால் அப்துல்லா கலந்து நிற்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

இது இப்படியாக, அபூரூபிகு கொலையுண்டு கிடக்கும் பள்ளியறைக்குள் அவன் பந்து ஜனங்களே நெருங்கிக் கூடினார்கள். தீபந்தங்கள் பல கொளுத்தப்பட்டன அனைவரும் அவன் கிடக்கும் மஞ்சத்தைச் சூழ்ந்து நின்று "இவ்விதம் கொலை செய்யத்தக்க சத்துரு எவன் இங்கிருக்கிறான்? அல்லது நூதனமாக யார் இவ்

வேளையில் மாளிகையில் வந்து புகுந்தது? ஒருகால் இவ்விதக்கொலை செய்தவன் இங்கேதான் ஒளித்து நிற்பான்; பாருங்கள். ஆ! உதிரம் பெருகி ஓடுகின்றதே, அபூரூபிகு மூர்ச்சித்து விழுந்து விட்டாரே. ஜீவன் போய்விட்டது. உடல் துடிக்கின்றது. இதென்ன விபரீதம்! இதென்ன மாயம்? இதென்ன அநியாயம்? இனி நாம் என்னசெய்வோம்? இது இவரின் ஊழ்வினை யன்றி வேறல்ல. தமது சத்துருக்களைக்கொன்று ஜெயம் பெற்று படுகளத்தில் இறந்தாலும் கீர்த்தியுண்டே, விருதாவில்கொலையுண்டிருக்க நேரிட்டதே. ஆ! இது யார் செய்த தீங்கோ?" என்று பலவாறு ஆண் பெண் எல்லாரும் புலம்பினார்கள். அவன் அப்போதே இறந்து போன படியால், எல்லாரும் நெருங்கி நோக்கி, இறந்து விட்டதாகப் பிரஸ்தாபம் பண்ணினார்கள் இறந்தானென்று பிரஸ்தாபமானவுடன் அந்த மாளிகை முழுதும் கொல்லென்று ஆர்த்து அழுதன. இதற்கிடையில் அவனுடன் பிணங்கிக் கொண்டிருந்த அவன் நாயகியோ மிகப்புலம்பி அழுதாள். அவள் கிடந்து புரண்டு அழும் அழுகை அங்கு வந்து கூடின ஜனங்களுக்கு மிகப் பரிதாபத்தை உண்டு பண்ணிற்று. அபூரூபிகின் மாளிகை அன்று பின்னிரவில் நடுச் சமுத்திரத்தில் மூழ்கும் மரக்கலத்தின் ஸ்திதியிலிருந்தது.

கொடிய தறுகண்ணனும் பஞ்சபாதகனும் சண்டாளனு மாகிய துஷ்ட அபீரூபிகு மாண்டுபோனானென்று தம் காதில் நன்றாய்ப் பலதரம் கேட்டபடியாலும், இனிப்பொழுது விடியுந் தருண மாவதாலும், தாம்நாடிவந்தகாரியம் நிறைவேறிவிட்டதாலும் அப்துல்லா மனம்பூரித்து, ஒளித்து நின்ற இடத்தைவிட்டு மெல்ல நடந்து எல்லா இடங்களையும் கடந்து தலைவாசலுக்கு வந்தார். அப்போது அங்கே வெளிச்சமின்றி இருளாயிருந்தது. தாம் வரும் போது ஜனசந்தடியும் பல தீபங்களுமாயிருந்தது. அப்போது வேறுவிதமா யிருந்ததால் வழிதெரியாமல், உப்பரிகைக்கு ஏறிச்செல்லும் ஒரு ஆரோகணத்தில் காலைவைத்தார்; கால் சறுக்கிவிட்டது. அதனால் அப்துல்லா திடுகூறாய் விழுந்தார். விழுந்தவுடன் அப்துல்லாவின் ஒரு கால் முழங்காலுக்கும், பாட்டிற்கும் நடுவில் முறிந்து, ஒற்றை நரம்பினாலும் தோலினாலும் தொங்கிற்று. கீழே விழுந்து ஒருகால் அறவொடிந்த மாத்திரத்தில் அப்துல்லா மனம் தளராமல், இதற்காக நாம் காலகரணம் செய்து கொண்டு இங்கிருப்பது பழுது என்றெண்ணி, ஒடிந்த காலைப்பொருத்தி வைத்துத்

தலைப்பாகினால் இறுகப்பிணித்து சுற்றிக்கொண்டு விரைவாய் நடந்து, தமது தோழர்கள் பதின்மரும் இருக்கும் விடுதி வந்து சேர்ந்தார். பிறகு சூரியன் உதயமாயிற்று.

பொழுது விடிந்தபின் அப்துல்லா, நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் விவரமாக அஸ்ஹாபிகள் பத்துப் பேர்களுக்கும் சொல்லிக்காட்டி, தமது கால் முறிபட்டிருப்பதைப் பிறரறியாவண்ணம் காத்து வைத்திருந்தார். இதற்குள் சூரியன் உதித்துப் பத்து நாழிகையாயிற்று. இனி நாம் இங்கிருப்பது சரியல்ல; நாமோ அந்நியஸ்தர்கள்; ஊருக்குள் தகுந்த பிரபு ஒருவன் கொலையுண்டு கிடக்கிறான்; நமதுபேரில் ஒருகால் சந்தேகம் பிறந்தாலும் பிறக்கும் என்று அப்துல்லாவும், பத்து வீரர்களும் ஆலோசித்து, மதீனமா நகரத்திற்குப் புறப்பட எத்தனப்பட்டார்கள்.

அப்துல்லா தமது சகாயர்கள் பதின்மரோடு அங்கிருந்து பிரயாணப்பட்டு, மதீனமா நகரத்திற்கு வரும் மார்க்கத்தைப் பிடித்து நடந்தார்கள். சில நாட்களில் மலை, வனம், வனாந்திரங்களையும், வழியில் குறுக்கிடும் பட்டணங்களையும் கடந்து, மதீனமா நகரம் வந்து சேர்ந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் வீற்றிருக்கும் திவ்விய சபையில் வந்து அனைவருக்கும் ஸலாம் பகர்ந்து நின்றார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாவையும் பதின்மரையும் உபசரித்து, நிகழ்ந்த காரியத்தைப் பற்றி விசாரித்தார்கள். அப்துல்லா தாமும் பதின்மரும் கைபறு நகரம் போய்ச் சேர்ந்ததும், அபூறாபிகு கொலையுண்டதும், அங்கு நடந்த வர்த்தமானங்களும் இன்னவை யென்று கூறி, ஒடிந்த காலையும் காட்டினார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் கொடிய பகைவனாகிய அபூறாபிகு கொலையுண்டு மடிந்துபோனதற்காக மிக மகிழ்ந்து, அல்லாஹுத்தஆலாவைத் துதித்து, தங்கள் திருவாய் மலர்ந்து வேதவாக்கியங்களில் சிலவற்றை யோதி, அப்துல்லாவின் முறிந்தகாலைத் தங்கள் வலதுகையால் தொட்டு தடவினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் திருக்கரம்பட்ட மாத்திரத்தில் அப்துல்லாவின் அற முறிந்துபோன கால் ஒன்றாய்ப் பொருந்தி, ஊறு பட்டவடு சிறிதுமின்றி, முன்னிலும் பலமடங்கு அதிகமான அழகும், பலமும் பெற்றது. பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள்

அப்துல்லாவை ஆசீர்வதித்து அநேக வெகுமதிகள் கொடுத்துக் களிப்படுத்தினார்கள்.

74-வது அத்தியாயம்

ஹுஸைன் (றலி) பிறந்தது.

கலிச் சந்த விருத்தம்.

நிசமாகிய நபிமார்க் கொரு நிதியா முஹம் மதனார்க்
கிசையார் மருமக னாரலி யெழிலார் மனைவி யாரம்
அசல் பாத்திமா வென்னும் நாயகி யவர் சூலினில்முதலே
ஹுஸைனார் பிறந்திடு காரண மதையோதிடு வாமே

இதன் பொருள்.

உண்மையாகிய இலட்சத்து இருப்பத்து நாலாயிரம் நபிமார்களுக்கும், ஒப்பற்றவோர் இரத்தினமாகக் கடைசியில் வந்த, நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு, இணக்கம் பொருந்திய மருமகனார் அலி (றலி) அவர்களுக்கு அழகுள்ள திருத்தேவியாராய் மேன்மையுயர்ந்த பீவி பாத்திமத்துல் ஸுஹறா (றலி) என்னும் நாயகி அவர்கள் கர்ப்பத்தில், முதலில் உற்பத்தியாகிய இமாம் ஹுஸைன் (றலி) அவர்கள் இந்த உலகத்திற் பிறந்த காரணத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மருந்தெ னுங்கலி மாவரை விதைத்து மக்காவி
லிருந்து மாமதி னாவிடத் தினிதெழுந் தருளித்
திருந்த வாண்டொரு மூன்றினில் தீன்பயிர் விளைத்துப்
பொருந்து நாளினி லுற்றவை யினிற்சில புகல்வாம்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்கமா நகரத்திலிருந்து மதீனமா நகரத்திற்கு எழுந்தருளிய ஹிஜ்ரத் மூன்றாம் ஆண்டு பிறந்தது. அந்த மூன்றாமாண்டில், தீன்பயிர் செழிப்புற்று ஓங்கி எங்கும் படர, குபிர் இருள் அறத்தொலைய நபிநாயகம் (ஸல்) அவர்கள் இராஜ்ஜிய பாரந்தாங்கி ஆளுகை செய்தார்கள். குறித்த மூன்றாம் ஆண்டில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள்

இரண்டாம் கலீபாவும் அறிவிற் சிறந்த உத்தமரும் அமீறுல் மூமினீனுமாகிய உமறு இபுனு கத்தாபு (றலி) அவர்களின் செல்வப்புதல்வியும் பெண்கள் சிகாமணியும் உலகமாதாவுமாகிய ஹப்ஸா (றலி) அவர்களை விவாகம் செய்து கொண்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஹப்ஸா (றலி) அவர்களை விவாகம் செய்து கொண்டபின், தங்கள் குமார்த்திகளில் ஒருவராகிய றுக்கையா (றலி) அன்ஹா, மூன்றாம் கலிபாவாகிய உதுமான் (றலி) அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டிருந்து வபாத்தாய் விட்டதால், மறுபடியும் மற்றொரு புதல்வியாகிய உம்மு குல்தூம் (றலி) வை உதுமான் (றலி) அவர்களுக்கு விவாகம் செய்து கொடுத்தார்கள். அதற்கு பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் உஸைமா என்னும் ஒரு தனவானுடைய மகளாராகிய ஜைனப் என்னும் பெண்ணையும் விவாகம் செய்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜைனப் (றலி) வைவிவாகஞ் செய்து கொண்ட அந்த வருஷ லேயேத்தங்கள் இளைய மகளாரும் நான் காம் கலீபாவாகிய அலி (றலி) அவர்களின் பிரியநாயகியுமாகிய பெண்ணரசி பத்திமா (றலி) அவர்கள் ஹமலானார்கள். பாத்திமா (றலி) அவர்கள் சூலாய் நாளுக்கு நாள் முதிர்ந்து, மாட்சிமை பெற்ற ரமலான்மாதம் பதினைந்தாம் தேதியாகிய வெள்ளிக்கிழமை இரவில் ஒரு ஆண் குழந்தையை ஈன்றார்கள். தங்கள் அருமை மகளார் மைந்தனை யீன்ற அன்றிரவே, நபி நாயகம் (ஸல்) அவர்கள் கேள்வியுற்று, ஆனந்த மடைந்து, தங்கள் மாளிகையை விட்டுப் புறப்பட்டு மகளார் வசிக்கும் அலி (றலி) அவர்கள் உடைய மாளிகைக்கு வந்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்களும், சில அஸ்ஹாபிகளில் சிறந்தவர்களும் வந்த போது, அங்கிருக்கும் அலி (றலி) அவர்களும் மற்றவர்களும் உபசரித்து அழைத்துத் தக்க பீடங்களிட்டு இருத்தினார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

ஆரணத்திரு நாவினர் சூழ்தர வடுத்த
காரணக்கட லெனமுஹம் மதுசெழுங் கரத்திற்
பூரணக்கதிர் பிறங்கிய புதல்வனை யேந்திக்
கூரும் வேல்விழி மடைந்தையர் விரைவினிற் கொடுத்தார்.

தீங்க கற்றிய மகள் மகன் வலத்திருச் செவியின்
வாங்கு ரைத்திடக் காதினிற் காமத்தும் வழங்கிப்
பாங்கு றக்கமழ் தருநறும் பரிமள மெடுத்துத்
தாங்கு மென்சிரத் தினிலழ குறத்தட வினரால்.

வசனம்.

பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து தங்கள் மகளாரைப் பார்ப்பதற்காக அறைக்குட் சென்று, மகளாரை நோக்கி ஆசீர்வதித்து மகவீன்றதைக் குறித்து வினவினார்கள். அப்போது பாத்திமா (றலி) எழுந்து தாங்கள் ஈன்ற அருமைத் திருமகவைத் தூக்கி, தந்தையின் கரத்தில் கொடுத்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பேரனை மிகஉவந்து வாங்கி முகந்து, முத்தமிட்டு, அக்குழந்தையின் வலது செவியில் பாங்கும், இடது செவியில் இகாமத்தும் சொல்லி, கொஞ்சம் வாசனைத் தைலம் கொண்டு வரச் செய்து, தங்கள் வலது கையால் குழந்தையின் சிரசில் தடவி மடியில் வைத்துக் கொண்டு இரண்டு கரங்களையும் உயர்த்தி வானவர்கள் ஆமீன் கூறும் வண்ணம் துஆ ஓதி முடித்து, குழந்தையை மகளார் கையில் கொடுத்தார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் பிள்ளை பிறந்த அன்றைய தினம் இம்மட்டுஞ் செய்து விட்டுத் தங்கள் மாளிகைக்கு வந்து விட்டார்கள். பிறகு ஏழாம் நாள், நபி நாயகம் (ஸல்) அவர்கள் சில தோழர்களோடு மகளாருடைய மாளிகைக்குச் சென்று, மகள் ஈன்ற அருமைக் குழந்தையின் சிரமயிர் களைவித்து, அம்மயிர் கொண்ட நிறைக்குச் சரியாக உயர்ந்த பொன்னை நிறுத்துத் தானம் செய்து விட்டு, இரண்டு செம்மறியாடுகளை அறுத்து எளியவர்களுக்குக் கொடுத்து, அவ்வாட்டுச் இறைச்சியில் ஒரு பங்கும் ஒரு பொற் பணமும் மருத்துவிச்சிக்குக் கொடுத்தார்கள்.

இவ்விதம் மார்க்க நிபந்தனைப் படி செய்ய வேண்டிய சடங்குகள் அனைத்தும் செய்து தீர்ந்தபின், நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பிரிய முள்ள பேரப் பிள்ளையைத் தூக்கி யணைத்து, முகந்து முத்தமிட்டு மடியில் வைத்துக் கொண்டு, தங்கள் மகிமையான திருவாய் மலர்ந்து, வானவர் வாழ்த்த, அரம்பையர் பூமாரி பொழிய, தீனோர் செழிப்புற்று கலிமா முழக்க, குபிறிருள் அவிந்து அழிய, இஸ்லாம் என்னும் திருவழி எங்கும் பல்க, அன்பாகவும்

ஆதரவாகவும் ஆசிர்வதித்து "ஹஸன்" என்று நாமகரணம் செய்தார்கள்.

வடிவத்திலும், நிறத்திலும் தங்களைப் போன்ற பேரனுக்கு நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸன் என நாமமிட்டு மகளார் கையில் கொடுத்தார்கள். அன்று முதல் ஹஸன் (றலி) அவர்கள் தொட்டிலில் தூக்குந்தோ றெல்லாம் மலக்குகள் எல்லாருக்கும் அதிபதியாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து தொட்டிலாட்டிக் கொண்டிருப்பார்; இதுவே பிரதி தினமும் வழமையாயிருந்தது. பாவச்சிறை யிருப்பி லிருந்து முஸ்லிமான பெண்களை மீட்சி செய்யும் அதிகாரம் பெற்ற நாயகியாராகிய பாத்திமா (றலி) அவர்களின் குமார மாணிக்கத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் உவப்புற்று வளர்த்தார்கள். அப்பிள்ளை பேரில் முஸ்லிமானவர்கள் எல்லாரும் அதிகப் பிரீதியாயிருந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் முதலான அனைவரின் உபசரிப்பின் மகிமையால் ஹஸன் (றலி) அவர்கள் வளர்ந்து வந்தார்கள்.

75வது அத்தியாயம்.

அபூத்தல்ஹா விருந்து தொடுத்தது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குபூத்தல் மேவிநண் பறுகுபிர்க் களைகடி குரவோர்
நபூத்தல் வேதமெய் தருமியற் குணநய தயவார்
சுபூத்தல் சீர்வளர் தருநபிக் கருமைசெய் தொடரார்
அபூத்தல் ஹாவிருந் திடுசரித் திரமதை யறைவாம்.

இதன் பொருள்

சிறுமையாகிய குற்றம், விருந்து பொருந்தி இஸ்லாத்துடைய நப்பறுந்த குபிர்களையைக் கடிந்தகற்றுங் குருவுமாய்ச் சூரியனைப் போல் பிரகாசமுண்டாகும் மெய்யான புர்க்கான் வேதத்தைத் தருங் கீர்த்தியையும், நற்குணத்தையும், நயத்தையுமுடைய தயாளருமாய், நன்மைபயக்குஞ் சிறப்பாகிய செல்வத்தைத் தரும் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களுக்கு தொடர்ச்சியாய் அருமை செய்யும் அபூதல்ஹா வென்னும்

பெயரையுடைய அஸ்ஹாபியானவர் விருந்து கொடுத்த சரித்திரத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மருவலர்க ளுயிரருந்தி யூனுணங்கும்
கதி ரிலைவேன் மன்னர் சூழத்
திருமறைநன் னபியிருக்கும் பள்ளியிடத்
தெய்திமுகச் செவ்வி நோக்கி

யொருவருக்குந் தோன்றாது பசியுடனின்
றிருந்தன ரென் றுன்னி நீங்கா
விரைவினபூத் தல்ஹாசென் றில்லவளை
விளித்தொரு சொல் விளம்பு வாரால்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், ஒருநாள் அஸ்ஹாபிகளோடு தேவலாயத்தில் இருக்கும்போது அஸ்ஹாபிகளில் ஒருவராகிய அபூத்தல்ஹா (றலி) மேற்படி சபைக்குவந்தார். வந்தவர் நபிநாயகம் (ஸல்) அவர்களின் முகக்குறிப்பை உற்று நோக்கி, இன்று நமது இரக்ஷகர் பசியோடிருக்கின்றார்களென்று உணர்ந்து, அங்கிருந்து மீண்டு அதிக விரைவாய்த் தமது வீட்டுக்குச் சென்று, மனைவியை விளித்து "யா உம்முசுலைம்! மகத்தான அல்லாஹு தஆலாவின் தூதர்களின் சிரேஷ்டரான நமது நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்போது பசித்திருக்கின்றார்கள். அவர்கள் பசியாறும்படி நாம் ஏதும் கொஞ்சம் பதார்த்தங்கள் கொடுக்கவேண்டும். மனையில் ஏதும் உண்டா?" என்று வினவினார். அப்போது அவர் மனைவியாகிய உம்முசுலைம் என்னும் உத்தமி விரைவாயெழுந்து, தமது மனையில் இருந்த மூன்று கோதுமை ரொட்டிகளை யெடுத்து, கணவர் கையில் கொடுத்தார். மனைவி கொடுத்த மூன்று ரொட்டிகளையும் அபூதல்ஹா வாங்கிதமது குமாரராகிய அனஸ் என்பவரை விளித்து அவர் கையில் கொடுத்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுப்பினார். அனஸ் என்பவர் அந்த மூன்று ரொட்டிகளையும் துணியில் பொதிந்து மறைவாய் வைத்துக்கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்களிருக்கும் இடத்திற்கு வந்தார்.

தங்களிடத்தில் அனஸ் வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் சமீபத்தில் வந்தவுடன் நபிநாயகமவர்கள் அவரை நோக்கி "அனஸ்! உம்மை அபூதல்ஹாவா இங்கனுப்பினார்? நீர் என்ன கொண்டு வந்திருக்கின்றீர்!" எனக் கேட்டார்கள். அப்போது அனஸ் வியப்புற்று "யாறஸூலல்லாஹ்! ஆம்; அவர்தான் என்னைத் தங்கள் சமூகத்திற்கு அனுப்பினார். கொஞ்சம் சிற்றுண்டி கொண்டுவந் திருக்கின்றேன்" என்று விடை பகர்ந்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் நல்லது இருக்கட்டுமென்று சொல்லிவிட்டு, அங்கிருக்கும் அஸ்ஹாபிகள் எல்லாரையும் கூட அழைத்துக்கொண்டு தேவாலயத்தை விட்டெழுந்து அபூதல்ஹாவுடைய மனைக்கு வந்தார்கள். அனஸும் கூடவே வந்தார். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அநேக அஸ்ஹாபிகளோடு தமது வீட்டுக்கு வந்ததை அபூதல்ஹா கண்டு ஆச்சரியமடைந்து, எதிர் வந்து உபசரித்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய், ஒருதகுந்த ஆசனத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்களை இருக்கச் செய்து, மற்ற அஸ்ஹாபிகளையும் அவ்வவ்விடத்தில் உட்காரும்படி வேண்டிக் கொண்டார். அப்படியே அஸ்ஹாபிகளனைவரும் அவருடைய மனை முழுவதும் நெருங்கியிருந்தார்கள்.

எல்லாரும் இருந்தபின், அபூதல்ஹா தமது மனைவியிருக்கும் இடத்தில் சென்று "உம்முசுலைமே! நமக்கு நல்லவழி காட்டி மோக்ஷத்தில் சேர்க்கும் நபிகள் சிகாமணியானவர்கள் தங்கள் தோழர்களோடு நமது மனைக்கு வந்து விட்டார்கள். இப்போது நாம் அவர்களை சும்மா போகச் செய்வது மரியாதையல்ல. ஏதும் உள்ளதைக் கொண்டு விருந்தொன்று கொடுத்துத்தான் அனுப்பவேண்டும். அதற்குத் தக்கபடி நமது மனையில் யாதொன்று மின்றி, தரித்திரவானாயிருக்கின்றோமே. இதற்கு என்ன செய்வோம்" என்று மனங்கரைந்து சொன்னார். அப்போது அந்த உத்தமி கணவரை நோக்கி "தாங்கள் சொல்வது நியாயந்தான். ஆனாலும், நமது வீட்டில் ஏதும் ஒன்று உண்டென்பதும், இல்லை யென்பதும், அல்லாஹு தஆலாவுக்கும் அவனுடைய றஸூலுக்கும் தெரியாத காரியமல்ல. நமது ஸ்திதியை அவர்கள் நன்றாயறிவார்கள். அப்படியிருக்க, நாம் அதற்காக வேண்டி கவலைப்பட வேண்டியதில்லையே" என்று சொன்னார்.

புருஷரும் மனைவியும் இவ்வாறு இரகசியத்தில் பேசிக் கொண்டிருக்கும் போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூதல்ஹாவின் மனைவியை விளித்து "யா உம்முசுலைம்! கவலைப் படவேண்டாம். உள்ளது எதுவோ அதைக் கொண்டு வந்து கொடு; நாமும், அஸ்ஹாபிகளும் இங்கிருந்தே பசியாறிவிட்டுப் போகிறோம்" என்றுசொன்னார்கள் இச்சொல்லைக் கேட்டவுடன் மேற்படி மாதுசிகாமணி மனம் பூரித்து அனஸ் கையிலிருந்த மூன்று ரொட்டிகளையும் வாங்கி ஒரு தட்டத்தில் வைத்து ஒரு சிறியபாத்திரத்தில் கொஞ்சம் நெய்யும் ஊற்றி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வைக்கும்படி புருஷர் கையில் கொடுத்தார். அபூதல்ஹா வாங்கிக் கொண்டுவந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் வைத்து ஒதுங்கி நின்றார்.

சரித்திரபுராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முன்னர்வைத்த பாத்திரத்தி னிருந்தமோ
தகத்தை நறைமுளரிக் கையாற்
பன்னருந்துண் டப்படுத்தி நெய்தோய்த்துப்
பதின்மர் தமைப் பண்பு கூர
வின்னமுது செய்கவென முஹம்மது நந்
நபியிசைப்ப வினிதி னேகி
யன்னவர்கள் கையார வாயார
வயிறார வருந்தி னரால்

வசனம்.

தங்கள் முன் கொண்டுவந்து வைக்கப்பட்ட தட்டத்திலிருக்கும் மூன்று ரொட்டிகளையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சிறந்தகையினால் துண்டித்து, நெய்யிற்றோய்த்து, அங்கே கூடியிருக்கும் அஸ்ஹாபிகளில் பத்துப்பேரை சமூகத்தில் அழைத்து, தின்னும்படியேவினார்கள். மேற்படி பத்து அஸ்ஹாபிகளும் மேற்படி ரொட்டித் துண்டுகளை ஒவ்வொன்றாய் எடுத்தெடுத்து வயிறுகள் நிரம்பத் தின்றார்கள். பத்து பேர்கள் வாயார வயிறார தின்றும் மேற்படி தட்டத்திலுள்ள துண்டுகள் கொஞ்சமும் குறையவில்லை. நபிநாயகம் (ஸல்) அவர்கள் மறுபடியும் வேறு பத்துப்பேர்களை அருகிலழைத்து தின்னும்படி உத்தரவு செய்தார்கள். அந்தப் பத்

துப்பேர்களும் விலாப்புடைக்கத் தின்றார்கள். அப்போதும் தட்டத்திலுள்ளவற்றில் எள்ளத்தனையும் குறையவில்லை. தின்னதின்ன வளர்வதால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களோடு வந்த அஸ்ஹாபிகளனைவரையும் பத்து பத்துப்பேராக அருகிலமைத்துத் தின்னக் கொடுத்தார்கள். இப்படி எட்டுத் தரம் தின்னக்கொடுத்தபடியால், வந்திருந்த அஸ்ஹாபிகள் ஆக எண்பதுபேர்களும் வயிறுநிரம்பத்தின்று மகிழ்ந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் எண்பது அஸ்ஹாபிகளும் வயிறாரத் தின்றும் மேற்படி ரொட்டி குறையவில்லை. பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூதல்ஹாவைநோக்கி "அபூதல்ஹா! இதோ, தாலம். தூக்கிக்கொண்டு உட்சென்று, நீரும், உமது மனைவியும், மற்றவர்களும் தின்று பசியாறிச் சந்தோஷப்படுங்கள்" என்று சொன்னார்கள். உடனே அபூதல்ஹா மேற்படி தாலத்தைத் தூக்கிக்கொண்டு போய், அதிலிருந்த அற்புதம் பெற்ற ரொட்டித் துண்டுகளை மனைவிக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்து, தாமும் வயிறாரத் தின்றார். மூன்று சிறிய ரொட்டிகளைச் சற்றேறக்குறைய நூறுபேர்கள் வரையும் வயிறு நிறையத் தின்ற புதுமையைக்கண்ட அனைவரும் ஆச்சரியமுற்று, நபிநாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் அபூதல்ஹாவின் மனையிலிருந்து புறப்பட்டு, தங்கள் தங்கள் மனைகளுக்குச் சென்றார்கள்.

76-வது அத்தியாயம்.

உஹது யுத்தம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிகரமேருவிற் சுடரெனச் செழும் பொழில் மதீனா
நகரி னந்நபி தீனெறி நடத்துமந் நாளின்
மகா வாரியின் மலிதரு படையுடன் மருவார்
உகுதில் வந்தெதிர்ந் தமர்வினைத் தலையெடுத் துரைப்பாம்.

இதன் பொருள்.

ஷா அத்துல்லன்பியா, ஸெய்யிதுல் குறைஷிய்யா நம் நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், மகாமேரு

வென்னும் பொன்மலை யுச்சியில் ஏற்றி வைத்தெரியும் இரத்தின தீபம் போலே, செழுமையான பூங்காவுகள் சூழ்ந்திலங்குந் திருமதீனமா நகரத்திலிருந்து தீனுல் இஸ்லாம் மார்க்கத்தை யாதொருகுறையின்றி நடத்திவரும் நாளில் சத்துராதிகள், சுரூமச் சங்கள், பட்சமாய் மிச்சமும் குதிகொண்டுலாவுங் கடலைப்போல பெரிய கூட்டமான படைகளோடும், உஹத் என்று பெயர் சொல்லப்பட்ட மலையிடத்தில் வந்தெதிர்த்துச் சண்டை செய்த முறைமைகளை இன்பமாய் எடுத்துச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

மடுவில் வாளைக ளுகடரு மக்கமா நகரின்
குடிகை மன்னவன் ஹறுபுத வியவபா சுபியா
னடலு றுந்தனி யரசர்க ளெவரையு மழைத்து
நடுவு றும்படி கருத்தினுற் றவைசில நவில்வான்.

பதுறின் மாண்டவர் பழிகொளா திருத்தலே வடுவா
லதனி னும்வடுப் போய்ப்பொரு ளனைத்தையு மிழந்த
திதுவ தன்றியு மினம்வடு வெதிர் பொரா திருத்தல்
புதுந ருத்துளித் தொழுகிய செழுமலர்ப் புயத்தீர்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் உன்னதமான பர்வதத்தின் சிகரத்திலிட்ட பிரகாசம் மிக்க தீபம்போல், தங்கள் ஒப்பற்ற தீன் என்னும் மார்க்கத்தைப் பிரகாசிக்கச் செய்துகொண்டு மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பாரம் செய்து வந்தார்கள். இங்கே நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படி ஆளுகைசெய்யுங் காலத்தில், மக்கமா நகரத்தில், முன் பதுறு படுகளத்தில் மடிந்த தலைவர்களின் பழிக்குப் பிரதிபழிவாங்க வேண்டுமென்னும் வன்பகையும், துர்ச்சிந்தனையுமுள்ள கறுபு உடைய குமாரன் அபாஸுபியான் என்பவன், அங்குள்ள தலைவர்கள் அனைவரையும் அழைப்பித்து, சங்கம் ஒன்று கூடுவித்தான். தனது முயற்சியால் அன்று கூடிய பிரதானமான சபையில் தானே சபாநாயகனாய் வீற்றிருந்து, சுதேசாபிமானம், பிரஜானுகூலம், மதவைராக்கிய முதலான சில விஷயங்களைப்பற்றிச் சிறிது நேரம் உபந்நியாசம் செய்து, அத்து

டன் ஆரம்பமாக நபிநாயகம் (ஸல்) அவர்களைக் குறித்துச் சிலவற்றைப் பிரசங்கித்து முடித்து, மறுபடியும் கீழ்வருமாறு அனைவரையும் நோக்கிச் சொல்லலானான்:—

"தனவான்களே! கேளுங்கள். நான், முன் பதுறு யுத்தத்தில் கொலை யுண்டு இறந்த நமது ஜாதியாரின் பழிக்குப் பிரதிபழி வாங்காமல் இதுவரையும் பேடிகளைப் போலே இருப்பது, நமது ஊருக்கும் குலத்திற்கும் ஆண்மைக்கும் வடுவா யிருக்கின்றது. இதைக் காட்டிலும் நாம் வர்த்தகஞ் செய்யப் போகுந் தோறும் திரண்ட திரவியங்களை, முஹம்மதுக்குப் பறிகொடுப்பது பெரும் வடுவா யிருக்கின்றது. நமது மாற்றார்களோடு எதிர்த்து நின்று சாதிக்காமல் புறங்காட்டின வண்ணமா யிருப்பது எல்லா வடுவைக் காட்டிலும் தீராவடுவா யிருக்கின்றது. நீங்கள் ஒவ்வொரு விவேகிகளும் நன்றாய் கவனித்துச் சீர்தூக்கிப் பாருங்கள். நமது ஜாதியாரில் ஒருவருக்கு நன்மை யுண்டானாலும், அல்லது தீமை யுண்டானாலும், அவற்றை நமது ஊருக்கும், குலத்திற்கும், பதத்திற்கும், நம் ஒவ்வொருவருக்கும் உண்டானதாக வல்லவா பாவிக்க வேண்டும்? அப்படிப் பாவித்தால் தானே அந்நிய ராஜ்ஜியத்தார் நம்மை அபிமானிக ளென்று மதித்துக் கொண்டாடுவார்கள். இல்லா விட்டால் ஒரு திரணமாகவாவது மதிக்க மாட்டார்களே? அது இருக்கட்டும். பதுறுப் படுகளத்தில் மடிந்து போன தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் சகோதரர்களும், புத்திரர்களும் இன்னும் பலமுறையிலுள்ள பந்துக்களுமாக அநேகர் இப்போது இவ்வூரில் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாரும் தரித்திரியவான்களல்ல; திரண்ட ஆஸ்திகளுடைய பாக்கியவான்களும், விவேகிகளும் மனோதைரியமு முள்ளவர்களுமா யிருக்கின்றார்கள். இப்படி யிருக்க, நமது பகைவராகிய புதிய மார்க்கத்தாரை அபஜெயப்படுத்தித் துரத்தி விடுவது நமக்குக் கஷ்டமல்லவே. இத்தனை தூரம் நாம் பலத்திருந்தும் சிந்தனையின்றி, அவிவேகமும் அதைரியமு முள்ள பேடிகளுக்கு சமானமா யிருந்து விட்டோம். நமது சத்துருவாகிய முஹம்மதுக்கு மாந்திரீகபல மொன்றே யன்றி, நம்மை யெதிர்த்து ஜெயம் பெறதக்க வேறு சாதனங்கள் என்ன உண்டு? ஒன்றுமில்லை. ஆனாலும் இன்னு மொன்று சொல்லுகிறேன்: என் பொருட்டாலேதான் பதுறு யுத்த முண்டானதும் குறி கொள்ளத்

தக்கத் தலைவர்கள் மடிந்ததுமே யன்றி வேறல்ல. ஆனதால் அங்கே மடிந்தவர்களின் பழியைச் சுமந்து கொண்டவனும், பழி மீட்கப் பாத்தியப்பட்டவனும் நான் தான். அப்படி யிருக்க, மடிந்து போனவர்களுடைய சகோதரர்களுக்கும், புத்திரர்களுக்கும், அவர்கள் வசித்த ஊராருக்கும் என்ன கவலை? அவர்கள் மடிந்து போக சம்பந்தப்பட்டவன் நான் ஒருவனே யானதால், எல்லாக் கவலையும் எனக்குத்தா னுண்டு. ஆகையால், அதற்குப் பிரதி செய்யாமல் இனி நான் மவுனஞ் சாதித்துக் கொண்டு இருந்துவிட மாட்டேன்" என்று சொன்னான்.

அபாஸுபியான் இப்படிச் சொல்லி முடித்தவுடன், அபூஜஹலுடைய குமாரனாகிய இக்கிரிமா எழுந்து நின்று சபையாரை நோக்கி "வீரவான்களே! தந்தைக்காவது, உறவின் முறையிலுள்ள வேறொருவருக்காவது ஒரு ஆபத்து வந்து சம்பவித்தால், மகனாவது, பந்துவிலுள்ள மற்றவனாவது உடனே தன் உயிரைப் பலி கொடுக்க வேண்டும். அது தான் ஆண்மைத்தனம் அப்படியிருக்க, இவ்வூர் பிரதான தலைவரும் என் பிதாவுமாகிய அபூஜஹல் மாண்டு போக, அவர் புத்திரனாகிய நான் பழி மீட்காம லிருப்பது என்ன மானுஷீகத்துவம்? என்னை இவ்வுலகத்தார் அவருடைய குமாரன் என்று சொல்லுவார்களா? தந்தையின் பழி கொள்ளாத பேடியும், அவிவேகியும், நீசனுமாகிய என்னை தான் உலகம் நிந்திக்கும். நிந்தனைக்கு இலக்கா யிருக்கின்றேன். அவமானங்களெல்லாம் எனக்கே யன்றி வேறொருவருக் கல்ல. இன்னும், என் தந்தையோ அதிகமான மனோதிடமும், தேக வலிமையு முள்ள ஆண் சிங்கத்தை யொத்தவர். அவருடைய நாமத்தை சொன்னால் மலைக ளெல்லாம் பொடி பொடியாய்ப் பறக்கும்; கடல் கலங்கிச் சேறாகும்; மேக ஜாலங்களும் அஞ்சி அலறும். அவ்வளவு வீரதீரருக்குப் பிறந்த நான் ஆண்மை யற்றுப் பேடியா யிருப்பது நிந்தைக்கு இடமல்லவா? நாம் எப்போதும் கூடிக்கூடி நமது சக்தியையும், மகிமையையும் நாமே யெடுத்துப் பேசி மனதுக்கு சமாதானம் பண்ணிக் கொண்டு இருந்து விடுவது ஆண்மையல்ல. இனி முஹம்மது உடைய பலங்குன்ற முயற்சி யெடுத்து யுத்தஞ் செய்யவே வேண்டும்" என்று கூறினான். இக்கிரிமா இவ்வாறு சொன்ன போது, அபாஸுபியான் அகங்களித்து, சிரக்கம்பஞ் செய்துகொண்டு "இன்று தான் நாம் முஹம்மது விஷயத்தில் ஜெயம்

பெற்றோம்" என்றான். அதற்குப் பின் மேற்படி சபையி லிருக்கும் கலபு உடைய குமாரன் உபை என்பவன் எழுந்துநின்று சபையாரை நோக்கி, "கனம்பொருந்திய குறைஷிகளே, எனக்குப் பிராயம் வந்த நாள் முதற்கொண்டு இது பரியந்தம் நானும் பார்க்கிறேன்; நீங்கள் எல்லாரும் கூடிக்கூடி, உங்கள் ஆண்மையையும், வீரத்தையும், செல்வத்தையும் பேசிப்பேசிக் காலத்தைப் போக்குகிறீர்களே யன்றி, முஹம்மதை ஜெயிக்கும் உபாயத்தைச் சூழ்ந்து, அதற்குத் தக்ககாரியத்தில் பிரவேசிக்கிறதில்லை. முஹம்மது மாந்திரீக பலங்கொண்டே நம்மை அபஜெயப்படச் செய்கிறானென்பதையும் நீங்கள் கண்டறியவில்லை. இனி நீங்கள் சும்மா நாள் கழிப்பது சரியல்ல. இனி முஹம்மது உடைய மாந்திரீகத்திற்கும் அஞ்சாது எதிர் நின்று சாதிக்குஞ் சூனியக்காரர்களைச் சேகரித்து எதிர்த்துப் போராடி வெற்றிபெற முயற்சி யெடுக்க வேண்டும்" என்றான்.

முன்பு அபூஸுபியான் சொன்னசொற்களையும், பிறகு இக்ரிமா சொன்ன சொற்களையும், முடிவில் உபை சொன்ன சொற்களையும் கேட்டுக் கொண்டிருந்த ஒலீது உடையகுமாரன் காலிது எழுந்து நின்று சபையை நோக்கிச் சொல்லுகிறான்:—

"சபையார்களே! இப்போது நான் சொல்லுவதைச் சற்று கவனமாய்க்கேளுங்கள். இந்தச்சபையில் இன்று நடந்த விஷயங்களெல்லாம் நியாயமானவைகளேயானாலும், கலபு உடைய புத்திரராகிய உபை சொன்ன சொற்கள் மாத்திரம் நாம் ஒப்புக் கொள்ளத் தக்கவையல்ல. அவர், முஹம்மது ஜெயம் பெறுவதெல்லாம் மாந்திரீக பலங்கொண்டே யென்று சாதிக்கின்றார். அவர் சொற்படி முஹம்மதுக்கு மந்திர சித்தியுண்டாயிருந்தால், அவனுடைய குடும்பத்தார்களனைவரும் அறவெறுப்பர். அவன் மாத்திரம் அனாதியாய், நமக்கு அஞ்சி, அர்த்தசாமத்தில் ஊரைவிட்டு ஒளித்து ஓடிப் போகவேண்டிய காரணமென்ன? மாந்திரீக பலமுள்ள எவனுக்கும் ஜனவசியமும், இன்னும் பல காரியங்களும் உண்டாயிருக்குமே? பிறருக்கு அவன் அஞ்ச வேண்டியதில்லையே? ஆனால், முஹம்மது மாந்திரீக பலமுள்ளவனென்று நாம் சொல்வது எல்லாம் ஆற்றமாட்டாத தன்மையேயன்றி வேறல்ல. நம் ஜாதியார்களில் அநேகர் முஹம்மது சூனியக்காரன் என்று துணிந்து சொல்லுகின்றார்கள். அச்

சொல்லை மனோதைரியமும், ஆண்மையுமில்லாத பேடிகளுடைய சொல்லென்று நான் நினைக்கிறேன். எதிரி பலசாலியும், நாம் எதிர் நின்று சாதிக்கும் திராணி கெட்டவர்களாயுமிருந்தால், மேற்படி எதிரியை மாந்திரீகன் என்று சொல்லி விடுவதுதானோ ஆண்மை. அப்படி மாந்திரீகமா யிருந்தபோதிலும், அஞ்சா நெஞ்சையுடைய வீரவான்கள் அதை நம்பமாட்டார்கள். ஆனதால், நாம் பெரும் படை யொன்று திரட்டி முஹம்மது உடன் எதிர்க்கவேண்டும். அதுதான் ஆண்மை. அப்போது அவன் எதிர்நின்று சாதிக்க மாட்டான். நீங்கள் யோசித்துப்பாருங்கள். பொறிகளமைந்த இரும்புமதில்களானாலும், இடிகளாலும் பெயர்க்கக்கூடாத உன்னதமான பாரிய பர்வதங்களானாலும், சமுத்திரம் போலப்பரந்த அந்தகாரமான விருக்ஷங்களடர்ந்த பெரும் வனங்களானாலும் பெரும் படைத்திரளுக்கு ஈடு செய்யமாட்டாது. ஆனாலும் இன்னு மொன்று சொல்லுகின்றேன். இனி நமது மக்கமா நகரத்துச் சேனையைக்கொண்டும், அல்லது இந்த அறபு இராஜ்ஜியத்து வேறு தனத்தைகொண்டும் முஹம்மதை ஜெயங்கொள்ளலாமென்று நினைக்க இடமில்லை. ஆனதால், இன்றுமுதற்கொண்டு நமது ஆஸ்திகளை ஒருதிரணமாகவாவது மதிக்கக்கூடாது. நமக்குள்ள திரவியங்களைச்செலவிட்டு, அந்நிய இராஜ்ஜியத்துச் சேனாவீரர்களைச் சேர்த்துக்கொண்டுபோய் முஹம்மதை எதிர்க்கவேண்டும்; அப்போதுதான் நாம்ஜெயம்பெறுவோம். நான் சொல்லும் இச் சொல்லை நீங்கள் சிந்தித்து, ஒப்புக்கொண்டு சம்மதப்படுவீர்களானால், நமது மார்க்கத்திற்கும், குடும்பங்களுக்கும், எல்லாவற்றிற்கும், ஆண்மைக்கும் யாதொரு தீங்கும் வந்துநேரிடாது. உலகம் நம்மை என்றும் வியந்து பேசும்" என்றான்.

அறிவிற்சிறந்த காலிது இவ்வாறுசொன்னபோது மேற்படி சபையார் அனைவரும் சிரக்கம்பஞ்செய்து, இதுதான் சரியான முடிவென்று புகழ்ந்து, காலிது சொன்னபடி திரவியத்தைச் செலவு செய்து சேனை சேர்க்கச் சம்மதப்பட்டார்கள். அந்தச்சபையிலேயே அதைப்பற்றி ஆலோசித்து, திரவியங்கொண்டு அந்நிய இராஜ்ஜியத்திற்போய்ச் சேனைசேர்த்து வருவதற்கு காலிதையே நியமித்து, அப்போதே பொக்கிஷங்களிலிருந்து திரண்ட நிதியையெடுத்து காலிது வசம் ஒப்புவித்தார்கள்.

காலிது மேற்படி நிதியை ஒப்புக்கொண்டு தன்னோடு தன்குடும்பத்தாரில் சிலரை யழைத்துக் கொண்டு மக்கமா நகரத்தை விட்டுப்புறப்பட்டு, ஹபஷி இராஜ்ஜியத்திற்குச் சென்றான்.

அநேக சொத்துக்களுடன் ஹபஷி இராஜ்ஜியஞ் சென்ற காலிது அந்த இராஜ்ஜியத்து இராஜதானியல்லாத மற்ற நகரங்களில் சென்று, திரவியத்தைக் கொடுத்துச் சேனை திரட்டினான். பணவிருப்பத்தினால் அநேக ஹபஷிகள் காலிதுக்கு வழிபட்டுக் கூடினார்கள். மனோதிடனும், தேகபுஷ்டியும், யுத்தப் பயிற்சியும், உதிரதாகமுமிக்க கருமேனியையுடைய ஹபஷிகள் மூவாயிரம் பேர்கள் சேர்ந்தார்கள். அந்த மூவாயிரம் வீரர்களுக்கும் போதுமான யுத்தக்கருவிகளையும் காலிது சேகரித்தான். பயங்கரமான உருத் தோற்றத்தையுடைய ஹபஷிப்படை தயாரானபின், வீரமிக்க கனூ என்னும் வேறொரு கூட்டத்தாரையும் காலிது சேர்த்துக் கொண்டான்.

ஊருராய்த் திரிந்து பொருள் விரயஞ்செய்து திரட்டின மூவாயிரம் ஹபஷிவீரர்களையும், கனூக் கூட்டத்தாரையும் அழைத்துக் கொண்டு, பெருஞ்சேனையோடு அவ்விராஜ்ஜியத்தி லிருந்து காலிது புறப்பட்டு, சிலதினங்களுக்குள் மக்கமாநகரம் வந்து சேர்ந்தான். காலிது பெருஞ்சேனை யொன்று சேகரித்துக் கொண்டு வந்ததற்காக மக்கமா நகரத்தாரனைவரும் ஆனந்தம் கொண்டாடினார்கள். பிறகு அபூஸுபியான் தனது சொந்தப் பணத்தைக் கொண்டு மக்கமா நகரத்தைச்சேர்ந்த காடுகளில் வசிக்கும் அறபிக் காபிர்களை யெல்லாம் திரட்டி ஒருங்குசேர்த்தான். அவர்களும் எண்ணற்ற வீரர்கள் சேர்ந்தார்கள். ஹபஷிகள் மூவாயிரம் பேர்களும், கனூக் கூட்டத்தாரும், மக்கமா நகரத்தைச் சேர்ந்த காட்டு அறபிகளும், மக்கமாநகரத்தில் திரண்டுகூடி யுத்தத்திற்குத் தயாரானார்கள். மக்கமா-நகரம் சேனைத் திரளால் நெளிந்தது.

காலிதும், அபூஸுபியானும் சேனை சேர்த்தபிற்பாடு அபூஜஹலுடைய குமாரன் இக்ரிமா மக்கமா நகரத்தார்களாகிய முன் பதுறு யுத்தத்தில் மாண்டு போனவர்களின் புத்திரர்கள், சகோதரர்கள், வேறு முறையிலுள்ள பந்துக்களையும், மற்றும் குறைஷி

களையும் ஒருங்கு சேர்த்தான். சேனைகள் அனைத்தும் தயாரானபின், யுத்தத்துக்குரிய உபகரணங்களும், சாமக்கிரிகைகளும் சேகரிக்கப் பட்டன. எல்லாம் குறைவின்றிச் சேகரமானவுடன் சேனைப் புறப்படுவதற்குத் தயாரானார்கள்.

ஹபஷிப்படை வீரர்களையும், கனூக் கூட்டத்தார்களையும் ஒரு சேனையாக்கி அதற்கு காலிது தளகர்த்தனானான். மக்கமா நகரத்தைச் சேர்ந்த காட்டு அறபிக்காபிர்களையும், முன் இரண்டொரு தடவை வர்த்தகப் பொருளைப் பறிகொடுத்து முறிந்தோடினவர்களையும் ஒரு சேனை யாக்கி அதற்கு அபூஸுபியான் தளகர்த்தனானான். பதுறில் மாண்டு போனவர்களின் உரிமைக் காரர்களையும், குறைஷிகளையும், மக்கமா நகரத்து அறபிக் காபிர்களையும் ஒரு சேனையாக்கி, அதற்கு இக்ரிமா தளகர்த்தனானான். ஆக மூன்று வகுப்பாயுள்ள சேனைகளனைத்தும் ஒன்றாய் சமுத்திரம்போல மக்கமா நகரத்தில் இடமற நெருங்கி நின்றன. சேனாவீரர்கள் எல்லாரும் ஆயுதங்களணிந்து, இரதம், கஜம், துரகம், பதாதி என்னும் சதுரங்க சேனையாய், குடை, கொடி, ஆலவட்டம், வெண்சாமரம் என்னும் விருதுகள் மலிய, படை முரசு இடிபோல முழங்க, அணியணியாய் எழுந்தார்கள். போர் கோலத்தோடு புறப்பட்ட சேனாவெள்ளம் அலங்காரமான மக்கமா நகரத்தைவிட்டு வெளிப்பட்டது. பிற்பாடு மூன்று தளபதிகளும் கஃபதுல்லா என்னும் திவ்விய ஆலயத்திற்சென்று, சுவாமியாகிய ஹுபல் முதலான விக்கிரகங்களைப் பணிந்து வெற்றிக்காக வரங்கேட்டுக் கொண்டு, தானங்கள் வழங்கி, வேதியர்கள் ஆசிகூறப் புறப்பட்டு நகரத்தைவிட்டு வெளியில் வந்து, தத்தம் சேனைக்கு முன்னின்று நடத்தினார்கள். காபிர்களின் சேனாசமுத்திரம் வீரவான்களும் அஞ்சத்தக்க விதமாய் மதீனமா நகரத்தை நோக்கி அதிக ஆரவாரத்தோடு நடந்தது.

சித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

நிலன திர்ந்திடப் பணித்தலை பணித்திட நீண்ட
மலைபி திர்ந்திடச் சிறுபொறை யமிழ்ந்திட வழிபோய்க்
குலவு மெண்டிசை திடுக்கிடக் குலமணி சிதறிச்
சலதி மாநிலம் பாய்ந்தெனப் பரந்தது தானை.

சேனை யுந்திறல் வேந்தருந் திரளொடு நடப்ப
வானும் வானகத் துலவிய விசும்புமண் ணகமும்
கானும் பேர்வரைக் குடுமியுந் திகந்தமுங் கடலும்
பானு வெல்லையு மறைத்தன வெழுந்துகட் படலம்.

அகன்ற பூமியானது கிடுகிடுவென்று கம்பிக்கவும், அதைச் சுமந்துநிற்கும் இடபம் ஆற்றாது தவிக்கவும், கிராமுகங்களிலுள்ள பர்வதங்களெல்லாம் அதிரவும், மணற் குன்றுகளனைத்தும் சிதறுண்டு தாழ்ந்த பள்ளங்களாகவும், பள்ளங்கள் முழுதும் மேடாய்க் குவியவும், எழும்புழுதிகள் ஆகாயத்திற் படர்ந்து சூரியனையும், மேகஜாலங்களையும் மறைத்து மந்தாரமாக்கவும், சேனாவிருதுகள் மட்டின்றி நெருங்கவும், பெருங்கோஷத்தோடு படைமுரசுகள் ஒலிக்கவும், அதிக ஆக்கிரமத்தோடு மாற்றார் தளம் நடந்தது. பூமி குதிரைகளைச் சுமக்க, குதிரைகள் வீரர்களைச் சுமக்க, வீரர்கள் ஆயுதங்களைச் சுமக்க, ஆயுதங்கள் ஊனையும் உதிரத்தையும் சுமக்க விரும்பின. மாற்றார் தளத்தின் வீரர்களின் முகங்கள் சந்தோஷத்தினால் ஜெயம் பெறுவோமென்னும் குறியைக் காட்டின; இடது புஜங்கள் அபஜெயப்படும் துற்குறியை அடிக்கடி காட்டின; கண்கள் சினத்தைக் காட்டின; வாய்கள் அவிவேகத்தைக் காட்டின.

மக்கமாநகரத்துப் பகைவர்களின் சேனைமேற் கண்ட ஆரவாரத்தோடு மலைகள், வனங்கள், வனாந்தரங்கள், அருவிகள், சிற்றூர்கள், கிராமங்கள், சோலைகள் எல்லாம் தலைதடுமாற நடந்து, நடந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் வீற்றிருந்து இராஜ்ஜிய பரிபாலனம் செய்யும் அலங்காரமும், மகிமையுமுள்ள இராஜதானியாகிய மதீனமா நகரத்தை நெருங்கிற்று. சேனை வந்தபோதே கிராமவாசிகளனைவரும் திகில் கொண்டு அஞ்சி, வேற்றிடங்களுக்கு வெருண்டு ஓடினார்கள். பிறகு காபிர்களின் சேனாதிபதிகளாகிய அபூஸுப்யான், காலிது, இக்கிரிமா என்னும் மூவரும், தங்கள் முப்பகுதியாயுள்ள சேனாவீரர்களோடு மதீனமா நகரத்திற்கு மேற்புறம் ஒரு காத தூரத்திலிருக்கும் உஹது என்னும் மலையின் சாரலில் வந்து தானைய மிட்டார்கள்.

உஹதுமலைச் சாரலில் தானையமிட்ட மாற்றார்கள் வெள்ளிக் குன்றுகளைப் போல அமைந்த கூடாரங்கள் அநந்தம் நிரை நிரையாக

வமைத்து, இலாயங்கள் அநேகமமைத்து, யுத்தத்துக்குரிய தளபாடங்கள், தின்பண்டங்கள் முதலானவை வைப்பதற்கு ஜாகைகள் எல்லாம் நியமித்து, அதிக மும்முரத்துடன் இருந்தார்கள். மேற்படி உஹது மலைச்சாரல் எங்கும் காபிர்களின் கூடாரங்களால் நிரம்பி யிருந்தது.

மாற்றார் தளம் இவ்வாறு பாசறையமைத்துத் தானையமிட்டிருக்கையில், மக்கமா நகரத்திலிருந்து அபூஸுப்யான், காலிது, இக்கிரிமா என்னும் மூவரும் மூன்றுவகுப்பாய் அநேக சேனாவீரர்களோடு புறப்பட்டுவந்து, மதீனமா நகரத்திற்கு ஒரு காத தூரத்திலுள்ள உஹது மலைச்சாரலில் பாளையமிறங்கி யிருக்கிறார்களென்னும் சமாச்சாரம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் செவிகளில் விழுந்தது. இச்சமாசாரத்தைக் கேட்ட மாத்திரத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அருகர் நால்வரையும், மற்றத் தோழர்களில் முதன்மையானவர்களையும் அழைப்பித்து முகதாவில் இருத்திக் கொண்டு, கீழ்வருமாறு சொல்லுகின்றார்கள்.:—

“எனது பிரியமுள்ள அஸ்ஹாபிகளே! மக்கமா நகரத்திலிருந்து கறுபுடைய மகன் அபூஸுப்யானும், அபூஜஹ்லுடைய மகன் இக்கிரிமாவும், ஒலீது உடைய மகன் காலிதும் பெரும்படையோடு வந்து நமது நகரத்திற்குச் சமீபத்திலுள்ள உஹது மலைசாரலில் தானையமிட்டிருக்கின்றார்களென்று இப்போது செய்தி வந்தது. ஆனால், அவர்கள் அனைவரையும் சங்கரித்து வெற்றி பெறும்படி மகத்தான நமது அல்லாஹு தஆலா நமக்குத் துணைசெய்வான். ஆனாலும், இன்றிரவு நான் ஒரு சொர்ப்பனங்கண்டேன். அந்தச் சொப்பனம் மூன்றுவகையாய் எனக்கு அறிவிக்கப்பட்டது. முதலாவது:— நான் வாசஞ்செய்யும் மனைவாசலில் பசு ஒன்று அறுப்பட்டு கிடந்தது. இரண்டாவது:— என் வலது கையிலிருந்த வாள் கூர்மை மழுங்கி உதிர்ந்திருந்தது. மூன்றாவது:—நான் அணிந்திருக்கும் மேலங்கிக்குள் என் கைகள் நுழைந்துகொண்டு மறைந்திருந்தன. இம்மூவகையாய் அறிவிக்கப்பட்ட இக்கனவின் பலனை நான் ஆராய்ந்து பார்த்தேன். மனைவாசலில் பசு அறுப்பட்டுக் கிடக்கக்கண்டபடியால், என் பிராணநேசர்களான அஸ்ஹாபிகளில் சிலர் பகைவர்மேல் விழுந்து தாக்கி உயிரிழந்து, சுவர்க்கஞ் சேர்வார்கள். வாள் கூர்மை மழுங்கி உதிர்ந்

திருக்கக் கண்டபடியால், என் உதிரக்கலப்பி லுள்ளவர்கள் சிலர் ஷஹீதாவார்கள். என்கைகள் மேலங்கிக்குள் நுழைந்து மறைந்திருக்கக் கண்டபடியால், என் உடலில் எங்காவது ஊறுபட்டு இரத்தஞ் சிந்தும். இவ்விதச் சம்பவங்கள் சந்தேகமின்றி நிகழும். இதற்கெல்லாம் அல்லாஹு தஆலா நமக்குத் துணையாயிருக்கிறான். ஆனதால் நாம் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை. முடிவில் நமக்கே ஜெயம் உண்டாகும். எனது தோழர்களே, இப்போது நம்மை எதிர்த்து அடுபடைசெய்ய வந்திருக்கும் மாற்றார்களோ சிறு தொகையல்ல, ஹபஷிகள், மக்க நாட்டுவாசிகளாகிய அறபிக்காபிர்கள், உள்ளூர் வாசிகளாகிய குறைஷிகள், வேறு அறபிகள் அனைவரும் அதிகத்திரளாய்த்திரண்டு வந்திருக்கின்றார்கள்; நாம் இங்கிருந்து எழுந்து அவர்களுக்கு எதிர்சென்றுபோராடுதல் தவறு; நமது சேனைகளைக்கொண்டு நகரத்தை காத்துக் கொள்ளவேண்டும். அதற்குப்பின் மாற்றார்தளம் நம்மை நெருங்கி வருமானால் அப்போது நாம் அவர்களை யெதிர்த்துத் தடுபடை செய்து துரத்திவிடலாம். இதுதான் உத்தமமென்று நினைக்கின்றேன்” என்றார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு சொன்னபோது அருகர் நால்வரும், மற்ற அஸ்ஹாபிகளில் பிரதான தலைவர்களும் ஒருங்குசேர்ந்து ஆலோசனை பண்ணி, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, ஒரே மொழியாகக் கீழ்வருமாறு சொல்லுகின்றார்கள்:

“யாறஸூலல்லா! நமது மார்க்கத்திற்கும், நமக்கும் விரோதிகளாய் மாறுபட்ட காபிர்களை இதுவரையும் நாமே வலியத் தேடிப் போய் அடர்ந்து பொருது ஜெயம்பெற்று வந்தோம். அப்படி நாமே அடுபடை செய்வது வழக்கமாயிருக்க, இப்போது நமது சத்துருக்கள் தாங்கள் அடுபடைசெய்யப் புறப்பட்டு, நமது நகரத்திற்குச் சமீபத்தில் நெருங்கி வந்து தானைய மிட்டிருக்கின்றார்கள். ஆகையால் நாமும் எதிர்த்துச் சென்று அடர்ந்து தாக்காமல், இங்கேயே இருந்து கொள்வது முறையல்ல. அதிகமான தூரம் தொலைகளிலும் காபிர்களைத்தேடிப் போய் யுத்தஞ்செய்த நாம், அக்காபிர்கள் நமக்குத் தீங்கு விளைக்கக் கருதி ஒருகாத தூரத்தில் வலியவந்திருக்கச் சும்மாயிருந்துவிட்டால், அது அவமானத்திற்கு இடமாகும். எப்படியும் நாம் எதிர்சென்றே பொருது துரத்தவேண்டும்” என்றார்கள்.

தங்கள் பிராணனை யொத்த தோழர்கள் இப்படிச் சொன்னவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இதயங்களித்து, அவ்வாறே சம்மதித்தவர்களாய் அங்கிருந்து எழுந்து தங்கள் மாளிகை சென்று, நல்லுடை உடுத்தி, அழகிய மேலங்கியிட்டு, பாகை தரித்து, புஜங்களில் வில்லும் அம்பறாத்தூணியும், பரிசையும் சேர்த்து, குற்றுடைவாளொன்று சொருகி, கூறிய வேலை இடக்கரம்பிடித்து, பிரகாசமிக்கபட்டயத்தை உறையோடு இடையில் மாட்டி தொங்கவிட்டு, தண்டத்தை வலக்கரத்திற் பிடித்து யுத்த சன்னத்தராய், மனையிலுள்ள பெண்டு பிள்ளைகளுக்குப் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு, அங்கிருந்து தேவாலயத்திற்கு வந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தேவாலயத்திலிருந்து போர்க்கோலம் தரிக்க மாளிகைக்கு வந்தபின், அங்கிருந்த அஸ்ஹாபிகள் மறுபடியும் ஒத்து, காபிர்கள் மிகுதிரளாய் முன் முகப்பில் வந்து தானையமிட்டுக் கொண்டதையும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஞ்சத்தக்கவிதமாய்க் கனவுகண்டதையும், எதிர்செல்லக்கூடாதென்று தடுத்ததையும் குறித்துச் சீர்தூக்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் போர்க்கோலத்துடன் மாளிகையிலிருந்து வருவதற்கு முன் வேறுமுடிவு பண்ணிக்கொண்டிருந்தார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் யுத்த சன்னத்தோடு ஆலயத்திற்கு வந்தவுடன், அஸ்ஹாபிகளனைவரும் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி “யாறஸூலல்லா! நாங்கள் தங்கள்சொற்களை ஆராய்ந்தறியாமல், பகைவர்களுக்கு எதிர் சென்று தான் பொருதவேண்டுமென்று முந்திச் சொன்னோம். அது தங்களுக்குப் பொருத்தமற்றதாகையாலும், நாங்கள் பிந்தி ஆலோசித்ததில் எங்களுக்கும் அவ்வாறு எதிர்செல்ல சம்மதமாகவில்லை. ஆகையால் தாங்கள் சொன்னவாறே நாம் நகரத்தைக் காத்துக் கொண்டிருந்து, அக்காபிர்கள் அடர்ந்து வரும் பக்ஷத்தில் தடுபடைசெய்வோம்” எனக்கூறினார்கள். இச்சொல்லைக் கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி கீழ்வருமாறு சொல்லுகின்றார்கள் :—

“எனது அருமை மிக்க அஸ்ஹாபிகளே! தற்காலம் மாற்றார்கள் நெருங்கி வந்திருக்கும் நோக்கத்தையும், நான் கண்ட சொர்ப்பனத்தின் பிரதி பலனையும் உங்களுக்கு எடுத்துக்காட்டி, நாம் இங்கேயேயிருந்துகொண்டு தடுபடைதான் செய்யவேண்டுமென்று

நான் சொன்னேன். அப்போது நீங்கள் சம்மதிக்கவில்லை. நாம் எதிர்சென்று தடுபடைதான் 'செய்யவேண்டுமென்று பல முகாந்திரங்களோடு எல்லாரும் ஒரே மொழியாய்ச் சொன்னீர்கள். ஆனதால், உங்கள் கருத்தின்படி நானும் இசைந்து படைக் கலங்களணிந்து யுத்தசன்னத்தனாய்ப் புறப்பட்டு வந்துவிட்டேன். இப்போது மறுமுடிவு செய்துகொண்டு என் நாட்டப்படி சொல்லவந்தீர்கள். நான் போர்க்கோலம் புனைந்து விட்டேன்! நபி என்னும் பட்டம் பெற்றவர்கள் போர்க்கோலம் புனைந்தால், போராடாமலிருக்கக் கூடாது. முக்கியம், போராடித்தான் மீளவேண்டும். ஆனபடியால், இனி மறு முடிவு செய்வதில் காரியமில்லை. நீங்களும் போர்க் கோலம் புனைந்து புறப்படுங்கள்'' என்றார்கள்.

இச்சொல்லுக்கு அஸ்ஹாபிகளெல்லாரும் சிரஞ்சாய்த்து, யுத்த தளவாடங்களோடு போருக்கெழ ஆயத்தப்பட்டார்கள். முஹாஜிரீன்களிலும் அன்ஸாரீன்களிலும் எழுநூறு குதிரை வீரர்களும், அநேக காலாட்களும் ஒருங்குதிரண்டு, யுத்தசன்னத்தர்களாய் மனைவிமக்களுக்குப் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு மஸ்ஜிதில் வந்து கூடினார்கள். இப்னு உம்மிமகுதூம் (றலி) அவர்கள் மதீனமா நகரத்திற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்கள். அஸ்ஹாபிகள், நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் யுத்தசன்னத்தர்களாய் வந்து கூடினது ஷவ்வால் மாதம் பதினொன்றாம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் மணி பதினொன்று. ஆனதால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் குத்பா ஓதி ஜும்ஆத்தொழுகை தொழுவித்து முடித்து முஸ்லிம்களெல்லாரும் கைகளை யுயர்த்தி ஆமீன்கூற, வானவர் வாழ்த்த பாத்திஹாவும் துஆவும் ஓதி, ஜெயம் பெறும் வண்ணம் பிரார்த்தித்தார்கள். அப்போது தேவாலயம் தீபதூபங்களாலும், வேதவாக்கியத் தொனியாலும், ரணசிங்கங்களாகிய அஸ்ஹாபிகளாலும் சிறந்து விளங்கிற்று.

ஜெயமன்றாட்டம் முடிந்தபின் உக்காபு என்னும் வெற்றித் துவஜம் விரித்துப் பிடிக்கப்பட்டது. அதன்பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கருமேகக் குடைநிழலில் குதிரையிலேறி ஆலயத்திலிருந்து புறப்பட்டார்கள். அருகர் நால்வரும் இருமருங்கும் நெருங்கினார்கள். மற்ற சேனாவீரர்கள் அணியணியாய்ப் பின்

தொடர்ந்து புறப்பட்டார்கள். மதீனமா நகரத்து வீதிகள் ரணவீரர்களால் அலங்காரமுற்றுத் தோற்றின.

ஜெயபேரிகை முழங்க, விருதுகள் நெருங்க, ஆயுதங்கள் பிரகாசிக்க, தக்பீர் கோஷிக்க, நகரத்தார் வாழ்த்த, வானவர் ஆசீர்வதிக்க, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனாசமுத்திரத்தோடு மதீனமா நகரத்தைக் கடந்து வெளியானார்கள். புழுதிகள் ஆகாயமெங்கும் பரந்தன. விருதுகள் உயர்த்தப்பட்டன. அடிபடும் முரசுகளின் ஒலி எழு கடலொலியினும் மும்முரமாகத் தொனித்தது. அதனிலும் பலமடங்கு அதிகமாக அஸ்ஹாபிகளின் தக்பீர் முழங்கிற்று. மாற்றார்களின் திறம், வாய்மை, உற்சாகம், திடமனம், சமயம், சினம், செல்வம் அனைத்தும் ஒடுங்கிப் போகும் வண்ணம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை நடந்து சென்றது.

சரித்திர புராணம்.

வேறு

திடந்தருந் தூதர் கோமான் சேனையம் பரவைபாரி
னந்தபே ரார்ப்பி னெட்டுந் திசைநடுங் கினவே தண்ட
மடங்கலு மசைந்து விண்ணு மடிக்கடி யதிர்ந்த கோர
விடங்களை யரிதிற் கக்கி யனந்தனும் வெருக்கொண் டானால்.

தண்டம்வே லொடுருக் தம்வாட் டனுப் படைமிடைந்த பாயுந்
திண்டிறற் பரிமி னோடுஞ் சேவகர் மிடைந்த வன்கைக்
கொண்ட வெண்குடை களோடுங் கொடித்திரண் மிடைந்த வெங்கு
மண்டுபே ரியங்களியாவு மஞ்சொடு மிடைந்த வன்றே

வசனம்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சைனியத்தை நடத்திச் செல்லும் ஆரவாரத்தினால், பர்வதங்களெல்லாம் அசைந்தன; திசைகள் எட்டும் குலுங்கின; மேகஜாலங்கள் ஆகாயத்தை விட்டு மலைச்சிகரங்களில் பதுங்கின; பாலையில் திரியும் விலங்குகள் அடவியை நோக்கி ஓடியொளிந்தன. அன்றியும், 'நபிநாயகம் (ஸல்) அவர்கள் பகைவர்மேல் படையெடுத்துப் போகிறார்கள்; நாம் பின் தொடர்ந்து சென்றால், நல்ல விருந்துண்ணக் கிடைக்கும்' என்றெண்ணி நாய்கள், நரிகள், இன்னும் பிணந்தின்னும் மிருகங்

களெல்லாம் சேனைக்குப்பின் திரள் திரளாய் தொடர்ந்து வந்தன. கழுகுகள், பருந்துகள், காகங்கள், இன்னும் பிணந்தின்னும் பறவைகளெல்லாம் விடாது தொடர்ந்து ஆகாயத்தில் பந்தலிட்டாற்போல நெருங்கிப் பறந்து வந்தன.

இன்னும் சொல்லரிய சிறப்புடனும் ஆரவாரத்துடனும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பலமிக்க ராணுவத்தை நடத்திக் கொண்டு சௌத்து என்னும் ஸ்தலத்தில் வந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் சைனியம் சௌத்து என்னும் ஸ்தலத்தில் விடுதியிட்டது. அப்போது, சேனாதிபதிகளில் ஒருவனாகிய அப்துல்லா என்பவன் மதிகெட்டு, தனது மானம் கல்வி கீர்த்தி எல்லாவற்றையும் அறவெறுத்து, இபுலீஸ் என்னும் கொடியவனுடைய கலைப்பில் சிக்குண்டு சித்தம் வேறாய், தான் எப்போதும் மக்கிகளுக்கே உடன் பட்டிருக்க வேண்டுமென்று கருதி, தன்னைச் சேர்ந்தவர்களை நோக்கி "இப்போது நாம் மக்கிகளோடு எதிர்த்துப் போராடத் துணிவது முறையல்ல" என்று கூறினான். இச்சொல்லைக் கேட்ட சேனாவீரரனைவரும் அவன் கருத்துக்கு இணங்காது மறுத்தார்கள். அப்போது அவன் மறுபடியும் அவர்களை நோக்கி, மனம் நொந்தவனாய் "எனது வார்த்தைக்கு நீங்கள் இசையாமல் மறுத்து நிற்கின்றீர்கள். ஆகையால் இனி நான் உங்களுக்கு என்ன சொல்லப் போகிறேன். ஆனால் நான் உங்களோடு வரமாட்டேன்" என்று சினந்து சொன்னான். இவ்வாறு சினத்துடன் சொன்ன பாதகன், தான் மாத்திரம் தொலைந்து போகாமல், தனது ராணுவ வீரர்களின் மூன்று பிரிவில் ஒருபிரிவிலுள்ள சில வீரர்களைக் கலைத்து மீட்டுக்கொண்டு, பெரிய சேனையை விட்டுப் பிரிந்து ஓடினான்.

ஷைத்தான் மகனையொத்த அப்துல்லா சிலவீரர்களைக் கலைத்து மீட்டுக்கொண்டு போய்விட்ட செய்தி நபிநாயகம் (ஸல்) அவர்கள் செவிகளில் விழுந்தது. அப்துல்லா இபுனு உபை மாறு கொண்டு விட்ட படியால், அஸ்ஹாபிகளுக்கு அவன் மேல் ஆரூச்சினம் மூண்டது. நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்போதே மேற்படி சௌத்து என்னும் ஸ்தலத்தை விட்டுப் புறப்படும்படி தங்கள் சேனாவீரர்களுக்குக் கட்டளை பண்ணினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைப் பிரகாரம் அங்கிருந்து சேனை புறப்

பட்டது. அஸ்ஹாபிகளின் சேனை புறப்பட்டபோது மேற்படி சௌத்தில் வசிக்கும் குடிகளில் பெண்கள் அநேகர் தங்கள் தங்கள் குழந்தைகள், சிறார்களோடு புறப்பட்டு. நபிநாயகம் (ஸல்) அவர்கள் மாற்றார்களுடன் போராடப் போகின்றார்கள்; நாமுஞ்சென்று அப்போரின் காட்சியைக் காண்போமென்று ஆவல் கொண்டு, அஸ்ஹாபிகள் சேனையோடு தொடர்ந்து வந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையோடு சௌத்தை விட்டுக் கடந்து மிக்க ஆரவாரத்தோடு வந்தார்கள். இச்சேனையின் வரவால் நிலம் அசைந்து, கடல் கொந்தளித்து, மேகங்கள் சிதறி, திக்கு திசைகளும் நிலை பெயர்ந்தன. விருதுகள் இலங்க, முரசுகள் இடிபோலச் செவியதிரத் தொனிக்க, வீரர்களணிந்திருக்கும் படைக் கலங்கள் வெயி லெறித்தாற்போலப் பிரகாசிக்க, தக்பீர் முழங்கி வந்த சேனையானது, மாற்றார்கள் இறங்கியிருக்கும் ஸ்தலத்திற்கு சமீபித்தது. அப்போது அஸ்ஹாபிகள் எல்லாரும் காபிர்கள் சேனையை நோக்கினார்கள். அக்காபிர்களின் சேனை கணக்கின்றி சமுத்திரம் பரந்த பாவனையாய்ப் பரவி நிற்பதால், அஸ்ஹாபிகள் தங்கள் சேனையின் குறைவையும் பகைவர் சேனையின் பெருக்கத்தையும் மதிப்பிட்டு, காபிர்கள் சேனைக்கு முன் நமது சேனை சமுத்திரத்திற்கு முன்னிற்கும் ஒரு சிறு குளத்தைப் போலும் இல்லை யென்றெண்ணி, மனந்தளர்ந்து அஞ்சினார்கள். அடுத்த பொருளைக்காட்டும் தருப்பணம் போல அகக் குறிப்பை முகங்காட்டும், ஆனதால், அஸ்ஹாபிகள் மாற்றார் மிகுதிரளாயிருப்பதைப் பற்றி அஞ்சின அச்சத்தை அவரவர்கள் முகங்கள் பிரத்தியக்ஷமாய்க் காட்டின. அவ்வச்சக் குறிப்பை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு அஸ்ஹாபிகளை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னார்கள்:—

"எனது பிரியமுள்ள அஸ்ஹாபிகளே, நமது பகைவர்கள் மிகு திரளாயிருக்கின்றார்களே யென்றெண்ணி, நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். இப்போது நீங்களே வலிய அடர்ந்து மாற்றார் மேல் விழுந்து போர் செய்வீர்களானால், உங்களுக்குத் துணைப் படையாக முந்நூறு மலக்குகள் வந்துநின்று பகைவரோடு போராடுவார்கள். அப்படியன்றி, நீங்கள் விரையுமுன் காபிர்களே வலிய விரைந்து வந்து உங்கள்மேல் விழுந்து அடர்ந்து போர் செய்வார்

களானால், அப்போது ஐந்நூறு மலக்குகள் உங்களுக்குத் துணைப் படையாய் வந்து நின்று பகைவரோடு போரிடுவார்கள். எனது தோழர்களே, நீங்கள் நன்றாய் ஆராய்ந்து பாருங்கள்; நமது அல்லாஹ் தஆலாவின் கட்டளைகொண்டு வானவர்கள் நமக்குத் துணைப்படையாக வந்து போரிட்டு ஜெயந்தருவார்களேயானால், இதைக் காட்டிலும் வேறே உதவியும், மகிமையும், வெற்றியும் நமக்கு என்ன வேண்டும்? நாம் தான் அஞ்சவேண்டிய முகாந்திரமென்ன? நீங்கள் இந்தப் பகைவர்களோடு பொருது அவர்களைச் சங்கரித்து வெற்றி பெறுவீர்களானால், என்றும் அழியாத நிலைபேறான கீர்த்தியும், பலவிதப் பிரயோஜனமுமுண்டாம். அப்படியன்றி, பகைவர்களால் நீங்கள் வெட்டுண்டு ஷஹீதானீர்களானால், அப்போதே உங்களுக்கு சுவர்க்கத்தின் உன்னதமான பதவி கிடைக்கும்" என்று சொன்னார்கள்.

ஜெயம் பெறுவதாலும் ஷஹீதாவதாலும் உண்டாகும் நற்பிரயோஜனம் இன்னது என்பதை அஸ்ஹாபிகள் முந்தியே அறிந்த நெஞ்சினர்களானாலும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிந்திச் சொன்னதாலும், தங்களுக்கு மலக்குகளை உபபலமாகத் திரண்டு மாற்றார் மேல் பொருவதற்கு வருவார்களென்பதாலும் அவர்களுக்கு மன அச்சம் ஒழிந்து உற்சாகம் பிறந்தது. மனோதைரியமும், உற்சாகமும் உண்டானபோது, அஸ்ஹாபிகள் மாற்றார் தளத்தை ஒரு திரணமாகவும் மதிக்கவில்லை. அதிகவேகத்துடன் பகைவர் திரளை நோக்கிச் சென்றார்கள். அக்காபிர்கள் பாளையமிட்டிருக்கும் உஹது என்னும் மலையின் அடிவாரத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை நெருங்கி நின்றது. அப்போது யுத்த காட்சிக்காக சௌத்திலிருந்து கூடவந்த பெண்கள் தங்கள், தங்கள் குழந்தைகள், சிறார்களோடு ஒருபுறம் ஒதுங்கி நின்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை வந்து நிற்பதை மாற்றார்கள் கண்டு படை முரசடித்து, போர் கோலத்துடன் யுத்தத்துக்கு ஆயத்தமானார்கள். இருவகைச் சேனையும் போருக்குத் தயாரானவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜுபைர் உடைய குமாரர் அப்துல்லாவை யழைத்து, அஸ்ஹாபிகளில் ஐம்பது குதிரை வீரர்களை அவருடன் சேர்த்து, அவர்களைத் தங்கள் சேனைக்குப் பின்னணியில் நிறுத்தி, திருவாய் மலர்ந்து, "தோழர்களே! எங்கள் மாற்றார்மேல் விழுந்து

போராடி எல்லாரும் மடிந்து போனாலும், அல்லது பகைவர்களுக்கு அஞ்சித் தோற்றுப் பின்வாங்கி ஓடினாலும், அல்லது ஜெயம் பெற்றுப் பகைவர்களை முறியடித்தாலும், எவ்விதம் தாறுமாறானாலும், நீங்கள் எல்லாரும் இந்த ஸ்தானத்தை விட்டுப் பெயர்ந்து போகக்கூடாது. நான் நிறுத்தின ஸ்தானத்திலேயே நில்லுங்கள்" என ஆக்ஞாபித்து விட்டு, தங்கள் சேனைக்கு வலது பக்கத்தில் அபூபக்கர் (றலி) அவர்களை தளபதியாகவும், இடது பக்கத்தில் உமர் (றலி) அவர்களை தளபதியாகவும் நிறுத்தி, உக்காபு என்னும் வெற்றித் துவஜம் முன் பறக்கத், தாங்களே நடுவணியில் சேனாதிபதியாய் நின்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையை மூன்று வகையாக வகுத்துத் தயார் செய்து நிற்பதை அபூஸுபியான் பார்த்து, உபை என்பவனை யழைத்து, அவனுடன் சில குதிரை வீரர்களைச் சேர்த்து "மலைகள் பொடிபொடியாய் விட்டாலும் நிலம் புரண்டு போனாலும், இன்னும் எவ்வித ஆபத்துகள் வந்து நேரிட்டாலும், நீரும் உமது வீரர்களும் இந்த ஸ்தானத்தை விட்டுப் பெயர்ந்து போகக்கூடாது" என்று சொல்லி ஆக்ஞாபித்து, தனது சேனைக்குப் பின்னணியில் நிறுத்திவிட்டு, காலித் இபுனு வலீதை வலது பக்கத்திலும், இக்கிரிமத்திபுனு அபூஜஹ்லை இடது பக்கத்திலும் தளகர்த்தர்களாய் நியமித்து, தான் நடுவில் சேனாதிபதியாக நின்றான்.

இரண்டு சைனியங்களும் போர், கோலத்துடன் தயாரானபின், முந்திகாபிர்களே முரசுமுழங்க ஆர்ப்பரித்து தங்கள் சைனியத்தை அஸ்ஹாபிகள் மேல் செலுத்தினார்கள். காபிர்கள் வேகம் மீறி, கண்கள் இரத்தஞ் சிந்த மூன்று வகையாக அடர்ந்து வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்களும், அருகர் இருவரும் நோக்கி, தங்கள் சேனையையும் நடத்தி "அல்லாஹு அக்பர்" என்னும் தொனியோடு பகைவர் மேல் விழுந்து தாக்கினார்கள். இருவகைச் சேனா வீரரும் ஒருவரோடொருவர் கலந்து கொண்டார்கள். இருவகுப்பிலும் படை முரசு ஓயாமல் ஒலித்தது. படைக்கலன்கள் ஒன்றோடொன்று தாக்கிச் சந்தித்தன. ஊழித்தீ ஒன்றோடொன்று எதிர்ந்தாற்போல இருசேனைகளும் எதிர்த்துக் கொண்டன.

மேன்மைமிக்க அஸ்ஹாபிகளும், தாழ்மைமிக்க காபிர்களும் ஒருவருக்கொருவர் கைகலந்து போராடும்போது, அவ்வவ்வீரர்கள்

ஏறியிருக்கும் உயர்தர அசுவங்கள், குயவன்சக்கரம்போலச் சுழன்று கண்களால் அக்கினி சிந்தி, திசாமுகமெங்கும் பாய்ந்துதிரிந்தன. அவ்வசுவங்களில் ஏறியிருக்கும் வீரர்கள் பட்டயத்தாலும், வேலாலும், தண்டத்தாலும், சூலத்தாலும், ஈட்டியாலும், சக்கரத்தாலும், பாணத்தாலும், இன்னுமுள்ள பலவகையான ஆயுதங்களாலும் பூமிபிளக்க நின்று போரிட்டார்கள். அஸ்ஹாபிகளில் அஸ்திரப் பிரயோகஞ் செய்யும் அநேகர் பாணங்களை யெய்து கணக்கற்ற காபிர்களை வீழ்த்தினார்கள். கவண்கொண்டு பலரை சாய்த்தார்கள். பிறகு ஆயுதங்களைக் கொண்டு எண்ணற்ற தலைவர்களைப் பிரேதங்களாகச் சரித்தார்கள். ஒவ்வொரு அஸ்ஹாபிகளும் பகைவர் திரளில் இடிவிழுந்தாற் போல் விழுந்து சங்காரஞ் செய்தார்கள். அதனால் இரத்தம் சோனைமாரியாய் சொரிந்து பிரவாகித்து ஓடிற்று. பிரேதங்கள் திரளாய்க் குவிந்தன. கவந்தங்கள் அகந்தம் கிடந்து அடித்தன. உறுப்புகள் பல அறுப்புண்டு வெவ்வேறாய்க் கிடந்தன. அஸ்ஹாபிகளே தங்கள் சத்துருக்களை அடர்ந்து சங்கரிப்பது போதாமல், அவர்கள் ஏறி யிருக்கும் குதிரைகள் வாயால் கடித்தும், கால்களால் இடித்து மிதித்தும் பலரைக் கொன்றன. காபிர்களின் சிரங்கள் தகர்ந்து மூளைகள் பலவிடத்திலும் கொட்டுண்டன. குடல்கள் சரிந்து கிடந்தன. அன்றியும் அநேக குதிரைகள் மடிந்து விழுந்தன.

அஸ்ஹாபிகள் பிரயோகிக்கும் ஒவ்வொரு பாணங்களும் அனேக காபிர்களின் மார்பைத் துளைத்து உயிரையுண்டு, அப்புறம் ஊடுருவிப் போயின; ஒவ்வொரு சக்கரங்களும் வயிறுகளையும் விலாக்களையும் பிளந்து, குடல்களைச் சரித்து உள்ளே தங்கி உதிரம் பருகின. ஒவ்வொரு ஈட்டிகளும் குதிரைகளின் மார்பைத் துளைத்து, அவற்றில் ஏறி யிருக்கும் வீரர்களையும் பாய்ந்து வீழ்த்தின. ஒவ்வொரு பட்டயங்களும் தலை இரண்டு, மார்பு இரண்டு, வயிறு இரண்டு வேறு உறுப்புகள் ஒவ்வொன்றும் இரண்டாகச் சரிந்தன; ஒவ்வொரு கவண் கற்களும் முகங்களிலும் கண்களிலும், வாய்களிலும், மார்புகளிலும் பட்டுச் சிதைத்தன. அல்லாமலும் இவ்வாயுதங்கள் முரசாதி வாத்தியங்களையும், துவஜாதி விருதுகளையும், அறகொறுக்கின. இவ்வுக்கிரத்தால் மாற்றார் தளம் தலை தடுமாறி மயங்கி நின்றது.

அஸ்ஹாபிகள் எல்லாரும் இவ்வாறு மாற்றார் மேல் விழுந்து நரசிங்கங்களைப் போல நின்று போரிடும் வேளையில், யுத்தப் பயிற்சி, மனோதைரியம், சரீரபலம், புத்தி சாதுரியம், கல்வி, கீர்த்தி, நற்குணம், நற்செய்கை எல்லாவற்றிலும் சிறந்த குதாதா (றலி) அஸ்ஹாபிகளின் அணியி லிருந்து தமது குதிரையை அதி வேகமாக நடத்திச் சென்று, பகைவரை நெருங்கி நின்று கொண்டு அவர்களை விளித்து.

சித்திர புராணம்.

வேறு.

மாலை நடத்தும் வேக முடைத்திர் மதிகெட்டீர்
பாவ முடைத்திர் வேறு மனத்திர் பகைகாளும்
கூவி யழைத்திர் தீனுணர் வித்துங் குறியாதி
ரியாவரு மென்முன் போர்செய் மினென்றங் கிவைசொன்னார்.

சொன்ன மொழித்தீ யங்கவர் காதிற் சுடமேன்மேல்
வன்னி யுயிர்தா லென்ன வுயிர்த்து மறமன்னர்
முன்ன மெதிர்த்தோர் சின்னவ னீது மொழிகின்ற
தென்னென வூழித் தீயினை யொத்தங் கெதிர்வந்தார்.

வசனம்

"ஏ! மதிகெட்ட பாவிகாள்! நீங்கள் எல்லாரும் சுத்த மௌட்டிகர்களே யன்றி நல்லறிவுள்ளவர்கள் அல்ல. எங்கள் தீன் என்னும் பரிசுத்தமான மார்க்கத்தை உங்களுக்கு உணர்த்தி எவ்வளவு திருத்தின போதிலும், நீங்கள் திருந்தாத சண்டாளர்கள். பகை முதிர்ந்த நெஞ்சினை யுடையவர்களாய் பழிசாதித்து நிற்கும் நீங்கள், அனைவரும் இதோ என்னோடு போர் செய்ய வாருங்கள் பார்ப்போம்" என்று உரத்துக் கூறினார். இச்சொல்லாகிய அக்கினி பகைவர்களின் செவி வழியே சென்று உள்ளத்திற் பற்றினதால், காபிர்களில் அநேகர் அகங் கொதித்து மிகச் சினந்து அழன்று, தங்கள் தங்கள் குதிரைகளைச் செலுத்தி, வடவாமுகாக்கினி சீறி வந்தாற்போலச் சினந்துவந்து குதாதா (றலி)யை நெருங்கி வளைந்தார்கள். 'சின்னஞ் சிறிய இவன் நம்மை இவ்வளவு தாழ்த்திப் பேசுவது என்ன ஆண்மை?' என்று உள்ளம் புழுங்கி வந்து வளைந்த சண்டாளர்கள் குதாதா (றலி) மேல் எல்லா வகை ஆயுதங்

களையும் பிரயோகித்தார்கள். சொல்லரிக்கிய உரத்தோடு வகை வகையாயுள்ள படைக் கருவிகள் எல்லாம் குதாதா (றலி)யின் அழகிய சரீரத்தில் சோனாமாரி போலச் சொரியப் பட்டன பகைவர்கள் அநேகர் சூழ்ந்து நின்று பிரயோகிக்கும் படைக் கருவிகள் அத்தனையையும் குதாதா (றலி) தமது தண்டத்தாலும், பரிசையாலும், பிறவற்றாலும் தடுத்து, பொடி பொடியாகச் சிதறுவித்து, ரணசிங்கம் போன்று நின்று, தம் குதிரையை அவர்கள் மேல் விடுத்து, வலக்கையிற் பிடித்திருக்கும் கூரிய பட்டயத்தால் வீசி பலரைப் பிளந்து சரித்தார்கள்.

சரித்திர புராணம்.

வேறு.

நிலைக ளிழந்தார் படைக ளிழந்தார் கெடிதங்கைச்
சிலைக ளிழந்தாருடல்க ளிழந்தார் திடரென்னத்
தலைக ளிழந்தார் குடர்க ளிழந்தார் தடர்மார்தோண்
மலைக ளிழந்தா ருயிர்க ளிழந்தார் மறமன்னர்.

வசனம்.

இவரது குதிரை சாரி வருந்தோறும் வீசும் பட்டய வீச்சினால், அங்கு வளைந்து நிற்கும் சத்துருக்கள் நிலைபெயர்ந்ததுமன்றி, சிலர் தலைகளும், சிலர் முகங்களும், சிலர் புஜங்களும், சிலர் கைகளும், சிலர் வயிறுகளும், சிலர் விலாக்களும், சிலர் கால்களும் இழந்து விழுந்தார்கள். அப்பகைவர்களில் அதிகப் பேர் ஹுபஷிகளானதால், அவர்களுடைய பிரேதங்களும், கவந்தங்களும், உறுப்புகளும் இருள் துண்டங்களைப் போலக்கிடந்தன. குதாதா (றலி) அவர்களின் பட்டயத்தால் பலர் மடிந்துபோவதை மற்ற காபிர்கள் கண்டு, சினம் மீறி, மேலும் மேலும் திரள் திரளாய் வந்து அவரை வளைந்து கொண்டு ஆயுதங்களை யெறிந்தார்கள் பாதகமிக்க பகைவர்கள் கணக்கின்றி சூழ்ந்துநின்று பிரயோகித்த ஒவ்வொரு ஆயுதங்களும், குதாதா (றலி)யின் திருமேனி முழுதும்பட்டன. முகம், புஜங்கள், வயிறு, கைகள், கால்கள், எல்லா விடங்களிலும் பகைவரின் ஆயுதங்கள் ஊறுபண்ணின. அன்றியும் காபிர்கள் எய்த பாணங்களில் ஒன்று குதாதா (றலி)யின் முகத்திற்கு நேராய் வந்தது. அப்போது அவர், உக்கிரத்தோடுவரும் அந்தப் பாணத்தைத் தமது பரிசையால் தடுத்தார். அது மேற்படி பரிசையையும் துளைத்துக்

கொண்டு வலது கண்ணில் பாய்ந்தது. குதாதா (றலி) தமது வலது கண்ணில் பாணம் ஒன்று தைத்தபோது, மனம் தளராமல் நின்று, உதடுகளை மடக்கிக் கடித்துக் கொண்டு, மேற்படி பாணத்தைப் பற்றி இழுத்தார். அது விழியைப் பெயர்த்துக் கொண்டு வந்தது. அதிலிருந்து உதிரம் பெருகி உடல் முழுதும் நனைய ஓடிற்று. அப்போது குதாதா (றலி) தமது வலது கையால், பழுதுற்ற கண்ணைப் பொத்திக் கொண்டு, குதிரையைத் திருப்பி நபிநாயகம் (ஸல்) அவர்கள் நிற்கும் இடத்தை நோக்கி விரைவாய் வந்தார். தீரம்மிக்க குதாதா (றலி) உடலில்எண்ணற்ற காயத்தோடும் வலது கண்ணை கைக்கொண்டு மறைத்து மனம் நொந்தவராய் வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அவரை நோக்கி, "ஜெயம் பெறத்தக்க வீரவானாகிய குதாதா! நீர் பாவங்கள் சம்பவிக்கும் சகல கருமங்களையும் தெரிந்தவர்; தீனில் தரிபாடானவர்; மனோதைரிய முள்ளவர். ஆனபடியால், பீஸபீலில் உண்டான காயங்களுக்காக மனம் நொந்து வருந்தாதீர்" என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன இச்சொல்லை குதாதா (றலி) கேட்டுக்கொண்டே நடந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் நின்று மரியாதையுடன் கீழ்வருமாறு சொன்னார்:—

"அகில ரக்ஷகராகிய யாறஸூலல்லாஹ்! இந்தபீஸபீல் யுத்தத்தில் தமியேனுடைய உடல் முழுதும் துளைக்கப்பட்டாலும், சின்னா பின்னமாலும், அல்லது உறுப்புகள் அறுபட்டு அவயவக்குறை உண்டானாலும் அவற்றிற் கெல்லாம் மனம்நொந்து துக்கப்படுவது ஆண்மையல்ல. போரில் உண்டாகும் காயத்தினால் துயரப்படுகிறவன், தனது எஜமானனைப் போரில் சிக்குவித்து விட்டுத் தான் தப்பியோடும் அபஜெயமுள்ள பேடியேயன்றி வேறல்ல. ஆகையால் தமியேன் இப்போது வாங்கியிருக்கும் காயங்களைக் குறித்து மனம் நோவில்லை. ஆனாலும் என் இருதயத்தில் சஞ்சலம் ஒன்றுண்டு. அதாவது தமியேன் பிராயம் அடைந்தபோது, ஒரு பெண்ணை விவாகம் செய்திருந்தேன். அவள் ஊழ்வினைப்பிரகாரம் சொற்ப காலத்திற்குமுன் இறந்துபோனாள். அதற்குப்பின் மறுதாரமாக வேறொரு பெண்ணை விவாகம் செய்துகொண்டேன். அவள் மிகவும் இளம் பிராயமுள்ளவள்; அவயவ இலக்ஷணத்தில் ஒப்பில்லாதவள்; கிளியைப்போன்ற குதலை மொழியை யுடையவள்; முகவசீகரமும், நற்குணமும் உள்ளவள். கட்டழகியாகிய அவள் பேரில்

நாயேன் எப்போதும் பக்ஷமாகவே இருப்பேன். அவரும் அப்படியே என்பேரில் காதல் கூர்ந்திருப்பார். மேற்படி என் மனைவிக்குமுன் நாயேன் வலது கண் ஊறுபட்டுப் போவேனேயானால், அவள் என்னை ஒற்றைக்கண் குருடானவனென்று மனம் வருந்தி நினைப்பாளேயென்பதுதான் நாயேனுக்கு இப்போதுள்ள சஞ்சலமன்றி, வேறில்லை" என்றார்.

சரித்திர புராணம்.

வேறு.

கேட்டனே மகிழ்வு பூப்பக் கிரியெனப் புயங்களோங்க
வாட்டமின் மனத்தி னிங்கு வம்மென விருத்திக் கையா
னீட்டிழு துற்ற கண்ணை நீவின ரெவரும் காணத்
தோட்டுமுண் டகத்தை மற்றோர் கமலத்தாற் றுடைத்தொத்த

வசனம்.

கதாதா (றலி) சொன்ன சொற்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, சந்தோஷமடைந்து, மனமிரங்கி, அவரைத்தங்களுக்கு அருகில் அழைத்து, தங்கள் சிறந்த வலதுகையால் மேற்படி பழுதுற்ற கண்ணைத் தொட்டுத் தடவினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் கை பட்டமாத்திரத்தில் கதாதா (றலி)யின் கண் முன்னிலும் அகன்று, அழகுபெற்று, சற்று பெரிதாய் விளங்கிற்று. அல்லாஹுத்தஆலா அன்று தொட்டு மேற்படி கதாதா (றலி)யின் வம்சத்தில் யுகம்முடியும் பரியந்தம் பிறக்கும் சந்ததிகள் ஒவ்வொருவருக்கும் வலது கண்ணை பெரிதாக வாக்கினான். மதீனமா நகரத்தில் வலது கண் பருத்திருக்கும் அவர் சந்ததிகளை இப்போதும் பார்க்கலாம். அல்லாஹுத்தஆலாவின் தத்துவத்தினால் நபிநாயகம் (ஸல்) அவர்களின் நிமித்தம், தமது வலது கண் முன்னிலும் சிறந்து விளங்கின மாத்திரத்தில் கதாதா (றலி) உள்ளம் குளிர்ந்து, ஒப்பற்ற வீரம் பெற்று, இனி பகைவரை நாசமாக்குவேனேனென்று குதிரையை நடத்திக் கொண்டு, மாற்றார் தளத்தில் ஆண் சிங்கம் போல பாய்ந்து சென்றார்.

கதாதா (றலி) மறுபடியும் மாற்றார் மேல் விழுந்து தாக்கினார். அதனால் உதிரப் பெருக்கெடுத்து ஓடிற்று; பிணங்கள் மலைபோல் குவிந்தன. இப்படிப் போரிடும்போது, வீர நேரத்தில் மிகவும்

சிறந்த ஸஹுலு உடைய குமாரர் அப்துல்லா (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்நிதியில் விடைப் பெற்றுக்கொண்டு, கையில் வாளைப்பிடித்து பிஸ்மில்லா சொல்லித் தமது குதிரையை நடத்திப் பகைவருடைய திரளில் சென்று அடர்ந்து தாக்கினார். அவர் சென்ற ஸ்தானத்தில் அப்போது பெருஞ்சமர் மூண்டது. விருதுகளெல்லாம் ஒடிந்து விழுந்தன. முரசுகள் சிதைந்து உருண்டன. குதிரைகள் அநேகம் வெட்டுண்டு மாய்ந்தன. காபிர்கள் பலர் மாண்டார்கள். அப்துல்லாஹ் (றலி) இவ்வாறாக நின்று போரிடும் போது, மாற்றார் தளத்திலுள்ள வீரனொருவன் அழன்று, தனது குதிரையை நடத்தி அவர் முன் வந்து மறித்துக்கொண்டு, அவரைவிளித்து "ஏ! இடிபோன்ற வேகம் மிக்க கண்களையுடையவனே! இப்போது நீ இங்கு நின்று கடும்போர்செய்கின்றாய். அதனால் என்ஜாதியார் அநேகர் விழுந்து மாண்டுபோனார்கள். உன்னோடு எதிர்த்து நிற்க சக்தி பெற்றவன் ஒருவனையும் காணேன். ஆனபடியால் இப்போது நீயே மிகைத்து நிற்கின்றாய். ஆனால், அத்தனை தூரம்பலங்கொண்டு நிற்கும் உனது சௌரியத்தை அறியலாமென்று நான் இப்போது உன்னோடு எதிர்நின்று போராட வந்தேன். ஆகையால், நீ என்னோடு போரிட்டு ஜெயம் பெறு பார்ப்போம்" என்றான். அப்பகைவன் இவ்விதஞ் சொன்னபோது அப்துல்லாஹ் (றலி) வெகுண்டு, அவனை நோக்கி "ஏ பாவி! நீ இன்று எனக்கு முன் துணிந்து சொன்னசொல், எவ்வளவுமிக்க பராக்கிரமசாலியானாலும் சொல்லத் துணியான். நீ மிகவும் பேடியாகையாலேயே வாய்த் துணிந்து சொன்னாய். நல்லது இருக்கட்டும். இனி உன் அவயவங்கள் உனக்கு உதவவேண்டும். ஆனபடியால், அவைகள் அறுப்புண்டு அவமே மாண்டு போகாமல் மீண்டுபோ" என்றார். அப்துல்லாஹ் (றலி) சொன்ன இச்சொல்லை கேட்ட மாத்திரத்தில் அவன் வெகுண்டு, தனது வில்லை வளைத்துப் பாணத்தைப் பூட்டி இவர்மேல் எய்தான். அவன் எய்த அந்தப்பாணத்தை அப்துல்லாஹ் (றலி) விலக்கி விட்டு, தாமும் வில்லை வளைத்து அவன்மேல் பாணம் ஒன்றை யெய்தார். அதை அவனும் விலக்கிக் கொண்டு, தனது குதிரையை இடமும் வலமுமாகச் சாரிசெய்தான். அப்போது அப்துல்லாஹ் (றலி) தமது குதிரையைச் சாரிவிடுத்து பட்டயத்தை ஓங்கி அப்பகைவனை வெட்டினார். அவ்வெட்டு அவன் கனியிற்பட்டு, அவனையும்

அவன் குதிரையையும் இரண்டாய்ப் பிளந்து விட்டது. மேற்படி பட்டயமும் இருதுண்டாய் முறிந்தது.

வீரம்பேசி முன்வந்து எதிர்த்த பகைவனை இரு கூறாய்ச்சரித்த தமது பட்டயம் முறிபட்டபோது, அப்துல்லாஹ் (றலி) குதிரையைத் திருப்பிக்கொண்டு, முகத்தில் வெயர்வை சிந்த நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்தார். இவர் கைவாள் முறிபட்டு மீண்டு வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு அகமகிழ்ந்து, அவர்கையில் கொடுப்பதற்கு வேறு கருவிகளில் ஒன்றும் தங்களிடத்தில் மேற்கொண்டு இல்லாமையால், அங்குக் கிடந்த ஒரு ஈத்தம் பாளையைக் கையிலெடுத்து, அப்துல்லா (றலி) கையில் கொடுத்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் கொடுத்த ஈத்தம்பாளையை அவர் வாங்கினவுடன், அது பிரகாசமும் கூர்மையும் வடிவுமுள்ள சிறந்த பட்டயமாயிற்று. அதனால் அப்துல்லாஹ் (றலி) ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களைப்புகழ்ந்து விடை பெற்றுக்கொண்டு, தமது குதிரையைத் திருப்பிக் காபிர்கள் சேனையில் இடிவிழுந்தார்போல விழுந்து தாக்கினார். அற்புத வாளைக் கையிலேந்திய அப்துல்லாஹ் (றலி) மாற்றார் தளத்தில் விழுந்து தாக்கும் வீரதீரத்தைக் கண்டு, மலக்குகளும் வியப்புற்று மகிழ்ந்தார்கள். அத்தனை உக்கிரத்துடன் அப்துல்லாஹ் (றலி) அடர்ந்து நின்று போரிருவதையும், காபிர்கள் அநேகர் அவர் கையால் மடிவதையும் மற்ற காபிர்கள் கண்டு, சினங்கொண்டு, தத்தம் குதிரைகளைக் கடாவி, இவரை நடுவில் விட்டுச் சூழவந்து வளைந்து கொண்டார்கள். உக்கிரமிக்க பகைவர்கள் எண்ணறவந்து வளைந்து நின்று தம்மேல் ஆயுதங்களைப் பிரயோகித்து அடர்வதை அப்துல்லாஹ் (றலி) கண்டு அட்டகாசஞ் செய்து, தமது குதிரையை அதிவேகத்தோடு அப்பகைவர் மேல் விடுத்து, அற்புதவாளினால் வெட்டினார். பகைவர் ஏறியிருக்கும் குதிரைகள் பல உறுப்புறுப்பாய்ச் சிதைக்கப்பட்டு மடிந்தன. பகைவர்களும் முகங்கள் அறுந்தும், புஜங்கள் சிதைந்தும், கால்கள் அறுப்புண்டும், கைகள் தறிபட்டும் மாண்டார்கள். மாற்றார் தளத்தின் விருதுகள் எல்லாம் அறவொடிந்து படுகளமெங்கும் பரவி வீழ்ந்தன. முரசுகள் நொறுக்குண்டுபோயின. அப்துல்லாஹ் (றலி) கையில் இலங்கும் அற்புதவாளினால், எண்ணற்ற காபிர்கள், உயிரிழந்தார்கள். மேற்படி வடிவாள் காபிர்களின் வீரத்தையும்

விஜயத்தையும், வேகத்தையும், மனோதிடத்தையும், உயிரையும் உண்டு, உதிரத்தைப் பருகி பின்னும் எதிர்ப்படும் இடியையும், பர்வதங்களையும் பிளந்தெறியத் தலைப்படுமென்றால், அதன் மகிமையையும், அதைக் கையிற் கொண்டு போராடும் வீரரின் வன்மையையும் நம்மால் இன்னதென்று கூறுதல் அசாத்தியம். மேற்படி பட்டய வீச்சிற்கு முன் எதிர்க்கும் சக்தி பெற்றவர் யாருண்டு? வீசுந்தோறும் பகைவர்கள் பிரேதமாய்ச் சரிந்து விழுந்தார்கள். முடிவில் அப்துல்லாஹ் (றலி) பகைவர்கள்மேல் இடி விழுந்த பாவனையாய்விழுந்து சங்கரித்தார். அவருக்கு ஈடுசெய்ய மாற்றார்களால் கூடவில்லை.

வீரதீரத்திற் சிறந்த அப்துல்லாஹ் (றலி)வும், அற்புத நேத்திரம்பெற்ற குதாதா (றலி)வும், மற்ற அஸ்ஹாபிகளும் இவ்வாறு அடர்ந்து நின்றுபோரிடும் உக்கிரத்தினால், காபிர்கள் ஆற்றாது தத்தளித்தார்கள். அபாஸுபியானும், காலிதும், இக்ரிமாவும், இவர்கள் சேனாவீரர்களும், அஸ்ஹாபிகளின் வேகமிக்க போருக்கு முன்னிற்க ஆற்றமாட்டாது, குடம்உடைந்த தயிரைப் போன்று சிதறி, பலவழியும் முறிந்து நெறிகெட்டுப் பின்வாங்கினார்கள். ஹபஷிகளும் குறைஷித்தலைவர்களும், அறபிக் காபிர்களும் கனானக் கூட்டத்தாரும் திகில்கொண்டு சிதறினபடியால், ரணகளத்தின் மும்முரமான கோஷ்டம் ஓய்ந்தது. உதிரம் பிரவாகித்து நாலுபக்கமும் பெருகி ஓடிற்று. அந்த உதிரப்பிரவாகத்தில் காபிர்களின் சிரங்கள், புஜங்கள், குடல்கள், கைகள், கால்கள் கவந்தங்கள் அநந்தம் மிதந்தன. குதிரையின் பிரேதங்களும் கணக்கின்றி மிதந்தன. அன்றியும் பகைவரின் அநேக பிரேதங்கள் குவியல் குவியலாகக் குவிந்தன. முறிந்தோடின காபிர்களில் சிலர் மலைக் குகைகளிலும், சிலர் அந்தகாரமான அடவிகளிலும், சிலர் நிர்மானுஷியமான வனங்களிலும் ஓடிப் பதுங்கினார்கள். யுத்த களத்தில் நாய்கள், நரிகள், வேறு பிணந்தின்னும் மிருகங்களும், கழுகுகள், பருந்துகள், காகங்கள் முதலான பக்ஷிகளும் கணக்கின்றி ஒன்றோடொன்று இகலி நெருங்கின. எங்கும் பைசாச மயமாயிற்று.

மாற்றார் தளஞ்சாய்ந்து படுகளம் வெறிதானபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவின் வண்ணம் ஜெயமடைந்த அஸ்ஹாபி

கள் எல்லாரும் தக்பீர் முழக்கத் தோடு, பகைவரின் பாசறையில் வந்து சூறை யாடினார்கள். இவர்கள் இவ்வாறு சூறையாடும் போது, முன்சௌத் என்னும் தலத்தி லிருந்து யுத்தக் காட்சிக்காக வந்த பெண்களும் பகைவரின் கூடாரங்களில நுழைந்து கொள்ளை யிட்டார்கள். யுத்தோபகரணங்கள், தின்பண்டங்கள், உடைகள், விருதுகள், முரசாதி வாத்தியங்கள், கூடாரங்கள், இன்னும் வேண்டுமான கருவிகள் எல்லாம் அஸ்ஹாபிகளால் கொள்ளை யிடப் பட்டன. இவர்கள் இவ்வாறு இங்கு கொள்ளை யிடும் வேளையில், நபி நாயகம் (ஸல்) அவர்கள் முன் ஐம்பது குதிரை வீரர்களோடு பின்னணியில் நிறுத்தின அப்துல்லாஹ் (றலி) தமது சகோதரர் ஜெயம் பெற்றுக் காபிர்களின் சொத்துக்களை கொள்ளை கொள்வதை நோக்கி, நபி நாயகம் (ஸல்) அவர்கள் காரியம் எவ்வாறானாலும் நீங்கள் நிலைபெயராக் கூடாதென்று இட்ட கட்டளையை எண்ணி, அந்த ஸ்தானத்திலேயே நின்றார் பிறகு மேற்படி ஐம்பது குதிரை வீரர்களில் பத்து வீரர்கள் அப்துல்லாஹ் (றலி) கூடவே நிற்க, மற்ற நாற்பது வீரர்களும் வேறு பிரிந்து மாற்றார் கூடாரங்களில் வந்து விழுந்து கொள்ளை யிட்டார்கள். கணக்கில்லாப் பொருள்கள் அஸ்ஹாபிகள் கைவசமாயின.

அஸ்ஹாபிகள் இவ்வாறு பகைவர் கூடாரங்களில் கொள்ளை யிட்டுக் கொண்டிருக்கையில், முறிந்தோடின காபிர்கள் அநேகரும் மூன்று சேனாதிபதிகளும் ஒரு குன்றின் சிகரத்தில் ஏறி நின்று, முஸ்லிம்கள் சேனையைப் பார்த்தார்கள். பார்த்த போது முஸ்லிம்கள் தங்கள் பாசறையைச் சூறையிட்டுக் கொண்டு நிற்பதைக் கண்டு, காலிது இபுனு ஒலீது, அபாஸுப்யானை விளித்து "நமது சத்துருக்களாகிய முஹம்மது கூட்டத்தார் எல்லாரும் இப்போது கொள்ளை யிடுவதில் கருத்தாய், யுத்தப் பராக்கின்றி நமது கூடாரங்களில் கூடி நிற்கின்றார்கள். அவர்கள் கையில் ஆயுதங்களில்லை. நமது பொருள் மேல் அவர்கள் மீறிச் சிந்தனை பற்றிருப்பதால், இது நமக்கு நல்ல தருணம். அதோ ஒரு தலைவன் சில குதிரை வீரர்களோடு நிற்கின்றான். நாம் நமது வீரர்களைக் கூவி திரட்டிக் கொண்டு மீண்டுஞ் சென்று அவர்கள் மேல் திடுகூறாய் விழுந்து சங்கரித்து ஜெயம் பெற்றுத்தான் நமது நகரத்திற்குப் போக வேண்டும். இப்படி தோல்வி யடைந்து ஓடிப்போய் நகரஞ் சேர்வது சரியல்ல. நான் சொல்லும் உபாயம் இது தான். இவ்விதஞ்

செய்வது தான் புத்தி" என்றான். காலிது சொன்ன இச்சொல்லுக்கு அபாஸுப்யானும் இணங்கி, இக்ரிமாவையும், அங்கங்கே தெறிகெட்டுச் சிதறி நின்ற மற்ற வீரர்களையும் கூவி, ஒருங்கு திரட்டிக் கொண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் பின்னணியில் நிறுத்தின அப்துல்லாஹ் (றலி)வையும், அவரோடு நிற்கும் பத்து அஸ்ஹாபிகளையும் வந்து வளைந்து கொண்டார்கள்.

தளஞ் சாய்ந்து சிதறி யோடின பகைவர்கள் மீண்டு வந்து தம்மை வளைந்து கொண்டதை மேற்படி அப்துல்லாஹ் (றலி) கண்டு, சினங் கொண்டு, "இதோ என் கையிலிருக்கும் வில்லை வளைத்து, அஸ்திரப் பிரயோகத்தினால் எல்லாரையும் மாய்க்கிறேன்" என்று, கண்கள் அக்கினி கக்க வில்லை வளைத்து அஸ்திரங்களை தொடுத்து, பகைவர் மேல் சோனாமாரிப் போலச் சொரிந்தார். இவர் பொழியும் அஸ்திரங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காபிர்களைக் குறிப்பாய்ப் பாய்ந்து கொன்றது. இவ்வாறு சற்று நேரம் பிரயோகித்த படியால் அஸ்திரங்கள் எல்லாம் செலவழிந்தன. அப்போது அப்துல்லாஹ் (றலி) கையில் வில்லொன்று மாத்திரம் இருந்ததன்றி வேறே யாதொரு கருவியுமில்லை. அதனால் மனம் தளர்ந்து, 'நமது கையில் வேறு ஆயுதங்கள் ஒன்றுமில்லையே. இனி மாற்றார் நம்மை யடுத்து வந்தால் நாம் என்செய்வோ, மென்று திகைத்து நின்றார். எவ்வளவு வீரதீரம் உள்ள சௌரியவானானாலும், ஊழ்வினைக்கு முன் என்ன செய்யக்கூடும்? அப்பொழுது அப்துல்லாஹ் (றலி)வுக்கும், அவரோடு நிற்கும் பத்து அஸ்ஹாபிகளுக்கும் மகத்தான அல்லாஹு தஆலா நியமித்த வாழ் நாளின் முடிவு சமீபித்தது. காலிது, அப்துல்லாஹ் (றலி)வையும், மேற்படி பத்து வீரர்களையும் பிடித்து சங்கரித்தான். உடனே பதினொரு வீரர்களும் உயிர் துறந்து வீர சொர்க்கஞ் சேர்ந்தார்கள்.

அஸ்ஹாபிகள் பதினொரு பேர்களையும் சங்கரித்து வீழ்த்தின காலிது, அவர்கள் உடைகள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு, தனது வீரர்களுக்கு உற்சாக மூட்டி நடத்தி வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்ல வேண்டி அவர்களையும், மற்ற அஸ்ஹாபிகளையும் சமீபித்து வளைந்தான். காலிது தனது சேனையோடுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்களையும், அஸ்ஹாபிகளையும் சூழ்ந்து கொண்டு நிற்கையில், மனிதரை நல்வழியில் செல்லவொட்

டாது தடுத்துத் தீயவழியில் செலுத்தும் படுபாதகனும் தெய்வத் துரோகியுமாகிய இபுலீஸ் என்னும் சண்டாளன், நல்லொழுக்கம், நற்செய்கை, நல்லெண்ணம், குலம், கல்வி, ஆசார முதலியவற்றில் விசேஷமான ஒரு அறபியைப்போல வேஷம் பூண்டு, அஸ்ஹாபிகள் சேனையின் ஒரு புறத்தில் வந்து சில அஸ்ஹாபிகளோடு கலந்து நின்று கொண்டு, மனம் நொந்து வருந்தினவன் போல நடித்து அஸ்ஹாபிகளை அடிக்கடி நோக்கி "ஆ! எனது பிரியமிக்க சகோதரர்களே! நமது நபிகள் சிகாமணியாகிய முஹம்மது (ஸல்) அவர்கள், மாற்றார்கள் பிரயோகித்த ஆயுதங்களால் உடல் முழுதும் படுகாயமுற்று உதிரம் பிரவாகிக்கத் தரையில் சாய்ந்து ஷஹீதாய் விட்டார்களே! அந்தோ!! அந்தோ!!! இனிநாம் என் செய்வோம்? நமக்கு யார்துணை? ஆ, எங்கள் விதியே!" என்று வாய் குழறி, நாவுலர்ந்து, உடல் நடுங்க, கண்ணீர் சிந்த அழுது புலம்பி நிலத்தில் விழுந்து புரண்டு சப்தமிட்டு அலறினான். அஞ்சத்தக்க இச்சொல் அஸ்ஹாபிகளின் செவிகளில் விழுந்த மாத்திரத்தில், முன் மதீனமா நகரத்திலிருந்து சேனை புறப்படும் போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் கனவுகண்டதாகச் சொன்ன சொற்கள் அனைவருக்கும் ஞாபகத்தில் வந்தன. அதனால், மேற்படி தீயோனுடைய சொல்லை மெய்யென்று நம்பி, திகில் கொண்டு, பிரக்ஞை யற்றவர்களாய், நின்ற நின்றபடியே எல்லாரும் தெறி சிதறி முறிந்தார்கள்.

வஞ்சகனாகிய இபுலீஸ் சொன்ன அபத்த மொழியை மெய்யென்றுநம்பி அஸ்ஹாபிகள் தளஞ்சாய்ந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்களும், அவர்கள் கூட அபூபக்கர் (றலி), உமர் (றலி), உதுமான் (றலி), அப்பாஸ் (றலி), ஹம்ஸா (றலி), மிஸ்ஹபு (றலி) இவர்களும், இன்னும் நாலைந்து பிரதானமான அஸ்ஹாபிகளும் அஞ்சா நெஞ்சினர்களாய், உற்சாகத்தோடு நின்றார்கள்.

தங்கள் தளபதியாகிய காலிது ஒருபுறம் நின்று அடர்வதையும், அஸ்ஹாபிகள் தளஞ்சாய்ந்து பின்வாங்கிப் போவதையும், முஹம்மது நபி தேக வியோகமானா ரென்பதையும் காபிர்கள் அறிந்து, எல்லாரும் ஒருங்குகூடி, பூமிபுரளத்தக்க உக்கிரத்தோடு திரண்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களையும், மேற்குறித்த தலைவர்களையும் வளைந்தார்கள். வளைந்த காபிர்கள் தங்கள் கைகள் ஓயா

மல் வாளினாலும், வேலினாலும், சூலத்தினாலும், அம்பினாலும், தண்டத்தினாலும், ஈட்டியினாலும், கவண்கல்லினாலும் அடர்ந்து தாக்கினார்கள். காபிர்கள் பிரயோகித்த மேற்படி ஆயுதங்கள் அஸ்ஹாபிகளை வருத்தின காயங்களை அதிகமாக்கின. அஸ்ஹாபிகள் உடலில் ஊறுபட்டமையால், தங்கள் இருதயங்களை அல்லாஹு தஆலாவின் பக்கம் வைத்துக் கொண்டு, ஷஹீதாக எத்தனமாய் நின்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய ஹம்ஸா (றலி) அவர்கள், காபிர்கள் வரவர மும்முரமாய் அடர்வதையும் முஸ்லிம்கள் ஊறுபட்டு வருந்துவதையும் கண்டு கண்கள் சிவப்பேறி, அதிக சினங் கொண்டு தங்கள் வில்லைவளைத்து அஸ்திரங்களைத் தொடுத்து, காபிர்கள் மேல் பொழிந்தார்கள். இவர்கள் பொழியும் அஸ்திரங்களால், காபிர்கள் பலவாறு சேதப் பட்டார்கள். பகைவரின் குதிரைகளையும், அவற்றில் ஏறியிருக்கும் வீரர்களையும் சல்லுக்கருவி போலத் துளைத்து வீழ்த்தினர். அவ்வஸ்திரங்களால் எண்ணற்ற காபிர்கள் மடிந்தார்கள். இவ்வாறாக ஹம்ஸா (றலி) அவர்கள் அஸ்திரங்கள் எல்லாவற்றையும் எய்து விட்ட படியால், தூணி வெறிதாயிற்று. அதனால், வில்லைத்தோளில் மாட்டிக் கொண்டு வாளைக்கையில் உருவிப்பிடித்து சற்றுநேரம் வரையும் பகைவரை வெட்டினார்கள். பிறகு மேற்படி வாளும் முறிந்துபோயிற்று. மற்ற ஒவ்வொரு ஆயுதங்களையும் எடுத்தெடுத்துப் பிரயோகித்தார்கள்; அவைகளும் ஒன்றின்பின் ஒன்றாய் ஒடிந்தன. அன்றியும் பரிசையும் நொருங்கிற்று. இப்படியாகவே ஹம்ஸா (றலி) அவர்கள் நிராயுதராய் மனம் தளர்ந்து நின்றார்கள். அல்லாஹு தஆலாவினால் நியமிக்கப் பட்டிருக்கும் ஊழ்வினை ஒருவருக்கு அடுக்குங் காலமாயின் அது எவ்வித நிர்பந்தத்திற்கும் அஞ்சாது ஊடறுத்து வருமல்லவா? ஹம்ஸா (றலி) அவர்கள் உஹது யுத்தத்தில் ஷஹீதாகும் கற்பனை உண்டாயிருந்த படியாலேதான், அவர்கள் அணிந்திருந்த எல்லா ஆயுதங்களும் ஒழிந்து வெறுங் கையானார்கள். இவர்களிப்படி ஆயுதம் ஒன்றுமின்றி நிற்பதை அபாஸுபியான், காலிது, இக்ரிமா இம்மூன்று தளகர்த்தர்களும் கண்டு மனமகிழ்ந்து, தங்கள் குதிரைகளைச் செலுத்தி வந்து சமீபத்தில் நெருங்கி நின்றுகொண்டு, அஸ்திரம், சஸ்திரமென்னும் இருவகை ஆயுதங்களை யெல்லாம் ஹம்ஸா (றலி) அவர்கள் மேல் பிரயோகித்தார்கள். அதனால் ஹம்ஸா (றலி)

அவர்கள் திருமேனி துளைக்கப் பட்டது. கேசாதிபாத பரியந்த முள்ள ஒவ்வொரு அவயவங்களும் இன்னது என்று அறியக் கூடாத விதமாய்ச் சிதைபட்டது. எதிர்த்துப் போராட ஆயுதமற்று நின்று தேகமுழுதும் படுகாயமுற்ற ஹம்ஸா (றலி) அவர்கள் அசைவற்று நின்று, அல்லாஹு தஆலாவையும், நபி நாயகம் (ஸல்) அவர்களையும் இருதயத்தி லிருத்திக் கொண்டு, சிறப்பான கலிமாவை அடிக்கடி சொல்லிக் கொண்டே குதிரையி லிருந்து சாய்ந்து சுவர்க்கத்தின் மேலானபதவியை அடைந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தகப்பனாராகிய ஹம்ஸா (றலி) அவர்கள் சுவர்க்கஞ் சேர்ந்த பின்னும், அஸ்ஹாபிகளில் பிரதானமான வேறு சிலரும் இவ்வாறே படுகாய மடைந்து, சுவர்க்கஞ் சேர்ந்தார்கள். முன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கனவு கண்டு மூன்று வகையாகச் சொன்ன பலன்களில், மூன்றாவதற்கு முன்னும், உதிரக் கலப்பிலுள்ளோர் சிலர் ஷஹீதாவார்க ளென்றது இப்போதும் நிறைவேறின. இவ்வாறு அஸ்ஹாபிகளில் பிரதானமான தலைவர்கள் மடிந்த பின்னும் பகைவர்கள் உக்கிரம் கொண்டு, கவண் கற்களைச் சோனாமாரி போலச் சொரிந்தார்கள்.

சீறாப் புராணம்.

வேறு.

விசைகொண் டெண்டிய கவண்கல்வெம் போரினை விளைப்ப
விசையி லாதடன் முஹம்மது மார்பினும் வாம
மிசையு நெற்றியி னுஞ்சென்று தாக்கின விதனாற்
றிசையு மாசையு மிரங்கிட விருந்தனர் தியங்கி.

ஈதலா தொரு கவண்கல்கீழ் வாய்ப்புறத் திலங்குஞ்
சோதி மூரலுஞ் சிதைத்திடத் தைத்தது தொகுத்த
பூத லத்தினி லுணர்வுடன் சாய்ந்தனர் பொருவா
மாதரத்தொடு மதியொடும் பேசிய வள்ளல்.

வசனம்.

காபிர்கள் சொரியும் அக்கினியை யொத்த கவண் கற்களில் அநேகம் நபிநாயகம் (ஸல்) அவர்களின் திவ்விய திருமேனியிலும் வந்து பட்டன. நபிநாயகம் (ஸல்) அவர்களின் நெற்றியிலும், மார்பிலும், புஜங்களிலும் கவண் கற்கள் பல வந்து தாக்கின. அப்

போது காபிர்கள் பொழிந்த கவண் கற்களில் ஒன்று நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற திருவாயின் கீழ்ப் பற்களில் ஒன்றைச் சிதைத்து, உதிரம் ஒழுகச் செய்தது. கவண் கற்பட்டுக் கீழ்வாய்ப் பல்லொன்று சிதைந்த உபாதையால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் குதிரையி லிருந்து இறங்கி, பிரக்ஞையோடு நிலத்தில் சாய்ந்தார்கள். தாங்கள் கண்ட கனவின் மூன்றாம் பலனாகிய தங்கள் உறுப்புகளில் ஒன்று சிதைந்து இரத்தம் சிந்து மென்ற சொல் நிறைவேறிற்று.

நபிமார்கள் எல்லாருக்கும் நபியும், அகில ரக்ஷகரும், சமான மில்லாதவரும் உலக காரணருமாகிய முஹம்மது (ஸல்) அவர்களுக்கே, அல்லாஹு தஆலா நியமித்த வண்ணம் துன்பம் வந்து சம்பவித்ததென்றால், இனி இவ்வுலகத்தில் துன்பம் அனுபவிக்காத மானிடர் உண்டென்று யார் சொல்லக்கூடும். எவ்வகை மேன்மை யுள்ளவர்களும் சுகத்தை அனுபவிப்பது போலத் துக்கத்தையும் அனுபவிப்பார்கள்; சுக துக்கங்களை யனுபவிப்பது தெய்வ சங்கற்ப மேயன்றி வேறல்ல வென்பதற்கு இதுவே சாக்ஷி.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் நிலத்தில் சாய்ந்தபோது, அஸ்ஹாபிகளி லொருவராகிய கஃபு (றலி) கண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தேகவியோகமானார்களோ வென்ற திகில் கொண்டு, விரைவாக நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமீபத்தில் வந்து நோக்கினார்கள். அப்போது நபிநாயகமவர்கள் கஃபு (றலி) வை நோக்கி, "கஃபே! நீர் அஞ்சாதிர்; நான் உயிருடனிருக்கிறேன்; எனக்கு ஆபத்து ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு, தங்கள் அஸ்ஹாபிகளைப் பார்த்தார்கள். தளஞ்சாய்ந்து முறிந்தோடின அஸ்ஹாபிகள் எல்லாரும் ஒருகாத தூரத்தில் சிதறுண்டு நெறிகெட்டு ஓடுகிறார்கள்; அதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, "தீனோர்களே!, நீங்கள் பெறும் ஜெயத்தை இழந்து விட்டு எங்கே போகின்றீர்கள்? அச்சமுற்றுக் கலங்கியா போனீர்கள்! முறிந்தோடிப் போவது முறையல்ல; திரும்பி வாருங்கள்; ஓடாதீர்கள்" என்று சப்தமிட்டுக் கூவினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வா[illegible] இட்ட குரலைக் கேட்ட முறிந்து போகும் அ[illegible]வரும் திரும்பினார்கள்.

நெறிகெட்டுப் போன அஸ்ஹா[illegible] மீண்டு வந்து நபி[illegible]ம் (ஸல்) அவர்களை அடுத்த போது, இந்த சம்பவங்கள் எல்[illegible]

111360

றையும் கண்கூடாய்ப் பார்த்து நிற்கும் காபிர்களின் ஒரு தலைவனாகிய கலபு உடைய மகன் உபை என்பவன், முஹம்மது இன்னும் மாண்டு போகவில்லையாவென்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு, மற்ற காபிர்களைப் பார்த்து "கேட்டீர்களா? முஹம்மது மரணமடைந்தானென்றிருந்தேன். அதோ அவனுடைய குரலோசை கேட்கின்றது ஆனால், அவனை உயிருடன் மதீனமா நகரம் போய்ச் சேரும் வண்ணம் விட்டு விட்டுப்போக நான் அவ்வளவு சக்தி கெட்ட பேடியா? இப்போதே முஹம்மதைக் கொல்லா விட்டால், நான் கலபுக்குப் பிறந்தவனல்ல; என் மனைவியும் என்னுடையவளல்ல; நீங்கள் நன்றாயறியுங்கள்" என்று கூறி, கண்கள் அக்கினி மயமாய்ச் சினந்து, வலதுகையில் வேலை ஓங்கிப் பிடித்துக் கொண்டு, குதிரையைச் செலுத்தி நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி விரைந்து வந்தான். நபிநாயகமவர்களைக் குறிப்பிட்டுக் கொண்டு வரும் அவனைத் தடுத்துக் கொல்வதற்கு அஸ்ஹாபிகள் எத்தனப் பட்டார்கள். அதை நபிநாயகமவர்கள் அறிந்து, அஸ்ஹாபிகளை நோக்கி "அவனை ஒருவரும் தடுக்க வேண்டாம். வரட்டும்; விட்டு விடுங்கள்" என்றார்கள். உடனே மேற்படி உபை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் நெருங்கினான். அப்போது நபிநாயகமவர்கள், ஆரிது (றலி) கையிலிருக்கும் வேலை வாங்கி, அவன் தன் ஆயுதத்தை நீட்டுவதற்கு முன், மேற்படி வேலின் கூர் பாகத்தை அவன் மேல் வீசினார்கள்; அது அவன் கழுத்தில் பட்டது. வேல் தன் கழுத்திற் பட்ட மாத்திரத்தில், அவன் கழுத்தைத் தடவிப் பார்த்தான்; காயம் சிறிதுமில்லை. அப்படியிருந்தும் அந்தப் பாதகன் வாயைப் பிளந்து கொண்டு "ஐயையோ! என்னை முஹம்மது கொன்று விட்டான் இனி நான் என்ன செய்வேன்" என அலறிக் கொண்டு, தன் குதிரையை விசையாயடித்துத் திருப்பி ஓட்டினான். இவன் இவ்வாறு அலறிக்கொண்டு வருவதை மற்றக் காபிர்கள் பார்த்து, வியப்படைந்து, "உபையே! ஏன் அலறுகின்றீர்? இங்கிருந்து சினத்தோடு சப்தமிட்டுக் கொண்டு போனீரே, ஏன் பயந்து விட்டீர்? சீ! சீ!! இது என்ன வீரம்? இதுதானா வீரவான்களின் ஆண்மை? உமது உடலில் அற்ப காயமாவது இல்லையே? அப்படியிருக்க, இவ்வாறு தட்டுக்கெட்டுத் தடுமாறி அலறும் காரணம் என்னவோ?" என்று உபையை நோக்கிச் சொன்னார்கள். அப்போது உபை அவர்களைப் பார்த்து

"நீங்கள் இவ்வாறு சொல்ல வந்தீர்களே, எதை அறிவீர்கள்? முஹம்மது செய்தது இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? அவன் தான் என் கழுத்தில் குத்தி, என் உயிரைப் பிடுங்கினானே. இனி நான் பிழைப்பேனா? இதோ பாருங்கள், விழுந்து சாகிறேன்" என்று சொல்லிக்கொண்டே குதிரையிலிருந்து நெடுமரஞ் சாய்வது போல நிலத்தில் சாய்ந்தான். கீழே விழுந்த உபை மறுபடியும் வாயைத் திறந்து, குபலைக் குறித்து "தெய்வமே! இதுவரையும் நான் உனக்குத் தொண்டு செய்து வணங்கி வந்த பலன், இப்படியா முடிய வேண்டும்?" என்று புலம்பிக் கொண்டே உயிரை விட்டு நரகஞ் சேர்ந்தான்.

பாதகமிக்க உபை அதிசயிக்கத்தக்க விதமாய் விழுந்து மாண்ட போது, அதைக் குறித்துப் பகைவர்கள் திகில் கொண்டு, 'என்ன புதுமை? இது என்ன அநியாயம்? அதிக உக்கிரம்கொண்டு சென்ற உபை முஹம்மதை யடுத்து, முஹம்மது கொன்று விட்டானென்று அலறிக்கொண்டு திரும்பி வெருண்டு ஓடிவந்தான்; அவன் கழுத்திலாவது, மற்ற எவ்விடத்திலாவது அற்ப காயமுமில்லை. கீழே விழுந்தான்; இறந்து போனான். அது ஆச்சரியமல்லவா? ஒப்பற்ற வீரவானாகிய உபைக்கு இக்கதியானால், மற்றவர்களுக்கு எப்படியாகும்?' என்று எண்ணி யெண்ணித் தத்தளித்து, அனைவரும் ஒருங்கு திரண்டு "முஹம்மது உடைய மாயா மந்திரங்களில் கொஞ்சமும் குறையவில்லை. நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. நமது விதியும் அதற்கு ஏற்றபடியே யிருக்கின்றது. நமக்கு இது நாசம் வருத்தும் கஷ்டகாலந்தான். இப்போது முஹம்மது புலியைப் போல ஒடுங்கி நிற்கின்றான். ஆகையால், நாம் எல்லாரும் இம்மட்டும் தப்பித்துக்கொண்டு ஓடிப்போவதுதான் புத்தி" என்று ஒருவருக்கொருவர் பேசி முடிவு செய்து கொண்டு, அப்படியே முறிந்தோடினார்கள்.

காபிர்கள் அனைவரும் ஆயுதாதி சகலசாமான்களையும் இழந்து விட்டு, தனித்தனியேபிரிந்து, நெறிகெட்டு, மக்கமாநகரத்தைநோக்கி ஓடிவிட்டார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் பூரண ஜெயம் பெற்று தங்கள் அஸ்ஹாபிகள் அனைவரையும் ஒருங்கு சேர்த்து அழைத்துக்கொண்டு, படுகளத்தைக் கடந்து உஹது மலைக்குச் சமீபத்திலுள்ள சஹ்பு என்னும் தலத்தில் வந்தார்கள்.

அங்குவந்தபின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளை நோக்கி "இந்த யுத்தத்தில் ஷஹீதான அன்ஸாரிகள் எத்தனை பேர்?" எனக் கேட்டார்கள். "அறுபத்தைந்து பேர்கள் ஷஹீதானார்கள். அவர்களில் பிரதானமான தலைவர்கள் பதினான்கு பேர்" என்று அன்ஸாரிகள் விடைபகர்ந்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதானவர்களின் ஜனாஸாக்களை அடக்கஞ் செய்வதற்காக அன்ஸாரிகளை அழைத்துக் கொண்டு, யுத்தகளத்திற்கு வந்து, அறுபத்தைந்துபேர்களின் உடல்களையும் பொறுக்கி யெடுத்தார்கள். அவர்கள் உறுப்புகள் சிதைந்து போனபடியால், இன்னார் இன்னாரென்று உருத்தெரியவில்லை. அதனால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒருவரைநோக்கி, அங்கு நின்று பாங்கு சொல்லும்படி ஏவினார்கள். அவர் பாங்கு சொன்ன போது, ஹம்ஸா (றலி) அவர்களின் சிரசு மாத்திரம் நிமிர்ந்து நின்று, நாலுபக்கமும் நோக்கிற்று. அதனால் அவர்களை யறிந்து கொண்டு அவர்கள் உடலை மாத்திரம் ஒரு குழியிலும், மற்றவர்கள் உடல்களைக் குழியொன்றுக்கு இரண்டிரண்டாக இட்டு அடக்கஞ் செய்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதானவர்களை யெல்லாம் அடக்கிவிட்டு, தங்கள் சேனையை அழைத்துக்கொண்டு, ஜெய பேரிகை முழங்க மதீனமாநகரம் வந்துசேர்ந்து இராஜ்ஜியபாரத்தை ஒப்புக்கொண்டு, கொள்ளைப் பொருள்களை நீதியின்படி பாகித் துக்கொடுத்து, சந்தோஷமாக வீற்றிருந்தார்கள்.

77-வது அத்தியாயம்.

அமுறூப் படை யெழுச்சி.

கலி விருத்தம்.

குமுறுநிடி யொப்பவரும் குபிரோர்
சமரானதை வெற்றி செயுந் தகையார்
அமரோர்புக ழற்புதகம் மிறஸூல்
அமுறுவினி லுற்றதறைந் திடுவோம்.

இதன் பொருள்.

பெரிய சப்தத்தையுடைய இடியைப்போல் காபிரீன்கள் படையோடும் வந்து செய்கின்ற சண்டையை வெற்றிசெய்யுங் கீர்த்தியை யுடையவர்களுமாய், வானவர்கள் புகழும் காரணத்தை யுடையவர்களுமாய் விளங்கும் நம்முடைய நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், அம்றுவென்னு மூரிற்குப் போனதி லுண்டான செய்தியைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

செங்கோ லென்னுங் கொழுங் கொம்பிற்
செழுந்தி னென்னும் பயிரேற்றி
யெங்கோன் முஹம்ம தெனுநபியு
ரெழில்சேர் மதினத் தினிதிருப்பச்
சங்கா மையின்மேற் றவழ்கின்ற
தடஞ்சூழ் மக்க மாநகரில்
வெங்கோற் றிருத்து மபா ஸுபியான்
செய்கை யனைத்தும் விளம்பு வமால்.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் உஹது யுத்தத்தில் ஜெயம்பெற்று மதீனமாநகரம் வந்து சேர்ந்த பின், அபாஸுபியான், காலிது, இக்ரிமா என்னும் இம்மூன்று தளபதிகளும், மாண்டவர்போக மீந்துள்ள அவர்கள் வீரர்களும் பல மார்க்கங்களாகப் பிரிந்தோடி, மக்கமா நகரம்போய்ச் சேர்ந்தார்கள். மாற்றார் முறிந்தோடி நகரம் சேர்ந்தும், அவர்கள் கொண்டிருந்த பகையைச் சிறிதும் மறக்கவில்லை. அவர்களில் விசேஷித்த பகைவன் அபாஸுபியானே. அவனுக்குத்தான் எப்போதும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பேரில் சிந்தனையும், பகையுமாயிருக்கும். ஒருதரம், இரண்டு தரமல்ல; பல தடவைகளிலும் அபஜெயமடைந்து தப்பிப் பிழைத்தோடியும் அவனுக்குநல்லறிவு பிறக்கவில்லை. நிகழ்ந்த உஹது யுத்தத்திலும் அநேகரை படுகளத்தில் மாளக்கொடுத்து விட்டு அபஜெயப்பட்டு ஓடின அபாஸுபியானுக்கு, மனோதுக்கம் வரவர முதிர்ந்தது. தான் எடுத்த கருமம் சித்திபெறாமல் போவதால் ஒருவன் மனோதுக்கப்படுவது இயற்கை

தானே. அதனால், நகரம் புகுந்த அன்றுதொட்டு அபூஸுஃபியானுக்கு நல்லூண், நல்லுறக்கம், வேறு சிந்தனை ஒன்றுமில்லை. எப்போதும் துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் அவன், ஒருநாள் தனித்திருந்துகொண்டு பின்வருமாறு சிந்தித்தான்:-

“நிகழும் காரியங்களைப்பற்றி சிந்திக்கும் இடத்தில், நமது தொன்றுதொட்டுள்ள மார்க்கமும், குலமகிமையும் நாளுக்குநாள் விமர்த்தனமாய்க் கொண்டேவருகின்றன வென்பதற்கு சந்தேகம் இல்லை. முஹம்மது தனது புதிய மார்க்கத்தை நினைத்தவண்ணம் ஸ்தாபித்து, வரவர பலப்படுத்துகின்றான். அவன் கலகம் விளைக்கத் தலைப்பட்ட அந்நாள் முதற்கொண்டு இதுபரியந்தம் நிகழ்ந்த ஒவ்வொரு போரிலும், நமது ராணுவவீரர்கள் முறிந்தோடி ஊர்வந்து சேர்கின்றார்களேயன்றி, ஒரு போரிலும் அற்பஜெயமாவது பெறநாம் காணவில்லை. உதிர தாகம்மிக்க ஹபஷிகளையும், பயங்கரமான யுத்த வீரர்களையும் சேர்த்துக்கொண்டு இப்போது உஹது மலைச்சாரலில் போய் எதிர்த்துநின்று போர்செய்தும் பிரயோஜனம் சிறிதுமில்லை; திரவியத்துக்குத்தான் பலவழியும் ஹானிநேரிட்டது காரியம் எப்போதும் இதே தன்மையா யிருந்தால், நமது சக்திதான் என்ன? மனத்துணிவுதான் என்ன? செல்வம்தான் என்ன? சேனாபலம்தான் என்ன? புண்ணியந்தான் என்ன? மானந்தான் என்ன? முடிவில் நாம் வணங்கும் தெய்வம் தான் என்ன? எல்லாம் அவமல்லவா? ஒன்றாலும் அற்ப பிரயோஜனமும் இல்லை. கடைசியில் நம்முடைய ஆண்மைதான் என்ன? நாமும் பேடியாகத் தான் இருக்கின்றோம். ஆனால், நாம் தக்க முயற்சி எடுத்து முஹம்மதை ஜெயிக்க வேண்டுமென்று அஞ்சாநெஞ்சோடு சென்றும், எதிர்த்து நிற்கமாட்டாமல் புறங்காட்டி ஓடிவந்து நகரத்திற்குள் புகுந்து, மல்லாந்து படுத்துக்கொண்டு, பெருமூச்சு விட்டுவிட்டு பலவாறு சிந்திக்கின்றோம். நாம் துணிந்து நடத்தும் கருமத்தில் காணும் பலன் இது ஒன்றுதான். இதுவென்ன ஆண்மையா? செய்யும் யுத்தத்தில் ஜெயம் இன்னாருக்குத்தான் என்று குறிப்பிடப்படவில்லை. ஜெயம் அபஜெயம், ஒருவருக்கொருவர் மாறிமாறிவருவது இயற்கைதான்; அப்படியிருக்க, ஒருக்கால், இருக்கால், அல்லது மூக்காலும் தோல்வி யடைந்தா லென்ன? இனி எக்காலும் தோல்விதான்; ஒருகாலும் ஜெயம்பெற மாட்டோமென்பது உறுதியா? ஆனதால், இனி நாம் நடந்துபோன காரியங்களைக்

குறித்து எண்ணியெண்ணி மனதை புண்ணாக்குவது சரியல்ல. இன்னும் நம்மால் கூடியவரையும் முஹம்மதோடு எதிர்த்துத்தான் நிற்கவேண்டும். இன்னும் நமது சேனைகளைத் திரட்டிக்கொண்டு போய் அவனோடு எதிர்த்து, அவன் ஒட்டாரத்தை அடக்கித்தான் வரவேண்டும்” என்பதாகும்.

“உறங்குவது குட்டிச்சுவர்; கனவுகாண்பது மச்சுமாளிகை” என்பதுபோல அபூஸுஃபியான் இவ்வாறு சிந்தித்து, மனதை திடப்படுத்திக் கொண்டு, உபாயத்தாலும் இதத்தாலும் தைரியத்தாலும் அநேக சேனாவீரர்களைத் திரட்டி, இன்னுமொருதரம் நாம் நமது பகைவனாகிய முஹம்மதோடு எதிர்த்துப் போராடிப் பார்ப்போம் என்று கூறி, அனைவரையும் போர்க்கோலத்துடன் எழக் கட்டளை யிட்டான். அப்படியே அநேகர் திரண்டு ரணபேரிகை முழங்க, மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டார்கள். அபூஸுஃபியானும் அவன் வீரர்களும் மதீனமா நகரத்தை நோக்கி நடந்து, மதீனமா நகரத்திற்கு மிக சமீபத்திலுள்ள றௌகா என்னும் ஸ்தலத்தில் வந்து பாளைய மிறங்கினார்கள்.

கறுப் உடைய குமாரன் அபூஸுஃபியான் முன் முறிந்தோடின காபிர்களைத் திரட்டிக்கொண்டு, மறுபடியும் றௌகாவில் வந்து பாளையமிட்டிருக்கின்றானென்று ஒற்றர்கள் வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார்கள். இந்த சமாசாரத்தைக் கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் களிப்படைந்து, தங்கள் சமூகத்திலிருக்கும் அஸ்ஹாபிகளை நோக்கி, “அஸ்ஹாபிகளே! சௌரியம், உரோஷம், ஆண்மை, ஆயுதங்கள் எல்லாவற்றையும் ரணகளத்தில் போட்டுவிட்டு ஓடிப்போன மானமற்ற அபூஸுஃபியான், மீண்டும் இராணுவத்தோடு வந்து றௌகாவில் தங்கியிருக்கின்றானும். ஆகையால், நாம் எதிர்ச்சென்று போரிட்டு துரத்த வேண்டும். அதற்காக முன் உஹது யுத்தத்தில் நின்று போரிட்டு ஜெயம்பெற்ற வீரர்களில் சிலர் யுத்த சன்னத்தார்களாய்ப் புறப்படுங்கள்” என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இட்ட இந்த மேலான கட்டளையை சிரமேற்கொண்டு சேனாவீரர்கள் புறப்பட எத்தனப்பட்டார்கள்.

முன்னர் உஹது யுத்தத்தில் வீரதீரத்தோடு நின்று போரிட்டு பூரண ஜெயம்பெற்ற தலைவர்களான குதிரை வீரர்கள் எழுபது

பேர்களும், வேறு சில காலாட்களும, வெற்றி துவஜம பிடித்து, ரணபேரிகை முழக்கத்தோடு புறப்பட்டார்கள். சௌரிய மிக்க அன்ஸாரிகளான மேற்படி வீரர்கள் புடைசூழ, நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தைவிட்டு கருமேகக்குடை நிழலில் நடந்தார்கள். உக்காப் என்னும் வெற்றி துவஜம் முன்னே செல்லவும், ராணுவவீரர்கள் அணியணியாய்ப் பின்னே வரவும், படைமுரசுகள் இடிபோல முழங்கவும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் நடந்து, மதீனமா நகரத்திற்குத் தென்புறம் இரண்டுகாத தூரத்திலிருக்கும் வனமான அமுரூ என்னும் ஸ்தலத்தில் வந்து பாளைய மிட்டார்கள்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு (ஸல்) அவர்கள் அங்கே பாளைய மிறங்கினவுடன், அந்த அமுரூவை ஆளும் சிற்றரசனும், குசாயிக் கூட்டத்தாரில் பிரதானமான தலைவனும், முஸ்லிமானவர்களுக்கும் காபிர்களுக்கும் பொதுவா யிருக்கும் சிநேகிதனும், சமாதானப் பிரியனுமாகிய மக்பது என்பவன், தனது மாளிகையைவிட்டு அநேக வீரர்களோடு புறப்பட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்திற்கு வந்தான். வந்த மக்பது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாத தாமரைகளைப் பணிந்து மரியாதையாக உபசரிக்கப் பெற்று, சற்றுநேரம் வரையும் பல காரியங்களை குறித்து சம்பாஷித்துக்கொண்டு, விடை பெற்று மீண்டுபோய் விட்டான்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு (ஸல்) அவர்களின் தரிசனைக்காக வந்து கலந்துபேசி யிருந்து, உபசாரணையோடு மீண்டுபோன மக்பது என்னும் அரசன், நேரேதனது அரண்மனைக்குச் செல்லாமல், மௌகாவில் பாளையமிறங்கியிருக்கும் காபிர்களுடைய பாசறைக்குச் சென்றான். அங்கே சென்றபோது, அபாஸுபியானும், மற்ற தலைவர்களாலும் உபசரிக்கப்பெற்றான். அப்போது அவன் அபாஸுபியானை நோக்கிப் பின்வருமாறு சொன்னான்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மானம் போக்கித் திறனறியா
 வயவ ரொடுவாம் பரியோடும்
கானை மலையுங் கடத்திங்வன்
 வந்தாய் வென்றி காண்பரிது

கானஞ் சிறந்த திருத்தூதும்.
 வந்தார் வலிந்து நின்றனையா
ஊன மிணிமேல் விளைவ தென்னே
 விதியை யுணர மாட்டாதாய்.

முன்னே வலிதி னெழுவருயிர்
 முடித்தாய் பழியு மேற்கொண்டாய்
பின்ன ரளவி லாநிதியுங்
 கெடுத்தாய் திரளும் பிழைப்பித்தா

யின்னு மிவர்தம் மாவின்னணி
 லேற்றத் துணிந்தா யிவணிருந்தாய்
மன்னுப் பதியிற் செல்கென்ன
 வுரைத்தான் மகுப தென்போனே

வசனம்.

"கறுபுடைய குமாரராகிய அபாஸுபியானே, நீர்இப்போது யுத்தப் பயிற்சியும் மனோதைரியமும் அபிமானமும் இல்லாத, போலி வீரர்களைச் சேர்த்துக்கொண்டு போராடுவதற்காக வேண்டி இங்கே வந்திருக்கின்றீர். இச்சமாசாரத்தைக் கேட்டு மதீனமா நகரத்திலிருந்து முஹம்மது நபியவர்களும சேனாவீரர்களோடு வந்திருக்கின்றார்கள். நீர் அவர்களோடு சண்டை தொடங்குவீரானால், வெற்றி யென்பதில் அணுப்பிரமாணமாவது காணமாட்டீர். நீர் உரோஷத்தையே மேற்கொண்டு பாராட்டி அடிக்கடி சண்டைக்கு எத்தனிக்கின்றீரே யன்றி, நிகழும் காரியங்களின் தாரதம்மியத்தைக் குறித்து ஆலோசிக்கிற தில்லை இனிமேலும் உமக்குச் சம்பவிக்கப் போகிறது இன்னதென்று நீர் அறிவீரா? அன்றியும், முன் விருதாவாக அபூஜஹல் முதலான எழுபிரதான தலைவர்களை மடிவித்து, அவர்கள் பழிகளையும் சுமந்துகொண்டீர். இன்னும் அநேக திரவியங்களையும் வலியக் கொண்டுபோய்ப் பறிகொடுத்தீர். பின்னும் அநேகரை மானச் செய்தீர். இம்மட்டோடே அடங்கியிராமல், இப்போதும் இந்த வீரர்களை யெல்லாம் இழுத்து பழைய ஓட்டமே ஜெயமென்று கருதி ஓட ஆரம்பிக்கிறீர் இவ்விதக் காரியத்தில் நீர் துணிந்து நிற்பது சரியல்ல. நீர் இங்கே இருப்பீரானால், மிக அபாயகரமான தீங்குகளெல்லாம் உமக்கு வந்து சம்பவிக்கும். அவ்வண்ணம் சம்பவித்து நீர் வருந்துவது

எனக்குப் பொருத்தமாயில்லை ஆகையால், நீர் புறப்பட்டு மக்கமா நகரத்திற்குப் போய் விடுவதே நலம்" என்றான்.

மக்பது என்னும் அரசன் சொன்ன சன்மார்க்கமான சொற்களனைத்தும் அபாஸுப்யானுடைய செவிவழியாய்ச் சென்று, அவன் கருத்தைக் கலக்கிற்று. அதனால், உரோஷம், தைரியம், பகைமை அறிவு எல்லாம் அழிந்து, மனந்தளர்ந்து, அவயவங்கள் சோர்வுற்று, கூடாரங்கள் முதலான பொருள்களில் ஒன்றையும் எடுக்காமல், வைத்தது வைத்தபடி யிருக்கப் போட்டுவிட்டு மக்கமா நகரத்தை நோக்கிப் புறப்பட்டான். அவன் வீரர்களும் சிலர் சிலராய்க் கூடிக்கூடிப் போய்விட்டார்கள். வந்த வீரர்களில் ஒருவராவது மேற்படி பாசறையில் இல்லை. எல்லாரும் வந்தவழியைப் பிடித்துச் சென்றார்கள்.

தக்க சேனாபலமும், சரீரவன்மையும் மனத்திடனுமுள்ள அபாஸுப்யான், தான் கருதினவற்றை யெல்லாம் மறந்துவிட்டு, யுத்த தளபாடங்களையும் போட்டுவிட்டு, மஃபது உடைய சொல்லால் அஞ்சி மக்கமாநகரத்திற்குப் போய்விட்டானென்னும் செய்தியை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, தங்கள் ராணுவத்தோடு அமுறாவை விட்டுப்புறப்பட்டுக் காபிர்கள் இட்டிருந்த பாசறைக்குவந்து, அவர்கள் பண்டங்களை யெல்லாம் கைக்கொண்டார்கள். எல்லாவற்றையும் கைக்கொண்டு நிபந்தனையின்படி அவைகளை அஸ்ஹாபிகளுக்குப் பாகித்துக்கொடுத்துவிட்டு மூன்று நாள்வரையும் அந்த ஸ்தானத்தில் இருந்தார்கள்.

றௌகா என்னும் ஸ்தலத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மூன்றுநாள் இருந்து, நான்காம் நாள் மதீனமாநகரத்தை நாடிப் புறப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் ராணுவீரர்களும், புறப்பட்டு வரும் மார்க்கத்தில், மக்கமாநகரத்துக் காபிர்களில் ஒருவனாகிய அபா அசா என்பவன் பிடிபட்டான். அவனை அஸ்ஹாபிகள் பிடித்து, இறுகப்பிணித்து, பலவாறு வருத்தி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் கொண்டுவந்து விட்டார்கள். அப்போது நபிநாயகமவர்கள் அவனைநோக்கி "இவனை யொத்த சண்டாளன் ஒருவனுமில்லை. மகாபாதகன். இவன்முன் பத்று யுத்தத்தில் பிடிபட்டும், நாம் கொல்லாமல் கிரயம் வாங்கிக் கொண்டு விட்டுவிட்டோம். மறுபடியும் காபிர்களோடு கூடிக்

கொண்டு நமக்கு வசையும் வம்பும் பேசிக் கலகம் விளைத்தான். இப்போதும் இவன் இங்கே சும்மாவரவில்லை. ஒற்றறியத்தான் வந்திருக்கிறான். இனி இவனை விடக்கூடாது. கொன்று விடுங்கள்" என்று அஸ்ஹாபிகளுக்குக் கட்டளை பண்ணினார்கள். உடனே மேற்படி அபாஅசாவை இருதுண்டாகப் பிளந்து எறிந்தார்கள்.

வரும் வழியில்வந்து குறிக்கிட்ட பகைவனைக் கொன்றபின், நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் மதீனமாநகரம் வந்து சேர்ந்தார்கள்.

78-வது அத்தியாயம்.

கஃபு வதை யுண்டது.

சந்தக்கலி விருத்தம்.

இகபர மிக்குயர் மறையத னைத்தரு மிறையவ னைப்பணியா
தகநெறி யுற்றிடு குபிரர்க ளைக்கொலு மஹ்மதர் சொற்கு றியா
இகலை விளைத்திடு கருமம தைக்கொளு மெகுதிகு லத்துளனும்
கஃபுவ தைப்படு சரிதம தைச்சொல கனிவினு ரைத்திடுவாம்.

இதன் பொருள்.

பூலோகத்திலும், வானலோகத்திலும், உயர்வு பொருந்திய புர்க்கானென்னும் வேதத்தை நம்மனைவர்களுக்கும் அறியத் தரும் ஆதிகாரணனான அல்லாஹு தஆலாவைத் தொழாது, பாப வழியையே தங்களுக் குடக்கையாகப் பொருந்திடும் காபிரீன்களைக் கொன்று நாசப்படுத்தும் அஹ்மதென்னும் திருநாமத்தையுடைய இருலோக ரக்ஷகரான தாஜுல் அன்பியாவாகிய நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களின் திருவாக்கியத்தை குறிப்பிட்டுக் கவனியாது, பகையை விளைத்திடுஞ் செய்கையைத் தங்களுக்குப் பொருளாக கொண்டிருக்கும் எஹூதிக் குலத்திலுள்ளவனான, கஃபென்னும் பெயரையுடையவன் வதைப்பட்ட சரித்திரத்தை சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்

கலி விருத்தம்.

துய்யநந் நபியிற சூல்வன் மாநகர்
வையகம் புகழ்தா விருப்ப வந்தொரு
செய்யநற் றாநரிற் றிறமை பூண்டவர்
பொய்யில ரோர்மொழி புகலு வாரரோ.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றசூல் (ஸல்) அவர்கள் தங்கள் இராஜமாபுரமாகிய மதீனாவிலிருந்து, இஸ்லாம் என்னும் செழும்பயிர் எங்கும்படர ஆளுகைசெய்யும் காலத்தில், அங்கங்கே நிகழும் பகைவரின் வர்த்தமானங்களை அறிந்துவந்து தெரிவிக்கும் வண்ணம் நியமித்திருக்கும் ஒற்றர்களில் சிறந்த ஒருவர், கீழ்வருமாறு சொல்லுகின்றார்:—

"அகில ரக்ஷகரும் நபிகள் சிகாமணியுமாகிய யாறஸூலல்லாஹ்! பலவகை வளங்களாலும் சிறந்த சுஹறா என்னும் நகரத்தில் பாதகன் ஒருவன் வாசஞ்செய்கின்றான். அவன், யூதர்களிலுள்ள அஷ்றபு உடைய குமாரன். அவன் பெயர் கஹபு என்பார்கள். எப்போதும் நமக்குத் தீங்குசெய்வதும், செய்விப்பதுமே அவனுக்குப் பிரதானமானதொழில். நல்லறிவற்ற அவிவேகியும், பஞ்சமாபாதகனும், பாதாள நரகத்திற்கே தனது உடலை வளர்க்கும் கொடியோனுமாகிய அவன், தற்காலம் நளீறு என்னும் கூட்டத்தாருக்குத் தலைவனாய் நியமிக்கப் பட்டிருக்கின்றான். அவனிடம் திரண்ட ஆஸ்திகளுண்டு. அன்றியும், அநேக வீரர்களும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றார்கள். ஜனப்பெருக்காலும், திரவியச் செருக்காலும் மேற்படி கஹபு கர்வங் கொண்டு, பிரதிதினமும் முஸ்லிம்களுக்கு நிஷ்டூரம் உண்டாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றான். அப்பாவி செய்யும் குறும்பை இவ்வளவென்று சொல்லமுடியாது. அவனால் முஸ்லிமானவர்களுக்கு விளையும் கஷ்டம் கொஞ்சமல்ல" என்று கூறினர்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் முகதாவில் ஒற்றர் இவ்வாறு சொல்லும்போது, அங்குகூடியிருக்கும் அஸ்ஹாபிகள் ஒவ்வொருவரும் கண்கள் சிவப்பேறப்பெற்று, மீசைகள் படபடவென்று

துடிக்க, உதடுகளைக் கடித்து வெகுண்டார்கள். ஒற்றர் சொன்ன சொற்களையும், அதனால் அஸ்ஹாபிகள் வெகுள்வதையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து இப்போதே அனைவரும் போர் கோலத்தோடு புறப்படுங்கள் என்று உத்திரவு செய்தார்கள். இவ்வுத்திரவு பிறந்தவுடன் அஸ்ஹாபிகளில் அநேகர் ஆயுதங்களணிந்து பிரயாணமானார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் ஆயுதாதி யணிந்து மேற்படி வீரர்களை யழைத்துக்கொண்டு மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, மேற்படி கஹபு குடியிருக்கும் சுஹறா என்னும் நகரத்தை நோக்கி நடந்தார்கள்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் தங்கள் ராணுவ வீரர்கள் புடைசூழ நடந்து, மேற்படி சுஹறா என்னும் நகரத்தை யடுத்து முற்றுகை யிட்டார்கள். சுஹறாவை முற்றுகை யிட்டது மாத்திரமல்ல; அதன் கிராமங்களையும் சூறையாடி, ஒரு பறவையும் சுஹறா விலிருந்து வெளியே போகாமலும், வெளியிலிருந்து உள்ளே பிரவேசிக்காமலும் அதிக காவற்பாடாய்த் தங்கியிருந்தார்கள். அதனால், மேற்படி சுஹறாவின் குடிகளுக்கு மெத்த கஷ்டம் நேரிட்டது.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு தனது நகரத்தை வளைந்து நிர்ப்பந்தஞ் செய்துகொண்டிருப்பதால், கஹபு மனம் தளர்ந்து துக்கசாகரத்தில் விழுந்து, இனி நாம் என்ன செய்வோமென்று ஏங்கி, தனது வீரர்களில் அநேகரை யழைத்துக் கொண்டு கோட்டையின் அரணத்தில் ஏறி நின்று, நபி நாயகம் (ஸல்) அவர்கள் தலத்தை நோக்கினான். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் சில அஸ்ஹாபிகளுடன் அங்கு உலாவிக் கொண்டு நிற்பதைக் கண்டு, தனது வீரர்களை நோக்கி "வீரர்களே! இதோ நமது பகைவன் முஹம்மது, நமக்கு நேராகக் கீழே நிற்கின்றான். ஆகையால் நாம் பெரிய பாறைக்கல் ஒன்றைத் தூக்கி, அவன் நசிந்து போகும்படித் தள்ளுவோம், வாருங்கள்" எனக் கஹபு சொன்னான். இதைக் கேட்ட மற்ற காபிர்களும் அதற்கு உடன்பட்டார்கள். கஹபு இவ்வாறு துராலோசனை செய்ததை ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் உடனே வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் நின்ற ஸ்தானத்தை விட்டும் பெயர்ந்து சற்றேவிலகி நின்றார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஸ்தானத்தை விட்டு விலகி நிற்பதைக் கஃபு கண்டு, தன் கூட்டத்தாரை நோக்கி "இதென்ன புதுமை? பார்த்தீர்களா? முஹம்மது சற்று முன்னே நாம் இலக்கு வைத்த ஸ்தானத்தில் நின்றானே, இரகசியத்தில் ஆலோசித்த ஆலோசனைப் படி செய்யுமுன் விலகிப் போய்விட்ட ஆச்சரியம் பேராச்சரிய மல்லவா?" என்று புதுமையாய்ச் சொல்லிக் கொண்டு நின்று, மறு படியும் அவ்வினத்தாரைப் பார்த்து "நாம் இங்கிருந்து கொண்டு முஹம்மதோடு பொல்லாங்கு விளைத்து நிற்பது புத்தியல்ல. நான் ஒரு உபாயஞ் செய்கிறேன். இப்போதே நாம் அனைவரும் முஹம்மது இடஞ் சென்று அவனுக்குக் கீழ்ப்படிந்து சமாதான மாகும் பாவனையாய் நடித்து, தற்காலம் நேரிட்டிருக்கும் கஷ்ட தசையை நிவிர்த்தித்துக் கொள்வோம், வாருங்கள்" என்று சொல்லி, அனைவரையும் அழைத்துக் கொண்டு கோட்டை மதிலை விட்டி றங்கி வெளிப்பட்டான்.

கஃபு, தன் ஜனங்களோடு கோட்டையி லிருந்து புறப்பட்டு நேரே நபி நாயகம் (ஸல்) அவர்கள் நிற்கும் ஸ்தானத்தில் வந்து, அபயம் கேட்டு சரண் புகுந்தான். அப்போது சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் அவனை மன்னித்து ஒரு ஸ்தானத்தில் இருக்கச் செய்தார் கள். பின்பு கஃபு எழுந்து நின்று, நபி நாயகம் (ஸல்) அவர்களைத் துதித்து "இரக்ஷகரே! இன்று தொட்டு நானும், என் கூட்டத் தார்களும், தங்களிடத்திலாவது, தங்கள் பகைவர்களிடத்திலாவது சேர்ந்து கொள்ளாது பொதுவாகவே யிருக்கின்றோம். அவ்வாறு நாங்கள் உங்கள் இருதாரத்தாருக்கும் பொதுவா யிருப்பதில் சந்தேகமில்லை யென்று இதோ பிரமாணிக்கஞ் செய்து தருகின் றோம். இதைத் தாங்கள் நம்புங்கள். இதில் சிறிதும் நாங்கள் தவறிப் போக மாட்டோம்" என வாக்குறுதியோடு சொன்னான். கஃபு சொன்ன சொல்லுக்கு நபி நாயகம் (ஸல்) அவர்கள் இசைந்து உடனே சுகுறுவின் முற்றுகையை விடுத்துத் தங்கள் அஸ்ஹாபிகளோடு புறப்பட்டு மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

இருலோக ரக்ஷகரான நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்ட அந்த க்ஷணமே கஃபு என்னும் சண்டாளன் வாக்குமாறத் தொடங்கினான். தனக்குப்

பிரான சங்கடமாக வந்து சம்பவித்திருந்த ஆபத்தை விலக்கிக் கொண்டு நபி நாயகம் (ஸல்) அவர்களிடம் மீண்டு போன நன்றியை உடனே மறந்து, எப்போதும் போல அவர்களுக்கும், அவர்கள் அஸ்ஹாபிகளுக்கும் தீமையே செய்யத் துணிந்தான். வாக்குறுதி யற்ற கஃபு என்னும் துரோகி இவ்வாறு மாறுபட்டு பழையபடி விரோதியான தெல்லாம், அவனுடைய ஊழ்வினையா லன்றி வேறல்ல. இவ்வண்ணம் முன்போலத் தீங்கு விளைக்கத் தலைப்பட்ட கஃபு என்னும் பரமதுஷ்டன், தனது கூட்டத்தார்களை யெல்லாம் அழைத்து அவர்களை நோக்கி "நாம் இனி சும்மா விருப்பது சரி யல்ல. முஹம்மதுக்கு விரோதிகளா யுள்ளவர்கள் வசிக்கும் இடங் களில் நான் போய், அவர்களை யெல்லாம் திரட்டிக் கொண்டு பெரும் யுத்தம் ஒன்று தொடங்கி, முஹம்மதையும் அவனைச் சேர்ந்த வர்களையும் சங்காரஞ் செய்கின்றேன். இதற்காக முன்பாக மக்கமா நகரத்திற்குத் தான் போக வேண்டும்" என்று சொல்லி முடிவு செய்து கொண்டு நாற்பது குதிரை வீரர்கள் உடன் வர சுகுறுவை விட்டு மக்கமா நகரத்திற்குப் பிரயாணப் பட்டான்.

நாற்பது வீரர்களோடு எழுந்த கஃபு என்னும் பாதகன் மக்கமா நகரஞ் சேர்ந்து அபாஸுபியான், காலிது, இக்ரிமா இம்மூன்று தலைவர்களையும் மற்ற குறைஷிகளில் முதியோர்களையும் கலந்து பேசி, நபி நாயகம் (ஸல்) அவர்கள் தனது நகரமாகிய சுகுறு மேல் படை யெடுத்து வந்ததும், அதற்குத் தான் செய்த தந்திரமும் இன்னபடி யென்று சொல்லிக் காட்டி, "இனி நாம் அனை வரும் ஒருங்கு திரண்டு முஹம்மதைத் தாக்க வேண்டும்; அதற்கு நீங்களும் முயற்சி யெடுத்துக் கொள்ளுங்கள். இன்னும் என் ஜாதி யார்களான யூதர்கள் மதீனமா நகரத்திலும் பலர் குடி யிருக்கின் றார்கள். அவர்களையும் நான் போய்ச் சரி பண்ணுகின்றேன். இதோடே முஹம்மதைத் தொலைத்து விடலா" மென்று சொல்லி, அவர்களிடம் விடை பெற்று மக்கமா நகரத்தை நீங்கித் தான் வாழும் சுகுறுவுக்கு வந்தான்.

சுகுறுவுக்கு வந்து சேர்ந்த கஃபு, தான் மதீனமா நகரத்திற் போய் இருந்து கொண்டு யூதர்களைத் திரட்ட வேண்டு மென்று கருதி, தன் மனைவியையும், மற்றப் பரிவாரங்களையு மாத்திரம் அழைத்துக் கொண்டு, சுகுறுவை விட்டு மீளப் பிரயாணமானான்.

தனது ஊழ்வினையை முடித்துக் கொள்ளுவதற்குப் பிரயாணமான கஃபு நபி நாயகம் (ஸல்) அவர்கள் இராஜதானியாகிய மதீனமா நகரம் வந்து சேர்ந்து யூதர்கள் குடி யிருக்கும் தெருவில் ஒரு மாளிகையைக் குடக்கூலிக்கு அமர்த்திக் கொண்டு, அதில் வாசஞ் செய்தான். மதீனமா நகரத்தில் வசிக்கும் யூதர்களோ மனம் வேறு வாக்குவேறாய் அஸ்ஹாபிகளோடு உறவாடிக் கொண்டிருக் கும் சண்டாளர்கள், அவர்களோடு இவனும் ஒருவனாய், இனி நான் பிரயாணப் படுவது நரகத்திற்குத் தானென்னும் விரதத்துடன் இருந்தான்.

பரம சண்டாளனாகிய கஃபு மதீனமா நகரத்தில் குடி யிருக் கும் போதும் சும்மா இருக்கவே யில்லை. அஸ்ஹாபிகள் ஒவ்வொரு வரையும் காணும் ஒவ்வொரு தடவையும், அவன் கண்களைக் கை களால் மூடிக் கொண்டு போய் உடனே ஸ்நானஞ் செய்வான்; அண்டை அயலிலுள்ள முஸ்லிமான பெண்களை யழைத்து அருகில் வைத்துக் கொண்டு, நயமாகவும் பயமாகவும் பல வசனங்களைச் சொல்லி அவர்கள் மனதைக் கலைப்பான். சத்திய வேதமாகிய குர் ஆன் ஓதும் இசையைக்கேட்ட மாத்திரத்தில் காதுகளை அடைத்து கொள்வான்; நபி நாயகம் (ஸல்) அவர்களால் நிகழும் ஒவ்வொரு புதுமைகளையும் பற்றி இவையெல்லாம் மாந்திரீக மல்லாமல் வேறல்ல வென்று நிராகரிப்பான்; சாக்ஷாத் கடவுள் குப்லே யல்லாமல் வேறே ஆண்டவனேது? அவன் தூதனேது? எல்லாம் சுத்த அபத்தம் என்று பஹிரங் கத்தில் அச்சமின்றிச் சொல்லுவான்; பிரதி தினமும் இதுதான் அவனுக்குச் செய்கரும மாயிருந்தது.

சொல் உறுதியற்ற கஃபு இவ்வாறு உன்னாரில் வந்திருந்து கொண்டு குறும்புத் தனம் செய்வதை நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் அறிந்து 'பாதகன் நமக்குத் தந்த வாக்குத் தத்தத்தின்படி நிற்கவில்லை. ஆகையால், இனி இரக்கமின்றி நம் அஸ்ஹாபிகளில் ஒருவரை ஏவி, அவனைக் கொன்று போடவே வேண்டு' மென்று கருதி, அஸ்ஹாபிகளை யெல் லாம் அழைப்பித்து சமூகத்திலிருத்தி, கருபு உடைய நடவடிக்கை களைச் சொல்லிகாட்டி, ,அவனுக்குச் செய்ய வேண்டிய தென்ன வென்று ஆலோசனை பண்ணினார்கள். அப்போது அஸ்ஹாபிகள் அனைவரும் இணக்கொண்டு, அவனைக் கொன்று போடுவதே

உத்தமமென்றார்கள். உடனே சல்மாவுடைய புத்திரர் முஹம்மது என்பவர் எழுந்து நின்று "யாறஸூலல்லா! தேவரீர் தங்கள் சித்தத் தின்படி கஃபு என்னும் படுபாதகனைத் தமியேன் கொன்று விட்டு வருகின்றேன். ஆனால், இப்போது தங்கள் சந்நிதியில் கேட்டுக் கொள்ளத்தக்க காரியம் ஒன்றுண்டு. அதாவது தமியேன் மேற்படியா னைக்கொல்லுவதற்காக வேண்டி தேவரீர்மேல் ஏதும் ஒரு குறை குற்றங்களைப் பேசுவேன். அதற்குத்தாங்கள் விடைதர வேண்டும்" என்றார். இச்சொல்லை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டுக் களிப்படைந்து "முஹம்மதே! கஃபைக்கொல்லுவதற்கு வேண்டிய உபாயங்கள் என்னென்ன உமது இதயத்தில் தோற்றப்படுகின் றனவோ அதை யனைத்தையும் நீர் தடையின்றிச் செய்து கொள்ளும். சர்வ வல்லமையுமுள்ள அல்லாஹு தஆலா உமக்கு உதவிசெய்வான்; போய்வாரும்" என விடையருளினார்கள்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் விடைகொடுத் தனுப்பினவுடன், முஹம்மது இபுனு சல்மா (றலி) சந்தோஷமுற்று, பாகைதரித்து, மேலங்கியணிந்து, வலக்கரத்தில் ஊன்று கோலொன்று பிடித்துக் கொண்டு பிஸ்மில்லா சொல்லிப் புறப்பட்டார்.

முஹம்மது (றலி) கஃபைக்கொல்ல நாடி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சபையை விட்டு வெளிப்பட்டு, பலதெருக்களையுங்கடந்து யூதர்கள் வசிக்கும் தெருவிற்சென்று மேற்படி கஃபு குடியிருக்கும் மாளிகை வாசலையடுத்தார். அப்போது கருபு தனது மாளிகையின் வெளிப்புறத்திலுள்ள ஒரு கூடத்தில் இரத்தினக் கம்பளம் விரித்து, அதன் மேல் உயர்ந்த பட்டுத்திண்டு ஒன்றிட்டு அதில் சாய்ந்து கொண்டிருந்தான். கஃபு இப்படி உல்லாசமாய் வீற்றிருப் பதை முஹம்மது (றலி) கண்டு, அவனருகிற் சென்றார். சென்ற வுடன் கஃபு இவரை நோக்கி, "என்காண் வாரும்; இரும்." என்று மரியாதைவுடன் சொன்னான். அப்போது முஹம்மது (றலி) மீட்சி பெறக்கூடாத துக்க சாகரத்தில் மூழ்கி மனம் நொந்த பாவனையாய்த் தமது முகத்தை குருவுதலாக்கிக் கொண்டு, அடிக்கடி பெருமூச்சுவிட்டு, எல்லா துயரங்களையும் மனத்துள் அடக்கிக் கொண்டவராக ஒருபுறம் உட்கார்ந்தார். இவர் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்ட அஸ்ஹாபிகளில் ஒருவரென்பது

அவனறிந்த விஷயமானாலும், அவனுடைய ரேகபலன் அப்போது அதைப்பற்றிய துன்மார்க்கமான விபரீத எண்ணங்கள் ஒன்றும் அவனுக்கு உண்டாகவில்லை. ஏதோ ஒரு காரியத்தைப்பற்றி வந்ததாகவே அவன் எண்ணியிருந்தான். அவன் சமுகத்தில் உட்கார்ந்த முஹம்மது (றலி) அவன் கேட்பதற்கு முன்னே, தாம்வந்த கருமத்தைப்பற்றிப் பின்வருமாறு அவனைப் பார்த்து சொல்லத்தொடங்கினார்:—

“ பூதஜாதியார் அனைவருக்கும் பிரதானமான அதிபராய்ப் பகைவராகிய மதயானைக்கூட்டத்திற்கு நிகரற்ற ஆண்சிங்கமாய், மகுட வர்த்தனர்களும் வியந்து பேசத்தக்க புத்திசாதுரியமுள்ளமன நிலைதவராத நிபுணராய், பரோபகாரியாய், அடுத்தோரை ரக்ஷிக்கும் தயா நிதியாய் என்றென்றும் விளங்கும் கருணைக்கடலாகிய கஹபே! தரித்திரவானாகிய இந்த எளியவன் தங்கள் சந்நிதானத்தில் மனுப் பண்ணிக்கொள்வதைக் கருணைகூர்ந்து சற்றே செவிசாய்த்துக் கேட்டருள வேண்டுமென்று, தங்களின் மேலான கனத்தை மிகத் தாழ்மையோடு பரிந்து கேட்டுக் கொள்ளுகின்றேன். அதாவது: எனது நிலைபரத்தைப்பற்றி என் ஜாதியாரிடஞ் சென்று முறையிட்டுக்கொள்ளுவதற்கு உடல்கூசி, மனம் நாணுகின்றது. அதனால், எமது ஸ்திதியை நம் ஜாதியாரிடஞ் சொல்லி மானங்கெட்டு இழிவடைவதைவிட, இந்த மகாப்பிரபுவும் பாக்கியவானும் புண்ணிய புருஷருமான தேவரீருடைய சந்நிதியில் முறையிட்டு, மனத்துயர் ஒழிதல் உத்தமமென்று கண்டு இங்கு வந்தேன். எனது கஷ்ட காலத்தைத் துரத்திய நற்காலமே என்னை இங்கு கொண்டு வந்து விட்டதென்று நான் இதய பூர்வமா யறிந்து கொண்டேன். தருமவானே! கேளுங்கள். எனது வர்த்தமானங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய் விவரித்துச் சொல்லுவேனானால், தங்கள் சித்தத்தில் அலுப்புப் பிறக்கு மென்றஞ்சி, சுருக்கத்தில் சொல்லி முடிக்கின்றேன். நிர்ப்பாக்கியனாகிய நான் இந்த மதீனமாநகரத்தில் சற்றே கவுரவமான குடும்பத்திற் பிறந்து, ஜீவனத்திற்கு நிர்ப்பந்தப் படாமல் சுகமாய் வாழ்ந்திருந்தேன். அப்படி யிருக்கையில், முஹம்மது என்பவன் தான் கடவுளுடைய மெய்த்தூதனென்று பிரஸ்தாபம் பண்ணிக் கொண்டு இங்கே வந்து தோன்றினான். அவனுடைய மாயா ஜாலவலைக்குள் இவ்வூரார் அநேகர் சிக்குண்டார்கள். அது தேவரீருடைய சமுகத்துக்குந் தெரிந்த காரியந்தான். அநேகர்

அவனுக்குக் கீழ்ப்படிந்து ஆளானது போல, தமியேனும் கஷ்ட காலத்தின் வன்மையால் மேற்படி முஹம்மதுக்கு கீழ்ப்படிந்து தொண்டனானேன். அன்று தொட்டு நான் வணங்கும் திவ்விய தேவாலயத்தை அறமறந்து, அவனால் ஏவப்பட்ட ஒருவிதமான நூதன வணக்கத்தில் பிரவேசித்து, தினம் ஒன்றிற்கு ஐந்து விடுத்தம் தரையில் முட்டிவிழுந்து, எனது மேலான நெற்றிபுண் பட்டுத் தழும்பாய் விட்டது, பாருங்கள். அதனால் என் பந்துக்களனைவரும் என்னை வெறுத்து விட்டார்கள். ஆனதால் எனக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. பின்னும் பின்னும் அந்த முஹம்மது வேத நிபந்தனை யென்று என்னை செய்யச் சொல்லி ஏவின அநியாயமான கருமங்கள் அநந்த முண்டு. வேத நிபந்தனைக ளென்று கட்டளையிடும் ஒவ்வொரு கருமமும், இவ்வுலகத்தில் ஒருவராலுங் கண்டு கேட்டிராத கொடுமையான அவனுடைய கற்பனையே யன்றி வேறல்ல. எளியோர்களுக்குத் தானஞ்செய்யவேண்டும், அவ்வாறு செய்வதும் வேத நிபந்தனை யென்று என் ஆஸ்திகளை யெல்லாம் பிடுங்கி, அவன் விரும்பினவர்களுக் கெல்லாம் கொடுத்து விட்டான். அதனால், நான் எனக்கு உள்ளது உரியது எல்லாவற்றையும் அவனுக்குத் தொலைத்து வெறுங் கையானேன். எனது திரண்ட சொத்துக்கள் அத்தனையையும் அவனால் இழந்து வெறுமையடைந்ததை அவன் அறிந்திருந்தும், தானஞ்செய்யப் பணம் வேண்டும், கொண்டு வாவென்று மறுபடியும் என்னைத் தொந்தரை செய்கின்றான். இவ்வித அக்கிரமம் எங்காவது உண்டா? பிதா மாதாக்கள் அநுசரித்து ஒழுகிவந்த பூர்வீக மார்க்கத்தை நிந்தித்து, தெய்வத்துக்குத் துரோகம் செய்த கொடுமையல்லவா நமக்கு இவ்விதக் கஷ்டங்கள் வந்து சூழ்ந்தன வென்று நான் மனப் பூர்வமா யறிந்து, இனி ஒருதரம் அந்த முஹம்மது உடைய சொல்லுக்கு வழிப்படாமலும், நமது குலதெய்வங்களை க்ஷணப்பொழுதும் மறந்திடாமலும் இருக்கும்படித் தீர்மானித்துக் கொண்டு, ஆதரவு செய்யும் புண்ணிய சாலியாகிய தங்கள் மேலான சந்நிதிக்கு வந்தேன். ஐயா! சிந்தனை யற்று வலிய வினைத்துக்கொண்ட நிங்கால் மனப் புண்கொண்டிருந்தேன். எப்போது தங்கள் கடைக்கண் பார்வை தமியேன் மீது விழுந்ததோ, அப்போதே எனது கஷ்ட காலம் என்னைவிட்டு நீங்கிவிட்டது; சந்தோஷ சாகரத்தில் முழுகி

விட்டேன். இனிமேல் எனக்குக் குறை சிறிதும் இல்லையென்று நம்பியிருக்கின்றேன்'' என்றார்.

முஹம்மது (றலி) இவ்வாறு சொல்லும்போது அவர் உடல் கண்ணீர்ப் பிரவாகத்தால் நனைந்தது. மனந்தளர்ந்து, முகம்சோர்ந்து கண்ணீர் தாரைதாரையாய் ஒழுக அழுது சொன்ன அவருடைய சொற்கள் அத்தனையையும், கஹபு யதார்த்தமாகவே எண்ணினான். முஹம்மது (றலி) மேற்கண்டவாறு சொல்லி முடித்தவுடன், சண்டாளனாகிய கஹபு தன் கையைத் தொடையிலடித்துக் கலகலவென்று நகைத்து, தலையைப் பலதரம் அசைத்து, மறுபடியும் சினங்கொண்டு கண்கள் சிவந்து, பற்களைநெறுநெறென்று கடித்துக்கொண்டு சொன்னான் ;—"ஸல்மாவுடைய மகனே! நீரும் முஹம்மது உடைய மாயவலையிற் சிக்குண்டு வருந்திப் பாடுபட்டீர்? அவனால் குறைஷிகள் அனுபவித்த தீங்குகளை நீர் கேட்டதில்லையா? மேற்படி முஹம்மது ஏதேதோ சில கற்பனா ஸ்லோகங்களையெழுதி வைத்துக்கொண்டு, இவை வேதவாக்கியங்களென்று சாத்திரமற்ற அறிவீனர்களுக்குப் போதித்து, அவர்கள், நிதிகளையெல்லாம் கவர்ந்து தனக்கு வேண்டியவர்களுக்குக் கொடுப்பான். அன்றியும், தன் சொல்லுக்கு வசமானவர்கள் மனங்களை அவர்கள் பிதா மாதாக்கள், புத்திரர்கள், பந்து ஜனங்கள் அனைவர்பேரிலும் பகைத்துக் குரோதஞ்செய்யும் வண்ணம் கலைப்பான். இவ்வித அநேக அக்கிரமங்களை அவன் செய்வதுமல்லாமல், கடைசியில் பாதாள நரகத்திலும் கொண்டுதள்ளுவான். நீர் விவேகியாயிருந்தும் ஆரம்பத்தில் அவனுடைய உபாயதந்திரங்களைக் கண்டறியவில்லை. அவனுடைய கபடவார்த்தைக்குக் கீழ்ப்பட்ட பேதைகள் அவனால் இன்னும் என்னென்ன ஆபத்துக்கள் அனுபவிக்க இருக்கின்றார்களோ. நான் இப்போது சொல்லும் சொற்கள் உமக்கு ஒப்புக்கொள்ளத் தகாதவைகளாக இருந்தாலும் இருக்கும்; அவற்றின் உண்மையைப் பின்பறிவீர். தற்காலம் அதைப்பற்றி நான் விஸ்தாரம் பேச வேண்டியதில்லையாகையால், அவையெல்லாமிருக்கட்டும். இன்று நீர் என்னைவிரும்பி இங்கு வந்த முகாந்திரம் என்ன? சொல்லும்'' என்றான்.

கஹபு இப்படிச் சொன்னபோது முஹம்மது (றலி) அவனை நோக்கி "மகாப்பிரபுவே! நானும், என் குடும்பமும் முஹம்மது

உடைய புதுமார்க்கத்தை விட்டுமீண்டு தொன்றுதொட்டுள்ள நமது மார்க்கத்தை அனுசரிக்கத்தீர்மானித்துக் கொண்டேன். முன்தானஞ் செய்வதற்காக நியமித்த நிதியில் கொஞ்சத்தொகை நான் அவனுக்குக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அதை நான் கொடுத்து விட்டால், ஏதும் ஒரு பிரதிபந்தமின்றி நான் குடும்பத்தோடு தங்கள் அடைக்கலத்தில் வந்துசேர்வேன். அதற்காகத் தாங்கள் தயவுகூர்ந்து பத்துகலம்தானியம் கடனாக எனக்குத்தந்து உதவவேண்டும்'' என்றார். இதைக் கஹபு கேட்டுச் சந்தோஷமுற்று அவரைநோக்கி "முஹம்மதே! நீர்கேட்டபடி பதின்கலத் தானியம் உமக்குக் கடனாகக்கொடுக்க நான் கவனிக்கவில்லை. ஆனாலும், நீர் விவாகம் செய்திருக்கும் உமது மனைவியை என்னிடம் ஈடுவைப்பீரானால், இப்போதே தருகிறேன்'' என்றான். மனம் கொதிகொள்ளத் தக்கவிதமாகச் சிறிதும் தயவுதாக்ஷிணியமின்றி கஹபு சொன்ன கொடுஞ்சொல்லை முஹம்மது (றலி) கேட்டு, மனம் அழுன்றும் வெளியே காட்டாமல் அடக்கிக்கொண்டு, அவனை நோக்கி "நிறையிலும், பொறையிலும் கல்வியறிவிலும், அபிமானத்திலும், கீர்த்தியிலும், தயவிலும், தாக்ஷிண்ணியத்திலும், புண்ணியத்திலும், தெய்வபக்தியிலும், கோத்திரத்திலும் நிகரில்லாத தாங்கள் இப்படிச் சொல்வது நியாயமல்லவே. இச்சொல் தங்களின் ஒப்பற்ற வாக்கிற் பிறக்கும் சொல்லா? இதைக் கேட்கும் புத்திமான்கள் என்ன நினைப்பார்கள்? தங்களையல்லவா குறைசொல்லுவார்கள்'' என்றார். கஹபு அதைக்கேட்டு மறுபடியும் வாயைத் திறந்து "நல்லது முஹம்மது! நீர்பெற்ற மக்களையாவது கொண்டுவந்து ஈடுவை'' என்றான். அதற்கு அவர் அவனை நோக்கி "பிரபுவே! தாங்கள் இப்போது சொன்னபடி செய்வதற்கு நான் சம்மதிப்பேன்; ஆனால், உயிரையொத்த மக்களைக் கொண்டுபோய்க் கடனுக்காக ஈடுவைத்தானென்று உலகம் என்னை நிந்திப்பதுமன்றி, என் மக்களையும் பாரம்பரியமாக விலைக்கு சமானமாக ஈடுவைக்கப்பட்ட தொழும்பர்களென்று அவமானமாய் பேசுவார்கள். அதற்காகவே நான் அஞ்சுகிறேன். ஆனால், தாங்களும் ஈடுபெறாமல் கடன் தரமாட்டீர்கள். அதைப்பற்றி பெற்ற புத்திரர்களை ஈடுவைப்பதும் முறையல்ல; மிகவும் உயர்ந்த உடைவாளொன்று என்னிடம் இருக்கின்றது; அதைக் கொண்டு வந்து தங்களிடம் தருகின்றேன்; ஈடாக வைத்துக்கொள்ளுங்கள். அவ்

வுடைவாளையும் பகற்காலத்தில் கொண்டுவந்து தர என்மனம் நாணுகின்றது. அதனால் பொழுதுபட்டு இருளான பின்பு தான் இரகசியத்தில் கொண்டுவருவேன். சம்மதமா? சொல்லுங்கள்" என்றார். முஹம்மது (றலி) தமது உடைவாளைக் கொண்டுவந்து தருவதாகச் சொன்ன சொல்லின் சாரத்தை உற்றுணராத சண்டாளனாகிய கஹபு அதற்கிசைந்து, அவரை நோக்கி "நல்லது உமது பிரியப்படி அந்த உடைவாளையாவது கொண்டு வாரும்; இப்போது உமது மனைக்குச்செல்லும்" எனக்கூறி விடை கொடுத்தான். உடனே முஹம்மது (றலி) அங்கிருந்து எழுந்து, அல்லாஹு தஆலாவின் உதவிகொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களின் பொருட்டைக் கொண்டும் இன்றிரவில் கட்டாயம் இந்தத் துரோகியைக் கொலைசெய்து போடுவேனென் றெண்ணிக் கொண்டு மகிழ்ச்சியோடு தமது மனைக்கு வந்தார்.

சற்றுநேரத்திற்குள் பொழுதுசாய்ந்து இருளாய் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அப்போது முஹம்மது (றலி) மகத்தான அல்லாஹு தஆலாவைத் தொழுது, நபிநாயகம் (ஸல்) அவர்களையும் துதித்து, இராப்போஜன மருந்தி கஹபு உடைய உயிரையுண்ணும் உடைவாளைக் கையிற்பிடித்துக் கொண்டு மனையைவிட்டு பிஸ்மில்லா சொல்லிப் புறப்பட்டார்.

தமது மனையிலிருந்து புறப்பட்ட முஹம்மது (றலி) தமக்கு உயிர்த்தோழராயுள்ள முஸ்லிமானவர்களில் வேறு நால்வரைக் கூட அழைத்துக்கொண்டு கஹபு வசிக்கும் வாசலில் வந்து, அந்நால்வரையும் அங்கொருபக்கத்தில் மறைந்திருக்கும்படி இருத்திவிட்டு, தாம் உள்வாசலில் சென்று நின்றுகொண்டு மலக்கல் மௌனத்து அழைப்பதுபோல "மகாப் பிரபுவாகிய கஹபே!" என்று மெல்லென அழைத்தார். இவர் அழைக்கும்போது கஹபு போஜனமருந்தி மனைவியோடு சப்பிரமஞ்சத்தில் சொகுசாய்ப் படுத்து சம்பாஷித்துக் கொண்டிருந்தான். தன்னை அழைத்த சப்தம் காதில் விழுந்தமாத்திரத்தில், தன் இருதயத்தில், "இன்றுபகல் வந்துபோன முஹம்மது இபுனு சல்மா மெத்தயோக்கியன். தான்சொன்ன வண்ணம் தவறாது வந்துவிட்டான். ஆனதால், வாக்குறுதி உள்ளவனும், நல்லொழுக்கம் முதலானவை உள்ளவனுமாகிய அவனுக்கு நாம் சம்மதித்தபடி கொடுக்கத்தான் வேண்டும்" என

வெண்ணி, வெளியே வருவதற்காக எழுந்திருந்தான். யாரோ வொருவர் வாசலில்வந்து நின்று அழைப்பதையும், போவதற் காகத் தன் நாயகன் எழுந்திருப்பதையும் அவன் மனைவி கண்டு, மனம் இசையாதவளாய், புருஷனைக் நோக்கிக் கீழ்வருமாறு சொன்னாள் :—

"என் பிராணநாயகரே, இன்று இரவு இருள் அபரிமிதமா யெங்கும் கருங்கும் மென்றிருக்கின்றது. தங்களுக்கு சத்துருவாகிய பஞ்சபாதகம் மிக்க தறுகண்ணர்கள் அநேகர் இவ்வூரில் இருக்கின்றார்கள். ஆனதால் துணையின்றித் தாங்கள் தன்னந் தனியே போவது சரியல்ல. இப்போது தங்களோடு கூட வருவதற்கு இங்கே ஒருவருமில்லை. எனது வலதுகண்ணும், வலதுதோளும் துற்குறியாக அடிக்கடி துடிக்கின்றன. அன்றியும், இரத்தவாடையும் என்நாசியில் அடித்துக் கொண்டிருக்கின்றது. இன்னும் பயங்கரமான கனவொன்று கண்டேன்; அதனால் என் மனம் பறவை சிறகடிப்பதுபோலப் படபடவென்று அடிக்கின்றது. ஆகையால் எனது ஆத்மநாதரே! தாங்கள் இப்போது போக வேண்டாம்; போகாதீர்கள்; இருங்கள்; இருங்கள்" எனப் பரிதபித்துச் சொல்லித்தடுத்தாள். தனது மனைவி மேற்கண்டபடி பலவாறு சொல்லித்தடுப்பதை கஹபு கண்டு, அவளைப்பார்த்து கலகலவென்று நகைத்து "என்பிராணநாயகி! என்னசொல்லுகின்றாய்? எனக்கு நிகரானவனும் இவ்வூரில் இருக்கின்றானா! அத்தனை காத்திரமுள்ள பகைமையும் எனக்கு எங்கேயாவது உண்டா! நீ இப்போது பெண் புத்தியினால் இவ்விதம் கலங்குகின்றாய்; அஞ்சாமல் இரு. பயங்கரத்தை விலக்கு. நான் அவனோடு இரண்டொரு வார்த்தை பேசி விட்டு இதோ வருகின்றேன்" என்று மனைவியைத் தேற்றிவிட்டு, தலைவாசலில் வந்து முஹம்மது (றலி)வை நோக்கி "வாரும்; இரும்" என்று உபசாரத்தோடு அழைத்துவிட்டு உட்கார்ந்தான். பின்பு அவனை நரகத்திற்கு அனுப்பவந்த அவரும் உட்கார்ந்தார்.

இருவரும் இருந்தபின் முஹம்மது (றலி) பாதகனாகிய கஹபைநோக்கி "மகாப்பிரபுவே! தமியேனுடைய நாசித்துவாரம் அடைபடத்தக்க விதமாய்ப் புதியகலவை சேற்றின் பரிமளமொன்று அபரிமிதமாய் வீசுகின்றதே, அது எது?" எனக்

கேட்டார். அப்போது அவன் "முஹம்மது இபுனு சல்மாவை நோக்கி அது என் மனைவி நட்டிய பரிமளமிக்க கலவைசந்தனம். அதில் அணுத்தனை என்கழுத்தில் பூசியிருக்கின்றேன். அதுதான் அப்படிக் கமழ்கின்றது. வேறில்லை" என விடை பகர்ந்தான்.

சரித்திர புராணம்.

வேறு.

அவ்வுரை கேட்டு மனமகிழ்ந்திக்த
லைவினியிற் பரிமள மிலைவயோ
லெவ்விடத் தினுமியான் காண்கில னெனியே
னெனவெழுந் தெடுத்தவ னுவி

வவ்வுற நினைந்த மோர்ந்து பார்ப்பவர்போல்
வான்கொடு வயிற்றிடை வழங்கக்
குவ்வுற வீழ்ந்தா ருருயிர் துறந்தான்
குணமில்லாப் பாதகக் கொடியோன்.

வசனம்.

அப்போது முஹம்மது (நபி) ஆஹா! இது நல்ல கலவை? இதைப்போன்ற நாசி வெடிபடத் தக்க பரிமளமுள்ள கலவைச் சேற்றை நான் எங்குங்கண்டதில்லை, மகா நல்ல கலவை? எங்கே அடுத்து முகர்ந்து பார்ப்போம்?" எனச் சொல்லிக் கொண்டு எழுந்து அவனருகிற் சென்று, கழுத்தை முகர்க்கும் பாவனையாய் வலக்கரத்திற் பிடித்திருக்கும் உடை வாளை அவன் வயிற்றில் வைத்து இருத்திச் செருகினர்; உடனே பாதக மிக்க கஃபு மூச்சுப் பேச்சின்றிப் பிரேதமாய்ச் சாய்ந்து நரகம் குடிபோனான். இரத்தம் பிரவாகித்து ஓடிற்று. முஹம்மது (நபி) கஃபுவைப் பிரேதமாகச் சாய்த்து விட்டு, உடை வாளை யுருவித் துடைத்து உறையி லிட்டும் அங்கு மறைந்திருக்கும் நால்வரையும் அழைத்துக் கொண்டு தமது மனை வந்து சேர்ந்தார்.

பள்ளி யறைக்குள் கஃபு உடைய மனைவி நெடுநேரம் வரையும் சப்பிரமஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு, கணவன் வருவா னென்று வழிபார்த்துக் கொண்டிருந்தாள். அதிக நேரமாயும் வரவில்லை. அதனால் அவள் திகில் கொண்டு "நமது நாயகர் போய் வெகு நேரமாயிற்றே, இன்னும் ஏன் வரவில்லை, பயங்கரமான ஆபத்து ஏதும் வந்து சம்பவித்துக் கொண்டதோ? அல்லது புதிய மார்க்ககாரர்கள் வந்து கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களோ? ஒரு கால் பிறமாதர் மேல் இச்சை கொண்டு அவளை தேடிக் கொண்டு போய் விட்டாரோ, தெரிய வில்லையே. அவர் எழுந்த போது நமக்கு உண்டான குறிகளும் துற்குறிகளாய்க் காணப்பட்டனவே; ஒன்றும் அறியக் கூடவில்லை; நாமாவது வாசல் வரை போய்ப் பார்ப்போம்," என்றெண்ணிக் கொண்டு சப்பிரமஞ்சத்தை விட்டிறங்கி, மெல்ல நடந்து தலைவாசலில் வந்து பார்த்தாள். பார்த்த போது, தனது பிராண நாயகன் கொலையுண்டு உதிரப் பெருக்கில் சாய்ந்து கிடக்கும் பரிதாபமான பாழுங் காட்சியைக் கண்டு, ஓ! வென்றலறிப் பிரேதத்தின் மேல் விழுந்தாள். புருஷன் கொல்லப்பட்டுக் கிடைப்பதைக் கண்ட மாத்திரத்தில் பிரக்ஞை தப்பிப் பிரேதத்தின் மேல் விழுந்தவள், மறுபடியும் கூக்குரலிட்டு, "ஐயோ! பிராண நாயகரே! தமியாளுடைய இருதயப் பொக்கிஷத்தில் குறையாது விளங்கி நின்ற செல்வ நிதியே! புருஷ சிகாமணியே! பகைவருக்கு இடியே! அடியாள் செய்த தபோபலனே! இனி நான் என் செய்வேன்? எப்படி நான் கழிப்பேன்? எங்கே போவேன்? எவரிடம் ஒதுங்குவேன்? போக வேண்டா மென்று பல தடவை நான் தடுத்தும் கேளாமல் போனதாலல்லவா இக்கதி நேரிட்டது?" என்று பலவாறு சொல்லிப் புலம்பி யழுது, கண்ணீரால் அவன் பிரேதத்தைக் குளிப்பாட்டினாள். கஃபு உடைய மனைவி இவ்வாறு புலம்பி யழும்போது, இவள் கூக்குரலையும் பரிதாபமான ஒப்பாரியையும் கேட்ட அண்டை அயலிலுள்ள யஹூதிகளாகிய யூதர் அனைவரும் திடுக்கிட்டு, இந்த இரா வேளையில் ஏன் இவ்விதம் பரிதபித்து இவள் அழவேண்டு மென்று திரண்டு வந்து கஃபு உடைய மனைக்குள் பிரவேசித்தார்கள். பிரவேசித்த போது கஃபு பிரேதமாய்ச் சரிந்து கிடப்பதையும், அவன் மனைவி பிணத்தின் மேல் விழுந்து புலம்பியழுது புரள்வதையுங் கண்டு ஆச்சரிய மடைந்து "ஏன் இப்படி நேரிட்டது? இவரைக் கொலை செய்த பாபி யார்? நடந்த வர்த்தமானம் என்ன?" என்று விசாரித்தார்கள். அவள் நடந்தவைகளெல்லாம் அவர்களிடம் சொல்லிக் காட்டி அழுதாள்.

அவள் எவ்வாறு புலம்பிப் பரிதபித்து அழுதாலும் ஆகும் பிரயோசன மென்ன? அல்லது கஃபு உடைய இரத்தப் பழிக்கு

பதில் செய்ய சக்தி பெற்றவன் மதீனமா நகரத்தில் யாருண்டு? அதற்காக சிறு கலக மொன்று விளைப்பாரும் ஒருவருமில்லை. அங்கே வசிக்கும் அவன் ஜாதியாராகிய யூதர்க ளெல்லாரும், முஸ்லிம்களுக்கு முன் பெட்டிப் பாம்பாய் அடங்கி யிருக்கின்றார்கள். ஆனபடியால், அப்போது வந்து கூடிய யூதஜாதியார் அனைவரும் பரிதாபமுற்று, கஃபு உடைய மனைவியைத் தேற்றி, பிரேத அடக்கத்திற்கு ஆகுமான காரியங்கள் எல்லாவற்றையும் தயார் செய்து, அன்றிரவே தங்கள் ஜாதி முறைமைப்படி கஃபு உடைய பிரேதத்தைப் புதைத்து விட்டார்கள்.

அன்றிரவு போய்ச் சூரியன் உதயமான போது கஃபைக் கொன்ற முஹம்மது (றலி), தமது மனைவி யிருந்து புறப்பட்டு, சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் சபையில் வந்து பணிந்து நின்று, நபி நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, தமக்கும் கஃபுக்கும் இடையே நடந்த வர்த்தமானங்க ளெல்லா வற்றையும் சவிஸ்தாரமாய் சொல்லிக் காட்டி, இன்றிரவே அவனுடைய பிரேத அடக்கச் சடங்கு நிறைவேறின தென்றும் சொன்னார். இதைக் கேட்ட நபி நாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் இனி அவனால் விளையும் தீங்கு ஒன்றும் உண்டாகா தென்று சந்தோஷமுற்று, முஹம்மது இபுனு சல்மா (றலி)யைப் புகழ்ந்தார்கள். அன்றியும், நபி நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அதிக வெகுமதிகளையும் கொடுத்தார்கள்.

79—வது அத்தியாயம்.

சுகுரு படை யெழுச்சி.

கலிச் சந்த விருத்தம்.

ஜெகராஜர்கள் திறையோடனு தினநாடுபு படையோ
டிகலானது கடுகாயினு மிலராய் வரு பெழிலார்
முகமானது படவேபணி முறையார்சர ணிறஸூல்
சுகுருநக ரதின்மீதுறு துதியானதை மொழிவாம்.

இதன் பொருள்.

பூலோக இராஜர்கள் திறை பணங்களோடும், எந்த நாளும் நல்ல நட்டங் கொண்டு தங்கள் படைகளோடும் பகையானதோர்

கடுகளவாயினு மில்லாதவர்களாய் வந்து, அழகு பொருந்திய அவர்களின் முகங்கள் படப் பணியும் வரிசையான பாத கமலங்களையுடைய றஸூல் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், முன்னர் முஹம்மத் இபுனு சல்மா (றலி) அவர்கள் போய் வதை செய்து வந்த கஃபென்னும் பாதக னிருந்து அரசாண்ட சுகுரு நகரத்திற்குப் போன புகழானதைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

பொன்றின னெனத்தம துடற்புள கெறிந்து
நன்றுவகை கொண்டுள நயந்தினிய தூதர்
சென்றுசுகு ருவினை வளைந்துசிறை கொண்டு
வென்றிகொ டெழுந்துவர வேண்டுமினி யென்றார்.

வசனம்.

சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், விரோதியாகிய கஃபு கொலையுண்டபின், அவன் வசித்த சுயநகரமாகிய சுகுரு மேல் படையெடுத்து சென்று, அந்நகரத்தைக் கொள்ளையிட்டு, காபிர்களுக்கு திகில் உண்டாக்க வேண்டுமென்று கருதி, தங்கள் அஸ்ஹாபிகளில் அநேகரை யுத்த சன்னத்தர்களாய் புறப்படும்படி கட்டளை பண்ணினார்கள். படை யெழும்படி கட்டளை பண்ணின மாத்திரத்தில், வீரதீரத்தில் சிறந்த அஸ்ஹாபிகளில் அநேகர் போர் கோலம் புனைந்து, விருதுகள் பல நெருங்க, பேரிகை முழங்கபுறப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆயுதங்களணிந்து பிரயாணப்பட்டார்கள்.

திரயிக்க குதிரை வீரர்களான அஸ்ஹாபிகள் அநேகர் புடைசூழ உக்காபு என்னும் வெற்றித் துவஜம் முன்செல்ல, நபி நாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தை விடுத்து வெளியாகி, காபிர்கள் வசிக்கும் சுகுருவை நோக்கிச் சென்றார்கள். சில தினங்களுக்குள் நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை சுகுருவை யடைந்து கோட்டையை முற்றுகை யிட்டார்கள். பர்வதம் போன்று விளங்கும் உன்னதமான கோட்டையை நபிநாயகம் (ஸல்) அவர்கள் முற்றுகை யிட்டபின், அஸ்ஹாபிகளனைவரும் அங்குள்ள வனங்களிலும், தோப்புகளிலும், அருவிக் கரைகளிலும் வளமான மற்ற இடங்களி

னும் களிப்போடு தங்கி சுகம் அனுபவித்தார்கள். பகற் காலம் தோறும் மேற்சொன்ன பூங்கா முதலானவற்றிலுள்ள காய்கனிகளைப் பறித்துத் தின்றும், மலர்களைக் கொய்தும் விளையாடிப் பொழுது போக்குவார்கள். இராக்காலம் தோறும் அங்குள்ள விருக்ஷங்களெல்லாவற்றையும் முறித்துத் தறித்து, திரள் திரளாகக்கூடாரங்கள் தோறும் குவித்துத் தீமூட்டி எரிப்பார்கள். சுகுருவின் மதில்அரண் பலமுள்ளதும், உயர்ந்தது மானபடியால், வேறு வகையால் அடர்ந்த எதிர்க்க வழியின்றி வெகு காவலோடிருந்தார்கள். கோட்டைக்குள் வசிக்கும் பகைவர்களுக்கு, இடுக்கண் அதிகமாகி சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு இருபத்தொரு நாள்வரையும் சுகுருவை நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனையால் முற்றுகை யிடப்பட்டிருந்தது. அதனால், உள்ளிருக்கும் காபிர்கள் வெகு சங்கடப்பட்டு மனஞ்சோர்ந்தார்கள்.

இவ்வாறு இருபத்தொரு நாள்வரையும் நிர்ப்பந்தத்தி லிருந்த சுகுரு வாசிகளில் தலைவர்களெல்லாரும் ஒருங்குகூடி முஹம்மது நபி நமது நகரத்தை முற்றுகையிட்டு நம்மை வருத்துவது, நம்ஜாதியார்களான மதீனமா நகரத்திலிருக்கும் யூதர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியும். அன்றியும் மக்கமா நகரத்தார்களுக்கும் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் ஒருவராவது வந்து நமக்கு இதுவரையும் உதவி செய்வதற்கு அவர்கள் நினைக்கவுமில்லை. ஆகையால், நாம் எத்தனை காலம் இப்படி நிர்ப்பந்தத்திலிருந்து வருந்துவோம்? இனி நாம் போராடுவதற்கு எத்தனப்பட்டாலொழிய, கோட்டை வாசற் கபாடம் திறக்கப்பட முடியாது. முஹம்மது நபியுடைய சேனையோடு எதிர்த்துநின்று வெற்றிபெறும் திறமைநமக்கு அணுவளவும் இல்லை. ஆனபடியால், நாம் நகரத்தையும், சொத்துக்களையும் இழந்துவிட்டு, இங்கிருந்து புறப்பட்டு போய்விடுவதுதான் புத்தியென்று ஆலோசனை செய்துகொண்டு சிலரையனுப்பி, "நாங்கள் சுகுருவை உங்களுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு, எங்காவது போய் விடுகிறோம். எங்களுக்கு வழி விடுங்கள்" எனக்கேட்டார்கள். அதற்கு "நீங்கள் போகும்போது யுத்தக்கருவி ஒன்றுவதுகொண்டு போகக்கூடாது" என நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்வூர்க் காபிர்களுக்கு ஆக்ஞாபித்து வழியும் விட்டார்கள். அக்காபிர்கள் அதற்கிசைந்து, யாதொரு பொருளும், ஆயுதமும் எடாமல், உடுத்திருக்கும் வஸ்திரங்களோடு சுகுருவை விட்டு வெளிப்பட்டார்கள்.

சுகுரு நகரத்துக் காபிர்கள் எல்லாவற்றையும் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒப்புக்கொடுத்து விட்டு, அகதிகளைப்போல புறப்பட்டுப் போவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அவர்கள் மேல் மனம் இரங்கி, அவர்களுக்கு ஆகாரமாக ஐந்து ஒட்டகங்களில் நெற்பொதிகளை யேற்றிக் கொடுத்தார்கள். அதை அவர்கள் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

சுகுருவி லிருந்து புறப்பட்டுப்போய்விட்டவர்களில் கொடியோனாகிய கஹபு உடைய சுற்றத்தார் எல்லாரும் ஷாம் இராஜ்ஜியம் போய்க் குடியேறினார்கள். மற்றவர் அனைவரும் கைபர் நகரம் போய்க் குடியேறினார்கள்.

காபிர்கள் நகரத்தைவிட்டுப் போனவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனையோடு சுகுருவுக்குள் பிரவேசித்து எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டார்கள். போய்விட்ட காபிர்களுக்குரிய இரத்தினங்கள், ஆடைகள், நிதிகள், வாகனங்கள், விருதுகள், ஆயுதங்கள் எல்லாவற்றையும், அது அது வேண்டிய தரித்திரர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். அங்குக் கிடைத்த பொருள்களில் ஒன்றுவது தங்கள் பிரயோஜனத்துக் கென்று எடுத்துக் கொள்ளவில்லை. பிறகு மேற்படி சுகுருவுக்கு அஸ்ஹாபிகளில் ஒருவரைத் தலைவராக நியமித்துவிட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனையோடு அங்கிருந்து பிரயாணமாய் மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

80-வது அத்தியாயம்

பதுறு சுகுருப் படையெழுச்சி

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

கதறுமதயா னைகளென்னக் கருதா ரெதிர்செய் பலபோரை
யுதறுமரியே றெனசென்றே யொளிர்வே லஸ்ஹா பிகளுடனே
பதற விலதாய் வென்றுவரும் பண்பாரிறைவன் றூதிறஸூல்
பதுறு சுகுரு வினிற்போந்த வரலாற்தனை வழுத்திடுவாம்.

இதன் பொருள்.

மதங்கொண்டு சப்திக்கும் யானைகளைப்போல் சத்துராதிகளான காபிர்கள் எதிர்த்துச்செய்யும் பல சண்டைகளை, எதிரிலே எதிர்

பட்டவைகளைப் பிய்த்து வீசுஞ் சிங்கேறுக்கொப்பாகக், கைகளிற் பிரகாசமான வேலாயுதம் பிடித்த அஸ்ஹாபி மார்களென்னும் படை வீரர்களோடும் போய், பதார்த்த மில்லாமல் வெட்டி வெற்றி கொண்டு வரும் தகுதியான அல்லாஹுத் தஆலாவின் தூதர் நபி முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் பத்று சுகுறாவென்னு மிடத்திற்குபோன வரலாற்றைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்

விருத்தம்.

போற்றும் வேத நூற் புண்ணியர்
மாற்ற மீறவே வாழுநாட்
சாற்று துல்கயி தாவெனு
மேற்ற மாதமா மேல் வையில்.

வசனம்.

தாஜுல் அன்பியாவாகிய முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யுங் காலத்தில், முன் உஹது யுத்தத்தில் முறிந்தோடின காபிர்களின் தலைவனாகிய அபூஸுபியான், தான் பலதரமும் பட்டபாட்டை யெண்ணிச் சும்மா அடங்கிக் கிடக்கவில்லை. மறுபடியும் நபிநாயகம் (ஸல்) அவர்களோடு போராடவேண்டு மென்ற எண்ணத்தோடு நாள் போக்கினான். அக்காலத்தில் அவன், "நாம் சிலவீரர்களை யழைத்துக்கொண்டு, வர்த்தக சாமான்களோடு துல்காய்தா மாதத்தில் பத்று என்னும் தலத்திற்கூடும் சந்தைக்கு விற்பனைக்காகப் போவோம். அப்போது நமது பகைவனாகிய முஹம்மதும், அவன் வீரர்களும் நம்மை யடர்ந்து சூறையாடக்கருதி அங்கே வருவார்கள். அத்தருணத்தில் கூடியவரையும் எதிர்த்து நின்று போரிட்டு வெற்றி பெறலா மென்றெண்ணி, முடிவு செய்து கொண்டு அநேக விதமான விற்பனைக்குரிய சாமான்களை ஒட்டகங் களிலேற்றிக் கொண்டு, வீரர்கள் பலர் புடைசூழ மக்கமா நகரத்திலிருந்து புறப்பட்டு, முன் குறித்த துல்காய்தா மாதத்தில் மேற்படி பத்று என்னும் ஸ்தலத்தில் வந்து சேர்ந்து, அங்குக் கூடிய சந்தையில் தன்னோடு வந்தவர்களுக்கும் சரக்குகளுக்கும் கூடாரங்களமைத்துக் கொண்டு அச்சமற்றிருந்தான்.

அபூஸுபியான் முன் பலதரம் தன் சொத்துக்களை இழந்தது போதாமல் இன்னும் பலசரக்குகள், சாமான்களையும் வலிய கொண்டு வந்து கொடுப்பதற்காக பத்றுச் சந்தையில் இருக்கிறானென்னும் சமாசாரத்தை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் ஒற்றர் வந்து தெரிவித்தார். இச்சமாசாரத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, ஆனந்தமடைந்து, தங்களுக்குப் பதிலாக பிரதிநிதியாக மதீனமா நகரத்தில் அப்துல்லா (றலி) அவர்களை நியமித்து விட்டு, அஸ்ஹாபிகளில் அநேக குதிரை வீரர்களை யழைத்துக்கொண்டு, வெற்றித் துவஜமாகிய உக்காபு முன் பறக்க, விருதுகள் பலசூழ, ஆயுதங்கள் ஜொலிக்க, மதீனமா நகரத்தைவிட்டு வெளிப்பட்டு, பத்று என்னும் தலத்தை நோக்கி நடந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தமது சேனை வீரர்களோடு சில தினங்களுக்குள் பல விடங்களையும் கடந்து பத்று என்னும் தலத்தை நெருங்கினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் வருகின்றார்களென்னும் செய்தி அபூஸுபியான் காதில் விழுந்த மாத்திரத்தில், அவன் கொண்டிருந்த எண்ணமெல்லாம் அறமறந்து, நெஞ்சுபறை யடிப்பட திகில் கொண்டு தனது சாமான்களைக்கூட எடுக்க வசமின்றி, எல்லாவற்றையும் போட்டுவிட்டு மக்கமா நகரத்தை நோக்கி ஓடினான். குதிரையாதி வாகனங்கள், வாளாதி ஆயுதங்கள், கூடாரங்களாதி சாமான்கள் விற்பனைக்கென்று கொண்டு வந்த சரக்கு எல்லாவற்றையும் அபூஸுபியான், வைத்தது வைத்த வண்ணம் இருக்கத் திகில் பிடித்து ஓடிவிட்டானென்னும் சங்கதியை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, அவன் சொத்துக்களையெல்லாம் சூறையிடும்படி அஸ்ஹாபிகளுக்கு உத்தரவு செய்தார்கள். உடனே அஸ்ஹாபிகள் மேற்படி சொத்துகள் எல்லாவற்றையும் கைக்கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் சேர்த்தார்கள். அவற்றை நபிநாயகம் (ஸல்) அவர்கள் பார்வையிட்டு, அங்கே கூடியிருக்கும் சந்தையில் எல்லாவற்றையும் கொண்டு போய் விற்று விடும்படி கட்டளை பண்ணினார்கள்.

அபூஸுபியான் மக்கமா நகரத்திலிருந்து புறப்படும் போதே யுத்த நோக்கமாய் புறப்பட்டதால் முஸ்லிமான அறபிகளுக்கும் இவர்களுக்கும் முக்கியம் போராட்டமுண்டாகும், நாம் போய் மேற்படி

போராட்டத்தையும், வெற்றிதோல்விகளையும் அறியவேண்டுமென்று அநேகர் அவ்விடத்திற்கு வந்திருந்தார்கள். ஆனபடியால், அங்கே வழமையாய்க்கூடும் சந்தை எப்போதிலும் அப்போது விசேஷமுற்றிருந்தது. அதனால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டளைப்படி விற்க கொண்டு வந்த எல்லாப் பொருள்களும் அதிக விலைக்கு விற்றன.

சாமான்கள், சரக்குகள் எல்லாவற்றையும் விற்று பணமாக்கிக் கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டு, மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள். அடுத்தடுத்து அபாஸுபியான் திரண்ட சொத்துக்களை தானாகக்கொண்டு வந்து கொடுத்து விட்டு ஓடிப்போவதைக் குறித்து, அஸ்ஹாபிகள் எல்லாரும் ஆச்சரியமும் ஆனந்தமுமுற்று, அல்லாஹு தஆலாவை மிகப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

81வது அத்தியாயம்.

இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு பிறந்தது.

கலி நிலைத்துறை.

திசைநாலுள குபிரானவர் திகிலேகொள திறலா
ரிசையே வளர்றஸூல் மருமகனாரெழி லலியார்
நசையோடு செய்வரமே யொருநல்லுருபமென் மகவாய்
உஸைனார் பிறந்திடுகாரண வுவப்பானதை யுரைப்பாம்.

இதன் பொருள்

நானகு திசைகளிலுமுள்ள குபிரென்னும் சத்துராதியானவர்கள் நெஞ்ச மஞ்சித் திகில்கொள்ளும் திறத்தையுடையவர்களாயும் கீர்த்திவளர்ந்தேறும் றஸூல் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் மருமகராயும் விளங்கும் அழகிய அலி (றலி) அவர்கள், ஆசையோடு செய்யுந் தவந்திரண்டு மிருதுவானவோர் நல்ல ரூபிகாமகனாக இமாம் ஹுஸைன் (றலி) அவர்கள் இந்த உலகத்திற் பிறந்திடும் காரண சந்தோஷத்தை சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

வந்த தெண்ணிய ஹிஜுறத்து நான் கெனும் வருடஞ்
சிந்தை கூர்தரக் கசறெனுந் தொழுகையைச் செய்த
லெந்தநாட்டினு மேருநர் மேல்பறு லென்ன
வந்தமில்லவ னாரண மிறங்கின தன்றே.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் நாளுக்குநாள், காபிர்களின் பலத்தையொடுக்கி மதீனமா நகரத்தில் அரசு செய்து கொண்டிருக்கும் காலத்தில், ஹிஜுறத்து நான்காம் ஆண்டுபிறந்தது. அவ்வாண்டின் முற்கூற்றிலே அல்லாஹு தஆலா நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு, கஸறு தொழுகையை பர்லாக்கினேனென்று வேதவாக்கியம் இறக்கினான். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த வேதவாக்கியத்தை அஸ்ஹாபிகள் எல்லாருக்கும் அறிவித்து, மேற்படி தொழுகையின் விவரங்களையும் தெரிவித்தார்கள். அன்றுதொட்டு பக்தர்கள் அந்தத் தொழுகையைத் தொழுது வந்தார்கள்.

அந்த வருஷத்திலேயே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூவுமையாவுடைய செல்வமகளாராகிய உம்முசல்மா (றலி)யை விவாகம் செய்துகொண்டார்கள்.

பிறகு, அந்த ஹிஜுறத்து நான்காம் வருஷத்து ஷஃபான் மாதத்து ஐந்தாம்தேதியில், நபிநாயகம் (ஸல்) அவர்களின் கண்மணி போன்ற குமாரத்தியும், அலி (றலி) அவர்களின் பிராணநாயகியு மாகிய பாத்திமா (றலி) அவர்கள் ஒரு மைந்தனை யீன்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் பல அஸ்ஹாபிகளோடு தங்கள் மகளார்வசிக்கும் மாளிகைக்கு வந்து, குழந்தையைத் தூக்கி முகந்து முத்தமிட்டு மடிமீது வைத்துக் கொண்டு, முன் மூத்தபேரனாகிய ஹஸன் (றலி) அவர்களுக்குச் செய்தவண்ணம் பாங்கும் இகாமத்தும் சொல்லி, பின் ஏழாம்நாள் சடங்கும் அவ்வாறே செய்து "ஹுஸைன்" என்று நாமகரணஞ் செய்து அதிக மனமகிழ்ச்சியோடு உவந்து வளர்த்து வந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிரேஷ்ட கனிஷ்ட இரு பௌத்திரர்களையும் இரு நேத்திரங்களாகப் பாவித்து வந்தார்கள்.

அக்காலத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிறியதந்தையாகிய அபூத்தாலிபு உடைய மனைவியும் அலி (றலி) அவர்களின் மாதாவுமாகிய பெண்கள் நாயகம் பாத்திமா (றலி) அவர்களின் வாழ்நாள் இறுதியானபடியால் அவர்களுக்கு மேன்மையான மவுத்து சமீபித்தது. சரீர சௌக்கியமுற்ற சொற்பதினங்களில் அவர்கள் மவுத்தாக நேரிட்டது. அவர்கள் தமக்கு மவுத்து மிகசமீபமான போது நபிநாயகம் (ஸல்) அவர்களையும் அலி (றலி) அவர்களையும் மற்ற பெண்மக்களையும், பந்து ஜனங்களையும் அழைத்து அருகில் இருத்தி, சொல்லவேண்டியவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்றியும் "இஸ்லாம் மார்க்கம் வாழக்கடவது. இஸ்லாம் மார்க்கம் வாழக்கடவது" என்று அடிக்கடி சொன்னார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களை அடுத்தடுத்துத் துதித்தார்கள் எல்லா வார்த்தைகளிலும் சிறந்த கலிமாவையே ஓயாமல் சொன்ன வண்ணமாயிருந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களை வளர்த்த மாதாவாகிய பாத்திமா (றலி) அவர்கள் இவ்வாறு நற்சிந்தனையோடு, அல்லாஹு தஆலாவின் நாட்டமாய் மவுத்தையடைந்து, ஸுவர்க்கஞ் சேர்ந்தார்கள். அவர்கள் மவுத்தானபோது நபிநாயகம் (ஸல்) அவர்களும் மற்றவர்களும் மிக மனவருந்தி, அவர்கள் மையித்தைக் குளிப்பாட்டி, கபன் இட்டு சுர்மா முதலானவை இடுவித்து, பந்துக்கள், வேறு அஸ்ஹாபிகள் அநேகர்சூழ மிக அலங்காரத்தோடு தூக்கிச்சென்று ஒரு ஸ்தானத்தில் வைத்துத் தொழுவித்து, சிறப்பாக அகழ்ந்திருக்கும் மேன்மையான கபுரில் கொண்டுபோய் இறக்கிவைத்தார்கள். ஜனாஸாவை கப்றில் வைத்தபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் கப்ரில் இறங்கி, மையித்துக்கு அருகில் படுத்துக் கொண்டு, முகத்தோடு தங்கள் முகத்தை வைத்து "நான் பிறந்தது முதற்கொண்டு இது பரியந்தம் பிதாமாதா வென்று தேடாமல், பிதாவுக்குப் பிதாவும் மாதாவுக்குமாதாவுமா யிருந்து, வாடாமல் வளர்த்து ஆதரித்த என் அருமையான தாயே! தங்களுக்கு அல்லாஹு தஆலா உன்னத பதவியைத் தருவானாக" என்று மனமுருகி மொழிந்து, தங்கள் மேலங்கியைக் கழற்றி அவர்கள் மேல்

போர்த்துவிட்டு எழுந்து உயர வந்து, முதலில்தங்கள் கையால் மண்ணைத் தள்ளினார்கள்; பிறகு சூழநின்றோர் மண்ணைத்தள்ளிக் கப்றை மூடினார்கள்.

கப்று மூடப்பட்டபின் அஸ்ஹாபிகள் எல்லாரும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் செய்தகாரியத்தில் புதுமையாய் அனைவரும் சூழ்ந்து நின்று "யாறஸூலல்லா! தாங்கள் கப்றில் படுத்து எழுந்ததும், மேலங்கியை கழற்றிப் போர்த்தினதும் என்ன காரணத்திற்காக?" என வினவினார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "நான் எனது மாதாவுக்கு அருகில் படுத்தது, அவர்களை கப்று நெருக்காமல் இருப்பதற்கு வேண்டி. என்மேலங்கியைப் போர்த்தது அவர்கள் மேலான சுவர்க்கத்து உயர்ந்த சித்திரப்பூம் பட்டாடையைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வேண்டி." என்று சொன்னார்கள். "நான் இவ்வாறு செய்ததெல்லாம் ஹாஷிம் வமிசத்துப் பெண்களில் முந்தி ஈமான் கொண்டு முஸ்லிமானது இவர்களே. இன்னும், ஜஃபர், உகைலு, அலி இம்மூன்று குமாரர்களையும், சுமானு, உம்முஹானி இவ்விரு குமாரத்திகளையும் பெற்று வரிசை சிறந்த மாதாவானதாலுமே" எனப் பகர்ந்தார்கள். இதைகேட்ட அஸ்ஹாபிகள் எல்லாரும் மகிழ்ச்சி கூர்ந்தார்கள்.

பிறகு அங்கு நின்று பாத்திஹா ஓதிமுடித்து, தங்கள் தங்கள் மாளிகைகளுக்குச் சென்றார்கள்.

82-வது அத்தியாயம்.

தாத்துற்ர ஹாக்குப் படையெழுச்சி.

கலி விருத்தம்.

ஏத்தும் வேதத் திறையவன் தூதராய்க்
காத்தி ரட்சிக்கும் காரண நபி
பூத்த சோலைப் பொழிநிக ழும்வளத்
தாத்துற்ரஹாக்குக் கெழுந்ததைச் சாற்றுவாம்.

இதன் பொருள்

வேதத்திற் புகழாய் விளங்கும் வல்ல காரணனான அல்லாஹு தஆலாவின் திருத்தூதராய், சகல ஆத்மக்களையும் காத்து

ரட்சிக்கும் நமது நபிநாயகம் முஹம்மது(ஸல்) அவர்கள் புட்பித்த சோலைகளும், தடாகங்களும் சூழ்ந்து பிரகாசிக்கும் வனத்தையுடைய தாத்துற்ரஹாக்கென்னும் பெயருற்று வளந்தங்கிய ஊரிற் கெழுந்தருளியானதைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வதுவையிற் கொடையிற் போரின் மலிந்தழும் முரச மாறு
ததிர்தரு மதீன மூதூ ரண்ணல்தாத் துற்ர ஹாக்குப்
பதியினில் வாழுங் கத்து பானெனுங் கேளிர் தம்மே
லெதிர்பொர வேண்டு மென்ன வெழுந்தனர் விரைவி னன்றே.

வசனம்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் கத்துபான் என்னும் கூட்டத்தாரை அடர்த்து தாக்கிப் போராடுவதற்காக வேண்டி, அவர்கள் வசிக்கும் தாதுற்ரஹாகு என்னும் நகரத்தின்மேல் செல்லும்படி சேனை தயாராக வேண்டு மென்று அஸ்ஹாபிகளுக்குக் கட்டளை பண்ணினார்கள். அந்தக் கட்டளை பிரகாரம் அஸ்ஹாபிகளில் வீரதீரத்திற் சிறந்த அநேக குதிரை வீரர்களும், காலாட்களும் ஆயுதாதி யணிந்து போர்க்கோலத்தோடு புறப்பட்டார்கள். அஸ்ஹாபிகள் அவ்வாறு புறப்பட்டபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள், மதீனமாநகரத்தில் தங்கள் பிரதிநிதியாக ஒருவரை நியமித்து விட்டு, அஸ்ஹாபிக ளென்னும் சேனாவீரர் திரண்டுவர மதீனமா நகரத்திலிருந்து வெளிப்பட்டார்கள். குடைகள், கொடிகள், ஆலவட்டங்கள், வெண்சாமரைகள் அநந்தம் நெருங்க, பதினெண்மேளங்கள் கடல் போல் முழங்க, ஆயுதங்கள் சூரியனை யொத்துப்பிரகாசிக்க, தக்பீறும், ஸலவாத்தும் இடிபோன்று தொனிக்க, உக்காபு என்னும் வெற்றித் துவஜம் முன் செல்ல, நபிநாயகம் (ஸல்) அவர்களின் ராணுவம் கத்துபான் என்னும் மாற்றார்வசிக்கும் தாதுற் ரஹாகை நோக்கித் தாவடிபோனது. இவ்வித அலங்காரத்தோடு சென்ற நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் சிறப்பான சேனையோடு பல ஸ்தானங்களையுங் கடந்து நஜ்து என்னும் ஸ்தலத்தில் சேர்ந்தார்கள். அப்போது மேற்படி நஜ்து என்னும் ஸ்தலத்தில்

பாளையமிறங்கும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளுக்குக் கட்டளை பண்ணினதால், உடனே அஸ்ஹாபிகளனைவரும் உன்னதமான கூடாரங்களை நிரை நிரையாக அமைத்து, குதிரை லாயங்களும், மற்ற வாகனப் பந்திகளும் நியமித்து, மிகு அலங்காரத் தோடு அந்த நஜ்து என்னும் தலத்தில் பாளைய மிட்டிருந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ரணவீரர்களோடு வந்து நஜ்தில் பாளைய மிறங்கியிருக்கும் சமாசாரம், தாதுற்ரஹாக்கில் வசிக்கும் கத்பான் கூட்டத்தார்களுக்கு எட்டிற்று. உடனே மேற்படி கூட்டத்துத் தலைவர்கள் ஒருங்கு கூடியோசித்து, நாம் தாமதிக்காமல் திரண்டு எதிர்ச் சென்று முஹம்மதோடு போரிட்டு ஜெயம்பெற வேண்டுமென்று தீர்ப்புச்செய்து கொண்டு, அநேக குதிரை வீரர்களும் காலாட்களும் யுத்த சன்னத்தர்களாய் ரணபேரிகை முழங்க, விருதுகள் நெருங்க, படைக்கலம் பிரகாசிக்க, கர்ச்சனையோடு புறப்பட்டு, தாதுற்ரஹாகை விட்டு நடந்து நஜ்து என்னும் தலத்தை யடுத்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாளையமிட்டிருக்கும் பாசறைக்கு சமீபமான ஒரு ஸ்தானத்தில் பாளைய மிறங்கினார்கள். மகத்தான அல்லாஹு தஆலாவுக்கும் அவனுடைய தூதராகிய நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும் வழிப்பட்ட அஸ்ஹாபிகளோடு போரிடுவோ மென்னும் துணிவுகொண்டு மேற்படி கத்பான் கூட்டத்தார்கள் திரண்டுவந்து பாளையமிறங்கினது, சிங்கக்கூட்டத்தைத் தாக்கி முறியடித்துத் தூரத்தக்கருதி யானைக் கூட்டங்கள் துணிந்து முன்வந்து, சிந்தனை யற்றுக் கூடி நிற்பது போன்றிருந்தது.

இருவகை ராணுவமும் இவ்வாறு பாளையமிட்ட பிறகு, ஒரு தினம் நண்பகலானபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிக ளனைவரையும் பின்னே நிரை நிரையாக நிறுத்தி, தாங்கள் முன்னே இமாமாய் நின்று ளுஹறு தொழுதார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் இப்படி ளுஹறு தொழுது கொண்டிருக்கையில், காபிர்களிலுள்ள பகைஞன் ஒருவன் வந்து அடுத்து நின்று, தொழுவதைப் பார்த்து, தங்கள் பாசறைக்கு விரைந்து சென்று, அங்குள்ள தலைவர்களனைவரையும் அழைத்து, சினங்கொண்டவனாய் "தலைவர்களே! மற்ற வீரர்களே! தமியேன் சொல்லும் இச்சொல்லை நீங்கள் கவனமாய்க்

கேளுங்கள். இச்சமயத்தில் புதிய மார்க்கக்காரனுகிய முஹம்மதும் அவன் வீரர்களும் நிராயுதர்களாய், வேறு பராக்கின்றி அவர்கள் ஆண்டவன் பேரில் சிந்தையை நிறுத்தி, குப்புறவிழுந்து வணங்கிக் கொண்டிருக்க நான் கண்டேன். இனி நாமும், அவர்களும் எதிர்த்து நின்று யுத்தஞ் செய்ய வேண்டியதேயில்லை. அவர்கள் எல்லாரையும் இலகுவில் கொல்லத்தக்க உபாயம் நமக்கு வெளிப்பட்டு விட்டது. அவர்கள் தெய்வம் அவர்களை விட்டு விலகி விட்டது. இப்போதே நாம் எல்லாரும் சென்று, பராக்கின்றி வணங்கிக் கொண்டு நிற்கும் அவர்கள் எல்லாரையும், யாதொரு நிர்ப்பந்தமின்றிச் சங்கரித்து விட்டு வந்து விடலாம். இதுதான் தக்கவழி'' என்று சொன்னான். இச்சொல்லைக் கேட்ட பகைவர்கள் களிப்புற்று, உடனே போர்க்கோலம் புனைந்து புறப்பட்டார்கள். அதற்குள் ளுஹறு தொழுகை தொழுது முடிந்தது.

நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் தொழுது முடித்து, மற்ற பாராக்கிலிருப்பதை மேற்படி காபிர்கள் வந்து பார்த்து மனம் தளர்ந்து, நாம் கோரிய கருமம் சித்திபெறவில்லையே யென்று கவலையுற்று வருந்தினார்கள். அப்படி நின்று கலங்கும் போது, அவர்களிலுள்ள பூதஜாதியானொருவன் அவர்களை நோக்கி "தலைவர்களே! வீரர்களே! நீங்கள் என் இப்படி கவலைப்படுகின்றீர்கள்? நமது பகைவர்கள் இப்பொழுது தொழுது தீர்ந்தாலென்ன! இனிமேல் அவர்கள் தொழமாட்டார்களா. இன்னும் சற்று நேரத்தில் அஸறு என்னும் தொழுகை ஒன்றுண்டு, அதையும் அவர்கள் கட்டாயம் தொழுவார்கள். அவர்கள் வணங்கும் வணக்கம் வேறு சிந்தனையின்றி, ஐம்புலன்களையும் ஒடுக்கிநின்று, சத்துருக்கள் வந்து எவ்வித இடுக்கண் செய்தாலும், பிராணசங்கடமான விபத்துகள் வந்து சூழ்ந்தாலும் நிலைபெயராமலும், சித்தம் பேதலிக்காமலும் ஒரேபிடியாய்ப் பித்தேறினவர்களைப் போல நின்று வணங்க வேண்டும். ஆனபடியால், அடுத்துத் தொழப்போகிற அஸறுதொழுகையில் நாம் சென்று எல்லாரையும் சங்காரஞ்செய்து விடலாம்'' என்றான். இதைக்கேட்ட அந்தக் கைம்பெண்களையொத்த பகைவர்கள் சந்தோஷங் கொண்டு, அஸறு தொழுகை தொழும் வேளையை எதிர்பார்த்திருந்தார்கள்.

சீறாப் புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈங்கிவ ணிருப்ப வானோர்க் கிறையிறை யருளின் வண்ணத்
தோங்கிய விசும்பை நீந்தி யுறுபொரு ளுணர்த்தும் வேதக்
தாங்கிய வெழிலா யத்துத் தலைமிசை கொண்டி ழிந்தார்.
நீங்கரும் பயம்வந் தெய்து நிலத்திடைத் தொழுதற் கன்றே

ஆரணப் பொருளை யோர்ந்த வனவினி லசறு தோன்றப்
பூரணத் தொழுகை கொண்ட புணர்ப்பொடு பாங்கெல்
நேருற விளங்க வன்ன னின்றதி னவர்க டம்மைத் [லோர்க்கு
தாரணி யிடத்தி ரண்டு பாகமாய்த் தனி பிரித்தார்.

வசனம்.

காபிர்கள் மேற்கண்டபடி சதியாலோசனை செய்து கொண்டிருக்கையில், 'பயங்கரமான தானங்களில் இன்னபடி தொழுதல் வேண்டும்' என்னும் நிபந்தனையடங்கிய வேதவாக்கியத்தை அல்லாஹுத் தஆலா நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கினான்.

மேற்படி வேதவாக்கியத்தை ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் கொண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்துச் சென்றவுடன் அஸறு வேளையாயிற்று. அஸறு தொழும் வேளையான போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாங்குசொல்லி, தங்கள் அஸ்ஹாபிகள் அனைவரையும் இரண்டு பிரிவாகப் பிரித்தார்கள். பிரித்த இரண்டு பிரிவில் ஒரு பிரிவைப் பகைவர்களின் பாசறைக்கு முன் சென்று பாதுகாத்து நிற்கும் படியும், பின் செய்ய வேண்டியதையும் கட்டளை பண்ணிவிட்டு, மற்றொரு பிரிவைத் தங்களுக்குப் பின் மௌமூமாக நிறுத்தித் தாங்கள் இமாமாய் நின்று தக்பீர் கட்டி ஓதவேண்டியவற்றை ஓதி, றுக்கூவில் சென்று நிமிர்ந்து சுஜூதிலாய் மறுபடியும் எழுந்து நின்று ஓதவேண்டியவற்றை ஓதினார்கள். இமாமாய் நிற்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாந்தரம் நிலையில் நின்று ஓதிக் கொண்டிருக்கையில், மௌமூமாய் நின்ற அஸ்ஹாபிகள் அப்படியே பெயர்ந்து பின் வாங்கி நின்று, மற்ற வோதவேண்டிய கருமங்களெல்லாவற்றையும் தாங்களாகவே முடித்து விரைவாய் றுக்கூவும் சுஜூதும் செய்து, இருப்பிலிருந்து ஓதி, இரண்டு றக்அத்திலேயே ஸலாம் கொடுத்துத்

தொழுகையை முடித்து, ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பகைவர் பாசறைக்குமுன் சென்று காவலாய் நின்றார்கள். உடனே முந்தி அங்குகாவலாய் நிற்கும் மற்றொரு பிரிவாகிய அஸ்ஹாபிகள் விரைந்து, வந்து ஓதிக்கொண்டு நிற்கும் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குபின் தக்பீர் கட்டி மௌமூமாக நின்றார்கள். அதற்கு பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிந்திவந்த மௌமூம்களோடு இரண்டாம் றுக்கூவும் சுஜூதும் செய்து இருப்பி லிருந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இருப்பிலிருக்கும் போதே மௌமூம்கள் எழுந்து நின்று மற்றொரு நிலையும் றுக்கூவும் ஸுஜூதும் செய்து இமாமோடு இருப்பி லிருந்து ஓதி ஸலாம் கொடுத்து தொழுது முடித்தார்கள்.

ஆக நாலு றக்அத்துத் தொழ வேண்டியது இரண்டு றக்அத்தில் முடித்தனர். இதைத் தான் கௌபு தொழுகை யென்றது. அன்றியும் பிரிந்தும், கூடியும் தொழுதும் இது தான் பயங்கரமான தானங்களில் தொழும்படி இறங்கின வேத வாக்கியத்தின் நிபந்தனை. இவ்வேத வாக்கியம் இறங்கினவுடன் அதை அஸ்ஹாபி களுக்கு நபி நாயகம் (ஸல்) அவர்கள் கற்பித்திருந்தார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் இவ்வாறு தொழுததைக் காபிர்கள் பார்த்து, வியப்பு கொண்டு, இப்போது இவர்கள் தொழும் தொழுகை என்ன தொழுகையோ? இதற்கு முன் நாம் இத்தொழுகையைக் கண்டு கேட்டிருக்கிறோமே, இவ்வா றல்லவே. இன்று தொழுதது நூதனத்திலும் நூதனமாகவல்லவா இருக்கின்றது? இது நாம் மிகவும் அஞ்சத்தக்க விஷயந்தான். இவ்வணக்கம் மாந்திரிக வகையேயன்றி வேறல்ல. இதன் முடிவைக் கண்டறிய நம்மால் கூடாது. நாம் இனி ஒரு க்ஷணப் பொழுதும் இங்கு நிற்கக் கூடாது. இவர்கள் செய்யும் மந்திர சித்தியால் நம் எல்லாரையும் சங்காரஞ் செய்து விடுவார்கள். ஆனதால், நாம் தப்பிப் பிழைத்து எங்காவது ஓடிப் போவது தான் சரி. கட்டாயம் நாம் கொல்லப்படுவோம். வாருங்கள், இவ்விடத்தை விட்டுத் தப்பித்துக் கொண்டு போய் விடலா மென்று ஒருவருக் கொருவர் ஸ்திரமனை யற்றவர்களாய், வாய் குழறி மனம் தளர்ந்து ஆலோசித்து முடிவு செய்து கொண்டு, நின்றது நின்றபடியே கலைந்து மனம் போன வழியே சிலரும் பலருமாய்ப் போய் விட்டார்கள்.

தொழுகையைக் கண்ட பயங்கரத்தினால் மனந் தடுமாறித் தத்தளித்து, மேற்படி கத்பான் கூட்டத்தார்கள் போய் விட்டபின், அச்செய்தி நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கு எட்டிற்று. தாதுர் றஹாக் என்னும் சுயநகரத்தையும் விட்டு மனஞ் சென்ற வழியே பகைவர்கள் போய் விட்டதால், நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் இராணுவத்தோடு நஜ்து என்னும் தலத்தை விட்டுப் புறப்பட்டு, மதீனமா நகரத்தை நோக்கி நடந்தார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளாகிய சேனு வீரர்களும் மதீனமா நகரத்தை நோக்கி நடந்து, மலைகள், குன்றுகள், அருவிகள், வனங்கள், சிற்றூர்கள், வனாந்திரங்கள் எல்லாவற்றையும் கடந்து, ஒரு கொடுமை மிக்க பாலைவனத்தில் வந்தார்கள். அந்தப் பாலை நிலத்தின் தன்மையை இன்னபடி யென்று விவரித்துச் சொல்ல எவராலும் இயலாது. ஆனாலும் கொஞ்சம் சுருக்கிச் சொல்ல வேண்டியது அவசியமானமையால் சொல்லுகின்றோம். அச்சுர நிலத்தில் தண்ணீ ரென்பது ஒரு துளியும் அகப்படாது. தரை முழுதும் பிளந்துள்ள கயர்கள் தோறும் எழும் வெப்ப மிக்க புகையின் கொடுமையால், ஆகாயத்தில் பறக்கும் அந்த நிலத்துப் பறவைகள் கரிந்து விழும். நிமிர்ந்தோங்கிக் கரிந்து நிற்கும் முள் விருக்ஷங்களின் நிழல்களில் ஒதுங்கக் கருதி விஷமிக்க சர்ப்பங்கள் ஊர்ந்து செல்லுகையில், உஷ்ணத்தால் வெந்து மடிந்து போவதால், அவற்றின் இரத்தினங்கள் அகந்தம் பரவிக் கிடக்கும். பச்சென்ற சிறுபூண்டின் ஒரு நுண்ணிலையை யாவது அங்கே காண்பது மிகவும் அரிது. கானலால் கரிந்து போன கள்ளிகளும், முட்செடிகளும், விருக்ஷங்களுமே அங்கங்கே நிற்கும். அவற்றின் நிழலில் தங்க பிராணிகள் ஒன்றும் அங்கில்லை. தரையி லெழும் உஷ்ணம் ஆகாயத்தி லெழுவதால், மேகஜாலங்கள் அத்தரைக்கு நேராக என்றும் வருவதில்லை. நீர்த்துளியை யறியாத அச்சுர நிலத்தில் பிசாசுகள் கூடக் குடியிருக்க அஞ்சி வேறிடங்களுக்குச் சென்றன. இன்னும் சொல்லரிய கொடுமை மிக்க இப்பாழ் சுரத்தில் நபி நாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் நடந்தார்கள். அந்நிலத்தின் கொடுமையால், அஸ்ஹாபிக ளனைவரும் நாவுகள் உலர்ந்து, வாய்நீர் வறண்டு, முகங்கள் கருகி மேனி வாடி மிக வருந்தினார்கள். குதிரை முதலான வாகனங்களும் மிகத்துன்ப முற்றுத் தயங்கின. இவ்வாறு கொடுமை மிக்க அந்தப் பாலை

நிலத்தில் பரிதபிக்கத் தக்க விதமாய் அஸ்ஹாபிக ளெல்லாரும் நபி நாயகம் (ஸல்) அவர்களைத் தொடர்ந்து நடந்து, அச்சுரத்தைக் கடந்து, அதற்கடுத்துள்ள மரங்களடர்ந்த ஒரு வனத்தில் வந்து கொடிய பாலையில் நடந்து தவித்து இளைப்பாறுவதற்காக வேண்டி வாகனங்களை யெல்லாம் மரத்து அடிகளில் கட்டி விட்டு மரநிழல் தோறும் துணிகளை விரித்துக் கொண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் படுத்து அயர்ந்து தூங்கினார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் மேற்படி வனத்தில் தரையிற் படுத்து சுரத்தில் நடந்த களைப்பில் அயர்ந்து நித்திரை செய்கையில், அந்தத் தானத்திற்குச் சமீபமா யுள்ள ஒரு சிற்றூரில் வசிக்கும் காபிர்களில் பாதகனாகிய தறுகண்ணனொருவன், தன் இனத்தாரை நோக்கி “இப்போது முஹம்மது உடைய சேனை மதீனாவை நோக்கித் திரும்பி போகின்றது அதில் முஹம்மதும் கூடவே யிருப்பதால், நான் மாத்திரம் தனியே போய் அவர்களைத் தேடிப் பிடித்து, எவ்வித உபாயத்தினாலாவது முஹம்மதைக் கொன்று விட்டு வருகிறேன்” என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, அச்சிற்றூரை விட்டுப் புறப்பட்டு, பலதானங்களையும் கடந்து நபி நாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் நித்திரை செய்யும் வனத்திற்கு வந்தான்.

மேற்படி கொடியவன் வனத்தில் வந்து பார்த்து அனைவரும் அயர்ந்து தூங்குவதைக் கண்டு, அரவங் காட்டாமல் நபி நாயகம் (ஸல்) அவர்களைத் தேடிக் கொண்டு வந்தான். நபி நாயகம் (ஸல்) அவர்களும் தங்கள் வாளை அருகிலுள்ள ஒரு விருக்ஷத்தில் சாத்தி வைத்து விட்டுத் தூங்கினதால் அவன் அங்கு வந்து நின்று கொண்டு, முஹம்மது பிரக்ஞை யின்றித் தூங்குவதால் அதோ அருகி லிருக்கும் வாளையே யெடுத்துக் கொன்று விடலா மென்று கருதி, நபி நாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற வாளை யெடுத்துத் தன் கையிற் பிடித்துக் கொண்டு, சமீபத்தில் நெருங்கினான். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் திடீரென்று நித்திரை தெளிந்து விழித்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் விழித்துக் கொண்டதை மேற்படி பகைஞன் கண்டு சிறிதும் அஞ்சாமல் நின்று கொண்டு, அவர்களை நோக்கி “முஹம்மதே! இப்போது

என் கையி லிருக்கும் இந்த வாளால் உன்னை நான் இரு துண்டாக வெட்டிப் போடுவேனே, அப்படி வெட்டாமல் என்னை யார் வந்து தடுக்கமுடியும்?” என்று துணிந்து கேட்டான். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவனை நோக்கி “இங்கே வா. என் வாள் உன் கையில் அகப்பட்டுக்கொண்டது; அன்றியும், எனது தோழர்களனைவரும் அயர்ந்து தூங்குகின்றார்கள். அதனாலேதான் இவ்விதம் நீ துணிந்து சொல்லுகின்றாய். நீ சொன்னபடி என்னை வெட்டுவா யானால், மகத்தான அல்லாஹுதஆலா ஒருவனே என்னைகாத்துக் கொள்வானன்றி மற்றொருவருமில்லை” என்று விடை பகர்ந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படிச் சொன்ன மாத்திரத்தில், அவன் பிடித்திருந்தவாள் தானாகக் கையைத் திருகிப் பறித்துக்கொண்டு நிலத்தில் விழுந்தது. உடனே அந்த வாளை நபிநாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துக்கொண்டு, அவனைநோக்கி “ஏ! காபிர்! இனி நான் உன்னை இந்த வாளால் வெட்டுவேனே, அதைத்தடுப்பவர் யார்?” என்றார்கள். அப்போது மேற்படி பகைவன், தன் கையிலிருந்த வாள் அற்புதமாய்ப் பறிபட்டுக் கீழே விழுந்ததையும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொல்வதையும் அறிந்து திடுக்கிட்டுப் பதறி, நான் செய்த தீவினை யனைத்தும் ஒன்றாய்த் திரண்டு என்னைப் பிடர் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்து இங்கு விட்டது என்று மனம் ஏங்கித் தடுமாறி, நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்து நின்று சொன்னான் :—

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

அறத்தின் மிக்க வருட்கட லையனே
குறித்திடாது குறைமொழி பேசிமுன்
செறுத்து நின்றவெந் தீமைய னியானினி
மறத்து ரைப்பவும் வாயுமுண் டாகுமோ.

படிபி டித்திடப் பாய்பரி யேவிழு
னிடர்வி ளைத்தசு ரூக்கத் தெனுமனக்
கொடியன் றீமை பொறுத்தருள் கொற்றவ
வடியன் செய்பிழை யும்பொறுத் தாட்கொள்வாய்.

வசனம்.

"புண்ணியக்கடலே! பொறுமைசமுத்திரமே! கருணாலயமே! அடியேன் இப்போது எதிர்த்துப் பேச வாயில்லை. ஆனால்; தேவரீராகிய தாங்கள் முன் சுறுக்கத் என்பவன் அடுத்தடுத்து விளைத்த தீமைகளையெல்லாம் பொறுத்து, அவனுக்குக் கிருபை செய்து இரக்ஷித்தீர்கள். அதை நான் அறிவேன். அதுபோல அறிவற்ற நான் சிந்தனையின்றி செய்த இந்தப் பிழையையும் பொறுத்து என்னை ரக்ஷிப்பதும் தங்கள் பாரமே. இந்தவேளையில் என்னை ஆதரிப்பது தங்களல்லாமல் வேறே ஒருவருமில்லை" என்று சொல்லி இரு பாததாமரைகளிலும் விழுந்தான். மனம் அஞ்சி நாக்குளறி, தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி பிரார்த்தித்துப் பாதங்களில் வீழ்ந்த பகைவனை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து, அவனுக்கு அபயம் கொடுத்து அஞ்சாதிருவென்று இருத்திக் கொண்டு, நித்திரை புரியும் அஸ்ஹாபிகள் எல்லாரையும் எழுப்பி நடந்த வரலாறுகளை சொல்லிக் காட்டினார்கள். பாதகம் செய்யத் துணிந்து இவன் சிக்குண்ட புதுமையைகேட்ட அஸ்ஹாபிகளெல்லாரும், இவன் மாற்றார்களால் அனுப்பப்பட்டவனென்று அறிந்து நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கிக் கீழ் வருமாறு சொன்னார்கள்:—

"யாறஸூலல்லாஹ்! அடைக்கலம் புகுந்த நறபு, அபிருபிக் என்னும் சண்டாளர்கள் பின் செய்த தீமைகளைத் தாங்கள் நினைத்துப் பார்க்க வில்லையா? மதங்கொண்ட யானையையும், விஷமிக்க சர்ப்பத்தையும், கபடமுள்ள ஸ்திரீகளையும், துரோகமிக்க சத்துருக்களையும் சூழ்ந்தறிவது மிகக் கஷ்டமென்பது தாங்கள் அறியாத விஷயமா? பகைவர்கள் மனம் வேறு, வாக்கு வேறாய்த்தானே யிருப்பார்கள். அவர்கள் இருதயத்தில் ஒன்றை யமைத்துக்கொண்டு, பகிரங்கத்தில் வேறு விஷயத்தைக் காட்டி, கொண்ட கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளுவார்கள். பகை மிதிர்த்து பழிசாதிக்குமாறு துணிந்து வருவார்கள். ஆற்றாதபோது மிகத் தாழ்ந்து இதம் பேசி தப்பிக் கொள்ளுவார்கள். அவர்கள் எவ்வாறு தாழ்ந்து அன்பு பாராட்டி, அஞ்சினவர்களாய்க் காணப்பட்ட போதிலும், நாம் அவர்கள் சொல்லை நஞ்சாகத்தான் பாவிக்கவேண்டும். இந்தப் பாதகனும் அப்பகைவரில் ஒருவன்தானே. ஆனபடியால் இப்போது

இவனைத் தப்பிவிடக் கூடாது; கொன்றே விடவேண்டும்" என்றார்கள்.

அஸ்ஹாபிகள் இப்படிச் சொன்ன போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, அஸ்ஹாபிகளை நோக்கி "எனது அரிய தோழர்களே! நீங்கள் சொல்லுவதனைத்தும் வாஸ்தவந்தான்; ஆனாலும், கொலைத்தொழில் பயின்ற பகைவர்கள் நம்மைக் கொன்றுபோடத் துணிந்துவந்து, பின்னர் அஞ்சி அபயமென்று வணங்கி வழிக்கு வருவார்களானால், அவர்களைக் காப்பது பாதகமல்ல. நம் சமூகத்தில் நிராதரனாய் நின்று பச்சாதாபப்பட்டு மன்னிப்பு கேட்கும் இவனை இப்போது நாம் கொல்லுவதில் என்ன இலாபம்? அதனால் நமக்கென்ன வெற்றியா உண்டாம்? மதிகெட்ட மாற்றார்கள் வகை மோசமாய் நம் கைப்பட்டபோது அவர்களை அபயம் கொடுத்து ஆதரித்தால், யுகாந்தம்வரையும் கீர்த்தியுண்டு. அன்பென்னும் பயிருக்கு ஆதாரமான வேலியும், துன்பத்திற்கு அருமருந்தும் பொறுமையேயன்றி வேறல்ல. கல்வி கேள்விகளால் சிறந்து விளங்கும் எவ்வித மேன்மை பெற்ற மாகாத்மாக்களிடத்திலும் பொறுமை என்பது இல்லையானால், சிறிதும் விளங்கமாட்டார்கள். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் கீர்த்தியும் நாளடைவில் தேய்ந்து போகும். தீமைமிக்க சண்டாளர்கள் செய்யும் குற்றங் குறைகளைப் பொறுத்து மீளவிடுவோமானால், ஒருகால் அவர்கள் திருந்தி வழிக்கு வந்தாலும் வருவார்கள். நாம் இப்போது மகத்தான அல்லாஹு தஆலா வுக்காக வேண்டி இவன் செய்யத்துணிந்த அதிக்கிரமத்தை மன்னித்துவிட்டு விடுவோமானால் அதற்குப் பின் இவன் ஏதும் நம்மளவில் விக்கினம் செய்யத் தலைப்படும் பக்ஷத்தில், அவ்விக்கினம் இவனையே சூழ்ந்து கொல்லும்; அதைப் பிந்திகண்டறியலாம்" என்றுசொல்லி மேற்படி பாதகனை போய்விடும்படி கட்டளை செய்தார்கள்.

இடையில் ஆபத்து உண்டுபண்ண வந்த பாதகனை மன்னித்து விட்டுவிட்டு, மேற்படி வனத்தைவிட்டு, அஸ்ஹாபிகளோடு மதீனமாநகரத்தை நோக்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள். வீரர்களைச் சுமந்த குதிரைகளும், ஒட்டகங்களும், சாமான்களைச் சுமந்த எருதுகளும், கோவேறுக் கழுதைகளும் அணியணியாக வர, வெற்றிக்கொடி முன்செல்ல, இருலோக ரக்ஷகரான நபிகள்திலகம்

முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் சேனை மதீனமா நகரத்தை நோக்கி வந்தது. அப்படி வரும்போது, அஸ்ஹாபிகளில் ஒருவராகிய சாபிர் (றலி) மற்ற அஸ்ஹாபிகளோடு கூடி வராமல் மிகப் பிந்தி தனித்து மெள்ளமெள்ள வருவதை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அவர் வரும்வரையும் தங்கள் குதிரையை நிறுத்திக்கொண்டு நின்றார்கள். பிறகு அவர் நெருங்கி வந்தபோது, அவரை நோக்கி, "சாபிரே! நீர் சேனையோடு கூடி வராமல் தாமதமாய்ப் பிந்திவரும் முகாந்திர மென்ன?" என்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் ஏறி வந்த ஒட்டகத்தைவிட்டு இறங்கி நின்றுகொண்டு நபிநாயகம் அவர்களை நோக்கி, "யாறஸூலல்லாஹ்! நோயால் வாடி மெலிந்து, வயது முதிர்ந்து வரடுகொண்டு தளர்ந்துபோன எனது ஒட்டகம் விரைந்து நடவாமல், தாமதமாய் நடப்பதாலேதான் நான் பிந்தினேன். வேறு முகாந்திரம் ஒன்று மில்லை" என விடைபகர்ந்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் குதிரையை விட்டு கீழிறங்கி, அந்தக்கிழ ஒட்டகத்தை யடுத்து, அதன் மூக்கணக்கயிற்றைப் பிடித்து இழுத்துவிட்டு சாபிரை நோக்கி, "இப்போது ஏறி நடத்தும்" என்று உத்தரவு செய்தார்கள். உடனே சாபிர் (றலி) தமது ஒட்டகத்தில் ஏறினார். அந்த ஒட்டகம் முன்னிருந்த நோய், வரடு, கிழடு, மெலிவு எல்லாம் நீங்கி, உடல் பூரித்து இளம்பருவ முற்று மிகவிரைவாய் நடந்தது. அஸ்ஹாபிகள் ஏறி நடத்தும் மற்ற ஒட்டகங்கள், குதிரைகள் எல்லா வாகனங்களுக்கு முந்தி சாபிர் (றலி) உடைய ஒட்டகந்தான் நடந்தது. பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் குதிரையி லேறிக்கொண்டு சேனையை நடத்திக்கொண்டு, சொற்ப தினத்தில் மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் முதலான அஸ்ஹாபிகள் எல்லாரும் படுத்து நித்திரை செய்த அந்த வனத்திலிருந்து புறப்பட்ட பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்களால்மன்னித்து விடப்பட்ட மேற்படி காபிர், தான் மீட்சி பெற்று போகும்போதே சந்தோஷ சாகரத்தில் மூழ்கி, தன் மனத்தில் நிறைந்துள்ள குபிர் என்னும் அந்தகாரத்தை ஆராய்ச்சி என்னும் கிரணத்தால் அறுத்து விலக்கி, இஸ்லாம் என்னும் வித்தை யூன்றி, ஈமான் மேல் இச்சைகொண்டு விரைவாய்த் தனது நகரம் சேர்ந்து

தன் பந்துக்களையும் மக்களையும் துணைவர்களையும் அழைத்து இருத்தி, அவர்களை நோக்கிப் பின்வருமாறு சொன்னான்:—

"எனக்கு உரிமைக்காரர்களான பிரியமுள்ள ஜனங்களே! நான் சொல்லப்போகிற உத்தம வசனங்களைக் கவனத்தோடு கேளுங்கள். நான் முஹம்மது நபியைக் கொலைசெய்து போடுகிறேனென்று இங்கே சொன்ன பிரகாரம் பிரயாணப்பட்டு, அநேக தலங்களைக் கடந்துபோய், ஒரு அடவியில் கண்டுபிடித்தேன். நான் கண்டபோது முஹம்மது நபியும், அவர் அஸ்ஹாபிகளும் அயர்ந்து நித்திரை செய்தார்கள். அதை நான் அறிந்து, இதுதான் சமயமென்று முஹம்மது நபி துயிலும் தானத்தில் சென்றேன். அவர் தமது வாளை அருகிலுள்ள ஒரு விருக்ஷத்தில் சாத்தி வைத்துவிட்டு நித்திரைசெய்தார் நான் அந்த வாளை யெடுத்துப் பிடித்துக் கொண்டு, அவரை வெட்டுவதற்காக நெருங்கினேன். அப்போது அவர் திடீரென்று விழித்துக்கொண்டார். தேடியபூண்டு காலிடைபட்டதுபோல, முஹம்மது நபியும் அவர் வீரர்களும் துயில் செய்யக் கண்டவுடன் நான் ஆனந்தங்கொண்டு கொல்லத்துணிந்தபோது, அவர் விழித்துக்கொண்டு என்னை உற்று நோக்கினார். அப்போது நான் அவரைப்பார்த்து, "முஹம்மதே! இப்போது இந்த வாளால் நான் உம்மை வெட்டுவேனே, என்னைத் தடுப்பது யார்?" என்றேன். அதற்கு அவர் என்னை நோக்கி தற்காலஸ்திதியைக்குறித்து சொல்லி "என்னைக் காப்பது அல்லாஹு தஆலாவே யன்றி வேறொருவருமில்லை" என்றார். அவர் இப்படிச்சொல்லி வாய் மூடுமுன் என் கையிலிருந்தவாள் தானாகத்திருகிக்கொண்டு நிலத்தில் விழுந்தது. அப்படி விழுந்தவாளை அவர் தம் கையிலெடுத்துப் பிடித்து, என்னை பார்த்து, "இப்போது உன்னை நான் இந்த வாளால் வெட்டுவேனே, என்னைத் தடுப்பவர் யார்?" என்றார். அதைக்கேட்ட மாத்திரத்தில் நான் திகில்பிடித்து, அவருடைய பாதங்களில் விழுந்து, நான் செய்த குற்றத்தை மன்னித்து இரக்ஷிக்க வேண்டுமென்று மன்றாடினேன். நான் செய்யத்துணிந்த பாதகத்திற்காக அவர் என்மேல் சினங் கொள்ளவில்லை. பக்ஷம் வைத்து இரங்கி என்னை மன்னித்தார். அவருடைய அஸ்ஹாபிக ளனைவரும் விழித்து, நடந்த வர்த்தமானத்தைக்கேட்டு, என்னைக்கொன்று விடவேண்டு மென்று ஒரேபிடியாய் நின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அவரே சமாதானஞ்

சொல்லி வெகுவாப்ப பிரசங்கித்து, அவர்கள் கொண்ட எண்ணத்தைத் தவிர்த்து, தப்பிக்கொண்டு போகும்படி என்னைவிட்டு விட்டார். ஜனங்களே! நான் செய்யத்துணிந்த மகாபாதகமான குற்றத்தைச் சிறிதும் பாராட்டாமல் பொறுத்து, எனக்கு இரங்கி, குளிர்மொழியால் உபசரித்து மீண்டுபோக விட்டது ஆச்சரியமல்லவா? இக்குணம் மகாத்மாக்களுக்கன்றி மற்றவர்களுக்கு உண்டா? அத்தருணத்தில் நான் கொண்டிருந்த மனக்கலக்கத்தையும், பயங்கரத்தையும் தவிர்த்து உதவி செய்த அந்த முஹம்மது நபிக்குப் பிரதி செய்ய நான் எம்மாத்திர மனிதன்? தீமை செய்தவர்கள் தீமையையும், நன்மை செய்தவர்கள் நன்மையையும் அனுபவிப்பார்களென்னும் பிரமாணத்தை, அந்த ஸ்தானத்தில் நான் எடுத்துப் பிடித்தவனே எனக்குத் தெளிவா யுணர்த்திற்று. விவேகம், அவிவேகம் என்னும் இரண்டுக்குமுள்ள வித்தியாசம் இன்னதென்பதை நான் பிரத்தியக்ஷமாய்க் கண்டு கொண்டேன். குணத்தினாலும், சாந்தத்தினாலும், தமக்கு நிகரில்லாத அந்த முஹம்மதை, கடவுளுடைய தூதரென்றும், ஆத்மலாபந்தரவந்த நபியென்றும் சொல்லி வழிபடுவதற்கு சந்தேகமேயில்லை. அவர் நபிதான் என்பதற்குப் பல குறிகள் அவரிடத்தில் விளங்குகின்றன. அவர் வசனிக்கும் மதுரமான வாய்ச்சொல்லைக் கேட்கும் எவரும் அவருக்கு வழிப்பட மனம் பதறுவார்கள். அவரொருவர் இல்லாவிடில் சிருஷ்டிகள் ஒன்றும் இராதென்று நாம் சத்தியம் பண்ணுவேன். இவ்வுலகம் நடைபெறுவதெல்லாம் அவர் பொருட்டாலன்றி மற்றபடியல்ல. அவருக்கு வழிப்படாத வானவர்களும் நரகவாதனையை அனுபவிப்பார்களென்பது வாஸ்தவம். அப்படியானால், ஏழை மனிதராகிய நாம் அவரை வழிப்படாமலிருப்பது என்னமதி? வேறே எவ்விதந்தான் நமக்கு மோக்ஷம் கிடைக்கும்? தமக்கு ஒப்பில்லாத அந்த நபி மனங் குளிர்ந்து நோக்குவாரானால் இவ்வுலகங்கள் செழிக்கும்; அப்படியன்றி சிறிது வெகுண்டு நோக்கினால், எல்லாம் கரிந்து சாம்பலாம். அவர் நல்ல விஷயமென்பது எவ்வளவோ அவ்வளவும் ஒருங்கு திரண்டு மானிடவடிவெடுத்தவர். அவருக்கு வழிப்படாத எவ்வகை மனிதர்களும் ஊழி ஊழிகாலம் வரையும் துன்ப சகிதராய்ப் பிடிக்கப்பட்டுக் கெடுவார்கள். ஆனபடியால், நாம் இப்போதே புறப்பட்டு மதீனமாநகரம்போய், அவருடைய பாதங்களில் விழுந்து

கலிமா சொல்லிக் கீழ்ப்படியவேண்டும். இதுதான் உத்தமமான செய்கை; இல்லாவிடில், நாம் இம்மையில் பலவாறு வருந்திப் பாழாவது மாத்திரமல்ல, மறுமையிலும் பலகஷ்டங்களை மீட்சியின்றி அனுபவிக்கவேண்டும்" என்றான்.

கண்டகாட்சியால் மனந்திரும்பி ஆத்மரக்ஷைபெற்ற அவன் இப்படிச்சொல்லி முடித்தபோது, இச்சொற்களனைத்தும் அவனைச் சேர்ந்தவர்களாய் அங்குக்கூடியிருந்த எல்லோர் மனங்களையும் உருக்கின. ஆகையால், அவர்களெல்லாரும் மேற்படி அறபியின் சொல்லுக் கிசைந்தார்கள். உடனே அனைவரும் திரண்டு மதீனமாநகரத்திற்குப் பிரயாணமாவதற்காக, வேண்டிய கருமங்களையெல்லாம் சித்தம் செய்துகொண்டு, தங்கள் ஊரைவிட்டும் பிரயாணப்பட்டார்கள். பிரயாணமான அனைவரும் சொற்ப தினங்களுக்குள் மதீனமாநகரம் வந்து சேர்ந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் திரண்டு கூடினார்கள். எல்லாரையும் அழைத்துக் கொண்டு வந்த அவர், நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாதங்களில் விழுந்து பணிந்து நின்று, நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் சொல்லிக் காட்டினார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமடைந்து, அவருக்கும் அவரது ஜனங்களுக்கும் மோக்ஷலாபந் தரும் திருமந்திரமாகிய கலிமாவைச் சொல்லிக்கொடுத்து இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டார்கள்.

ஈமான்கொண்டு, முஸ்லிமான அவர்கள் எல்லாரும், சிலநாள் வரையும் மதீனமாநகரத்தில் தங்கியிருந்து, ஈமான் இஸ்லாம் என்னும் இருவகைக் கருமங்களிலுமுள்ள விதிவிலக்குகளையும், பிறவிபந்தனைகளையும் தெளிவாய்க் கற்றுத்தேறி, பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, மதீனமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு மலை, வனம், வனாந்திரங்களெல்லாவற்றையும் கடந்து, தங்கள் ஊர்போய்ச் சேர்ந்து க்ஷேமமாய் வாழ்ந்திருந்தார்கள்.

88-வது அத்தியாயம்.

சாபிர் கடன் தீர்த்தது.

கலி விருத்தம்.

காபிர் தங்கள் கருத்தழி யப்படைப்
பாபி யோரைப் படியில் வதைத்துயர்
சோபி தங்கொளுக் துங்கமு ஹம்மதர்
சாபி ரின்கடன் தீர்த்ததைச் சாற்றுவோம்.

இதன் பொருள்.

காபிரானவர்களுடைய மேலான எண்ணங்களெல்லாம் அழியும்படியாய், அவர்களின் பாபிப் படையினர்களைப் பூமியினிடத்தில் வெட்டிக் கொன்று, உயர்ந்த சவுந்தரீகம் பொருந்தும் வெற்றி நாயகமான முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், சாபிரென்னும் ஸஹாபியானவர் பிறருக்குக் கொடுக்க வேண்டிய கடனை தீர்த்ததைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அனையவர் போய பின்ன ராசவத் தொடையல் வேய்ந்த
பணிவரை யனைய தோளார் பகைதடிக் திலங்கும் வேலார்
தனிமழ வரியே றன்னார் சாபிரென் றோதுந் தக்கோர்
நனிபுகழ் தழுவி நின்ற நபிமுனம் வந்து சொல்வார்.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் சபையில், அஸ்ஹாபிகளி லொருவராகிய சாபிர் (றலி) ஒரு நாள் வந்து ஸலாம் சொல்லி நின்று, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! எனது தகப்பனார் சில காலத்திற்குமுன் இவ்வூரிலுள்ள யூதர்களிடத்தில் அறுபது கலம் ஈத்தம் பழம் வட்டிக்கு வாங்கினார். அவர் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கு முன் இறந்துபோனதால், கடன் கொடுத்த மேற்படி யூதர்கள் என்னை யடுத்து, அந்தக்கடனைக் கொடுக்கும்படி கேட்டார்கள். அதற்கு நான் அந்த யூதர்களைப்பார்த்து, "முதலும் வட்டியும் கொடுக்க இப்போது என்னிடத்தில் சிர்வாகமில்லை. ஆகையால், வட்டியைத் தள்ளிவிட்டு முதலை மாத்திரம் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னேன். அதற்கு அவர்கள் இசையாமல், வாங்கும் போது பேசினபிரகாரந்தான் தர வேண்டுமென்று கடிந்து கேட்கின்றார்கள். என் தோட்டத்தில் இந்த வருஷத்துப்பலனும் குன்றிவிட்டது. கொடுக்கவேண்டிய முதலும் வட்டியும் நூற்றைம்பது கலமாயின. இதில் கொஞ்சமாவது குறைக்கமாட்டேனென்கிறார்கள். நான்கு வருஷமானாலும் கொடுத்து முடியாது. ஆனபடியால், தேவரீர் தயவுகூர்ந்து இதற்கொரு உதவி செய்து கடனுடைய வில்லங்கத்தி லிருந்து என்னை மீட்டவேண்டும்" எனப் பரிந்து சொன்னார். சாபிர் சொன்னசொல்லை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, கடன் கொடுத்த மேற்படி யூதர்களை அழைப்பித்து, அவர்களைநோக்கி, "நீங்கள் தயவு செய்து வட்டியைத் தள்ளிவிட்டு முதலைமாத்திரம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்கள். அதற்கும் அவர்கள் மறுத்து விட்டார்கள்.

பிறகு சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் சாபிர் (றலி)யை அழைத்துக் கொண்டு அவருடைய தோட்டத்திற்குச் சென்று, சாபிரை நோக்கி "நீர் தருக்கள் தோறும் உள்ள கனிகளை யெல்லாம் பறித்து அந்தத் தருவின் கீழே குவியும்" என்று கட்டளை பண்ணினார்கள். அவர் அப்படியே பறித்துக் குவித்தார். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி யூதர்களை யழைத்து, உங்கள் கடனைக் கணக்கின்படி அளந்து எடுத்துக் கொள்ளுங்களென்று சொன்னார்கள். உடனே அவர்கள் நூற்றைம்பது கலம் அளந்துகொண்டு போனார்கள். அவ்வளவு அளந்து கொண்டும், குவித்த குவியலில் ஒரு கனியாவது குறையவில்லை. அதனால் சாபிர் (றலி) ஆச்சரியமுற்று, அகங்களித்து, மேற்படி பழங்களை யெல்லாம் அள்ளிக் கொண்டு மனைக்குச் சென்றார்.

பார்த்தபோது, தங்கள் மனைவிமார்களில் விசேஷமானவரும் அபூபக்கர் (றலி) அவர்களின் செல்வப் புதல்வியும் உலகமாதாவுமாகிய மகிமை மிக்க ஆயிஷா (றலி) அவர்களின் திருநாமம் வந்தது. ஆகையால், ஆயிஷா (றலி) அவர்களும் அநேக பாங்கிகளும் குற்றேவலாட்களும் புடைசூழ நபிநாயகம் (ஸல்) அவர்களோடு புறப்பட்டார்கள்.

வீரதீரத்திற் சிறந்த அஸ்ஹாபிகளில் அநேக குதிரை வீரர்களும் காலாட்களும் ரணபேரிகை முழங்க, விருதுகள் பிடிப்பட்டு நிற்க, தக்பீர் ஓசை செவியதிரத் தொனிக்க எழுந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அசுவத்தின் மேல், கருமேகக் குடையின் கீழ் உக்காபு என்னும் வெற்றித் துவஜம் முன் செல்ல, கலிமா முழங்க, அருகர் நால்வரும் அருகில் வரப் புறப்பட்டார்கள். ஆயிஷா (றலி) அவர்களும், அநேக பெண்களும் சேனைக்குப் பின்னணியிலானார்கள். இவ்வித அலங்காரங்களோடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, முறைஸிக் நகரத்தை நோக்கிச் சேனையை நடத்திச் சென்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் ராணுவம் தாவடி போகும் போது அத்திசைகளிலுள்ள காபிர்களெல்லாரும் அஞ்சி நடுநடுங்கி, குடிபெயர்ந்து போனார்கள். இவ்வாறு நபிநாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளாகிய சேனை வீரர்களும், மலை, வனம், வனாந்தரம், ஆறு, அருவி, சிற்றூர் எல்லாம் கடந்து விரைவாய் நடந்து, சொற்ப தினங்களுக்குள் மேற்படி முஸ்தலிக் கூட்டத்தார் வசிக்கும் முறைஸிக் நகரத்தை யடுத்து, அந்நகரத்திற்கு நெருக்கத்தில் பாளைய மிட்டார்கள். அஸ்ஹாபிகளாகிய ரண வீரரனைவரும் கூடாரங்களமைத்து, குதிரை லாயங்களும், மற்றவாகன சாலைகளும், சாமக்கிரிகைகள் வைக்கும் பர்னசாலைகளும் நியமித்து, வெகு மனோதிரத்தோடு தங்கி யிருந்தார்கள். இவர்கள் இப்படி பாளைய மிறங்கினவுடன், முஹம்மது நபி தமது சேனை வீரர்களோடு வந்து, நமது நகரத்திற்கு வெளிப் புறத்தில் வந்து பாளையமிட்டிருக் கின்றாரென்று சில ஒற்றர்கள் சென்று மேற்படி ஊராராகிய முஸ்தலிக் கூட்டத்தாருக்குத் தெரிவித்தார்கள். இச்சமாசாரம் கேட்டபோதே அக்கூட்டத்தார் எல்லாரும் வெகுண்டு ஒருங்குகூடி கண்களில் தீப்பொறி சிந்த அகங்கோதித்து, உரோமங்கள் சிலிர்த்து, நம்மையும் மக்கிகளென்று முஹம்மதும் அவ்வீரர்களும்

நினைத்துக் கொண்டார்கள்? நல்லதிருக்கட்டும். இதோடே மக்கிகள் கொண்டிருக்கும் கோரிக்கையை நாமே நிறைவேற்றிவிடுவோம். அவர்கள் முந்தி வந்து எதிர்க்குமுன் நாம் எதிர்சென்று போரிட்டு முறியடித்துத் துரத்திவிட்டு, முஹம்மதைக் கொன்று போடுவோமென்று அகங்காரத்துடன் சொல்லிக் கொண்டு, உடனே எல்லாரும் போர்க் கோலந் தரித்து, கொடி, குடை, ஆலவட்டம், சாமரம் என்னும் விருதுகளும், படை முரசுகளும், வாகனங்களும் தயார் செய்து, அண்டம் அதிரத்தக்க வேகத்தோடு திரண்டு ஆர்ப்பரித்து, கோட்டை வாசலை விட்டு வெளிப்பட்டார்கள்.

மாற்றார் தளம் வெகு உக்கிரத்தோடு கோட்டைக்குள்ளிருந்து எதிர்த்து வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, தங்கள் அஸ்ஹாபிகளையும் போர்க்கோலம் புனைந்து எழும்படி கட்டளை பண்ணினார்கள். அப்போதே அஸ்ஹாபிகளாகிய ரணசிங்கங்களெல்லாம் திரண்டு கர்ஜித்து, ஆயுதங்களணிந்து, படை முரசு முழங்க, வெற்றித் துவஜம் பிடித்து, மாற்றார்களென்னும் மதகரித் திரளுக்கு முன்னேறிச் சென்றன. இருசேனையும் ஒன்றையொன்று நெருங்கினபோது, அஸ்ஹாபிகள் பூமியதிரத்தக்க வேகத்தோடு தக்பீர் ஒலித்து, மாற்றார் தளத்தில் விழுந்து கர்னகடூரமாக வெட்டினார்கள். பகைவர்களும் எதிர்த்துத் தாக்கினார்கள்.

அஸ்ஹாபிகள் உக்ரெத்தோடு அடர்ந்து போரிடுவதால் காபிர்களில் அநேகர் கால்கள் அறுப்புண்டும், அநேகர் கைகள் தறிப்புண்டும், அநேகர் கழுத்துத் துண்டிப் புண்டும், அநேகர் குடர்சரிய வயிறுகள் பிளப்புண்டும், அநேகர் முகங்கள் சிதைப்புண்டும், அநேகர் இரண்டாய் வகிருண்டும், அநேகர் உடல் துளைப்புண்டும். அநேகர் மார்பில் குத்துண்டும், அநேகர் முகத்தில் வெட்டுண்டும், அநேகர் தலையில் அடியுண்டும், அநேகர் குதிரைகளால் மிதியுண்டும் அநேகர் கடியுண்டும், அநேகர் மேனி சிதையுண்டும் விழுந்தார்கள். இரத்தம் சோணமாரியாய்ச் சொரிந்து பிரவாகமாய் ஓடிற்று. காபிர்களேறி யிருந்த குதிரைகள் அநந்தம் வெட்டுண்டு மடிந்தன. பின்னும் அஸ்ஹாபிகள் இளைக்காது மேலும் மேலும் அடர்ந்து தாக்கினார்கள். மாற்றார் தளம் அணி குலைந்து, முரசொலி அவிந்து கிடந்தது.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கரமறுந்து மகடறுந்து முதுகறுந்துங்
  களமறுந்துங் கருத்தி னோடு
முரமறுந்தும் பதமறுந்தும் புயமறுந்து
  மருங்கறுந்து மொளிரு மோலிச்
சிரமறுந்து முகமறுந்தும் பிடரறுந்துக்
  குடையறுந்துஞ் சிதைந்து நீண்ட
தரைகிடந்துள் ளுயிர்துறந்து படையெறிந்து
  மாய்த்தனர் போர்த் தலைவர் மன்னோ.

வசனம்.

காபிர்களின் தலைகள் ஒருபுறம், குடல்கள் ஒருபுறம், கால்கள் ஒருபுறம், கைகள் ஒருபுறமாய்க் குவிந்தன. பிரேதங்கள் அனந்தம் உதிரப் பிரவாகத்தில் மிதந்தன. அனந்தம் மலைகளையொத்துக் குவிந்தன. விருதுகளெல்லாம் ஒடிந்து விழுந்தன. முரசுகளெல்லாம் முறிந்து பாழாயின. எண்ணற்ற பகைவர்கள் மடிந்தார்கள்.

அதிதீரத்தோடு போரிடுதலுக்குத் துணிந்து எதிர்த்து வந்த முஸ்தலிக் கூட்டத்தார்களில் எண்ணற்ற வீரர்கள் தங்கள் மனோதைரியத்தையும், தேர்ந்த யுத்தப் பயிற்சியின் தன்மையையும், சரீர வலிமையும், வாளாண்மையும் படுகளத்தில் பாழாக்கி விட்டு மாண்டு போனபடியால், மீந்துள்ள மற்றவர்கள் எதிர்த்து நிற்கத் தைரியமின்றி, ஆற்றாமல் மனந்தளர்ந்து திகில் கொண்டு, முறிந்து நெறி கெட்டு சிலர் நகரத்திற்குள்ளும், சிலர் அடவிகளுள்ளும், சிலர் குகைகளுள்ளுமாய் ஓடியொளித்தார்கள். யுத்தகளமெங்கும் இரத்த மயமும் பிணத்திரளுமாயிற்று. மாற்றார்தளம் முறிந்த போது அநேக வாகனங்களும், விருதுகளும், யுத்தக்கருவிகளும் அஸ்ஹாபிகள் கையில் அகப்பட்டன.

பகைவர்கள் அபஜெயமாகப் பூரணஜெயமடைந்த நபிநாயகம் (ஸல்) அவர்கள் மனமகிழ்ச்சி கூர்ந்து அஸ்ஹாபிகளை மிகவியந்தார்கள். சண்டை தொடங்கிச் சில மணிநேரத்தில் காபிர்கள் முறிந்தோடின படியால், அஸ்ஹாபிகள் இளைக்காது நின்று

போரிட்டு பாடு பட்டதற்காக நபிநாயகம் (ஸல்) அவர்கள் அதிகமாய் புகழ்ந்தார்கள். படுகளமுழுதும் பிணந்தின்னும் விலங்குகளும், பறவைகளும் கூடின. பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையைத்திருப்பிச் சிலரை முறைஸிக் நகரத்தின் அரணுக்கு வெளிப்புறம் முற்றுகை யிட்டிருக்கும்படி கட்டளை பண்ணி விட்டு, மற்றவர்களை நகரத்திற்குள் பிரவேசித்துக் கொள்ளை யிடும் வண்ணம் உத்தரவு செய்தார்கள்.

சரித்திர புராணம்.

வேறு.

அடுத்தார்மறு கிடத்தேமனை யிடித்தார்பணி யாவு
மெடுத்தார்கலை யெடுத்தார்நிதி யெடுத்தார்நக வென்கு
மடித்தாரடி பெயர்த்தாடிய மருக்தேயனு மாவும்
படுத்தார்வெடு வெடுத்தார்சிறை பிடித்தார்மறை படித்தார்.

வசனம்.

அந்த உத்தரவின் பிரகாரம் அஸ்ஹாபிகளில் அநேகர் முறைஸிக் நகரத்திற்கு புகுந்து பகைவர்வணங்கும் ஆலயங்களையும், வசிக்கும் சிறந்த மாட மாளிகைகளையும், உன்னதமான கோபுரங்களையும், கண்ணுக்கு அலங்காரமான மற்ற கட்டிடங்களையும் இடித்துத் தூளாக்கி, அவற்றிலுள்ள திரவியங்களையும் பண்டங்களையும் வாரினார்கள். அன்றியும், அழகிய வாலிபப்பெண்கள் எண்ணில்லாதவர்களையும் சிறுபிள்ளைகளையும் சிறையாகப் பிடித்தார்கள். அஸ்ஹாபிகள் செய்த உக்கிரத்தினால், பகைவர்கள் வசித்த அந்த நகரம் பாழாயிற்று. அநேக வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. அநேக காபிர்கள் அங்கும் சங்கரிக்கப்பட்டார்கள்.

அஸ்ஹாபிகள் முறைஸிக் நகரத்தை இவ்வாறாக்கி விட்டு கொள்ளையிட்ட சொத்துகளையும், வாகனங்களையும் பிடித்த சிறைகளையும் கொண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் சேர்த்தார்கள். அதைக்கண்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆனந்தமடைந்து அஸ்ஹாபிகளை ஆசீர்வதித்து, கொள்ளைப் பொருள்களைப் பொதிகளாக்கி வாகனங்களில் ஏற்றுவித்து, பிடிபட்ட சிறைகளையும் நடத்திக் கொண்டு தங்கள் ராணுவத்தோடு மேற்படி முறைஸிக்கை விட்டுப் புறப்பட்டு, மதினமா நகரத்தின்

வழியைத் தொடர்ந்து வந்தார்கள். அன்று மாலைப் பொழுதில் நபிநாயகம் (ஸல்) அவர்களின் ராணுவம் புயிதா என்னும் வனாந்திரத்திற்கு வந்தது. மேற்படி, புயிதா என்னும் வனாந்திரம் சுரமில்லாமையால் ஒருதுளி ஜலமாவது அங்கே கிடைப்பது மகா பெரிய கஷ்டமாயிருந்தது.

மேற்படி புயிதா வனாந்திரத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்களும், அவ்ர்கள் சேனாவீரர்களும் வந்த போது முன் மதீனமாநகரத்திலிருந்து சேனைபுறப்படும் தருணத்தில் உலக மாதாவாகிய ஆயிஷா (றலி) அவர்கள் தங்கள் தமக்கையாகிய அஸ்மா (றலி) இடம் இரவல்வாங்கி அணிந்து வந்த மணிவடம் அறுந்து விழுந்து விட்டது. சூரியன் அஸ்தமித்து இருளான பின், கழுத்தில் அணிந்திருந்த மணிவடத்தைக் காணாமையால் ஆயிஷா (றலி) அவர்கள் திடுக்கிட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் தெரிவித்தார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்களும், மற்றவர்களும் மேற்படி மணிவடத்தைத் தேடினார்கள். நெடுநேரம் வரையும் தேடியும் அது அகப்படாமையால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "நாம் இன்றிரவு இங்கே தாமதித்திருந்து, சூரியன் உதித்த பின் மணிவடத்தை தேடி எடுத்துக் கொண்டு தான் போகவேண்டும். ஆகையால், எல்லாரும் தங்குங்கள்" எனக் கட்டளையிட்டார்கள். அப்போது அஸ்ஹாபிகளெல்லாரும் அந்த மைதானத்தில் மூலைகளை அறைந்து வாகனங்களைக் கட்டிவிட்டுத் தங்கியிருந்தார்கள். பின்னிரவரையும் விழித்திருந்தபடியால் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு நித்திரை மயக்கம் வந்து தங்கள் பிராண நாயகியாராகிய ஆயிஷா (றலி) அவர்களின் மெல்லிய துடையில் சிரஞ்சாய்த்து நித்திரை செய்தார்கள். பிறகு அஸ்ஹாபிகளிலும் அநேகர் படுத்து உறங்கினார்கள்.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் தாங்கள் நித்திரை கொள்ளுமுன் சூரியன் உதயமாகும் வேளையாயிற்று; மணிவடமும் அகப்படவில்லை. பஜ்று வேளையானால் உழுசெய்ய இங்கே தண்ணீர் கிடைக்காது, இதற்கு என்ன செய்வோமென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தே துயின்றார்கள். பின்பு கிழக்கு வெளுத்தது. அப்போது, அபூபக்கர் (றலி) அவர்கள் தங்கள் மகளாரிடம் வந்து "ஆயிஷாவே, உம்மாலல்லவா நாம் இந்த வனாந்தரத்தில் தங்க நேர்ந்தது? இனிப்பொழுது விடிந்து போமே, பஜ்றுத் தொழ உழுவுக்குத் தண்ணீர் இங்கு அகப்படாதே. நபிநாயகம் (ஸல்) அவர்களும், மற்றவர்களும் பஜ்று தொழாமல் தடைப்பட்டிருப்பதற்கு முகாந்திரம் நீயல்லவா? உமது அறிவு ஏன் இப்படியாயிற்று?" எனக் குறைகூறினார்கள். அங்கே தண்ணீர் கொஞ்சமும் இல்லாமையால், அஸ்ஹாபிகள் மிக வருந்தினதுமன்றி குதிரையாதி வாகனங்களும் தாகத்தால் நாவுலர்ந்து தவித்தன. பிறகு சூரியன் உதிக்கும் வேளையாயிற்று. நபிநாயகம் (ஸல்) அவர்கள் நித்திரை தெளிந்து எழுந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் நித்திரை விட்டெழுந்தபின் பஜ்று தொழ உழுவுக்கு நீரின்றி அனைவரும் மனம்வருந்தி நின்றார்கள். அப்போது, உழு செய்ய நீரில்லாதபோது மண், அதுபோன்ற இன்னும் சிலபொருள்களில் ஒன்றால் தயம்மம் செய்து தொழுதல் கூடுமென்றும், அதன் விவரம் இப்படியென்றும் அல்லாஹுதஆலா, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வேதவாக்கியம் இறக்கினான். மேற்படி நிபந்தனையடங்கிய வேதவாக்கியத்தை வானவர்களுக்கு அதிபராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து அறிவித்தவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அதை அஸ்ஹாபிகளுக்கெல்லாம் அறிவித்து, அப்படியே தயம்மம்செய்து தொழுதார்கள். தொழுது தீர்ந்த பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "தயம்மம்செய்து தொழக் கட்டளை பிறந்தது ஆயிஷாவின் பொருட்டே" என்று கூறினார்கள். பிறகு ஆயிஷா (றலி) அவர்களின் மணிவடம் ஒட்டகத்து வயிற்றின் கீழ்க்கிடந்து அகப்பட்டது. மணிவடம் அகப்பட்ட பின் நபிநாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் மேற்படி வனாந்திரத்தை விட்டுப் புறப்பட்டு நடந்து, சிலதினங்களுக்குள் மதீனமாநகரம் வந்து சேர்ந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமாநகரம் வந்து சேர்ந்தபின் முறைஸிக் நகரத்தில் பிடிபட்ட சிறைகளையும், சூறையாடின திரவியங்கள், வாகனங்கள், படைக்கலங்கள் எல்லாவற்றையும் அஸ்ஹாபிகளுக்குப் பாகித்துக் கொடுத்தார்கள். சிறைப்பட்ட பெண்களில், ஒப்பில்லாத முகவஜீகரமும் அவயவ இலட்சணமுமுள்ள சுவைறு என்னும் வாலிபப்பெண் அஸ்ஹாபிகளில் தாபித்து (றலி) உடைய பங்கில் வந்து அவருக்குக் கொடுக்கப்பட்டார். மேற்படி

தாபித்து (றலி) சுவைறுவைத் தமது மனைக்கு அழைத்துக் கொண்டு போய்ப் பார்த்தபோது, அந்தப் பெண்ணுடைய சௌந்தரியத்தைக் கண்டு திகைத்து, 'ஆ! இந்தப்பெண் மகாஅழகி. மிகப் பாக்கியவதி; கற்பிலும் சன்மார்க்கத்திலும் சிறந்த இந்தப் பெண்ணை நாம் மனைவியாகப் பாவிப்பது நியாயமல்ல' வென்று கருதி, மேற்படி பெண்ணை நோக்கி "ஒப்பற்ற பாக்கிவதியாகிய சுவைறுவே! நீர் உமக்காக கிரயம் கொடுத்துவிட்டு மீண்டு போகிறீரா?" என்றார். தாபித்து (றலி) சொன்ன சொல்லை சுவைறு கேட்டு ஆனந்த மடைந்து, அங்கிருந்து புறப்பட்டு நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "நபிமார்களுக்கு நாயகமான யாறஸூலல்லா! நான் சன்மார்க்கவனாகிய ஆரிது உடைய மகள் ஸுவைறு. முறைஸிக் நகரத்தில் சிறையாக்கப் பட்டேன். எல்லாரையும் பங்கிட்டுக் கொடுக்கும்போது, நான் தாபித்து உடைய பங்கில் ஆனதால், அவர் என்னைக் கிரயம் கொடுத்து மீண்டு போகும்படி சொல்லுகின்றார். என் தாயை விட்டு நான் பிரிந்த நாள்முதல் அவள் கிலேசமுற்று மிக வருந்துவாள். அவள் மனத்துயர் தீரும்படி நான் என் நகரத்திற்குப்போக விரும்புகிறேன். அதற்கேற்றபடியே என்னைப் பெற்றுக் கொண்ட மேற்படி தாபித்தும் கிரயம் கேட்கின்றார். சிறைப்பட்ட என் கையில் யாதொன்றும் இல்லாமையால், தேவரீர் சமுகத்திற்கு வந்தேன். தாங்கள் மனதிரங்கி தியாகமாக ஏதும் தந்தால், அதை தாபித்துக்குக் கொடுத்துவிட்டு மீண்டுபோவேன். இதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்" எனமிக இரக்கத்தோடு சொன்னாள்.

சுவைறு சொன்ன வசனங்களை யெல்லாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, தங்கள் கருணைக் கண்களால் உற்றுநோக்கினார்கள். நோக்கினபோது சுவைறுவின் தேககாந்தியும் இலக்ஷணமும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இதயத்தில் படிந்து கண்களைக்கவர்ந்து, மனதையும் இச்சிக்கப் பண்ணின. அதனால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சுவைறுமேல் காதலாய் "சுவைறுவே! உனது கிரயமாக நான் தாபித்துக்குப் பொருள் கொடுத்துவிடுகிறேன். நீ உனது மாதா முதலானவர்களைத் தேடி முறைஸிக்கு இப்போது போகாமல், எனக்கு மனைவியாய் இங்கேயேஇரு" என்றார்கள். இச்சொல்லைக் கேட்ட சுவைறு ஆனந்தசாகரத்தில் முழுகி, மனத்திலிருந்த குபிரையும் பந்துக்கள் மேலுள்ள விருப்பத்தையும் வெறுத்து விலக்கி விட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களைநோக்கி, "யாறஸூலல்லா! தேவரீருடைய விருப்பத்தின்படி நடக்கக் காத்திருக்கிறேன்" என்றாள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாபித்துக்குக் கிரயத்தைக் கொடுத்து விட்டு, சுவைறுவைத் தங்கள் மனைவியாக்கிக் கொண்டார்கள்.

சுவைறு (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குப் பாரியாளானவுடன், அவரோடு சிறைப்பட்ட முறைஸிக் பெண்களைப் பகிர்ந்து கொண்டு போன அஸ்ஹாபிகளெல்லாரும், சுவைறு, நபி, நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பாரியாய் விட்டபடியால், அவர் சுற்றத்தாரும் ஊராருமாகிய பெண்களை நாம் வைத்து அனுபவிப்பது முறையல்ல வென்று, எல்லாப் பெண்களையும் உரிமையாக விட்டு விட்டார்கள். இதை ஆயிஷா (றலி) அவர்கள் கேட்டு, சுவைறுவை நோக்கி "உன்னால் அநேக பெண்கள் மீட்சி பெற்றார்கள்" எனக்கூறி, மிகப் புகழ்ந்தார்கள்.

85-வது அத்தியாயம்.

கந்தக் அகழ்த்தது.

கலி விருத்தம்.

முந்தித்தவ மானமுஹம் மதனார்
வந்தித்தலின் மாமதி னப்புறமேர்
பந்தத்தொடு பார்மிசை கல்லிடுசீர்
கந்தக்கதின் காரண மோதிடுவாம்.

இதன் பொருள்.

முதலில் ரோஜெ மீனாக் கென்று சொல்லப்படும் பூர்வீகத்திலே தவப் பிரபல்யமான முஹம்மது (ஸல்) அவர்கள், புகழைப் பொருந்தி மாட்சிமை யுற்ற திருமதீனமா நகரத்திற்குப் புறத்தில் அழகிய இனத்தார்களோடும் நின்று பூமியிற் றோண்டிய சிறப்பான கந்தக் என்னும் அகழியின் பிரதான ஹேதுவைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அணியினுக் கணியென்றோது மவிர்மதி முகத்தினுரை
மணமுடித் தினிது வந்து மதீனத்தி லிருக்கு நாளிற்
பணிவிட மனைய வஞ்ச ரறமெலும் பயிர்க்கு நாளும்
பிணியெனுந் தகைய காபிர் செய்தவை பேசு வாமால்.

வசனம்.

சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் திக் விஜயஞ் செய்து, பகைவர்களை ஒடுக்கி, அதிமேன்மை பெற்ற இராஜமா நகரமாகிய மதீனாவி லிருந்து இராஜ்ஜிய பாரந்தாங்கி ஆளுங் காலத்தில், நாளுக்கு நாள் தங்கள் பலமும் செல்வமும் ஒடுங்கி யடங்கியும் பகைவர் சும்மா இருக்கவில்லை. அங்கங்கே யுள்ள காபிர்கள் எல்லாரும், நபி நாயகம் (ஸல்) அவர்கள் பேரில் பகைமை பாராட்டின வண்ணமாகவே யிருந்தார்கள். தாங்கள் தலையிட்ட ஒவ்வொரு கருமமும் சித்தி பெறாமல் சிதறுண்டு அபஜெய மடைந்தும், அவர்கள் கொண் டிருக்கும் வைராக்கியத்தின் கொடுமையால் சிறிதும் திருந்தவில்லை. முன் சுகுறு நகரத்து கஃறபு கொலையுண்ட பின், அவன் சுற்றத் தார் அங்கிருந்து குடி யெழும்பிப் போய் ஷாம் இராஜ்ஜியத்துக்கு குடியேறி, அங்கிருந்து கொண்டும் முஸ்லிமானவர்களுக்கு இடுக் கண் விளைத்தார்கள். மேற்படி கஃறபு உடைய சுற்றத்தாரில் பிரதான மான அக்தபு உடைய மகன் உபை என்பவனே மற்றவர்களி லும் அநேக மடங்கு முஸ்லிமானவர்கள் பேரில் பகைமை பாராட்டினான். மேற்படி உபை தனக்கு ஒப்பில்லாத தருகண் ணனும், பஞ்சபாதகனும், நாணமற்றவனுமாகிய யூதன். அவனுக்கு முக்கியே நபி நாயகம் (ஸல்) அவர்களைக் கொன்றுவிட வேண்டு மென்னும் எண்ணம் இதயத்தில் இருந்த படியால், கஃறபு கொலை யுண்டபின் அவ்வெண்ணம் நாளாடகம் விர்த்தியாய் வந்தது. கஃறபுக்கும் பிரதி பழிவாங்கும் பாத்தியம் நமக்குத்தா னென்று அவன் கருத்துற்றிருந்து, தன் அதிக்கிரமத்தைப் பல வழியுஞ் செலுத்தி வந்தான். கஃறபு அவனுக்குற்ற உறவினனாகையால், அவன் இறந்து போன துக்கம் தன் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதனால், அவன் மனம் துயரமாயிற்று. நாம் கொண்டிருக்கும்

மனத்துயர் முஹம்மதைக் கொன்றாலொழிய நீங்கா தென்று, நாளுக்கு நாள் மனம் புழுங்கி, கஃறபு உடைய பழிக்குப் பிரதி பழி வாங்கத் தக்க வகை என்ன வென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். என்றும் இதே சிந்தனையாய், ஆறாத் துயரத்தில் அமிழ்ந்து, மனக் கலக்கங் கொண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தீங்கு வருவிக்கும் காரியத்தில் மறதியின்றி எண்ண மிட்டிருந்தான்.

இவ்வாறு மனத்துயர் மூண்டெரியும் பாதகனாகிய உபை என் பவன் சில நாள் வரையும் நானாவகையாக எண்ணி வந்த எண் ணத்தை ஒரு நாள் ஒரு வாறாய் முடிவு பண்ணிக் கொண்டு, கஃறபுக்கும் தனக்கும் உதிரக் கலப்பி லுள்ளவர்களையும், தன் ஜாதியாராகிய அன்னிய யூதர்களையும், சுஹாறு நகரத்தாராகிய பிறரில் பிரதானமான தலைவர்களையும், மனோதிடமுள்ள வீரர்களை யும் திரட்டி சபை யொன்று கூட்டுவித்து, தானே அக்கிராசனாதி பதியா யிருந்து, மேற்படி சபையாரை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னான் :—

"சபையோர்களே! நாம் பாரம்பரியமாக வளமிக்க சுகறு நகரத் தில் பிறந்து வளர்ந்து, க்ஷேமமாய் வாழ்ந்திருந்தோம். பிற்காலத் தில் நம் வாழ்க்கைக்கு ஹானியாக முஹம்மது என்பவன் அவ தரித்து, நமது எஜமானனாகிய கஃறபை இரத்தஞ் சிந்தக் கொன்று, நம்மையும் குடியெழுப்பி, இந்த அன்னிய இராஜ்ஜியத் தில் வந்து பரதேசியாய்த் திரியும்படி விட்டுவிட்டான். நூதனமான அடாத மார்க்க மொன்றை ஏற்படுத்திக் கொண்டு, நம்மை சீர் கேடாக்கி இத்தனை தூரம் துரத்தி யடித்த நமது சத்துருக்களை, நாமும் எதிர் நின்று சாதித்து வெற்றிபெற வேண்டுமே யன்றி, இப்படி ஊரூராய்த் திரிந்து, நாணங் கெட்டு நாள் கழிப்பது ஆண்மை யல்ல. அப்படி நம் சத்துருக்களை அதஞ் செய்யும் சக்தி நமக்குள் இல்லா விட்டால், நாம் எல்லாரும் ஒன்றாய் உயிர் துறந்து விடுவது உத்தமம். அப்படியு மில்லை யானால், நம் ஏழேழு தலை முறையும் இழி வடைந்து வசைக்கு உட்படும். நமது தற்காலத்து நிலை பரத்தைக் குறித்துக் கவனித்தால், நாம் சுகமனுபவித்து வாழ்ந்து திரிந்த சுய தேசத்தையும், சுய நகரத்தையும், அலங்காரமான மாளிகைகளையும், மனோதைரியத்தை யும், தேக பலத்தையும் வெட்கத்தையும், ஆண்மையையும், செல்வத்

தையும் அறவிழந்து, பிறர் வசை பேசத்தக்க ஒரு விஷயத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டோமே யன்றி, மற்ற ஒரு மகிமையுமில்லை. மானமிழந்த நம்மை யொத்த பேடிகள் வேறே எங்குண்டு? நாம் இராப்பகல் குச்சுச் சார்த்தி ஆராதனை செய்து வழிபட்டு வந்த தெய்வமாகிய விக்கிரகங்களையும் நம் ஆண்மையை வெளியிடத்தக்க ஆயுதங்களையும் மண்ணோடு மண்ணாய் போகப் போட்டு விட்டு, கல்லுங்காடும், முள்ளும் முரடுமான செம்மை யற்ற பாதைகளில் கால்கள் வருந்த அலைந்தலைந்து, உயிரைக் காப்பாற்ற வேண்டி இத்தனை தூரம் ஓடி வந்திருப்பதால், நம் அறிவு இவ்வளவுதானெனப் பிறருக்கு நன்றாய் விளங்கும். நாமும் விவேகிகள் தாம் போலும். கனவான்களே! நமது கோத்திரப் பிதாக்களுக்கு இப்போது நாம் என்ன மகிமையை யுண்டு பண்ணினோம்? இன்னாருடைய சந்ததியார்கள் இன்ன காலத்தில் இன்ன காரியத்திற்காக இவ்வித அவமானத்தை யடைந்தார்களென்று சொல்லும் இந்த மகிமையையன்றி வேறில்லை நாம் பேடிகளாகையால் வேறென்ன தான் செய்யக்கூடும்? மனோதிடனும், தேக பலமும், ஆண்மையும், நாணமுங்கெட்டு, ஊரைவிட்டு ஓடிவந்த நம்மவர்களில் நானும் ஒருவன் தான். ஆனாலும் அவ்வளவுக்கு என் மானங் கெட்டிருக்கவில்லை; இவ்விஷயத்தில் கூடியமட்டும் பாடுபடும் சித்தம் எனக்குண்டு. நமது கஹபு கொலையுண்டு, நாமும் ஊரைவிட்டுப் புறப்பட்ட நாள் முதலாய் எனக்கு ஊண் உறக்கம் உண்டென்று நீங்கள் நினைத்தீர்கள்? சபையோர்களே! இன்னும் இன்னும் நீளப் பேச வேண்டியதில்லை. என் கோரிக்கையை முடிவாகச் சொல்லுகின்றேன். எப்போதும் துக்கத்தையே அனுபவிக்கிற ஒருவன் ஒரு காலத்தில் சுகத்தையும் அனுபவிப்பான். என்றும் அபஜெயமடையும் பேர்கள் ஒரு போது ஜெயமும் பெறுவார்கள். இது யாருக்கும் தெரியும். எப்போதும் முஹம்மது பூரண ஜெயமடைந்தால் என்ன? இன்னும் அப்படித்தான் ஜெயம் பெறுவானென்பது நிபந்தனையா? உலகம் அதிரத் தக்க பயங்கரமான பெரிய யுத்தத்தை இனி நானே ஆரம்பிக்கிறேன். கஹபுக்குப் பிரதியாக முஹம்மதை இரத்தஞ் சிந்தக் கொன்று, அவன் சேனாவீரர்களாகிய நம் சத்துருக்களையெல்லாம், கேட்டவர் நடுங்கச் சங்கரித்து, நமக்குண்டான பகைமையை ஒழித்து, நம்மவர்கள் சிக்குண்டு வருந்தும் ஆபத்திலிருந்து அவர்களை இரக்ஷித்து, ஆண்மையை நிலைநிறுத்தி நற்பேறடைகிறேன்.

நான் துணிந்து செய்யும் திறனை நீங்கள் பிந்தி கண்டறிவீர்கள். முஹம்மது உடைய புதிய மார்க்கமாகிய தீன் இனிபடும்பாட்டை நீங்கள் பார்த்து என்னை மெச்சுவீர்கள். நான் சொன்ன வண்ணம் செய்யாவிட்டால் என் ஆண்மையும் வீரமும் சினமும் என்னவாம்? என்னை பேடி யென்றே நீங்கள் சொல்லுங்கள். இப்போதே யுத்தத்திற்கு எத்தனப்படுகிறேன்'' என்றான்.

உயை என்பவன் இவ்வாறு பிரசங்கித்து முடித்து, மறுபடியும் சிங்கத்தைபோல கர்ஜித்து, கண்களில் அக்கினிகக்க, கைகளைப் பிசைந்து, பற்களை நெறுநெறெனக் கடித்து, புஜங்களை யசைத்து எழுந்து நின்று, ஆயுதங்களை யெடுத்து அணிந்தான். உயை இவ்வாறு திடசித்தனாய்ப் பிரசங்கித்துத் தாமதமின்றிப் படைக்கலன்களணிவதைக் கண்ட மற்றவர்களும் ஆக்கிரமித்துப் போர்க்கோலம் புனைந்தார்கள்.

யூதர்களிலும், விக்கிரகாராதனைக் காரர்களிலும், கிறிஸ்துவ மதத்தார்களிலும் கணக்கற்றவர்கள் திரண்டு கூடினபோது, அனைவருக்கும் உயை என்பவன் தானே தளகர்த்தனாய், விருதுகள் பிடிக்க முரசுகள் முழங்க, வீரர்களின் சபத சப்தம் கோஷிக்க, தான் குடியிருக்கும் நகரத்தை விட்டுப் புறப்பட்டான். அவன் சைன்யமும் சமுத்திரம் போல எழுந்தது.

பரம துஷ்டனாகிய உயை, தனது சேனைப்பிரவாகத்தோடு பிரயாணப்பட்டு, காடு, மலை, மற்றிடங்கள் எல்லாவற்றையும் கடந்து, குறைஷிக் காபிர்கள் வசிக்கும் மக்கமா நகரத்திற்கு போய்ச் சேர்ந்தான். உயை மக்கமா நகரம் சேர்ந்தவுடன் தனது ராணுவத்தை ஒரு தானத்தில் பாளைய மிறங்கி யிருக்கத் திட்டஞ் செய்து விட்டு, கறுபு உடைய குமாரன் அபாஸுப்யானைப் போய் கண்டு கொண்டான். அபாஸுப்யான் உயையைத்தழுவி உபசரித்து, மிக அன்பு பாராட்டினான். சுகுறு நகரத்தானாகிய உயை பெருந்தனமொன்று தயார்செய்து கொண்டு வந்திருக்கின்றானென்னும் சங்கதி மக்கமா நகரத்தில் பிரஸ்தாபமானபோது, அபூஜஹலுடைய குமாரன் இக்ரிமாவும், ஒலீது உடைய குமாரன் காலிதும், இன்னுமுள்ள தலைவர்களும் ஒருங்கு திரண்டு உயையை வந்து கண்டு கொண்டார்கள். அப்போது அபாஸுப்யானுடைய மாளிகையில் சபையொன்று கூடிற்று. அந்த சபையில் மக்கமா நகரத்து குறைஷித் தலைவர்

களும், அறபிகளும் எண்ணிறந்தோர் கூடியிருந்தார்கள். அப்போது மேற்படி உயை என்பவனே சபாநாயகனாய் வீற்றிருந்து அபாஸுபியான், இக்ரிமா, காலிது என்னும் மூன்று தலைவர்களையும், அச்சபையிலுள்ள மற்றவர்களையும், பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—

“தனவான்களே! உங்கள் எல்லாருக்கும் மனத்திடம், புஜவலிமை, ஆண்மை, சௌரியம், உபாயம், கல்வியறிவு, திரவியபலம் எல்லாம் ஒத்திருக்கின்றன. அன்றியும், உங்களில் அநேகர் சேனைத்திரளுள்ள தலைவர்களாயிருக்கின்றார்கள். சத்துருவை நாசஞ்செய்யத்தக்க சாதனங்கள் இத்தனையும் உங்களுக்கு உண்டாயிருப்பதுமன்றி, என்னை யொத்தவர்களின் சிநேகமும் அமிதமாயுண்டு. அப்படியிருக்க, நமது மார்க்கம் மாற்றாரால் ஒடுக்கப்பட்டு நாளாவட்டத்தில் தேய்ந்து போகவேண்டிய முகாந்திரம் என்ன? இது ஆச்சரியமல்லவா? உங்களுக்குப் பிரதான தலைவராகிய அபூஜஹலும், எங்கள் தலைவராகிய கஹபும் இறந்து போக, நாம் அதைச் சிறிதும் பாராட்டாமல் இவ்வுலக வாழ்க்கையையே விரும்பிக் காலங்கழிக்கின்றோம். அவர்கள் பழியை யெல்லாம் நாமே சுமந்து கொண்டோம். உலகம் நம்மை மிக இழிவாய்ப் பேசுகின்றது. நாளடகம் சிறுமையே அதிகரித்துப் பெருமை குன்றுகின்றது. மதிமிக்க பிரபுக்களே! நீங்கள் நன்றாய் ஆராய்ந்து பாருங்கள். இந்த மக்கமா நகரத்தில் சொற்ப காலத்திற்கு முன்னிருந்த அபூஜஹல் முதலான வீரவான்கள், தங்களால் கூடியமட்டும் பாடுபட்டு, முஹம்மதை இந்த மக்கமா நகரத்தை விட்டு வெருட்டித் துரத்தினார்கள். அவன் இதுவரையிலும் இங்கிருப்பானானால் நமதுகதி எப்படி முடிந்திருக்கும்! நீங்களே நிதானித்துப் பாருங்கள். இது அவர்கள் பிரயாசையெடுத்து செய்தது பெரிய உபகாரமல்லவா? அவர்கள் செய்த அந்த உபகாரத்தில் நூற்றிலொரு பங்காவது நாம் செய்தோமா? அவர்கள் செய்து வைத்த அந்தக் கீர்த்தியையும் நாம் பாழாக்கத்தானே தலைப்பட்டிருக்கின்றோம். தொன்று தொட்டுள்ள உண்மையான நமது மார்க்கம் நாளுக்கு நாள் தேய்ந்து, மாறுபட்டு முளைத்த அபத்தமான புதியமார்க்கம் வளர்ந்து பலகவேண்டிய முகாந்திரம் என்ன? அப்படி விர்த்தியாய்வரும் புதியமார்க்கம் உண்மையாயிருந்தாலும் இருக்குமென்று சிலர் சொல்ல வருவார்கள். அது அப்

படியல்ல. ஒரு காலத்தில் நீதி அநீதியாகவும், தருமம் அதருமமாகவும் மாறுபடுதலும் உண்டு; காலவித்தியாசத்தால் உயர்ந்தவர் தாழ்ந்தும் தாழ்ந்தவர் உயர்ந்தும் போகிறார்களல்லவா? அப்படியே காலவித்தியாசத்தால் நமது சத்தியமார்க்கம் அருகியும், முஹம்மது உடைய அசத்திய மார்க்கம் வளர்ந்தும் வருகின்றன. காலம் இப்படி பேதகப்பட்டிருப்பதால் நாம் துணியும கருமம் சிதறுண்டு போமன்றி, சித்தி பெறமாட்டாது. இதை மறந்துவிட்டுத்தான் நான் போருக் கெழுந்திருக்கின்றேன். விவேகிகளே! இன்னும் நீங்கள் கவனித்துப் பாருங்கள். நமது சத்துருவாகிய முஹம்மது இனி நாம் வசிக்கும் இந்த நகரங்கள் மீது படையெடுத்து வராமல் இரான். அப்படி அவன் வந்து விட்டால், நமது ஆஸ்திகளையும், பெண்டுபிள்ளைகளையும் அவன் வசம் ஒப்புக்கொடுத்துவிட்டுக் கீழ்ப்படிந்துபோக வேண்டித் தானே நேரிடும்? அதுதானா ஆண்மை? அப்படிப்போக வேண்டியதில்லை. அதற்கொரு வழியுண்டு. இப்போதே நாம் எல்லாரும் மனைவிமக்களையும், திரவியங்களையும் முற்ற முடிய இழந்துவிட்டு, ஆடைக்குப்பதிலாக மரவுரியுடுத்தி, சடை வளர்த்துக்கொண்டு வன வாசியாய்ப் போய்விடலாம், வாருங்கள். சத்துரு கையில் அகப்பட்டுதாழ்வடைவதிலும், இப்படிப்போய்விடுவது சிலாக்கியம். வீரவான்களே, கேளுங்கள். மக்கிகளுக்குப் பிரதானதலைவராகிய அபூஜஹல் படுகளத்தில் மடிந்துபோனபின், அவர்களுக்கு இப்போது தலைவர்யாரென்று, இராஜ்ஜியத்தார் ஒருவரையொருவர் விசாரித்தார்கள். அப்போது கறுபு உடைய குமாரர்அபாஸுபியான் இருக்கிறாரென்று இவ்வுலகம் சொல்லிற்று; இன்னும் அப்படியே சொல்லுகின்றது. அப்படியிருக்க, நம்காரியம் இவ்வாறு நாளுக்கு நாள் பாழடையுமானால், இனி ஆலயங்களிலிருக்கும் தெய்வமனைத்தும் குடிவாங்கிப் போய்விடுவதில் சமுசயமில்லை. சமயத்திலும், குலத்திலும், தலத்திலும் ஒன்றுபட்டிருக்கும் ஒருவனுக்கு வந்த விபத்தை மற்றவன் தனக்கு வந்ததாகவல்லவா பாவிக்க வேண்டும்? இதைப்பற்றி நான் விவரிக்கவேண்டியதில்லை; நீங்களே சிந்தியுங்கள்” என்றான்.

அவன் இப்படிச்சொல்லும்போதே கறுபு மகன் அபாஸுபியானுடைய கண்கள் சிவந்து அக்கினி கக்கின; மீசை துடித்தது; சினம் வரம்புகடந்து பெருகிற்று. உரோமங்கள் சிலிர்த்தன. புஜங்கள் துலங்கின. உயை என்பவன் தன் பிரசங்கத்தை முடித்தபின்

அபாஸுபியான் உடல் வெயர்ப்ப, நெடு மூச்சுவிட்டு, இதழ்களைக் கடித்து மேற்படி உயையை நோக்கி "கனம்மிக்க உயை! சத்துருக்களை அடக்கத்தக்க சிந்தனையும், சக்தியுமுள்ளோர் என்னைப் போல வேறு யாருமுண்டாவென்று நான் தேடிக்கொண்டிருந்தேன். இப்போது நீர் ஒருவர் என்னிலும் பலமடங்கு அதிக மனவைராக்கியம் உள்ளவராய் இங்குவந்து, எங்கள் இருதயத்தில் சாம்பருள் தழல் போல் புதைந்து கிடந்த சினத்தீயை மூளச்செய்து நிற்கின்றீர். இனி எங்களுக்கு ஏதும் குறையில்லை. ரணகெம்பீர வீராகிய நீர் எப்போது எங்கள் மக்கமா நகரத்தில் அடி யெடுத்து வைத்தீரோ அப்போதே, முஹம்மது உடைய தீன் என்னும் மார்க்கத்தை வேரோடு பிடுங்கி, நமது ஜெயத்தை ஸ்தாபித்துவிட்டே னென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்" என்றான். அபாஸுபியான் சினத்தோடு சொன்னசொல்லை உயைகேட்டுஆனந்தமடைந்து, அபாஸுபியானையும், இக்ரிமாவையும், காலிதையும், மற்ற தலைவர்களையும் சேனை புறப்பாட்டுக்கு ஆயத்தப்படுத்தும்படி திட்டஞ்செய்து விட்டு, தன்னோடுவந்த சேனாவீரர்களோடு மக்கமா நகரத்திலிருந்து புறப்பட்டு, ஜலான் என்னும் பட்டணத்திற்குச் சென்றான்.

ஜலான் பட்டணஞ்சென்ற உயை, அங்குவசிக்கும் கைஸ் கூட்டத்தாரையெல்லாம் ஒருங்கு சேர்த்து, தான் ஷாமிலிருந்து மக்கமாநகரத்திற்குச் சென்றதும், அங்குள்ள அறபித் தலைவர்களோடு கலந்து சம்பாஷித்ததும், அனைவரும் யுத்தத்திற்கு எத்தனப்படுவதும் இன்னபடியென விவரமாகச் சொல்லிக் காட்டி, அவர்களையும் உடன் படுத்தினான். இதைக்கேட்ட மேற்படி கைஸ் கூட்டத்தார்கள் தாங்களும் இனி நடத்தும் யுத்தத்திற்கு இசைந்து கூடவருவதாக உயைக்கு வாக்குகொடுத்தார்கள். உயை மகிழ்ச்சி கூர்ந்து அவர்களையும் யுத்தத்திற்கு எத்தனப்படும்படி திட்டசெய்து விட்டு, அந்த ஜலானை நீங்கி, பனீகுறைலாக்கள் வசிக்கும் தலத்திற்குச் சென்றான்.

மேற்படி பனீகுறைலாக்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களோடு சமாதானப்பட்டு, ஏதொரு விக்கினமும் கருதாமல் சிநேகத் தன்மையோடு நடப்பதாக வார்த்தைபாடு கொடுத்துவிட்டு, மறுபடியும் தங்கள் தானத்திலிருந்து கொண்டு முஸ்லிம்களுக்கு இடுக்கண் விளைக்கும் கபட சித்தத்தையும், பாதாள நரகத்துப் பாழுந்தீயிற் கிடந்து

வெந்து எரியும் உடலையுமுடைய படுசண்டாளர்கள். இவ்விதத் துரோகிகளாகிய பனீகுறைலாக்களிடத்தில் உயை சென்று, தான் நடத்திய காரியங்களையும், எல்லாரும் போருக்கு ஆயத்தப்படுவதையும் அவர்களுக்குத் தெரிவித்து, அவர்களையும் தன்னோடு இணங்கி யுத்தத்திற்கு எத்தனமாகச் செய்து விட்டு, அங்குள்ள வேறு ஜாதித் தலைவர்களையும் தன் சொல்லுக்கு இணங்கப் பண்ணினான்.

அன்றியும் மேற்படி உயை, காபிர்கள் வசிக்கும் அங்கங்கே சென்று கத்பான், அஸது, ஒளஸ், கனா என்னும் இக்கூட்டத்தார்களை யெல்லாம் தக்கவாறு சொல்லி, தன்னோடு துணைப்படையாகச் சேர்த்துக்கொண்டு, தன் ஜாதியாராகிய யூதர்களிலும் அதிகமான சேனையொன்றை அழைத்து, எல்லாப்படைகளையும் ஒன்றாய்த் திரட்டினான். அப்போது உயை உடைய சைனியம் சமுத்திரம் போலப் பரவிற்று. இவ்வாறு பல்ஜாதியார்களையும் சமுத்திரம் போலத் திரள் திரளாய்ச் சேர்த்த உயை, மேற்படி சேனா சமுத்திரத்தோடு மறுபடியும் மக்கமா நகரத்துக்கு வந்தபோது, உயையும், அந்தந்த கூட்டத்துச் சேனாதிபதிகளும், அபாஸுபியானாலும், மற்றகுறைஷித் தலைவர்களாலும் உபசரிக்கப்பட்டார்கள். மக்கமா நகரம் வந்து சேர்ந்த உயை தன்னோடு வந்த சேனா வகுப்புகளுக்கு விடுதிகள் ஏற்படுத்தி, தன்னுடைய விசாரணையின் கீழ் இருத்தினான். எல்லாக் காபிர்களும் மக்கமா நகரத்தில் திரண்டு நெருங்கியிருந்தார்கள். அபாஸுபியான் முதலான குறைஷித் தலைவர்களும் சேனை திரட்ட ஆரம்பித்தார்கள்.

உயை அநேக சேனாவகுப்புகளோடு மக்கமா நகரத்தில் வந்திருக்கும் சமாசாரத்தையும், சத்துருக்கள் தற்காலம் கொண்டிருக்கும் நோக்கத்தையும் ஒற்றர்கள் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தார்கள். மேற்படி சமாசாரங்களைக் கேட்ட மாத்திரத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிரீன்கள், அன்சாரீன்கள் எல்லாரையும் அழைப்பித்து, மேற்படி சங்கதியைத் தெரிவித்தார்கள். இதைக்கேட்ட அவ்விரு ஜாத்து அஸ்ஹாபிகளும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் இடும் கட்டளைக்குக் காத்திருந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும், அஸ்ஹாபிகளுக்கும்

நகரத்தைக் காத்துக் கொண்டு தற்காப்பு செய்வதே அப்போதைய கோரிக்கையாயிருந்தது. ஆனதால், அன்று கூடியிருந்த அஸ்ஹாபிகளில் சல்மான்பாரிசி (றலி) எழுந்துநின்று, நபிநாயகம் (ஸல்) அவர்களின் வதனாரவிந்தத்தை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார் :—

“யாறஸூலல்லாஹ்! கொலையுண்டுமடிந்த கஹுபுடைய சுற்றத்தானும், அருத்தப்மகனும், சுருருவிலிருந்து வலசை வாங்கியோடினவனுமாகிய உபை, தன்ஜாதியாராகிய அநேகயூதர்களோடு ஷாமிலிருந்து மக்கமா நகரத்திற்கு வந்து, அபாஸுபியான் முதலான நம்சத்துருக்களோடு கலந்து யுத்தஞ் செய்யத் தகுந்தபடி ஆலோசித்து முடிவு செய்து, அறபு இராஜ்ஜியத்திலிருக்கும் காபிர்களிடந்தோறும் சென்று, தந்திரத்தினால் எண்ணற்ற சேனை வகுப்புகளை சரிபண்ணி அழைத்துக் கொண்டு, மக்கமா நகரத்தில் வந்து மறுபடியும் பாளையமிட்டுக் கொண்டு ஏகசேனாதிபதியாக இருக்கின்றான். இனி மக்கமா நகரத்தாரும் ஒருங்குகூடிப் பெருஞ் சேனையாகப்புறப்பட்டு, நமது நகரத்தின்மேல் படையெடுத்து வருவார்கள். வந்தால் பயங்கரமான யுத்தம் உண்டாகும். ஆனபடியால், இப்போது நமது மதீனா, சத்துருக்களுக்கு ஈடு செய்யும் மதிஅரண் உள்ளநகரமல்ல. நாம் இங்கிருந்து தடுபடை செய்வதற்கு முக்கியமாய் மதிளரண் வேண்டும். அதற்காக, இப்போது நகரத்தைச்சூழ மதிலுயர்த்தி அரண்கட்ட நம்மால் இயலாது. ஆனதால், மதிளின்றி நகரத்தை வளைய அகழ்மாத்திரம் தோண்டி, சத்துருக்கள் உள்ளே பிரவேசிக்கா வண்ணம் காவல்செய்து கொள்ளலாமென்று நினைக்கிறேன். தாங்கள் கட்டளையிட்டருளினால் இப்போதே அவ்வேலையை அதிகமும் மூரத்தோடு செய்து முடிக்க நாங்கள் காத்திருக்கின்றோம்” என்றார்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

சொல்லும் வாசக நன்கென் யாவருந் துணிந்து
செல்லு லாங்காத் திருநபியுடன் வரத் திரண்டே
யெல்லை காணிலா வளநகர்ப் புறத்தினி லேகி
யல்ல லின்றியே புவிதொடத் தொடங்கின ரன்றே.

மட்டிலாதகல் வெட்டிய நீண்டகை வாய்ந்த
கொட்டு மேய்ந்துகூந் தாலமும்பலபல கொணர்ந்து
வெட்டு வாரவை யடிக்கடி கூடையின் வீழ்த்தித்
தட்டு வார்பல திடரென முறைமுறை தாங்கி.

வசனம்.

இச்சொல் மகா உத்தமமான சொல்லாகையால், நபிநாயகம் (ஸல்) அவர்களும் மற்றவர்களும் அவ்வாறு அகழ்தோண்ட ஒருமித்தார்கள். உடனே மண்ணகழ் கருவிகளாகிய மண்வெட்டி, கூந்தாலம், கட்டப்பாரை, கல்லகழ், உளி அனைத்தும் சேகரிக்கப்பட்டன. கருவிகள் அனைத்தும் சித்தஞ்செய்து தீர்ந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளில் ஆயிரத்திற்கு அதிகமானவர்களும் ஏகோபித்து, மதீனமாநகரத்தின் வெளிமைதானில் வந்துகூடி, இத்தனை ஆழத்தில் இத்தனை அகலத்தில், இன்னதானத்தில், நகரத்தைச்சூழத் தோண்ட வேண்டுமெனக் குறிப்பிட்டு, ஒவ்வொருவர் நந்நான்கு சதுரமுழம் அகழவேண்டுமென்றும், பத்துப்பத்து பேர் ஒன்றாய் நின்று வேலை செய்ய வேண்டுமென்றும் நியமகம்செய்து கொண்டு வேலை தொடங்கினார்கள். அகழ்தோண்டும் அவ்வேலைக்கு நபிநாயகம் (ஸல்) அவர்களே கண்காணியாய் நின்றார்கள். வேலைசெய்யும் அஸ்ஹாபிகள் அல்லாஹு தஆலா பேராலும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் பேராலும் கவிதைகள் பாடிக்கொண்டே அகழ்ந்தார்கள். அகழ் தோண்டும் வேலை அதிக சுருசுருப்பாய் நடந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள் திரளாய் நின்று, துரிதமாய்ப் பிரயாசையோடு தோண்டினபடியால், அதிவிரைவில் அகழ்வேலை முடிந்து வந்தது. நீர் ஊறும் அளவுக்கு ஆழத் தோண்டினபின், ஒரு புறத்தில் அதிக அகலமும், திடமுமுள்ள கருங்கற்பாறையொன்று காணப்பட்டது. அந்தக்கற்பாறை சிலரால் தகர்க்கக்கூடாத பருமனுள்ளதாகையால், பலர் ஒருங்கு கூடிநின்று, கருவிகளால் இயன்று பாடுபட்டுத் தகர்த்தார்கள். அப்படித் தகர்த்தும் அது சிறிதும் தகர்க்கப்படவில்லை. அஸ்ஹாபிகள் மேற்படி பாறையைத் தகர்க்கப் பிரயோகித்த கூந்தாலங்களும், கட்டபாரைகளும் உளிகளும் கூர்மழுங்கி ஒடிந்தும், வளைந்தும் பழுதாயின. வேலை செய்வோர்களும் நீண்டநேரம் பாடுபட்டு அவயவங்கள் சோர்ந்து உடல் அயர்ந்து மனஞ்சலித்து, ஆச்சரியமுற்று ஓய்ந்து நின்றார்கள்,

இடையில் தட்டுப்பட்ட பாரிய கருங்கற்பாறையைத் தகர்க்க அஸ்ஹாபிகள் நெடுநேரம் பாடுபட்டு, கருவிகள் பொடிபொடியாக மனஞ்சலித்து ஓய்ந்து நிற்பதை, கண்காணியாய் நிற்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அப்பாறையுள்ள தானத்தில்வந்து பார்வையிட்டார்கள். மேற்படி கற்பாறை அதிக பருப்பமுள்ளதாய் திடமாய்க் காணப்பட்டபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் உத்தரீயத்தை இடையில் இறுக்கிக் கட்டிக்கொண்டு, சிறந்த கரத்தில் ஒரு கூந்தாலத்தை வாங்கி அப்பாறையை நெருங்கி நின்று தகர்த்தார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

கரமெ டுத்தெறித் திடுதலுங் ககனவெண் முகடும்
வெருவல் கொண்டன பயந்தன வொளித்தன மேக
மரவின் வேந்தனுந் தரையொடு மசைத்தன னென்றிற்
பெரிய பாறையின் கென்படு மியானெவன் பேசல்.

பதலை மேலெறி படப்பிளக் தனவரும் பகுப்பிற்
சிதறித் துண்டங்க ளாயின தீப்பொறி தெறிப்பப்
பதிர்விட் டோடின தகர்ந்தன நுறுங்கின பெருந்து
ளிதெனப் போயின வன்னறங் காத்திர லெல்லாம்.

வசனம்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாறை மேல் மேற்படி கூந்தாலத்தைப் பிரயோகிக்கும் தோறும் எழும் நலி, செவியதிரத்தக்க பேரிடி யொத்து ஒலித்தது. நபிநாயகம் (ஸல்) அவர்கள் கூந்தாலத்தை ஓங்கும்தோறும் அண்டங்களும், பர்வதங்களும், மேக ஜாலங்களும், பூமியும் பயந்து நடுநடுங்கின. இவ்வாறு இவைகள் அஞ்சி நடுநடுங்கி அதிர்ந்து அசைந்தால், ஒரு கற்பாறையின் கதி எவ்வாறாகும்? நபிநாயகம் (ஸல்) அவர்கள் அடிமேல் அடியாய் அடுத்தடுத்துப் பிரயோகித்த கருவியால் மேற்படி கருங்கற்பாறை நாலுபக்கமும் பிளப்புண்டு தகர்ந்து, சின்னபின்னமாய்த் தெரித்து, பொடிபொடியாய்ச் சிதறி, நுறுங்கித் தூளாய்ப் பறந்தது.

தகர்க்கரிய கருங்கற்பாறை நபிநாயகம் (ஸல்) அவர்களால் தகர்க்கப்பட்டபின், அஸ்ஹாபிகள் ஆச்சரிய மடைந்து மறுபடியும்

வேலைதொடங்கிச் செய்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குப் பசிமேலிட்டபடியால், கருங்கற்றுண்டு ஒன்றை வயிற்றில் வைத்துக் கட்டிக் கொண்டு, பட்னியாய் நின்றார்கள்.

நபிகள்திலகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் பட்டினியா யிருப்பதை சாபிர் (றலி) அறிந்து, மனம் வருந்தி, "ஆ! நபிநாயகம் (ஸல்) அவர்கள் பட்டினி யிருக்கின்றார்கள் அதனால், நமக்கெல்லாம் இடுக்கண் விளைந்தாலும் விளையும், நாம் பார்த்திருக்கக் கூடாதென வெண்ணி, தாம் செய்யும் வேலையை நிறுத்திவிட்டு, அங்கிருந்து தமது மனைக்கு வந்து சங்கதியை மனைவியிடம் தெரிவித்து, இப்போது நாம் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமென, மனையில் வளர்த்த செம்மறியாட்டை அறுத்து தசையை வகிர்ந்து, அவ்விறைச்சியையும், எட்டு சேர் தினைமாவையும் மனைவியிடம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து மீண்டு நபிநாயகம் (ஸல்) அவர்களை யடுத்து "யாறஸூலல்லா! தேவரீருடைய பாதசேவைக்கு இவ் வடிமையான தமியேனுடைய மனைக்குத் தாங்களும், பத்து அஸ்ஹாபிகளும் வந்து விருந்துண்ணும்படி மிகவும் பணிந்து கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சொன்னார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி, "சாபிரே! நானும், அஸ்ஹாபிகளும் விருந்துண்ணும்படி உமது மனைக்கு வரும்வரையும் போஜனங்களை சமைத்துத் தயார் செய்யாமல் வைத்திரும்" என்றார்கள். சாபிர் (றலி) அவ்வாறே தமது மனையிற் சென்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் போகும்வரையும் காத்திருந்தார்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அகழ்வேலையை நிறுத்திவிட்டு, வேலைசெய்து நிற்கும் அத்தனைபேரையும் ஒருங்கு திரட்டிக் கொண்டு சாபிர் (றலி) உடைய மனைக்குட் சென்றார்கள். சென்றபோது, சாபிர் (றலி) எல்லாரையும் உபசரித்து அழைத்து, தாரதம்மியப்படி இருத்தினர். அனைவரும் இருந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் வகிர்ந்து வைத்திருக்கும் ஆட்டிறைச்சியையும், தினைமாவையும் தங்கள் முகதாவில் கொண்டு வரும்படி உத்தரவு செய்தார்கள். அவ்வாறே சாபிர் (றலி) கொண்டுபோய் வைத்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் திருவாயிலுள்ள

தேவாமிர்தத்திற்கு நிகரான உமிழ்நீர் சிறிதை அவ்விறைச்சியிலும், தினைமாவிலும் உகுத்து, இறைச்சியை சமைக்கும்படியும், தினை மாவை ரொட்டி சுடும்படியும் கட்டளை யிட்டார்கள். உடனே சாபிர் (றலி) மகிழ்ந்து அவற்றைக் கொண்டுபோய், இறைச்சிக்குக் கறிசரக்கும் நெய்யுமிட்டுப் பெரிய பாத்திரத்தில் வைத்துப் பாகஞ் செய்தார். தினைமாவையும் பிசைந்து ரொட்டி சுட்டார். இறைச்சி அடுப்பிலிருந்து வேகும்போது, ஒவ்வொரு கொதியிலும் பெருகிப் பெருகி வளர்ந்தது. பிசைந்த தினைமாவு எடுத்தெடுத்து ரொட்டி தட்டத்தட்ட அப்படியே யிருந்தது. அதனால் எண்ணற்ற ரொட்டிகள் ஒரு க்ஷணப்பொழுதில் சுடப்பட்டன. இதற்குள் இறைச்சியும் பாகமாயிற்று. அனந்தம் ரொட்டிகள் சுட்டுத் தீர்ந்தன. சாபிர (றலி) சந்தோஷத்தில் மூழ்கி, கணக்கில்லாப் பாத்திரங்களில் இறைச்சியையும், ரொட்டிகளையும் எடுத்தெடுத்து வைத்தார். ஜனங்கள் பந்தி பந்தியாக உட்கார்ந்தார்கள்.

எல்லாரும் பந்தி யிருந்தபின், ஒவ்வொருவர் முன்னும் இறைச்சியும் ரொட்டியும் வைக்கப்பட்டன. பிறகு புசிக்கும்படி கட்டளை பிறந்தது. எல்லாரும் அகங்களித்து, வாய்வயிறாரப் புசித்தார்கள். புசிக்குந்தோறும் சாபிர் (றலி) இறைச்சியும், ரொட்டியும் எடுத்தெடுத்து வைத்துக் கொண்டே யிருந்தார்.

எல்லாரும் வயிறு நிரம்பப்புசித்துத் தீர்ந்தும், இறைச்சியும் ரொட்டியும் குறையாதிருந்தன. எட்டுசேர் தினைமாவிற் சுட்ட ரொட்டியும், ஒரு செம்மறியாட்டு இறைச்சியும், ஆயிரத்திற்குமேற்பட்ட ஜனங்கள் வாயார வயிறாரத் தின்றும் குறையாதிருந்தன. இது நபிநாயகம் (ஸல்) அவர்களின் உமிழ் நீர் மகிமையென்று எல்லாரும் ஆச்சரியமடைந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

எல்லாரும் விருந்துண்டு முடிந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சாபிர் (றலி)வை நோக்கி, “சாபிரே! நீர் அறுத்த ஆட்டின்தோல் எலும்பு, நரம்பு, எல்லாவற்றையும் கொண்டுவந்து எனக்கு முன் குவியும்” என்று கட்டளை பண்ணினார்கள்.

சரித்திர புராணம்.

கலிநிலைத்துறை.

சுடுகே ருப்பினில் வெந்தவென் பெவையுமுன் றுணித்து
விடும ருப்பையுஞ் சிரத்தையுங் காலையும் விரித்த
வடக மற்றவு மெடுத்தனர் குவித்தனர் வாய்மைத்
திடும டுத்ததீன் விளக்கிய முஹம்மது திருமுன்.

கன்ன ரூச்செழுங் கமலமென் கரத்தினிற் சலில
மள்ளி மேலுறத் தெளித்தருந் தூதுவ ரடங்கா
வெள்ளி மாமறை மேலவன் விதியினாற் கோறியே
யுள்ளங் கூர்தர நீயிவ ணெழுந்திடென் றுரைத்தார்.

வசனம்.

உடனே அவர் அறுத்துச்சமைத்த ஆட்டின் தோலையும், கழிக்கப்பட்ட எலும்பு, நரம்பு, ஜவ்வு, பாகமாய்த் தின்று எறிந்த சிற்றெலும்பு, இன்னுமுள்ள எல்லாவற்றையும் கொண்டுவந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் முகதாவில் குவித்தார். குவித்தவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் திருகரத்தால் தண்ணீரை அள்ளி அக்குவியல்மேல் தெளித்து, திருவாய்மலர்ந்து “ஏ! செம்மறியாடே! மகத்தான அல்லாஹு தஆலாவின் தத்துவங் கொண்டு, நீ உயிர்பெற்று எழுந்திரு” எனக்கூறினார்கள். உடனே அறுப்புண்டிறந்த அவ்வாட்டின் தோல் முதலிய எல்லாம் ஒன்றாய்க்கூடி, அழகிய உருவாய் உயிர்த்தெழுந்து, சப்தமிட்டு வாலையசைத்து, அசைவெட்டிக் கொண்டு நின்று அடிபெயர்த்து நடந்தது. எல்லாரும் இவ்வாச்சரியகரமான மகாபெரிய அற்புதத்தைக் கண்டு பிரமித்து, அதிசயங் கொண்டார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சாபிர் (றலி) நோக்கி சாபிரே, “நீர் இச்செம்மறியாட்டைப் பிடித்துப்போய், மனைக்குள் கொண்டு கட்டும்” என்றார்கள். அப்போது அவர் அவ்வாட்டைப் பிடித்துக் கொண்டு மனைக்குள் சென்றார். அவ்வாட்டை சாபிர் (றலி) வுடைய மனைவிகண்டு புதுமையாய் “இவ்வாடுநாம் அறுத்துச் சமைத்த நமது ஆட்டுக்கு ஒப்பாயிருக்கின்றதே, இது ஏது?” என வினவினர். அப்போது அவர் மனைவியை நோக்கி “இது அற்புதமான ஆடு; நமது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறுத்துச்

சமைத்துப் புசிக்கப்பட்ட ஆட்டை உயிர்த்தெழச் செய்தார்கள். அதுதான் இது” என விடை கூறினார். அப்போது அந்தப்பெண் கணவரைநோக்கி “என் பிராணநாயகரே, நமது நபிநாயகம் (ஸல்) அவர்களின் மகிமையை நான் சரிவரக் கண்டறிய வில்லை. இன்று தான் என் மனம் அதிரத்தக்க விதமாய் உரோமங்கள் சிலிர்த்தன. அவர்கள் உண்மையான நபியே” என்று வியந்து சொன்னாள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளான விருந்துண்ண வந்திருந்த அனைவரோடு அங்கிருந்து எழுந்து, முன் போல அகழ் தோண்டும் வேலையில் பிரவேசித்தார்கள். முன் குறித்தபடியே பத்துபத்துப்பேர் ஒன்றாய் நின்று, சுரு சுருப்பாய் வேலைசெய்தார்கள். அதிகவிரைவில் அகழ்வேலை முடிந்து, நீர் நிரம்பி, நகரத்தை வளைந்து விளங்கிற்று. அவ்வகழின் இருபுறமும் கரைவரம்பு இயற்றித் திடப்படுத்தினார்கள்.

மதீனமாநகரத்தின் பாதுகாப்புக்காகத் தோண்டப்பட்ட அகழ் மிகுதிடனையின் நகரம் காக்கப்பட்டது. நபிநாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் யுத்த கருவிகளையும் தீன் சாமான்களையும் சேகரித்து வைத்துக் கொண்டு, இனி வரப்போகிற பயங்கரமான யுத்தத்தை வழிபார்த்திருந்தார்கள்.

86—வது அத்தியாயம்.

உயை படையெடுத்து வந்தது.

கலிச்சந்த விருத்தம்.

தயையன்பருள் பொறையின்புயர் தருமத்தனி யுருவா
மியையுந்திரு நபிதங்கிய வெழிலுற்றிடு பதியா
மியைதுன்றிய மதீனத்தனி லிகல்வம்புசெய் திடவே
உயையென்பவன் படைதுன்றிட வுறுகின்றதை மொழிவாம்.

இதன் பொருள்.

தயவு, அன்பு, அருள், பொறுமை, இன்பம், உயர்ந்த தருமம் இவை யாவுமோருருவாய்ப் பொருந்தும் திவ்விய நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிருந்து, அழகுலாவிக் கொண்டிருக்கும் நகரமாய்ப் புகழ்பெறுந் திருமதீனமா நகரத்திற் பகையோடு

வம்பு செய்திட உயை என்பவன் படைகள் நெருங்க வருகின்றதைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சுற்றுன வேந்தர் பல் பெருங் குலத்திற்
றோன்றிய வரசரு மவரோ
டுற்ற வெம் படையும் பனீக்குறை லாவென்
றோதிய மாந்தருங் கபடம்
பற்றிய வெஹூதிக் குழுவின ரவரும்
பரிவொடு மக்கமா நகரிற்
றெற்றினர் வளைந்த மூகக் குசைப் பரியுஞ்
செறிந்திடத் திரைக்கடல் சிவண.

வசனம்.

காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் தங்கள் இராஜதானியாகிய மதீனமா நகரத்தை சூழ ஆழ அகலத் தோண்டிப் பாதுகாப்புச் செய்து, அஸ்ஹாபிகள் அநேகர் புடைசூழ, சத்துருக்கள் வரும் வரவை எதிர் நோக்கி யுத்தப் பிரயத்தனத்தோடு இருந்தார்கள். இனி மதீனாவில் திகிலுண்டாகத் தக்க பயங்கரமான யுத்தம் உண்டாகு மென்று இராஜ்ஜிய மெங்கும் பிரஸ்தாப மாயிருந்தது.

இவ்வாறிருக்கையில், மக்கமா நகரத்தில் யுத்தமுயற்சி யனைத்தும் தீர்ப்பாய் முடிவு பெற்று, சேனைகளும் பல வகுப்புக்களாய்த் தயாராயின. பின்னர், உயை உடைய கட்டளைப்படி தன்னோடுவந்த ஒவ்வொரு கூட்டமும் அதனதன் தளவாய்கள் அதிகாரத்தின் கீழாய்ப் பிரயாணமாயின. எல்லாச் சேனைகளும் பிரயாணமான போது மக்கமா நகரம் சேனா சமுத்திரத்தால் மூடப் பட்டது. எல்லாச்சேனைகளிலும் அடிபடும் ரணபேரிகைகளின் பேரொலி அண்டம் அதிரத்தக்க விதமாய் ஒலித்தது. சேனைகள் தோறும் பிடிபட்ட யுத்த விருதுகள் கணக்கின்றி மலிந்து எங்கும் காடாயிருந்தது. குதிரை வீரர்களாலும், காலாட்களாலும், எழும் புழுதிகள் ஆகாயத்தைக் காணரிய விதமாய் மறைத்துக் கொண்டன. இரதம், கஜம், துரகம், பதாதி என்னும் சதுரங்க சேனைகள்

பலவகுப்புகளாய் மக்கமா நகரத்து எல்லையிலிருந்து புறப்படும் தோற்றம், சமுகத்திரம் ஒரு புறம் வழிந்து பிரவாகமாய் வரும் பாவனையாயிருந்தது. சர்வசேனாதிபதியாகிய உயையின் அதிகாரத்திலிருந்த சேனைகள் அனைத்தும் புறப்பட்டபின், மக்கமா நகரத்து இராணுவங்களும் எழுந்தன. அவ்விராணுவத்தின் சர்வசேனாதி பதித்துவம் அபாஸுபியானுடையதா யிருந்தும், சேனை நடத்தும் அதிகாரம் உயை வசமே யிருந்தது. ஒவ்வொரு சேனைத் தலைவர்களும் தத்தம் சேனைகளுக்கு உபசேனாதிபதிகளாய் நியமிக்கப்பட்டு, உயை உடைய அதிகாரத்தின் கீழ் அடங்கி யிருந்தார்கள். இவ்வாறான சேனைத்திரளனைத்தும் மக்கமா நகரத்திலிருந்து மதீனமா நகரத்தை நோக்கி நடந்தன.

மதீனமா நகரத்தின் மேல் படை யெடுத்து வரும் மாற்றார் தளம் அனைத்தும் சிரேஷ்ட சேனாதிபதி யாகிய உயையின் அதிகாரத்தில் அடங்கியிருந்தாலும், உபசேனாதிபதிகளாய் நியமனம் பெற்றுள்ள அவ்வச்சேனைத்தலைவர்களால் நடத்தப்பட்டன.

அஸது கூட்டத்து ஆயிரங்குதிரை வீரர்களுக்கும், அநேக காலாட்களுக்கும், மாலிக்மகன் ஒளபு என்பவன் தளகர்த்தனாய் நடத்தினான். கத்துபான் கூட்டத்து ஆயிரங்குதிரை வீரர்களுக்கும், அநேக காலாட்களுக்கும், ஹஸனுடைய குமாரன் உயையினா என்பவன் தளகர்த்தனாய் நடத்தினான். தன் ஜாதியாராகிய கணக்கற்ற யூதர்களும், துரோகிகளாகிய பனீகுறைலாக்களும் உயை என்னும் சிரேஷ்ட சேனாதிபதியால் நடத்தப்பட்டார்கள். ஹப்ஷிகளிலும், கனானக் கூட்டத்தார்களிலும் ஐயாயிரங்குதிரை வீரர்களடங்கிய சேனை யொன்றிற்கு அபூஜஹலுடைய குமாரன் இக்ரிமா தளகர்த்தனாய் நடத்தினான். அறபிக்காபிர்களிலும், குறைஷிக்காபிர்களிலும் ஐயாயிரங்குதிரை வீரர்களடங்கிய ஒரு சேனைக்கு கர்புமகன் அபாஸுபியான் தளகர்த்தனாய் நடத்தினான். அன்றியும், வேறுசில சேனையின் சில்லறை வகுப்புகள் தத்தம் தலைவர் அதிகாரத்தின் கீழ்சென்றன.

இச்சேனா வகுப்புகளிலுள்ள ரணவீரர் ஒவ்வொருவரும் சினத்தால் ஸ்மரணையற்று, பந்தயம் பகர்ந்தவண்ணமாய் ஆர்ப்பரித்துச் சென்றார்கள். மக்கா மதீனா என்னும் இருபிரதான நகரங்களுக்கும் இடையிலுள்ள அகன்றபூமி மாற்றார் தளத்தினால்

மூடப்பட்டது. பார்க்குமிடமெங்கும் படை முரசுகளின் கோஷமும், யுத்தவிருதுகளின் நிரையும், வாகனங்களின் நெருக்கமுமாகவே யிருந்தது. யுத்தசுளவாடங்கள் சுமந்து செல்லும் வாகனங்களும், அவற்றின் பார மரிப்புக்காரர்களும் திரள் திரளாய் பார்வைக்குத் தோற்றப் பட்டு, தில்ல வரத்தக்க விதமாய் விளங்கினமையால் வழிகளிலுள்ள குடிகள் அஞ்சித் திகைத்தார்கள். இப்படைவகுப்புகள் செல்லும் தாங்கரிய கொடுமையால், அநேக கிராமங்கள் பாழாயின. அலங்காரமான தோப்புகள் அனந்தம் நாசஞ் செய்யப்பட்டன. குதிரை வீரர்களும், காலாட்களும் அணியணியாய், ஆயுதங்கள் வெயிலை யொத்து ஒளிர, பேரிகைகள் பலதானத்திலும் முழங்க, பூலோக நடுங்கி யதிர, பர்வதங்கள் அசைய, மேகஜாலங்கள் அதிதூரம் ஓடிமறைய, வனங்கள், வனாந்தரங்கள், மலைகள், பாடிகள் எல்லாவற்றையும் கடந்து கடந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்டுள்ள மதீனமா நகரத்து அகன்ற பூமியின் எல்லைக்கு உள்ளானார்கள்.

இவ்வாறு மதீனமா நகரத்து எல்லைக்கு உள்ளே பிரவேசித்த சேனாவகுப்புக்களில் ஒளபு, உயையினா என்னும் இவ்விரு தளபதிகளும், தத்தம் இராணுவங்களோடு மதீனமா நகரத்திற்குக் காததூரத்திலுள்ள (முன்யுத்தம் நடந்த) உஹது மலைச் சாரலில் பாளையமிறங்கினார்கள். அம்மலைச்சாரலையடுத்த ஒரு அடவியில் தன்னோடு வந்த யூதர்கள் பனீகுறைலாக்கள் என்னும் இருஜாதியாகிய சேனைகளோடு சிரேஷ்ட சேனாதிபதியான உயை பாளையமிறங்கினான். பதினாயிரம் குதிரை வீரர்களடங்கிய இரு வகுப்பான சேனைகளுக்கும் அதிபதிகளாகிய அபாஸுபியானும், இக்ரிமாவும் தமது சேனா சமுத்திரத்தோடு றூமா என்னும் தலத்தில் பாளையமிட்டார்கள்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உடம்பினை யழைத்து மறைமொழி யதனை
லுலகிரு ளகற்றிய நபியும்
விடம்புகு படைக டாங்கிய தரும
வேந்தர்மூ வாயிரர் குழுவு

முடந்தரு முகப்பாய் பரிபல மலிய
மொய்க்கின்ற வானவர் வாழ்த்தத்
தடம்பயி னகரச் சுற்றினு மோம்பி
யிருந்தனர் தனியவ னருளால்.

வசனம்.

மாற்றார்தளம் இவ்வாறு பலபிரிவுகளாய்ப் பாசறைவகுத்துப் பாளையமிட்டிருக்கும் சமாசாரம் மதீனமா நகரத்திற்கு வந்தது. இச் செய்தி யெட்டிய அப்பொழுதே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அருகர் நால்வரையும், வேறு பிரதானமான அஸ்ஹாபிகளையும் அழைத்து தகுந்தபடி ஆலோசித்து, தற்காப்பு செய்வதற்கே முடிவுப் பண்ணிக்கொண்டு, சேனாவீரர்களைத் தயார்செய்தார்கள். அப்போது யுத்தத்திற்காகப் போர்க்கோலம் புனைந்த குதிரைவீரர்களில் மூவாயிரம் அஸ்ஹாபிகள் தயாரானார்கள். மேற்படி மூவாயிரம் போர் வீரர்களையும் மதீனமா நகரத்திற்கு வெளிப்புறத்தில் கூடாரங்களிட்டு, நகரத்தைக் காத்துக் கொண்டிருக்கும் வண்ணம் திட்டஞ் செய்து, தாங்களும் தங்கள் அருகர்களும், வேறுசில பிரதான தலைவர்களுமாக நபிநாயகம் (ஸல்) அவர்களும் ஒரு புறம் நகரத்தைக் காத்திருந்தார்கள். இப்படியே நபிநாயகம் (ஸல்) அவர்கள் மூவாயிரம் குதிரை வீரர்களோடு நகரத்தைக் காவல் செய்துகொண்டு, வெளிப்புறத்தில் பாளையமிட்டிருந்தார்களன்றி, வேறு பிரயத்தனம் ஒன்றும் செய்யவில்லை.

இவர்கள் இங்கே இப்படியிருக்கையில், அங்கங்கே பாளையமிட்டிருக்கும் மாற்றார்கள், ‘நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை முன்னோக்கி வரும்; நாம் அடர்ந்து போர் செய்யலா’மென்று காத்திருந்தார்கள். சிலநாள் வரையும் இவ்வெண்ணத்தோடு சத்துருக்கள் வழிபார்த்திருந்தும் அஸ்ஹாபிகள் எதிர்செல்லாமையால், உபை முதலான எல்லா தளகர்த்தர்களும் சினங்கொண்டு, அநேக குதிரை வீரர்களையும், பதாதிகளையும் வெவ்வேறு பிரிவுகளாகப் பிரித்து, மதீனமா நகரத்துக் கிராமங்களை யெல்லாம் கொள்ளையிடத் தலைப்பட்டார்கள். அநேக குடிகளைச் சங்கரித்து, கிராமங்களைப் பாழாக்கினார்கள். அங்கங்கேயுள்ள பாடிகளை யெல்லாம் நாசம் பண்ணி நிரை கவர்ந்தார்கள். மதீனமா நகரத்தை சூழ்ந்துள்ள சிங்கார வனங்கள் முற்றும் சின்னபின்னமாயின. இவையன்றி

இன்னும் பல நியாயக் கேடான நிஷ்டூரங்களை யெல்லாம் தலைதடுமாறி நடத்தினார்கள். அன்றியும், மதீனமா நகர வாசிகளுக்கும் நாட்டுக் கிராம வாசிகளுக்கும் உணவுக்காக அயலிடங்களிலிருந்து வரும் நெல், கோதுமை, சோளம், வரகு, தினை, சாமை, ஈத்தங்கனி, திராக்ஷக்கனி இவைகளை வராமல் பாதைகளையும், கணவாய்களையும் சத்துருக்கள் கட்டிக்கொண்டு நிர்ப்பந்தப் படுத்தினார்கள். இவ்வகையாய்ச் சத்துருக்கள் செய்யும் தொந்தரையினால், கிராமங்கள் தாங்கரிய வில்லங்கத்திற் சிக்குண்டு வருந்திச் சங்கடப்பட்டன.

பார்க்குமிடம் எங்கும் காபிர்கள் பரவியிருந்து, கிராமங்களை வில்லங்கத்திற்கு உட்படுத்திக் கொண்டிருந்தார்கள். இப்படிச் சில தினங்கள் கழிந்தன. இதற்கிடையில், மாற்றார் தளம் முன்னேறி வரவுமில்லை. நபிநாயகம் (ஸல்) அவர்கள் எதிர்த்துச் செல்லவுமில்லை. இவ்வாறிருக்கையில், ஒரு தினம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தில் முந்திப் பிரதான தலைவரா யிருந்து ஆளுகை செய்த சிரேஷ்ட அதிபதியும் மஆது உடைய புத்திரருமாகிய சஃது (றலி) அவர்களை யழைத்து “கனம் மிக்க சஃதே! முன் என்னிடம் சமாதானமாய் வாக்குக் கொடுத்த பனீ குறைலாக்கள், இப்போது உபையுடன் சேர்ந்து நம்மோடு போர் செய்ய வந்திருக்கின்றார்களாம் அப்படியானால், எனக்குத்தந்த வார்த்தைப்பாட்டை அவர்கள் முறித்திருக்க வேண்டும். தாங்கள் மாற்றார் தளத்திற்சென்று, அது உண்மைதானோ வென அறிந்துவர விரும்புகிறேன். அதைத் தாங்கள் சென்று அறிந்து வந்து மேற்படி பனீ குறைலாக்கள் நமது பக்ஷத்திலிருப்பதாயிருந்தால், அச் செய்தியை என்னிடத்தில் பகிரங்கத்தில் சொல்லுங்கள். அப்படியன்றி, அவர்கள் துரோகிகளாய் நம்மோடு எதிர்த்துப் போர் புரியும் நாட்டத்தைக் கொண்டு உபை பக்ஷத்திலே யிருப்பதா யிருந்தால் அச்செய்தியை அஸ்ஹாபிகளறிந்து மனஞ் சலிக்காமலிருக்கும்படி என்னிடத்தில் மாத்திரம் இரகசியத்தில் சொல்லுங்கள்” எனக் கட்டளை பண்ணினார்கள். உடனே சஃது (றலி) அவர்கள் எழுந்து, ஒரு சாமானிய அறபியைப் போல வேஷந்தரித்து மாற்றார்களின் பாளையத்தை நோக்கிச் சென்றார்கள்.

சத்துருக்கள் சேனையில் சென்ற சஃது (றலி) அவர்கள் அறபிக்காபிர்கள், ஹபஷிகள், கனானக்கூட்டத்தார், கத்பான்கூட்டத்

தார், அசது கூட்டத்தார், யூதர்கள் ஆகிய இவ்வொவ்வொரு கூட்டத்தாரையும் அடுத்து, பனீ குறைலாக்கள் வந்திருக்கும் நோக்கம் என்னவென்று தந்திரமாக விசாரித்தார்கள். அவரவர்கள் வாய்ப்பிறப்பினால், மேற்படி பனீ குறைலாக்கள் போருக்கு வந்திருப்பதாகவே வெளியாயிற்று. இவ்விஷயத்தை சஃது (றலி) அவர்கள் தீரவிசாரித்து அறிந்து கொண்டு, அவர்களும், அவர்கள் வம்சமும், செல்வமும், திறமும் நாசமடையக் கடவன வென்று அல்லாஹுத்தஆலா இடம் துவா இரந்து சபித்து விட்டு, அங்கிருந்து மீண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து, பனீ குறைலாக்கள் கபடசித்தத்தோடு நம்முடன் போர் செய்யவே வந்திருக்கின்றார்களென்று, முன்னர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்னபடி இரகசியமாகச் சொன்னார்கள்.

பனீ குறைலாக்கள் கொடுத்த வாக்குத்தத்தத்தை முறித்துப் பகை சாதிக்கத்தான் வந்திருக்கின்றார்கள் என்னும் உண்மையை நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து சினந்து, பனீ குறைலாக்கள் நமக்கு இவ்வாறு மோசஞ்செய்ததால், நாமும் பகைவர்களுக்குக் கொடுக்கும் வார்த்தைப்பாடுகளை முறித்துத்தான் போடவேண்டுமென்று கருதி, தங்கள் அஸ்ஹாபிகளில் ஒருவரை அருகிலழைத்து "நீர் இங்கிருந்து போய் நமது சத்துருக்கள் அமைத்திருக்கும் பாசறைக்குள் சென்று, அங்கிருக்கும் சேனாதிபதிகளில் மாலிக் உடைய மகன் ஔபு, ஹசனுடைய மகன் உயைனா என்னும் இருதளபதிகளையும், பகைவர்கள் காணாமல் சந்தித்து, நீங்கள் இருவரும் உங்கள் அதிகாரத்தின் கீழ் அமைந்திருக்கும் சேனைகளோடு மற்றவர்களை விட்டு விலகி, போருக்கெழாமல் வேறு தானத்திற் போய் இருந்து கொள்ளுவீர்களானால், மதீனாவில் வருஷந்தோறும் உண்டாகும் கிருஷிப் பிரயோஜனத்தில், மூன்றிலொருபங்கு உங்களுக்குக் கொடுத்து வருகிறோமென்று இரகசியமாகச் சொல்லும்" எனச் சொல்லி அனுப்பினார்கள். அவர் அப்படியே புறப்பட்டு மாற்றார் ஒருவரும் அறியாமல் பாசறைக்குள் பிரவேசித்து, ஔபையும் உயைனாவையும் அந்தரங்கமாகச் சந்தித்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன பிரகாரம் சொன்னார். அதற்கு அவ்விரு தளகர்த்தர்களும் இணங்கி சம்மதித்தார்கள். அவர்கள் அதற்கு சம்மதப்பட்டுக் கொண்டதை அவர் மீண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் இக்காரியத்தை மதீனமாநகரத்துச் சிரேஷ்ட அதிபர்களாகிய மஆது உடைய குமாரர் சஃது (றலி) அவர்களுக்கும் தெரிவித்துத்தான் அவர்கள் சம்மதத்தின்படி நடத்த வேண்டுமேன்றெண்ணி, அவ்விரு அதிபர்களையும் அழைத்துத் தங்கள் சமூகத்தில் நிருத்தி தாங்கள் நடத்தின காரியத்தைச் சொல்லிக் காட்டினார்கள். அவ்விரு புருஷ சிகாமணிகளும் மதீனமா நகரத்து சர்வாதிகாரிகளாகையால், தங்களை இக்காரியத்தில் சிறிதும் உசாவாமல் தாங்களாகவே நடத்தினபடியால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பேரில் மனவருத்த முற்று, கிருஷிப் பிரயோஜனத்தில் மூன்றிலொரு பங்குகொடுக்க உடன்படுவதற்காகச் சினங்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலுல்லாஹ்! தாங்கள் இம்மதீனாவின் கிருஷிப் பிரயோஜனத்தில் வருஷவாரி மூன்றிலொருபங்கு காபிர்களுக்குக் கொடுப்பதாக உடன்பட்டது அல்லாஹுத்தஆலாவின் ஏவலைக் கொண்டா? அல்லது தங்களின் சுயேச்சையைக் கொண்டா? சொல்லுங்கள்" என மனம் புழுங்கி கேட்டார்கள். இவ்வாறு வெகுளி தோன்றக் கேட்ட சஃது, சயீது (றலி) இருவரையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் நோக்கி "மதீனாவின் சுயாதிகாரிகளாகிய கனவான்களே! நான் பகைவர்களுக்கு இவ்விதஞ் சொல்லி யனுப்பினது அல்லாஹுத்தஆலாவின் ஏவலல்ல; எனது சுயேச்சையாகவே சொன்னேன்" என உத்தரஞ் சொன்னார்கள். இதைக் கேட்ட அவ்விரு கனவான்களும் "யாறஸூலுல்லாஹ்! இவ்வாறு சொல்லத் தாங்கள் துணிவு கொண்டது, தங்களுடைய நன்மைக்காகவா? அல்லது தமியேன்களாகிய எங்களுடைய நன்மைக்காகவா?" என நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி மீண்டும் கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "இது என்னுடைய நன்மைக்காக அல்ல; நீங்கள் அனைவரும் யுத்தத்தில் பாடுபட்டு இரத்தம் சிந்தாமல், திரண்டு வந்த சத்துருக்கள் இலகுவில் கலைந்து போக உங்களுடைய நன்மைக்காக வேண்டியே சொன்னது" என விடை பகர்ந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் பகர்ந்த இவ்வுத்தம விடையைக் கேட்ட அவ்விரு பிரபுக்களும், நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரே அடுத்தடுத்து எதிர்த்துப் பேசுதல் முறைமை யல்லவேயென்றஞ்சி, மறுபடியும் மரியாதையோடு தாழ்ந்து "யாறஸூலுல்

லாஹ்! மதீனா வாசிகளாகிய நாங்களும், இப்போது தாங்கள் திரை கொடுப்பதாகச் சம்மதித்திருக்கும் கத்பான் கூட்டத்தார்களும், முன் ஒரே மதஸ்தர்களாய், மிக அந்நியோன்யமா யிருந்து காலம் போக்கினோம். அக்காலத்தில் எங்கள் இருதரத்தாருக்குள் வர்த்தகாதி சம்பந்த விஷயங்களில் அநேக உடன்படிக்கைகள் இருந்தன. இருந்தும், கிருஷிப் பிரயோஜனத்தில் சிறிதும் நாங்கள் அவர்களுக்குக் கொடுத்து வருவதாக யாதொரு எழுத்து மில்லை. ஆனால் மேற்படி கத்பான் கூட்டத்தார்கள் சில சமயங்களில் முட்டுற்றுக் கேட்கும் கிரயத்திற்கும், அவர்களில் எங்களிடம் வரும் அதிதிகளுக்கும் எங்கள் மதீனாவின் விளை பொருள்களில் சிலவற்றைக் கொடுத்து உபகரிப்போ மன்றி, வேறு வகையில் ஒரு ஈத்தங் காயையாவது அவர்களுக்கு இது பரியந்தம் நாங்கள் கொடுத்த தில்லை. ஒரு மார்க்கத்தாராய், அந்நியோன்யமாய் வாழ்ந்த காலத்திலேயே அப்படி யிருந்தால், இப்போது சமயபேத முற்று, சத்துருக்களாய்ப் போன பின் நாங்கள் எதைக் கொடுப்போம்? அப்படி எதையாவ்து அவர்களுக்குக் கொடுக்க நாங்கள் உடன்படுவோமானால், இராஜ தருமத்திற்கும், மதவைராக்கியத்திற்கும், வீரத்திற்கும், விஜயலாபத்திற்கும், ஜனாபிமானத்திற்கும், கீர்த்திக்கும் நியாய நிலைக்கும் பழுது உண்டாகுமல்லவா? படை யெடுத்து வந்த பகையர்களுக்குக் கீழ் படிந்து திரை கொடுப்போமானால், எங்கள் ஆண்மை பிறர் நகைப்பதற் கல்லவா குறியாகும்? ஆத்ம ரக்ஷை தந்தருள வந்த யாறஸூலல்லாஹ்! ஒப்பற்ற சத்திய வேதமாகிய குர்ஆனையும், முக்திதரும் பரிசுத்த மார்க்கமாகிய இஸ்லாத்தையும் நாங்கள் அடைந்து, நபிகளுக்கும் நபியாகிய தயாநிதியான தேவரீரை நபியாகப் பெற்று, பிரதி தினமும் பாத சேவை செய்து பலன் பெறும் சிலாக்கியம் எங்களுக்கு உண்டா யிருக்க, சத்துருக்களுக்குக் கீழ்படிந்து திரை கொடுக்க உடன்படுவது, எந்தக் காலத்திலும் உணடா? இனி எங்களுக்கு நேரிடும் கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவானாலும், தங்களையே பெரும் பாக்கியமாகக் கொண்ட நாங்கள் பகைவர்களால் சம்பவிக்கும் ஒரு கருமத்திற்கும் அஞ்ச மாட்டோம். யாறஸூலல்லாஹ்! தாங்கள் மனப் பூர்வமாகக் கண்டறியுங்கள். மகத்தான அல்லாஹு தஆலா பேரில் பிரமாணிக்கமாகவும், தங்கள் பேரில் பிரமாணிக்கமாகவுஞ் சொல்லுகிறோம். இனி மேல் அந்தப் பகைவர்களுக்கு நாங்கள் கொடுப்பது, எங்கள்

வாட்கள், வேல்கள், தண்டங்கள், அஸ்திரங்களாதியாயுள்ள ஆயுதங்களே யன்றி வேறில்லை. தாங்கள் நியமித்த நியமகத்தை நாங்கள் துணிந்து நிராகரிப்பதற்காக எளியேன்கள் மீது தயை கூர்ந்து மன்னிப்பருள வேண்டும்" என்று கூறினார்கள்.

சஃது, சயீது (றலி) இருவரும் இப்படிச் சினக்குறிதோன்ற மனோதைரியத்தாலும் அறிவாலும் பகர்ந்த கவுரவ வசனத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, இக்கனவான்கள் ஈமான் தரிபாடுற்று, இஸ்லாத்தை வளர்க்கும் பராக்கிரம நிபுணர்களென்று அகங்களிகூர்ந்து, உடனே அஸ்ஹாபிகளி லொருவரை மேற்படி ஔபு, உயைனா என்னும் இருதளவாய்களிடத்திலும் அனுப்பி முன்சொன்ன சமாதான வாக்கை முறித்து விட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் கிருஷிப்பிரயோசனத்தில் மூன்றி லொருபங்கு கொடுப்பதாக வாக்குகொடுத்து, பின்னர் அவ்வாக்கைத் தவிர்த்து விட்டதால், காபிர்கள் சினந்து யுத்தஞ் செய்யத் தயாரானார்கள்.

மேற்படி வாக்கு முறிப்பட்டவேளை அன்று பிற்பகல் இருபது நாழிகையிருக்கும். அப்பொழுதே மாற்றார் தளங்கள் ரணபேரிகை யார்ப்ப, அணியணியா யெழுந்து, நகர்க் காவலிலிருக்கும் அஸ்ஹாபிகளை நோக்கி எதிர்த்துவந்தன. மாற்றார்தளம் நெருங்கி வரும்போது அஸறுநேரம் அடுத்திருந்தும் தொழுவதற்கு அவகாசமில்லாமையால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் உடனே தங்கள் ராணுவ வீரர்களாகிய அஸ்ஹாபிகளை போர்க்கோலம் புனைவித்து, அணிவகுத்து நிறுத்தினார்கள். ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு சிரேஷ்ட தலைவர்களின் கீழ் நடத்தப்பட்டது. பகைவர்கள் ஆரவாரத்தோடு முன்னேறி வருவதைக்கண்டு, அஸ்ஹாபிகளும் யுத்த சன்னத்தர்களாய், தற்காப்பு செய்ய அணிபிரிந்து நின்றார்கள். சற்றுநேரத்திற்குள் பகைவர்சேனை சமுத்திரம் பொங்கி வழிந்தாற்போல அஸ்ஹாபிகள் மீது சரிந்தது. சரியுமுன் அஸ்ஹாபிகளனைவரும் கைகளில் ஆயுதங்களை யுயர்த்தி, தக்பீர் முழக்கத்தோடு பகைவர்மீது பாய்ந்து அடர்ந்து தாக்கினார்கள். இருவகைச் சேனையும் ஒன்றோடொன்று கலந்து நின்று சமர்செய்தன. இருதரத்தாரும் நெடுநேரம் வரையும் ஆயுதங்களைப் பிரயோகித்து நின்று பொரிட்டும், ஒருவர் உடலிலும் அற்ப ஊறுவது படவில்லை.

அத்தனை உபாயமாக நின்று பொரிட்டார்கள். காபிர்கள் அடுபடையும் முஸ்லிம்கள் தடுபடையுமானதால காபிர்களுக்குள் சேதப்படவில்லை. அஸ்ஹாபிகள் வெகுதந்திரமாக நின்று தடுபடை செய்தார்கள். இருவகையாரும் யுத்தோபாயஞ் சூழ்ந்து நின்று பொருவதால் தான் ஒருவருக்காவது ஊறுபடவில்லை

இருதாரத்தாரும் கொஞ்சநேரம்வரையும் இவ்வாறு நின்று போரிடும் பொழுது, இக்கிரிமாவும் அம்று என்பவனும் சிலராணுவ உத்தியோகஸ்தர்களுமாக, அநேகவீரர்களோடு முன்னேறி, புதிதாய் அகழ்ந்த அகழுக்கு அருகில் நெருங்கி வந்தார்கள். வந்தபோது ஆழ அகலமான அகழ் நூதனமாய்த் தோண்டப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்று, முஹம்மதும் அவன் சேனை வீரர்களும் நம்மை உபாயமாக மோசஞ்செய்யக்கருதி, முன்னில்லாத இவ்வகன்ற அகழை நூதனமாக அகழ்ந்து வைத்திருக்கின்றார்களென்றெண்ணி, சற்று அப்புறம் விலகி நின்றார்கள். மாற்றார் திரண்டு பிரிந்து அகழை யடுத்து நிற்பதை அலி (றலி) அவர்கள் கண்டு, அஸ்ஹாபிகளில் சிலரைக்கூட அழைத்துக்கொண்டு இக்ரிமாவும், அம்றும், அவர்கள் இராணுவவீரர்களும் மீண்டு மாற்றார் சேனையிற் போய்ச் சேர்ந்துகொள்ள வொட்டாமல் வழிகட்டி நின்றார்கள். அலி (றலி) அவர்கள் மாற்றார்சிலரை வழிமடக்கிக் கொண்டு நிற்பதை சஃது (றலி) அவர்கள், கண்டு அவர்களும் சில அஸ்ஹாபிகளோடு கூடப்போய் வழி மறித்து நின்றார்கள்.

அலி (றலி) அவர்களும், சஃது (றலி) அவர்களும் தங்கள் பின் நிற்கும் அஸ்ஹாபிகளோடு, இக்கிரிமா, அம்று என்னும் இருதலைவர்களின் ராணுவ வீரர்களை வளைந்து நெருக்கி, உக்கிரத்துடன் அடர்ந்து தாக்கினார்கள். அஸ்ஹாபிகள் தாக்கும் உக்கிரத்தில் பகைவர்கள் நெருங்குண்டு வருந்தினார்கள். பிரயோகிக்கும் ஆயுதங்களிலிருந்து உதிரம்பெருகி பிரவாகமொத்து ஓடிற்று. காபிர்கள் உறுப் புறுப்பாய் வெட்டுண்டு, பிரேதங்களாய் விழுந்தார்கள். அறுப்புண்ட சிரக்குவை, கரக்குவை, கால்குவை, குடர்க்குவை, துடைக் குவைகள் எண்ணற மலிந்தன. அன்றியும், கவந்தங்கள் அநந்தம் படுகள மெங்கும் கிடந்து துடித்தன. மாற்றார் தளத்து அசுவங்களும் அப்படியே அறுப்புண்டு, பிணங்களாய்க்

குவிந்தன. வெண்டயிர்த்தாழி உடைந்து சிதறினாற்போலத் தலைகள் உடைந்து மூளைகள் சிதறின. சற்றுநேரத்திற்குள் படுகளம் பிணக்காடாயிற்று. இவ்வாறு ஒருவரோடொருவர் கர்னகடூரமாகப் பொரிட்டு நிற்கும்பொழுது, சஃது (றலி) அவர்கள் தங்கள் துரங்கத்தை நடத்தி மாற்றார்தளத்து நடுவணியிற் சென்று, அடர்ந்து பொருது வேகத்தோடு நின்றார்கள். இவர்கள் இவ்விதம் துணித்துவந்த, நடுபடையில் நிற்பதைகாபிர்கள் கண்டு, அநேக பகையர்கள் திரண்டு சஃது (றலி)வை வளைந்து நின்றுகொண்டு அஸ்திரம், சஸ்திரம் என்னும் இருவகை ஆயுதங்களையும் அவர்கள் மீது பொழிந்தார்கள் காபிர்கள் பிரயோகிக்கும் ஆயுதவர்க்கங்களையெல்லாம் சஃது (றலி) அவர்கள் பரிசையாலும், வேறுகருவிகளாலும் தடுத்து நின்று, மன உற்சாகத்தோடு போர்செய்தார். அப்பொழுது, காபிர்கள் எய்த பாணங்களில் ஒன்று சஃது (றலி) அவர்களின் அகங்கையில் வந்து பாய்ந்து அப்புறம் ஊடுருவிப் போயிற்று. அதன் துவாரத்தால் உதிரம் பிரவாகித்து வழிந்தது.

சஃது (றலி) அவர்களின் அகங்கையில் பாணம் பட்டு ஊடுருவிச் சென்றதை அலி (றலி) அவர்கள் கண்டு, சினம்மீறி, தாங்கள் ஏறிநிற்கும் துரகநாயகமாகிய துல்துலை விசையாய் நடத்தி, மாற்றார்மீது ரணசிங்கம்போல விழுந்து தாக்கினார்கள். அலி (றலி) அவர்கள் ஏறியிருக்கும் அசுவம் ஒவ்வொரு குதியிலும் பலகாபிர்களை மிதித்து, உறுப்புகளைச் சிதைத்துக்கொல்லும்; வாயாற்கடித்து இரத்தஞ் சிந்தியோடச் செய்யும்; காற்றுடி போன்று சுழன்று, இடிவிழுந்தார்போல விழுந்து எழும். தங்கள் குதிரை இவ்வாறு பகைவரைக் கொல்லுவதல்லாமல் கையிலிருக்கும் அற்புதமமைந்த துல்பகார் என்னும் இருமுனைப்பட்டயம் அதிக தூரத்தில் நிற்கும் காபிர்களையும் நீண்டு சென்று இருபிளவாகப் பிளந்து சரிக்கும். சத்துருக்களில் பலர் சித்திரவதை யுண்டு மடிந்தார்கள். அநேகர் குறைப்பிராணியாய் விழுந்து கிடந்து பிராண சங்கடப்பட்டார்கள். தங்களுக்கு ஒருவரும் நிகராகாத வீரவானாகிய தெய்வவேங்கை யென்னும் மறுநாமம் வழங்கும் அலி (றலி) அவர்கள் செய்யும் சாமர்த்திரம் இவ்வளவென்று வருணிப்பது வானவர்களுக்கும் அசாத்தியமாகையால், அதைப் பற்றிஇங்கு விவரித்துப்பேச ஏழைமனுவாகிய நாம் எம்மாத்திரம்? சுருக்கிச்சொல்லுகிறோம். அவர்கள் குதிரை செல்லும் வழியில

இருமருங்கும் காபிர்கள் மாண்டு பந்தி பந்தியாகச் சரிந்தார்கள். உதிரம் ஆறாய் ஓடிற்று. உறுப்புகள் பல குவியலாய்க் குவிந்தன.

அலி (றலி) அவர்கள் உக்கிரத்தோடு அடர்ந்து தாக்குவதால், பகைவர்கள் எதிர்த்து நிற்க வசமற்று, அஞ்சித் திகைத்துப் பின் வாங்கினார்கள். தனது வீரர்கள் வெருக்கொண்டு தளஞ் சாய்வதை அம்று என்பவன் கண்டு, அவர்களுக்கு உற்சாகமூட்டி, குதிரையை நடத்திவந்து அலி (றலி) அவர்களை எதிர்த்தான். எதிர்த்த பொழுது, அலி (றலி) அவர்கள் அவனை நோக்கி, "சின்னஞ் சிறிய நீ, என்னோடு எதிர்க்கவந்தனையா? இதோ உன்னை இரண்டாகப் பிளக்கிறேன் பார்" எனக் குரலெழுப்பிச் சொல்லி, குதிரையை அவன் முன் திருப்பினார்கள்.

சரித்திர புராணம்

கலி விருத்தம்.

திசைக ளெங்கு மென் றெண்ணிச் சினத்தொடும்
விசையின் வாசி சுழற்றியின் மேலவன்
வசையி லாப்புலி முன்சென்று வாளினா
லிசைய வோங்கி யெறிந்தன னீங்கினன்.

எறிந்த தானை விலக்கி யிவனுடற்
பிறிந்தி ரண்டெனப் போம்படி பேரெழின்
மறிந்த வாளில் வழங்கினர் சோரிநீர்
செறிந்து வீழ்தர நந்தினன் றீயவன்.

வசனம்.

அதற்கு அவன் "அலியே! ஆண்மையறும் வண்ணம் நானே உன்னை சங்கரிப்பேன்" என்று கூறி, தன் கைப்பட்டயத்தை சுழற்றி யெறிந்தான். உடனே அலி (றலி) அவர்கள் அப்பட்டயத்தை விலக்கிக்கொண்டு, தங்கள் அருமைப் பட்டயத்தினால் அவனை வெட்டினார்கள். அவ்வெட்டு அவன் தலையில் பட்டு உடல் வகிரப்பட்டு, குதிரையி லிருந்து பிரேதமாய்த் தரையில் விழுந்து நரகத்திற் குடிபோனான்.

அம்று பிளப்புண்டு மாண்டதை அவன் பின் வந்த வீரர்கண்டு, திகில்பிடித்து, மறுபடியும் பின்வாங்கினார்கள். இந்த பயங்கரமான காட்சியைக் கண்டு நின்ற இக்ரிமாவும் வெருக்கொண்டு பின் வாங்கி

னான். மாற்றார் தளவகுப்பு அத்தனையும் ஒன்றின்பின் ஒன்றாய்த் தளஞ்சாய்ந்து, தங்கள் பாசறை போய்ச்சேர்ந்தன. அப்பொழுது அறபிக்காபிர்களில் ஒருவனாகிய நௌபல் என்பவன் மாத்திரம் வகை மோசமாய்த் தவறி, அகழில் விழுந்தான். அவனை அலி (றலி) அவர்கள் தூக்கியெடுத்து, தலையைத் தறித்து எறிந்தார்கள். இதற்குள் சூரியன் அஸ்தமன வேளையாயிற்று. அஸ்ஹாபிக ளனைவரும் ஜெயபேரிகையார்ப்ப யுத்த களத்திலிருந்து திரும்பி, காவல் ஸ்தானத்தி லிட்டிருக்கும் கூடாரங்களுக்கு வந்தார்கள். அம்று உடையதும் அகழில் விழுந்து கொல்லப்பட்ட வனுடையதுமான உடைகள், யுத்தக்கருவிகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அலி (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்தார்கள். வந்தவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அகங்களி கூர்ந்து, மருகரைக் கட்டித்தழுவி, யுத்த சாமர்த்தியத்திற்காக மெச்சி, ஆசிர்வதித்தார்கள்.

அன்று நடந்த போரில் காபிர்கள் அபஜெயமடைந்ததைப்பற்றி, அக்காலத்துப் பிரதான வித்வானாய் விளங்கிய ஹஸ்ஸானிபுனு தாபித் என்னும் புலவர் சிகாமணி வசைக்கவிகளால் ஒரு பிரபந்தஞ்செய்து, அப்பொழுதே நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் அரங்கேற்றினார். அதற்காக நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி நாவலருக்கு அநேக பரிசுகள் கொடுத்து, அவருடைய வாக்குச் சித்திரத்தைக் குறித்தும் வியந்தார்கள்.

போராடிக் களைத்த அஸ்ஹாபிக ளெல்லாரும் விடுதிகளுக்குச் சென்ற பின், அகங்கையில் பாணம் தைத்த காயத்தையுடைய சஃது (றலி) அவர்களும் தங்கள் கூடாரத்திற்கு வந்தார்கள். அவர்களுக்குக் கைப்புண் வேதனை அதிகமாயிருந்தும், அப்புண்ணுக்காக வேண்டி யாதொரு மருந்தும் வைத்துக் கட்டவில்லை. படுகளத்தில் மாற்றார்களோடு எதிர்த்து நின்று போராடி, அகங்கையில் காயம் வாங்கினது அவர்கள் இருதயத்திற்கு அதிக ஆனந்தமா யிருந்தது. அதனால், மேற்படி புண்ணுக்கு ஔஷதப் பிரயோகம் ஒன்றும் செய்யாமல், மகத்தான அல்லாஹு தஆலாவிடம் தங்கள் கோரிக்கைக்காக துஆ இரந்து மன்றாடவேண்டி, ஒரு தனி இடத்தில் உட்கார்ந்துகொண்டு, அதிக பக்தியோடும் மனவுருக்கத்தோடும்

தங்கள் கைகளை உயர்த்தி யேந்தி, கீழ்வருமாறு வசனித்து மன்றாடினார்கள்:-

"யா அல்லாஹ்! நீ உனது பணிவிடைக் காரர்களாகிய வானவர்களாலும், தூதர்களாகிய மகாத்மாக்களாலும், வேதத்துவமுணர்ந்த நிபுணர்களாலும் கண்டு கேட்டறியக்கூடாத அகோசரப் பொருளாய், தேஜோமயமாய், சர்வாதிகாரியாய், என்றும் விளங்கும் நித்திய தத்துவமுள்ளவன். உன் உறைவிடம் இன்னதுதான் என்றும், உன்கோலம் இப்படித்தானென்றும், உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகள் எல்லாவற்றாலும் குறிப்பிடுதல் அசாத்தியம். அப்படியிருக்க, எனது ஆத்மத்தையும், ஜடத்தையும் இன்ன தன்மையான தென்று பகுத்துணரும் திராணியற்ற எளிய மனுஷனாகிய நான், அதீத வஸ்துவாகிய உன் தன்மையையும், உனது திருவிளையாட்டையும், தெரிந்து தெளிவது எவ்விதம்? ஆனால், உன்னை ஆராய்ந்தறியும் தகுதியற்ற நான், எனது குற்றங்குறைகளையெல்லாம் மன்னித்து, இரக்ஷிப்பருளி, ஆத்மலாபம் பெறச் செய்ய வேண்டுமென்று உனது சமூகத்தில் ஓயாமல் மன்றாடிக் கேட்கும் பாத்தியம் ஒன்று மாத்திரம் எனக்குண்டு. அந்தப் பாத்தியத்தை முன்னிட்டு எனக்கு ஆகவேண்டிய நியாயமான சத்கருமங்களைப் பற்றி, பின்னும் பின்னும் உனது சந்நிதியில் துஆ இரந்து கேட்க நான் துணிகின்றேன். எனது இரத்தலனைத்திற்கும் நீ நன்மையாக உபகரிப்பாயென்று நான் முழு இருதயத்தோடு நம்பி, இந்தத் தறுவாயிலும் உன்னிடம் ஒன்றைக் குறித்து மன்றாடுகிறேன். அதாவது, தெய்வத் துரோகிகளும், எங்கள் சத்துருக்களுமாகிய மக்கமா நகரத்து குறைஷிக் காபிர்களின் பகைமை, நாளுக்குநாள் முதிர்ந்து மேன் மேலும் தளர்ந்து வரும் நிலைபரத்திலிருந்தால், சமீபகாலத்தில் என்னை மரணத்திற்குட் படச்செய்யாமல், என் ஆயுளை நீளச்செய்தருள். மேற்படி காபிர்களின் பகைமை இனி வரவரத் தேய்ந்து அழிந்து போகும் ஸ்திதியிலிருந்தாலோ, பாணம் தைத்த கைக்காயத்தோடு இப்போதே பீஸபீலில் தேகவியோகம் அடையும்படி கிருபை செய்தருள்" என ஸஃது (றலி) அவர்கள் கண்ணீர் சிந்த அழுது, மன்றாடி துஆ இரந்தார்கள்.

அன்று பிற்பகல் ஆரம்பமான போரால் தவறிப்போன அஸறு தொழுகையைக் குறித்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் பச்சாதாபப்

பட்டு, அவர்களும் அல்லாஹுத் தஆலா இடம் துஆ இரந்து, மன்னிப்புப் பெறுவதற்காக வேண்டி மன்றாடத் தொடங்கி, ஒரு தனியிடத்திலிருந்து கொண்டு, ஒப்பற்ற கரங்களிரண்டையும் உயர்த்தி மனங்கரைந்து கண்ணீர்சோரக் கீழ்வருமாறு பிரார்த்தித்தார்கள்:—

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அஞ்சொகுத்துந் தப்பாது கடன்கழிப்ப
  நாடோறு மளித்தேற் றந்தோ
வஞ்சமுறுங் குபிரவரா லோர்வணக்கந்
  தாறுது வருந்தி நின்றேன்
மிஞ்சுகதி வினைப்பயனே யுலகமெங்கும்
  பெருங்காட்சி விரித்த கோவே
தஞ்சமுறை யுனையடைந்தே னித்தகைமை
  பொறுத்திரக்கந் தாங்கு வாயே.

தாயளித்த செல்வ மென்றுந் தந்தைதருஞ்
  செல்வமென்றுந் தவத்தி னேய்ந்த
சேயளித்த செல்வமென்றும் பிறரளித்த
  பலனி தென்றுந் திறமை வேந்தர்
கூயளித்த செல்வமென்றுஞ் சிறியோர்க
  ளறியாது குரைப்ப தெல்லாம்
நீயளித்த செல்வமன்றோ பெரியோர்க
  டம்மனத்து ணிமிர்ந்து நின்றாய்.

காணாத பெரியவனே காண்பதற்கு
  மெளியவனே கவினு மேனி
யாணாக வலியாகப் பெண்ணாக
  வமைந்தவனே யவையு மென்றும்
பூணாத காட்சி யனே புணர் வுணர் வுண்
  டில்லவனே புகலா நின்ற
வாணாளு முடையவனே வல்லவனே
  உன்பெருமை மதிப்பா ரியாரே.

பொல்லாத வஞ்சகறை தெளியாத
மனத்தவரைப் புன்மை யோரைக்
கல்லாத கயவரெனுங் குபிரவரை
வேகமறக் களைந்து நானு
மெல்லாருந் தொழுமரிய தீனைவளர்
துறுவிஷய மேற்கித் தான்வா
யல்லாவே யல்லாவே யென்றி ரங்கிப்
புகழ்ந்து புகழ்ந் தறைந்தார் மன்னே.

வசனம்.

"யா அல்லாஹ்! யாகரீம்! யாறஹீம்! நீ துப்புரவானவன்; வல்லமை யுள்ளவன்; அறிதற்கரியவன்; நித்தியமானவன் என்றாலும் இன்னும் எவராலும் வருணிக்கும் வருணனைக்குள் அடங்காத அதீதி, உன் மகிமையை அளந்தரிதல் அசாத்தியம் அப்படியிருக்க குறிப்பாலுணரும் ஞானஉணர்ச்சியற்ற இலக்ஷக்கணக்கான துரோகிகள் உனது சக்தியை அறிவிக்கும் போதனைப் பிரசங்கத்திற்குச் செவிசாய்த்தால், இப்பிர பஞ்சமாயையில் சிக்குண்டு, சிருஷ்டிகளைத் தெய்வமென்று நம்பி, அவமே பாழாக்குகின்றார்கள். அவ்வித துஷ்டர்களின் மனதைத் திருப்பி எனக்குக் கீழ்ப்படிந்து வரச் செய்தருள். திருந்தாத துரோகிகளை முற்ற முடிய நாசமாக்கி, எனக்கு நேரிடும் பிரதிபந்தங்களைத் தவிர்த்து, மனுஷர்களை உனது மேலான சமுகத்தில் கொண்டுவரும் இஸ்லாம் என்னும் பரிசுத்த பாதையை ஸ்திரப்படுத்தியருள். அன்றியும், உனது அடியேனாகிய நானும், என்னைத் தொடர்ந்த மற்ற அடியார்களும் உன்னை வணங்குவதற்காக வேண்டி நியமித்துள்ள ஒவ்வொரு தினத்து அவ்வைந்து வேளைகளிலும், குறிப்பிட்ட அன்று தொடங்கி இது பரியந்தம் ஒரு வேளையாவது தவறவிடாமல் தமியேன் வணங்கி வந்தேன். இப்போது சமுத்திரம்போலப் பரந்து வந்திருக்கும் பகையர்களால் இந்த அஸறு தொழுகை தவறிப்போயிற்று. அதற்காக அடியேன் மிக அஞ்சி, மன்னிப்புப் பெறுவதற்காக, உனது கருணை என்னும் தண்ணிழல் ஆதரவில் ஒதுங்குகின்றேன். என்னை ரக்ஷித்தருள்."

இவ்வாறு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மன்றாடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்போது, மாற்றார் சேனையிலுள்ள

கத்துபான் கூட்டத்தாரில் ஒருவர் தனித்து நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்தார். பிறரறியாமல் ஒளித்து வந்த அவர் நபி நாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்து நின்று பின் வருமாறு சொல்லுகின்றார்.

"அகில ரக்ஷகராகிய யாறஸூலல்லாஹ்! தங்கள் மேலான சந்நிதானத்தில் பணிந்து நிற்கும் எளியேனாகிய நான், கத்பான் கூட்டத்திலுள்ள மஸ்ஊது உடைய குமாரன் நுகைம். நான் பிராயமடைந்த அந்நாள் முதல் நாளது வரைக்கும், பழிபாவங்களுக்கு அஞ்சாமல், துன்மார்க்கத்தில் பிரவேசித்துக் காலங் கழித்தது மல்லாமல், எப்போதும் காபிர்களுடைய சகவாசத்திலேயே இருந்து, சுமக்கரிய பாவச் சுமையை சுமந்து கொண்டு திரிந்தேன். அச்சுமையைச் சுமந்து தாங்க மாட்டாது தத்தளித்த போது, எனக்கு ஞான வுணர்ச்சி பிறந்தது. அப்போதே தங்கள் பாத தாமரைகளை அடைய வேண்டு மென்னும் பேராசை என் உள்ளத்தில் முளைத்தது. என் மனக்கண் திறந்து நல்வழியை நாடி, தங்களை யடைய விரும்பின படியால், அதற்கு வழி பார்த்திருந்து, எங்கள் கூட்டத்தார்கள் இங்கே வர எத்தனப்பட்ட போது நானும் தந்திரமாக கூடவந்து, சமயம் பார்த்திருந்தேன். இப்போது எனக்குக் கிடைத்த அவகாசத்தால் அங்கிருந்து ஒருவரும் அறியாமல் புறப்பட்டு தேவரீருடைய திருமுன் வந்து சேர்ந்தேன். இனி நான் ஈடேறத்தக்கதாக ஆத்மரக்ஷை தந்து முக்தியிற் சேர்க்கும் திரு மந்திரமாகிய ஒப்பற்ற கலிமாவைப் போதித்து, என்னை ஆட்கொள்ள வேண்டும்" எனக் கூறினார். அதைக் கேட்ட நபி நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷ மடைந்து, அவருக்குக் கலிமாவைப் போதித்தார்கள். மேற்படி நுகைம் ஈமான் கொண்டு முஸ்லிமாய், மார்க்க நிபந்தனைகளையும் சுருக்கத்தில் கேட்டறிந்து கொண்டு எழுந்து நின்று, நபி நாயகம் (ஸல்) அவர்களை மீண்டும் நோக்கி "யாறஸூலல்லாஹ்! நான் மாற்றார் பாசறையிற் சென்று, காபிர்கள் மனத் திடன்குன்றி ஒருவரோடொருவர் மாறுபட்டு, கலகம் விளைத்துக் கொண்டு தம்மிலே கலைந்து போகும் வண்ணம் இப்போதே தந்திரஞ் செய்து, ஒருவராவது இங்கிராமல் துரத்தி விடுகிறேன். தேவரீர் ஆசிர்வதித்து விடை தாருங்கள்" என்றார். அதற்கு நபி நாயகம் (ஸல்) அவர்கள் களி கூர்ந்து விடை கொடுத்து அனுப்பினார்கள்.

தந்திரமிக்க நுகைம், நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு, தமது ஜாதியாரும் மற்ற பகைவர்களும் இருக்கும் பாசறையை நோக்கி வந்தார். அப்போது காரிருள் மிகுதியால், ஒருவரை யொருவர் அறியக்கூடாத வண்ணமாயிருந்தது. அவ்விருட் போதிலே மேற்படி நுகைம் அங்கெங்கே போகாமல், நேரே யூதர்களுடைய பாளையத்திற்கு வந்தார். அப்போது எக சேனாதிபதியாய் வந்த உயை, கவிறு வமிசத்தார் பலர் புடை சூழ வீற்றிருந்து சம்பாஷணை செய்து கொண்டிருந்தான். நுகைம் அவனது சபையிற் சென்ற போது, இவரை நோக்கி "நுகைமே, வாரும்; இரும்" என உபசரித்தான். அப்போது நுகைம் அந்த உயையின் அருகில் தாழ்மையோடு உட்கார்ந்தார். உட்கார்ந்தபின் உயை, இவரை நோக்கி "நுகைமே! நீர் இப்போது இங்கு வந்த காரணம் என்ன?" எனக் கேட்டான். அதற்கு நுகைமு உயையை நோக்கிப் பின்வருமாறு சொன்னார் :—

"குலமகனாகிய கஹறபு உடைய இரத்தப் பழிக்குப் பதில்பழி வாங்க வேண்டி, அதிக பாடுபட்டு இத்தனை சேனை வெள்ளத்தோடு புறப்பட்டு வந்த மனவைராக்கிய முள்ள சௌரியமிக்க அதிபதி! தமியேன் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய முக்கிய விஷய மொன்றுண்டு. அதற்காகவே இந்த இருள் வேளையில் தனிமையாக நான் இங்கே வந்தேன். நான் சொல்லப் போகிற சமாசாரத்தைத் தேவரீர் கருத்தாய்க் கேட்க வேண்டும். அதாவது: நேற்றிரவு, முஹம்மது நபி யிடத்தி லிருந்து எங்கள் தளகர்த்தர்களாகிய மாலிக் இடத்திலும், உயையின இடத்திலும் தூதன் ஒருவன் வந்து, நீங்கள் இருவரும் உங்கள் சேனைகளை மீட்டுக் கொண்டு, எங்களோடு சண்டை செய்யாமல் அப்புறப்பட்டு இருந்து கொள்வீர்களானால், உங்களுக்கு வருஷவாரி இன்னது இறை கொடுத்து வருகிறோ மென்று சொன்னான். அதைக் கேட்ட அவ்விருவரும் பொருளாசைக் கொண்டு, அப்படியே அவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். பிறகு மேற்படி தூதன் அங்கிருந்து அறபித் தலைவர்களாகிய அபாஸுபியான், இகிரிமா இருவரிடத்திலுஞ் சென்று, எங்கள் தளபதிகளிடம் சொன்னது போலச் சொன்னான். அதற்கு அவர்களும் சம்மதித்து உடன் படிக்கை செய்து கொண்டார்கள். இது எனக்கு நன்றாய்த் தெரியும். காரியம் இவ்வாறு முடிந்திருப்பதால், இனி

யுத்தம் தொடங்கும் போது மேற்படி தலைவர்கள் தங்கள் கூட வந்து யுத்தஞ் செய்ய உடன்பட மாட்டார்கள் அவர்கள் அதிகாரத்தின் கீழிருக்கும் சேனைகளை மீட்டுக் கொண்டு, தங்கள் தங்கள் ஊருக்குப் போய் விடுவார்கள். பிறகு தாங்கள் தனித்துக் கொள்ளுவீர்கள் முஹம்மது நபியுடைய தளத்தோடு தனித்து நின்று போரிட்டு ஜெயம் பெற தங்களால் மாளாது. அப்போது பகைவர் தங்களைச் சிறை பண்ணி விடுவார்கள். இதைப் பற்றி நான் அதிகமாக சிந்தித்து, ஒரு உபாயஞ் செய்து முடிவு பண்ணிக் கொண்டு வந்திருக்கிறேன். தாங்கள் மறுக்காமல் அப்படியே செய்ய வேண்டும். அதாவது: தாங்கள் பகைவர் கையில் அகப்பட்டுக் கொள்ள இடங் கொடுத்து விட்டு, அவரவர்கள் தப்பிக் கொண்டு போய்விட வொட்டாமல், அந்தரங்க உடன்படிக்கை செய்து முஹம்மது நபியுடன் சமாதானப் பட்டிருக்கும் மேற்படி ஒவ்வொரு தளகர்த்தர்களையும் தாங்கள் அழைத்து, அவர்களிடத்தில் பிணைப் பத்திர மொன்று எழுதி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்தால், அவர்கள் பிசக இயலாது. இது தான் புத்தி. இல்லாவிட்டாலோ, உண்மையாகத் தங்களை அவர்கள் கை விட்டு விடுவார்கள். அப்போது தாங்கள் மனம் நொந்து தவிப்பீர்கள். அப்படி நேரிடாமல், இப்பொழுதே தக்க ஆதாரம் செய்து கொள்ளுங்கள்" என்றார்.

நுகைம் உபாய தந்திரமாக சொன்ன இச்சொல்லை உயை கேட்டு மனம் புழுங்கி, இது வாஸ்தவந்தா னென்று நுகைமை நோக்கி "ஆ! துரோகிகள் இப்படியா செய்து விட்டார்கள், இவர்களை நம்பியல்லவா நான் அழைத்து வந்தேன் நல்லது இருக்கட்டும்" எனச் சினந்து சொல்லி விட்டு, அவர்களை முற்ற முடிய வெறுத்து கோபக் தீபற்றி பெரியக் கவலையாய் சிந்தித்துக் கொண்டிருந்தான் பிறகு நுகைம் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு, அங்கிருந்தெழுந்து அபாஸுபியா னிருக்குங் கூடாரத்திற்கு வந்தார். அபாஸுபியான் நுகைமை உபசரித்து அழைத்து, அருகிலிருக்கச் செய்து "பிரியமிக்க நுகைமே! நீர் இந்நேரத்தில் இங்கு வந்த காரணம் என்ன?" என விசாரித்தான். அதற்கு நுகைம் அபாஸுபியானை நோக்கிப் பின் வருமாறு சொன்னார்:—

"ஹறுபு பெற்ற பாக்கிய குமாரரே! இப்போது நமது பெருஞ் சேனையில் துராலோசனை யொன்று நடந்திருக்கின்றது. அதை நான்

என்னென்று சொல்லுவேன்! அத்துராலோசனை செய்திருப்பதும் வேறொருவரல்ல; நமது தளபதியாய் வந்திருக்கும் உயைதான். அதாவது: தாங்கள் முன் சில தடவைகளில் முஹம்மது நபியோடு போர் செய்து தோல்வி யடைந்து போனீர்களல்லவா? இப்போதும் அவ்விதமே தாங்கள் தோற்றுப் பின்வாங்கி ஓடிவிடுவீர்களென்றும், அதனால் தாம் பகைவர்வசம் சிக்கிக் கொள்ள நேரிடுமென்றும் எண்ணி, அவ்வாறு சம்பவிக்காமல் தங்களிடம் பிணைப் பத்திரம் ஒன்று எழுதி வாங்கிவைத்துக்கொள்ள வேண்டுமென உயை முடிவு செய்திருக்கிறான். தங்களிடம் எழுதி வாங்கும் பிணைப்பத்திரத்தை வைத்திருந்து, தாம் அபஜெயப்படும் பக்ஷத்தில் அதை முஹம்மது நபி வசம் கொடுத்துவிட்டு, தாம் சுகருவிற் போயிருந்து அவ்வூரை ஆளுகை செய்வதாக முஹம்மது நபியிடத்தில் உடன் படிக்கை செய்துகொண்டு, போர்செய்யாமல் மீண்டுபோய் விடலாமென்பது அவர் கருத்து. இது மோசமல்லவா? இப்படியும் செய்யலாமா? வஞ்சகமுள்ள உயை இவ்வெண்ணங்கொண்டிருப்பது நியாயமா? துரோகசித்தந்தானே? நான் சொல்வதைப் பின்னர் கண்டறிவீர்கள்" என்றார்.

நுகைம் சொன்ன இச்சொல்லை அபாஸுபியான் கேட்டு, ஆச்சரியமுற்று விரலை மூக்கில்வைத்து, கண்கள் அக்கினிகக்கச் சினந்து, வேகத்தை அகத்துள் அடக்கிக்கொண்டு, அதிதூரம் சிந்தித்துக் கொண்டிருந்தான். பிறகு நுகைம் அங்கிருந்து தமது கூட்டத்து தளபதிகளாகிய உயையினா இடத்திலும், மாலிக் இடத்திலும் போய், அபாஸுபியானிடம் சொன்னபடியே சொன்னார். அவர்களும் இதைக்கேட்டு ஆங்கரித்து, மனப்புழுக்கங்கொண்டிருந்தார்கள். நுகைம் இவ்வாறு ஒருவருக்கொருவர் பொல்லாங்குபட மூட்டிவிட்டு, தமது ஜாகையில்போய் மவுனமாயிருந்தார். அன்று இரவு கழிந்து சூரியன் உதயமாயிற்று.

பொழுது விடிந்த அதிகாலையில், அபாஸுபியான் எழுந்திருந்து, நுகைம் சொன்ன சங்கதியை ஆராய்ந்தறிய வேண்டுமென்று கருதி, ஒரு வீரனையழைத்து "உயை யிடஞ்சென்று, இன்று முஹம்மது நபியோடு போராடுவதற்காக யூதர்களே புறப்படவேண்டுமென்று சொல்லிவிட்டு வா" எனக் கட்டளைபண்ணி அனுப்பினான். அவ்வீரன் உயையுடைய சமூகத்தில் சென்று பணிந்துநின்று‘

அபாஸுபியான் சொன்னபடி அவன் சொன்னதாகவே சொன்னான். இச்சொல்லை உயைகேட்டு, நுகைம் சொன்னது சரிதான் அவர்களுக்குள் சமாதான உடன்படிக்கை முடிந்திருப்பதாலே தான் நம்மைப் போருக்கெழச் சொல்லவந்தார்களென்று எண்ணி, மேற்படி வீரனை நோக்கி, "அப்பா! இங்கே வா, இன்று சனிக்கிழமையானதால், இது எங்களுக்கு சுபதினம். இச்சுபதினத்தில் நாங்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்க வேண்டுமே யல்லாது, போருக்குப் புறப்படக்கூடாது. அன்றியும், கேள். நீங்கள் எல்லாரும் துரோகிகள். எங்களை சத்துருக்களிடம் காட்டிக்கொடுத்துவிட்டு, உபாயத்தோடு தப்பிக்கொண்டு போய்விட்டாலும் போய்விடுவீர்கள். இனி நான் உங்களை நம்பவேமாட்டேன். இனி உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாரும் கலைந்துபோய்விட்டால், அதனால் விளையும் கஷ்ட நஷ்டங்கள் இருக்க நானே உத்தரவாதியென்று அவ்வக் கூட்டத்து அதிபர்கள் கைப்படப் பிணைப்பத்திரம் எழுதி எனக்குத் தரவேண்டும். இல்லாவிட்டால், உங்களுக்கும் எங்களுக்கும் உறவில்லை. நான் இப்படி சொன்னேனென்று உங்கள் அதிபரிடம் நீ போய்ச் சொல்" என்று உயை சொன்னான்.

உயைசொன்ன மேற்படி சொற்களையெல்லாம் அவ்வீரன்கேட்டு வந்து, அபாஸுபியானிடம் படிப்படியாகச் சொன்னான். அதை அபாஸுபியான் செவிசுட, உள்ளம் கொதிக்கக்கேட்டு, "ஆ! ஆ!| நுகைம் நல்லயோக்கியன். அவன் தந்திரமாக காரியங்களை விசாரித்து விசாரித்து அறிந்து வந்து சொல்லி, நமக்கு நாக்கும் கொடுத்து, மூக்கும் கொடுத்து, உயிருதவியுஞ்செய்தான். உயை சண்டாளத் துரோகி; அவன் துஷ்டன். அவனுடைய சகவாசம் தீங்கை வருத்தும்" என்று எல்லாருக்கும் சொல்லிக் காட்டினான். இதைக்கேட்ட தளபதிகள், ராணுவ வீரர்கள் எல்லாரும் மனம் சோர்ந்து திகைத்து, கவலையடைந்தார்கள். அன்று பகல் முழுவதும் எல்லாரும் துக்க சாகரத்தில் அமிழ்ந்து கிடந்தார்கள். சூரியன் அஸ்தமித்தது. அவர்களுக்குள் இவ்வித குழப்பத்தை உண்டுபண்ணின தெல்லாம், முந்தின நாளில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு தஆலாயிடம் துஆ கேட்ட மகிமையேயன்றி வேறல்ல.

சூரியன் அஸ்தமித்தவுடன் என்றும் இல்லாத காரிருட் படலம் வந்து, ஆகாயமுதல் பூமிவரையும் மூடிக்கொண்டது. அது நிலவு

காலமாயிருந்தும், கண்ணொளி மழுங்கும் இருட்பிரவாகத்தால் பிரகாசம் சிறிதும் தோற்றவில்லை. அக்காபிர்கள் செய்த பாவங்கள் ஒருங்கு திரண்டும், அல்லாஹு தஆலாவின் கடும் சினம் திரண்டு வந்து அவர்கள் மேல் கவிந்துகொண்ட பாவனையா யிருந்தது. வானம் இது, பூமி இது, திக்குத்திசை இது, மலை இது, வனம் இது, இது மனிதர், இது வாகனங்கள், இது கூடாரம், இது தருவென ஒன்றும் தெரியவில்லை. இருந்த தானத்தைவிட்டு நகர்ந்தவன் மறுத்தும் அங்கும் வரக்கூடவில்லை. ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டும, கால்கள் இடறிவிழுந்தும் குருடர்களைப்போல அநேகர் தத்தளித்தார்கள். எல்லாரும் திகில்பிடித்து ஆவென்று அலறி, சூரியனென்பதும் சந்திரனென்பதும் நட்சத்திரங்க ளென்பதும் எங்கே போயின? இனி பிரகாச நாள் இல்லையா? யுகமுடிவு அடுத்ததுபோலுமென்று புலம்பினார்கள். வெகுபேர் பிரக்ஞை தப்பிப்போனார்கள். அதோடுகூட கொண்டற் காற்றும் எழும்பி அதிக மும்முரமாக மோதத் தொடங்கிற்று. அச்சண்டமாருதத்தோடு தாங்கரிய குளிரையும் அல்லாஹு தஆலா அப்பகைவர்மேல் ஏவினான். மேற்படி கொண்டற்காற்று மிகவேகமாக வீசிற்று. மலைகளும் அசையத்தக்க விசைகொண்டு மோதும் புயலால், தருக்கள் பல வேரோடு பிடுங்கப்பட்டன. கூடாரத்து முளைகளின் கட்டுக்களெல்லாம் அறுப்புண்டு, படங்குகள் கிழிந்து, ஆகாயத்தில்வெண் மேகங்கள் சிதறிப் பறந்தாற் போலப்பறந்தன. அநேக கூடாரங்கள் சின்னபின்னமாயின. காற்றின் விசையினால் தெறிக்கும் மழைத் திவலைகள் கற்களைப்போல காபிர்கள் உடலிற்பட்டதால், அவர்கள் அதனால் மெலிவடைந்து, குளிரால் தளர்வுற்று, பிரக்ஞை தப்பிப் போனார்கள். குதிரை, ஒட்டகம் முதலான வாகனங்களெல்லாம் முளைகளைப் பிடுங்கிக்கொண்டு தாறுமாறுமாய்த் திரிந்தன. அவ்வாகனங்களில் அநேகம் குளிரால்விரைத்து நின்றன. தாங்கரிய வேகத்தோடு அடிக்கும் சண்டமாருதமும், உடல் சகிக்கக்கூடாத பெருங் குளிரும், மழைத்தூற்றலும் அதிகமாக வருத்தினபடியால், வீரர்களில் அநேகர் திரள் திரளாய்க் கட்டைகளைக் குவித்து எரிமூட்டி, குளிர் காய்ந்தார்கள். அங்கங்கே தீமூட்டிக் குளிர் காய்வதால், பாசறை முழுதும் தீப்பற்றி எரிந்தார் போலிருந்தது.

பாசறையெங்கும் இவ்விதக் குழப்பமானபோது பகைவர்கள், ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு, இப்போது நமக்கு ஆபத்துக்

காலம் வந்துவிட்டது. ஆனபடியால், இங்கிருந்து நாம் தப்பித்துக் கொண்டு போய்விடவேண்டு மென்றும், முஹம்மது உடைய மாயா ஜாலத்தினால்தான் இங்கே இவ்வித வில்லங்கம் வந்து நம்மைச் சூழ்ந்து கொண்டதென்றும், இன்னும் பலபல விதமாகவுஞ் சொல்லிப் புலம்பினார்கள்.

அங்கே மாற்றார் சேனை இவ்வாறு கலக்கமுற்றிருக்கையில், நபி நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "இச்சமயத்தில் இங்கிருந்து மாற்றார் சேனையிற் சென்று, அங்கு நிகழும் காரியத்தை அறிந்து வருபவர்களுக்கு, ஸுவர்க்கத்தில் உன்னதமான பதவி கிடைக்கும்" என்று மொழிந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கில் இவ்வுத்தம வசனம் பிறந்த மாத்திரத்தில், அஸ்ஹாபிகளி லொருவராகிய குதைபா என்பவர் எழுந்து நின்று "யாறஸூலல்லாஹ்! மாற்றார்தளத்தில் தமியேன் சென்று ஒற்றறிந்து வருகிறேன், தேவரீர் விடைகொடுங்கள்" எனக்கேட்டார். உடனே அவரைப் போகும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள் விடை கொடுத்தார்கள்.

மனோதைரியமுள்ள குதைபா கூர்வா ளொன்றை இடையில் சொருகவிட்டு, முதுகில் அம்பறாத் தூணியை மாட்டி, கரத்தில் வில்லைப்பிடித்துக்கொண்டு பிஸ்மில்லாஹ்சொல்லியெழுந்தார். எழுந்தவர் விரைவாய் நடந்து மாற்றார் பாசறையிற் பிரவேசித்து, அங்கு நிகழும் ஒவ்வொரு கருமத்தையும் கண்கூடாய்ப் பார்த்துக் கொண்டு வந்தார். வரும்போது, ஒரு பாரிச கூடாரத்துள் தீவளர்த்து, அபாஸுபியானும் இன்னும் சில தலைவர்களும் சூழவிருந்து குளிர் காய்வதைக் கண்டு, ஆ! அபாஸுபியான் இதோ இருக்கிறான். அவனை இந்த க்ஷணமே நான் கொன்றுபோடுகிறே னென்றெண்ணி அகங்களித்து, வில்லை வளைத்து, பாணங்களிலொன்றைக் கையிலெடுத்தார். அப்போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் நம்மை ஒற்றறிந்து வர ஏவினார்களேயன்றி, யாரையுங்கொன்று விட்டுவரும்படி ஏவவில்லையே யென்னும் எண்ணம் அவர் இதயத்திற் பிறந்தது. அதனால் அவர் தாம்கொண்ட கருத்தைத் தவிர்த்து, பாணத்தைக் கூட்டிலிட்டு, அபாஸுபியான் இப்போது நிராயுதனாயிருக்கிறான், ஆகையால் நாம்அவனை ஒன்றுஞ்செய்யக்கூடாது. ஆனாலும் அவன்

சமீபத்தில் அடுத்து அறிவோமென்று பின்னும் நினைத்து, வாளையுங் கையிற் பிடித்துக்கொண்டு மெல்ல நடந்து, அவன் கூட்டத்தோடு சேர்ந்துஒருவருமறியாதபடி ஒருபக்கத்தில்பதுங்கியிருந்தார்.

குதைபா வந்து மறைந்திருக்கும் ரகசியத்தையறிந்தோ, அல்லது வேறெதைக்கொண்டோ, அபாஸுபியான் சமுசயமுற்று, தனது வீரர்களைநோக்கி "வீரர்காள்! நமது பகைவர்களிலிருந்து வந்த உளவன் போலும் இங்கொருவன் இப்போது வந்திருக்கின்றதாக என் மனஞ்சொல்லுகின்றது. அவன் எதைக்கருதி வந்திருக்கின்றானோ, தெரியவில்லை. இந்தப் பயங்கரமான அந்தகாரமுந் தொலைந்து, வெளி வாங்கவில்லை. ஒருவர்முகம் ஒருவருக்கு தோற்றவில்லை. இப்போது இங்குவந்து மறைந்திருக்கும் பகைவனை நாம் கண்டுபிடிக்கவேண்டும். ஆகையால், நீங்கள் எல்லாரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு, ஒவ்வொருவர் பெயராய்வினவுங்கள்" என்றான். அப்படியே அவர்கள் அனைவரும் காதுகளைக் கோத்துக்கொண்டு ஒருவர் ஒருவராய்ப் பெயரை வினவினார்கள். அப்போது குதைபா தந்திரமாக அவர்களையடுத்து நின்றுகொண்டு ஒரு காபிருடைய கையைப் பிடித்து "அடா உன் பெயரென்ன?" எனக்கேட்டார். அதற்கு அவன் "என் பெயர் நுகையினா" என விடை பகர்ந்தான். அப்போது குதைபா "பிரிய மிக்க முகையினாவா நீ?" என்று அவன்கையை விட்டுவிட்டு, சற்றே விலகிநின்றார். பின் பகைவர்கள் ஒவ்வொருவராகப்பெயர்வினவி முடித்தனர். குதைபாவை ஒருவரும் கேட்கவில்லை. மேற்கண்டவாறு பெயர்களைக்கேட்டறிந்து, அந்நியன்தன் ஒருவனுமில்லையென்று மனந் தெளிந்தார்கள்.

தான் கொண்ட கருத்தை வெளியிடுவதற்கு அபாஸுபியான் கருதி, அதை வெளியிடும்போது யாரும் அந்நியர் இருந்தால் நகைப்பார்களென்றெண்ணி நாணமடைந்து, அதை முந்தி அறிந்துகொள்ளவேண்டித்தான் தனது வீரர்கள் பெயரை ஒருவரொருவராகக் கேட்டறியச்சொன்னான். அப்படி அந்நியர் ஒருவருமில்லையென்று மனந்தேறினபின், வீரர்கள் எல்லாரையும் இருக்கச்செய்து, அவர்களை நோக்கிப் பின் வருமாறு அபாஸுபியான் சொன்னான்:

"வீரவான்களே! இப்போது நமக்குவந்திருக்கும் விலக்கரிய ஆபத்தை, என்ன மாயத்தினால் வந்ததென்று நான்சொல்லப் போகிறேன்! தாங்கரிய குளிரினால் பலபல ஒட்டகங்களும், குதிரைகளும் வலிப்பெடுத்து மடிந்துபோயின. கூடாரத்துப் படங்குகளெல்லாம் கிழிந்து பறந்தன. அநேக கூடாரங்கள் கால்சாய்ந்து வீழ்ந்தன. துவஜ ஸ்தம்பங்களும். அலங்காரமான பூப்பந்தல்களும் அடியோடு சாய்ந்தன. அநேக வீரர்கள் உடல்விறைந்து மாண்டு போனார்கள். சிலர் உடலொடுங்கிக் கிடந்தார்கள். சிலர் ஸ்மரணையற்றிருந்தார்கள். இது எனக்குப் பரிதாபமாயிருக்கின்றது அன்றியும், அகுத்தப் உடையமகன் உயை என்னும் சண்டாளனோ, நமக்குத் துரோகஞ்செய்து விட்டு முஹம்மதோடு கூடிக்கொள்ளுவான். இந்தக்கொடிய குளிரும், இடியும், காற்றும், மழையும் இலகுவில் தொலையாது; நம்மை முற்றமுடியக் கொன்று விட்டுத்தான் போகும். அல்லாமலும், இடியிடிக்குந்தோறும் மலைகளிலெழும் எதிரொலியின் உக்கிரத்தால் என் மனம் நடுங்குகின்றது. இனி என்னகேடு நமக்கு நேரிடுமோ தெரியவில்லை. ஐயோ! 'சுவரை வைத்தல்லோ, சித்திரமெழுதவேண்டும்' என்பார்கள். நாம் உயிர் பெற்றிருந்தல்லோ போராடுவதும், ஜெயம்பெறுவதும்? ஆகையால் இனிநாம் இங்கிருப்பது புத்தியல்ல. நீங்கள் உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொண்டு ஊரைப்போய்ச் சேருங்கள். நானும் சூரியோதயத்திற்கு முன் புறப்பட்டு விடுகிறேன்" என்றான்.

அபாஸுபியான் இவ்வாறு சொல்லித் தீருமுன் சூரியன் உதிக்கும் வேளையாயிற்று. உடனே அவன் எழுந்து இலாயத்தில் குளிரால் நடுங்கி ஒடுங்கிநின்ற ஒரு குதிரைமேல் அதன்கால்தளையை அவிழ்க்க மறந்து, அவசரப்பட்டு ஏறிக்கொண்டு மத்திகைகொண்டு அடித்தான். கட்டுண்டு நிற்கும் அக்குதிரை எவ்வளவு உரத்து அடித்தும் நிலை பெயராமல் நிற்பதைக்கண்டு பரப் பரப்பாகக் கீழிறங்கி, தளையை அவிழ்த்துவிட்டு. மறுபடியும் ஏறிக்கொண்டு மக்கமாநகரத்திற்குச் செல்லும் வழியை பிடித்துச் சென்றான். அவன் பின்னே சிலரும் பலருமாக அவன் கூட்டத்தார் எல்லாரும் தொடர்ந்து போய்விட்டார்கள். இவைகளையெல்லாம் மறைவிலிருந்து பார்த்த குதைபா ஆச்சரியமுற்று, அங்கிருந்து மீண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து நிகழ்ந்த சங்கதிகளையெல்லாம் சொன்னார். நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டுக் களிகூர்ந்தார்கள். குதைபா நிகழ்ந்த காரியங்களைச் சொன்னதுமல்லாமல், மேற்

படி கொடிய குளிரில் தாமும் சிக்குண்டவராகையால், அதைப்பற்றியும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் அதிகமாகச்சொல்லி, 'அந்தக்குளிரின் கொடுமையால் வானம் பூமியும் நடுங்கி விறைத்துப் போகுமென்றால், மனிதர் என்னபாடுபடார்? தமியேன் தேவரீருடைய தயவின் பொருட்டாய் நான் இங்கு மீண்டுவந்தேன். அக்குளிர் என்னுடலை விட்டு இன்னும் நீங்கவில்லை' யென்றும் பரிவுற்றுச் சொன்னார். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் உத்தரீயத்தை யெடுத்து அவருக்குப் போர்த்தினார்கள். அதனால் அவர் ளிர் நீங்கிச் சுகமடைந்தார். பிறகு சூரியன் உதயமாயிற்று.

பொழுதுவிடிந்தபின், அபூஸுபியான் தன்வீரர்களோடு போய் விட்டதை உயை அறிந்து, மனம்நொந்து, "நுஐம்சொன்ன சொல் நிறைவேறிற்று. நம்மை முஹம்மது கையில்பிடித்துக் கொடுத்துவிட்டு அபூஸுபியான் போய்விட்டானே, நாம் இனி இங்கிருக்கக்கூடாதென்று" மிகக்கலக்கமுற்று, அவன் மற்றவர்களுக்குக் கூட அறிவிக்காமல், தன் ஜாதியாராகிய யூதர்களை மாத்திரம் அழைத்துக்கொண்டு, வேறு வழியாய்ப் போய்விட்டான். இதைக் கேட்ட மற்ற கத்பான், கனானா, அசது, பனிகுறைலா என்னும் இக்கூட்டத்தாரெல்லாரும் தனித்தனி வலசை வாங்கி ஓடினார்கள். பகைவர்கள் பாளைய மிட்டிருந்த தானங்களில் ஒருவரும் இருந்த குறிப்புமில்லை. எல்லாரும் கலைந்துபோய்த் தொலைந்தார்கள். பகைவர்கள் படையெடுத்துவந்து ஒருதரம் போருஞ்செய்து சற்றேறக்குறைய இருபத்தைந்து நாள்வரையும் பாளைய மிட்டிருந்து, முடிவில் ஒரு பிரயோஜனத்தையும் அடையாமல் விருதாவாய்த் திரும்பிப்போனதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேள்விப்பட்டு, ஆனந்தமுற்று, அல்லாஹுதஆலாவைத் துதித்தார்கள். எங்கும் ஜெயபேரிகையும், ஜெயவாக்கியமும் முழங்கின. நபிநாயகம் (ஸல்) அவர்களும் மூவாயிரம் அஸ்ஹாபிகளோடு அகழைக் கடந்து நகரத்திற்குள் வந்தார்கள்.

உயை படை யெடுத்துவந்த அந்த வருஷத்திலேதான் நபிநாயகம் (ஸல்) அவர்களின் பெரியதந்தையாகிய ஆரிது உடைய குமாரர் நௌபல் என்பவர் ஈமான்கொண்டு, முஸ்லிமானார்.

87-வது அத்தியாயம்.

பனீ குறைலாக்கள் கொலையுண்டது.

கலி நிலைத்துறை.

முனிர்வரை புவியினில் முரசு லாகிய
மனிதமார் முஹம்மதை மதித்தி டாமலே
பனிதரும் கொடுமையு மழகென் றேகொளும்
பனிகுறை லாவதைப் பட்ட தோதுவாம்.

இதன் பொருள்.

கடல் வளைந்த பூமியில் வந்த இலட்சத் திருபத்து நாலாயிர நபிகளென்னும் தீர்க்க தரிசியர் கட்கு முரசலென்னுந் தலைமையார பழகு பொருந்தும் நீதியுள்ள முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களை மனதில் மதிப்புக் கொள்ளாமல், அநீதமுங் கொடுமையுந் தங்களுக்குப் புகழென்று கொள்ளும் பனீ குறைலாக்கள் வதை பட்டதைச் சொல்லுகின்றாம்.

சீறாப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

இனையன மகிழ்வு மெய்த விருந்தனர் மற்றை நாளிற்
புனைமலர்த் தடத்தின் மூழ்கிச் சிரசிடம் புலர்த்துங் காலை
பனியறச் சோதி காலும் பரிதியு மதியு மேய்ப்பத்
தனியவ னருளா லெல்லை ஜிப்றயீ லவணின் வந்தார்.

வசனம்.

தாஜுல் அம்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், தங்கள் மதீனமா நகரத்தின் மேல் படையெடுத்துவந்த காபிர்கள் நுஐம் செய்த தந்திரத்தினால் தாமாகக் கலைந்து போய் விட்டதைப்பற்றி மனம் பூரித்து, அடுத்தநாட் காலையில் எழுந்து ஸ்நானஞ்செய்து உடையுடுத்திக் கொண்டு நிற்கையில், வானவர் பெருமானாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், அல்லாஹுதஆலாவின் கட்டளைக்கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து ஸலாம் சொல்லிக்கொண்டு நின்று, பின் வருமாறு சொன்னார்:—

"உலகங்கள் அனைத்திற்கும் ஏகாதிபதியாய் விளங்கும் மகிமை மிக்க யா நபி! மஹத்தான அல்லாஹு தஆலாவின் கட்டளை பிரகாரம், கொடிய பாதகர்களாகிய பனீ குறைலாக்களைக் கொன்று ஜெயம் பெறுவதற்காக நானும், அநேக மலக்குகளும் யுத்த சன்னத்தர்களாய் வந்திருக்கின்றோம். தாங்களும், அஸ்ஹாபிகளும் சீக்கிரம் போர்க் கோலந் தரித்துப் புறப்படுங்கள்" என்றார்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் சொன்ன சொல்லைக்கேட்டு, அகங்களித்து விரைந்து நித்தியகடனை முடித்துக்கொண்டு, அஸ்ஹாபிகளை யழைப்பித்து, போருக்காக விரைவாய் எத்தனப் படுங்களென்று கட்டளை யிட்டார்கள். உடனே சேனை தயாராயிற்று.

முரசடிப் போர்கள் தெருக்கள் தோறுஞ் சென்று, "நபிநாயகம் (ஸல்) அவர்கள் பனீகுறைலாக்கள் மேல் அடர்ந்து போரிடுவதற்காகச் சேனைபுறப்படும்படி கட்டளை பண்ணினார்கள். நீங்கள் எல்லாரும் போருக் கெழுங்கள்" என்று அறிவித்த மாத்திரத்தில், முரசுகள், விருதுகள், வாகனங்கள் பல நெருங்க அஸ்ஹாபிகள் புறப்பட்டார்கள். மக்கமா நகரத்து முஹாஜிரீன்கள் பலர்புடை சூழ, வெற்றித் துவஜ மொன்று முன் செல்ல, அலி (றலி) அவர்கள் புறப்பட்டார்கள். மதீனமா நகரத்து அன்சாரீன்கள் பலர்புடை சூழ. வெற்றிக் கொடி யொன்று முன்பிடிக்க முன் பாணம் தைத்த கைம்புண்ணோடு சஃது (றலி) அவர்களும் புறப்பட்டார்கள். இன்னும் சில பிரதான தலைவர்களும் புறப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் ஒருங்குதிரண்டு சூழ்ந்துவர, உக்காபு என்னும் வெற்றிக்கொடி முன் பறக்க, நபிநாயகம் (ஸல்) அவர்களும் புறப்பட்டு, மதீனமா நகரத்தை நீங்கி, பனீகுறைலாக்கள் வசிக்கும் ஊரைநோக்கித் தாவடி போனார்கள். இவர்கள் இப்படித் தாவடி போகும் போது தங்கள் சேனைக்கு முன்னே அதிதூரத்தில் பெருஞ் சேனை யொன்று செல்லும் பாவனையாய், புழுதிப் படலமெழும்பி ஆகாயத்தில் பரந்து நிற்பதை அஸ்ஹாபிகள் கண்டு ஆச்சரியமுற்று, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! நமக்கு முன் புழுதிப்படல மெழும்பி ஆகாயத்தில் பரந்து தெரிகின்றதே அதென்ன?" எனக்கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "எனது தோழர்

கள்! மலக்குகளுக்கு அதிபதியாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அநேக மலக்குகளோடு நமக்குத் துணைப்படையாக முன்னே போகின்றார். அச்சேனைசெல்லும் புழுதிப் படலந்தான் அது" என்று சொன்னார்கள். இதைக்கேட்ட அஸ்ஹாபிக ளெல்லாரும் ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்தார்கள்.

பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையோடு நடந்து, பனீகுறைலாக்கள் வசிக்கும் நகரத்தை யடைந்து, அதை முற்றுகையிட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை தங்கள் நகரத்தை முற்றுகையிட்ட மாத்திரத்தில், அவ்வூர் அரசனும் மற்றவர்களும் திகில் கொண்டு, தூதனொருவனை நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். அத்தூதன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து பணிந்து நின்று "நபியே! தாங்கள் தங்கள் அஸ்ஹாபிகளி லொருவராகிய அபூலுபானா என்பவரை இப்போது என்னோடு அனுப்புங்கள். நாங்கள் இருவரும் பனீகுறைலாக்களிடஞ் சென்று, பேசவேண்டிய விஷயங்களைப் பற்றிப்பேசி ஒரு தீர்மானஞ்செய்து கொண்டு வருகிறோம்" என்றான். நபி நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு சம்மதித்து, மேற்படி அபூலுபானா (றலி) அவர்களை அத்தூதனோடு அனுப்பினார்கள்.

அபூலுபானா (றலி) அவர்கள் ஊருக்குள் பிரவேசித்தபோது, பனீகுறைலாக்களிலுள்ள ஆண், பெண், சிறுவர் எல்லாரும் அவரைக்கண்டு, கண்ணீர்சொரிய அழுதார்கள். பனீகுறைலாக்கள் மிகக்கலங்கி அழுதமாத்திரத்தில், அபூலுபானா (றலி) அவர்கள், அவர்கள் மீது மனமிரங்கி பக்ஷமானார்கள். அப்போது மேற்படி துரோகிகளாகிய பனீகுறைலாக்கள் எல்லாரும் அபூலுபானா (றலி) அவர்களைப் பணிந்து, "நாங்கள் முஹம்மது நபியவர்களைத் தரிசித்து, இனி அவர்களோடு சமாதானமாகவே யிருப்பதாக வாக்களித்து அப்படியே நடந்து கொள்ளுவோம். இதில்சிறிதும் பிசக மாட்டோம்" என்று பரிதாபத்தோடு சொன்னார்கள். அதற்கு அபூலுபானா (றலி) அவர்கள் பனீகுறைலாக்களை நோக்கி "நீங்கள் சொல்வது சரிதான்; ஆனாலும், இனி நீங்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து கலிமா சொன்னாலன்றி, உங்களுக்கு அவர்கள் மன்னிப்பு தரமாட்டார்கள். கட்டாயம் சங்கரிக்கப் படுவீர்கள்" என்று கூறினார்கள்.

அபூலுபானு (றலி) அவர்கள் தாங்கள் பனீகுறைலாக்களோடு சொன்ன சொல்லைக் கவனித்து ஹா! நாம் பனீகுறைலாக்களுக்கு என்ன சொல் சொன்னோம்! நீங்கள் சங்கரிக்கப் படுவீர்களென்று நாமாகச் சொன்னது பிசகல்லவா? நபிநாயகம் (ஸல்) அவர்கள் நம்மை இவ்விதஞ் சொல்ல ஏவவில்லையே யென்று நினைத்து, மனம் அஞ்சி, மறுத்து யாதொன்றும் பனீகுறைலாக்களோடு பேசாமல் அங்கிருந்து புறப்பட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற்கு வர வெட்கித்து, வேறுமார்க்கமாக மதீனமாநகரம் வந்து சேர்ந்து தேவாலயத்துட்சென்று, ஒருதூணில் சாய்ந்து இராப்பகல் ஏழுநாள் வரையும் அன்ன ஆகாரமின்றி, தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அல்லாஹு தஆலா இடத்தில் மன்றாடி துவா இரந்து நின்றார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

நீது றும்படி நன்றவ ருரைத்தது திடமென்
றோதி நாயகன் மறைமொழி வந்ததாய்த் தறிந்து
காத லாந்தவு பாக்கபூ லாயதென் றெண்ணிக்
கோதிலாமனத்திருத்தினர் நபியருள்கூர்ந்தே.

வசனம்.

(ஏழுநாட்களுக்குப் பின் "அபூலுபானு சொன்னது பிசகல்ல; வாஸ்தவந்தான்" என்னும் அர்த்தமமைந்த வேதவாக்கிய மொன்று, அல்லாஹு தஆலா இடத்திலிருந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கிற்று. இவ்வேத வாக்கியம் வந்த பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூலுபானுவின் மன்றாட்டம் நிறைவேறிற்று என்று தாங்களும் அவர்கள் பேரில் பக்ஷமுற்றார்கள்.)

அபூலுபானு (றலி) அவர்கள் பனீகுறைலாக்களுக்கு மேற்கண்டபடி சொன்னபோது அவர்கள் மனம் நொந்து, எல்லாரும் ஒருங்கு கூடி ஆலோசித்து, மறுபடியும் ஒரு தூதனை நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற்கு அனுப்பினார்கள். அத்தூதன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து தாழ்ந்துநின்று, "நபியே! தாங்கள் சென்ற வருஷத்தில் பனீநலீர்களை ஊரைவிட்டுப் போகும்படி ஆக்ஞை செய்ததுபோல, எங்களுக்கும் ஆக்ஞை

செய்யுங்கள். நாங்கள் உடுத்தும் ஆடை ஒன்றொழிய மற்ற எல்லாவற்றையும் தங்கள் வசம் ஒப்புவித்துவிட்டு, வனவாசிகளாய் போய்விடுகிறோம். அவ்வளவு தயவுசெய்து எங்களை விட்டுவிடுங்கள்" என்று மன்றாடினான். தங்களுக்கு என்னென்ன விபத்துகள் வந்தாலும், இஸ்லாத்தில் மாத்திரம் வரமாட்டோமென்னும் கர்வம் கொண்டவர்களாகையால், எல்லாவற்றையும் இழந்துவிட்டு வனவாசிகளாய்ப்போக உடன்பட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் இடங்கொடுக்கவில்லை. நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விதங் கேட்டு. நிற்கும் தூதனை நோக்கி "இங்கேவா, தூதா, நீங்கள் எல்லாரும் கலிமா சொல்லி என் மார்க்கத்தில் சேர்ந்தாலன்றி, உங்களில் ஒருவனுக்காவது இனி மீஷி கிடைக்காது. உங்களை நான் விடப்போகிறதில்லை" எனக் கூறினார்கள். அதற்கு அவன் "நபியே! அப்படியா? நாங்கள் கலிமா சொல்லவா வேண்டும்? அந்த எண்ணத்தைத் தாங்கள் விட்டுவிடுங்கள். அது ஒருபோதும்இல்லை. இனித்தாங்கள் எங்களை என்னென்ன தீங்குக்கு உட்படுத்தினாலும் உட்படுத்துங்கள், எங்களுக்கு இனி வருவது வரட்டும்" என்று துணிந்து சொன்னான்.

இச்சம்பாஷணை நடந்தேறும் போது, அங்குவந்த பனீ ஒளஸ் கூட்டத்தாரில் சிலர் பனீக்குறைலாக்களுக்கும் தங்களுக்குமுள்ள அந்நியோந்நியத்தினால், நபிநாயகம் (ஸல்) அவர்களைத் தாழ்ந்து நோக்கி "தேவரீர்! தாங்கள் பனீ குறைலாக்கள் செய்த குற்றத்தை எங்களுக்காக வேண்டி மன்னித்து, அவர்களுக்கு உயிருதவி செய்யுங்கள்" என மன்றாடிக் கேட்டார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி பனீஒளஸ் கூட்டத்தார்களை நோக்கி, "இப்போது நீங்கள் சொல்வது சரிதான், ஆனாலும், நீங்கள் அந்த பனீகுறைலாக்களுக்காகப் பரிந்து பேசிக் கேட்டுக் கொள்ளும் மன்னிப்பை, உங்கள் கூட்டத்திலுள்ள ஒருவரிடத்தில் சொல்லிக்காட்டலாம். அவர் என்ன சொல்லுகின்றாரோ அதற்கு நான் சம்மதிக்கிறேன்; அது உங்களுக்குப் பொருத்தமாகுமா?" என்று கேட்டார்கள். இக்கேள்விக்கு மேற்படி பனீ ஒளஸ் கூட்டத்தார் சம்மதித்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "நல்லது, தாங்கள் சொன்னபடியே மஆது உடைய குமாரர் சஃது இடம் சொல்லிக் காட்டுவோம்" என்றார்கள்.

தங்கள் அஸ்ஹாபிகளான அன்சாரீன்களிலுள்ள பனீ ஒளஸுக் கூட்டத்தார் சம்மதப்பட்ட போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஸஃது (றலி) அவர்களைத் தங்கள் சபைக்கு அழைப்பித்தார்கள். ஸஃது (றலி) அவர்கள் வந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பனீ ஒளஸுக்கூட்டத்தாரை நோக்கி "அஸ்ஹாபிகாள்! இதோ உங்கள் தலைவர் வந்திருக்கின்றார். நீங்களே அவரிடஞ் சொல்லிக் காட்டுங்கள்" என்றார்கள். அப்போது, தாங்கள் கொண்ட கருத்தை ஸஃது (றலி) அவர்களிடத்தில் பனீ ஒளஸுக் கூட்டத்தார்கள் சொல்லிக் காட்டினார்கள்.

சரித்திர புராணம்.

வேறு.

சாற்று மம்மொழி கேட்டத்தச் ஸஃதுவு
மாற்ற மின்றியீ மான்வழி நின்றிலார்க்
கேற்ற மாமற வேதின மேதவ
ராற்ற லேதரு னேதற மேதரோ.
அஞ்ச வாடவ ரைகொலை செய்தவர்
வஞ்சி மாரை மதலையர் தம்மொடுஞ்
செஞ்ச ஆழியஞ் செய்வித் தவர் பொரு
ளெஞ்ச மாதுலர்க் கீந்திடல் வேண்டுமே.
செய்யுங் காரிய மீதன்றி யேசெலும்
வைய மீதில் வழக்கொன்று மில்லெனத்
துய்ய ஸஃது சொலநபி யிவ்வுரைக்
கைய மில்லையல் லாவரு ளீதென்றார்.

வசனம்.

அச்சொல்லைக் கேட்டவுடன் ஸஃது (றலி) அவர்கள் தங்கள் கூட்டத்தாரை நோக்கி, "மூமினானவர்களே! ஈமான் கொண்டு இஸ்லாமாகாதவர்கள் யாரா யிருந்தாலும் சரி, அவர்களுக்கும் நமக்கும் உறவும் ஒநேகமும், தாக்ஷிணியமும் ஏது? அவர்களை நாம் நிஷ்டூரஞ் செய்து வருத்தினால், பாபம் பழிதான் ஏது? அவர்களை நாம் நிர்த்தாக்ஷிணியமாகக் கொலை செய்து, அவர்கள் சொத்துக்களைச் சூறையாடி பெண்டுபிள்ளைகளைப் பிடித்து அடிமையாக்கிக் கொள்ள வேண்டுமேயன்றி, மற்றொன்றும் இல்லை" என்று பகர்ந்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள், அனைவரையும் நோக்கி, "ஸஃது சொன்ன சொல் நியாயமானது, மறுக்கப்படாதது; அல்லாஹுதஆலாவின் கருணை கொண்டே அவர் வாக்கில் இச்சொல் பிறந்தது" என்றார்கள். ஸஃது (றலி) அவர்கள் சொன்ன சொல்லைக்கேட்டவுடன் பனீ ஒளஸ் கூட்டத்தார்கள் தலை சாய்ந்து, மறுத்துப் பேசாதிருந்துவிட்டார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி, "இனி நீங்கள் நகரத்திற்குட் புகுந்து, பனீகுறைலாக்களிலுள்ள ஆண், பெண், சிறார் எல்லாரையும் கைப்பிடியாக பிடித்துக்கொண்டும், அவர்கள் சொத்துக்களை யெல்லாம் சூறையாடிக் கொண்டும் வாருங்கள்" எனக் கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிகள் அநேகர் யுத்தசன்னத்தர்களாய்ப் புறப்பட்டு, நகரத்திற்குட் புகுந்து, பனீகுறைலாக்களான ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள், சிறுவர்கள் எல்லாரையும் பிடித்துக் கொண்டு, சொத்துகளையும் சூறையிட்டு, தங்கள் பாசறைக்கு வந்தார்கள்.

தாங்கள் தலையிட்டுவந்த கருமம் நிறைவேறினபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அகங்களித்து, சேனைவீரர்கள் முற்றுகை விடுத்துப் புறப்படும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிகளென்னும் வீரர்கள் ஜெயபேரிகை முழக்கத்தோடு எழுந்தார்கள். பிடிபட்டிருக்கும் பனீ குறைலாக்களைக் காவலில் அமைத்துக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் ராணுவத்தோடு மதினமா நகரம் வந்துசேர்ந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரம் வந்துசேர்ந்த பின், பனீகுறைலாக்கள் எல்லாரையும் சிறைச் சாலையில் கொண்டு போய் அடைக்கும்படி கட்டளை பண்ணிவிட்டு, வேறுசில அஸ்ஹாபிகளை நோக்கி, "நீங்கள் இவ்வூர்க் கடைவீதியில் ஆழமும் அகலமுமான பெரிய குழியொன்று தோண்டுங்கள்" எனக்கட்டளை பண்ணினார்கள். கட்டளைப்படியே பகிரங்கமான கடைவீதியில் மேற்படி குழியொன்று அகழ்ந்து முடிந்தது. படுகுழி அகழப்பட்ட செய்தி நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வந்தபோது, அஸ்ஹாபிகளில் வீரதீரம் மிக்க சிலரை யழைத்து, "நீங்கள் பனீகுறைலாக்களை அடைத்திருக்கும் சிறைச்சாலையிற் சென்று, அவர்களில் ஸ்திரீகளையும், சிறார்களையும் நீக்கி, மற்ற ஆடவர்களையெல்லாம் பத்துபேர்,

எட்டுபேராக மேற்படி குழியண்டை இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தி, கலிமாசொல்லும்படி போதியுங்கள். அதற்கு உடன்பட்டால் பட்டும். இல்லாவிட்டால், ஒவ்வொருவரையும் இரண்டிரண்டாகப் பிளந்து அந்தப்படுகுழியில்போட்டு விடுங்கள்" என நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆக்ஞை செய்தார்கள். இதைக்கேட்ட அஸ்ஹாபிகள் களிகூர்ந்து, அவ்வாக்ஞையின் படியே ஆடவர்களை மாத்திரம்பத்துப்பேர் எட்டுப்பேராகப் பிணித்துக்கொண்டுபோய்க் குழியருகில் நிறுத்திக்கொண்டு, கலிமா சொல்லும்படி கட்டாயப் படுத்தினார்கள். இக்கட்டாயத்திற்கு அந்தப் படுபாதகர்கள் சிறிதாயினும் சம்மதிக்கவில்லை. எல்லாரும் ஒரே மொழியாக, "நாங்கள் நிற்கும் நிலையையும், கொண்ட கொள்கையையும் விட்டுச் சிறிதும் பிசகமாட்டோம். எங்களுக்கு மரணம் வரும்வரையும் எங்கள் மார்க்கத்தை நாங்கள் விட்டுவிட்டு, இதர மார்க்கத்தை அனுசரிக்கமாட்டோம்" எனக்கூறினார்கள். பிராண சங்கடமடைந்து, மரணம் அடுத்திருப்பதைக் கண்ணுக்கு முன் கண்டிருந்தும், இவ்வாறு நிராசரித்துப் பேசினதால், அஸ்ஹாபிகள் வெகுண்டு, எல்லாரையும் அந்தப் பாழுங்குழியில் வீழ்த்தினார்கள். ஆக எழுநூற்றுக்குமேல் ஆயிரத்துக்கு உள்பட்ட தொகை கொண்ட பனீகுறைலாக்கள் எல்லாரும் ஒழிந்துபோன சங்கதியை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து அஸ்ஹாபிகள் தெரிவித்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் மீந்திருக்கும் மற்ற ஸ்திரீகள், சிறுர்கள் ஆக ஆயிரத்தைம்பது பேர்வழிகளையும் நஜ்து என்னும் தலத்தில் கொண்டுபோய், கிரயத்திற்கு விற்று, அந்தப் பணத்திற்குப் படைக்கலன்களையும், போர்க்குதிரைகளையும் வாங்கிக் கொண்டுவரும்படி ஏவினார்கள். அப்படியே சிலதினத்திற்குள் அவர்களைக் கொண்டுபோய் விற்று, படைக்கலன்களும், குதிரைகளும் வாங்கிவரப்பட்டன. பனீகுறைலாக்களிடத்தில் கொள்ளையிட்ட சொத்துகளையெல்லாம் நான்கு பாகமாகப் பிரித்து, மூன்று பாகத்தைக் குதிரை வீரர்களுக்கும், மற்ற ஒரு பாகத்தைக் காலாட்களுக்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கொடுத்தார்கள்.

பின்பு நபிபெருமான் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் புடைசூழ வீற்றிருக்கும்போது, வானவர் பெருமானாராகிய ஜிப்றயீல் (அலை) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் ஸலாம்

சொல்லிக்கொண்டு வந்து நின்று, "யாறஸூலல்லாஹ்! இன்றைய தினம் மகத்தான அல்லாஹு தஆலாவின் மேன்மையான அர்ஷும், குர்ஸியும் நிடுநடுங்கிக் கம்பித்தன. ஆனதால், இங்கே உத்தமவான் யாராவது மவுத்தாயிருக்கவேண்டும்" என மொழிந்தார். இச்சொல்லைக்கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள், அதைக் குறித்து ஆலோசித்தார்கள். அப்போது முன் உயை படையெடுத்துவந்தபோது நடந்தபோரில், கையில் பாணந் தைத்து வேதனையுற்றிருக்கும் ஸஃது (றலி) அவர்களின் எண்ணம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு புறப்பட்டு, ஸஃது (றலி) அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பார்த்தார்கள். பார்த்தவுடன் ஸஃது (றலி) அவர்கள் மவுத்தாயிருக்கக் கண்டு, அனைவரும் துயரடைந்து, அவர்கள் ஜனாஸாவை அடக்குவதற்கு எத்தனப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் முதலாய் அஸ்ஹாபிகளனைவரும் ஜனாஸா அடக்க எத்தனமானவுடன், பூரணச் சந்திரனின் பிரகாசமும் ஒப்பாகாத தேககாந்தியும் முகவசீகரமுமுள்ள அழகிற்சிறந்த மலாயிக்கத்துகள் அநேகர், திரள் திரளாய் வானுலகத்திலிருந்து ஜனாஸா சடங்குக்காக ஸஃது (றலி) அவர்கள் மாளிகையில் இறங்கினார்கள்.

எண்ணரிய மலக்குகள் கூட்டங் கூட்டமாய் வந்தவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்களும், மேற்படி மலக்குகளும், அஸ்ஹாபிகளும் ஒன்றாய்த் திரண்டு, ஸஃது (றலி) அவர்களின் ஜனாஸாவைச் சூழ்ந்து நின்று குளிப்பாட்டி, தூக்கிச் சென்று, தொழுவித்து மேன்மையோடும் அலங்காரத்தோடும் அடக்கினார்கள்.

ஸஃது (றலி) அவர்கள் கையிற் காயமானபோது, மகத்தான அல்லாஹு தஆலா இடம் துவா இரந்து கேட்டபடியே பீஸபீல் மவுத்தை அடைந்து, சுவர்க்கத்து உன்னதமான பதவியைப் பெற்றார்கள்.

88-வது அத்தியாயம்.

உமாம் ஈமான் கொண்டது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இமாமா மேன்மை நபிமார்கட் கிறையாய் நமர்கட் கருள்வேதச்
சமாசா ரமதே சொலுமிறசூல் சங்கைக் கரத்தொட் டிங்கிதமாய்
நிமாசோ டுயர்தீ னிலைமைகளை நெஞ்சிற் குடிகொண் டழகான
உமாமீ மான்கொண் டிடுமரிய துதியின் சரிதந் தனையுவல்வாம்

இதன் பொருள்

நபிமார்களென்னும் தீர்க்கதரிசியர்கள் இலட்சத் திருபத்து நான் காயிரர்கட்கும் இராஜருமாய், நம் அனைவோர்கட்கும் அருளுள்ள புர்க்கான் வேதத்தின் சுகச்செய்திகளைச் சொல்லும் நாயகருமாய் வந்த முஹம்மது முஸ்தபா றசூல் (ஸல்) அவர்களினது சங்கையான நீண்ட திவ்வியமாகிய வலது கையைப் பிடித்து இன்பமான நமாஸ் என்னுந் தொழுகையோடு தீனுல் இஸ்லாம் மார்க்கத்தினுள்ள உயர்ந்த நிலைமைகளை யெல்லாம் நெஞ்சினிடத்திற் குடியாக்கிக் கொண்டு அழகான உமாம் ஈமான் கொண்டதென்னும், உமாம் என்னும் பெயரையுடையவர் உறுதி கொண்ட அரிதான புகழ் பொருந்திய சரித்திரத்தைச் சொல்லுகின்றாம.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மலக்குகள்வின் னுடைய நபியிறசூல்
மதீனநகர் வாழும் நாளில்
விலக்கரிய வருடமொரு நான்கு நிறைந்
தைந்தாண்டு மேவும் போதி

வலக்கணுறுச் சுடரொளியா மல்லாவின்
பணிவிடையா லவனி மீதிற்
றுலக்க முற வந்த ஹஜ்ஜு பழுலான
தின்று முதற் றொழுவீ ரென்றே.

வசனம்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றசூல் (ஸல்) அவர்கள் திக்கு விஜயஞ் செய்து வாழுங் காலத்தில், ஹிஜ்றத்து ஐந்தாம் ஆண்டு பிறந்தது. அந்த ஐந்தாம் ஆண்டில் "இவ்வாண்டின் ஹஜ்ஜு மாதத்திலிருந்து ஹஜ்ஜு தொழுகையை உங்கள் பேரில் பர்லாக்கினோம்" என்னும் அர்த்தமமைந்த வேதவாக்கியம் இறங்கிற்று. அவ்வாண்டு முதல் ஹஜ்ஜுப் பெருநாளில் தொழுக ஆரம்பித்தார்கள்.

பிறகு "அறிவைக் கொடுத்து அறநீக்கி சித்தபிரமையைக் கொடுத்து, மித்திரர்களை எல்லாம் சத்துருக்களாக்கி, பேசத் தக்கது இது தகாதது இது வென ஆய்ந்தறிந்து பேசாமல், உளறப் பண்ணும் கள்ளாதி பஸ்தான பானங்களை எல்லாம் உங்களுக்கு ஹறுமாக்கினோம்" என்னும் பொருள் தரும் வேதவாக்கியம் ஒன்று அல்லாஹு தஆலா இடமிருந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கிற்று. அதனையும் வியாக்கியானத்துடன் அஸ்ஹாபிகளுக்குத் தெரிவித்தார்கள்.

வேத நிபந்தனைகள் சிறிதும் வழுவாமல் நடத்தி, தீனை நிலைநிறுத்தும் உத்தமவான்களாகிய அஸ்ஹாபிகளோடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமாய் வாழுங் காலத்தில், ஒரு நாள் கல்வி கேள்விகளாற் சிறந்த உமாம் என்பவர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் வீற்றிருக்கும் திவ்விய சபையில் வந்து நின்று, அஸ்ஹாபிகளை நோக்கி "ஜனங்களே! முஹம்மது நபி எங்கிருக்கின்றார்கள்?" எனக்கேட்டார். அதற்கு அஸ்ஹாபிகள் நபிநாயகம் (ஸல்) அவர்களை அவருக்கு சுட்டிக் காட்டினார்கள். அப்போது அவர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன்வந்து பணிந்து நின்று கொண்டு, "அப்துல் முத்தலிபு உடைய பேரரே! தமியேன் ஒரு காரியத்தைப்பற்றி, ஆராய்ந்தறியாமல் துடுக்குத்தனமாய்த் துணிந்து கேட்க நாடிவந்திருக்கின்றேன். அதைத் தாங்கள் கேட்டு, என்மேல் சினங்கொள்ளாமல் தகுந்த பிரதியுத்தரம் தரவேண்டும்" என்றார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள், "நீ விரும்பினதைக் கேள்" என அவரை நோக்கிச் சொன்னார்கள்.

சரித்திரப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

ஓதுமொழிக் கவருவந்த வுண்மை கண்டு
நின்றவிய ஹுமாம் சொல்வான்
மீதிலா மறைப்பொருளாய்த் நிகழொளியாய்
நிறைந்தவல்லா செகத்தின் மேற்றன்

றூதரா யுமையிருக்க வனுப்பினதுங்
காலமைந்துந் தொழுக வென்றுங்
காதலுடன் சக்காத்து நோன்பு ஹஜ்ஜும்
பர்லெனவே கழறு மைந்தும்.

மெய்யாமோ சாதமெனி லிறைய வன்றன்
மேலாணை விளம்பு மென்னப்
பொய்யாத நபிவசன மைந்துக் கைந்து
தரமிறைமேற் புகன்று ரானை

யையாநீர் சொன்னதுண்மை யெனவுஹுமா
மீமானி லாகி நெஞ்ச
மையாருங் குபிர் நீக்கிக் கலிமாவு
மொழிந்து மறை வழிநின் றாரே.

வசனம்.

அப்போது மேற்படி ஹுமாம் "நபியே! அல்லாஹு தஆலா ஒருவனே என்றும், தாங்கள் அவனுடைய மெய்த்தூத ரென்றும் மனமும் வாக்குமொத்து உறுதிகொண்டு மொழிவதும், நாள் ஒன்றுக்கு ஐந்துவேளைதொழுது வருவதும், உபவாச விரதம் நோற்பதும், ஜக்காத்து கொடுப்பதும், ஹஜ்ஜுக்குப் போவதுமான இவ்வைந்து நிபந்தனைகளும் உண்மையானவை தாமோ? அப்படி உண்மையாயிருந்தால், அவற்றை நியமகமாக்கின அந்த அல்லாஹு தஆலா பேரில் பிரமாணிக்கஞ் செய்யுங்கள்" என்றார். அதைக் கேட்ட நபி நாயகம் (ஸல்) அவர்கள் மறுத்தொன்றும் பேசாமல், மேற்கண்ட ஐந்து நிபந்தனைகளுக்கும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு தரமாக ஐந்து தரம் பிரமாணிக்கஞ் செய்தார்கள். உடனே ஹுமாம் என்பவர் மனந்திரும்பி, ஈமான் கொண்டு, கலிமா சொல்லி முஸ்லிமானார்.

மேற்படி ஹுமாம் முஸ்லிமான பின், நபி நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி 'யாறஸூலல்லாஹ்! தமியேனுடைய வர்த்தமானங்களைக் கேளுங்கள். நான் தங்கள் செவிலித் தாயாகிய ஹலீமாவுடைய கிளையார்களான பனீசயீதுக் கூட்டத்திலுள்ளவன்; என்னை மேற்படி கூட்டத்தார்களே தங்கள் மகிமையைக் கண்டறிந்து வரும்படி இங்கே அனுப்பினார்கள்." நானும் அதற்காக வேண்டித்தான் புறப்பட்டு வந்தேன். அவ்வெண்ணத்தோடு வந்த நான், தாங்கள் உண்மையான நபி யென்றும், றஸூ லென்றும் ஈமான் கொண்டு முஸ்லிமாய் விட்டபடியால், இனி நான் இங்கிருந்து மேற்படி பனீசயீதுக் கூட்டத்தாரிடஞ் சென்று, தங்களுடைய மகத்துவத்தை அவர்களுக்கு உணர்த்தி எல்லாரையும் முஸ்லிமாகச் செய்விக்கிறேன்" என்றார். இதைக் கேட்டு நபி நாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமடைந்தார்கள்.

பிறகு ஹுமாம் நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் விடை பெற்றுக் கொண்டு, தம் ஊருக்குச் சென்று, நபி நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்தைப் பற்றி பனீசயீது கூட்டத்தாருக் கெல்லாம் அதிகமாகப் போதித்து, சிலரை முஸ்லிமாக்கினார். ஹுமாமுடைய கையைப் பிடித்துக் கலிமாச் சொல்லி, அவரிடத்திலேயே மார்க்க முறைமைகளையும் கற்றுத் தேறினார்கள்.

89-வது அத்தியாயம்.

ஸெயினப் நாச்சியாரின் கலியாணம்.

சந்தத்தாழிசை விருத்தம்.

குயிலினிழலில் வருநயினார் குணமிகுதி பெருமடவார்
வியனுறுநல் லெழிலுருவே மிளிருமணி கனிறொளியார்
மயிலனையார் பொறைநெறிசேர் தருமதயா ளமுமுடையார்
ஸெயினபு நாச் சியரைமணக் திடுசரிதந் தனைநுவல்வாம்.

இதன் பொருள்.

மேகக்குடை நிழலில் வருகின்ற நபி நயினார் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், மிகுந்த நற்குணமுள்ள பெண்கள் யாவரும் பெருமை பேசத் தக்க நல்ல அழகான பிரகாச ரூபம் பொருந்தி இரத்தின மணிகளைப் போலொளியுற்று, மயிலுக் கொப்

பாகிப் பொறுமை, நெறி, நேர், நாணம், தயாளம் இவைகளிற் குறைவில்லாத ஜெயினப் நாச்சியாரை கலியாணஞ் செய்த சரித்திரத்தைச் சொல்லுகின்றார்.

சீறாப் புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அரிதுணர் குபாரின் செய்கை யவ்வணை யாகநீதி
தெரிதரு மிறசூலல்லா சிறந்தினி திருக்கு நாளிற்
பரிவுட னைந்தா மாண்டிற் பண்புறுஞ் சகுசென்றோது
முரியவன் மகளை வேட்டற் குற்றதோர் தூது விட்டார்.

வசனம்.

நபிகள் திலகம் முகம்மது முஸ்தபா றசூல் (ஸல்) அவர்கள், நிகழும் ஹிஜ்றத் ஐந்தாம் ஆண்டிலேயே, மதீனமா நகரத்திலிருக்கும் சஹஸ் என்பவருடைய புத்திரியாகிய ஜெயினப் என்னும் பெண்ணைத் தாங்கள் விவாகஞ் செய்து கொள்வதற்காக வேண்டி, தூதர் ஒருவரை அந்தப் பெண்ணிடத்தில் அனுப்பினார்கள். மேற்படி தூதர் சஹஸ் உடைய மாளிகை வாயிலிற் சென்று, ஜெயினபு என்னும் பெண்கட்கரசியைத் தரிசித்து, பலவாறு துதித்துப் புகழ்ந்து "சஹஸ் செய்த தவங்களெல்லாம் திரண்டு பெண்வடிவெடுத்த எங்கள் தாயே! தமியேன் தங்கள் சமுகத்திற்கு மங்கள காரியம் என்று கொண்டு வந்தேன். அதாவது நம்மை யெல்லாம் சுவர்க்கத்தில் செலுத்த அவதரித்து வந்த நபிநாயகம் (ஸல்) அவர்கள், தங்களை விவாகஞ் செய்து கொள்ள விரும்புகிறார்கள். தங்கள் சித்தம் எவ்வாறோ? அறியவேண்டும்" என்று கூறினார். அதைக் கேட்ட ஜெயினப் நாச்சியார், மேற்படி தூதரை நோக்கி "மகத்தான நபிநாயகம் (ஸல்) அவர்களின் தூதரே! என் விவாகத்தைக் குறித்து, அல்லாஹு தஆலா வேதவாக்கியம் இறக்கினாலன்றி, நான் பொருந்த மாட்டேன்" என விடை பகர்ந்தார்கள். ஜெயினப் நாச்சியார் மொழிந்த இத்திருவாய் மொழியைத் தூதர் கேட்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார். இதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, அல்லாஹு தஆலாவின் உத்தரவை வழி பார்த்திருந்தார்கள்.

இவ்வாறிருக்கையில், ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், அல்லாஹு தஆலா இடத்திலிருந்து வேதவாக்கியத்தைக் கொண்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தார். அவ்வேதவாக்கியத்தின் கருத்தாவது:— "சுவர்க்கங்கள் எட்டையும் அலங்கரித்து, மலக்குகளும், ஹூறுல்ஈன்களும் திரள் திரளாய் மங்களவாழ்த்து முழக்கத்தோடு நெருங்கி நிற்க, அல்லாஹு தஆலா ஒலியாகவும், ஜிப்றயீல், மீக்காயீல், இஸ்றாயீல், இஸ்றாபீல் என்னும் பிரதானமலக்குகள் நால்வர் சாட்சியாகவும் இருந்து முகம்மது நபிக்கும் ஜெயினபுக்கும் விவாகம் நிறைவேற்றப்பட்டது" என்பதாம்.

இவ்வர்த்தத்தரும் வேதவாக்கியத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து களிகூர்ந்து, அங்கிருந்து புறப்பட்டு, தங்கள் காரியத்திற்காகத் தூதர் ஒருவர் இல்லாமலும், யாதொரு பிரதிபக் தமுமில்லாமலும், தாங்களே நேரே ஜெயினபு நாச்சியார்மனைக்குட் சென்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மாளிகைக்கு வந்த போது, அவர்களின் ஒப்பில்லாத அவயவ இலட்சணங்களையும் கட்டழகையும் ஜெயினபு நாயகியார் கண்டு, மனமகிழ்ந்து ஒரு புறத்தில் நாணி நின்றார். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணரசை நோக்கி, தங்களுக்கு அல்லாஹு தஆலா இறக்கின வேத வாக்கியத்தை ஓதிக் காட்டினார்கள். அவ்வாக்கியத்தின் உள்ளுறை பொருளையுணர்ந்த மேற்படி நாயகியார், நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு மனைவியாக மனம் பொருந்தி, அன்று முதலாய் கற்பிற்சிறந்த நாயகியாயும் உலகமாதாவுமாய் விளங்கினார்கள்.

அன்றைய தினம் அபூதல்ஹாவின் மனைவியாகிய உம்மு சுலைம் என்னும் உத்தமி, தமது மனையிலிருந்த கொஞ்சம் ஈத்தம் பழத்தோடு நெய்யும் தயிரும் விட்டுப் பிசைந்து ஒரு பாத்திரத்தில் வைத்து, தம் குமாரராகிய அனஸ் என்பவரை யழைத்து அவர் கையில் கொடுத்து "மகனே! நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்போது ஜெயினபு நாயகியார் மனையில் இருக்கின்றார்கள். நீ இதையெடுத்துக் கொண்டு போய் அவர்கள் சமுகத்தில் வைத்து, என்னுடைய சலாமும் சொல்லு" எனக் கட்டளை பண்ணினார். உடனே அனஸ் அதையெடுத்துக் கொண்டு ஜெயினபு நாயகியார்

மனைக்கு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் வைத்து; தமது சலாத்தையும் தாயார் சலாத்தையும் சொல்லி மரியாதையாக நின்றார்.

தங்கள் சமுகத்தில் வைக்கப்பட்ட பாத்திரத்தில் ஈத்தம் பழம் வைத்திருப்பதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அனஸை நோக்கி, "அனஸே! நீர்போய் அஸ்ஹாபிகளை விருந்துண்ண அழைத்து வாரும்" எனக் கட்டளை பண்ணினார்கள். உடனே அனஸ் சென்று அஸ்ஹாபிகள் பலரைத் திரளாக அழைத்துக் கொண்டு போய், மனை முழுவதும் இருத்தினார். விருந்துண்ண வந்த அஸ்ஹாபிக ளெல்லாரும், நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு சலாம் சொல்லி உட்கார்ந்தார்கள். பின்னர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி பாத்திரத்திலிருக்கும் ஈத்தம் பழத்தை அவ்வஸ்ஹாபிகளுக் கெல்லாம் கொடுக்கும்படி அனஸை ஏவினார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சொற்படி யவரும் வைத்தார் சுருதிமா நபிமு னின்ற
பற்பல பேரைப் பார்த்துப் பதின்மரோர் குழுவாய்க் கூடி
நற்கனி யருந்து மென்றார் நயந்தவ ருரைதப் பாமற்
பொற்புறச் செறிந்தி ருந்து புசித்துளங் களித்தெ ழுந்தார்.

முறை முறை பதின்ம ராக மொய்த்திருந் தருந்தும் போதுங்
குறை வறை வளர்ந்த தல்லாற் குறைந்தில கனிக ளொன்றுந்
துறை தவ ரும லுண்டோர் தொகை தனை விரித்துக் கூறிற்
றிறனுற வருமுந் நூற்றின் மேலுஞ்சில் வான மென்பார்.

வசனம்

அனஸ் பாத்திரத்தைக் கையில் தூக்கினவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "அஸ்ஹாபிகளே! பத்து பத்துப்பேர் ஒன்றாய்க் கூடித் தின்னுங்கள்" எனக் கூறினார்கள். அவ்வாறே எல்லாரும் பத்து பத்துப் பேர்களாக ஒன்றாய்க் கூடியிருந்து தின்றார்கள். தின்னத் தின்ன, பாத்திரத்திலிருந்த கனி அப்படியே குறையாமலிருந்தது. ஒரு சிறிய பாத்திரத்திலிருந்த மேற்படி கனியை முந்நூற்றுச் சில்வானம் அஸ்ஹாபிகள்

வயிறாரப் புசித்தார்கள். புசித்தும், அதில் சிறிதும் குறையாமல் அதிகமாய்ப் பெருகியிருந்தது.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அனஸைக் கூவி, மேற்படி பாத்திரத்தைத் தங்கள் முன் கொண்டு வரும்படி சொன்னார்கள். அனஸ் பாத்திரத்தைப் பார்த்து வியப்புற்று, "ஆ! இதென்ன அற்புதம்! இத்தனை பேர் வயிறு புடைக்கத் தின்றும் முன்னிலும் அதிகமாயிருக்கின்றதே; இன்னும் எவ்வளவு பேர் தின்றாலும் குறையாதே" என்றெண்ணி, களிகூர்ந்து, பாத்திரத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் வைத்தார்.

விருந்துண்ட அஸ்ஹாபிகளில் அநேகர் நபிநாயகம் (ஸல்) அவர்களைத் துதித்து விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார்கள். சிலர் மாத்திரம் போகாமல் மனைவாசலிலேயே நின்றபடியால், ஜெயினபு நாயகியார் நாணி, வீட்டுக் குள்ளேயேயிருந்தார்கள். அப்போது, அல்லாஹு தஆலா வேதவாக்கிய மொன்றை நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கினான். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த அஸ்ஹாபிகளை நோக்கி "விருந்துண்டு தீர்ந்த நீங்கள் இங்கே தங்காமல், உங்கள் ஜாகைகளுக்குப் போங்கள். இப்போது ஜெயினபு நாணியிருப்பதால், இனி நமது மார்க்கத்துப் பெண்களெல்லாம் அந்நிய புருஷர்களுக்கு நாணி நிற்பது ஆகும்" என மேற்படி வேதவாக்கியத்தையும் ஓதிக் காட்டிச் சொன்னார்கள். அப்போது அஸ்ஹாபிகளெல்லாரும் மனமகிழ்ந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களைத் துதித்துச் சென்றார்கள்.

90-வது அத்தியாயம்.

ஒட்டகம் பேசினது.

கலி விருத்தம்.

எட்டிகை யோர்களு மேங்குபு கல்லாற்
பட்டகை மூற்போற் பண்புற நீண்டார்
தொட்டகை யாதியின் மாதிற நூலோ
டொட்டகை பேசிய தோதிடு வாமே.

இதன் பொருள்

எட்டு திக்குகளிலுமுள்ள மானிடர் யாவரும் அழும்படியாக, ஷாம் தேசத்திற் காபிரீன்கள் பலருங் கூடிப் பேசியபடிகொலை செய்ய மேன்மாடியில் வைத்திருக்கும் பாராங்கல்லை யுருட்டி விடப் போனவனுடைய கைகளானவை, அந்தக் கல்லிலகப்பட்டுத் துண்டாக, முழமட்டி லொடிந்து கெட்டுப் போனதை முன்னிருந்த தகுதியைப் பெற்றிருக்க, முழக்தாளுக்கும் நீண்டகையாலே தொட்டுப் பொருந்தச் செய்த அல்லாஹு தஆலாவின் தூதர் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களோடும் ஒட்டகை பேசிய அற்புதத்தை சொல்லுகின்றும்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விரைதரு மரவமாலை வெற்பெனத் திரண்ட தோளி
னிரைதரப் பவளக் கொத்தி னிறந்தருங் கனிவாய் வேத
முரைதரத் தீனர் வாழ்க்கை யுயர்தர விளங்கு கீர்த்தி
தரைதர நபிநற் செல்வத் தழைதர விருக்கு நாளில்.

வசனம்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் தீன் என்னும் பரிசுத்தமான முத்திமார்க்கத்தை நாளுக்கு நாள் வளர விளக்குவித்து அரசு செய்யுங்காலத்தில், அஸ்ஹாபி களிலுள்ள ஒரு கனவானுடைய ஒட்டகமொன்று, திடீரென்று மதத்தது போல, கட்டியிருந்த கயிற்றை யறுத்துக்கொண்டு, எதிர் வருபவர்கள் மேல் சீறி, அவர்களை அச்சுறுத்தி வெருட்டிப் பல வீதிகளை யெல்லாங்கடந்து, நகர்ப்புறத்திலுள்ள அலங்காரமான ஒரு தோப்பில்வந்து நுழைந்தது. அந்த சிங்காரவனத்துட் புகுந்த மேற்படி ஒட்டகம் தே, மா, பலா, வாழை யாதி கனிதரும் விருக்ஷங்களையும், நறுமணமிக்க மலர்களைச் சொரியும் செடி கொடிகளையும் முறித்தும், சிதைத்தும் பலவாறு சேதமாக்கிக் கொண்டு, அந்தத் தோட்டத்திலேயே சுற்றிச்சுற்றித் திரிந்தது. இதைக்கண்ட மேற்படி தோட்டத்துக் காவற்காரர்கள் திடீரென்று எழுந்து, அந்த ஒட்டகத்தைக் கைப்பிடியாகப் பிடித்துக் கட்டு வதற்குத் தங்களால் ஆனமட்டும் பிரயாசைப்பட்டுப் பார்த்தார்கள்,

சிறிதும் கூடவில்லை. இவர்கள் அவ்வொட்டகத்தை நெருங்குந் தோறும், அது தன் பெரிய வாயைப்பிளந்து, கழுத்தை நீட்டி மூச்செறிந்து, கடித்து உதறுதற்கு முடுகும்; அச்சம் சிறிது மின்றி ஆட்களை மேற்சாடும்; அதுதானே இவர்களைப் பயமுறுத்தி உறுமிக்கொண்டு துரத்தும். இவ்வாறு அந்த ஒட்டகஞ் செய்வதைக் கண்ட காவற்காரர்கள் திகில்கொண்டு, கண்ணுக்கலங்காரமான இந்த சிங்காரத்தோப்பை இப்படிச் சீர் கேடாக்கும் இத்துஷ்ட ஒட்டகத்தை அடக்கியமர்த்துவோர் ஒருவருமில்லையே, இதற்கு நாம் என்ன செய்வோமென்று எண்ணி மனச்சோர்வடைந்து, இப்போது நாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற் சென்று இச்சங்கதியை முறையிட்டுக் கொள்ளுவோமானால், உடனே இதன் உக்கிரத்தை யடக்கிக் கட்டுவிப்பார்களென நினைத்து, அங்கிருந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற்கு ஓடிவந்து, மரியாதையோடு சலாம் சொல்லி நின்று, மனம்பதற, கைகால்பதற, வாய்பதற ஒட்டகஞ்செய்யும் குறும்பைச் சொல்லிக் காட்டினார்கள்.

இம்முறைப்பாட்டைக் கேட்டமாத்திரத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சித்த மிரங்கி, அங்கிருந்து எழுந்து, காதவழிதூரம் கஸ்தூரி பரிமளிக்க, கருமேகங் குடை நிழற்ற, பாதமலர்கள் தரையில் தோயாமல் நடந்து, மேற்படி தோட்டத்திற்கு வந்தார்கள். அப்போது அந்தத்தோட்டம் அவ்வொட்டகத்தினால் சின்னா பின்னப்பட்டு, தாறுமாறுமாய் இருந்தது. அநேக விருக்ஷங்கள் முறிந்து சாய்ந்து கிடந்தன. அலங்காரமான செடி கொடிகளெல்லாம் அழிக்கப் பட்டிருந்தன. பக்ஷிஜாலங்கள் தங்க இடமற்று, [illegible]னுவித இசைகளோடு ஆகாயத்திலுயர்ந்து பறந்து கொண் டிருந்தன. மேற்படி பக்ஷிகள் அவ்வாறு தொனித்துப் பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தால், அவை நபிநாயகம் (ஸல்) அவர்களைக் கண்டு "யாறஸூலல்லாஹ்! தேவரீர் எங்களுக்கு வந்த ஆபத்தை விலக்கி, தங்க இடந்தந்து ஆதரிக்கவேண்டும்" எனப் புலம்பி முறையிடுவது போலிருந்தது. புஷ்பங்களில் மொய்த்திருந்த வண்டுகள் பல திக்குஞ் சிதறி, இன்னிசையோடு பறந்து போவதைப் பார்த்தால், வெகு ஜனோபகாரியாய் அடுத்தாரை ஆதரிக்கும் உதாரியா யிருக்கும் உத்தமவானுக்கு, ஆபத்து வந்த போது அவனை யடுத்துப் பிழைத்திருந்த ஜனங்கள் வேறு துணையின்றித் தெறிகெட்டுப் போவது போலிருந்தது. முறிந்து

சிதைந்து கிடக்கும் விருக்ஷங்களிலும், செடிகொடிகளிலுமுள்ள இலைகளிலும், மலர்களிலுமிருந்து நீர்துளிகளும் மதுத்துளிகளும் சொட்டுச்சொட்டென்று ஒழுகிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், ஒட்டகத்தால் சிதைவுண்ட அந்த பூங்காவனம் நபிநாயகம் (ஸல்) அவர்களைக் கண்டு, "யாறஸூலல்லாஹ்! இந்த ஒட்டகம் என்னை இவ்வாறு சேதப்படுத்திற்று" எனமுறையிட்டு அழுவது போலிருந்தது.

இவ்வண்ணம் நிலைகுலைந்திருக்கும் அந்தச் சிங்கார வனத்திற் குட்புகுந்து எங்கும் திருக்கண் பரப்பிப் பார்த்தார்கள். பார்த்த போது, மேற்படி ஒட்டகம் ஒரு பக்கத்தில் வெறித்து நிற்பதைக் கண்டு, அதைச் சமீபத்திலழைத்து கட்டுவிக்க நாடி, அதை நோக்கிக் கை ஜாடைகாட்டி, தங்கள் முனவரும்படி அழைத்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் வந்து நின்று அருகில் வரும்படி யழைப்பதை மேற்படி ஒட்டகங்கண்டு, பருவத மொன்று கால்படைத்து நடந்து வருவதுபோலத் தலைமடங்கி நடந்து வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் நின்று கண்ணீர் சொரிய அழுது, நீண்ட கழுத்தைக் குறுக்கி, வாலையசைத்து முன்னங் காலிரண்டையும் மடக்கித் தரையிற்படிந்து, மரியாதையாகத் தாழ்ந்து எழுந்து பழயபடி நின்று, தீராத்துயர் கொண்டமனத்தோடு அந்த ஒட்டகம் அழுது, முகம்வாடித் தலை வணங்கி நின்றது. அப்போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அதைப் பார்த்து "ஒட்டகமே! உன்னை அமர்த்திக்கட்டுதற்காகவேண்டி நெருங்கி வந்தவர்களை, நீ குறும்பு செய்து எதிர்த்து அச்சுறுத்தக் காரணமென்ன?" என்று கேட்டார்கள். அப்போது. சஞ்சலம் நிறைந்த நெஞ்சினையுடைய அவ்வொட்டகம், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி கீழ்வருமாறு சொன்னது :—

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

ஐயனே யடியேன் றன்னைக் கொண்டவாண்டவனுக் கன்பாய்ச்
செய்யுழை ழியங்க ளோவாதாண்டுநாற்று பதுஞ்செய் தெய்த்து
மெய்யெலா மெலிந்து காலின் விரைவற்று நெஞ்சு போகக்
கையற லடைந்து வீழுங் காலமாய்த் தளர்ச்சி யுற்றேன்.

அவரதுகு றித்தி டாம லடித் தடித் தென்னை மேனு
ளேவனகர லத்துத் தாங்கும் பாரமே யேற்றித் தின்னக்
கவர்பரத் திலையும் புல்லுங் கால் வயிறளித்துத் தண்ணீர்த்
தவனமுந் தீர்த்தி டாமற் றறுகண்மை செய்ய லுற்றார்.

வசனம்.

"யாறஸூலல்லாஹ்! தேவரீர் என்மனத் துயரைக்கேட்டு எனக்காக சித்தம் இரங்கவேண்டும். நான், என்னை விலைக்குக் கொண்ட எஜமானனுக்கு நாற்பது வருஷம்வரையும் ஊழியஞ்செய்து உழைத்து வந்தேன். பிரதிதினமும் தாங்கரிய சுமைகளைச் சுமந்து சுமந்து பாடு பட்டபடியால், உடல்மெலிந்து, ஊக்கம்குன்றி, நடைவிரை வொழிந்து பலமொடுங்கினேன். இப்போது எனக்குத் தள்ளாத காலமாயிற்று. நான் தளர்ந்து போனதை என் எஜமானன் சிறிதும் கவனிக்கவில்லை. தள்ளாத பருவமான இக்கடைசிக் காலத்திலும் முன் எனது பாலிய பருவத்தில் சுமத்தின சுமைகளையே என் நெஞ்சு முறியச் சுமத்தி நடத்துகின்றார். உடலுலர்ந்து எலும்புந் தோலுமாயிருக்கும் நான் வஞ்சகம் செய்யவில்லை; இயலாமையாலேயே தாங்கரிய சுமையோடு நடக்கதிராணி யற்றுப்போனதால், அடிக்கடி நிற்கநேரிடுகின்றது. அப்படி நான் நிற்குந்தோறும் அவர் என்னை அடித்து வருத்தும் நிஷ்டூரம் சொல்லக் கூடியதல்ல. கிழப் பருவமாயிற்றே யென மனதிரங்கி அரைவயிறு நிரம்பவாவது எனக்கு இரை கொடுக்கிறதில்லை. யாறஸூலல்லாஹ் மன இரக்கமற்ற என் எஜமானன் என்னைப் பலவாறு கொடுமைசெய்து வருத்துவது மாத்திரமல்ல; என்னைக்கொன்று பக்ஷிக்கவும் எண்ணம் வைத்திருக்கின்றார். யாநபீ! என் உயிரை வைத்து, சுமத்தாத சுமையைச் சுமத்தி, படுத்தாத பாடுபடுத்தினாலும் படுத்தட்டும்; உயிர் வதை செய்யத் தலைப்பட்டால், என்மனம் எப்படிச் சகிக்கும்? ஆனதால், 'கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்' என உலகஞ் சொல்லும் முதுமொழியை நான்கருதி, தள்ளாத பருவத்திலும் நெஞ்சு முறியப் பாடுபடவும் ஈற்றில் உயிர்வதைக்கு உட்படவும் வேண்டிய நிமித்தம் என்னவென்று நின்றபடியே வெறி கொண்டாற் போல நடித்து, கயிற்றை யறுத்துக்கொண்டு, எதிர்த்துவருவார் மேல் விழுந்து வெருட்டி, இத்தோட்டத்தில் வந்து திரிகின்றேனே

யன்றி வேறல்ல. இனிச்சக நியாயம் பிறக்குமென்று நினைக்கின்றேன்" என முறையிட்டுக் கூறிற்று.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்வொட்டகத்தின் முறைப்பாட்டைக்கேட்டு, மனமிரங்கி, அதன் எஜமானனை அழைப்பித்து "நீர் இவ்வொட்டகம் இறக்கும் பரியந்தம் வயிறு நிரம்ப நல்ல இரை கொடுத்து ஆதரித்து, இலேசான சுமைகளைச் சுமத்திப் பராமரித்து வாரும்" என்று ஆக்ஞாபித்து, அவ்வொட்டகத்தை அவரிடம் ஒப்புவித்து அனுப்பினார்கள்.

இவ்வற்புதத்தைக் கண்ணாரக் கண்டு நின்ற அஸ்ஹாபிகளெல்லாரும் நபிநாயகம் (ஸல்) அவர்களை வியந்து துதித்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "நான் நபியாய் வந்தது, மானிடர்களுக்கும், ஜின்களுக்கு மாத்திரமா? மற்ற சராசரங்கள் எல்லாவற்றிற்கும் நபியாய் வந்திருப்பதால், இவ்வொட்டகம் என்னோடு பேசினதும், நான் அதைப்பேசுவித்ததும் நூதனமல்ல" எனப் பகர்ந்து மாளிகைக்கு வந்தார்கள்.

91-வது அத்தியாயம்.

மழைவர வழைப்பித்தது

கலி விருத்தம்.

கழையினுக் கெட்டிடாக் கானி யாற்றிலோர்
ருழைசெலத் தட்டிலா தாக்க மாகவே
பிழையறப் புக்கருட் பெய் முஹம்மதோர்
மழையழைப் பித்திடும் வாறு கூறுவாம்.

இதன் பொருள்

ஷாமுதேசத்திற்குப் போகும் வழியில் மூங்கிற் கழைக்குமெட்டாத ஆழமாக வெள்ளப் பெருக்கோடும் வழிசெல்வோர்கட்கிறங்கிப் போக முடியாமற் றடைசெய்துகொண்டு கிடந்த காட்டாற்றினிடத்தில் அல்லாஹுத் தஆலாவின் கிருபானுக்கிரகத்தினாலோர் புள்ளிமான் முன்னிற்செல்ல, அதற்குப்பின்னில் வலிமையோடுங் குற்றங்களறப்போய் அவ்வாற்றைக் கடந்த காரணத்தை யுடையவர்களாகி அருளைப் பெய்யுமேகம் போன்ற முஹம்மது முஸ்தபா

றஸூல் (ஸல்) அவர்கள், அழகிய மழையை யழைப்பித்த வரலாற்றைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

முனிவற றலிமா ஸல்கு மூலையுறு றெம்பான் மாந்திப்
பனிமதிக் கருணை செய்து படவர வழைத்துப் பேசுந்
தனிமுதற் றூதரா ரு மாண்டினிற் றகைமை பெற்ற
வனைகழல் ஸகுபி மார்கள் வழுத்திட விருக்கு நாளில்.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் ஹிஜறத்து ஆறும் ஆண்டில், இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து ஆளுங்காலத்தில், ஒரு வெள்ளிக் கிழமையன்று குத்பாவோதி, தொழுதுமுடித்து, மின்பறிலிருந்து ஜனங்களுக்கு உபதேசஞ் செய்து கொண்டு இருக்கையில், அஸ்ஹாபிகளிலுள்ள கூலைக் என்பவர், அந்த ஜனத்திரளில் எழுந்து நின்று, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி அடியிற்குறித்த வண்ணஞ் சொன்னார் :—

"ஜீவகாருண்ய கர்த்தாவாகிய யாறஸூலல்லாஹ்! இப்போது, நாம் வாசஞ்செய்யும் இந்த மதீனாவிலும், நாட்டுக்கிராமங்களிலும் பஞ்சம் தலைகாட்டி யெழும்புகின்றது. நீண்டநாள் வரையும் மழைத்துளி ஒன்றாவது ஆகாயத்திலிருந்து விழாமையால், குளங்கள், குட்டைகள், கிணறுகள் எல்லாம் அற வறண்டுபோயின. விருமலை விழருவிகளும் வற்றியுலர்ந்து தடமின்றி யொழிந்தன. விருக்ஷங்களனைத்தும் காய்ந்து இலைகளையுதிர்த்து, ஈரமின்றிகரிந்தன. புற்பூண்டுகளெல்லாம் கருகிப்போயின. கானலின் கொடுமையால், ஒட்டகங்கள், குதிரைகள், ஆடுகள், மாடுகள், கழுதைகள் எல்லாம் உடலுலர்ந்து மெலிந்தன. இவற்றில் அநேகம் காய்ந்த புற்களுக்கும் வழியின்றி மடிந்தன. விலங்கினங்களும், பக்ஷிஜாலங்களும் படும் கஷ்டம் சொல்லுந் தரமல்ல. பார்க்கப் பரிதாபமானதாயிருக்கின்றது. ஏழைகள் படுந் துன்பமோ அதிக அபாயகரமாயிருக்கின்றது. குழந்தைகளுக்குப் பாலூட்டும் ஸ்திரீகளெல்லாம் உடலிலுள்ள உதிரம்வற்றி யொடுங்கினபடியால், அக்குழந்தைகள் அநேகம் மடிந்தன. பல ஆண்களும், பல பெண்களும், இலைகளை

யும் கிழங்குகளையும் அவித்துப் புசித்து காலைப்போக்குகிறார்கள். அநேகர் அவற்றிற்கும் வழியற்று மாளுகின்றார்கள். இக்ததத்தாங்கரிய பஞ்சம் சீக்கிரத்தில் தொலையா விட்டால், இராஜ்ஜிய மெங்கும் பரவி, பிராணிகளைப் பிடித்து மாளச்செய்யு மென்பதில் சமுசய மில்லை. இதற்குத் தேவரீரே சித்தமிரங்கி, ஏழைகளை இரக்ஷிக்க வேண்டும்'' என்றார்கள்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருத்தமா யுரைப்பக் கேட்டுத் திருநபி யிரங்கிப் பாரில்
வருத்தங்க ணீக்கவேண்டி மனத்தினிற் கிருபை மீறிப்
பொருத்தரும் புறுக்கான் வேதப்பொருளினை யெவருமுள்ளத்
திருத்தரு மொளியை யுள்ளித்து ஆவிரக்திருகை யேந்தி.

இறையவனே மறையின் வாழ்வே யெங்கனும் பரந்து நின்ற
குறைவிலாப் பொருளே சோதி குலவிய வொளியே நீதி
முறைகுறை வறநின் றோனே முதல்வனே யழிவில் லாம
ணிறைசெழுஞ் சுடரே யென்று நிகழ்த்திடக் கிருபைசெய்தான்.

வசனம்.

பரிதாப சித்தமுள்ள சுலைக் இப்படிச் சொன்னவைகள் அனைத்தையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, மனதிரங்கி, அப்போதே தங்கள் இருகரங்களையும் ஏந்தி உயர்த்திக்கொண்டு, ''யா அல்லாஹ்! யாகரீம்! யாறஹீம்! யாகாலிக்! யாறாஜிக்! தற்காலம் உன் அடியார் பேரில் இரங்கி மழையை வருஷிக்கப்பண்ணு; உன் அடியார்களை இரக்ஷி; எளியேனுடைய மன்றாட்டத்தைப் பொருத் தியருள். இப்போதே மழையை இறக்கு'' யென்று துவா இரந்து கேட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு இரந்து கேட்டதை அல்லாஹு தஆலா உடனே பொருத்தி, மழைபெய்யும் படி அருள்செய்தான்.

ஆகாயத்தில் திரிந்து மலைச்சிகரங்களில் தங்கியிருக்கும் மேக ஜாலங்களனைத்தும் திரண்டெழுந்து, நீருண்டு கறுத்து, எங்கும் பரந்து இருண்டு, செவியடைப்பட்டு மனம்பதறத்தக்க இடிமுழக் கத்தோடு அடிக்கடிப் பளீர்பளீரென மின்னி மழைசொரியத் தலைப் பட்டன. சற்றும் பிரிந்து வெளிவாங்காத மப்புமந்தாரத்தினால்

/

இரவும் பகலும் ஒரேதன்மையான அந்தகாரமாயிருந்தது. பெய்ய ஆரம்பித்த மழை ஒரு நிமிஷமாவது ஓய்ந்து நிற்கவில்லை. பயங்கரம் வரத்தக்கதாக சோனுமாரியாய்ச் சொரிந்தது. இராப்பகல் ஒரு வாரம்வரையும் விடாமழை பெய்தபடியால், எங்கும் மழைப்பிர வாகம் பெருகியோடத் தலைப்பட்டது. பெரிய ஆற்றிலும் மும்மூர மாகப் பிரவாகித்துக் கரைகடந்து வழிந்தோடும் மேற்படி மழை வெள்ளம் குறிஞ்சி நிலத்திலுள்ள சந்தனதி மரத்துணிகளையும், யானைத்தந்தங்களையும், முத்துக்களையும் வாரிக்கொண்டுவந்து முல்லை நிலத்திற் சேர்த்தது, அங்குள்ள நெய்க்குடம், பாற்குடம், தயிர்த்தாழிகளையெல்லாம் மிதப்பித்துக் கொண்டுவந்து பாலைநிலத்தி லொதுக்கி, அங்குள்ள நாகமணிகளையெல்லாம் வாரிக்கொண்டுவந்து மருதநிலத்திற் சேர்த்தது. அங்குள்ள நெற்போர்களைக் கொண்டு வந்து நெய்தனிலத்திற்சேர்த்தது. அங்குள்ள உப்புக் குவியல்களையும் கருவாடுகளையும் அடித்துக்கொண்டுபோய்ச் சமுத்திரத்திற் சேர்த் தது. எட்டு நாள் வரையும் பொழியும் விடாமழையாலும், பிரவாகத் தாலும் ஜனங்கள் வெகு அவஸ்தையடைந்தார்கள். மழைபொழியும் பகுதிகளிலுள்ள ஒரு மனிதராவது மனையை விட்டு வெளிப்படக் கூடவில்லை. எல்லாரும் குளிரால் நடுங்கி கம்பளம் போர்த்துப் பதுங்கியிருந்தார்கள். ஆடுமாடுகள் அசந்தம் விரைத்துபோயின. ஒருவருக் கொருவர் அண்டை அயலிற் போகவும், சம்பாஷிக்கவும் ஆகவில்லை. எங்குஞ் சேறுஞ் சதுப்புமாயின. எல்லாரும் இனி மழை போதும் போது மென்று கூக்குரலிட எத்தனித்தார்கள்

வெள்ளிக் கிழமை நண்பகல் பெய்யத் தொடங்கிய விடாமழை மறுவெள்ளிக்கிழமைக் காலைவரையும் ஒரே தன்மையாகவே பெய்து கொண்டிருந்ததால், ஜனங்க ளெல்லாரும் தத்தளித்து வருந்தினார்கள். அஸ்ஹாபிகளி லொருவர், இம்மழையை நிறுத் திவிட நபி நாயகம் (ஸல்) அவர்களாலே தான் ஆகு மென்று கருதி, குறித்த மறு வெள்ளிக் கிழமை யன்று, நபி நாயகம் (ஸல்) அவர்கள் குத்பா வோதித் தொழுது முடிந்து, மின்பறி லிருந்து உபதேசஞ் செய்து கொண்டிருக்கையில், அவ்வஸ்ஹாபி எழுந்து, நின்று ''யாறஸூலல்லாஹ்! இராப்பகல் எட்டு நாளாய் ஒரே மழை பொழிந்து கொண்டிருப்பதால், ஜனங்களும், மிருகங்களும் மெத்த அவஸ்தைப்பட வேண்டி யிருக்கின்றது. இம்மழையை

இம்மட்டோடு நிற்கும் படி தேவரீர் சித்தமிரங்க வேண்டும்" என முறையிட்டார். நபி நாயகம் (ஸல்) அவர்கள் உடனே மழை நிற்கும் படி, அல்லாஹு தஆலா இடம் துவா இரந்தார்கள். அப்போதே மழை ஓய்ந்து, மப்பு மந்தார மெல்லாம் வெளிவாங்கி சூரியன் தோன்றிற்று. எட்டு நாள் பரியந்தம் வெயில் முகங்காணாத ஜனங்கள், குளிர்ஒழிந்து, சுகமடைந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்தார்கள். கன்று காலிக ளெல்லாம் குளிர் நீங்கிச் சுக முற்றன தரை குளிர்ந்து, புற்பூண்டுகள் செழிப்புற்று வளர்ந்தன. கிருஷிகர்கள் தொழில் தொடங்கினார்கள்.

92-வது அத்தியாயம்.

அந்தகன் வந்தது.

கலி நிலைத்துறை.

முக்தி யுள்ளபல் லுயிர்கட்டு முத்தியின் முறையாய்
வந்த நந்நபி நாயக முஹம்மது மணிவா
யுந்து வாய்மையி னுடையவ னருளினா லுலகில்
அந்த கன்விழி பெற்றிடு மற்புத மறைவாம்.

இதன் பொருள்.

உலகம் முதலிய எவ்விடங்களிலு முள்ள பலவுயிர்கட்கு முதலில் மோட்சத்தின் முறைமையாக வந்த நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களுடைய அழகான வாயிலிருந்து உண்டான சொல்லினால், வல்ல காரணனாகிய அல்லாஹு தஆலாவி னருளைக் கொண்டு மிந்த வுலகத்திலோர் பிறவிக் குருடன் தன்னுடைய கண்களைப் பெற்றுக் கொண்ட காரணத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தாரணி முழுதுந் தீனெனும் வழியே
தான்வர வருள்புரி வள்ள
லாரண மறைசேர் ஸஹுபிகள் பரவ
வரசுசெய் திருக்குமந் நாளிற்

காரண மெவரு முணர்ந்திடக் கேட்டுக்
கருதியோர் பிறவியந் தகனும்
பூரணக் கிருபைக் கடலெனு நபியைப்
போற்றிநின் றவரடி புகழ்ந்தே.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்தி லிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து வருங் காலத்தில், அவர்கள் செய்யும் அரிய அற்புதங்க ளனைத்தும் உலகறிந்த விஷயமாய் எங்கும் பிரபலித்து விளங்கின. சொல்லரிய அற்புத தோரணை முழுவதையும் நாளாவர்த்தியில் செவிகள் குளிரக் கேட்டுக் கொண்டு வரும் அயலூர் வாசியாகிய பிறவிக் குருடன் ஒருவன், "செய்தற்கரிய அற்புதங்களை யெல்லாம் செய்து ஜனங்களை சீர்திருத்தும் மகாத்மாவாகிய முஹம்மது நபிக்கு, நமது பிறவிக் குருட்டைப் போக்குவது பிரமாதமல்ல. ஆகையால், நாம் இங்கிருந்து போய் அவர் பாத தாமரையில் விழுந்து மனக்குறையை மனுப்பண்ணுவோம்; உடனே நமக்குப் பலனுண்டாகும் என்றெண்ணி, தக்க ஒருவழித் துணையோடு புறப்பட்டு மதீனாவுக்கு வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களின் பாததாமரைகளை யடைந்து பணிந்து நின்று, அடியில் வருமாறு முறையிட்டான் :—

"யாறஸூலல்லாஹ்! அடியேன் ஜனன மெடுத்த நாள் முதற் கொண்டு இது பரியந்தம், மகத்தான அல்லாஹு தஆலா சிருஷ்டித்த சிருஷ்டிகளில் ஒன்றையாவது, இன்ன வடிவான தென்று அறிந்தவனல்ல. என் பிதா மாதாக்களின் முகம்இவ்வித மென்றும், மனைவி மக்களின் சுரூபம் இன்னவை யென்றும் கண்டவனல்ல. பிறருடைய உருவங்களையும் பார்த்தவனல்ல. எனக்கு எக்காலமும் எல்லாம் அந்தகாரமாகவே தோற்றுகின்றன. அன்றியும், முகக் கண் திறந்துள்ள நாலு மனிதர்கள் முன்னே நான் அடையும் அவமானம் பெரிது. பாலிய ஸ்திரீகள் என்னைக் காணும்போதெல்லாம் கைகொட்டி நகைத்து "ஹே! ஹே!! குருடனைப் பார்த்தீர்களா? அவன் கோலைப் பார்த்தீர்களா? நடையைப் பார்த்தீர்களா?!!!" என்று பரிகாசஞ் செய்கின்றார்கள். என் வாழ் நாள் இப்படியே அதுமானால், இனி நான் உலகத்துப் பொருள்களைப் பார்த்தறிவது எவ்விதம்? ஆனபடியால், யாறஸூலல்லாஹ்!

தீராத் துயரங்களை யெல்லாம் தீர்த்து மனமகிழச் செய்யும் தேவரீர், தமியேனுக்குச் சித்தமிரங்கி, என் முகக்கண் திறந்து விளங்கக் கிருபை செய்ய வேண்டும்" என இவ்வாறு முறையிட்டான்.

இதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, அவனுக்காக மனமிரங்கி, அவனை நோக்கி "மகத்தான அல்லாஹு தஆலாவின் கற்பனைப் பிரகாரம் குருடுற்றிருக்கும் நீ, உளுசெய்து, அல்லாஹு தஆலாவை இரண்டு றக்அத்து தொழுது முடித்து, கைகளை யேந்தி 'யா அல்லாஹ்! உனது தோழராகிய முஹம்மது நபியுடைய பொருட்டால், என் கண்களைத் 'திறந்தருள்' என துஆ இரந்து மன்றாடிக் கேள்; உன் கண்கள் திறக்கப்பட்டு விளங்கும்" என்றார்கள்.

சீறாப் புராணம்.

கலி விருத்தம்

அந்த நன்மொழி கேட்டிசைக் கந்தகன்
சிந்தை யார மகிழ்ந் துளுச் செய்திறை
தந்த வேத முறைப்படி தான்றொழு
தெந்த நாளு மிலங்குஞ் சுடரினை.

உன்னி யோதித் துஆவிரந் துண்மையின்
மன்னு மாநபி தம்பறக் கத்தினா
லின்ன றீர விழிவிழி யீதியென்
றன்ன வாய்மையி னோடுரைத் தானரோ.

வசனம்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன பிரகாரமே, மேற்படி அந்தகன் உளு செய்து, இரண்டு றக்அத்து தொழுது முடித்து, துவா இரந்து மன்றாடினான். அவன் மன்றாட்டு முடியுமுன் இரண்டு கண்களும் பளீரென்று திறந்து விளங்கிப் பிரகாசித்தன.

என்றும் பிறவிக் குருடாயிருந்த கண்கள் விளங்கின மாத்திரத்தில், அந்தக னென்னும் பெயர் ஒழிந்து, இதயம் பூரித்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று, பாத தாமரைகளைத் தொட்டுக் கண்களில் வைத்து விடைபெற்றுக் கொண்டு, தன் ஊர் போய்ச் சேர்ந்தான். குருடன் கண் பெற்று

ஒப்பில்லா பாக்கியத்தோடு வந்திருக்கும் சங்கதி அவ்வூர் முழுதும் பிரஸ்தாபமாயிற்று. அவ்வூரில் நீண்ட காலமாக மேகநோய் கொண்டு, தின்னாத ஔஷதங்களையெல்லாம் தின்றும் குணப்படாது வருந்தும் மற்றொருவன், அற்புத நேத்திரம் பெற்றவனிடத்தில் வந்து, அவனைத் தன் முன் அழைத்து "நான் இந்தக் கொடிய ரோகத்தால் வருந்தி யுழல்வது உமக்குத் தெரியாத தல்ல. என் உடல் நீர் வடிந்து நாட்கு நாள் வெளுத்து, மிக மெலிந்து, சொறி பற்றி, உதிரம் முற்றும் அறவற்றி, ஓயாக் கழிச்சலு முற்று வருந்து கின்றேனே, இத்துன்பத்தை நீர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் சென்று முறையிட்டு, என் துன்பந்தீரக் கேளும், உமது பொருட்டால் நீர் சுகமடைந்ததுபோல நானும் அடைகிறேன்" என்றான்.

மேற்படி மேக நோய்க்காரன் இப்படி பரிந்து கேட்டபடியால், மேற்படி அற்புதக் கண்ணன் மனமிரங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து நின்று, அந்த வியாதியஸ்தனுடைய வியாகுலத்தை மனுப்பண்ணினான்.

சீறாப் புராணம்.

கலி விருத்தம்.

இன்ன வாசகங் கேட்டித யம்மகிழ்ந்
துன்னி யற்பமண் ணள்ளி யுமிழ்ந்திதை
யன்ன நோயற் கருளென் றளித்தனர்
பொன்னின் வார்கழல் போற்றிக் கொண் டேகினான்.

வசனம்.

மேற்படியான் பண்ணிக்கொண்ட மனுவை நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்கீகரித்து, தங்கள் வலது கையால் கொஞ்சம் மண்ணை யள்ளி, அம்மண்ணில் தேவாமிர்தமும் முன் வரஅஞ்சும் மகா மேன்மையான திருவாய் உமிழ் நீரில் கொஞ்சம் உமிழ்ந்து "இதைக் கொண்டுபோய், மேற்படி நோயாளிக்குக் கொடு" என்று சொல்லி அவன் கையிற் கொடுத்து அனுப்பினார்கள். அவன் அம் மண்ணைக் கொண்டு போய் மேற்படி நோயாளிக்கு கொடுத்தான்.

எவ்வித ஔஷதமும் ஈடாகாத அம்மருந்தை, மேற்படி மேக ரோகஸ்தன் வாங்கி, நீரிற்கரைத்துப் பருகினான். பருகின மாத்தி

ரத்தில், அவன் உடலிலுள்ள நோய் முற்றும் பற்றறத் தொலைந்து, உடல் பூரித்து, தெளிந்து, முன்னிலும் பலமடங்கு அதிக அழகும், செழிப்பு முற்றுஞ் சிறந்து கட்டழகனாய் விளங்கினான்.

93-வது அத்தியாயம்.

ஹவுலாவைக் கூட்டியது.

கலி நிலைத்துறை.

தவுலத்தை மிக்குப் பூட்டுபு நெஞ்சின் றரியார்கள்
கவனத்தி னுட்பட்டாக் கமழிந்தே கழிவாகப்
புவனத்தி லெட்டித் தாக்கிற நூலோர் பெண்ணாளாம்
கவுலத்தை விட்டுக் கூட்டிய சரிதங் கவல்வாமே.

இதன் பொருள்.

தவுலத்தென்னும் இவ்வுலக செல்வத்தை நெஞ்சினிடத்தில் மிகவும் பூண்டிருக்குஞ் சத்துருக்களான காபிரீன்கள் கவனத்தினுட்பட்டுச் சொர்க்கலோகங் கிடைக்கிற இலாபமழிந்து போய்ச் சாவும்படியாய், எட்டிப்போய் வெட்டி ஜெயங்கொள்ளும் றஸூல் நாயக முஹம்மது (ஸல்) அவர்கள், கவுலத்தென்னும் பெயரையுடையவோர் பெண்ணை வேண்டாமென்று நீக்கி வெறுத்திருந்த புருஷனோடு மறுபடியும் அவள் கூடியிருந்து வாழும்படிசெய்த சரித்திரத்தைச் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விள்ளரும் பிணியு நீங்கி வெற்பனப் புயங்கள் பாரித்
துள்ளமும் வியப்ப தாகி யுற்றவ னிருப்ப விப்பாற்
றெள்ளிய மறையு ளாய திருநபி முஹம்ம தென்னும்
வள்ளல் தீனோர்கள் போற்ற மகிழ்ந்தினி திருக்கு நாளில்

வசனம்.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் திக் விஜயஞ் செய்து, சிறந்த மார்க்கமாகிய தீனுல் இஸ்லாத்தை வளர்க்கும் காலத்தில், ஒருநாள் ஆகாயத்தில் கிரகணம் தீண்டியிருக்கக் கண்டு, அஸ்ஹாபிகளை யழைத்துக் கொண்டு

தேவாலயத்திற் சென்று, கிரகணந் தீண்டியிருப்பதற்காக அல்லாஹுத்தஆலாவைத் தொழுதார்கள். தொழுது தீர்ந்த பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "அஸ்ஹாபிகளே! இன்றுமுதல் நீங்களும், இனிவரும் என் கூட்டத்தார்களும், சூரியனிலாவது சந்திரனிலாவது கிரகணம் தீண்டின காலத்திலும், மழையில்லாமல் மறுத்திட்ட காலத்திலும், அல்லாஹுத்தஆலாவைத் தொழுது வரவேண்டும்" என்று நிபந்தனை செய்தார்கள். இந்நிபந்தனைக்கு அஸ்ஹாபிகள் தலைசாய்த்தார்கள்.

ஒருநாள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் உலகமாதாவாகிய ஆயிஷா (றலி) அவர்கள் மனையிலிருந்து ஸ்நானஞ்செய்து கொண்டிருந்தார்கள். ஒப்பற்ற பிராணநாயகியார் நீர் மொண்டு கொடுக்க நின்று குளிக்கும் அவ்வேளையில், ஒரு பெண்வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கிப் பலவாறு துதித்து, கீழ் வருமாறு சொன்னாள்:—

"நான் மாலிக் உடையமகள் ஹவுலா; சாமித்து உடைய குமாரர் அவுஸ் என்பவருக்கு வாழ்க்கைப்பட்டேன். வாழ்க்கைப் பட்ட அன்றுமுதல் தக்க பருவமுள்ள வரையும், நானும் என் கணவரும் உடல் இரண்டாயிருந்தும், உயிர் ஒன்றாய், சுகபோகமாக இன்பமனுபவித்து வாழ்ந்திருந்தோம். என் இளம்பருவம் எத்தனை காலத்திற்குத்தான் நிலைத்து நிற்கும்? நான் சில பிள்ளைகளை ஈன்ற மாத்திரத்தில், என் இளமை யொழிந்து, முதுமை யடைந்து, அழகு குன்றி, உடல் ஒடுங்கிப்போனேன். நான் இப்படி தளர்ந்து போனபடியால், என் புருஷருடைய அன்பு நாளுக்குநாள் குறைந்து கொண்டு வந்து, கடைசியில் பற்றறத் தொலைந்தது அவர் வெளியிலிருந்து வீட்டுக்கு வருந்தோறும் சீறிச் சினந்து, வாயில் வராத தூஷண மொழிகளைப் பிரயோகித்து, பலவாறு வருத்துவார். அவர் செய்யும் நிஷ்டூரத்திற் கெல்லாம் நான் பதறாது அடங்கிச் சிறுப்பட்டிருந்தும், எப்போதும் கலகமும் பொல்லாங்குமாகவேயிருக்கும். இதற்குக்காரணம், அவர் மனதிற் பிறந்த வெறுப்பொன்றே யன்றி வேறல்ல. வெளியிலிருந்துவரும் ஒரு போதாவது நற்குணத்தோடும் நல்வார்த்தையோடும் வருகிறதேயில்லை. ஒருநாள் வெளியே போயிருந்தவர் திடீரென்று மனைக்குள் வந்து, என்னைப் பார்த்து 'அடி! இன்றுமுதல் எனக்கு நீ

மாதாவாயினை' என்று கடிந்து சொன்னார். அதற்கு நான் பிரதியொன்றும் சொல்லவில்லை. அவ்வளவோடு வெளியே போய் விட்டார். அன்றுமுதற்கொண்டு நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து போய்விட்டோம். என்னையும், என்மக்களையும் பராமரித்து ஆதரிக்கும் போஷகர் ஒருவருமில்லை. நாங்கள் இராப்பட்டினி, பகற்பட்டினி கிடந்து வருந்துகின்றோம். பட்டினி பொறாத என் சிறுமக்கள் அவரைக்கண்டு. 'தந்தாய்' என்று எதிர்சென்றால், அவர் திரும்பியும் பார்க்கிறதில்லை. ஆனபடியால் ஆதரவின்றித் திரியும் எங்கள் துயரம் பரிதாபமானதா யிருக்கின்றது. ஆகையால், யாநபீ! என் மனத்துயரும், என் மக்களின் முகவாட்டமுந் தீரும்படிக்கும், அவர் சொன்ன அந்த அறுதி மொழி மாறும் படிக்கும், நாங்கள் எப்போதும் போல ஒற்று வாழும்படிக்கும் தேவரீர் சித்தமிரங்கிச் செய்யத்தகும் உபாயமொன்றிருந்தால் செய்தருள வேண்டும்" என்றான்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஹவுலாவின் முறைப்பாட்டைக் கேட்டு அவளைநோக்கி "ஹவுலாவே! உங்களிருவரையும் முன்போலக் கூட்டுவது எனக்கு அரிது" என்றார்கள். இச்சொல்லைச் சேட்ட ஹவுலா மனங்கலங்கி, தன் மக்களைக் கூட்டி கொண்டு கண்ணீர் சொரிய அழுது, வாயைத்திறந்து "யா அல்லாஹ்! யா கரீம்! யாறஹீம்; எனக்கு இரங்கு; என்மக்கள் முகத்தைப்பார். எங்களை ஆதரி" என்றுதுவா இரந்து புலம்பினாள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் நீராடிக் கொண்டுதான் இருந்தார்கள். ஹவுலாவும் அழுது புலம்பி துவா இரந்து கொண்டுதான் நின்றான். அவ்வேளையில், அல்லாஹு தஆலா இடத்திலிருந்து வேதவாக்கிய மொன்று இறங்கிற்று. உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஹவுலாவைப்போய், புருஷனை அழைத்து வரும்படி கட்டளை பண்ணினார்கள். ஹவுலா சென்று தன் புருஷரையழைத்துவந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் விடுத்தாள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஹவுலாவின் புருஷராகிய அவுஸை நோக்கி "இப்போது அல்லாஹு தஆலா இடத்திலிருந்து எனக்கு வேதவாக்கியமொன்று இறங்கிற்று, அதன் அர்த்தமாவது: ஒரு புருஷன் கோபத்தால் தன்மனைவியைத் தாயென்று சொல்லுவானாகில்...

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அடிமைகொண் டுரிமையாக விட்டிட லவையின் றென்னி
லிடையறா திரண்டு மாதந் தொடர்ந்து நோன்பிருக்க வேண்டும்
கடவதற்குரிய ரன்றேற் கருதிய வதிதி மாரென்
றடுக்கு மைய மேற்போ ரறுபது பெரைக்கூவி.

தலைக்கொரு படியா வுள்ள தவசமு மவருக் கீந்து
விலக்குதற் கடனா மென்று வந்தது வேத மென்றா
ரலக்கணுற் றழுது நின்ற வரிவைதன் மெலிவை யெல்லாஞ்
சொலக் கருத் துன்னி வள்ளறாய்முகம் பார்த்துச் சொல்வாள்.

வசனம்.

அவன் ஒரு அடிமையைக் கிரயத்திற்கு வாங்கி உரிமையாக விட்டு விடவேண்டும். அதற்குத் தக்க திரவியம் இல்லாவிட்டால், அறுபது தினம் இடைவிடாமல் உபவாசவிரதம் நோற்கவேண்டும். அதற்கும் தேக பலம் இல்லாது போனால், யாசகர் அறுபது பேரையழைத்து, தலைக்கொருபடி தவசம் தானங்கொடுக்க வேண்டும். இம்மூன்றிலொரு கருமம் செய்தால் தாயென்ற சொல் நிவிர்த்தியாகும். பின் அவளோடு கூடலாம் என்பதே" என்றார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படிச்சொன்னபோது மேற்படி ஹவுலா நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! அடிமை வாங்கி விடுவதற்குத்தக்க நிதி எங்கள் வசமில்லை. உபவாசவிரதம் நோற்பதற்கு என்புருஷர் தள்ளாத கிழவர். அறுபது யாசகர்களுக்குத் தலைக் கொருபடிதவசங் கொடுக்கவும் வகையில்லையே" என்றாள். இதை நபிநாயகமவர்கள் கேட்டு, ஹவுலாவை நோக்கி "அப்படியானால், ஒரு பறை ஈத்தம் பழம் நான் தருகிறேன்" என்றார்கள். அதற்கு ஹவுலா "யாறஸூலல்லாஹ்! தாங்கள் ஒருபறை ஈத்தம் பழம் தந்தால், என்னிடத்திலும் கொஞ்சபழம் இருக்கின்றது. அதையுஞ் சேர்த்து விற்று, தவசம் வாங்கிக் கொடுக்கின்றோம்" என்றாள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒருபறை ஈத்தம்பழங் கொடுக்கும்படி உத்தரவு செய்தார்கள். உடனே கொடுக்கப்பட்டது. அவுஸும், ஹவுலாவும் அப்பழத்தையும் வாங்கிக்கொண்டுபோய்,

தங்கள் வசமிருந்த பழத்தையும் சேர்த்து விற்று அறுபது யாசகர்களுக்கு தவசம் வாங்கிக்கொடுத்து, இருவரும் கூடி ஒத்து வாழ்ந்தார்கள்

94-வது அத்தியாயம்.

உமுறுவுக்குச் சென்றது.

கலி நிலைத்துறை.

குமுறும் வெற்றிக் கோண நடாத்திக் குபிரோர்பாற்
சமரா டற்குப் போம்புலி யொக்கும் ஸஹாபாக்கள்
தமரால் மெய்க்குந் தூதிற சூல்சொற் றப்பாத
உமுறு வுக்குப் போன தெடுத்திங் குரைசெய்வாம்.

இதன் பொருள்.

சத்துருக்களாகிய காபிரீன்களிடத்தில் முழக்கமாக வெற்றியுற்ற குதிரைகளை நடாத்திக் கொண்டு சண்டை செய்வதற்கு புலியைப்போல் போகும் அஸ்ஹாபிமார் தங்களால் மெய்க்கும், அல்லாஹுத்தஆலாவின் தூதராகி எப்போதும் வாய்மொழி தப்பாத நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், உமுறுவுக்குப் போன சரித்திரத்தைச் சொல்லுகின்றோம்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்

இச்சை யாயவ ரின்புற வாழ்ந்தனர்
நச்சை ராவை நலிந்து தடிக் கெதிர்
மச்ச நல்லுரை கூற மகிழ்ந்துமா
னச்சந் தீர்த்தவ ராண்டுரை நாளினில்.

வசனம்.

தாஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து அரசு செய்து வருங்காலத்தில், தாங்கள் மக்கமா நகரத்திற்குச் சென்று உமுறாச் செய்ய வேண்டுமென எண்ணி, அடிமைகளில் ஒருவரை யழைத்து அஸ்ஹாபிகள் எல்லாரையும் அழைத்து வாருமென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அவர் சென்று அஸ்ஹாபிகள் அனைவரையும் அழைத்து

நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் சேர்த்தார். அபூபக்கர் (றலி) அவர்களும், உமறுகத்தாபு (றலி) அவர்களும், உதுமான் (றலி) அவர்களும், அலி (றலி) அவர்களும், மற்ற பிரதான தலைவர்களும், அஸ்ஹாபிகளும் ஆக ஆயிரத்து நானூறுபேர்கள் திரண்டுவந்து கூடினார்கள். எல்லாரும் வந்து சேர்ந்தபின் தாங்கள் மீண்டும்வரும் வரையும் மதீனாவிலிருந்து ஆளுகைசெய்வதற்கு நுமைலா (றலி)வை தங்கள் பிரதிநிதியாக நபிநாயகம் (ஸல்) அவர்கள் நியமித்தார்கள். அதற்குப்பின், மக்கமா நகரத்திற் கொண்டு போய் குர்பானி செய்வதற்காக எழுபது ஒட்டகங்கள் பிடித்து வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே எழுபது ஒட்டகங்களும் தயாராயின.

ஆயிரத்து நானூறு அஸ்ஹாபிகளும், அநேக குற்றேவலாட்களும், குறுபான் செய்வதற்காக எழுபது ஒட்டகங்களும் தயாரான பின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்களுக்கென்று சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் அழகிற்சிறந்த ஒட்டகத்தின் மேல் ஏறி மக்கமாநகரத்திற்கு யாத்திரையானார்கள். ஜெயப்பேரிகை முழக்கப்பட்டது. கொடி, குடையாதி விருதுகள் பிடிக்கப்பட்டன. அஸ்ஹாபிகளான வீரர்களும் தங்கள் தங்கள் ஆயுதாதிகளோடு வாகனங்களிலேறி, புடைசெறிந்தார்கள். அருகர் நால்வரும் இருமருங்கிலும் ஆனார்கள். இவ்விதச் சொல்லரிய சிறப்போடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிரயாணமாய், மதீனமா நகரத்தைவிட்டு வெளிப்பட்டு, மக்கமாநகரத்தை நோக்கிச்சென்றார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களும் அவர்கள் சேனைவீரர்களும் மலைகள், வனாந்தரங்கள், அருவிகள், நதிகள் எல்லாவற்றையும் கடந்து மக்கமாநகரத்தை நோக்கிச் செல்லும் பாதையில், வானவர்க் கரசராகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து ஸலாம் பகர்ந்து சொன்னார்கள்:

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

ஆண்டு சென்ற வஹுமதை நோக்கிநின்
நீண்டு காலி திபுலுவ லீதுதான்
கூண்டு போர்செய் குறைஷிக ளோடேறும்.
வேண்டு நின்ற படையொடு மேவியே.

இணையி லாஹமீ மென்னுந் தலத்தின்முன்
னணிய தாக வழிமறித் தாக்கமுட்
டுணிவி னுற்றன னங்கெனச் சொல்லிவான்
பணியும் வேந்தர் பரந்தெழுந் தேகினர்.

வசனம்.

“யாறஸூலல்லாஹ்! ஒலீது உடையமகனாகிய காலிது குறைஷி வீரர்கள் அநேகரைத் திரட்டிக்கொண்டு மக்கமா நகரத்திலிருந்து புறப்பட்டு வந்து, ஹமீம் என்னும் தலத்தில் பாளையமிட்டு வழிமறித்துக் கொண்டிருக்கின்றான். தாங்கள் எச்சரிக்கையோடு போக வேண்டும்” என்று சொல்லி விட்டு வானுலகஞ் சென்றார். ஜிப்றயீல் வந்து அறிவித்த சமாசாரத்தை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து தங்கள் அஸ்ஹாபிகளை நோக்கி “தோழர்களே; காலிது குறைஷி வீரர்களோடு ஹமீம் என்னும் தலத்தில் பாளைய மிறங்கி யிருக்கிறான். ஆகையால், நாம் அவன் சேனைக்கு வலது பக்கமாகப் போகவேண்டும்” என்று தெரிவித்துவிட்டு, தங்கள் சேனையை காலிது உடைய சேனையின் வலதுபக்கமாக நடத்தினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் தன்சேனைக்கு வலது புறமாய் வருவது காலிதுக்குத் தெரியாது. காலிது தனித்துக் குதிரைமேல் ஏறிக்கொண்டு, தன் சேனை யிறங்கியிருக்கும் தானத்திற்கு முன்புறமாகச் சற்று தூரத்தில் வந்து, உளவறியும்படி நின்றான். அப்படி நிற்கையில் நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனைவரவாலெழும் புழுதிப்படலம் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. காலிது உடைய கண்களில் திடீரென்று புழுதிப் படலம் தெரிந்த மாத்திரத்தில் சித்தம் கலங்கி, தன்குதிரையை விரைவாக நடத்திச் சென்று, தன்சேனை வீரர்களாகிய குறைஷிகளை நோக்கி “அதோ பார்த்தீர்களா? ஆகாயமுழுவதும் புழுதி மயமாய்த் தோற்றுகின்றது. முஹம்மது தான் தன் சேனைவீரர்களோடு வருகின்றான்” என்றான். இச்சொல்லைக் கேட்டபோது குறைஷிகள் அனைவரும் திகில்பிடித்து, மதிமயங்கினார்கள். அப்போது காலிது எல்லாருக்கும் தைரியம் பகர்ந்து, சேனையை எழப்பண்ணி, ஹமீம் என்னுந் தலத்தை நீங்கிப் பின்வாங்கி, அங்குள்ள அடவிகளிற் போய்ப் பதுங்கிக் கொண்டான். காலிது சேனையோடு பின்வாங்கிப்

போய்விட்டபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சத்துரு பயமின்றி நடந்து, தனிய்யா என்னும் மலையை யடுத்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களும், அவர்கள்சேனையும், மேற்படி தனிய்யா மலைக்கணவாய் வழியால் செல்லும்போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏறியிருக்கும் ஒட்டகம் திடீரென்று படிந்து தரையிற் படுத்துக்கொண்டது. கால்களை மடக்கி நிலத்திற் படுத்த ஒட்டகம், எவ்விதம் அச்சுறுத்தி அதட்டி யெழுப்பியும் சற்றும் அசையவில்லை; படுத்தபடியே யிருந்தது. இதைக் கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டு மலைத்து நின்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் கொண்ட மனமலைவு தீர அவர்களை நோக்கி “இவ்வொட்டகம், அல்லாஹு தஆலாவின் ஏவற்பிரகாரமன்றிப் படுத்துக் கொள்ளவில்லை” எனக்கூறிவிட்டு, மேற்படி ஒட்டகத்தை நோக்கி “நமது மார்க்கத்தை அனுசரிக்காத மக்கத்தார்கள் இந்தத் தடவையில் தங்களுக்கு அனுகூலமான எவ்வித உறுதி மொழியை என்னிடம் கேட்டபோதிலும், நான் அவ்விதமே அவர்களுக்குக் கொடுப்பேன். அல்லாஹு தஆலாவின் பேரில் பிரமாணிக்கமாக, இதில் எள்ளத்தனையும் பிசகமாட்டேன்” என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படிச் சொல்லி வாய்மூடுமுன், படுத்திருந்த தங்கள் ஒட்டகம் பொருக்கென் றெழுந்தது. அந்தத் திருவாய் மொழிக் கேட்டெழுந்த ஒட்டகம் நடக்கத்தலைப் பட்டபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையை நடத்திக் கொண்டு, மேற்படி தனிய்யா மலைக்கணவாயை விட்டு வேறு மார்க்கமாய் நடந்து, மக்கமாநகரத்துக்குச் சமீபத்திலுள்ள குதைபிய்யா என்னும் தலத்தை அடுத்தார்கள்.

குதைபிய்யா என்னும் தலத்திற் சென்றபோது, அஸ்ஹாபிகளுக்குத் தண்ணீர் தாகம் அதிக மானதால், சிலர் அங்கங்கே சென்று, தடாகங்களையும் துறவுகளையும் தேடித்திரிந்து பாடுபட்டும் ஒரு துளி நீராவது கிடைக்காமல் வருந்தி மீண்டுவந்து, நீரில்லாத அவஸ்தையைப்பற்றி நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் முறையிட்டார்கள்.

சரித்திர புராணம்.

கலி நிலைத்துறை.

என்று நின்றவ ரியாவரு மிசைத்திட விரங்கி
நன்றி யோர்வடி வாகிய நாயகர் மகிழ்ந்து
துன்று மாழிகை தனிலொரு தூணியைத் துறந்து
குன்று நேர்புய லகுபியி லொருவர்கைக் கொடுத்து.

மடுவி னிற்செறி கமலமெய் திடச்சிறை வண்டை
யிடுநி னள்ளிடை யென்றவ ரேவிட வேவைக்
கொடுசென் றன்வை ருறவியி னனக்தலை குயிற்றத்
தொடுவ வன்னவப் புனமுதிறந் தனவனஞ் சொரிந்தே

வசனம்.

உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அம்பறுத் தூணியிலிருக்கும் பாணங்களில் ஒன்றை யெடுத்து ஒருவர் கையிற் கொடுத்து "இதை நீர் கொண்டுபோய் ஜலம் வற்றி வரண்டிருக்கும் ஒரு தடாகத்தின் நடுவில் எய்யும்" எனக்கட்டளை பண்ணினார்கள். அவர் அவ்வாறே அந்த அம்பைக்கொண்டு போய் வில்லிற் பூட்டி, நீர் வறண்டு வெறிதாயிருக்கும் ஒரு தடாகத்தின் நடுவே எய்தார். உடனே அவ்வம்பு பாய்ந்த சிறுதுவார வழியே தண்ணீர் பிரவாகித்து, அத்தடாகம் நிரம்பப்பெருகி வழிந்தது. நீர்த்துளி யற்றிருந்த வெறும்குளம் ஜலம்நிறைந்து தேங்கினபோது, அஸ்ஹாபிகள் தாகம்தீரப் பருகி, வாகனங்களுக்கும் ஊட்டி சந்தோஷமடைந்தார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையை மேற்படி குதைபிய்யாவிலேயே பாளைய மிறங்கும்படி கட்டளை யிட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டளைப்பிரகாரம் அங்குள்ள ஒரு அகண்ட மைதானத்தில் கூடாரங்களமைத்து, பாளையமிறங்கினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் குதைபிய்யாவில் வந்து தங்கியிருப்பது மக்கத்தாருக்குத் தெரிந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் உம்றாசெய்யத்தான் வந்திருக்கின்றார்களென்பதும் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும். தெரிந்தும் அதற்காக அவர்கள் யாதொரு கருமத்திலும் பிரவேசிக்காமல், ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையில், மக்கமா நகரத்து குறைஷிக் காபிர்களில் ஒரு

வனும், நபிநாயகம் (ஸல்) அவர்களோடு என்றும் ஏகேக சம்பந்தத்தோடு நடப்பவனுமாகிய புதைல் என்பவன், தன் கூட்டத்தாரில் சிலரைக் கூட்டிக்கொண்டு, மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு குதைபிய்யாவுக்கு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தரிசனையை பெற்றுப் பணிந்து நின்று, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னான்:–

"யாமுஹம்மதே! இப்போது மக்கமா நகரத்தில் லுவை உடைய குமாரன் கஃபு என்பவனும், ஆமிறு என்பவனும் ஒன்று சேர்ந்து சில துன்மார்க்கச் சண்டாளர்களைத் திரட்டிக் கொண்டு, அண்டை அயலிலுள்ள கிராமங்களில் கலகமூட்டி, சிறைபிடித்தும் சூறையிட்டும் நிஷ்டூரம் செய்கின்றார்கள். அன்றியும், தாங்கள் மக்கமா நகரத்திற்குள் பிரவேசித்தபோது தங்களை உம்றா செய்ய விடாமல் கஃபத்துல்லாவை வளைந்துகொண்டு, தங்களோடு எதிர்த்துப் போராடித் தடுப்பதற்கும் நாடியிருக்கின்றார்கள்" என இவ்வாறு சொன்னபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி புதைல் என்பவனை நோக்கிப் பின்வருமாறு சொன்னார்கள்:–

"புதைலே! கேள். மக்கமா நகரத்து காபிர்கள் நாலைந்து தடவை எங்களோடு எதிர்த்துப் போரிட்டு, ஒருதடவையாகிலும் நின்று சாதிக்க ஆற்றாமல் முறிந்தோடி வந்தது உனக்குத் தெரியாததல்ல. இப்போது நான் உம்றா செய்வதற்காக வேண்டி வந்திருக்கின்றேனே யன்றி, அந்த வகையற்ற பேடிகளோடு போராட வரவில்லை. ஒருகால் நான் உம்றா செய்யவந்தது அவர்களுக்குப் பொருத்தமாகாமல், எங்களோடு போராடவே விரும்புவார்களானால் அப்படியே ஆகட்டும். அதற்காகவேண்டி ஒரு ஸ்தானத்தையும் நாளையும் நான் குறிக்கிறேன். அந்த ஸ்தானத்தில், அந்த தினத்தில் அக்காபிர்கள் எல்லாரையும் போராட வரச்சொல்லும். அவர்களாலாகும் வரையும் பார்க்கட்டும். இன்னும் ஒன்று சொல்லுகிறேன் கேள்: நாங்களும் அக்காபிர்களும் அவ்வாறே கைகலந்து போராடும்போது, அவர்கள் அபஜெயப்பட்டு முறிவார்களானால், எல்லாரும் எங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் வந்துவிட வேண்டும் அதற்கு அவர்கள் உடன்படாவிட்டால், நிர்தாட்சணியமாக நாங்கள் வந்து விழுந்து எல்லாரையும் கேட்டவர் திடுக்கிடச் சங்கரிப்போம். இன்னும் கேள் புதைலே! முன் சொன்னபடி நாங்கள் உம்றா செய்ய

அவர்கள் உடன்பட்டிருந்து, நாங்கள் செய்து முடித்தபின், எங்களையணுகி எதும் கலகம் விளைக்க அவர்கள் நாடுவார்களானால், அப்போதும் நாங்கள் எதிர்த்துநின்று எல்லாரையும் சங்கரித்து, எங்கள் மார்க்கத்தை மக்கமா நகரத்திலும் ஸ்தாபிப்போம். இச்சொல்லை நான் அல்லாஹு தஆலாவின் பேரில் பிரமாணிக்கமாக சொல்லுகிறேன்" என்றார்.

இப்படிச் சொன்னபோது, மேற்படி புதைல் கேட்டு அகங்களித்து, நான்போய் மக்கத்தாருக்கு இதைச் சொல்லுகிறேனென்று விடைப்பெற்றுக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு மக்கமா நகரத்திற் சென்று, அங்கிருக்கும் காபிர்களை யழைத்து, "நான் முஹம்மது நபியிடம் சென்று, அவரோடு சில சம்பாஷணைகள் சம்பாஷித்துக் கொண்டிருந்து வந்தேன். அதென்னவென்று நீங்கள் கேட்பீர்களானால், சொல்லுகிறேன்" என்றான். புதைல் சொன்ன சொல்லைக்கேட்ட அக்காபிர்களில் சிலர், அவனைப்பார்த்து "நீர் அதை எங்களிடம் சொல்ல வேண்டியதுமில்லை. நாங்கள் கேட்க வேண்டியதுமில்லை" என்றார்கள். அவர்களிலுள்ள விவேகிகள் சிலர், "சும்மா சொல்லட்டும்; நாம் கேட்டு அறிவோம்" என்றார்கள். பிறகு எல்லாரும் ஒருமனப்பட்டு, புதைலைச் சொல்லும்படி கேட்டார்கள். அப்போது புதைல் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்னவை யனைத்தும் படிப்படியாகச் சொன்னான்.

புதைல் சொல்லித்தீர்ந்த பின் அதற்குபதில் ஒன்றும் காபிர்கள் சொல்லவில்லை. பிறகு அக்காபிர்களில் நியாய சாஸ்திர நிபுணனாகிய மஸ்ஊது உடையமகன் உறுவா என்பவன் எழுந்து நின்று, "தனவான்களே! ஒன்று சொல்லப்போகிறேன்; அதை விரும்பி நீங்கள் கேட்கிறீர்களா?" என்றான். அதற்குகாபிர்கள் எல்லாரும் "உன் கருத்து என்ன? அதைச் சொல்லு" என்றார்கள். அதற்கு உறுவா எல்லாரையும் பார்த்து, "கேட்டீர்களா, குலமக்களே! முஹம்மது நபி சத்தியவாசகர். அவர் சொல்லும் சொற்கள் உண்மையானவையும், ஜனங்களுக்கு அனுகூலமானவையுமே யன்றி வேறல்ல. அவர் சொல்லை நாம் நம்புவோமானால், யாதொரு பொல்லாங்கும் உண்டாகமாட்டாது. நீங்கள் என் சொல்லை நம்பி, என்னை அவரிடத்திற்கு ஸ்தானாதிபதியாக நியமித்து இப்போது அனுப்பினீர்களானால், நான்போய் அவரோடுபேசி, நமக்கு அனுகூலமான

காரியத்தை முடிவு செய்துகொண்டு வருகிறேன், சம்மதமா? சொல்லுங்கள்" என்றான். இதைக்கேட்ட காபிர்கள் எல்லாரும் மேற்படி உறுவாவை ஸ்தானாதிபதியாக நியமித்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்திற்கு அனுப்பினார்கள்.

உறுவா மக்கமா நகரத்தை நீங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாசறைக்கு வந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவனைத் தங்கள் சமூகத்தில் அழைப்பித்து, முந்தி புதைலிடம் சொன்னபடியே சொன்னார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்னவை யனைத்தையும் அவன் கேட்டுக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி பின்வருமாறு சொன்னான்:—

"ஒப்பில்லாத சிறப்பு வாய்ந்த முஹம்மதே! மக்கமா நகரத்தில் வாழும் குறைஷிகள் எல்லாரும் தங்களுடைய பந்துக்களல்லவா? அந்த உதிரக் கலப்பிலுள்ள ஜாதியார்களை சங்கரிக்க துவஜங்கட்டி நிற்பது தருமமாகுமா? சிறந்த குடும்பத்திற் பிறந்த ஒருபிள்ளை, தான் பிறந்த குடும்பத்தை விளங்கப்பண்ண வேண்டியதே யன்றி, அக்குடும்பத்தை கலக்கி நாசம் விளைவிப்பது முறைமை யல்லவே. இது தங்களுக்குத் தெரியாத விஷயமா? இப்போது தாங்கள் அவர்களெல்லாரையுஞ் சங்கரிக்க நாடுகின்றீர்கள். அப்படியானால், தங்கள் சேனாவீரர்களில் அநேகர் அந்த குறைஷிகளுக்கு நெருங்கின பந்துக்களாய் இருக்கின்றார்கள். அவர்களுக்குத் தமது உற்ற உறவினரைக் கொல்ல மனந் துணியாது. ஆனபடியால், அவர்கள் இவ்வொரு விஷயத்தில் தங்களுக்குக் கீழ்ப்படியாமல், கலகம் விளைத்துக் கொண்டு போய் விட்டாலும் போய் விடுவார்கள்" என்றான்.

உறுவா இப்படிச் சொன்னவுடன் அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்கள் வெகுண்டு, அவனை நோக்கி, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு ஈமான் கொண்டு முஸ்லிமானவர்கள் மாறு கொண்டு போய் விடுவார்களென்று அச்சமின்றிச் சொன்னாயா? வென்று பலவாறு நிந்தித்து, வாய்கொண்ட மட்டும் வைதார்கள். இவர்கள் இப்படித் தூஷித்துப் பேசும் போது உறுவா அஸ்ஹாபிகளை நோக்கி "என்னை அபரிமிதமாகத் தூஷித்துப் பேசுகின்றாரே, இவர்யார்?" எனக்கேட்டான். அதற்கு அஸ்ஹாபிகள் அவனைப்பார்த்து

"அபூ குஹாபாவுடைய குமாரரும், நிஷ்கபடியுமாகிய அபூபக்கர்" என விடை பகர்ந்தார்கள். அபூபக்கர் என்று சொன்ன மாத்திரத்தில் அவன் இவர்களை நோக்கி "அபூபக்கரே! நீர்கொஞ்சமாவது தாட்சணியம் வைக்காமல், தூஷணமொழிகளால் என் உள்ளம் கொதிக்கப் பேசுகின்றீர். ஆனால், நீர் முன் மக்கமா நகரத்திலிருக்கும்போது எனக்கொரு உபகாரஞ் செய்திருக்கின்றீர்; அந்த நன்றியைப் பாராட்டித்தான் இப்போது உமக்குப் பிரதிதூஷணம் ஒன்றும் பேசாமல் நான் வாயை மூடிக்கொண்டேன். இல்லாவிட்டால், நானும் நிர்த்தாட்சணியமாகப் பேசுவேன்" என்றுசொல்லிவிட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை நெருங்கி நின்று, தன் வலது கையால் நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற தாடியைத் தாங்கி கொண்டு சம்பாஷித்தான். அப்போது அருகில் நிற்கும் முகைறத்து (றலி) தம்கையிலிருக்கும் பட்டயத்தின் பிடங்கினால் நபிநாயகம் (ஸல்) அவர்களின் தாடியைத் தாங்கி நிற்கும் அவன் கையைத் தட்டி "ஏ உறுவா! தாடியைத் தீண்டாதே; விலகி நின்று பேசு" என்றார். அப்போது அவன், அஸ்ஹாபிகளை நோக்கி "இவன் யார்?" எனக்கேட்டான். அதற்கு அஸ்ஹாபிகள் அவனைப் பார்த்து "முகைறத்து" என விடை பகர்ந்தார்கள். முகைறத்து என்றவுடன், உறுவா அவர் புறம் திரும்பி நின்று, அவரை நோக்கிக் கீழ்வருமாறு சொன்னான்:—

"நீ மக்கமா நகரத்தில் காபிராயிருக்கும்போது, அவர்களில் சிலருடன் மிகவும் அந்நியோந்நியமாயிருந்து, பிறகு அவர்களை வஞ்சித்து மரணத்திற்கு உட்படுத்திவிட்டு, அவர்களையும் சொத்துகளையும் கவர்ந்து கொண்டு மதீனமா நகரத்திற்கு ஓடிப்போய், ஈமான் கொண்டு முஸ்லிமானவர்களோடுகூடி, முஹம்மது நபிக்கு மிகவும் நெருங்கின உரித்தானவன் போலவா இருக்கின்றாய்? அப்பா, முகைறத்து! உன்னைப் போன்ற கொடியவன் இவ்வுலகத்தில் ஒருவன் இருக்கின்றானோ? நானும் சிலகாலம் உன்னுடன் அந்நியோந்நியமாக சிநேகம் பண்ணிக் கொண்டிருந்து, உன்னால் அனுபவித்த கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமா? உனக்குத்தான் தெரியாதா? இப்போது மறந்தாபோயினை? இதுவும் காலவித்தியாசந்தான்!" என நகைத்துக்கொண்டு பரிகாசம் போல சொன்னான் அதற்கு முகைறத்து (றலி) ஒன்றும் பேசவில்லை.

பிறகு, உறுவா என்பவன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் மகிமையையும், அஸ்ஹாபிகளின் தன்மையையும் ஆராய்ந்து பிரத்தியக்ஷமா யறிந்துகொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் விடைபெற்று, அங்கிருந்துமீண்டு, மக்கமா நகரத்துக்குச் சென்றான். சென்றவுடன் காபிர்கள் எல்லாரும் வந்து கூடினார்கள். அக்காபிர்களை நோக்கி மேற்படி உறுவா கீழ்வருமாறு சொல்லலானான்:—

"கனவான்களே, கேளுங்கள். நான் முஹம்மது நபியிடம் சென்று சம்பாஷித்தேன். அவர் முந்தி புதைல் இடஞ்சொல்லி யனுப்பினபடியே என்னிடத்திலும் சொல்லி யனுப்பியிருக்கின்றார். நான் அதற்கு உடன்பட்டு வந்துவிட்டேன். அந்த முஹம்மது நபி மிகச் சிறந்தவர். அவர் உமிழ்நீரைக் கைகளிலேந்தி அதன் கஸ்தூரிப் பரிமளத்திற்காகவும், மகிமைக்காகவும் சரீரங்களிற் பூசிக்கொள்ள அநேகர் காத்து நிற்கின்றார்கள். அவர் உளு செய்யும் தண்ணீரைப் பருகுவதற்காகத் திரண்டு நெருங்குபவர்கள் அநேகர். எப்போதும் கைகட்டிப் பாத சேவையில் நிற்பவர்கள் அநேகர். வாக்கிற் பிறக்கும் எவ்வித வார்த்தைக்கும் அவர் கூட்டத்தார் எல்லாரும் தலைசாய்க்கின்றார்கள். இவ்வித மேன்பாடுடைய அந்த முஹம்மது நபி சொல்லும் அருமையான சொல், நமக்கு அனுகூலமானதாகத்தா னிருக்கும். அதற்கு நாம் முக்கியம் உடன்பட வேண்டும். நாம் அவர் சொல்லுக்கு இசைந்து, சமாதானமாக வாழ்வதே உத்தமம். இல்லாவிட்டால், தாங்கரிய சங்கடங்கள் வந்து சம்பவிக்கும்" என்றான்.

உறுவா சொன்ன இச்சொல்லைக்கேட்ட அக்காபிர்களில் கனானி என்பவன் எழுந்து நின்று "உறுவா சொல்வதனைத்தும் உண்மை தானாவென்று, நான் போய்ப் பார்த்து வருகின்றேன்" எனச்சொல்லிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற்கு வந்தான். வந்தவன் நபிநாயகம் (ஸல்) அவர்களின் குணங்குறிகளையும், நடவடிக்கைகளையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டறிந்துகொண்டு, எழுபது ஒட்டகங்கள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, இவைகள் குர்பானி செய்வதற்காகக் கொண்டு வந்திருப்பதால், உமுரு செய்ய வந்ததுதான் வாஸ்தவமென்று தெரிந்து, மீண்டு மக்கமா நகரத்திற்குச் சென்று, அக்காபிர்களை நோக்கி

"முஹம்மது நபி வந்திருக்கும் நோக்கத்தைப்பற்றி, எனக்கு முந்தி அங்கு போய் வந்தவர்கள் சொன்னவையனைத்தும் உண்மைதான். நான் போய்ப் பார்த்ததிலும் யாதொரு கபடசித்தமும் அவர்களில் ஒருவருக்காவது கிடையாது. குர்பானி செய்வதற்காக வேண்டி எழுபது ஒட்டகங்கள் கொண்டு வந்து கட்டப்பட்டிருக்கின்றன. ஆனதால், முஹம்மது நபி உமுரு செய்து திரும்பிப் போகவே வந்திருக்கின்றார். நாம் சமாதானமாய் அதற்கு இடங்கொடுப்பது தான் உத்தமம்" என்று கூறினான். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்திற்கு வந்து போகும் ஒவ்வொருவனும் இப்படியே சொன்னதால், காபிர்கள் மனங் கலங்கி "இதென்ன விபரீதம்! மன வைராக்கியமுள்ள நம்மவர்கள் அங்கே சென்று திரும்பினால், முஹம்மது உடைய மாயா வித்தையில் மயங்கி விடுகின்றார்களே" என்று பரிதபித்தார்கள்.

அப்போது காபிர்களிலுள்ள மிக்றஸ் என்னும் மற்றொருவன் எழுந்து நின்று, அக்காபிர்களை நோக்கி "இவர்கள் போய் அறிந்து வந்ததெல்லாம் இருக்கட்டும் இப்போது நான் போய் முஹம்மது நபியுடைய காரியா காரியங்களையெல்லாம் நன்றாய் விசாரித்து அறிந்து கொண்டு வருகிறேன்" என்றான். அதற்கு அக்காபிர்கள் சம்மதித்து, அவனையும் அனுப்பினார்கள். மேற்படி மிக்ரஸ் அங்கிருந்து புறப்பட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து அளவளாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அப்படி இவன் வந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், காபிர்களிலிருந்து சுகைல் என்னும் வேறொருவன் புறப்பட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தை நோக்கி வந்தான்.

சுகைல் வரும்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "அதோ ஒருவன் வருகின்றான்; இனி காபிர்களுடைய காரியத்திற்குத் தங்கடம் உண்டாகாது. அவனுடைய நாமராசியைக் கவனித்துப் பார்த்தால், மிகவும் இலகு வென்று விளங்குகின்றது. ஆனதால், அவனை ஸ்தானாதிபதியாக நியமித்து அனுப்பினவர்களுடைய காரியமும் இலகுவாய்த்தான் முடிவுபெறும்" என்றார்கள். இதற்குள் மேற்படி சுகைல் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து மரியாதையோடு இருந்துகொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கிச்

சில சம்பாஷணைகளைப் பேசியிருந்து, மறுபடியும் "முஹம்மதே! உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் நடக்க வேண்டிய காரியா காரியங்களைப் பற்றிப் பலவாறு பேசுவதில் பிரயோஜனம் ஒன்று மில்லை. ஆனால் நான் ஒரு முடிவு சொல்லுகிறேன். அதாவது நம் இரு தரத்தாருக்கு மிடையில் இனி ஆகவேண்டிய விஷயங்களைப் பற்றி உறுதிப் பத்திரம் ஒன்று எழுதிக்கொண்டு, அதன்படி நடந்து கொள்ளுவதுதான் உத்தமம்" என்று சமாதான உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகளை, பெருமானாரவர்கள் சமூகத்தில் பின்வருமாறு அறிவித்தான்:—

(1) உடன்படிக்கை 10 வருஷக்காலம் வரையில் நீடித்திருக்க வேண்டும்.

(2) இவ்வருஷம் முஸ்லிம்கள் உம்ருவை நிறைவேற்றக் கூடாது.

(3) அடுத்த வருஷம் அவர்கள் வந்து உம்முருவை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

(4) ஆனால் அவர்கள் அடுத்த வருஷம் வரும்போது வாளைத் தவிர வேறு எவ்விதமான ஆயுதங்களையும் தம்முடன் கொண்டு வரக் கூடாது. வாளையும் உறையிலேயே போட்டிருக்க வேண்டும்.

(5) மூன்று நாளுக்கு மேற்பட்டு மக்காவிற்குள் தாமதித்திருத்தல் கூடாது.

(6) குறைஷிகளுக்குள் யாராவது ரகசியமாய் புறப்பட்டு முஸ்லிம்களுடன் சேர்ந்துகொண்டால் முஸ்லீம் அத்தகையவரை திருப்பியனுப்ப வேண்டும்.

(7) முஸ்லிம்களுக்குள் யாராவது ரகசியமாய் புறப்பட்டுப் போய் குறைஷிகளுடன் சேர்ந்து கொண்டால், குறைஷிகள் அத்தகையவரைத் திருப்பி யனுப்பமுடியாது.

ஆக இவ்வேழு நிபந்தனைகளில் கடைசியாய் சொல்லப்பட்ட இரண்டுவித நிபந்தனைகளைப் பற்றியே முஸ்லிம்கள் பலமாய் ஆக்ஷேபித்தனர். ஆனால் நபிபெருமானாரவர்களுக்கோ எத்தகைய ஆக்ஷேபணையும் ஏற்படாததால் அவர் அதை ஏற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்து கொடுக்க சம்மதித்து விட்டார்கள்.

கடைசியான இரண்டு ஷரத்துகள் பால் அதிருப்தியடைந்த ஸஹாபாக்கள், குறிப்பாக ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் சமூகத்தில், "அல்லாஹ்வுடைய ரஸூலே! நம்முடைய மதம் உண்மையான மதமாயிருக்கையில் நாம் அவர்களுக் கடங்கி சமாதானம் செய்து கொள்வானேன்?" என்று கேட்டபோது பெருமானாரவர்கள், "சமாதானத்திற்குரிய ஷரத்துகள் நமக்கு பாதகத்தை யுண்டாக்கக் கூடியவைகளாவென்று ஊன்றிக்கவனியுங்கள். நம்மவருக்குள்ளாக எவனொருவன் குறைஷிகளுடன் கலந்துகொள்வானோ அவன் முனாபிக்கேயாவான். அப்படிப்பட்ட 'முனாபிக்' நம்மை விட்டும் பிரிந்துபோவதே மேலாகும். அவர்களிடமிருந்து எவனொருவன் நம்முடன் சேர்ந்து கொள்ள வருவானோ அத்தகையவனை நாம் திருப்பியனுப்பி விட்டால் தான் என்ன? அவன் அவர்களுடன் சேர்ந்திருக்க சம்மதிக்கவே மாட்டான். அவனுடைய மனதில் ஆண்டவன் புறத்தால் அதற்குரிய நல்லெண்ணம் ஏற்படுமாகையால், ஆண்டவனே அவனைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்வான்" என்று திருவுளம் பற்றினார்கள்.

அப்பால், நபி பெருமானாரவர்கள் அவ்வுடன்படிக்கையை எழுத்து மூலமாக எழுதி கொடுக்கும்படி ஹஸரத் அலி (ரலி) அவர்களுக்கு உத்தரவு கொடுத்தார்கள். அதன் பேரில், ஹஸரத் அலியவர்கள், பத்திரம் எழுதத் தொடங்கிய போது நபி பெருமானாரவர்கள் முதலில் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம் மென்று எழுது என்றார்கள். அப்போது ஸுஹைல் அர்ரஹ்மா நிர்ரஹீம் என்ற வார்த்தைகள் நமக்கு வழக்கமில்லை; நமக்குள்ள வழக்கப்படி பிஸ்மிக என்று எழுத வேண்டு மென்றார். ஹஸரத் அவர்கள் சரி அப்படியே எழுதுங்கள் என்றுகூற அவ்வாறே எழுதினார்கள். பிறகு ஹஸரத் அவர்கள் அல்லாஹும்ம என்று எழுதும் என்றார்கள். அதுவும் எழுதியான பின் ஹாஸா மாகால பிஹி முஹம்மதுர் ரஸூலுல்லா என்று எழுது மென்றார்கள். அதற்கு ஸுஹைல் நபி பெருமானாரவர்களை நோக்கி, "நாங்கள் உங்களை அல்லாவுடைய ரஸூலென ஒப்புக் கொண்டிருந்தால், உங்களுக்கும் எங்களுக்கு மிடை தகராறு ஏற்பட்டிருக்கக் காரணமில்லையே. ஆதலால் நீங்கள் உங்கள் தந்தையாரின் பெயரைமட்டும் இந்த

உடன்படிக்கையில் குறிப்பிடவேண்டியது" என்று சொல்லி விவாதித்தார். அப்போது, ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் "நான் அப்துல்லாவுடைய குமாரன் என்பது சரி; ஆனால் அல்லாவுடைய புறத்தால் ரஸூலாகவும் வந்திருக்கிறேன்" என்று கூறினார்கள்.

பின்னர், நபிபெருமானாரவர்கள் ஹஜ்ரத் அலியவர்களிடம் ரஸூலுல்லா என்றபதத்தை அழித்து விட்டு, தனியே 'முஹம்மத் இப்னு அப்துல்லா' என எழுதி விடும்படி உத்திரவு கொடுத்தார்கள். ஹஜ்ரத் அலியவர்கள், நபிபெருமானாரவர்கள் பால் தமக்கேற்பட்டிருந்த விசுவாசத்தையும் மரியாதையையும் பாராட்டி, "நான் அதை அழிக்க முடியாது" என்று முறை யிட்டார்கள். அதைக் கேட்ட பெருமானாரவர்கள் அவ்வுடன்படிக்கைப் பத்திரத்தை தம் கையில் வாங்கி தம் திருக்கரத்தினாலேயே ரஸூலுல்லா என்னும் பதத்தை அழித்து விட்டார்கள். அதன்பின் எழு நிபந்தனைகளும் எழுதப்பட்டு, இருகக்ஷித் தலைவர்களின் கையொப்பங்களும் முத்திரைகளும் வைக்கப்பட்ட பின் பத்திரம் முடிவு பெற்றது.

மேற்படி பத்திரத்தை ஸுஹைல் கையில் கொடுத்து அனுப்பினார்கள். ஸுஹைல் அதைவாங்கிக் கொண்டு, மிக்றசுடன் எழுந்து மக்கமா நகரத்திற்கு வந்து, காபிர்கள் வசம் கொடுத்தான். அவர்கள் அதை வாங்கிக் கொண்டு சந்தோஷப்பட்டார்கள்.

பின்பு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் உமுரு செய்ய நாடிவந்த நாட்டம் தடைபட்டபடியால், அந்ததடையை நிவாரணஞ் செய்வதற்காக, தாங்கள் கொண்டு வந்த ஒட்டகங்களை அறுத்து குர்பானி கொடுத்துவிட்டு, அஸ்ஹாபிகளை யெல்லாம், தலைமுடி களைந்து இன்னும் செய்யவேண்டிய கருமங்களையும் செய்து கொள்ளும்படி கட்டளை பண்ணினார்கள். அவ்வாறே அஸ்ஹாபிகள் எல்லாரும் செய்து முடித்தார்கள். முஸ்லிமான ஜனத்தாரோடு கலந்து உறவாடாது தடைபட்டிருந்த மக்கமா நகரத்து ஆடவர்களும், பெண் பிள்ளைகளும் தடையின்றி வந்து, கலந்து உறவாடினார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த குதைபிய்யாவிலிருந்த தங்கள் அஸ்ஹாபிகளைப் புறப்படும்படி ஏவினார்கள். உடனே

சேனை புறப்பட்டது. நபிநாயகம் (ஸல்) அவர்களும், சேனுவீரர்களாகிய அஸ்ஹாபிகளும் குதைபிய்யாவைவிட்டுப் புறப்பட்டு, மதீனமாநகரத்தை நோக்கி வந்தார்கள். வரும் போது நீரற்ற பாலைவனமொன்று எதிர்பட்டது. அந்த வனத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்களின் சைனியம் வந்த போது, தண்ணீர் அகப்படாமல் அஸ்ஹாபிகளெல்லாரும் தத்தளித்தார்கள். தரை முழுதும் கமர் வெடித்து, அக்கமர்வழியே எழும் புகைப் படலம் எங்கும் பரவி, கானல் மலிந்த அங்கே அஸ்ஹாபிகள் அடைந்த துன்பம் அதிகம். நாவுலர்ந்து ஒரு சொல் சொல்லவும் வாய் வராமல் சோர்ந்து போனார்கள். அவயவச் சோர்வும், மனச் சோர்வுமுற்ற அவர்களிற் சிலர், அதிகதூரம் வரையும் நீர்தேடித் திரிந்தும், ஒருதுளி நீரும் அகப்படவில்லை. அதனால் எல்லாரும் தவித்து, நீர்த் தாகம் பொறுக்க மாட்டாது மனந்தளர்ந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று "யாறஸூலல்லாஹ்! நாங்கள் தண்ணீர்த் தாகத்தால் வாடி, எங்கும் ஓடித்தேடித் திரிந்தோம். ஒரு துளிநீரும் அகப்படவில்லை. தாங்கள் பருகுவதற்காக வைத்திருக்கும் பாத்திரத்தில் மாத்திரம் கொஞ்சம் நீர் இருக்கின்றது. மற்றபாத்திரங்களெல்லாம் வெறிதேயிருக்கின்றன. தாங்கள் சித்தமிரங்கி, எங்கள் நீர்த் தாகயாதனையை நிவர்த்தி செய்ய வேண்டும்" எனக் கேட்டார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த நீரிருக்கும் பாத்திரத்தைத் தங்கள் சமுகத்தில் கொண்டு வரும்படி கட்டளை பண்ணினார்கள்.

சரித்திர புராணம்.

கலி விருத்தம்.

சொன்னபொழு தேகடிகை தன்னையொரு தூதன்
மன்னுமறை மாநபிமுன் வைத்தகல நின்றான்
றென்னுலவு பங்கய மலர்க்கை கொடு தீண்ட
வந்நவ மெனப்புனல்க ளானவிர னின்கும்.

வசனம்.

அப்பாத்திரம் சமுகத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் வலது கையைக் கொண்டு மேற்படி பாத்திரத்தைத் தீண்டினார்கள். தீண்டின மாத்திரத்தில் மேற்படி சிறந்த கையின் விரல்கள் வழியாய் நீர்ப்பிர

வாகித்து, அந்த வன மெங்கும் பரவியோடிற்று. [illegible] அதைக்கண்டு அஸ்ஹாபிகளெல்லாரும் புதுமையாகி, தாகந்தீரப் பருகி, ஆனந்த மடைந்தார்கள்.

பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளோடு மேற்படி பாலைவனத்தை விட்டு சிறிதூரம் நடந்து வந்து, உதுமான் (றலி) அவர்களை அங்கிருந்து மக்கமா நகரத்திற்குப் போகும்படி உத்தரவு செய்தார்கள். அவர்கள் விடைபெற்றுக் கொண்டு, அங்கிருந்து திரும்பி மக்கமா நகரத்திற்குப் போனார்கள்.

அதற்குப் பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் புடைசூழ நடந்து, மதீனமா நகரத்திற்குச் சமீபத்தில் அடுத்த போது, மக்கமா நகரத்தில் காபிர்கள் உதுமான் (றலி) அவர்களைக் கொன்று விட்டார்களென்ற வதந்தி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் செவியில் எட்டிற்று. இந்த துக்கமான சங்கதி தங்கள் காதில் விழுந்தபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் இளைகளடர்ந்த ஒருவிருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டு, அஸ்ஹாபிகளை நோக்கி "மக்கத்தார்கள் நம் உதுமானைக் கொன்று விட்டார்களாம். ஆனபடியால், நாம் எல்லாரும் இப்படியே திரும்பி மக்கமாநகரத்திற் பிரவேசித்து, அங்குள்ள தலைவர்கள் எல்லாரையும் சங்கரித்து விட்டுத்தான் மீளவேண்டும். இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்து, எனக்கு வார்த்தைப்பாடு கொடுங்கள்" எனக்கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபிகளெல்லாரும் சம்மதித்து, வார்த்தைப்பாடு கொடுத்தார்கள். பின்பு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமாநகரத்திற்குச் செல்லாமல் அப்படியேமீண்டு மக்கமாநகரத்திற்கு வரத் துணிந்தார்கள். அப்போது, உதுமான் (றலி) அவர்களைக் கொன்றதாகப் பிறந்த வதந்தி சுத்த அபத்தமென்று மறுசெய்தி உண்மையானதாய் வந்தது. அந்த உண்மையான செய்தியைக் கேட்டு நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் அகங்களித்து, மக்கமா நகரத்தின்மேல் தாவடிபோவதை நிறுத்திவிட்டு, மதீனமாநகரத்திற்கே வர எத்தனப்பட்டார்கள். அன்று வார்த்தைப்பாடு கொடுத்த அஸ்ஹாபிகளைக் குறித்து அல்லாஹு பரிசுத்தவான்களாகிய தஆலா வேதவாக்கியம் ஒன்றை நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கினான். அந்த வேதவாக்கியத்தின் அர்த்தம் இது: "இப் போது வார்த்தைப்பாடு கொடுத்த அஸ்ஹாபிகள் எல்லாரும்

தங்கு தடையின்றி சுவர்க்கஞ் சேர்வார்கள். அவர்களுக்கு நரகம் முற்றமுடிய விலக்கப்பட்டது" என்பதே. இதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த அஸ்ஹாபிகளுக்குத் தெரிவித்தபோது, எல்லாரும் ஆனந்த பரவசமானார்கள்.

பிறகு அவ்விடம் விட்டு மதீனமாநகரத்தை நெருங்கிவரும் போது இன்னுமொரு வேதவாக்கியம் இறங்கிற்று. அதன் அர்த்தம் இது: "முஸ்லிமானவர்களுக்கு நாம் பூரண ஜெயத்தைக் கொடுத்தோம்" என்பதே. இதையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளுக்குத் தெரிவித்தார்கள். இதையும் அஸ்ஹாபிகள் கேட்டு மனம் பூரித்தார்கள். அதன்பின்பு, நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் மதீனமாநகரம் வந்து சேர்ந்தார்கள்.

95-வது அத்தியாயம்.

சல்மா போரிட்டது.

சந்தத் தாழிசை விருத்தம்.

சொல்வா மேன்மைத் தூதெனவந்தே துகமற
நல்மா ராயந் தந்திடு முண்மை நபிநாதர்
கல்பா னதிலே யுல்லாசமதே கனிவான
சல்மா பொருதுஞ் சரிதந் தனையித் தரைமீதே.

இதன் பொருள்.

இந்த வுலகத்தில் வந்த தீர்க்கதரிசியர்களான இலட்சத் திருபத்து நான்காயிரம் நபிகளென்னும் அல்லாஹு தஆலாவுடைய தூதர்களுக்கு எல்லாம் மேலாம் பதத்தையுடைய தூதராக வந்து, மனுடர் செய்யுங் குற்றங்கள் தீர, நல்லபுர்கான் வேதச் சுபசோபனத்தைச் சொல்லும் உண்மையான நபிமார்கள் சாஹிபான முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களுடைய கல்பென்னும் மனத்தில் சந்தோஷங் கனிவான சல்மா வென்னும் பெயரையுடைய அஸ்ஹாபி யானவர் சண்டை செய்த சரித்திரத்தைச் சொல்லு கின்றாம்.

சரித்திர புராணம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

விண்ணவர்க் கரசர் நாளும் விரும்பியர்ச் சனைசெய்தேத்த
வெண்ணரு மரச ரீண்டி யெவலி னிறைஞ்சி நிற்பப்
பண்ணுறு மறையின் றீஞ்சொற் பாவலரினிது வாழ்த்தக்
கண்ணகன் ஞாலம் போற்றுங் காவல ரிருந்தாரிப்பால்

வசனம்.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மக்கமா நகரத்திற்கு உம்றா செய்யச் சென்றபோது உறுதிப்பத்திரம் எழுதிக் கொண்டபின், மக்கமாநகரத்தாரும் மதீனமா நகரத்தாரும் பிணக்கின்றி சமாதானமாய் வாழ்ந்திருந்தார்கள். மதீனமா நகரத்து முஸ்லிம்கள் அடிக்கடி மக்கமாநகரத்திற்குப் போகவும், மக்கமாநகரத்து காபிர்கள் அப்படியே மதீனமா நகரத்திற்கு வரவும் தடையற இடம்பெற்றிருந்தார்கள். இவ்விருநகரத்தாருக்கும் இடையில் பொல்லாங்கு சிறிதுமில்லை. முற்காலத்து வழமைப் பிரகாரம் ஒத்திருந்தார்கள்.

இருநகரத்தாரும் இவ்வாறு சமாதானமாய் வாழ்ந்திருக்கும் காலத்தில், பிரதானமான சில தலைமைக்காரர்களாகிய குறைஷிக் காபிர்களுக்கு நல்லறிவு பிறந்து, அவர்கள் மக்கமா நகரத்திலிருந்து மதீனமாநகரத்திற்கு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து முஸ்லிமாகக் கருத்துற்று, முழு இருதயத்தோடு புறப்பட்டு வந்தார்கள். இப்படி அநேக காபிர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து பணிந்துநின்று முஸ்லிமானபின், இன்னும் மக்கமா நகரத்திலுள்ள காபிர்களின் தலைவர்களாகிய ஒலீதுஉடைய குமாரர் காலிதும், நபிநாயகம் (ஸல்) அவர்களின் பெரியதந்தையாகிய அபூத்தாலிபு உடைய குமாரர் உக்கையிலும், அம்றும், தல்காவுடைய குமாரர் உதுமானும் ஆகிய இந்நால்வரும் நல்லறிவு அடைந்து, குபிர் என்னும் அந்தகாரத்தை விலக்கி, மக்கமாநகரத்திலிருந்து மதீனமாநகரத்திற்கு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாததாமரைகளைப் பணிந்து நின்று, தாங்கள் அறியாமையாற் செய்த குற்றங் குறைகளை மன்னித்து, இரக்ஷிக்க வேண்டுமென்று மன்றாடினார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்

களித்து, அந்நால்வருக்கும் கலிமா என்னும் அமிர்தத்தைப் புகட்டி, பரிசுத்தமான இஸ்லாம் மார்க்கத்திற் சேர்த்தார்கள். அன்று முதற் கொண்டு அந்நால்வரும் அஸ்ஹாபிகளில் விசேஷித்து விளங்கினார்கள். அவர்களில் ஒலீது உடைய குமாரர் காலிது (றலி) அவர்கள் மகாவீரவானென்று உலகறிய விளங்கினர். பின்னர் ஷாம் இராஜ்ஜித்து மகாயுத்தத்தில் அஸ்ஹாபிகளின் சிரேஷ்ட சேனாதிபதியாகவும், சிலசமயங்களில் உபசேனாதிபதியாகவுமிருந்து சேனைகளை நடத்தி, அவ்விராஜ்ஜியம் முழுவதையும் ஜெயித்து கீர்த்திபெற்று விளங்கினார்கள். தெய்வவாள் என்னும் அர்த்தம் தரும் "சைபுல்லா" என்னும் பட்டமும் பெற்றிருந்தார்கள். பின்னர் இவர்களுக்கு அல்லாஹுதஆலா உலகம் நடுங்கும் பராக்கிரமசாலி என்னும் மகிமையைக் கொடுத்தான். இவர்கள் சிறுபிராயத்திலேயே யுத்தப் பயிற்சியில் தேறி, பலவித உபாயங்களும் தந்திரங்களும் கற்றுத்தெளிந்து விளங்கின தளபதி. இந்த ஒப்பற்ற வீரவானுடைய விசேஷ மகிமையை அறிய விரும்பினவர்கள் "புதூகுஷ்ஷாம்" என்னும் யுத்த புராணத்திற் கண்டறியலாம். அபூஜஹலுடைய அமைச்சனும் வீராதிவீரனுமாகிய ஒலீது பெற்ற புத்திரராய் உஹது யுத்தத்தில் காபிர்களின் சேனாதிபதியாய், அக்காபிர்களுக்கு இன்றியமையாத் துணைவராய் விளங்கிய இந்த காலிது (றலி) அவர்கள் முஸ்லிமானபின், அஸ்ஹாபிகளுக்குப் புகழத்தக்க உற்சாகமும், காபிர்களுக்கு மனச்சோர்வு முண்டாயின. பிறகு ஒருவர் பின் ஒருவராய் அநேக குறைஷிகள் வந்து முஸ்லிமானார்கள். அபூஜஹலுடைய புத்திரர் இக்கிரிமாவும் பிந்திவந்து முஸ்லிமானார். (அபூஸுபியான் முஸ்லிமானது, மக்கா பிடிபட்டபோது.) இந்நால்வரும் முஸ்லிமானவுடன் மக்கமா நகரத்துக் காபிர்கள் அநேகர் திரள் திரளாய் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாதார விந்தங்களைப் பணிந்து முஸ்லிமாய், அஸ்ஹாபிகளாய் விளங்கினார்கள்.

இப்படி நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களுக்கு வரவரச் சேனாபலம் அதிகரித்து, மார்க்கம் பல்கும் காலத்தில், ஒரு நாள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சல்மா என்பவரை அழைத்து "நீர் நமது ஆடுகள், பசுக்கள், எருமைகள், ஒட்டகங்கள் எல்லாவற்றையும் சாய்த்துக்கொண்டு, நம் வீட்டு ஊழியனாகிய நபாகு என்பவனையும், அந்நிரைகளை மேய்க்கும்

இடையனையும் கூடக் கூட்டிக் கொண்டு காபா என்னும் தலத்தில் போய் மேய்த்து வாரும்" எனக் கட்டளை பண்ணினார்கள். உடனே சல்மா (றலி) நபாகு என்பவரையும், இடையனையும் கூட்டிக்கொண்டு வில்லையும், அம்புத் தூணியையும் எடுத்துப் புஜத்தில் மாட்டி குதிரையிலேறிப் புறப்பட்டார். ஒட்டகங்களும், எருமைகளும், பசுக்களும், கன்றுகளோடு நிரை நிரையாகத் தொடரவும், ஆடுகள் அகத்தம் குட்டிகளோடுவரவும் சாய்த்துக் கொண்டு நபாகும் இடையனும் பின் தொடர்ந்தார்கள்.

சல்மா (றலி) முதலிய மூவரும் மேற்படி நிரைகளைச் சாய்த்துக் கொண்டு மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, குன்றுகள், அருவிகள், தடாகங்கள், தோட்டங்கள், சிறுபாடிகள் எல்லாவற்றையும் கடந்து, வளமான காபா என்னும் தலத்திற்கு வந்தார்கள். அங்குவந்து பசும்புல் அடர்ந்த தரைகளிலும் செடி கொடிகள் செழித்து வளர்ந்து விளங்கும் தானங்களிலும், தெண்ணீர்த் தடாகப் பக்கங்களிலும், அருவிக் கரைகளிலும் மேற்படி நிரைகளைமேய விட்டு, இம்மூவரும் ஒரு கிளைகளடர்ந்த விருக்ஷநிழலில் உட்கார்ந்திருந்தார்கள். மேற்படி ஒட்டகங்கள், பசுக்கள், எருமைகள், ஆடுகள், எல்லாம் இனம் இனமாய்ப் பரவிநின்று, உல்லாசத்தோடு மேய்ந்து கொண்டு நின்றன.

இது இப்படியிருக்கையில், கத்துபான் கூட்டத்துத் தலைவனாகிய உயைனா என்பவன், அப்துர் றஹ்மான் என்பவனையும் அக்கூட்டத்தாரில் நாற்பது குதிரை வீரர்களையும் அழைத்துக் கொண்டு, அதிக விரைவாக அந்த காபாவுக்கு வந்தான். வந்த மேற்படி பகைவர்கள் அந்த நிரைகள் எங்கும் பரந்து நின்று மேய்வதைக் கண்டு, அப்படியே அந்நிரைகளை வளைந்து கொண்டார்கள். நிரைகளை வளைந்து கொண்டவுடன், சல்மா (றலி) கூட உட்கார்ந்திருந்த இடையன் அதைக்கண்டு வெருண்டு, அப்பகைவர்களை நெருங்கினான். நெருங்கினபோது, அப்பகைவர்கள் மேற்படி இடையனை இரண்டாக வெட்டி விட்டு, அந்த நிரைகளையெல்லாம் கலையாமல் சாய்த்துக்கொண்டு, வந்தவழியாகத் திரும்பினார்கள்.

காபிர்கள் திரண்டுவந்து தமது இடையனைக் கொன்றுவிட்டு, நிரைகளைக் கவர்ந்து கொண்டு போவதை சல்மா (றலி) கண்டு,

மனங்கோதித்து, விரைவாயெழுந்து தாம் ஏறிவந்த குதிரையில் றபாகு என்பவரை ஏற்றி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் இச்சங்கதியைத் தெரிவிக்கும்படி மதீனமா நகரத்திற்கு அனுப்பி விட்டு, தாம் தனியாய் நிரை கவர்ந்து செல்லும் சத்துருக்களைத் தொடர்ந்து சென்றார்.

பகைவர்கள் கவர்ந்த நிரை மீட்டுதற்காகப் பின் தொடர்ந்த ஸல்மா (றலி) மதீனமாநகரத்து உன்னதமான மாடங்கள் தெரியத் தக்க ஒரு மலைச் சிகரத்தில் ஏறிநின்று, மதீனமாநகரத்தை நோக்கிப் பெருந்தொனியாகக் குரலெழுப்பித் தொனித்துவிட்டு, அம்மலைச் சிகரத்திலேயே நின்று கொண்டு, வில்லை வளைத்து அஸ்திரங்களைத் தொடுத்து, மேற்படி பங்கயர்கள் மீது சோனாமாரிபோலச் சொரிந்தார்.

அகுவது உடைய குமாரர் ஸல்மா (றலி) கத்துபான் கூட்டத்தார் திடுக்கிடத்தக்கதாக அஸ்திரப் பிரயோகஞ் செய்யும்போது, பகைவர்களிலொருவன் காலில் பாணத்தைத்துக் கீழே பிரேதமாய்ச் சாய்ந்தான். அதை ஸல்மா (றலி) கண்டு மலைச்சிகரத்தை விட்டிறங்கி, ஓயாமாரியாகக் கைசலிக்காமல் பாணங்களைப் பொழிந்து கொண்டே தொடர்ந்து சென்றார். இவர் எய்யும் கணக்கற்ற பாணங்களெல்லாம் பகைவர்களின் முகத்திலும், கண்ணிலும், வாயிலும் நெற்றியிலும், கழுத்திலும், புஜத்திலும், கையிலும், விலாவிலும், வயிற்றிலும், தொடையிலும், காலிலும் தாறு மாறாய்த்தைத்து வருத்தின. அப்போது மேற்படி பகைவரிலொருவன் தன் குதிரையைத் திருப்பிக் கொண்டு வந்து, தொடர்ந்துவரும் ஸல்மாவை நெருங்கி நின்று, தன்கைவாளை யோங்கி வெட்டினான். அப்போது ஸல்மா (றலி) அருகிலுள்ள ஒரு மரத்தில் ஒதுங்கி நின்று, ஒரு பாணத்தை அவன் மேல் எய்தார் அது தைத்தவுடன் கீழ் விழுந்து மாண்டான். எதிர்த்து வந்தவன் மாண்டபின் ஸல்மா (றலி) மறுபடியும் அப்பகைவரைத் தொடர்ந்து போனார். அப்போது பகைவர்கள் நிரைகளைக் கலையாமல் சாய்த்துக் கொண்டு, இருமலைகளுக்கு ஊடேசெல்லும் ஒருகணவாய் வழியே சென்றார்கள். அவர்கள் கணவாய் வழியே செல்லும்போது ஸல்மா (றலி) விரைவாய் அந்த மலையின் சிகரத்தில் ஏறி நின்று கொண்டு, அங்கிருக்கும் கற்களை உருட்டி அப்பகைவர்மேல் தள்ளினார். புஜங்கொண்டு தள்ளியும்,

உருட்டியும் வீழ்த்தின மலைக்கற்கள் புரண்டு வந்து, மலைக்கணவாயிற் செல்லும் காபிர்கள் மீது விழுந்து சின்னபின்ன மாக்கின. சிலர் அக்கற்களால் நசிந்து மாண்டார்கள். சற்று நேரத்திற்குப்பின் காபிர்கள், மேற்படி கணவாயைக் கடந்து அப்புறப்பட்ட படியால், ஸல்மா (றலி), அம்மலையை விட்டுக் கீழே இறங்கி, வில்லைவளைத்து அஸ்திரங்களைத் தொடுத்துப்பொழிந்துகொண்டு, மறுபடியும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

காபிர்கள் அதுவரையும் தங்களைத் தொடர்ந்து வருபவன் ஒருவன் தானே யென்று அச்சமின்றி, தாங்கள் கவர்ந்து செல்லும் நிரையைக் காத்துக் கொண்டு, ஸல்மாவின் தொடர்தலைப் பாராட்டாமல் விரைந்து போனார்கள். தாங்கள் போகப் போக, இவரும் கூடவே தொந்தரை செய்து கொண்டு தொடர்ந்து வருவதால் சினங்கொண்டு, எல்லாரும் திரண்டு, ஸல்மா (றலி) மேல் திரும்பி, அவர்களணிந்திருக்கும் அஸ்திர சஸ்திர மென்னும் இருவகை ஆயுதங்களையும் பிரயோகித்தார்கள். காபிர்கள் எதிர்த்து நின்று ஆயுதங்களைப் பிரயோகித்தபோது, ஸல்மா (றலி) வீரதீரத்தோடு எதிர்த்து நின்று, தமது பாணங்களையே பொழிந்த வண்ணமாயிருந்தார். ஸல்மா (றலி) யின் பாணங்கள் காபிர்கள் உடல்களைத் துளைத்து, உயிரைக்குடித்து, அப்புறஞ் சென்றன. அதிக நேரம் வரையும் தனியே நின்று பகைவரோடு போரிட்டார். இவருடைய அஸ்திரப் பிரயோகத்திற்கு மாற்றார்கள் ஆற்றமாட்டாது தத்தளித்தார்கள்.

எதிர் நின்று சாதிக்கத் திராணி கெட்டுத் தத்தளித்த காபிர்கள், சிலரை மானக் கொடுத்துவிட்டு, மறுபடியும் நிரைகளைக் காத்துக் கொண்டு சற்றே பின் வாங்கினார்கள். ஸல்மா (றலி) மடிந்து போன காபிர்களின் உடைகளையும், படைக்கலன்களையும் எடுத்து ஒருகுறிப்பான இடத்திற் போட்டுவிட்டு, மறுபடியும் அஸ்திரங்களை பெய்துகொண்டு அப்பகைவரைத் தொடர்ந்தார். இவர் எய்யும் அஸ்திரங்கள் மும்முரமாய்ப் போய்த் தைப்பதால், இனி நிரை பெரிதல்ல, உயிரே பெரிதென்று அக்காபிர்கள் கருதி, தாங்கள் கவர்ந்து கொண்டு போகும் நிரைகளைக் கைநழுவ விட்டுவிட்டு, உயிர்களைக் காத்துக் கொண்டு கலைந்து மலைப்பொதும்புகளைத் தேடி ஓடினார்கள். நிரைகளைக் காத்து நின்றவர்களும் மற்றவர்களும்

சிதறியோடும் போது, சல்மா (றலி) அந்நிரைகளைக் குறிப்பிட்டுக் கொண்டு, ஒரு தானத்தில் தங்கி நின்றார். முறிந்தோடின பகையர்கள் எல்லாரும் அங்குள்ள உன்னதமான ஒருமலைச் சிகரத்தில் ஏறி, பதுங்கியிருந்தார்கள்.

மலைச்சிகரத்தி லேறியிருக்கும் பகைவர்கள் களைதெளிந்து சிற்றுண்டியுண்டு, நீர் பருகி, பாராக்கற்றிருக்கையில், காபிர்களி லுள்ள பதிகனொருவன் அங்கு வந்து, அக்காபிர்களை நோக்கி "உங்களைத் தொடர்ந்து அஸ்திரங்களைச் சொரிந்து கொண்டு வந்தானே, அவன் யார்?" எனக்கேட்டான். அதற்கு அப்பகையர்கள் மேற்படி பதிகனை நோக்கி "அப்பா! அவன் மகாதுஷ்டன். முஹம்மது நபியுடைய கூட்டத்திலுள்ளவன். இன்று காலை தொடங்கி இதுவரையும் எங்கள் மீது அஸ்திரங்களைப் பொழிந்து கொண்டு தொடர்ந்து வந்தான். நாங்கள் அவனிடத்திற் கவர்ந்த நிரைகளையும் விட்டு விட்டோம். அந்நிரைகளை அவன் கைபற்றிக் கொண்டு, மறுபடியும் எங்களைக் கொல்லுவதற்காக இன்னும் தொடர்ந்து வந்து, எங்கேயோ மறைந்து கொண்டிருக்கின்றான். அவன் பிரயோகித்த அஸ்திரங்களால், எங்களில் ஆறுபேர் மாண்டு போனார்கள். அவர்களுடைய உடைகளையும், ஆயுதங்களையும் அவன் தான் கைக்கொண்டான்" என்றார்கள். இதைக் கேட்ட அவன் அக்காபிர்களைப்பார்த்து "நீங்கள் அஞ்சாதீர்கள். உங்களில் நான்கு பேரை என்னோடு வரச்சொல்லுங்கள். அவனை நான் கைப்பிடியாகப் பிடித்து, உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கிறேன்" என்றான். அதற்கு அவர்கள் உடனே சம்மதித்து, நான்கு பேரை அவனோடு கூட்டி அனுப்பினார்கள்.

அவ்வைந்து காபிர்களும் ஒருங்குகூடி, சல்மா (றலி) நிற்கும் தானத்தை நோக்கி வந்தார்கள். அப்போது சல்மா (றலி) அவ்வைவரையும் பார்த்து "ஏ! காபிர்காள்! நீங்கள் என்னை இன்னானென்று அறிவீர்களா?" எனக்கேட்டார். அதற்கு அந்த ஐவரும் இவரை நோக்கி "நாங்கள் அறியோம்; நீரே சொல்லும்" என்றார்கள். அப்போது சல்மா (றலி) அவர்களை நோக்கி "நான் அஃவனுடைய குமாரன் சல்மா; முஹம்மது நபியுடைய அஸ்ஹாபிகளில் ஒருவன். அல்லாஹுத்தஆலாவின் பேரில் பிரமாணிக்கமாக, என் கையிலுள்ள பாணம் ஒன்றினாலே உங்களையெல்லாம் பிரேதமாக

வீழ்த்தாட்டுவேன். நீங்கள் உங்கள் குதிரைகளை எவ்வளவு வேகத்தோடு செலுத்தி வந்தாலும் என்னை நெருங்கமாட்டீர்கள். இப்போது நீங்கள் பட்டினியாயிருந்ததால், பசியால் மாண்டு போக விடாமல் புண்ணியத்திற்காக வேண்டிப் பழயரொட்டியைத் தின்றுகொள்ளும்படி சற்று நேரம் இடங்கொடுத்திருக்கின்றேனேயன்றி, உங்களை சுயாதீனர்களாக விட்டுவிடவில்லை. நீங்கள் இனி உங்கள் ஊரைப்போய்ச்சேர்வது இல்லவேயில்லை" என்றார். இச்சொல்லைக்கேட்ட அவ்வைவரும் திகில்கொண்டு, மனங்கலங்கி வந்த வழியே திரும்பிமேற்படி பகைவர்களிருக்கும் இடத்திற்கு சென்றார்கள். பிறகு சல்மா (றலி) அங்கொரு மலைச் சிகரத்திலேறி, பார்த்திருந்தார்.

இக்காரியம் இங்கே இப்படியிருக்கையில், முந்திபகையர்கள் வந்து நிரை கவரும்போது ஸல்மா (றலி) செய்தி யறிவிக்க அனுப்பின றபாகு என்பவர், விரைவாய் மதீனமா நகரத்தை யடைந்து, அஸ்ஹாபிகள் புடைசூழ வீற்றிருக்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று, "யாறஸூலல்லாஹ்! நந்பான் கூட்டத்து உயைனவும், அப்துர்றஹ்மானும், காற்பதுகுதிரை வீரர்களும் காபாவில் வந்து நமது இடையனைக் கொன்றுவிட்டு, நிரைகளைக் கவர்ந்துகொண்டு போய் விட்டார்கள் என்றார்." இச்சமாசாரத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு குறுநகை செய்துகொண்டு, அஸ்ஹாபிகள் அநேகர் யுத்த சனனத்தார்களாய்ப் புடைசூழப் புறப்பட்டு மதீனமா நகரத்தைவிட்டு வெளிப்பட்டு, காபாவை நோக்கிச் சென்றார்கள். செல்லும்போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஸயீது (றலி) யை அழைத்து, "நீர் சில அஸ்ஹாபிகளோடு முந்திச்சென்று, மலைகளிலும், வனங்களிலும் அருவிக்கரைகளிலும் பகைவர்களைத்தேடி அவர்கள் கவர்ந்துகொண்டு போகும் நிரைகளை மீட்டுவா" என்று அனுப்பினார்கள். உடனே ஸயீது (றலி) சில குதிரை வீரர்களோடு, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு முந்திச்சென்றார். ஸயீது (றலி) வுக்கு முந்தி அக்ஸம் (றலி) தமது குதிரையை விரைவாக நடத்திச் சென்றார்.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனைவீரர்கள் அதிக வேகத்தோடு பறந்து வருவதை மலைச் சிகரத்திலிருக்கும் ஸல்மா (றலி) கண்டு, மனம்பூரித்து. சந்தோஷக் குறியாகக் குரலெழுப்பித்

தொனித்தார். அத்தொனி வழியே முந்திச்செல்லும் அக்சம் (றலி) குதிரையை நடத்திப்போய், சிங்கம்போலக் கர்ஜித்து, மாற்றாரை நோக்கி விரைந்தார். இவர் தனியே போவதை ஸல்மா (றலி) கண்டு, எழுந்துபோய் அவருடைய குதிரைக் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு "அக்ஸமே! தாங்கள் தனியே போகவேண்டாம், காபிர்கள் திரளாயிருக்கின்றார்கள். சற்றே நில்லுங்கள்" என்று சொல்லித் தடுத்தார்கள். அப்போது அக்ஸம் (றலி) ஸல்மா (றலி)வை நோக்கி, "ஸல்மாவே! தாங்கள் அல்லாஹு தஆலாவின் பேரில் பிரமாணிக்கமாக, என்னைத் தடுக்கவேண்டாம்; குதிரையை விடுங்கள்" என்றார். உடனே ஸல்மா (றலி) அவர் குதிரையை விட்டு விட்டு விலகினார். பிறகு அக்ஸம் (றலி) குதிரையை விரைவாக நடத்திக்கொண்டு, பகைவர்கள் கூடியிருக்கும் தானத்தை நோக்கி ஆண்சிங்கம் போலசென்றார்.

அக்ஸம் (றலி) சினங்கொண்டு வருவதைப் பகைவர்களிலுள்ள மேற்படி அப்துர் றஹ்மான் என்பவன் கண்டு, தன் குதிரையை நடத்திக்கொண்டு, இவருக்கு முன் வந்து எதிர்த்தான். எதிர்த்தபோது, இருவரும் சற்று நேரம்வரையும் கைகலந்து சமர் செய்தார்கள். இருவரும் பூமியதிரத் தக்கவிதமாய் குதிரைகளைச் சரிசெய்து, குத்தியும், வெட்டியும், அடித்தும், இடித்தும், தடுத்தும், அடுத்தும், கோதித்தும், குதித்தும், எய்தும், எறிந்தும் பலவாறு போராடினார்கள். இவ்வாறு இருவரும் அடர்ந்து நிற்கும் போது, அக்ஸம் (றலி) தமது கைவாளை ஓங்கி, அப்துர் றஹ்மானை வெட்டினார்கள். அவ்வெட்டு, அவன் ஏறியிருக்கும் குதிரையின் தலையில்பட்டு, அக்குதிரை பதை பதைத்து விழுந்து இறந்தது. குதிரை விழுந்தபோது, அதில் ஏறியிருந்த அப்துர் றஹ்மான் நிலத்தில் விழுந்து எழுந்து நின்றுகொண்டு, தன் கைவாளால் அக்ஸம் (றலி)வின் புஜத்தில் வெட்டினான். அந்த வெட்டுப்பட்டு அக்ஸம் (றலி) ஷஹீதாய், சுவர்க்கம் சேர்ந்தார்.

உடனே அப்துர் றஹ்மான் அக்ஸம் (றலி)வின் குதிரையைப்பிடித்து அதில் ஏறிக்கொண்டான். இதற்குள் நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை வீரர்களாகிய அஸ்ஹாபிகள் சமீபத்தில் வரும்போதே இந்தக் காட்சியை பார்த்துக்கொண்டு வந்த, அபூ கதாதா (றலி) விரைந்து நெருங்கிவந்து, அப்துர் றஹ்மானை ஒரு

வீச்சில் பிரேதமாகச் சாய்த்தார். அவன் ஏறி நின்றகுதிரை ஷஹீதாய்ப் போன அக்ஸம் (றலி)வின் குதிரைவெறிதே நின்றதால், அக்குதிரை மீது சல்மா (றலி) ஏறிக்கொண்டு, பகையர்கள் மேல் அடர்ந்து சென்றார். நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு முந்திச் சில அஸ்ஹாபிகளோடு விரைந்து வந்த சயீது (றலி)வும் சில அஸ்ஹாபிகளும் பின்னிற்க, சல்மா (றலி) முன்னேறிப்போய், பகைவர்கள் மீது அஸ்திரங்களை மழைபோலச் சொரிந்தார். மாலைப்பொழுதாகும் வரையும் அஸ்திரப் பிரயோகஞ்செய்து நிற்பதால், பகைவர்கள் மனந்தளர்ந்து பின்வாங்கி முறிந்தோடினார்கள்.

முறிந்தோடின கத்துபான் கூட்டத்துப் பகைவர்கள் தாகத்தால் இளைத்து, அங்குள்ள ஒரு மலைக்குகையிலிருக்கும் தடாகத்தில் சென்று தண்ணீர் பருகினார்கள். அப்போதும் சல்மா (றலி) அக்காபிர்களை விடவில்லை. அங்கும் தொடர்ந்து சென்று, அக்காபிர்களைத் தாகந்தீரத் தண்ணீர் பருகவிடாமல் அஸ்திரங்களைப் பொழிந்தார். அப்போது அக்காபிர்கள் தண்ணீர் பருகாமல் திடுக்குற்றுக் கலைந்து, மனச்சோர்வோடு ஓடி ஒரு மலைச்சாரலிற் போகும் கணவாய் வழியாய்ப் பதுங்கினார்கள். அங்கேயும் சல்மா (றலி) விடேன் தொடேனென்று தொடர்ந்துபோய், ஒருவனை இலக்காகி ஒருபாணத்தை யெய்தார். உடனே அவன் பிரேதமாய் விழுந்தான். இதைக்கண்ட அக்காபிர்கள் இவன் நம்மை விட மாட்டான் போலும்! இரண்டு ஒட்டகங்களை இவனுக்குமுன் விட்டு விட்டு ஓடிப்போவோமானால், அவைகளை அவன்பிடித்துக் கொண்டு போய்விடுவா" னென்று யோசித்து, இரண்டு ஒட்டகங்களை விட்டு விட்டு ஓடினார்கள். அவ்விரு ஒட்டகங்களையும் சல்மா (றலி) பிடித்துக்கொண்டு, இனிநாம் இந்த அபாயமான கணவாய் வழியில் தனித்திருப்பது பழுதென்றெண்ணி, அங்கிருந்து மீண்டார்.

சல்மா (றலி) மீண்டுவரும்போது, அவர் சிறிய தந்தையாகிய ஆமிறு றலியல்லாஹு அன்ஹு பால்துருத்தி யொன்றும், நீர்த்துருத்தி யொன்றும் கொண்டுவந்து கொடுத்தார். அப்போது சல்மா (றலி) நீர்கொண்டு ஒழுசெய்து, பாலைப்பருகிப் பசிக்களை தெளிந்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் அங்குவந்து சேர்ந்தார்கள்.

உடனே சல்மா (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாததாமரைகளைப் பணிந்து, தாம் கொண்டுவந்த இரண்டு ஒட்டகங்களையும் சமூகத்தில் விட்டார். அப்போது சூரியன் அஸ்தமித்து, எங்கும் நிலாவிளங்கச் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அன்றிரவில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு அந்த மலைச் சாரலிலேயே விடுதியிட்டுத் தங்கினார்கள்.

பிலால் (றலி) அன்றிராப் போஜனத்திற்காக சல்மா (றலி) கொண்டு வந்த ஒட்டகங்களில் ஒன்றையறுத்து, அதன் பிடர்த்தசையைச் சமையல் செய்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வைத்து விட்டு மற்றவைகளைப் பலவாறு சமைத்து அனைவருக்கும் கொடுத்தார். நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் தின்று சந்தோஷமடைந்தார்கள்.

எல்லாரும் பசியாறி சந்தோஷமாயிருக்கையில், சல்மா (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து பணிந்து நின்று "யாறஸூலல்லா! இப்போது நமது மாற்றார்கள் ஒரு காததூரத்திலிருக்கும் ஒரு வசதியான தானத்திற் பதுங்கியிருப்பார்கள். தமியேனை நூறு குதிரை வீரர்களோடு அனுப்புவீர்களானால், நான் அங்கே போய் அவர்களையெல்லாம் வளைந்து சங்கரித்து விட்டு வருவேன்" என்றார். இச்சொல்லை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, அவரை நோக்கி, மலர்வாய்த்திறந்து "அருமையாகிய சல்மா! நீர் காபிர்களின் குதிரைப் படைமீது அடர்ந்து செல்லவா விரும்புகிறீர்?" என குறுநகை தோன்ற சந்தோஷத்தோடு கேட்டார்கள். அதற்கு சல்மா (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லா! தமியேன் அவ்வாறு அடர்ந்து செல்வது தான் சிலாக்கியம்" என்றார். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அதைக்கேட்டு "நல்லதிரும். உமது விஜயசித்தியும், வீரதீரமும் சொல்லுவதற்கு அருமையானவை" என்று வியந்துகூறி, அவரை ஆசிர்வதித்தார்கள். பிறகு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "நமது சேனைவகுப்பிலுள்ள குதிரை வீரர்களில் சல்மாவும், அபூகுதாதாவும் சிரேஷ்டமானவர்கள்" என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள். இதற்குள் அன்றிரவில் அர்த்தஜாமமானபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும், படுத்து நித்திரை செய்தார்கள். அனைவரும் சூரியன்

உதயமாகும் பரியந்தம் நித்திரை செய்தார்கள். பிறகு, சூரியன் உதயமாயிற்று.

பொழுது விடிந்த அதிகாலையில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் நித்திரை தெளிந்து எழுந்தவுடன், அஸ்ஹாபிகளும் எழுந்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் இறந்துபோன காபிர்களின் உடைகள் ஆயுதங்கள், குதிரைகள் எல்லாவற்றையும் தங்கள் சமூகத்தில் கொண்டு வரச்செய்து, அவற்றைப் பாகித்து, மற்ற அஸ்ஹாபிகளுக்குக் கொடுத்ததைப் பார்க்கிலும் அதிகமாக ஒரு குதிரை வீரரின் பங்கும், ஒருகாலாளின் பங்கும் சேர்த்து, சல்மா (றலி) வுக்கு கொடுத்தார்கள். கொடுத்துத் தீர்ந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனைவீரர்களை அங்கிருந்து புறப்படும்படி கட்டளை செய்து, சல்மா (றலி) அவர்களைத் தங்கள் சேனைக்குப் பின் அணியில் நிறுத்திக்கொண்டு, பலவழிகளையும் கடந்து, மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள்.

96-வது அத்தியாயம்.

உறனிக் கூட்டத்தார் தண்டனை பெற்றது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திறமைத் தனமார் குபிரரகந் திகைப்பச் சமரம் புரிந்து நித
மெறுழூற் றிஸ்லா நெறியையுல கெங்கும் படரச் செய்துநல
முறைமைப் புறுக்கான் மறைவிளக்கு முஹம்மது றசூல் நபிநயினார்
உறனிக் கூட்டத் தவர்கட்கறி வுரைத்த தெடுத்தின் றோதிடுவாம்.

இதன் பொருள்.

திறமைத் தனம் பொருந்திய காபிரீன்களின் மனந்திகைக்க யுத்தம் நடாத்தி சதா தினமும் வலிமைகொண்டு தீனுல் இஸ்லாம் மார்க்கத்தைப் பூமியினிடங்களெல்லாம் பரவச் செய்து, நல்ல முறைமையான புர்க்கான் வேதத்தை விளக்கமாக்கும் நபி நயினார் முஹம்மது (ஸல்) தங்களின் கற்பூரவாடை கமழுந் திருவாய் மலர்ந்து, உரனிக் கூட்டத்தார்களுக்கு சொன்ன அறிவுகளை எடுத்து இவ்விடத்திற் சொல்லுகின்றாம்.

சரித்திர புராணம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறைவிளை யாடி நாத்தழும் பேறு
 முஹம்மதா ண்டிருக்கு மன்னுளிற்
குறைபடு முறணிக் கூட்டத்தி லெண்மற்
 வந்தனர் குணமுட னேகி

யறைகழ லரசர் பணிபதாம் புயத்தி
 னழுந்திடச் சிரசினை வைத்து
நிறைவறக் கலிமா விளைப்பகர்ந் திருந்தார்
 நிறையுறற் புகுதுகீர் மையினர்.

வசனம்.

இருலோக ரக்ஷகரான நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யும் காலத்தில், பாதகம் மிக்க உறணிக் கூட்டத்தாரில் எட்டுபேர் கொடிய சண்டாளர்கள், மதீனமா நகரத்தில் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து கலிமாச் சொல்லி முஸ்லிம்களாய் இருந்தார்கள்.

இப்பரம சண்டாளர்களான எட்டுப் பேர்களும் கபட சித்தத்தோடு முஸ்லிமாய், மதீனமா நகரத்திலேயே வாசஞ் செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் இப்படியிருக்குங் காலத்தில், இவ்வெட்டுப் பேர்களுக்கும் பிராண சங்கடமான கொடிய வியாதியொன்று வந்து பிடித்தது. அவ்வியாதியால், அவர்கள் அதிக பாடுபட்டு வருந்தி உடல் மெலிந்து சங்கடப்பட்டார்கள். அப்போது இவ்வெட்டு பேர்களையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து "நீங்கள் ஒட்டகத்தின் பாலையும் அதன் சிறு நீரையுங் கலந்து குடியுங்கள்; இவ்வியாதி தீர்ந்துபோகும்" என்றார்கள். இச்சொல்லை இவ்வெண்மரும்கேட்டு "நாங்கள் ஒட்டகப்பாலுக்கும் சிறுநீருக்கும் எங்கே போவோம்? அவைகள் எங்களுக்குக் கிடைப்பது அரிது" என்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி "இன்ன தானத்தில் தானஞ் செய்வதற்காகப் பிரதி தினமும் ஒட்டகங்கள் அறுக்கப்படுகின்றன. அங்கேபோய்க் காத்திருந்து குடியுங்கள்" என்றார்கள். இவ்

வெண்மரும் அவ்வாறே அங்கே போய்காத்திருந்து ஒட்டகப் பாலும் சிறு நீறும் பருகினார்கள். அப்போதே அவர்கள் உடலில் உண்டாயிருந்த வியாதி பற்றறத் தொலைந்து சுகப்பட்டு, தேகம் பூரித்து சந்தோஷமாயிருந்தார்கள்.

அவர்கள் வியாதி தீர்ந்து தேகபுஷ்டி யடைந்திருக்கும் காலத்தில், பரிசுத்தமுள்ள முக்திமார்க்கமான இஸ்லாத்தை விடுத்து விலகி, நரகத்தில் தள்ளும் பழைய மார்க்கத்தை அனுசரித்துக்கொண்டு, மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, கிராமங்களிலுள்ள சில இடையர்களை அடித்துத்துரத்தி வீழ்த்தி விட்டு, அவர்களின் ஆட்டு நிரைகளை யெல்லாம் கவர்ந்து கொண்டு போய் விட்டார்கள்.

முஸ்லிமாயிருந்த உறணிக்கூட்டத்தாரின் எட்டுபாதகர்களும் இப்படி மாறுசெய்துகொண்டு, நிறை கவர்ந்து போனதை இடையன் ஒருவன் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் தெரிவித்தான். அப்போதே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்வெட்டு துஷ்டர்களையும் பிடித்துகொண்டு வரும்படி சில அஸ்ஹாபிகளை அனுப்பினார்கள். உடனே அவ்வஸ்ஹாபிகள் ஆயுதபாணியாய் புறப்பட்டு விரைந்து தொடர்ந்துபோய், அவர்கள் எண்மரையும் கைப்பிடியாகப் பிடித்து இறுகப்பிணித்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வெண்மருக்கும் செய்யத்தக்க ஆக்ஞை என்னவென்று அஸ்ஹாபிகளோடு ஆலோசனைபண்ணிக் கொண்டிருந்தார்கள். உடனே அல்லாஹு தஆலா இடத்திலிருந்து வேதவாக்கிய மொன்று இறங்கிற்று. நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்வேத வாக்கியத்தை அஸ்ஹாபிகளுக்குத் தெரிவித்து, அவ்வாக்கியத்தின் படியே மேற்படி எண்மரையும் மாறுகால் மாறுகை வாங்கும்படி தண்டித்தார்கள்,

தண்டிக்கப்பட்ட அவ்வெண்மரையும் அஸ்ஹாபிகள் அழைத்துப்போய், ஊருக்கு வெளியிலுள்ள ஒரு தானத்தில் நிறுத்தி. ஐவரகளை அழைத்து மாறுகால் மாறுகை வாங்குவித்தார்கள். கால்கை மாறாகத் தறிக்கப்பட்ட அவ்வெண்மரையும் அஸ்ஹாபிகள் அற்று என்னும் தானத்திற் கொண்டுபோய் விட்டார்கள்.

மேற்படி அற்ரு என்பது அந்தகாரமான ரூருவனம். அதில் இவ்வெண்மரும் கிடந்து பரிதபிக்கத் தக்கவாறாய்ப் புலம்பி யழுது உழன்று, சிலர் மாண்டார்கள். சிலர் ஸ்மரணையற்றுக் கிடந்தார்கள். அதற்குப்பின் அவர்கள் கதி இப்படி யென்று அறியக் கூடவில்லை.

97-வது அத்தியாயம்.

அபா ஸுபியானுடன் குதிரை பேசினது.

விருத்தம்.

ரூசிய மாசனி ரூரியார்
வாசியதே கிறை வாய்மையா
லாசி யபாசு பியானுடன்
பேசியவாறது பேசுவாம்

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் தங்கள் இராஜதானியாகிய மதீனமா நகரத்திலிருந்து அரசு செய்யுங் காலத்தில், அறபு இராஜ்ஜியத்திற்கு அயலிலுள்ள அந்நிய இராஜ்ஜியங்களில் அதிபதிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கடிதமெழுதி, அவர்களையெல்லாம் இஸ்லாம் மார்க்கத்தை அனுசரிக்கும்படி ஏவினார்கள். அவர்களில் சிலர் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்தும், சிலர் கீழ்ப் படியாமலு மிருந்தார்கள் அவர்களில் றூம் இராஜ்ஜியத்தை யாளும் ஏகாதிபதியாகிய ஹிறக்கில் என்பவன் தனக்கு நபிநாயகம் (ஸல்) அவர்களின் கடிதம் வந்தபோது, முஸ்லிமாவதற்குப் பிரியங்கொண்டான்; அவனை முஸ்லிமாக வொட்டாமல் அவனுடைய மந்திரிகளும், பிரதானிகளும் சேனாதிபதிகளும் தடுத்து விலக்கினார்கள். அவ்வாறு அவனைத் தடுத்து விலக்கினது அக்காலத்தில் மாத்திரமல்ல; பிறகு மேற்படி ஹிறக்கில், ஷாம் இராஜ்ஜியத்தையும் தன் ஆணையின் கீழடக்கி சக்கரவர்த்தியாய் அரசாண்டபோது, அஸ்ஹாபிகளால் நடத்தப்பட்ட ஷாம் இராஜ்ஜியத்து மகாயுத்தம் நிகழுங் காலத்திலும், அவன் முஸ்லிமாவதற்கு அடுத்தடுத்து நினைக்குந்தோறும், முன் சொன்ன மந்திரி, பிர

தானி, சேனாதிபதிகளனைவரும் ஒருங்கு கூடித் தடுத்தார்கள். முடிவில் ஹிறக்கில் தனது ஆளுகையை யிழந்து, ஷாம், றூம் என்னும் இரு இராஜ்ஜியங்களுக்கும் இடையில் பிரதான நகரமும் இராஜதானியுமா யிருந்த அந்தாக்கிய்யாவை விட்டு மரக்கலமேறி ஓடும் வரையும் இஸ்லாமிலாகவில்லை ஆனாலும் அவன் அக்காலங்களில் தனது மார்க்கமாகிய கிருஸ்து சமயத்தை மனதார அனுசரித்து வரவில்லை. தனது உத்தியோகஸ்தர்களுக்கு அஞ்சினவனாக மாத்திர மிருந்தான் அவன் அந்தாக்கிய்யாவைவிட்டு ஓடிப்போன பின் முஸ்லிமாய் விட்டதாகவுஞ் சொல்லுகிறார்கள்; அதற்குத்தக்க ஆதாரமில்லை.

மேற்படி ஹிறக்கிலுக்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கடிதமனுப்பினபோது, மக்கமா நகரத்திலிருந்து கர்பு உடைய குமாரன் அபாஸுபியான் வர்த்தகத்திற்காக அந்தாகிய்யாவுக்குப் போயிருந்தான். ஹிறக்கில் நபிநாயகம் (ஸல்) அவர்களைக் குறித்துத் தனது இராஜ சபையில் விசாரணை செய்யும்போது, அச்சபைக்கு மேற்படி அபாஸுபியானும் அழைக்கப்பட்டான். இவன் நபிநாயகம் (ஸல்) அவர்களின் பேரில் தீராக் குரோதமுள்ளவனாகையால், ஹிறக்குலுடைய மனம் பேதலிக்கும் வண்ணம் அதிகமாய் நிராகரித்துப் பேசினான்.

கடைசியில் ஹிறக்கில் "நான் தங்களுக்கு ஈமான்கொண்டு முஸ்லிமாவதற்குப் பிரியமுள்ளவனா யிருக்கிறேன்; ஆனாலும் எனது மந்திரிகளுக்கும், பிரதானிகளுக்கும், சேனாதிபதிகளுக்கும் அஞ்சுகிறேன்" எனப் பிரதிக் கடித மொன்றெழுதி, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுப்பினான். அதன் பின், அபாஸுபியான் அந்தாக்கிய்யாவில் தனது வர்த்தக விஷயமான எல்லாகாரியங்களையும் முடித்துக்கொண்டு, கூடவந்த வர்த்தகர்களோடு மக்கமா நகரத்திற்குப் புறப்பட்டான்.

அபாஸுபியானும், அவனைச் சேர்ந்த வர்த்தகர்களும் அந்தாக்கிய்யாவை நீங்கி, மக்கமா நகரத்தை நோக்கி வரும் பாதையில், தனக்குரிய இலக்ஷணங்களில் சிறிதும் வழுவில்லாத திருமேனியும் கட்டமைம் திடனுமுள்ள குதிரை யொன்று, கயிறை யறுத்துக் கொண்டு வெருண்டு எதிர் நோக்கி வந்தது அந்த அழகிற் சிறந்த குதிரையை அபாஸுபியான் கண்டு, பிடிப்பதற்கு நெருங்கினான்.

நெருங்கின போது மேற்படி குதிரை, இவனுக்கு முன் நின்று கொண்டு, தன் அழகிய வாயை திறந்து "லா இலாஹ இல்லல் லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்று கூறிற்று. இதைக் கேட்ட மாத்திரத்தில் அபாஸுபியான் சித்தப்பிரமை கொண்டு, "இதென்ன விபரீதம்! குதிரை கலிமா சொல்லுகின்றதே!" என்று சொன்னான். அதற்கு மேற்படி குதிரை மீண்டும் தன் வாயைத் திறந்து, அபாஸுபியானை நோக்கி, அடியில் வருமாறு சொன்னது:-

"ஏ! அபாஸுபியான்! நான் பேசுவது உனக்கு விபரீதமாகவா தோற்றுகின்றது? இதைப் பார்க்கிலும் விபரீதம் வேறில்லையா? சொல்லக் கேள். உன்னை ஒரு துளி விந்துவினாலே உன் மாதாவின் கருப்பத்தி லமைத்து, அவயவங்களையும் பொறிகளையும் புலன் களையும் உனக்குக் குறைவின்றி கொடுத்து ஆதரித்து, பிறப்பித்துக் காத்து வரும், மகத்தான அல்லாஹு தஆலா ஒருவனிருக்க, அவனையும் அவனுடைய தூதரையும் அறமறந்து, ஈமானைவிட்டு விலகி, விக்கிரங்களை ஆராதனை செய்கின்றாயே, அது விபரீத மல்லவா?" என்றது.

அதற்கு அபாஸுபியான் மேற்படி குதிரையை நோக்கி "அந்த மகத்தான அல்லாஹு தஆலாவின் தூதர் யார்?" எனக்கேட்டான். அக்குதிரை "கறுப்பு உடைய மகனே! அந்த தூதரை நீ அறிய மாட்டாயா? உங்கள் நகரமாகிய மக்காவிலே, ஹாஷிம் வமிசத் திலே, அப்துல்லாவுடைய புத்திரராய், ஆமினாவுடைய வயிற்றி லிருந்து அவதரித்து, குர்ஆன் வேதத்தையுடைய நபியென்னும் பட்டம் பெற்று, சில காலம் அந்த மக்காவி லிருந்து, இப்போது மதீனாவிற் சென்று அங்கிருந்து அரசு செய்யும் முஹம்மது நபியல் லவா அவனுடைய தூதர்" என அவனுக்கு விடைபகர்ந்தது. அப் போது அபாஸுபியான் மேற்படி குதிரையைநோக்கி "அந்த முஹம் மது நபியை நீ எப்படி அறிந்தாய்?" என மறுத்தும் கேட்டான். மேற்படிகுதிரை இவ்வாறுகேட்ட அபாஸுபியானை நோக்கி "நான் அறிய மாட்டேனா? அல்லாஹு தஆலாவால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகளனைத்தும் அந்த முஹம்மது நபிக்குக் கீழ்ப்படிந்து கலிமா சொல்வது கடனல்லவா? நானும் என்னை யொத்த மற்ற விலங்கினங்களும் அவருக்கு கலிமா சொல்லி வழிப்பட்டிருக்க வில்லையா?" என்று கூறிற்று.

ஒப்பற்ற மேற்படி குதிரை இவ்வாறு மனவலியுடன் நின்று பேசுவதால், அபாஸுபியன் மனந்தளர்ந்து பயங்கர மடைந்து, இக் குதிரையை நாம் பிடிப்போமானால், நமக்குத் தாங்கரிய ஆபத்து வந்து நேரிடுமெனக் கருதி, அதைவிட்டு விலகினான். மேற்படி குதிரை சுயேச்சையாய் போய்விட்டது. அதுசென்ற பின், அபாஸுபியான் தன் வர்த்தகர்களோடு மலை, வனம், வனாந்தர மெல்லாவற்றையும் கடந்து மக்கமா நகரம் போய்ச்சேர்ந்தான்.

98-வது அத்தியாயம்.

கைபர் நகர் பிடிபட்டது.

விருத்தம்.

மெய்பெறு நபிபடை விறலொடு கொடுபோய்
மைபெறு பகைஞர்கண் மடிதர வுடலப்
பொய்பெறு வழிகெடு புகழொடு மகழ்சூழ்
கைபறு பிடிபடு கதையது புகல்வாம்.

வசனம்.

இருலோக ரக்ஷகரான நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பாரந்தாங்கி, தீனை பலகுவிக்குங் கருமத்தில் சித்தி பெற்று வந் தார்கள். அக்காலத்தில் அல்லாஹு தஆலா "யூதர்களை வெல்லத் தக்க ஜெயத்தை உமக்கு நாம் தந்தோம்" என்னும் அர்த்தமமைந்த வேத வாக்கியத்தை நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கினான். இவ்வேதவாக்கியம் இறங்கினவுடன், அக்காலத்தில் யூதர்கள் திர ளாய் வாசஞ்செய்யும் கைபர் நகரத்தின்மேல் படையெடுத்துச் செல்லுவதற்காக நபிநாயகம் (ஸல்) அவர்கள் எண்ணங் கொண் டார்கள்.

கைபர் என்னும் நகரம்மதீனமா நகரத்திற்குஇருபத்து நான்கு காதத்திற்கு அப்புறமுள்ளதும், ஆறு மதில் அரண்களை யுடைய தும், அநேக குடிகளடங்கியதும், பெரும்பாலும் யூதர்களே உள்ள தும், மிகவிசாலமானதும், அலங்காரமான கட்டிடங்க ளமைந்தது மான ஒருபிரதான பட்டணம். அதன் ஒவ்வொரு மதில் அரணும், ஒவ்வொரு நகரத்திற்கு சமானமாய், ஒவ்வொரு அரசரால் ஆளப்

படும். அவ்வரண்களில் பலவித உன்னதமான கோபுரங்களும், மாடங்களும், சிறந்த கோத்தளங்களும் அகத்தமுண்டு

இவ்விதப் பெரிய நகரத்திலேயே யூதர்கள் திரளாய் வாசஞ் செய்கிறபடியால், அதைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென நபிநாயகம் (ஸல்) அவர்கள் நாடி, ஹிஜ்றத்து ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில், கைபர் மேல் செல்லுவதற்காக வேண்டிச் சேனை புறப்படும்படி மதீனமா நகரத்துத் தெருக்களெங்கும் பறை சாற்றும் வண்ணம் கட்டளை பண்ணினார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டளைப் பிரகாரம் பறை சாற்றப் பட்டது.

சேனை புறப்பாட்டுக்காகப் பறை சாற்றின போதே, யுத்தப் பிரியர்களாகிய அஸ்ஹாபிகளில் ஆயிரத்து எண்ணூறு குதிரை வீரர்களும், அநேக காலாட்களும் போர்க்கோலம் புனைந்து புறப் பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் அருகர்களாகிய அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்களும், உமர் (றலி) அவர்களும், உதுமான் (றலி) அவர்களும் போர்க்கோலந் தரித்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்தார்கள். அலி (றலி) அவர்களுக்கு அப்போது கண்ணோய் உண்டாயிருந்தபடியால், அவர்கள் போருக் கென்று யுத்த சன்னத்தராய் வாராமல், சேனையோடு சும்மா வருவதற்காக நாடி யிருந்தார்கள். அருகர்களும், தோழர்களும் திரண்டு வந்து தாங்கள் சமுகத்தில் கூடினவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து மாளிகைக்குட் சென்று, அலங்காரமான உடைகளை யுடுத்தி, ஆயுதங்களணிந்து பிரயாணஞ் சொல்லிக் கொண்டு தேவாலயத்தில் வந்து பாத்திஹா வோதி, ஜெயமன்றாட் டஞ்செய்து சேனை நடக்கும்படி கட்டளை யிட்டார்கள். உடனே படை முரசுகள் கடல் போல வொலித்தன; தக்பீறும், ஸலவாத்தும், கலிமாவும் செவியதிரத் தொனித்தன; குடை, கொடி, ஆலவட்டம், வெண்சாமர முதலிய விருதுகள் நெருங்கி மலிந்தன; குதிரைகளனைத்தும் ஜெயக்குறியோடு ஆரவாரத்துடன் கனைத்தன. சேனைக்கு முன்னணியில் உகாபு என்னும் விஜயதுவஜம் பறக்க நபிநாயகம் (ஸல்) அவர்களும், அருகர்களுஞ் சென்றார்கள். அவர்களுக்குப்பின் குதிரைவீரர்கள் பந்தி பந்தியாய்ச் சென்றார்கள். அவர்களுக்குப்பின் பதாதிராணுவஞ் சென்றது. கடைசியில் யுத்த தளபாடங்களும் தின் பண்டங்களும் அமைந்த ஒட்டகங்களும்,

கோவேறுக்கழுதைகளும் எருதுகளும், அவ்வவற்றின் பராமரிப்புக் காரர்களோடு சென்றன.

இவ்விதமாய் நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களின் சேனாவெள்ளம் மதீனமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு, பூமிகம்பித்து மலைகள் புரளத்தக்க ஆரவாரத்தோடு, புழுதிப்படலம் ஆகாயத்தை முழுதும் மறைக்க கைபர் நகரத்தை நோக்கிச் சென்றது. நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனா வீரர்களோடு சிலதினங்களுக்குள் மலை, வனம், வனாந்தரங்களை எல்லாம் கடந்து மேற்படி கைபர் நகர் சமீபத்தில் பாளையமிட் டார்கள். குறித்த தானத்தில் அஸ்ஹாபிகளனைவரும் இறங்கிப் பாசறை வகுப்பதற்கு முன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் குதிரையிலிருந்து கீழிறங்கி, வெற்றி பெறுவதற்காக வேண்டித் தங்கள் இருகரங்களையும் உயர்த்தியேந்தி, அல்லாஹு தஆலா இடம் துஆ செய்தார்கள்; அப்போது அஸ்ஹாபிகளனைவரும் ஆமீன் கூறினார்கள்.

அன்று காலைநேரமானதால் எல்லாரும் மேற்படி தானத்தில் இறங்கி, நிரைநிரையாகக் கூடாரங்களடித்து, குதிரைலாயங்களும் மற்ற வாகனச்சாலைகளுமமைத்து, யுத்தோப கரணங்களும் தீன் சாமான்களும் வைப்பதற்கான பண்டசாலைகளும் நியமித்து நிபிடிகரமாய் முடித்தார்கள். எல்லாக் கருமங்களையும் குறைவறச் செய்து முடித்து, நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் சிங்கத் திரள் போலத் தங்கியிருந்தார்கள்.

தங்கள் நகரத்து முன்முகப்பில் நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை வந்து இறங்கி யிருக்கும் சமாசாரம், கைபறு நகரத்தாருக்கு எட்டினபோது, அவர்கள் பாம்பின் வாய்த் தேரைபோல மதி மயங்கி, தத்தளித்து இதற்கென் செய்வோமென ஏக்கம் பிடித்திருந்தார்கள்.

கைபறு நகரத்தார் இவ்வாறு மதிமயங்கி, ஏங்கித்தவித்து இனிச் செய்யவேண்டியது இன்னதெனத் தெரியவசமற்றிருக்கையில், அவர்களுக்கு உதவியாக அசது கூட்டத்து அறபிகளும், கத்துபான் கூட்டத்து அறபிகளும் ஒருங்கு கூடிவந்தார்கள். யூதர்களுக்குத் துணை நிற்கவந்த அவ்விரு கூட்டத்தாரும், கைபறுக்குள் பிரவேசிக்காமல், வெளியே ஒருதானத்தில் தங்கி

யிருந்து, தாங்கள் நடத்தப் போகும் கருமத்தைப் பற்றி ஆலோசித்தார்கள். இரு கூட்டத்தாரும் கலந்து ஆலோசிக்கும்போது, அவர்கள் எல்லாரும் மூன்று கட்சிகளாய்ப் பிரிந்து, ஒருகட்சியார் நாம் எல்லாரும் ஒருமித்து கைபறு நகரத்தாருக்குத் துணையாய் நின்று, முஹம்மது நபியுடன் பொருது ஜெயம் பெறலாமென்றும், ஒரு கட்சியார் அதுசரியல்ல, இப்போது முஹம்மது நபி சேனையோடு இங்கு வந்து விட்டபடியால், மதீனமா நகரம் வெறிதாயிருக்கும். நாம் யெல்லாரும் இப்படியே வேறுமார்க்கமாய் அங்கே போய் மதீனமா நகரத்தைக் கட்டிக்கொள்ளலாம். இங்கே யூதர்களே எதிர்த்து நிற்கட்டுமென்றும், நடுநிலையாராகிய மற்றொரு கட்சியார் இவ்விரண்டு காரியமும் சரியல்ல; நாமோ நாடுநகரங்களையும், மாடமாளிகைகளையும், பெண்டு பிள்ளைகளையும், பணங் காசுகளையு முடையவர்களா யிருக்கின்றோம். அப்படியிருக்க, முஹம்மது நபி நினைத்த நகரங்கள் மேல் திடுகூறாய்ப் படை யெடுத்து வந்து கலகம் விளைக்கும் இக்காலத்தில், நமக்குச் சொந்த மான முன் சொன்னவைகளை யெல்லாம் பராமரிப்பின்றிப் போட்டு விட்டு, அந்நியருக்குத் துணைநின்று பாடுபடத்துணிவதும், வலிய அடர்ந்து செல்வதும் சரியாகத் தோற்றவில்லை. இனி முஹம்மது நபியுடைய சேனை நமது நகர்ங்கள் மேல் போராடி வந்தாலும் வரும். காரியம் இவ்வாரிருப்பதால் நாம் நீங்கள் சொல்லும் இரண்டிலுந்தலையிடாமல், நமது நகரங்களை போய்க் காத்துக் கொள்ளுவதே புத்தி யென்றும் வாதித்தார்கள். இம் மூன்று கட்சியில் நடுநிலைக்கட்சியார் சொன்ன கடைசிச் சொல்லே தீர்மான மாயிற்று. ஆனபடியால், அவ்விரு கூட்டத்தாரும் தங்கள் நாடு நகரங்களைப் போய்க் காத்துக் கொள்வது தான் உத்தமமென்று அதற்கு உடன் பட்டு, தாங்கள் தங்கியிருந்த தானத்திலிருந்து புறப்பட்டு, கைபறு நகரத்தைத் திரும்பியும் பார்க்காமல் அவரவர் சுயநகரங்களை நோக்கிப் போய் விட்டார்கள்.

துணைநிற்கவந்த இருவகை அறபிக்காபிர்களும் தங்கள் தங்கள் நகரங்களைக் காத்துக் கொள்ளும் வண்ணம் போய்விட்ட பின், கைபறு நகரத்து யூதர்களுக்கு வேறே ஆதாரமில்லாமற் போய் விட்டது. ஜென்ம சுபாவத்திலே தைரியவீனர்களாகிய யூதர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் தங்களுக்குப் பிறருதவியிருந்தாலன்றி, எந்த விஷயத்திலும் பிரவேசித்து நடத்த

மாட்டார்கள். அவ்வித ஊக்க மற்ற யூதர்கள் விஜயாதிபராகிய நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனாவீரர்களான ரணசிங்கங்களுக்கு முன் எவ்வாறு ஈடு செய்வார்கள்! ஆனபடியால் அவர்கள் அச்சத்தால் மனந் தளர்ந்து, தாங்கள் வசிக்கும் கைபர் நகரத்து அரண்களின் கபாடங்களை யெல்லாம் சாத்திப் பூட்டிக் கொண்டு, பெட்டிப்பாம்பாயடங்கியிருந்து விட்டார்கள்.

கைபர் நகரம் ஜனசந்தடியின்றி ஓய்ந்திருப்பதை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அறிந்து, தாங்கள் பாளைய மிறங்கியிருந்த தானத்தை விட்டு ராணுவத்தை யெழுப்பி நடத்திக் கொண்டு, முதலாம் அரணாகிய "நஈம்" என்னும் மதிலை நெருங்கினார்கள். அதன் கபாடம் மூடப்பட்டிருந்த படியால் அஸ்ஹாபிகளை நோக்கி, மதிட்சுவரின் மேல் ஏணி சாத்தி ஏறுங்களென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிகளெல்லாரும் பல இடங்களிலும் ஏணிகளை வைத்து அதன் வழியாய் மதிள் மேல் ஏறினார்கள். அப்போது பகைவர்கள் ஒருவராவது எதிர்க்க வில்லை. எல்லாரும் அஞ்சிப் பதுங்கியிருந்தார்கள். ஏணியிலேறும் போது மஹ்மூது என்னும் அஸ்ஹாபி யொருவர் அலங்கத்தின் மேலிருந்த பாறைக்கல் உருண்டு விழுந்து ஷஹீதானார். அதனால் அஸ்ஹாபிகள் சினம்மீறி, அதிக விரைவாய் மதிள்மேலேறி, உள்ளே பிரவேசித்து கபாடங்களைத் திறந்து விட்டார்கள். கபாடங்கள் திறக்கப் பட்டவுடன், நபிநாயகம் (ஸல்) அவர்களும், மற்றவர்களும் ஜெயபேரிகை முழங்க உள்ளே நுழைந்து, மேற்படி முதலாம் அரணைக் கைபற்றினார்கள். அப்போது அங்கே எதிர்த்து நின்ற யூதர்கள் பலர் சங்கரிக்கப் பட்டார்கள்; உயர்ந்த பண்டங்கள் பல சூறையிடப் பட்டன; அழகிய பாலியப்பெண்கள் அநேகர் சிறை பிடிக்கப் பட்டார்கள்.

நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், முதலாம் அரணில் இட்டகொள்ளைப் பொருள்களோடும், சிறைகளோடும் தங்கள் சைனியத்தை நடத்திச் சென்று "கமூஸ்" என்னும் இரண்டாம் அரணை நெருங்கினார்கள். அங்கிருக்கும் யூதர்கள் அவ்வரணின் கபாடத்தை மூடிக் கொண்டு, அதன் கொத்தளத்தின் மேல் போருக்கு ஆயத்தமாய்த் திரண்டு நின்றார்கள். அவ்வரண் மதிள் மேலும் ஏணிவைத்து ஏறும்படி அஸ்ஹா

களுக்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை பண்ணினார்கள். அஸ்ஹாபிகள் அவ்வாறே மதில் மேல் ஏறும் போது, கொத்தளத்தில் திரண்டு நிற்கும் பகைவர்கள் எதிர்த்தார்கள். எதிர்த்தும் ஆவதென்ன? முந்தியேறின அஸ்ஹாபிகள் அப்பகைவரை யெதிர்த்து கைகலந்து போரிட்டு நிற்க, அணியணியாய் மற்ற அஸ்ஹாபிகளும் ஏறி, அடர்ந்து நின்று எதிர்த்துத் தாக்கினார்கள். அப்போது பகைவரி லொருவன் தன்கை வாளால் ஓங்கி வெட்டின வெட்டு, சல்மா (றலி) வின் ஒரு காலில்பட்டு கால் முறிந்தது. உடனே அவர்முறிந்த காலோடு கொத்தளத்தை விட்டிறங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து அறிவித்தார். அப்போது நபிநாயகமவர்கள், வேதவாக்கியங்களில் இரண்டொன்றை யோதி, முறிபட்ட காலில் ஊதினார்கள்; ஊதினமாத்திரத்தில் முறிவுண்டகால் பொருந்தி வடுவின்றி விளங்கிற்று. அப்போதே சல்மா (றலி) அகங்களித்து, கொத்தளத்திலேறிப் பகைவரைச் சங்கரித்தார். சற்று நேரத்திற்குள் அங்கு எதிர்த்து நின்ற மாற்றார் திரள் அஸ்ஹாபிகளுக்கு ஈடுசெய்ய ஆற்றாது, பின்புறம் இறங்கி யோட நேரிட்டது. அஸ்ஹாபிகளும் அப்பகைவரைப் பின்தொடர்ந்து உள்புறம் இறங்கி, அவ்வரணின் கபாடங்களையும் திறந்தார்கள். பின்னர் நபிநாயகம் (ஸல்) அவர்களும், உடன் நின்ற அஸ்ஹாபிகளும் உட்பிரவேசித்தார்கள். அங்கும் பல பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. பெண்கள் பலர் சிறையாக்கப் பட்டார்கள். அப்போது பிலால் (றலி) அவ்விரண்டாம் அரணிலுள்ள ஒரு மாளிகைக்குள் புகுந்து, யூதர்களில் ஒரு பிரதான தலைவனாகிய உமையுடைய மகள் சபியா என்னும் கன்னிகையையும், வேறொரு பெண்ணையும் சிறையாகப் பிடித்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் கொண்டு வந்து விடுத்தார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விரு பெண்களையும் மற்ற பெண்களோடு சிறையாக்கி வைக்கும்படி கட்டளை பண்ணினார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விரண்டாம் அரணில் செய்ய வேண்டிய கருமங்களை யெல்லாஞ் செய்து முடித்து, தாங்கள் சைனியத்தை நடத்திக் கொண்டு, "சகு" என்பவனால் கட்டப்பட்டு அவனுடைய நாமமே வழங்கும் மூன்றாம் அரண் மேல் சென்றார்

கள். அவ்வரண் மேலும் ஏணி வைத்தே ஏறினார்கள். மேற்படி மூன்றாம் அரண் எதிர்ப்பாரின்றிக் கைவசமாயிற்று. அதன் கபாடம் அஸ்ஹாபிகளால் திறக்கப்பட்ட போது, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சேனாவீரர்களோடு உள்ளே பிரவேசித்தார்கள். அம்மூன்றாம் அரணிலும் அநேகமான பொருள்களை யெல்லாம் அஸ்ஹாபிகள் சூறையாடி கைப்பற்றி அங்குள்ளவர்களையும் சிறை பிடித்தார்கள்.

பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று அரண்களிலும் கைகொண்ட கொள்ளைப் பொருள்களையும் சிறைகளையும் காவலில் அமைத்துக் கொண்டு, மூன்றாம் அரணி லிருந்து தங்கள் சைனியத்தை நடத்திச் சென்று, நான்காம் அரணாகிய "ஒதீக்கத்" என்பதையும், அதனடுத்த ஐந்தாம் அரணாகிய "சுலாலத்" என்பதையும் நெருங்கி, பாசறை யமைத்துத் தங்கினார்கள். அவ்விரு அரண்களிலு முள்ள பகைவர்கள் அஞ்சி வெளிவராமல் உள்ளேயே பதுங்கி யிருந்தார்கள். பகைவர்கள் ஒருவரும் எதிர்த்து வராமல் அடங்கி யிருந்ததால், நபி நாயகம் (ஸல்) அவர்கள் பதினொரு நாள் வரையும் அவ்விரு அரண்களையும் முற்றுகை யிட்டிருந்தார்கள்.

பன்னிரண்டாம் நாள், நபிகள் பெருமான் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், அபூபக்கர் (றலி) அவர்களை அழைத்து, வெற்றித் துவஜம் ஒன்று கொடுத்து, அஸ்ஹாபிகளில் அநேக வீரர்களை கூடச் சேர்த்து, தாங்களே சேனாதிபதியாய் நின்று அவ்விரு அரண்மேலும் அடர்ந் தேறுங்களென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அபூபக்கர் (றலி) அவர்கள் போர்கோலம் புனைந்து, அஸ்ஹாபிகளாகிய ரண வீரர்களையும் அழைத்துக் கொண்டு, ரணபேரிகை முழங்க "ஒதீக்கத்" என்னும் நான்காம் அரணை நெருங்கி நின்று, அஸ்திரங்களையும் சக்கரங்களையும் கவண் கற்களையும் சோனாமாரி போல, அவ்வரண் மேல் சொரிந்தார்கள். அஸ்ஹாபிகள் பெய்யும் மேற்படி பாணங்களும், சக்கரங்களும், கவண் கற்களும் அபரிமிதமாய்ப் போய்ப் பிடிப்பதால், பகைவர்கள் சினங் கொண்டு, திரள் திரளாய்த் திரண்டு, அரணின் கொத்தளத்திலும் அலங்கத்திலும் வந்து கூடி நின்று, அஸ்ஹாபிகள் மேல் பாணங்களையும், சக்கரங்களையும், கவண்கற்களையும் உக்கிரத்துடன் எறிந்தார்கள். இருவகையாரும் பிரயோகிக்கும்

மேற்படி ஆயுதங்கள் ஆகாயத்தைக் காணரிய விதமாய் மறைத்து விட்டன ; சப்தம் செவியதிரத் தொனித்தன. காலை தொடுத்து மாலை வரையும் இருதரத்தாரும் மனந்தளராமலும், கைகள் சலிக்காமலும் நின்று ஆயுதப் பிரயோகஞ் செய்தார்கள். இதற்கிடையில் அஸ்ஹாபிகள் மதிலேறிச் செல்லவுமில்லை ; சத்துருக்கள் எதிர்த்து இழிந்து வரவுமில்லை. ஒருவரோடொருவர் கைகலக்காமலேயே நின்று போரிட்டார்கள். அவ்வாறு போரிடும்போது சூரியன் அஸ்தமித்த படியால், அபூபக்கர் (றலி) அவர்கள் தங்கள் ரண வீரர்களைக் கூட்டிக் கொண்டு அங்கிருந்து மீண்டு, பாசறைக்கு வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தை யடைந்து பணிந்து நின்று, தாங்கள் அன்றைய தினம் ஜெயம் பெறாமல் மீண்டு வந்ததைத் தெரிவித்தார்கள்.

அடுத்த நாட்காலையில், நபி நாயகம் (ஸல்) அவர்கள் உமறு (றலி) அவர்களை அழைத்து, அவர்களுடன் அநேக வீரர்களையுஞ் சேர்த்து வெற்றித் துவஜ மொன்று கொடுத்து, அவ்விரு அரண்கள் மேலும் அடர்ந்து போரிடுவதற்கு அனுப்பினார்கள். உமறு (றலி) அவர்களும் ரண வீரர்களாகிய அஸ்ஹாபிகளோடு வந்து "ஒதிக்கத்" என்னும் அரணை முற்றி நெருங்கினார்கள். அப்போதும் அதன் கபாடம் திறக்கப்படவில்லை; ஆனதால், முன் அபூபக்கர் (றலி) அவர்கள் வந்து நின்று போரிட்டது போலவே நின்று எதிர்த்தார்கள். பழையபடியே பகைவர்களும் அலங்கத்திலும் கொத்தளத்திலும் திரண்டு நின்று, அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள், உமர் (றலி) அவர்களும் அன்றைய தினம் மாலைப் பொழுதாகும் வரையும் நின்று எதிர்த்து, அஸ்தமானவுடன் மீண்டு பாசறைக்கு வந்தார்கள்.

உமறு (றலி) அவர்கள் திரும்பி வந்தபோது, நபி நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "நாம் சென்ற இரண்டு தினமும், அபூபக்கரையும், உமறையும் அவ்விரு அரண்களையும் கைப்பற்றுவதற்காக அனுப்பினோம். அவர்கள் பட்ட பிரயாசை வியர்த்தமாயிற்று. அவ்வரண்க ளிரண்டும் நம் வசமாகாதது பெரிய தலைச் சுமையா யிருக்கின்றது. ஆனாலும் குற்றமில்லை. அல்லாஹு தஆலாவுக்கும், எனக்கும் பிரீதியுள்ள வேறொருவர் இருக்கின்றார். நாளைக் காலையில் அவர் கையில் கொடியைக் கொடுத்து,

சில வீரர்களையும் சேர்த்து, மேற்படி அரண்க ளிரண்டின் மேலும் அனுப்புவோம். உண்மையாக அவர் கையால் அவ்விரண்டு அரணும் பிடிபடும்" என்று கூறினார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு சொன்ன படியால் பிரதானமான அஸ்ஹாபிக ளெல்லாரும், நாளைய தினம் நபி நாயகம் (ஸல்) அவர்கள் கொடுக்கும் விஜயதுவஜத்தைக் கையேற்று, தனகர்த்தராகும் பாக்கியவான் நம்மில் யாரோ வென்று ஒருவரோ டொருவர் பேசிக் கொண்டார்கள். அன்றியும் அவர்களனைவரும் அன்றிரா முழுதும் நித்திரை செய்யவில்லை. விடியுந்தனையும் விழித்திருந்து "யா அல்லாஹ்! நாளைய தினம் நபி நாயகம் (ஸல்) அவர்களால் அருளப்படும் விஜய துவஜத்தை எனக் கருள்வாயாக" என ஒவ்வொருவரும் மனமுருகி மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அநேகர் மேற்படி துவஜம் நமக்குத் தான் கிடைக்கும், நமக்குத் தான் கிடைக்கு மென்று களிகூர்ந்திருந்தார்கள். அஸ்ஹாபிகள் இந்தப் பேராசையால் அன்றிரவைப் போக்கினார்கள். பிறகு சூரியன் உதயமாயிற்று. பொழுது விடிந்த அதிகாலையில், பிரதானமான அஸ்ஹாபிக ளெல்லாரும் ஒருங்கு திரண்டு நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து கூடினார்கள். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை நோக்கி "தோழர்களே! அல்லாஹு தஆலாவின் உன்னதமான அர்ஷுப் புலியும் எனது மருகருமாகிய அலி எங்கே?" எனக் கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபிகள், "யாறஸூலல்லாஹ்! அலி (றலி) அவர்கள் கண்ணோயால் பீடிக்கப்பட்டு, கூடாரத்திலேயே யிருக்கின்றார்கள்" என விடைபகர்ந்தார்கள். இதைக் கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள், அலியைப்போய் அழைத்து வாருங்கள் என்று சிலரை அனுப்பினார்கள்.

மேற்படி அஸ்ஹாபிகள் சென்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் அழைப்பதாகச் சொன்னவுடன், கண்ணோயால் வருந்தியிருக்கும் அலி (றலி) அவர்கள், மனம்பூரித்து எழுந்து வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் நின்றார்கள். தங்கள் திருமுன்வந்து சலாம் பகர்ந்து நிற்கும் மருகரை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் நோக்கி, அவர்கள் கொண்டிருக்கும் கண்ணோய் தீர, திருவாயின் உமிழ் நீரிற் சிறிதைப் பூசினார்கள். தேவாமிர்தமும்

ஒப்பாகாத திருவாய் உமிழ்நீர் பட்டமாத்திரத்தில், அலி (றலி) அவர்களின் திருக்கண்ணோய் பற்றறத் தொலைந்து கண்கள் முன்போலச்சிறந்து விளங்கின. அன்றுதொட்டு அவர்களுக்குக் கண்ணோயே வரவில்லை.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள், அலி (றலி) அவர்கள் கையில் வெற்றித் துவஜத்தைக் கொடுத்து, அஸ்ஹாபிகளில் அநேகரைச்சேர்த்து, அவ்விரு அரண்கள் மேலும் அடர்ந்துதாக்கி பூரணஜெயம் பெற்றுத் திரும்பி வாருங்களென்று விடைகொடுத்து அனுப்பினார்கள்.

விடை பெற்றவுடன் அலி (றலி) அவர்கள், கல்லுடையுடுத்தி துல்பகார் என்னும் இருமுனைப் பட்டயத்தையும், மற்ற ஆயுதங்களையும் எடுத்தணிந்து யுத்த சன்னத்தராய், துல்துல் என்னும் பஞ்சகல்யாணி யசுவத்தின் மேலேறி, யுத்தத்திற்கு எழுந்தார்கள். அவர்களோடு புறப்படும் அஸ்ஹாபிகளும் போர்க் கோலத்தோடு சிங்கத் திரள்போல் எழுந்தார்கள்.

உக்கிரம்மிக்க ரணசிங்கமான அலி (றலி) அவர்கள், அஸ்ஹாபிகளாகிய ரணவீரர்களோடு, விஜயதுவஜம் முன்செல்ல, ரணபேரிகை யார்ப்ப, "ஒதீக்காத்" என்னும் அரண் மேலடர்ந்து நெருங்கிநின்று, மழை பொழிவதுபோல அஸ்திரப் பிரயோகஞ் செய்தார்கள். இவர்கள் இவ்வாறு நெருங்கி நின்று அஸ்திரப்பிரயோகஞ் செய்யும் போது, அவ்வரணுக்கு அதிபதியாயிருக்கும் மறுகபு என்பவன் சினங்கொண்டு தனது வீரர்களை விளித்து "சூரர்களே, அபூத்தாலிபு உடைய குமாரன் அலி என்பவன் சேனையோடு வந்து நமது அரணைபிடிக்க நெருங்கிவிட்டான். இனி நாம் தாமதித்திருப்பது சரியல்ல. இயன்ற வரையும் பார்த்துத்தான் கைவிட வேண்டுமாகையால், நீங்கள் எல்லாரும் யுத்த சன்னத்தர்களாய் அரணின் கபாடத்தைத் திறந்து கொண்டு எதிரேறிச் செல்லுங்கள். அலியையும், அவன் வீரர்களையும் சங்கரித்து ஜெயம்பெறலாம்" என அலங்கத்தில் நின்று குரலெழுப்பிச் சொன்னான். தங்கள் அரசன் உரத்துச் சொன்ன இச்சொல்லைக் கேட்டபோது, அங்குள்ள யூதர்களெல்லாரும் போர்க்கோலம் புனைந்து, விருதுகள் பிடித்து, ரணபேரிகை இடியொத்து முழங்க, அவ்வரணின் கபாடத்தைத் திறந்துகொண்டு, சமுத்திரம் கால் முளைத்து வருவது

போல ஆரவாரத்தோடு வெளிப்பட்டார்கள். அவர்களுக்கு அதிபனாகிய மர்கபு என்பவனும் யுத்த சன்னத்தனாய்க் குதிரை மேலேறிக் கோட்டை வாசலில் வந்தான். போராட வந்த மர்கபு தனது சேனா வீரர்களை அலி (றலி) அவர்கள் சேனைமேல் நடத்தி, தானும் குதிரையை நடத்திக் கொண்டுவந்து அலி (றலி) அவர்கள் முன் எதிர்த்தான்.

கோட்டைக்குள்ளிருந்து வெளிப்பட்ட யூதர்களனைவரும் ஆரவாரித்து, அஸ்ஹாபிகளோடு எதிர்த்தார்கள். மர்கபு என்னும் அதிபன் அலி (றலி) அவர்களோடு எதிர்த்தான். அஸ்ஹாபிகள் அதிகவேகத்துடன் மேற்படி யூதர்களை அடர்ந்து நெருங்கித் தாக்கினார்கள். இவ்வாறு இருதரத்தாரும் ஒருவரோடொருவர் கைகலந்து போராடும் போது, மர்கபு என்பவன் தன்குதிரையை அலி (றலி) அவர்களுக்கு முன் நெருங்கி நின்றுகொண்டு "உனது நாமம் என்ன?" எனக்கேட்டான். அதற்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. அப்போது அவன் மனத்திடன் குன்றி, இவன் மிகவும் உயர்ந்தவனென்று எண்ணி, தன்குதிரையை சாரிசெய்து வெட்டினான். அவ்வெட்டை அலி (றலி) அவர்கள் தங்கள் பரிசையில் தாங்கிக்கொண்டு துல்பகார் என்னும் இருமுனைப் பட்டயத்தினால் அவனை வெட்டினார்கள். அவனும் அவ்வெட்டைத் தட்டிக்கொண்டு, மறுபடியும் குதிரையை இடமும் வலமுமாகசாரி பண்ணினான். அலி (றலி) அவர்களும் தங்கள் துல்துலைக் குயவன் சக்கரம் போலச் சுழல நடத்தி, அவனை மறித்தார்கள். பராக்கிரமமிக்க இருவரும் இரண்டு ரணசிங்கங்கள் ஒன்றோடொன்று தாக்கிக் கொள்ளும் பாவனையாகத் தாக்கி நிற்கும்போது, முன், காபா என்னும் தலத்தில் பகைவர் கவர்ந்த நிரைமீட்டிக் கீர்த்தி பெற்ற வீரவானாகிய சல்மா (றலி) யின் தந்தையாகிய அமீறு (றலி) தனது குதிரையை நடத்தி வந்து, மர்கபு என்பவனை அலி (றலி) அவர்கள் மேற்செல்ல விடாமல் தடுத்து மறித்தார். எதிர்த்து மறித்த அமீறு (றலி) தமது கைவாளை யோங்கி மறுகபு உடைய சிரத்தை இலக்காக்கி வெட்டினார். அவ்வெட்டை மர்கபு கேடகத்தில் தாங்கிக்கொண்டு, அவன் கைவாளால் இவரை வெட்டினான். இவர் அவ்வெட்டைத் தண்டத்தால் விலக்கிக்கொண்டு, வேலையோங்கி அவன் மேல் எறிந்தார். எறிந்த வேலை மர்கபு விலக்கி விட்டு

தன்குதிரையைச் சூறாவளிபோலச்சுற்றி அமீறு (றலி) மேல்அடர்ந்தான். அப்போது அமீறு (றலி) மறுபடியும் தம்கைவாளையோங்கி மர்கபு உடைய தலையை நோக்கி வெட்டினர். அவ்வெட்டு அவன் இட்டிருந்த இரும்புத் தலைச் சீராவிற் பட்டு அதிர்ந்து, தமது சிரத்தில்வந்து விசையாய்ப்பட்டது. அதனால் அமீறு (றலி) படுகாயமுற்று, ஷஹீதாகி சுவர்க்கஞ் சேர்ந்தார்.

அமீறு (றலி) சுவர்க்கஞ் சேர்ந்ததை அலி (றலி) அவர்கள் கண்டு அடங்காச் சினங்கொண்டு, தங்கள் துல்துலை நடத்தி மறுபடியும் மர்கபுக்கு முன் சென்று மறித்தார்கள். அப்போது அவன் தன்கைவாளையோங்கி அலி (றலி) அவர்களை நோக்கி வெட்டினான்; அவ்வெட்டை அவர்கள் விலக்கிக்கொண்டு துல்பகாரை யோங்கி அவனை வெட்டினார்கள். அதனை அவன்தண்டத்தால் தாங்கிக் கொண்டு மறுபடியும் வெட்டினான்; அவ்வெட்டை அலி (றலி) அவர்கள், தங்கள் பரிசையால் தடுத்தார்கள்; அவ்வெட்டின் உக்கிரத்தால் மேற்படி பரிசை இரண்டாய்ப் பிளந்தது.

தங்கள் கைக்கேடகம் இரண்டாய்ப் பிளந்து போன படியால், அலி (றலி) அவர்கள் சினங்கொண்டு, தங்கள் குதிரையைச் சூறாவளிபோலச் சுழல நடத்தி, எதிர்த்த பகைவரைச் சங்கரித்துக் கொண்டு கோட்டை வாசலையடுத்து, அவ்வாசற் கபாடங்களில் ஒன்றைப் பிடுங்கி இடதுகரத்தில் கேடகத்திற்கு பதிலாகப்பிடித்துக் கொண்டு, மறுபடியும் குதிரையை நடத்திவந்து மர்கபுக்குமுன் மறித்து நின்று வெட்டினார்கள்; அவ்வெட்டுப் பட்டு மேற்படி மர்கபு உயிரிழந்து, பிணமாய் வீழ்ந்து, நரகஞ்சேர்ந்தான்.

மர்கபு என்பவன் வெட்டுண்டு இறந்தானென்னும் சமாசாரம் சுலாலத்து என்னும் ஐந்தாம் அரணிலிருக்கும் ஆசிர் என்னும் அவன் சகோதரன் செவியில் விழுந்தது. தன் சகோதரன் யுத்தத்தில் மாண்டு போனதால் ஆசிர் அடங்காச்சினங்கொண்டு, சேனா வீரனைவரையும் திரட்டிக்கொண்டு மேற்படி "சுலாலத்து" என்னும் அரணின் கபாடத்தைத் திறந்துகொண்டு வெளிப்பட்டான். அவன் வெளிப்பட்டபோது அஸ்ஹாபிகள் உக்கிரங் கொண்டு அவன் சேனையை வளைத்து நெருங்கித் தாக்கினார்கள். அப்போது சுபைர் (றலி) அவர்கள் தங்கள் குதிரையைச் சரி செய்து, ஆசிருக்கு முன்சென்று எதிர்த்தார்கள். எதிர்த்தவுடன்

அவனும் இவர்களை யெதிர்த்தான். இருவரும் இருசிங்கங்களைப் போல எதிர்த்து நின்று, சற்று நேரம் வரையும் போராடினார்கள். அதன்பின் சுபைர் (றலி) அவர்கள் குதிரையை வக்கிரித்து, முன் அடர்ந்து ஆசிரை வெட்டினார்கள். அவ்வெட்டு அவனுடலிற் பட்டு பிரேதமாய்ச் சரிந்து நரகஞ்சேர்ந்தான்.

தங்கள் வேந்தர்களாகிய மர்கபு, ஆசிறு என்னும் இருவரும் மாண்டு போன படியால், அரசிழந்த யூத ஜாதியாரனைவரும் திகில் பிடித்து, தப்பியோடவும் வழியின்றிக் கலங்கி நின்று, அஸ்ஹாபிகளை நோக்கி "அடைக்கலம்! அடைக்கலம்!! நாங்கள் உங்கள் அடைக்கலம்!!!" என்று சப்தமிட்டு, அபயாஸ்தங் கேட்டார்கள். அப்படியே அலி (றலி) அவர்கள், போரை நிறுத்திக்கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு சங்கதி தெரிவித்தார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்களும், மற்ற அஸ்ஹாபிகளும் திரண்டு சென்று, அப்பகைவர்களுக்கு அபயாஸ்தம் கொடுத்து, அவ்விரு அரணையும் கைப் பற்றினார்கள்.

பிறகு "ஒதிக்கத்" "சுலாலத்து" என்னும் இரு அரணிலும் வசிக்கும் யூதர்களனைவரும் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு உடன்படிக்கை யொன்று எழுதிக் கொடுத்து விட்டு, அவர்கள் எடுத்துக் கொண்டு போகக் குறித்த பொருள்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, உடனே புறப்பட்டு கைபர் நகரத்து எல்லையை நீங்கி அயல் இராஜ்யத்துக்குக் குடிபோய் விட்டார்கள். அவ்விரு அரண்களிலும் அநேக திரவியங்களும், பண்டங்களும் அஸ்ஹாபிகளால் சூறையிடப்பட்டன. சிறைகளும் பிடித்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்போது தங்கள் விடுதியை ஐந்தாம் அரணில் ஸ்தாபித்திருந்தார்கள்.

மர்கபு, ஆசிர் என்னும் இரு அதிபர்களும் இறந்து போனதும், ஒதிக்கத், சுலாலத் என்னும் இரு அரணிலும் வசிக்கும் யூதர்களெல்லாரும் அயல் இராஜ்ஜியத்திற்குக் குடி யெழும்பிப் போய் விட்டதுமான எல்லா வர்த்தமானங்களையும் "பதக்" என்னும் ஆறாம் அரணியில் வசிக்கும் யூதர்கள் கேள்வியுற்று, இனி நமக்கும் அதுவே கதியன்றி வேறில்லையென மனந்தளர்ந்து, அப்படியே திரண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள்

சமுகத்தில் உடன்படிக்கை யொன்று எழுதிக்கொடுத்து விட்டு, மறு இராஜ்ஜியத்திற்குப் போய்விட்டார்கள்.

பின்பு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கைபர் நகரத்து பலமான ஆறு அரண்களும் பிடிப்பட்டதற்காக ஆனந்தமடைந்து, அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து துதித்து, ஐந்தாம் அரணிலேயே யிருந்தார்கள். அப்போது, மூன் ஹபஷீ இராஜ்ஜியத்திற்குப் போயிருந்த அலி (றலி) அவர்களின் மூத்த சகோதரராகிய ஜஃபர் (றலி) அவர்கள் அங்கிருந்து திரும்பி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கைபரிலிருக்கும் செய்திகேட்டு, அவ்விடத்திற்கு வந்தார்கள். ஜஃபர் (றலி) அவர்கள் சிலமுஸ்லிம்களோடு வரும் சமாசாரத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேள்வியுற்று, எழுந்து எதிர்சென்று கட்டித்தழுவி உபசரித்துக்கொண்டு வந்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "கைபர் நகரம் பிடிப்பட்டதும் ஜஃபர் க்ஷேமமாக வந்து சேர்ந்ததுமான இரண்டு ஆனந்தத்தையும், அல்லாஹுத் தஆலா நமக்குத் தற்காலம் கொடுத்தான்" எனக்களிகூர்ந்து மொழிந்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கைபர் நகரத்து ஆறும் அரணுகிய பதக்கை பண்ணைவீடாக நியமித்துவிட்டு, மற்ற ஐந்து அரண்களையும் ஆளுகை செய்வதற்காகத் தங்கள் அஸ்ஹாபிகளி லொருவரைப் பிரதானியாக நியமனஞ் செய்து வைத்து, அவ்வரண்களில் வசிக்கும் குடிகளையெல்லாம் தக்க நிபந்தனைக் குட்படுத்தி, கிருஷிகர் அனைவரையும் அழைப்பித்து, கைபர் நகரத்தைச் சேர்ந்த நிலங்களில் சாகுபடியாகும் நெல் முதலிய தானியங்க ளெல்லாவற்றிற்கும் வருஷவாரி இன்னது கொடுத்து வரவேண்டுமென்று ஒரு ஏற்பாடு செய்து, அதன்படி அக்கிருஷிகர்கள் கைப்பட உடன்படிக்கை எழுதி வாங்கினார்கள்.

அது தீர்ந்தபின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி, கொள்ளையிட்ட பொருள்களையும் சிறையாகப் பிடிபட்டவர்களையும் தங்கள் சமுகத்தில் கொண்டு வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிகள், கொள்ளைப் பொருள்கள் எல்லாவற்றையும், பிடிபட்ட சிறைகளையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் கொண்டுவந்து சேர்த்தார்கள். சேர்த்தபோது நபிநாயகமவர்கள் அப்பொருள்களையும், சிறைகளையும் ஒருங்கு

சேர்த்து, சரிபாதியாகப் பிரித்து ஒரு பாதியை "பைத்துல் மால்" என்னும் திரவிய சாலைக்காக வைத்துக் கொண்டு, மற்ற பாதியை நான்காகப் பாகித்து மூன்று பங்கைக் குதிரை வீரர்களுக்கும், ஒரு பங்கைக் காலாட்களுக்கும் கொடுத்தார்கள். பிந்தி வந்த ஜஃபர் (றலி) அவர்களுக்கும், அவர்கள் கூடவந்தவர்களுக்கும் அப்படியே சமமாகக் கொடுக்கப்பட்டது.

அலி (றலி) அவர்கள் சமர்களத்தில் தங்கள் கேடகம் முறிப்பட்டபோது, எட்டு வீரவான்கள் கூடிப் பெயர்த்தாலும் பெயர்க்கக் கூடாத பலமான கோட்டை வாசற் கபாடத்தைப் பிடுங்கிக் கேடகமாகப் பிடித்துக் கொண்டதை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, மனமகிழ்ந்து அஸ்ஹாபிகளை நோக்கி "அலிக்கு அல்லாஹுத் தஆலா அப்போது அந்த வன்மையைக் கொடுத்தான்" என்றார்கள்.

கைபர் பிடிபட்டபின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மூன்று தினம் வரையும் அங்கிருந்தார்கள். அப்போது, அங்குவசிக்கும் சல்லாம் என்னும் ஒரு யூதனுடைய மனைவியாகிய ஜெயினபு என்பவள், ஒரு செம்மறியாட்டை யறுத்து அதன் முன்னஞ் சந்தில் நஞ்சைவைத்து நெய்யிலிட்டுப் பாகமாகப் பொரித்து, ஒரு பாத்திரத்தில் வைத்து கொண்டுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வைத்து, கைகட்டி நின்று அதனைப் புசிக்கும்படி மன்றாடினாள். அவள் தான் செய்யும் சதி யோசனை வெளிப்படுமென்று சிறிதும் நினைத்தவளல்ல. தன்பேதை மதியால் இப்படிச் செய்தபின் தானே பச்சாதாபப்பட நேரிட்டது. அவள் நஞ்சிட்டுக் கொண்டுவந்து வைத்த பொரிக் கறியை அற்புத வாரிதியாகிய நபிநாயகம் (ஸல்) அவர்கள் வகிர்ந்து புசிக்க எத்தனப்பட்டபோது, அவள் திடீரென்று போய் விட்டாள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பொறிக் கறியைப் புசிக்க ஆரம்பித்தபோது, மேற்படி பொறிக் கறி நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "அகிலரக்ஷகராகிய யாறஸூலல்லாஹ்! சல்லாம் என்னும் யூதனுடைய மனைவியாகிய ஜெயினபு என்பவள், தங்களைக் கொலை செய்யக் கருதி, என்னுடன் நஞ்சைக்கலந்து பொரித்துக் கொண்டு வந்து தங்கள் முன் வைத்திருக்கின்றாள்" என்றது.

பொரிக்கறி பேசின அற்புதத்தை அஸ்ஹாபிகள் கேட்டு அதிக ஆச்சரிய மடைந்தார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளில் சிலரை யனுப்பி மேற்படி கொடிய சண்டாளியாகிய ஜெயினபு என்பவளைக் கொண்டுவரும்படி கட்டளை பண்ணினார்கள். அப்போதே அஸ்ஹாபிகள் போய் மேற்படி ஜெயினபுவை இழுத்து வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் நிறுத்தினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவளை நோக்கி "சண்டாளி! ஆட்டிறைச்சியில் நஞ்சைக்கலந்து பொரித்து, ஏன் எனக்குக் கொடுத்தனை?" எனக்கேட்டார்கள். அதற்கு அவள், "தாங்கள் எங்கள் ஜாதியாரில் அநேகரை சங்கரித்து விட்டபடியால் அதற்கு பதிலாக தங்களைக் கொன்றுபோட வேண்டுமென்று கருதி, நான் அப்படிச் செய்தேன்" என்று விடை சொன்னாள். இச்சொல்லைக் கேட்ட அஸ்ஹாபிகளெல்லாரும் அவள் மீது சினந்தார்கள். உடனே ஜெயினபு, தனக்கு ஏதும் விபத்துவந்து சம்பவிக்குமென்றெண்ணிப் பயந்து, தான் முன்சொன்ன சொல்லைக் கீழ் வருமாறு சொன்னாள்:—

"நபியே, தமியாள் தங்களைக் கொன்றுபோட வேண்டுமென்னும் துர்சிந்தனையோடு அப்படிச் செய்யவில்லை. நஞ்சூட்டிய பதார்த்தத்தை தின்பவர்கள் அரசர்களாயிருந்தால் மரணமடைவார்கள்; நபிகளாயிருந்தால், அந்நஞ்சு அவர்களை ஒரு விக்கினஞ் செய்ய மாட்டாது. ஆனதால், இதைக் கண்டறிய வேண்டுமென்றே செய்தேன்" என்றாள். அவள் ஸ்திரீயாகையால் ஒன்றுஞ் செய்யாமல், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவளைத் துரத்தி விட்டார்கள்.

நான்காம் நாட்காலையில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளாகிய சேனாவீரர்களோடு, கைபர் நகரத்திலிருந்து மதீனமா நகரத்திற்குப் பிரயாணமாக எத்தனப்பட்டார்கள். உடனே சேனை புறப்பட்டது. ஜெயபேரிகை இடி எனமுழங்க, தக்பீர் கடலெனத் தொனிக்க, விருதுகள் காடெனப்பரவ, சேனை சமுத்திரமென நடந்தது. நபிநாயகம் (ஸல்) அவர்கள் வெற்றித் துவஜம் முன்செல்ல, அருகர் நால்வரும் இருமருங்கும் நெருங்கி வர, சேனைக்கு முன்னே நடந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் சைனியத்துடன் கைபர் நகரத்தைவிட்டு வெளிப்பட்டு

காடு மலை, வனாந்தரங்களை யெல்லாம் கடந்து, நடந்து, வாதில்குரு என்னும் தலத்தில்வந்து அங்குள்ள சிறுகோட்டை யொன்றைப் பிடித்து, அங்கும் திரண்ட சொத்துக்களைக் கொள்ளையிட்டு, சிறைகளும் பிடித்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு மதீனமா நகரத்தைநோக்கி வந்தார்கள். வரும்போது அன்று நண்பகலானதால் வெயில் அதிக தீக்ஷண்யமா யெரித்தது. அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விடத்தில் வசதியான சுத்து என்னும் தலத்தில் கூடாரங்களடித்து இறங்கும்படி, அஸ்ஹாபிகளுக்குக் கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிகள் அனைவரும் கூடாரங்களிட்டு பாளையமிறங்கினார்கள்

தங்களுக்கிட்ட அலங்காரமான கூடாரத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கின போது, அல்லாஹு தஆலா, இடத்திலிருந்து ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வேத வாக்கிய மொன்று கொண்டுவந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு உணர்த்தினர். அந்த வேதவாக்கியத்தால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பேரின், மயக்க முற்று, அலி (றலி) அவர்கள் மடியில் சிரஞ் சாய்த்து நித்திரை செய்தார்கள். அப்போது அஸர்வேளை தவிர்த்து சூரியன் அஸ்தமாயிற்று. பொழுது பட்டபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் நித்திரை தெளிந்து விழித்து, அலி (றலி) அவர்களின் முகத்தை நோக்கினார்கள். அச்சமயத்தில் அலி (றலி) அவர்களின் முகாரவிந்தம் வாடியிருப்பதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, "யா அலி! என்ன சஞ்சலம்?" எனக்கேட்டார்கள். அதற்கு அலீ (றலி) அவர்கள் "யாறஸூலல்லாஹ்! அஸர்தொழுகை கலாவாய் விட்டதே" என்றார்கள்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் சூரியன் புகுந்த மக்றிபு திசையை உற்றுப் பார்த்தார்கள். பார்த்தபோது, தன் ஆயிரங்கதிர்களையுஞ் சுருக்கிக்கொண்டு அஸ்தமான சூரியன், அஞ்சித்தடுமாறி, சென்ற வழியே மறுபடியும் மீண்டு உயர்ந்து நின்றது. அதனால் அஸர்வேளையுண்டாய் விட்டபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்களும், அலி (றலி) அவர்களும் உளுசெய்து அஸர்தொழுகையை அதாவாகத் தொழுது முடித்தார்கள். தொழுது தீர்ந்த பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சூரியனை அஸ்தமிக்க விடைகொடுத்தார்கள். அது முன் போல் அஸ்தமித்து மக்றிபாயிற்று.

முன்னர் கைபர் நகாத்து "கமூசு" என்னும் இரண்டாம் அரணில் பிலால் (றலி) பிடித்த சிறையாகிய இரண்டு பெண்களில், உயர்வுடைய மகளார் சபியாவை நபிநாயகம் (ஸல்) அவர்கள் விவாகஞ் செய்து கொள்ள விருப்பமுற்று, அன்றிரவில் அபூதல்ஹா (றலி) உடைய மனைவியாகிய உம்மு சுலைம் என்னும் பெண்ணை யழைத்து சபியாவை அழைத்துக்கொண்டுபோய் மணக் கோலஞ் செய்து கூட்டிவர வென்று கட்டளை பண்ணினார்கள். உடனே உம்முசுலைம், சபியாவை அழைத்துப் போய் ஸ்நானஞ் செய்வித்து, புத்துடை யுடுத்து வித்து, நகைகள் பூட்டி, பரிமளந்திமிர்ந்து, வதூவாக்கி அழைத்து வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் விடுத்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் சபியா சிறைப் பெண்ணா யிருப்பதால் உரிமை யாக விடுத்து, அவ்வுரிமை விட்டதையே மகருக வைத்து மணமுடித்துக் கொண்டார்கள்.

உலகமாதவாகிய சபியா (றலி), நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு மனைவியான அன்றிரவிலே, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி "யாசபியா! உனது ஒரு கண்ணுக்கருகே தழும்பொன்று இருக்கின்றதே, அதென்ன தழும்பு?" எனக்கேட்டார்கள். அதற்கு சபியா (றலி), நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, கீழ்வருமாறு சொன்னார் :—

'யாறஸூலல்லாஹ்! எனது பிதாமாதாக்களிருவரும் என்னை எங்கள் ஜாதியிலுள்ள கனானா என்னும் ஒரு யூதனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தார்கள். எனக்கு விவாகம் நிறைவேறின அன்றிரவில், பூரணச்சந்திரனென்று இறங்கிவந்து என்மடியி லிருந்து விளையாடிக் கொண்டிருக்க நான் சொப்பனங் கண்டு, மேற்படி கனானாவிடஞ் சொன்னேன். அவன் பொழுது விடிந்த அதிகாலையில் எழுந்து போய், யூதாசிரியர்களிடத்தில் நான் கண்ட கனவைச் சொல்லிக்காட்டிப் பயன்கேட்டான். அதற்கு அவ்வாசிரியர்கள்: 'இக்கனவு கண்ட பெண், முஹம்மது நபிக்கு வாழ்க்கைப்படுவாள்' என்று சொன்னார்கள். இச்சொல்லைக்கேட்ட கனானா என்பவன் என்னிடம் வந்து "ஏ! சபியா! நீ முஹம்மது பேரில் காதல் கொண்டிருப்பதாலல்லவா இவ்வித சொர்ப்பனம் உனக்குக்காணப்பட்டது ?" எனக்கடிந்து கூறி, என் முகத்தில் அடித்தான். அவ்வடியாலான காயத்தின் தழும்பு தான் என் கண்ணுக்கருகே யிருக்கின்றது.

அன்றையதினமே நான் அந்த கனானாவை வெறுத்துவிட்டு, தங்களை வழிபார்த்திருந்தேன், என் கோரிக்கை இன்று கைகூடிற்று" என்றாள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைக்கேட்டு ஆனந்தமடைந்திருந்தார்கள். அன்றிரவு கழிந்து சூரியோதயமான போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பொக்கிஷக்காரரை யழைத்து "நமது திரவியசாலைக்கு உரித்தல்லாத, நமக்குரிய உணவுகள் எவ்வளவு உள்ளதோ அவ்வளவையும் இங்கே கொண்டு வாரும்; அஸ்ஹாபிகளுக்கு விருந்து கொடுக்க வேண்டும்" என்று கட்டளை பண்ணினார்கள். உடனே அவர் போய், கையிருப்பாயிருந்த தானியம்,காய் கறி அனைத்தையும் கொண்டு வந்து, நபிநாயகம்(ஸல்) அவர்கள் சமூகத்தில் குவித்து "இத்தனையும் சமைத்தால் பதினைந்து பேர்களுக்குத்தான் போதும்" என்றார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள், "நல்லதிருக்கட்டும், நீர் அவ்வளவையும் நன்றாகச் சமைத்து, இங்கே கொண்டு வாரும்" என்றார்கள். உடனே அவர் அவற்றைக் கொண்டு போய் நன்றாக சமைத்து, பாத்திரங்களிலிட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் கொண்டு வந்து வைத்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் சேனா வீரர்களாகிய அஸ்ஹாபிகளில் ஆயிரத்தெண்ணூறு குதிரை வீரர்களுக்கும், அநேக காலாட்களுக்கும், பதினைந்து பேர்கள் உண்ணத்தக்க அந்த அற்பவுணவால் விருந்து கொடுத்தார்கள். மேற்படி சொற்பவுணவை அத்தனை பேர்களும் வாய்வயிறாரவுண்டு, ஆச்சரியானந்த பரவசரானார்கள்.

அன்று காலைப்போஜனம் அற்புதகரமாக நடந்த பின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சைன்யத்தை அந்தத் தானத்திலிருந்து எழக்கட்டளை பண்ணினார்கள். கட்டளையானபோது அஸ்ஹாபிகள் எல்லாரும் புறப்பட்டார்கள்.

சேனை புறப்பாடானபோது, அஸ்ஹாபிகளெல்லாரும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் முந்தின இரவில் விவாகஞ் செய்துகொண்ட சபியா (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்களின் மனைவி வகுப்பில் சேர்ந்தவரோ? அல்லது, வைப்புப் பெண் வகுப்பிற் சேர்ந்தவரோ வென்று சந்தேகமுற்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் சபியா (றலி) வை அலங்கரித்து, ஒரு சிறந்த குதிரையில்

இருத்தினார்கள். அஸ்ஹாபிகளெல்லாரும் அவரை மனைவியென்றே அறிந்தார்கள்.

பின்பு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அன்று பகல் முழுதும் நடந்து மாலையானபோது, அங்குள்ள ஒரு வசதியான இடத்தில் தங்கும்படி அஸ்ஹாபிகளுக்குக் கட்டளை பண்ணினார்கள். அப்படியே அஸ்ஹாபிகள் கூடாரங்களிட்டுத் தங்கினார்கள். பின்னர் சூரியன் அஸ்தமித்து இருளாய் சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அனைவரும் இராப்போஜனஞ் செய்து படுக்கைக்குத் தயாரானபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிலால் (றலி) வையழைத்து, நம் அனைவருக்கும் இன்று பஜ்ரு தொழுகை கலாவாகாதபடி நீர்விழித்திருப்பீராக என ஆக்ஞை செய்து காவல்வைத்துவிட்டு, நித்திரை செய்தார்கள். அஸ்ஹாபிகளெல்லாரும் படுத்துத் தூங்கினார்கள். பிலால் (றலி) மாத்திரம் விழித்திருந்தார்.

பிலால் (றலி) அன்றிராமுழுதும் வெகு ஜாக்கிரதையோடு கண்ணோடு கண் மூடாமல் விழித்திருந்து பஜர் வேளையான வைகறைக்குக் கீழ்த்திசைவெளுக்குந் தருணமானபோது, அவருக்குக் கண்மயக்கத் தூக்கம் வந்தது. இராமுழுதும் விழித்திருந்ததால் வந்த மயக்கத்தால் அவர் பிரக்ஞையற்றுத் தூங்கினார். அப்போது மற்றவர்களிலும் ஒருவராவது தூக்கந்தெளிந்து எழவில்லை. சூரியன் உதயமாய், நன்றாய் விடிந்தது.

சூரியன் நன்றாய் உதயமானபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் நித்திரை தெளிந்தெழுந்து, பிலால் (றலி) தூங்கக் கண்டு, அவரைத் தட்டியெழுப்பி "நீர் பஜர் தொழ என்னை ஏன் எழுப்பவில்லை?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர் "யாறஸூலல்லாஹ்! நான் இராமுழுதும் இமை மூடாமல் விழித்திருந்தேன்; பஜருக்குச் சற்று முந்தி எவ்விதமாகவோ எனக்குத் தூக்கம் வந்துவிட்டது, அதனால் தூங்கிவிட்டேன். தமியேனை மன்னிக்க வேண்டும்" என விடை கூறினார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளெல்லாரையும் எழச்செய்து, அவர்களை நோக்கி "இந்தத் தலம் வஞ்சகனாகிய இபுலீஸுடைய கலைத்தலுக்கு உட்பட்டதாகையால், இனி ஒருவரும் இங்கே தங்கக்கூடாது" எனப் பகர்ந்தார்கள்.

[அன்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து சொன்னபடியே அந்நாள் தொடுத்து ஒருவராவது அங்கே தங்குவதில்லை.]

அப்போது அங்கிருந்து சேனை புறப்பட்டது. சொற்ப தூரம் வந்தபின், அங்குள்ள ஒருவாவியில் அஸ்ஹாபிகளெல்லாரும் உலு செய்து, பஜருத் தொழுகையை கலாவாகத் தொழுதார்கள். அப்போது, அபூகுதாதா (றலி) ஒரு கரத்தில் தண்ணீர் கொண்டு வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வைத்தார். அதைக்கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் உலுசெய்து, கலாத் தொழுதார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தொழுது தீர்ந்த பின், தாங்கள் உலுசெய்து மீந்ததண்ணீரை அதன் பாத்திரத்தோடு மேற்படி அபூகுதாதா (றலி) வசம் கொடுத்து "நீர் இந்தத்தண்ணீரை செலவழிக்காமல் கையோட கொண்டு வாரும்; அதில் காணறிய அற்புதமொன்று இருக்கின்றது" என்று கட்டளை பண்ணி விட்டு, தங்கள் சேனையை நடத்திக்கொண்டு மதீனமா நகரத்தை நோக்கி வந்தார்கள். வரும்போது, வெடித்த கமர் வழியே யெழும் வெப்பமான கொடும் புகையும், கானலுங்கலந்து ஆகாயமளவுந்தாவி, பிராணிகளை மிகப் பீடிக்கும் கொடியபாலைவன மொன்று எதிரிட்டது. அந்தப் பாலைவனத்தில் அஸ்ஹாபிகளெல்லாரும் நடந்தார்கள். அப்போது காற்றோட்டமின்றி வெயில் அதிதீக்ஷணமா எரித்தது. அதனால் அஸ்ஹாபிகள் தாகம் மீறி நாக்குகளுலர்ந்து, தண்ணீர் தேடி யலைந்தார்கள். வெகுபிரயாசையோடு தேடியும் ஒரு துளி நீராவது அகப்படவில்லை. ஆனதால், எல்லாரும், உடலொடுங்கி மனம் வருந்தி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து முறையிட்டார்கள்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் "உங்களுக்கு அல்லாஹு தஆலா தண்ணீர் தருவான்; நீங்கள் அஞ்சாதீர்கள்" என்று சொல்லி அஸ்ஹாபிகளைத் தேற்றி விட்டு, அபூகுதாதா (றலி) யை நோக்கி "அந்தத் தண்ணீர் பாத்திரம் எங்கே?" எனக் கேட்டார்கள். உடனே அவர் முன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் உலுசெய்துமீந்த புனலிருக்கும் பாத்திரத்தையெடுத்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருமுன் வைத்தார். வைத்தபோது, நபிநாயகம்

(ஸல்) அவர்கள் மேற்படி பாத்திரத்திலுள்ள சிறந்த ஜலத்தை ஒரு சிறிய கிண்ணத்தில் வார்த்து, அபூஹுரைரா (றலி) யை நோக்கி "நான் இப்படியே இந்தக் கிண்ணத்தில் வார்த்து வார்த்து உமது கையில் தருகிறேன், நீர் அதை வாங்கி வாங்கி ஒவ்வொருவருக்கும் கொடும்" என்று சொல்லி, அவர் கையில் கொடுத்தார்கள். அபூஹுரைரா (றலி) அதை வாங்கி ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த சிறுபாத்திரத்திலுள்ள சொற்ப ஜலத்தையே வார்த்து வார்த்துக் கொடுத்தார்கள். அஸ்ஹாபிகள் ஒவ்வொருவராய் வாங்கி வாங்கிப் பருகினார்கள். தாங்கரிய தாக மீறினவர்களாகையால், ஜனங்கள் திரள் திரளாய்த் திரண்டு மொய்த்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் எல்லாரையும் நோக்கி "சந்தடி செய்யாதீர்கள். நம்மிடத்தில் ஜலம் அபரிமிதமா யிருக்கின்றது. அமரிக்கையாய்ப் பருகுங்கள்" என்றார்கள். அப்படியே அஸ்ஹாபிகளனைவரும் தாகந் தீரப் பருகி, உள்ளம் பூரித்து, உடல் புளகித்தார்கள். பின்னர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒரு கிண்ணம் வார்த்து அபூஹுரைரா (றலி) கையில் கொடுத்து "நீர் பருகும்" என்றார்கள். அதற்கு அவர் "தேவரீர் பருகுங்கள்" என்றார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "நான் விருந்தளிப்பவன்; கடைசியில்பருகுவேன். நீர் முந்திப் பருகும்" என்றார்கள். உடனே அவர் பருகி மனங் குளிர்ந்தார். எல்லாரும் பருகித் தாகந் தீர்ந்த பின், நபிநாயகம் (ஸல்) அவர்களும் பருகினார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனா சமுத்திரத்தோடு நடந்து, மதீனமா நகரத்திற்கு சமீபத்திலானார்கள். அப்போது, அப்துர்றஹ்மான் என்பவர் ஒருவர் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் ஈமான் கொண்டு முஸ்லிமானார். (இவர் பூனைகளைப் பிரியமாய் வைத்து வளர்த்ததால், பின்பு அபூஹுறைறா என்னும் பெயர் பெற்றனர்.)

நபிநாயகம் (ஸல்) அவர்கள் கைபர் நகரத்தை ஜெயித்துச் சொந்தமாக்கிக்கொண்டு, ஒரு விவாகஞ்செய்து சந்தோஷமாய் மதீனமா நகரத்தை நெருங்கி வந்த சமாசாரம் மதீனமா நகரத்தார் கேட்டு, ஆனந்தமடைந்து, தெருக்களை அலங்கரித்து, திரள்திரளாய் எதிர்சென்று அழைத்தார்கள். பின்னர் நபிநாயகம் (ஸல்) அவர்களும், மற்ற அஸ்ஹாபிகளும், ஜெயபேரிகை முழங்க, நக்பீர் முழக்கமாய்த் தொனிக்க மதீனமா நகரத்தில் பிரவேசித்தார்கள். அஸ்ஹாபிகளனைவரும் தங்கள் தங்கள் மனைகள்சேர, நபிநாயகம் (ஸல்) அவர்களும் மாளிகை புகுந்தார்கள்.

99-வது அத்தியாயம்.

ஜம்றத் விருந்திட்டது.

விருத்தம்

இருந்திட்ட விருங்கண நாயகரா
மருந்திட்ட நமன்ன லயின்றிடவே
தருந்திட்ட நல்ஜமறத் தெனுந் தகையோர்
விருந்திட்ட சிறப்புகழ் சொல்லுதுமால்.

வசனம்.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள், கலிமா என்னும் வித்தை விதைத்து, ஈமான் என்னும் அதன் வேர்கள் எங்கும் பரந்தோடி நிலைபெற, இஸ்லாம் என்னும் அரும் பயிர் செழித்தோங்கச் செங்கோல் செய்யுங்காலத்தில், மதீனமா நகரத்திலுள்ள அஸ்ஹாபிகளில் ஜம்றத் (றலி) என்னும் ஒருவர் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமெனக் கருதி, ஒரு செம்மறியாட்டை யறுத்து அதன் இறைச்சியனைத்தையும் மிக மதுரமாக சமைத்து ஒரு பாத்திரத்தில் வைத்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் கொணர்ந்து மரியாதையோடு சமர்ப்பித்தார்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விறைச்சியை மதீனமா நகரத்து முஸ்லிமானவர்களெல்லாருக்கும் புசிக்கக் கொடுக்கவேண்டுமென்று எண்ணி, சில அஸ்ஹாபிகளை நோக்கி, இவ்வூரிலிருக்கும் முஸ்லிமானவர்களெல்லாரையும் விருந்துண்ண அழைத்து வாருங்களென்று கட்டளை பண்ணினார்கள். அவ்வஸ்ஹாபிகள் மதீனமா நகரத்து வீதிகள் தோறுஞ் சென்று முஸ்லிமானவர்களெல்லாரையும் அழைத்தார்கள். உடனே எல்லாரும் எழுந்துவந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் மாளிகையில் திரளாய்க் கூடினார்கள்.

எல்லாரும் தங்கள் மாளிகையில் வந்துகூடின மாத்திரத்தில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜம்றத் (றலி) கொண்டுவந்து

சமர்ப்பித்த இறைச்சியை எல்லாருக்கும் ஒழுங்காக கொடுத்தார்கள். நிரை நிரையாக பந்தி பந்தியாக அநேக ஆயிரம் ஜனங்கள் வந்து வந்து, அந்த ஒரே ஆட்டிறைச்சியை தின்று, மனத்திருப்தி யடைந்தார்கள் அவ்விறைச்சி தின்னத் தின்ன அப்படியே குறைவின்றி யிருந்தது.

எண்ணற்ற பேர்கள் வாயார வயிறாரத் தின்று களிகூர்ந்து, இவ்வற்புதத்திற்காக நபிநாயகம் (ஸல்) அவர்களை துதித்தார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்களும் புசித்து, அவ்விறைச்சி முழுமையும் அப்படியே ஜம்றத் (றலி) வசம் கொடுத்து அனுப்பினார்கள். அவர் ஆச்சரியத்தோடு தம்மனைக்குக் கொண்டு சென்றார்.

100-வது அத்தியாயம்.

வேட்டையாடினது.

விருத்தம்.

கோட்டை நீங்கிய கேண்மையாற்
கூட்டை மேவிடக் கூறுவாம்
காட்டை நாடி நபிபிரான்
வேட்டை யாடிய மேன்மையே.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் ஒருநாள், வனத்திற் சென்று வேட்டை யாடுவதற்காக விருப்ப முற்று, தங்கள் கலீபாக்களாகிய அருகர் நால்வருள்பட முன்னூற்று முப்பது அஸ்ஹாபிகளை ஒருங்கே கூட்டிக் கொண்டு, ஆயுதங்களணிந்து, குதிரை மீதேறிப் புறப்பட்டார்கள். முன்னூற்று முப்பது தோழர்களோடு புறப்பட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள், மதீனமாநகரத்தை விட்டு வெளியாய், அடுத்து உள்ள ஒருமலைச்சாரலில் வந்து, அங்குமெய்ந்து திரியும் மான், மரை, முயல் இவற்றை தேடித்திரிந்தார்கள். அவற்றில் ஒன்றாவது அகப்படவில்லை. கடைசியில் அம்மலையடிவாரத்தில் ஒரு பக்கத்தில், வரையாடொன்றைக் கண்டு அதைப் பிடித்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களும், தோழர்களும் பிடிபட்ட வரையாட்டோடு, அங்குள்ள ஒருபூங்காவில் அன்று பகல் தங்கினார்கள். பின்பு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "இந்த வரையாட்டையறுத்து, அதன் ஈரலைச்சுடுங்கள்; மற்ற இறைச்சிகளை யெல்லாம் மதுரமாக சமைத்து, எட்டுசேர் கோதுமைமாவில் ரொட்டி சுடுங்கள்" என்று கட்டளை பண்ணினார்கள். உடனே அவ்வாறு செய்யப்பட்டது. சமைத்த கறியையும், சுட்ட ஈரலையும், ரொட்டியையும் பாத்திரங்களிலிட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் கொண்டுவந்து வைத்தார்கள். வைத்த போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கூடவே முன்னூற்று முப்பது பேர்களும் பந்தியிருந்தார்கள். எல்லாரும் பந்தியிருந்தபின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தின்ன ஏவினார்கள். ஏவின மாத்திரத்தில் பிஸ்மில்லாஹி சொல்லி அனைவரும் தின்றார்கள். தின்னத்தின்ன, சமைத்த கறியும், சுட்ட ஒரே ஈரலும், ரொட்டியும் வளர்ந்தன. நபிநாயகம் (ஸல்) அவர்களும், முன்னூற்று முப்பது பேர்களும் திருப்திகரமாக தின்று தீர்த்தும், அவை அப்படியே யிருந்தபடியால், இவற்றை விரும்பினவர்கள் எடுத்துக் கொள்ளுங்களென்று உத்தரவு செய்தார்கள். அவற்றை அபூபக்கர் (றலி) அவர்களும், அப்துர் றஹ்மான் (றலி) அவர்களும் எடுத்துக் கொண்டார்கள்.

பின்னர் எல்லாரும் அந்த வனத்தைவிட்டு மதீனமா நகரம் வந்து சேர்ந்தார்கள். தின்று மீந்த அற்புதக் கறியும், ரொட்டியும், ஈரலும் அவற்றைக் கொண்டுவந்த அவ்விருதலைவர்களின் குடும்பம் முழுவதும் தின்னுமளவுக்கு வளர்ந்தன. அதனால், எல்லாரும் நபிநாயகம் (ஸல்) அவர்களை மிக வியந்தார்கள்.

101-வது அத்தியாயம்.

உம்ரு கலாச் செய்யச் சென்றது.

விருத்தம்.

விடந்தரும் பணியாமாதி சேடனே விரித்த வந்தப்
படந்தரும்பு வனமுற்றும் பராமரித்தாளும் வேதத்
திடந்தரு நபிகள் கோமான் செய்திடத்துணிந்து முன்னந்
நடந்தவவ் வுமுறுமீண்டுங் கலாச்செய்த துரைவாமன்னே.

வசனம்.

நபிகள் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் முன்னொருதரம் உம்ரா செய்வதற்காக மதீனமா நகரத்திலிருந்து எழுந்தருளி மக்கமாநகரஞ் சென்று, அது நிறைவேறாமல் மறு வருஷத்திற்கு வந்து செய்துகொள்ளுவதாக மக்கிகளுக்கு உடன் படிக்கை யொன்று எழுதிக் கொடுத்து விட்டு மீண்டு வந்த வரலாற்றை தொண்ணூற்று நான்காவது அத்தியாயத்திற் சொல்லி யிருக்கிறதல்லவா? செய்யத் தொடங்கித் தவிர்ந்து போன உம்ராவை மீண்டும் செய்து முடித்தல் நியதியாய் விட்டபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் முன்குறித்தபடி மறுவருஷமான போது, நியமித்த உம்ராவை கலாவாகச் செய்து நிறைவேற்றக் கருதி, அஸ்ஹாபிகளை நோக்கி "சென்ற வருஷத்தில் உம்ராச் செய்வதற்காக என்னோடு வந்த அத்தனை பேர்களும் புறப்படுங்கள்; இந்த வருஷம் அதைச்செய்து முடிக்கவேண்டும்" எனக் கட்டளை பண்ணினார்கள்.

இத்தக்கட்டளை பிறந்தபோது, முன் நபிநாயகம் (ஸல்) அவர்களோடு உம்ராவுக்குச் சென்ற ஆயிரத்து நானூறு அஸ்ஹாபிகளும், அநேக பெண்டு பிள்ளைகளும் ஆயுததாரி யணிந்து புறப்பட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் கல்லுடையுடுத்தி, ஆயுதங்களணிந்து புறப்பட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற் கண்ட தங்கள் தோழர்கள் புடைசூழ மதீனமா நகரத்தை நீங்கி, மக்கமா நகரத்தை நோக்கி நடந்து, மலை, வனம், வனாந்தரங்களெல்லாவற்றையும் கடந்து, மக்கமா நகரத்திற்கு இருகாத தூரத்திலுள்ள சரீபு என்னும் தலத்திற்சென்று, அங்கே கூடாரங்களிட்டுத் தங்கினார்கள். அந்தத் தலத்திலேயே இஃறாம் கட்டப்பட்டது.

பின் சரீபு என்னும் அந்தத் தலத்தில் ஆரிது உடைய மகளாராகிய மைமூன் (றலி) வை நபிநாயகம் (ஸல்) அவர்கள் விவாகம் செய்துகொண்டார்கள்.

அதன் பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களோடு அந்த சரீபு என்னும் தலத்திலிருந்து எழுந்து, மக்கமா நகரத்தை நோக்கி வந்தார்கள். இவர்கள் வரும் செய்தி மக்கி

களுக்கு எட்டிற்று. மேற்படி சங்கதி தெரிந்த மாத்திரத்தில், மக்கமா நகரத்திலுள்ள காபிர்களெல்லாரும் ஒருங்கு கூடி, ஒரு முடிவுசெய்துகொண்டு, மக்கமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு நபி நாயகம் (ஸல்) அவர்கள் வரும்பாதையை வந்து தடுத்துக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கிக் கீழ்வருமாறு சொல்கின்றார்கள்:—

"நீங்கள் எங்கள் மக்கமா நகரத்திற்குள்ளே பிரவேசிக்க விருப்பங் கொண்டீர்களானால், உங்களில் ஒருவராவது கையில் ஆயுதங்கள் கொண்டு வரக்கூடாது. அப்படிக் கொண்டு வந்திட்ட போதிலும், அவ்வாயுதங்களை உறையிலிருந்து வெளியிலெடுக்கக் கூடாது. நீங்கள் எல்லாரும் மூன்று இரவு, மூன்று பகலுக்கு மேற்பட ஒருநாழிகை நேரமாவது ஊருக்குள் தங்கி யிருக்கக் கூடாது. எங்கள் மதஸ்தர்களாகிய மக்கிகளில் யாரையாவது நீங்கள் பலாத்காரமாய், எங்கள் மார்க்கத்தில் வாருங்களென்று அழைக்கக்கூடாது. உங்களோடு மதீனமா நகரத்திலிருந்து வந்தவர்களில் யாராவது எங்கள் மக்கமாநகரத்தில் குடியிருக்க விரும்பித் தங்குவார்களானால், நீங்கள் அவர்களைத் தடுக்கக்கூடாது. இவ் வேற்பாடுகளடங்கிய உடன் படிக்கை யொன்று நீங்கள் எங்களுக்கு எழுதிக்கொடுத்து விட்டுத்தான், எங்கள் ஊருக்குள் புகுத வேண்டும்" எனக்கேட்டார்கள்.

வழியில் வந்து தடுத்துக் கொண்டு மேற் கண்டபடி கேட்ட காபிர்களுக்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் பதிலொன்றுஞ் சொல்லாமல், கேட்ட நிபந்தனைகளுக்குச் சம்மதப்பட்டு, குறித்த நிபந்தனைகளடங்கிய உடன்படிக்கை யொன்றெழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். அவ்வுடன்படிக்கையைக் காபிர்கள் பெற்றுக் கொண்டு, வழியை விட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள். பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களோடு மக்கமா நகரத்தை நோக்கிச்சென்றார்கள். இருமருங்கிலுமுள்ள பூங்காக்களையும், அதன் சிங்காரங்களையும் கண்கள் குளிரக்கண்டு சென்றார்கள். பின் ஒப்பற்று விளங்கும் மகிமை பெற்ற "சபா" "மறுவா" என்னும் இருகுன்றுகளும் அலங்காரத்தோடுத் தோற்றப்பட்டன. நபிநாயகம் (ஸல்) அவர்கள் உன்னதமான "சபா" "மறுவா" என்னும் இருகுன்றுகளையும் கண்ட மாத்திரத்தில் களிகூர்ந்து,

மக்கமா நகரத்திற்கு வெளிப் புறமுள்ள ஒரு சிங்காரவனத்தில் அஸ்ஹாபிகளோடு தங்கினார்கள்.

அன்று மாலைப்பொழுதாகையால் மேற்படி சிங்காரவனத்தில் தங்கி, அன்றிரா முழுதுமிருந்து, பொழுது விடிந்த அதிகாலையில் அஸ்ஹாபிகளோடு அங்கிருந்து புறப்பட்டார்கள். வெற்றித் துவஜமாகிய உக்காபு என்னும் கேதனம் முன்செல்ல, ஆயிரத்து நானூறு தீரவீரர்கள் புடைசூழ நபிநாயகம் (ஸல்) அவர்கள் வரும் ஆரவாரத்தைக் கேட்டு, மக்கமா நகரத்து ஏழைக் குடிகளனைவரும் திகில்கொண்டு, நகரைவிட்டுக் கிராமங்களுக்கு ஓடி விட்டார்கள். பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் புடைசூழ்ந்து கலிமா முழக்க, வானவர் வாழ்த்த மக்கமா நகரத்திற்குள் புகுந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் நகரத்திற்குள் புகுந்து, அலங்காரமான வீதிகளை யெல்லாங் கண்டு களித்து நடந்து கஃபத்துல்லா என்னும் தேவாலயத்தை வளைந்திருக்கும் "ஹறம்" என்னும் திவ்விய வரணத்திற்குள் பிரவேசித்தார்கள். அப்போது அஸ்ஹாபிகளால் கலிமா முழக்கம் அதி மும்முரமாக முழக்கப்பட்டது.

கலிமா முழக்கம் மும்முரமாய் முழங்க அஸ்ஹாபிகளோடு ஹறமென்னும் திவ்வியாவரணத்திற் பிரவேசித்த நபிநாயகம் (ஸல்) அவர்கள், அடுத்த மாந்தர்களுக்குப் பாபவிமோசனஞ் செய்வதற்காக அந்தத் திவ்வியாவரணத்து நடுவேயிலங்கும், ஒப்பற்றதும், பரிசுத்த முள்ளதுமான அலங்காரமமைந்த கஃபாவைப் பிரதக்ஷணஞ் செய்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்து அஸ்ஹாபிகளும் பிரதக்ஷணஞ் செய்தார்கள். இவர்கள் அமெரிக்கையோடு மெள்ள மெள்ள வலம் வருவதை அங்கே கூடி நின்று பார்க்க வந்த குறைஷிக் காபிர்கள் பார்த்து அதைப்பற்றிப் பரிகாசமாகத் தங்களுக்குள்ளே கீழ்வருமாறு பேசிக் கொண்டார்கள்:—

"இதோ பார்த்தீர்களா? இந்தக் கஃபாவை வலம் வருகிறவர்களில் பெரும்பாலர் நமது மக்கத்தார்களே. அவர்களெல்லாரும் தங்கள் சுயநகரமாகிய இவ்வூரிலிருக்கும்போது பருத்து, பலங் கொண்டு, மதயானைகளைப்போலப் பராக்கிரம முற்றிருந்தார்களல்லவா? அவர்கள் இங்கிருந்து மதீனாவுக்குப் போனபின், அங்குள்ள

சுரநோயாலும், கொடிய குளிராலும் பீடிக்கப்பட்டு, உடலொடுங்கி பலங் குன்றிப்போனார்கள். அதனாலேதான் நடக்கக்கூட அவர்களுக்குத் திறனில்லை. அங்கே பாருங்கள்! அடிமேலடிவைத்து வலம் வருகிறார்கள்!" என பேசிக்கொண்டது நபிநாயகம் (ஸல்) அவர்கள் செவிகளில் விழுந்தது. விழுந்த மாத்திரத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை விளித்து, விரைவாகப் பிரதக்ஷணஞ் செய்யுங்களென்று கட்டளை பண்ணினார்கள். உடனே அஸ்ஹாபிக ளெல்லாரும் பகைவர் திடுக்கிடத் தக்க விதமாய் விரைந்து வலம் வந்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "இன்று தொட்டு இக்கஃபாவைப் பிரதக்ஷணஞ் செய்யும் நம்மார்க்கத்தா ரெல்லாரும், விரைவாகப் பிரதக்ஷணஞ் செய்யக்கடவது" என ஆக்ஞை செய்தார்கள். (அன்று தொட்டு என்றும் அப்படியே நிகழ்கின்றது.)

சிறந்த கஃபாவைப் பிரதக்ஷணஞ்செய்து முடித்து, மற்றப்படி செய்ய வேண்டுமான உமுறாக்குரிய சடங்குகளையும் செய்து நிறைவேற்றி விட்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு மக்கமாநகரத்திற்குள் மூன்று தினம் வரையும் இருந்தார்கள். நான்காம் நாட்காலையில் குறைஷிக்காபிர்களில் தலைவர்களாயுள்ள சிலர் வந்து, அலி (றலி) அவர்களை நோக்கி "நீங்கள் எழுதிக்கொடுத்த உடன்படிக்கைப் பிரகாரம் நடத்துங்கள்" என்றார்கள். உடனே அலி (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து "யாறஸுலல்லாஹ்! நாம் மக்கிகளுக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கையின் நிபந்தனைப்பிரகாரம் மூன்றிரவும், மூன்று பகலும் கழிந்தன. காபிர்களும் வந்து எச்சரித்து விட்டார்கள். நாம் எழுத்தின்படியே நடந்து கொள்ளவேண்டுமல்லவா?" என்றார்கள். இதைக்கேட்ட நபிநாயகம் (ஸல்) அவர்கள் உடனே சேனையெழும் படி கட்டளை பண்ணினார்கள். கட்டளை பிறந்த போதே அஸ்ஹாபிகளெல்லாரும் புறப்பட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் மக்கமா நகரத்திலிருந்து மதீனமாநகரத்திற்கு யாத்திரையானபோது, நபிநாயகம் (ஸல்) அவர்களுடைய பிதாவின் சகோதரராகிய ஹம்ஸா (றலி) அவர்களின் புத்திரியாகிய ஒரு சிறு பிள்ளை அழுது கொண்டு வீதிவழியே வந்தது. அனைவரும் மேற்படி பிள்ளையை அலி

(றலி) அவர்கள் கண்டு, அந்த பிள்ளை தங்களுக்குப் பிதாவின்சகோதாருடைய பிள்ளையாகையால், தாங்கள் எதிர்போய்த்தூக்கிக் கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டு, வந்து பிராணநாயகியாராகிய பாத்திமா (றலி) அவர்கள் கையில் கொடுத்தார்கள். மேற்படி பிள்ளையைஅலி (றலி) அவர்கள் தூக்கிக்கொண்டு போய் மனைவி வசம் கொடுத்ததை அவர்களின் தமையனாராகிய ஜகுபறு (றலி) அவர்கள் கண்டு அடுத்து வந்து, "இந்தப் பிள்ளைக்குச் சொந்தமான பாத்தியம் நம்மிருவருக்கும் ஒத்தபடியாயிருந்தாலும், நான் சற்றதிகமான பாத்தியத்தையுடையவனா யிருக்கிறேன். அதாவது:- இந்தப் பிள்ளையை யீன்ற மாதாவின் சகோதரியை நான் விவாகஞ் செய்திருக்கின்றேன். ஆகையால், அதை போஷிக்கும் பாத்தியம் எனக்குத்தான் உண்டு. ஆனபடியால், என் வசம் தந்திடவேண்டும்" என்றார்கள். இவ்விருவருக்கிடையில் ஜயிது (றலி) வந்து "இந்தப் பிள்ளை என்னுடன் பிறந்த சகோதரிபெற்ற பிள்ளையாகையால் இதை நானே வளர்க்கப் பாத்தியஸ்தன்; என்னிடம் கொடுத்து விடுங்கள்" என்றார். ஆக இம்மூவருக்கு மிடையில் தர்க்க முண்டாயிற்று மூவரும் தர்க்கமிட்டுகொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து முறையிட்டார்கள்.

நடுநிலைபிறழாத நபிநாயகம் (ஸல்) அவர்கள் இம்மூவர் விவகாரத்தையும் கேட்டு, ஆராய்ந்து தகுந்த தீர்மானஞ்செய்தார்கள். அந்தத் தீர்மானம் இது :—"ஒரு பிள்ளையை அதன் தாய் இறந்து போனால், அத்தாயின் சகோதரியிருக்கும் பக்ஷத்தில் அந்தச் சகோதரியே போஷிக்கவேண்டும்". இந்தத்தீர்ப்பின் பிரகாரம் மேற்படி ஜகுபறு (றலி) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த பிள்ளை ஜகுபறு (றலி) அவர்கள் வசஞ்சேர்க்கப்பட்டதால், அலி (றலி) அவர்களும், பாத்திமா (றலி) அவர்களும், அதிகமான சஞ்சலத்தில் மூழ்கினார்கள். அதைக்கண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விருவருக்கும் தக்க உபதேசங்களைச் சொல்லி அவர்கள் மனதைத் தேற்றினார்கள்.

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் புடைசூழ மக்காமா நகரத்தைவிட்டு வெளிப்பட்டு, அதிக அலங்காரத்தோடும் ஆனந்தத்தோடும் நடந்து, வரும்போது பாளையமிறங்கியிருந்த சரீபு என்னும் தலத்தில் வந்து கூடாரங்களிட்டுத் தங்கினார்கள்.

வரும்போது அந்த சரீபில் தங்கியிருக்கும் வேளையில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் மைமூன் (றலி) அவர்களை விவாகஞ் செய்து கொண்டார் களல்லவா? அப்போது இகுறாம் கட்டியிருந்தபடியால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி பிராட்டியாரோடு தேக சம்பந்தப்படாம லிருந்தார்கள். இப்போது உமுறு நிறைவேறி மீண்டும் அந்தத் தானத்திலேயே வந்திறங்கினவுடன் அந்தப் பெருமாட்டியோடு கூடிச் சுகமனுபவித்தார்கள்.

அன்றையத்தினம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சல்மான்பாரிஸி (றலி) வையழைத்து "உம்மிடத்தில் ஈத்தங்கனிகள் உண்டாயிருந்தால் கொண்டுவாரும்" என்று கட்டளை பண்ணினார்கள். அவர் உடனே தமது சோளனாவிலிருந்த ஈத்தங்கனி அத்தனையையும் எடுத்துக் கொண்டுபோய் நபிநாயகம் (ஸல்) அவர்கள் முகதாவில் வைத்தார். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் வலது கையால் அந்தப்பழங்களில் ஒரு பிடியை அள்ளி, ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, தங்கள் தோழர்களாகிய அஸ்ஹாபிகளனைவரையும் அந்த சரீபில் குடியிருக்கும் முஸ்லீமானவர்களையும் அழைப்பித்து விருந்து கொடுத்தார்கள். மேற்படி ஒருபிடி ஈத்தங்கனியையும் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஜனங்கள் தின்றார்கள். அத்தனைபேர் புசித்தும் பாத்திரத்தில் வைத்த ஒரு பிடிக்கனியில் அணுவளவும் குறையவேயில்லை. அதைக்கண்டு எல்லாரும் ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை மிகவியந்து துதித்தார்கள். பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஸல்மான் (றலி) வை நோக்கி "நீர் கொடுத்த ஈத்தங்கனி பாத்திரத்தில் வைத்தபடியே யிருக்கின்றது; எடுத்துக்கொள்ளும்" என்றார்கள். உடனே அவர் மேற்படி அற்புதம் விளங்கும் கனியை யெடுத்து, ஒரு மரப்பெட்டியிலிட்டுக் கெட்டி பத்திரமாக வைத்துக் கொண்டார்.

[நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருக்கரம் பட்ட மேற்படி ஒரு பிடி ஈத்தங்கனியையும், ஸல்மான் பாரிஸி (றலி) அவர் குடும்பமும் முப்பது வருஷம் வரையும் புசித்து வந்தார்கள். அத்தனை வருஷம் புசித்தும் அது சிறிதும் குறையாமல் அப்படியே யிருந்தது. முப்பது வருஷங்களுக்குப்பின், மூன்றாங் கலீபாவாகிய உதுமான் (றலி) அவர்கள் காலமானதால், அக்காலத்தில் உதுமான் (றலி) அவர்கள் கொல்லப்பட்டபோது, அக்கலகத்தில் மேற்படி ஈத்தங்கனி

யைத் திருடர்கள் கவர்ந்துகொண்டு போய் விட்டார்கள். அந்த கனி அற்புதகரமாய் ஸல்மான் பாரிஸி (றலி) யின்மனையிலிருந்தது யாவருக்குந் தெரியும். பின் களவு போனது பிரஸ்தாபமானபோது "ஆ! ஆ!! அக்காரத்தங்கனி களவுபோகாமலிருந்தால், ஸல்மான்பாரிஸி யுடைய சந்ததிகள் தோறும் வமிச பரம்பரையா யிருந்து கொண்டே வரும்; யுகமுடியும் வரையும் அழியாதிருக்கும்" என்று கேட்டவர்களெல்லாம் சொன்னார்கள்.]

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி சரீபு என்னும் தலத்திலிருந்து புறப்பட்டு, அஸ்ஹாபிகள் புடைசூழநடந்து, மதீனமா நகரத்தை யடுத்து ஒரு வனத்தில் தங்கினார்கள். இந்தச் சமாசாரத்தை யறிந்த மதீனமா நகரத்தா ரெல்லாரும் ஒருங்குதிரண்டு, வீதிகளை யெல்லாம் சிங்காரித்து, எதிர்கொண்டு அழைத்தார்கள். பின் நபிநாயகம் (ஸல்) அவர்களும், புதிய பிராட்டியாராகிய மைமூன் (றலி) யும் அஸ்ஹாபிகளும் மதீனமா நகரஞ் சேர்ந்து, தங்கள் தங்கள் மாளிகைகளில் சென்று களிகூர்ந்திருந்தார்கள்.

102-வது அத்தியாயம்.

மக்கமா நகரம் பிடிப்பட்டது.

விருத்தம்.

கறங்குமுவரி நெடும்புடவி கனமுழுது மொருகுடைக்கீழ்
உறங்குமாறு னியோம்பு மும்பர் பரவுநபிபெருமான்
அறங்கொள்சேனை பொரநடத்தி யடைந்தகாலை யடிப்பட்டுப்
பிறங்கு மக்கமாநகரம் பிடிப்பட்ட தனைக்கூறு துமால்

வசனம்.

சர்வரே ஆலம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமாநகரத்திலிருந்து செங்கோல் நடத்தி, தீன் என்னும் பரிசுத்த மார்க்கத்தை உலகமெங்கும் படர்ந்தோங்க ஆளுகை செய்யுங் காலத்தில் ஹிஜ்றத்து எட்டாம் ஆண்டு பிறந்தது. அவ்வாண்டில் நபிநாயகம் (ஸல்) அவர்கள், இனி நாம் மக்கமா நகரத்தின்மேல் படையெடுத்துச் சென்று குறைஷிக் காபிர்களோடு பயங்கரமான யுத்தஞ்செய்து, அந்

நகரத்தைக் கைப்பற்றி, அடிக்கீழ்ப்படுத்த வேண்டுமென்னும் விருப்பங் கொண்டார்கள். இவ்விருப்பம் வந்தபோது, மேற்படி ஹிஜ்றத் எட்டாம் ஆண்டின் றமலான் மாதத்துப் பத்தாந் திகதியன்று, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அருகர்களை யழைத்து, நாம் மக்காவின் மீது படை நடத்தி, அதைக் கைப்பற்றவேண்டும். ஆனதால், நமது அஸ்ஹாபிகளெல்லாரும் யுத்தத்திற்கு எத்தனமாய்ப் புறப்படும்படி பறை சாற்றுங்களென்று கட்டளை பண்ணினார்கள். இக்கட்டளை பிறந்தபோதே நகர முழுதிலும் பறைசாற்றப்பட்டது. மேற்படி பறைமுழக்கம் கேட்ட மாத்திரத்தில் யுத்தவீரர்களாகிய அஸ்ஹாபிகளெல்லாரும் போர்க் கோலம் புனைந்து, தங்கள் தங்கள் மாளிகையை விட்டுப் புறப்பட்டு தேவாலயத்தில் வந்து கூடினார்கள். தேவாலயமும், அதன் விசாலமான வீதியும் இன்னும் அடுத்துள்ள பாரிய வீதிகளும் படைவீரர்களால் நிரம்பப்பட்டிருந்தன. பதினாயிரம் குதிரை வீரர்களும், அநேக காலாட்களுந் திரண்டு மொய்த்தார்கள். பின் அருகர்களாகிய அபூபக்கர் (றலி) அவர்களும், உமறு (றலி) அவர்களும், உதுமான் (றலி) அவர்களும், அலி (றலி) அவர்களும் யுத்தசன்னத்தர்களாய் வந்தார்கள்.

பதினாயிரம் துரகவீரர்களும், அநேக காலாட்படைவீரர்களும் ரண சிங்கங்களைப்போல யுத்தப்பிரியர்களாய்த் திரண்டுவந்து கூடினபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனா வெள்ளத்தைக் கண்டு களிகூர்ந்து, மாளிகை சென்று, பிராட்டி மார்களில் உடன்வரும் முறைமையுடையவர்களைச் சேடியர்களோடு புறப்படக் கட்டளை பண்ணிவிட்டு, பிரகாசம்விளங்கும் ஒப்பற்ற யுத்தாடையுடுத்தி, அநேக ஆயிரம் சூரியன்கள் ஒன்றாய் வந்திருந்து ஜொலித்தாற் போலச் சிறந்த சிரசில் பாகைதரித்து, அல்லாஹு தஆலாவின் "ஜலால்" "ஜமால்" என்னும் இரு கரங்களும் ஆர தழுவினதுபோல மேலங்கியிட்டு, இந்திரசாபத்தை இடையிலமைத்ததுபோல இடைக்கச்சிறுக்கி, இரு சந்திரன்கள் இருபாதங்களிலும் சேவைசெய்ய வந்திருப்பதுபோலப் பாதரட்சை களணிந்து, அல்லாஹு தஆலாவின் கிருபைவழிந்து மார்பில் ஒழுகுவதுபோலக் குங்குமமாலைபுனைந்து, வில்லையும் அம்றாத் தூணியையும் இடது புஜத்திற் சேர்த்துக் கேடகமுந்தரித்து,

111360

மத்திரவாளை உறையோடு இடையில் ஞாலவிட்டு, வலது கையில் வேலாயுத மேந்தி ஒரு ஆண்சிங்கம போல மாளிகையிலிருந்து புறப் பட்டுத் தேவாலயத்திற்கு வந்தார்கள். அப்போது தேவாலயம் அலங்காரமான தீபங்களாலும், நறுமணமிக்க தூபங்களாலும் சுவர்க்கத்தை யொத்து விளங்கிற்று.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் போர்க்கோலத்தோடு தேவால யத்தில் வந்து மிம்பறின் கீழ் வீற்றிருந்து, மதீனமா நகரத்தில் நடக்க வேண்டிய கருமங்களையெல்லாம் இன்ன இன்னபடி யென்று திட்டஞ் செய்துவிட்டு தாங்கள் மீண்டு வருமளவும் மதீனமா நகரத்தை ஆளுகை செய்வதற்குத் தங்கள் பிரதிநிதியாக உர்முகுல் தூம் (றலி) அவர்களை நியமித்தார்கள். பிற்பாடு, அஸ்ஹாபி களாகிய ரணவீரர்களில் ஒவ்வொரு கூட்டத்தை ஒவ்வொரு ராணுவ மாகவும், அவ்வக் கூட்டத்துத் தலைவர்களையே அதன் அதன் உப சேனாதிபதிகளாகவும், அவ்வெல்லா ராணுவங்களுக்கும் கலீபாக் கள் நால்வரையும் பிரதமசேனாதிபதிகளாகவும் நியமனஞ் செய்து, தாங்களே சேனை முழுவதுக்கும் சிரேஷ்ட சேனாதிபதியானார்கள். உபசேனாதிபதிகள் ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு துவஜம் கொடுக்கப்பட்டன. பிரதம சேனாதிபதிகளாகிய கலீபாக்கள் நால் வருக்கும் நான்கு விஜய துவஜங்கள் அருளப்பட்டன. உக்காபு என்னும் வெற்றிக்கொடி தங்கள் முன் பிடிக்கப்பட்டது.

ராணுவ ஏற்பாடுகள் அனைத்தும் செய்து தீர்ந்தபின் நபிநாய கம் (ஸல்) அவர்கள் மிம்பறிலேறி நின்று, அஸ்ஹாபிகளுக்கு உப தேசஞ் செய்து பாத்திஹா ஓதி, விஜயசித்திக்காக அல்லாஹு தஆலா இடம் மன்றாடி துஆ கேட்டார்கள். அப்போது எல்லார் வாக்கிலும் ஆமீன் முழங்கிற்று. ரணபேரிகை மும்முரமா யொலித்தது. மலக்குகள் ஆசிகூறினார்கள். விருதுகள் நெருங்கப் பிடிக்கப்பட்டன. பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தேவால யத்தை விட்டு வெளி வந்து தங்களின் அலங்காரமான துரகத்தில் பிஸ்மில் சொல்லி ஏறினார்கள். அருகர் நால்வரும் குதிரைகளி லேறி இருமருங்கிலும் நெருங்கினார்கள். மற்றக்குதிரை வீரர் களெல்லாரும் தங்கள் தங்கள் குதிரைகளிலேறினார்கள்.

சேனைகள் தயாரானபின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேகக் குடை நிழலில் வெற்றித் துவஜம் முன்செல்ல நடந்தார்கள். சேனா

வெள்ளமும் நடந்தது. அலங்காரமான தங்கள் சேனையோடு மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, மக்கமா நகரத்தை நோக்கிப் பயிரங்கமார்க்கத்தைப் பிடித்துச் சென்றார்கள். நபிநாய கம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளனைவரும் உபவாசவிரதம் நோற்றிருந்தபடியே சென்றார்கள். படைமுரசு கடல்போலொலிக்க, விருதுகளாகிய குடைகள், கொடிகள், ஆலவட்டங்கள், வெண்சா மரைகளெல்லாம் வனம் போலத் தோற்ற, புழுதிப்படலம் எழும்பி ஆகாயத்தை மறைக்க, மிக்க ஆரவாரத்தோடு நபிநாயகம் (ஸல்) அவர்களின் தளம் நடந்தது. வழியில் வரும் மலைகளையும், வனங் களையும், வனாந்தரங்களையும், பாடிகளையும், அருவிகளையும், கர்வனங் களையும் கடந்து சென்றார்கள். இவ்வாறு நடந்து மதீனாவின் எல்லையை நீங்கி, மக்காவின் எல்லையை யடுத்தார்கள். அவ்வெல்லை யிலுள்ள சகுவான் என்னும் தலம் எதிர்ப்பட்டது. மேற்படி சகு வான் என்னும் தலத்திலடைந்தபோது, நபிநாயகம் (ஸல்) அவர் கள் தங்கள் தளத்தை அங்கே பாளையமிறங்கக் கட்டளை பண்ணினார் கள். உடனே அஸ்ஹாபிகளெல்லாரும் கூடாரங்களிட்டு, இலாயங் களமைத்து, யுத்த தளபாடங்களும், தீன்சாமான்களும் வைக்கத் தக்க பாரிய கூடாரங்களுமிட்டு, அதிக உல்லாசத்தோடு தங்கினார் கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும் தங்களுக்கிட்ட அலங்காரமும், விசாலமுமான கூடாரத்தில் சம்பிரமத்துடன் வீற்றிருந்தார்கள்.

அது இப்படி யிருக்க, நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய அப்பாஸு (றலி) அவர்கள் முன் இஸ்லாமாய், ஜம் ஜம் என்னும் நீரூற்றுக்கு அதிகாரியாக மக்கமா நகரத்தி லிருந்தார் களல்லவா? அவர்கள் அங்கிருந்து புலைனு முதலான தங்கள் குமா ரர்களையும் அழைத்துக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களைத் தரிசிப்பதற்காக மதீனமா நகரத்தை நோக்கி வந்தார்கள். வரும் வழியில் சகுவானில் பெருஞ் சேனை யொன்று இறங்கியிருக்க கண்டு அறிய நெருக்கினவுடன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் வந்திருப்ப தாகத் தெரிந்து ஆனந்தமடைந்து, பாளையத்தில் நுழைந்து, நபி நாயகமவர்கள் சமூகத்தில் வந்து ஸலாம் சொன்னார்கள். தங்கள் சிறிய தந்தையைக் கண்டபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமாய், மரியாதையோடு உபசரித்து இருக்கச் செய்தார்கள். அப்பாஸு (றலி) அவர்கள் அருகிலிருந்து கொண்டு, நபிநாயகம்

(ஸல்) அவர்களை நோக்கி "மகனே! நான் மக்காவிலிருந்து மதீனாவுக்கு அடுத்தடுத்து வந்து, என்மனக் குறையை உமது சமூகத்தில் முறையிட்டுக்கொள்ளுதல் அரிதாய் விட்டாது" என்று சஞ்சலத்தோடு பகர்ந்தார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "தந்தையே! ஆம். தாங்கள் உண்மை சொன்னீர்கள்" எனக் கூறி, அவர்களின் மனக்குறையை ஆற்றினார்கள். அன்று முழுவதும் அங்கிருந்து, அடுத்த நாட்காலையில் சேனை புறப்படும்படி நபிநாயகமவர்கள் கட்டளை யிட்டார்கள். உடனே சேனா வீரர்களனைவரும் புறப்பட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களும், அஸ்ஹாபிகளும் சகுவானிலிருந்து புறப்பட்டு மக்கமா நகரத்தை நோக்கி நடந்தார்கள். நடந்து போகும்போது நபிநாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாகிய ஹாரிது உடைய குமாரர் அபாஸுபியான் என்பவரும் அவருடைய குமாரராகிய ஜகுபறு என்னும் சிறுவரும், நபிநாயகம் அவர்களின் பிதாவுடன் பிறந்த சகோதரியாகிய மாமிமகன் அப்துல்லாவுமாகிய இம்மூவரும் காபிர்களாகவே மக்கமா நகரத்திலிருந்தவர்களாகையால், அப்போது நல்லெண்ணங் கொண்டு மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு மதீனாவை நாடிவந்தார்கள். வருபவர்கள் பாதையில் நபிநாயகம் (ஸல்) அவர்களைக் கண்டுகொண்டார்கள். இம்மூவரும் நபிநாயகமவர்களைக் கண்டு கொண்டு, முகதாவில் வந்து நின்றார்கள். அப்போது நபிநாயகமவர்கள் அம்மூவரையும் திரும்பியும் பாராமல் பாராமுகமா யிருந்து விட்டார்கள். இவர்கள் எதிர் வந்து நிற்பதையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாராமுகமாயிருப்பதையும் உம்முசல்மா (றலி) அவர்கள் கண்டு, நபிநாயகமவர்களை நோக்கி "யாறஸூலல்லா! இம்மூவரையும் தாங்கள் பார்க்கவில்லையா? அவர் தங்கள் பெரிய தந்தையாகிய ஹாரிது உடைய குமாரர் அபாஸுபியானல்லவா? அந்தச் சிறுபிள்ளை அவர் மகனல்லவா? மற்றவரோ தங்கள் மாமிமகன் அப்துல்லா அல்லவா?" என்றார்கள். இச்சொல்லைக் கேட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் உம்மு சல்மா (றலி)யை நோக்கி "ஆம்; அவர்கள் தான். ஆனால், நமக்கு இவர்களைக் கொண்டு ஒரு உதவியு மில்லை. முன் நாம் மக்கமா நகரத்தி லிருக்கும் போது, நமது பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு, நம்மை மனம் புழுங்க வசையும் வம்பும் பேசினவர்

களல்லவா? இவர்கள் அதைப் பற்றித்தான் இவர்களைத் திரும்பியும் நாம்பார்க்கவில்லை" என்றார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் இப்படிச் சொன்னதை அபாஸுபியான் கேட்டு, நபி நாயகமவர்களை நோக்கி "தேவரீர் தமியேன் மீது திருக்கண் சாத்தி யருளாவிட்டால், இதோ என் மைந்தனைக் கையிற் பிடித்துக் கொண்டு, மலைமேலேறி விழுந்து மாண்டு போகிறேன்" எனச் சஞ்சலத்தோடு சொன்னார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் மனதிரங்கி அவரை நோக்கி "ஆனால், கலிமா சொல்லும்" என்றார்கள். உடனே அபாஸுபியா னிபுனு ஹாரிது கலிமா சொல்லி இஸ்லாமானார். அப்போதே நபி நாயகம் (ஸல்) அவர்களின் மாமி மகனாகிய மைத்துனர் அப்துல்லாவும் கலிமாவைச் சொல்லி இஸ்லாமானார்.

பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் சேனா சமுத்திரத்தோடு நடந்து கதீது என்னும் தலத்தில் வந்த பின் எல்லாரும் உபவாச விரதமாகிய நோன்பை விட்டு விட்டு நடந்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்களும் அஸ்ஹாபிகளும் மேற்படி நோன்பை விட்டு நடந்து, அகுறுன் என்னும் தலத்திற் சென்று பாளைய மிறங்கினார்கள். பந்தி பந்தியாகக் கூடாரங்களும், நிரை நிரையாகக் குதிரை லாயங்களும், அணியணியாக வாகனச் சாலைகளும், ஒழுங்கொழுங்காகப் பண்ட சாலைகளும், அங்கங்கே பாகசாலைகளும் அமைத்து, அதிக சம்பிரமத்தோடு தங்கினார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் உன்னதமான சிறந்த கூடாரத்தில் தோழர்களில் பிரதானமானவர்கள் புடைசூழ வீற்றிருந்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மீது படையெடுத்து வந்திருப்பது மக்கத்தாருக்குத் தெரியாது; அவர்கள் சமாசாரமொன்றும் நபி நாயகமவர்களுக்கு வரவில்லை. இவ்வாறிருக்கையில் சூரியன் அஸ்தமித்தது.

பொழுது பட்டு எங்கும் காரிருட் படலம் மூடிக் கொண்டது. பாசறைக் காக்கச் சில வீரர்களை நியமித்து விட்டு, அஸ்ஹாபிகளெல்லாரும் கூடாரங்களி லிருந்தார்கள். இப்படி யிருக்கையில், நபி நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய அப்பாஸ் (றலி) அவர்கள் கூடாரத்தி லிருந்து கொண்டு, அடியில் வருமாறு சிந்திக்கத் தொடங்கினார்கள் :—

"நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் தோழர்களாகிய அஸ்ஹாபிகளுக்கும் குறைஷிகள் பேலுண்டாயுள்ள சீற்றம் அணுப்பிரமாணமாவது தணியவில்லை. இப்போதோ அவர்களை அதஞ் செய்யக் கருதிப் பெருஞ் சேனை யொன்றைத் திரட்டிக் கொண்டு வந்து, இங்கே தாணையமிட்டிருக்கின்றார்கள். நாளை அதிகாலையில் இங்கிருந்து புறப்பட்டுப் போய் மக்காவை முற்றுகை யிட்டுக் கொள்ளுவார்கள். அப்போது நம குடும்பத்தாராகிய குறைஷிக ளெல்லாரும் அவமேமாண்டு போவது மல்லாமல், பெண்டு பிள்ளைகளெல்லாம் அவமான மடைந்து நிலை குலைந்து திரவியங்களும் நாசமடையும். ஆகையால், நம இனத்தாராகிய அந்த குறைஷிகளுக்கு இவ்வித நாசம்வர நாம் இடம் கொடுத்திருக்கக் கூடாது. நாமே அவர்கள் கொண்டிருக்கும் அவிவேகத்தை நிவர்த்தி செய்து கூட்டி வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் பாதத்தின் கீழ்கிடத்தாட்டி, அவர்களை இரக்ஷிக்கும்படி பிரயாசை யெடுத்துக் காப்பாற்ற வேண்டும். இக்காரியத்தை நாம் முந்தியே செய்து முடிக்க வேண்டியது. ஆனபடியால், இவ்விருளிலேயே நாம் போய் வழியில் நின்று கொண்டு, மக்கமா நகரத்திற்குப் போகும் ஆட்களைக் கண்டு இச்சங்கதியை குறைஷிகளுக்குச் சொல்லி யனுப்பலாம்."

இவ்வாறு சிந்தித்துத் தீர்மானஞ் செய்து கொண்டு, கூடாரத்தை விட்டெழுந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களேறும் குதிரையி லேறிக் கொண்டு பாளையத்தைக் கடந்து, அங்கே அடுத்திருக்கும் அருக்கு என்னும் தலம் வரையும் வந்தார்கள்.

இது இப்படி யிருக்க, முன் குஜாயத்துக் கூட்டத்தாரில் ஒருவரை குறைஷிகள் கொலை செய்து விட்ட படியால் அக்கூட்டத்தார்கள் ஏதும் உபாயஞ் சூழ்ந்து கலகம் விளைவிப்பார்களென்னும் பேரச்சம் குறைஷிகள் நெஞ்சை விட்டொழியவில்லை. அதனால், குறைஷிகளில் பிரதானமான வீரர்களில் சிலர், இராக் காலங்களில் மக்கமா நகரத்திற்கு வெளிப்புறம் வந்து நின்று வேவு பார்த்து வருவது அவர்களுக்கு அன்று தொட்டு வழமையா யிருந்தது. அப்படியே அன்றிரவும் கறுபு உடைய குமாரன் அபாஸுபியானும் குசாமுடைய குமாரன் ஹக்கீமும், உறுக்காவுடைய குமாரன் புதையிலும் அசுவாரூடர்களாய் மக்கமா நகரத்தை விட்டு வெளிப்

பட்டு, அப்பாஸ் (றலி) அவர்கள் வரும் அந்த அருக்கி என்னும் தலம் வரையும் வந்தார்கள். அவர்கள் வரும் போது நபி நாயகம் (ஸல்) அவர்களின் பாசறை வெளிச்சம் அவர்களுக்குத் தெரிந்தது. அப்போது அபாஸுபியான் மற்றிருவரையும் பார்த்து "அதோ தெரியும் வெளிச்சம் மகா பெரிய வெளிச்சமாகக் காணப்படுகின்றதே, அதென்ன! இவ்வெளிச்சத்தைப் போல் நான் என்றுங் கண்டதில்லையே!!" என்றான். அதற்கு புதையில் என்பவன், "இவ்வெளிச்சமானது நம்மீது பழி சாதிக்கக் கருத்துற்றிருக்கும் குஜாயத்துக் கூட்டத்தார்கள் துர்ஆலோசனையோடு வந்து வளர்த்திருக்கும் பொறித்தீ வெளிச்சமே யன்றிவேறல்ல" என்றான். இருவரும் இவ்வாறு பேசிக் கொண்ட சத்தம் அப்பாஸ் (றலி) அவர்கள் காதில் விழுந்தது. விழுந்த மாத்திரத்தில் அம்மூவரையும் இன்னார் இன்னாரென அப்பாஸ் (றலி) அவர்கள் அறிந்து கொண்டு, குரலடக்கி "அபாஸுபியான்!" என விளித்தார்கள். அப்பாஸ் (றலி) அவர்கள் விளித்த சிறுகுரல் அபாஸுபியானுடைய காதில் விழுந்த போது, தன்னை விளித்தவர் இன்னாரென அறிந்து கொண்டு, விரைந்து அடுத்து வந்து "கனம் பொருந்திய அப்பாஸே! இந்த அர்த்தசாமத்தில் தாங்கள் தன்னந்தனியே இவ்வளவு தூரம் வரவேண்டிய மூகாந்திர மென்ன?" எனக் கேட்டான். அதற்கு அப்பாஸ் (றலி) அவர்கள் "அபாஸுபியானே! நபி நாயகம் (ஸல்) அவர்கள் பதினாயிரம் குதிரை வீரர்களும், அநேக பதாதிகளு மடங்கிய பெருஞ் சேனையோடு மக்கமா நகரத்தைப் பிடிக்க நாடி இன்ன தானத்தில் வந்து தாணையமிட்டிருக்கின்றார்கள். சத்தியமாக இதை உமக்குத் தெரிவிக்கவேண்டியே வருகிறேன்" என்றார்கள். அப்பாஸ் (றலி) அவர்கள் சொன்ன இந்தச் சமாசாரத்தைக் கேட்டபோதே அபாஸுபியான் பெருந் திகில்கொண்டு, அப்பாசு (றலி) அவர்களை நோக்கி "கனவானே! இந்த அவிவேகியாகிய தமியேன் நடந்து கொள்ளத்தக்கபுத்தி இனி என்ன? தாங்கள் கட்டளை யிட்டு இரக்ஷியுங்கள்" என்றான். அதற்கு அப்பாசு (றலி) அவர்கள் "அதோ! பாவி!! உன்னைக் கண்டக்ஷணமே இரண்டாய் பிளக்கெறியும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுக்குக்கட்டளை செய்திருக்கின்றார்களே; அவர்கள் உன்னைக்காண்பார்களானால், உடனே கொல்லுவார்களே; நல்லிருக்கட்டும், இங்கேவா" என்று சொல்லி, அபாஸுபியானைத்

தங்கள் குதிரையில் தங்களுக்குப்பின் இருத்திக்கொண்டு, அங்கிருந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் பாசறையை நோக்கித் திரும்பினார்கள். அபாஸுஃபியானோடு வந்த நக்கீமும், புதைலும் அப்படியே மக்காமாநகரத்திற்குத் திரும்பிப்போய் விட்டார்கள்.

அப்பால் (றலி) அவர்கள் அபாஸுஃபியானைத் தங்களுக்குப் பின் குதிரைமேல் இருத்திக்கொண்டு பாசறைக்குள் வந்தார்கள். அவர்கள் ஏறியிருக்கும் குதிரை திடுதிடென்று விரைவாய் நடந்து வந்தது. குதிரைவரும் ஓசை அஸ்ஹாபிகள் செவிகளில் விழுந்த மாத்திரத்தில், இதென்ன ஓசையென அனைவரும் கூடாரங்களை விட்டு வெளியில்வந்து பார்த்தார்கள். பார்த்தபோது, அப்பாஸ் (றலி) அவர்களும், அபாஸுஃபியானும் ஒரேகுதிரைமீது ஏறியிருப்பதைக்கண்டு, இவர்கள்நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாயிற்றே; குதிரையோ நபிநாயகம் (ஸல்) அவர்களேறும் குதிரையாயிற்றே; நாம் எவ்வாறு தடுத்து அபாஸுஃபியானை சங்கரிக்கக் கூடுமென்று ஆலோசித்துக்கொண்டு, ஒருவரும் குதிரையைத் தடுக்காமல் நின்றுவிட்டார்கள். பின் அக்குதிரை உமர் (றலி) அவர்களின் கூடாரத்துக்கு நெருங்கவந்தபோது, உமர் (றலி) அவர்கள், இந்நேரத்தில் குதிரை செலுத்தி வருபவர் யாரென்று வெளியில்வந்து பார்த்தார்கள். பார்த்தவுடன் அப்பாஸ் (றலி) அவர்களோடு அபாஸுஃபியான் இருக்கக்கண்டு சினமூண்டு, அல்லாஹு தஆலாவுக்கும், நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும், விரோதியாகிய அபாஸுஃபியான், யாதொரு உடன்படிக்கையுமின்றி நம்மிடத்தில்வந்து நன்றாய்ச் சிக்குண்டானென்று வாளைக் கையில் பிடித்துக்கொண்டு பின்தொடர்ந்தார்கள். அப்போது அப்பாஸ் (றலி) அவர்கள் உமர் (றலி)அவர்களை நெருங்கவொட்டாமல், தங்கள் குதிரையை விரைவாக நடத்திக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களிருக்கும் கூடாரத்தையடுத்து, அபாஸுஃபியானை இறங்குவித்து அழைத்துக்கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்தார்கள். அதற்குள் உமர் (றலி) அவர்களும் வந்துவிட்டார்கள். அபாஸுஃபியானை அழைத்துவந்த அப்பாஸ் (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் சம்பாஷிக்க வாய் திறக்குமுன், உமர் (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்)அவர்களைநோக்கி, "யாறஸூலல்லா! அல்லாஹுதஆலாவுக்கும் தேவரீருக்

கும் விரோதியாகிய இந்தச்சண்டாள அபாஸுஃபியானைக் கொல்லும்படி தமியேனுக்கு விடைகொடுங்கள்" எனக்கேட்டார்கள். அப்போது அப்பாஸ் (றலி) அவர்கள் அபாஸுஃபியானுடைய தலையைத் தங்கள் கைகளால் கட்டியணைத்துக் கொண்டு "என்னுடைய வார்த்தைப் பாட்டில், என்னுடைய அடைக்கலத்தில் இங்கே வந்திருக்கும் இந்த அபாஸுஃபியானுடைய காரியத்தில் வேறே ஒருவரும் யாதொன்றும் பேசக்கூடாது" என நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கிச் சொன்னார்கள். இப்படிச் சொல்லியும் உமர் (றலி) அவர்கள் சும்மா இருக்கவில்லை; "இவனைக்கொல்ல விடைகொடுங்கள்" என்று அடுத்தடுத்து நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். மறுபடியும் அப்பாசு (றலி) அவர்கள் உமர் (றலி) அவர்களைநோக்கி "உமறே! சற்றே பதறாதிருங்கள், இந்த அபாஸுஃபியான் எங்கள் பிதாமகனுடைய வமிசத்திலுள்ளவரானபடியாலேதான் எங்கள் உதிரக்கலப்பான சம்பந்தத்தைப் பற்றி இவருக்கு மன்றாடுகிறேன். வேறே அந்நியர்க்கு நான்மன்றாடவில்லை" என்றார்கள். அப்பாஸ் (றலி) அவர்கள் இவ்வாறுசொன்னபோது, அவர்களை உமர் (றலி) அவர்கள்நோக்கி "கனமிக்க அப்பாஸே! தாங்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குத் தந்தையானபடியால், தங்கள் அடைக்கலத்தில் வந்த இந்த அபாஸுஃபியான் இல்லாமலவது, என் பிதா இல்லாமலவதிலும் அதிக ஆனந்தத்தைத் தரும்" என்றார்கள்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்பாஸ் (றலி) அவர்களை நோக்கி "தந்தையே! தாங்கள் அபாஸுஃபியானைத் தங்கள் கூடாரத்துக்கு அழைத்துப்போய் வைத்திருந்து, சூரியோதயத்திற்கு முன் இங்கேகூட்டி வாருங்கள்" எனக் கூறினார்கள். உடனே அப்பாஸ் (றலி) அவர்கள் அபாஸுஃபியானை அழைத்துக்கொண்டு தங்கள் கூடாரத்திற்கு வந்து பசியாற்றி நித்திரை கொள்ளுவித்தார்கள்.

அன்றிரவுகழிந்து சூரியன் உதிக்குமுன் அதிகாலையில் அப்பாஸ் (றலி) அவர்கள் எழுந்து, அபாஸுஃபியானை அழைத்துக் கொண்டுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேவடியில் விட்டார்கள். அபாஸுஃபியானுடைய மகளார் உம்முஹபீபா (றலி) அவர்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் முந்தியே விவாகஞ்செய்திருந்தபடியா

படியால், தங்களுக்கு ஒருமுறை மாமனுமாகிய அபாஸுஃபியான் தங்கள் சமூகத்தில் அடைக்கலந்தேடி வந்தபோது நபி நாயகம் (ஸல்) அவர்கள் அகங் களிகூர்ந்து நோக்கி "நீர் இவ்வளவுதூரம் பகைசாதித்து, இந்நாள் பரியந்தம் ஈமான்கொண்டு இஸ்லாமாவதற்கு மனம் இசையாமல் இருந்த காரணமென்ன?" என்று விசாரித்தார்கள். அப்போது அபாஸுஃபியான் நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்து "யாறஸூலல்லாஹ்! தமியேன் என் பிதாமாதாக்கள் இருவரையும் தங்கள் திவ்விய சேவடிகளில் பலிதானஞ் செய்துவிட்டேன். ஆனால் ஏழை மதிகெட்டுப் பாவவழியில் நின்று செய்த குரோதங்களை யெல்லாம் மனசாரப் பொருத்திருந்த தங்கள் ஒப்பற்ற பொறுமையையும், இந்தத்தருவாயில் வெளியிற்காட்டும் தங்கள் பக்ஷத்தையும என்னவென்று சொல்லுவேன். ஆயினும், திவ்விய சந்நிதிக்கு ஒரு விண்ணப்பஞ் செய்கிறேன். அதாவது" என சொல்ல துடங்கினார்கள். மற்றவாக்கியங்களை அவர் தொடர்ச்சியாய்ச் சொல்லுமுன் அப்பாஸுஃ (றலி) அவர்கள் வாய்திறந்து "பாவி! உன் உயிரையுண்ணும் கூரியபட்டயங்கள் உன் தலைக்குமேல் அநந்தம் எழும்பி நிற்கின்றன. நீ காலகரணஞ் செய்து நிற்பது சரியல்ல; விரைந்து கலிமாவைச்சொல்" எனக் கடிந்து சொன்னார்கள். இதைக்கேட்ட அபாஸுஃபியான் வேறொன்றும் பேசாமல் மனம், வாக்கு, காயமென்னும் முப்பொறிகளுமொத்துக் கலிமாசொல்லி, முஸ்லிமானார்.

அபாஸுஃபியானிப்னுகறுபு (றலி) ஈமான்கொண்டு முஸ்லிமானபோது, அப்பாஸுஃ (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "மகனே! மக்கிகளுக்குச் சிரேஷ்டராகிய அபாஸுஃபியானுக்கு, இப்போது தாங்கள் விசேஷமகிமை யொன்றை அறிகுறியாகக் கொடுக்கவேண்டும்" என்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்குவந்து கூடிநிற்கும் அஸுஹாபிகளை நோக்கி "அஸுஹாபிகளே! மக்கமாநகரம் நம் கைவசமான போது, குறைஷிக் காபிர்களில் மகிமைபெற்ற கருபாவின் ஹறமென்னும் திவ்வியாவரணத்திற்குள் புகுந்து கொண்டவர்களையும், இந்த அபாஸுஃபியானுடைய மனைக்குள் பிரவேசித்து ஒளித்துக் கொண்டவர்களையும், அவரவர் வீடுகளில் பதுங்கிக் கதவை யடைத்துக்கொண்டவர்களையும் நீங்கள் தொடர்ந்து யாதொன்றும் செய்யாதிர்கள்" என

ஆக்ஞை செய்தார்கள். இவ்வாக்ஞை மற்ற அஸுஹாபிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

அதற்குப்பின் அன்றிரவு அபாஸுஃபியான் (றலி) கூட மக்கமா நகரத்திலிருந்து வந்து, பின் திரும்பிப்போன கக்கிம் புதையில் என்னும் இருவரும் அப்போது மீண்டுவந்து நபிநாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களைப் பணிந்து ஈமான் கொண்டு, முஸ்லிமானார்கள்.

பிறகு அபாஸுஃபியான் (றலி) தாம் மக்கமா நகரம் போக நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் விடைகேட்டார். அப்போது நபிநாயகமவர்கள் அப்பாஸுஃ (றலி) அவர்களை நோக்கி "தந்தையே! தாங்கள் அபாஸுஃபியானைக் கூட்டிச் சென்று பாதையில் நிறுத்திக் கொண்டு நமது சேனைப் பெருக்கத்தை அவருக்குக் காட்டுங்கள்" என்றார்கள். உடனே அப்பாஸுஃ (றலி) அவர்கள் அபாஸுஃபியான் (றலி)வை அழைத்துக் கொண்டுபோய், மக்கமா நகரத்தில் செல்லும் மார்க்கத்திலுள்ள ஒரு திடரின் மேல் ஏறி நின்றார்கள். அதன் பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனையை எழும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அங்கிருந்து சேனை புறப்பட்டது. அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிரதம சேனாதிபதிகளாகிய நால்வரையும் நோக்கி ஒவ்வொரு உபசேனாதிபதியின் கீழடங்கிய ஒவ்வொருராணுவத்தையும், ஒன்றன்பின் ஒன்றாய் நடத்துங்க ளென்றார்கள். அப்படியே நடத்தினார்கள்.

வெற்றித்துவஜ மொன்று முன்வர ஒருதளபதியோடு ஒரு கூட்டம் முந்தி வந்தது. அதை அபாஸுஃபியான் (றலி) கண்டு, அப்பாஸ் (றலி) அவர்களை நோக்கி "இக்கூட்டத்தார் யாவர்?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள், "இது சுலைமுக்கூட்டம்" எனவிடை பகர்ந்தார்கள். மற்றொரு கூட்டம் அப்படியே வரக்கண்டு "இதன் நாமமென்ன?" என்றார். "இதன் நாமம் மகினு" என அதற்கு அவர்கள் விடை கூறினார்கள். இப்படியே ஒவ்வொரு கூட்டம் வருந்தோறும் அபாஸுஃபியான் (றலி) கேட்ட கேள்விகளுக்கெல்லாம், அப்பாஸுஃ (றலி) அவர்கள் விடை கூறித் தெரிவித்துக் கொண்டே வந்தார்கள். அப்படி ஒன்றன் பின் ஒன்றாய்ப் பலராணுவங்கள் கூட்டங் கூட்டமாக நடந்து சென்றபின் அநேக

குதிரைவீரர்கள் புடைசூழ, வெற்றிக் கொடியொன்று முன் செல்ல, தளபதியொருவர் தமது ராணுவத்தை நடத்தி வருவதை அபாஸுஃபியான் (றலி) கண்டு, அப்பாஸு (றலி) அவர்களை நோக்கி “இத்தனை மகிமையோடுவரும் இவர் யாவர்?” எனக் கேட்டார். அதற்கு “இவர் மதீனமாநகரத்து முஃமின தலைவர்களில் சிரேஷ்டரான உபாதாவுடைய குமாரர் ஸஃது; அவரைச் சூழ்ந்துவரும் ராணுவ வீரர்கள் மதீனமா நகரத்து அன்சாரீன்கள்” என அவர்கள் விடை கொடுத்தார்கள். பின் திரள்திரளாய் அடுத்தடுத்து வரும் சேனாவகுப்புக்களை அபாஸுஃபியான் (றலி) கண்டு ஆச்சரியமடைந்தார். அப்போது ஸஃது (றலி) அவர்களின் ராணுவம் அபாஸுஃபியான் (றலி) நிற்கும் இடத்தை யடுத்தவுடன் ஸஃது (றலி) அவர்கள் அபாஸுஃபியான் (றலி) வை நோக்கி, ஒரு கவிதை சொன்னார்கள். அக்கவிதையின் தாற்பரியம் இது:– “இந்நாளானது சேனா சமுத்திரங்கள் ஒன்றோடொன்று எதிர்த்துப் பொரும்நாள்; கஃபாவின் காபிர்களாலாகும் சங்கைகள் முற்றிலும் அழியுண்ணும் நாள்; நம் ஜாதியாரனைவரும் சங்கரிக்கப்படும் நாள்” என்பதே.

இந்தத் தாற்பரியமமைந்த அருங்கவிதையை ஸஃது (றலி) அவர்கள் அபாஸுஃபியான் (றலி) வை நோக்கிச் சொன்னபோது, அவர்கேட்டு மனக்கவலையடைந்தார். அவ்வேளையில் மற்றொரு சேனாவகுப்பு விஜயதுவஜமொன்று ஜுபைறு (றலி) அவர்கள் பிடித்து முன்வர பின் முஹாஜிரீன்களும், அன்சாரீன்களும் அநேகர் திரண்டுசூழ, அதிக அலங்காரத்தோடு வந்தது. அதை அபாஸுஃபியான் (றலி) கண்டு “இவ்வளவு அலங்காரத்தோடுவரும் அதிபர்யார்?” எனக்கேட்டார். அதற்கு அப்பாஸு (றலி) அவர்கள் அவரை நோக்கி “அதோ வருகிறவர்கள் நபிநாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்)” எனவிடை பகர்ந்தார்கள். அப்போது அபாஸுஃபியான் (றலி) மிகஆச்சரியமுற்று “ஆ! ஆ!! நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு நிகர் எவ்வுலகத்திலும் இல்லை. இவ்வுலகத்து மானிடர்களும், வானலோகத்து மலக்குகளும் ஒன்று கூடி எதிர்த்தாலும் நபிநாயகம் (ஸல்) அவர்களை வெல்வது அரிது. இந்தச் சேனாவீரர்கள் ஓவ்வொருவரும் மலைகளையும் பெயர்த்தெறியத்தக்க தேகபலமும், மனவலியுமுடையவர்கள்” என்று தம்மிலே சொல்லிக்கொண்டு, மறுபடியும் அப்பாஸ் (றலி) அவர்களை நோக்கி “அப்துல் முத்தலிபு உடைய குமார சிகா

மணியே! தங்களின் தமையன் புத்திரராகிய நபிநாயகம் (ஸல்) அவர்களுடைய இராஜவாழ்க்கை, பெரிது; மகாபெரிது; என்றும் நிலைபெறுவது” என்றார். அதற்கு அப்பாஸு (றலி) அவர்கள் அவரை நோக்கி “அபாஸுஃபியானே! நீர்பேதை மதியால் இப்படிச் சொல்லுகின்றீர். நபிநாயகம் (ஸல்) அவர்களின் இராஜவாழ்க்கை மகாபெரிதென்றும், மகிமையானதென்றும் சொல்வது பிரமாதமல்ல. அவர்கள் அல்லாஹுஃ தஆலாவுடைய றஸூல் நபி” என்றார்கள். அதற்கு அவர், “தாங்கள் சொன்னது வாஸ்தவம்” என்று வியந்தார்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு நிற்கையில், நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் கூட்டத்தாரோடு மேற்படி இடருக்குச் சமீபத்தில் நெருங்கினார்கள். அப்போது அபாஸுஃபியான் (றலி) நபிநாயகம் (ஸல்) அவர்களை யடுத்துப்பணிந்து நின்று, முன் ஸஃது (றலி) அவர்கள் சொன்ன கவிதையின் தாற்பரியத்தை நினைத்து “யாறஸூலல்லாஹ்! கஃபாவின் சங்கைகள் முற்றிலும் அழியுண்ணும் நாள் இது என்று ஸஃது (றலி) அவர்கள் சொன்னார்கள்” என்றார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி “இந்நாள் விசேஷமான நாள்; சிறப்பைத்தரும் நாள்” என்று சொல்லி விட்டு, ஸஃது (றலி) அவர்கள் சொன்னது பிசகென்று அவாகள் கையில் கொடுத்திருந்த கொடியை வாங்கி அலி (றலி) அவர்கள் கையில் கொடுத்து, தாங்கள் இந்தச் சேனாவகுப்போடு சென்று, மக்கமா நகரத்திற்கு மேல்புறமுள்ள கித்தா என்னும் தலத்தில் இறங்குங்களென்று கட்டளை பண்ணி அனுப்பினார்கள். அலி (றலி) அவர்கள் அவ்வாறே அந்தத் தலத்திற் சென்று தானையமிட்டார்கள்.

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபாஸுஃபியான் (றலி) வை நோக்கி “நாம் மக்காவின் மீது படையெடுத்து வருவதை, அவ்வூராரிடஞ் சென்று நீர் அறிவியும்” எனக்கட்டளை பண்ணி மக்கமா நகரத்திற்கு அனுப்பினார்கள். உடனே அபாஸுஃபியான் (றலி) அங்கிருந்து நடந்து மக்கமா நகரத்திற்கு சென்று, கஃபத்துல்லாவின் ஹறத்திற்குள் பிரவேசித்து, ஜனங்களைப் பொதுப்பட நோக்கி “[illegible]காள்! நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனாசமுத்திரமொன்று புடை சூழப் புறப்பட்டு, இந்தவூரை

நெருங்கிவிட்டார்கள் இனி நீங்கள் அவர்களோடு எதிர்நின்று சாதிக்கத் திராணிபெறமாட்டீர்கள்" என்று குரலெழுப்பி அலறிக் கூறினார். இதைக்கேட்ட குறைஷிக் காபிர்களெல்லாரும் மதி மயங்கித் தடுமாறினார்கள். அப்போதே மேற்படி குறைஷிக் காபிர்களெல்லாரும் ஒருங்குகூடி, முஹம்மது நபிபேரில் தீராக் குரோதஞ்செய்யும் விரோதியும், கலகம் நடத்தும் அதிபருமாகிய அபாஸுப்யானே இவ்வாறு சொல்லுவாரானால், இனி நாம் என்ன செய்வோம்; அந்த அபாஸுப்யானையே பின்பற்றிக் கொள்ளுவோமென்று ஆலோசனை பண்ணிக்கொண்டு அபாஸுப்யானை அடுத்து, "எங்கள் எஜமானனே! எங்களுக்கு இனி என்னவழி" எனக்கேட்டார்கள். அதற்கு அபாஸுப்யான் (றலி) குறைஷிகளை நோக்கி "குறைஷிகாள்! உங்களில் கஃபாவின் ஹறத்துள் பிரவேசித்தவர்களையும், என்மாளிகையில் வந்து ஒதுங்கினவர்களையும், தங்கள் தங்கள் மனைகளில் புகுந்து கதவையடைத்துக் கொண்டவர்களையும் தொடர்ந்து இடுக்கண் செய்யாதீர்களென்று, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுக்குக் கட்டளை பண்ணியிருக்கின்றார்கள்" என்றார். அப்போது அந்த குறைஷிகள் "கனவானே! தங்கள் வீடே எங்களுக்கு அடைக்கலஸ்தானமன்றி, வேறு தஞ்சமில்லை" என்று மனம்நொந்து சொன்னார்கள்.

இது இப்படியிருக்க, நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் வெற்றித் துவஜத்தைப் பிடித்துச் செல்லும் ஜுபைறு (றலி) அவர்கள் கையில் வேறொரு துவஜம் கொடுத்து, முஹாஜிரீன்களிலும், அன்சாரீன்களிலும் சில துரகவீரர்களைச் சேர்த்து "தாங்கள் மக்காவுக்கு மேற்குப்புறத்திலிருக்கும் சகூன் என்னும் பாடியிற்போய்த் தாணையமிட்டிருங்கள்" என்று திட்டஞ்செய்து அனுப்பினார்கள். அவ்வாறே ஜுபைறு (றலி) அவர்கள் அந்தப் பாடியிற் போய்ப் பாளைய மிறங்கினார்கள்.

மக்கமா நகரத்தின்மீது நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை வரும் சமாசாரம் கேட்டபோது, அபூஜஹலுடைய குமாரன் இக்ரிமாவும், அம்று உடைய குமாரன் சுஅயீலும் ஒன்று சேர்ந்து, குறைஷிக் காபிர்களில் பனீபக்கறு, பனீகாரிது என்னும் இரு கூட்டத்தாரையும் திரட்டிக் கொண்டு, மக்கமா நகரத்திற்குக்

கீழ்புறமுள்ள ஒருமலைச்சார்பில் கூடாரமடித்திருந்தார்கள். இந்தச் சமாசாரத்தை ஒற்றர்கள் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் அறிவித்தார்கள். இதைக்கேட்ட மாத்திரத்தில் நபிநாயகமவர்கள் வலீது உடைய குமாரர் காலிது (றலி) அவர்களையழைத்து "காலிதே! மக்காவுக்கு கீழ்புறத்தில் நமது பகைவர்கள் பாசறை யிட்டிருக்கின்றார்களாம். நீர் சில வீரர்களோடு சென்று அவர்களோடு அடர்ந்து பொரும்" என உத்தரவு செய்தார்கள்.

மேற்படி உத்தரவு பிறந்தவுடன் காலிது (றலி) அவர்கள் தங்கள் சேனாவீரர் புடைசூழ, ரணபேரிகை முழங்க, வெற்றிக் கொடி பிடித்து, குறித்த திசைநோக்கி விரைந்து சென்றார்கள். ராணுவ வீரர்களாகிய அஸ்ஹாபிகளெல்லாரும் யுத்த எத்தனத்தோடு கைகளில் ஆயுதங்கள் பிடித்தவர்களாய், குதிரைகளை விசையாய் நடத்தி மேற்படி மாற்றார்தளம் இறங்கியிருக்கும் மலைச்சாரலையடுத்தார்கள். இவர்கள் அடுத்துவருவதை இக்கிரிமாவும், சுஅயீலும் அறிந்து,தங்கள் வீரர்களை யுத்த சன்னத்தர்களாக்கிக் கொண்டு எதிர்த்தார்கள். எதிர்த்தபோது, காலிது (றலி) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளை அணிவகுத்து மாற்றார் தளத்தில் நடத்தினார்கள். இருசேனைகளும் ஒன்றோடொன்று கலந்து ஆயுதப்பிரயோகஞ் செய்துகொண்டன.

போர்வீரர்கள் பிரயோகிக்கும் அஸ்திரம், சஸ்திரமென்னும் இருவகை ஆயுதங்களாலும் எழும்பேரொலியை ரணபேரிகையின் பேரொலி யடக்கின. ரணபேரிகையின் பேரொலியை அஸ்ஹாபிகள் வாய்களிற் பிறக்கும் தக்பீரோசை அடக்கி யொலித்தது. இரத்தம் பிரவாகமாய் ஓடிற்று. பகைவர்களின் உறுப்புகள் பல அறுப்புண்டு குவிந்தன. இவ்வாறாக அஸ்ஹாபிகள் ரண சிங்கங்களைப்போல் அடர்ந்து தாக்கியும், காபிர்களும் இளைக்காது நின்று பொருதார்கள். அப்போது காலிது (றலி) அவர்கள் தங்கள் ராணுவத்தை உக்கிரமாக மாற்றார்மீது நடத்தி, தாங்களும் அடர்ந்து நின்று பொருதார்கள். இப்படிபொரும்போது அஸ்ஹாபிகளில் சல்மான் என்பவர் மாத்திரம் ஷஹீதானார். காபிர்களில் பதின்மூன்று வீரர்கள் உயிரிழந்து நரகஞ் சேர்ந்தார்கள். மறுத்தும் அஸ்ஹாபிகள் உக்கிரத்தோடு அடர்ந்தபடியால், மாற்றார் தளம் எதிர்க்க வசமுற்று, முறிந்து பின்வாங்கிற்று.

மாற்றார் தளஞ்சாய்ந்து முறிந்து ஓடினபின், பூரண ஜெயமடைந்த காலிது (றலி) அவர்களும், அஸ்ஹாபிகளும் ஷஹீதான ஸல்மான் (றலி) வை அடக்கஞ் செய்துவிட்டு, அந்த மலைச்சாரலிலேயே கூடாரமடித்துத் தங்கினார்கள். அன்று பகைவர்கள் முறிந்தோடுகையில் காலிது (றலி) அவர்களின் ராணுவ வீரர்களில் இரண்டுபேர்கள் வழிதவறி, அடவியில் நுழைந்துபோவதை அக்காபிர்கள் கண்டு, அவ்விருவரையும் கொன்றுவிட்டார்கள். இந்தச் சங்கதி காலிது (றலி) அவர்களுக்குப் பிந்தி வந்தது.

பின்பு, காலிது (றலி) அவர்கள் பொருது ஜெயமடைந்து, பகைவர்களைத் துரத்திவிட்டு, அங்கேயே கூடாரமடித்திருக்கும் சங்கதியை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டுச் சந்தோஷமுற்று, இனி மக்கமாநகரத்திற்குள் பிரவேசிப்பதற்காக, மற்றச் சேனா வீரர்களோடு உக்காபு என்னும் விஜயதுவஜம் முன்செல்ல, ஜெய பேரிகைமுழங்க, கலிமாவும் தக்பீரும் இடிபோலார்ப்ப, வானவர் மலர்மாரிசொரிய, அலங்காரமாக நடந்து, கோட்டைவாயலை யடுத்தார்கள். அப்போது மக்சமா நகரத்துக் கோட்டை வாசலின் கபாடங்கள் யாதொரு பிரதிபந்தமின்றி திறக்கப்பட்டு, நகரம் எதிர்பாரின்றி யிருந்தது. கோட்டைவாசலை யடுத்தபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளைநோக்கி "அஸ்ஹாபிகளே! நீங்கள் நகரத்திற் பிரவேசித்தபின் உங்களோடு எதிர்த்தவர்களையன்றி, மற்றவர்களைக் கொல்லாதீர்கள். ஆனாலும், அபுஜஹ்லுடைய மகன் இக்ரிமாவையும், ஜைது உடைமகன் அப்துல்லாவையும், அவனுடைய ஊழியகாரிகள் இருவரையும், நபிறு உடைமகன் குபைரீதையும், சாரூ என்பவளையும், சவருடையமகன் மக்கீசையும், கதறுடையமகன் அப்துல்லாவையும் நான் முன் விலக்கின கஃபாவின் ஹரத்திற்குள்ளல்ல, அதன் திரைக்குள் நுழைந்து கொண்டிருந்தாலும், அபாஸுஃபியானுடைய மாளிகையிலடைக்கலம் புகுந்திருந்தாலும் அவரவர் மாளிகையில் கதவையடைத்துப் பதுங்கியிருந்தாலும் நிர்தாக்ஷிண்யமாகக் கொல்லுங்கள்" எனக்கட்டளை பண்ணினார்கள்.

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் கருமேகக்குடைநிழலில் அஸ்ஹாபிகள் பூரணமதியை உடுக்குலஞ்சூழ்ந்த பாவனையாய்ச் சூழ்ந்துவர, பிஸ்மில்சொல்லி மக்கமாநகரத்தில் புகுந்தார்கள்.

புகுந்து, மக்கமாநகரத்து அலங்காரமான வீதிகளை யெல்லாங் கண்டு களிகூர்ந்து, அஸ்ஹாபிகளோடு கஃபத்துல்லா என்னும் திவ்வியாலயத்தைப் பிரதக்ஷணஞ் செய்வதற்காக அதன் ஹரமாகிய ஆவரணத்தில் பிரவேசித்தார்கள். ஹரத்தினுள் பிரவேசித்த நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் பின் தொடர்ந்து வரும் வண்ணம், மேற்படி ஹறத்தின் நடுவே ஒப்பற்று விளங்கும் கஃபாவைப் பிரதக்ஷணஞ் செய்து, அதன் பின் அங்கிருக்கும் "றுக்குனில்யமனி" யைத் தங்கள் அசர் என்னும் கைக்கோலால் தொட்டு முத்தமிட்டுக் கொண்டு, கஃபாவின் அலங்காரமான வாசலில் வந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லா என்னும் பரிசுத்த ஆலயத்தின் திருவாசலில் வந்து நின்றபோது அதன் கபாடம் மூடிப் பூட்டிட்டிருந்தது. உடனே அதன் திறவுகோல் வைத்திருக்கும் அதிகாரியாகிய தல்ஹாவுடைய குமாரர் உதுமான் சைபா என்பவரை அழைப்பித்து, மேற்படி திறவுகோலை வாங்கிக் கபாடத்தைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள். கஃபத்துல்லாவுக்குள் முந்நூற்றறுபது விக்கிரங்கள் நிரைநிரையாக வைக்கப்பட்டிருந்தன. அந்த விக்கிரகங்களில் பிரதான விக்கிரகம் குபல். மேற்படி குபல் முதலான முந்நூற்றறுபது விக்கிரகங்களையும் எடுத்து, தரையில் மோதியுடைத்து, பொடி பொடியாக நொறுக்கி, வெளியிலெறிந்தார்கள். விக்கிரகங்களனைத்தையும் பொடிசெய்து எறிந்தபின், அங்கிருந்து இரண்டு றக்அத்துத் தொழுதார்கள். தொழுது முடித்து, ஹலறத்து இபுறூஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பாததாமரைகள் தோய்ந்தகல்லொன்று அங்கிருந்ததால் அதைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியில் வந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள், கஃபாவினுள்ளிருந்து வெளியில் வந்தவுடன் அல்லாஹு தஆலா இடத்திலிருந்து வேதவாக்கியமொன்றை ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் கொண்டு வந்து உணர்த்தினர். அவ்வேத வாக்கியத்தை நபிநாயகம் (ஸல்) அவாகள் ஓதிக்கொண்டே நடந்தார்கள். நடந்து வந்து வாசலில் நின்றபோது உமறு (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லா! இப்போது தங்கள் வாக்கிற் பிறக்கும் வேதவாக்கியம் புதிதாயிருக்கின்றதே" என வினவினார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள், "இது இப்போதுதான் இறங்கிற்று" என விடை

பகர்ந்து விட்டு, அவ்வேத வாக்கியத்தின் படியே மேற்படி திறவுகோல் வைத்திருக்கும் உதுமான் ஷைபாவை யழைத்து, அவர் கையிலேயே மறுபடியும் அத்திறவு கோலைக் கொடுத்து "உதுமான் ஷைபா! இந்தக் கஃபாவின் திறவுகோல் உமது சந்ததிகளிலேயே பரவணியாக இருக்கக்கடவது. அப்படி வமிச பாரம்பரையாக வருகையில் இடையில் யாராவது உமது சந்ததிகளிடத்திலிருந்து பலாத்காரமாய்ப் பறித்துக் கொள்ளுவார்களானால், அவர்கள் அநியாயக்காரர்களாகக் கடவர்கள்" எனத் திருவாய் மலர்ந்து சொன்னார்கள்.

அதன்பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லா வாசலின் முதற்படியிலேறி நின்று கொண்டு "அல்லாஹுத்தஆலாவானவன் சிருஷ்டிகளடங்கலும் வணங்குதலுக்குப் பாத்திரன்; நிகரில்லாதவன்; எல்லாவற்றிலும் மேலானவன்; தனித்தவன்; பரிசுத்தமானவன்; இட்ட அறுதியை நிலைபெறச்செய்கிறவன்; தன் அடியார்களுக்கு என்றும் உதவி செய்கிறவன்; கொடுங்கோல் மன்னவர்களின் உக்கிரத்தையடக்கி நாசஞ் செய்கிறவன்; மகத்தானவன்; எல்லாவற்றையும் இவ்வுலகில் இரக்ஷிக்கிறவன்; நடுத்தீர்வை நாளில் தனக்கு வழிப்பட்ட அடியார்களுக்குக் கிருபை செய்கிறவன்" எனப் பலவாறு வியந்து புகழ்ந்தார்கள். அப்போது எல்லாம் அமரிக்கையாயிருந்தன.

மறுபடியும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்து "ஒப்பற்ற பரிசுத்த தேவாலயமாகிய கஃபத்துல்லாவின் பாதுகாவலும் ஜம்ஜம் நீரூற்றின் அதிகாரமுமாகிய இவ்விரண்டு மல்லாத மற்ற இவ்வூரின் சர்வகாரியங்களும், குறைஷிகளுடைய வீறு, பெருமை, செல்வ முதலிய அனைத்தும் நமது காலின் கீழ் அடங்கின; அவற்றை நாம் மிதித்துக் கொண்டோம்" என்றார்கள்.

அதன் பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்கு வந்து கூடி நிற்கும் குறைஷிக் காபிர்களை நோக்கி "குறைஷிகளே! உங்களை நாம் இப்போது என்ன செய்வோமென்று ஆராய்ந்தறிந்தீர்களா?" எனக்கேட்டார்கள். அதற்கு அந்த குறைஷிக் காபிர்களனைவரும் "குலசிரேஷ்டரும், பிதாமாதாக்களாற் சிறந்தோரும், வாக்கு நாணயமுள்ள வருமாகிய தேவரீர், தமியேங்கள் மீது நன்மையே செய்வீர்களென்று இதயபூர்வமாக நம்பியிருக்கின்றோம்" என்றார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி "இனி

நீங்கள் கலிமா சொல்லுங்கள்" என்றார்கள். உடனே மக்கமா நகரத்திலுள்ள குறைஷிகாபிர்களெல்லாரும் ஈமான்கொண்டு, கலிமா சொல்லி, முஸ்லிமானார்கள். அப்போதுதானே மக்கமா நகரமும் அதன் பிரஜைகளும் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வசமானதால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆனந்தசாகரத்தில் மூழ்கி, அந்த குறைஷிகளுக்கு துலகாக்கள் என்று பட்டந்தரிப்பித்தார்கள். அன்றையத்தினம் மக்கமா நகரம் மகிமை பெற்று விளங்கத் தொடங்கிற்று.

103-வது அத்தியாயம்

அப்பாஸிபுனு மிறுத்தாசு ஈமான் கொண்டது.

விருத்தம்.

மீன்கொண்ட விறற்கடன் மேதினிவாய்ப்
பான்கொண்ட வப்பாசு மகிழ்ந்து புகழ்
தீன்கொண்ட செழும்வழி தேடியவி
மான்கொண்ட மகத்துவ மோதுதுமால்.

நபிநாயகம் முஹம்மதுமுஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள்மக்கமாநகரம் தங்கள் வசமானபின், தகுதிவான்களாகிய குறைஷிகளடங்கலும் புடைசூழ மக்கமா நகரத்திலேயே சில வாரங்கள் வரையுமிருக்க விருப்பமுற்று, அஸ்ஹாபிகள் எல்லாரோடும் தங்கியிருந்தார்கள். தங்கள் சுயநகரானமையால் அங்கிருப்பதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் விரும்பினது, மற்ற அஸ்ஹாபிகளுக்கும் பொருத்தமாகவேயிருந்தது. சேனாவீரர்களின் பராமரிப்புக்காகத் தக்க அதிகாரிகளையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்கே நியமித்திருந்தார்கள்.

அன்றியும், மக்கமா நகரத்து குறைஷிகளனைவரும் முஸ்லிமானவர்களான பின்னும், வேறு சில குடும்பத்தார்கள் காபிர்களாகவே அங்குக் குடியிருந்தார்கள். இருந்தும் அவர்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்போது யாதொரு பொல்லாங்குக்கும் ஆளாக்கவில்லை.

இது இப்படியிருக்க, மக்கமாநகரத்திற்கு அயலிலுள்ள ஒரு பாடியில் மிறுதாசு என்பவன் ஒருவன் குடியிருந்தான். அவன்

ஸிமாறு என்னும் விக்கிரகத்தைப் பணிந்து தொழுது வந்தான். அந்த ஸிமாறு அவர்களில் பரவணியாய் வணங்கப்பட்டு வந்தது. மிறுத்தாசு தன் காலத்திலும் அதைக் கைகூப்பித் தொழுது வந்து, தனக்கு மரணமடுத்தபோது தன்மகன் அப்பாஸை யழைத்து அருகிலிருத்தி "மகனே நமதுஸிமாறு என்னும்பிரான் நம்மூதாட்களால் தொழப் பட்டு வந்தபடியால், நானும் அப்படியே தொழுதுவந்தேன். இனி எனக்குப்பின் நீயும் அப்பிரானை அவ்வாறே தொழுது வரக்கடவாய்" என உபதேசஞ் செய்து விட்டு மரணமடைந்தான் அவன் மகன் அப்பாஸும் அப்படியே தனக்கு வமிச பாரம்பரியமாய்க் கிடைத்த விக்கிரகத்தைத் தொழுது வந்தான்.

ஒருநாள் அப்பாஸு ஸிமாறு என்னும் அந்த விக்கிரகத்திற்கு ஸ்நானஞ் செய்வித்து, பட்டாடையுடுத்தி, புஷ்பமாலை சூட்டி, தீபதூபங்களிட்டுப் பீடத்திலிருத்தி, ஐம்புலன்களையும் அடக்கிக் கைகூப்பித் தெண்டனிட்டு, அதிக பக்தியோடு அதன் முகதாவில் நின்றான். அப்போது அந்த ஸிமாறென்னும் விக்கிரகம் தனது ஊழியனாகிய அப்பாஸை நோக்கி, ஒருகவிதை சொல்லிற்று. அதன் அர்த்தம் இது:—

"அப்பாஸே! உன்னால் அருச்சிக்கப்படும் ஸிமாறு என்னும் நானும், என்னை ஆராதனை செய்தவர்களும், செய்கிறவர்களும், செய்பவர்களும் நாசமடைந்து, நரகஞ் சேர்வது சத்திய மென்றும், ஈசாநபிவானத்தில் உயர்த்தப் பட்ட பின் முஹம்மது நபி பிறந்து ஜனங்களை இரக்ஷிக்க வந்திருக்கின்றா ரென்றும், அவருடைய இஸ்லாம் மார்க்கம் பரிசுத்த மான தென்றும், அதை யனுசரித்தவர்கள் சுவர்க்கத்தில் உன்னத பதவியைப் பெறுவார்களென்றும், அவர் தற்காலம் மக்கமா நகரத்தில் வந்திருப்பதால், நீயும் உன் குடும்பத்தார்களும் அவர் பாதங்களில் போய் விழுந்து, கலிமா சொல்லி முத்தியடைய வேண்டு மென்றும் நான் சொன்னதாக, உனது சலீபு என்னும் கூட்டத்தாருக்கு நீ சொல்வாயாக."

என்னும் அர்த்தம் அமைந்த கவிதையை மேற்படி விக்கிரகம் ஆச்சரியகரமாகச் சொன்னபோது, அப்பாஸு அதைக்கேட்டு, "ஆ! ஆ!! இந்தப்பாழும் விக்கிரகத்தை இத்தனை காலம் நாம் அருச்சித்து அவமேபோனோமல்லவா" வெனச் சினந்து, அப்போதே அவ்விக்கிரகத்தை நொறுக்கி யெறிந்து விட்டு, நபிநாயகம் (ஸல்)

அவர்களின் பாத தாமரைகளில் வந்து பணிந்து, கலிமா சொல்லி முஸ்லிமானார்.

104—வது அத்தியாயம்.

ஹுனைன் நகரம் பிடிப்பட்டது.

விருத்தம்.

கனைமலர் வனம்பல நண்ணு மக்கமாம்
வனைநகர் நபிபிரான் வசமதானபின்
கனைகடல் வளைபுவி வியக்குங்காவன
ஹுனைநகர் பிடிபடு கொள்கை கூறுவாம்.

நபிகட் திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் நிகரற்ற மக்கமா நகரத்தைக் கைகொண்டபின், ஆகவேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் சீர் திருத்தி முடித்துக் கொண்டு பதினெட்டு நாள்வரையும் அங்கேயே தங்கியிருந்தார்கள். பின்பு காபிர்களின் சங்கதிகளை அறிந்து வந்து சொல்ல நியமித்திருக்கும் ஒற்றர்களில் ஒருவர், விரைவாய் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் பணிந்து நின்று, கீழ் வருமாறு சொல்லுகின்றார்:—

"யாறஸூலல்லா! மாலிக்கு உடைய குமாரனாகிய அபு என்னும் அரசன், ஹுனைன் நகரத்திலிருக்கும் தகீபு, கவாசின், அசுதம், உசயிது, ஹிலால் என்னும் இக்குடும்பத்தார்களில் நாலாயிரம் சூரவீரர்களை ஒருங்கு திரட்டிக் கொண்டு, அவ்வூரைவிட்டு வெளிப்பட்டு அயலிலுள்ள ஒருதலத்தில் போயிருந்து கொண்டு, சிம்மாறு என்பவனுடைய குமாரனும் எந்த விஷயத்தையும் மனஞ் சலிக்காது முயன்று செய்து முடிக்கத் தக்க தந்திரியும், உலக விஷயத்லதை நன்கு யறிந்தவனும், யுத்த வித்தையில் பழகினவனும் நூற்றறுபது பிராயமுள்ள வயோதிபனுமாகிய துறைது என்னும் உபாயியை யழைத்து அருகிலிருத்தி, முஹம்மது நபியை இனி நாம் ஜெயித்து அவன் இராஜ்ஜியத்தைக் கைப்பற்ற வேண்டும்; அதற் கென்ன தந்திரஞ் செய்யலாம்? தாங்கள் ஆராய்ந்து சொல்லுங்களென்று அவனிடம் கேட்டான். அதற்கு மேற்படி துறைது அபுவைப் பார்த்து, நாம் முஹம்மது நபியை ஜெயிக்க வேண்டுமானால், படைகொண்டு எதிர்த்துப் போராடுவது ஒன்றே யொழிய

வேறு தந்திரமில்லை. அப்படி நாம் போராடத் துணிவோமானால், நமது பெண்டு பிள்ளைகளையும் திரவியங்களையும் உடன் வைத்துக் கொண்டு யுத்தம் தொடங்குவது சரியல்ல; அவ்வாறு வைத்துக் கொண்டு சமர்செய்து ஜெயம் பெறுவது மகாகஷ்டம்; அன்றியும் நமது சேனை ஒருகால் முறியடிக்கப் பட்டால் அச்சேனை மறு படியும் ஒன்று சேர்க்க இயலாது. மேற்படி பெண்டு பிள்ளைகளையும், திரவியங்களையும் காக்கப் பிரயத்தனஞ் செய்ய வேண்டி வரும். ஆனதால் அவற்றைக் கொண்டு போய் ஒருதக்க அரணிப்பான தானத்தில் சேர்த்து, பராக்கிரம மிக்க வீரர்களில் பலரைக் காப்பாக நியமித்து விட்டு, நாம் திரண்டு சென்று யுத்தஞ் செய்யலாமென்றான். அப்போது அபுதுறைதைப் பார்த்து நாம் பெண்டு பிள்ளைகளையும், திரவியங்களையும் அந்நிய ஸ்தானத்தில் வைத்து விட்டுப் போர் செய்வது சரியல்ல வென்று மறுத்துச் சொன்னான். மறுபடியும் துறைது அபுவைப்பார்த்து, நான் என்ன செய்வேன்! இக்காலத்தில் உங்களோடு நானும் ஒருவனாகக் கலந்திருந்தும், இல்லாதவனாயிருக்கிறேன். அதுநான் தள்ளாத பருவமுற்றிருப்பதாலன்றி வேறல்ல. முன் உண்டாயிருந்த பருவகாலம் இப்போது எனக்கிருக்கு மானால், நீங்கள் ஆரம்பிக்கும் இந்த யுத்தத்தை வெகு விந்தையாகச் செய்து முடிப்பேன்; யுத்த மென்னுஞ் சொற் கேட்ட மாத்திரத்தில் திகில் பிடித்தும் பிரக்ஞைதப்பும் பேடி களுக்கும் உற்சாக மூட்டி, ரணசிங்கங்களைப் போல அமர்க் களத்தில் நின்று பொரும் சௌரியவான்களாக்கி வெற்றியளிப் பேன். மாற்றார் தளம் எவ்வளவானாலும் மனத்தளராது நின்று செய்யும் யுத்தோபாயத்தைக் கொண்டு இலகுவில் முறிந் தோடப் பண்ணுவேன். இதுகாலமல்லவே! நான் என்ன செய்வேன்? ஆனா லும் குற்றமில்லை. கூடியவரையும் பிரயாசை யெடுங்க ளென்றான். மேற்படி துறைது உடைய சொல்லை எல்லாரும் மனங்களித்து கேட்டிருந்தார்கள். ஆனால், அவன் சொன்னபடி பெண்டு பிள்ளைகளையும், திரவியங்களையும் வேறு தானத்தில் காவற்படுத்தி வைத்து விட்டுச் சமர் செய்ய அபு உடன்படவில்லை. குனை னிலேயே வைத்திருப்பார்கள் போலும். இந்த வர்த்தமானம் குனைன் நகரத்தில் நிகழ்ந்தது"

இவ்வாறு அவ்வொற்றர் சொன்ன போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் மறுத்தொன்றும் அவரிடம் விசாரிக்காமல், அஸ்

ஹாபிகளில் பிரதான சேனாதிபதிகளை நோக்கி "குனைன் நகரத்தில் மேல் தாவடி போவதற்காக வேண்டிச் சேனை புறப்படும் படி எத்தனஞ் செய்யுங்கள்" எனக் கட்டளை பண்ணினார்கள். உடனே படை யெழுச்சிக்கான பிரயத்தனங்கள் அனைத்தும் செய்யப் பட்டன. எல்லா முயற்சிகளும் ஆனபின் மதீனமா நகரத்தி லிருந்து நபி நாயகம் (ஸல்) அவர்களோடு வந்த அஸ்ஹாபிகள் பதினாயிரம் குதிரை வீரர்களும், மக்கமா நகரத்தில் முஸ்லிமான துலகாக்க ளென்னும் குறைஷிகளில் இரண்டாயிரம் குதிரை வீரர்களும் தயாரானார்கள். அவர்களில் சிலருக்கு யுத்தக் கருவி கள் இல்லாமையால், நபி நாயகம் (ஸல்) அவர்கள் உமையாவுடைய குமாரர் சபுவான் (றலி)யை யழைத்து "சபுவானே! நமது வீரர் களில் சிலருக்கு யுத்தக்கருவிகளில்லை; அவர்களுக்கு வேண்டிய வற்றை நீர் கொடும்" என்றார்கள். அதற்கு அவர் "யாறஸூலல் லாஹ்! நான் கொடுக்கும் யுத்தக் கருவிகள் கிரயமா? அல்லது இரவலா?" எனக் கேட்டார். அப்போது நபி நாயகம் (ஸல்) அவர்கள் "இப்போது நீர் இரவலாகவே கொடும்; பின்பு, பழு தானவை யனைத்திற்கும் கிரயம் தந்து விடுகிறேன்" என்றார்கள். உடனே அவர் சம்மதித்து, நூறு இரும்புச் சீராக்களும், வாள், வேல், தண்டம், கேடகம், வில், அம்பு முதலிய ஆயுதங்களும் போர்க் குதிரைகளும் இத்தனை யென்று கணக்கிட்டுக் கொடுத்தார். அவற்றை நபி நாயகம் (ஸல்) அவர்கள் வாங்கி இல்லாதவர்களுக்கு கொடுத்தார்கள்.

அதன் பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் உசைது உடைய குமாரர் அத்தாபு (றலி)வை மக்கமா நகரத்திற்கு அதிபராக நியமித்து விட்டு, பன்னீராயிரம் குதிரை வீரர்கள் புடைசூழ மக்கமா நகரத்தி லிருந்து புறப்பட்டார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்களின் சேனாசமுத்திரம் ஷவ்வால் மாதம் எட்டாந்திகதி மக்கமா நகரத்தை விட்டு குனைன் நகரத்தின் மேல் எழுந்தது.

குனைன் என்னும் நகரம் மக்கமா நகரத்திற்கும், தாயிபு நகரத்திற்கும் மத்தியிலுள்ள அருவி பாயும் ஒரு கணவாயி லுள்ளது. அந்த நகரத்திற்குச் செல்லும் பாதை வழியே நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனா சமுத்திரத்தை முரசுகள் இடிபோல முழங்க, தம்பூறு மும்முரமாய்த் தொனிக்க, ஆயுதங்கள்

மின்னலைப் போலப் பிரகாசிக்க, தரைகம்பிக்க, மலைகள் குலுங்க நடத்திச் சென்றார்கள்.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு மக்கமா நகரத்திலிருந்து படை யெடுத்து ஹுனைன் மேல் வரும் சமாசாரம் அங்கு வசிக்கும் பகையர்கள் காதில் விழுந்தது. அப்போதே அபு என்னும் அரசன் தனது சைனியத்தைப் போருக்குத் தயாராக்கினான். சைனியங்கள் தயாரான பின் நபி நாயகம் (ஸல்) அவர்கள் சேனை இன்னமார்க்கமாய் இன்ன தானத்தில் வந்திட்டதென்பதை அறிந்துகொண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சேனை வரும் மார்க்கத்து இருமருங்கிலுமுள்ள அடர்ந்த வனங்களிலும், பள்ளத்தாக்குகளிலும், குன்றுகளிலும் வந்து பல பிரிவுகளாய்ப் பிரிந்து ஒளித்திருந்தார்கள். மாற்றார்தளம் இவ்வாறு பதிவிருக்கும் அன்றிரவே நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பன்னீராயிரம் குதிரை வீரர்களோடு, பின்னிரவான வேளையில் மேற்படி பகைவர்கள் பதிவிருக்கும் தானத்திற்கு அப்புறப்பட்டார்கள். இருட்போதில் நபி நாயகம் (ஸல்) அவர்கள் சேனை தாங்கள் குறிப்பிட்டிருக்கும் எல்லைக்குள் வந்திட்டபடியால், அப்பகைவர்கள் ஆனந்தமுற்று, அனைவரும் திரண்டு நபி நாயகம் (ஸல்) அவர்கள் சேனையை வளைத்தார்கள். மாற்றார்கள் திடுகூறாய் வந்து வளைத்து கூக்குரவிட்டு அடர்ந்த போது, நபி நாயகம் (ஸல்) அவர்களின் அஸ்ஹாபிகளாகிய பன்னீராயிரம் குதிரை வீரர்களும் திகில் கொண்டு, நாலுபக்கமுஞ் சிதறி முறிந்தார்கள். அஸ்ஹாபிகள் எல்லாரும் நிலைகுலைந்து பல வழியுஞ் சிதறி ஓடிவிட்ட பின், அபூபக்கர் (றலி) அவர்களும், உமறு (றலி) அவர்களும், அலி (றலி) அவர்களும், அப்பாஸ் (றலி) அவர்களும், அவர்கள் குமாரர் புலைலு (றலி) அவர்களும், அபாஸுபியான் (றலி)வும், றபீஆ (றலி)வும், சபுவான் (றலி)வுமாகிய இவ்வெட்டு வீரர்களும் ஒருங்கு திரண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை யடுத்து வந்து சூழ்ந்து கொண்டு நின்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகள் சிதறுண்டு முறிந்து போனதால், நானே காபிர்கள் மீது அடர்ந்து பொருவேன் என்று குதிரையை செலுத்தினார்கள். அப்போது அப்பாஸ் (றலி) அவர்கள் நெருங்கி "மகனே! பகைவர்கள் கனதிரளாய் எங்கும் வளைந்து நிற்கின்றார்கள். இருளும் அதிகமா யிருக்கின்றது. ஆனதால், தாங்கள் அப்பாதகர்கள் மீது தன்னந்

தனியே செல்வது சரியல்ல" என்று சொல்லிக் கொண்டே நபி நாயகம் (ஸல்) அவர்கள்எதிரிருக்கும் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அபாஸுபியான் (றலி) அதன் அங்கபாடியைப் பிடித்து அமர்த்தினர். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்படியே நின்று விட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனா வீரர்கள் எல்லாரும் முறிந்து சிதறி நாலுபக்கமும் ஓடிப்போய் விட்டதைக் காபிர்கள் கண்டு ஆனந்தமடைந்து, கைகளைத்தட்டி, குரலெழுப்பிக் கொய்யோக் கூவினார்கள். அன்றியும், அப்பகைவர்கள், "முஹம்மது உடைய மாயாஜாலமும், வீரதீரமும், சமயமும் இன்றோடே பற்றின்றித் தொலைந்தன" என அகங்களித்து அட்டகாசஞ் செய்து இரைந்தார்கள். காபிர்கள் இவ்வாறு நகைத்து இரைவதை சபுவான் (றலி) கண்டு, கண்கள் அக்கினிகக்கச் சினந்து மற்றவர்களை நோக்கி "நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும், அவர்கள் தோழர்களுக்கும் உண்டாகும் சுகதுக்கங்கள் நமக்கல்லவா?" என்று வெகுண்டு நின்றார். இவர்கள் இப்படி நிற்கையில் முன் கஃபத்துல்லா என்னும் தேவாலயத்துக் கபாடத்தைத் திறந்து அடைக்கும் அதிகாரியா யிருந்த சைபத்து என்பவன், மாற்றார்தளத்திலிருந்து தனித்து வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு விக்கினம் விளைவிக்கக் கருதி நெருங்கினான் அவன் வரும் நோக்கத்தையும் இதயக் குறிப்பையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் உணர்ந்து, அவனை நோக்கி "ஏ! சைபத்து! உன் தந்தையாகிய உதுமான் என்பவனையும், சகோதரனாகிய தல்ஹா என்பவனையும் முன் உஹது யுத்தத்தில் நீ இழந்து விட்ட படியால், அவ்விருவர் பழிக்குப் பிரதி பழி வாங்கவேண்டி இப்போது இங்கு வந்தனை. அதற்குத் தருணம் இதுதான் என்று எண்ணினை போலும்! ஆனால், உன்னால் வரும் வில்லங்கத்திலிருந்து எங்களை மகத்தான அல்லாஹுதஆலா காத்துக் கொண்டான்" என்று கூறி தங்கள் இருகரங்களையும் ஓங்கி அவன் மார்பில் உரக்க அடித்தார்கள். இவ்வடிபட்ட மாத்திரத்தில் அவன் உள்ளத்தில் நிறைந்து மூடியிருந்த குபிர் என்னும் அந்தகாரம் அறவிலகி, நல்லறிவென்னும் தீபம் பிரகாசித்தது. உடனே மேற்படி சைபத்து ஞானவுணர்ச்சியும், ஆத்மரக்ஷையு மடைந்து, மனக்கண் திறந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்து நின்று "என் பிதாமாதாக்கள் இருவரைப் பார்க்

னிலும் விசேஷமான நாயகமே! அடியேன் இதயத்தில் எண்ணின எண்ணத்தை இன்னதென்று வெளியிட்டதால், தாங்கள் உண்மையான றஸூலும், நபியுமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. எளியேன் மீது மனதிரங்கி இரக்ஷித்தல் தங்கள் கடன், என வியந்து கூறி கலிமாவைச் சொல்லி முஸ்லிமானார்.

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சிறிய தந்தையாகிய அப்பாஸ் (றலி) அவர்களை நோக்கி, நமது முறிந்து சிதறின வீரர்களை உரத்துக் கூப்பிடுங்கள் என்று கட்டளை பண்ணினார்கள். அப்போது அப்பாஸ் (றலி) அவர்கள் அஸ்ஹாபிகள் முறிந்து சிதறிய திசையை நோக்கி "அஸ்ஹாபிகளே! வாருங்கள்" எனக் குரலெழுப்பி அரற்றி உரக்க அழைத்தார்கள். இந்த பெருந்தொனி வெறிகெட்டு ஒரு காததூரத்திற்கு அப்புறமுள்ள வனங்களிலும், அருவிக்கரைகளிலும், குன்றுகளிலும், தோப்புகளிலும் செல்லும் அஸ்ஹாபிகளின் செவிகளுக்கு எட்டிற்று. அப்போதே அவ்வோசை கேட்ட அஸ்ஹாபிகள் ஆயிரம் குதிரை வீரர்கள் மாத்திரம் தங்கள் குதிரைகளைத் திருப்பிக்கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் நிற்கும் தானத்தில் வந்து கூடினார்கள். முறிந்தோடிப் போன அஸ்ஹாபிகளில் ஆயிரம்பேர் திரும்பி வந்த பின், வானோர்களாகிய மலக்குகளில் ஐயாயிரம் குதிரை வீரர்கள் வெண்ணுடை புனைந்து, யுத்த சன்னத்தர்களாய் வந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் நின்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆயிரம்பேர் அஸ்ஹாபிகளையும், ஐயாயிரம்பேர் மலக்குகளையும் மாற்றார் சேனைமேல் அடர்ந்து பொரும்படி ஏவினார்கள். உடனே இருவகையாராகிய ஆறாயிரம் ரணவீரர்களும் சிங்கங்களைப் போலக் கர்ஜித்து தங்கள் குதிரைகளை மாற்றார் தலத்தில் செலுத்தினார்கள்.

இவர்கள் ஏறியிருக்கும் போர்க்குதிரைகள் ஆறாயிரமும் இடி விழுந்தாற்போல மாற்றார் தலத்திற்போய் விழுந்தபோது, அவர்களும் ரணபேரிகை முழங்க ஆர்ப்பரித்து அடர்ந்தார்கள். இருதளமும் வடவைத்தீ ஒன்றோடொன்று எதிர்த்துக் கொண்டது போல அதிக மும்முரமாக எதிர்த்து, கைகலந்து போராடின. [illegible]டமழைக்கு ஒப்பாய் அஸ்திரப்பிரயோகம் செய்யப்பட்டது. அன்றியும் ஆயுதங்களின் எல்லாவகைப் பட்டவைகளையும் ஒரு

வரோடொருவர் கைகலக்காது நின்று பிரயோகித்தார்கள். அஸ்ஹாபிகள் ஏறியிருக்கும் குதிரைகள் மாற்றார்களை கடித்தும், மிதித்தும் கணக்கறக் கொன்றன. மலக்குகள் ஐயாயிரம் பேர்களும் அஸ்ஹாபிகளைப் போலவே நின்று காபிர்களை சங்கரித்தார்கள். அஸ்ஹாபிகள் ஆயிரம் பேர்களும் தளராது நின்று பொருதார்கள். அமர்க்களத்தில் உதிரம் பிரவாகித்து ஓடிற்று. பகைவர்களின் சிரசுகள், கைகள், தொடைகள், கால்கள் அனந்தம் திரள் திரளாய் அறுப்புண்டு குவிந்தன. பிரேதங்கள் கணக்கின்றிச் சரிந்தன. இடைக்கிடை கவந்தங்கள் எண்ணறக் கிடந்து துடித்தன. முரசாதி விருதுகள் அநேகம் உதிரப் பிரவாகத்தில் மிதந்தன. இவ்வாறாயும் காபிர்கள் தளராது எதிர்த்தே நின்றார்கள். மலக்குகளும், அஸ்ஹாபிகளும் பிரயோகிக்கும் ஒவ்வொரு ஆயுதங்களும், காபிர்களைச் சித்திரவதை செய்து பிணங்களாய்வீழ்த்தின. பகைவர்களின் குதிரைகள் அனந்தம் உறுப்புறுப்பாய் அறுப்புண்டு சாய்ந்தன. அமர்களத்தில் அநேகர் மடிந்தார்கள். எங்கும் பிணமாய் தோற்றிற்று. மறுபடியும் காபிர்கள் முன்னேறியே நின்றார்கள். இருதள வீரர்களும் இளைக்காது நின்று பொரும் உக்கிரத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, தங்கள் திருவாய் மலர்ந்து "ஆயுதங்களை உக்கிரமாக ஒன்றோடொன்று மோதுவதால் அக்கினிகள் தெறிக்கின்றன" என்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏறியிருக்கும் அசுவமானது அவர்கள் இதயத்தில் எண்ணியிருக்கும் எண்ணத்தை யுணர்ந்து, தன்மார்பை நிலத்திற்படியச்செய்து தாழ்ந்தது. உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் வலது கையால் ஒருபிடி புழுதியை அள்ளி, "யா அல்லாஹ்! இந்த பகைவர்களின் வீரதீரமனைத்தையும் நாசஞ் செய்வாயாக!" என்று சொல்லி, அவர்கள் மீது எறிந்தார்கள். அந்தப் புழுதி நச்சுப் புழுதியாய் மேற்படி காபிர்கள் எல்லார் வாயிலும், கண்ணிலும், முகத்திலும் போய்ச் செறிந்தது. உடனே அவர்கள் திகைப்பிடித்து, தடுமாறி, மயக்குற்று முறிந்து, பலவழியும் சிதறித் தெறிகெட்டு ஓடினார்கள். யுத்தகளம் அரவமடங்கி வெறிதாயிற்று. எங்கும் அறுப்புண்ட அவயவங்களும், கவந்தங்களும், பிரேதங்களும் உதிரமுமே பரந்து நிரம்பின. மலக்குகளும் அஸ்ஹாபிகளும் அடர்ந்து, போரிட்ட அந்தப்போரில் மாண்டுபோன காபிர்களுக்குக் கணக்கில்லை. ஆனால்;

அக்காபிர்களில் துவஜாதிபர்களான தளவாய்கள் மாத்திரம் எழுபது பேர் மாண்டார்கள். மடிந்தவர்போக மற்றக் காபிர்களனை வரும் குனைன் நகரத்தை விட்டு, வேறு நகரத்திற்குச் செல்லும் பல மார்க்கங்களையும் தொடர்ந்து ஓடிப்போனார்கள்.

பகைவர்கள் முறிந்தோடினபின் அவர்கள் அதிபனாகிய அபு என்பவன் சில குதிரை வீரர்களோடு அபுத்தாசு என்னும் ஊரை நோக்கி ஓடினான். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அப்போதுள்ள ஆயிரம குதிரை வீரர்களோடு குனைன் நகரத்திற் பிரவேசித்து, அந்நகரத்தைச் சூறையாடும்படி கட்டளை பண்ணினார்கள். அஸ்ஹாபிகள் அபு என்னும் அரசனுடைய மாளிகையாகிய அரண்மனையில் நுழைந்து, அவன் பெண்டு பிள்ளைகளையும், திரவியங்களையும் கைகொண்டார்கள். அன்றியும், அநேக மாளிகைகளில் புகுந்து ஆண் பெண்ணாகிய அநேகரைச் சிறைப்பிடித்து, ஒட்டக முதலான விலங்குகளையும் பிடித்து, சொத்துக்களையும் கவர்ந்தார்கள். அதன் பின் சிறைப்பட்டவர்களையும், கொள்ளைப் பொருள்களையும் ஒரு தானத்தில் வைத்துக் காவலாகச் சில பேர் வீரர்களை நியமித்துவிட்டு, அங்கிருந்து தாயிபு நகரத்தின் மீது செல்ல நபிநாயகம் (ஸல்) அவர்கள் புறப்பட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் குனைனிலிருந்து தாயிபுக்குப் புறப்பட்டபோது, குனைன் படையில் முறிந்த காபிர்களில் சிலர் நகுலா என்னும் ஊரைநோக்கி ஓடினார்களென்னும் செய்தியைக் கேட்டு, அஸ்ஹாபிகளில் சிலரை அவ்வூர்மேல் அனுப்பினார்கள். மேற்படி அஸ்ஹாபிகள் அந்த நகுலாவிற் சென்று, அங்கே கூடியிருந்த காபிர்கள்மேல் அடர்ந்து தாக்கினார்கள். அப்போது அவர்களில் அநேகர் சங்கரிக்கப்பட்டு, மீந்தவர்கள் அங்கிருந்து முறிந்தோடினார்கள். பிறகு அங்கு சென்ற அஸ்ஹாபிகள் திரும்பி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகம் வந்து சேர்ந்தார்கள்.

முறிந்தோடின காபிர்களில் இன்னும் சிலர் நஹ்லா என்னும் ஊருக்குச் செல்லும் மார்க்கத்தில் போகிறார்களென்னும் செய்தியைக் கேட்டு, ஜுபைர் (றலி) சில வீரர்களோடு நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, அந்த மார்க்கத்தை தொடர்ந்து சென்றார். அவர் போகும் பாதையில், முன் அபு என்பவனோடு யுத்த ஆலோசனை விஷயமாகச் சம்பாஷித்த துறைது

என்னும் விருத்தன் முன் செல்வதைக் கண்டு, ஜுபைர் (றலி) அவனையடுத்து, தமது வாளால் வெட்டினார். அந்த வெட்டினால் அவன் உடலில் அற்பகாயமாவது உண்டாகவில்லை. அப்போது அந்த துறைது ஜுபைர் (றலி) வைத் திரும்பிப் பார்த்து, "கூர்மை மழுங்கின இந்தப் பட்டயத்தை உனது மாதா அல்லவா உனக்குக் கொடுத்தாள்? அதைக் கீழே எறிந்துவிடு. என்னுடைய பட்டயம் இதோ ஒட்டகத்தின் பின்புறத்தில் நாலவிட்டிருக்கிறேன்; அதை எடுத்து என் நெற்றியில் வெட்டு. நான் வாலிபனாயிருக்கையில் அப்படித்தான் வெட்டுவது வழக்கம். நீ அவ்வாறு என் ஆவியைப் போக்கிவிட்டு, உன் மாதாவை யடுத்து, 'துறைதைக் கொன்று விட்டேன்' என்று சொல். ஆண்டவன் பேரில் பிரமாணிக்கமாக உங்கள் குடும்பத்துப் பெண்களை வருந்தாமல் நான் காக்கவில்லையா?" என்று சொல்லிக்கொண்டே தப்பிப்போய் விட்டான்.

அது அப்படியிருக்க, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூஆமிறு (றலி) வைத் தளகர்த்தராக நியமித்து, சில அஸ்ஹாபிகளையும், அவருடைய தமையனார் குமாரர் அபூமூஸா (றலி) வையும் உடன் சேர்த்து, அபு என்னும் அரசன் ஓடிப்போயிருக்கும் அபுத்தாசு என்னும் ஊருக்குப் போகும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே அபூஆமிறு (றலி) தமது ராணுவ வீரர்களோடு அங்கிருந்து புறப்பட்டு, அபுத்தாசை நோக்கிச் சென்றார்.

அபூஆமிறு (றலி) தமது ராணுவத்தோடு வழி நடந்து, அபுத்தாசு என்னும் ஊரை அடுத்தபோது, அங்கிருக்கும் அபு உடைய சேனாவீரர்கள் திரண்டு வந்து எதிரே அணி வகுத்து நின்றார்கள். அபூஆமிறு (றலி) வும் தமது வீரர்களை அணி வகுத்து நின்றார். அப்போது மேற்படி காபிர்களின் சேனையிலிருந்து தலைவனொருவன் புறப்பட்டு அபூஆமிறு (றலி) வுக்கு முன் வந்து எதிர்த்தான். இவர் அப்பகையனை நோக்கி, "நீ கலிமா மொழிந்து, எங்கள்பரிசுத்தமான இஸ்லாம்மார்க்கத்தை தொடரும்' என்று சொன்னார். இச்சொல்லை அவன் நிராகரித்த படியால், அல்லாஹு தஆலாவை சாக்ஷியாக வைத்துக்கொண்டு, அவனை இரு பிளவாகப்பிளந்து எறிந்தார். மறுபடியும் வேறொரு தலைவன் வந்து எதிர்த்தான். அவனையும் அவ்வாறே கலிமா மொழியச் சொல்ல, அவனும் மறுத்ததால், அப்படியே இரண்டாய்ப் பிளந்

தார். இவ்வாறே ஒருவன் பின் ஒருவனாய் ஒன்பது பேர்கள் வந்து எதிர்த்தார்கள். அவ்வொன்பது பேர்களையும் அபூ ஆமிறு (றலி) அவ்வாறே பிளந்து பிரேதமாகச் சாய்த்தார். பிறகு வேறொரு பிரதான தலைவன் அதிக ஆக்கிரமத்தோடு வந்து எதிர்த்தான். அவனையும் அப்படியே கலிமா சொல்லும்படி ஏவினார். அவனும் முன் வந்து மாண்டவர்களைப்போல நிராகரித்தபடியால், அபூ ஆமிறு (றலி) "யா அல்லாஹ்! இந்த கொடியவனைக் கொல்லுகிறேன்; அதற்கு நீயே சாக்ஷி" எனச் சொல்லிக்கொண்டு, அவனை வெட்ட நெருங்கினார். அப்போது அவன் "ஆண்டவனே! இதற்கு நீ சாக்ஷியல்ல" என்று சொல்லிக்கொண்டு பின்னடைந்து போய் விட்டான். அதற்குப் பின் அக்காபிர்களெல்லாரும் ஒருங்கு திரண்டு ஆக்கிரமித்து அடர்த்தார்கள். அபூ ஆமிறு (றலி) வும் தமது வீரர்களைப் பகைவர் தளத்தின் அணிகளில் நடத்தி, அடர்த்து போரிட்டார். இவர் எவ்வளவு திடகாத்திரமுள்ள வீராதி வீரர்களும் அஞ்சத்தக்கவிதமாய் நின்று போரிடும்போது, காபிர்களில் ஒருவன் வில்லை வளைத்து, பாணத்தைப் பூட்டி எய்தான். அப் பாணம் இவருடைய அகன்ற மார்பில் தைத்தது. மேற்படி பாணம் பட்டதால் அபூ ஆமிறு (றலி) மயங்கி, குதிரையிலிருக்க வசமற்று, தரையில் வீழ்ந்தார்.

தமது சிறிய தகப்பனார் நிலத்தில் விழுந்து கிடப்பதை அபூ மூசா (றலி) வந்து பார்த்து, மனம் புழுங்கி, சினமீறி, அவர் கையிற்பிடித்திருக்கும் கொடியை தமது கையிற் பிடித்து அஸ்ஹாபிகளாகிய போர்வீரர்களை ஒருங்கு திரட்டிக் கொண்டு, அதிக வேகத்தோடு மாற்றார் மீது விழுந்து, பார்ப்பவர் திகில் கொள்ளத் தக்கபடியாய் அடர்த்து போரிட்டார். இவர் அப்படி நின்று பொரும்போது, முன் அபூ ஆமிறு (றலி) மேல் பாணப் பிரயோகஞ் செய்த பாதகன் குதிரையைச் செலுத்தி வந்து, அபூமூசா (றலி) வை எதிர்த்து "என் சைனியத்தை நிலைகுலையச் சங்கரிக்கும் உன்னை இதோ கொல்லுகிறேன் பார்" என்றான். அதற்கு இவர் "என் சிறிய தந்தைமேல் பாணம் எய்த உன்னை ஒரே வீச்சில் பிரேதமாகச் சரிக்கிறேன் பார்" என்றார். இவர் இப்படிச் சொன்ன போது அவன் வெகுண்டு, வில்லை வளைத்து அஸ்திரங்களைத் தொடுத்துச் சோனாமாரிபோல இவர் மேல் சொரிந்தான். அவன் எய்த பாணங்கள் எல்லாவற்றையும் அபூ

மூஸா (றலி) தமது கைவாளால் அறுத்து விலக்கிவிட்டு தாம் சொன்னது போலவே ஒரு வீச்சில் அவனை இரண்டாகப் பிளந்து சாய்த்தார். அப்பாதகன் இறந்தபின் அதிக ஆக்கிரமத்தோடு மாற்றார் தளத்தில் நுழைந்து, அவர்களனைவரும் சின்னாபின்னமாகப் பொருதார். மற்ற அஸ்ஹாபிகளும் அடர்த்து தாக்கினார்கள். சற்று நேரத்தில் மாற்றார் தளம் அநேகரை அமர்க் களத்தில் இழந்து விட்டு, முறிந்து சிதறிற்று.

அமர்க்களத்தில் எதிர்த்து நின்ற மாற்றார் சிதறுண்டு பல வழியும் ஓடினவுடன், அபூமூஸா (றலி) அஸ்ஹாபிகளை ஒருங்கு திரட்டிக் கொண்டு, அபுத்தாசு என்னும் ஊருக்குள் புகுந்து சூறையாடினார். அநேக ஆண்களும், பெண்களும் சிறை பிடிக்கப் பட்டார்கள். ஒட்டகாதி மிருகங்கள் பல பிடிபட்டன. அன்றியும், திரவியங்களும், சாமான்களும் கணக்கின்றி அகப்பட்டன. கொள்ளையிடப் பட்ட எல்லாவற்றையும் அபூ மூஸா (றலி) ஒன்றாகச் சேர்த்து, அஸ்ஹாபிகளையும் அழைத்துக் கொண்டு, அம்பு பட்டுக் குறைப்பிராணியாய்க் கிடக்கும் அபூ ஆமிறு (றலி) இடத்தில் வந்தார்.

தமது சிறிய தகப்பனாராகிய அபூ ஆமிறு (றலி) இடத்தில் வந்த அபூ மூஸா (றலி) சிறிய தந்தையை அடுத்து நின்று நோக்கி, "தந்தையே! தங்களை அஸ்திரத்தால் எய்த சண்டாளனை அல்லாஹு தஆலா என் கையால் மடியவைத்தான்" என்றார். அப்போது அவர் மகனை நோக்கி, "மகனே! உனது கைகொண்டு என் மார்பில் பாய்ந்திருக்கும் அஸ்திரத்தைப் பிடுங்கு" என்றார். உடனே அபூமூஸா (றலி) தமது கையால் மேற்படி அஸ்திரத்தை மெள்ளப் பிடுங்கினார். பிடுங்கின மாத்திரத்தில், அக்காயத்தின் வழியே உதிரம் பிரவாகிக்காமல் வெண்ணீர் பிரவாகித்து ஒரு அருவிபோலப் பாய்ந்து ஓடிற்று. அதைக் கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

மறுபடியும் அபூ ஆமிறு (றலி) மகனை நோக்கி "என் மகனே! நபிநாயகம் (ஸல்) அவர்கள் எனக்குத் தந்த சேனாதிபதித்துவத்தை நான் உனக்குத் தந்தேன். நீ நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்திற் சென்று, அவர்களுக்கு என் ஸலாம் சொல்லி, எனது பிழைகளைப் பொறுக்கும்படி அல்லாஹு தஆலா இடம்

துஆகேட்கச் சொன்னேனென்னும் சொல்" என்று சொல்லி விட்டு, ஷஹீதாய்ச் சுவர்க்கஞ் சேர்ந்தார். அப்போது அபூமூஸா (றலி) சிறியதந்தையை அடக்கஞ் செய்து விட்டு, அஸ்ஹாபிகளோடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து, அபுத்தாஸில் சூறையாடினவைகளை யெல்லாம் ஒப்புவித்து, அங்கு நிகழ்ந்த சண்டையின் வரலாற்றையும், தமது சிறியதந்தையின் சங்கதிகளையும் சொன்னார். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் உலுசெய்து அபூ ஆமிறு (றலி) வின் பிழைபொறுக்கத் துஆ இரந்தார்கள். பின் அபூமூஸா (றலி) தமக்கும் துஆ இரக்க வேண்டிக் கொண்டதால், அவருக்காகவும் இரந்தார்கள்.

முன் அபுத்தாஸில் அபூ ஆமிறு (றலி) நின்று பொரும் போது வந்து எதிர்த்து, பின்னடைந்து போன தலைவன், பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து முஸ்லிமானார். அவர் நாமம் ஷரீபு. பின் அபூ ஆமிறு (றலி) வின் ஞாபகக் குறியாக ஷரீபு என்னும் நாமத்தை மாற்றி, அபூ ஆமிறு என்று அவருக்கு நாமகரணஞ் செய்யப்பட்டது.

105-வது அத்தியாயம்.

தாயிபு நகரம் பிடிப்பட்டது.

விருத்தம்.

மாயவன் குபிரர்கள் மாய்ந்து நல்வழி
தூயவன் பொடுதருஞ் சுகுணநாயகர்
தாயுபென் றிடுநகர் தனைக் கொண்டார்கனி
மேயவன் பெருமிதம் விளங்கச் சொல்லுவாம்.

வசனம்.

இருலோக ரக்ஷகரான நபிகட்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் குனைனிலிருந்து தாயிபின் மேல் சேனை நடத்திச் செல்ல எத்தனித்து, காபிர்கள் முறிந்தோடின ஒவ்வொரு தானத்திற்கும் அஸ்ஹாபிகளை அனுப்பிக் கொண்டிருக்கும் போதே, முன் குனைன் படையின் ஆரம்பத்தில் முறிந்தோடின அஸ்ஹாபிகளில் அப்போதே திரும்பி வந்த ஆயிரம் பேர்கள் போக மீந்தவர் [illegible]வரும் திரள் திரளாய் மீண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்

களோடு சேர்ந்து கொண்டார்கள். பின் அபுத்தாஸிலிருந்து முறிந்தோடின அபு என்னும் அரசன் தாயிபு நகரத்தில் போயிருக்கிறதாக நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குச் செய்தி வந்தது. அதனால், நபிநாயகமவர்கள் முக்கியமாக நாம் தாயிபின் மேல் சேனை நடத்த வேண்டுமென்று கருதி, தங்கள் சேனா வீரர்களைப் பிரயாணமாகும்படி கட்டளை பண்ணினார்கள். முந்தி குனைனிலும், பிந்தி அபுத்தாஸிலும் சிறையாக்கப்பட்ட ஆண் பெண் ஆக ஆறாயிரம் பேர்களையும், எண்ணிக்கையற்ற ஒட்டகாதி மிருகங்களையும் சாமான்களையும், திரவியங்களையும் ஒன்றாகச் சேர்த்து சிகுறானத்தென்னும் தலத்தில் வைத்து, மஸ்ஊது (றலி) வைச் சில வீரர்களோடு காவலாக நியமித்து விட்டு, மேற்படி தாயிபை நோக்கிப் புறப்பட்டார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனா சமுத்திரத்தோடு தாயிபை நோக்கி நடந்து, நஜிது நகரத்தார் மக்கமா நகரத்திற்கு ஹஜ்ஜு செய்ய வரும்போது இகுறாம் கட்டக் குறித்திருக்கும் எல்லையாகிய கறுனி மூகல் என்னும் தலத்தில் வந்து ஒருபொழுது தங்கியிருந்து, மீண்டும் பிரயாணமாய் உலியத்து என்னும் தலத்தில் சென்று பாளையமிறங்கினார்கள். அப்போது மேற்படி உலியத்து என்னும் தலத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தேவாலயமொன்று கட்டினார்கள். அந்த அலங்காரமான புதிய தேவாலயத்தில் நபிநாயகமவர்கள் அஸ்ஹாபிகளோடு அல்லாஹுதஆலாவைத் தொழுதார்கள். பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருக்கையில் பனீலைதுக் கிளையாருக்கும், குதையில் கிளையாருக்கும் தொன்று தொட்டுள்ள பகைமையால், பனீலைதுக்கிளையிலுள்ள ஒரு பாலியன் குதையில் கிளையாருக்குப் பழியொன்று கொடுக்க வேண்டியிருந்தது. மேற்படி பனீலைதுக் கிளையார் காபிர்கள்; குதையில் கிளையார் முஸ்லிம்கள்; மேற்படி பழிக்கு பதில் பழிவாங்க நீண்ட நாள் நாடியிருந்த குதையில் கிளையார் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த உலியத்து என்னும் தலத்தில் தங்கினபோது சமயம் வாய்த்து, அந்தப் பழியை நிறைவேற்றிக் கொண்டார்கள். முஸ்லிமானவர்கள் காபிர்களிடத்தில் பிரதிபழி வாங்கினதன் ஆரம்பம் இதுதான். அதனால் முஸ்லிமானவர்கள் எல்லாரும் சந்தோஷ சாகரத்தில் முழுகினார்கள்.

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் உலியத்து என்னும் தலத்தை விட்டுப் பிறப்பட்டு, முன் பாளையமிறங்கி ஒரு பொழுது தங்கியிருந்த கறுனி முகல் என்னுந் தலத்திற் சென்று அபு என்னும் அரசனால் அங்குக்கட்டப்பட்டிருக்கும் அரணின் கீழ் பாகத்தைத் தகர்த்துத் தள்ளிவிட்டு, அங்கிருந்து குன்றுகளடர்ந்த நகு என்னும் குறிச்சியில் போய்த் தாளைய மிட்டார்கள். அந்தத் நகு வென்னும் குறிச்சியில், பனீஇலாபுக் கிளையார் குடியிருக்கின்றார்கள். அந்தத் தானத்தில் கிளைகளடர்ந்த தவாதிறு என்னும் பெரிய விருக்ஷ மொன்று ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் நிழலில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் வீற்றிருந்தார்கள்.

அதன் பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி குறிச்சியிலிருந்து பிரயாணமாய், தாயிபு நகரத்தை நோக்கிச் சென்றார்கள். வழியில் தக்கீபுக்கிளையார் விளைத்திருந்த வேளாண்மைகளையும், கனிதரும் விருக்ஷங்களையும், கிழங்கு காய்கள் உண்டாகும் தருக்கள் கொடிகளையும் அஸ்ஹாபிகள் சிதைத்து அழித்துக் கொண்டே போனார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு பகைவர் வசிக்கும் சிறு பாடிகள் தோறும் கொள்ளையிட்டுக் கொண்டு நடந்து தாயிபு நகரத்தை அடுத்தார்கள் அப்போது தாயிபு நகரத்து அரணின் வாசற் கபாடம் சார்த்தப்பட்டு, ஜனப்பழக்கமின்றி ஓய்ந்திருந்தது.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் சேனை மதிலை நெருங்கின போது, நகரத்திலிருக்கும் அபு என்பவன் போர்வீரர்களைத் திரட்டிக்கொண்டு கோட்டையின் அலங்கத்தில் வந்தான். அதை அஸ்ஹாபிகள் கண்டு, அஸ்திரங்களையும், கவண்கற்களையும் சோனா மாரிபோல அலங்கத்தில் கூடிநிற்கும் காபிர்கள் மேல் பொழிந்தார்கள். அப்போது காபிர்களும் உன்னதமான அவ்வரணின் அலங்கத்திலும் கொத்தளத்திலும் திரண்டு நின்று பாணங்களை அபரிமிதமாக அஸ்ஹாபிகள் மீது சொரிந்தார்கள். அவர்கள் மேலிருந்து சொரியும் கொடிய பாணங்கள் மழைபோல அக்கினி மயமாய் வந்து தைப்பதால், அஸ்ஹாபிகளில் சிலர் ஷஹீதானார்கள் பாணத்தால் அஸ்ஹாபிகள் ஷஹீதாவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு, அவர்களை அங்கிருந்து திருப்பிக்கொண்டு, பகைவர்கள் எய்யும் பாணம் எட்டாத தூரத்தில் வந்து கூடாரங்களிட்டுத்

தங்கும்படி கட்டளை பண்ணினார்கள். அப்படியே அஸ்ஹாபிகள் அவ்விடத்தில் கூடாரங்களிட்டுத் தங்கினார்கள். பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பிராணநாயகிகளாகிய ஆயிஷா (றலி) அவர்களுக்கும், உம்முஸல்மா (றலி) அவர்களுக்கும் வெவ்வேறாக இருகூடாரங்களிடுவித்து, அவ்விரு கூடாரங்களுக்கும் இடையில் ஆலய மொன்று செய்வித்து, அதில் தொழுது இருந்தார்கள்.

இதற்கிடையில் தாயிபு நகரத்துக் கோட்டை வாசல் திறக்கப் படவில்லை. அதனால், அன்றைத்தினம் அஸ்ஹாபிகள் அநேகர் ஒருங்கு திரண்டு, யுத்த சன்னத்தர்களாய்ப் புறப்பட்டு, அந்நகரத்தையடுத்துள்ள கிராமங்களையும், காவனங்களையும் அழித்து நாசஞ்செய்து கொண்டு, விற்களை வளைத்தும், கவண்களைச் சுழற்றியும், அஸ்திரங்களையும், கற்களையும் சொரிந்தவண்ணமாய் அரண் மதிலை நெருங்கினார்கள். அப்போது மேற்படி மதிலின் அலங்கத்திலும், கொத்தளத்திலும் திரண்டு நிற்கும் காபிர்கள் அக்கினியை வளர்த்து, வாரிவாரி அஸ்ஹாபிகள் மீது எறிந்தார்கள். அதன் சூட்டின் கொடுமையை ஆற்றாது அஸ்ஹாபிகள் வெருண்டு பின்வாங்கினார்கள். பின்வாங்கி ஓடிவருகையில், கோட்டை வாசலிலுள்ள கபாடத்துக் காவல் வீரர்கள் அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள். அவ்வஸ்திரங்களுக்கு அஸ்ஹாபிகள் இலக்காகாமல் உபாயமாகப்பாசறையில் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "அல்லாஹு தஆலாவின் உதவி கொண்டு நாளைத்தினம் நாம் எல்லாரும் ஒருங்கு திரண்டு போய், அப்பகைவர்களோடு பொருது ஜெயம் பெறுவோம்" என்றார்கள். அதற்கு அஸ்ஹாபிகள் "யாறஸூலல்லா! இவ்வரண் பிடிபடமாட்டாது; நமது நகரத்திற்கு நாம் போய் விடலாம்" என்றார்கள். அஸ்ஹாபிகள் இப்படிச் சொன்ன போது நபிநாயகம் (ஸல்) அவர்கள், "அஸ்ஹாபிகளே! அப்படிக்கல்ல; நாளை சூரியோதயத்தில் ஒரு தரம் அடர்ந்து பார்ப்போம்" என மறுத்துச் சொன்னார்கள். அன்று சூரியன் அஸ்தமித்தது.

அன்று இரவு கழிந்து சூரியோதயமான போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனாவீரர்கள் அனைவரையும் ஒருங்கெழச் செய்து, மதிலை யடுத்து நின்று பொரும்படி கட்டளை

பண்ணினார்கள். அப்படியே அஸ்ஹாபிகளனைவரும் திரண்டு, ரணபேரிகையார்ப்ப மதிலை வளைத்து நின்று, பாணங்களையும், கவண்கற்களையும் அபரிமிதமாகச் சொரிந்தார்கள். காபிர்களும் அலங்கத்தில் நின்று கொண்டு, கைசலிக்காமல் பாணங்களையும், கவண் கற்களையும் பொழிந்தார்கள். காபிர்கள் உயர் விலிருந்து பிரயோகிப்பதால், அவர்கள் பாணங்களும், கவண் கற்களுமே மிகைத்தன. அதனால், அஸ்ஹாபிகள் பலர் காயமுற்றார்கள். பின்னும் பின்னும் பகைவர் தளர்வின்றிப் பொழிவதால், அஸ்ஹாபிகள் நிற்க வசமற்றுத் திரும்பிப் பாசறையில் வந்து சேர்ந்தார்கள்.

அன்று போய் மறுநாட் காலையிலும் அஸ்ஹாபிகள் திரண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏவற்படி மூன்றாந்தரமாகச் சென்று, அஸ்திரப் பிரயோகஞ் செய்தார்கள். அப்போதும் பகைவர்கள் அலங்கத்திலிருந்து செய்த அஸ்திரப் பிரயோகத்தால் பலர் காயமுற்று மீண்டு வந்தார்கள்.

அன்றிரவு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொப்பன மொன்று கண்டு, அபூபக்கர் (றலி) அவர்களிடம் சொன்னார்கள். அதற்கு அபூபக்கர் (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லா! தாங்கள் கண்ட சொர்ப்பனத்தின் பயனை ஆராயுமிடத்து நாம் கோரிய கருமம் நிறைவேறாது" என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களும், அவர்களை நோக்கி "அபூபக்கரே! நானும் அப்படியே அந்தச் சொப்பனத்திற்குப் பயன் பார்த்து, முந்தியே தீர்மானஞ் செய்து கொண்டேன்" என்றார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனா வீரர்களோடு இருபத்திரண்டு தினம் வரையும் தாயிபு நகரத்தை முற்றுகை யிட்டிருந்தார்கள். பிறகு, துல்காயிதா மாதம் பிறந்தது. மேற்படி மாதத்துப் பிறைகண்டபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள், இனி நாம் இந்நகரத்தின் மேல் சண்டை தொடங்குவது ஹறாமென்று விலக்கி விட்டு, ஓய்ந்திருந்தார்கள். அப்போது, குவைலா (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து "யாறஸூலல்லா! இன்றைத் தினம் தாயுபு நகரம் பிடிபடுமானால், கைலானுடையமகள் பாதிஆவின் ஆபரணங்களையாவது, அகீலுடைய மகள் பாரிகாவின் ஆபரணங்களையாவது எனக்குத்

தருவீர்களா?" எனக்கேட்டார்கள் அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "குவைலாவே! இந்தத்தாயிபு நகரத்துத் தக்கீபுக்கிளையாரை ஜெயிக்கும் தன்மையை அல்லாஹுத்தஆலா இப்போது சங்கற்பிக்க வில்லை" என்று கூறினார்கள் இச்சொல்லை குவைலா (றலி) அவர்கள், உமறு (றலி) அவர்களிடம் போய்ச் சொல்லிக் காட்டினார்கள். அப்போது உமறு (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து "யாறஸூலல்லா! தேவரீர் குவைலா (றலி) இடத்தில் இந்தத் தாயிபு நகரம் பிடிபடாது என்றும் குறிப்பாய்ச் சொன்னீர்களாம். ஆகையால், நாம் விருதாவில் ஏன் இங்கே தங்கியிருக்க வேண்டும்? சேனை புறப்படும்படி பறை சாற்ற ஏவட்டுமா?" எனக்கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை புறப்படும்படி உமறு (றலி) அவர்களுக்கு உத்தரவு செய்தார்கள். உடனே பாசறை சாற்றப்பட்டது. அஸ்ஹாபிகளெல்லாரும் சர்வசாமான்களோடு புறப்பட்டார்கள்.

தாயிபு நகரத்து அரணை வளைத்து பொருத மூன்று தடவைகளிலும் பாணந்தைத்து ஷஹீதான அஸ்ஹாபிகள் குறைஷிகளில் எழுபேர், அன்சாரீன்களில் நாலுபேர், பனீலைதுக்குடும்பத்தாரில் ஒருவர், நபிநாயகம் (ஸல்) அவர்களின் மாமியார் குமாரர் அப்துல்லா (றலி) ஆகப்பதின் மூன்று பேர்கள். அபூபக்கர் (றலி) அவர்கள் குமாரர் அப்துல்லா (றலி) அவர்கள் ஒருபாணந்தைத்துக் காயமுற்றுப்பின் சுகமடைந்தார்கள். அதன் தழும்பு கிரியான பரியந்தம் அவர்களுக்கு இருந்தது.

தாயிபு நகரத்தை முற்றுகை யிட்டிருந்த நபிநாயகம் (ஸல்) அவர்கள் சேனை அங்கிருந்து புறப்பட்ட போது, தாயிபு நகரத்திலிருந்த காரிது உடைய குமாரர் நக்கு என்பவரும், அவர் கிரயத்திற்குவாங்கின இருபத்திரண்டு தொண்டர்களும் பகுறத்து என்னும் மலைவழியேயிறங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து, பணிந்து நின்று கலிமா சொல்லி முஸ்லிமானார்கள்.

அப்போது அஸ்ஹாபிகள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து, தாயுபு நகரத்திலிருக்கும் தக்கீபுக் குடும்பத்தாரை பதுஆ செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகள் விருப்பத்தின்படி பதுஆ

செய்யாமல், யாஅல்லா! தக்கீபுக்கிளையாரை இஸ்லாத்திலாக்கி, என்னிடம் வரச்செய்யென்று துஆ செய்தார்கள்.

[நபிநாயகம் (ஸல்) அவர்கள் செய்த துஆவின்படி மேற்படி தக்கீபுக் கிளையார் சிலதினங்களுக்குப் பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து ஈமான்கொண்டு முஸ்லிமானார்கள். அவர்களுக்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் உதாக்காக்கள் என்று பெயர் தரிப்பித்தார்கள்.]

பிற்பாடு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சேனாவீரர்கள் புடைசூழ தாயிபு எல்லையை நீங்கி, முன் தாங்கள் இட்டகொள்ளைப் பொருள்களை வைத்துக் காவற்படுத்திவந்த ஜிஇறானத் என்னும் தலத்தில் வந்தார்கள். மேற்படி தலத்தில் கூடாரங்களிட்டுத் தாணையமிட்டுத் தங்கினபின், முன் ஹுனைனில் வந்து எதிர்த்து நின்று பொருத காபிர்களனைவரும் திரண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து, ஈமான் கொண்டு இஸ்லாமாய், எங்கள் குடும்பதில் பாலுண்டு வந்தவர்களல்லவா வென்று நபிநாயகம் (ஸல்) அவர்களை முறை கொண்டாடினார்கள்.

அப்போது, நபிநாயகம் (ஸல்) அவர்களின் செவிலித் தாயாராகிய ஹலிமாவின் கோத்திரத்தாராகிய சயிது வமிசத்திலுள்ள சயிது என்னும் ஒரு கவிராயர், நபிநாயகம் (ஸல்) அவர்களின் அலங்காரமான அற்புதங்களையும், ஹுனைன் நகரத்தின்மீது படையெடுத்து வந்த வரலாறுகளையும் நிகழ்ந்த சண்டையையும் ஹுறைபாடிய விவரத்தையும் அலங்கரித்து, சிறந்த கவிதைகளால் பிரபந்தமொன்று பாடினார். மேற்படி பிரபந்தத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு ஆனந்தமடைந்து, அந்தப் பிரபந்த கர்த்தாவாகிய சயிது என்பவரை நோக்கி "அப்துல் முத்தலிபு வமிசத்தாருடைய பொருள்களும், எங்களுடைய பொருள்களும் உங்களுக்குச் சொந்தமானவை" என்று சொன்னார்கள். இச்சொல்லைக் கேட்டிருந்த குறைஷிகள் நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பணிந்து "யாறசூலல்லா! எங்கள் பொருள்கள் ஒரு தினையளவா யிருந்தபோதிலும், அது அல்லாஹு தஆலாவுக்கும், தங்களுக்கும் உரியதன்றி, மற்றவர்களுக்கு உரித்தாகுமா?" என வினவினார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் யாதொன்றுஞ் சொல்லாமல், மேற்படி பிரபந்த கர்த்தாவின் குடும்பத்தாராகிய சயிது வமிசத்தா

ரனைவரையும் அழைத்து "நீங்கள் எங்கள் வசம் இருக்கும் சிறைகளையாவது அல்லது, ஒட்டகமுதலாயுள்ள மற்றப் பொருள்களையாவது விரும்பினதைக் கேளுங்கள்; தருகிறோம்" என்றார்கள். அப்போது அவர்களெல்லாரும் ஒருங்கொத்து ஆலோசனை பண்ணி, நபிநாயகம் (ஸல்) அவர்களிடம் "பிடிப்பட்ட சிறைகளையே எங்களுக்குக் கொடுங்கள்" எனக் கேட்டார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "தோழர்காள்! பிடிபட்டிருக்கும் சிறைகளை நான் இந்தக் குடும்பத்தாருக்கு இனாமாகக் கொடுக்கப்போகிறேன்; அதற்கு நீங்கள் உடன்படுங்கள். அப்படி உடன் படாதவர்களின் வீதத்தில்வரும் சிறைகளுக்குக் கிரயத்தை உடையவர்கள் வசம் கொடுப்பேன்" என்றார்கள். அதற்கு அஸ்ஹாபிகள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து யோசித்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறசூலல்லாஹ்! சிறைகளை கொடுத்து விடுவது எங்களுக்குச் சம்மதந்தான்" என்றார்கள். உடனே மேற்படி சிறைகளையெல்லாம் கொண்டுவரும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை பண்ணினார்கள். ஹுனைன் நகரத்திற் பிடித்த சிறைகளாகிய ஆண் பெண் ஆறாயிரம் பேர்களையும், அஸ்ஹாபிகள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் கொண்டுவந்து விடுத்தார்கள். விடுத்தபோது அச்சிறைகளிலிருந்து ஒருபெண் நபிநாயகம் (ஸல்) அவர்களை யடுத்து வந்து "யாறசூலல்லாஹ்! நான் தேவரீருடைய செவிலித் தாயாகிய ஹலிமாவின் மகளாகிய சைமா" என்றார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமடைந்து, தங்கள் உத்தரீயத்தையெடுத்து நிலத்தில் விரித்து, தங்கள் சகோதரியாகிய சைமாவை அதில் இருக்கும்படி உபசரித்து வேண்டினார்கள். சைமா அந்த ஒப்பற்ற உத்தரீயத்தில் இருந்தார்கள். அதன்பின் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டி வளர்த்த செவிலித் தாயாராகிய ஹலிமா அம்மா அவர்கள் அந்தச் சிறை கூட்டத் லிருந்து நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி வந்தார்கள். அவர்கள் வருவதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கண்டு எழுந்து, எதிர்சென்று உபசரித்து, அழைத்து வந்து, தாங்கள் மேலே போட்டிருக்கும் மற்றொரு சால்வையை யெடுத்துத் தரையில் விரித்து அதில் இருத்தினார்கள். பிறகு ஹுனைனிலும், அபுத்தாஸிலும், சிறைபிடிப்பட்ட ஆண் பெண் ஆறாயிரம் பேர்களையும்,

கவர்ந்த நிரைகளில் இருபத்து நாலாயிரம் பசுக்களையும், நாற்பதினாயிரத்துக்கு மேற்பட்ட செம்மறி யாடுகளையும், தங்கள் தாயாராகிய ஹலீமா அவர்கள் முகத்திற்காக வேண்டி, ஸஃது குடும்பத்தாருக்குக் கொடுத்தது மன்றி, நாலாயிரம் வெள்ளி நிறையுள்ள பல நாணயங்களும் கொடுத்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் உபசரித்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ஊழியர்களில் ஒருவருக்கு ஒரு பெண்ணை விவாகம் முடித்து, அவ்விருவரையும் சகோதரியாகிய ஷைமாவுக்கு இனமாகக் கொடுத்து, மேற்படி ஸஃது கிளையார்களையும், ஹலீமா அம்மா அவர்களையும், ஷைமாவையும் குனைன் நகரத்திற்கு அனுப்பினார்கள். ஸஃது கிளையார் அளவற்ற திரவியங்களை அடைந்து 'பாக்கியவான்களானோ' மென்று அகங்களித்து, குனைன் நகரஞ் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் தாயிபு நகரத்தி லிருக்கும் அபு என்னும் அரசனிடஞ் சென்று "அபுவே! நீ இஸ்லாம் மார்க்கத்தை யனுசரித்துக் கலிமா சொல்வாயானால், உன்னிடம் கொள்ளை விட்ட சொத்துக்களையும் உன் குடும்பத்திற் பிடித்த சிறைகளையும் உனக்குக் கொடுத்து விடுகிறது மல்லாமல், மேற் கொண்டு நூறு ஒட்டகங்களும் தருகிறோம்" என்று சொல்லும்படி ஒரு தூதரை அனுப்பினார்கள். அத்தூதர், தாயிபு நகரஞ் சேர்ந்து அபுவை யடுத்து, மேற்கண்ட வண்ணம் சொன்னார். இதைக் கேட்டு அபு மனம் மகிழ்ந்து, அப்போதே இரகசியமாகத் தாயிபை விட்டுப் புறப்பட்டு, ஜிகுரானத் என்னும் தலத்தில் வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்களை யடுத்துப் பணிந்து, கலிமா சொல்லி முஸ்லிமானார். நபி நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்குச் சொல்லி யனுப்பின படியே கொடுத்தார்கள். அதனால் அவர்கள் ஆனந்த மடைந்து, சில அலங்காரமான வாழ்த்துக் கவிதைகளை, நபி நாயகம் (ஸல்) அவர்கள் பேரில் பாடினார். அதன் பின் நபி நாயகம் (ஸல்) அவர்கள் அபு என்பவரையே தாயிபு நகரத்திற்குத் தங்களின் கீழ் அரசு செய்யும் அதிபராக நியமித்து, அங்குள்ள தக்கீபு கிளையாரை சன்மரித்துத் தீனைப் பரவச் செய்யு மென்று கட்டளை பண்ணி, தாயிபு நகரத்திற்கு அனுப்பினார்கள். அவர் அப்படியே அவ்வூரிற் போய் அரசு செய்திருந்தார்.

பின்பு, நபி நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை யழைத்து, பகைவர் வசம் கொள்ளை விட்ட பொருள்களை யெல்லாம் கொண்டு வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே எல்லாவற்றையும் அஸ்ஹாபிகள் கொண்டு வந்து, நபி நாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வைத்தார்கள். அந்தப் பொருள்களில் மக்கமா நகரத்து அறபித் தலைவர்களுக்கும், துலபாக்களுக்கும், அயலூர் வாசிகளாயுள்ளவர்களுக்கும், புதிதாக இஸ்லாத்திற் சேர்ந்து பூரண உறுதி கொண்டிராதவர்களுக்கும், அவைகளைப் பாகித்து, ஒவ்வொருவருக்கு நூறு நூறு பசுக்களும், பல செம்மறி யாடுகளுமாகக் கொடுத்தார்கள். அன்றியும், கறுபு உடைய குமாரர் அபாஸுபியான் (றலி), உமையாவுடைய குமாரர் சபுவான் (றலி), குசைனுடைய குமாரர் உயைனா (றலி), காபிஸு உடைய குமாரர் இக்கில் (றலி) இந்நால்வருக்கும், ஒவ்வொருவருக்கு நூறு நூறு பசுக்களும், சில சில செம்மறியாடுகளுமாகக் கொடுத்தார்கள். மிறுதாசு உடைய குமாரர் அப்பாஸ் (றலி) வுக்குச் சில பசுக்களும் சில செம்மறி யாடுகளும் கொடுத்தார்கள். அவர் தமக்கு மாத்திரம் குறைத்துக் கொடுத்த முகாந்திர மென்ன வென்னும் பொருளை யடக்கி ஒரு கவிதை பாடினார். அக்கவிதையை நபி நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, முந்தின நான்கு தலைவர்களுக்கும் கொடுத்த கணக்கின்படி அவருக்கும் கொடுத்தார்கள்.

பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி ஜிகுரானத் என்னும் தலத்தி லிருந்து குனைன் நகரத்திற்கு, பிரதானிகளை நியமனஞ் செய்து விட்டுப் புறப்பட்டார்கள். அஸ்ஹாபிகளென்னும் சேனை வீரர்கள் புடைசூழ, ஜெயபேரிகை முழங்க மக்கமா நகரத்தை நோக்கி நடந்தார்கள். அப்போது, வன வேடர்களிலொருவன் நபி நாயகம் (ஸல்) அவர்கள் முகதாவில் வந்து "நபியே, தமியேனுக்கு ஏதாவது கொடுங்கள்" எனக் கேட்டான். அதற்கு நபி நாயகம் (ஸல்) அவர்கள் அவனை நோக்கி "இதோ இரு குன்றுகளுக்கும் இடையில் மேய்கிற ஆட்டு நிரை யனைத்தும் உனது தான்; ஒப்புக் கொள்" என்றார்கள். உடனே அவ்வேடன் அங்கு மேய்ந்து நின்ற நிரைகளை ஓட்டிக் கொண்டு தான் வசிக்கும் பாடியிற் போய், தனது பந்துக்களை கூவி "முஹம்மது நபி ஈமான் கொண்டவர்களுக்கு இப்படி திரள் திரளாய்த் தானஞ் செய்கிறார்கள்" எனப் பிரஸ்தாபம் பண்ணினான். இதைக் கேட்ட அறபி

வேடர்க ளெல்லாரும் கும்பல் கும்பலாய்த் திரண்டு, நபி நாயகம் (ஸல்) அவர்களைத் தொடர்ந்து வந்து வேண்டினார்கள். அப்படி வந்து கேட்டவர் எல்லாருக்கும் இல்லை யென்று சொல்லாமல் நபி நாயகம் (ஸல்) அவர்கள் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். மக்கமா நகரத்திற்கு வெளியி லிருக்கும் இலைகளடர்ந்த ஜம்றத்து என்னும் விருக்ஷம் வரும் வரையும் கொடுத்துக் கொண்டே வந்து, பின்னர் மேற்படி விருக்ஷத்து அடியில் தங்கினார்கள். அப்போதும் சிலர் வந்து கேட்டதால், தங்களிடத்தில் யாதொரு பொருளுமின்றி, போர்த்தி யிருந்த தம் உத்தரீயத்தை யெடுத்து அவர்களுக்குக் கொடுத்து விட்டு, அஸ்ஹாபிகளை நோக்கி, "இவ்வடவியி லுள்ள விருக்ஷங்களின் இலைகள் எவ்வளவோ அவ்வளவு திரவியங்கள் கைவசமிருந்தாலும், எல்லாவற்றையும் கேட்பவர்களுக்கு நாம் கொடுத்து விடுவோம். நம்மிடத்தில் உலோபித்தனம் என்னத் தனையும் இல்லை. இது உண்மை" என்று பகர்ந்தார்கள்.

அதன் பிறகு மற்றொருவர் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து நின்று "எனக்கும் ஏதாவது கொடுங்கள்" எனக் கேட்டார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி "நாம் உத்தரீயம் வரையும் கொடுத்து விட்டோம்; இப்போது நம் வசம் ஒன்றுமில்லை" என்றார்கள். அவர் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "தாங்கள் இதுவரையும் மனிதரை வேண்டிக் கொடுத்தீர்களே யன்றி, அல்லாஹுத் தஆலாவுக்காக கொடுக்கவே இல்லை" என்றார். நபிநாயகம் (ஸல்) அவர்கள், அவரை நோக்கி "மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களைப்பற்றி, அவர்கள்கூட்டத்தார் நிஷ்டூரம் சொன்னார்கள். அதை அவர்கள்பாராட்டவில்லை. அல்லாஹுத் தஆலா அவர்களுக்கு கிருபை கூர்ந்தான். அப்படியே பிறர்செய்யும் குற்றங் குறைகளைப் பொறுப்பவர்களுக்கு, அல்லாஹுத் தஆலா கிருபையே செய்வான்" என்றார்கள். இன்னும் ஒரு அறபி வேடர், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து நின்று "நபியே! தாங்கள் செய்யும் கருமத்தை நியாயமாகச் செய்யுங்கள்" என்றார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள், அவ்வேடரை நோக்கி "நியாயம் செய்பவர் நாமேயன்றி, வேறுயார்?" என்றார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் கொள்ளைப் பொருள்களைப் பகிர்ந்து குறைஷிகளுக்கும், இதர அறபிகளுக்குமே கொடுத்தார்

களன்றி, மதீனமா நகரத்து அன்ஸாரிகளுக்கு சிறிதும் கொடுக்கவில்லை. அதனால் அவர்களில் சிலர் பொறாமை யடைந்து "யா அல்லாஹ்! நபிநாயகம் (ஸல்) அவர்கள் கொள்ளையிட்ட சொத்துக்களை, குறைஷிகளுக்கும் மற்றவர்களுக்குமே கொடுத்தார்கள். யுத்த களத்தில் நின்று இரத்தஞ் சிந்தப் பாடுபட்ட எங்களுக்கு சிறிதும் கொடுத்து உபகரிக்கவில்லை. ஆனதால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் செய்த இப்பிழையை நீ மன்னிப்பாயாக" என அல்லாஹுத் தஆலா இடம் முறையிட்டு இரந்தார்கள். இதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, மேற்படி மனக்குறையுள்ள அன்ஸாரிகளைத் தங்கள் சமுகத்தில் அழைத்து இருத்தி, அவர்களுக்குப் பலவித நற்போதனைகளைப் பிரசங்கித்து "அன்ஸாரீன்காள்! ஏன் நீங்கள் இவ்விதம் அறிவுமழுங்கி, நல்வழிக்குப் பிரதிபந்தத்தை வருவித்துக் கொள்ளப் பார்க்கின்றீர்கள்? என்னைக்கொண்டு நீங்கள் பிரயோஜனம் பெறவில்லையா? குப்ர் என்னும் அந்தகாரத்தால் மூடிக் கிடந்த உங்கள் மனக்கண் திறந்து நீங்கள் ஆத்மலாபம் பெற்றது என்னாலல்லவா? பந்து மித்திரர்களில் ஒருவருக்கொருவர் பகைமை முதிர்ந்து குரோதங் கொண்டிருந்தநீங்கள், என்னால் ஐக்கியப் படவில்லையா? உடுக்க ஆடையும் உண்ண ஆகாரமுமின்றி தரித்திரத்தில் சிக்குண்டிருந்த உங்களில் சிலர், பாக்கியவான்களானது என்னாலல்லவா? இவற்றை எல்லாம் அல்லாஹுத் தஆலா என்னைக்கொண்டுதானே உங்களுக்கு உண்டாக்கினான்? ஆராய்ந்து பாருங்கள்" என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படி சொல்லுந்தோறும், அவர்கள் வாஸ்தவமென்று தலைகுனிந்தார்கள். மறுபடியும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி "அன்ஸாரீன்களே! மற்றவர்களெல்லாரும் பசுவையும் ஆட்டையும் பெற்றுக்கொண்டார்கள். நீங்கள் என்னை பெற்றுக்கொள்ளப் பிரியமின்றி இருக்கின்றீர்கள் போலும்? நான் மக்காவிலிருந்து ஹிஜ்ரத்துசெய்திராவிட்டால், உங்களிலொருவனாகத் தானே நானுமிருப்பேன்? இவ்வுலகத்தி லுள்ள மனிதர்களெல்லாரும் ஒருவழி நடக்க, நீங்கள்ஒருவழி நடப்பீர்களானால், நான் நீங்கள் நடக்கும் வழியிலேதானே நடப்பேன்? நீங்கள் அன்ஸாரிகள். உங்களுக்கு நானொரு கவசம் போலிருக்கின்றேன். நீங்கள் எல்லாரும் என் ஆதரவென்னும் சிறகில் ஒதுங்கி யிருக்கின்றீர்கள். இதை நீங்கள் எண்ணி நடக்காவிட்டால், எனக்குப் பிற்காலத்தில் வருந்துவீர்கள். பொறாமையை விலக்கி, குற்றங் குறைகளைப் பொறுத்து,

அயலாரோடு ஐக்கியப்பட் டிருப்பீர்களானால், சுவர்க்கத்து உன்னத மான பதவியைப் பெறுவீர்கள். ஹௌலல் கௌதர், என்னும் அரு விக்கரையில் என்னைத் தரிசிப்பீர்கள்'' என்றார்கள். அப்போது, சிலர் இவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேல் ஏன் இப்படி குற்றம் சுமத்தினார்களென்று பரிதபித்தார்கள். அதற்கு அன்சாரீன்களி லே முதியோர்களாயுள்ளவர்களும், ஈமானில் உறுதியில்லாத ஜனங் களுமே அப்படிச்சொன்னார்களென்றார்கள். பிறகுநபிநாயகம் (ஸல்) அவர்கள் மேற்படி அன்சாரீன்களை மீண்டும் நோக்கி "நான் பசுக் களையும், ஆடுகளையும், குறைஷிகளுக்கும் அறபிகளுக்கும் கொடுத்த தற்கு முகாந்திரம், அவர்கள் புதிதாய் ஈமான் கொண்டவர்களான படியால், இஸ்லாத்தில் தரிபாடாக இருக்கட்டுமென்னும் கோரிக்கை யன்றி வேறல்ல. உங்களுக்கு நான் முழுதும் சொந்தமாயிருக்கின் றேன்'' என்றார்கள். இந்தநிர்க்கவசனத்தைக் கேட்டஅன்சாரீன்கள் களிகூர்ந்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஜம்றத்து என்னும் விருக்ஷத்தின் தானத்தை விட்டெழுந்து, சேனாசமுத்திரத்தோடு மக்கமா நகரம் வந்து சேர்ந்து, சந்தோஷமா யிருந்தார்கள். அக் காலத்தில் அந்தப்பகுதிகளில் விக்கிரக ஆராதனை அதிக மாயிருந் தது. நகுலாஎன்னும்தலத்தில் பனீசைபான்கிளையார், அபுசாஎன்னும் விக்கிரகத்தை ஆராதனை செய்து கொண்டிருந்தார்கள். அந்த விக்கிரகத்தை உடைத்து நொறுக்கி யெறியும் வண்ணம், காலிது (றலி) அவர்களை, நபிநாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். அவர்கள் அப்படியே போய் அந்த விக்கிரகத்தை உடைத்து எறிந் தார்கள். அன்றியும் மக்கமா நகரத்திலும், அயலிலும், குதைலு கிளையார் சுவாகு என்னும் விக்கிரகத்தையும், கலபுக் கிளையார் ஒத்து என்னும் விக்கிரகத்தையும், முருதுக் கிளையார் எஊது என்னும் விக்கிரகத்தையும், மக்தல்கிளையார் எஊக்கு என்னும் விக்கிரகத் தையும், குமைறு கிளையார் நசிறு என்னும் விக்கிரகத்தையும், சகிது கிளையார் மனாத்து என்னும் விக்கிரகத்தையும், மக்கமா நகரத்து அறபிக்காபிர்கள் குபல், நாயில், நசா என்னும் மூன்று விக்கிரகங்களையும் வணங்கிவந்தார்கள். இவற்றில் சுவாகு என்னும் விக்கிரகத்தை அம்று (றலி) அவர்கள் போய் உடைத்து எறிந் தார்கள். மற்றவைகளை நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு அஸ்ஹாபிகளையும் அனுப்பி உடைத்து எறிவித்தார்கள். இன்னும்

துல்கலசா என்னும்விக்கிரகத்தை நதும், ஒளஸ் என்னும் இருகிளை யாரும் வணங்கி வந்தார்கள். அதுவும் உடைத்து எறியப்பட்டது.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மக்கமா நகரத்திற்கு முந்தி நியமித்திருந்த அத்தாபு (றலி) அவர்களையே அதிபராக நியமித்து, ஜபல் உடைய குமாரர் மஆது (றலி) அவர்களை மார்க்க விஷய மான போதனைப் பிரசங்கத்திற்கு ஆசிரியராக ஏற்படுத்தினார்கள். இன்னும் மற்ற காரியங்களையும் சீர்ப்படுத்திவிட்டு, இரண்டாந்தரம் உம்றாசெய்தார்கள். உம்றா செய்து தீர்ந்தபின், தங்கள் அஸ்ஹாபிக ளாகிய சேனாவீரர்கள் அனைவரும் புடைசூழ, ஜெயபேரிகை முழங்க, மலக்குகள் வாழ்த்த, மதீனமா நகரத்திற்கு பிரயாண மானார்கள். மக்கமா நகரத்து குறைஷிகளெல்லாரும் ஒருங்கு திரண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிரயாணோபசாரஞ் செய்து வாழ்த்தி அனுப்பினார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சுயநகரமாகிய மக்கா வையும், அதன் பிரஜைகளையும், குனைன், தாயிபு என்னும் அயல் நகரம் இரண்டையும், அவற்றின் கிராமாதி குடிகளையும் தங் களுக்கு சொந்தமாக்கிக் கொண்டு, ஆனந்த பிரவாகத்தில் மூழ்கி, மக்கமா நகரத்தை விட்டுப் புறப்பட்டு, மதீனமா நகரத்தை நோக்கி நடந்து, வனம், வனாந்திரம், மலைக ளெல்லாவற்றையும் கடந்து, மதீனாவை நெருங்கினார்கள். அப்போது மதீனமா நகரத்து முஸ்லிம்களெல்லாரும் ஒருங்கு திரண்டு, எதிர்சென்று உபசரித்து அழைத்தார்கள். அதனால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் களிகூர்ந்து, மதீனமாநகரஞ் சேர்ந்து ஆளுகையைக் கைக்கொண்டு, அரசு வீற் றிருந்து, தீனுல் இஸ்லாமை பல்குவித் திருந்தார்கள்.

106-வது அத்தியாயம்

நபிநாயகம் ஹஜ்ஜு செய்தது

விருத்தம்

நச்சு நாகத்தலை நப்பணுர் புவனமும்
மெச்சு வானுலகமு மடிதொழுவிற நபி
மச்சு மாளிகை நிரை மக்கமாநகர் வயின்
ஹச்சு செய்திடு முயர்க்கதையினைக் கவலுவாம்.

வசனம்.

நபிகள்திலகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்யுங்காலத்தில், மக்கமா நகரஞ்சென்று ஹஜ்ஜு செய்யவேண்டுமென்று விருப்பங்கொண்டார்கள். இவ்விருப்பம் அவர்கள் இதயத்தில் பிறந்த போதே, அஸ்ஹாபிகளில் பிரதானமான சிலரை அழைப்பித்து, நாம் ஹஜ்ஜு செய்வதற்காக மக்காவுக்குப் பிரயாணமாக வேண்டும்; இச்சங்கதியை நமது அஸ்ஹாபிகளெல்லாரும் அறியும்படி பறை சாற்றுவியுங்களென்று கட்டளை பண்ணினார்கள். அப்போது அவர்கள் பறைசாற்றுவோரை யழைத்துக் கட்டளை பண்ணினார்கள். உடனே மேற்படி சங்கதியை குறித்து வீதிகள் தோறும்பறை சாற்றினார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜு செய்வதற்காகவேண்டி மக்கமாநகரத்திற்குப் பிரயாணப் படுகின்றார்கள், நீங்கள் எல்லாரும் புறப்படுங்களென்று அறிவிக்கும் பறை முழக்கங் கேட்டமாத்திரத்தில், அஸ்ஹாபிகள் எல்லாரும் ஆனந்தபரவசராய், புத்துடைகள் புனைந்து, ஆயுதங்கள் தரித்து, சகலகாரியங்களையும் முடித்துக் கொண்டு, மனைகளை விட்டுப் புறப்பட்டுத் தேவாலயத்தில் வந்து கூடினார்கள். தேவாலயமும், அதன் அகன்ற வீதியும், மற்றத்தெருக்களும் அஸ்ஹாபிகளால் நிரம்பியிருந்தன. அருகர் முதலாயுள்ள அஸ்ஹாபிகளெல்லாரும் வந்து கூடினபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து மாளிகை சென்று, புத்துடையுடுத்தி, பாகை தரித்து, மேலங்கி அணிந்து, பாதரக்ஷைகள் பூண்டு, வாள், வேல், தண்டம், வில், அம்பறுத்தூணி, கேடகம் என்னும் இவ்விவாயுதங்களும் புனைந்து பிரயாணஞ் சொல்லிக்கொண்டு, தேவாலயத்திற்கு வந்தார்கள். வந்தபின், ஹஜ்ஜுசெய்யப் புறப்பட்டிருக்கும் அஸ்ஹாபிகளின் தொகை எம்மட்டென்று விசாரித்தார்கள். அப்போது அவ்வஸ்ஹாபிகளைக் கணக்கிட்டார்கள்; நாற்பதினாயிரம் பேர்களென்று தொகை காணப்பட்டது. அதனால் நபிநாயம் (ஸல்) அவர்கள் ஆனந்தமடைந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமாநகரத்தி லிருந்து புறப்படுவதற்குமுன் நாற்பதினாயிரம் பேர்கள் அஸ்ஹாபிகள் கணக்கிடப்பட்டார்கள். பிந்தியும் அநேகர் வந்து கூடினார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள், பிரதான அஸ்ஹாபிகள் பலர் புடைசூழ தேவாலயத்திற் பிரவேசித்து 'இரண்டு றக்அத்துத் தொழுது துஆ கேட்டு அங்கிருந்து முன்றிலில் வந்து, தங்களுக்காக தயார்செய்து நிற்கும் மேலான ஒட்டகத்திலேறி, அதன் முதுகில் விசித்திரமாக இட்டிருக்கும் தவிசில் வீற்றிருந்தார்கள். அவர்களுக்கு முன் உக்காபு என்னும் விஜயத்துவஜம் பிடிக்கப்பட்டது. ஜெயபேரிகைகள் சமுத்திரம் போல முழங்கின. அஸ்ஹாபிகளும் தங்கள் தங்கள் வாகனங்களாகிய ஒட்டகங்களிலும், குதிரைகளிலும், கோவேறுக் கழுதைகளிலும் ஏறினார்கள். அநேகர் கால் நடைகாரார்களாக சென்றார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள், அஸ்ஹாபிகள் புடைசூழ மதீனமா நகரத்தை விட்டு வெளிப்பட்டு, சிறிது தூரம் வந்து சமதரையான ஒரு மைதானில் நின்றுகொண்டு, தங்கள் தோழர்களை நோக்கினார்கள். அப்போது அவர்கள் அதிக தூரம் பரவி சமுத்திரத்திற்கு ஒப்பாய்த் தோற்றப்பட்ட படியால், நபிநாயகம் (ஸல்) அவர்கள் இதயத்திற்பிறந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. அவ்வித ஆனந்தத்தோடு நபிநாயகம் (ஸல்) அவர்கள், மலக்குகள் பூமாரி பொழிய, மக்கமா நகரத்தை நோக்கிச் சென்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் செல்லும் மார்க்கத்தில், ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், அல்லாஹு தஆலா இடத்திலிருந்து அடிக்கடி வேத வாக்கியங்களைக் கொண்டு வந்து அறிவித்துக் கொண்டிருந்தார்.

இவ்விதம் அடுத்தடுத்து இறங்கும் வேதவாக்கியங்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் மனனஞ்செய்து கொண்டே சென்றார்கள். இராக்காலங்களிலும், பகற்காலங்களிலும் தங்கும் தானங்களில் தங்கி, நடக்கும் தானங்களில் நடந்து வெகு தினஞ் சென்றபின், மக்கமா நகரத்தை யடுத்திருக்கும் துல்குலைபா என்னும் தலத்தை சேர்ந்து, அங்கே விடுதிவிடும்படி அஸ்ஹாபிகளுக்குக் கட்டளை பண்ணினார்கள். அப்படியே அஸ்ஹாபிகளெல்லாரும் மேற்படி துல்குலைபாவில் கூடாரங்களிட்டுத் தங்கினார்கள்.

அந்தத் தலத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அருகர்புடை நெருங்க எழுந்து சென்று, தடாகநீரில் ஸ்நானஞ்செய்து, இரண்டு றக்அத் தொழுது துஆ இரந்து, ஹஜ்ஜு செய்யும் உறுதியை

இதயத்திலிருத்தி, இஹ்றாம் கட்டினார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் செய்ததைப் போல் அஸ்ஹாபிகளெல்லாரும் செய்தார்கள்.

அதன்பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு துல்குலைபாவை விட்டுப்புறப்பட்டு, மக்கமா நகரத்தை யடுத்தார்கள். அருகிலுள்ள பூங்காக்களையும் சிறந்த வனங்களையும் கண்டு களித்து நடந்து செல்லும்போது, மக்கமா நகரத்திலுள்ள பரிசுத்த தேவாலயமாகிய க·பத்துல்லாஹ்வின் சிகரமும், ஹறம் என்னும் திவ்விய ஆலயத்து உன்னதமான மதிலும், சபா மர்வா என்னும் இரு குன்றுகளும், இன்னுமுள்ள மாடமாளிகைகளும், அலங்காரமான கோபுரங்களும் கண்ணுக்கினிதாய் காணப்பட்டன. அவற்றைக் கண்டு நடந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜு செய்யவரும் சமாசாரத்தை குறைஷிகள் அறிந்து, முந்தியே மக்கமா நகரத்தை அலங்கரித்து, வீதிகள்தோறும் பந்தல்களிட்டு மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் சாந்து தீற்றிப் புதுப்பித்து வைத்திருந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் நகரத்தை அடுத்த மாத்திரத்தில், மக்கமா நகரத்து அதிபதியாகிய அபூதாலிபு (றலி) அவர்களும், குறைஷிகளும் ஒருங்கு திரண்டு, க·பத்துல்லாவைத் தீபதூபங்களால் அலங்காரஞ் செய்து, மனமகிழ்வுடன் எதிர்வந்து உபசரித்து அழைத்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சந்தோஷமாக அஸ்ஹாபிகளோடு மக்கமா நகரத்தில் பிரவேசித்து, நேரே க·பத்துல்லாஹ்வை நோக்கிச்சென்று அதன் பிராகாரமாகிய ஹறத்தில் பிரவேசித்தார்கள். அன்று துல்ஹஜ்ஜு மாதம் ஏழாந் தினம். நபிநாயகம் (ஸல்) அவர்கள் க·பத்துல்லாவை யடுத்து, அஸ்ஹாபிகளும் தாங்கள் செய்யுங் கருமங்களை யெல்லாம் பின்தொடர்ந்து செய்யும்படியாக நின்று, முந்தி தங்கள் வலது கரத்தால் ஹஜறுல் அஸ்வது என்னும் கல்லைத்தொட்டு முத்தமிட்டுக்கொண்டு, மூன்றுதரம் க·பாவைப் பிரதக்ஷணஞ் செய்து சிறிதுதூரம் ஓடி மீண்டும்வந்து நான்கு தரம் பிரதக்ஷணஞ் செய்தார்கள். அஸ்ஹாபிகளும் அப்படியே பின்தொடர்ந்து செய்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருக்கும் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய தானத்தில் வந்துநின்று

முந்தின றக்அத்தில் குர்ஆன் வேதத்து முப்பதாம் அத்தியாத்தின் ஒருபாகமாகிய "குல்யா அய்யுஹல் காபிரூன்" என்பதை முழுவதையும், இரண்டாம் றக்அத்தில் "குல் ஹுவல்லாஹு" என்னும் பாகத்தையும் ஓதி, இரண்டு றக்அத்து தொழுது, அங்கிருந்து மீண்டுவந்து, மேற்படி ஹஜறுல் அஸ்வது என்னும் கல்லை ஒருதரம்தொட்டு முத்தமிட்டுக் கொண்டு, ஆவரணத்தின் பாபுஸ்ஸலாம் என்னும் வாசல்வழியாக வெளியே புறப்பட்டார்கள். வெளிப்பட்டு சபா என்னும் குன்றைநோக்கி நடந்து சென்று, வேத வாக்கியத்தில் ஒன்றையோதி அக்குன்றில் ஒருஆள் உயரம்வரையும் ஏறி அங்கு நின்றுகொண்டு இருகரங்களையு முயர்த்தி, அல்லாஹு தஆலாவை இதயத்தில் இருத்திக்கொண்டு க·பத்துல்லாஹ்வை நோக்கி துஆ இரந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு அங்குநின்று துஆகேட்டபின், அந்த சபா என்னும் குன்றைவிட்டிறங்கி, மர்வா என்னும் குன்றை நோக்கி நடந்து சென்று, அக்குன்றிலும் ஒரு ஒரு ஆள் உயரம்வரையும் ஏறி, அங்கும் நின்றுகொண்டு சபாவில் ஓதின துஆவையோதி, க·பாவை நோக்கி பிரார்த்தித்தார்கள். பின்பு அங்கு நின்று கீழிறங்கி, சபா மர்வா என்னும் இருகுன்றுகளுக்கும் இடையில் ஏழுதரம் ஓடி, அங்கே செய்யும் கருமங்களனைத்தையும் குறைவறச் செய்து நிறைவேற்றினார்கள். இதற்குள் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும் அஸ்ஹாபிகளுக்கும் கூடாரங்களும் விடுதிகளும் தயாராக்கப்பட்டன. நபிநாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து வந்து. தங்களுக்கிட்ட உன்னதமான கூடாரத்தில் தங்கினார்கள். அஸ்ஹாபிகளும் அங்கங்கே தங்கினார்கள். அன்று சூரியன் அஸ்தமித்தது.

எட்டாந் தேதி சூரியன் உதயமாய் கொஞ்ச நேரம் சென்றபின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு கூடாரத்திலிருந்து புறப்பட்டு க·பத்துல்லாவுக்குக் கீழ்புறமுள்ள மினாஎன்னும் தலத்தில் வந்து தங்கினார்கள். அன்று ளுஹர்முதல் அடுத்த ஒன்பதாந் தேதி பஜர்வரையும் அங்கிருந்து, அவ்வைந்து நேரத் தொழுகையும் அங்கேயே தொழுது முடித்திருந்து, பின் ஒன்பதாந் தேதி காலையில் புறப்பட்டு, அஸ்ஹாபிகளோடு பிர்க்கத்து நமிறத்து என்னும் தலத்தில் வந்து தங்கினார்கள். அங்கே சற்றுநேரம்

தங்கியிருந்து சூரியன் உச்சத்திலிருந்து சாயுந்தருணத்தில், அங்கிருந்து புறப்பட்டு மதனுல் பாதீ என்னும் தலத்திற்கு வந்தார்கள். எல்லோரும் மேற்படி தானத்தில் வந்து கூடினபின், அங்கிட்டிருந்த மின்பறில் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏறிநின்று குத்பா வோதி ஏவல் விலக்கலைப்பற்றிப் பிரசங்கஞ் செய்துமுடித்து, அன்றைய ளுஹறையும் அஸரையும் ஒன்றாகச்சேர்த்துத் தொழுவித்தார்கள்.

அங்கும் தொழுது முடித்து, அஸ்ஹாபிகளோடு அறபா என்னும் மலையின் மேலேறி ஒட்டகத்தின் மேலேயே யிருந்து கொண்டு, க"பத்துல்லாவை நோக்கி சூரியன் அஸ்தமனமானவேளை பரியந்தம் துஆ செய்து கொண்டே நின்றார்கள். அப்படி துஆ செய்து கொண்டு நிற்கையில், அல்லாஹு தஆலா விடத்திலிருந்து குர்ஆன் என்னும் சத்திய வேதத்தின் முடிவாகிய வாக்கியம் இறங்கிற்று. மேற்படி வாக்கியத்தை ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் கொண்டு வந்து நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்தபோது, அதன் கனத்தினால் நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஏறியிருந்த ஒட்டகம், மார்பு நிலத்தில் தோயக் கீழே படிந்தது. அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளை நோக்கி "தோழர்களே! இப்போது, அல்லாஹு தஆலா நமக்கு அருளும் வேதத்தை முடித்து ஆயத்து ஒன்று இறக்கினான். அவன் அவ்வாயத்தில் சொல்லுகிறதாவது:— "முஹம்மதே இன்றைய தினம் உங்கள் தீனை நாம் சம்பூரணமாக்கினோம்; உங்களுக்கு மேலான சுவர்க்கத்தைக் கொடுத்தோம்; உங்கள் இஸ்லாத்தை நாம் பொருந்திக் கொண்டோம்" என்பதே என்று அந்த வாக்கியத்தை ஓதிக்காட்டி சொன்னார்கள். இதைக் கேட்ட அருகர் முதலான அஸ்ஹாபிகளெல்லாரும் சந்தோஷத்தில் மூழ்கினார்கள்.

அதன்பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு அந்த அறபா என்னும் மலையை விட்டிறங்கி, முஸ்தலிபா என்னும் தானத்தில் வந்து, அன்றைய மக்ரிபையும் இஷாவையும் கூட்டித் தொழுவித்தார்கள். அங்கு தொழுது தீர்ந்தபின், எல்லாரும் அந்த தானத்திலேயே இராமுழுவதும் விழித்திருந்து, அல்லாஹு தஆலா இடம் துஆசெய்து கொண்டிருந்தார்கள். அன்றிரவு நீங்கி பஜ்ர் வேளை யானவுடன் அங்கேயே பஜ்ர்

தொழுது முடித்து, அஸ்ஹாபிகளோடு புறப்பட்டு சூரியோதயத்திற்கு முன் மஸ்கறில் ஹறாம் என்னும் தானத்தில் வந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த தானத்தில் நின்று சற்று நேரம் அல்லாஹு தஆலா இடம் துஆசெய்து முடித்து, அஸ்ஹாபிகளோடு ஜம்றத்துல் அகபா என்னும் தானத்தில் வந்து ஏழு கல்களை எறிந்து விட்டு, குர்பான் செய்யும் தானத்திற்கு வந்தார்கள்.

குர்பான் செய்யும் தானத்தில் எல்லாரும் வந்து சேர்ந்தபின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மாத்திரம் அறுபத்து மூன்று ஒட்டகங்கள் அறுத்து, குர்பான் செய்தார்கள். அலி (றலி) அவர்கள் முப்பத்தேழு பசுக்கள் அறுத்தார்கள். மற்றவர்களும் அவரவருக்குத் தக்கபடி ஒட்டகம், பசு, ஆடு இவைகள் அறுத்து குர்பான் செய்தார்கள். யாசகர்களுக்குக் கொடுக்கும்படி அறுத்த ஒட்டகங்கள் அறுபத்து மூன்றில், ஐம்பத்தொன்பது ஒட்டகங்களில் கொஞ்சங் கொஞ்சமாகத் தசையை வகிர்ந் தெடுத்துப் பாகஞ் செய்து கொண்டுவரும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவு பண்ணினார்கள். அப்படியே பாகஞ் செய்து கொண்டு வந்தபின் நபிநாயகம் (ஸல்) அவர்களும், அலி (றலி) அவர்களும் அதைப் புசித்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு அஸ்ஹாபிகளோடு க"பத்துல்லாவுக்கு வந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு க"பத்துல்லாவுக்கு வந்து பத்தாம் தேதியாகிய அன்றைப்பகல் ளுஹறு தொழுகையை அங்குத் தொழுது முடித்து, ஜம்ஜம் என்னும் புனித நீரூற்றின் பரிசுத்த ஜலத்தைப் பருகி, தலைமுடியை களைந்து, ஹஜ்ஜின் கடன் அனைத்தையும் சரிவரச் செய்து முடித்து, முன் கட்டின இஹ்றாமைத் தவிர்த்துக் கொண்டார்கள்.

ஹஜ்ஜுப் பெருநாளாகிய அன்றையதினம் பிரதான வெள்ளிக் கிழமை யென்னும் விசேஷதின மாயிருந்த படியால், இந்த ஹஜ்ஜு ஹஜ்ஜுல் அக்பறு, என்னும் பெரியஹஜ்ஜாயிருந்தது. முஸ்லிம்களுக்கு அச்சான் அறபாவும், ஹஜ்ஜுல் அக்பறுமான இரண்டு விசேஷங்களும் அமைந்ததாயிருந்தது மன்றி, எஹூதிகள், மஜூசிகள், நசாறாக்கள் என்னும் இம்மூன்று சமயத்தார்களுக்கும் அன்றையதினமே பெருநாளாயிருந்தது. இவ்விதம் ஐந்து விதப் பிரதானப் பெரு நாட்கள் ஒரே தினத்தில் சம்ப

வித்தது எக்காலத்திலுமில்லை. இது ஜனங்களுக்கு மிகு ஆச்சரியகரமாயிருந்தது.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் அஸ்ஹாபிகளை நோக்கி, "அஸ்ஹாபிகாள்! இந்த மாதமோ சிறப்பும் மகிமையும் பெற்ற துல்ஹஜ்ஜு மாதம்; இந்தத் தலமோ மனிதர் செய்யும் பாவ வினைகளை நாசஞ் செய்து சுவர்க்கத்திற்கு புகுத்தும் முக்திதலம்; இந்த நாளோ மகாபிரதான நாள்; ஆனபடியால், ஏவல் விலக்கல் என்னும் இரண்டையும் இன்ன இன்னபடியென்று தெளிவாக உங்களுக்கு நாம் சொன்னோம். இதைக் கேட்ட நீங்களும் உங்களுக்குப்பின் வரும் உங்கள் சந்ததியாருக்குத் தெரிவியுங்கள்" என வற்புறுத்திச் சொன்னார்கள்.

ஹஜ்ஜு முடிந்தபடியால், பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மக்கமா நகரத்தாருக்கு ஆகவேண்டிய கருமங்கள் எல்லாவற்றையும் செய்வித்து, சொல்ல வேண்டிய நல்லறிவுகளை சொல்லி முடித்து, பிரயாணஞ் சொல்லிக் கொண்டு, மதீனமா நகரத்திற்கு யாத்திரைபோனார்கள். அப்போது மக்கமா நகரத்து அதிபரும் மற்றவர்களும் ஒருங்கு திரண்டு நபிநாயகம் (ஸல்) அவர்களையும், அஸ்ஹாபிகளையும் மரியாதை செய்து உபசரித்து அனுப்பினார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ஹாபிகளோடு மக்கமா நகரத்தைவிட்டு சிலதினங்கள் நடந்து, மதீனமா நகரத்தை யடுத்தார்கள். அப்போது மதீனமா நகரத்தாரனைவரும் ஒருங்கு கூடி, நகரத்தை மிக அலங்கரித்து, திரள் திரளாய் எதிர் வந்து உபசரித்து அழைத்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஆனந்த பரவசமுற்று அஸ்ஹாபிகளோடு நகரத்தில் பிரவேசித்து, இராஜ்ஜிய பாரந்தாங்கி, இஸ்லாமிய அரசு செய்திருந்தார்கள்.

107—வது அத்தியாயம்.

நபிநாயகத்தின் வபாத்து.

விருத்தம்.

நபிமுகம் படைத்துத் தீவிழ் கதிபுகுங்குபிரர் மாயக்
கெபிமுகம் பயின்றசெல்வர் கிளர்தரவுலக நாட்டி
லிபிமுகம் படியாச்சீர்மா விகைப்புயநாதர் மேன்மை
நபிமுகம் மதுநன்கோமா னண்ணியவபாத்துச் சொல்வோம்.

வசனம்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் மதீனமா நகரத்திலிருந்து இராஜ்ஜிய பரிபாலனஞ் செய்து, தங்களின் தீன என்னும் பரிசுத்த மார்க்கத்தை சூரியனைப் பார்க்கிலும் மிகப் பிரபலமாக உலகமெங்கும் பிரகாசிக்கச் செய்து வருங்காலத்தில், அவர்களுக்கு அறுபத்து மூன்று வயதாயிற்று

நபிநாயகம் (ஸல் அவர்களுக்கு வபாத்தின் காலம் சமீபித்த போது நிகழ்ந்த வர்த்தமானங்கள் அநந்தமுண்டு. அந்தத் தருவாயில் தங்கள் அஸ்ஹாபிகளுக்கு அவர்கள் போதித்த போதனைகளும், பிரசங்கங்களும் கொஞ்சமல்ல. அவைகளை எவ்வளவு சுருக்கி எழுதினாலும் இக்கிரந்தத்திற்கு கால்பாகம் அதிகமாகுமானதால், மேற்படி "சின்னசீறா" வின் வபாத்துப் படலத்தின் படி யெழுதினோம்.

நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு சுறியத்து என்னும் அடிமைப் பெண்ணல்லாத மனைவிகள் மாத்திரம் இருபத்து மூன்றுபேர். அவர்களில் முந்தியே தலாக்கு சொல்லிப் பிரிந்து விடப்பட்ட எட்டுப் பேர்களும், தேகவியோக மடைந்து உன்னத பதவிபெற்ற ஆறு பேர்களும் போக, மற்ற ஒன்பது பேர்கள் மாத்திரம் நபிநாயகம் (ஸல்) அவர்களின் வபாத்தின் காலத்தில் உயிரோடிருந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர்களுடைய அறுபத்து மூன்றும் வயதின்பிற்பகுதியில் சபர் என்னும் மாதத்தில், ஜுரங் கண்டது. அதனாலவர்கள் தேகஅசௌக்கிய மடைந்து, தங்கள் பிரதான நாயகிகளாகிய ஆயிஷத்து பிந்து அபூபக்கர் ஸித்தீக்கு (றலி) ஹப்புசா பிந்து உமறு பாறூக்கு (றலி) முதலான ஒன்பது மனைவிகளையும் அழைப்பித்து "நான் இன்றைதினம் மைமூன் உடைய மாளிகையிலிருக்கும் முறையாகையால், அங்கிராமல் ஆயிஷாவுடைய மாளிகையிலிருக்க விரும்புகிறேன். உங்களுக்கு சம்மதமா?" என அவ்வொன்பது மனைவிகளையும் நோக்கிக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் எல்லாரும் சம்மதித்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் பிராணநாயகியாராகிய ஆயிஷா (றலி) அவர்கள் மாளிகையிற்போய், தேகஅசௌக்கியத்தோடிருந்தார்கள். அப்போது சுரநோயின் மும்முரத்தினால், தலைநோவும் குளிரும் அதிக உக்கிரமாயிருந்தன. அந்த நேரத்தில் மஸ்ஜிது உடைய

குமாரர் அப்துல்லாஹ் (றலி) சில அஸ்ஹாபிகளோடு, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து பணிந்து நின்று "யாறஸூலல்லாஹ்! ஒப்பற்ற தேவரீருடைய திவ்விய சரீரத்தில் கண்டிருக்கும் ஜுரம் தணியும் வண்ணம் ஏதும் ஒரு ஔஷதஞ்செய்து தரட்டுமா?" எனப் பரிந்து கேட்டார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி "அப்துல்லாஹ்வே! இப்போது எனக்கு, நான் அல்லாஹு தஆலாவின் சமூகத்திற் போய்ச் சேருவதற்குக் குறித்திருக்கும் காலம் வந்து அடுத்திருக்கின்றதே யன்றி வேறல்ல. ஆனபடியால், எனக்கு ஒரு ஔஷதமும் வேண்டாம். அல்லாஹு தஆலா உங்கள் எல்லாரையும் காத்து, விஜய சித்தியையும் உங்களுக்குக் கொடுத்து, உங்களை மேன்மையாக்குவானாக. நீங்கள் எல்லாரும் ஏவலைத் தொடர்ந்தும், விலக்கலைத் தவிர்ந்தும், பரிசுத்தமான பாதையில் ஒழுகி நடப்பதற்காகத் போதிக்கும் பொருட்டு, அல்லாஹு தஆலாவின் தூதனாக உங்களிடத்தில் நான் வந்தேன். நீங்கள் அல்லாஹு தஆலாவின் அடியார்களாகிய உங்களை யொத்த மனிதர்களுக்குத் தீங்கை விளைக்கும் கருமங்களைச் செய்யகனவிலும் நினைக்காதிர்கள். உங்கள் எல்லாருக்கும், இனி உங்களுக்குப் பின் வரும் என் கூட்டத்தார் எல்லாருக்கும், அல்லாஹு தஆலாவின் கிருபையும் என்ஸலாமும் உண்டாகி மேலும் மேலும் வளர்ந்துவரக் கடவன" என்று சொன்னார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படிச் சொல்லும்போது, அவர்கள் கண்களிலிருந்து நீர் பெருகித் தாரை தாரையா யோடிற்று.

அதன் பின் வானவர் பெருமானாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து பணிந்து, அல்லாஹு தஆலாவின் ஸலாமும் தமது ஸலாமும் பகர்ந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களைநோக்கி, "யாறஸூலல்லாஹ்! தாங்கள் இப்போது எண்ணியிருக்கும் எண்ணம் என்ன? அதை என்னிடஞ் சொல்லுங்கள்" எனக் கேட்டார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி! "யாஜிப்றயீல்! எனக்குப் பின் என் கூட்டத்தாருக்கு உபகாரி யார்?" எனக்கேட்டார்கள். இக்கேள்விக்குப் பிரதி சொல்லும்படி அல்லாஹு தஆலா ஜிப்றயீல் அலைஹிஸ் ஸலாமுடைய இதயத்தில் உதிப்பாக்கினான். அப்போது ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லா! தேவரீருடைய கூட்டத்தார் ஒரு போதும் நிக்கு

செய்யப்பட மாட்டார்கள். இனி யுகாந்தத்தின் பின் நடுத்தீர்ப்புக்காக, மடிந்து போன மனிதர்கள் எல்லாரும் உயிர்த்தெழும்போது, அவர்களுக்கு முன் தாங்களே உயிர்த் தெழுந்து எல்லாருக்கும் அதிபராய் நிற்பீர்கள். தங்களுடைய கூட்டத்தார்கள் சுவர்க்கம் புகுது முன், மற்ற நபிமார்களுடைய கூட்டத்தார்கள் சுவர்க்கம் புகுவது அவர்களுக்கு ஹறாமாகும்," என்றார். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இதைக்கேட்டு ஆனந்த மடைந்தார்கள். அதன் பின் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வானஞ் சென்றார்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள், தங்கள் பிராண நாயகியாகிய ஆயிஷா (றலி) அவர்களை நோக்கி "நான் நீராட வேண்டும். ஆனதால், ஏழு கிணறுகளில் ஜலம் மொண்டு வந்து என்னை நீராட்டுங்கள்" என்றார்கள். உடனே ஆயிஷா (றலி) அவர்கள் ஏழு கிணறுகளில் ஜலம் அள்ளிவரும்படி ஏவற் பெண்களுக்கு கட்டளை பண்ணினார்கள். உடனே ஜலம் கொண்டு வரப்பட்டது. ஆயிஷா (றலி) அவர்கள் மேற்படி ஜலத்தைக் கொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை நீராட்டினார்கள் அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஜுரம் கொஞ்சம் இலகுவாய், ஆரோக்கிய மடைந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ஜுரம் தணிந்து தேகாரோக்கியமான போது, மாளிகையை விட்டுப் புறப்பட்டு மெல்ல மெல்ல நடந்து, தேவாலயத்திற்கும் சென்று, அஸ்ஹாபிர்களுக்கு இமாமாய் நின்று தொழுதார்கள். தொழுது முடிந்த பின், மூன் உஹுது யுத்தத்தில் ஷஹீதான தங்கள் அஸ்ஹாபிகளுக்காகதிருக் கரங்கள் இரண்டையும் ஏந்தி துஆ செய்து விட்டு, மின்பறின் மீதிற்றிருந்து உபதேசஞ் செய்ய ஆரம்பித்து, முத்தி முஹாஜிரீன்களை நோக்கிப் பின் வருமாறு சொல்லுகின்றார்கள்:—

"முஹாஜிரீன்களே! அன்சாரீன்கள் சிறிய வகுப்பினராகவும், நீங்கள் பெரிய வகுப்பினராகவு மிருப்பதால், நீங்கள் அவர்களுக்கு எப்போதும் நன்றிசெய்பவர்களாயிருங்கள். நன்றி செய்தவர்களுக்கு நீங்களும் நன்றி செய்யுங்கள். ஒருவருக்கொருவர் செய்யும் குற்றங் குறைகளைப் பாராட்டாமல் பொறுத்துக் கொள்ளுங்கள். அன்சாரீன்களுடைய இரகசியத்திற்கு உரிமைக்காரரானவர்கள் எனக்குத் தனதானவர்களாவர். மகத்தான அல்லாஹு தஆலா தனது அடியானை விளித்து, உனக்குப் பிரபஞ்ச வாழ்வு விருப்பமோ?

சுவர்க்க வாழ்வு விருப்பமோ? என வினவினன். அதற்கு அவ்வடியான், சுவர்க்க வாழ்வே விருப்பம்! என்று விடைபகர்ந்தான்" என்று இம்மட்டுஞ் சொல்லி முடித்தார்கள்.

[இவற்றின் முடிவில், அல்லாஹு தஆலா விளித்து, வினவிய அடியானென்றது நபிநாயகம் (ஸல்) அவர்களையே குறித்தது.]

நபிநாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு சொன்னபோது, அபூபக்கர் (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு வபாத்தின் காலம் அடுத்து விட்டதென்று குறிப்பாலறிந்து, கண்ணீர் சிந்த அழுதார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்களின அழுகையை மாற்றி, ஆறுதல் கூறிவிட்டு, மற்ற அஸ்ஹாபிகளை நோக்கி, "அபூபக்கர் மாத்திரம் என்னோடிருக்கட்டும்; நீங்கள் எல்லாரும் இந்தப் பள்ளிவாயிலின் கபாடங்கள் எல்லாவற்றையும் சாத்திக் கொண்டு, சற்று நேரம் வெளியே போய் நில்லுங்கள்" என்றார்கள். அப்படியே அஸ்ஹாபிகள் அந்த மஸ்ஜிது கபாடங்களை மூடிக் கொண்டு அப்புறப்பட்டு நின்றார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள் அபூபக்கர் (றலி) அவர்களைத் தங்களருகிலழைத்து "அபூபக்கரே! தங்களை யொத்த பிராண சிநேகிதர் எனக்கு ஒருவருமில்லை" என்று இரகசியமாகச் சொன்னார்கள். இதைக் கேட்டு அபூபக்கர் (றலி) அவர்கள் களிகூர்ந்தார்கள்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சாத்திய கபாடங்களையெல்லாம் திறக்கச் செய்து, அங்கிருந்து எழுந்து, தங்கள் பிராண நாயகியாராகிய ஆயிஷா (றலி) அவர்களின் மாளிகைக்கு வந்தார்கள். முன் மும்முரமாயிருந்து ஒருவாறு தணிந்த ஜுரம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் திவ்விய சரீரத்தில் மறுபடியும் கண்டது. அதனால நபிநாயகம் (ஸல்) அவர்கள் அயர்ந்து, ஒரு வார்த்தை பேசுவதற்கும் இயலாமல், தங்கள் நாயகியாராகிய ஆயிஷா (றலி) அவர்களின் பரிசுத்தமான மடியில் சிரசை வைத்துப் படுத்திருந்தார்கள். அப்போது ஆயிஷா (றலி) அவர்களின் சகோதரரும் தங்கள் மைத்துனருமாகிய அப்துர்ரஹ்மான் (றலி) அவர்கள் தங்கள் கையில் தந்த சுத்தி குச்சு ஒன்றைப் பிடித்துக் கொண்டு அங்கு வந்தார்கள். வந்தபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அப்பற் கொம்பில் விருப்பம் வைத்து, அதைப் பார்த்தார்கள்.

அந்தக் குறிப்பை ஆயிஷா (றலி) அவர்கள் அறிந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலுல்லாஹ்? மேற்படி குச்சை நான் வாங்கித் தரவா?" எனக்கேட்டார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அதற்குப் பிரதி சொல்ல இயலாமல், அக்குச்சை வாங்கிக் கொடுக்கும்படி சிரசை யசைத்துச் சாடை காட்டினார்கள். உடனே ஆயிஷா (றலி) அவர்கள் தங்கள் சகோதரர் கையில் வைத்திருக்கும் அந்தக் குச்சை வாங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கரத்தில் கொடுத்தார்கள். அந்தக் குச்சை நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் கரத்தில் வாங்கியும் அதைக்கொண்டு தந்த சுத்தி செய்வதற்கு திறனின்றி, சும்மா வைத்துக் கொண்டிருந்தார்கள். அதை ஆயிஷா (றலி) அவர்கள் கண்டு, மீண்டும் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலுல்லாஹ்! மேற்படி குச்சைக் கடித்து மிருதுவாக்கித் தரவா?" எனக்கேட்டார்கள் அதற்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் பதில் சொல்லக்கூடாமல், அப்படியே செய்து தரும்படி தலையை அசைத்தார்கள். அப்போது ஆயிஷா (றலி) அவர்கள் அதைவாங்கிக் கடித்து, மிருதுவாக்கிக் கொடுத்தார்கள். அதை நபிநாயகம் (ஸல்) அவர்கள் வாங்கி மெல்ல மெல்ல தந்தசுத்தி செய்தார்கள். அடிக்கடி தங்கள் கரத்தை அருகிலுள்ள பாத்திரத்திலிருக்கும் ஜலத்தில் தோய்த்து "லாஇலாஹ இல்லல்லாஹு, இன்னலில் மவுத்தி ஸகருத்துன், அல்லாஹும்ம ஹவ்வின் அலா முஹம்மதின் ஸகருத்தில் மௌத்தி" என்று சொல்லிக் கொண்டே திருமுகங் கழுவினார்கள். முகங்கழுவும் போது "லாஇலாஹ இல்லல்லாஹு" என்று சொன்னதுமன்றி, அடுத்தடுத்து கைகளை யுயர்த்தி "அர்றபீகுல் லகுலா" என்றுஞ் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் மேலான இவ்விரண்டு வாக்கியங்களையுஞ் சொல்லுந் தோறும், ஆயிஷா (றலி) அவர்கள் மனம்தளர்ந்து, சஞ்சலக்கடலில் அமிழ்ந்தியிருந்தார்கள்.

பின் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு ஜுரம் வரவர மும்முரமாயிற்று. சுரம் அதிகமாய் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மிக வருந்துவதை மதீனமா நகரத்து அன்சாரீன்கள் கேள்விப் பட்டு, அனைவரும் திரண்டு பள்ளியில் வந்து கூடி, மனமயங்கி முகங்கள் வாடி, கொல்லென்று ஆர்த்து அழுதார்கள். அன்சாரீன்களின் அழுகுரல் மிகவானபோது, அப்பாஸ் (றலி) அவர்

கள் அவ்வழுகுரலைக் கேட்டு, அங்கிருந்து நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்தார்கள் அவர்களுக்குப்பின் அவர்கள் குமாரர் புலைலு (ரலி) அவர்களும், அலி (ரலி) அவர்களும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து பணிந்து நின்று, அன்சாரீன்கள் கூடியிருந்து அழுவதை அறிவித்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விருவரையும் பார்த்துத் தங்கள் கைகளை நீட்டி, என்னை மெல்லத் தூக்கி இருத்துங்களென்றார்கள். அப்படியே அவ்விருவரும் நபிநாயகம் (ஸல்) அவர்களைத் தூக்கி யிருத்தினார்கள். அதன்பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி "அன்சாரீன்கள் ஏன் அழுகின்றார்கள்?" எனக்கேட்டார்கள். அதற்கு அவ்விருவரும், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலுல்லாஹ்! தேவரீர் தங்கள் வபாத்தாகும் காலம் அடுத்ததைக் கேட்டு அழுகின்றார்கள்" என்றார்கள். உடனே நபிநாயகம் (ஸல்) அவர்கள், அலி (ரலி) அவர்கள் பின்னேயும், மற்றிருவர் இருமருங்கிலும் தாங்கிக் கொண்டுவர, மனையைவிட்டெழுந்து, மெல்ல மெல்ல நடந்து மஸ்ஜிதில் சென்று, மிம்பரின் கீழிருந்தார்கள். அப்போது அன்சாரீன்களெல்லாரும் திருச்சமுகத்தில் திரண்டு கூடியிருந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் முகதாவில் கூடியிருக்கும் அன்சாரீன்களை நோக்கிப் பின்வருமாறு உபதேசிக்கத் தொடங்கினார்கள்:—

"எனது தோழர்களே! இவ்வுலகத்தை விட்டு நான் பிரிந்து போவதைக் குறித்து நீங்கள் அழுவதாகக் கேள்விப்பட்டேன். மரணத்தை தட்டிவிலக்க உங்களில் எப்படிப் பட்டவர்களாலும் முடியாது. உங்களுக்கு ஏவல் விலக்கலென்னும் இரண்டையும் உணர்த்தவந்த உங்கள் நபி மரணமடையமாட்டாரென்று நினைக்கின்றீர்கள்? என்னுடைய மரணத்தைக் குறித்து நீங்கள் அழுவதால் ஆவதென்ன? முன்னுள்ள நபிகளில் யாராவது ஒருவர் தமது கூட்டத்தாருக்கு நடுவே மரணமடையாமல் ஜீவித்திருக்கின்றார்களா? அப்படியிருந்தாலல்லவா உங்கள் நபியும் உங்களுக்கு நடுவே என்றும் நிலைபெற்றிருப்பார்! நானும், நீங்களும் ஒருவர் பின் ஒருவராய் அல்லாஹு தஆலாவின் சமுகத்திற்கு போய்ச் சேர்தல் உண்மை. அருமையான அன்சாரீன்களே! மக்காவூரினராகிய முஹாஜிரீன்கள் பேரில் நீங்கள் பக்ஷமாயிருங்கள்; அவர்களுக்கு நன்றி செய்யுங்கள். அல்லாஹு தஆலாவுக்கும் அவனுடைய நபிக்கும் ஈமான் கொண்டு, சத்கருமங்களைச் செய்கிறவர்களே யன்றி. மற்றவர்கள் பாவிகளாகவே மடிவார்களென்று அல்லாஹு தஆலா, அசர் நேரத்துத் தொழுகையைக் குறித்துப் பிரமாணிக்கம் பண்ணிச் சொல்லுகின்றான். ஆனதால், நீங்கள் ஈமானை இதயத்தில் தரிபாடாக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹு தஆலா ஏவின சத்கருமங்களைச் செய்வதால் நேரிடும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு வரும் கஷ்டங்கள் உங்கள் வாழ்வினைப் பிரகார மன்றி மற்ற படியல்ல. நீங்கள் தொடங்கிச் செய்யும் எந்த கருமத்தையும் பதறாது அமைதியாய்ச் செய்யுங்கள். ஒரு கருமத்திலும் துரிதப்படாதீர்கள். உங்கள் கருமத்தில் நீங்கள் துரிதப்படுவது போல உங்கள் அல்லாஹு தஆலாவும் துரிதப்படமாட்டான். எப்போதும் அல்லாஹு தஆலாவைச் சிந்தியுங்கள். அவ்வாறு சிந்தித்தால், அவனுடைய முனிவு உங்களை அடுக்காது. அவன் உங்களுக்குச் சொன்னதை நீங்கள் மறுத்தால், அவனுடைய முனிவு உங்களைச் சூழும்" எனக்கூறிமுடித்துவிட்டு, முஹாஜிரீன்களை நோக்கி "முஹாஜிரீன்களே! நான் சொல்லும் இச்சொற்களை விலக்கி விட்டு என்னுடைய உறவைப் பிரித்துக்கொள்ளாமல், என் சொல்லை நீங்களும் கவனமாய்க் கேளுங்கள். இந்த மதீனாவாசிகளெல்லாரும் பூர்வீக குடிகள். நம்மிடம் வலியவந்து ஈமான் கொண்ட உத்தமவான்கள்; நீங்கள் மக்காவிலிருந்து வந்தபோது உங்களுக்கு உண்ணவும் உடுக்கவும் கொடுத்து, இடந்தந்து ஆதரித்த உபகாரிகள். ஆகையால் இவர்களை நீங்கள் மறக்காதிர்கள்; கைவிடாதிர்கள். எப்போதும் நன்றி செய்யுங்கள். உங்களுக்கு ஒருவரைதலைமையாக நியமித்தபோது அவர்களை ஆதாரமாகக் கொண்டு, குற்றங்குறை செய்தவர்களைக் கணிசக் குறைவு பண்ணாதிர்கள். எனது அரிய தோழர்களே! இவ்வுலக வாழ்வைவிட்டு உங்களுக்கு முன் நான் போகின்றேன். எனக்குப் பின் நீங்கள் எல்லாரும் ஒருவர் பின் ஒருவன் என்னிடம் வந்து ஹவ்லுல்கவ்தர் என்னும் அருவிக் கரையில் என்னைத் தரிசிப்பீர்கள். அந்த ஹவ்லுல்கவ்தரின் மகிமையைக் கொஞ்சம் சொல்லுகிறேன் கேளுங்கள்:—அந்த ஹௌலல் கௌதர் என்னும் அருவியானது ஒருதடாகத்திற்குச் சமானம். அதன் விசாலம் ஷாம் இராஜ்ஜியத்திலுள்ள புசுறு என்னும்

தலத்திலிருந்து எமன் இராஜ்ஜியத்திலுள்ள சனுவா என்னும் தலமளவுமுள்ள பூமியின் விசாலம் எவ்வளவோ அவ்வளவுண்டு. அதன் ஜலத்தின் மதுரம் கருப்பஞ் சாற்றைப் பார்க்கிலும், தேனைப் பார்க்கிலும் மிக மதுரமாயிருக்கும். அந்த ஜலத்தின் நிறம் பசும் பாலிலும் அதிக வெண்மையாயிருக்கும். அதன் மேன்மை வெண்ணெய்க்குச் சமானமாம். அதிற் கொஞ்சம் அள்ளிப்பருகினால், உள்ள நாள் உள்ள மட்டுமிருக்கும் தாகந்தீர்ந்து. இனி ஊழியூழிகாலமளவும் தாகமெடாது. அந்த ஜலம் எல்லாருக்கும் கிடைக்காது; நாவையும் காதத்தையும் பேணிக் காத்தவர்களுக்கே கிடைக்கும். ஆகையால், எனது தோழர்களே! என் சொற்களைக் கவனியுங்கள்'' என்றார்கள்.

இவ்வாறு சொல்லி முடித்த போது, அப்பாஸ் (றலி) அவர்கள் நபிநாயகமவர்களை நோக்கி "மகனே! குறைஷிகளுக்கும் உபதேசஞ் சொல்லுங்கள்'' என்றார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சிறிய தகப்பனாரை நோக்கி "முஹாஜிரீன்களுக்கும், அன்சாரீன்களுக்கும் சொன்னவைகளே அவர்களுக்கும் போதும். அவர்களுக்கும் அது தான் உபதேசம். ஆனால் குறைஷிகளை மனிதர்கள் பின்தொடர்ந்து உயர்த்துவார்கள். அது உயர்ந்தோரையே உயர்ந்தோர் பின்தொடர்வது போலாம். தீயோரைத் தீயோர்தான் பின்தொடர்வார்கள்'' எனக் கூறிவிட்டு குறைஷிகளை நோக்கி "மனிதரில் மகிமை பெற்ற குறைஷிகளே! நீங்கள் எல்லாருக்கும் நன்றி செய்யுங்கள். ஒருவருக்கும் தீங்கு செய்யாதீர்கள். அப்படிச்செய்தால், அவர்களும் உங்களுக்குத் தீங்கு செய்வார்கள். மனிதர்களில் ஒருவருக்கு ஒருவர் தீங்கு செய்வார்களானால், செய்தவர் பேரில் மற்றொரு தீங்குசெய்பவர்களை வாவிடுவோம் என்று அல்லாஹுத் தஆலா சத்தியவேதமாகிய குர்ஆனில் சொல்லுகிறான்'' என்றார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் குறைஷிகளுக்கு இவ்விதஞ் சொல்லிவிட்டு, அபூபக்கர் (றலி) அவர்களை நோக்கி "அபூபக்கரே! தாங்கள் என்னிடம் கேட்கவேண்டிய விஷயங்களை யெல்லாம் இப்போது கேட்டுக்கொள்ளுங்களென்று கட்டளை பண்ணினார்கள். அதைக்கேட்டு அபூபக்கர் (றலி) அவர்கள், மனம்வருந்தி, முகாரவிந்தங் குன்றி, நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தங்களுக்கு வபாத்து மூடுகிவிட்டதோ?'' எனக்கேட்டார்கள். அதற்கு "ஆம், அதிக சமீபத்தில் மூடுகிவிட்டது'' என்று நபிநாயகம் (ஸல்) அவர்கள் விடை பகர்ந்தார்கள். அப்போது அபூபக்கர் (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களை மீண்டும் நோக்கி "யாறஸூலல்லாஹ்! தேவரீர் அடியேங்களைப் பிரிந்து எந்தத் தலத்திற்குப் போகின்றீர்கள்? தமியேன்கள் இறந்து எந்தத் தலத்திற்குப்போய்ச்சேர்வோம்? அவை எங்களுக்குத் தெரியவில்லையே'' எனக் கண்ணீர்சொரியக் கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி "நான்போய்ச்சேரும் தலத்தில் நீங்களும் வந்து சேர்வீர்கள். நீங்கள் வந்துசேரும் தலங்கள் மகத்தான அல்லாஹுத் தஆலாவின் ஒப்பற்ற திருச்சமுகமும், அர்ஷின் நிழலும், சிதுறத்துல்முன்தஹா என்னும் விருக்ஷத்து அடியும், ஜன்னத்துல் மஃவா என்னும் ஸுவர்க்கத்து மாளிகையுமாம். இந்தத் தானங்களில் நீங்கள் எல்லாரும் சுவர்க்கத்து வஸ்திரங்களை யுண்டு, உடைகளை யுடுத்தி அரம்பை மாதர்களோடு இன்பசாகரத்தில் மூழ்கிக் களி கூர்ந்திருப்பீர்கள்'' என்றார்கள்.

பிறகு அபூபக்கர் (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! தேவரீர் வபாத்தானபின் தங்கள் திவ்விய ஜனாஸாவைக் குளிப்பாட்டுகிறவர்கள் யார்?'' எனக் கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "என் ஜனாஸாவைக் குளிப்பாட்டுகிறவர்கள், என் உதிரக்கலப்பிலுள்ள உரித்தாளிகளே'' என விடைபகர்ந்தார்கள். பிறகு "யாறஸூலல்லாஹ்! தங்களுக்குக் கபன் இடும் ஆடையாது?'' என அபூபக்கர் (றலி) அவர்கள் கேட்டார்கள். "நம்மிடம் கபனுக்கென்று வைத்திருக்கும் ஆடை, எமன் இராஜ்ஜியத்திலிருந்து வந்த ஆடை, மிசுறு இராஜ்ஜியத்திலிருந்து வந்த ஆடை, ஆக இம்மூன்று ஆடைகளாலும் கபனிடுங்கள்'' என நபிநாயகம் (ஸல்) அவர்கள் உத்தரவு செய்தார்கள். அதன் பின் அபூபக்கர் (றலி) அவர்கள் "யாறஸூலல்லாஹ்! தங்களைத் தொழுவிக்கும் விதம் எப்படி?'' எனக் கேட்டார்கள். இதைக் கேட்கும்போது அபூபக்கர் (றலி) அவர்கள் கண்களில் நீர் பெருகித்தாரை தாரையாய் ஓடிற்று. அங்கே கூடியிருந்த ஆண் பெண் எல்லாரும் அழுதார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களும் கண்ணீர் சிந்த அழுது, அவர்கள் அழுகையை

அமர்த்தி, துயரைத் தணித்து, அவர்களை நோக்கி "அல்லாஹு தஆலா உங்களை குற்றங் குறைகளிலிருந்து விலக்கி, உங்கள் நபியுடைய பொருட்டினால் சுவர்க்கத்து உன்னதமான பதவியை உங்களுக்குக் கொடுத்து, உங்களைக் காப்பானாக; நீங்கள் என்னைத் துப்புரவாகக் குளிப்பாட்டி, கபனிட்டு மஞ்சில் வைத்துத் தூக்கிச் சென்று, என்னை அடக்க அகழ்ந்த கப்றுக்கு இப்புறத்தில் வைத்து விட்டு, ஒரு கடிகை நேரம் வரையும் எல்லாரும் தூரத்தில் விலகி நில்லுங்கள். அப்போது அல்லாஹு தஆலா தனது கிருபையை என்மேல் இறக்குவான். அதன் பின், வானவர் தலைவர்களாகிய ஜிப்றயீல், மீக்காயீல், இஸ்றாபீல், இஸ்றாயீல் என்னும் நான்கு பேர்களும் அநேக வானவர்களோடு ஒருவர் பின் ஒருவராய் வந்துநின்று என்னைத் தொழுவிப்பார்கள். இதெல்லாம் ஒரு கடிகைக்குள் முடிந்துபோம். பிறகு நீங்களெல்லாரும் என்னை அடுத்து நின்று, உங்களில் மேன்மையான ஒருவரை இமாமாக நிறுத்தி, அவருக்குப் பின் எனது கிளையார்களை நிறுத்தி, அவர்களுக்குப்பின் மற்ற அஸ்ஹாபிகளாகிய நீங்கள் எல்லாரும் அணியணியாய் நின்று கொண்டு, உங்களுக்குப்பின் பெண்பிள்ளைகளையும், ஆண் பிள்ளை சிறார்களையும் நிரைநிரையாக நிறுத்தி, தக்பீர் கட்டித் தொழுவியுங்கள். தொழுவித்து முடிந்த பின், என்னைத் தூக்கி கப்றில் வைத்து அடக்கம் செய்யுங்கள் இப்படி செய்து அடக்கிய பிறகு, நான் சொன்ன உபதேசங்களை மறுபடி நீங்கள் ஜனங்களுக்குப் பரசங்கித்து, அவைகள் சந்ததி சந்ததிகளாய் வரும்படி கட்டளை பண்ணுங்கள்" என்றார்கள்.

அன்றைய பிரசங்கம் இம்மட்டல்ல; இன்னும் அநேக உபதேசங்களை அஸ்ஹாபிகளுக்கு உபதேசித்தார்கள். அன்று மாலைப் பொழுதானபோது நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் கூடியிருந்த அஸ்ஹாபிகளெல்லாரும் போய் விட்டார்கள். சிலர் மாத்திரம் நபிநாயகம் (ஸல்) அவர்களுடன் மாளிகைக்கு வந்து இருந்தார்கள்.

அன்று சூரியன் அஸ்தமித்தபோது, றபீயுல்அவ்வல் மாதத்துப் பிறை கண்டனர். நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாகும் அறுபத்து மூன்றாம் வயதின் நிரப்பாகிய றபீயுல்அவ்வல் மாதம் பிறந்த போது, அன்றைய முதலாந்தேதியாகிய வியாழக்கிழமை இரவில்

மஃரிபு தொழுகைக்காக பிலால் (றலி) மஸ்ஜிதில் பாங்கு சொன்னார்கள். அந்த பாங்கின் ஓசையை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, தங்கள் சமூகத்திலிருப்பவர்களில் அப்துல்லா (றலி)யை நோக்கி, "நீர் போய், அபூபக்கரை இமாமாய் நின்று தொழுவிக்கும்படி சொல்லும்" என்று உத்தரவு செய்தார்கள். உடனே அப்துல்லா (றலி) மஸ்ஜிதிற்குச் சென்று அபூபக்கர் (றலி) அவர்களைத் தேடினார். அவர்கள் அங்கில்லாமையால், உமர் (றலி) அவர்களைக் கண்டு, அவர்களை நோக்கி தாங்கள் இமாமாய் நின்று தொழுவியுங்க ளென்றார். இதை உமர் (றலி) அவர்கள் கேட்டு ஜனங்களுக்கு இமாமாய் நின்று தக்பீர் கட்டினார்கள். மஸ்ஜிதிற்கு அருகிலேயே ஆயிஷா (றலி) அவர்கள் மாளிகையிருப்பதால், தக்பீறு கட்டின சப்தத்தை நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, தங்கள் முகதாவில் இருப்பவர்களை நோக்கி, "அபூபக்கர் எங்கே?" எனக்கேட்டார்கள். அதற்கு அவர்கள், "யாறஸூலல்லாஹ்! இங்கிருந்து போன அப்துல்லா அபூபக்கரைக் காணாமையால், உமரைக் கண்டு அவரை இமாமாய் நின்று தொழுவிக்கச் சொன்னார்" என்றார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி, "என்னுடைய சொல்லை மறுத்து நாடியபடி இவ்வாறு செய்யும் செய்கையனைத்தும் அல்லாஹு தஆலாவுக்கும், முஸ்லிம்களுக்கும் பொருத்தமானவை யல்ல. மறுபடியும் அபூபக்கரை இமாமாய் நின்று தொழுவிக்கச் சொல்லுங்கள்" என்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் இப்படி சொன்னபோது, ஆயிஷா (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, "யாறஸூலல்லாஹ்! தமியாளுடைய தந்தையாகிய அபூபக்கர் இளகியசித்த முள்ளவர்களாகையால், அவர்கள் தேவரீர் நின்று தொழுவிக்கும் தானத்தில் நின்று தொழுவிக்கப் பிரவேசிக்கும் போது கண்ணீர் பெருக அழுவார்கள்" என்றார்கள். இவ்விதஞ் சொன்ன ஆயிஷா (றலி) அவர்களை நபிநாயகம் (ஸல்) அவர்கள் சினக்குறிப்புடன் நோக்கி, "நீங்கள் நபி யூஸுபு அலைஹிஸ்ஸலாமவர்களை மருளப் பண்ணினவர்க ளல்லவா?" என்று கூறிவிட்டு "மறுபடியும் அங்கு உள்ளவர்களைப் பார்த்து, அபூபக்கரை இமாமாய் நின்று தொழுவிக்கச் சொல்லுங்கள்" என்று கட்டளை பண்ணினார்கள். உடனே சிலர் சென்று அபூபக்கர் (றலி) அவர்களைக் கண்டுபிடித்து, இமாமாய் நின்றுதொழுவிக்கும்படி நபிநாயகம் (ஸல்) அவர்கள்

உத்தரவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். இதற்குள் உமர் (றலி) அவர்கள் இமாமாய் நின்று தொழுவித்து முடித்து விட்டது. அதன்பின் அபூபக்கர் (றலி) அவர்களும் போய் இமாமாய் நின்று தொழுதார்கள்.

இச்சங்கதி அஸ்ஹாபிகளில் பிரஸ்தாபமான போது, உமர் (றலி) அவர்கள் முன் தங்களை நின்று தொழுவிக்கும்படி வந்து சொன்ன அப்துல்லா (றலி)யை நோக்கி, "அப்துல்லாவே! நபி நாயகம் (ஸல்) அவர்கள் தொழுவிக்கச் சொன்னார்களென் றல்லவா என்னிடம் நீ வந்து சொன்னாய்? அதனாலல்லவா நான் இமாமாய் நின்று தொழுவித்தேன்? நீ என் இவ்விதம் மாறுபாடு பேசவேண்டும்?" எனக் கோபமாய் கேட்டார்கள். அதற்கு அவர், "சரிதான். நான் சொன்னதெல்லாம் அபூபக்கர் இவ்விடத்தில் இல்லாமையாலும், மற்றவர்களுக்குத் தாங்களே சிரேஷ்டராகையாலுமே யன்றி வேறல்ல" என்று தலை வணங்கிச் சொன்னார்.

அதன்பின் ஆயிஷா (றலி) அவர்கள் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி, "யாறஸூலல்லாஹ்! எனது தகப்பனாரவர்கள் தேவரீர் தங்கள் நிலையிலே நிற்பார்களானால், அவர்கள் இதயம் இப்பிரபஞ்ச வாழ்வைப் பற்றி நிற்கும். அதனால் ஜனங்கள் அவர்களை இகழ்வார்கள். ஆனபடியாலேதான் இமாம் என்னும் அதிகாரத்தை தங்கள் முன் அவர்களுக்குக் கொடுப்பதில் நான் அஞ்சினேன். இதைப் பற்றியே தாங்களுக்கு முன் அவ்வித வார்த்தையைச் சொன்னேன். அல்லாஹு தஆலா என் தந்தையைக் காத்து நன்மை செய்வானாக" என்றார்கள்.

ரிவாயத்:- அலி (றலி) அவர்களால் அறிவிக்கப்படுகிறது:— நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுரத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டு பெண்டு பிள்ளைகளெல்லாம் அழுது கொண்டு சஞ்சலமாயிருக்கும் சமயத்தில், பிலால் (றலி) வந்து, "யாறஸூலல்லாஹ்! தொழுகைக்கு வாருங்கள்" என்று அழைத்தார். அதற்கு றஸூலுல்லாஹ் யாதொரு மறுமொழியும் பகராமல் இருந்தபோது, ஆயிஷா (றலி) "பிலாலே! நாயகமவர்கள் உம்முடைய வார்த்தையை கேட்கிறதைவிட்டும் தன்னைக்கொண்டு பாக்காயிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அப்போது பிலால் (றலி) திரும்பிப்போய் விட்டு, பிறகு மறுவிடுத்தம் வந்து, "நாயகமே! தொழுகைக்கு

வாருங்கள்" என்று சொன்னபோது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் கேட்டு, தங்கள் கண்ணை விழிக்கவே கண்ணீர் தாரைதாரையாக ஓடிக்கொண்டிருக்க "பிலாலே! நான் சக்கறாத்துடைய ஹாலில் இருக்கிறேன்" என்று சொன்னார்கள். அதுகேட்டு பிலால் (றலி) அவர்கள் நாயகமவர்களைப் பார்த்து, "நாயகமே! தங்களை நான் இழக்கிறதினால் எனக்கு வந்திருக்கும் ஆபத்துக்கும், சலிப்புக்கும் என்னவென்று சொல்வேன்? என் முதுகெலும்பு ஒடிந்துபோயிற்றே" என்று அலறி அழுதுக்கொண்டுபோய் மூன்றுவிடுத்தமும் பிலால் வந்து "நாயகமே! தங்களுக்குப் பின்னால் எங்களுக்குக்கு யார் உதவியிருப்பார்கள்; தங்களைப்போல் எங்கள் பேரில் யார் கிருபையாயிருப்பார்கள்; தங்களுக்குப்பின் எங்களையார் விசாரிப்பார்கள்" என்று பிலால் (றலி) துக்கரமான வசனங்களை மொழிந்து அழுதபோது, நாயமவரவர்கள் தங்கள் திருக்கண்ணைத் திறந்து "பிலாலே! நீர்போய் அபூபக்கரை இமாமாக நின்று தொழுவிக்கச் சொல்லு" மென்று சொன்னார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களின் திருவசனத்தை, பிலால் (றலி) கேட்டமாத்திரத்தில், மிகவும் துக்கித்து அழுதவர்களாக பள்ளி வாசலுக்குள் வந்து மிஹ்றாபில் நபி (ஸல்) அவர்கள் இல்லாமல் வெறுமையாயிருப்பதைப் பார்த்து "வாமுஹம்மதா. வாமுஹம்மதா!! வாஹபீபா!!!" என்று கூக்குரலிட்டு அழுதார்கள். பிலால் (றலி) அவர்கள் அழுவதைக்கண்டு பள்ளியினுள் இருந்த மற்றும் முஸ்லிம்கள் அனைவர்களும் அழுது விட்டு தெளிந்து, பிலாலே! இது என்னவென்று கேட்டார்கள். அதற்கு பிலால் முஸ்லிம்களே நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) ஸக்கறாத்து ஹாலில் இருக்கிறார்கள், என்று சொன்னவுடன், அஸ்ஹாபிகளெல்லாம் கூக்குரலிட்டு அழுதார்கள். பின்பு பிலால் (றலி), அபூபக்கர் ஸித்திக் (றலி) அவர்களை நோக்கி, நபி (ஸல்) அவர்கள் தங்களை இமாமத்து செய்யும்படியாக உத்தரவு செய்தார்களென்று சொல்லி விட்டு, பிலால் (றலி) இகாமத்து சொன்னார்கள். அதில் "அஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸூலுல்லாஹ்" என்று சொல்லும் போது நபிநாயகம் (ஸல்) அவர்களை நினைத்து அழுதுவிட்டார்கள். அதைக்கண்டு அங்கிருந்த ஸஹாபாக்கள் யாவரும் மனம்நொந்து, அழுது மதிமயங்கி தெளிந்தார்கள். பிலால் (றலி) இகாமத்துக்

சொல்லி முடித்ததும் ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) மிஹ்ருப் இடத்திற் சென்றதும், மிஹ்ருபில் நபி (ஸல்) அவர்கள் இல்லாமல் வெறுமையாயிருப்பதைக் கண்டு, திகில்கொண்டு துக்கித்து முகங்குப்புர விழுந்துவிட்டார்கள். அதைக்கண்ட முஸ்லிம்களெல்லாம் கூக்குரலிட்டு அழுதுவிட்டார்கள். ஆயிஷா நாயகியின் மாளிகை பள்ளிக்கு அடுத்திருந்ததால், இவ்வழும் கூக்குரல் நபி (ஸல்) அவர்கள் கேட்டு பள்ளிவாசலில் என்ன சப்தமென்று கேட்டபோது, அலி (றலி) அவர்கள் தங்கள் பேரில் துக்கித்து முஸ்லிம்களெல்லாம் அழுகிறார்களென்று சொன்னார்கள்.

அப்போது நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஜுரம் லேசாயிருந்ததால், தலையில் ஒருதுணியைக் கட்டிக்கொண்டு புலைலிப்னு அப்பாஸ், அலியிப்னு அபீதாலிபு இவர்கள் இருவர்களையும் ஊன்றுதலாக பிடித்துக்கொண்டு வீட்டின் திரையை திறந்துகொண்டு பள்ளிவாசலுக்கு வந்து, ஸலாம் சொல்லிக்கொண்டு பள்ளியில் புகுதும்போது, ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) இமாமத்தாக நின்று தொழுவித்தார்கள். மற்றும் அஸ்ஹாபிகளெல்லாம் அவர்களுக்குப்பின் ஸப்பு ஸப்பாக நின்று தொழுதார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் வந்ததை ஸாஹபாக்கள் அறிந்தபோது அவர்களுக்கு உண்டான சந்தோஷத்தால் மகிழ்ச்சிகொண்டு, தொழுகையை முறிக்க நினைத்தார்கள். அதையறிந்த நபி (ஸல்) அவர்கள் சைக்கினையால் ஜனங்களை தரிபாடாய் நின்று தொழும்படி செய்தார்கள். பிறகு நபிநாயகம் அபூபக்கர் ஸித்தீக் (றலி) நின்று தொழும் மிஹ்ருபை அடுத்துவரவே, அபூபக்கர் (றலி) மிஹ்ருபை விட்டும் பிந்தினார்கள். அதற்கு நபிநாயகம், அவர்களை பிடித்து மிஹ்ருபிடத்தில் தரிப்படுத்தி, நீர்தான் தொழவேண்டுமென்று சமிக்கினை செய்து விட்டு, தாங்கள் அவர்களுக்குப் பின்னே மஃமூமாக நின்றுதொழுதார்கள். தொழுதுதீர்ந்தபின், நபி (ஸல்) அவர்கள் "ஒரு நபியாவது தங்கள் உம்மத்தில் நின்றும் ஒரு ஸாலிஹானவர், அவர்களுக்கு இமாமத்துச் செய்கிற மட்டிலும், மவுத்தாகவே இல்லை" யென்று திருவுளம்பற்றினார்கள்.

பின்பு நபிநாயகம் (ஸல்) அவர்கள் மிம்பர்மேடை மீது ஏறி ஸஹாபாக்களை நோக்கி, யாவரும் அறிந்து கொள்ளும் பொருட்டு சப்தத்தை வெகுவாய் உயர்த்தி திருவுளம் பற்றினார்கள்:— "மனிதர்

களே! பகலை இருள்வந்து மூடிக்கொள்வதுபோல், பித்னா முன்னோக்கி வந்துவிட்டது. அல்லாவின் பேரில் சத்தியமாக, என் பேரில் யாதொரு குற்றமும் பிடிக்கமாட்டீர்கள். ஏனென்றால் குர்ஆன் என்னும் அல்லாஹு தஆலாவின் திருவசனம் ஹலாலாக்கி வைத்ததைத்தான், நான் ஹலாலாக்கி வைத்தேன். குர்ஆன் ஹறாமாக்கி வைத்ததைத்தான் நான் ஹறாமாக்கி வைத்தேன்" என்றுசொல்லி சொர்க்கத்தின் மீது ஆசைபூட்டியும், நரகத்தின்மீது பயங்கரமாக்கி வைத்தும் வசியத்துச் செய்தார்கள்.

அதற்குபின் "முஸ்லிம்களே! பெண்டுகளைக் கொண்டு உங்களுக்கு கைருனதை வசியத்து செய்கிறேன். உண்மையாக அவர்களை அல்லாஹ்வுடைய அடியார்களென்றெடுத்து அவர்கள் மானத்தை அல்லாவுடைய சொல்லைக்கொண்டு ஹலாலாக தேடினீர்கள். ஆனதால் அவர்களோடு சேர்ந்து வாழ்வதை அழகாக்கி வைத்துக் கொள்ளுங்கள்; யாதொரு குற்றங்களன்றி அவர்களை அடியாதேயுங்கள்; யாதொரு குற்றங்களன்றி யாராகிலும் ஒருவன் அடித்தானேயானால் கியாமத்நாளையில் நான் அவன்மீது வழக்காளியாயிருப்பேன்.

"முஸ்லிம்களே! கைம்பெண்ஜாதிகளைக் கொண்டும் எத்திம்களைக் கொண்டும் உங்களுக்கு வசியத்துச் செய்கிறேன். அவர்கள் மீது என்றும் உபகாரியாயிருந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு அன்னதானஞ் செய்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அல்லாஹு தஆலா உபகாரஞ் செய்பவர்களையும் சதகா செய்பவர்களையும் உவந்திருப்பான். முஸ்லிம்களே! இன்னும் உங்களுக்கு அடிமைகளைக் கொண்டு வசியத்து செய்கிறேன். நீங்கள் தின்னுகிறதிலிருந்து அவர்களுக்கு தின்ன, கொடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உடுத்துகிறதிலிருந்து அவர்களுக்கு உடுத்தாட்டிக் கொள்ளுங்கள். அவர்களால் செய்ய இயலாத வேலையைக் கொண்டு அவர்களை வருத்தப் படுத்தாதீர்கள்.

"முஸ்லிம்களே! இன்னும் உங்களுக்கு அயல் வீட்டாரைக் கொண்டு வசியத்து செய்கிறேன். அவர்கள் மீது என்றும் உதவியாயிருக்க வேண்டும். அவர்கள் க்ஷேம லாபத்தை அறிந்து கொண்டிருக்க வேண்டும். அவர்கள் உண்டார்களா, இல்லையா என்று விசாரித்தல் வேண்டும். அவர்கள் பட்டினி கிடப்பதாயிருந்தால்,

நம்மால் இயன்றதை கொடுத்து அவர்கள் பசியை யாற்ற வேண்டும் எந்த காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு விரோதம் செய்யக் கூடாது. அவர்கள் அனியாயக்காரர்களாக யிருந்தாலும் சரியே. ஏனெனில் எனது உடன் பிறந்தார் வானவர்க் கரசரான ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அயல் வீட்டுக்காரரை ஆதரிப்பதைக் கொண்டு எனக்கு மிகுதமாய் உபதேசிக்கிறவராய் இருந்தார். அயல் வீட்டுக் காரர்களை மறுமையில் அநந்தரக்காரர்களாக ஆக்கி விடுவார் போல் நான் நினைக்கும் வரை எனக்கு உபதேசித்தார்.

"முஸ்லிம்களே! அல்லாஹு தஆலாவை தக்வா செய்வது கொண்டு உங்களுக்கு வசியத்து செய்கிறேன். நான் இம்மண்ணுலகை விட்டும் பிரிகிறவனாயிருக்கும் ஒவ்வொரு நேரத்துத் தொழுகையையும் இமாம் ஜமாஅத்தாக தொழுதுக் கொள்ளுங்கள். ஒருவன் மூன்று நாளைக்கு தொழவில்லையானால் அவனுக்கு இஸ்லாமில் ஏதொரு நற்பேறுமில்லை. முஸ்லிம்களே! ஸக்காத் கொடுக்கிறது கொண்டும், நோன்பு பிடிக்கிறது கொண்டும், குர்ஆன் ஓதுகிறது கொண்டும் வஸியத்துச் செய்கிறேன். குர்ஆன் ஓதுகிற வீட்டில் ஷைத்தான் புகுத மாட்டான், கைறு அதிகப்படும். அவ்வீட்டையுடையவர்களுக்கு வறுமை யணுகா. குர்ஆனை நீங்களும் படித்து உங்கள் மக்களுக்கும் படித்துக் கொடுங்கள். முஸ்லிம்களே! நீங்கள் ஒருவருக் கொருவர் என்றும் உதவியா யிருந்து கொள்ளும்படி வஸியத்துச் செய்கிறேன்.

"இன்னும் முஸ்லிம்களே! பைத்துல்லாவுக்கு போய் வர சக்தி பெற்றவர்கள் பைத்துல்லாவுக்கு சென்று ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொள்ளும்படி வஸியத்துச் செய்கிறேன். முஸ்லிம்களே! உங்களில் யாரையாவது நான் அடித்திருந்தால், பழிக்குப் பழி வாங்கும் நாள் வரும் முன் இப்பவே அடித்துக் விடுங்கள். இன்னும் நான் யார் முதலையாவது எடுத்திருந்தால் இப்பவே என்னிடம் பெற்றுக் கொள்ளுங்கள். இதை அல்லாஹ்வின் பேரில் சத்தியமாக உங்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று திருவுளம் பற்றினார்கள் பின்பு நபி நாயகம் (ஸல்) அவர்கள் மிம்பர் மேடையை விட்டும் கீழ் இறங்கி அஸ்ஹாபிமார்களை முஸாபஹா செய்து விட்டு, ஸஹாபாக்களை நோக்கி "எனது அஸ்ஹாபுமார்களே! நானோ இந்த துன்யாவை விட்டும் பிரிந்து போகின்றேன். இந்த நாளானது எனக்கு

துன்யாவில் கடைசி நாளாகவும், ஆகிரத்திற்கு முதல் நாளாகவுமிருக்குமென்று சொன்னவர்களாக, உம்முல் மூஃமினீன் பீவி ஆயிஷா (றலி) அவர்களின் வீட்டுக்கு சென்றார்கள். அஸ்ஹாபிகளெல்லாம் மனங்கலங்கி மதிமயங்கி அழுதவர்களாக பிரிந்து அவரவர்கள் இடத்திற்கு சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு ஜுரம் அதிக உக்கிரமாகி மவுத்து அடுத்து விட்டதென்று தெரிந்தது. அப்போது, தங்கள் வசம் ஏழு தங்கக்காசுகள் இருந்தன. இவர்கள் வியாதியின் உக்கிரத்தால் அவைகளை சதகா செய்யாமல் இருந்தார்கள். பின்பு நபி (ஸல்) அவர்கள் தாங்களே தங்கக் காசை எடுத்துக் கொண்டு வரச்சொல்லி, இத்தக்கக்காசு முஹம்மதிட மிருக்க அவர் அல்லாஹ்வை சந்தித்தால் அவரை அல்லாஹ் பொருந்த மாட்டா னென்று சொல்லி அவ்வேழு தங்கக் காசையும் அப்பொழுதே சதகா செய்து விட்டார்கள்.

பிறகு நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஜுரம் முன்னிலும் அதிக மும்முரமாயிற்று. அப்போது அஸ்ஹாபிகளில் பிரதானமான அநேகரும், அநேக பெண் பிள்ளைகளும் சூழ்ந்திருந்தார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் பெண் பிள்ளைகளை நோக்கி "மலக்கு ஒருவர் இங்கே வருகின்றார்; நீங்கள் எல்லாரும் விலகிப் போங்கள்" என்றார்கள். ஆயிஷா (றலி) அவர்கள் தவிர மற்ற பெண்கள் எல்லாரும் எழுந்து விலகிப் போனார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஆயிஷா (றலி) அவர்கள் துடையில் சிரசை வைத்துப் படுத்திருந்தார்கள் பிறகு ஆயிஷா (றலி) அவர்களும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிரசைத்தாங்கி, ஒருபதானத்தில் வைத்துவிட்டு, எழுந்து போய் ஒரு அறையில் புகுந்து கொண்டார்கள். பிறகு வானவர்களில் ஒருவர், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து, இரகசியமாக சிலவார்த்தைகள் சம்பாஷித்திருந்து, மீண்டும் வானுலகஞ் சென்றார். அவ்வானவர் சென்ற பின் ஆயிஷா (றலி) அவர்கள் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிரசை முன்போல மெல்லத் தாங்கி தங்கள் துடையில் வைத்துக் கொண்டார்கள். அதன்பின் மற்ற பெண்களெல்லாரும் வந்து சூழ்ந்திருந்தார்கள். அப்போது ஆயிஷா (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்! இப்போது தங்கள் சமூகத்தில் வந்து இரகசியமாக சம்பாஷித்துச் சென்ற வானவர், எப்போதும் தேவரீ

னிடம் வரும் ஜிப்றயீலைப்போல இல்லையே, இவர்யார்? இவருடைய
நாமமென்ன? அடியாள் அறியவிரும்புகிறேன்" என்றார்கள். அதற்கு
நபிநாயகம் (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந்து "ஆயிஷா! இவர்
பிராணிகளுக்கு மரண மடுத்தபோது அவற்றின் உயிரைக் கைப்
பற்றிச் செல்லும் அதிகாரமுள்ள மலக்கல் மௌத்து. இவருடைய
நாமம் இஸ்றாயீல். இவர் என்னுடன் சம்பாஷித்த இரகசிய
மாவது அல்லாஹு தஆலா இவரிடம் 'நீர் முஹம்மது நபி
யுடைய உயிரை கைப்பற்றி, என்சமுகத்தில் கொண்டுவாரும்.
அதற்கு அவர் மறுத்தால், யாதொன்றும் பேசாமல் மீண்டு சும்மா
வந்து விடும்' எனக்கட்டளை பண்ணினானும். இதுதான் அவர்
இரகசியத்தில் என்னிடம் சொன்னது. நான் அவருக்கு "ஜிப்றயீல்
வந்து விட்டுப் போகும் வரையும் சற்றே பொறும் என்று சொன்
னேன்" என்றார்கள். இச்சொல்லைக் கேட்டமாத்திரத்தில் ஆயிஷா
(றலி) அவர்களும் மற்றவர்களும் மதிமயங்கி, வாய்விட்டு அலறி,
கண்ணீர் சொரிந்து ஏங்கி அழுதார்கள்.

எல்லாரும் இவ்விதம் அழுதுகொண்டிருக்கையில், நபிநாயகம்
(ஸல்) அவர்கள் மறுபடியும் பெண்களைப்பார்த்து, நீங்கள் விலகிப்
போங்கள், ஜீபுறயீல் அலைஹிஸ்ஸலாம் வருகின்றார் என்று சொன்
னார்கள். அப்போது பெண் பிள்ளைகளெல்லாரும் விலகினார்கள்.
ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, நபிநாயகம் (ஸல்) அவர்களை
நோக்கி "யாறஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா என்னைத் தன்
கன் சமுகத்தில் போய் தன் ஸலாத்தைச் சொல்லி, தங்களுடைய
தேக சௌக்கியத்தின் தன்மை எப்படி யிருக்கிறதென வினவி
வரும்படி ஏவினான். அன்றியும், இவ்வுலகத்தில் இனி பிணியாளி
களைப் போய் வினவுவது எல்லார் மீதும் கடனென்பதை, இன்று
எல்லாருக்கும் தங்களைக்கொண்டு அறிவித்திருக்கின்றான். அதற்
காகத்தான் இந்த தடவை வந்தேன். ஆகையால், தேவரீருடைய
தேக சௌக்கியத்தின் தன்மை எப்படி யிருக்கின்றது?" எனக்
கேட்டார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி
"ஜிப்றயீலே! என்சரீரத்தின் வருத்தத்தை இன்னபடி யென்று
சொல்லி முடியாது. அவ்வளவு வருத்தம் உண்டாயிருக்கின்றது".
என்றார்கள். அதற்கு ஜிப்றயீல் "யாறஸூலல்லாஹ்! அல்லாஹு
தஆலா தங்களுக்கு இவ்வளவு வருத்தத்தை யுண்டாக்கின தெல்
லாம், அவனுடைய உவப்பாலன்றி மற்றொன்றாலல்ல" என்றார்.

பின் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி "யாஜிப்றயீல்!
தாங்கள் வருவதற்கு சற்று முந்தி இஸ்றாயீல் என்னிடம் வந்து,
சில இரகசியங்களை எனக்குச்சொன்னார்?" என்றார். இதைக்கேட்ட
ஜிப்றயீல் நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி "யாறஸூலல்லாஹ்!
அல்லாஹு தஆலா தங்கள் மகிமையை தங்களுக்குத் தெரிவிக்கும்
வண்ணமே அவரைத் தங்கள் சமுகத்திற்கு அனுப்புகின்றான்.
இஸ்றாயீல் தங்கள் சமுகத்தில் வந்து பிரியத்தைக் கேட்டதுபோல
மற்ற யாரிடத்திலும் கேட்கமாட்டார். அவருக்குத் தாக்ஷணியம்
ஒருவரிடத்திலுமில்லை" என்றார்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஜிப்றயீல் அலைஹிஸ்
ஸலாமை நோக்கி, "யாஜிப்றயீலே! என்னுடைய அஜல் கிட்டமாக
சமீபித்திருப்பதால் என்னுடைய றப்பு ஹக்கு தஆலா இடத்தில்
எனக்கு உண்டாயிருக்கும் சங்கை மரியாதைகளை எனக்கு சொல்லிக்
காட்டு" மென்றார்கள். அதற்கு ஜிப்றயீல் "முஹம்மதே! தங்களு
டைய சிறப்பாகிய றூஹு வருவதற்காக வானலோகத்தின் வாயல்
களெல்லாம் திறக்கப்பட்டிருக்கின்றன; மலாயிக்கத்துகளெல்லாம்
ஸப்பு ஸப்பாக நிற்கின்றார்கள்; ஹூறுல்ஈன் களென்னும் தேவ
மாதர்களெல்லாம் அலங்கரித்து கொண்டு நிற்கின்றார்கள்" என்று
சொன்னார். அதைகேட்டு நபி (ஸல்) அவர்கள் "நான் இதைப்பற்றி
யெல்லாம் கேட்கவில்லை; என்னுடைய றப்பிடத்தில் எனக்கு என்ன
உண்டாயிருக்கிறது, அதைச்சொல்லும்" என்று கேட்டார்கள்.
அதற்கு ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் "முஹம்மதே! அல்லாஹு
தஆலா உமக்கு ஸலாம் சொல்லி அறிவிக்கும் படியாக சொன்னான்.
நீர்தான் ஷபாஅத்து செய்கிறதில் முந்தினவரென்றும், ஷபாஅத்து
கொடுக்கப்பட்டவரில் பிந்தினவரென்றும், நீரும் உமது உம்மத்து
களும் சொர்க்கத்தில் புகுதுகிற மட்டிலும் மற்ற உம்மத்துகளுக்கு
சொர்க்கம் ஹறாமாயிருக்கும்" என்றும் சொன்னார்.

பின்னும் நபி (ஸல்) அவர்கள் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமை
நோக்கி, எனக்குபின் என்னுடைய உம்மத்துகளுக்கு யார் உதவியா
யிருக்கிறார்களென்று கேட்க, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் வான
லோகஞ் சென்று வந்து, "முஹம்மதே! அல்லாஹு தஆலா உமக்கு
ஸலாம் சொன்னான். உமக்குப் பகரமாக உம்முடைய உம்மத்து
களுக்கு நான் உதவியாயிருக்கிறேன் என்று சொல்லும்படியாகவும்

சொன்னான்'' என்று சொன்னார். அதைகேட்டு நபி (ஸல்) அவர்கள் இப்போதுதான் என்னுடைய கல்பு சந்தோஷமாயிற்றென்று சொல்லி ''ஜிப்றயீலே! தாங்கள் என்னை விட்டு விட்டுப் போகாதீர்கள். என் அருகிலேயேயிருங்கள்'' என்றார்கள். இதைக்கேட்டு ஜிப்றயீல் நபிநாயகம் (ஸல்) அவர்கள் அருகில் இருந்து கொண்டார்.

பிறகு நபிநாயகம் (ஸல்) அவர்கள் பெண்பிள்ளைகளையும், தங்கள் அருமை மகளார் பாத்திமா (றலி) அவர்களையும் சமுகத்தில் அழைத்தார்கள். பாத்திமா (றலி) தங்கள் தந்தையின் அருகில் வந்து உட்கார்ந்துகொண்டு, வாய்விட்டு அலறி, கண்ணீர்ப்பிரவாகத்தால் உடலம் நனைய அழுதார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மகளாரை சமீபத்திலழைத்து, சஞ்சலத்தை மாற்றி, இரகசியமாக இரண்டொரு சொல்லைச் சொன்னார்கள். அதைக்கேட்ட பாத்திமா (றலி) அவர்கள் முன்னிலும் பலமடங்கு அதிகமாய் ஏங்கிப் பரிதபித்து அழுதார்கள். மறுபடியும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மகளாருடைய செவிகளில் இரகசியமாக இரண்டொரு சொல்லைச் சொன்னார்கள். பிந்திச் சொன்ன இரகசியத்தைக் கேட்டமாத்திரத்தில் பாத்திமா (றலி) அவர்கள், துயரொழிந்து அழுகையை மாற்றி, களி கூர்ந்து, முக மலர்ந்தார்கள். இதைக்கண்ட மற்ற பெண்பிள்ளைகள் அனைவரும் ஆச்சரியமடைந்து, 'இதென்ன புதுமை. பாத்திமா முந்தி அழுது, பிந்திக் களிகூர்ந்து முகமலர்ந்த விவரம் தெரியவில்லையே' யென்று திகைத்து, பாத்திமா (றலி) அவர்களை நோக்கி, அதன் அந்தரங்கமென்னவென்று கேட்டார்கள். அதற்குப் பாத்திமா (றலி) அவர்கள், அவர்களை நோக்கி ''எனது பிதாவாகிய நபிநாயகம் (ஸல்) அவர்கள் முந்திஎன்னை அருகில் அழைத்து, தங்களுக்கு மவுத்து முடுகிவிட்டதாகச் சொன்னார்கள். அதைக்கேட்டு நான் பரிதாபமுற்று அலறி அழுதேன். பிந்தி, எனக்குப் பின் எனது பந்துஜனங்களில் நீதான் முன்னே மவுத்தாவாய், என்னிடம் வந்து சேர்வாய் யென்றார்கள். அதனால் ஆனந்தமடைந்து முகமலர்ந்தேன்'' என விடை பகர்ந்தார்கள்.

அன்று தீர்ந்து, பனிரண்டாம் தேதி அதிகாலையில், பாத்திமா (றலி) அவர்கள் தங்கள் புத்திரர்களாகிய ஹஸன், ஹுஸைன்

என்னும் இரு பிள்ளைகளையும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவ்விரு பௌத்திரர்களையும் அணைத்து முத்தமிட்டு, அருகில் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது மலக்கல் மவுத்து என்னும் இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து ஸலாம் பகர்ந்து, பணிந்து நின்று, ''யாறஸூலல்லாஹ்! அல்லாஹுதஆலா தங்கள் சமுகத்தில் என்னை ஏவின கருமத்தை குறித்து, இப்போது தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?'' எனக்கேட்டார். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி ''இனித் தடை யொன்றுமில்லை; என்னை அல்லாஹுதஆலாவின் திவ்விய சமுகத்தில் அழைத்துக் கொண்டு போய்விடும்'' என்றார்கள். இப்படிச் சொன்ன போது, இஸ்றாயீல், நபிநாயகம் (ஸல்) அவர்களை நோக்கி ''யாறஸூலல்லா! நான் தங்கள் உயிரைக் கைப்பற்றப் பின் வாங்குவது போல, மற்றவர் உயிரைக் கைப்பற்ற ஒருபொழுதும் பின் வாங்கினதில்லை. தங்கள் சமுகத்தில் அடுத்தடுத்து வந்து பிரியத்தை விசாரிப்பது போல, வேறுயாரிடத்திலும் விசாரித்ததில்லை. ஆனாலும், தங்களை அல்லாஹுதஆலாவின்சமுகத்தில் அழைத்துக் கொண்டு போவதற்கு இன்னும் சற்று நேரம் போக வேண்டும். ஆகையால், இருங்கள்; வருகிறேன்'' என்று பகர்ந்து விட்டு, வானுலகஞ் சென்றார். அதன் பின் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் முடிவான வஹியைக் கொண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்தார்.

வந்த ஜிப்ரயீல், நபிநாயகம் (ஸல்) அவர்களைப் பலவாறு புகழ்ந்து ''யாறஸூலல்லாஹ நான் தேவரீருடைய சமுகத்தில்வரும் வரத்து இந்தத் தடவையோடு முடிந்தது. இனி நானும் இவ்வுலகத்திற்கு வரமாட்டேன். தங்களுக்கு வஹியும் வரமாட்டாது. தங்கள் காரியங்கள் அடங்கலும் முடிவாய் விட்டன. இனி ஹரமத்திலேதான் நான் தங்களைத் தரிசிப்பேன். இது நிற்க, அல்லாஹுதஆலா 'இன்றையதினம் என்னுடைய ஹபீபாகிய முஹம்மது நபி இங்கு வருகின்றார். ஆகையால், நீங்கள் எல்லாரும் திரண்டு சுவர்க்கங்களை யெல்லாம் அலங்கரியுங்க' ளென்று கட்டளை பண்ணினான். அந்தக் கட்டளை பிரகாரம் மலக்குகள் திரள் திரளாய்க்

கூடி, அர்ஷு, குர்ஸ், எட்டு சுவர்க்கங்கள் எல்லாவற்றையும் அலங்கரித்து, நரகங்களை அடைத்து விட்டார்கள். சுவர்க்கத்து வீதிகள் தோறும், மலக்குகளும், ஹூறுல் ஈன்களும் திரண்டு நின்று களியாட நிற்கின்றார்கள். இன்று நான் தங்களைப் பிரிந்தால், இனி கியாமத் நாள்வரையும் என்னுடைய தானத்திலேயே நிற்பேன்” என்றார். இதைக்கேட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு படுத்திருந்தார்கள். அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களின் நெற்றி வியர்த்துக் கொண்டிருந்தது. அதைக்கண்ட ஆயிஷா (றலி) அவர்கள் மனங்கலங்கி கண்ணீர் சிந்தினவர்களாய், தங்கள்வலது கரங்கொண்டு அந்த வியர்வையைத் துடைத்த வண்ணமிருந்தார்கள்.

அன்று நபிநாயகம் (ஸல்) அவர்களின் அறுபத்து மூன்றாம் வயது சிரப்பமாகிய றபீயுலவ்வல் மாதம் பனிரண்டாந் தேதி திங்கட் கிழமை முற்பகல் மணி ஒன்பதுக்கு மேலாயிற்று. அது தான் [illegible]வுடைய நேரம். அந்நேரத்தில் என்றுமில்லாத நூதனமான பரிமளமொன்று புதிதாயெழும்பி, மதீனமா நகரம் முழுவதும் கமகமவென்று கமழ்ந்தது. அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்கள் அடிக்கடி மயக்க முற்றவர்களா யிருந்தார்கள். ஒரு தரம் மயக்கம் தெளிந்த போது, ஆயிஷா (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்கள் முகாரவிந்தத்தை நோக்கி “யாறஸூலல்லாஹ்! தமியாளும் தமியாளின் பிதா மாதாக்களும் தேவரீர் பாதங்களில் குர்பானாகும். தங்கள் ஒப்பற்ற நெற்றி வியர்க்கும் முகாந்திரமென்ன?” எனக்கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பிராண நாயகியாரை நோக்கி “ஆயிஷா! மூமின்களான உத்தமவான்களுடைய உயிர், இவ்விதம் நெற்றியின் வியர்ப்போடு பிரியும். காபிர்களான தீயோர்களுடைய உயிரோ மிகமிகக் கஷ்டத்தோடு பிரியும்” என்றார்கள்.

அதன் பின், நபிநாயகம் (ஸல்) அவர்கள் மயக்கம் தெளியுந் தோறும் “அர்றபீக்குல் அஃலா” என்று சொன்ன வண்ணமாயிருந்தார்கள். அன்றியும், சமூகத்தில் கூடியிருந்த ஜனங்களை அடிக்கடி நோக்கி “ஜனங்களே! அல்லாஹுத்தஆலாவை தினம் ஒன்றுக்கு ஐந்து தரம் தொழுங்கள், தொழுங்கள், தொழுங்கள். அப்படித் தொழாவிட்டால் அநுப்பிரமாண நன்மையாவது உங்

ளுக்குக் கிடைக்காது. ஆகையால், நீங்கள் தொழுங்கள். உங்களைத் தொழும்படி பின்னும் பின்னும் ஏவுகிறேன். கட்டாயம் தொழுங்கள்” என்று சொல்லிக் கொண்டே யிருந்தார்கள். இதற்குள் வபாத்தின் வேளையாயிற்று.

வபாத்தின் வேளையானபோது, நபிநாயகம் (ஸல்) அவர்களின் வலது பக்கத்தில் ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாமும், இடது பக்கத்தில் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமும் வந்து நின்று கொண்டார்கள். அருகர் நால்வரும், அஸ்ஹாபிகளில் பிரதானமான அநேகரும், பந்துவிலுள்ள பெண்களும் மனைமுழுதும் இடமற நெருங்கியிருந்தார்கள். அப்படியிருக்கையில். மலக்கல்மவுத் என்னும் இஸ்றயீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து நின்றார். அந்தத் தருவாயிலும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் “ஜனங்களே! தொழுங்கள். ஐந்து வேளையும் தொழுங்கள்” என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பின்னர் நேரமாய்விட்டபடியால், இஸ்றயீல் அலைஹிஸ்ஸலாம் மனம் அஞ்சி, உடலொடுங்கி, வெண்ணையிலிட்ட உரோமத்தைக் கைபற்றும் பாவனையாய், நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறந்த உயிரைக் கைப்பற்றினார்.

அவர்களின் றூஹு முட்டுக்கால் வரை வெளிவர “றபீகு பில்லாஹி தஆலா றப்பன்” என்று சொன்னார்கள். பிறகு றூஹு நெஞ்சில் வரும்போது (ஸல்) அவர்களுக்கு தன்மை மறதியுண்டாயிற்று. அது கண்டு ஆயிஷா (றலி) அவர்கள், அல்லாஹுத்தஆலாவிடம் சுகமாகும்படி துஆ கேட்டார். நாயகமவர்கள் தெரிந்து அதையறிந்து, “அப்படி துஆ கேட்கவேண்டாம். அர்றபீக்குல் அஃலாவாகிய அல்லாஹுத்தஆலாவை நான் சந்திக்கும்படி கேளுங்கள்” என்று சொன்னார்கள். பின்பு தங்கள் திருமுகத்தை ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பால் திருப்பி, ஜிப்றயீலே! என்னுடைய சக்றாத்து வேதனையை இலேசாக்கும்படி துஆ கேளுங்க ளென்று சொல்ல, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அழுதார்கள். பிறகு தங்கள் மகளார் பாத்திமா (றலி) அவர்கள் பால் தங்கள் முகத்தை திருப்பிப்பார்க்க, பாத்திமா அவர்கள் “என்னுடைய அப்பாவுடைய வருத்தத்திற்கு நான் என்னதான் சொல்லுவேன். என் அப்பாவே!” என்று சொல்லி அழுவே

அதைக்கண்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் "என் மகள் பாத்திமாவே! இதற்குப் பின் உன்னுடைய முகத்தை காயப்படுத்திக்கொள்ள வேண்டாம்; புடவைகளை கிழித்துக்கொள்ள வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, "என்னுடைய உடற்பிறந்தார் ஜிபுறயீலே! எனக்குப்பின் எனது உம்மத்துகளும் ஸக்றாத்து வேதனையை நான் அனுபவிக்கிறது போலவா அனுபவிப்பார்கள்" என்று கேட்க, ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "இதைக்காண எழுபத்தொரு பங்கு வருத்தம் அதிகமாகவே அனுபவிப்பார்கள். அதில் ஒருபங்கு வாளைக்கொண்டு எழுபது விடுத்தம் வெட்டுகிறதைக் காண அதிகக் கடினமாயிருக்கு" மென்று சொன்னார். அதைக் கேட்டதும் நபி நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் பார்வையை மேலே யுயர்த்தி "ஆண்டவனே! ஸக்றாத்தின் வேதனையை நான் அனுபவிக்கிறது போல் எனது உம்மத்துகள் அனுபவிக்கிறதா யிருந்தால் அவைகளை யெல்லாம் என்பேரில் சாட்டிவிடு. அவர்கள் பேரில் ஸகறாத்து வேதனையை இலேசாக்கி வைத்துவிடு; நீ நாடிய கருத்தை முடித்து கொடுக்கும் வல்லவனா யிருக்கிறாய்" என்று துஆ கேட்டார்கள்.

பிறகு (ஸல்) அவர்களின் றூஹு தொண்டைக்குழியில் இடக்கும்போதும், கடைசி வஸீயத்து 'தொழுது கொள்ளுங்கள்; தொழுதுக்கொள்ளுங்க' ளென்றே சொன்னார்கள். அப்போது தாடியில் வியர்வை ஓடிக்கொண்டிருக்கும்போது, நபிநாயகம் (ஸல்) அவர்கள் றூஹு கைப்பற்றப்பட்டது. அப்போது தாங்கள் கட்டிவைத்திருந்த திருக்கரம் சாய்ந்து விட்டது.

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அஸ்ஸலாமு அலைக்கும் யாநபிய்யல்லாஹ்
அஸ்ஸலாமு அலைக்கும் யாஹபீபல்லாஹ்
அஸ்ஸலாமு அலைக்கும் யாகைற கல் இல்லாஹ்
அஸ்ஸலாமு அலைக்கும் யா அஹ்லபைத்தின் னுபுவ்வா.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் றூஹு கைப்பற்றப் பட்ட போது கஃபாவின் வலது திசையிலிருந்து "அஸ்ஸலாமு அலைக்கும் யாஅஹ்லபைத்தின் னுபுவ்வா" (நபிபட்டத்தின் வீட்டையுடையவர்களே! உங்கள் மீது ஸலாம் உண்டாவதாகவும்) என்று ஒரு சத்தமுண்டாயிற்று.

நபி நாயகம் காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் வபாத்தான வுடனே, அழுத சப்தங்கள் துனியாவை வளைந்து கொண்டன. அபூபக்கரினில் ஸித்திக் (றலி) அவர்கள் "வாமுஹம்மதா! வாமுஹம்மதா!!" என்றும் உமறு (றலி) "வா அஹ்மதா! வா அஹ்மதா!!" வென்றும், உதுமான் (றலி) அவர்கள் "வாமஹ்மூதா! வாமஹ்மூதா!!" வென்றும் அலி (றலி) "வாமுமஜ்ஜதா! வாமுமஜ்ஜதா!!" வென்றும் ஹஸன், ஹுஸைன் (றலி) இருவர்களும் "வாஜத்தாஹ்! வாஜத்தாஹ்!!" வென்றும் பாத்திமா (றலி) அவர்கள் "வா அபாஹ்! வா அபாஹ்!!" வென்றும் ஆயிஷா (றலி) அவர்கள் வாஅஸைதா! வாஅஸைதா!! வென்றும், மாரியத்துல் கிபுத்தி (றலி) அவர்கள் வாமவ்லாஹ்! வாமவ்லாஹ்!! வென்றும், மற்றும் ஸஹாபாக்கள் அனைவரும் வாமுஸ்தபா! வாமுஸ்தபா!! வென்றும் அழுது சலித்தவர்களாக, "முழுமை யான நபிமார்களுக் கெல்லாம் நாயகமே! எங்களைவிட்டு தூரமாகி விட்டீர்களே! நபிகளுக் கெல்லாம் முத்திராங்க மானவர்களே! எங்களை விட்டு தூரமாகி விட்டீர்களே! பாவிகளை மன்றாடி கரையேற்றும் பாத்திபரே! எங்களைவிட்டும் தூரமாகி விட்டீர்களே! ஆலத்தார்களுக் கெல்லாம் றஹ்மத்தாக வந்த வள்ளலே! எங்களை விட்டும் மறைந்து தூரமாகி விட்டீர்களே!" என்று புலம்பி துக்கித்து அழுதார்கள்.

இன்னும் நபி நாயகத்தின் மற்றும் நம்பிராட்டிமார்களும், மற்றும் பெண்கள் யாவர்களும் நின்று மயங்கி, கண்களில் நீர் தாரைதாரையாய் இரத்தம் போல் சிந்த தரையில் மயங்கி விழுந்து, "இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" என்ற வாக்கியத்தை அடிக்கடி சொன்னவர்களாக அழுது மதி மயங்கி நெருப்பிலிட்ட மெழுகு போல் உருகி அழுது புரண்டார்கள். அவ்வழுங் குரலோசைகள் யோமத்து அமளிகளைப் போல் மதீனா முனவ்வரா எங்கும் பரவி நின்றது.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள், முன் குறித்த றபியுல் அவ்வல் மாதம் பனிரண்டாந்தேதி திங்கட் கிழமை முற்பகல், ளுஹாவுடைய நேரத்தில் வபாத்தானார்கள். அப்போது அவர்களுக்கு வயது அறுபத்து மூன்று நிரப்பம்.

பின்னர் நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற உயிரை, இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் கொண்டு போய், அல்லாஹு தஆலாவின் காருண்ய சமுகத்தில் சேர்த்தார். நபிநாயகம் (ஸல்) அவர்களின் உயிர் அங்கே போனவுடன் அர்ஷு, குர்ஸ், லௌஹு, [illegible] ஹௌலல் கௌதர், சித்ரத்துல் முன்தஹா, பைத்துல் மஃமூர், மக்காமன் மஹ்மூது, வஸிலா என்னும் பிரதானதானங்கள் எல்லாம், பண்டைய மகிமை இன்று நமக்கு கிடைத்ததென்று ஆனந்தபர வசமடைந்தன. வானவர்கள் எல்லாரும் களிகூர்ந்தார்கள். சுவர்க்கங்கள் எட்டும் மகிமை பெற்றன.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத் தானபோது, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமும், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் உத்தரீயத்தை கொண்டு அவர்கள் உடலைக் கேசாதி பாத பரியந்தம் மூடிவிட்டு வானுலகஞ் சென்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் திவ்விய சரீரம் மூடப்பட்ட போது ஆயிஷா (றலி) அவர்கள் பிரக்ஞை யற்று மூர்ச்சித்து விழுந்தார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்களின் மற்ற மனைவிகளாகிய ஹப்சா (றலி) முதலான எட்டுப் பேர்களும் அவ்வாறே பிரக்ஞையற்றிருந்தார்கள். பந்துவினுள்ள வேறு பெண்களெல்லாம் மனங்கலங்கி அழுதார்கள். அஸ்ஹாபிகளெல்லாரும் தீயிலிட்ட மெழுகைப் போல் மனமுருகி, கண்ணீர் பிரவகித்து, அடக்கமின்றி அழுதார்கள். மதீனமா நகரமெங்கும் ஓவென்ற அழுகுரலாயிருந்தது.

அப்போது ஒரு பெரியார், இருபுயத்தின் மீதும் மிகுந்த முடிவுடையவராக அங்கு வந்து, நபி (ஸல்) அவர்கள் மையித்தை திறந்து ஆண்டவரவர்களின் முகத்தோடு முகம் சேர்த்து இரண்டு புருவத்திற்கு மிடையிலும் முத்திக்கொண்டு போனார். இவர்கள் யாரென்று வினவியபோது கிழுறு அலைஹிஸ்ஸலாம் என்று அலி (றலி) சொன்னார்கள்.

அன்று முழுதும் விலங்குகள் கன்றுகளுக்குப் பால் அருந்தத் தரவில்லை. பறவைகள் குஞ்சுகளுக்கு இரை கொடுக்கவில்லை. வனங்களிலுள்ள தருக்களிலும், செடி கொடிகளிலும் புஷ்பங்கள் அலர்ந்து தேன் சிந்தவில்லை. பிராணிகளடங்கலும் இயங்க மற்று வாடி, தத்தம் ஜாகையில் இருந்தன.

இன்றும், அஸ்ஹாபிகளில் அநேகர் வாய்மை உதவாத மூடவர்களைப் போல, இருந்தபடியே இருந்தார்கள். அநேகர் “நமது நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாகவில்லை” என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அநேகர், வாயில் வந்தபடி புலம்பிக் கொண்டிருந்தார்கள். அஸ்ஹாபிகள் ஸ்மரணையற்று இவ்விதம் பலவாறு யிருக்கையில், மூன்றாம் கலீபாவாகிய உதுமான் (றலி) அவர்கள், வாய்திறந்து யாதொன்றும் பேசாமல், ஒருவருடைய கையைப் பிடித்துக் கொண்டு ஊமைபோல, தங்கள் மாளிகைக்கும் நபிநாயகம் (ஸல்) அவர்கள் மாளிகைக்கும் இடையில் உலாத்திக் கொண்டேயிருந்தார்கள். நான்காம் கலீபாவாகிய அலி (றலி) அவர்கள், உள்ளங்கலங்கி, உடல் ஒடுங்கி, துக்க சாகரத்தில் அமிழ்ந்து ஒரு மூலையில் முடங்கி ஒரேயிருப்பா யிருந்தார்கள். இரண்டாம் கலீபா வாகிய உமர் (றலி) அவர்கள் பிரக்ஞையற்று, மாளிகையை விட்டு வாசலில் வந்து நின்று கொண்டு “ஜனங்களே! நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாக வேயில்லை. அல்லாஹு தஆலா அவர்களை எழுந்திருக்கச் செய்வான். எழுந்தபின் தங்களை வபாத்தாய் விட்டார்களென்று சொல்லுபவர்களின் கால்களை தறிக்கப் பண்ணுவார்கள். முன் மூஸா நபி அவர்களை நாற்பது தினம் வரை அல்லாஹ் மயக்கி வைத்திருக்கவில்லையா? அதுபோலவும் அல்லாஹு தஆலா மயக்கி வைத்திருக்கவில்லையா? அதுபோல நமது நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும் இப்போது ஒரு வித மயக்கம் உண்டாயிருக்கிறது. அதன் காலக்கணக்குத் தீர்ந்தபின் எழுந்திருப்பார்கள். ஆகையால், நீங்கள் ஒன்றும் பேசாமல் உங்கள் நாவுகளை அடக்கிக் கொண்டிருங்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாய் விட்டார்களென்று இனி யாராவது சொன்னால், அவர்களை வெட்டிவிடுவேன்” என்றார்கள். முதலாம் கலீபாவாகிய அதிவிற் சிறந்த அபூபக்கர் சித்தீக் (றலி) அவர்களும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் சிறியதந்தையாகிய அப்பாஸ் (றலி) அவர்களும் பொறுமையாய், திடசித்தத்துடன், கலங்கா திருந்தார்கள். மற்றவர்கள் எல்லாரும் மேற்கண்ட வண்ணமே மனங்கலங்கி யிருந்தார்கள்.

அப்போது நபிநாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய அப்பாஸ் (றலி) அவர்கள், ஜனங்களுக்கு எதிரே எழுந்து நின்று

"ஜனங்களே! அல்லாஹு தஆலாவின் பேரில் பிரமாணிக்கமாக நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாய் விட்டார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஒருதினம் உங்கள் நடுவே வீற்றிருந்து கொண்டு "முஹம்மதே! நீரும் மரணமடைவீர்; அவர்களும் மரணமடைவார்கள்" என்னும் அர்த்தம் தரும் வேதவாக்யத்தை வியாக்கினத்தோடு சொல்ல நீங்கள் கேட்கவில்லையா?" என்று கூறி, மறுபடியும் "உங்கள் நபியும், நீங்களும் மவுத்தாய்விடுவீர்கள். அதன்பின் எனது சமூகத்தில் வந்து நியாயத் தீர்ப்புப் பெறுவீர்கள்" என்னும் வேதவாக்கியத்தையும் ஓதிக்காட்டினார்கள்.

பிறகு அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் எழுந்து, நபிநாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து, அவர்களின் ஒப்பற்ற திருமுகார விந்தத்தை முகர்ந்து முத்தமிட்டுக்கொண்டு "யாறஸூலல்லாஹ்! என்பிதா மாதாக்களிருவரும் தங்கள் பால் குர்பான் ஆகும். மகத்தான அல்லாஹு தஆலா தங்களுக்கு இரண்டு மவுத்தை சங்கற்பிக்கவில்லை. இதுதான் தங்களுடைய மவுத்து எனமனத்துயரத்தோடு சொல்லிவிட்டு, விரைவாய்வெளியில் வந்து "ஜனங்களே! நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாய், அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் சேர்ந்து விட்டார்கள். வணங்கப்படத்தக்க அந்த அல்லாஹு தஆலா ஒருவன்தான் மரணமடையாத நித்திய வஸ்துவானவன். அவனை நீங்கள் எப்பொழுதும் பொருந்தித் தொழுங்கள்" என்று பகர்ந்து மறுபடியும் "ஜனங்களே! முஹம்மது என்பவர் நபியேயன்றி வேறல்ல. முன்னிருந்த நபிகள் எல்லோரும் மரணமடைந்ததுபோல இவரும் மரணமடைவார் என்னும் அர்த்தமமைந்த இந்த வேதவாக்கியத்தை நீங்கள் அறியவில்லையா?" என்றுசொல்லி, அந்தவேதவாக்கியத்தை ஓதிக்காட்டினார்கள். அப்போது ஜனங்களெல்லோரும் இந்த வேதவாக்கியத்தை இன்று தான் நாங்கள் கேட்டோமென்று சொன்னார்கள். அதன்பின் அபூபக்கர் ஸித்தீக்கு (றலி) அவர்கள் அங்கிருந்து திரும்பி தங்கள் இதயத்திலுள்ள துயரங்களனைத்தையும் வெளியிடாமல் அடக்கிக்கொண்டு கண்ணீர் சிந்தினவர்களாக ஸலவாத்து சொல்லிக்கொண்டு, நபிநாயகமவர்களின் அருகில் வந்து அவர்கள் முகத்தை மூடியிருக்கும் ஆடையை மெள்ள நீக்கி அவர்களின் முகத்தையும் நெற்றியையும் இரண்டு கண்களையும் முகர்ந்து முத்தமிட்டுக்கொண்டு, தங்கள் மனந்

ஸாத்தால் நடவினார்கள். இன்னும் எங்கள் நாயகமே எனது தந்தையும் தாயும் தங்கள் பாதாரவிந்தத்திற்கு காணிக்கையாக இருக்கும். எங்கள் நாயகமே, தங்களுக்கு இந்த மவுத்தைத் தவிர இரண்டாவது மவுத்து கொடுக்கப்பட்டிராது. இப்போது தேவரீர் வபாத்தாய் விட்டதால், எங்களுக்கு நேரிட்ட மனத்துயரத்தை எண்ணிறந்த காலம் வரையும், நாங்கள் உயிரோடிருந்து இராப்பகலாக ஒப்பாரி சொல்லி அழுதபோதிலும் அதில் சிறிதும் தணியாது. தாங்களும் தமியேனும் இருவராயிருந்து, ஒருவர் போல் ஒன்றி இதுவரையும் இவ்வுலகத்தில் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தோம். இப்போது ஒருவரையொருவர் பிரிந்தோம். இனி தங்கள் பாததாமரைகளை தரிசிக்கும்வரையும் எங்களுக்கு சஞ்சலந்தான். தேவரீர் அடியேன்களுக்கு உபதேசஞ் செய்யும்போது எங்களைப் பார்த்து, நான் மவுத்தானால அப்போதே, நீங்கள் எல்லோரும் மவுத்தாகி விடுங்களென்று ஒருசொல் சொன்னீர்களில்லை அப்படி சொல்லியிருப்பீர்களானால், இப்போதே தங்களை யடக்கஞ் செய்துவிட்டு தங்கள் கபர் அடியில் நாங்களெல்லோரும் இரத்தம் பிரவாகிக்க வெட்டிக் கொண்டு மடிந்துபோவோம். அன்றியும் நான் மவுத்தானால் எனக்காக நீங்கள் எல்லோரும் அழுங்கள், என்றாவது சொன்னீர்களில்லை. இப்படிச் சொல்லியிருந்தால் நாங்கள் அழுவோம்; எங்கள் கண்ணீரால் இப்பூமி முழுவதும் மூடுவோம்; எங்கள் அழுகுரல் அண்டம் அதிர தொனித்து, எங்கள் காலத்தை அழுகையிலேயே போக்குவோம் அப்படி நாங்கள் மடிந்து போகாமலும் பேரழுகையா யழாமலும் தடைப்பட்டிருப்பதெல்லாம் தேவரீருடைய ஏவல் இல்லாமையாலல்லவா? தங்களுடைய பாததாமரைகள் நீங்கள் வைத்திருக்கும் எங்கள் பெருங் காதலும், மனோ உற்சாகமும், எங்களைவிட்டு என்றைக்கு விலகும். அப்படி விலக தாங்கள் அடியேன்களுக்குச் செய்துள்ள நன்றிகள் மறக்கக்கூடியவைகளல்ல; தேவரீர் அடியேன்களை அடிக்கடி நினையுங்களென்று கேட்டுக் கொள்ளுவதெல்லாம் அடியேன்களுக்கும் தேவரீரை மறந்து போகாமல் அடிக்கடி நினைக்கும் வண்ணம் அருள் புரியவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம். தேவரீர் எங்களுக்கு நல்லறிவை யுணர்த்தி புத்தியை தந்து, பொறுமை, அமைதி யென்னும் இரண்டையும் மனத்தில் உறுத்திவிட்டு போய்விட்டீர்கள். இல்லாவிட்டால் எங்கள்

சஞ்சலித்தவர்களாய் தங்கள் வபாத் தென்னும் துக்கக்கடலில் மூழ்கி தத்தளித்து எல்லாரும் மரணத்தை அனுபவித்திருப்போம்" என்று சொல்லி, "யாமுஹம்மதா, யாஸய்யிதா, யாகாத்திமுல் அன்பியா" எனக்குரலெழுப்பிச் சொல்லி அழுதார்கள். இதைக் கேட்டிருந்த ஆடவர்களும், பெண்பிள்ளைகளும் இரைந்து அழுதார்கள். அப்போது அழுகுரல் பெரும் அமளியாயிருந்தது. அந்த அழுகுரல் அமளியில், கடைவாசலில் செவி யதிரத்தக்க தொனியொன்று அசரீரியாய்த் தொனித்தது. அந்தத்தொனியுடன் வேதவாக்கிய மொன்றும் கேட்டது. அந்தத் தொனியின் வார்த்தைகள் இவை:—

"இந்த மாளிகைக்குள் இருக்கின்றவர்களே, உங்களுக்கு என்னுடைய சலாம் உண்டாவதாக அல்லாஹு தஆலாவின் சங்கற்பத்தினால் சர்வபிராணிகளும் மரணமடைந்து, அதன் அதன் கருமத்திற்குத் தக்கபடி சுக துக்கங்களை அனுபவிக்கும். அல்லாஹு தஆலாவின் காருண்யத்தினால், துக்கப்பட்டவன் சுகப்படுவான். பயமடைந்தவன் அபயமடைவான். ஈடேற்றமும் கிடைக்கும்"

இச்சப்தம் கேட்டமாத்திரத்தில் ஜனங்களெல்லாரும் அழுகையை அமர்த்தி, இப்படிச்சொன்னவர் யாரென்று வெளியில் வந்து பார்த்தார்கள்; ஒருவரையும் காணவில்லை. மறுபடியும் வந்து சூழவிருந்து அழுதார்கள். அப்போது இன்னும் ஒருதொனி அசரீரியாய் அங்கேயே தொனித்தது. அதாவது:—

"இந்த மாளிகையிலிருக்கின்ற ஜனங்களே, நீங்கள் பிரதி தினமும் அல்லாஹு தஆலாவைச் சிந்தித்து வணங்குங்கள். அப்படி நீங்கள் வணங்குவீர்களானால், அவனுக்கு நீங்கள் உவப்பான அடிமைகளாவீர்கள். மனிதர்களுக்கு நேரிடும் துக்கங்களை நிவர்த்தி செய்து சுகந்தரும் அதிகாரம் அவனிடத்தில் உண்டு. வழிபட்டவர்களுக்குக் கைமாறு செய்யாமல் விடான். இது சத்தியம். ஆகையால், நீங்கள் அந்த அல்லாஹு தஆலாவின் கற்பனைக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருங்கள். உங்கள் வேதம் உணர்த்தும் ஏவல் வழியே ஒழுகி நடவுங்கள்" என்னும் இந்தத் தொனியையும் எல்லாரும் காதாரக் கேட்டார்கள்.

அப்போது அபூபக்கர் (றலி) அவர்கள் மற்றவர்களை நோக்கி, முன் கேட்ட தொனி கிலுறு நபியுடையது; பின் கேட்ட இந்தத்

தொனி யலைஃ நபியுடையதென்று கூறிவிட்டு, ஜனங்கள் அழுவதை அமர்த்தி, கலிமாவையும் ஸலவாத்தையும் சொல்லி முடிந்து "தனக்கு ஒப்பும் உயர்வு மில்லாதவனும், இவ்வுலகத்தில் எல்லாருக்கும் நன்மை செய்பவனும், தன்னை வழிப் பட்டவர்களுக்கு மாத்திரம் பிந்தின யௌமத்தில் நற்கூலி கொடுப்பவனும், மாறு செய்கிறவர்களை நாசஞ் செய்பவனும், என்றும் விளங்கும் மகத்தான அல்லாஹு தஆலாவுக்கே புகழ் அடங்கலுமாம். முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த அல்லாஹு தஆலாவின் அடிமையாயும், தூதராயும், நபிமார்களுக்கெல்லாம் ஆதிநபியாயும், இறுதி நபியாயும் அவதரித்தவர்கள். அவர்களுடைய குர்ஆன் சத்தியவேதம்; இஸ்லாம் பரிசுத்த மார்க்கம். அவர்கள் திருவாக்கிற் பிறந்த ஹதீது என்னும் உத்தம வசனங்களடங்கலும் இரக்ஷணிய வாக்கியங்கள்" என இவ்வாறு வியந்து பேசிமுடித்து, தங்கள் இருகரங்களையும் உயர்த்தி, பின்வருமாறு நபிநாயகம் (ஸல்) அவர்களுக்காகத் துஆசெய்தார்கள் :—

"ஆதியாய், அநாதியாய், அறிவுக்கு அதீதமாய், ஒப்பற்ற ஜோதியாய், விளங்கும் யா அல்லா! யாகரீம்! யாறஹீம்! உன்னுடைய அடிமையாய் தூதராய் விசுவாசியாய், பிரியநேசராய், நபிகளுக்கெல்லாம் சிரேஷ்டராய், எல்லாருடைய பாக்கியங்களுக் கெல்லாம் மேற்பட்ட பாக்கியவந்தராய், மனிதர்களுக்கு ஆதியாய், நபிபட்டத்திற்கு முடிவை யுடையவராய், தங்கள் கூட்டத்தாரை இரக்ஷித்து மோக்ஷத்திற் சேர்க்க உன் சமுகத்தில் மன்றாடுகிறவராய் வந்த நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு, ஒப்பற்ற உனது கிருபையைச் செய்வாயாக. நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு கிருபை செய்தது போல, நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்களுக்கும், சந்ததியார்களுக்கும் செய்தருள். நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு நீ சொந்தமாக்கின பிரதான தானங்களில் வலீலா மக்காமன் மஹ்மூது என்னும் இருதானங்களிலும் உனது அடியார்களாகிய எங்களும் வந்து உன்னைத் தரிசித்து, உன்னாலாகும் பிரயோஜனத்தைப் பெற்றுக்கொள்ளவும், இவ்வுலகத்தில் நபிநாயகம் (ஸல்) அவர்களை எங்களுக்கு உதவியாக்கினது போல் அவ்வுலகத்திலும் ஆக்கி அருள்புரி". என இவ்வாறு இரந்து முடித்து, அங்கிருந்து பள்ளிவாசலுக்குச் சென்று மின்பரில் ஏறி நின்றுகொண்டு, ஜனங்களை நோக்கி "வணக்கமென்னும்

சற்கருமத்தில் தலைப்பட்டு உன்னத பதவியைப் பெறும் கனவான்களே! அல்லாஹு தஆலா தனது வாக்கியங்களாகிய குர்ஆனையும், நபிநாயகம் (ஸல்) அவர்கள் செய்த கிரியைகளாகிய சுன்னத்தையும் நம் மீது நியமகமாக்கி யிருக்கின்றான். இவ்விரண்டின்படி ஒழுகி நடப்பவர்களே வழிபாடு உடையவர்கள். அல்லாதவர் வழிகேடர்களாவார்கள். இது சத்தியம். இனி நீங்கள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாய் விட்டார்களென்னும் விசனத்தை மனத்தின் இருத்திக்கொண்டு, வேறு சிந்தனையின்றி, அதே பராக்காய் ஷைத்தானுடைய மருட்டுதலுக்கு இடங்கொடுத்து வழிதவறிப் போகா வண்ணம், தீனைப் பற்றிப்பிடித்து இபுலீஸ் என்னும் மேற்படி ஷைத்தானை அண்டவொட்டாமல் வெருட்டுங்கள். அவனுக்கு அண்ட இடங்கொடுத்தால், பெரிய கலகத்தைமூட்டி, ஆபத்துக்கு ஆளாக்குவான்'' என்று உபதேசஞ் சொன்னார்கள்.

அதன்பின் அப்பாஸு (றலி) அவர்கள், உமர் (றலி) அவர்களை யழைத்து, அருகிலிருத்தி அவர்களுடைய ஆகுலம் தணிய ஆறுதல் பகர்ந்து, "கத்தாபு உடைய குமாரரே நபிநாயகம் (ஸல்) அவர்கள் வபாத்தாய்ப் போனதை இப்போது தாங்கள் அறிய வில்லையா? முன்னொரு நாள் நபிநாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு நடுவே வீற்றிருந்து கொண்டு 'முஹம்மதே! நீரும், மற்றவர்களும் மய்த்தாவீர்கள்' என்னும் அர்த்தமமைந்த வேதவாக்கியத்தை ஓதிக் காட்ட நாம் கேட்கவில்லையா?" என்றார்கள். அதற்கு உமறு (றலி) அவர்கள், அப்பாஸு (றலி) அவர்களை நோக்கி "ஆம், கேட்டதுண்டு; இன்று தான் சொன்னது போல இருக்கின்றது" என்றார்கள்.

அதன்பின் உமர் (றலி) அவர்கள், அல்லாஹு தஆலாவையும், நபிநாயகம் (ஸல்) அவர்களையும் பலவாறு துதித்துப் புகழ்ந்து விட்டு, உள்ளமும் முகமும் வாடி, அபூபக்கர் (றலி) அவர்கள் அருகில் உட்கார்ந்திருந்தார்கள்.

பிறகு அஸ்ஹாபிகள் எல்லாரும் ஒருங்குகூடி, நபிநாயகம் (ஸல்) அவர்களை அடக்கஞ்செய்வதற்கு ஆரம்பித்து, முதலில் குளிப்பாட்டுவதைக் குறித்து; இட்ட ஆடைகளோடு குளிப்பாட்டுவதா? அல்லது, அவற்றைக் களைந்து வேறுவஸ்திரம் தரிப்பித்துக் குளிப்பாட்டுவதாவென்று ஆலோசித்தார்கள். அப்

போது அவர்கள் அனைவருக்கும் அல்லாஹு தஆலா சிறு உறக்கத்தைவிடுத்தான். அதனால், எல்லாரும் தாடிகள் மார்பில் தோய உறக்கமுற்று, சற்றேகுனிந்தார்கள். அந்த நேரத்தில் "முஹம்மது நபி இட்டிருக்கும் அங்கிகளோடு கிணற்று நீரால் குளிப்பாட்டுங்கள்" என ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கு தொனித்தது. இத்தொனியால், உறங்கிய அனைவரும் திடுக்கிட்டுப் பதறியெழுந்தனர், பிறகு கதுமத்து என்பவரின் குமாரர் அசது என்பவருடைய கிணற்றில் ஜலம் அள்ளி வரும்படி கட்டளை பண்ணினார்கள். உடனே மேற்படி கிணற்றின் பரிசுத்த ஜலத்தைக் குடங்களில் நிரப்பிக் கொண்டுவந்து வைத்தார்கள்.

அலிஇப்னு அபீதாலிபு (றலி) அவர்கள், அப்பாஸ் (றலி) அவர்கள், இவர்கள் குமாரர்களாகிய புலைல் (றலி) அவர்கள், குதம் (றலி) அவர்கள், நபிநாயகம் (ஸல்) அவர்களின் தொண்டரா யிருந்து பின் உரிமை யாக்கப்பட்ட ஜைது உடைய குமாரர் உசாமா (றலி) அவர்கள் ஆக இந்த ஐந்து கனவான்களும், நபிநாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற திவ்விய திருமேனியில் சூழநின்று நீர்வார்த்துக் குளிப்பாட்டினார்கள். மற்றவர்கள் எல்லாரும் விலகி நின்றார்கள். நபிநாயகம் (ஸல்) அவர்கள் முந்தியணிந்திருந்த அங்கிமுதலான வஸ்திரங்களுடன் குளிப்பாட்டினார்கள். குளிப்பாட்டும்போது அந்தப் பரிமள சரீரத்தை முன் குறித்த ஐவரும் கைகள்கொண்டு விதிப்பிரகாரம் தேய்த்தார்கள். தேய்க்கும்போது "மகத்தான அல்லாஹு தஆலாவின் நபியை, நீங்கள் மெல்ல மெல்ல அமரிக்கையாய்த் தேய்த்துக் குளிப்பாட்டுங்கள். உங்களை அவன் இரக்ஷிப்பான்" என ஆகாயத்தில் ஒருசப்தம் கேட்டது. இச்சப்தத்தைக்கேட்ட அவ்வைவரும் அஞ்சி, மெல்ல மெல்லத் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள்.

குளிப்பாட்டி முடிந்தபின், சொன்னபடியே நபிநாயகம் (ஸல்) அவர்கள் வைத்திருந்த ஆடையும், மிஸ்று இராஜ்ஜியத்தி லிருந்து வந்த ஆடையும், எமன் இராஜ்ஜியத்திலிருந்துவந்த ஆடையும் ஆகிய மூன்று ஆடைகளாலும் நபிநாயகம் (ஸல்) அவர்களுக்குக் கபன் இட்டார்கள். அன்றியும், அவற்றில் மீந்த துணிகளையும் லபனோடு சேர்த்துத் தரிப்பித்தார்கள்.

கபனிட்டு முடிந்தபின், அதன்மீது கந்தவர்க்கங்களைத் தூவி, கலிமாவும், ஸலவாத்தும், வேதவாக்கியங்களும் முழங்க, நபிநாயகம் (ஸல்) அவர்களை மெல்லத்தாங்கி, முந்தித் தயார்செய்து முடித்திருக்கும் பரிமள மஞ்சில் வைத்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்களை அடக்கஞ் செய்வதற்காக உலகமாதாவாகிய ஆயிஷா (றலி) அவர்களின் மாளிகைக்கு நடுவில் அகழ்ந்திருக்கும் கப்றுக்கு அருகில், நபிநாயகம் (ஸல்) அவர்களை வைத்திருக்கும் மஞ்சை அஸ்ஹாபிகளில் பிரதானமானவர்களாய் நின்று தாங்கிக்கொண்டு போய் வைத்துவிட்டு, முன் நபிநாயகம் (ஸல்) அவர்கள் சொன்னபிரகாரம் ஒருகடிகை வேளைவரையும் எல்லாரும் விலகிப் போனார்கள். அப்போது அல்லாஹு தஆலாவின் திருவருள் அந்த மஞ்சின்மீது சோனாமாரியாச் சொரியுண்டது.

உடனே வானவர்கள் அனைவருக்கும் அதிபதியாகிய ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், தம்மோடு எழுபதினாயிரம் வானவர்கள் அணியணியாய்ப் பின் தொடர்ந்துவர வானத்திலிருந்து இறங்கி, நபிநாயகம் (ஸல்) அவர்களைத் தொழுவித்தார். மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் எழுபதினாயிரம் வானவர்களோடு வந்து தொழுவித்தார். அதன்பின், இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம் எழுபதினாயிரம் வானவர்களோடு வந்து தொழுவித்தார். அதன்பின், இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் எழுபதினாயிரம் வானவர்களோடு வந்து தொழுவித்தார். ஆகநான்கு பிரதான மலக்குகளும் இரண்டு லக்ஷத்து எண்பதினாயிரம் மலக்குகளோடு தனித்தனியே தொழுவித்தார்கள்.

இவ்விதம் வானவர்கள் தொழுது முடிப்பதற்குள் ஒரு கடிகை நேரம் ஆயிற்று. சரிவர ஒரு கடிகையான பிறகு விலகிநின்ற அஸ்ஹாபிகளெல்லாரும் மஞ்சை நெருங்கி வந்து, தாங்கள் தொழுவிக்க ஆரம்பித்தார்கள். அமீறுல் மூமினீன் அபூபக்கர் சித்தீக் இப்னு அபீகுஹாபா (றலி) அவர்கள் இமாமாய், அவர்களுக்குப்பின் நபிநாயகம் (ஸல்) அவர்களின் கிளையார்களும், அவர்களுக்குப்பின் மற்ற அஸ்ஹாபிகளும், அவர்களுக்குப்பின் பெண்களும் அவர்களுக்குப்பின் சிறார்களும், அணியணியாக மஃமூம்களாய் நின்று நபிநாயகம் (ஸல்) அவர்களைத் தொழுவித்தார்கள்.

இவ்வாறு தொழுவித்து முடிந்தபின், நபிநாயகம் (ஸல்) அவர்களுடைய கபுறில் அவர்களைக் குளிப்பாட்டின ஐந்து சனவான்களும் இறங்கி நின்றுகொண்டு, நபிநாயகம் (ஸல்) அவர்களை எப்போதும் விரித்துப் படுத்து நித்திரை புரியும் ஒப்பற்ற பரமதானியை அலீ (றலி) அவர்கள் கையால் குழியில்விரித்து. நபிநாயகம் (ஸல்) அவர்களை மஞ்சோடு மேற்படி ஐவரும் தாங்கி கபுறில் வைத்தார்கள். அப்போது ஒப்பற்றதும், பரிசுத்த முள்ளதும், சுவர்க்கத்து மாளிகைக்குச் சிறந்ததுமான அந்த கப்று அல்லாஹு தஆலாவின் சிறந்த கிருபையாலும், சுவர்க்கத்துப் பரிமளப் புஷ்பங்களாலும் மூடப்பட்டது. பிறகு அஸ்ஹாபிகள் எல்லாரும் திரண்டு நின்று, கப்றை நிரப்பினார்கள்.

நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை இவ்வித மேன்மையோடு அடக்குவித்து பாத்திஹாவும் துஆவும் ஓதி முடித்து, அன்று செய்யத்தக்க சடங்குகளனைத்தையும் செய்து தங்கள் தங்கள் ஜாகைகளுக்குச் சென்றார்கள்.

அப்போது உம்முல் மூஃமினீன் ஹஜ்ரத்து ஆயிஷா (றலி), நபிநாயகம் (ஸல்) அவர்களின் கப்று ஷரீபின் அருகே நின்று கொண்டு, "பட்டுடைகளை அணியாத நாயகமே! மெல்லின விரிப்பின் மீது அறவே தூங்காதிருந்த வள்ளலே! தொலிக்கோதுமையின் ரொட்டியையாவது வயிறு நிரம்ப தின்று பசிதீராத நபியே! கட்டிலை பார்க்கிலும் சுரசுரப்பான பாயை தெரிந்துக் கொண்ட பாக்கியமே! இரவுகளில் நீளமான நித்திரையை நீக்கி நரகத்தை பயந்தவர்களாக அழுது விழித்த ஆண்டகையே" என்று பல்வாறு புலம்பி அழுது "இந்த அடியாளாகிய என்னைவிட்டு பிரிந்து மறைந்து சுவர்க்கத்து நிகரொத்த கப்றை வீடாக தெரிந்து கொண்டீர்களே, இனிநான் உங்களை எப்போது காண்பேன்" என்று அழுதார்கள்.

ஹஜ்ரத் பாத்திமா (றலி) அவர்கள் கப்று ஷரீபில் நின்று கொண்டு "ஓ! அல்லாஹ்வுடைய அடியார்களே! உங்களுடைய நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களை கப்று ஷரீபில் வைத்து அவர்கள் பேரில் மண்ணைத் தள்ளுவதற்கு உங்களுடைய கல்பு எப்படி பொருந்திற்று? ஆஹ்! இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ருஜிஊன். இப்படியும் மனம் பொருந்துகிறதா? இப்படியும் ஆச்சுதா?" என்று சொன்னவர்களாக கப்று ஷரீபின் மண்ணைக்

மையில் வாரியெடுத்து முகத்தோடு வைத்து முத்திட்டுக்கொண்டு "பாவா (ஸல்) அவர்களுடைய கப்ரின் மண்ணுடைய மணத்தின் புதுமைக்கு நான் என்ன சொல்லுவேன். எவ்வளவு விலையுயர்ந்த கஸ்தூரியிலும் இப்படிக் கொத்த மணம் முகக்க கிடைக்குமா? ஆனால் என் பேரில் ஒரு முஸீபத்து சொரியப்பட்டது. அம் முஸீபத்து ஒரு பகலின் பிரகாசத்தில் சொரியப்படுமேயானால் அது அப்பொழுதே இரவாகிவிடும்" என பலவாறு புலம்பி அழுது கிலைத்துகளை சொன்னார்கள்.

ஹஜ்ரத் பாத்திமா (ரலி) பாடிய மர்ஸிய்யாவின் பொருள்:

"சகோதரர்களே! எங்கள் நாயகம் (ஸல்) அவர்கள் மவுத்தென்னும் குடிப்புகளில் மிகவும் மதுரமான குடிப்பை புகட்டப்பட்டவர்களாகவும், கியாமத்தில் அதன் துன்பங்களை விட்டு அச்சந்தீர்ந்தவர் களாகவும், அல்லாஹு தஆலா அளவில் சகலர்களையும் கேள்வி கேட்கும் நாளில் ஷபாஅத்தை உடையவர்களாகவும், வானலோகத்தை உடையவர்களில் மிகவும் சங்கை பொருந்தியவர்களாகவும் இருக்க அவர்களுடைய ஹால் இப்படி ஆச்சுதேயானால் பெரும் பாவத்தையுடையவர்களாக துன்யாவைக் கொண்டு மருண்டு கிடந்து சகல முஸீபத்துகளுக்கும் அச்சமற்றவர்களாய்க் கிடப்பவர்களின் ஹால் என்னவாகும்?

"எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களோ பூமி பிளந்து கப்றுகளி லிருந்து எழும்புகிறவர்களில் முந்தினவர்களாகவும், சகலர்களையும் அல்லாஹு தஆலாவுடைய சமூகத்திற் கொண்டு போகும் நாளில் யாவர்களுக்கும் மன்றாடுகிறவர்களாகவும், அந்நாளில் ஈடேற்றம் பெற்றதில் உண்மையின் பேரிலிருக்கிற வர்களாகவும், உம்மத்து மார்களின் பேரில் ஷாஹிது சொல்லும் நபிமார்களெல்லாரும் எழும்பி நிற்கும் நாளிற் சங்கை கிடைப்பதைக் கொண்டு விசுவாசம் பெற்றவர்களுமா யிருக்கிறார்கள். அப்படியிருக்க எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய ஹால் இப்படியாயினதே; அவர்களுடைய ஹால் இப்படியானால், இன்னு மொருவனுடைய ஹால் எப்படியாகும். அவன் யாரானால் எந்த நேரத்தில் துன்யாவைவிட்டுப் பயணம் போவோ மென்றறியவுமில்லை, இன்னுமவனுறங்குந் தலமானது சுவர்க்கமோ அல்லது நரகமோ வென்பது அவனுக்குத் திட்டப்படவுமில்லை. இன்னுமவன் நல்லோன் தீயோன் என்ற இரண்டு

விதிகளில் இன்ன விதியின் பேரில் முன்னேறுவோ மென்றறியவுமில்லை. இன்னுமவன் இந்த இரண்டிலெதைக் கொண்டு கியாமநாளில் ஹாக்கும் செய்யப்படுமோ வென்றவனறியவுமில்லையே; அவனுடைய ஹால் எப்படியாகுமோ யானறியேன். போனவர்களுக்குப் பகரமாயிருக்கிறவர்களே! போனவர்கள் போக மிஞ்சியிருக்கிறவர்களே! துன்யாவினுடைய சிறைவாரிக் கொண்டவர்களே! சாக்காலத்தைக் கிட்ட வைத்துக்கொண்டு மறதியாயிருக்கிறவர்களே! முடிவு காலத்தை யெண்ணாதிருக்கிறவர்களே! மேலெண்ணங்கள் சொன்னபடிகேட்டு, அதற்கடிமையா யிருக்கியவர்களே, முர்சலான நபிமார்களுக்கு நாயகமாகவும், நாயனைப்பயந்த நாதாக்களுக்கு இமாமாகவும், றப்புல் ஆலமீனான நாயனுக்கு ஹபீபாகவும் வந்த எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களுடைய மவுத்தைக் கொண்டு நீங்களுறுதி பெறவில்லையா? அதுகொண்டு உறுதி பெறுதிருக்கிறீர்களே! நீங்கள் இந்த துன்யாவில் ஊழியூழி காலமிருக்கலாமென் றெண்ணுகிறீர்களா? அல்லது நீங்கள் மவுத்தை விட்டுங் காக்கப் பட்டவர்களென் றெண்ணுகிறீர்களோ? அது மிகக் கெட்ட வெண்ணம். அவ்வெண்ணம் நிறைவேறுவது மிகவுந் தூரந்தூரம். அப்படியிருப்போம் சுகிப்போமென் றெண்ணுவீர்களானால், திட்டமாக நீங்கள் ஷைத்தானுடைய மிரட்டுதலில் அகப்பட்டவர்களாவீர்கள்.

"கருமமிப்படி யிருக்க, அபேட்சை வைக்கிறவர்கள் தாங்கள் கேட்ட உபதேசத்தை உண்மை கொண்டவர்களாயிருக்க அவர்களெப்படி தரிபாட்டை அபேட்சை வைக்கிறார்கள். அல்லது நீரத் தப்புச் செய்தவர்கள் எதை வழிப்பார்த்திருக்கிறார்கள். மாண்டு கிடக்கிறவர்கள் எதைக் கொண்டு சாக்குப் போக்கு சொல்லுவார்கள்; அல்லது மவுத்தை விட்டு மவர்களை மறக்கப்பட்டதென என்னுகிறார்களோ? அல்லாதவர்களைக் கடைசி காலபரியந்தமும் மவுத்தை விட்டுப் பிற்படுத்தப்படுமென் றெண்ணுகிறார்களோ? அல்லது அவர்கள் அவர்களுடைய அதாபை விட்டுத் தடுக்கப் பட்டவர்க ளென்று எண்ணுகிறார்களோ? அப்படியவர்கள் ஆலோசிப்பார்களேயானால் அவைக ளெல்லாம் அவர்களுக்குங் கெடுதியேயாம். என்கிலும் நிச்சயமாக கியாமத் நாள். வந்து எவர்களைத் தட்டழியப் பண்ணிவைக்கும். அதைத் தட்டுதற்கு

வர்கள். சக்தி பெற மாட்டார்கள். அவர்களைத் தாமதமாய் விடப்படவு மாட்டார்கள்.

“என தன்பர்களே! இன்னுஞ் சொல்லும் நஸீஹத்தை சற்றே கவனியுங்கள். அதாவது இந்த துன்யாவின் கண் வம்மிசத்தின் மேன்மையைக் கொண்டாவது, அல்லது தகுதியைக்கொண்டாவது, அல்லது வல்லமையைக் கொண்டாவது, அவர்களுக்கு வரும்படியான மவ்த்தைத் தட்டிக்கொள்ளுவார்களென்றிருக்குமேயானால், எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்க்கிலும் வம்சத்தின் மேன்மையாலும், தகுதியாலும், வல்லமையாலும், சிறப்பாலும், ஒளிவாலும், தெளிவாலும், மேலானவர் யாருண்டு? ஒருவருமில்லை. அப்படிக் கொத்த எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அஜலென்னும் மவ்த்து வந்துற்றபோது, ஒரு ஸாஅத்து முந்தவுமில்லையே பிந்தவுமில்லையே; ஆகையால், இக்வான்களே! முன்னோர்களின் வாக்கியத்தை முறித்துப் பாருங்கள்.

“இன்னும் இந்த துன்யாவில் குடியிருப்பவர்களில் யாராவது ஒருவர் மவ்த்தை விட்டும், பாக்கியாயிருப்பார்களென்றிருக்குமேயானால் எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் (ஸல்) அவர்களே மவ்த்தில்லாமல் தரிபட்டிருப்பதற்கு மிக்க தகுதியானவர்களாவர். ஆகையால் இந்த துன்யாவின் கண் ஒருவருமே மவ்த்தை விட்டுத் தப்பி ஸலாமத்தாயிருக்கவில்லை. ஆனதால் மவ்தானது எங்கள் நாயகம் முஹம்மது(ஸல்) அவர்களையும் வந்து பிடித்து இந்த துன்யாவின் பேரில் அவர்களும் வபாத்தாகி விட்டார்கள்.

“அல்லாஹ்வுடைய அடியார்களே! எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த துன்யாவை விட்டும் வபாத்தானதற்காக எந்த அழுகை சப்தமுயராதிருந்தது எந்தக் கண்கள் கண்ணீர் விடாதிருந்தது. இன்னு மவர்களை யிழந்ததற்காக எந்தவிசாரம் பிடிக்காதிருந்தது? அவர்கள் தூரப்படுவதற்காக எந்த சலிப்பாறுதல் விலகிக்கொள்ளாதிருந்தது? இன்னும் கற்கறடு புற்பூண்டு இவை முதலியவைகளடங்கலும் எங்கள் நாயகமவர்கள் பிரிந்ததற்காக அழுது சலித்ததை நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டாமா? இவைகளெல்லா மப்படியானால் மூஃமினானவர்களுடைய கல்புகளெப்படி யிருக்கும்? புத்திவான்களே! ஒரு உறைந்த கல்லானது தன்னை விட்டும் நாயகமவர்கள் பிரிந்ததற்காக ஏங்கி அழுததானால், மூஃமின்களுடைய கல்புகளெப்படி அழவேண்டும். அல்லாஹ்வுடைய அடியார்களே! ஓர் ஈத்தங் குச்சியானது அழுது சலித்ததை யாராய்ந்து பாருங்கள். எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மதீன முனவ்வராவில் மிம்பர்கட்டு முன்னர் ஓர் ஈத்தங் கிளையின்பேரில் நின்று குதுபா ஓதுவார்கள். அப்பால் மஸ்ஜிதின் கண்ணே மிம்பர்கட்டியபின்னர், அந்த மிம்பரின் பேரில் நின்று குதுபா ஓதினார்கள். அவ்விதம் ஓதும்போது அந்த ஈத்தங் கிளையானது மதலைச் சப்தத்தை போலும், சூல் நிறைந்த ஒட்டகச் சப்தத்தைப் போலுஞ் சப்தமிட்டழுதுக் கொண்டேயிருந்தன. அதுகண்டு நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மிம்பறை விட்டிறங்கி அந்த ஈத்தங்கட்டையைத் தங்களின் முபாரக்கான கையிலெடுத் தணைத்தார்கள். அப்போது அதனுடைய அழுகை யமர்ந்து மதலையைப்போல் முணங்கினது. அதுகேட்டு நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஈத்தங்கட்டையை நோக்கி, நீ இருந்த தோட்டத்தினிடமாய்ப் போகிறாயா? அல்லது அல்லாவுடைய அவ்லியாக்கள் உன்னில் நின்றுஞ் சுகிப்பதற்காக சுவர்க்கலோகத்தினிடமாய்ப் போகிறாயா? என்று கேட்பதுடனே தங்களுடைய சிறப்பான காதை யதனருகில் வைத்தார்கள். அப்போது அதானது எல்லோர்களுடைய காது களிக்கும் படியாக நான் சுவர்க்க லோகத்தினிடமாய்ப் போகிறேனென்று சொல்லிற்று. அது கேட்டு நபிநாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஈத்தங்கழியை அவ்விடத்திலேயே புதைக்கும்படியாக உத்தரவு செய்துவிட்டு, நாயகமவர்கள் ஸஹாபாக்களைப் பார்த்து எனது நப்ஸு எவன் கை வசமிருக்கிறதோ அந்த ஆண்டவனின் பேரிற் சத்தியமாக நான் யதைசலிப்பாற்ற வில்லையானால் அதானது கியாம பரியந்தமு மிப்படியே அழுது கொண்டிருக்கு மென்று திருவுளமானார்கள்.

“ஆகையாலெனது சகோதரர்களே! நாயகமவர்கள் அதை விட்டும் பிரிந்து மிம்பறின் பேரில் ஏறினதற்காக இந்த ஈத்தங் கிளைக்கு இவ்விதமான சலிப்பாயிருந்தால் அந்த நாயகமவர்கள் நம்மை விட்டும்பிரிந்து வபாத்தானதற்குப் பின்னர் இன்ப சுகஞ்

களைக்கொண்டு நாம் சந்தோஷம் பெறுகிறது எப்படியாகும்? திட்டமாகக் காரணங்களையுடைய நபி காத்திமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மவுத்துடைய ஹாலில் மவுத்துக்கு அநேக வருத்தங்களும், மயக்கங்களும் உண்டாயிருக்கிறதென்று நிருவனமா யிருக்கிறார்களே, அதைக்கேட்டபின் உங்களுடைய திருவாகமும், ஹயாத்தும் இந்த துன்யாவின் கண் இன்பமாகிறதா? இன்னும் எங்கள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் சக்கறாத்துடைய ஹாலில் அவர்களுடைய மகளாராகிய பாத்திமா (றலி) அவர்கள் "வா அபாஹ்" எனது தகப்பனாரே! நீங்கள் படும் வருத்தத்தைக்கொண்டு நான்படும் வருத்தத்திற்கு நான் என் செய்வேனென்று சொன்னதைக் கேட்டிருந்தும், நீங்கள் அழாமல் உங்களுக்கு இந்த துன்யாவிற் சந்தோஷமுண்டா? ஆகையால் புத்திவான்கள் எங்கே? ஆகிறத்துக்கு வேண்டுமான காரியங்களைக்கொண்டு பராக்காயிருப்பவர்கள் எங்கே? இந்த பருவான துன்யாவில் தரிபாட்டைக் கொண்டு மருண்டு கிடப்பவர்கள் எங்கே? திட்டமாக எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை இழக்கப்பட்டு விட்டதே, அவர்களெப்படிக்கொத்த நாயகமெனில், மகாமன் மஹமூதென்னும் தானத்தையுடையவர்கள். இன்னும் யாவர்களும் குடித்து தாகந் தீரும்படியான ஹவ்லுல் கௌதரென்னும் சுவர்க்க லோகத்திலுற்றைச் சொந்தமாய்க் கொடுக்கப்பட்டவர்கள்; இன்னும் கியாமத்நாளில் அதைத் தவிரவேறொரு நிழலும் கிடையாதே அப்படிக்கொத்த லிவாஉல் ஹம்தென்னும் கொடியையுடையவர்கள். இன்னும் பாவிகளை மன்றாடிக் கரைசேர்க்கும் படியானவர்கள்.

"இப்படிப்பட்ட நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை வபாத்தாக்கப் பட்டுவிட்டதே. அவர்களுடைய சக்கறாத்து ஹாலில் வருத்தத்தைக் கேட்டறிந்தவனே! மற்றவன் ஹாலெப்படியாகுமென்று பார். அவனோ எந்த ஒருவனானால் அவனுடைய அமலின் கடிதங்களெல்லாம் கெடுதியான பெரும்பாவம், சிறுபாவம் இவைகளைக் கொண்டு நிரப்பப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமிருக்கும் நல்ல அமல்களானவை ஆண்டவனிடத்தில் கபூல் செய்யப்பட்டதோ, அல்லாதவனுடைய முகத்தின் பேரில் திருப்பி எறியப்பட்டதோவென்று அறியாதவனுடைய ஹாலும், அவனுடைய ஒடுக்கமும்

எப்படியாகுமென்று பார்த்து உணர்ச்சிபெற வேண்டாமா? உணர்ச்சி பெறத்தான் வேண்டும் என்பதாகும் பாத்திமா (றலி) வைத்தாகச் சொன்னதின் பொருள்.

நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களை மல்லடக்கஞ் செய்தபின்னர், அவர்களுடைய மாமியாராகிய ஸபிய்யா (றலி) அவர்கள் நாயகத்தின் பேரிலொரு மர்ஸிய்யா வைத்துச் சொன்னார்கள். அதன் பொருளாவது :—

"அல்லாஹ்வுடைய றஸூலே! எங்களுக்கு ஆதாரவாகயிருந்தீர்களே, எங்களை வெறுக்காதவர்களாயிருக்கிற ஹாலில் எங்களுக்கு நன்றி செய்கிறவர்களா யிருந்தீர்களே, இன்னும் எங்களுக்குக் கிருபைசெய்கிறவர்வளாகவும் கற்றுத்தரும் உஸ்தாதாகவு மிருந்தீர்களே, ஆதலால் அழுகிறவர்களெல்லாம் இன்றைக்கேயழவேண்டும். நபியே! உங்களுடைய வாழ்வின்பேரில் சத்தியமாக, நபியிழந்து போனதற்காக நான் அழவில்லை; என்றிலும் நபியை வெறுக்குதல் வந்து விடுமென்பதைப் பயந்தழுகிறேன், என்னைப்பழித்துக் குறை சொல்பவர்களைப் பயப்பட்டிருக்கிற ஹாலில், திட்டமாக முஹம்மது (ஸல்) அவர்களுடைய கிளைப்பானது என்னுடைய கல்பில் மாறு கிருக்கின்றது. நான் நபியை விட்டும் பால் குடிமறந்து விட்டேன், மதீனாவி லடங்கியிருக்கும் எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பேரில் அல்லாஹுத்தஆலா அவனுடைய றஹ்மத்தைச் சொரிவானாக இன்னுமென்னுடைய தாயும், என்னுடைய பெரியதாயும், என்னுடைய சிறியதாயும், என்னுடைய சிறிய தந்தையும், மாமாவும், மாமியும், எனது உடலும், உயிரும், முதலும் மக்களுமாகிய எனக்குடையவைகளடங்கலும், எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் குர்பானாகும். இன்னும் ஆண்டவன் முஹம்மது (ஸல்) அவர்களை யாருக்கும் வபாத்தாக்கா திருந்தால் நாம் நற்பாக்கியந்தனம் பெறுவோம், என்றிலும் அவர்களுடைய காரியஞ் செல்லும்படியாயிற்று. இன்னும் எங்கள் நாயகமே! உம்மையென்ற பிள்ளையை யத்தீமாக்கிவைத்து அவர் உங்களை, எனது பாட்டனாரே! பாட்டனாரே! என்றழுது கூப்பிடும்படி விட்டு விட்டு நீங்கள் தூரப்பட்டு விட்டதாகக் காணுகிறேன். நாயகமே! அல்லாஹுத்தஆலாவுடைய ஸலாமானது உங்கள் பேரில் காணிக்

கையாக்கி பொருத்த மாக்கிவைத்தவனாக அத்னென்னுஞ் சுவர்க்க வாசலில் உங்களைப் புகுவித்து விட்டான் என்பதாகும்.

மர்ஸிய்யா ஸித்தீக்.

இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பேரில் செய்யிதினா அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் ஒரு மர்ஸிய்யா பைத்துச்சொன்னார்கள். அதன் பொருளாவது :—எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் மவ்தென்னுங் குடிப்பைக் குடித்ததின் பின்னால், என்னுடைய இருவிழிகளும் நித்திரையைக் கொண்டெப்படிச் சுகம்பெறும்? அவைகளோ நாயகமவர்களைத் தேடி மழைபோல் சொரிந்தழுதுக் கொண்டேயிருக்கும்போது என்னுடைய கல்புக்கு எப்படி ரூஹத்உண்டாகும்? இன்னுமவர்கள் இந்த துன்யாவை விட்டும்பறந்தபோது குல்தென்னும் சுவர்க்கப் பதிவி லுயர்த்தியான மகாமில் தரிபாடுண்டாயிருந்தது. என்றாலும் கற்பிக்கப்பட்ட மவ்த்து வேணுமானதாக வந்துற்றபோது, அதனுடையகடினப் பிடியைத்தொட்டும் நமக்கொரு கார்மானமு மில்லாமற் போய்விட்டது. கல்குகளுக்கெல்லாம் ஏற்றமாகிய எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களே மவ்த்தாய் விட்டதின் பின்னர் எந்த மனுடருக்கு எந்த துன்யாவில் தரிபாடிருக்கின்றது. இன்னும் "அஹ்மது ஹாதீ ஷபீஉ" என்னும் நாமமும் பெற்று கல்குகளில் சங்கையும் பெற்று, றஸூல் மார்களுக்கெல்லாம் கிரீடாதிபதியாயிருந்த நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின்னர் நமக்குத் தரிபாடுண்டாயிருக்கிறதா? ஒருபோதுமில்லை. அப்படிப்பட்ட நாயகத்தின்பேரில் அல்லாஹு தஆலா எக்காலமும் அதாவது மேகம் அதனுடைய கண்களைக்கொண்டு மழை பெய்யுங் காலமடங்கலும் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக" என்பதாகும்.

மர்ஸிய்யா பாறூக்.

இன்னும் செய்யிதினா உமர்இப்னுல் கத்தாபு (றலி) அவர்கள் நாயகமவர்கள் பேரிலொரு மர்ஸிய்யா பைத்துச் சொன்னார்கள். அதன் பொருளாவது :-மனிதர்களே! நானென்னுடைய கண்ணின் தண்ணீரைக் கொண்டு நீண்டகாலமாக அழும் அழுகையானது எங்கள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மவ்த்தின் சங்கடத்துக்கு நிவியால் தகுதியாகமாட்டாது. ஆகையால் நீரையாப் புறத்தால் வந்து இடையூறுக்கும் வழிபார்க்கபடாமல் வந்திறங்கிய வருத்தத்திற்கும்

நீங்கள் எனக்கு ஆறுதலுந் தேறுதலுஞ் சொல்லுங்கள். அல்லாவின் பேரிற் சத்தியமாக எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் வபாத்தாக்கப்பட்ட வருத்தத்தைப் போல் வேறொன்றைக்கொண்டும் காலமானதடர்க் தேற்றஞ் செய்யவில்லை. இதுதான் மிகக் கடினமான அநியாயம். ஆனதா லிப்படிப்பட்ட சங்கடத்தைக் கொண்டு இகி விட்டமூரதவன் இனிஎதற்காக அழப்போகிறான், எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பிழக்கப்பட்டது கொண்டு துன்யா வடங்கலு மிருளாகிவிட்டது. ஒவ்வொருவருடைய கல்புகளிலும் துக்கமுந் துயரமு மடைய விளைந்து கொண்டது. எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் எங்களை நலவைக்கொண்டேவுகிறவர்களாகவும், என்றும் பிரகாசிக்கும் படியான குர்ஆனைக் கொண்டு மனிதர்களை நேர்வழி காட்டுகிறவர்களாகவுமிருந்து நேர் வழிகாட்டினார்கள். ஆனதால் மின்னல்களானவைகள் அதனுடைய வொளியை வெட்டிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம், வல்லப்பமாகிய ஆண்டவன் எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பேரில் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாகவும் என்பதாகும்.

மர்ஸிய்யா உஸ்மான்.

இன்னும் ஸெய்யிதினா உதுமான் இபுனு அப்பான் (றலி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரிலொரு 'மர்ஸிய்யா பைத்துச் சொன்னார்கள். அதன் பொருளாவது:- ஏ நபுஸே! உனக்கென்ன கேடு. ஆகிரத்தினிற் பயணம் போவதை விரைவாக்கிக்கொள். விரைவாக்கிக்கொள். ஏனெனில் இந்த துன்யாவானது ஹயாத்தானவனுடைய வீடல்ல. எம்மாத்திரம், எம்மாத்திரந் தெளிவுகளையோ இந்த துன்யாவானது கலக்கமாக்கிவிட்டது. இன்னும் எம்மாத்திரம், எம்மாத்திரம் தாழ்மைகளையோ சிறப்புகளை யனுபவித்தவர்களுக்குக் குடித்தாட்டி விட்டது. இன்னும் மவ்த்தென்னுங் குடிப்பே சுத்தப் படும்படியான வீட்டிலோர் மனிதன் குடியிருப்பானோ? இருக்க மாட்டான். நபுஸே! வாழ்நாள் குறைந்து தரிபாடு சுருங்கி மவ்த்தை முடுகுதலாக்கி வைக்கும் துன்யாவைக் கொண்டு, நீ எது காலம்மட்டும் மருண்டிருப்பாய்! முஸ்தபா (ஸல்) அவர்கள் வபாத்தான பின்னர் தரிபடுகிறவனுண்டா? ஹயாத்தா யிருப்பவனுக்கு இந்த துன்யாவில் தரிபாடில்லை. ஸபுஹுடைய வெள்ளை கொம்பிப்

புல்புலென்னும் குருவி இராகம் பாடிக் கொண்டிருக்கும் காலம்வரைக்கும், எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பேரில் அல்லாஹு தஆலா ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக" என்பதாகும்.

மர்ஸிய்யா அலி.

இன்னும் செய்யிது அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரிலொரு மர்ஸிய்யா வைத்து சொன்னார்கள். அதன் பொருளாவது:— எங்கள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் வபாத்தானதில் எங்களுக்குப் பிடித்த முஸீபத்தின் கனக்கின்படி அழுதால் எங்கள் கண்களானவைகள் சத்த சாகரம் போலேயாகி ஒலிக்கும்படியான மேகத்துக் கொப்பாகி விடும். இன்னும் அழுதொலிக்கும் கண்ணீரானது அழுதவனுக்கும் பிரயோஜனம் கொடுக்குமேயானால், எங்கள் நாயகத்தைத் தேடி நாங்கள் அழும்படியான முறையை பற்றிப் பிடித்துக் கொண்டேயிருப்போம். ஓ காலத்தின் மகிமையே! நான் பயப்படும்படியான விரோதத்தை யுண்டாக்கி விடாதே! எங்கள் நாயகமவர்களித் துன்யாவின் கண்ணேயிருப்பார்களென்ற எண்ணத்தில் நீங்காமல் இருக்க அவர்கள் வபாத்தானதைக் கொண்டு காலமானது கணக்கிடங்காத முஸீபத்துகளை வருத்தி விட்டதே எற்றமான அன்ஸாரிகளுக்காக நாயன் சொர்க்க மாக்கிவைத்த கல்லுகளில் கைருள்ள நபியவர்கள் வபாத்தாகி விட்டார்கள். ஆனால் அவர்கள்தான் மவுத்தானார்களோ? ஹயாத்தானவர்களடங்கலும் மவுத்தாவார்களென்று உம்முல் கித்தாபில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனதால் அல்லாஹ்வுடைய அடியார்களே! அவனைக் கொண்டு விசுவாசித்து அவன் புறத்தால் வரும்படியான கற்பனையைப் பொருந்தி நாயகம் (ஸல்) அவர்களைத் தொடர்ந்து ஸப்ரு செய்வது கொண்டும் தவாபைத் தேடுவது கொண்டும் ஹக் தஆலாவுக்கு வழிபட்டு நடந்து கொள்ளுங்கள். இன்னும் திட்டமாக அறிந்து கொள்ளுங்கள்! நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களோ, நம் அனைவர்களையு மன்றுடிச் சுவர்க்கஞ் சேர்க்கும் தங்கிப்பானவர்களாயிருக்கிறார்கள். மேகமானவைகள் மழைபெய்து கொண்டிருக்கும் காலமெல்லாம் நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பேரில் அல்லாஹு தஆலா ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக" என்பதாம்.

அறிவுரை

எனதன்புற்ற சகோதரர்களே! நமது நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் வபாத்தாகி இறக்கப்பட்டிருக்க, நாமிந்த துன்யாவிலிருப்பதை அபேட்சை வைக்கலாமா? அதை நினைத்தாலும் கல்பு பொறுக்குமா? நேத்திரங்களெல்லாம் நீரோலித் தோடாமல் நிற்குமா? ஆஹ், சகிப்பவர்களே! மூர்ஸலான நபிமார்களுக்கெல்லாம் முத்திராங்கராகிய வள்ளலான நபிநாயகமவர்கள் வபாத்தானதைப் பார்த்தாலும், அல்லது கேட்டாலும், இந்த சதமற்ற துன்யாவை அபேட்சை கொள்ளலாமா? கூடாது. இன்னும் நமக்கு முன் சென்று விட்ட முதியவர்கள், வாலிபர்கள், பெண்கள், பிள்ளைகளிவர்கள் மவுத்தாகிப் போனதை நினைத்துப் பார்த்தாலு மிந்த துன்யாவினுடைய நிலவரம் தெரியவில்லையா? இன்னும் நம்முடைய தோழர், சகோதரர், அருமையான குழந்தைகளிவர்கள் போலொத்தவர்கள் மவுத்தானார்களானால் அவர்களை நாமே நல்லடக்கஞ் செய்கிறோமல்லவா, அதுபோல், நம்மையும் நினையாமல் தடுமாறி விடலாமா, அந்த மவுத்தானது நம்மையும் வந்து பிடித்தால் நாம் போகும் மறுமைக்குக் கட்டுசாதமும் கபுருக்குத் துணையும் தேட வேண்டாமா? மவுத்து உங்களுக்கில்லையென்று நினைக்கிறீர்களா? அல்லது அல்லாஹு தஆலா உங்களை மவுத்தாக்காமல் விட்டு விடுவானென் றெண்ணுகிறீர்களா? என்றாலும் அல்லாவின் பேரில் சத்தியமாக, இந்த துன்யாவானது உங்களை மருட்டி விட்டது.

எனது நேயர்களே! உங்களுடைய ரூஹானது தொண்டையை யெற்றி பிளப்புக்கொண்டு முனைக்கமுண்டாகி, ஒரு காலத்துக்கு மறு காலிலடித்துக் கண்களை யேறச் சொருகிப் பின்பு மவுத்தென்னும் புலியானது பாய்ந்து பிடித்து உங்களை மவுத்தாக்கி, உற்றாருறவின் முறையாரிவர்களெல்லோர்களும் கூடிக் குளிப்பாட்டிக் கபனிட்டு கபுறில் கொண்டு போய்இறக்கி யடக்கி மூன் கொண்டிருந்த பேராசையானது உங்களை விட்டும், பின் வாங்கி கலமான அமலைத் தவிர மற்றொன்றும் கூட்டுதவியில்லாத கப்றென்னுங் குழியில் புழுதி மண்ணைக் கொண்டு பாய்விரித்துப் பாம்பு, தேள் முதலிய பற்பல புழுப் பூச்சிகளோடு படுத்துப் பரமவேதனைகளை அடையுமுன்னர், சொல்லும்படியான கலீமத் தென்னும் உப

தேசத்தை, யுற்றுணர்ந்து ஸாலிஹான அமல்களைச் செய்வது கொண்டு ஆண்டவனை முன்னோக்க வேண்டாமா? அல்லாஹு தஆலா புர்கானுல் அலீமென்னும் வேதத்தில் திருவுளமான உபதேசங்களைக் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாகிலும் நெஞ்சில் அஞ்சி நினைத்து உள்ளச்சமுற்று அழுது சலித்து நாயனைத் துதித்து நலம் பெறவேண்டாமா? இன்னும் இருலோகத்திற்கும் அரசராகிய நமது நபிநாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் வபாத்துடைய வேளையில் பட்ட வருத்தங்களையும், சக்கறாத்துடைய ஹாலையும் கேட்டறிந்ததின் பின்னும், மருட்டுதலான துன்யாவின் புரட்டு தனைக் கொண்டு மருண்டு கிடப்பானேன்? திண்டாடுஞ் சமயத்தில் மன்றாடிக் கரை சேர்க்குங் காரணக் கருணைக் கடலான காத்திமுல் அன்பியா முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த துன்யாவை விட்டும் பிரிந்த வபாத்தினுடைய வருத்தம் இப்படியாயிருந்தால் நம்முடைய ஹாலெப்படியா யிருக்கு மென்று கவனித்துக் கொள்ளுங்கள்.

எனதுடன் பிறப்புகளே! அல்லாஹ்வுடைய றஹ்மத்தை யாதரவுவைக்கிறீர்கள், அமல்செய்வதை விட்டு விடுகிறீர்கள், மவ்த்தோ முன் சென்றவர்களைக் கொண்டுஉங்களை விழிப்பாக்கிவைக்கிறது; நீங்களுணர்ச்சி பெறுகிறீர்களில்லை. குர்ஆன் உங்களுக்கு நஸீஹத்துச் சொல்லுகிறது; நீங்களதைக் கொண்டு அமல் செய்கிறீர்களில்லை. நித்திரை செய்யும் புத்திரர்களே! நீங்களெப்போது தான் மித்திரப் பேதகமென்னும் நித்திரையை விட்டும் விழிப்புப் பெறுவீர்கள்? நமது நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள்வபாத்தானதைக் கொண்டு உறுதி பெற்று உங்களுக்கும்மவ்த்து முடுகியிருக்கிறதென்றெண்ணி நல் அமலென்னும் பந்தயத்தில் முந்தவேண்டாமா? உங்கள் கண்முன் பெற்றோர் உற்றோர் பிள்ளைகள், சகோதரர்முதலான உறவுமுறையார்களை யொருவருக்குப் பின்னால் ஒருவராக மண்ணைக்கொண்டு மூடிவிட்டும், மட்டிலடங்காத கைசேதங்களைக் கொண்டு கண்ணீர் விட்டழுகிறீர்கள். அப்படிப்பட்ட விஷயமுங்களிலும் உண்டென்ற வெண்ணத்தை உள்ளுறையக் கொள்ளாமலெப்படி சுகங் கொண்டாடுகிறீர்கள்? திட்டமாக எங்கள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் திருவுளமானதைத் தெளிவாய்ப் பாருங்கள் அதாவது "இன்ன லில் மவ்த்தி ஸக்கறாத்துன்" மவ்த்துக்கு அனேககஷ்டமும், வருத்தமுமுண்டாயிருக்கிறதென்று.

இவ்விதமாக நாயகம் (ஸல்) அவர்கள் வாக்கருளிய பின்னும், உங்களுடைய வாழ்வு சதமாகிறதா? இன்னும் எங்கள் நாயகம் (ஸல்) அவர்கள் சக்கறாத்துடைய ஹாலில் "ஆ என்ன வேதனை" என்று திருவுளமானதைக்கேட்டு பாத்திமத்துல் ஸஹ்றா (றலி) அவர்கள் "எனது தகப்பனாரே! உங்களுடைய வருத்தத்திற்காக என்னுடைய வருத்தமே!" யென்று சொன்னார்களென்று கேட்டு பின்னும் புத்திசாலிக்குப் புண்ணிய மில்லாத பேச்சுகளுண்டா? இந்த துன்யாவில் தரிபாடென்று மருட்டுதலுண்டா? மாதியாளர்களே மேல் சொல்லிய மெனத்து நமக்கு மீளுமுன் சென்றபாவங்களைவிட்டு கலப்பற்ற தௌபாவாக தௌபா செய்து ஸாலிஹான நல் அமல்களை செய்து இருபதி வாழ்வையும் பெற்று ஈடேற்றம் பெறுவீர்களாக. நபிநாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்கள் கிளையார்களுக்கும், சந்ததியார்களுக்கும், அஸ்ஹாபிகளுக்கும் மகத்தான அல்லாஹு தஆலா தனது திவ்விய காருண்யத்தை மாறாமல் என்றென்றும் பூரணமாகக் கொடுத்து, அதிகமேன்மை யாக்குவானாக. ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

பெருமானாரவர்களின் பத்தினியார்கள்

ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய நம்பிராட்டியார்கள் பெருமானாரவர்களின் உம்மத்தாருக்கு தாய் மார்களுக் கொப்பாவர். அவர்களைக் கௌரவப்படுத்துதல் முஸ்லிம்களின் கடமையாகும். பெருமானாரவர்களுக்கு பதினொரு நம்பிராட்டியார்களும், ஐந்து வெள்ளாட்டிகளு மிருந்தனர். முதல் பத்தினியாரின் திருநாமம் கதீஜா (றலி) என்பதாகும். பெருமானாரவர்கள் மக்கத்தைவிட்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு ஐந்து வருஷ முன்னமேயே கதீஜா நாயகியவர்கள் வபாத்தடைந்தனர். கதீஜா நம்பிராட்டியாரைக் கொண்டு நபிபெருமானாரவர்களுக்குக் காஸிம், தையப், தாஹிர் எனப்பெயருடைய ஆண் குழந்தைகள் பிறந்தன வாயினும் அக்குழந்தைகள், சிறு பிராயத்திலேயே இறந்து விட்டன பெருமானாரவர்களுக்குப் புதல்விகள் நால்வர். அதாவது ஸைனப், றுகையா, உம்முகுல் தூம், பாத்திமா. ஹஜ்ரத் ஸைனப் அவர்களை 'அபுல் ஆஸ்' அவர்களுக்கும், ஹஜ்ரத் றுக்யா உம்முகுல்தூம் இவர்களை ஹஸ்ரத் உதுமான் (றலி) அவர்களுக்கு ஒருவருக்குப் பின் ஒருவராகவும், நிக்காஹ் செய்துகொடுக்கப் பட்டது

பாத்திமா (றலி) அவர்களை ஹஜரத் அலி அவர்களுக்கு விவாஹம் செய்து கொடுக்கப்பட்டது.

நபிபெருமானாரவர்களின் இரண்டாவது நம்பிராட்டியாரின் பெயர் ஸெளதா. அவர்கள் பெருமானாரவர்களுக்கு முன்னேயே வயோதிகப் பருவத்தையடைந்து ஹிஜ்ரி 54-வது வருஷம் ஷவ்வால் மாதத்தில் காலஞ் சென்றார்கள்.

மூன்றாவது நம்பிராட்டியார் ஹஜ்ரத் ஆயிஷா (றலி) இவர்கள் ஹஜ்ரத் அபூபக்கர் (றலி) அவர்களுடைய புதல்வியார். ஹிஜ்ரத்துக்கு 3-வருஷ காலமுன்னர் மக்கத்தில் அவர்களுடைய நிக்காஹ் நடந்தேறியது. வபாத்து 55-வது ஹிஜ்ரியில் ஏற்பட்டது. உமர் (றலி) அவர்களின் புதல்வியாராகிய ஹப்ஸா அவர்கள் நபிபெருமானாரவர்களின் நான்காவது நம்பிராட்டியாராவர். அவர்கள் 45-வது ஹிஜ்ரியில் வபாத்தானார்கள். ஐந்தாவது நம்பிராட்டியார் ஸைனப் பின்தே கஸீமா. இவர்கள் நிக்காவுக்குப்பின் 8-மாதகாலம் வரை ஜீவித்திருந்து 45-வது ஹிஜ்ரியில் வபாத்தடைந்தார்கள்.

‘உம்முஸல்மா’ என்பவர்கள் ஆறாவது நம்பிராட்டியாராவர். இவர்களது வபாத்து 59—வது ஹிஜ்ரியில் நிகழ்ந்தது. ‘ஸைனப் பின்தே ஜஹஷ்’ ஏழாவது நம்பிராட்டியார், 20-வது ஹிஜ்ரியில் வபாத்தடைந்தார்கள். எட்டாவது நம்பிராட்டியார் ‘உம்மெ ஹபீபா’ இவர்கள் அபூஸுப்யானுடைய புதல்வியார். 44-வது ஹிஜ்ரியில் வபாத்தடைந்தார்கள். ஒன்பதாவது நம்பிராட்டியார்; ஹாரிஸ் குமாரத்தியாகிய ‘ஜுவைரியா’ என்னும் பெயருடையவர்கள். இவர்களின் வபாத்து ஹிஜ்ரி 54ல். நிகழ்ந்தது. ‘ஸப்யா பின்தே அக்தப்’ பத்தாவது நம்பிராட்டியார். இவர்கள் ஹாரூன் நபியின் சந்ததியிலுள்ளவர்கள். இவர்களின் வபாத்து ஹிஜ்ரி 52-ல் நிகழ்ந்தது. பதினொன்றாவது நம்பிராட்டியாரின் நாமம் ‘மைமூனா’ இவர்கள் வபாத்து ஹிஜ்ரி 51ல் நிகழ்ந்தது. வெள்ளாட்டிகளுள் முதலாவதானவர் ‘மாரியா கப்தியா’ என்பவர். இவர் 16-வது ஹிஜ்ரியில் வபாத்தடைந்தார். இப்றாஹீம் இப்னு றஸூலுல்லா, இவரது கர்ப்பத்திலிருந்தே அவதரித்து குழந்தையிலேயே தவறி விட்டது. இரண்டாவதானவர், றைஹானா, வபாத்து ஹிஜ்ரி 10ல் நிகழ்ந்தது. மூன்றாவதானவர் உம்மு அய்மன். நான்காவது,

ஸம்மா ஐந்தாவது பர்ஸைவி; நம்பிராட்டியார்களுக்கு முறையே 500 திரஹம் மஹர் ஏற்படுத்தப்பட்டிருந்தது ஆனால் ஸப்யா ‘உம்மு ஹபீபா’ இவ்விருவர்களுக்கு மட்டும் முறையே 400. திரஹம் மஹர் (திருமணக்கட்டணம்) நிர்ணயிக்கப்பட்டது.

நபிபெருமானாரவர்களின் குணலக்ஷணங்கள்.

றஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நடுத்தரமான உயரம் வாய்ந்தவர்கள். ஆனால் அவர்கள் ஒரு ஜனக்கூட்டத்தினிடையே இருந்து வருகையில் பார்ப்போர் தோற்றத்திற்குப் பெருமானாரவர்களே எல்லோரினும் அதிக உயரமுள்ளவர்களாகப் புலப்படுவார்கள். அவர்களது திருமேனி சிகப்பும் பிரகாசமுமானது. தலை பெரிதும், கருப்பான ரோமங்களுமுடையது. காதுகள் பரிமாணத்திற்கு சமானமானவை. அவை பார்வைக்கு நேர்த்தியாயிருக்கும். புருவத்தின் ரோமங்கள் அடர்த்தியானவை. அவைகளுக்கிடையே மெல்லிய நரம்பொன்று அமைந்திருந்தது. பெருமானாரவர்களுக்கு கோபம் ஏற்பட்டால் அந்த நரம்பு அப்போது துடிக்கும். பரிசுத்த கண்களும் வெகு லக்ஷணமானவை. பற்கள் முத்தைப்போல் வெண்ணிறமாயும் பிரகாசமாயுமிருக்கும். பெருமானாரவர்கள் சம்பாஷிக்கும் போது, அப்பற்களில் மின்னலைப் போல் ஒளி வீசுவதுண்டு. திரு சரீரத்திற்கு நிழலே ஏற்பட்டிருந்ததில்லை. சரீரத்தில் சதாகஸ்தூரி பரிமளம் வீசிக்கொண்டிருக்கும். பெருமானாரவர்களின் சரீரத்தினின்றும் வெளிப்படும் வியர்வை நீர், அநேகரால் அத்தருக்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டும் வந்தது. இரண்டு புஜங்களுக்கிடையே ‘முஹரே நுபுவ்வத்’ என்னும் அடையாளம் அமைந்திருந்தது. அது காபிர்களுடைய பார்வையில் புறாமுட்டையளவுக்கு தோற்றப்பட்டு வந்தது.

பெருமானாரவர்களின் திவ்விய ஒழுக்கங்கள்.

றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு ஏழையான கிழவியாலிடப்படும் வேலையையும் மறுக்கமாட்டார்கள். ஏழைகளும், செல்வந்தர்களும் சமத்துவமாகவே, பெருமானாரவர்களிடத்தில் திருப்தி யடைந்திருந்தனர். ஒருவராவது பெருமானாரவர்களைப்பற்றி, கெட்டவர் என சொன்னது கிடையாது. சுமார் ஒரு லக்ஷத்துக்கு மேற்கொண்ட ஸஹாபாக்கள் இருந்து வந்தனர்.

எல்லோருடனும் பெருமானாரவர்கள் அன்பாகவே நடந்து கொள்வார்கள். தம்முடைய வேலைவெட்டிகளைப் பெரும்பாலும் தம் கைப்படவே செய்து கொள்ளுவார்கள். இதர நபிமார்களில் தனித் தனியே வாய்த்திருந்த புகழ்ச்சிகள் யாவும், பெருமானாரவர்களிடத்தில் ஒருங்கே வாய்க்கப்பட்டிருந்தன. இதை மேலான இறைவனை அல்லாஹுதஆலா அவர்களைப்பற்றி, தானே தன்னுடைய திருக் குர்ஆன் வேதத்தில் புகழ்ந்து கூறியிருக்கிறான். அவர்களின் பூரண தன்மையினால் உன்னத ஸ்தானத்தை யடைந்தார்கள். அருள் நிறைந்த அழகினால் உலகத்தின் இருள் நீக்கினார்கள். பெருமானாரவர்களின் குண ஒழுக்கத்தைப்பற்றி அவர்களின் நம்பிராட்டியார் ஆயிஷா (றலி) அவர்களிடத்தில் ஒருவர் கேட்டபோது, நபிநாயகத்தின் குணஒழுக்கங்கள் யாவும் திருக்குர்ஆனாயிருந்தது, எனவிடை பகர்ந்தார்கள். திருக்குர்ஆனின் கட்டளைப் படியே அவர்களின் வாழ்க்கையில் அமைந்திருந்தது. அதனாலேயே திருக்குர்ஆனின் அனுபவமுறையும், நபிபெருமானாரவர்களின் வாழ்க்கையும் முஸ்லிம்களுக்கு வழி காட்டியாய் அமைந்திருக்கின்றன.

நபிபெருமானாரவர்களிடம் நல்லொழுக்கமும், நற்குணமும், மனசுத்தியும், சத்தியமும், அன்பும், மனஉறுதியும், தாழ்மையும் கண்ணியமும், முகமலர்ச்சியும், நாணமும், நீதியும், வீரமும், பொறுமையும், ஆண்டவனின்மீது பற்றுதலும், அந்தரங்க சுத்தியும் ஒருங்கே நிறைந்திருந்தன. பெருமானாரவர்கள் உன்னத, பதவியை யடைந்திருந்தும், மற்றவர்களைவிட மேலாகக் கருதுவதே இல்லை. நானும் ஒரு அடிமையென்றே சதா சொல்லுவார்கள். அதுபோலவே பணிந்தும் நடப்பார்கள். அவர்கள் ஆரம்ப காலத்தில் மக்காவிலிருக்கும்போது எத்தன்மையாக ஆடம்பரமற்ற முறையில் நடந்து வந்தார்களோ, அது போலவே அரசு உரிமை பெற்று வாழுங்காலத்திலும் அனுஷ்டித்து வந்தார்கள்.

நபிநாயகம் (ஸல்) அவர்கள் வீட்டு வேலைகளுக்காக மற்றவர்களை ஏவுகிறதில்லை. ஆட்டுக்குப்பால் கறக்கிறதும், ஒட்டகத்தைப் பிடித்துக் கட்டுகிறதும், அதற்கு புல் போடுகிறதும் அவர்களே செய்து கொள்வார்கள். பெருமானாரவர்கள் வீட்டைப் பெருக்குகிறதை கேவலமாய்க் கருதாமல், சில சமயங்களில் தாங்களே

செய்துகொள்வார்கள். மற்றவர்கள் வேலைசெய்யும்போது அதைப் பார்த்துக்கொண்டு பெருமானாரவர்கள் சும்மாயிருக்கமாட்டார்கள் தாங்களும் கூட கலந்து செய்வார்கள். ஒரு சமயம் ஸஹாபாக்களோடு யாத்திரை செல்லும் போது வழியில் சமையல் செய்யும் போது, எல்லாரோடு தாங்களும் ஒருவேலையை செய்வதாக எண்ணி "நான் விறகு சேகரித்துக்கொண்டு வருகிறேன்" என்றுசொன்ன போது, ஸஹாபாக்கள் அதை மறுத்தார்கள். அதற்கு நாயகமவர்கள் உங்கள் எல்லாரிலும் என்னைமேலாக கருத எனக்கு பிரியமில்லை, தன்னை மேலாகக் கருதும் அடியானை ஆண்டவன் பிரியங் கொள்ள மாட்டான் என்றுசொல்லிவிட்டு, தாங்கள் போய் விறகு சேகரித்துக் கொண்டு வந்தார்கள். பெருமானாரவர்களிடம் மதீனாவிலுள்ள அடிமைப் பெண்கள் அடிக்கடிவந்து தங்களுடைய வேலையை செய்துக் கொடுக்க வேண்டு மென்று விரும்பினால், உடனே சென்று அவ்வேலையைசெய்து கொடுப்பார்கள். ஒருநாள் பெருமானாரவர்கள் தொழுவதற்காக நின்று கொண்டிருக்கும்போது, ஒருநாட்டுப்புறத்தான் அவருடைய முந்தானியை பிடித்து இழுத்து, என்னுடைய இந்த வேலையை முடித்து கொடுமென்று கேட்டான். உடனே நாயகம் சென்று அவ்வேலையை முடித்துக் கொடுத்துவிட்டு வந்து தொழுதார்கள்.

நபிபெருமானவர்களின் இல்லறவாழ்க்கையை கவனித்தோமே யானால் பச்சை மண்ணால் கல்லினால் கட்டப்பட்டு பேரீத்த இலைகளினால் வேயப்பட்ட சிறிய குடிசைகளிலேயே பெருமானாரவர்கள் வசித்து வந்தார்கள். ஆகாரத்திலும் குறிப்பிட்ட ஒரு உணவு வேண்டுமென்று வைத்துக்கொள்ளுவதில்லை. அவர்களுக்கு முன்பு எது வைக்கப் பட்டதோ அதையே புசிப்பார்கள். உணவைப்பற்றி இலாகித்தும் குறைபடுத்தியும் பேசுவதில்லை. தென்னாத வார்க் கோதுமை மாவினால் செய்யப்பட்ட ரொட்டியே அநேகமாய் அவர்களுடைய உணவாயிருக்கும். அவர்கள் பிரியமாய் உட் கொள்ளும் வஸ்துகள் சிலஉண்டு. அவையாவன :— தேன், பேரீச்சம்பழம், வெள்ளரிக்காய், சுரைக்காய், ஹல்வா, சைத்தூன் எண்ணெ முதலியனவாம். மாமிசவகைகளில் ஆடு, ஒட்டகம், கோழி முதல் மச்சம் முதலியவைகளையும் சாப்பிடுவார்கள். இருந்தாலும் பெருமானாரவர்கள் வாழ்க்கையின் மிகுதியான நாட்கள் பட்டினியிலேயே கழிந்திருக்கும். ஒருசமயம் ஒருவர்

பெருமானாரவர்கள் சமூகம் வந்து, கடும்பசியுடன் இருப்பதாகச் சொல்ல, பெருமானாரவர்கள் தங்கள் வீட்டிலிருந்து ஏதும் ஆகாரம் கொண்டுவரும்படி ஆள் அனுப்பினார்கள். அங்கு தண்ணீரைத் தவிர வேறொன்றுமில்லையென்ற விடை வந்தது. அதன் பின் மனைவிமார்களின் வீடுகளுக்கும் ஆளையனுப்பிக் கேட்டதில், அங்கிருந்தும் முன்போலவே விடை கிடைத்தது. ஆனதால் பெருமானாரவர்களுக்கு அநேக நாட்கள் பேரித்தம்பழமும் தண்ணீருமட்டுமே கிடைத்து வந்தன. மேலும் அவர்களுக்கு குளிர்ந்த ஜலத்தின் மீதே மிகப் பிரியமுண்டு. சில சமயங்களில் சுத்தமான பாலையும் அருந்திக் கொள்ளுவார்கள். வயிற்றை நிறப்புவதைவிட பட்டினியாய் இருப்பதிலே மிகப் பிரியம் வைப்பார்கள்.

ஒருநாள் ஹஜ்ரத் அனஸ் (றலி) அவர்கள் பெருமானாரவர்களை பார்த்தபோது நாயகம் அவர்கள்வேஷ்டியை வயிற்றில் இருக்கிக்கட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு, அதை பக்கத்தில் இருப்பவர்களிடம் வினவினார்கள். அவர்கள் "பசியின் காரணத்தினால்" என்று பதிலளித்தார்கள். உடையிலும் பெருமானாரவர்கள் சாதாரணமாகவே அணிந்து வருவார்கள். அனேகமாக முரடான வஸ்திரங்களையே அணிந்துக் கொள்வார்கள். சிலசமயங்களில் பலநிறமான உடைகளையும் அணிவார்கள். வெள்ளை நிறமான உடையின் பேரிலே மிகப்பிரியமுண்டு. சிகப்புநிறமுள்ள உடையை அவர்கள் விரும்புகிறதில்லை. அவர்கள் படுக்கையும் சாதாரணமாகவே சிலசமயம் தரையின் மீதும், சிலசமயம் தோலினால் செய்யப்பட்டு பேரீத்தன் இலைகள் அடைக்கப்பட்டிருக்கும் மெத்தையின் மீதும் படுத்துக் கொள்ளுவார்கள். சிலசமயம் பேரீத்த மரத்தினால் செய்யப்பட்ட கட்டிலின் மீது யாதொரு விரிப்புமின்றி படுத்து கொள்ளுவார்கள் அதனால் அவர்கள் திருமேனியில் அவ்வடையாளங்கள் பதிந்திருக்கும். ஒருநாள் பெருமானாரவர்கள் ஒரு பாயின் மீது படுத்தெழுந்தபோது அவர்கள் சரீரத்தில் அப்பாயின் அடையாளம் பட்டிருப்பதை ஸஹாபாக்கள் கண்டு, "யாறஸூலல்லாஹ்! நாங்கள் மெத்தை செய்து கொடுக்கிறோம்" என்று விரும்பிக் கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "எனக்கு இவ்வுலகத்தில் என்ன ஆகவேண்டியிருக்கிறது? யாத்திரீகன் ஒருவ[illegible] கொஞ்ச நேரத்திற்காக ஒரு மரத்தின் நிழலில் உட்கார்[illegible]

அதைவிட்டு செல்வதைப்போலவே, உலகத்தோடு என்னுடைய சம்பந்தமிருக்கிறது" என்று விடைபகர்ந்தார்கள்.

நபிபெருமானாரவர்கள் நடந்துச் செல்வதாயிருந்தால் அவர்கள் பார்வை பூமியை நோக்கியே யிருக்கும். தாழ்மையுடன் இருப்பதே அவர்களுக்கு மிகப்பிரியம். கூட்டத்தோடு வழிநடந்தால் மற்றவர்களை முன்னால் செல்லும்படி செய்து, பெருமானாரவர் பின்னாலேயே நடப்பார்கள். எவரையாவது சந்தித்தால் பெருமானாரவர்கள் முன் கூட்டியே சலாம் சொல்லுவார்கள். அவர்களை முதலாவதாக முஸாபஹாச் செய்வார்கள். முஸாபஹாவில் கையை மற்றவரெடுக்கும்வரை பெருமானாரவர்கள் கையையெடுக்க மாட்டார்கள். பெருங்கூட்டங்களிலும் பெருமானாரவர்கள் தங்களுக்காக பிரத்தியேகமான ஒருஇடத்தை குறிப்பிட்டு வைத்துக் கொள்ளுவதில்லை. பெருமானாரவர்களைக்கண்டு மற்றவர்கள் எழுந்து நிற்பதாயிருந்தால் அதை கண்டித்து விலக்குவார்கள். ஒருபெரிய மகாசபையிலும் தாங்கள் ஒடுங்கியே உட்காருவார்கள். அவர்கள் இருக்கும் சபைக்கு எவர்போனாலும் மிகுந்த அன்போடு வரவேற்பார்கள். பெருமானாரவர்கள் மிகுந்த நேரம் சிந்தித்துக் கொண்டே யிருப்பார்கள்; அவசியப்பட்டாலன்றி பேசமாட்டார்கள். அவர்கள் சம்பாஷிக்கிறதாயிருந்தால் எவருடைய கவனத்தையும் கவரக்கூடிய விதமாய் மெதுவாக நிறுத்தி நிறுத்தி முகமலர்ச்சியோடு பேசுவார்கள். ஆனால் பேசவேண்டிய சமயங்களில் பேசாமலிருக்க மாட்டார்கள். மற்றவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது மத்தியில் பேசமாட்டார்கள். சிரிப்பு என்பதே மிக அரிதாயிருக்கும். சிரிக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் புன்முறுவல் மட்டும் செய்வார்கள். பெருமானாரவர்கள் ஒருவரிடமும் கோபித்துப் பேசியதில்லை. நபிபெருமானாரவர்களின் ஊழியத்தில் ஹஸரத் அனஸ் (றலி) அவர்கள் பத்து வருஷகாலம் இருந்தார்கள். அனஸ் (றலி) சொல்லுகிறார்கள்:—"நான் நபி (ஸல்) அவர்கள் ஊழியத்தில் பத்துவருட காலம் இருந்ததில், அவர்கள் என்னை ஒருதடவையாவது கோபித்துப் பேசினது கிடையாது. எதற்காக அப்படிச் செய்தாய், எதற்காக அப்படிச் செய்யவில்லையென்றுகூட சொல்லியிருக்கமாட்டார்கள்" என்று சொன்னார்கள். பெருமானாரவர்கள் [illegible] தீங்கு செய்தவர்களையும் ஸபத்தில் மன்னித்து

விடுவார்கள். பலதடவைகளில் பெருமானாரவர்கள் தம்மை கொலை செய்ய வந்தவர்களையும் மன்னித்து விட்டுவிட்டார்கள்.

பெருமானாரவர்களிடம் வீரகுணங்கள் எவ்வாறு நிறைந்திருந்தனவோ அவ்வாறே, இரக்கமும் அன்பும் தயாளமும் அவர்களிடம் நிறைந்திருந்தன. தங்களுக்கு எவ்வளவு கஷ்டம்வந்தாலும் சகித்துக் கொள்ளுவார்கள். ஆனால் மற்றவர்கள் துன்பப் படுவதைக் காண அவர்கள் பொறுக்கமாட்டார்கள். பெருமானாரவர்கள் கேட்டவர்களுக்கு இல்லையென்று சொன்னதில்லை. அவர்கள் நாளைக்கென்று ஒன்றையும் வைத்திருந்ததுமில்லை. பெருமானாரவர்களிடம் விருந்தினர்கள் வந்தால் அவர்களுக்கு மிகுந்த உபசாரஞ் செய்வார்கள். அது முஸ்லிம்களுக்கு மாத்திரமென்றல்ல. முஸ்லிம்களல்லாதாரும் அவர்களிடம் அடிக்கடி வந்து விருந்துண்பார்கள். பெருமானாரவர்கள் வித்தியாசம் பாராட்டாமல் அவர்களுக்கு உபசாரம் செய்வார்கள். நபிபெருமானாரவர்களின் திவ்விய குணவிசேஷங்களை யெல்லாம் ஒழுக்கங்கள். யாவையும் ஒருங்கு திரட்டி எழுதுவதானால் அது பெரிய கிரந்தமாக விரிந்து விடும். ஆனதால் இம்மட்டில் பரக்கத்தை நாடி எழுதிமுடித்துக் கொண்டோம்.

பெருமானாரவர்களின் முஃஜிஸாத் என்னும் அற்புதங்கள்.

றஸூலுல்லாஹி (ஸல்) அவர்களால் வெளியான அற்புதங்கள் அளவு கடந்திருப்பதால் அவற்றை யெல்லாம் ஒருமிக்க திரட்டி எழுதிவிட முடியாது. பல்வேறு அற்புதங்கள் முஃஜிஸா கிதாபுகளில் வரையப்பட்டிருத்தல் வெளிப்படை. சுருங்கக் கூறுமிடத்து, முதன் முதலில் திருக்குர்ஆனையே பெருமானாரவர்களின் பெரிய 'முஃஜிஸா' எனக்கூறலாம். ஏனெனில் இதுபரியந்தம் திருக் குர்ஆனிலுள்ள ஒரு ஸூரத்திற் கொப்பான ஆயத்தை ஒருவராலும் இயற்ற முடியவில்லை. மேலும் 13-நூற்றாண்டுகள் கடந்தும் இதர சாஸ்திரங்களில் ஏற்பட்ட மாறுதல்களைப் போல் திருக் குர்ஆனில் எள்ளளவுக்கும் மாறுதலேற் படவில்லை.

இரண்டாவது அற்புதம் வானத்தில் பிறை பிளவுபட்டதாகும். இவ்வற்புதத்தைப் பற்றி முஸ்லிம் அல்லாதாருடைய கிரந்தங்களிலும் அத்தாட்சி கிடைக்கப் பெறுகிறது. ஹஜரத் அலியவர்களுக் [illegible] வேண்டி, அஸ்தமனமடைந்த சூரியன் மீண்டும் உதயமாகி வந்ததும்,

நூறு வருஷ காலத்திற்கு முன் உயிர் துறந்த மையித்தொன்று உயிர்ப்பிக்கப் பட்டதும், பெருமானாரவர்கள் தம்முடைய உமிழ் நீரைத்தொட்டு வைத்து எண்ணிறந்த நோயாளிகளின் பிணிகளைத் தீர்த்ததும், விரல்களின் ஆதரவில் ஊற்றுக்கண் ஏற்படுத்தியதும், நாலு சேர்கொண்ட மாவினால் ஆயிரம்பேர்களுடைய பசியை யாற்றியதும், கல், மரம் முதலியன கலிமா ஓதித் தாங்கள் அல்லாஹ்வுடைய உண்மை தீர்க்கதரிசியென சாட்சியங் கூறியதும், ஆக இவையாவும் பெருமானாரவர்களின் அற்புதங்கள்.

முடிவுரை

நபிபெருமான் காத்திமுல் அன்பியா ஷபீஉல் முஸ்னிபீன் ஹபீபு றப்பில் ஆலமீன் முஹம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா (ஸல்) அவர்களின் பொருட்டைக் கொண்டு, அவர்களது ஜீவிய சரித்திரமாகிய இந்த சீறுவசனத்தை எழுதி அச்சிட்டு முடித்த சிற்றடியேனுக்கும், இச்சிறப்பான சரிதையை ஆசைகொண்டு வாசித்தோனுக்கும் இதை காது தாழ்த்தி கேட்டுக் கொண்டிருந்த நல்லோர்களுக்கும் மற்றும் முஸ்லிம்களுக்கும், அல்லாஹு தஆலா பாபமன்னிப்பு கொடுத்து ஈமானை நிலைபெருக்கி நபிநாயகத்தின் ஷபாஅத்தும் ஈந்து, தன்னுடைய லிகாவென்னும் தரிசனம் தந்து நல்லருள் புரிவானாக ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

ஹிஜ்ரத்துக் காண்டம்

முற்றிற்று.

நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரம்.

முற்றுப்பெற்றது.

LIBRARY
111360

PRINTED
AT
SHAHUL HAMEEDIA PRESS,
MADRAS 5.